Q. C. 414
N31

76864

✠

# வருஷானுதின அனுசரணைக்குரிய புதுத்தியானங்கள்

நமது ஆண்டவராகிய இயேசுக்கிறீஸ்து
நாதரின் சீவியத்தையும் போதகத்தையும்
ஆதாரமாகக்கொண்டு
பிரதானமாய் துறவறத்தார் உபயோகத்துக்காக

சங். புருனோ வெர்க்குரீஸ்

என்னும் இயேசுசபைக் குருவானவர் இயற்றின இந்நூல்
அச்சபையைச் சேர்ந்த மற்றொருவர் தமிழில்
மொழிபெயர்த்தது.

திருத்தி எழுதப்பட்ட இரண்டாம் பதிப்பு

[இரண்டாம் புத்தகம்]

Printed and Published by Rev. Br. Joseph, S.J.,
Superintendent, St. Joseph's Industrial School Press,
TRICHINOPOLY.

1931

வேறே வித்தியாசமில்லையென்றும் நினைத்து உறுதியாய் விசுவசிக்கவேணும். இதினாலே பீடத்தில் இயேசுநாதர் குருக்களின் கைங்கிரியங்களைக்கொண்டு தமது பிதாவாகிய சர்வேசுரனுக்குத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுக்கிறதினாலேயும் அவர் தாமே பலியும் பலியிடுகிறவருமாய் இருக்கிறதினாலேயும் அதில் விளைந்த நன்மைகளே இதிலும் விளையுமென்பது தப்பாத சத்தியமாமே. இவ்வித நினைவு விசாரங்களோடு நீ கோவிலுக்குப்போனால் உன்னிடத்தில் மிகுந்த பத்தி விநயமும் நம்பிக்கைக்குரிய பற்றுதலும் உண்டாகும்.

கோவிலில் பிரவேசித்துப் பராக்குக்கு ஏதுவில்லாத ஓர் இடத்தைத் தெரிந்துகொண்டு பூசை காண்கையில் உனக்கு நேரிடக்கூடிய குற்றங்களைத் தவிர்த்துக்கொள்ள நல்ல பிரதிக்கினை செய்து அதற்குத் தக்கபடி நடப்பதற்கு அவசியமான வரப்பிரசாதத்தை சர்வேசுரனிடத்தில் இரந்து மன்றாடுவாயாக. இதன்பின் திவ்விய பூசையை ஒப்புக்கொடுக்குங் கருத்துகள் சம்பூரணமாய் நிறைவேற உன் மனதில் ஆசை எழுப்புவாயாக. அந்தக் கருத்துகளாவன:—முதலாவது, சலக சிருஷ்டிகளின்பேரிலும் சர்வேசுரனுக்கு உண்டான சர்வ கர்த்தத்துவத்தினிமித்தம் அவருக்குரிய மகிமை ஆராதனை வணக்கஞ் செலுத்துவதும், 2-வது, அவருடைய அளவில்லாத நன்மைத் தயாளத்தினால் நாம் பாவப்பொறுத்தலும் இரக்கமும் அடைவதும், 3-வது, அவர் நமக்குச் செய்துவரும் எண்ணிக்கையில்லாத உபகார சகாயங்களுக்காக அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்வதும், 4-வது, வேறே புதிதான நன்மைகளைப் பெற்றுக்கொள்வதுமாம். இந்நான்கு கருத்துகளுக்காக நீயும் பூசைகண்டு ஒப்புக்கொடுப்பாயாக.

## II. பூசை நடக்கும்போது

பூசையினால் வரும் பலன்களை அடைவதற்குப் பல வழிகள் உண்டு. அவரவர் பத்திக்கு ஒத்தாப்போல் சிலர் பூசைச் செபங்களைச் சொல்வார்கள்; வேறு சிலர் செபமாலை, பிரார்த்தனை, தேவமாதாவின் மந்திரமாலை அல்லது



வாரத்தின் ஒவ்வொரு நாளுக்கும் குறிப்பிட்ட செபம் சொல்வார்கள். இவைகளில் உனக்கு அதிக நன்மையாகத் தோன்றுகிறதைத் தெரிந்துகொள்ளலாம். ஆகிலுங் குருவானவர் அப்பத்தைக் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கும்போதுந் தேவ வசீகரம் பண்ணும்போதுந் தேவநற்கருணை உட்கொள்ளும்போதும் வாய்ச் செபங்களை நிறுத்தி அந்த முக்கியமான சமயங்களில் அளிக்கப்படும் விசேஷ வரப்பிரசாதங்களை அடைகிறதற்கான சில பத்தி முயற்சிகளை நிலைமையோடு செய்துவருவாயாக. அவைகளில் சிலவற்றை இங்கே சொல்லிக் காண்பிப்போம்.

### 1. அப்பத்தைக் காணிக்கையாக ஒப்புக்கொடுத்தல்

குருவானவர் கட்டின்மேல் இருக்கிற அப்பத்தைக் கையில் ஏந்தி உயர்த்தி பரம பிதாவே தூய்மையான இந்த அப்பத்தைக் கையேற்றுக்கொள்ளுமென்று உச்சரிக்கும்போது அத்தோடு உன் காணிக்கையையும் ஒன்றிப்பாயாக. மேலும் பலிபீடத்தின்மேல் ஞானவிதமாய் உன்னையும் ஒப்புக்கொடுத்து முழுமனதோடே சொல்லத்தக்கதாவது: பரிசுத்த பிதாவே நான் தேவரீருக்கு என் ஆத்துமத்தையுஞ் சரீரத்தையும் அவைகளிலுள்ள தத்துவ புலன்களையும் மகா தாழ்ச்சியோடு ஒப்புக்கொடுக்கிறதைக் கையேற்றுக்கொள்ளும். இவைகளையெல்லாந் தேவரீர்தாமே எனக்குத் தந்தருளினதினால் உமக்கே இவைகளை ஒப்புக்கொடுக்கிறேன். உமது திருச்சித்தம் விளங்குகிற உமது கற்பனைக்கொத்தவண்ணம் மாத்திரம் இவைகளை உதவிக்கொள்ள மனதாயிருக்கிறேனென்று இந்தப் பீடத்தைச் சூழ்ந்திருக்குஞ் சகல பரிசுத்த சம்மனசுகள் முன்பாக உறுதியாகச் சொல்லுகிறேன். ஆண்டவரே நான் உமக்கு முழுதுஞ் சொந்தமாயிருப்பதும், உமது திருநாம தோத்திரத்துக்கும் பிறர் இரக்ஷணியத்துக்கும் எனது அர்ச்சிப்புக்கும் உதவியானதெல்லாம் செய்வதுமே என் ஆசையல்லாமல் வேறில்லை. தயை நிறைந்த பிதாவே இந்தக் கருத்தில் நான் மரணபரியந்தம் நிலைத்திருக்கும்படி உமது கருணையால் எனக்கு ஒத்தாசைசெய்யத் தேவரீரை மன்றாடுகிறேன்.

நீ இந்தக் காணிக்கையில் கோரினபடி நடக்கிறாயோ இல்லையோவென்று பரிசோதித்து இதின்படி நடவாவிட்டால் இதுமுதல் பிரமாணிக்கமாய் நடக்கப் பிரதிக்கினை செய்துகொள்வாயாக.

## 2. தேவவசீகர எழுந்தேற்றம்

தேவவசீகரம் பண்ணப்பட்ட அப்பத்தின் குணங்களுக்குள்ளே மறைந்திருக்கிற திவ்விய பலியைக் குருவானவர் யாவருங் காண எழுந்தேற்றம்பண்ணும் முக்கிய சமயத்திலே நீ உயிருள்ள விசுவாசத்தோடு தியானிக்கவேண்டியதேதென்றால், உன் பாவங்களினிமித்தஞ் சர்வாங்கமும் இரத்தக் காயம்பட்டு யாவருங் காண சிலுவையில் ஆணிகளால் அறையுண்டவர் இதில் எழுந்தருளியிருக்கும் அன்புக்குரிய இரட்சகர்தாமே; தமது பாடுகளால் வாக்குக் கெட்டாத நிர்ப்பந்த வேதனைகளை அநுபவித்திருந்த அந்த நேரத்திலுந் தம்மை மறந்தவராய்த் தமது பரம பிதாவை நோக்கி, என் பிதாவே இவர்கள் குற்றங்களை மன்னித்தருளுமென்று உனக்காகப் பரிந்து பேசினவர் இவர்தாமே.

இப்படி தியானித்துப் பார்ப்பதினால் மிகுந்த ஆச்சரியம் சிநேகம் நன்றியறிந்ததனம் பாவத்தின்பேரில் அரோசிகம் உத்தமமனஸ்தாபம் அணைகடந்த பத்தி முதலியவைகள் உன்னிருதயத்தில் உண்டாகும்.

இவ்வித பிரகரணங்களை உன்னிடத்தில் எழுப்பினபின் இயேசுநாதர் தமது பரம பிதாவை நோக்கி வேண்டிக்கொண்ட பொதுச் செபங்களோடு நீயும் ஒன்றித்து, அர்ச். பொனவெந்தூர் சொல்லுவதுபோல நமக்குத் தஞ்சமும் நமக்காகப் பரிந்துபேசும் அபயக்குரலுமாகிய அவருடைய ஐந்து திருக்காயங்களையும் ஒவ்வொன்றாய் உற்றுப்பார்த்து, ஒவ்வொன்றின்பேராலும் ஒரு விசேஷ அனுக்கிரகம் அல்லது மன்றாட்டு கேட்கக்கடவாய்.

அவ்வண்ணமே வலதுகரத்தின் திருக்காயத்தைப் பார்த்து அர்ச். பாப்பானவருக்காகவும், அவருடைய ஏவுதலால் உலக இரக்ஷணிய அர்ச்சிப்புக்காக உழைத்துவரும்



மேற்றிராணிமார் குருப்பிரசாதிகள் பிறதேச வேதபோதகர் முதலானவர்களுக்காகவும் அவர்களுடைய பிரயாசை சம்பூரண அனுகூலமடையவும் பிரார்த்தித்துக்கொள்வாயாக.

இடதுகரத்தின் திருக்காயத்தைப்பார்த்து அஞ்ஞானிகள் யூதர் பதிதர் பிரிவினைக்காரர் மனந்திரும்பவும், இயேசுநாதருக்கும் அவர் திருச்சபைக்கும் விரோதமாய் நரகப் பசாசுகளோடு ஒப்பந்தஞ்செய்து திரியுங் கெட்ட கிறீஸ்துவர்கள் பாவ வழியைவிட்டு புண்ணிய வழியில் நடக்கவும் வேண்டிக்கொள்வாயாக.

வலது பாதத்தின் திருக்காயத்தைப்பார்த்து உன் பெற்றோர் உற்றார் உறவின்முறையார் சிநேகிதர் உபகாரிகளுக்காகவும், இயேசுநாதர் கற்பித்தபிரகாரம் உன் பகையாளிகளுக்காகவும் மன்றாடுவாயாக.

இடது பாதத்தின் திருக்காயத்தைப்பார்த்து உத்தரிக்கிற ஸ்தலத்து ஆத்துமாக்களுக்காகவும் மரித்தவர்களில் விசேஷமாய் யாருக்காக நீ வேண்டிக்கொள்ளக் கடனோ அவர்களுடைய ஆத்துமங்களுக்காகவும் மன்றாடுவாயாக.

திருவிலாக் காயத்தைப்பார்த்து உனக்காக வேண்டிக்கொள். நீ படுங் கவலை வருத்தம் அச்சம் உன் நம்பிக்கை ஆசை யாவையும் நேசத்தால் பற்றியெரியும் அத்திரு இருதயத்துக்கு ஒப்படைப்பாயாக.

இவ்விதமாய் நமது திவ்விய இரக்ஷகரின் ஐந்து திருக்காயங்களையும் நோக்கி மன்றாடிவரும் அப்பியாசத்தினால், சொற்ப நேரத்துக்குள் யாதொரு பிரயாசையுமின்றி சகலருக்காகவும் வேண்டிக்கொள்ளக்கூடியவனாயிருப்பாய். மேலும் இந்தச் செபம் சர்வேசுரனுக்கு மிகவும் ஏற்றதாகவும், மற்றவர்களுக்கும் உனக்கும் மகா பிரயோசனமாயுமிருக்கும்.

## 3. தேவநற்கருணை உட்கொள்ளும்போது

தேவநற்கருணை உட்கொள்ளும் பாக்கியம் உனக்குக் கிடையாத நாளில் ஆசை நன்மைவாங்க மறவாதே. அர்ச்.

தெரேசம்மாள் சொல்லுமாப்போல மெய்யாகவே தேவநற்கருணை உட்கொள்ளும்போது அடையும் பலனைச் சில சமையங்களில் ஆசை நன்மையினாலும் அடையலாம். இப்படி ஆசை நன்மைவாங்கும் விதமாவது: முதலாவது, முழு மனதோடு தன்னையின்றமட்டும் உத்தமமனஸ்தாப்படுகிறது; 2-வது. தேவசிநேக முயற்சி செய்கிறது; 3-வது. தேவநற்கருணை வாங்குகிறவர்களுக்கு அதினாலுண்டாகுந் திரளான வரப்பிரசாதங்கள் தனக்குமுண்டாகும்படி மெய்யாகவே நன்மைவாங்க ஆசைப்படுகிறது.

## III. பூசைக்குப்பின்

சுருக்கமாய் ஆத்துமசோதனை செய்துகொள்:—மேலே சொன்ன யோசனைகளையெல்லாம் பிரமாணிக்கமாய் அநுசரித்தாயோ? திவ்விய பூசையின் பிரதான பாகங்களுக்கு இடையில் என்ன முயற்சி செய்துகொண்டிருந்தாய்? தக்க அடக்க ஒடுக்கமாய்ப் பூசை கண்டாயோ? பூசை நேரத்தில் யாதொரு பராக்கு வந்திருந்தால் அதை எப்படித் தள்ளினாய்? முன் சொன்னபிரகாரம் நீ சரியாய் நடந்திருந்தால் ஆண்டவருக்குத் தோத்திரஞ் செய்; அப்படியில்லாமல் அசட்டையாயிருந்திருந்தால் அதற்காகப் பொறுத்தல் கேள்.

நீ தேவாலயத்தைவிட்டுப் புறப்படுமுன்னே அன்று செய்யப்போகிற காரியங்கள் யாவையும், காலைச் செபத்திலுந் தியானத்திலுஞ் செய்த நல்ல பிரதிக்கினைகளையும் இயேசுநாதர் ஆசீர்வதித்தருள அவரை மன்றாடுவாயாக.

---

நமது ஆண்டவராகிய

# இயேசுக்கிறீஸ்துநாதருடைய

சீவியத்தைக்குறித்து நாம் செய்யத்தகும்

# தியானங்கள்

## ஜூலை மாதம்

### முதல் தேதி

(கிறீஸ்துநாதர் பிரசங்கித்த இரண்டாம் வருஷமும் இரண்டாம் பாஸ்குத் திருநாளும்.)

### முப்பத்தெட்டு வருஷகாலந் திமிர்வாதமாயிருந்தவன் அற்புதமாய்ச் சொஸ்தமானதின்பேரில்

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதர் திமிர்வாதக்காரனைப் பார்த்து உன் கட்டிலை எடுத்துக்கொண்டு நடவென்று சொல்லுகிறதாக ரூபிகரித்துக்கொள்.

தியானச் செபம்.—உனக்கு இயேசுநாதருடைய தயாளத்தின்பேரில் உறுதியான நம்பிக்கை உண்டாகவேணுமென்று அவரைக் கேட்பாயாக.

### முதல் பிரிவு

இயேசுநாதர் திமிர்வாதக்காரன்பேரில் இரக்கமாயிருக்கிறார்

தியானம்.—இயேசுநாதர் பெரும்பாடுள்ள ஒரு ஸ்திரீயையும் இரண்டு குருடரையும் ஒரு ஊமையையுஞ் சொஸ்தப்படுத்தினபின் யூதருடைய பண்டிகை நெருங்கியிருந்த

தைக்கண்டு கப்பர்நாவும் ஊரிலிருந்து எருசலேம் பட்டணத்துக்கு எழுந்தருளிப்போனாரென்று அர்ச். அருளப்பர் வசனித்திருக்கிறார் (5-ம் அதி.). இயேசுநாதர் இந்த பாஸ்காப் பண்டிகையை இரண்டாம்விசை பிரசித்தமாய்க் கொண்டாடவந்ததினாலே இது அவர் பிரசங்கம் பண்ணத் துவக்கிய இரண்டாம் வருஷமாகும்.

இந்தத் திருநாளைப் பிரசித்தமான ஒரு அற்புதத்தைக் கொண்டு முக்கியப்படுத்துகிறார். இதைக் குறித்து அர்ச். அருளப்பர் எழுதிவைத்ததாவது :—எருசலேம் பட்டணத்துக் கோட்டையிலுள்ள ஒரு வாசலருகாமையில் ஒரு குளம் இருக்கின்றது. அந்தக் குளத்தைச் சுற்றி ஐந்து மண்டபங்களுண்டு. இம்மண்டபங்களில் குருடர் திமிர்வாதக்காரர் சப்பாணிகள் முதலான வியாதியஸ்தரநேகர் தண்ணீர் எப்போது அசைவாடுமோவென்று காத்துக் கொண்டிருப்பார்கள். ஏனென்றால் அத்தண்ணீர் அசைவாடினபின்பு அதில் முந்தி இறங்கினவன் எவ்வித வியாதியஸ்தனாயிருந்தாலுஞ் சொஸ்தமடைவான். அப்படியிருக்க இயேசுநாதர் அவர்கள் நடுவில் வந்தபோது முப்பத்தெட்டு வருஷகாலம் வியாதியாயிருந்த ஒருவனிடத்தில் வந்து நின்றார் (5-ம் அதி.).

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—முந்த முந்த இயேசுநாதர்சுவாமி சகலருக்கும் கற்பனை கொடுக்கிற உன்னத ஆண்டவராயிருக்கக்கொள்ள தாமே யூதருக்குக் கற்பித்த பாஸ்குத் திருநாளை அனுசரிக்கக்கடமைப்பட்டவரல்ல. ஆயினும் அதைப் பிரமாணிக்கமாய் அநுசரிக்கச் சித்தமானார். இதைப்பார்த்து உன் சபை ஒழுங்கு ஏற்பாடுகளையும் வழக்க வாடிக்கைகளையும் நுணுநுணுக்கமாய் அநுசரிக்கக் கற்றுக்கொள். நீ அவைகளை சில சமயங்களில் அநுசரியாமலிருக்கத் தகுந்த முகாந்தரமுண்டென்று உனக்குத் தோன்றும்போது முதலாய்ச் சபையின்மேல் உனக்குள்ள பற்றுதலைக் காண்பிக்கவும் உன் சகோதரருக்கு நன்மாதிரிகையாகவும் அவைகளை அநுசரிக்கக்கடவாய். இதினால் உனக்குத் தேவ சமுகத்தில் மிகுந்த பேறுபலன் உண்டாகும். நீ இப்படிச் செய்துவருகிறாயோ? அப்படியானால் எவ்வித நிலைமையோடு செய்து வருகிறாய்?



இரண்டாவது, நமது திவ்விய இரக்ஷகர் ஜெருசலேம் பட்டணத்தில் பிரவேசித்தபோது மற்றெல்லாத்தையும் விட்டு எவ்வித துன்பத்துக்கும் உள்ளாயிருந்தவர்கள் நடுவில் போயிருந்ததுமல்லாமல் அவர்களுக்குள் அதிக துன்பப்படுகிறவன்மேல் விசேஷ கவலை வைத்தார்.

இதுகாரியத்திலே நீ உன் திவ்விய குருவைப் பின்செல்லுகிறாயோ? உன் விசாரணைக்குட்பட்டவர்களுக்குள்ளே யார்பேரில் விசேஷ கவலை வைத்திருக்கிறாய்? எவராலுங் கைநெகிழப்பட்டவர்கள்பேரிலோ, விசேஷ உதவி வேண்டியவர்கள்பேரிலோ, அல்லது இதற்கு விரோதமாய் நல்ல குணம் நல்ல ரூபமுதலிய சில சுபாவ நன்மைகளைப்பற்றி உனக்குப் பிரியமாயிருக்கிறவர்கள்பேரிலோ? இதன்பேரில் உன் நடக்கையைச் சோதித்துப்பார். இது விஷயத்தில் உன்னை எள்ளளவும் நம்பாதே.

**மனப்பற்றுதல்.**—இதுவரையிலும் நீ சரியாய் நடவாததைக்கண்டு வெட்கி உன்னுடைய திவ்வியமாதிரிகையான இயேசுநாதரை அதிக பிரமாணிக்கத்தோடும் அதிக உதார குணத்தோடும் கண்டுபாவிக்க மனதில் மிகுந்த ஆசையெழுப்புவாயாக.

**பிரதிக்கினை.**—பாதொரு ஒழுங்கை அநுசரியாதிருக்கவாகிலும், யார்பேரிலாவது விசேஷ பட்சம்வைக்கவென்கிலுஞ் சுபாவந் தோற்றுவிக்கிற நியாயங்களை நம்பாமல் தள்ளிவிடுவேன்.

## 2-ம் பிரிவு

### இயேசுநாதர்சுவாமி திமிர்வாதக்காரனைச் சௌக்கியப்படுத்துகிறார்

**தியானம்.**—ஏறக்குறைய நாற்பது வருஷகாலங் கைகால் வழங்காமல் கிடந்த வியாதிஸ்தனைக்கண்டு இயேசுநாதசுவாமி இரக்கப்பட்டு அவனைப்பார்த்து நீ சௌக்கியப்படவேணுமோவென்று கேட்க அவன் அவரை நோக்கி, ஆண்டவரே தண்ணீரசைவாடினமாத்திரத்தில் என்னைத்

தூக்கி அதில் இறக்கிவிட ஒருவனுமில்லை. நான் கஷ்டப்பட்டு நகர்ந்து போகிறதற்குள்ளாக வேறொருவன் போய் எனக்குமுன் அதில் இறங்கிவிடுகிறான்; நான் என்ன செய்வேன் என, இயேசுநாதர் அவனைப் பார்த்து, நீ எழுந்திருந்து உன் கட்டிலையெடுத்துக்கொண்டு நடவென்றார். அக்ஷணமே அவன் ஆரோக்கியமாகி தன் கட்டிலை எடுத்துக்கொண்டுபோனான் (அரு. 5).

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—மேற்சொன்னவைகளிலிருந்து மிகவும் ஆறுதலான ஒரு யோசனை நமது புத்தியில் தோன்றுகிறது. அதாவது: இயேசுநாதர்சுவாமி மற்ற எல்லாரையும்விட அந்தத் திமிர்வாதக்காரன்பேரில் மனது இரங்கவும் அவனுக்கு மகா விசேஷ உபகாரஞ்செய்யவுங் காரணமாயிருந்தது அவன் பட்ட மிஞ்சின வேதனையாமே. ஆகையால் நமது ஆத்தும நிற்பாக்கியமும் நோய்களும் எத்தனையானாலும் எவ்வளவு அசாத்தியமானாலும் அவதைரியப்பட்டு நம்பிக்கையிழந்துபோகக்கூடாது. அந்தத் திமிர்வாதக்காரனுக்குக் கிடையாமற்போன புருஷாளுக்குஞ் சிநேகிதனுக்கும் ஒப்பாகிய நமது ஆத்தும குருவின் வழியாய் இயேசுநாதர்சுவாமியை அண்டிப்போவோமாகில் நாம் ஆரோக்கியமடைகிறதற்குச் சந்தேகமில்லை. நாம் ஆரோக்கியமடைந்த பின்பு இயேசுநாதர் திமிர்வாதக்காரனை நோக்கி, இதோ நீ சௌக்கியமடைந்தாய். பின்னும் இதைவிட அதிக பொல்லாப்பு வராதபடி நீ பாவ வழியைவிட்டு எச்சரிக்கையாய் நடவென்று சொன்னதை நினைத்துக்கொள்வோமாக.

**சம்பாஷணை.**—தயைநிறைந்த நமது ஆண்டவரைப் பார்த்து உன் ஆத்தும அசமந்தத்திலுஞ் சரீர வியாதிகளிலும் நின்று உன்னைச் சொஸ்தமாக்கக் கேட்பாயாக.

---



## 2-ம் தேதி

### தேவமாதா எலிசபெத்தம்மாளை மினவின திருநாள்

**ஆயத்தச் சிந்தனை.**—பரிசுத்த கன்னியாஸ்திரி சக்கரியாஸ் வீட்டில் பிரவேசித்து எலிசபெத்தம்மாளை மினவுகிறதாக ரூபிகரித்துக்கொள்.

**தியானச் செபம்.**—நீ யாதொருவரைச் சந்திக்கப் போகிறபொழுது பரிசுத்த கன்னியாஸ்திரியிடத்தில் விளங்கின சுகிர்த கருத்து உன்னிடத்திலும் உண்டாக வரப்பிரசாதங் கேட்பாயாக.

### முதல் பிரிவு

#### தேவமாதா மினவப்போனதற்கு முகாந்தரம்

**தியானம்.**—அர்ச். கன்னிமரியாயிடத்திலே ஆண்டவர் மனுஷாவதாரமான பரமரகசியம் நிறைவேறினபிற்பாடு அவள் தீவிரமாக மலைநாட்டிலுள்ள தேசத்தில் யூதாவின் கோத்திரத்துக்குச் சொந்தமான எபிரோன் ஊருக்குப் போய் சக்கரியாஸ் வீட்டில் பிரவேசித்து எலிசபெத்தம்மாளைச் சந்தித்து ஏறக்குறைய மூன்றுமாதகாலம் அவ்விடத்தில் தங்கியிருந்தாள் (லூக். 1).

பரிசுத்த கன்னியாஸ்திரி மனுஷாவதாரமெடுத்த திவ்விய வார்த்தையானவருக்குத் தாயாரென்கிற மகிமையுள்ள பட்டம் அடைந்திருந்தாலும் இப்படி நாலு நாள் தூரப்பயணம் நடந்துபோய்த் தன் பந்துவைச் சந்திக்கவேண்டிய நியாயமென்ன? இதற்கு கிரந்தகர்த்தாக்கள் எழுதிவைத்தபடியே முந்தமுந்த தேவ வரப்பிரசாதத்தின் ஏவுதலுக்குக் கீழ்ப்படியவும்—இரண்டாவது கபிரியேல் சம்மனசு அறிவித்தபிரகாரம் தமக்குக் கிட்டின உறவான எலிசபெத்தம்மாளிடத்தில் ஆண்டவர் செய்த பெரிய அற்புதத்துக்காக அவளை வாழ்த்தி மரியாதைசெய்யவும்—மூன்றாவது எலிசபெத்தம்மாளுக்கு வருத்தமான இந்தச் சமயத்தில் வேண்டிய உதவிசெய்து ஆண்டவருக்கு முன்கமனராக

வரம்பெற்று அவள் வயிற்றில் உற்பவித்த பிள்ளையை அர்ச்சிக்கிறதற்குத் தான் வழியாகும்படி அவள் உள்ளத்தில் பற்றியெரிந்த பிறசிநேகமானது எவ்வினதினாலேயும் இவ்விதமாய்த் தன் பந்துவைச் சந்திக்கப்போனாளென்று சொல்லத்தகும்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—சந்நியாசத்திலிருக்கிறவர்கள் வேளாவேளைகளில் அங்கங்கே போகவும் அவரவர்களைச் சந்திக்கவும் வேண்டியதாயிருக்கும். இதினாலே அநேகருக்குப் பாவச் சோதனையும் ஆத்தும கெடுதலும் வர இடமாயிற்று. இதற்குக் காரணமென்னவெனில், அநேகர் மடத்தில் ஒடுக்கமாயிருக்கச் சலிப்பு சஞ்சலமுற்று வேடிக்கை வீண் சலாக்கியம் இன்ப சந்தோஷத்தைத் தேடும்படியாய் அடிக்கடி வெளியே புறப்பட்டுப் போனார்கள். இப்பேர்ப்பட்ட முகாந்தரங்களுக்கு நீ இடங்கொடாதே. நீ யாதொருவரைக் காண வெளியே போகவேணுமானால் கீழ்ப்படிதலைப்பற்றியும் நியாயமான முகாந்தரங்களைப்பற்றியும் போவாயாகில் அதினால் உனக்கும் பிறருக்கும் எப்போதும் பிரயோசனமுண்டாகும். இதின்படி நடந்தாயோ, அல்லது சிரேஷ்டரிடத்திலே மெய்யான முகாந்தரத்தை முழுதுஞ் சொல்லாமல் எதாகிலும் மறைத்துவிட்டு வெளியே போனாயோ? ஒருவரை மாத்திரம் பார்க்கவேணுமென்று உத்தரவு பெற்றிருக்க அந்த உத்தரவே போதுமென்று வேறு சிலரையும் பார்க்கப்போனாயோ? அர்ச். சின்னப்பர் எழுதியதுபோல பிறருக்கு நன்மாதிரிகை காண்பித்து இயேசுநாதருடைய சுகந்தவாசனைபோலிருக்க எப்போதும் பிரயாசப்பட்டாயோ? (2. கொரி. 11.)

மனப்பற்றுதல்.—நான் மனிதருக்குள்ளே புழங்கினபோதெல்லாம் என் மனுஷநிலை குறைந்து வீட்டுக்குத் திரும்பிவந்தேனென்று ஒரு ஞானி சொல்லியிருக்கிறதை நன்றாய்க் கண்டுபிடிக்கவும் அதினால் உனக்குப் புத்திவரவும் மன்றாடுவாயாக.

பிரதிக்கினை.—நல்ல முகாந்தரத்தைப்பற்றி யாரையாவது நீ சந்திக்கப்போய்த் திரும்பிவரும்போது விசேஷ



மாய்ப் பேச்சில் யாதொரு தப்பிதம் வந்ததோவென்று தேவ சமுகத்தில் பரிசோதித்துப் பார்ப்பாயாக.

## 2-ம் பிரிவு

### தேவமாதா மினவப்போனதினாலே வந்தபலன்

தியானம்.—தேவமாதா சக்கிரியாஸ் வீட்டிலே பிரவேசித்தபோது அந்தவீட்டில் ஞான சந்தோஷமும் பாக்கியமும் உண்டாயிற்று. எலிசபெத்தம்மாள் இஸ்பிரீத்து சாந்துவினாலே நிரப்பப்பட்டாள். தேவசுதன் மனுஷாவதாரமெடுத்த பரம இரகசியத்தைத் தேவ ஏவுதலால் கண்டறிந்து தீர்க்கதரிசனமாக வெளிப்படுத்தினாள். அவள் கர்ப்பந்தரித்திருந்த பிள்ளை ஜென்மப்பாவத்தினின்று சுத்திகரமாகி அர்ச்சிக்கப்பட்டு இஷ்டப்பிரசாதத்தில் நிலைபெற்றதுந்தவிர புத்திவிவரம் உள்ளதாய் அந்தக்ஷணமே பேறு பலன்கள் அடையத் தகுதியாயிற்று. அர்ச். கன்னிமரியம்மாள் அதின் பிறப்புக்கு உதவியாயிருந்ததுமன்றி ஒன்பதுமாதம் ஊமையாயிருந்த அந்தப் பிள்ளையின் தந்தை வாய்திறந்து பேசவுந் தீர்க்கதரிசன வரம் அடையவுங் காரணமாயிருந்தாள். இதனால் சக்கரியாஸுடைய வீட்டாருஞ் சுற்றத்தாருஞ் சந்தோஷத்தால் மனம் பூரித்தார்கள். எலிசபெத்தம்மாளும் என் ஆண்டவருடைய தாயார் என்னிடத்தில் எழுந்தருளிவரும் பாக்கியம் எனக்கு எப்படி கிடைத்ததென்று பிரமித்துச் சொன்னாள். (லூக். 1.)

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—தேவ தாயார் சந்திக்கும் வீடும் ஆத்துமமும் அதிஷ்டம் பெற்றவைகளாமே. தேவகுமாரன் தமது திருத் தாயார்பேரில் அதிக பத்திவைத்து அவளை வணங்கிக் கொண்டாடப் பிரயாசப்படுகிற எல்லாருக்குந் தமது மேலான வரங்களைப் பொழிந்தருளுகிறார். ஆனதினால் நமக்குச் சகல பாக்கியமும் அத்தேவதாயார் வழியாய்க் கிடைக்கச் சர்வேசுரன் சித்தமாயிருக்கிறாரென்று இதைக்கொண்டு அறியலாம். இது இப்படியிருக்க அந்த ஆண்டவள் உன்னை அடிக்கடி

சந்திக்கவேணுமானால் நீ உன்னாலானமட்டும் அவளை மகிமைப் படுத்துவதுமல்லாமல் மற்றவர்களும் அவளை மகிமைப்படுத்தப் பிரயாசப்படு. இது காரியத்தில் நீ இன்னமேதாகிலும் அதிக நன்றாய்ச் செய்யக்கூடுமோ வென்று பார்த்து உனது ஆவலை மென்மேலும் எழுப்பிக் கொள்.

மனப்பற்றுதல்.—உனக்குப் பரிசுத்த கன்னியாஸ்திரியின்பேரில் நாளுக்கு நாள் அதிக பத்தியுண்டாகவும் அவளுக்காக அதிகப் பிரயாசப்படவும் அவளைப் பார்த்து மன்றாடுவாயாக.

பிரதிக்கினை.—தேவமாதாவின் பேரில் பத்தியைப் பரப்புவிக்கக்கூடிய தருணங்களைத் தவறவிடாதே.

## 3-ம் பிரிவு

**இந்த மினவுதலால் உண்டான புண்ணியங்களும் பேறுபலன்களும்**

தியானம்.—நாம் அனுசரித்து வருகிற புண்ணிய முயற்சிக்குத் தக்கது நமது பேறுபலனும் வளருமென்றிருக்கையில் எலிசபெத்தம்மாளைச் சந்தித்ததினாலே பரிசுத்த கன்னிமரியம்மாளுக்கு எவ்வளவோ புண்ணிய பேறுபலன்கள் உண்டாயிருக்கும். அவைகளாவன: விசுவாசம், கீழ்ப்படிதல், ஒறுத்தல், சுறுசுறுப்பு, அடக்கம், தயாளம், பிறருக்கு உதவிசெய்யுமாசை, விசேஷமாய்த் தாழ்ச்சி பிறர்சிநேக முதலிய புண்ணியங்களெல்லாம் இதில் உச்சிதமாய் விளங்குகின்றன. சர்வேசுரனுக்குத் தாயான இவள் எலிசபெத்தம்மாள் தேவவரங்களில் தனக்குப் பெரியவளாயிருந்தாப்போல அவளைக் கண்டு தரிசிக்கப்போனதுமல்லாமல் பூரண பட்சத்தோடு அவளுக்கு வேண்டிய பணிவிடைசெய்ய அவளோடு மூன்றுமாதந் தங்கியுமிருந்தாள். அர்ச். எலிசபெத்தம்மாள் அவளைப் பார்த்து பெண்சாதிகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவளும் நீரே என்று புகழ்ந்தபோது அவள் தன்னிடத்தில் நிறைவேறினதெல்லாம் ஆண்டவராலே வந்ததென்று அவருக்குத் தோத்திரஞ் செய்து வல்லபமிக்கவர் பெருமையுள்ளவைகளை என்னி



டத்தில் செய்தருளினார் என்றாள். மேலும் என் ஆத்துமமானது ஆண்டவரைப் புகழ்கின்றது என்று அவள் வசனித்த பத்து வாக்கியங்களில் மகா அதிசயமான புண்ணிய பரிமளம் வீசுகின்றது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இந்தப் புண்ணியங்களையெல்லாம் வகைவகையாய் யோசித்துப் பார்த்து இவைகள் உன்னிடத்திலும் விளங்கப் பிரயாசப்படு. இதுவே நீ தேவமாதாவுக்குப் பிரியப்படவும் அடிக்கடி அவள் உன்னைச் சந்திக்கவும் புண்ணிய பேறுபலன்களாலே உன்னை அலங்கரிக்கவும் வழியாயிருக்கும்.

சம்பாஷணை.—தேவமாதாவோடு சம்பாஷித்துக் கொள்.

---

## 3-ம் தேதி

### அர்ச். கன்னிமரியம்மாளுக்கு ஆண்டவர் அளித்தருளின சிறந்த சுதந்தரங்களின்பேரில்

ஆயத்தச் சிந்தனை.—அர்ச் கன்னிமரியம்மாள் எலிசபெத்தம்மாளால் வாழ்த்தப்பட்ட சமயத்தில் வல்லபமிக்கவர் பெருமையுள்ளவைகளை என்னிடத்தில் செய்தருளினாரென்று வசனித்தபோது அவளிருந்த மேரையை உரூபிகரித்துக்கொள்வாயாக.

தியானச் செபம்.—வார்த்தையானவர் மனுஷாவதாரம் எடுத்தபோதும் அதற்கு முன்னும் பின்னும் பரிசுத்த கன்னிகைக்குக் கொடுக்கப்பட்ட உச்சித சுதந்தரங்களைக் கண்டுபிடிக்க அநுக்கிரகங் கேட்பாயாக.

### முதல் பிரிவு

**வார்த்தையானவர் மாம்ச ஐக்கியமாதுமுன் பரிசுத்த கன்னிகைக்குக் கொடுக்கப்பட்ட உன்னத சுதந்தரங்கள்**

தியானம்.—பரிசுத்த கன்னிமரியம்மாள் நிகரற்ற மேன்மைப்பட்டத்துக்கு நியமிக்கப்பட்டாள். சாஸ்திரி

யான அர்ச். தோமாஸ் சொல்லுகிறதுபோல சர்வேசுரன் ஒருவனை யாதொரு மேலான பட்டத்துக்கு நியமிக்கும்போது அதற்குத்தக்க வரங்களை அவனுக்கு அளிப்பாராம். அப்படியானால் தேவதாய் உன்னத பட்டத்துக்கு நியமிக்கப்பட்டவளானபடியால் ஒருவருக்கும் எக்காலத்திலுங் கொடுக்கப்படாத சுதந்தரங்களைச் சர்வேசுரன் இப்பரமநாயகிக்கு அளித்தருளினாரென்னத்தகும். வேதபாரகர் இந்தச் சுதந்தரங்களில் பன்னிரண்டையெடுத்துக்காட்டி காட்சியாகமத்தில் (12-ம் அதி). உவமையாகத் தோன்றிய ஸ்திரீக்கு முடியாயிருந்த பன்னிரண்டு நட்சத்திரங்களும் அவைகளைக் குறிக்கிறதென்கிறார்கள். இவைகளில் நான்கு சுதந்தரங்கள் வார்த்தையானது மாம்சமாகிறதற்கு முன் தேவதாய்க்குக் கொடுக்கப்பட்டன: முதலாவது ஜென்மப்பாவமில்லாமல் உற்பவித்த வரம். இதைத் திருச்சபையானது அமலோற்பவம் என்றழைத்து விசுவாச சத்தியமாக உலகமெங்கும் பிரசித்தப்படுத்தினது. 2-வது, உயிரடைந்த க்ஷணமே அவளுக்கு அளிக்கப்பட்ட பரிபூரண இஷ்டப்பிரசாதம். 3-வது, அந்தத் தேவ இஷ்டப்பிரசாதத்துக்கு ஒத்துநடக்கும்படி அப்போதே அவளுக்குக் கொடுக்கப்பட்ட புத்தியறிவு. 4-வது, உத்தம கன்னிமையின் அருமையை அறிந்த வரம். இதினால் அர்ச். கன்னிமரியம்மாள் மூன்று வயதிலேயே தேவாலயத்தில் தன்னைச் சர்வேசுரனுக்கு நேர்ந்து கன்னிமை வார்த்தைப்பாடு கொடுத்தாள்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—சம்மனசுகளோடுந் திருச்சபையோடும் அர்ச். கன்னிமரியாயின் சமஸ்த தாசர்களோடும் நாமும் ஞான விதமாய் ஒன்றித்து சர்வ வல்லமையுள்ளவர் அவளுக்குத் தந்தருளின இந்தச் சிறந்த உரிமைகளைப்பற்றி அவளை வாழ்த்துவோமாக. இதுவே நாம் அவளுக்குப் பிரியப்படவும் அதிகமதிகமாய் அவள் நமக்குச் சனுவாயிருக்கவும் விசேஷமாய் நாம் கொடுத்த கற்பின் வார்த்தைப்பாட்டைச் சரியாய் அநுசரிக்கவும் அவளுடைய சுகிர்த மாதிரிகையைப்பார்த்து சர்வேசுரனுக்கும் மனுஷருக்குமுன்பாக நாம் சாங்கோபாங்கத்தில் வளரவும் நிச்சயமான வழியாயிருக்கும்.



**மனப்பற்றுதல்.**—பரலோக இராக்கினியே சர்வ வல்லபமுள்ளவர் உமக்குச் செய்தருளின கனமான காரியத்தைக்கொண்டு களிகூர்ந்திருப்பீராக.

**பிரதிக்கினை.**—இந்த உத்தம கன்னியாஸ்திரியின் பேரில் அதிகமதிகமாய்ப் பத்தியுண்டாகப் பிரயாசப்படுவேன்.

## 2-ம் பிரிவு

### ஆண்டவர் மனுஷாவதாரமானபோது அர்ச். கன்னிமரியம்மாளுக்குக் கொடுக்கப்பட்ட சிறந்த சுதந்தரங்கள்

**தியானம்.**—முதலாவது அர்ச். தேவமாதா கன்னியுந் தாயுமாயிருந்தது எல்லாத்துக்கும் முந்தினதும் அவளிருதயத்துக்கு மிகவும் பிரியமுள்ளதுமான வரமாம். 2-வது, கன்னிமை குன்றாத தனது உதரத்தில் அவதரித்த தேவகுமாரனை ஒன்பதுமாதம் முழுதுந் தனக்கே சொந்தமென்று வைத்திருந்த ஒப்பில்லாத மகிமையானது அவளடைந்த இரண்டாம் வரமாகும். ஆகையால் திருக்குழந்தை அவளாலும் அவளிடத்திலுஞ் சீவித்து ஒருவிதத்தில் அவளோடு ஏக பொருளானார். 3-வது, இந்த ஒன்பது மாசமும் மாம்சமான திவ்விய வார்த்தையின் சரீரமானது வளர வளர அவளுந் தேவ இஷ்டப்பிரசாதத்தில் வளர்ந்துகொண்டு வந்தாள். 4-வது, சகல மனிதருக்குஞ் சர்வேசுரன் தந்தருளும் இஷ்டப்பிரசாதங்களுக்கெல்லாம் அவள் வாய்க்காலாயிருக்கிறது நான்காம் வரம், இதைத் திருச்சபை அங்கீகரிக்கிறதற்கடையாளமாகவே அவளைத் தேவ இஷ்டப்பிரசாதத்தின் மாதா என்றழைக்கிறது.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—நமதன்புள்ள மாதாவின் ஆச்சரியத்துக்குரிய இந்தச் சுதந்தரங்களையும் அவைகளில் முக்கியமாய் வானலோகத்தினின்று பூலோகத்தில் வருஷிக்குஞ் சர்வ வரப்பிரசாதங்களுக்கும் வாய்க்காலாயிருக்கிறாளென்று நாம் கடைசியில் குறித்த வரத்தையும் நன்றாய்க் கவனித்துத் தேவமாதாவின்பேரில் நமக்குண்டான பத்தியிலும் நாம் அவளடைக்கலமாய்ப் போகிறதிலும் யாதொரு குறைவுண்டோ இல்லையோ

வென்று பார்க்கக்கடவோம். நீ அந்தக் குறையினால் புண்ணியத்தில் வர்த்திக்காமலும் பிறர் இரக்ஷணிய அலுவலில் சபலமில்லாமலுமிருக்கிறாயாக்கும்.

மனப்பற்றுதல்.—அர்ச். மரியாயே என் தாயே நான் உம்மைச் சிநேகிக்க எனக்குப் படிப்பித்தருளும் (அர்ச். கிளாவர் இராயப்பர்).

பிரதிக்கினை.—தேவதாயார்பேரில் எனக்கு மெய்யான பத்தியில்லாமற்போனால் எனது இரக்ஷணியம் அபாயத்தில் இருக்கிறதென்று அர்ச். பெர்க்குமான்ஸ் அருளப்பர் சொன்ன வாக்கியம் உன்மனதிலும் வாக்கிலுமிருக்கட்டும்.

## 3-ம் பிரிவு

### ஆண்டவர் மனுஷாவதாரமானபின்பு அர்ச். கன்னிமரியம்மாளுக்குக் கொடுக்கப்பட்ட விசேஷ சுதந்தரங்களின்பேரில்

தியானம்.—முதலாவது. ஆதித்தாய் பாவத்தில் விழுந்தபிறகு வேதனையோடே குழந்தை பெறுவாயென்று அவளுக்கிட்ட தண்டனைக்கு (மோசே. 1. 3) தேவமாதா உட்படாதிருந்தது முதல் வரம். இது அவள் அமலோற்பவியானதினாலே வந்த அநுகூலமென்று அறியவும். 2-வது. மனுக்குலத்தின் இரட்சணியத்துக்கு அவள் உடந்தையாயிருக்கப் பேறுபெற்றது இரண்டாம் வரம். 3-வது. மற்ற மனுஷரைப்போல் கஸ்திவாதையொன்றும் அநுபவியாமல் தேவசிநேக பரவசத்தில் அவளாத்துமஞ் சரீரத்தை விட்டுப்பிரிந்தது மூன்றாம் வரம். 4-வது. சகல அர்ச்சியசிஷ்டவர்களிலும் அதிக பாக்கியமுள்ளவளாய்ச் சம்மனசுக்கள் புடைசூழ ஆத்தும சரீரத்தோடே பரலோகத்துக்கு எழுந்தருளினதும் அக்ஷணமே அட்சய வரங்களெல்லாம் சம்பூரணமாய்ப் பூண்டதும் நான்காம் வரமாகும்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—தேவமாதாவுக்குக் கிடைத்த இந்த விசேஷ சுதந்தரங்களுக்கு நீயும் பங்காளியாகலாம். அதெப்படியென்றால்: சிதறிப் போன ஆடுகளாகிற ஆத்துமாக்கள் எத்தனையோ! அவைகளில் ஒன்றையாகிலும் இயேசுநாதருடைய மந்தையிலே



கொண்டுவந்து சேர்க்குஞ் சமயங்களைத் தவறவிடாதே. அப்போது பிறராத்தும இரக்ஷணிய அலுவலுக்கு நீயும் உடந்தையாயிருப்பாய். நீ இயேசுநாதருடைய மெய்யான சீஷனாக நடக்க வருந்துவாயாகில் தேவமாதா அநுபவிக்கும் ஆனந்தத்துக்கு நீயும் உன் ஆத்தும சரீரத்தோடு பங்காளியாவாய்.

சம்பாஷணை.—தேவமாதாவோடு சம்பாஷிக்கிறது. அவளுக்குக் கிடைத்த மகிமையைக்கண்டு அவளோடு அக்களித்து அவளை வாழ்த்துதல், தேவதாயாரால் நீ அடைந்த சகாயத்துக்கு நன்றியறிந்த தோத்திரஞ்செய்தல்; உனக்கு அவளெப்போதும் சகாயமாயிருக்க மன்றாடுதல் முதலியன.

---

## 4-ம் தேதி

### பரிசேயருடைய கள்ள ஞானத்தின்பேரிலுங் காய்மகாரத்தின் பேரிலும்

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாத சுவாமி தமது சீஷர்கள்பேரில் பரிசேயர் மோசக்கருத்தோடு சாட்டின குற்றத்துக்கு மறுமொழி சொல்லுகிறதாக ரூபிகரித்துக் கொள்.

தியானச் செபம்.—உன்னிடத்தில் இருதயத் தாழ்மையும் இரக்கமு நிறைந்த குணமுண்டாக வேணுமென்று பிரார்த்திப்பாயாக.

## முதல் பிரிவு

### பரிசேயர் இயேசுநாதருடைய சீஷர்கள்மேல் குற்றஞ்சாட்டுகிறார்கள்

தியானம்.—பாஸ்காப்பண்டிகை கொண்டாடுவதற்குச் செய்யவேண்டியதெல்லாம் இயேசுநாதர் சரிவர நிறைவேற்றினபிறகு எருசலேம் பட்டணத்தைவிட்டுக் கலிலேயா நாட்டுக்குத் திரும்பிப்போனார். அப்படியிருக்க ஓர் ஓய்வு

நாளில் சீஷர்கள் கோதுமை விளைந்திருந்த கொல்லையின் வழியாய்ப் போகும்போது பசி மிகுதியினாலே கதிர்களைப் பிடுங்கிக் கையினால் கசக்கித் தின்னும்படி சம்பவித்ததென்று அர்ச். லூக்காஸ் 6-ம் அதிகாரத்தில் சொல்லியிருக்கிறார். யூதருடைய வேத நூலில் இப்படிச் செய்ய உத்தரவிருந்தாலும், ஓய்வுநாளைத் தாங்கள் அதிக நுணுநுணுக்கமாய் அனுசரிக்கிறவர்கள்போல் பாராட்டிவந்த பரிசேயர் அதைக் குற்றம்போல் கடிந்து அவர்களைப்பார்த்து ஓய்வுநாளில் செய்யத்தகாத காரியத்தை நீங்கள் எப்படிச் செய்யலாமென்று கேட்டார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—பரிசேயர் தங்கள் காய்மகாரத்தை மறைக்க வேத நியாயத்தைச் சாட்டிப் பேசினது இதில் வெட்டவெளியாகிறது. இப்பேர்ப்பட்ட குணத்தைத் துவேஷித்துத் தள்ளாதவருண்டோ? ஆகிலும் அருவருப்புக்குரிய இந்தத் துர்க்குணமானது சந்நியாசிகள் உள்ளத்திலும் லேசாய் நுழையலாமென்கிறதினால் இதின் அடையாளங்கள் நம்மிடத்தில் உண்டோ இல்லையோவென்று பார்க்கவேணும். அவைகள் எவை என்றால்: நமக்குப் பிரியப்படாத புண்ணியவானுடைய நடக்கையை ஊடாடி விசாரித்துப்பார்க்கிறதும், அவனிடத்திலுள்ள அற்பசொற்பக் குற்றத்தையு முதலாய்க் கெட்ட கருத்தோடு பலுக்கிப் பெருக்கிக்காண்பிக்கிறதும், அவன் கபடில்லாமல் தேடிக்கொள்ளுகிற சௌக்கியத்துக்கடுத்த சில காரியங்களைக் குற்றமாகச் சாட்டி அதைக்குறித்துக் கடூரமாய்ப் பேசுகிறதும், அவன் கிரியைகளுக்குங் கருத்துகளுக்குமுதலாய் இல்லாத அர்த்தம்பண்ணுகிறதும், இத்தொகைப்பட்ட பலதும் பொறாமையின் அறிகுறிகளாகும். இப்பேர்ப்பட்ட அடையாளங்களைப் பார்த்து நீயே உனக்கு தீர்ப்புசெய்துகொள்.

மனப்பற்றுதல்.—உன் உள்ளத்தில் உண்டாகும் உணர்ச்சிகளைச் சரியாய்க் கண்டறியவும், காய்மகாரத்தை அருவருத்துத் தள்ளவும், இரக்கமும் பிறர்சிநேகமும் நிறைந்த இருதயத்தை உனக்குத் தந்தருளவும் ஆண்டவரைமன்றாடு.



பிரதிக்கினை.—பிறர் செய்கிற நன்மைகளைக்கண்டு ஆண்டவருக்குத் தோத்திரஞ்செய்யப் பழகுவாயாக.

## 2-ம் பிரிவு

### இயேசுநாதர் தமது சீஷர்கள்பாரிசமாய்ப் பேசுகிறார்

தியானம்.—பரிசேயர் குற்றஞ்சாட்டினதைப் பார்க்குமிடத்தில் அவர்கள் சுவாமியுடைய சீஷர்களின் பேரைக் கெடுக்கவும் சனங்களை ஏமாற்றவும் பார்த்தார்களென்று நன்றாய் விளங்குகிறது, இவர்களைச் சுருக்காய் மறுக்கவேண்டியிருந்ததினால் இயேசுநாதர்சுவாமி தமது சீஷர்கள்மேல் குற்றமில்லையென்று காட்டி அப்படிப் பேசினவர்களுடைய வாயை அடைக்கத் திருவுளம்பற்றினதாவது: ஓய்வுநாட்களில் குருப்பிரசாதிகள் தேவாலயத்தில் பலியிடத்தக்க காரியங்களை வெகு பிரயாசத்தோடு நடத்தினாலும் ஓய்வுநாளை மீறி நடக்கவில்லையென்று வேதத்தில் எழுதப்பட்டதை நீங்கள் வாசித்தறிந்ததில்லையோ? ஆகையால் மனுஷனுக்காக ஓய்வுநாளல்லாமல் மனுஷன் ஓய்வுநாளுக்காக அல்ல. மேலும் மனுமகன் ஓய்வுநாளுக்கும் எசமானாயிருக்கையில் அவருக்கு எப்படி நன்மையாய்த் தோன்றுமோ அப்படிச் செய்ய அவருக்கு அதிகாரமுண்டென்றார். (மத், 2.)

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—பிறர் நமக்கு விரோதமாய்ப் பேசும்போது நாம் மௌனமாயிருந்தபோதிலும், தேவ மகிமைக்குந் திருச்சபைப் போதனைக்கும் அதின் சுதந்தரத்துக்கும் விரோதமாகப் பேசும்போதும் புறத்தியார்பேரில் மற்றவர்கள் அநியாயமாய் அவதூறு சொல்லும்போதும் நாம் மவுனமாயிருக்கிறது சரியல்ல. நியாயத்தை எடுத்துக்காண்பிக்க நம்மாலாகும்போது வாய் திறவாமலிருக்கிறது உண்மையைப் பொய்யாக்குவதற்குச்சரி. இப்படிச் செய்கிறவன் கோழைத்தனமுள்ளவன்; புறத்தியார் தவறாய் நினைக்கிறதற்குக் காரணமாயிருக்கிறவன். இதினால் சில சமயத்தில்

அவர்கள் செய்யுங் குற்றத்துக்கும் உடந்தையாயிருக்கிறான். ஞானியானவர் சொன்னபடியே பேசாத நேரமுமுண்டு பேசுகிற நேரமுமுண்டு (எக்கி 3.) இதைப் பகுத்தறிந்து இதின்படி நடக்கிறவன் பாக்கியவான். நீ இதுமட்டும் இப்படி நடந்தாயோ? சுயபட்சங் குத்துப்பட்டால் பழிவாங்குகிறதற்கு அதிக தீவிரமுஞ் சாதுரியமுங் காட்டி வேத நியாயத்தையும் நல்ல நீதி முறைமையையும் எடுத்துரைக்கிறதற்கு அவ்வளவு அக்கறை கொள்ளவில்லையாக்கும்.

மனப்பற்றுதல்.—அந்தந்தச் சமயத்தில் சத்தியத்தைக் காத்து அது வெற்றிகொள்ளும்படி வேண்டிய மனவூக்கத்தையுங் கலைக்கியானத்தையும் அடையும்படி சர்வேசுரனை இரந்துமன்றாடு,

பிரதிக்கினை.—இந்தக் கருத்துக்காகமாத்திரங் கல்வி கலைக்கியானங்களைக் கற்க முயலுகிறது.

## 3-ம் பிரிவு

### இயேசுநாதர் பரிசேயரை நாணச் செய்கிறார்

தியானம்.—இயேசுநாதர் பரிசேயர் மனதிலிருக்கிறதெல்லாந் தாம் அறிந்திருக்கிறோமென்றும் அவர்கள் பேசினதற்கெல்லாம் பொறாமையே முகாந்தரமென்றுங் காண்பிக்கிறதற்கு அவர்களை நோக்கி நான் இரக்கத்தை விரும்புவதேயல்லாமல் பலியை விரும்புகிறதில்லையென்று சொல்லப்பட்டிருக்கிறதைக் கண்டுபிடித்திருப்பீர்களாகில் குற்றமில்லாதவர்களைக் குற்றமுள்ளவர்களென்று ஒருபோதுந் தீர்க்கமாட்டீர்கள் என்றார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இயேசுநாதர்சுவாமி பரிசேயரைக் கண்டித்த குற்றங்களில் நாம் ஒருகாலும் விழாதபடி எச்சரிக்கையாயிருக்கவேணும். அவைகளாவன: புண்ணியத்தின் போர்வையைப் போர்த்திக்கொண்டு ஆத்திரத்தில் பேசுகிறதுஞ் செய்கிறதும், தேவகற்பனைகளையுந் திருச்சபைக் கட்டளைகளையும் அநுசரிக்கிறதுபோல் வெளிக்குக் காண்பித்து உள்ளத்தில் அவை



களின் கருத்துப்படி நடவாமலிருக்கிறதும், பிறர்பேரில் இரக்கமற்ற தீர்மானம்பண்ணுகிறதும், குற்றம்போல் காணப்பட்ட அற்ப சாடை சயிக்கினை முகாந்தரமாகச் சுளுவாய் அவர்களை தூற்றுகிறதும் இவைமுதலான குறைகள் உன்னிடத்தில் உண்டோ இல்லையோவென்று சோதித்து குற்றங் கண்டால் அதற்காக மனநொந்து கஸ்திப்படுவாயாக. இனிமேல் இப்பேர்ப்பட்ட குற்றத்தில் விழாதபடி உன்னிடத்தில் தாழ்ச்சி பிறர்சிநேக சிந்தனைகளை ஸ்திரப்படுத்த இயேசுநாதசுவாமியை மிகவும் இரந்து மன்றாடுவாயாக.

சம்பாஷணை.—நமது திவ்விய இரட்சகரும் ஆசானுமாகிய ஆண்டவரோடு சம்பாஷித்துக்கொள்.

---

# 5-ம் தேதி

## இயேசுநாதர் பன்னிரண்டு அப்போஸ்தலர்களைத் தெரிந்துகொண்டதின்பேரில்

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதர் பன்னிரண்டு அப்போஸ்தலரைப் பேர்சொல்லி அழைத்தபோது அவர் இருந்த மேரையை ரூபிகரித்துக்கொள்.

தியானச் செபம்.—ஆண்டவர் உன்னை அழைத்ததற்கு ஏற்றவிதமாய் நடக்கும்படியான அநுக்கிரகத்தைக் கேள்.

## முதல் பிரிவு

### இயேசுநாதர்சுவாமி அப்போஸ்தலரைத் தெரிந்துகொண்டது

தியானம்.—இயேசுநாதர்சுவாமி பிரசங்கம்பண்ணி வந்த இரண்டாம் வருஷத்துவக்கத்தில் அப்போஸ்தலர் சங்கத்தை ஏற்படுத்தின வர்த்தமானம் நடந்தது. இயேசுநாதர் மனிதர் நடுவில் துவக்கின இரட்சணிய அலுவல் என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்படியாக உலகத்தில் தாம்

ஸ்தாபிக்கவந்த திருச்சபையில் ஞான அரசாட்சிமுறையை ஏற்படுத்தத் திருவுளமானார். பாப்பானவரென்றும் மேற்றிராணிமாரென்றும் குருக்களென்றும் படிப்படியாய் அதிகாரம்பெற்றுத் திருச்சபையை ஆளுந்தன்மைதான் ஞான அரசாட்சிமுறையென்னப்படுகிறது. அப்போஸ்தலர் சங்கத்தை ஏற்படுத்தினதில் இந்தக் குருத்துவ வரிசையின் மூலாதாரமும் இலக்ஷண சொரூபமும் விளங்குகின்றன. அர்ச். லூக்காஸ் சொல்லுகிறதுபோல அந்தக் காலத்தில் இயேசுநாதர்சுவாமி மலையின்மேல் தம்முடைய சீஷர்களை அழைத்து அவர்களுக்குள் பன்னிரண்டுபேரைத் தமது இஷ்டப்படி தெரிந்துகொண்டு அவர்களுக்கு அப்போஸ்தலரென்று பேரிட்டார். இந்தப் பேருக்கு அனுப்பப்பட்டவர்களென்று அர்த்தமாம். அவர்கள் யாரென்றால்; சீமோனாகிற இராயப்பரும், அவர் சகோதரனான பெலவேந்திரரும், யாகப்பரும், அவர் சகோதரனான அருளப்பரும், பிலிப்புவும், பர்த்தலோமேயும், மத்தேயுவும், தோமையாரும், அல்பேயுவின் மகனாகிற யாகப்பரும், செலோத்தெஸ் என்னப்பட்ட சீமோனும், யாகப்பரின் சகோதரனான யூதா என்னப்பட்ட ததேயுவும், சதிகாரனான யூதாஸ்இஸ்காரியோத்துமாம். (லூக். 6. மாற். 3.)

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இயேசுநாதர்சுவாமி தம்மைப் பிரமாணிக்கமாய்ப் பின்சென்றுவந்த அத்தனை சீஷர்களுக்குள்ளே பன்னிரண்டு பேரை மாத்திரந் தெரிந்துகொண்டார். பரம அர்த்தமுள்ள இந்த இலக்கம் பதினேழு யுகத்துக்குமுன் இஸ்ராயேல் ஜனத்தின் பன்னிரண்டு கோத்திரத்துக்குத் தலைவர்களாயிருந்த பன்னிரண்டுபேரால் உருவகமாய்க் குறிக்கப்பட்டிருந்தது. தேவகுமாரன் அவர்களைத் தெரிந்துகொண்டதால் அவர்களுக்கு எவ்வளவோ பாக்கியம் எவ்வளவோ மகிமை! அர்ச். மாற்குஸ் சொல்லுகிறதுபோல தமக்குத் தெரிந்துகொள்ளப் பிரியமான பன்னிரண்டுபேரைத் தெரிந்துகொண்டார். (3-ம் அதி.) ஆதலால் இந்தப் பன்னிரண்டு அப்போஸ்தலருக்குங் கிடைத்த மகிமைக்காக அவர்களை வாழ்த்தக்கடவோம். பின்னும் நம்மைப்பார்க்க



அதிக யோக்கியவான்களான கோடாகோடி ஜனங்களுக்குள் ஆண்டவர் நம்மை விசேஷித்த விதமாய்த் தெரிந்துகொண்டு தமது பிறகே வரவழைக்கச் சித்தமானதினால் நாமும் பாக்கியம் பெற்றவர்களென்று ஞான சந்தோஷப்படக்கடவோம்.

மனப்பற்றுதல்.—ஆண்டவர் நம்மைத் தெரிந்தழைத்துக்கொண்ட தயவுக்காகத் தாழ்ச்சியோடு நன்றியறிதல் செலுத்துவது; அதில் முடிவுபரியந்தம் பிரமாணிக்கமாயிருக்க வேகமான ஆசை கொள்வது.

பிரதிக்கினை.—நான் இப்போதிருக்கும் நிலையில் தேவகிருபையால்தான் இருக்கிறேன் என்று அர்ச். சின்னப்பரோடுகூட அடிக்கடி சொல்லவேண்டும். (1. கொரி. 15).

## 2-ம் பிரிவு

### அப்போஸ்தலரைத் தேர்ந்துகொண்டபோது நடந்த வர்த்தமானங்கள்

தியானம்.—இயேசுநாதர்சுவாமி அப்போஸ்தலரைத் தெரிந்துகொண்டபோது நடந்த பிரதான வர்த்தமானங்களில் ஒன்று ஏதெனில் அவர் விசேஷித்த பிரகாரம் அதற்கு ஆயத்தம்பண்ணச் சித்தமானதாம். அர்ச். லூக்காஸ் (6-ம் அதி.) சொல்லுகிறதுபோல அதற்கு முந்தின நாள் சாயந்தரமே ஆண்டவர் தனிமையாய் மலையிலேறி இரவெல்லாந் தமது பிதாவாகிய சர்வேசுரனைப் பார்த்து செபம்பண்ணுவதில் செலவழித்தார். அப்போஸ்தலரைச் சரியாய்த் தெரிந்துகொள்ளும்படி அவர் ஏகாந்தமாயிருக்கவும் இரவெல்லாஞ் செபஞ்செய்யவும் அவசியமா? அர்ச். அமிர்தநாதர் வசனித்தபடி இதினால் நமக்கு நன்மாதிரிகையும் நல்ல படிப்பினையுங் கொடுக்க அவர் சித்தமானதேயல்லாமல் மற்றப்படியல்ல.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இயேசுநாதர்சுவாமி இதில் நமக்குக் காண்பித்த தருமமாதிரிகையும் உத்தம படிப்பினையுமாவன: முந்த முந்த ஞான ஒளியைத்தரும் பிதாவின் அனுக்கிரகத்தைத்-

கேளாமலும் அவரை நோக்கிக் கெஞ்சி மன்றாடாமலுங் கனமான காரியமொன்றும் நாம் செய்யக்கூடாது. 2-வது. நன்றாய்ச் செபத்தியானஞ் செய்வதற்குத் தன் கவைகாரியங்களை விட்டுவிட்டு ஜனசந்தடியில்லாத இடங்களிலாவது கூடுமானால் சத்தமில்லாத இராக்காலத்திலாவது செபம் பண்ணவேணும். இந்தத் திவ்விய படிப்பினையின்படி நடந்தேனா? என் நடக்கையை எந்த விஷயத்தில் சீர்திருத்த வேணும்?

மனப்பற்றுதல்.—உனக்குக் கொடுக்கப்பட்ட அலுவலை எப்போதுந் தேவசித்தத்துக்கு ஒத்தபிரகாரம் நடத்தத் தக்கதாக உனக்கு வேண்டிய புத்தி விவேகத்தை ஆண்டவரிடத்தில் கேட்பாயாக.

பிரதிக்கினை.—மனதில் சந்தேகங் கலக்கமுண்டாகும் போது உடனே செபஞ்செய்கிறதுமல்லாமல் உன் ஆத்தும குருவின் ஆலோசனையையுங் கேட்டு நட.

## 3-ம் பிரிவு

### இதற்கடுத்த ஒரு விசேஷம்

தியானம்.—தெரிந்துகொள்ளப்பட்ட பன்னிரண்டு அப்போஸ்தலருக்குள்ளே துரோகியான யூதாஸ் இஸ்கரியோத்து என்பவனும் எப்படி ஒருவனாயிருந்தானென்று கண்டுபிடிப்பது கூடாத காரியம்போல் தோன்றுகிறது. இதை நினைக்கும்போது யார்தான் பிரமிக்கமாட்டார்கள்! இயேசுநாதர்சுவாமி இதுகாரியத்தில் மோசம்போனாரோ அல்லது பேருக்குமாத்திரம் அவனை அழைத்தாரோவென்று வேள்வி பிறக்கலாம். இதற்கு வேதவித்தியாபாரகர் சொல்வதைக் கேள். யூதாஸ் அப்போஸ்தலனாயிருக்க வேணுமென்று இயேசுநாதர்சுவாமி மெய்யாகவே தாற்பரியமாயிருந்ததினால்தான் அவனை அழைத்தார். அவனோ தன் துரோகத்தினால் இதற்கு அபாத்திரனாய்ப் போனான். அப்படியிருந்தும் ஆண்டவர் அவனைத் தெரிந்துகொள்வதற்கு உண்டான நியாயங்களை விசாரிக்கும்போது முந்த முந்த சர்வேசுரன் கொடுக்கிற உச்சிதமான வரங்களை



யடைந்திருக்கிற மனுஷன் எப்போதுந் தன் மனம் பொருந்தி அதற்குச் சரியாய் நடக்கவும் அல்லது தவறிப் போகவுந் தக்கவனாயிருக்கிறானென்று தெரியவருகிறது. 2-வது. ஒருவன் எவ்வளவு பரிசுத்தமான அந்தஸ்துக்கு அழைக்கப்பட்டிருந்தபோதிலும் அவன் தன் ஆத்துமத்தைச் சேதப்படுத்தலாமென்கிறதினாலே அச்சத்தோடும் நடுக்கத்தோடும் அவனவன் தன்தன் ஈடேற்றத்துக்காகப் பிரயாசப்படவேணுமென்று அர்ச். இராயப்பர் வசனித்திருக்கிறார். 4-வது தொழிலாளி வேறே அவன் செய்யுந் தொழில் வேறே என்கிறதுபோல, ஒரு சபையைச்சேர்ந்த ஒருவன் யாதொரு குற்றத்தைச் செய்தாலும், அது சபையைச் சாரமாட்டாது. அப்படி இல்லாவிட்டால் யூதாஸைப் பற்றி அப்போஸ்தலரைத் துரோகிகள் கூட்டத்தாரென்றும், அவர்கள் தொழில் சதிமார்க்கத் தொழிலென்றுஞ் சொல்லவேண்டியிருக்கும். ஆகையால் நாம் விவேகத்தோடே எந்தக் காரியத்திலும் நன்மையையுந் தின்மையையும் பகுத்தறிய யூதாஸ் செய்த பாதகம் நமக்குப் படிப்பினையாயிருக்கிறது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நாம் எச்சரிக்கையாய் நடக்கவும் பிறருக்கு நல்லுணர்ச்சி வருவிக்கவும் மேற்சொன்ன காரியத்தை நன்றாய்க் கவனிக்கவேண்டியது. தெய்வ பயமுள்ளவர்களுக்கு எல்லாம் நன்மையாக மாறுமென்று அர்ச். சின்னப்பர் வசனித்திருக்கிறார். அப்படியே சிலர் கெட்டுப்போகிறதைப் பார்க்கும்போது நாம் நமதுபேரில் நம்பிக்கை வையாமல் தாழ்ச்சியோடே நடக்கிறதற்கு இடமுண்டாகிறது. யாதொருத்தர் தரும வழியில் நிலைமையாய் நடக்கிறதைப் பார்க்கும்போது சர்வ சத்தியுங் கொடுக்கிற தேவ வரப்பிரசாதத்தின்பேரில் நமக்கு அனந்த நம்பிக்கையுண்டாகிறது.

சம்பாஷணை.—அர்ச். இராயப்பரோடுஞ் சின்னப்பரோடுஞ் சம்பாஷித்துக்கொள்.

# 6-ம் தேதி

## இயேசுநாதர் மலையின்மேல் செய்த பிரசங்கம் எட்டுவகைப் பாக்கியங்களின்பேரில்

### முதலாவது மனத்தரித்திரமுள்ளவர்கள் பாக்கியவான்கள்

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதர்சுவாமி மலையின்மேலிருந்து தமது சுவிசேஷத்தின் மேலான போதனையைச் சனங்களுக்குப் பிரசங்கிக்கிறதாக ரூபிகரித்துக்கொள்வேனாக.

தியானச் செபம்.—சுவிசேஷப் போதனையை நன்றாய்க் கண்டுபிடித்துச் சுகிக்கவும் புறத்தியாரும் அதை அறிந்து உணரவும் வேண்டிய உதவி சகாயத்தைக் கேட்பேனாக.

## முதல் பிரிவு

### மலையின்மேல் செய்த பிரசங்கத்துக்கடுத்த சில விஷயங்கள்

தியானம்.—இயேசுநாதர்சுவாமி உலகமெங்கும் பிரசங்கிக்கப் பன்னிரண்டு அப்போஸ்தலர்களைத் தெரிந்துகொண்டு, அவர்களாலும் அவர்களுக்குப் பதிலாய் வருகிறவர்களாலுஞ் சகல ஜாதி ஜனங்களுக்குந் தமது திவ்விய போதகத்தைப் படிப்பிக்கச் சித்தமானார். இதற்காக அவர்களைக் குறையறப் படிப்பிக்கவேண்டியிருந்ததினால் தாமதமில்லாமல் தமது திவ்விய போதனையைக் கற்பிக்கத் துவக்கினார். எப்படியென்றால் அவர் மலையினின்று கீழ்நோக்கி இறங்கிச் சகலருங் காணவுங் கேட்கவுங்கூடிய ஓரிடத்தில் வந்தபொழுது, யூதேயா நாடடங்கிலும் தீரு சீதோன் என்கிற பட்டணங்களிலுமிருந்து முதலாய்த் திரளான ஜனங்கள் அவ்விடத்தில் வந்து கூடியிருந்தார்கள் என்று அர்ச். லூக்காஸ் சொல்லியிருக்கிறார். (6-ம் அதி.) இது தேவ பராமரிப்பினால் நடந்த காரியமாமே. ஏனென்றால் உலகமெங்குந் தமது அப்போஸ்தலர் பிரசங்கிக்கவேண்டிய சுவிசேஷமானது தமது போதகமென்பதற்கும் அதில்



மனுஷப்போதகக் கலப்பேயில்லையென்பதற்கும் அநேகர் சாட்சிகளாயிருக்கச் சித்தமானார். ஆகையால் தமது அப்போஸ்தலர்கள் நடுவில் உட்கார்ந்துகொண்டு தமது சுவிசேஷப் போதகத்தின் உத்தமதனமெல்லாம் ஒன்றாய்த் தொகுத்து, மலைமேல் செய்த பிரசங்கமென்னும் இந்த நெடும் போதனையை அவர்களுக்கு அருளிச்செய்தார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—தேவசுதனானவர் படிப்பித்த நித்திய சத்தியங்களைக் காத்துக்கொண்டிருக்கிற ஏக சாதாரண திருச்சபையாகிய தாயின் மடியில் நாமும் பிறந்து வளரும்படி சர்வேசுரன் செய்த உபகாரத்துக்காக அவருக்கு நன்றியறிதலுள்ளவர்களாய் இருக்கக்கடவோம். அதற்கொத்தபிரகாரம் நடக்கிறவன்தான் இரட்சிக்கப்படுவான். மேலும் நாம் சந்நியாசிகளானதினாலே மற்றக் கிறீஸ்துவர்களைப்பார்க்க அதிக உத்தமப்பிரகாரமாய் நடக்க நமதுபேரில் கடன் சுமந்திருக்கிறது. இதுவே பாக்கியம் நிறைந்த கடமை. இதினாலே மோக்ஷத்தில் நமக்கு எவ்வளவோ ஆனந்த மகிமை உண்டாகும்! இந்தக் கடமையை எப்படிச் செலுத்திவந்தோம்?

மனப்பற்றுதல்.—சந்நியாச அந்தஸ்திலிருக்கிறதற்காக நன்றியறிந்து இந்த உத்தம சுவிசேஷப் போதனையை அநுசரிக்கிறதிலே சிறந்து விளங்க ஆசைகொள்வாயாக.

பிரதிக்கினை.—உங்கள் பரமபிதா உத்தமராயிருக்கிறதுபோல நீங்களும் உத்தமராயிருங்களென்று நமது ஆண்டவர் சொன்னதை அடிக்கடி நினைத்துக்கொள். (மத். 5).

## 2-ம் பிரிவு

### இயேசுநாதர்சுவாமி போதித்த முந்தின பாக்கியமாகிய மனத்தரித்திரத்தின்பேரில்

தியானம்.—இயேசுநாதர்சுவாமி மெய்யான பாக்கியத்துக்கு ஆதாரமேதென்று எடுத்துக்காட்டித் தமது பிரசங்கத்தைத் துவக்குகிறார். இந்த ஆதாரமானது அஞ்ஞா

னத்தின் துராசாபாசங்களினாலேயும் யூத ஆசாரியரின் பற்பல துர்ப்போதனைகளினாலேயுங் கெட்டுப்போயிருந்தது. இக்காலத்திலும் ஆங்காரிகளுஞ் சுகபோகிகளும் அது தங்களுக்கு வேண்டியதில்லையென்று நீக்கிப்போடுகிறார்கள். இதினிமித்தம் இயேசுநாதர்சுவாமி போதித்த மேலான பாக்கியங்களுக்கும் உலகம் போதிக்கிற பாக்கியங்களுக்கும் எதிரிடை ஏற்பட்டிருக்கின்றது. ஐசுவரியவான்களே பாக்கியவான்கள் என்று உலகம் படிப்பிக்கிறது. இயேசுநாதரோ **மனத்தரித்திரர்** பாக்கியவான்கள் என்கிறார். ஆகையால் ஏழைகளாய்ப் பிறக்கிறவர்களைப்பற்றிப் பேசுகிறாரென்று நினையாமல் உலக ஆஸ்திபாஸ்தியின்மேல் ஆசை பற்றுதலில்லாத மனத்தரித்திரமுள்ளவர்களைப் புகழுகிறாரென்று அறியவும். ஏன் இவர்கள் பாக்கியவான்கள் என்றால் இயேசுநாதர்சுவாமி திருவுளம்பற்றியிருக்கிறதுபோல பரலோக இராச்சியம் இவர்களுக்குச் சொந்தமாயிருக்கின்றது. இவர்கள் இம்மையிலேயே யாதொரு அச்சமுங் கவலையுமின்றிப் பரலோக பாக்கியத்துக்கு முன்னடையாளமாகிற மனச்சமாதானத்திலே குடிகொண்டிருக்கிறார்கள்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—இயேசுநாதர் பாக்கியவான்களென்று சொல்லுந் தரித்திரருக்குள்ளே மூன்று வகுப்புண்டு. முதலாவது. அவகாசமில்லாததினால் தரித்திரவான்களாய்த் தேவசித்தத்துக்கு முழுதும் அமைந்திருக்கிறவர்கள். 2-வது. ஆஸ்திக்காரராக இருந்தாலும் மெய்யாகவே மனத்தரித்திரமுள்ளவர்கள். 3-வது. அட்டதரித்திரராய்ச் சீவித்த இயேசுநாதர் பாவனையாக ஆஸ்திபாஸ்திகளை ஒருமிக்க வெறுத்து நீக்கி மனம்பொருந்தித் தரித்திரராயிருக்கிறவர்கள். இந்த மூன்றாம் வகுப்பில் சேர்ந்திருக்கிற பாக்கியம் நமக்குக் கிடைத்திருக்கிறது. ஆகையால் நம்மைப்பற்றி வீடுவாசல் மற்றதும் விட்டிருப்பவனாகிய எவனும் நூறு மடங்கு பெறுவான், நித்திய சீவியத்தையுஞ் சுதந்தரித்துக்கொள்வானென்று இயேசுநாதர் கொடுத்த உதாரமுள்ள வார்த்தைப்பாடு நமக்குஞ் செல்லுமென்பதற்குச் சந்தேகமில்லை. இதை நினைக்க நினைக்க நம்முடைய இருதயத்திலே ஆனந்த சந்தோஷமுங் கெம்பீரமும் உண்டாகாமல் இருக்குமோ?

**மனப்பற்றுதல்.**—இப்பேர்ப்பட்ட பரிசுத்தமான தரித்திரத்தைக் கண்டுபிடிக்கவும் அதைச் சிநேகித்துப் பின்பற்றவும் ஆண்டவர் நமக்குத் தயைசெய்தபடியால் அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ்சொல்லி இதிலே நாமென்மேலும் விளங்க மிகவும் ஆசைப்படுவோமாக.

**பிரதிக்கினை.**—இந்தத் தரித்திரத்துக்கடுத்த சொற்ப ஒழுங்கைமுதலாய்ச் சரியாய் அனுசரித்துத் தரித்திரமே நமக்கு மெய்யான திரவியமாயிருக்கப் பிரயாசப்படவேணும்.

## 3-ம் பிரிவு

### ஆஸ்திபாஸ்தியின்பேரில் இயேசுநாதர் படிப்பித்த போதகம்

**தியானம்.**—தரித்திரத்தைக் குறித்து இயேசுநாதர்சுவாமி திருவுளம்பற்றினதைப் பார்க்குமிடத்தில் ஆஸ்திபாஸ்தியைக் குறித்தும் அதுவே தங்களுக்குப் பரம பாக்கியமென்று எண்ணியிருக்கிறவர்களைக் குறித்தும் என்ன நினைக்கவேண்டியதென்று திஷ்டாந்தமாய் அறிந்துகொள்ளலாம். ஆயினும் உலோபித்தனமுள்ள ஆஸ்திக்காரர் இதை நினைக்கமாட்டார்களென்பதைப்பற்றி அவர்களுக்கு அவர் சொல்லியிருக்கிற பயங்கரமான வார்த்தைகள் எவையென்றால்: திரவியவான்களே உங்களுக்கு ஐயோ கேடாம்; இவ்வுலகத்திலேயே உங்களாறுதல் உங்களுக்கு உண்டாயிருக்கின்றது என்றார். (லூக். 6). இதற்கு அர்த்தமேதெனில் உங்கள் புத்தி நினைவெல்லாம் ஆஸ்திபாஸ்திகளைத் தேடிச் சுகிக்கிறதிலேயே போக்காயிருக்கிறதினால் நீங்கள் உங்கள் கடைசிக் கதியை மறந்து திரிகிறீர்கள். இதினாலே பாவங்கள் நிறைந்து ஒரு பேறுபலனுமின்றிச் சாகப் போகிறீர்கள். உங்களுக்கு நித்திய நரக ஆக்கினையல்லாது வேறே அவதியில்லையென்பதாம்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—உலகத்திலே காரியங்கள் எப்படி நடக்கின்றனவென்று நாலாபக்கமுங் கவனித்துப் பார்த்தால் இயேசுநாதர் இட்ட சாபம் உண்மையென்று உனக்குத் தோன்றாதிருக்குமோ? ஆண்டவர் உன்னை உலகபாசத்தினின்று மீட்டுக்கொண்டதினால் அவர் உனக்குச் செய்த உபகாரம் எம்மாத்திரமென்று நன்றாய் உணரவேண்டும். இதற்கு நீ நன்றியறிந்தவனாயிருக்கிறதுமல்லாமல் உலக சிற்றின்ப மாய்கையில் அகப்பட்டு இரட்சணிய வழியைவிட்டுத் தவறினவர்களுக்கு நற்புத்தி சொல்ல மென்மேலும் அதிக சுறுசுறுப்புக் கொள்வாயாக.

**சம்பாஷணை.**—இன்று அர்ச். இராயப்பர் சின்னப்பர் திருநாளுக்குப்பின் எட்டாம் நாளானதினால் அவர்களோடு சம்பாஷித்துக்கொள்.

---

## 7-ம் தேதி

### சந்நியாச தரித்திரத்தின்பேரில்

**ஆயத்தச் சிந்தனை.**—மனத் தரித்திரமுள்ளவர்கள் பாக்கியவான்கள் என்று இயேசுநாதர்சுவாமி சொல்லுகிறதாக நினைத்துக்கொள்.

**தியானச் செபம்.**—தரித்திரத்தைக் கனமாயெண்ணி அதை ஆசையோடு அநுசரிக்க அவருடைய வரப்பிரசாதத்தைக் கேள்.

### முதல் பிரிவு

#### சந்நியாச தரித்திரத்தின் மேன்மை

**தியானம்.**—தேவசுதன் இந்தத் தரித்திரத்தைக் கனப்படுத்தி இதை வேணுமென்று தெரிந்துகொண்டதினால் இந்தத் தரித்திரத்தின் மாட்சிமை மென்மேலும் அதிகமாய் விளங்குகிறது. நம்மைப்பற்றி தரித்திரரானாரென்று அர்ச். சின்னப்பர் வசனித்திருக்கிறார். தாம் பிறந்தநேர



முதல் இறந்தநேரம்வரையில் அது தமக்குப் பிரியாத துணையாயிருக்கச் சித்தமானார். மனத் தரித்திரமுள்ளவர்கள் பாக்கியவான்கள் என்று பாராட்டி இதற்கு உசிதமான சம்பாவனை கொடுப்போமென்றுந் திருவுளம்பற்றினார். மேலுந் திருச்சபையின் ஆரம்பத்திலிருந்த கிறீஸ்துவர்களும் அவர்களுக்குப்பின் நாளடைவிலிருந்த அர்ச்சியசிஷ்டவர்களும் அவர்களுக்குள் விசேஷமாய்ச் சந்நியாச சபைகளை ஏற்படுத்திய மகாத்துமாக்களும் அவர்கள் சபையிலுட்பட்ட கணக்கற்ற சந்நியாசிகளும் கர்த்தருடைய திவ்விய மாதிரிகையைப்பின்சென்று தரித்திரத்தை மதித்து தரித்திரரானார்கள். அன்றியுஞ் சத்திய திருச்சபையானது தரித்திர வார்த்தைப்பாடு மகா பேறுபலனுள்ளதென்று போதிக்கிறதினாலே இவர்களெல்லாருஞ் சாகுமட்டுஞ் சுத்தத் தரித்திரராயிருப்போமென்று வார்த்தைப்பாடு கொடுத்துவருகிறார்கள்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—இந்தப் பரிசுத்த தரித்திரத்தை எப்போதும் மதித்துச் சிநேகிக்கக்கடவோம். மனுஷருக்குமுன்பாக இதைப்பற்றி வெட்கப்படாமல் இதை அனுசரிக்கிறது நமக்கு மேலான மகிமையென்று காட்டுவோமாக. உலகத்தார் ஆஸ்திபாஸ்திகளைத் தேடும்போது எவ்வளவு நிசிதமும் மோசமுமான காரியத்தை அபேட்சிக்கிறார்களென்றும் நிலையற்ற இந்தச் செல்வ பாக்கியங்களை நீக்கி நித்தியமாயிருக்கும் மோக்ஷானந்தத்தைப் பெற மனம்பொருந்தித் தரித்திரராயிருக்கிறது எவ்வளவு ஞானமும் பெருமையுமென்றும் அவர்கள் கண்டு உணரும்படி வருந்திப் பிரயாசப்படக்கடவோம்.

**மனப்பற்றுதல்.**—சுவிசேஷத் தரித்திரத்தைக் கனமாயெண்ணவும் அதை ஆசித்துத் தேடவும் ஆண்டவர் அனுக்கிரகஞ் செய்ததற்காக அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்.

**பிரதிக்கினை.**—இதின் விலையேறப்பெற்ற மகிமையை உலகத்தார் கண்டுபிடிக்கச் செய்.

## 2-ம் பிரிவு

### சந்நியாச தரித்திரத்தின் தன்மையுங் கருத்தும்

**தியானம்.**—சந்நியாசியானவன் தன் சிரேஷ்டர் உத்தரவின்றித் தனக்குச் சொந்தமாக யாதொன்றையும் வைத்துக்கொள்ளாமலிருப்பது தரித்திர வார்த்தைப்பாட்டின் தன்மையாகும். சந்நியாசி தன் சிரேஷ்டருடைய உத்தரவில்லாமல் யாதொரு காரியம் வாங்காமலும் கொடுக்காமலும் மாற்றிக்கொள்ளாமலுங் கடன்கொள்ளாமலுங் கொடுக்காமலும் இருக்கவேணும். இதை மீறி நடப்பானாகில் அந்தந்தக் காரியத்தின் கனத்துக்குத்தக்கது சாவான பாவமானாலும் அற்பப் பாவமென்கிலுங் கட்டிக்கொள்வான். சிரேஷ்டரோவெனில் மடத்துச் சொத்துக்குக் காபந்துக்காரராய் மாத்திரம் இருக்க வேண்டியதினாலே தமது சபை ஏற்பாடுகளின் கருத்தின்படிக்கும் மடத்தின் பொதுப் பிரயோசனத்தைப்பற்றியுஞ் செலவு முதலிய காரியம் நடத்தலாமல்லாமல் தம்மிஷ்டப்படி தமக்குள்ளடங்கினவர்களுக்காகிலும் அன்னியருக்கென்கிலும் அல்லது தமக்காகவாகிலும் அதில் செலவு செய்யக்கூடாது.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—அர்ச்சிக்கப்பட்ட இந்தத் தரித்திரத்தை இதுவரையிலும் இவ்விதமாய்க் கண்டுபிடித்து அனுசரித்துவந்தாயோ? வீணான பல போக்குகள் சொல்லிச் சொற்பக் காரியங்களிலாவது இந்த ஒழுங்கை மீறி நடக்கவில்லையோ? துவக்கத்தில் தானே இதில் அற்பக் குறைகளுக்கும் பயந்து நடக்கவேணும். அல்லாவிடில் தன்னை அறியாமலே சன்னஞ்சன்னமாய்ப் பெரிய குற்றத்தில் விழுவாய். இவ்விதமாய்ச் சந்நியாசிகள் எளிதாய் மோசம்போவார்கள். ஆனால் தன் ஞான ஆதாயத்தின்மேல் கண்ணாயிருக்கிற சந்நியாசியானவன் தரித்திரத்துக்கடுத்த பிரதான கடமையைமாத்திரம் அநுசரிப்பது போதுமென்றிராமல் இதிலே சாங்கோபாங்கம் ஏதென்று பார்த்து அதின்படியே நடப்பான். இந்தக் கருத்துள்ள சந்நியாசி தரித்திரமே தனக்கு வரவேண்டிய பாகமென்றெண்ணி அவசரமில்லாத வீண் காரி



யங்களைத் தேடாமல் தனது உபயோகத்துக்காக கொடுக்கப்பட்ட பொருட்களைச் சர்வசாக்கிரதையோடுங் காப்பாற்றுவான். பிச்சையெடுத்துப் பிழைப்பவனைப்போல் தனக்குக் கொடுக்கப்படும் அன்னவஸ்திரத்தைத் தாழ்ச்சிபொருந்திய நன்றியறிதலோடு பெற்றுக்கொண்டு, ஆண்டவர் தனக்குக் கொடுத்த நன்மைகளை அநேகமுறை தாறுமாறாய்ச் செலவழித்ததினாலே இதற்குமுதலாய்த் தான் அபாத்திரனென்று நினைத்துக்கொள்வான்.

**மனப்பற்றுதல்.**—சுவிசேஷ தரித்திரத்தின் கருத்தைக் கண்டுபிடிக்க ஆவலோடும் மகா உருக்கத்தோடும் வரங்கேட்பாயாக.

**பிரதிக்கினை.**—தரித்திர முயற்சிகளைப் பிரமாணிக்கமாய் அனுசரித்து இந்தப் புண்ணியத்தைச் சம்பாதிக்கவும் இதில் விருத்தியடையவும் பிரயாசைப்படுவாயாக.

## 3-ம் பிரிவு

### சந்நியாச தரித்திரத்தினால் வரும் பிரயோசனம்

**தியானம்.**—முந்தமுந்த நித்திய பேரின்ப பாக்கியத்தை அடைவதற்குப் பிரதான விக்கினமாயிருக்கிற உலக பாக்கியத்தின்பேரில் உண்டான பற்றுதலைத் தரித்திரம் அகற்றிவிடும். இந்தப் பற்றுதலைப்பற்றி ஆஸ்திக்காரன் கரையேறுவது மிகவும் அரிதென்று இயேசுநாதர்சுவாமி திருவுளம்பற்றியிருக்கிறார். 2-வது. அழியாத பேரின்ப பாக்கியத்தை அடைந்து அதை மற்றவர்களிலும் அதிகமாய்ச் சுகித்து அனுபவிப்போமென்று தரித்திரம் நிச்சயிக்கிறது. இதற்கொத்தவண்ணம், தரித்திராயிருக்கிற நீங்கள் பரலோகத்தில் பொக்கிஷம் அடைவீர்களென்று நமதாண்டவர் திருவுளம்பற்றியிருக்கிறார். 3-வது. இது நம்மை உத்தமதனத்தின் வழியில் கொண்டுபோய்விடும். ஏனென்றால் நீ உத்தமனாயிருக்க மனதானால் போய் உன்னிடத்திலுள்ளதெல்லாம் விற்றுத் தரித்திரருக்குக் கொடுத்துவிட்டு நம்மைப் பின்பற்றுவாயாகவென்று ஆண்டவர் திருவாக்கருளினார். (மத். 16.) மெய்யாகவே

பூலோக நன்மையை முழுவதும் வெறுத்துவிடுவது தேவ சிநேகத்தினால் நம்மைச் சர்வேசுரனோடு ஐக்கியப்படுத்து வதற்கு மிகவும் ஒத்தாசையாயிருக்கும். தேவசிநேகத்தில் தான் உத்தமதனம் அடங்கியிருக்கிறது. தேவ சிநேக மானது தேவ முறைமையின் சம்பூரணமென்று அர்ச். சின்னப்பர் எழுதி வைத்திருக்கிறார். (உரோ. 13.) தரித் திர வார்த்தைப்பாடு கொடுத்து மடத்திலே வாசம் பண்ணு கிறதினால் இம்மையிலேயே நமக்கு வருகிற நன்மை எவ்வள வென்று யாரால் சொல்லக்கூடும்? இது எவ்வளவென்று வாயால் சொல்லக்கூடியதைவிட மனதில் அதிகமாய் உணர லாம். இன்னமும் மரண சமயத்தில் இதை அதிக தெளி வாய்க் கண்டுபிடிப்போம்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இந்த நினைவு நமதுள்ளத்தில் பதிந்திருந்தால் நமது அந்தஸ்துக் கடுத்த கடமைகளை நிறைவேற்றுவதிலும் நாம் கொடுத்த வார்த்தைப்பாடுகளையும் விசேஷமாய் தரித்திர வார்த்தைப் பாட்டையும் அநுசரிப்பதிலும் நமக்குப் பாரமாய்த் தோன் றுவதெல்லாம் பஞ்சாய்ப் பறந்துவிடும்.

சம்பாஷணை.—மனம் பொருந்திய தரித்திரத்துக்கு உத்தம மாதிரிகையான இயேசுநாதரோடு சம்பாஷித்துக் கொள்.

---

## 8-ம் தேதி

### ஆண்டவர் மலையின்மேல் செய்த பிரசங்கம்

#### 2-ம் 3-ம் 4-ம் 7-ம் பாக்கியத்தின்பேரில்

ஆயத்தச் சிந்தனை.—சாந்தகுணமுள்ளவர்களும் அழுகிறவர்களும் நீதியின்மேற் பசிதாகமுள்ளவர்களும் பாக்கியவான்களென்று இயேசுநாதர்சுவாமி சொன்னதைக் கேட்கிறதாக ரூபிகரித்துக்கொள்வேனாக.



தியானச்செபம்.—நான் இந்தப் பாக்கியவான்களில் ஒருவனாயிருப்பதற்கு வேண்டிய அநுக்கிரகத்தைக் கேட் பேன்.

### முதல் பிரிவு

#### 2-ம் 7-ம் பாக்கியத்தின்பேரில்

தியானம்.—சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான் கள். (மத். 5.) இந்த வாக்கியத்தில் சாந்தகுணமுள்ளவர்க ளாய்ப் பிறக்கிறவர்களைப்பற்றி மாத்திரம் பேசியிருக்கிற தென்று நினையாதே. ஆனால் சுபாவமாய் முன் கோபம் பொங்குகிறவர்களாயினும், மனச்சமாதானத்தைக் கலைக்குந் துராசாபாசங்களாகிய எரிச்சல் பழிவாங்க ஆத்திர முதலிய வைகளை அடக்கி வருகிறவர்களே சாந்தகுணமுள்ளவர்க ளென்று கண்டுகொள்க. இவர்களே பூமியைச் சுதந்தரித் துக்கொள்ளுகிறவர்கள். அதெப்படியென்றால், யாவரும் இவர்களை மதித்துச் சிநேகிக்கிறதினால் சமாதானமாய்ப் பூமியின் பாக்கியங்களைச் சுதந்தரிப்பார்களென்று அர்ச். அகுஸ்தீன் சொல்லியிருக்கிறார். அர்ச். பெர்நர்தோவென் றால் தங்கள் இருதயமாகிற நிலத்தைச் சுதந்தரிப்பார்களென் கிறார். கோபக்காரருக்குத் தங்கள் மனப்போக்கின்பேரில் கர்த்தத்துவமில்லாமலிருக்க சாந்தகுணமுள்ளவர்கள் அதை யெல்லாம் அடக்கிக்கொண்டு வருவதினாலே இப்படிச் சொல்லுகிறார். சீவியர்களுடைய பூமியிலே ஆண்டவ ருடைய நன்மைகளைக் கண்ணால் காண்பேனென்று விசு வாசிக்கிறேன் என்பதாய் தாவீது இராசா (சங். 26) சங்கீ தத்தில் பாடினபிரகாரம் சீவியர்களுடைய பூமியாகிய பர லோகத்தைத் தங்கள் சுதந்தரக் காணியாட்சியாக அநு பவிப்பார்களென்று அர்ச். எரோணிமுஸ் முதலிய வேத பாரகர் வசனித்திருக்கிறார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.— சாந்தகுணத்துக்கு இவ்வளவு உச்சித நன்மைகள் இம்மை யிலேயே அளிக்கப்பட்டிருக்கிறதினாலே அதில் உத்தமனாக வருந்துவாயாக. மனதில் எரிச்சல் பொங்கும்போது அதை

உடனே அடக்கி வெடுவெடுத்த குணமுள்ளவர்களோடுங் கூட சமாதானமாய்ச் சீவித்து என்னென்ன பேதகங்கள் நேரிட்டாலும் ஒரே மன அமரிக்கையில் நிலைநிற்கிறவனே சாதுகுணன் என்னப்படுவான். இந்த இரண்டாம் பாக்கியத்தைவிட அதிக உத்தமமான ஏழாம் பாக்கியத்தையும் அடைய வருந்துவோமாக. இயேசுநாதர்சுவாமி இதை விசேஷித்து சமாதான குணத்தோர் பாக்கியவான்கள்; ஏனெனில் சர்வேசுரனுடைய பிள்ளைகள் என்னப்படுவார்கள் என்கிறார். ஆகையால் பொதுவிலே சகல மனுஷருக்குள்ளும் விசேஷமாய் நமது சபைச் சகோதரருக்குள்ளுஞ் சமாதான ஒற்றுமையை ஸ்திரப்படுத்திக் காப்பாற்ற முயற்சி செய்யக்கடவோம். இப்படிச் செய்வோமானால் சமாதானம் நிறைந்த சர்வேசுரனுடைய சாயல் நம்மிடத்திலும் விளங்க, அவருடைய பிள்ளைகள் என்கிற பட்டமும் நமக்கு மேலான விதமாய்க் கிடைக்கும். உத்தம சாதுகுண விஷயத்தில் நான் என்ன ஸ்திதியிலிருக்கிறேன்? என்மட்டிலும் பிறர் மட்டிலும் எனக்கு இருக்கவேண்டிய சமாதானத்தை எவ் விதமாய்க் காப்பாற்றி வருகிறேன்?

மனப்பற்றுதல்.—சாந்தமும் இருதயத் தாழ்ச்சியும் நிறைந்த இயேசுநாதரைக் கண்டுபாவிக்க வேகமான ஆசை கொள்வோமாக.

பிரதிக்கினை.—சாந்தகுணத்தின்பேரிலும் இருதயச் சமாதானத்தின் பேரிலும் அடிக்கடி தனி ஆத்துமசோதனை செய்கிறது.

## 2-ம் பிரிவு

### 3-ம் பாக்கியத்தின்பேரில்

தியானம்.—அழுகிறவர்கள் பாக்கியவான்கள்; ஏனெனில் அவர்கள் ஆறுதலடைவார்கள். (மத். 5.) இந்தக் கண்ணீர்க்கணவாயிலே பல துன்பதுரிதங்கள் உண்டாகிறதையும் ஆத்துமம் பாவத்தால் மாசடைகிறதையும் விசேஷமாய் எண்ணிக்கையற்ற தோஷ துரோகங்களால் தேவ மகத்துவம் நிந்திக்கப்படுகிறதையும் க்ஷணத்துக்கு க்ஷணங்



கணக்கில்லாத ஆத்துமாக்கள் நரகத்தில் விழுகிறதையும்
பார்த்து ஆண்டவர் சமுகத்தில் அழுது பிரலாபித்து எங்
நேரமும் மனநொந்து உருகுகிறவர்கள்தான் அழுகிறவர்க
ளென்று இவ்விடத்தில் சொல்லப்படுகிறார்கள். இப்பேர்ப்
பட்டவர்களை இயேசுநாதர்சுவாமிபாக்கியவான்களென்கிறார்.
ஏனென்றால் முந்தமுந்த இம்மையிலேயே தேவ இஷ்டப்பிர
சாதத்தின் உருக்கத்தினாலேயும் மனஸ்தாபக் கண்ணீர் சிந்து
வதில் அடையும் மனோவாக்குக்கெட்டாத இன்பத்தினாலே
யும் அவர்களுக்கு ஆறுதல் உண்டாகிறது. நான் அநேக
மாதம் கூத்து வேடிக்கைகள் பார்த்து அடைந்த சந்தோ
ஷத்தைப் பார்க்கக் கால் நாழிகை பாடுபட்ட சுரூபத்தின்
பாதத்தில் பிரலாபித்து அழுததினாலே அநுபவித்த சந்
தோஷம் அதிகமென்று அர்ச். அகுஸ்தீன் சொல்லுகிறார்.
2-வது. இவர்கள் இந்த சீவியத்துக்குப்பிறகு பரலோகத்
தில் அளவும் முடிவுமில்லாமல் ஆறுதலடைவார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நீ
சந்நியாசத்தில் பிரவேசிக்குமுன்னே மன உருக்கமென்கிற
பேர் முதலாய் உனக்குத் தெரியாமலிருந்திருக்கலாம். இப்
போது சிரித்து மகிழுகிறவர்களே ஐயோ உங்களுக்கு நிற்
பாக்கியம்; பின்னுக்குப் பிரலாபித்துக் கண்ணீர் விட்டழு
வீர்களென்கிற பயங்கரமான வார்த்தைகளைத் திவ்விய
கர்த்தர் யாரைக்குறித்துச் சொன்னாரோ அவர்களுக்குள்
ஒருவேளை நீயும் ஒருவனாயிருந்திருப்பாய். (லூக். 6.) இப்
போது சந்நியாசத்தில் நீ காண்கிறதெல்லாம் உன் மனம்
இளகி உருகுவதற்கான நியாயமாயிருக்க இது உன் புத்தி
யில் சரியாய்ப்படாமல் போகிறதென்ன? உன் நடத்தை
யில் அது அவ்வளவு சொற்பமாய்த் தோன்றுகிறதென்ன?
இதற்குக் காரணம் நீ உன் புத்தியை புறக்காரியங்களில்
வெகுவாய்ச் சிதறவிடுகிறதும் உன்னை ஒடுக்காமலிருக்கிறது
மல்லவோ?

மனப்பற்றுதல்.—இருதய மனஸ்தாபத்தையும், விசேஷ தேவ அநுக்கிரகம் உன்னைத் தூண்டுமானால், கண்ணீர் வரத்தையும் ஆண்டவரைப் பார்த்து இடைவிடாமல் மன்றாடிக்கேள்.

**பிரதிக்கினை.**—எப்போதும் ஆண்டவரோடே ஐக்கியமாய் ஒன்றித்திருக்கத்தக்கதாக ஏகாந்தம் ஒடுக்கம் மவுன முதலியவற்றின்மேல் பிரியப்படுவாயாக.

## 3-ம் பிரிவு

### 4-ம் பாக்கியத்தின்பேரில்

**தியானம்.**—நீதியின்பேரில் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள் (மத். 5). இந்த வாக்கியத்தைக்கொண்டு ஊக்கத்தோடு உத்தமதனத்தில் நாளுக்கு நாள் வர்த்திக்க வருந்துஞ் சந்நியாசிகளே பாக்கியவான்களென்று இயேசுநாதர்சுவாமி வெளிப்படுத்துகிறார். உங்கள் பரம பிதாவானவர் உத்தமராயிருக்கிறதுபோல நீங்களும் உத்தமராயிருங்களென்ற கற்பனைக்குக் கீழ்ப்படியத் தாங்கள் என்ன செய்தாலும் போதாதென்று எண்ணி மென்மேலும் பரிசுத்ததனம் தாழ்ச்சி மனஒறுத்தல் சர்வேசுரனோடு ஐக்கிய முதலிய புண்ணியங்களில் சிறந்து விளங்கப் பிரயாசப்படுவார்கள். ஆனால் இதைப்பார்க்குமிடத்தில் கனமான பாவத்தில் விழாமல் இப்போதிருக்கும் புண்ணிய அந்தஸ்தே தங்களுக்குப் போதுமென்று நினைத்திருக்கிற சுறுசுறுப்பற்ற சந்நியாசிகளை அவர் மேற்கண்ட வாக்கியத்தைக்கொண்டே கண்டிக்கிறாரல்லவோ?

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—மேற்சொன்ன நீதிமான்களுக்குள் நீயும் ஒருவனாயிருந்தால் சந்தோஷப்பட உனக்கு இடமுண்டு. ஏனெனில் அவர்கள் திருத்தியடைவார்களென்று இயேசுநாதர் வசனித்திருக்கிறார். ஆகையால் அவர்களுடைய பேரின்ப பாக்கியத்துக்கு நீயும் பங்காளியாவாய். அவர்களைப்போல இம்மையிலேயே தெய்வ ஆறுதலையுஞ் சமாதானத்தையும் ஞான சந்தோஷத்தையுஞ் சுகித்து ஞான திருத்தி அடைவதுமன்றி மறுமையில் சம்பூரணமாய்ப் பரலோக பாக்கியத்தையும் பெற்று வாழ்வாய். ஆகிலும் நீ உன்னைத்தானே நம்ப வேண்டாம். இப்போது உன்னிடத்திலிருக்கிற பத்தி சுறுசுறுப்பு குறைந்து சன்னஞ் சன்னமாய்ப் புண்ணியத்



தில் தளர்ச்சியுஞ் சலிப்பும் உண்டாகுமென்று எண்ணி எப்போதும் பயந்து நட.

**சம்பாஷணை.**—இன்றையத் திருநாளுக்குரிய போர்த்துக்கல் தேசத்து இராக்கினியான அர்ச். எலிசபெத்தம்மாளோடு சம்பாஷணை செய். இந்த அம்மாள் உலக சுக போகங்களை அறுவருத்துத் தள்ளி சாந்தகுணத்தோடும் பத்தி வைராக்கியத்தோடும் ஆச்சரியமான பிரகாரம் நடந்து வந்ததை நினைத்துக்கொள்.

---

## 9-ம் தேதி

### 5-ம் 6-ம் 8-ம் பாக்கியத்தின்பேரில்

**ஆயத்தச் சிந்தனை.**—இரக்கமுள்ளவர்களும் இருதய சுத்தமுள்ளவர்களும் பிறரால் துன்பப்படுகிறவர்களும் பாக்கியவான்களென்று இயேசுநாதர் சுவாமி சொன்னதைக் கேட்கிறதாக ரூபிகரித்துக்கொள் (மத். 5).

**தியானச் சேபம்.**—இந்த விசேஷ வரம் பெற்ற ஆத்துமாக்களுக்குள் நீயும் ஒருவனாயிருக்க வரப்பிரசாதங் கேள்.

## முதல் பிரிவு

### 5-ம் பாக்கியம்

**தியானம்.**—இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள். இவர்கள் யாரென்றால், பிறருடைய தேவைகளை அறிந்து சுபாவ நியாயங்களைப் பாராட்டாமல் விசுவாசமுகாந்தரத்தை முன்னிட்டு அவர்கள் மேலிரங்கி அவர்களுக்கு உதவிசெய்கிறவர்கள்தான். உங்கள் பரம பிதா இரக்கமுள்ளவராயிருக்கிறதுபோல நீங்களும் இரக்கமுள்ளவர்களாயிருங்களென்று (லூக். 6). இயேசுநாதர்சுவாமி திட்டமாய்க் கற்பித்திருக்கிறதினாலே இரக்கத்துக்கடுத்த புண்ணிய கிரியைகளைச் செய்யவேண்டியது நமது கடமை

யாமே. மேலுங் கர்த்தர் வறுமைப்படுகிறவர்களெல்லாரையுந் தமது ஸ்தானத்திலிருக்கிறவர்களாகப் பாவிக்கத் திருவுளமானார். இதினாலேயன்றோ பொதுத்தீர்வை நாளில் நல்லவர்களைப் பார்த்து என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே வாருங்கள் நான் பசித்திருந்தேன் எனக்குப் போசனங் கொடுத்தீர்கள் என்று இத்தகைய வார்த்தைகளைச் சொன்னபிறகு என்னுடைய சகோதரருக்குள் சிறியவன் ஒருவனுக்கு நீங்கள் செய்தது எனக்குத்தானே செய்தது போலாயிற்று என்று உங்களுக்கு மெய்யாகவே சொல்லுகிறேன் என்பார் (மத். 25).

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—சரீர சம்பந்தமான தர்மகிரிகைகளுக்காக நியமிக்கப்பட்ட சந்நியாச சபையிலே நீ உட்பட்டிருக்கிறாயாகில் அதற்காகச் சந்தோஷப்படுகிறதுமல்லாமல் சர்வேசுரனைப்பற்றி நல்ல கருத்துடன் உன்னுடைய கடமைகளைச் சுறுசுறுப்போடே நிறைவேற்று. படிப்பிக்கிறதிலுத்தியோகமாயிருக்கிற சந்நியாச சபையில் நீயும் ஒருவனாகில் அதற்காகவுஞ் சந்தோஷப்படவேணும். சரீரத்தைவிட ஆத்துமம் மேலானதினால் சரீர சம்பந்தமான தர்மக்கிரிகைகளைவிட ஆத்துமசம்பந்தமான தர்மக் கிரிகைகளைச் செய்வது அதிக உசிதமாமே. அப்படியே பாவிகளைக் கண்டித்து நன்னெறியிலே திருப்புவதும் பிள்ளைகளுக்கும் அறியாதவர்களுக்கும் படித்துக்கொடுப்பதும் இக்காலத்தில் விசேஷமாய் வேதவிரோதிகள் சத்தியத்தைப் புரட்டிச் சொல்லுந் துர்ப்போதனைகளை மறுத்தொழித்து விசுவாசப் பிரமாணத்தையும் அதின் ஆதாரத்தையும் யாவர் இருதயத்திலும் பதியச்செய்வதும் ஆகிய இவை முதலான காரியங்கள் ஆண்டவருக்குப் பிரியமாயிருக்கிறதுமல்லாமல் நமக்கும் வெகு பிரயோசனமாயிருக்கும். இதைவிட மேலான தொழில் இவ்வுலகத்தில் கிடையாது. இந்தக் கிரியைகளை இது வரையில் எப்படி செய்துவந்தாய்? எவ்வளவு பொறுமையோடும் உதாரத்தோடும் நடத்திவந்தாய்? இதற்கு அனுகூலமாக உன் பரிசுத்த நடக்கையினாலுஞ் செபதபத்தினாலுஞ் சர்வேசுரனையுந் தேவமாதாவையுஞ்



சம்மனசுக்களையும் அர்ச்சியசிஷ்டவர்களையும் பிரார்த்தித்து வந்தாயோ?

**மனப்பற்றுதல்.**—சர்வேசுரனுக்கு மனுஷர்பேரிலுள்ள கடாட்சநிறைந்த கருத்துக்கு யோக்கிய எத்தனமாகும்படி கேட்பாயாக.

**பிரதிக்கினை.**—பிறர்சிநேக அலுவலில் அவதைரியமுண்டாகும்போது நினைத்துக்கொள்ளவேண்டியதாவது: இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள் ஏனெனில் அவர்கள் இரக்கத்தை அடைவார்கள். (லூக். 6.)

## 2-ம் பிரிவு

### 6-ம் பாக்கியம்

**தியானம்.**—சுத்த இருதயமுடையவர்கள் பாக்கியவான்கள்; ஏனென்றால் சர்வேசுரனைத் தரிசிப்பார்கள். (மத். 5.) இருதயசுத்தத்தில் அநேகவகையுண்டு; முதலாவது சாவானபாவம் இல்லாமலிருக்கிறது; 2-வது, வேறுமென்று அற்பப்பாவம் கட்டிக்கொள்ளாமலும் பாவத்தின் பேரில் யாதொரு பற்றுதல் இல்லாமலுமிருக்கிறது; 3-வது. அற்பக்காரியத்திலுங்கூடக் கிரமந் தப்பின ஆசையில்லாமலிருக்கிறது; 4-வது. நேராய் மோக்ஷத்தில் பிரவேசிக்கிறதற்கு விக்கினமாயிருக்கிற அற்ப மாசு முதலாய் இல்லாதிருக்கிறது; 5-வது. சர்வேசுரனைமாத்திரம் உத்தேசித்து அவரை மாத்திரந்தேடி சிநேகிக்கிற உத்தம பரிசுத்ததனமுடையவனாயிருக்கிறது. இவைகளுக்குச் சர்வேசுரன் வாக்குத்தத்தஞ் செய்திருக்கிற சம்பாவனை விலைமதிக்கக்கூடாதது. அந்தச் சம்பாவனை சர்வேசுரனையே சதாகாலமுந் தரிசிக்கிறதாமே; அதாவது அவரவர் அனுசரிக்கும் புண்ணியத்துக்குத்தக்கது இம்மையில் ஞானத் தெளிவினாலும் மறுமையில் பாக்கியமுள்ள தேவ தரிசனச் சுடரொளியினாலும் ஆண்டவரைக் காண்பார்கள்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—இவ்விதம் படிப்படியாய் உயருகிற உத்தமதன வகையில் நீ எவ்வளவு உயரம் ஏறிச்செல்ல முயற்சி செய்கிறாய்? அதை

அடைவதற்கான உபாயங்களாகிய பாவசங்கீர்த்தனம், தனி ஆத்துமசோதனை, மவுனம், பாவசமயங்களைத் தவிர்த்தல், ஒடுக்கம், உள்ளிந்திரியப் புறஇந்திரிய அடக்கம், முதலான வழிகளை எவ்வளவு ஆவலோடும் நிலைமையோடும் உதவிக்கொள்ளுகிறாய்? நீ படும் பிரயாசத்துக்கு மிகுதியான சம்பாவனை கிடைக்கும். பரிசுத்ததனத்தின் அந்தந்த அந்தஸ்துக்கு அளவாக நித்திய பேரின்ப பாக்கியமும் அதிகரிக்கும்.

மனப்பற்றுதல்.—சர்வேசுராசுவாமி, என்னிடத்தில் சுத்தமான இருதயத்தை உண்டாக்கி நான் நேர்மையான வழியில் நடக்க என்னுள்ளத்தைப் புதுப்பித்தருளும்.

பிரதிக்கினை.—மென்மேலும் இருதய சுத்தத்தை அடைவதற்கான வழி வகைகளை உபயோகித்துக்கொள்.

## 3-ம் பிரிவு

### 8-ம் பாக்கியம்

தியானம். — நீதியினிமித்தந் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் யாரென்றால் தேவகற்பனைகளையுஞ் சந்நியாசிகளாயிருந்தால் அவைகளோடு தங்கள் சபையொழுங்குகளையும் அநுசரித்துவரும் நிலைமையினிமித்தம் வருத்தப்படுகிறவர்களுந் தேவதோத்திரப்பற்றுதலால் ஏவப்பட்டுச் சர்வேசுரனுக்கு ஏற்காத துரோகங்களை நிர்மூலமாக்கவுந் தேவ மகிமை பிரபல்லியமாகவும் ஆத்துமாக்களை இரக்ஷித்துத் திருச்சபையின் சுதந்தரங்களைத் தற்காக்கவும் வேண்டிய உபாயங்களைத் துணிந்து செய்துவரும் பத்தி பற்றுதலினிமித்தமாக உபத்திரவப்படுகிறவர்களும் நீதியினிமித்தந் துன்பப்படுகிறவர்களாம். இவர்களுக்கு வாக்குத்தத்தஞ்செய்யப்பட்ட சம்பாவனை மிகவும் மகத்தானது; ஏனென்றால் மோக்ஷராச்சியம் அவர்களுடையது என்று இயேசுநாதர்சுவாமி திருவுளம்பற்றியிருக்கிறார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நீ சந்நியாசியாயிருக்கிறதினிமித்தம் உன்னை ஆவலாதிப்



படுத்தி பகைத்துச் சபிக்கிறவர்கள்பேரில் கோபங்கொள்ளாதே; அவர்கள்பேரில் மனமிரங்கி அவர்களுக்காக மன்றாடு. அவர்கள் உன்மேல் தின்மையாய் நினைப்பதெல்லாம் உனக்கு நன்மையாய் மாறும். வெளிமனுஷர் சந்நியாசிகளுக்கு இடைஞ்சல் செய்தாலும் அதினால் எனக்கொரு துன்பமும் நேரிடாததினாலே நான் அந்த இடைஞ்சல்களை உணருகிறதில்லை. ஆனால் மடத்திலிருக்குஞ் சகோதரர் என்பேரிலே பட்சக்குறைவாய் ஒரு பிரகாரமாயிருக்கிறதைக் கண்டு நான் வருத்தப்படுகிறேனென்பாயானால் சிலவிசை உன்னிடத்திலுள்ள ஒழுங்கீனத்தைப்பற்றியாவது எடுப்புத்தனம் பெருமை பிடிவாதம் சமுசயம் முதலிய குணபேதகத்தைப்பற்றியாவது இப்படிச் சம்பவிக்கிறதோவென்று யோசித்துப்பார். இப்படியிருந்தால் அந்தக் குற்றங் குறைகளைத் திருத்திக்கொள்வது உன்மேல் சுமந்த கடன். அவைகளை நீ திருத்திக்கொள்ளக்கூடுமாயிருந்தும் திருத்தாமல் விட்டிருப்பாயானால், நீ உன் குற்றங்குறைகளினிமித்தம் துன்பப்படுகிறதேயல்லாமல் நீதியினிமித்தந் துன்பப்படுகிறாயென்று சொல்லக்கூடாது. இதெல்லாம் நீ திருத்திக்கொண்டு நேர்மையாய் நடந்தால் உன் முறைப்பாடெல்லாம் ஒழிந்துபோகிறதுமன்றிச் சர்வேசுரனாலும் மனிதராலும் நேசிக்கப்படுவாய்.

சம்பாஷணை.—இயேசுநாதரிடத்தில் நன்மை அடைந்தவர்கள்தானே அவரை அத்தனை துன்பப்படுத்தினபோது திவ்விய இரட்சகர் காட்டின வாக்குக்கெட்டாத பொறுமையை நினைத்து அவரோடே சம்பாஷிப்பாயாக.

---

## 10-ம் தேதி

### மலையில் செய்த பிரசங்கம்

#### வேதபோதகருடைய ஆவலுக்கு வேண்டிய குணங்கள்

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதர் தமது சீஷர்களால் சூழப்பட்டு மலையில் உட்கார்ந்திருக்கிறதைப் பார்க்கிறதாக ரூபிகரித்துக்கொள்வாயாக.

தியானச் செபம்.—மெய்யான வேத போதகரிடத்தில் விளங்கவேண்டிய சுகிர்த குணங்களைக் கேட்பாயாக. அவர்கள் பூமிக்கு உப்பாயிருக்கும்படி இயேசுநாதசுவாமி ஆசிக்கிறார்.

## முதல் பிரிவு

### பூமிக்கு உப்பாய் இருக்கிறீர்கள்

தியானம்.—இப்போது திருச்சபையிலுள்ள அநேக சந்நியாச சபைகளுக்குள் சில சபைகள் தவிர மற்றவையெல்லாம் வேதபோதகத்துக்கும் பிறர் சிநேகத்துக்கும் அடுத்த முயற்சிகளுக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இவைகளிலுட்பட்ட அநேகர் குருப்பிரசாதிகளல்லவென்றாலும் எல்லாரையும் வேதம் போதிக்கிறவர்களென்றே சொல்லவேண்டியது. நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள். உப்பானது சாரமற்றுப்போனால் அது ஒன்றுக்கும் உதவாதென்று இயேசுநாதசுவாமி அப்போஸ்தலர்களைப் பார்த்து உருவகமாய்ச் சொன்ன வாக்கியம் இவர்களுக்குஞ் செல்லுமாமே (மத். 5).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—ஆண்டவர் இதில் நினைத்த கருத்தின் பிரகாரம் நீ பூமிக்கு உப்பாயிருக்கிறாயோவென்று அறிய வேணுமானால் உப்பின் சுபாவக் குணங்களைத் தீர்க்கமாய் யோசித்துப்பார். உப்பானது நாம் போசிக்கும் உணவுகள் கெட்டுப்போகாமல் அதைக் காப்பாற்றுகிறதுமன்றி ருசியற்ற வஸ்துவையும் ருசியுள்ளதாக்கும். உன் விசாரணையில் ஒப்பிக்கப்பட்டவர்களாகிய படிக்குஞ் சிறு பிள்ளைகள் வாலிபர் மட்டிலும், நோவாளிக்கிடங்கிலாவது வீட்டுக்கு வீடாவது நீ விசாரிக்கவேண்டிய வியாதியஸ்தர் மட்டிலும் நீ நடக்கவேண்டிய விதம் இதுவே. உன் பிறசிநேக வேகத்தினாலும் பக்திக்கடுத்த உபாயங்களினாலும் அவர்களைப் பாவ அசுத்தத்தினின்று காப்பாற்றிப் புண்ணிய பேறுகளினால் அவர்களைச் சர்வேசுரனுக்குப் பிரியமுள்ளவர்களாக்கவேணும். இது தேவ அருளின் வேலையென்பது நிச்சயமென்றாலும் நாமும்



இதற்கு உடன்முயற்சி செய்யவேணுமென்பது சர்வேசுரனுடைய சித்தமாமே. இதற்கொத்தபடி நீ இதுவரையும் நடந்துவந்தாயோவென்றும் இப்போது நடக்கிறாயோவென்றும் பார்.

மனப்பற்றுதல்.—அர்ச். சின்னப்பர் கொலோசியருக்கு எழுதின நிருபத்தில் உங்கள் வார்த்தைகள் ஞானமென்ற உப்பு இடப்பட்டதாயிருக்கவேணுமென்று விரும்பினபடி நீயும் இருக்க ஆசித்து மன்றாடு (கொலோ. 4).

பிரதிக்கினை.—உன் சொந்த முயற்சியைவிடத் தேவ அநுக்கிரகத்தினாலேயே அதிக காரியம் ஆகுமென்று காத்திருக்கப் பழக்கம் பண்ணிக்கொள்.

## 2-ம் பிரிவு

### உலகத்தின் ஒளி

தியானம்.—இயேசுநாதசுவாமி தம்முடைய அப்போஸ்தலர்களைப் பார்த்து நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்களென்று சொன்னபிறகு உடனே அவர்களை நோக்கி நீங்கள் உலகத்தின் ஒளியாயிருக்கிறீர்களென்றுந் திருவுளம் பற்றினார். அதேதெனில் அப்போஸ்தலர்கள் உலகமெங்கும் பரவியிருந்த அஞ்ஞான இருளையும் அதினால் உண்டான எண்ணிறந்த அக்கிரமங்களையும் ஒழித்து சமஸ்தரும் ஏகமெய்யான சர்வேசுரனை அறிந்து ஆராதித்து அவருக்கு ஏற்ற ஊழியஞ் செய்யப் படிப்பிக்கவும் மநுக்குலத்தைத் திருப்பி அவர்களை அர்ச்சியசிஷ்டவர்களாக்கப் பிரயாசப்படவும் அவர்களுக்குக் கடமையாயிருந்தது. இந்த வேதபோதகத் தொழிலை அவர்கள் எவ்வளவு பிரமாணிக்கமாய் நிறைவேற்றினார்களென்பது யாவருக்குந் தெரியும். அர்ச். சின்னப்பர் மிலேத்தென்னும் பட்டணத்துக் கிறீஸ்துவர்களைப் பார்த்துச் சொ[illegible]—நான் ஆசியாவில் பிரவேசித்த முதல் நாள் [illegible] பிரசித்தமாகவும் வீடுகள்தோறும் [illegible] உபதேசித்தேனென்றும் இரா[illegible]ய் உங்களில் [illegible] ஒருவனுக்கும் அழுகையோ[illegible] புத்திமதி சொல்லி[illegible]

னென்றும் நீங்களே அறிந்திருக்கிறீர்கள் (அப். 20). இவ்வாக்கியத்தைக்கொண்டு பிறர் ஈடேற்ற ஆவல் அப்போஸ்தலர்களிடத்தில் எம்மாத்திரம் இருந்ததென்று நாம் கிஞ்சித்தேனும் கண்டுபிடிக்கலாம்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—பிறர் ஈடேற்ற ஆவலுள்ள சந்நியாசி எப்போதும் எவ்விடத்திலும் எச்சமயத்திலும் புத்திக்கு ஒளிவும் இருதயத்துக்கு தேவசிநேக அக்கினியும் பிறப்பிக்கும் வார்த்தையைச் சொல்லும்படியான தருணந் தேடுவான்; அதுவுந் தப்பாமல் கிடைக்கும். அவன் பிரசங்கியெனக்காட்டாமலுந் தான் சொல்லும் வார்த்தையினாலே மற்றவர்களுக்குச் சலிப்பு வருவியாமலும் எப்போதும் எவ்விடத்திலும் மெய்யான பிரசங்கியாயிருப்பான். அது எப்படியென்றால் அவன் செபத்தியானத்தில் அடைந்த ஞானத்தெளிவும் உருக்கமும் ஒளிவுஞ் சுபாவமாய் அவன் உள்ளத்தில் இருந்து வெளியில் வீசுவதினாலே அவனை அடுத்துப் பழகுகிறவர்கள் எப்போதும் அதிக புத்தி ஒளிவடைந்து புண்ணியத்தைச் செய்யத் தாற்பரியமுள்ளவர்களாவார்கள். இந்த நடபடிக்கையின் சாடை உன்னிடத்தில் உண்டோவென்று பார். உன்னோடே புழங்கிவருஞ் சந்நியாசிகளும் உலகத்தாரும் உன்னுடைய பழக்கத்தினாலே விசேஷமாய் அடையும் பலன் என்ன?

மனப்பற்றுதல்.—உன் புத்தி மனதில் நீ ஞானசிந்தையற்றவனாயிருக்கிறதைக்கண்டு வெட்கி நாணக்கடவாய்.

பிரதிக்கினை.—பிறருக்குப் பிரயோசனமுண்டாகும் விதமாய்ப் பேசுகிறாயோவென்று அடிக்கடி ஆத்தும சோதனை செய்துகொள்.

## 3-ம் பிரிவு

### கிறீஸ்துவனுக்கடுத்த உயிருள்ள சாங்கோபாங்க சொரூபம்

தியானம்.—மலையின்மேலிருக்கிற பட்டணம் மறைந்திருக்கக்கூடாததுபோல மனிதர் உங்கள் நற்கிரியைகளைக்



கண்டு பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி உங்களுடைய ஒளி அவர்களுக்குமுன்பாகப் பிரகாசிக்கக்கடவது என்று இரட்சகர் திருவுளம்பற்றினார். (மத். 5.) இவ்வாக்கியங்களைக்கொண்டு தம்முடைய அப்போஸ்தலர்களிடத்திலும் அவர்களைப் பின்சென்றுவரப்போகிறவர்களிடத்திலும் விளங்கவேண்டிய மூன்றுங் குணத்தை அவர் தெளிவாய் அறிவிக்கிறார். அதாவது மனுஷர் எப்போதும் நம்மைப் பார்த்துக்கொண்டிருப்பதினால் அவர்களுக்கு நாம் நன்மாதிரிகை காண்பிக்கவேண்டியதுமல்லாமல் மகா வாய்ச்சாலகமுள்ள பிரசங்கத்தைப் பார்க்க வாய் திறவாமல் நமது நற்கிரியைகளாகிற பிரசங்கத்தின் வழியாய் நன்மை செய்கிறதற்கு அவர்களைத் தூண்டவேணும்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—மடத்திலும் புறத்திலும் இருக்கிறவர்களுக்கு உன் நடக்கையானது இவ்வித பிரசங்கமாயிருக்கிறதோ? சிரேஷ்டர் உன் சகோதரருக்கு உன்னைக்காட்டி இவனைப்போல நடங்களென்று சொல்லக்கூடுமோ? நான் இயேசுநாதரைக்கண்டு பாவிக்கிறதுபோல நீங்களும் என்னைக் கண்டு பாவியுங்களென்று அர்ச். சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதினபிரகாரம் உன்னோடே பழக்கமாயிருக்கிறவர்களுக்கு நீயுஞ் சொல்லக்கூடுமோ? (1 கொரி. 11.) அர்ச், சிப்பிரியானுஸ் கிறீஸ்துவர்களைப் பழித்த அஞ்ஞானிகளைப்பார்த்து எங்களிடத்தில் சொல்லலங்காரமில்லை; ஆனால் கிரிகை அலங்காரம் உண்டென்று சொன்ன திடமான வாக்கு நம்மெல்லாரிடத்திலும் விளங்குமாகில் நாம் பாக்கியமுள்ளவர்கள் தானே.

சம்பாஷணை.—தன் ஏழு பிள்ளைகளும் வேதசாட்சிகளாகும்படி ஏவிக் கடைசியாய்த் தானும் இந்தத்தேதியில் வேதசாட்சியான அர்ச். பாக்கியம்மாளோடே சம்பாஷிப்பாயாக.

# 11-ம் தேதி

## பிறேமோந்திரே என்னும் சந்நியாசிகள் சபையை உண்டாக்கின அர்ச். நோர்பேர்த்து* கொண்ட வெற்றித் திருநாள்

**ஆயத்தச் சிந்தனை.**—இந்த அர்ச்சியசிஷ்டவர் மோக்ஷத்திலே மகிமை பெற்றிருக்கிறதைப் பார்க்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

**தியானச் சேபம்.**—அவர் தமது வல்லமையுள்ள அடைக்கலத்துக்குள் நம்மை வைத்து ஆதரிக்கக்கேட்போமாக.

### முதல் பிரிவு

#### அர்ச். நோர்பேர்த்து மனந்திரும்பினது

**தியானம்.**—இவர் இராச கோத்திரத்தோடு உறவான தாய் தகப்பனிடத்தில் கிளேவ் என்கிற துரைத்தன நாட்டிலுள்ள சந்தேனென்கிற ஊரிலே பிறந்தார். கல்வி சாஸ்திரங்களை மகா சாமர்த்தியத்தோடு படித்தபின் குருத்துவ அந்தஸ்தைத் தெரிந்துகொண்டு ஐந்தாம் பட்டம்பெற்று ஓர் மேன்மையலுவல் அடைந்தார். கொஞ்சத்துக்குப்பின் 4-ம் என்ரிக்கு என்னும் இராயன் அவரைத் தமது அரமனையில் காரணகுருவாய் நியமித்தான். ஆயினும் அவர் இன்னங் குருப்பட்டமுழுதும் பெறவில்லை. அவருடைய நடக்கை அந்தப் பரிசுத்தமான அந்தஸ்துக்கு ஒவ்வாமலிருந்தது; ஏனென்றால் தமக்கு முப்பது பிராயமாகும் வரையில் தமாஷிலும் உலக இன்பங்களிலுங் காலத்தைப் போக்கிவந்தார். அவர் நடந்த இந்தத் துர்நடத்தையை விட்டு விலகும்படி சர்வேசுரன் தமது அளவில்லாத இரக்கத்தினால் ஒரு கனமான

* குறிப்பு: அர்ச். நோர்பேர்த்து 1080-ம் ஹூ பிறந்து, 1134-ம் ஹூ ஜூன் மாதம் 6-ம் தேதி மரித்து 1582-ம் ஹூ அர்ச்சியசிஷ்ட பட்டம் பெற்றார்.



ஆபத்தை அனுப்பாதிருந்தால் அவர் நித்தியமாய்க் கெட்டுப்போயிருப்பார். ஒருநாள் அவர் இலௌகிக ஆடம்பரம் ஒன்றைப் பார்க்கும்படி குதிரையேறிப் போகும்போது ஓர் இடி விழவே, பாதையிலிருந்த சேற்றிலே விழுந்து குற்றுயிராய்க்கிடந்தார். வெகு நேரத்துக்குப்பின் மூர்ச்சை தெளிந்து மனங்கலங்கிப் பதறி ஆண்டவரே நான் என்ன செய்யத் தேவரீருக்குச் சித்தமென்று சவுல் என்பவரைப்போல் கேட்டார். அப்போது அவருள்ளத்தில் ஓர் சத்தமுண்டாகி நீ தின்மையைவிட்டு நன்மையைச் செய்; ஏகாந்தத்திலுந் தவத்திலுஞ் சமாதானத்தைத் தேடென்று சொல்லிற்று. உடனே இவர் எழுந்திருந்து வேறு மனுஷனாக மாறி அரமனையைவிட்டுத் தமது ஆஸ்திகளையெல்லாம் பிச்சைக்காரருக்குக் கொடுத்து விலையேறப்பெற்ற வஸ்திர ஆபரணங்களைத் தள்ளி ஏழைக்கான உடுபாவனைகளை அணிந்து கொலோனியா பட்டணத்துக்கு அருகாமையிலிருந்த அர்ச். சிஜ்பெர்த்து மடத்தில் பிரவேசித்து மகா கடின தபசு செய்யத் துவக்கினார்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—தேவ அநுக்கிரகத்தின் குரலோசை சில சமயங்களில் இன்பமாய் மனதை ஏவும்; சில சமயங்களில் உள்ளத்தைக் கலக்கி உறுத்தும். அது எவ்விதமாய்ச் சப்தித்தாலுஞ்சரி; அதைக் கவனமாய்க்கேட்டு இணங்கி நடக்கக்கடவாய். இன்றையத்தினம் உன் பரிசுத்தமான அந்தஸ்துக்கு ஒத்த பிரகாரம் நீ நடக்கவில்லையென்று அந்தக் குரலோசை உன்னைக் கண்டித்தால் இந்த அர்ச்சியசிஷ்டவரைக் கண்டு பாவித்து இவரைப்போல உதாரகுணமாய் மனஞ்சோராமல் உத்தம நெறியில் பிரவேசித்து அதில் விடாத சுறுசுறுப்போடு நடப்பாயாக. இப்படிச் செய்வாயாகில், முன் உன் நடக்கை எப்படியிருந்தாலும் நீயும் இவரைப்போல அர்ச்சியசிஷ்டவனாவாய்.

**மனப்பற்றுதல்.**—நம்பிக்கையைக் கைநெகிழாமல் தாழ்ச்சியோடு மன்றாடி உன்னை ஆண்டவருக்கு ஒப்புக்கொடு.

**பிரதிக்கினை.**—அவதைரியங் கொடுக்குந் தந்திரங்களுக்கு ஒருபோதும் இடங்கொடாதே.

## 2-ம் பிரிவு

### அர்ச். நோர்பேர்த்து சுவிசேஷத்துக்கு இசைந்த பிரகாரம் நடந்தது

**தியானம்.**—இவர் ஏகாந்தத்தில் இரண்டு வருஷஞ் செலவழித்தபின் தேவ தோத்திரத்துக்கும் பிறாத்தும இரட்சண்ணியத்துக்கும் பிரயாசைப்படவேணுமென்கிற ஆவல் கொண்டார். ஆகையால் குருப்பட்டம் பெற்றமாத்திரத்தில் எங்குஞ் சுற்றித்திரிந்து தவத்தைப் பிரசங்கித்து அநேக பாவிகளை நன்னெறியில் திருப்பினார். இந்த மகாத்துமாவுடைய பரிசுத்ததனத்தைக் கண்ட லவோன் பட்டணத்து மேற்றிராணியார் இவரைத் தமது மேற்றிராசனத்தைவிட்டு அப்புறம் போகவொட்டாமல் நிறுத்திக்கொண்டதினாலே, பிறேமோந்திரே என்னும் ஒரு அத்துவானக் கணவாயைத் தமது வாசஸ்தானமாகத் தெரிங்கொண்டார். இந்த இடம் ஒரு புதுச் சந்நியாச சபைக்கு அஸ்திவாரமாகவும் அதில் அநேக மகாத்துமாக்கள் பிரவேசித்து இவருடைய பேரை நிலைநிறுத்தவும் ஆண்டவர் சித்தமானார். இவர் தம்முடைய சீஷர்களுக்குக்கொடுத்த ஒழுங்குகளை இரண்டாம் ஒனோரியுஸ் என்னும் பாப்பானவர் அங்கீகரிக்கவே, இந்தச் சபை கொஞ்சக் காலத்துக்குள்ளே அநேக தேசங்களில் பரம்பிற்று.* இது அங்கீகரிக்கப்பட்ட மறு வருஷம் இவர் மக்தேபூரென்னும் பட்டணத்துக்கு அதிமேற்றிராணியாராகப் பலவந்தமாய் நியமிக்கப்பட்டார். இந்தப் பட்டத்தில் இவர் இருந்த எட்டு வருஷமுந் தமது வழக்கம்போல கடின தபசு செய்து தாம் உண்டாக்கின சபையைப் பராமரித்துவந்தார்.

* குறிப்பு: 16-ம் நூற்றாண்டில் நேர்ந்த கலாபத்துக்குமுன், இந்தச் சபையில் 1300 சந்நியாச மடங்களும் 400 கன்னியர் மடங்களும் இருந்தன.



**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—இந்த அர்ச்சியசிஷ்டவரைப்போல நீயும் ஒரு சபையை உண்டாக்காதிருந்தாலும் அவரைப்போல் வேதம் போதிக்கிறதில் கீர்த்தியடையாமற்போனாலும் நீ பிரவேசித்திருக்கிற சந்நியாச சபையில் அர்ச்சியசிஷ்டவனாய் நடக்கப் பிரயாசப்படுவதுமன்றி உன் சகோதரரும் உன் நன்னடக்கையைப் பார்த்து அர்ச்சியசிஷ்டவர்களாகும்படி உதவியாயிரு. இவ்விரண்டும் உன்மேல் சுமந்த கடமை; இதைச் சர்வ சாக்கிரதையோடு சிந்தித்து வருகிறாயோ?

**மனப்பற்றுதல்.**—நான் செய்துவருகிற நன்மை வெகு சொற்பம் என்பதைக் கண்டு சர்வேசுரன் சமுகத்தில் என்னை மிகவுந் தாழ்த்தி அவர் என் நல்ல மனதைக் கையேற்றுக்கொள்ள அவரைக் கெஞ்சி மன்றாடுவேன்.

**பிரதிக்கினை.**—நான் என் சகோதரருக்கு நன்மாதிரிகை காண்பிக்கப் பிரயாசப்படுவேன். எங்குஞ் சுற்றித் திரிந்து வேதம் போதிக்குங் குருக்களுக்காக வேண்டிக்கொள்வதுமன்றி என் வேலைகளிலும் வருத்தங்களிலும் அவர்களோடு என் கருத்தினால் ஒன்றித்திருப்பேன்.

## 3-ம் பிரிவு

### அர்ச். நோர்பேர்த்து அடைந்த வெற்றி

**தியானம்.**—சில இடங்களில் இன்றையத் திருநாளை அர்ச். நோர்பேர்த்துடைய வெற்றித் திருநாளென்று கொண்டாடுகிறார்கள். இந்த அர்ச்சியசிஷ்டவர் ஓர் பதிதத் தலைவனாகிய தங்கலினூஸ் என்பவன்மேலும் அவனுடைய துஷ்டக் கூட்டாளிகள்மேலும் அடைந்த வெற்றியைக் கொண்டாட இந்தத் திருநாள் நியமிக்கப்பட்டது. இந்தப் பதிதர் பெயிபா என்னும் நாட்டிலும் விசேஷமாய் ஆன்வேர் என்னும் பட்டணத்திலும் அநேகரைக் கெடுத்து வெகு நிஷ்டூர அநியாயஞ் செய்தார்கள். இராஜாங்கமுந் திருச்சபையும் அவர்களை அடக்க வெகு பிரயாசப்பட்டுங் கூடாமற்போனதைக்கண்டு அர்ச். நோர்பேர்த்தைத் தங்களுக்கு உதவிசெய்யக் கேட்டுக்கொண்டார்கள். இவர் அவ்

விடத்தில் வந்து சொன்ன புத்தி பிரசங்கங்களினால் அந்தத் துர்மதந் தீவிரமாய் அழிந்து ஒழியவே, யாவருக்கும் அது ஒரு புதுமைபோல் தோன்றிற்று. அவர்கள் செய்த பொல்லாப்பும் அவர்கள் பேரும் முதலாய் அடியோடு அற்றுப்போய்த் திருச்சபையின் ஆராதனை முன்னிலும் அதிக ஆரவாரமாய் ஸ்தாபிக்கப்பட்டது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நாம் வேதத்துக்காகப்படும் பிரயாசங்களுக்குத் தேவ ஆசீர்வாதங் கிடைக்கவேணுமென்று ஆசைப்படுகிறது சரியே. இது நமக்கு அநுகூலமாகவேணுமானால் இந்த மகாத்துமாவைக் கண்டு பாவிக்கக்கடவோம். இவரைப்போல வெளிக் கிரிகைகளோடு செபத்தையும் நேர்மையான கருத்தையுங் கூட்டித் தேவமாதாவையும் நாம் யாருக்காகப் பிரயாசப்படுகிறோமோ அவர்களுக்குக் காவலான சம்மனசுக்களையும் இரந்து மன்றாடுவோமாக.

சம்பாஷணை.—அர்ச். நோர்பெர்த்து என்பவரோடு சம்பாஷித்துக்கொள்.

---

## 12-ம் தேதி

### இயேசுநாதர்சுவாமி மலையில் செய்த பிரசங்கத்தின் தொடர்ச்சி

#### தேவகற்பனைகளைச் சுழத்திரையாய் அநுசரிப்பதின்பேரில்

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதர்சுவாமி செய்த அமிர்தமான பிரசங்கத்தைக் கவனமாய்க் கேட்கிற சனங்களைப் பார்ப்போமாக.

தியானச் செபம்.—சந்நியாச ஒழுக்கத்தின்மேல் உயர்ந்த எண்ணமும் வேகமான விருப்பமும் உனக்கு உண்டாகவேணுமென்று பிரார்த்திப்பாயாக.



### முதல் பிரிவு

#### சந்நியாசசபை ஒழுங்குகளை எல்லாஞ் சுழத்திரையாய் அநுசரிப்பதில் பிரமாணிக்கம்

தியானம்.—நான் வேதப்பிரமாணத்தை அழிக்க வந்தேனென்று நீங்கள் நினைக்கவேண்டாம். அழிக்கிறதற்கல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன். எப்படியெனில் வானமும் பூமியும் ஒழிந்துபோவதற்குள்ளே வரிவேதத்தில் கண்ட சகலமும் நிறைவேறுமொழிய அதில் ஓர் இகரமானாலும் ஓர் புள்ளியென்கிலும் நிறைவேறாமற்போவதில்லையென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேனென்று இயேசுநாதசுவாமி திருவுளம்பற்றினார். (மத். 5,) நாம் சந்நியாச ஒழுங்குகளையும் அதின் சட்டதிட்டங்கள் யாவற்றையும் எவ்வளவு சுமுத்திரையாய் அநுசரிக்கவேணுமென்று இயேசுநாதசுவாமி திருவுளம்பற்றின வார்த்தைகளினால் விளங்குகிறது. நமது மனம்போல நடப்பதை சர்வேசுரனைப்பற்றி முழுதும் விட்டுவிட்டோமென்கிறதில்தான் நமக்கும் உலகத்தாருக்குமுள்ள அடிப்படையான வித்தியாசந் தோன்றுகிறது. இது காரணமாக அற்பசொற்பக் காரியங்களிலுமுதலாய் மடத்தின் சட்டதிட்டங்களைப் பிரமாணிக்கமாய் அநுசரிக்க நாம் உடன்படுகிறதாகக் கொள்ளவேண்டியது. இதினாலேதான் ரெகுலாரெஸ் ஒழுங்காய் நடக்கிறவர்கள் என்கிற பேர் திருச்சபை நமக்குக் கொடுத்திருக்கின்றது. ஆகையால் சபை ஒழுங்குகளில் நாம் சிலவற்றைச் சட்டைபண்ணாதிருப்போமாகில் இந்தப்பெயர் நமக்குச் செல்லாததுந் தவிரச் சர்வேசுரனுக்குந் திருச்சபைக்குமுன்பாக நாம் கொடுத்த வார்த்தைப்பாடும் பொய்யாய்ப்போகும்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—மடத்தின் ஒழுங்குகளை அநுசரிக்கிறதில் உன் உள்நோக்கம் எப்படியிருக்கிறதென்று யோசித்துப்பார். இதை நிச்சயமாய் அறியும்படி சில ஒழுங்குகளைக் குறித்து விசேஷமாய் ஆராய்ந்துபார். நீ காலமே பத்தி சிந்தனையோடு மணித்திட்டக் தவறாமல் விரைவாய் எழுந்திருக்கிறாயோ? மணி

யின் ஒரு தட்டுக் கேட்ட க்ஷணமே தேவநற்கருணைச் சந்திப்பு, தியானம், ஆத்துமசோதனை, பொதுச்செபம் முதலிய பத்திமுயற்சிகளைச் செய்யச் சுறுசுறுப்பாய்ப் போகிறாயா? பின்னும் மவுனம், அடக்கவொடுக்கம், சந்நியாசத்துக்கடுத்த மேரை மரியாதை முதலான இலட்சணங்கள் உன்னிடத்தில் உண்டோ?

**மனப்பற்றுதல்.**—கடந்த காலத்தில் நேர்ந்த அலட்சியங்களுக்காகவும் விசேஷமாய் வாடிக்கையான குறைகளுக்காகவும் பொறுத்தல் கேள்.

**பிரதிக்கினை.**—எந்த விஷயத்திலும் ஒழுங்குகளை நுணுநுணுக்கமாய் அநுசரிக்கும்படி இன்றையத்தினம் உன் நடத்தையின்மேல் கண்ணாயிரு.

## 2-ம் பிரிவு

### சொற்ப ஒழுங்குகளை முதலாய் அநுசரியாததினாலே வரும் பொல்லாப்பு

**தியானம்.**—இயேசுநாதசுவாமி முன் சொன்ன பிரசங்கத்தைத் தொடர்ந்து சொன்னதாவது:—இந்தக் கற்பனைகளில் அதிக சிறிது ஒன்றை மீறி வாக்கினாலாகிலும் மாதிரிகையினாலென்கிலும் மனிதருக்குப் போதிப்பவன் மோக்ஷவிராச்சியத்தில் கடைசியானவன் என்னப்படுவான். ஏனென்றால் வேதபாரகர் பரிசேயரானவர்களுடைய உத்தமதனத்திலும் உங்கள் உத்தமதனம் அதிகப்பட்டிராவிட்டால் மோக்ஷராச்சியத்தில் பிரவேசிக்கமாட்டீர்களென்று உங்களுக்குச் சொல்லுகிறேனென்றார். (மத். 5.) அன்றியுங் கிறீஸ்துநாதர் அநுசாரத்தில் ஒழுங்கை அநுசரியாத சந்நியாசி அதாவது தனக்கு வருத்தமான காரியத்தைத் தள்ளிவிட்டுத் தனக்குப் பிரியமானதைமாத்திரம் அநுசரிக்கிறவன் வெகு மோசத்துக்குள்ளாவான்; ஏனெனில் சொற்பக் குற்றங்களைத் தவிர்க்காதவன் சன்னஞ்சன்னமாய்ப் பாரிக்குற்றத்திலும் விழுவான் என்று எழுதியிருக்கிறது. (1. 25.) இதை யோசித்தால் சில ஒழுங்குகளை



வழக்கமாய் அசட்டைபண்ணுகிறது எவ்வளவு அபாயதுணிகரமென்று கண்டுபிடிப்பாய். இதினாலே உனக்கும் அபாயம், உன் துர்மாதிரிகையினாலே பிறருக்கும் அபாயம்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—இது மட்டுஞ் சொன்னவைகளில் ஏதாகிலும் உன்னிடத்தில் குற்றம் உண்டென்று கண்டால் அதற்கான பரிகாரஞ் செய்யும்படி அந்தப் பொல்லாப்புக்கு ஊற்றாயிருக்கிறது என்னவென்றுபார். அந்தரங்க சீவியத்தைவிட்டு மேலெழுந்தவாரியாய்த் திரிகிறதுதான் பொதுப்பட இதற்குக் காரணம். இப்படி நடக்கிறவன் ஞானமுயற்சிகளை வெகு அசாக்கிரதையாய்ச் செய்வான். இதினிமித்தம் ஆத்துமம் வறண்டுபோகவே, ஆறுதலுக்காக வெளி மனுஷரைக் காணப்போவான். ஏனென்று கேட்டால் அது மரியாதையென்றும் அவர்களுடைய நன்மைக்காகவென்றுங் கள்ளப் போக்குச் சொல்லுவான். கடைசியாய் உலகத்தில் எத்தனையோ அக்கிரமங்கள் நடக்கின்றன. அவைகளுக்குமுன் என் குற்றமென்ன பெரிதாவென்று துணிந்து கொஞ்சத்துக்குள் தன்னை அறியாமல் ஒழுங்குகளையெல்லாந் தட்டிவிட்டுத் தாறுமாறாய்த் திரிவான்.

**மனப்பற்றுதல்.**—இப்பேர்ப்பட்ட குருட்டாட்டமாய்கையை விட்டுவிலக ஆண்டவரை மன்றாடு. நல்லவனாய் நடக்கப் பிரயாசப்பட்டுச் சர்வேசுரனுடைய உந்நதமகிமைக்காகச் சபை ஒழுங்கை நுணுநுணுக்கமாய் அநுசரித்து யாவருக்கும் நன்மாதிரிகையாயிரு.

**பிரதிக்கினை.**—சொற்பக் குற்றத்தை அசட்டைபண்ணுகிறவன் சன்னஞ்சன்னயாய்ப் பாரிக்குற்றத்திலும் விழுவானென்று இஸ்பிரீத்துசாந்துவானவர் அருளிச்செய்த வாக்கியத்தை நினைத்துக்கொண்டு அசட்டைத்தனத்துக்கு ஏதுவான கோட்பாடுகளை எல்லாம் வெறுத்துத்தள்ளவேணும். (எக்கி. 17.)

## 3-ம் பிரிவு

### சபை ஒழுங்கைச் சுழத்திரையாய் அநுசரிக்கிறதினாலே வரும் பலன்

**தியானம்.**—திவ்விய ஆசாரியனானவர் தொடர்ந்து சொன்ன வாக்கியங்களைத் தியானித்துப்பார். சொற்பமான கற்பனைகளை முதலாய் அநுசரிக்கிறவனும் மற்றவர்களுக்கு அவைகளைப் போதிக்கிறவனும் பரலோகராச்சியத்திற் பெரியவன் என்னப்படுவானென்றார். தேவ ஊழியத்தில் வெகு உதாரகுணத்தைக் காண்பிக்கிறதினாலே இப்பேர்ப்பட்டவன் பெரியவன்தான். இன்னமுந் தான் காண்பிக்கிற தர்ம மாதிரிகையினாலுந் தான் சொல்லும் புத்திமதிகளினாலும் பிறரும் விசேஷமாய்த் தன்னோடிருப்பவர்களும் புண்ணியத்தில் அதிகமதிகமாய் விளங்கும்படி இவன் பிரயாசப்படுகிறதினாலே இவன் பெரியவனாகிறதற்குச் சந்தேகமில்லை.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—இந்தத் தியானத்தினாலே நமக்குக் கெம்பீரம் உண்டாகவேண்டியது. இது எப்போதும் மனதில் பதிந்திருக்கப் பிரயாசப்பட்டால் ஒழுங்கிலுள்ள சொற்பக் காரியங்களிலும் முதலாய்ப் பிரமாணிக்கராய் இருப்போம். இவ்விதம் இருக்கும்படி ஆண்டவரைப் பார்த்து மன்றாடக்கடவோம். பத்தி வேகத்திலும் ஒழுங்குகளை அணுப்பிசகாமல் அநுசரிப்பதிலும் நமக்குள்ளேயே போட்டியும் ரோசமுமிருக்கவேண்டியது. பத்தி வேகமும் ஒழுங்கு நுட்பமுமுடைய சகோதரரைக் காண்பது எவ்வளவு நேர்த்தி எவ்வளவு இன்பமென்று கிறீஸ்துநாதர் அநுசாரத்தில் சொல்லியிருக்கிற வாக்கியம் நமது சபையாருக்குஞ் செல்லவேண்டியது.

**சம்பாஷணை.**—அர்ச். சூசையப்பர் சொற்பக் காரியத்தை முதலாய்ச் சரிவர அநுசரித்துத் தினந்தினஞ் செய்யுந் தொழிலிலே சர்வேசுரனோடு ஒன்றித்து அந்தரங்க சீவியத்தினால் அர்ச்சியசிஷ்டவரானதைப்பற்றி அவரோடு சம்பாஷித்துக்கொள்.

---



# 13-ம் தேதி

## தேவ ஊழியத்தில் இருக்கவேண்டிய ஞான வேகம்

**ஆயத்தச் சிந்தனை.**—தேவ ஊழியத்தில் வேகமாய் நடங்களென்று அர்ச். சின்னப்பர் சொன்னது உன் காதில் தொனிக்கிறதாக ரூபிகரித்துக்கொள். (உரோ. 12.)

**தியானச் செபம்.**—தேவ ஊழியத்துக்குரிய ஞான வேகத்தின்மேல் மதிப்பும் விருப்பமும் உனக்குண்டாகவேணுமென்று கேள்.

### முதல் பிரிவு

#### இந்த ஞான வேகத்தின் இயல்பு

**தியானம்.**—முந்தின தியானத்தில் சொன்னபடி சபை ஒழுங்கெல்லாம் நுணுநுணுக்கமாய் அநுசரிப்பதில் ஞான வேகம் அடங்கியிருக்கின்றது. ஆகையால் தேவ ஊழியத்துக்கு அடுத்ததெல்லாம் மிகவும் உற்சாகத்துடன் செய்யத் துரிதப்படுகிறதே ஞான வேகமென்று சொல்லப்படும். இப்படி மனம் ஆயத்தமாயிருப்பது அப்பியாசமாய்ப் போனால் அதுவே புண்ணியமென்று சொல்லப்படும். ஏனென்றால் நன்மையான காரியத்திலுண்டான அப்பியாசந்தான் புண்ணியமாகும். இன்னஞ் சரியாய்ச் சீர்தூக்கிப்பார்த்தால் இந்த ஞான வேகம் அர்ச். தோமாஸ் சொன்னபடியே தேவ வழிபாடு என்னும் புண்ணியத்தின் ஒரு குணமென்றும் வேறு சில சாஸ்திரிகள் சொல்லுகிறபடி தேவசிநேகத்தின் குணமேயென்றுஞ் சொல்லவேண்டியது. ஞானவேகமுள்ள சந்நியாசி தான் அநுசரிக்கவேண்டிய அற்ப ஒழுங்குகளிலும் முதலாய்த் தேவ சித்தத்தைக்கண்டு அதைப் பிரமாணிக்கமாய்ப் பின்பற்றுவானென்பது பிரத்தியக்ஷமான காரியம்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—யாவரும் நாளுக்குநாள் ஞான வேகத்தில் அதிகரித்துத் தர்ம வழியில் மென்மேலும் முன்னேறி நடக்கவேண்டியது.

நாமோ நமக்கு ஆரம்பத்திலிருந்த வேகத்தில் ஒரு பங்கு இப்போதிருந்தாலே எதேஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறோமென்பதாய்க் கிறீஸ்துநாதர் அநுசாரத்தில் சொல்லியிருக்கிற வார்த்தைகளை நன்றாய் ஆராய்ந்துபார். (1. காண். 11) மனிதருடைய குணாகுணங்களை நன்றாய் அறிந்து இந்தப் பிரபந்தத்தை எழுதின மகாத்துமா சொன்னது நமக்கு வெகு வெட்கக்கேடாயிருக்கிறது. அந்த வாக்குக்கு எதிரிடை சொல்லவும் நமக்கு மனம் வரும். ஆனால் அது மெய்யென்று உன் உள்ளம் உனக்குச் சொல்லுகிறதில்லையா? இப்போது நடக்கிற வருஷத்தையும் நீ சபையில் உட்பட்ட வருஷத்தையும் நேருக்கு நேராய் வைத்துப்பார். இவ்விரண்டில் எந்த வருஷந் தர்ம வழியில் அதிக வேகமாயுஞ் சுமுத்திரையாயும் நடந்து வந்தாய்? ஆரம்பத்திலிருந்ததற்கு இப்போது எப்படியிருக்கின்றது? நீ துவக்கத்தில் நடந்த பிரகாரம் நடந்து வந்தாயானால் இந்நேரம் உன்னிடத்தில் எவ்வளவோ புண்ணியம் விளங்கியிருக்கும்!

மனப்பற்றுதல்.—சர்வேசுரனுடைய சமுகத்தில் உன்னைத் தாழ்த்தி மனதைத் தேற்றி இனிமேல் சுறுசுறுப்பாய் நடக்கத் தீவரிப்பாயாக.

பிரதிக்கினை.—தினந்தினங் காலையில் எழுந்திருக்கும்போது இந்த நல்ல பிரதிக்கினையைப் புதுப்பித்துச் சுறுசுறுப்புள்ளவனாய் நடக்க உன்னைத் தூண்டுவாயாக.

## 2-ம் பிரிவு

### ஞானவேகமுள்ள சந்நியாசியின் பாக்கியம்

தியானம்.—ஒரு பத்தியுள்ள கீர்த்தனையின் பல்லவியில் "ஞான வேகம் ஆளுகின்ற பிரமாணிக்கமுள்ள இருதயமே அதிஷ்டம் பெற்றது; இத்தோடுகூட ஆண்டவருடைய வரங்களையெல்லாங் கைக்கொண்டு அநுபவிக்கலாமே" என்று பாடியிருக்கிறது. இது எவ்வளவோ உண்மையானது? ஞான வேகத்தினால் சகல நன்மையும் உண்டாகும். இதில்லாமல் கிடைப்பதொன்றுமில்லை. ஞான



வேகத்தினால் மனத்தூய்மையும் மனச்சமாதானமுமுண்டாகும். மாறாக பாக்கியமும் அநுபவிக்கலாம். இந்த வேகமிருந்தால் பிரயாசத்தில் வருத்தந்தோன்றாது, சந்நியாசத்திலுண்டான பாரம் லேசாயும் மதுரமாயுமிருக்கும். இதிலுள்ள பரித்தியாகமெல்லாம் இன்பமாய் மாறிவிடும். இதினால் கொஞ்சத்துக்குள்ளே வெகு புண்ணிய பலனைச் சம்பாதித்துக் குவிக்கலாம். இதினால் சிரேஷ்டருக்கு மனரம்மியமும் நமது சகோதரருக்கு நன்மாதிரிகையும் உண்டாகும். இதினால் மடத்திலுள்ளவர்களுக்கும் நாம் பார்க்குந் தொழிலுக்குஞ் செய்யும் நற்கிரியைகளுக்குந் தேவ ஆசீர்வாதத்தை வருவித்துக்கொள்வோம். கடைசியாய் இதினாலே புண்ணியத்தில் திடமாய் வர்த்தித்து நன்மையில் நிலைகொண்டு மோக்ஷத்தில் ஆனந்தப் பெருக்கடைவோம்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நீ எப்போதும் மிகுந்த ஞான வேகமுள்ளவனாய் இராதிருந்தாலும் வேளாவேளையிலாகிலும் இருந்திருப்பாய். அப்போதாவது இந்த ஞான வேகத்தால் வரும் பலாபலன்களெல்லாம் உண்மையென்று நீ கண்டுகொள்ளவில்லையா? அப்போது நீ யோகம் பெற்றவனென்று நினைக்கவில்லையா? தாவீதென்பவர் பரவசமாகி ஆண்டவருக்கு ஊழியம் பண்ணுவது எவ்வளவோ இன்பமென்று பாடினாரே. அது சத்தியமென்று நீ உணரவில்லையா? இப்படியிருக்க உன் பத்தி வேகந் தளர்ந்துபோனால் அதைத் திரும்ப மூட்டிவிடுவாயாக. துவக்கத்தில் எந்தச் சூட்ச உபாயங்களினால் அந்த ஞானவேகத்தை அடைந்தாயோ அவைகளையே திரும்பவும் பிரயோகித்து அது உன்னிடத்தில் எக்காலமும் நிலைத்திருக்கச்செய்.

மனப்பற்றுதல்.—ஞான வேகத்தினால் வரும் அதிசயமான பலாபலன்களின்பேரில் விசுவாச முயற்சி செய்து இவைகளை அடையும்படி ஆவலும் ஆத்திரமுங் கொள்ளக்கடவாய்.

பிரதிக்கினை.—உன் சகோதரர்களுடைய ஞானவேகத்தைக் கண்டுபாவி.

## 3-ம் பிரிவு

### மனஞ்சோர்ந்த சந்நியாசியின் கேடு

தியானம்.—நீ மனந்தளரத் துவக்குவாயாகில் பொறுக்கமாட்டாமல் தள்ளாடத் துவக்குவாய். மனஞ் சோம்பி வெதும்பிக் கிடக்குஞ் சந்நியாசிக்குத் துன்பத்தின் மேல் துன்பந்தான். அவனுக்கு ஞான மனோகரமில்லாததினாலும் புறத்தியில் ஆறுதல் தேட உத்திரவில்லாததினாலும் அவன் எந்தப்பக்கந் திரும்பினாலுந் துன்பந் துன்பமே. (1. காண். அதி. 25). மனந் தொய்ய விட்ட சந்நியாசியின் கேட்டைக் கிறீஸ்துநாதர் அநுசாரம் இவ்விதமாய் வருணித்துக் காட்டுகிறது. இவன் மெய்யாகவே நிர்ப்பாக்கியன். ஏனெனில் தன் துராசாபாசங்களுக்குள் அகப்பட்டுத் தினந்தினந் தன் ஆத்துமத்தை அநேக விதமாய்க் கறைப்படுத்துவான். ஆத்தும சமாதானத்தைத் தேடியும் அதைக்காணமாட்டான். துறவறத்தின் ஞான ஆறுதலை உணராமல் அதின் பாரத்தை மாத்திரஞ் சுமப்பான். வெகுவாய் உழைத்துப் பிரயாசப்பட்டாலும் நித்திய சீவியத்துக்காக அடையும் பலன் வெகு வெகு சொற்பமாயிருக்கும் கடைசியாய்த் துறவறத்தை விட்டுவிடுகிறதுமல்லாமல் அத்தோடு ஒருவேளை தேவ இஷ்டப்பிரசாதத்தையும் அதில் மரணமட்டும் நிலைநிற்கும் வரத்தையும் இழக்கும்படியான ஆபத்துக்குள்ளாவான்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—சென்மப்பாவத்தினால் கெட்டுப்போன உன் சுபாவமானது உன்னை அசமந்தத்துக்கு இழுக்கிறதினால் இப்போது நீ தியானித்த காரியத்தைக்கொண்டு அந்த அசட்டைத்தனத்தைப் பார்த்துத் திகில் அடைகிறது மாத்திரம் பற்றாது; அதை அரோசித்துத் தள்ளவேணும். நீ இதில் விழுந்திருந்தால் தீவிரமாய் இதைவிட்டு எழுந்திருக்கப் பிரயாசப்படு. இதைக் குறித்து உன் ஆத்தும குரு உனக்குச் சொல்லும் உபாயங்களை நிலைமையோடு தாராளமாய் அநுசரித்துவா. இதற்காக நீ செய்யப்போகும் ஞான யுத்தத்தில் ஆண்டவர் உனக்கு உதவி செய்து நீ பண்ணப்போகிற



பிரதிக்கினையை ஆசீர்வதிக்கவேணுமென்று அவரை மன்றாடு.

சம்பாஷணை.—இன்று திருச்சபை கொண்டாடும் பாப்புவும் வேதசாட்சியுமான அர்ச். அனக்கிளேத்துடன் அல்லது உன் பாதுகாவலான அர்ச்சியசிஷ்டவரோடு சம்பாஷித்துக்கொள்.

---

## 14-ம் தேதி

### ஆண்டவர் மலையில் செய்த பிரசங்கத்தின் தொடர்ச்சி உபத்திரவங்களின் பேரில்

ஆயத்தச் சிந்தனை.—உங்கள் சத்துராதிகளைச் சிநேகியுங்கள். உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள். உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காக வேண்டிக்கொள்ளுங்களென்று இயேசுநாதசுவாமி திருவுளம்பற்றினது உன் காதில் தொனிக்கிறதாக உரூபிகரித்துக்கொள் (மத். 14).

தியானச் சேபம்.—உபத்திரவப்படுவதின்பேரில் இயேசுநாதருடைய போதகத்தையும் கற்பனைகளையும் அவரது நன்மாதிரிகையையும் பின்பற்றித் தாராளமாய் நடக்க வரப்பிரசாதங் கேட்பாயாக.

## முதல் பிரிவு

### உபத்திரவத்தின்மேல் இயேசுநாதர் சொன்ன போதகம்

தியானம்.—இயேசுநாதருடைய போதகமுஞ் சீவியமும் பரிசேயருடைய தாறுமாறுகளையும் பித்தலாட்டத்தையும் நிக்கிரகம் பண்ணிற்று. அவர்கள் அவரைப் பகைத்துத் தூஷித்து மென்மேலும் அவரை மட்டுமிதமின்றி உபத்திரவப்படுத்துகிறதற்கு இதுவே போதுமான காரணமாயிற்று. நாமும் நம்மை இயேசுநாதருடைய சீஷர்களென்று வெளியரங்கமாய்ப் பிரசித்தமாக்குகிறோம். அப்படியிருக்க துஷ்டர்களுடைய

பகைக்கு நாமும் விசேஷமாய் ஆளாயிருக்கிறது ஆச்சரியமோ? அவர்களால் நமக்கு வரப்போகிறதை இயேசுநாதர் ஏற்கனவே வெளிப்படுத்தியிருப்பதைக் கேள். சீஷன் குருவுக்கு மேற்பட்டவனல்ல; என்னை அவர்கள் துன்பப்படுத்தினதினாலே உங்களையும் துன்பப்படுத்துவார்கள், தங்கள் ஆலயத்துக்குப் புறம்பாக்குவார்கள், நீதிசங்கத்துக்கு உங்களைக் கையளித்து உங்களைக் கட்டியடிக்கச் செய்வார்கள். அண்ணன் தன் தம்பியையுந் தகப்பன் தன் பிள்ளையையுங் கொலை செய்யக் காட்டிக்கொடுப்பார்கள். என் நாமத்தினிமித்தம் உங்களை யாவரும் பகைப்பார்கள் (அரு. 15. 16., மத். 10).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—வேத விரோதிகள் பகை வெறியினால் மயக்கங்கொண்டு பொங்குகிறதை நாமெல்லாருங் கண்ணாலே காண்கிறோம். ஒருவேளை நாமும் ஒருநாள் அந்த வெறிக்கு இரையாய்ப் போவோமாக்கும். இதினால் நாம் மனந்தளர்ந்து கஸ்தியடைகிறதற்குப் பதிலாய்த் திவ்விய கர்த்தர் திருவுளம்பற்றியிருக்கிற வாக்கியம் நமது மனதைத் தேற்றி ஞான சந்தோஷமுள்ளவர்களாக்கும். அந்த வாக்கியம் ஏதென்றால்: நம்மைப்பற்றி மனிதர் உங்களைச் சபித்து உங்களை உபாதித்து உங்கள்பேரில் அபாண்டமாய்ப் பொய்யும் பொல்லாப்புஞ் சொல்லும்போது உங்களைப் பாக்கியவான்களென்று எண்ணிக்கொள்ளுங்கள். இதினால் பரலோகத்தில் உங்களுக்கு அளிக்கப்படுஞ் சம்பாவனை பெரிதாயிருக்கும் என்பதை நினைத்து சந்தோஷமாயிருங்கள். இப்படியே உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் உபாதித்தார்கள் என்றார் (மத். 5). மீளவும் தேவசுதனோடு பரலோகத்தில் நாம் ஐக்கியமாவதற்குமுன் பூலோகத்திலே நாம் அவருக்குச் சரிசாயலாயிருக்கிறோமென்னும் மகிமை நமக்கு எவ்வளவோ ஞான சந்தோஷத்தையுங் கெம்பீரத்தையுங் கொடுக்கவேணும்!

மனப்பற்றுதல்.—சர்வேசுரனையுந் திருச்சபையையும்பற்றி வெகு துன்பப்படவேணுமென்கிற ஆசையைத் தன்னிடத்தில் எழுப்பிக்கொள்ளுகிறது.



**பிரதிக்கினை.**—கெட்டவர்களால் நமக்கு நேரிடும் நிந்தை நிர்ப்பந்தங்களைச் சமயத்துக்கேற்றபடி விசுவாசக் கண்ணால் பார்த்து பொறுமையாய்த் தாங்கிக்கொள்ளவேணும்.

## 2-ம் பிரிவு

### உபத்திரவங்களைக்குறித்து இயேசுநாதர் கொடுத்த கற்பனைகள்

தியானம்.—நம்மை உபாதிக்கிறவர்கள்மட்டில் நாம் நடந்துகொள்ளவேண்டிய விதத்தைப்பற்றி ஆண்டவர் கொடுத்த கற்பனைகளை யோசித்துத் தியானிப்போமாக.—நல்லவர்கள்பேரிலும் பொல்லாதவர்கள்பேரிலுந் தம்முடைய சூரியனை உதிக்கச்செய்யும் பரமண்டலங்களிலேயிருக்கிற உங்கள் பிதாவுக்கு நீங்கள் உகந்த பிள்ளைகளாயிருக்கத்தக்கதாக உங்கள் சத்துராதிகளைச் சிநேகியுங்கள். உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மைசெய்யுங்கள். உங்களை உபாதித்துத் தூஷிக்கிறவர்களுக்காக வேண்டிக்கொள்ளுங்களென்று கர்த்தர் திருவுளம்பற்றினார் (மத். 5). இந்தக் கற்பனைகள் எவ்வளவோ மேன்மையும் ஆச்சரியத்துக்குரிய சாந்தமும் நிறைந்தவைகளாயிருக்கின்றன! ஆனால் இவைகளை அநுசரிக்கிறது கூடாதகாரியமென்று சொல்லுவாயோ? அப்படிச் சொல்லாதேயென்று அர்ச். எரோனிமுஸ் சொல்லுகிறார். ஏனென்றால் முதல் வேத சாட்சியாகிற அர்ச். முடியப்பரும் அவரைப் பின்சென்று வந்த மகாத்துமாக்களும் இதற்கு அத்தாட்சியாயிருக்கிறார்கள். இவர்கள் மரிக்கும்போது தங்களுடைய கொலைஞருக்காக வேண்டிக்கொள்ளவில்லையோ? இன்னம் முதல் யுகத்துக் கிறீஸ்துவர்கள் இதற்குத் திருஷ்டாந்தமாயிருக்கிறார்கள். ஏனெனில் அர்ச். சின்னப்பர் தாம் நிச்சயிப்பது பொய்யாகுமென்று பயமொன்றுமின்றி மேற்படி கிறீஸ்துவர்கள் பேரால் துணிகரமாய்ச் சொல்லுகிறதாவது: எங்களைச் சபிக்கிறவர்களை நாங்கள் வாழ்த்துகிறோம், எங்களைத் தூஷிக்கிறவர்களுக்காக நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறோமென்றார் (1 கொரி. 4).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—திருச்சபையை உபாதிக்கிறவர்களுக்கு நன்மைவர எப்படி வேண்

டிக்கொள்ளலாமென்று கேட்பாயோ? அதெப்படியென்று சகல அர்ச்சியசிஷ்டவர்கள் பிரார்த்தனையில் திருச்சபை படிப்பிக்கிறதைக் கேள். அர்ச். சபையின் சத்துருக்களைக் கீழ்ப்படுத்தவேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம், எங்கள் மன்றாட்டைக் கேட்டருளுஞ் சுவாமி என்றிருக்கிறது. ஆகையால் இலௌகீக துன்பங்களினால் அவர்கள் பொல்லாப்புச் செய்ய வகையின்றி அத்தியந்த சிறுமைக்குள்ளாகித் தேவ கரத்தின் வல்லமையைக் கண்டு தங்கள் பாதகத்தையும் அறிந்து முற்றும் மனந்திரும்பி நன்மரணம் அடையும்படியாய் வேண்டிக்கொள்வதுதான் அவர்களுக்குப் பிரயோசனமான செபம். சிறுமைப்பட்டால்தான் அந்த நிர்ப்பாக்கியருக்குச் சரணையுண்டாகும். நம்முடைய செபத்தினால் இது சித்தியடைந்தால் நாம் அவர்களுக்கு எல்லாவற்றிலுங் கனமான நன்மை செய்தாற்போலாகும்.

மனப்பற்றுதல்.—நாம் இயேசுநாதருடைய சீஷர்களுந் திருச்சபையைக் காப்பாற்ற வேண்டியவர்களுமாயிருக்கிறதைப்பற்றி மற்றவர்கள் நம்மைப் பகைத்தால் அவர்கள்பேரில் ஆண்டவர் இரக்கமாயிருக்கக் கேட்போமாக.

பிரதிக்கினை.—துஷ்டர் செய்யுங் காரியங் கெட்டதென்று நாம் வெளிப்படுத்தும்போது முதலாய் அவர்கள் பேரிலே மெய்யான இரக்கத்தைக் காண்பிக்கவேணும்.

## 3-ம் பிரிவு

### உபத்திரவங்கள் நடுவில் இயேசுநாதருடைய நடபடிக்கை

தியானம்.—அர்ச். அகுஸ்தீன் சொல்லியிருக்கிறதாவது: திவ்விய இரட்சகர் நமக்குப் பிரயோசனமான கற்பனைகளைக் கொடுத்து அவைகளை நிறைவேற்றச் சொல்லி அவைகளுக்கு மேலான சம்பாவனை கொடுப்போமென்று நமக்கு உறுதிசொன்னது போதுமென்றிராமல் தமது திவ்விய மாதிரிகையினாலும் நம்மைத் தூண்டியிழுக்கச் சித்தமானார். எப்படியெனில் தாம் மரிக்கும்போது தம்முடைய சத்துராதிகளுக்காகவுந் தம்மைக் கொலைப்படுத்



தினவர்களுக்காகவும் வேண்டிக்கொண்டு என் பிதாவே இவர்கள் குற்றங்களைப் பொறுத்தருளும்; ஏனென்றால் இவர்கள் செய்கிறது இன்னதென்று அறியார்கள் என்றார். (1 கொரி. 4).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—
இயேசுநாதசுவாமி கையில் வெகு நன்மை உபகாரம்பெற்ற
வர்கள்தானே அவரைத் தூஷித்துப்பகைத்துக் கொலைப்
படுத்தியிருக்க அவர் அவர்கள்பேரில் காண்பித்த சிநே
கத்தையும் வீரியமான சாந்தகுணத்தையும் யோசித்துப்
பார்ப்போமானால் சத்துருக்களை மன்னிப்பதிலுந் தின்
மைக்கு நன்மை செய்வதிலும் உள்ள வருத்தங்களும் அது
ஏலாத காரியமென்று சொல்லும் போக்குகளும் ஒரு
நொடியில் பறந்துவிடும்.

சம்பாஷணை.—சிலுவையிலே தமது சத்துராதிகளுக்காக வேண்டிக்கொண்டு உயிர்விடும் இயேசுநாதரோடே சம்பாஷித்துக்கொள்.

---

## 15-ம் தேதி

### பெருமை சலாக்கியத்தை வெறுப்பதின்பேரில்

ஆயத்தச் சிந்தனை.—மனிதர்கள் மெச்சவேணுமென்று அவர்களுக்கு முன்னே உங்கள் நற்கிரியைகளைச் செய்யாதிருங்களென்று இயேசுநாதசுவாமி சொல்லுகிறதைக் கேட்கிறதாக ரூபிகரித்துக்கொள்வேனாக.

தியானச் செபம்.—மனுஷருக்குப் பிரியப்படும்படி
நடப்பதற்குஞ் சர்வேசுரனுக்குப் பிரியப்படும்படி நடப்ப
தற்குஞ் சர்வேசுரனுக்குமாத்திரமே பிரியப்பட நடப்பதற்
கும் உண்டான வித்தியாசத்தைக் கண்டுபிடிக்க அவ
ருடைய வரப்பிரசாதத்தைக் கேட்பேனாக.

## முதல் பிரிவு

### மனுஷருக்குப் பிரியப்பட நடப்பதின்பேரில்

**தியானம்.**—நம்மைத் துன்பப்படுத்துகிறவர்கள் மட்டில் நாம் நடந்துகொள்ளவேண்டிய விதத்தை இயேசுநாதசுவாமி படிப்பித்ததின் பிறகு வீண் பெருமை சலாக்கியத்திலுள்ள ஆபத்து வஞ்சகங்களின் நடுவில் எவ்வளவு எச்சரிக்கையாய் இருக்கவேணுமென்று காண்பிக்கிறார். அதெப்படியென்றால் நீங்கள் மனிதர் காணும்படி உங்கள் நற்கிரியைகளைச் செய்யாமல் எச்சரிக்கையாயிருங்கள், இல்லாவிடில் பரமண்டலங்களிலே இருக்கிற உங்கள் பிதாவினிடத்திலே சம்பாவனை அடையமாட்டீர்கள் என்றார் (மத். 6). நமது வெளிக்கிரிகைகளைப் பாவபுண்ணியமாக்குகிறது நமது உட்கருத்தானபடியால், நமது கருத்துக்கு ஒத்தபிரகாரமே கருமங்களுந் தேவ சமுகத்தில் நிறுத்தி மதிக்கப்படுமென்று தப்பில்லாத சத்திய சொரூபியான இயேசுநாதசுவாமி மேற்கண்ட வாக்கியங்களால் திருஷ்டாந்தமாய்த் தெளிவித்திருக்கிறார். ஆகையால் சர்வேசுரனுக்குப் பிரியப்பட அவைகளைச் செய்வோமாகில் அவைகள் பலனுள்ளவைகளாகும். மனிதர் காணும்படி அவைகளைச் செய்வோமாகில் அவைகள் பலனற்றவையாகிறதுமல்லாமல் தேவ கோபாக்கினை வருகிறதற்கும் இடமாகும்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—சென்மப்பாவமுண்டான நாள் முதற்கொண்டு நம்முடைய சுய மகிமையின்மேல் கிரமந்தப்பின ஆசையென்னப்பட்ட ஆங்காரமானது நம்மை விடாமல் நம்மோடு ஏகோபித்திருக்கிறது. இதினாலே மனிதர் கண்ணுக்குமுன் நாம் செய்யுஞ் சகல காரியத்திலும் அவர்கள் நம்மைக் கொண்டாடவேணுமென்கிற வீண் சலாக்கியம் ஓயாமல் நமதுள்ளத்தில் குடிகொண்டிருக்கிறது. சலாக்கியம் வெகு சூக்ஷதந்திரமாய் மனதுக்குள் ஊருகின்றது. இது காரணமாகச் சான்றோர் இதை நற்கனிக்குள் மறைந்திருந்து அதை அரிக்கும் புழுவுக்கு ஒப்பிட்டிருக்கிறார்கள். மகா பெரிய அர்ச்சியசிஷ்டவர்களும் முதலாய்த் தங்கள் உள்ளிந்திரியத்தின்



மேல் எவ்வளவு விழிப்பாயிருந்தாலும் இந்த வீண் சலாக்கியத்தின் எத்துக்கு மிகவும் பயந்திருந்தார்கள். இப்படியிருக்க நீயோ உன்னையும் உன் சிந்தனை கருத்து இருதய நோக்கமெல்லாவற்றையும் அவைகள் போன போக்கில் விட்டிருக்கையில் உன் நற்கிரியைகளுக்கு ஒரு பேறுபலனும் இல்லையென்று கண்டு அஞ்சாதிருக்கக்கூடுமோ? ஆறஅமர யோசித்துப்பார்; ஏனெனில் இது ஒரு பாரிக்காரியம்.

**மனப்பற்றுதல்.**—ஜெரிக்கோ பட்டணத்துக் குருடன் ஆண்டவரை நோக்கி நான் பார்வை அடையவேணுமென்று கேட்டதுபோல (லூக். 18.) நான் என்ன செய்கிறேனென்றும் வீண் சலாக்கியத்தின்மட்டில் எப்படி நடந்து வருகிறேனென்றும் இதற்குத் தப்பித்துக்கொள்ள நான் என்ன செய்யவேண்டியதென்றுங் கண்டுபிடிக்க எனக்குத் தெளிவைக் கொடுத்தருளுஞ் சுவாமி என்று வேண்டிக்கொள்.

**பிரதிக்கினை.**—இந்த மாய்கைக்குப் பயந்து நமது நற்கருத்தை அடிக்கடி புதுப்பிக்கவேணும்.

## 2-ம் பிரிவு

### சர்வேசுரனுக்குப் பிரியப்பட நடப்பதின்பேரில்

**தியானம்.**—உன் கண் களங்கமில்லாதிருந்தால் உன் சரீரமெல்லாம் பிரகாசமாயிருக்குமென்று இயேசுநாதர்சுவாமி சொன்ன வாக்கியத்தின் கருத்தைக் கண்டுபிடிப்பது அரிதல்ல. அர்ச். எரோனிமுஸ் சொன்னபடி நம்முடைய புத்தியானது ஒரு நோக்கமில்லாமல் யாதொன்றையுஞ் செய்யமாட்டாது என்பதினிமித்தம் அது ஞான அர்த்தத்தில் தேகத்துக்குக் கண்ணென்னப்படும். இந்த ஞானக்கண்ணானது மாசின்றிச் சுத்தமுள்ளதாயிருந்தால் சர்வேசுரனை உன் கடைசிக் கதியாக எப்போதும் நீ பார்க்கும்படி செய்யும். அதினாலே உன் கிரியைகளெல்லாம் நேராய் ஒரே கதியாய் அவரையே நோக்கியிருக்கும். அவர் உனக்கு ஏக சக்கரவர்த்தியும் இனி உன்னை நடுத்தீர்க்கும்

ஆண்டவருமாயிருக்கிறதினால் நீ அவருக்குப் பிரியப்பட வேணுமென்கிற கருத்தோடு சகலமுஞ் செய்வாய்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—தன் கிரியைகளையெல்லாஞ் சர்வேசுரனை நோக்கிச் செய்கிற கிறீஸ்துவனெவனோ அவனே பெரியவன். ஏனெனில் வானமண்டல உச்சிமட்டும் அவன் மனம் ஓயாமலெழும்பிக்கொண்டிருக்கும். சகலத்திலுந் தேவ சித்தத்தோடு தன் மனதை ஒன்றித்துச் சர்வேசுரனோடு ஒரு மனமாயிருக்கிறதினால் ஒருவகையில் அவரோடு இவனும் ஐக்கியமாகிறான். ஆ இதென்ன அதிஷ்டம்! இருதயத்தின் சுருக்கு மடக்கெல்லாங் கூர்ந்து பார்க்கிற சர்வேசுரன் அவன் செய்யும் அற்ப சொற்ப கிரியைகளையும் உப்புச்சப்பில்லாத கருமங்களையுமுதலாய்ச் சம்பாவனையில்லாமல் விடமாட்டார். உன் இருதயத்துக்குள்ளிருக்கிற இரகசியங்களையெல்லாம் அறிந்திருக்கிற உன் பிதா உனக்குச் சம்பாவனை கொடுப்பாரென்று இயேசுநாதர்தாமே இதைக்குறித்துச் சொல்லியிருக்கிறார். (மத். 6.) இந்த மேன்மையையும் பாக்கியத்தையும் அடைய நீ படும் பிரயாசமென்ன? இருதயத்தூய்மையில்லாமலும் தன்பேரில் ஓயாத விழிப்பில்லாமலும் இந்தப் பலத்த நன்மையை அடையக்கூடாது. இதை விசாரித்து நீயே தீர்த்துக்கொள்.

மனப்பற்றுதல்.—என் சர்வேசுரா, என் சர்வமே, உமக்கே நான் ஜீவிக்கும்படி எனக்கு மரிப்பேனாக! என்று ஒரு பத்தியுள்ள முனீந்திரர் சொன்னதுபோல நீயும் முழுமனதுடனே சொல்லுவாயாக.

பிரதிக்கினை.—பத்திக்கடுத்த இந்த மனவல்லயச் செபத்தை அடிக்கடி சொல்லிவரக்கடவாய்.

## 3-ம் பிரிவு

### சர்வேசுரனுக்கு மாத்திரமே பிரியப்பட நடக்கிறது

தியானம்.—தான் செய்யுங் கிரியைகளையெல்லாஞ் சர்வேசுரனை நோக்கிச் செய்யும் அப்பியாசமுள்ளவன் அவர்



சமுகத்தில் பெரியவனும் பாக்கியவானுமானால், சர்வேசுரனை மாத்திரமே எந்நேரமுங் கண்முன் வைத்துத் தனக்கே முற்றும் மரித்தவனாய்ச் சுயபட்சத்தின் ஏய்ப்புக்குள்ளாகாமலும், தனக்கு நியமிக்கப்பட்ட சம்பாவனையைப் பாராமலும், சர்வேசுரனைச் சர்வேசுரனைப்பற்றிச் சேவிக்கிறவன் எவ்வளவோ அதிக பெரியவன், எவ்வளவோ அதிக யோகம் பெற்றவன்! இதுவே சுயமான உத்தமதனத்தின் சொரூபமயம். நாம் இந்த உன்னத ஸ்திதியை நாடி நடக்கக்கூடுமேயொழிய, இந்தச் சீவியத்தில் அதைச் சம்பூரணமாய் அடைய முடியாது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—சாங்கோபாங்கத்தில் தாழ்மையான நிலையிலிருக்கிறதைக் கண்டு சஞ்சலப்படவேண்டாம். பரலோகத்தில் இந்தக் குறை வராது. அதுவரையில் நம்மாலானமட்டும் பிரயத்தனப்படுவதுமன்றி நல்ல கருத்தை அடிக்கடி புதுப்பிப்போமாக. நமது கடமைகளை நிறைவேற்றுவதைக்கண்டவர்கள் ஆச்சரியப்பட்டு நம்மைப் புகழும்போதும் இதினால் கர்வங்கொண்ட பசாசு நமக்கு வீண் சலாக்கிய சோதனையை வருவிக்கும்போதும் அதைப் பார்த்து "உன்னைப் பற்றி நான் இதைத் துவக்கவுமில்லை உன்னைப்பற்றி நான் இதை விடுகிறதுமில்லை" என்று அர்ச். பெர்னார்தோடு சொல்லுவோமாக.

சம்பாஷணை.—இன்றையத் திருநாளுக்குடைய அர்ச். என்றிக்குஸ் இராயரோடு சம்பாஷித்துக்கொள். இவர் மனிதர் கண்ணுக்குப் பெரியவராயிருந்து வெகு மகிமைப் பிரதாப சோபனத்தினால் விளங்கியிருந்தாலும் தமது சுத்த கருத்தினாலும் நேர்மையினாலும் சர்வேசுரன் சமுகத்திலே இன்னும் அதிக பெரியவராய்த் துலங்கினார்.

# 16-ம் தேதி

## உத்தரீயமாதாத் திருநாளின்பேரிலும் உத்தரீயச் சபையின்பேரிலும்

ஆயத்தச் சிந்தனை.—தேவமாதா எனக்கு உத்தரீயத்தைக் கொடுக்கிறதாக ரூபிகரித்துக்கொள்வேன்.

தியானச் சேபம்.—இதை வெகு பலனோடு தரித்துக்கொள்ள அந்த ஆண்டவள் எனக்கு உதவிசெய்யவேணுமென்று கேட்பேனாக.

## முதல் பிரிவு

### உத்தரீயமாதா என்கிற பேரும் உத்தரீயச்சபையும் உண்டான வரலாறு

தியானம்.—கார்மேல் என்கிற மலையானது எலியாஸ் என்கிற தீர்க்கதரிசியும், தீர்க்கதரிசியின் மக்களென்று சொல்லப்பட்ட அவருடைய சீஷரும் வாசஞ் செய்ததினாலே பேர்போன ஸ்தலமாம். இவர்கள் அவ்விடத்தில் தலைமுறை தலைமுறையாய் வாழ்ந்துவந்தார்களென்றுஞ் சுவிசேஷம் பிரசித்தமான காலத்தில் உடனே அதை ஏற்றுங்கொண்டார்களென்றும் பரம்பரையாய்ச் சொல்லப்பட்டு வருகிறது. இவர்கள்தான் தேவமாதாவை முந்த முந்த வணங்கத் துவக்கினார்களென்றும் அந்த ஆண்டவள் பேரால் ஒரு கோவில் கட்டி அதில் ஒருமித்து அவளுக்குத் தோத்திரம் பண்ணி வந்தார்களென்றுங் குருக்களுடைய சங்கீத மாலைப் புத்தகத்தில் இத்தெய்திக்குக் குறிக்கப்பட்ட பாகத்தில் சொல்லியிருக்கிறது. கார்மேல் மாதாவென்றும் மகா கார்மேல் சபையென்றும் பேர் எப்படி வந்ததென்றறிய இந்தப் பூர்வீக விர்த்தாந்தந்தான் ஆதிமூலமாகத் தோன்றுகிறது. இந்தப் பரிசுத்த சபைச் சந்நியாசிகளில் அநேகர் சுமார் 13-ம் நூற்றாண்டின் மத்தியில் ஆங்கிலேய தேசத்திலே குடிபோனார்கள். இந்தத் தேசத்தில்தான் காம்பிரிஜு என்னும் பட்டணத்திலுள்ள மடத்திலே நடந்ததும் எந்நாளும் மறக்கப்படாததுமான ஒரு வர்த்தமானத்தினாலே திரு உத்தரீயப்பத்தி உற்பத்தியானது. அதெப்படியென்றால் இந்தச் சபைக்கு அதிசிரேஷ்டரான சீமோன் ஸ்தோக்கென்னும் மகாத்துமா பிறரால் தமது சபையார் படும் அகோர உபத்திரவத்தைக் கண்டு பரிசுத்த மாதாவின் அடைக்கலத்தை நாடி அத்தியந்த பத்தி ஊக்கத்தோடு வேண்டிக்கொண்டு வரும்போது 1251-ம் ௵ ஜுலை-மீ 16-ம் ௳ தேவதாயார் தமது கையிலே ஒரு உத்தரீயத்தை ஏந்தினபிரகாரம் அவருக்குத் தரிசனையாகி அவரைப் பார்த்து அன்போடு உரைத்ததாவது: நமது பிரிய மகனே, இதோ இந்த உத்தரீயத்தை உன் சபை விருதாக வாங்கிக்கொள். உனக்காகவுங் கார்மேல் சபைப் பிள்ளைகளுக்காகவும் நாம் அடைந்த விசேஷ உரிமை சுதந்தரங்களுக்கு இது குறிப்பாயிருக்கட்டும். இதை அணிந்துகொண்டு மரிக்கிறவன் நித்திய நரக நெருப்புக்குத் தப்பித்துக்கொள்வான். இது இரட்சணியத்துக்குக் குறியும் ஆபத்துச் சமையத்துக்குக் கேடயமும் நமது விசேஷ ஒத்தாசைக்கு அச்சாரமுமாம் என்று திருவாய் மலர்ந்து அருளிச்செய்தாள். இதற்கு ஐம்பது வருஷத்துக்குப்பின் தேவமாதா 22-ம் அருளப்பரென்னும் பாப்பானவருக்குத் தெரிசனமாகி உத்தரீயச் சபையார் மரித்து உத்தரிக்கிறஸ்தலத்துக்குப் போயிருந்தால் கூடிய சீக்கிரத்தில் அவர்களை மீட்டுக்கொள்வோமென்றும், விசேஷமாய் அவர்கள் மரணத்துக்குப்பின்வரும் முதல் சனிக்கிழமை அவ்விடத்தினின்று விடுதலையாவார்களென்றுந் தெரிவிக்கச் சித்தமானாள். இந்தத் தரிசனத்தையும் அர்ச். சீமோன் ஸ்தோக் என்பவர் முந்திக் கண்ட காட்சியையும் மகா பேர்போன சாஸ்திரியாகிய பதினான்காம் ஆசீர்வாதேந்திரரென்னும் அர்ச். பாப்பானவர் தாம் பூரணமாய் நம்புகிறதாகத் தேவமாதாவின் உற்சவங்களின்பேரில் எழுதிய பிரபந்தத்தில் வசனித்திருக்கிறார்.



இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—திரு உத்தரீயத்தைக் கனமாய் எண்ணவும் இதைத் தரித்துக்கொள்ள மனதில் ஆசை பிறக்கவும் இந்த யோசனையே

போதும். இதுவரையிலும் உத்தரீயம் பெறாமலும் அல்லது சோம்பலினால் அதைத் தரித்துக்கொள்ளாமலும் அப்படித் தரித்துக்கொண்டாலும் அதினால் ஒரு பலனும் அடையாதிருந்தால், இன்றையத் திருநாளில் நல்ல புத்தி அடைந்து இந்த அசட்டைத்தனத்துக்கெல்லாம் பரிகாரஞ் செய்வாயாக.

மனப்பற்றுதல்.—தேவமாதாவுக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்து இதுவரையும் நீ பத்திக்குறைவாய் நன்றியறியாமலிருந்ததற்காக அவளிடத்தில் பொறுத்தல் கேள்.

பிரதிக்கினை.—இதற்கடுத்த கடமைகளைச் சரியாய் அநுசரித்து இந்த உத்தரீயத்தின்பேரில் பத்தியாயிருப்பவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிற விசேஷ வரங்களையும் எண்ணிறந்த பூரண பலன்களையுஞ் சரியாய் அடையப் பிரயாசப்படு.

## 2-ம் பிரிவு

### இந்த உத்தரீயத்தினால் வரும் நன்மைகள்

தியானம்.—இப்போது தியானித்த இந்த இரண்டு காட்சிகளிலுஞ் சொல்லியபிரகாரம் இச்சபையிலுட்பட்டுப் பத்தியாய் உத்தரீயத்தை அணிந்திருக்கிறவர்களுக்கு வரும் நன்மைகளாவன: முதலாவது, அவர்கள் ஆத்தும சரீரத்துக்கு நேரிடும் பொல்லாப்புகளில் இது கேடயமாகவும் விசேஷமான ஒத்தாசைக்கு அச்சாரமாகவுமிருக்கும். எண்ணிறந்த புதுமைகள் இதற்கு அத்தாட்சியாமே. 2-வது. இது இரட்சணியத்துக்கு ஓர் அடையாளமாயிருக்கின்றது. ஏனெனில் இதை அணிந்துகொண்டு சாகிறவன் நித்திய நரக நெருப்புக்குத் தப்பித்துக்கொள்வானென்று மேற்சொன்ன காட்சி நமக்குத் தெரிவிக்கின்றது. இதற்கு அர்த்தமென்னவென்றால் இப்படிப்பட்டவன் நீதிமானானால் அந்தியத்தில் நிலைமை வரத்தையும், பாவியானால் மனந்திரும்பிப் பாவசங்கீர்த்தனத்தினாலாவது உத்தம மனஸ்தா



பத்தினாலாவது நீதிமானாகும் பிரகாசத்தையும் அர்ச். கன்னிமரியம்மாள் அவனுக்கு அடைந்தருளுவாள் என்பதேயாம். 3-வது, உத்தரிக்கிற ஸ்தலத்தின் நெருப்பினின்று அதிசீக்கிரம் மீட்கப்படலாமென்று நம்புவதற்கு ஆதாரமுண்டு. 4-வது, கார்மேல் என்னும் மகாசபையில் உட்பட்டிருக்குஞ் சந்நியாசிகளும் கன்னியாஸ்திரிகளும் இன்னும் உத்தரீயச் சபையைச் சேர்ந்த சகலருஞ் செய்கிற செப தப தானதர்ம முதலிய சகல நற்கருமங்களுக்கும் இச்சபைக்களிக்கப்பட்ட அத்தியந்த பலன்களுக்கும் இந்தத் திரு உத்தரீயஞ் சுதந்தரங்கொடுக்கிறது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இந்த நன்மைகளையெல்லாம் நீ அடையவேணுமென்று ஆசைவேகமிருந்தால் உன்னால் கூடிய காரிந்தான்; இதின் கடமைகள் வருத்தமானவைகளல்ல. அதாவது கார்மேல் சபை சுவாமியார் மூலமாயாவது உத்தரீயத்தை மந்திரித்துக் கொடுக்க அதிகாரம் பெற்ற வேறொரு குருவின் மூலமாயாவது சட்டப்பிரகாரம் உத்தரீயச் சபையிலுட்பட்டு அதைத் தகுந்த மேரையாய் எப்போதும் அணிந்துகொள்ளுகிறதுமல்லாமல் விசேஷமாய் மரண சமயத்தில் அதைத் தரித்திருக்கிறது. அசட்டையினால் வெகுநாளாய் இதைத் தரித்துக்கொள்ளாதிருந்தாலும் அல்லது போக்கடித்துவிட்டாலுந் திரும்ப மந்திரிக்கவேணுமென்கிறது அவசரமில்லை. மந்திரியாமலே வேறொரு உத்தரீயத்தைத் தரித்துக்கொள்ளலாம். ஆயினும் சபாத்தீனாவென்னும் பாப்பு நிருபத்தில் சொல்லியிருக்கிறபடி உத்தரிக்கிற ஸ்தலத்தின் வேதனை கூடிய சீக்கிரம், (அதாவது முதல் சனிக்கிழமை), நீங்க ஆசைப்படுகிறவர்கள் தங்கள் அந்தஸ்துக்கேற்றவாறு கற்பைக் காப்பாற்றவேண்டியதுந் தவிரக் குருக்களுடைய சங்கீதமாலை செபிக்கக் கடனில்லாதவர்கள் எல்லாருந் தேவமாதாவின் சிறு சங்கீதமாலையைத் தினந்தினஞ் செபிக்கவேணும். வாசிக்கத் தெரியாதவர்கள் புதன், சனி சுத்தபோசனமாயிருக்கவேணும். இதுவும் அநுசரிக்கக் கூடாமல்போனால் அதிகாரம்பெற்ற குருவானவர் உத்தரவின்படி வேறெந்த நற்கிரியைகளையாவது செய்யலாம்.

இதை நீ சரிவர அனுசரித்தாயோ இல்லையோவென்று பார்த்துக் குறையிருந்தால் அதை நிவர்த்திசெய்.

சம்பாஷணை.—இதைக்குறித்துத் தேவமாதாவோடே சம்பாஷித்துக்கொள்.

## 17-ம் தேதி

### இயேசுநாதர் மலையில்செய்த பிரசங்கம்

**பரமண்டல மந்திரத்தின்பேரில்**

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதர்சுவாமி திரளான ஜனங்கள் முன்பாகப் பேசுகிறதாக ரூபிகரித்துக்கொள்.

தியானச் செபம்.—பரமண்டல மந்திரத்தை நன்றாய்க் கண்டுபிடிக்க ஆண்டவரை நோக்கி மன்றாடு.

### முதல் பிரிவு

**பரமண்டலமந்திரத்தின் ஆரம்பம்**

தியானம்.—ஒய்யாரமாய் எல்லாருங் காண நெடுஞ்செபங்கள் செய்துவந்த பரிசேயருடைய கள்ள ஞானத்தை இயேசுநாதர்சுவாமி கண்டித்ததுமல்லாமல் பரமண்டல மந்திரமென்று சொல்லப்படுகிற ஆச்சரியமான செபத்தை நமக்குப் படிப்பிக்கவுஞ் சித்தமானார். எப்படியெனில் சீஷர்களைப்பார்த்து அவர் திருவுளம்பற்றினதாவது: நீங்கள் செபஞ்செய்யும்போது கள்ள ஞானிகளாகிய பரிசேயரைக் கண்டுபாவிக்கவும் வேண்டாம்: அஞ்ஞானிகளைப்போல நீண்ட வசனங்களைச்சொல்லிச் செபிக்கவேணுமென்று நினைக்கவும் வேண்டாம். நீங்கள் செய்யவேண்டிய செபமாவது: பரமண்டலங்களிலேயிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக, உம்முடைய இராச்சியம் வருக, உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுமாப்போல பூமியிலேயுஞ் செய்யப்படுவதாக.



அன்றன்றுள்ள எங்களப்பம் எங்களுக்கு இன்றுதாரும், எங்கள் கடன்காரருக்கு நாங்கள் பொறுக்குமாப்போல எங்கள் கடன்களை எங்களுக்குப்பொறும். எங்களைச் சோதனையிலே பிரவேசிப்பியாதேயும், தின்மையிலே நின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும். ஆமென்சேசு. (மத். 6, லூக். 11)

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—பரமண்டலமந்திரம் மற்ற எல்லா மந்திரங்களுக்கும் மேலானதென்றுஞ் சர்வேசுரனுக்கு வெகு பிரியமுள்ளதென்றும் நமக்கு மகா பிரயோசனமானதென்றும் நாம் நம்முள்ளத்தில் ஆழ்ந்த உறுதியெண்ணங் கொண்டிருக்கிறோமென்பது சரியே. ஆனால் இந்த உறுதிக்கு ஏற்றபடி அதை எப்போதுஞ் சங்கை பத்தியோடு செபிக்கிறோமோ? இவ்விதமாய் செபிக்கும்படி சிறந்த இந்த மந்திரத்தின் பதம் ஒவ்வொன்றையுந் தியானிப்போமாக. பரமண்டலங்களிலேயிருக்கிற எங்கள் பிதாவே என்று ஆரம்பித்திருப்பதினால் இயேசுநாதர்சுவாமி நாம் செபஞ் செய்யுமுன் ஒடுக்க வணக்கமாயிருந்து யாரிடத்தில் பேசப்போகிறோமென்று சிந்தித்துப் பரலோகமட்டுஞ் சர்வேசுரனுடைய சன்னதிவரையில் நம்முடைய நினைவை உயர்த்தவேணும் என்று படிப்பிக்கிறார். பின்னுஞ் சர்வேசுரனைப் பிதாவென்று அழைக்க நமக்கு அவர் விடை கொடுத்ததினால் பிள்ளைக்குள்ள நம்பிக்கையோடு நாம் அவரைப்பார்த்து மன்றாடவேணுமென்று நம்மை யேவுகிறார். கடைசியாய் நமக்குள் இருக்கவேண்டிய அன்னியோன்னியத்தைக் காண்பிக்கவும் நாம் ஒருவர் மற்றொருவருக்காக வேண்டிக்கொள்ளவேணுமென்று நினைக்கவும் என பிதாவே என்று சொல்லாமல் எங்கள்பிதாவே என்று சொல்லிப்படிப்பிக்கிறார்.

மனப்பற்றுதல்.—இதற்காக இயேசுநாதர்சுவாமிக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்து அவர் திருவாய் மலர்ந்து இந்த மந்திரத்தின் ஒவ்வொரு பதமும் அருளிச்செய்திருந்தும் நாம் அடிக்கடி மகா பராக்கோடு இதைச் செபித்ததற்காக மன்னிப்புக் கேட்போமாக.

பிரதிக்கினை.—பரமண்டல மந்திரத்தைச் செபிக்குமுன் நாம் என்ன செய்யவேணுமென்று இயேசுநாதர்சுவாமி கற்பிக்கிறாரோ அதையே நமது மற்றச் செபங்களுக்குமுன்னுஞ் செய்யவேண்டியது.

## 2-ம் பிரிவு

### பரமண்டலமந்திரத்தின் முதல் மன்றாட்டு

தியானம்.—உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக. இங்கே சர்வேசுரனுடைய நாமம் என்கிற பதத்தினால் சர்வேசுரனையும் அவருடைய திவ்விய இலட்சணங்களையுங் குறிக்கிறோம். அர்ச்சிக்கப்படுவதாக என்னும்போது சகல மனுஷராலும் அவர் அறியப்படவும், சேவிக்கப்படவும், ஸ்துதிக்கப்படவுங் கேட்கிறோம். பிதாவே உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக என்கிற இந்த முதல் மன்றாட்டு சர்வேசுரன் நம்மை உண்டாக்கின முகாந்தரத்தையும் நம்மிடத்திலும் பிறரிடத்திலும் அவரை மகிமைப்படுத்தவேண்டிய நமது முந்தின கடமையையும் நமக்கு நினைப்பூட்டுகிறது. இந்தக் கதியை அடைய நமது சொந்தப் பலம் போதாதென்கிறதினால் உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக என்ற மன்றாட்டில் நமக்கு அவசரமான உதவி சகாயங்களுந் தரவேணுமென்பது தொக்கி நிற்கிறது. இம்மேரையாய் நம்முடைய பரம பிதாவின் மகிமையை முறைப்படி நாம் எல்லாத்துக்குமுந்தித் தேடும்போது நமது சுய நலத்தையும் நாம் அசட்டைபண்ணுகிறதில்லை.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நம்முடைய பரம பிதாவுக்கு அர்ச்சனையும் மகிமையும் உண்டாக நாம் படும் பிரயத்தனமென்ன? முந்தமுந்தச் சுத்த மனதோடு உங்கள் இருதயத்தில் அவரை அர்ச்சியுங்கள் என்று அர்ச். இராயப்பர் சொன்னதுபோல இருதயத்தூய்மையால் முந்தமுந்த நம்மிடத்தில் ஆண்டவரை மகிமைப்படுத்த முயலுகிறோமோ? நம்முடைய ஒழுக்கம், அடக்கம் நல்ல சம்பாஷணை, பத்திவேகத்தினால் நமது சகோதரர் நம்மைக் கண்டுபாவித்து எல்லாத்துக்குங் காரண கர்த்தா



வாகிய அந்த ஆண்டவரை அவர்களும் மகிமைப்படுத்தும்படி நாம் அவர்களை ஒரு விதத்தில் பிடிமானம் பண்ணுகிறோமோ? இவ்விதமே மனிதர் உங்கள் நற்கிரிகைகளைக் கண்டு பரமண்டலங்களிலே யிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்துவார்கள் என்று இயேசுநாதர்சுவாமி. திருவுளம்பற்றியிருக்கிற வாக்கை ருசுவாக்கக்கடவோம். (மத். 5.)

மனப்பற்றுதல்.—ஆண்டவருடைய திருநாமஞ் சதாகாலமும் வாழ்த்தப்படக்கடவது. (சங். 112.) என் சர்வேசுராசுவாமி உம்மைச சகல ஜனங்களும் வாழ்த்தி ஸ்துதிக்கக்கடவார்கள். (சங். 148.)

பிரதிக்கினை.—வேதங்கெட்டவர்கள் சொல்லுந் தேவதூஷண முதலான வார்த்தைகளைக் கேட்குமிடத்தில் முழு இருதயத்தோடு மனநொந்து இப்போது சொன்ன மனவல்லயச் செபங்களில் ஒன்றைச் சொல்லுகிறது.

## 3-ம் பிரிவு

### பரமண்டலமந்திரத்தின் 2-ம் மன்றாட்டு

தியானம்.—உம்முடைய இராட்சியம் வருக. இவ்விடத்தில் கேட்கிறது படைக்கப்பட்ட வஸ்துக்கள் யாவற்றிலுஞ் சர்வேசுரனுடைய இராட்சியம் வரவேணுமென்றல்ல. ஏனெனில் படைப்பு உண்டான காலமுதல் இந்த இராட்சியபாரம் அவருக்குண்டாயிருக்கிறது. ஆனால் மனிதரெல்லாரும் உற்சாகமாய்ச் சர்வேசுரனுடைய பரிசுத்த கற்பனைகளைக் கைக்கொண்டு அவருக்குக் கீழ்ப்படிந்து நடக்கும்படியான இந்த இராட்சியம் அவர்களுடைய இருதயத்தில் வரவேணுமென்று கேட்கிறோம். இதுவுமல்லாமல் பரலோகத்தில் நாம் எல்லாரும் நம்முடைய பிதாவின் மகிமைப் பிரதாப சிம்மாசனத்தைச் சூழ்ந்திருந்து அவரோடுகூட இராட்சிய பரிபாலனம் பண்ணவேண்டிய நாள் நெருங்கிவர வேணுமென்று அவரை நோக்கி மன்றாடுவோமாக.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நமது கிரியைகள் இந்தச் செபத்துக்கு ஒத்திருக்கச் செய்வோமாக. அதெப்படியென்றால் முந்தமுந்த நாம் நமது பரம பிதாவுக்கு யோக்கியமான பிள்ளைகளாயிருக்கத்தக்கதாக நமது சிந்தை வாக்குக் கிரியைகள் யாவையும் அவர் தமது திருச் சித்தத்துக்கு ஏற்ற பிரகாரஞ் சீர்படுத்தி நமது புத்தியிலும் மனதிலும் அவரே அரசாளும்படி கவனிக்கவேணும். பின்னும் நம்மால் கூடுமான உபாயங்களைக் கொண்டு பிறரிடத்திலும் அவர் இராட்சியபாரம் பண்ணப் பிரயாசப்படவேணும். இந்த உபாயங்கள் நமது கையில் எத்தனையோ உண்டு. ஆகையால் இவைகளை நாம் எவ்விதமாய் உதவிக்கொண்டோமென்றும் இனி எப்படி உதவிக்கொள்ளவேணுமென்றும் பார்ப்போமாக.

சம்பாஷணை.—பரலோகத்திலிருக்கிற நமது பிதாவோடே சம்பாஷிப்போமாக.

---

## 18-ம் தேதி

### இயேசுநாதசுவாமி மலையின்மேல் செய்த பிரசங்கம் பரமண்டலமந்திரத்தின் தொடர்ச்சி

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதசுவாமி செபஞ் செய்யவேண்டிய விதத்தை நமக்குப் படிப்பிக்கிறதாக ரூபிகரித்துக்கொள்வோமாக.

தியானச் செபம்.—நன்றாய்ச் செபிப்பதற்கு வேண்டிய வரப்பிரசாதத்தைக் கேட்கக்கடவோம்.

### முதல் பிரிவு

#### பரமண்டலமந்திரத்தின் 3-ம் மன்றாட்டு

தியானம்.—உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுமாப்போல பூமியிலேயுஞ் செய்யப்



படுவதாக இவ்விடத்தில் இயேசுநாதசுவாமி தமது பரம பிதாவின் திருச்சித்தத்தை அல்லது கற்பனையை மாத்திரம் நிறைவேற்றுகிறதைவிட அதிக உத்தமமானதும் அவருக்கு அதிக மகிமையானதுமான சில விசேஷ காரியங்களைக் கேட்கும்படி நம்மைத் தூண்டுகிறார். அதாவது பரலோகத்தில் சம்மனசுக்களும் அர்ச்சியசிஷ்டவர்களும் ஆண்டவர் சித்தத்தை எவ்வளவு பூரணமாய் நிறைவேற்றுகிறார்களோ அதுபோல நாமும் அவருடைய திருச்சித்தத்தை நிறைவேற்றும்படி கேட்க ஏவுகிறார். அப்படி அவ்வளவு உயரம் ஏறக்கூடாதேபோனாலும் அந்த உத்தமதனத்தை அடைகிறதற்கு வேண்டிய வேகமான ஆசையாகிலும் நமக்கு உண்டாகவும் அதற்கு அவசரமான வரப்பிரசாதங்களை இடைவிடாமல் கேட்கவும் நம்மை உற்சாகப்படுத்துகிறார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நாம் சந்நியாசிகளானதினால் மற்றச் சாதாரண கிறீஸ்துவர்களைவிட அதிகமாய் அந்த உத்தமதனத்தைத் தேடக் கடமைப்பட்டிருக்கிறோம். அவர்களைவிட நாம் அதிக சுளுவாய் அந்த உத்தமதனத்தைக் கிட்டி வரலாம். ஏனென்றால், நமது சீவியத்தில் நாம் அநுசரிக்கவேண்டிய சகலமும் வகை விபரமாய் நமது ஒழுங்குகளில் கண்டிருப்பதினாலும், சந்தேகமான காரியங்களில் சர்வேசுரனுடைய வாய்மொழியாகிய சிரேஷ்டர் வழிகாட்டுவதினாலுஞ் சர்வேசுரனுக்குச் சித்தமும் பிரியமுமானது இன்னதென்று நமக்கு வெட்டவெளியாகிறது. எந்தக் காரியத்திலுஞ் சர்வேசுரனுக்குப் பிரியமானதைச் செய்கிறதென்கிற நிச்சயமும் நமது சகோதரருடைய நன்மாதிரிகையும் இந்த அந்தஸ்தோடுகூடிய வரப்பிரசாதங்களும் ஆகிய இவையெல்லாம் நாம் அவருடைய திருச்சித்தத்தை அதிக இன்பமாகவுஞ் சுளுவாகவும் இரட்டிப்புப் பேறுபலனோடும் நிறைவேற்றச் செய்கின்றன. இதைப் பார்க்கும்போது நமது அந்தஸ்தைவிட அதிக சவுந்தரியயோர்கம்பெற்றது ஏது; இதை மோக்ஷவாசிகளுடைய அந்தஸ்துக்கு மிகவும் இணையானதென்று சொல்லவேண்டியதல்லவோ?

மனப்பற்றுதல்.—நமது பரிசுத்த அந்தஸ்திலுண்டான இவ்வளவு நன்மைகளைப்பற்றிச் சந்தோஷித்து ஆண்டவருக்குத் தோத்திரஞ் செய்வோமாக. பரமண்டலத்தில் அர்ச்சியசிஷ்டவர்கள் சர்வேசுரனுடைய சித்தத்தை நிறைவேற்றுகிறதுபோல நாமும் பூலோகத்தில் அதை நிறைவேற்றும்படி அவர்கள் நமக்குப் பலத்த ஒத்தாசையாயிருக்க அவர்களை மன்றாடுவோமாக.

பிரதிக்கினை.—சர்வேசுரனுடைய சித்தம் இன்னதென்று சிரேஷ்டர்கள் காண்பித்த ஓர் ஆசையால் மாத்திரம் நமக்குத் தெரிந்திருந்தாலும் அதற்கு விரைவாகவும் பூரணமாகவும் பிரியத்தோடும் நிலைமையோடுங் கீழ்ப்படிவோமாக.

## 2-ம் பிரிவு

### பரமண்டலமந்திரத்தின் 4-ம் மன்றாட்டு

தியானம்.—நமது பரம பிதாவிடத்தில் அவருடைய மகிமை தோத்திரத்தைக்குறித்து நாம் கேட்கத்தக்கதேதென்று திவ்விய குருவானவர் நமக்குப் படிப்பித்த பிறகு நமக்காக நாம் செய்யவேண்டிய மன்றாட்டுகளையுங் குறித்துக் காண்பிக்கிறார். இவைகள் நாலு வகைப்படும்: முதலாவது, அன்றன்றுள்ள எங்களப்பம் எங்களுக்கு இன்றுதாரும். இங்கே எங்கள் அப்பம் என்கிற பதத்துக்கு நமது சரீரமும் அத்தோடுகூடிய ஆத்துமமும் பிழைக்கிறதற்கு அவசியமாயும் போதுமாயுமிருக்கிறவைகளெல்லாமென்று அர்த்தமாம். அன்றன்றுள்ள என்றால் ஆஸ்திக்காரரும் எளியவருமாகிய சமஸ்தருக்கும் நம்முடைய பிதாவின் ஒத்தாசை எக்காலமும் வேண்டியிருக்கிறதென்று அர்த்தமாம். இன்று என்னும்போது தினந்தினம் நம்முடைய மன்றாட்டைப் புதுப்பிக்கவும் அவருடைய பராமரிக்கையின்பேரில் நம்முடைய நம்பிக்கையெல்லாம் வைக்கவும் நாளைக்கு எப்படியென்று மிஞ்சின கவலைப்படாதிருக்கவும் வேணுமென்று திவ்விய கர்த்தர் நமக்குப் படிப்பிக்கிறார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—உன் சீவியகாலத்தையும் விசேஷமாய் நீ சந்நியாசத்தில் போக்கின காலத்தையும் வருஷம் வருஷமாய் ஞாபகத்தில் வருவித்து யோசித்துப்பார். பரமண்டலங்களிலேயிருக்கிற உன் பிதா இத்தனை காலமளவும் எவ்வளவோ தாராள ஏராளமாய் உனக்கு வேண்டிய சவரட்சணை செய்தாரென்று ஆராய்ந்துகொள். இவைகளுக்கெல்லாம் என்ன கைம்மாறு செய்தாய்? அவர் உனக்குக்கொடுத்த வரங்கள் ஏராளப்பிரவாகமாயிருக்க, நீயோ உன் துராசைகளுக்குத் திர்ப்தி வருவிக்கத்தேடி அவைகளை அபலமாய்ச் சிதையவிடவில்லையோ?



மனப்பற்றுதல்.—இவைகளையெல்லாங் கண்டு பிரமித்து ஆண்டவருக்குத் தோத்திரஞ்செய்து உன் குற்றங்களைப்பற்றி வெட்கி இனிமேல் சரியாய் நடக்க வாக்குத்தத்தஞ் செய்.

பிரதிக்கினை.—நீ சாப்பிடும்போது உன் சொந்தத் தகப்பனைவிட உனக்கு அதிக பட்சங்காட்டுகிற சர்வேசுரனை நினைத்துக்கொள். சாப்பிட்டபின் நீ செய்யுஞ் செபத்தை மெய்யாகவே அவருக்கு நன்றியறிந்த தோத்திரமாயிருக்கும்படி செய்வாயாக.

## 3-ம் பிரிவு

### பரமண்டலமந்திரத்தின் 5-ம் மன்றாட்டு

தியானம்.—எங்கள் கடன்காரருக்கு நாங்கள் பொறுக்குமாப்போல எங்கள் கடன்களை எங்களுக்குப் பொறும். நாம் செய்த பாவங்களுக்கும் அவைகளுக்கு வரவேண்டிய ஆக்கினைகளுக்கும் நமது பரம பிதா நமக்கு மன்னிப்புக் கொடுக்கவேணுமென்று இவ்விடத்தில் மன்றாடுகிறோம். ஆனால் நமக்குப் பொல்லாப்புச் செய்கிறவர்களுக்கு நாம் பொறுத்தல் கொடுத்தால்தான், நமது பாவங்களையுந் தமது பரம பிதா பொறுப்பாரென்று இயேசுநாதர் சுவாமி வாக்குத்தத்தஞ் செய்கிறார். எப்படியெனில் மனிதர் உங்களுக்குச் செய்யுங் குற்றங்களை நீங்கள் மன்னிப்பீர்களேயாகில் உங்கள் பரம பிதாவும் உங்கள் குற்றங்களை உங்களுக்கு மன்னிப்பார். நீங்கள் மனிதருக்கு மன்னியா

திருப்பீர்களேயாகில் உங்கள் பரம பிதாவும் உங்கள் குற்
றங்களை உங்களுக்கு மன்னிக்கமாட்டார் என்று திருவுளம்
பற்றினர். (மத். 6.) இதினிமித்தமாக இந்த ஐந்தாம் மன்
றாட்டில் எங்கள் கடன்காரருக்கு நாங்கள் பொறுக்குமாப்
போல என்று சேர்த்திருக்கிறார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—
எங்கள் கடன்களை எங்களுக்குப் பொறும் என்கிற இந்த
வார்த்தைகளை நாம் தினந்தினஞ் சொல்லிவருகிறோம்.
ஆனால் இவைகளை உண்மையான உருக்கத்தோடு சொல்லா
ததினால் அவ்வளவு பலன் அடையாமல் போகிறோமாக்கும்.
ஐயோ! நாம் பராக்கோடும் உள்ளத்தில் உருக்கமில்லாம
லும் இவைகளைச் சொல்லிவருவதினால் நாள்தோறும் நாம்
கட்டிக்கொள்ளும் பாவங்களை உணருகிறதுமில்லை, அர்ச்சிய
சிஷ்டவர்களைப்போல அவைகளைத் தேவ தராசில் வைத்து
நிறுத்துப்பார்க்கிறதுமில்லை. அவர்களைப்போல நாமும்
பிதாவின் பாதத்திலே விழுந்து அழக்கடவோம். அவரும்
நமது பாவங்களை மன்னித்தருளுவார்.

சம்பாஷணை.—இன்றையத் திருநாளுக்குரிய அர்ச்.
லெல்லிஸ் கமில் என்பவரோடு சம்பாஷித்துக்கொள். இவர்
வியாதியஸ்தர்பேரில் வைத்த ஆச்சரியமான பிறர்சிநேக
நிமித்தம் வியாதிக்காரர் ஊழியத்துக்காக ஒரு சந்நியாச
சபையை உண்டுபண்ணி 1614-ம் வருஷம் மரித்தார்.

---

## 19-ம் தேதி

### இயேசுநாதர் மலையின் மேல் செய்த பிரசங்கம் பரமண்டலமந்திரத்தின் முடிவு

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதசுவாமி பண்ணின
பிரசங்கத்தைக் கேட்கிறவர்களுக்குள் நீயும் ஒருவனாயிருக்
கிறாயென்று ரூபிகரித்துக்கொள்வாயாக.

தியானச் சேபம்.—பணிவுந் தாராளமுமுள்ள இரு
தயத்தை உனக்குக் கொடுக்கவேணுமென்று கேட்பாயாக.



### முதல் பிரிவு

#### பரமண்டலமந்திரத்தின் 6-ம் மன்றாட்டு

தியானம்.—எங்களைச் சோதனையிலே பிரவேசிப்பி
யாதேயும் இந்த வசனத்துக்குச் சோதனையில் அகப்பட்டுக்
கொள்ளும்படி எங்களை விட்டுவிடாதேயும் என்று அர்த்த
மாகும். பிரவேசிப்பிக்கிறதென்ற பதத்துக்கு உட்படுத்து
தல் அல்லது தள்ளுதல் என்கிற பொருள் பரிச்சேதஞ்
செல்லாது. ஏனெனில் நாம் பாவத்தில் விழும்படி வைத்
திருக்குங் கண்ணிகளில் சர்வேசுரன் நம்மை உட்படுத்தவும்
அல்லது தள்ளவுங் கூடவேகூடாது. ஆனதினால் பாவத்
துக்கு இழுக்குஞ் சோதனை பசாசினாலும் நம்முடைய
கெட்ட சுபாவத்தினாலும் வருகிறதேயல்லாமல் மற்றப்படி
யல்ல. அதின் வித்து நம்மிடத்திலேயே இருக்க நாம்
அந்தச் சோதனையில் பிரவேசியாமல் தப்பித்துக்கொள்வது
எப்படி? ஆகையால் எங்களைச் சோதனையிலே பிரவேசிப்
பியாதேயும் என்று சொல்லும்போது அந்தச் சோதனை
நமக்கு வராமலிருக்க வேணுமென்று கேட்கிறதில்லை.
ஆனால் இதிலே நாம் பிதாவை நோக்கிக் கெஞ்சி மன்றாடு
வது ஏதென்றால்: நமது பலவீனத்தைப் பார்த்து நமக்கு
மோசமாயிருக்கிற சோதனைகளை அகற்றி நம்மைக் காப்பாற்
றவும், தந்திரஞ் செய்கிற பசாசின் சூது வாதுகளை நமக்கு
வெட்டவெளியாக்கவும், வேதத்தின் நித்திய சத்தியங்களைத்
தக்க சமயங்களில் நமக்கு நினைப்பூட்டவுங் கேட்கிறோம்.
இன்னமுஞ் செபம்பண்ணுகிறதுஞ் சோதனைக்கு அடுத்த
காரணங்களை விட்டு விலகுகிறதும் எவ்வளவு அவசர
மென்று நமக்குத் தெளிவிக்கவேணுமென்றும் மன்றாடு
கிறோம். மீளவும் அர்ச். சின்னப்பர் சொல்லிய பிரகாரம்
(1 கொரி. 10). சர்வேசுரன் பிரமாணிக்கமுள்ளவராகை
யால் நமது சக்திக்கு மேற்பட்ட சோதனைகளை வரவிடாமல்
நமது உத்திரவின்மேல் நமக்கு நேரிடுந் தந்திரங்களில்
முதலாய் நமது ஆத்துமத்துக்கு நன்மை உண்டாகும்படி
செய்வார். ஆகையால் நாம் சோதனையில் அகப்பட்டுக்
கொள்ளாமல் புண்ணிய வழியில் நடப்பதற்கு உதவியான

வரங்களை ஏராளப் பெருக்கமாய் நமதுபேரில் பொழிந்
தருளும்படி இந்த விண்ணப்பத்தில் கேட்கிறோம்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—இது
தான் நாம் சர்வேசுரனை நோக்கிக் கேட்கிற மன்றாட்டு.
ஆனால் இந்த மன்றாட்டுத் தவறாமல் சித்திக்கும்படி அவர்
நம்மிடத்தில் கேட்கிறது ஏதென்றால்: நாம் நம்மை நம்பா
திருக்கவும் நம்மாலே ஆனமட்டுஞ் சோதனைக்கடுத்த
காரணங்களையும் பாவச் சமயங்களையும் விட்டு விலகவுஞ்
சோதனை சமயத்தில் தாமதமின்றிச் செபஞ் செய்யவும்
வேணுமென்று கேட்கிறார். அன்றியுஞ் சோதனைவிடாமல்
தொடர்ந்து வந்தால் எவ்வித மோசத்துக்குந் தப்பித்துக்
கொள்ளும்படி நமது ஆத்தும குருவானவர் சொல்லும்
புத்திமதிகளைச் சரியாய்க் கேட்டு அனுசரிப்போமென்கிற
தீர்மானத்தோடு அவரிடத்தில் இதை வெளிப்படுத்தவேணு
மென்பதும் அவர் சித்தமாம். இப்போது சொன்னவை
களையெல்லாம் அனுசரித்துவருகிறாயோ? அவைகளை ஒவ்
வொன்றாய் ஆராய்ந்துபார். எதிலே தவறிப்போனாயென்
றும் எது காரியத்தை இன்னம் அதிக நன்றாய் அனுசரிக்
கக்கூடுமென்றும் அனுசரிக்கவேண்டியதென்றும் நிதா
னித்துக்கொள்.

**மனப்பற்றுதல்.**—இப்போது விவரித்துச் சொன்ன
பிரகாரம் இந்த ஆறு மன்றாட்டில் அடங்கியிருக்கிறவைகளை
எல்லாம் பத்தி சுறுசுறுப்புடன் சர்வேசுரனிடத்தில் கேட்
பாயாக.

**பிரதிக்கினை.**—சோதனை நேரங் கடந்தபின் விசேஷ
மாய் அது அகோரமானதாயிருந்தால் அச்சமயத்தில் எப்
படிச் சமாளித்தாயென்று உற்றுவிசாரித்துப் பின்னிட்டு
இவ்வித தருணங்களில் என்ன உபாயஞ் செய்யவேணு
மென்று கூராய்ப் பார்த்து வைத்துக்கொள்.

## **2**-ம் பிரிவு

### பரமண்டலமந்திரத்தின் **7**-ம் மன்றாட்டு

**தியானம்.—தின்மையிலே நின்று எங்களை இரட்
சித்துக்கொள்ளும்.** முந்தின மன்றாட்டுக்களில் கேட்டது



போல இந்த மன்றாட்டிலுஞ் சொற்ப வார்த்தைகளைச்
சொல்லி அநேக காரியங்களைக் கேட்கிறோம். அதேதென்
றால் பஞ்சம் படை நோய் பொருள் நஷ்டம் பிறருபத்திர
வம் கோள் குண்டணி முதலிய லௌகீக நிர்ப்பாக்கிய
மாகிற சகல தின்மையிலேயும் நின்று நம்மை மீட்டுத்
தற்காக்கக் கேட்கிறோம். மீளவும் நாம் கருதக்கூடுமான
சகல லௌகீக பொல்லாப்புகளையும் பார்க்க அளவற்ற பொல்
லாப்பாகிய சாவான பாவத்தில் நாம் விழாதபடி காப்பாற்ற
வும் அதில் விழுந்தால் அதினின்று உடனே நம்மைக்கைதூக்
கவும் மன்றாடுகிறோம். விசேஷமாய் நாம் பாவப்பழக்கத்
தில் விழாமலிருக்கவும் அப்படி விழுந்தால் அதினின்று
எழுந்திருக்கச்செய்யவும் பிரார்த்திக்கிறோம். ஆனால்
எல்லாத்தையும் விடச் சாவான பாவத்தோடு அவலமாய்ச்
சாகிறது யாதொரு பரிகாரமுமில்லாத அசாத்திய பொல்
லாப்பும் நித்திய சாபமுமாய் இருப்பதினால் இதினின்று
நம்மைத் தற்காக்கவேணுமென்று கெஞ்சி மன்றாடுகிறோம்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—
தின்மையிலே நின்று எங்களை இரட்சித்துக்கொள்ளு
மென்று சொல்லும்போது நீ சொல்லுகிறது இன்ன
தென்று நன்றாய் நினைக்கிறாயோ? உனக்குச் சரீர வியாதி
முதலிய பொல்லாப்பு வரும்போது அது நீங்கும்படி பத்தி
சுறுசுறுப்போடும் ஆவலோடும் மன்றாடுகிறதுபோல ஆத்
தும நோயாகிற பாவத்தில் விழாதிருக்கவும் விழுந்தால்
அதைவிட்டு எழுந்திருக்கவும் மகா சுறுசுறுப்போடு மன்
றாடுகிறாயோ? சர்வேசுரன் தமது மகிமைக்காகவும் உன்
ஆத்தும நன்மைக்காகவும் நீ வியாதி முதலிய இப்போர்க்
கொத்த துன்ப துரிதப்பட வேணுமென்று சித்தமாகும்
போது நீ நம்பிக்கையற்றுப் பொறுமையில்லாதவனாய்
முறைப்படுகிறதில்லையோ? அநேக கிறீஸ்துவர்கள் இது
காரியத்தில் தவறிப்போகிறார்கள். தின்மையிலே நின்று
எங்களை இரட்சித்துக்கொள்ளுமென்று சொல்லும்போது
நாம் இப்போர்க்கொத்த கிறீஸ்துவர்களுக்கு ஒப்பாய் நடவா
மல் பொறுமை தாழ்ச்சி பேறுபலனோடு அந்தத் துன்பங்
களைச் சகிக்க ஆண்டவர் தயை செய்யவேணுமென்றல்லோ

கேட்கிறோம். ஆ! இந்தப் பரமண்டல மந்திரம் எவ்வளவு உச்சிதமான செபம்! சர்வேசுரனுடைய மகிமைக்கும் நம்முடைய மெய்யான பாக்கியத்துக்கும் உதவியாக நாம் அவரிடத்தில் கேட்கக்கூடிய சகலமும் இதில் அடங்கியிருப்பதினாலே இதைச் சர்வ பிரார்த்தனையென்று மெய்யாகவே சொல்லவேண்டியதாயிருக்கிறது. இதைப் பக்தி சுறுசுறுப்போடுந் தாற்பரியத்தோடுஞ் சொல்வதற்கு இந்த யோசனைகளெல்லாம் மிகவும் ஒத்தாசையாயிருக்கும்.

## 3-ம் பிரிவு

### பரமண்டலமந்திரத்தின் முடிவு

**தியானம்.**—இந்த ஏழு மன்றாட்டுக்களுக்கும் பின்வரும் ஆமென் என்பதற்குப் பயன் அப்படியே ஆகக்கடவதென்பதாம். எல்லா மன்றாட்டுக்களையும் மொத்தமாயும் ஒவ்வொரு மன்றாட்டையுந் தனித்தனியாகவுஞ் சுருக்கமாய் ஆமென் என்கிற இந்த ஒரு வார்த்தையைக்கொண்டு திரும்பவும் கேட்டு முடிக்கிறோம்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—ஆமென் என்று சொல்லுகிற வார்த்தையில் இந்த மந்திரத்திலுள்ள பொருளெல்லாம் ஒருவகையிலே சுருக்கமாய் அடங்கியிருக்கிறதினால் இதைச் சொல்லும்போது என் சர்வேசுரா அப்படியே எனக்கு ஆகக்கடவது என்று பக்தி விநயத்தோடு எப்போதுஞ் சொல்லிக்கொண்டு வருவோமாக.

**சம்பாஷணை.**—லாசரிஸ்த்தென்னும் போதகர் சபையையும் பிறசிநேக சகோதரிகள் என்னுங் கன்னியர் சபையையும் உண்டுபண்ணினவராகிய அர்ச். வின்சென்தெப் பாவுல் என்பவரோடு சம்பாஷணை செய்கிறது. இப்போது இவருடைய பேர் உலகமெங்குஞ் சப்திக்கிறதுமல்லாமல் இவராலும் இவர் ஏற்படுத்திய தர்மச் சங்கங்களாலும் அநேகருடைய ஆத்தும சரீரத்துக்கு வெகு ஞான நன்மை உண்டாகிறதினால் மோக்ஷத்தில் ஆண்டவர் இவருக்கு அளித்த பாக்கியங்களுக்காக இவரைக் கொண்டாடி நமக்காக ஆண்டவரிடத்தில் இவர் மன்றாடக் கேட்போமாக.

---



# 20-ம் தேதி

## இயேசுநாதர் மலையின்மேல் செய்த பிரசங்கம்

### நானாவித கற்பனைகள்

**ஆயத்தச் சிந்தனை.**—இயேசுநாதர் சொல்வதைச் சனங்கள் கவனமாய்க் கேட்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

**தியானச் செபம்.**—எல்லாவற்றிலும் அவர் கற்பனைக்கு ஏற்க நடக்கும்படி வேண்டிய வரப்பிரசாதத்தைக் கேட்பாயாக.

## முதல் பிரிவு

### புறத்தியார்பேரில் தீர்மானஞ் செய்யாமையின்பேரில்

**தியானம்.**—நீங்கள் குற்றவாளிகளாக எண்ணப்படாதபடி மற்றவர்களையுங் குற்றவாளிகளென்று எண்ணாதிருங்கள். ஏனெனில் நீங்கள் மற்றவர்களை எண்ணியிருக்கும் எண்ணமாகவே நீங்களும் எண்ணப்படுவீர்கள். நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தைப் பாராமல் உன் சகோதரனுடைய கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறது என்னவென்று நமது திவ்விய இரட்சகர் வசனித்திருக்கிறார். (மத். 7). இதினாலே நம்முடைய சகோதரர் பேரில் நாம் யாதொரு தீர்மானஞ் செய்யாதபடி திவ்விய இரட்சகர் விலக்கச் சித்தமானார். ஏனென்றால் நாம் வெளித் தோற்றங்களைக்கொண்டுமாத்திரந் தீர்மானிக்கிறதினாலும் அந்தத் தோற்றங்கள் நம்மை ஏய்க்கலாமென்கிறதினாலும் நமது தீர்மானம் பொதுப்பட அவிவேகமானதாய் இருக்கிறதுமல்லாமல், பலமுறை பெரிய பாவமுமாயிருக்கும். அன்றியுஞ் சர்வேசுரன் ஒருவரே அவனவனுடைய கருத்துக்களை அறியக்கூடியவரும், அவர் ஒருவரே தீர்மானிக்கவேண்டியவருமாய் இருக்க அவைகளை நாம் தீர்மானித்துக் குற்றஞ் சாட்டத் துணிகிறதினால் மோசம்போகிறோம். கடைசியாய் இப்பேர்க்கொத்த தீர்மானத்துக்குக் காரணம் பொதுப்பட நம்முடைய காய்மகாரமுங் குத்துண்ட சுய

பட்சமுந்தான். ஆனதினால் இயேசுநாதசுவாமி உவமையாய்ச் சொன்னதுபோல புறத்தியார் குற்றத்தைப் பார்க்க நம்மிடத்தில் ஆயிரமடங்கு அதிக பெருங் குற்றங்குறைகள் இருக்கையில் இவைகளையெல்லாம் நாம் பாராமல் மயக்கங் கொண்டவர்களைப்போல புறத்தியார்பேரில் அவமதிப்பான தீர்மானஞ் செய்கிறோம்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—உன்னுடைய நடபடிக்கையில் உன் சகோதரரை நிந்திக்கவும் அவர்கள்பேரில் குற்றம் நினைக்கவும் எண்ணம் வரும்போது இப்போது நீ தியானித்த தேவ வாக்கியங்களை நினைத்துக் கொள். அன்றியும் பிறரிடத்தில் குறையாகவும் அல்லது பெரிய குற்றம் போலவும் உனக்குத் தோன்றுகிற காரியமானது அவனவனுடைய கிரியைகளையுங் கருத்துக்களையுந் தீர்க்கமாய் அறிந்திருக்கிற சர்வேசுரனுடைய சமுகத்தில் சிலவிசை பேறுபலனுள்ள புண்ணியக் கிரியையாய் இருக்கலாமென்று யோசித்துக்கொள்; அல்லது பிறரைப்பற்றி நான் கவலைப்படுவதென்ன, அவர்களுடைய கிரியைகளுக்கல்லவே என்னுடைய கிரியைகளுக்குத்தானே நான் கடைசி நாளில் சுவாமிக்குக் கணக்குக் கொடுக்கவேணுமென்று உனக்குள்ளே சொல்லிக்கொள். இவ்விதம் நீ நடந்துவந்திருப்பாயானால் எவ்வளவோ கால நஷ்டமும் மனக்கலக்கங்களும் பாவங்களும் வராதபடி விலக்கியிருப்பாய்.

மனப்பற்றுதல்.—சர்வேசுரன் சமுகத்தில் உன்னைக் குற்றஞ்சாட்டிப் பொறுத்தல் கேட்பாயாக.

பிரதிக்கினை.—புறத்தியார்மட்டில் உனக்கு உண்டான பல நினைவு விசாரங்களை இன்றைக்கு விசேஷமாய்க் கவனிப்பாயாக.

## 2-ம் பிரிவு

### விசாலமான பாதையைப் பின்செல்லாமலிருக்கிறது

தியானம்.—நெருக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசியுங்கள்; ஏனென்றால் கேட்டுக்குச் செல்லும் வழி



விசாலமும் அதின் வாசல் அகன்றதுமாய் இருக்கிறது, அதில் பிரவேசிக்கிறவர்களும் அநேகர். சீவியத்துக்குச் செல்லும் வாசல் எவ்வளவோ நெருக்கமும் அதின் வழி எவ்வளவோ ஒடுக்கமுமாய் இருக்கிறது. அதைக் கண்டு பிடிக்கிறவர்களும் சொற்பப் பேர் (மத். 7). இயேசுநாதர் சொல்லியிருக்கிற இந்தப் பயங்கரமான வாக்கியங்களுக்கும் அவர் இது வரையில் போதித்துவந்த போதனைகளுக்குந் தொந்தார்த்தம் என்னவென்று கண்டுபிடிப்பது வருத்தமல்ல. இனிவருங் காலத்தில் மனிதர் நமது போதகங்களின் கருத்தை மாற்றி அதற்குப் பதிலாய் உலகத்தின் இளக்காரமான படிப்பினைகளைப் பின்பற்றுவார்களென்றும் நாலு பேரைப்போல நாமும் நடந்தால் போதுமென்று பிதற்றுவார்களென்றுந் திவ்விய கர்த்தர் அறிந்திருந்ததினாலே இப்பேர்க்கொத்த பொய்யான வியாக்கியானங்களுக்கு நாம் காது கொடாதபடி முன்னாடியே கண்டிப்பாய்ச் சொல்லுகிறார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நாம் துறவற அந்தஸ்தைத் தெரிந்துகொண்டதினாலே சீவியத்துக்குக் கூட்டிக்கொண்டுபோகிற நெருக்கமான பாதையிலே பிரவேசிக்கிற பாக்கியம் நமக்கு வாய்த்தது. அப்படியிருக்க இதிலுஞ் சிலர் பாதையை விலாசமாக்கப் பார்த்ததினாலே இப்போது ஐயோ! இரண்டு பாதையாய்ப் பிரிந்திருக்கிறதைக் காண்கிறோம். நவசந்நியாசத்தில் கற்ற படிப்பினைகளையுஞ் சுகிர்த அப்பியாசங்களையும் பிரமாணிக்கமாய்க் காத்துவரும் ஞான வேகமுள்ள சந்நியாசிகள் பாதை ஒன்றும், இயேசுநாதர் போதனையைவிட்டு உலகம் படிப்பிக்கிற போதனையைப் பின்பற்றி மனஞ்சோர்ந்த சந்நியாசிகள் பாதை ஒன்றும், ஆக இரண்டாயிற்று. இவ்விரண்டில் நீ எந்த வழி போகிறாய்?

மனப்பற்றுதல்.—சர்வேசுரன் நமது புத்தியைத் தெளிவிக்கவும் ஆன சமயத்தில் நமது மயக்கத்தைத் தள்ளி நல்ல பாதையில் கொண்டுசேர்க்கவும் அவரை மன்றாடுவோமாக.

பிரதிக்கினை.—தன்னை ஒருபோதும் நம்பாமலிருக்கிறது. நன்னெறி தப்பிக் கெட்டு அலைகிறவன் திரும்ப

அதில் வந்து சேருகிறது அரிதாகையால், நானும் ஒரு வேளை கெட்டுப்போவேனோ வென்றும் புண்ணியத்தின் நேரான பாதையை விட்டு விலகுவேனோவென்றும் எப்போதும் அச்சத்தோடிருக்கிறது.

## 3-ம் பிரிவு

### கள்ளத் தீர்க்கதரிசிகளுக்குக் காது கொடாமலிருக்கிறது

தியானம்.—ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டு உள்ளத்தில் பறிக்கிற ஓநாய்களாய் உங்களிடத்தில் வருகிற கள்ளத் தீர்க்கதரிசிகள் மட்டில் எச்சரிக்கையாயிருங்கள். அவர்களுடைய கனிகளைக்கொண்டு அவர்களை அறிவீர்கள் (மத். 7). முந்தின பிரிவில் விவரிக்கப்பட்ட கற்பனையோடு இந்தப் புத்திமதியும் பொருந்தியிருக்கிறதெப்படியென்றால் பதிதர், கள்ளவேஷம்போட்டுத்திரியும் பொல்லாத கிறீஸ்துவர்கள் முதலானவர்கள்மட்டில் மாத்திரமன்று, புண்ணிய சுறுசுறுப்பற்று அசமந்தமாய் நடக்கிற நமது சகோதரர் மட்டிலும் உஜாராயிருக்க வேண்டுமென்று திவ்விய குருவானவர் காண்பிக்கிறார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நன்றாய்ச் சாகுபடி செய்த நிலத்தில் பயிர் நடுவில் களைகளுந் தோன்றுவதுபோல நல்லவர்கள் சபையிலே விசேஷமாய் அவர்கள் கூட்டம் பெரிதாயிருக்கும்போது ஒழுங்கை மீறி நடக்குஞ் சந்நியாசிகளும் இருக்கலாம். அவர்கள் சாஸ்திரிகளும் நெடுங்காலச் சந்நியாசிகளுமாயிருந்து எவ்வளவுக்குப் பேர்பெற்றிருப்பார்களோ, அவ்வளவுக்கும் அவர்களால் மற்றவர்களுக்குப் பொல்லாப்பு உண்டாகலாம். ஆனால் அவர்கள் கனியைக்கொண்டு அவர்களை அறியலாமென்று ஆண்டவர் அருளிச்செய்ததினாலே இப்பேர்ப்பட்டவர்களுடைய ஒழுங்கீனம், லௌகிக ஒய்யாரம், பேச்சு, நடை, முறுமுறுப்பு, எதிலுங் கோணல் கோளாறு பார்த்தல், இவை முதலியவைகளைக் கொண்டு அவர்கள் இன்னாரென்று பகுத்து அறியலாம். இப்படிப்பட்டவர்கள் மட்டில் பரிதாபப்பட்டு இவர்கள் மனந்திரும்பும்படி மன்றாடு;



இவர்களோடு அதிகமாய்ப் பழகாதே; பத்தி சுறுசுறுப்பாய் ஒழுங்கை அநுசரிக்கிறவர்களோடு மாத்திரம் நீ அதிக பழக்கமாயிருக்கவேணும். இவ்வண்ணம் காரியங்களைப் பகுத்தறிந்து அதற்கேற்றபடி நடந்தாயோ?

சம்பாஷணை.—உன் காவலான சம்மனசானவரோடு சம்பாஷணை செய்துகொள்.

---

## 21-ம் தேதி

### குஷ்டரோகி ஒருவன் ஆண்டவரிடத்தில் மன்றாடி ஆரோக்கியம் அடைந்ததின்பேரில்

ஆயத்தச் சிந்தனை.—குஷ்டரோகி இயேசுநாதர் சுவாமி முன்பாக முழந்தாளிலிருந்து ஆண்டவரே உமக்குச் சித்தமானால் என்னைச் சொஸ்தப்படுத்த உம்மால் ஆகுமென்று விண்ணப்பஞ் செய்கிறதாக ரூபிகரித்துக்கொள். (மத். 8.)

தியானச் சேபம்.—அவன் விண்ணப்பத்தோடு கூடிய உணர்ச்சிகள் உன்னிடத்திலும் உண்டாகவேணுமென்று கேட்பாயாக.

## முதல் பிரிவு

### குஷ்டரோகியின் மன்றாட்டு

தியானம்.—திவ்விய இரட்சகர் தாம் உலகத்துக்குப் பிரசித்தமாக்கின உச்சிதமும் பாரசிந்தையுள்ளதுமான போதகத்தைத் தமது புதுமைகளைக்கொண்டு ஸ்திரப்படுத்தச் சித்தமானார். அவைகளில் முந்தினது ஒரு குஷ்டரோகியைக் குணப்படுத்தினதாம். அவன் இயேசுநாதரைத் தூரத்தில் கண்டபோதே அவனிடத்தில் வெகு நம்பிக்கை உண்டாயிற்று. எல்லாருந் தன்னை அருவருப்பாய்த் தள்ளுகிறதுபோல இவருந் தள்ளுவாரென்று கூசாமல், சுவிசேஷத்தில் சொல்லியிருக்கிறதுபோல இயேசு

நாதர் அண்டையில் நேரே போய் முழந்தாளிட்டு நமஸ்கரித்து அவரை நோக்கி ஆண்டவரே உமக்குச் சித்தமானால் என்னைச் சொஸ்தப்படுத்த உம்மால் ஆகுமே என்று விண்ணப்பஞ்செய்தான். (மத். 8, மாற். 1.)

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—நாம் இதில் ஞானப்பலன் அடையத்தக்கதாகத் தேவ வரப்பிரசாதத்தினால் தெளிவடைந்த இந்தக் குஷ்டரோகி செய்த மன்றாட்டின் இலட்சணங்களை ஆழ்ந்து யோசித்துப் பார்ப்போமாக. முதலாவது, இந்த மன்றாட்டு தாழ்ச்சி சங்கை பொருந்தினதாயிருந்தது. இதினாலன்றோ அவன் இயேசுநாதர் முன்பாக முழந்தாளிட்டு அவரைச் சர்வேசுரனுடைய குமாரனென்றும் அவரால் அனுப்பப்பட்டவரென்றும் நமஸ்கரித்தான். 2-வது, இயேசுநாதருடைய வல்லமையின்பேரில் இவனுக்கு உயிருள்ள விசுவாசமிருந்தது. இதினாலே குஷ்டரோகத்தினின்று தன்னைச் சொஸ்தப்படுத்த அவர் சித்தமே போதுமென்று கெட்டியாய் நம்பியிருந்தான். 3-வது, இவனுடைய விண்ணப்பந் தேவ சித்தத்துக்கு முழுதும் அமைந்து இயேசுநாதருடைய தயவின்பேரில் பூரண நம்பிக்கையுள்ளதாயிருந்தது. ஆகையால், அவரை நோக்கி ஆண்டவரே உமக்குச் சித்தமானால் என்னைச் சொஸ்தமாக்க உம்மால் ஆகுமென்றான். நாம் செய்கிற செபங்களெல்லாம் இப்பேர்ப்பட்ட உணர்ச்சிகளோடு கூடியிருந்தால் அவைகள் ஒருபோதும் பலனற்றுப்போகமாட்டா.

**மனப்பற்றுதல்.**—இந்தக் குஷ்டரோகியினிடத்தில் இருந்த தாழ்ச்சி நம்பிக்கையோடு நீயும் இயேசுநாதரை நோக்கி: ஆண்டவரே தேவரீருக்குச் சித்தமுண்டானால் பாவமாகிற குஷ்டரோகத்தினின்று என்னாத்துமத்தைச் சுத்தப்படுத்தி ஞானஸ்நானம் பெற்றபோது அதினிடத்திலிருந்த ஞான சவுந்தரியத்தைத் திரும்பக்கொடுக்க உம்மால் ஆகுமே என்று சொல்வாயாக.

**பிரதிக்கினை.**—சர்வேசுரனுடைய சமுகத்தில் என்னாத்துமம் மகா தூய்மையாயிருக்கவும் அதைப் புண்ணிய பேறுபலன்களால் அலங்கரிக்கவும் எத்தனிப்பேன்.



## 2-ம் பிரிவு

### குஷ்டரோகி சொஸ்தமடைந்தது

**தியானம்.**—நமது திவ்விய மாதிரிகையும் இரட்சகருமாயிருக்கிற இயேசுநாதர்மேல் நமது கவனமெல்லாஞ் செலுத்துவோமாக. அவர் குஷ்டரோகியை அன்பாய் ஏற்றுக்கொண்டு அவன் மன்றாட்டுக்கு எப்படி செவிசாய்க்கிறாரென்று பார். இயேசுநாதர் ஜனக்கூட்டத்தின் நெருக்கிடையையும் குஷ்டரோகியைப் பார்க்கிறதிலுள்ள அரோசிகத்தையுஞ் சகித்துக்கொண்டு எரிச்சல் வெறுப்பு ஒன்றும் எள்ளளவேனுங் காட்டாமல் அவனுக்கு மிஞ்சின கருணையோடு முகங்கொடுத்து அவனுடைய விண்ணப்பத்தைக் கேட்கிறார். கடைசியாய் அவன் மன்றாட்டுக்கு இரங்கி ஒரு புதுமையுஞ் செய்கிறார். எப்படியெனில் அர்ச். மாற்குஸ் சொல்லியிருக்கிறதுபோல இயேசுநாதர் அவன்மேல் மனமிரங்கித் தமது கையை நீட்டி அவனைத் தொட்டு அவனுக்குச் சொன்னதாவது: நமக்குச் சித்தமுண்டு, நீ சொஸ்தமாயிரு என்று சொன்னார். சொல்லவே, அவன் குஷ்டரோகம் நீங்கிப்போயிற்று (மாற். 1 அதி).

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—உன் திவ்விய மாதிரிகையான இயேசுநாதருடைய நடக்கையோடு உன் நடக்கையை ஒப்பிட்டுப்பார்த்து உன்னைத் தானே நீ கேட்கவேண்டியதேதென்றால் என் சகோதரராவது யாதாமொரு நிர்ப்பாக்கியனாவது இரண்டுங்கெட்ட வேளையில் என்னிடத்தில் யாதொரு சகாயங் கேட்கும்போது விசேஷமாய் பார்வைக்கு அவன் அந்தக்கேடாயிருந்தால் அவனுக்கு எப்படி முகங்கொடுத்துப் பேசுகிறேன்? எரிச்சல் வெடுவெடுப்போடே அவன் உள்ளத்தை முட்போல குத்தும்படி கடுகடுத்துப்பேசி, பின்னாலே வாவென்று அனுப்பிவிடுகிறதில்லையோ? இவ்விதமாயின், என் திவ்விய மாதிரிகையான இயேசுநாதரை என்னால் கூடியவரையில் உத்தம பிரகாரமாய்க் கண்டுபாவிப்பேனென்று நான் தீர்மானித்திருந்தாலும் இன்னும் நான் அவருடைய சாயலாகவில்லையென்று விளங்குகிறது.

**மனப்பற்றுதல்.**—இதைக்கண்டு நாணிக் கஸ்திப் பட்டு, செய்த குற்றத்தைப் பரிகரிக்க ஆசைப்படு.

**பிரதிக்கினை.**—எந்தெந்தவேலை ஜோலியிலுஞ் சந்நியாசிக்கு யோக்கியமான அமைதி, சாந்தம், அன்பு உன்னிடம் விளங்கும்படி வெகு பிரயாசப்படு.

## 3-ம் பிரிவு

### குஷ்டரோகி காண்பித்த நன்றியறிதல்

**தியானம்.**—திடீரென்றாற்போல ஆரோக்கியமடைந்த குஷ்டரோகி காண்பித்த மனக்களிப்பும் நன்றியறிதலும் எப்பேர்க்கொத்ததென்று அவரவரே நிதானித்துக்கொள்ளலாம். ஆகிலும் இந்தப் புதுமையைக் கண்டவர்கள் முன்பாக அவன் தன் நன்றியறிதலைக் காண்பிக்கக் கர்த்தர் இடங்கொடாமல் அவனுக்குக் கற்பித்ததாவது: நீ இதை எவனுக்குஞ் சொல்லாதபடி எச்சரிக்கையாயிரு. ஆயினும் நீ போய்ப் பிரதான ஆசாரியருக்குஉன்னைக் காண்பித்து நீ சுத்தமானதினிமித்தம் மோயீசன் கட்டளையிட்ட காணிக்கைகளை அவர்களுக்கு அத்தாட்சியாகச் செலுத்தென்று தீவிரமாய் அவனை அனுப்பிவிட்டார். இவ்விதமாக அந்த ஆசாரியர் தங்கள் அவிசுவாசத்துக்கு ஒரு போக்குஞ் சொல்லாதபடி நடந்துகொண்டார். குஷ்டரோகியோவென்றால் உள்ளத்தில் எழும்பின அக்களிப்பை அடக்கமாட்டாமல் ஆண்டவர் தாழ்ச்சியினால் அவனுக்கு இட்ட கட்டளையை மறந்துவிட்டு நடந்த புதுமையை அவன் வெகுவாய்ப் பிரசித்தப்படுத்தவே, இச்செய்தி எங்கும் பரம்பினது. (மத். 8, மாற். 1)

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—நாம் துவக்கின காரியம் பலிக்குமானால் சர்வேசுரனுக்கு மாத்திரம் மகிமை உண்டாகும்படி மனிதருடைய புகழ்ச்சி கொண்டாட்டங்களைத் தேடாமல் அவைகளை விலக்கக் கற்றுக்கொள்வோமாக. இதற்கு முழுதும் விரோதமாய் நடக்கிறதில்லையா? சர்வேசுரன்பேரில் வெகு நன்றியறிந்தவர்களாயிருக்கவும் நம்மால் ஆனமட்டும் எல்லாரும் இயேசுநாதரை அறிந்து சிநேகிக்கும்படி செய்யவும் இந்தக் குஷ்டரோகியினிடத்தில் கற்றுக்கொள்ளவேண்டும்.



**சம்பாஷணை.**—நமது ஆத்தும பண்டிதராகிய இயேசுநாதரோடு சம்பாஷணை செய்யவும்.

---

## 22-ம் தேதி

### கப்பர்நாவும் ஊரின் சேர்வைக்காரன் தன் ஊழியனைச் சொஸ்தமாக்க இயேசுநாதரை மன்றாடினதின்பேரில்

**ஆயத்தச் சிந்தனை.**—நமது இரட்சகர் மகா அன்போடு சேர்வைக்காரனை ஏற்றுக்கொள்ளுகிறதைப் பார்க்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

**தியானச் செபம்.**—இயேசுநாதரை அறியவுஞ் சிநேகிக்கவும் வேண்டிய வரப்பிரசாதத்தைக் கேள்.

## முதல் பிரிவு

### சேர்வைக்காரன் காண்பித்த சிநேகமும் நம்பிக்கையும்

**தியானம்.**—கப்பர்நாவும் ஊரின் கோட்டை வாசலிலே குஷ்டரோகி அற்புதமாய்ச் சொஸ்தமடைந்த சங்கதி அந்தப் பட்டணத்தில் ஒரு சின்னக் காவல் சேனைக்குத் தலைமையாயிருந்த ரோமைச் சேர்வைக்காரன் உள்ளத்தில் ஓர் கதிர்போல வீசினது. இவன் அஞ்ஞானியாயிருந்தாலும் படைக்கப்பட்ட வஸ்துக்களுக்கெல்லாம் இயேசுநாதர் எஜமானாய் இருக்கி[illegible]துகொண்டான். இயேசுநாதரைக் குறித்து [illegible]சுகிறதைக் கேட்டுத் தனக்குப் [illegible]யிருந்த ஒரு [illegible]யன் மரண அவஸ்தையாயிருந்த[illegible] அவனைச் சொஸ்தமாக்க வேணுமென்று அவரை ம[illegible]ச் சில் யூத மூப்பரை[illegible]வ

76864

ரிடத்தில் அனுப்பினான். இவர்கள் அவரிடத்தில் வந்து இவன் நம்முடைய சனத்தைச் சிநேகிக்கிறதுமல்லாமல் எங்களுக்கு ஒரு செபக்கூடத்தையுங் கட்டிவைத்திருக்கிறதினாலே இவன் விண்ணப்பத்திற்கு இரங்குமென்று கெஞ்சி மன்றாடினார்கள் (லூக். 7).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—அஞ்ஞானியான இவன் இரக்கப்படுகிறது தன் பந்து சனத்தின்பேரிலுந் தனது உபகாரிகள்பேரிலுந் தன் பிராண சிநேகிதன்பேரிலுமல்லவே. ஒரு ஊழியன்பேரில்லலோ இப்படி இரக்கம் வைத்தானென்று நீ ஆச்சரியப்படுவது நியாயந்தானே. இந்த சிநேகம் செய்கையோடுகூடிய தாராள சிநேகம். இவன் பணச் செலவுசெய்து பல மருந்துகளை உபயோகித்தும் பிரயோசனமில்லையென்று கண்டாலுந் தன் சனத்தாராகிய அஞ்ஞானிகள் கேலி பண்ணுவார்களென்று பாராமல் தனக்கு வாய்த்த முதற் சந்தர்ப்பத்திலேயே தயவுள்ள இயேசுநாதரை அண்டிப் போகிறான். மேலும் இவனிடத்தில் விளங்கின சிநேகஞ் சுயநலம் பாராமல் சகலரையும் நோக்குஞ் சிநேகமாயிருந்தது. அதெப்படியென்றால் இவன் யூதருடைய சீமையைப் பிடித்து ஆண்டுகொண்டிருந்த ரோமானருடைய சேர்வைக்காரனாய் இருந்ததினாலே யூதர்கள் இவனைப் பகைத்திருந்தாலுந் தன் சொந்தச் செலவில் அவர்களுக்கு ஒரு செப ஆலயங் கட்டிவைத்தான். ஒரு ஊழியக்காரன் மட்டிலும் தனக்கு அந்நியரும் எதிரிகளுமானவர்கள் மட்டிலும் அஞ்ஞானியான இவன் இப்படிச் சிநேகங் காண்பித்திருக்கும்போது இயேசுநாதரிடத்தில் நமக்குச் சகோதராயிருக்கிறவர்கள்மட்டில் நமது சிநேகம் எப்பேர்ப்பட்டதாயிருக்கவேணும்? இவனுடைய சிநேகத்தைப் பார்க்க நம்முடைய சிநேகஞ் செயலிலும், தாராளத்திலும், தன்னயம் பாராமையிலும் குறைவுள்ளதானால் நாம் முகங்கூசவேண்டியதில்லையோ? இப்படியுஞ் சில சமயம் நாம் நடக்கவில்லையோவென்று கவனமாய் ஆராய்ந்து பார்ப்போமாக.

மனப்பற்றுதல். — நம்மைப் பரித்தியாகம்பண்ணி பிறரைச் சிநேகிக்கிற வரத்தைக் கேட்போமாக.



பிரதிக்கினை.—நம்முடைய சகோதரர்மட்டில் மாத்திரமல்ல நமக்குக் கீழ்ப்பட்டவர்களிடத்திலுஞ் சாந்தம் உபசாரம் பிறசிநேகம் உள்ளவர்களாய் இருப்போமாக.

## 2-ம் பிரிவு

### சேர்வைக்காரன் காண்பித்த தாழ்ச்சியும் விசுவாசமும்

தியானம்.—இயேசுநாதர் இவன் வீட்டுக்குச் சமீபமாய் வரும்போது இவன் அவருக்குச் சங்கையாக எதிர்கொண்டுபோய் அவரைப் பார்த்து: ஆண்டவரே என் வீட்டில் ஒரு ஊழியன் திமிர்வாதமாய் வெகு வேதனைப்படுகிறானென்று சொல்ல, அதற்கு இயேசுநாதர் நான் வந்து அவனைச் சொஸ்தமாக்குவேனென்றார். அப்போது சேர்வைக்காரன் பிரத்தியுத்தாரமாக, ஆண்டவரே, நீர் என் வீட்டுக்குள் பிரவேசிக்க நான் பேறுபெற்றவனல்ல. நீர் ஒரு வார்த்தை மாத்திரந் திருவுளம்பற்றினால் என் ஊழியன் சொஸ்தமடைவான். ஏனென்றால் நானும் ஒரு அதிகாரத்துக்கு உட்பட்டவனாய் இருந்தாலும் எனக்குக் கீழ்ப்பட்டிருக்கிற போர்ச் சேவகருமுண்டு. நான் ஒருவனை நோக்கிப் போவென்றால் போகிறான். வேறொருவனைப் பார்த்து வாவென்றால் வருகிறான். என் ஊழியனை நோக்கி இதைச் செய்யென்றால் செய்கிறான் என்றான். (மத். 8, லூக். 7). இதற்கு அர்த்தமென்னவென்றால் சொற்ப அதிகாரமுள்ள என் வார்த்தைகளை எனக்குக் கீழ்ப்பட்டவர்கள் கேட்கும்போது, சர்வ லோகத்துக்கும் அதிபதியாயிருக்கிற தேவரீர் அந்த வியாதி விலகிப் போகட்டுமென்று சொன்னால் அது உமக்குக் கீழ்ப்படியாதோ? என் ஊழியனுஞ் சொஸ்தமாகமாட்டானோவென்று விண்ணப்பம் செய்ததுபோலேயாகும்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—சுவிசேஷத்தில் எழுதப்பட்டிருக்கிற இந்த வரலாற்றை வாசிக்கக் கேட்குமிடத்தில் தேவ வரப்பிரசாதத்தினால் ஏவப்பட்டு ஞானத் தெளிவடைந்த இந்தச் சேர்வைக்காரன் பேரில் ஆச்சரியப்படாதவர்களில்லை. அவனுடைய

தாழ்ச்சி எவ்வளவோ சூது மாயமற்றது! அவனுடைய
விசுவாசம் எவ்வளவோ உறுதியானது! மேலும் இயேசு
நாதருடைய தயவின்பேரில் இவன் வைத்திருக்கிற நம்
பிக்கை எவ்வளவென்று பார். இவன் தன் சமாச்சாரத்
தைச்சொல்லி விண்ணப்பஞ் செய்தாலே போதுமென்றிருக்
கிறான். இரட்சகருடைய வல்லமையின்பேரிலுந் தயவின்
பேரிலும் இவன் வைத்த நம்பிக்கையினால் தான் கேட்டது
பலிக்காதென்று சந்தேகப்படவேயில்லை. நாம் செபஞ்
செய்யும்போது இப்பேர்க்கொத்த விசுவாசமும் நம்பிக்கை
யும் நம்மிடத்தில் எப்போதும் இல்லாமல் போவதென்ன?
இதற்கு நாம் அபாத்திரவான்களென்று நினைக்கிறதி
னாலேயோ? ஆனால் அந்தச் சேர்வைக்காரனிடத்திலும்
இந்த நினைவு மற்றவர்களைவிடப் பூரணமாயிருந்த
தில்லையோ? மெய்யாகவே நம்முடைய திவ்விய இரட்சக
ருடைய வல்லமையையுந் தயவையும் நாம் நன்றாய் அறி
யாதது ஒன்றே இதற்குக் காரணம்.

**மனப்பற்றுதல்.**—திவ்விய இரட்சகருடைய வல்ல
மையையுந் தயாளத்தையும் நன்றாயறிந்து நம்பிக்கையோடு
அவரை அண்டிப்போகும்படி வேண்டிய வரப்பிரசாதத்தை
மிகவும் இரந்து ஓயாமல் கேட்போமாக.

**பிரதிக்கினை.**—தேவநற்கருணை வாங்க ஆயத்தஞ்செய்
யும்போது களைத்து மயங்குகிற என்னிருதயத்தில் எழுந்
தருளிவரப்போகிறவர் ஆரென்றும், ஏன் எழுந்தருளி வரு
கிறார் என்றும், நீ உன்னைத்தானே வினாவிக்கொள்ளும்
போது, இயேசுநாதசுவாமி நாமே உன்னைச் சொஸ்தமாக்க
வருகிறோம் என்று சொல்லுகிறதைக் கேட்கிறதாக எண்
ணிக்கொள்.

## 3-ம் பிரிவு

### இந்தச் சேர்வைக்காரனுக்கு அளிக்கப்பட்ட சம்பாவனை

**தியானம்.**—இப்படிச் சேர்வைக்காரன் வெகு குண
இயல்பாய்ச் சொன்ன வார்த்தைகளையும் அவைகளோடு
கூடிய மேலான உணர்ச்சிகளையும் இயேசுநாதசுவாமி இன்



பமாய்க் கேட்டு ஆச்சரியப்பட்டுத் தம்மைப் பின்சென்று
வந்தவர்களை நோக்கித் திருவுளம்பற்றினதாவது: நான்
இஸ்ராயேல் சனங்களிடத்தில் இவ்வளவு பெரிதான விசுவா
சத்தைக் கண்டதேயில்லை என்று நிச்சயமாய் உங்களுக்குச்
சொல்லுகிறேன் என்றார். பின்னுஞ் சேர்வைக்காரனை
நோக்கி நீ போகலாம். நீ விசுவசித்தபடியே உனக்கு
ஆகக்கடவதென்றார். அந்நேரமே அவனுடைய ஊழியன்
சௌக்கியமடைந்தான் (லூக். 7, மத். 8). ஆதலால் சேர்
வைக்காரனுக்குக் கிடைத்த சம்பாவனை ஏதென்றால் அவ
னுடைய ஊழியன் உடனே முழுதும் ஆரோக்கியமடைந்த
தும் மனுஷாவதாரம் எடுத்த திவ்விய வார்த்தையானவர்
அவனைக் குறித்துச் சொன்ன புகழ்ச்சி உலகமெங்கும் மங்
கா்த பிரபல்லியமானதுமாமே. இவன் தாழ்ச்சியோடும்
நம்பிக்கையோடுஞ் சொன்ன அந்த வார்த்தைகளை நாளது
வரையில் தேவநற்கருணை வாங்குஞ் சமயத்திலே குருக்க
ளும் விசுவாசிகளுஞ் சொல்லத் திருச்சபையில் வழக்கமா
யிருக்கிறது.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—சர்வே
சுரன் தமது ஊழியருக்குக் காண்பிக்கிற தயாள இரக்கத்
தைப்பற்றி அவரை வாழ்த்தி ஸ்துதிப்போமாக. நாம் எல்
லாரும் இதற்கு உயிருள்ள அத்தாட்சியாயிருக்கிறோமே.
அவர் செய்த இவ்வளவு நன்மை சகாயத்துக்காக நம்மை
முழுதும் இடைவிடாத பலியாக அவருக்கு ஒப்புக்கொடுப்
போமாக.

**சம்பாஷணை.**—இன்றையத் திருநாளுக்குடைய
அர்ச். மரியமதலேனம்மாளுக்கு இயேசுநாதர் வெகு இரக்
கத்தைக் காண்பித்ததினாலே அவளோடு சம்பாஷணை செய்
கிறது வெகு பிரயோசனமாயிருக்கும்.

# 23-ம் தேதி

## விசுவாசத்தின்பேரில்

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதர் சேர்வைக்காரனை நோக்கி நீ விசுவசித்தபடியே உனக்கு ஆகக்கடவதென்று சொல்லுகிறதைக் கேட்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

தியானச் சேபம்—இந்தத் தியானத்தின் பலனாகத் தர்மக்கிரியைகளை விளைவிக்கும் உயிருள்ள விசுவாசத்தைக் கேட்பாயாக.

### முதல் பிரிவு

#### விசுவாசத்தினுடைய தன்மையும் அதின் அவசரமும்

தியானம்.—புண்ணிய வரிசையில் எல்லாத்துக்கும் முந்தினதும் அஸ்திவாரமானதும் விசுவாசமாமே. இதினாலல்லோ ஞானத்தெளிவடைந்து சர்வேசுரனையும் அவருடைய அளவில்லாத திவ்விய இலட்சணங்களையுந் திருவுளஇஷ்டத்தையும் இம்மையிலும் மறுமையிலும் நமக்கு அவர் நியமித்திருப்பதையும் அறிகிறோம். விசுவாசமின்றிச் சர்வேசுரனுக்குப் பிரியப்படக்கூடாதென்று அர்ச். சின்னப்பர் (எபிரே. 11) வசனித்திருக்கிறார். சுபாவத்துக்கு மேற்பட்டதும் சர்வேசுரனுடைய சமுகத்தில் பேறுபலனுள்ளதுமான யாதொரு புண்ணிய முயற்சியும் விசுவாசமில்லாமல் செய்யக்கூடாது ஆகையால் நாம் கூடின சீக்கிரத்தில் நற்கிரியைகள் செய்யும்பொருட்டு ஞானஸ்நானத்தின் வழியாய் நாம் பிறக்கும்போதுதானே நமக்கு விசுவாசம் கொடுக்கப்படுகிறது. ஆனால் இன்னம் அர்ச். சின்னப்பரே (எபே. 2) சொல்லியிருக்கிறதுபோல நம்முடைய சொந்தப் பலனும் உதவியுமில்லாமல் நமக்கு இது இலவசமாய்க் கொடுக்கப்படுகிறது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—சகல புண்ணியங்களுக்கும் விசுவாசம் அஸ்திவாரமாய் இருக்கிறதினாலே இது எவ்வளவுக்குப் பெரிதாகவும் உயிருள்ளதாகவும் இருக்குமோ அவ்வளவுக்கு நாம் செய்கிற புண்ணியங்



களும் உத்தமமானவைகளாயிருக்கும். இந்தப் புண்ணியம் நம்மிடத்திலே வளரும்படி நம்மால் இயன்றதெல்லாம் செய்வோமாக. இதை நம்மாலேதானே நாம் வருவித்துக் கொள்ளக் கூடாதேபோனாலும், வந்தபின் நம்மிடத்தில் வளரச்செய்யலாம். அதெப்படியென்றால் ஆண்டவரே, எங்கள் விசுவாசத்தை அதிகரிக்கப்பண்ணுமென்று அப்போஸ்தலரைப்போல் செபிப்பதினாலே பெருகச்செய்யலாம். பின்னும் இந்தப் புண்ணிய அப்பியாசம் உண்டாகும்படி அடிக்கடி விசுவாச முயற்சி செய்து நம்முடைய சகல கிரியைகளிலும் விசுவாசத்தின் சாரம் ஏறும்படி செய்யக்கடவோம். அப்போது நீதிமான் விசுவாசத்தினாலே சீவிக்கிறானென்று வேதாகமத்தில் எழுதியிருக்கிறபடி நம்முடைய சீவியமும் விசுவாச சீவியமாயிருக்கும். தேவ சந்நிதியிலே இருக்கிறோமென்கிற நினைவு நமக்குப் பழக்கமாயிருக்கவும் பிரயாசப்படக்கடவோம். இந்த நினைவு மனது புத்தியிலே நன்றாய்ப் பதிந்தால் பாவத்தில் விழமாட்டோம்; நன்றாய்ச் செபம் பண்ணுவோம். நமக்கு எல்லாங் கைகூடி வரும்போது தாழ்ச்சியும் அடக்க ஒடுக்கமுமுள்ளவர்களாய் இருப்போம். சோதனை வேளையிலும் நமக்கு வரும் இடையூறுகளிலும் உறுதியுந் தைரியமுமுள்ளவர்களாயிருப்போம். சொற்பக்காரியங்களை முதலாய் விடாமல் சகலத்தையும் மகா கவனத்தோடுஞ் சுத்தகருத்தோடும் மிகுந்த சிநேகத்தோடுஞ் செய்வோம். கடைசியாய் சகல புண்ணியங்களாலும் விளங்கி அர்ச்சியசிஷ்டவர்களாய்ச் சீவிப்போம்,

மனப்பற்றுதல்.—சர்வேசுரன் உன்னிடத்தில் விசுவாசத்தை அதிகரிப்பிக்கவும் விசேஷமாய் எங்கும் அவர் வியாபித்திருக்கிறாரென்கிற நினைவு உன் இருதயத்தில் நன்றாய்ப் பதியச்செய்யவும் அப்போஸ்தலர்களைப்போல அவரை மன்றாடு.

பிரதிக்கினை.—சர்வேசுரன் எங்கும் வியாபித்திருக்கிறார் என்கிற நினைவு முக்கியமும் பிரயோசனமுமானதினால் அது உனக்குப் பழக்கமாகும்படி தனி ஆத்தும சோதனை செய்து வரக்கடவாய்.

## 2-ம் பிரிவு

### விசுவாசத்தின் மேன்மையும் அதினால் வரும் நன்மையும்

தியானம்.—விசுவாசமானது பூமண்டலத்துக்கும் பரமண்டலத்துக்கும் மேலாய் நம்முடைய பஞ்சேந்திரியங்களுக்கும் புத்தி தீக்ஷணைக்குமே எட்டாத கொடுமுடிமட்டும் நம்மை உயர்த்துகிறது. அதுவே கண்ணுக்கெட்டாத துலைக்கும் இன்னந் தெய்வத்தின் அளவற்ற பூரணங்களின் உச்சிவரைக்கும் நம்மை ஏற்றுகிறது. நாம் இனி சேரவேண்டிய நமது சொந்த தேசமாகிற மோக்ஷத்தின் ஆனந்த பாக்கியத்தையுஞ் சோதிப் பிரகாசத்தையும் நமக்குத் திறந்து காட்டுகிறது. நமது மனம் நினைக்கிறதும் உணருகிறதும் நாடுகிறதுமாகிய எல்லாவற்றிலும் விசுவாசத்தினாலே நாம் பெரியோராய், உயர்குலத்தோராய், அதி உச்சிதராய் ஆகிறோம். இதினாலல்லோ அநித்தியமானதெல்லாம் பிறக்கணித்து மோக்ஷ திரவிய சம்பத்துக்களைச் சேர்த்துக் குவிக்கவேணுமென்கிற பேராவல் அல்லாமல் வேறு ஆவல் நமக்கில்லை. விசுவாசத்தைக்கொண்டு நமக்கும் நமது நிலையற்ற துர்ப்பலத்துக்கும் மேற்பட்டவர்களாகி எவராலும் வெல்லப்படாத வலுவு அடைந்து பசாசுகளுக்கு முதலாய் பயங்கரமுள்ளவர்கள் ஆகிறோம். அர்ச். சின்னப்பர் சொல்லுகிறதுபோல பூர்வீக கிறீஸ்துவர்களும் இலட்சாதிலட்சம் வேதசாட்சிகளும் நயம், பயம், சிறை, பிரதேச துன்பம், தேகவாதனை முதலிய ஆக்கினைகளையும், நிஷ்டூர மரணத்தையுமுதலாய் எப்படி விசுவாசத்தினால் வென்றார்களோ, அப்படியே நாமும் வெல்லுவோம். நாம் வாடிக்கையாய்ச் செய்துவரும் அற்ப சொற்ப கிரியைகளெல்லாம் விசுவாசத்தினால் தேவசமுகத்தில் பெரிதும் பலனுள்ளதுமாகின்றன.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இந்த யோசனைகளினிமித்தம், கிரியையினாலும் பரிசுத்த நடக்கையினாலும் வெளியரங்கமாகிற உயிருள்ள விசுவாசத்திலே நீ சிறந்து விளங்கவேணுமென்று உன்னிருதயத்தில் ஆத்திரம் எழும்புகிறதற்குச் சந்தேகமில்லை. உன்னுடைய கிரியை



கள் உன்னுடைய விசுவாசத்துக்கு எவ்வளவு பொருந்தியிருக்
குமோ, அவ்வளவுதான் உன்னுடைய விசுவாசத்தின் மதிப்
பும் அளவும் என்று தீர்மானித்துக்கொள். ஏனெனில் நீங்
கள் மெய்யாகவே விசுவாசத்தில் ஊன்றியிருக்கிறீர்களோ
வென்று சோதித்துப்பாருங்களென்று அர்ச். சின்னப்பர்
சொல்லுகிறார். (2 கொரி. 13.) அப்படியே அழியாத உன்
னாத்துமத்தின் கவலையானது உன் சரீரத்தைப் பேணிப்
பார்க்கவேணுமென்கிற கவலையைவிட அளவற்றமடங்கு
பெரிதானதென்று நீ விசுவசிக்கிறாயே. ஆனால் இதற்கு உன்
நடக்கைமுழுதும் எதிர்மாறாயில்லையோ? சர்வேசுரன் உன்
னைக் காண்கிறாரென்றும், நீ செய்கிறதெல்லாம் உற்றுப்பார்க்
கிறாரென்றும், உன் உள்ளாந்தரங்கத்தில் இருக்கிறதெல்
லாம் அறிகிறாரென்றும் நீ நம்புகிறாயே. அப்படியானால்
நீ தனித்திருக்கும்போது உன் குறைகளை ஒருவருங் கவனி
யாததுபோல, வேணுமென்று அசட்டையாயிருக்கிறதும்,
வீண் சலாக்கியத்தோடுகூடிய மனோர்ச்சியம் பண்ணு
கிறதுமென்ன? இந்திரியங்களை வசப்படுத்துகிறதினால்
உண்டாகுஞ் செபத்தியானப் பற்றுதல் இல்லாதேபோனால்
நீ பேருக்கும் பார்வைக்கும் மாத்திரந்தான் சந்நியாசியா
யிருப்பாயென்று உனக்குத் தெரிகிறதே. தெரிந்தும்
அஜாக்கிரதையாய்த் தியான ஆயத்தம் பண்ணுகிறாய். உன்
இந்திரியங்களை உனக்கு வசமாக்கிக்கொள்ளவும் அவ்வளவு
எத்தனிக்கிறதில்லை. இவைகளைப்பற்றி உன்னைப் பரிசோ
தித்து இனிமேல் நீ செய்யவேண்டியது ஏதென்று இன்
றைக்கே, இப்பொழுதே தீர்மானித்துக்கொள்.

சம்பாஷணை.—இயேசுநாதர் சமுகத்தில் நீ குற்ற
வாளியென்று உன்னைத் தாழ்த்தி மன்னிப்புக் கேட்பாயாக.
பின்னும் உன் பிரதிக்கினைகளை அவருக்கு ஒப்புக்கொடுத்து
அவைகளைப் பிரமாணிக்கமாய் அனுசரிக்கவேண்டிய
தேவானுக்கிரகத்தை இரந்து கேள்.

# 24-ம் தேதி

## நாயீமென்னும் நகரத்து விதவையினுடைய மகனை இயேசுநாதர் உயிர்ப்பித்ததின்பேரில்

ஆயத்தச் சிந்தனை.—மரித்த அந்த ஏக பிள்ளையை எடுத்து அடக்கஞ்செய்யக் கொண்டுபோகும்போது தாய் அழுது பிரலாபித்துப் பின்சென்றுபோகிறதாகவும் இயேசுநாதர் அவனை உயிர்ப்பித்துத் தாயிடத்தில் கொடுக்கிறதாகவும் ரூபிகரித்துக்கொள்.

தியானச் சேபம்.—இந்த நல்ல ஆண்டவருடைய அளவில்லாத வல்லமை தயையின்பேரில் உனக்கு மட்டற்ற நம்பிக்கை உண்டாகும்படி கேள்.

### முதல் பிரிவு

#### இயேசுநாதர்சுவாமி அந்தப் பாடைக்கு எதிர்ப்படுகிறார்

தியானம்.—குஷ்டரோகிக்குஞ் சேர்வைக்காரனுக்குஞ் சுகமாகச் செய்த புதுமைகள் வெகு பிரபலியமாயினும், மரித்த ஒருவனைச் சிறந்த சந்தர்ப்பத்திலே உயிர்ப்பித்தது அதிலும் பேர்போனதாகும். அர்ச். லூக்காஸ் 7-ம் அதிகாரத்தில் இந்தப் புதுமையைக்குறித்து எழுதிவைத்திருக்கிறதாவது: இயேசுநாதர் தமது சீஷர்களாலுந் திரளான ஜனக்கூட்டத்தாலுஞ் சூழப்பட்டுக் கப்பர்நாவூம் ஊரிலிருந்து நாயீம் என்னும் நகரத்துக்குச் சமீபித்தபோது, இதோ! மரித்த ஒருவனைக் கல்லறைக்குக் கொண்டுபோனார்கள். அவன் விதவையான தாய்க்கு ஒரே மகன்; அப்பட்டணத்தாரில் அநேகரும் அவளோடு போனார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—சித்திரப்படம்போல் நமது கண்ணுக்குமுன் காட்டப்படுகிற இந்த வரலாறு நமது மனதை உருத்தி நமக்குப் புத்தி கற்பிக்கிறது. இந்த உலக செல்வங்கள்தான் தங்களுடைய பாக்கியமும் நம்பிக்கையும் என்றிருக்கிறவர்கள் எவ்வளவோ ஏமாந்து மோசம்போகிறார்கள். ஒரு தாய் இளம்



பிராயத்திலேயே தன் புருஷனுக்காக ஒப்பாரிவைக்கவேண்டியதாயிற்று. அவளுடைய செல்வ நாள் துவக்கின
அவக்காதத்துக்குள்ளே துக்க நாளாய் மாறிவிட்டது. ஒரு
பிள்ளை, ஒரு ஏக பிள்ளை, தன் கணவனுடைய உயிர்ச்
சாயல், இதுதான் அவளுக்கிருந்த ஆறுதலெல்லாம். இந்
தப் பிள்ளை ஒருநாள் கலியாண முடித்து அநேக பிள்ளை
களையும் பெற்று வெகு கரிசனமாய்த் தான் குவித்து வைத்
திருந்த ஆஸ்திபாஸ்திகளைச் சுகமாய் அநுபவித்துத் தன்
குடும்பம் நிலைபெறச் செய்வானென்று எவ்வளவோ மனப்
பூரிப்போடு எதிர்பார்த்திருந்தாள். ஐயோ இந்த மனோ
ராச்சியம் பாழாய்ப்போய், மனப்பூரிப்பும் மடிந்து
போயிற்று. ஒரு நொடியில் மரணம் வந்து எல்லாத்தை
யும் பதராக்கி அந்த வீடு பாழடையச் செய்ததே!

மனப்பற்றுதல்.—நாம் அழிந்துபோகிற உலக நன்மையை விட்டு அழியாத மோக்ஷ பாக்கியத்துக்குச் சுதந்தராகும்படி சந்நியாச அந்தஸ்துக்கு நம்மைச் சர்வேசுரன் அழைத்துக்கொண்டதினாலே மனமகிழ்ந்து வாக்குக்கெட்டாத இந்தக் கிருபைக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செலுத்தக்கடவோம்.

பிரதிக்கினை.—தேவ அழைப்பாகிய இந்த வரப்பிரசாதத்துக்குப் பிரமாணிக்கமாய் நடந்து நமது நன்றியைக் காண்பிப்போமாக.

### 2-ம் பிரிவு

#### இயேசுநாதர் மனமிரங்கிச் செத்தவனை உயிர்ப்பிக்கிறார்

தியானம்.—இயேசுநாதரைச் சூழ்ந்துபோன ஜனங்கள் பட்டணத்தில் பிரவேசித்த அந்நேரமே அதினின்று ஒருவன் பாடையை எடுத்துக்கொண்டு வருகிறதைக்கண்டு நின்றும் வாய்பேசாமல் எல்லாரும் அவ்விடத்திலேயே நின்று கொண்டிருந்தார்கள். ஆறுதலற்ற அந்தத் தாய் அழுது புலம்புகிறதை அவர்கள் எல்லாரும் பார்த்துக்கொண்டிருக்கையில் ஆண்டவர் மனமிரங்கி நீ அழவேண்டாம் என்று

அவனை நோக்கிச் சொன்னார். பின்னும் பாடையின் கிட்டப் போய் அதைத் தொடவே அதைச் சுமந்துகொண்டு போனவர்கள் நின்றார்கள். அப்பொழுது இயேசுநாதர்சுவாமி சீவனுக்குஞ் சாவுக்கும் அதிபதியானவருக்கே செல்லுமான அதிகார சத்தத்தோடு, வாலிபனே உனக்குக் கட்டளையிடுகிறேன் எழுந்திருவென்றார். அக்ஷணமே, இறந்தவன் எழுந்து உட்கார்ந்து பேசத்துவக்கினான். இயேசுநாதரோ அவனைத் தாய்க்குக் கையளித்தார் (லூக். 7).

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—தம்மிடத்தில் ஒன்றுங் கேளாமலிருந்த ஒரு அந்நிய ஸ்திரீயுடைய நிர்ப்பாக்கியத்தைக்கண்ட இயேசுநாதர் இப்படி மனமிளகி இரக்கத்தைக் காண்பித்திருக்கிறதைப் பார்க்குமிடத்தில் அவர்பேரில் உனக்கு நம்பிக்கையில்லை என்று சொல்லவேண்டியதல்லவோ? சில சமயங்களில் நீ சலித்து என்னிடத்தில் முன்னிருந்த பத்தி சுறுசுறுப்பை அடைகிறதுக்கு என்ன முயற்சிசெய்தாலும் வீணாய்ப்போகிறது; எனக்கு இஷ்டமான இன்னின்ன சிநேகிதன், வியாதியஸ்தன், பிடிவாதக்காரப் பாவி மனந்திரும்ப என்ன பிரயாசப்பட்டாலும் அபலமாய்ப்போகிறது; இதெல்லாம் ஒரு புதுமையில்லாமல் நடவாதென்று நீ முறைப்பட்டுச் சொல்லுகிறாயே. இந்த வரப்பிரசாத புதுமையை நீ கேட்கிறதுக்குத் தத்தளிப்பானேன்? அதை அடைவேனோவென்று சஞ்சலங்கொள்வானேன்? செத்த சரீரத்துக்கு உயிர்கொடுத்த இயேசுநாதர் ஆத்துமத்துக்கு ஞான உயிர் கொடுக்கமாட்டாரோ? அவ்வளவு செய்யமாட்டாரென்று நினைக்கிறது அவர் திரு இருதயத்துக்கு ஒரு நிந்தையல்லவோ? அநேக வேதபாரகர் சொல்லுகிறதுபோல ஆண்டவர் இவனை உயிர்ப்பித்தது இனி தமது அப்போஸ்தலரும் அவர்களைப் பின்சென்று வருகிறவர்களும் பாவத்தில் செத்துக்கிடக்கும் ஆத்துமங்களுக்கு ஞான உயிர் கொடுத்து அதை எழுப்பப்போகிறதற்கு உருவக அடையாளமாய் இருந்ததென்று சொல்லத்தகும்.

**மனப்பற்றுதல்.**—இதுவரைக்கும் நீ நம்பிக்கைக் குறைவாயிருந்ததற்குப் பொறுத்தலைக் கேள்.



**பிரதிக்கினை.**—இயேசுநாதரிடத்தில் யாதொரு பெலத்த நன்மையை அடைய ஆசிக்கும்போது அவர் திருத்தாயார் சிலுவையடியில் வியாகுல வாளால் குத்தப்பட்டு அனுபவித்த துயரங்களை அவருக்கு நினைப்பூட்டி அத்திருத்தாயார்போல் அந்த நன்மையைக் கேட்பாயாக.

## 3-ம் பிரிவு

### ஜனக்கும்பல் இயேசுநாதரை ஸ்துதித்து வாழ்த்துகிறது

**தியானம்.**—அவ்விடத்திலே நின்ற ஜனங்களெல்லாரும் இயேசுநாதர் தமது இரக்க வல்லமையால் செய்த இந்த அற்புதத்தைக் கண்டு பிரமிப்பால் திகிலடைந்து சர்வேசுரனை ஸ்துதித்து, நமக்குள்ளே ஒரு பெரிய தீர்க்கதரிசி தோன்றினாரென்றுஞ் சர்வேசுரன் தமது ஜனத்தை இரக்கமாய்ப் பார்த்தருளினாரென்றுங் கூறினார்கள் (லூக். 7.)

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—சர்வேசுரன் சுபாவ ஒழுங்கிலும் ஞான ஒழுங்கிலுந் தமது கருணை வல்லமையால நமக்குச் சனுவாக எத்தனையோ ஆச்சரியங்களை ஓயாமல் செய்துவருகிறார். இதை நாம் கண்டு சும்மா வேடிக்கை பார்க்கிறவர்கள்போல் இருப்பது தகாது. ஆகையால் இந்த ஜனக்கூட்டத்தின் பாவனையாக நாமுஞ் சர்வேசுரனை வாழ்த்தி ஸ்துதித்து அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்கிறதுமல்லாமல் நமது இருதயத்தில் பிறக்கிற ஆச்சரிய நன்றியறிதலின் பற்றுதல்கள் பிறரிடத்திலும் உண்டாகும்படி அந்தந்தச் சமயத்தில் பிரயத்தனப்படக்கடவோம். இதுவரைக்கும் இதுகாரியத்தில் எப்படி நடந்தோம்?

**சம்பாஷணை.**—தேவமாதாவோடு சம்பாஷணை செய்துகொள்.

# 25-ம் தேதி

## அர்ச். ஸ்நாபக அருளப்பர் அனுப்பின தூது

**ஆயத்தச் சிந்தனை.**—ஏரோது இராசா ஸ்நாபக அருளப்பரை அடைத்திருந்த சிறைச்சாலையைப் பார்க்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

**தியானச் சேபம்.**—இவருக்கு வந்த இடையூறுகளில் இவர் காண்பித்த மன அமரிக்கையையுந் தைரியத்தையுங் கேள்.

### முதல் பிரிவு

**அர்ச். ஸ்நாபக அருளப்பர் சிறைப்பட்டதின் பேரிலும் அவருடைய பத்திபற்றுதலின் பேரிலும்**

**தியானம்.**—அக்காலத்தில் இயேசுநாதர் செய்துவந்த புதுமைகளைச் சிறைச்சாலையில் அடைபட்டிருந்த அருளப்பர் கேள்விப்பட்டுத் தம்முடைய சீஷர்களில் இருவரை அவரிடத்தில் அனுப்பி வரவேண்டியவர் நீர்தாமோ அல்லது வேறொருவருக்கு எதிர்பார்த்திருப்போமோவென்று கேட்கச் செய்தார். (மத். 11). இவர் இப்படி ஆள் அனுப்பிக் கேட்கக் காரணமென்ன? சர்வேசுரன் அனுப்புவோமென்று வாக்குத்தத்தம் பண்ணின மெசியாஸ் இயேசுநாதர் தானோவென்று அறிகிறதற்கோ? அல்ல. இதின் மட்டில் அவர் ஐயப்படவேயில்லை. அல்லது சிறைச்சாலையில் அடைபட்ட தமக்கு யாதொரு உதவி ஒத்தாசையில்லை என்று இரட்சகரிடத்தில் நேராய்ச் சொல்லாமல் மறைமுகமாய் முறைப்படவோ? அதுவுமல்லவே. ஏனெனில் நீதியைப்பற்றி உபத்திரவப்படுகிறவர்கள் பாக்கியவான்களென்று கேட்டுமிருக்கிறார், தாம் அறிந்துமிருக்கிறார். இப்படியிருக்க இவர் தூது அனுப்பினதுக்குக் காரணம் என்னவென்றால் தம்முடைய சீஷர்கள் இயேசுநாதரைக் காணவும் அவர்தாமே மெசியாஸென்று அறிந்து அவரை அண்டிப் பின்செல்லவும் இடமுண்டாயிருக்கிறதற்கு இப்படிச் செய்தாரல்லாமல் மற்றப்படியல்ல.



**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—நமது நன்னடத்தைக்கான எத்தனையோ யோசனைகள் இதில் தென்படுகின்றன. ஸ்நாபக அருளப்பர் தமது சீவியகாலமெல்லாம் நன்மையே செய்திருந்தாலும், சிறையில் அடைபட்டிருக்கிறார். இயேசுநாதசுவாமி அவரைக் கைவிட்டது போல அவருக்கு ஒரு உதவியுஞ் செய்யாமலிருக்கிறார். ஆகிலும் அருளப்பர் முறையிடவுமில்லை; அவருடைய பொறுமை மாறவும் விசுவாசங் குறையவுமில்லை. இப்படியிருக்க அற்ப நன்மையாகிலுஞ் சரியாய்ச் செய்யாத நானோவென்றால் என் பிரயாசத்துக்குத் தக்க அனுகூலங் கிடையாதபோதும் என் துன்ப வருத்தங்களில் வேண்டிய உதவி ஆறுதலில்லாமல் சற்றுத் தனியே விடப்பட்டிருக்கும் போதும், பொறுமை தப்பி முறையிட்டு அவநம்பிக்கைக்கு உள்ளாகிறேன்.

இதில் யோசிக்கவேண்டிய வேறொரு விஷயமாவது: இந்த அர்ச்சியசிஷ்டவர் கடினமான சிறைச்சாலையில் அடைபட்டுச் சரீரத்தில் மகா கொடிய வாதைகளையும் மனதில் மிகுந்த கஸ்தி வேதனைகளையும் அனுபவித்திருந்தாலும் இதினாலே அவருடைய பத்திவேகஞ் சற்றுந் தளரவில்லை. தேவ சித்தத்தினால் தாம் சுமந்துகொண்ட கடமைகளையெல்லாம் முற்றுமுடிய நிறைவேற்றினார். இவருடைய மன உறுதிக்கும் நிலைகொண்ட வீரத்துக்கும் நான் எவ்வளவோ தூலை! எனக்குக் கொஞ்சம் அசதியாவது சொற்ப நோவாவது கண்டால் உடனே சர்வேசுரன் மட்டிலும், பிறர் மட்டிலும் எனக்குள்ள கடமைகளை அடியோடாகிலும் பாதியென்கிலும் அசட்டை பண்ணி, எல்லாத்துக்கும் முன்னே என்னைத்தான் கவனிக்கவேண்டியதுபோல நடந்து வருகிறேன்.

**மனப்பற்றுதல்.**—இதெல்லாம் உண்மையென்று ஒத்துக்கொண்டு வெட்கி நாணக்கடவாய்.

**பிரதிக்கினை.**—சுளுவில் விட்டுப்போகுஞ் சொற்ப உடம்பு அசதி நோவைக்கண்டு பயந்து கலங்காதிரு.

## 2-ம் பிரிவு

### அர்ச். அருளப்பர் அனுப்பின தூதுக்கு இயேசுநாதர் சொன்ன மறுமொழி

**தியானம்.**—வர இருக்கிறவர் நீர் தாமோ, அதாவது தீர்க்கதரிசிகளால் அறிவிக்கப்பட்ட மெசியாஸ் நீர் தாமோ என்று அவர்கள் கேட்டதற்கு, இயேசுநாதசுவாமி தமது வார்த்தைகளால் மறுமொழி சொல்லாமல் கிரியைகளால் சொல்லுகிறார். எப்படியென்றால் இசாயாஸ் என்னுந் தீர்க்கதரிசி ஏற்கனவே தெளிவாய் அறிவித்திருந்தபடியே அவர்கள் கண் முன்பாகப் பல அற்புதங்களைச் செய்து, அந்த அற்புதங்களால் தாமே மெய்யான மெசியாஸ் என்று ஒப்பித்தார். பின்னும் அவர்கள் புறப்பட்டுப்போகும்போது அவர்களை நோக்கி: நீங்கள் கண்டவைகளை அருளப்பரிடத்தில் போய் அறிவியுங்களென்று திருவுளம் பற்றினார். (மத். 11).

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—சர்வ பரிசுத்தமும் அர்ச்சியசிஷ்டதனமும் நன்மைத்தனமுமாயிருக்கிற சர்வேசுரனுக்கு நாம் மெய்யாகவே பிள்ளைகளென்று வாக்கினால் சொல்வதைப் பார்க்க நமது திவ்விய குருவின் பாவனையாகக் கிரியையினால் காண்பிப்போமாக. நமது சபையை ஏற்படுத்தின அர்ச்சியசிஷ்டவருக்கு நாம் சுதந்தரப்பிள்ளைகளென்று உலகத்துக்கு ஒப்பிக்கும்படியாக அவருடைய புண்ணியங்களை நம்மிடத்தில் பதியச்செய்து அவருடைய ஞான வேகப் பற்றுதல்கள்தான் நமக்கும் ஞான உயிராயிருக்கிறதென்று காண்பிப்போமாக. பேர் பெரியதாயிருந்தாலும், நடக்கை அதற்கு ஒத்திராதே போனால், அது என்னத்துக்காகும்? நாம் சொல்லிக்காட்டுவதை நடந்துகாட்டாதிருந்தால் நமது சொல்லுக்குக் காது கொடுக்கிறது யார்? நமது சபையை ஸ்தாபித்தவருடைய ஞான வேகம் நம்மிடத்தில் எந்தமட்டுக்கு இருக்கிறதென்றும் நமது நடக்கையில் எவ்வளவு தூரந் தோன்றுகிறதென்றும் பார்க்கக்கடவோம்.



**மனப்பற்றுதல்.**—நீ உன் பரிசுத்த அந்தஸ்தில் ...லைத்திருக்கவும் அதற்கடுத்த புண்ணியப்பற்றுதலில் விர்த்...படையவும் வேண்டிய வரப்பிரசாதத்தைக் கேள்.

**பிரதிக்கினை.**—உறுதியான புண்ணியங்களைச் செய்து ...ர வருந்துவாயாக. சர்வேசுரனுடைய இராட்சியம் புண்...ியத்திலன்றி வார்த்தையில் இல்லையென்று அர்ச். சின்னப்... சொன்னதை உன் உள்ளத்தில் ஆழமாய்ப் பதித்துக்...ாள்.

## 3-ம் பிரிவு

### அர்ச். அருளப்பரைக் குறித்து இயேசுநாதர் சொன்ன புகழ்ச்சி

**தியானம்.**—அவனவனுடைய பேறுபலன்களைச் சரி...ாய் மதிக்கிறவரும் உள்ளத்திலிருக்கிற இரகசியங்களைக் ...ண்கிறவருமான தேவசுதன் அருளப்பரைக் குறித்துப் ...ரசித்தமாய்ச் சொன்ன புகழ்ச்சியானது அவர் அடைந்த மகிமைகளுக்குள்ளே அவருக்குப் பிரதான மகிமை என்று சொல்லவேணும். அதாவது, அருளப்பருடைய தூதர்கள் புறப்பட்டுப் போனபின் இயேசுநாதசுவாமி சனங்களைப் ...வனைப் பார்த்து அவரைப் புகழ்ந்து சொன்னது ஏதென்றால் வனாந்...ரத்தில் என்னத்தைப் பார்க்கப் போனீர்கள்? காற்றினால் ...லைக்கழிக்கப்பட்ட நாணலையோ? மெல்லிய உடைகளை ...டுத்த மனிதனையோ? இல்லையே. பின்னை எதைத்தான் ...ர்க்கப் போனீர்கள்? ஒரு தீர்க்கதரிசியையோ? ஆம், ...ியிலும் பெரியவரைத்தான் என்றார். (லூக். 7).

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—...ி பொருட்டாய் நினை...னிதரால் வரும் புகழ்ச்சியை ஒரு பொருட்டாய் நினை... மாத்திரங் காண...ரதே. அவர்கள் வெளிக் கிரியைகளை மாத்திரங் காண... ஆனால் நமது உள்...றதினாலே அந்தப் புகழ்ச்சி வீண். ஆனால் நமது உள்... ...த்தை ஆராய்ந்து நம்மை நடுத்தீர்க்கப்போகிற ஆண்டவர் ...ம் செய்யுஞ் சகல காரியங்களையும் அங்கீகரித்துக்கொள் ...ும்படியான விதமாய் நடக்க வருந்துவோமாக. இதற்கு ...ம் செய்யவேண்டியது என்னவென்றால் இயேசுநாத...சுவாமி தமது முன்னோடியாகிய அருளப்பரிடத்தில்.

விசேஷமாய்க் கொண்டாடின இரண்டு புண்ணியங்களையும் நாம் அநுசரிக்கவேணும். அவைகளாவன: நல்ல ஒழுக்கத்தில் நிலைத்திருக்கிறதுங் கிரமமற்ற நம்முடைய ஆசாபாசங்களை முழுதும் ஒடுக்குகிறதுமாம். இவைகள்தான் நமக்கு குறைவாயிருக்கின்றன. நாம் செய்யும் பிரதிக்கினைகளில் காற்றில் ஆடும் நாணலுக்கு ஒத்தவர்களாய் நிலையாமல் போகிறதற்குக் கணக்கில்லை. கடைசியாய் ஒன்றாகிலும் நாம் நன்றாய் முடிக்கிறதில்லை. பஞ்சேந்திரியங்களுஞ் சுகப் பிரியமும் நம்மை இழுத்துக்கொண்டு போகவிடுகிறோம். இதை ஆமென்று ஒத்துக்கொண்டு நம்மைத் தாழ்த்திச் சீர்திருத்திக்கொள்வோமாக.

சம்பாஷணை.—இயேசுநாதருடைய அப்போஸ்தலராகத் தெரிந்துகொள்ளப்படுமுன், ஸ்நாபக அருளப்பருக்குச் சீஷனாயிருந்த அர்ச். பெரிய யாகப்பரோடு சம்பாஷணை செய். திருச்சபை இன்று அவருடைய திருநாளை மகா ஆடம்பரமாய்க் கொண்டாடுகிறது.

---

## 26-ம் தேதி

### இயேசுநாதருடைய புதுமைகளால் வந்த வெவ்வேறு வித காரியபலன்

ஆயத்தச் சிந்தனை.—சனக் கும்பல் இயேசுநாதரைச் சூழ்ந்திருக்க அதில் சிலர் அவரைப் புகழுகிறதையுஞ் சிலர் இகழுகிறதையும் பார்க்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

தியானச் சேபம்.—தாழ்ச்சியில் எப்போதும் வளர வரப்பிரசாதங் கேள்.

### முதல் பிரிவு

**இயேசுநாதர் செய்த புதுமைகள் தாழ்ச்சியுள்ளவர்களுக்கு ஒளிவு கொடுத்து அவர்கள் மனதை இளக்குகிறது**

தியானம்.—அருளப்பரால் அனுப்பப்பட்டவர்கள் கண்முன்பாகச் செய்த புதுமைகளோடுகூட வேறு இரண்டு



புதுமைகள் தொடர்ந்து நடந்தன. அவை ஏதென்றால்
ஒருவனைப் பிடித்திருந்த பேயை ஓட்டினதும் அவனைச்
சொஸ்தப்படுத்தினதுமாம். பேய் பிடித்திருந்த குருடும்
ஊமையுமான ஒருவனை இயேசுநாதரிடத்தில் கூட்டிக்
கொண்டு வந்தார்கள். அவர் அந்தப் பேயைத் துரத்தி
அவனைப் பூரணமாய் சொஸ்தப்படுத்தினதின்பேரில் அவன்
நன்றாய்ப் பார்க்கவும் பேசவுந் துவக்கினான். இதைக்
கண்டவர்கள் ஆச்சரியப்பட்டு இவர் தாவீதின் குமார
னல்லவோ அதாவது மெசியாஸ் அல்லவோ என்றார்கள்.
(மத். 12, லூக். 11).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—பேய்
பிடித்தவனுடைய ஸ்திதியைக்கொண்டு சாவான பாவத்தோ
டிருக்கிற கிறீஸ்துவனுடைய நிற்பாக்கியம் என்னவென்று
அறிந்துகொள். அதெப்படியென்றால் 1-வது, இவன் பசா
சின் ஆளுகைக்குள்ளே மெய்யாகவே அகப்பட்டுக்கொண்
டிருக்கிறதுமன்றி இவன் அந்தப் பாவத்தோடே செத்தால்
ஊழியுள்ள காலம் அப்படியே அதற்கு அடிமைப்பட்டிருப்
பான். 2-வது, தன் அந்தஸ்தின் நிற்பாக்கியத்தையும்
பாவங்களின் அகோரத்தையும் இம்மையிலும் மறுமையி
லுந் தனக்கு உண்டாகும் வாக்குக்கெட்டாத துன்பங்களை
யும் ஒழியாத வேதனைகளையுங் கண்டறியமாட்டாத குருட
னாயிருக்கிறான். 3-வது, இவன் ஊமையாகவும் இருக்கி
றான்; அதாவது, இவன் செபம்பண்ணவும் ஊமை, பெரி
யோரிடத்தில் நல்ல புத்திமதி கேட்கவும் ஊமை, அடிக்கடி
நல்ல பாவசங்கீர்த்தனஞ் செய்யவும் ஊமை. நீயும் இப்படி
சிலவிசை அநேக காலமாய் இந்த ஸ்திதியில் திரிந்தபின்
இப்போது அதைவிட்டு நல்ல வழியில் திரும்பியிருக்கிறா
யானால், இது இயேசுநாதசுவாமி தமது வரப்பிரசாதத்தி
னாலுந் தயவினாலும் உனக்குச் செய்த புதுமையென்று
தாழ்ச்சியோடு ஒத்துக்கொள். எத்தனையோபேர் இந்தக்
கெட்ட அந்தஸ்தில் நிலைத்திருக்கச் சாவு இருந்தாற்போல்
வந்து அவர்களைக் கொண்டுபோய்விட்டது!

மனப்பற்றுதல்.—இதெல்லாங் கண்டு ஆச்சரியப்
பட்டு ஆண்டவர் உனக்குக் காண்பித்த விசேஷ பட்சத்துக்

காக அவரைப் புகழ்ந்து கொண்டாடி நன்றியறிந்த தோத்திரஞ் செய்.

பிரதிக்கினை.—குருவானவரிடத்தில் நீ பாவசங்கீர்த்தனம் பண்ணும்போது ஊமைப் பசாசு உன்னை ஏய்க்காதபடி எச்சரிக்கையாயிரு.

## 2-ம் பிரிவு

### இயேசுநாதர் செய்த புதுமைகள் ஆங்காரிகளுடைய கண்களை மறைத்து அவர்களைக் கல் நெஞ்சுள்ளவர்களாக்குகிறது

தியானம்.—சூதுவாது இல்லாத சனங்கள் இயேசுநாதசுவாமி செய்த புதுமைகளைக் கண்டு நன்மையாகவும் அவருக்குத் தோத்திரமாகவும் பேசிவந்தார்கள். காய்மகாரிகளும் ஆங்காரிகளுமான வேதபாரகரும் பரிசேயருமோவென்றால் இந்தப் பிரகாசத்தைப் பாராதபடி கண்ணை மூடிக்கொண்டு இயேசுநாதரை மிகவும் பகைப்பதிலே பிடிமானமாயிருந்தார்கள். இந்த இரண்டு அற்புதங்களும் நடக்கவில்லை என்று சொல்லக்கூடாததினாலே அவைகளை அவர்கள் பசாசின்மேல் சாட்டினார்கள். இவன் பெயேல்செபூப் என்னும் பேய் பிடித்தவனாயிருக்கிறானென்றும், தலையான பசாசைக்கொண்டு பசாசுகளைத் துரத்துகிறானென்றுஞ் சனங்களுக்குச் சொன்னார்கள் (மாற். 3). அவர்கள் இப்படிப் புத்திக் கூறுகெட்டுப் பிதற்றினார்களென்பதை அவர்களே கண்டு உணரும்படி இயேசுநாதர் சொன்னதாவது: சாத்தான் சாத்தானைத் துரத்துவானாகில், தனக்குத்தானே விரோதமாய் அவன் பிரிந்திருக்கிறானல்லவோ? அப்படியானால் அவன் இராச்சியம் நிலைநிற்பதெப்படி என்றார் (மத். 12, லூக். 11).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—மனதுக்கு அரோசிகம் வருவிக்கிற மதிகெட்ட பரிசேயர் சொன்னதைக் கேட்டோமே. இது அவர்களைப் போட்டு ஆட்டின துர் ஆசாபாசத்தைக் காட்டுகிறது. ஆசாபாசந் தன்னைக் காட்டிக்கொடுக்கும் விதம் இதுவே. மற்றவர்களிடத்தில் பல தடவை இதை நீ காணவில்லையோ? மற்ற



வர்களும் இதை உன்னிடத்தில் காணும்படி நீ வழிபண்ணவில்லையோ? பின்னும் இயேசுநாதர் சாந்தகுணத்தோடும் இரட்சகருக்குரிய மேரையாகவுஞ் சொன்ன பதிலை யோசித்துப் பார். சனங்களுக்குள் தமது பேர் கெடும்படி எதிராளிகள் சொன்ன அபாண்டத்தை மறுபேச்சுக்கு இடமில்லாமல் மறுத்துத் தள்ளினார். இதுவும் பரிசேயருடைய மாய்கையினால் சனங்கள் மோசம்போகாமலிருக்கும்படி செய்தாரல்லாமல் மற்றப்படியல்ல. இதில் ஆண்டவருடைய நடக்கை நமக்கு மாதிரிகையாய் இருக்கவேணும். ஏனென்றால் சில சமயத்தில் நாம் செய்வது நியாயமென்று ஒப்பிக்கவேண்டியதானால் சாந்தகுணத்தோடு வேதமுகாந்திரத்தைப்பற்றி ஒப்பிக்க வேணுமேயல்லாமல் சுயமகிமை சுயபட்சத்தைப்பற்றிச் செய்யப்படாது. இவ்விதஞ் செய்து வருகிறோமோ?

மனப்பற்றுதல்.—பரிசேயரைக் குருடருங் கல்நெஞ்சருமாக்கின ஆங்காரங் காய்மகாரத்தின்பேரில் முழுதும் அரோசிகமாய் இருக்கக் கேட்போமாக.

பிரதிக்கினை.—இவ்விருவகைத் துர்க்குணங்களும் நமக்குள் சூக்ஷமாய் நுழையாதபடி உஜாராயிருக்கக்கடவோம்.

## 3-ம் பிரிவு

### இயேசுநாதர்சுவாமி தாழ்ச்சியுள்ளவர்களைப் புகழ்ந்து ஆங்காரிகளைக் கண்டித்ததின்பேரில்

தியானம்.—பரலோகத்துக்கும் பூலோகத்துக்கும் ஆண்டவரான என் பிதாவே, நீர் சிறியோர்களுக்கு இவைகளை வெளிப்படுத்தச் சித்தமானபடியால் உம்மைத் துதிக்கிறேன் என்று இயேசுநாதர் திருவுளம்பற்றினார். எவ்வித வார்த்தைகளைச் சொல்லிச் சனங்களுடைய விசுவாசம் தாழ்ச்சி இணக்கத்தைப் புகழுகிறாரென்று பார். இந்த வார்த்தைகள் அத்தனையும் நமக்கு ஆறுதலுந் தைரியமுந் தருவதற்கு உரியவைகள். ஆனால் சனங்களுக்கு விபரீத போதனையைப் படிப்பித்துவந்த ஆங்காரிகளுங் கள்ளஞானி

களுமான தேவபாரகருக்கு நெற்றியிலே சூடு போட்டாற்
போல அவர்களை எப்படிக் கண்டிக்கிறாரென்று யோசித்
துப்பார். விரியன் பாம்புகளின் சந்ததியே நீங்கள்
தீயோராயிருக்க நல்லவைகளை எப்படிப் பேசக்கூடும் என்
றார் (மத். 12). பின்னும் அவர் அநேக அற்புதங்களைச்
செய்வதைக் கண்ட பட்டணங்கள் தவஞ்செய்யாதிருந்த
படியினாலே யாவரும் நடுநடுங்க அவைகளை எப்படி அதட்டி
மிரட்டிச் சபிக்கிறாரென்று சிந்தித்துக்கொள். கொறோசா
யின் பட்டணமே, ஐயோ உனக்குக் கேடாம்; பெத்சயிதா
பட்டணமே, ஐயோ உனக்குக் கேடாம்; உங்களிடத்தில்
செய்யப்பட்ட அற்புதங்கள் தீர் நகரிலுஞ் சிதோன் நகரி
லுஞ் செய்யப்பட்டிருக்குமேயாகில் அந்தப் பட்டணங்கள்
ரட்டுகளை உடுத்துச் சாம்பலிலுந் தபசு செய்திருக்குமே.
ஆனதால் தீர்வைநாளில் உங்களுக்குக் கிடைப்பதைவிட
தீர் நகருக்குஞ் சிதோன் நகருக்கும் அதிக தயை கிடைக்கு
மென்று உங்களுக்குச் சொல்லுகிறேன். கப்பர்நாவூம்
நகரமே, எப்போதும் வானமட்டும் உயர்ந்துபோவாயோ?
பாதாளமட்டும் நீ தாழ்த்தப்படுவாய். ஏனெனில் உன்னி
டத்தில் செய்யப்பட்ட அற்புதங்கள் சோதோம் நகரிற்
செய்யப்பட்டிருக்குமேயாகில் அந்நகரம் இதுவரையிலும்
நிலைத்திருக்கும். ஆதலால் தீர்வை நாளிலே உனக்குக்
கிடைப்பதைவிடச் சோதோம் நாட்டுக்கு அதிக தயை
கிடைக்குமென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்
(மத். 11).

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—திர
ளான வரப்பிரசாதத்தைப்பெற்று அர்ச்சியசிஷ்டதனம்
அடைகிறதற்கான வழிவகைகளெல்லாங் கொண்டிருக்கிற
நமது பேரிலும் இவ்வளவு பலமான கண்டிப்பும் பயங்கர
மான சாபமும் ஒரு காலத்திலும் வராதிருக்கும்படி பரிசேய
ரைக் கெடுத்த கள்ளஞானமுங்கர்வமும் அவைகளின் வீச்ச
மும் முதலாய் நம்மிடத்தில் அண்டாதபடி வெறுத்துத்
தள்ளுவோமாக. நாம் எவ்வளவு வயதும் படிப்பும் உள்ள
வர்களானாலும் மாடப்புறாவுக்குரிய கபடற்றதனமும்
குழந்தைகளுக்குரிய தாழ்ச்சி சிரவணமும் நம்மிடத்தில்



விளங்க வருந்துவோமாக. கபடின்றி நடக்கிறவன் இரட்
சண்ணியம் அடைவான் என்று இஸ்பிரீத்துசாந்துவானவர்
சொல்லியிருக்கிறார் (சுலோ. 28).

**சம்பாஷணை.**—இன்றையத் திருநாளுக்குரிய அர்ச்.
அன்னம்மாளோடு சம்பாஷணை செய்துகொள்.

---

# 27-ம் தேதி

## பரிசேயனான சீமோன் வீட்டிலே மரியமதலேனம்மாள் இயேசுநாதருடைய பாதங்களைக் கழுவினது

**ஆயத்தச் சிந்தனை.**—மதலேனம்மாள் விருந்தாடி
கள் நடுவே இயேசுநாதர் பாதத்தைத் தன் கண்ணீரால்
கழுவுகிறதைப் பார்க்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

**தியானச் செபம்.**—இந்தச் சமயத்திலே அவள் உள்
ளத்தைப் பூரித்திருந்த உணர்ச்சிகள் உன்னிடத்திலும்
உண்டாகும்படி கேள்.

### முதல் பிரிவு

#### மதலேனம்மாள் போசன சாலையிலே பிரவேசித்தது

**தியானம்.**—அந்நாளிலே பரிசேயன் ஒருவன் இயேசு
நாதரைத் தன்னோடு போசனம்பண்ண மன்றாடினதினாலே
அவரும அவன் வீட்டில் பிரவேசித்து பந்தியிலிருந்தார்.
அப்படியாகையில் அந்தப் பட்டணத்தில் பிரசித்த பாவி
யாயிருந்த ஒரு ஸ்திரீயானவள் இந்தப் பரிசேயனுடைய
வீட்டிலே இயேசுநாதர்சுவாமி பந்தியிலிருக்கிறாரென்று
அறிந்து பரிமள தைலம் நிறைந்த ஒரு சிமிழைக் கொண்டு
வந்தாளென்று அர்ச். லூக்காஸ் சொல்லியிருக்கிறார்.
(7-ம் அதி.) அவள் அந்த வீட்டிலே பிரவேசித்ததுமாத்திர
மல்ல. சுவிசேஷத்தில் தொடர்ந்து சொல்லியிருக்கிறது
போல, அவள் போசன சாலைக்குள் நுழைந்து இயேசு
நாதர்சுவாமியுடைய பாதமட்டும் வந்தாள். இப்படி அவள்

துணிந்து முகத்தாட்சணியத்தை வென்றது அவளுடைய சுய பட்சத்துக்கு எவ்வளவோ பொறுக்காததாயிருந்திருக்க வேண்டியது! அந்த இடஞ் சமய முதலிய விஷயங்களையெல்லாம் ஒன்றொன்றாய்ச் சீர்தூக்கிப்பார். ஆனால் அவள் ஏற்கனவே தேவ வரப்பிரசாதத்தால் ஏவப்பட்டிருந்ததுமல்லாமல், ஏழு பேய்களை ஓட்டித் தன்னை இரட்சித்த இயேசுநாதர்சுவாமிமேல் வைத்த பத்தியினாலே முழுதும் அவருக்கு அடிமையானாள். அதினாலே தன் உத்தம மனஸ்தாபத்துக்கு வெளியரங்கமான அத்தாட்சி கொடுக்கவுந் தன்னாலே வந்த துர்மாதிரிகையைப் பகிரங்கமாய்ப் பரிகரிக்கவும் எப்போது சமயம் வருமோவென்று ஆவலோடு காத்திருந்தாள். அந்தச் சமயம் இப்போது வாய்த்தது. உடனே முகத்தாட்சணியம் வீண் பயம் முதலிய நினைவுகளுக்கு இடங்கொடாமல் அச்சமயத்தைக் கைப்பற்றினாள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—மரியமதலேனம்மாளைக் கண்டுபாவிக்க வேணுமானால் தேவ வரப்பிரசாதத்தின் ஏவுதலை வெகு தீவிரமாகவுந் தாராளமான மனதோடும் பின்சென்று நடப்பாயாக. நீ நன்மை செய்யவும் விசேஷமாய் உன் துர்மாதிரிகையினாலே வந்த பொல்லாப்புக்குப் பரிகாரஞ் செய்யவும் ஆண்டவர் உனக்குக் கொடுக்குஞ் சமயங்களைக் கைவிடாதே. இதற்காக முகப்பிரீதியையும் பிறர் செய்யுங் கேலி பரியாசத்தையும் எள்ளளவுங் கவனியாதே. மரியமதலேனம்மாளுடைய தாராள குணத்துக்குப் பூர்த்தியான சம்பாவனை கிடைத்ததுபோல உனக்குங் கிடைக்கும். ஆனால் இப்படி நடந்து வந்தாயோவென்று பார்.

மனப்பற்றுதல்.—ஆண்டவர் உனக்குப் பெருந்தன்மையுந் தாராள குணமுமுள்ள இருதயத்தைத் தரவேணுமென்று மன்றாடு.

பிரதிக்கினை.—யாதொரு நல்ல காரியத்தின்பேரில் தீர்மானஞ் செய்தபிறகு திரும்ப அதைப்பற்றித் தர்க்கிக்காமல் அதின்படி நட.



## 2-ம் பிரிவு

### மதலேனம்மாள் காண்பித்த உத்தமமனஸ்தாபமுஞ் சிநேகமும்

தியானம்.—இவள் இரட்சகரைக் கண்டமாத்திரத்தில் நேராய் அவரை நோக்கிப் போய் அவருடைய பாதங்களின் அருகே பின்னாக நின்று அவருடைய பாதங்களை முத்தி செய்து தான் கொண்டுவந்த பரிமல தைலத்தால் பூசினாள். (லூக். 7.) மனமுங் கண்ணுங் கலங்கச் செய்கிற இந்த வெளிப்படையான அடையாளங்கள் மதலேனம்மாளிடத்தில் இருந்த உத்தமமனஸ்தாபத்தை வெட்டவெளியாய்க் காட்டுகின்றனவல்லவா. அவள் அத்தியந்த துக்கப்பட்டு மகா உருக்கமான தேவ சிநேக அக்கினியினால் பற்றியெரிந்தத்தினாலே அவளிடத்தில் சர்வேசுரனுக்குத் துரோகம் பண்ணினேனென்கிற துயரம் ஒழிய வேறே துயரம் இல்லை. அவருக்குப் பிரியப்படவேணுமென்கிற ஆசை ஒழிய வேறே ஆசை இல்லை.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—பச்சாத்தாபம் என்கிற தேவதிரவிய அநுமானத்தினாலே நமக்கு வரும் பலனை அடையும்படி இயேசுநாதருக்குப் பதிலாயிருக்கிற ஆத்தும குருவினிடத்தில் போகும்போது இப்பேர்ப்பட்ட உத்தம மனஸ்தாபத்தின் உணர்ச்சிகளை நமது உள்ளத்தில் எழுப்ப முயற்சி செய்வோமாக. இதினால் வரும் அளவுகடந்த நன்மைகளை நாம் நினைத்துப் பார்த்தால் மெய்யாகவே இந்த உத்தமமனஸ்தாபம் நம்மிடத்தில் உண்டாக வருந்துவோம். அந்த நன்மைகள் எவையென்றால் நமது பாவங்களும் அவைகளுக்குச் செல்லுமான ஆக்கினையும் அதிகமதிகமாயாகிலும் முழுதும் என்கிலும் மன்னிக்கப்படுவதும், தேவ சிநேக மிகுதியாய் வளருவதும், சோதனைகளைத் தள்ளுகிறதும், நமது அர்ச்சிப்புக்குத் தடையானவைகளை வீரியமாய்ச் செயித்துக் கொள்ளுகிறதும் ஆகிய இவைகள்தான்.

மனப்பற்றுதல்.—தேவ சிநேகத்தினால் வரும் உத்தமமனஸ்தாபம் நம்மிடத்தில் அடிக்கடி உண்டாக மிகுந்த ஆசை வேகங்கொள்வோமாக.

பிரதிக்கினை.—இந்த மனஸ்தாபத்தை சுவாமியிடத்தில் விடாமல் கெஞ்சி மன்றாடி, நம்மிடத்தில் அடிக்கடி அதை எழுப்புவோமாக. பாவசங்கீர்த்தனத்துக்குமுன் எப்போதும் இதைப் பிறப்பிக்கக்கடவோம்.

## 3-ம் பிரிவு

### இயேசுநாதர் மரியமதலேனம்மாள் செய்ததை ஏற்றுக்கொள்ளுகிறார்

தியானம்.—இயேசுநாதரை விருந்துக்கு அழைத்த பரிசேயன் மதலேனம்மாள் மட்டில் ஆண்டவர் காண்பித்த தயையைக் கண்டு இவர் தீர்க்கதரிசியானால் தம்மைத் தொடுகிறவள் ஆரென்றும் எப்படிப்பட்டவள் என்றும், பாவியாயிருக்கிறாளென்றுஞ் சந்தேகமில்லாமல் அறிந்திருப்பாரென்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான். அவன் நினைவை ஆண்டவர் அறிந்து குற்றஞ் சாட்டப்பட்டவளுக்குச் சனுவு சொல்ல அவள் பக்கந் திரும்பிப் பார்த்துச் சீமோனுக்குச் சொன்னதாவது: இந்த ஸ்திரீயைப் பார், நான் உன் வீட்டில் பிரவேசித்தேன். என் கால்களைக் கழுவ நீ தண்ணீர் தந்ததில்லை. இவளோவென்றால் தன் கண்ணீரால் என் பாதங்களைக் கழுவித் தலைமுடிகளால் துடைத்தாள். நீ என் சிரசில் எண்ணெ பூசினதில்லை. இவளோ பரிமள தைலத்தால் என் பாதங்களைப் பூசினாள். ஆகையால் இவள் மிகவுஞ் சிநேகித்ததினால் இவளுக்கு வெகு பாவங்கள் பொறுக்கப்படுகின்றன என்றார். பின்னும் அந்த ஸ்திரீயை நோக்கிச் சொன்னதாவது: உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்படுகின்றன. உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, நீ சமாதானமாய்ப் போவென்றார் (லூக். 7).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நீ பலவீனத்தினால் தினந்தினங் கட்டிக்கொள்ளுகிற அநேக பாவங்களைப்பற்றி அளவில்லாத தேவ நீதிக்குப் பரிகாரஞ் செய்யும்வகை ஏதென்று அறிய ஆசைப்படுகிறாயல்லவோ? இயேசுநாதர்சுவாமி அதை உனக்குக் காண்பித்திருக்கிறார்.



அதாவது: அதிகமாய்ச் சிநேகி, அதிக பாவங்கள் உனக்கு மன்னிக்கப்படும். ஆகையால், என் சர்வேசுரா நான் உம்மை சிநேகிக்கிறேன்... உமக்கு நான் செய்த பாவங்களைப் பொறுத்துக்கொள்ளுமென்று இரண்டு வார்த்தைகளைச் சொல்லியாகிலும் அடிக்கடி தேவ சிநேக முயற்சி செய்யக்கடவாய். உத்தமமனஸ்தாபப்படவேணுமென்று நீ கருதாவிடினும் நீ செய்யும் இந்த முயற்சி அநேகமுறை மேலான உத்தமமனஸ்தாபமாய் இருக்குமென்று வேதசாஸ்திரிகள் சொல்லுகிறார்கள்.

சம்பாஷணை.—அர்ச். மரியமதலேனம்மாளோடு சம்பாஷணை செய்துகொள்.

---

# 28-ம் தேதி

## துரத்தப்பட்ட பசாசு திரும்ப வந்து கோக்கரிக்கிறது, அதாவது ஒருவன் திரும்பவும் பாவத்தில் விழுகிறது.

ஆயத்தச் சிந்தனை.—துரத்தப்பட்ட சத்துராதி திரும்பவும் வீட்டைப் பலவந்தமாய்ப் பிடிக்கவருகிறதாக ரூபிகரித்துக்கொள்.

தியானச் செபம்.—பசாசின் கண்ணிகளை அறிந்து விலகும்படி வேண்டிய வரப்பிரசாதங்கேள்.

## முதல் பிரிவு

### துரத்தப்பட்ட பசாசு

தியானம்.—மதலேனம்மாள் தன்னைப் பிடித்திருந்த ஏழு பசாசுகளுந் துரத்தப்பட்டபின் அவைகளுக்குத் தன் இருதய வாசலைத் திரும்ப ஒருகாலுந் திறக்கவேயில்லை. இது காரியத்தில் எல்லாரும் இவளைக் கண்டுபாவிக்கிறதில்லை. இது ஐயோ! என்ன நிர்ப்பாக்கியம்! இதன்மட்டில் நாம் எச்சரிக்கையாய் இருக்கும்படி இயேசுநாதசுவாமி நமக்குப் பேய்களின் தந்திர உபாயங்களைத் தெளிவிக்கச்

சித்தமானார். அதெப்படியென்றால் அசுத்த அரூபியானது ஒருவனிடத்தினின்று துரத்தப்பட்டபின்பு வறண்ட இடங்களில் இளைப்பாற்றியைத் தேடித்திரிந்தும் அதைக் காண்கிறதில்லை. அப்போது நான் விட்டுப் புறப்பட்ட என் வீட்டுக்குத் திரும்பிப்போவேனென்று சொல்லுகிறது என்றார் (மத். 12). அதாவது தான் நஷ்டப்பட்டு நிந்தை அவமானம் அடைந்ததினாலேயுந் தனக்கு இளைப்பாற இடங் காணாததினாலேயும் என்ன பிரயாசப்பட்டாவது, என்ன அக்கிரம உபாயங்களைச் செய்தாகிலுந் தான் இழந்து போனதைத் திரும்பக் கைக்கொள்ளும்படி தேடுமென்று அர்த்தமாம்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—தேவ இஷ்டப்பிரசாதத்தையும் பத்தி சுறுசுறுப்பையுங் காப்பாற்றுவதற்கு நாம் படும் பிரயாசமானது அவைகளை நம்மிடத்தினின்று பறித்துக்கொள்ளும்படி நமது சத்துரு செய்யும் முயற்சிக்கு இணையாகுமோ? ஐயோ! இதற்கு என்ன சொல்வோம்! நல்ல பாவசங்கீர்த்தனஞ் செய்து சர்வேசுரனோடு உறவாகிறோம்; அல்லது ஞான ஒடுக்கஞ் செய்து பத்தி சுறுசுறுப்பு அடைகிறோம். ஆனால் மறு நிமிஷம் ஞான உருக்கத்தை இழந்து, நமது ஐம்பொறிகளை மனம்போன போக்கில் திரியவிடுகிறோம். இனிமேல் நமக்கு மோசமில்லையென்று எண்ணி நாம் அசந்து மறந்திருக்கும்போது, நமதுமேல் பாய்ந்து விழவேணுமென்று பதுங்கி வேவுபார்த்துக்கொண்டிருக்குஞ் சத்துருவுக்கு முதலாய் நாம் பயப்படுகிறதில்லை. இதினாலேதான் திரும்பவும் பாவத்தில் விழுகிறோம். இதினாலேதான் நம்மை அர்ச்சிக்கிறதற்கான உபாயங்களெல்லாம் வீணாய்ப்போகின்றன. நம்மை நம்பாமல் எந்நேரமும் விழிப்பாயிருந்து செபம் பண்ணிவந்தோமானால் இந்த நிர்ப்பாக்கியம் வராதபடி முந்தியே தடுத்திருக்கலாம். இது விஷயத்தில் நீ அநுபோகத்தினால் அறிந்துகொண்டது என்னவென்று யோசித்துப்பார்.

மனப்பற்றுதல்.—பசாசின் அபாயதந்திரங்களிலே நின்று எங்களை இரட்சித்துக்கொள்ளுஞ் சுவாமி.



பிரதிக்கினை.—பசாசானது கர்ச்சிக்கிற சிங்கம்போல யாரை விழுங்குவேனோவென்று சுற்றித்திரிகிறதாக அர்ச். இராயப்பர் சொல்லியிருப்பதை உன்னுடைய புத்தியில் நன்றாய்ப் பதித்துக்கொள் (1 இரா. 5).

## 2-ம் பிரிவு

### பசாசு திரும்ப வருகிறது

தியானம்.—பசாசு நம்மைக் கெடுக்க நினைக்கும்போது வெகு நேரம் யோசனையுந் தீர்மானமும் மாத்திரம் பண்ணாமல் மகா கொடூர உபாயங்களைத் தேடி, வேண்டிய சமயத்தில் நரகத்திலிருந்து ஒரு பட்டாளத்தை முதலாய் நமக்கு விரோதமாய் எழுப்பிக் கூட்டிக்கொண்டுவரும். இதைப் பற்றி இயேசுநாதர்சுவாமி திருவுளம்பற்றியிருப்பது ஏதென்றால் அது தான் முன்னிருந்த வீட்டைப் பார்க்க வந்து அது வெறுமையாகவுஞ் சுத்தமாகவுந் தேவ இஷ்டப்பிரசாதத்தினால் சோடிக்கப்பட்டதாகவும் இருக்கிறதைக் கண்டு தன்னிலும் அதிக பொல்லாத வேறே ஏழு பசாசுகளைத் தேடிப்பிடிக்கப் போகுமென்றார். அதாவது: நம்மோடு எப்பக்கத்திலும் எவ்விதத்திலும் போராடுகிறதற்குத் தன்னைவிட அதிக சூதும் வாதுமுள்ள பேய்களைக் கூட்டிக்கொண்டுவரும். வந்து, இன்பத்தினாலுந் துன்பத்தினாலும், செல்வத்தினாலுஞ் சிறுமையினாலும், நயத்தினாலும் பயத்தினாலும், குருட்டுத் துணிகரத்தினாலுந் துணிவீனத்தினாலும், இன்னம் எந்தெந்த வகையாய் நம்மை நாசமாக்கித் தன் கருத்து கைகூடச் செய்யலாமோ அந்த வகையாயெல்லாம் எத்தனிக்கிறதென்று அர்த்தமாம்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—பசாசு நமது இருதய நிலையையும் மனச் சார்பையுஞ் சோதித்து வருகையில் நாமோ அது எப்படியிருக்கிறதென்று பாராமல் அசட்டையாயிருக்கிறோம், அல்லது மேலுத்தவாரியாய் அதை விசாரிக்கிறோம். பசாசு தன் [illegible] பெலனை நம்பாமல் தனக்கு உதவிதேடப்போகை

யிலே நாம் நம்முடைய சொந்தப் பெலன் போதுமென்றாற்போல நமக்கு வருங் கடினமான சோதனையிலே முதலாய்த் தேவ உதவியையும் அர்ச்சியசிஷ்டவர்களுடைய மன்றாட்டையுந் தேடாமலுங் கேளாமலும் அசட்டையாயிருக்கிறோம். பின்னும் நமது ஆத்தும குருவுக்கு நமது இருதயத்தைத் திறந்து காண்பித்து அவருடைய உதவி ஆலோசனை கேட்காதபடி நமது ஆங்காரந் தடையாயிருக்கிறது. இந்த ஆங்காரமானது சர்வேசுரனைவிட்டு நம்மை அப்புறப்படுத்துவதுமல்லாமல் புண்ணியத்தில் நிலைத்திருக்கும்படி அவசரமான தேவ இஷ்டப்பிரசாதங்களையும் நாம் இழந்துபோகச் செய்கிறது. இதைப்போல மதியீனம் உண்டோ? இதிப்படியானால் நமது சென்மப் பகையாளிக்கு நாமே கைகொடுத்து உதவியாயிருக்கிறோமல்லவோ?

மனப்பற்றுதல்.—இது மெய்யென்று ஒத்துக்கொண்டு நாணிக் கஸ்திப்படுவேனாக.

பிரதிக்கினை.—இனிமேலாக அதிக புத்திசாலியாகி என்னைத்தானே மெய்யாகவே சிநேகிப்பேன்.

# 3-ம் பிரிவு

## பசாசு கோக்கரிக்கிறது

தியானம்.—நமதுபேரில் மிஞ்சின நம்பிக்கையினாலாவது அசட்டைத்தனம் அல்லது கோழைத்தனத்தினாலாவது பசாசு நம்முடைய இருதயத்தில் பிரவேசிக்க நாம் இடங்கொடுக்கும்போது சம்பவிப்பது ஏதென்று இயேசுநாதசுவாமி சொல்லியிருக்கிறதைக் கேள். அசுத்த அரூபியானது தன்னோடு கூட்டிக்கொண்டுவந்த ஏழு பசாசுகளோடே உட்புகுந்து அவைகளோடு அதிலே குடியிருக்கும். இப்பேர்க்கொத்தவனுடைய பிந்தின அந்தஸ்து முந்தினதிலுங் கெட்டதாமே என்றார் (மத். 12). ஏனென்றால் ஒருவன் பாவத்திலே திரும்ப விழுகிறபோது அதின்பேரில் அவனுக்குள்ள அருவருப்பு சன்னஞ் சன்னமாய்க் குறைந்துபோகிறதுமன்றி அநேக தேவவரங்களும் ஆத்துமத்தைவிட்டு நீங்கிப்போகிறதினாலே அவனுடைய ஆத்துமம் பலவீனப்படுகிறது; விசுவாசத்தின் ஒளி மங்கிப்போகிறது; கெட்ட வாடிக்கைகள் நாளுக்குநாள் உற்பத்தியாகவே, அர்ச். அகுஸ்தீன் தமது அநுபோகத்தைக்கொண்டு சொல்லியிருக்கிறதுபோல இவைகள் அவனுக்கு மறு சுபாவமாகிறது. இது நிர்ப்பாக்கியத்துக்கெல்லாம் பெரிய நிர்ப்பாக்கியமாமே.



இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இந்த நிர்ப்பாக்கியத்தைக் கண்டுபிடிக்கப் பிரயாசப்படுவோமாக. அற்பப் பாவத்திலே முதலாய்ப் பழகுகிறதற்கு மிகவும் பயந்து நடுநடுங்கக்கடவோம், ஏனெனில் இதினால் வரும் மனச்சோர்வைத் தள்ளுகிறது எவ்வளவோ கஷ்டம். இந்தக் கஷ்டம் இல்லறத்தாரைவிடத் துறவறத்தாருக்கு அதிகமாய்த் தோன்றும். ஏனெனில் இல்லறத்தாருக்கு விசுவாச சத்தியங்கள்மட்டில் அவ்வளவு புழக்கமுமில்லை, சர்வேசுரன்மட்டில் அவர்கள் அவ்வளவு நன்றிகெட்டவர்களுமல்ல. இப்படியிருக்க மனம் வெம்பின சந்நியாசி நல்நிலைக்கு வந்தால் தேவ வரப்பிரசாதத்தின் புதுமைகளுக்குள்ளே இது பெரிய புதுமை என்று அர்ச். பெர்நார்து சொல்லியிருக்கிறார். ஆகையால் இப்போது நாம் எந்த அந்தஸ்தில் இருக்கிறோமென்றும் நாம் பயப்படத்தக்கது ஏதென்றும் நமக்கு மோசம் வராதபடி இன்னஞ் செய்ய வேண்டியது ஏதென்றும் பார்ப்போமாக.

சம்பாஷணை.—பசாசுகளோடு போராடி வெல்லுவதில் பேர்போன அர்ச். பெரிய அந்தோணியாரோடு சம்பாஷணை செய்து அவரிடத்தில் விளங்கின விமரிசையுந் தைரியமும் நம்பிக்கையும் நமக்குங் கிடைக்க மன்றாடுவோமாக.

# 29-ம் தேதி

## இயேசுநாதர்சுவாமியோடு நமக்கு இருக்கவேண்டிய ஞான உறவின்பேரில் அவர் படிப்பித்த போதகம்

**ஆயத்தச் சிந்தனை.**—இயேசுநாதர்சுவாமி ஜனங்களுக்குப் பிரசங்கித்துக்கொண்டிருக்கிறதாகவும் அப்போது அவருடைய தாயாரும் பந்து ஜனங்களும் அவர் தங்களிடத்தில் வரும்படி கேட்டனுப்புகிறதைப் பார்க்கிறதாகவும் ரூபிகரித்துக்கொள்.

**தியானச் செபம்.**—உன் பந்து ஜனங்கள்பேரில் அதிகமான சுபாவ பட்சம் வைக்காமலிருக்க வரப்பிரசாதங் கேட்பாயாக.

### முதல் பிரிவு

#### இயேசுநாதருக்கும் நமக்குமுள்ள உறவின்பேரில்

**தியானம்.**—இயேசுநாதர்சுவாமி அர்ச். ஸ்நாபக அருளப்பரைப் புகழ்ந்து பேசிக்கொண்டிருக்கும்போது சிலர் அவரண்டையில் வந்து இதோ உம்முடைய தாயாருஞ் சகோதரரும் உம்மைப் பார்க்கவந்து ஜனநெருக்கத்தினாலே கிட்ட வரக்கூடாமல் தூர நிற்கிறார்களென்றார்கள். அதற்குத் தமது தாயாருஞ் சகோதரரும் ஆரென்று சொல்லி, பின்னுந் தம்முடைய சீஷர்களை நோக்கிக் கை நீட்டி, இதோ! இவர்களே என் தாயாருஞ் சகோதரருமென்றார். (மத். 12, மாற். 3.) இதற்கு அர்த்தம் ஏதென்றால் இவர்களைத்தான் தாயார் சகோதரராகப் பாவிக்கிறேனென்பதாம்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—இவ்விடத்தில் நமது திவ்விய இரட்சகர் தேவ மகிமை, பிறர் இரட்சணியம் நமது அர்ச்சிப்பு ஆகிய இவைகளினிமித்தஞ் சில சமயங்களிலே லௌகீக சம்பந்தமான விஷயங்களை நாம் மறந்துவிடும்படி நம்மை உடன்படுத்துகிறதுமல்லாமல் அவசரமானபோது சர்வேசுரன்மட்டில் நமக்குள்ள பத்தி



பிரமாணிக்கத்தைப்பற்றி நம்முடைய உற்றார் பெற்றார் பேரிலே நமக்கு உண்டான பட்சத்தை முழுதும் நீக்கிப் போடவேணுமென்றும் படிப்பிக்கிறார். அதாவது சர்வேசுரனிடத்திலும், சர்வேசுரனைப்பற்றியும், சர்வேசுரனுக்கு ஏற்கவும் நாம் அவர்களைச் சிநேகிக்கவேணுமல்லாமல் மற்றப்படியல்ல. இதுதான் சுபாவத்துக்கும் நீதிக்கும் ஒத்தபடி தாய் தகப்பன் சகோதரர் சகோதரிகள்பேரில் உள்ள பட்சத்தை ஞானப்பட்சமாக்க வருந்தவேணுமென்று சந்நியாசிகளுக்குக் கொடுக்கப்பட்ட ஒழுங்கின் கருத்தென்று கண்டுகொள்க. நீ இதற்கு ஒத்தபிரகாரம் நடக்கிறாயோ?

**மனப்பற்றுதல்.**—இதன்படி நமது சீவியகாலமெல்லாம் மனத்தாராளமாய் நடக்க வரங் கேட்போமாக.

**பிரதிக்கினை.**—உறவின் முறையார்பேரில் உண்டான சுபாவ பாசம் எங்கே சதிமானம் பண்ணுகிறதோவென்று உஜாராயிருக்கவும்.

### 2-ம் பிரிவு

#### இயேசுநாதருக்கு நாம் எப்படிச் சகோதரர் ஆகலாம் என்பதின்பேரில்

**தியானம்.**—பரமண்டலங்களிலேயிருக்கிற என் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுகிறவன் எவனோ, அவனே என் சகோதரனுஞ் சகோதரியுந் தாயுமென்று திவ்விய கர்த்தர் திருவுளம்பற்றினார். இதெப்படியாகுமென்று கேட்பாயானால், நமது மனதைச் சகலத்திலுந் தேவ சித்தத்துக்கு ஒத்திருக்கச் செய்கிறதினால் ஆகுமென்று அறிந்துகொள். ஏனென்றால் சர்வேசுரனுடைய மனசும் இயேசுநாதருடைய மனசும் ஒன்றாயிருக்கிறதினாலே இப்படி அத்திருச்சித்தத்துக்கு ஒத்து நடக்கிறவன் தன் நினைவிலும் உணர்விலுந் திவ்விய கர்த்தரோடு ஏகோபித்து முழுதும் அவருடைய சகோதரன்போல் சீவிக்கிறான். பின்னையும் அவன் தேவ திருவுளப்படி பிரமாணிக்கமாய் நடக்கிறதினாலே தன்னிடத்தில் தேவ சிநேகத்தைக் காப்பாற்றுகிறான். தேவ சிநேகமானது அவனைச் சர்வேசுரனுக்குச்

சுவிகாரப்பிள்ளையும் இயேசுநாதர்சுவாமிக்குச் சகோதரன்
சகோதரியுமாக்குகின்றது. அன்றியும் இயேசுநாதர்
சுவாமி உயிர்த்தபின் பத்தியுள்ள சில ஸ்திரீகள் அவருடைய
கல்லறைக்குப்போய்த் திரும்புகையில் அவர்களை நோக்கி
நீங்கள் என் சகோதரரிடத்தில் போய் அவர்கள் கலிலேயா
வுக்குப் போகும்படி அறிவியுங்களென்று சொன்னதினாலே
அவர்தாமே சகோதரரென்கிற இந்தப் பேரைத் தமது
சீஷர்களுக்கு இட்டிருக்கிறார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இப்
படியிருக்கத் தேவ சித்தத்தோடு நமது மனசு உத்தமமாய்
ஒத்திருக்கச் செய்கிறதில் சிறந்து ஓங்கும்படி நாம் எல்
லோருந் தண்டித்து உழைப்பது மகா முக்கியமான காரியம்.
இந்த மன ஒற்றுமையினால் அளவிறந்த நன்மைகள் உண்
டாகிறதுமல்லாமல், இயேசுநாதருக்குச் சகோதரர் சகோ
தரிகள் என்கிற உறவும் நமக்குச் செல்லும். கடைசியாய்
இது அவரோடு நம்மை ஒருவகையில் ஏக ஐக்கியமாக்கி,
அவர் தமது திருப்பாடுகளினாலும் மரணத்தினாலுஞ் சம்பா
தித்த அளவில்லாத நன்மைகளுக்கு நம்மைப் பங்காளிக
ளாக்கும். நீ இந்தப் புண்ணியத்தை எப்படி மதிக்கிறாய்?
இதிலே நீ அடைந்த அபிவிர்த்தி என்ன?

மனப்பற்றுதல்.—ஆண்டவரே, என்னிலும் என்னா
லும் என்னிடத்திலும் இப்போதைக்கும் எப்போதைக்கும்
உமது திருச்சித்தம் நிறைவேறக்கடவது. ஆமென்சேசு.

பிரதிக்கினை.—நாம் கீழ்ப்படியவேண்டிய கட்டளை
கள் நமது சுபாவ நாட்டத்துக்கு எவ்வளவுக்கு விரோதமா
யிருக்குமோ, அவ்வளவுக்கு ஆத்திரத்தோடே அவைகளை
நிறைவேற்றுவோமாக.

## 3-ம் பிரிவு

**இயேசுநாதருக்கு நாம் எப்படித் தாயாராகிறது என்பதின்பேரில்**

தியானம்.—என் பிதாவின் சித்தத்தை நிறைவேற்று
கிறவன் என் சகோதரனுஞ் சகோதரியும் தாயுமாயிருக்கிறா



னென்றார். இதென்ன எனக்குத் தாயுமாயிருக்கிறானென்
கிறார்? இது அவருக்குச் சகோதரனாயிருப்பதைவிட எவ்
வளவோ உயர்த்தி, எவ்வளவோ ஆச்சரியத்துக்குரியது,
எவ்வளவோ புத்திக்கெட்டாத பரம விஷயம். அர்ச்.
கிரகோரி பாப்பானவர் இதற்கு வியாக்கியானமாகச்
சொல்லியிருப்பதைக் கேள். இயேசுநாதரை அறியாதவர்க
ளுக்குச் சொல்லும் புத்தி பிரசங்கத்தினாலே அவர்களு
டைய இருதயத்தில் அவர் பிறக்கவும் அவர்கள் அவரை
அறிந்து சிநேகிக்கவும் பிரயாசப்படுகிறவன் எவனோ
அவனே இயேசுநாதருக்குத் தாயாராகிறான் என்றார்.
இந்தத் தாய்முறை ஞான வரிசையைச் சேர்ந்ததென்கிறது
மெய்தான். ஆனால் உலக தாய்முறையைப்பார்க்கப் பட்
டத்திலும் பேறுபலனிலும் இது தாழ்ந்ததென்று யார்
செல்லுவார்?

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நாம்
எல்லோரும் பிரசங்கிகள் ஆத்தும குருக்கள் அல்லாதே
போனாலும், இந்தத் தெய்வீக தாய் முறைக்குப் பாத்திர
வான்கள் ஆகலாம். அதெப்படியென்றால் சத்திய விசு
வாசப் பரம்புதலுக்காக ஏற்பட்டிருக்குஞ் சபைகளுக்கும்
அவைகளின் பற்பல அலுவல் முயற்சிகளுக்கும் நம்மாலான
சகல விதத்திலும் உதவி சகாயமாயிருந்து அஞ்ஞானிகள்,
பதிதர், பிரிவினைக்காரர் மனந்திரும்ப நமது செபதபங்களை
யுந் துன்ப வருத்தங்களையும் நாம் வாங்குந் திவ்விய நன்மை
யையுஞ் சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுப்பதினாலும், நமக்
குச் சமயங் கிடைக்கும்போதெல்லாம் பிறராத்துமத்தில்
இயேசுநாதர்சுவாமி ஞான விதமாய்ப் பிறந்து வளரும்படி
பிரயாசப்படுவதினாலும் நாம் அவருக்குத் தாயாராகலாம்.
நீ இவ்விதஞ் செய்து வந்தாயோ? இனிமேல் எப்படி, எது
காரியத்தில் இன்னம் நன்றாய்ச் செய்யக்கூடுமென்று
யோசித்துப்பார்.

சம்பாஷணை.—இன்று லாசர், மரியமதலேனம்மாள்
என்பவர்களுடைய சகோதரியான மார்த்தம்மாள் திருநா
ளானதினால் அவளோடு சம்பாஷணை செய்.

# 30-ம் தேதி

## தாய்தகப்பன் உறவின் முறையார்மட்டில் வைக்கும் மிதமிஞ்சின பட்சத்தின்பேரில்

ஆயத்தச் சிந்தனை.—என்னிலுந் தன் தகப்பனையாவது தாயையாவது அதிகமாய்ச் சிநேகிக்கிறவன் எனக்குப் பாத்திரவானல்லவென்று இயேசுநாதர் சொல்லுகிறதாக ரூபிகரித்துக்கொள். (மத். 10.)

தியானச் சேபம்.—நாம் ஒருபோதும் இவ்விதகிரமந் தப்பின பட்சத்துக்கு இடங்கொடாதிருக்க வரங்கேட்போமாக.

சந்நியாசிகள் மனதில் தங்கள் தாய் தகப்பன் உறவின் முறையார்பேரில் கிரமந் தப்பின பட்சத்தைப் பிறப்பித்து வளர்ப்பதற்கு ஏதுவான விஷயங்கள் மூன்று உண்டு. அவையாவன: நியாயமின்றி அடிக்கடி அவர்களைக் காணப் போகிறதும், எந்நேரமும் அவர்கள்பேரிலே கரிசனமாயிருக்கிறதும், அவர்களை நினைத்து நினைத்துப் பரிதபிக்கிறதுமாம். இம்மூன்றின்பேரிலும் மிகுந்த எச்சரிக்கையாயிருக்கவேணும்.

## முதல் பிரிவு

### அடிக்கடி உற்றார் பெற்றாரைக் காணப்போகிறதின் பேரில்

தியானம்.—அடிக்கடி அவர்களைக் காணவேணுமென்று வழிதேடி அதற்கான உபாய தந்திரங்களை யோசிக்கிற சந்நியாசி பலத்த ஆபத்துக்குள் அகப்படுகிறதுமல்லாமல் துறவறத்தையாவது அதற்கு உயிரான பற்றுதலையாவது இழந்து போவானென்று சொல்லத்தகும். அர்ச். பசிலியார் இதை விவரித்துச் சொல்லியிருக்கிறதைக் கேள். அதாவது இப்படி அவர்களை அடிக்கடி காணப்போகிற சந்நியாசி முந்தமுந்த சர்வேசுரன்மட்டிலுந் தன் உத்தமதனம், பிறர் ஆத்தும ஈடேற்றம், இவைகளின்மட்டிலும் வேண்டிய கவலை வைக்காமல் போகிறான். 2-வது தான் சிறுப்பத்திலே பழகின சில இடங்களையுஞ் சனங்களையும்



பார்ப்பதினால் தன் பழைய குற்றங் தப்பிதங்கள் நினைவில் வரவும் அதினால் பாவச் சோதனைகளும் ஆபத்துகளும் உண்டாகவும் வழி பண்ணுகிறான். 3-வது தன் தாய் தகப்பன் துவக்கின தொழில் முயற்சிகளிலும், அவர்களுடைய லாப நஷ்டம், குடும்பக் கவலை முதலிய காரியங்களிலும் ஓயாமல் கலந்துகொள்ளுகிறதினால் லௌகிக விசாரங்கள் அவன் உள்ளத்தில் நுழையவே மனச்சமாதானத்தை இழந்து போவான்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இப்போது சொன்னவைகளில் யாதொன்றும் உனக்குச் சம்பவியாதிருந்தால் அதற்காக ஆண்டவருக்குத் தோத்திரஞ் செய்கிறதுமல்லாமல் கனமான நியாயமின்றி பெற்றோர் உற்றாரைப் பார்க்கவேணுமென்கிற ஆசைக்கு முதலாய் இடங்கொடாமலிருக்கப் பிரதிக்கினை செய்துகொள்.

மனப்பற்றுதல்.—சர்வேசுரனுடைய சிநேகத்தைப் பற்றி நீ உலகத்தில் விட்டுவிட்டு வந்த யாவற்றிற்கும் மெய்யாகவே நாளுக்கு நாள் மரித்தவனாகும்படி சுவாமியை மன்றாடு.

பிரதிக்கினை.—முதலாவது, உன் பெற்றோர் உற்றார் தகுந்த நியாயமின்றி மடத்தில் உன்னைப் பார்க்கவேணுமென்றாவது [illegible] அவர்களைக்காண வீட்டுக்கு வரவேணுமென்றாவது சிரேஷ்டர்களை அலட்டிக் கேட்காதபடி தடுக்க உன்னால் கூடியதெல்லாஞ் செய். 2-வது அவர்களோடு ஓய்வு ஒழிவின்றி காரியமில்லாத காகிதப் போக்குவரத்து நடத்தாதே. ஆயினும் எல்லார்மட்டிலும் யோக்கியதையாய் நடக்க வேண்டியிருப்பதால் நல்லொழுக்க முறைப்படி பதில் தேவையாயிருக்கிற காகிதங்களுக்குத் தீவிரமாய்ப் பதில் அனுப்புவது கிரமம்.

## 2-ம் பிரிவு

### அவர்கள் பேரில் மிஞ்சின கரிசனம்

தியானம்.—சந்நியாசிகள் தங்கள் பெந்துக்கள் யாதோர் [illegible]பாரகத்தில் அவலமாய்ச் சிக்கிக்கிடக்கும்போது [illegible]ய் அவர்களைத் திருப்ப மிஞ்சின கவலையோடு

வருந்துகிறது ஆகாதென்று துறவற ஞானகர்த்தாக்கள் எழுதி வைத்திருக்கிறார்கள். அதேதெனில் இது அவர்களுக்கு விதிக்கப்பட்ட அலுவல் அல்ல. சிரேஷ்டர் அவர்களுக்கு இந்தக்கட்டளை கொடுத்தால் சரி; அப்படிக்கில்லாவிட்டால் அவர்களுடைய ஆத்துமத்துக்குச் சேதம் உண்டாகும். இப்படியே அநேக சந்நியாசிகள் அடிக்கடி தங்கள் உற்றார் பெற்றாரிடத்தில் போய்வந்த பழக்கத்தினாலே லௌகிக புத்தியும் பற்றுதலும் அவர்களுக்கு உண்டாயின. இது இப்படியிருக்கச் சந்நியாசியானவன் தன் உற்றார் பெற்றார் ஆஸ்திபாஸ்தியில் விருத்தி அடையவும், உத்தியோகங்களில் உயரவும், அல்லது பணம் வியாபாரம் முதலிய விஷயத்தில் அவர்களுக்கு வந்த இக்கட்டுகளைத் தீர்க்கவும் ஆத்திரத்தோடு முயற்சி செய்கிறது எவ்வளவோ கேடு அபாயம் நிறைந்ததாயிருக்கிறது!

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—சர்வேசுரனுக்காக மாத்திரஞ் சீவிக்கவும், நாம் அர்ச்சியசிஷ்டவர்களாக வேணுமென்கிற அலுவலிலே நமது மன முழுதும் கவிழ்ந்திருக்கவும், உலகத்துக்கு மரித்தவர்களாய் இருக்கிறோமென்று எப்போதும் நினைத்துக்கொள்ளக்கடவோம். நமது உற்றார் பெற்றார்பேரில் எவ்வளவுக்கு ஏக்கமில்லாமல் இருப்போமோ, அவ்வளவுக்குச் சர்வேசுரன் அவர்களுடைய ஆத்தும சரீர நன்மைக்காக பொதுவிலே நாம் கேட்கிற மன்றாட்டுக்களைக் கட்டளையிடுவார். சுவிசேஷ ஞானத்துக்கு ஒத்த இந்தப் படிப்பினையின்படியே நாம் எப்போதும் நடந்து வருகிறோமோ?

மனப்பற்றுதல்.—முதல் பிரிவிலே சொல்லியிருக்கிறபடி செய்தல்.

பிரதிக்கினை.—தாய் தகப்பன் முதலிய பெந்துக்கள் துறவற ஸ்திதிக்கு ஒவ்வாத யாதொரு உதவி ஒத்தாசை கேட்கும்போதுங் குடும்பக்கவலைகளைப்பற்றி நம்மிடத்தில் இரகசியமாய்ச் சொல்லிக்கொள்ளும்போதும் நாம் அவர்களை நோக்கி: உங்களுக்காக இது விஷயத்தில் வேண்டிக் கொள்வோமென்றும், இதுதான் நம்மால் செய்யக்கூடிய உதவியென்றும் மாறுத்தாரமாகச் சொல்லக்கடவோம்.



## 3-ம் பிரிவு

### அவர்கள்பேரில் மிஞ்சின இரக்கம்

தியானம்.—தாய் தகப்பன் படுகிற வருத்தப் பெருக்கத்தைக் கண்டு மனதிரங்கிக் கஸ்திப்படுகிறது பொல்லாப்பான காரியமல்ல. ஆனால் அந்த இரக்கம் மிஞ்சி நமது மன அமரிக்கையைக் கெடுக்கவும், அவர்களுக்கு உதவி ஆறுதலாகும்படி நமது அந்தஸ்தில் நாம் தத்தளிக்கவும் அல்லது அதை விட்டுவிடவும் வழியாகுமானால், அப்படிப்பட்ட இரக்கங் கிரமந்தப்பினதாயிருக்கிறது மல்லாமல் குற்றமுள்ளதாயுமிருக்கும். இப்படி அவர்கள்பேரில் அதிக கவலை வைத்துக் கஸ்திப்பட்டதினால் அநேக சந்நியாசிகள் தங்கள் ஆத்தும நஷ்டம் அடைந்தார்களென்று வேதபாரகரான அர்ச். எரோனிமுஸ் எழுதியிருக்கிறார். ஆயினும் முடியாத சமயத்தில் தாயையாவது தகப்பனையாவது சந்நியாசியான பிள்ளை மாத்திரம் கைதூக்கிவிடக்கூடும்போது அப்படிச் செய்யக்கூடாதென்று இந்த அர்ச்சியசிஷ்டவர் கருதிச் சொல்லுகிறதில்லை.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—கிரமங் கடந்த தப்பின பட்ச பற்றுதலினாலே உண்டாகுங் கனத்த சோதனை நமக்கு எப்போதாகிலும் வருமாகில், நாம் தேவ வழியத்திலே நிலைத்திருக்க வார்த்தைப்பாடு கொடுத்திருக்கிறோமென்பதை நினைத்துக்கொள்வோமாக. மேலும் நாம் சர்வேசுரனுடைய சிநேகத்தைப்பற்றி சகலத்தையுந் துறந்துவிட்டோம் என்பதினாலே நமது பெற்றார் உற்றாருக்கு நேரிடும் அபாய இக்கட்டுகளிலே சர்வேசுரன் அவர்களைக் காப்பாற்றி இரட்சிப்பாரென்று நம்பிக்கையாயிருக்க வேணும்.

சம்பாஷணை.—யாவரும் பிரமிக்கத்தக்கவிதமாய் உலகத்தின்பேரிலும் தமது கோத்திரத்தின் பேரிலும் ஒரு பற்றுதலும் இல்லாமலிருந்த அர்ச். ஞானப்பிரகாசியாரோடு சம்பாஷணை செய்.

# 31-ம் தேதி

## இயேசுசபையை உண்டாக்கின அர்ச். இஞ்ஞாசியார் திருநாள்

ஆயத்தச் சிந்தனை.—அர்ச். இஞ்ஞாசியார் மோக்ஷத்தில் மகிமைப் பிரதாபமாய் வீற்றிருக்கிறதைப் பார்க்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

தியானச் செபம்.—தேவ வரப்பிரசாதத்துக்குப் பிரமாணிக்கமாய் நடக்கும்படி நமக்கு வரம் அடைந்தருள வேணுமென்று அவரை மன்றாடுவோமாக.

### முதல் பிரிவு

### தேவ வரப்பிரசாதம் அர்ச். இஞ்ஞாசியாரிடத்தில் செய்த ஆச்சரியமான வேலைப்பாடு

தியானம்.—நான் இப்போதிருக்குந் தன்மை தேவ கிருபையால்தான் இருக்கிறேன் என்று அர்ச். சின்னப்பர் தம்மைப் பற்றிச் சொன்னதை அர்ச். இஞ்ஞாசியாரைப் பற்றியுஞ் சொல்ல நியாயமுண்டு. ஏனென்றால் தேவ வரப்பிரசாதத்தின் வேலைப்பாடு இவரிடத்தில் மகா ஆடம்பரமாகவும் ஆச்சரியமாகவும் விளங்கினதுபோல அர்ச்சியசிஷ்டவர்களுக்குள்ளே சிலரிடத்திலே மாத்திரம் அருமையாய் விளங்கினது. வரப்பிரசாதமானது இவரிடத்தில் எப்படிப் படிப்படியாய்த் தன் கருத்தை நிறைவேற்றுகிறதென்று யோசித்துப்பார். பதினாறும் நூற்றாண்டில் முளைத்த பதிதமதம் எங்கும் பரவாதபடி தடுத்து அடக்கவும், அதினால் திருச்சபைக்கு வந்த சேதபாதங்களைப் பரிகரிக்கவும் அர்ச். இஞ்ஞாசியார் ஓர் புதுச் சந்நியாச சபையை ஏற்படுத்த வேணுமென்று சர்வேசுரன் நித்தியமாய்த் தீர்மானித்திருந்தார். ஆயினும் இவர் முப்பது பிராயம் வரையில் போர்வீர மகிமையைத் தேடித்திரிந்தா



ரொழிய மற்றப்படியல்ல. பம்பலூன் நகரத்துக் கோட்டையில் பட்ட காயத்தால் படுக்கையாய் விழாதிருந்தால், தமது ஆயுசுகாலமெல்லாம் உலக மகிமையென்னும் மயக்கத்திலே விழுந்து மடிந்திருப்பார். இவர் இப்படிக் காயம் பட்டுக் கிடக்கும்போதுதான் வரப்பிரசாதம் இவரிடத்தில் தன் கருத்தை முடிக்க இவரைத் தேடிப்போகிறது. எப்படியென்றால் முந்தமுந்த உலகமகிமை சலாக்கிய வீரமெல்லாம் நித்திரையில் கண்ட கனவுபோல் நிலையற்றதென்று தெளிவித்துக் கடின தவத்தால் தமது பாவங்களைப் பரிகரிக்கக் கருத்துந் தைரியமும் அவருள்ளத்தில் எழுப்பினது. அப்படியே அவர் மான்ரேஸ் என்னும் குகையிலே போய்ப் பத்து மாச காலங் கடின தபசு செய்துவரும்போது சர்வேசுரன் அவருக்குப் பற்பல தந்திரசோதனைகளையும் உந்நத காட்சிகளையும் அடிக்கடி அனுப்பி உள்ளாந்தரங்க ஜீவியத்திலும் ஆத்துமாக்களை நடப்பிக்கும் வித்தையிலும் அவர் தேர்ச்சி அடையப்பண்ணினார். அவர் அப்போது உண்டுபண்ணின ஞான ஒடுக்கமென்னும் அருமையான தியானப் புத்தகம் அவர் ஞானத்தில் தேர்ந்திருந்தாரென்பதற்குத் திருஷ்டாந்தமாயிருக்கிறது.

இன்னும் இவர் அப்போஸ்தலராகவும் அப்போஸ்தலத் தொழிலை நடத்தவேண்டிய கணக்கற்ற பேருக்கு ஞானத் தந்தையாகவும் வரப்பிரசாதம் இவரைத் தயார் பண்ணவேண்டியிருந்தது. ஆனால் இதற்கு வேண்டிய கல்வி கலைக்கியானம் இஞ்ஞாசியாரிடத்தில் இருந்ததில்லை. ஆகையால் தேவவரமானது அவர் கல்வி கற்கவேணுமென்றும், அதைச் சுளுவாய்க் கற்றுத் தேறும்படி பரீஸ் பட்டணத்து வித்தியாசாலைக்குப் போகவேணுமென்றும் அவரிடத்தில் வேகமான ஆவலைப் பிறப்பித்து அவ்விடத்துக்கு அவரை நடத்திக்கொண்டுபோனது. அவர் ஏற்படுத்த வேண்டிய சபைக்கு அஸ்திவாரமாகும்படி அவ்விடத்தில் கல்வியில் சிறந்த பண்டிதரான சில வாலிபரை இந்த வரப்பிரசாதமே தயார்செய்து அவர்கள் கையைப் பிடித்துக் கூட்டிவந்ததுபோல அவரிடத்தில் கொண்டு சேர்த்தது. இவர்களும் ஞான ஒடுக்கத்திலிருந்து

அடைந்த தேவ வரப்பிரசாதத்தினால் சர்வேசுரனுக்கு எப்போதும் ஊழியஞ் செய்யவேணுமென்கிற ஒரே ஞான சிந்தனையில் ஏகோபித்தார்கள். அதாவது அறவற வார்த்தைப் பாடுகளினால் தங்களை முழுதுஞ் சர்வேசுரனுக்குப் பலியாக்கி எத்திசையிலும் போய்ப் பிரசங்கிக்கவும் விசேஷமாய் வாலரைப் படிப்பிக்கவும் இயேசுநாதருடைய ஸ்தானாதிபதியாகிய அர்ச். பாப்பானவர் கையில் தங்களை ஒப்புக்கொடுக்கவேணுமென்கிற நோக்கங்கொண்டார்கள்! பின்னும் இவர்கள் தாங்கள் கொண்ட கருத்தை நிறைவேற்றும்படி தங்கள் சபை ஏற்பாட்டைச் சுருக்கமாய் மூன்றும் சின்னப்பரென்னும் பாப்பானவருக்குக் காட்டி இந்தச் சபைக்குப் பேர் இயேசுவின் படையணியென்று சொன்னபோது அவர் அதை வாங்கிப் பார்த்து, இதோ, சர்வேசுரனுடைய விரல் இங்கே இருக்கிறதென்றார். எப்போதுந் தேவ வரப்பிரசாதத்தால் நடத்தப்பட்ட அர்ச். இஞ்ஞாசியார் தாம் ஏற்படுத்திய இந்தச் சபையைப் பதினாறு வருஷகாலம் மகா சாமார்த்தியத் திறமையோடு ஆண்டு வந்ததினாலே திரிதெந்தென்னும் பட்டணத்தில் கூடின திருச்சபைச் சங்கத்தார் இதை மிகவும் கொண்டாடினார்கள். இந்தச் சபையும் உலகத்தின் கடைசி எல்லைமட்டும் விரைவாய்ப் பரம்பினது. இவர் மரித்து 53-ம் வருஷத்துக்குப்பின் இவருக்கு முத்திப்பேறுபெற்ற பட்டம் கொடுக்கப்பட்டது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—உன் ஆயுசில் இது வரையில் கடந்துபோன காலத்தையும், அதிலே விசேஷமாய் உனக்குத் தேவ அழைப்பின் ஆரம்பத்தையும் நாளாவட்டத்தில் நீ அதில் அடைந்த விருத்தியையும் மனதிலே வரப்பண்ணி யோசித்தால், ஒரு விசேஷ வரப்பிரசாதம் உன்னை ஏற்கனவே தன் வசமாக்கி எந்தச் சமயத்திலும் உன்னைத் தாங்கி நடத்திவந்ததென்று உணர்ந்துகொள்வாய்.

மனப்பற்றுதல்.—தேவ வரப்பிரசாதம் உனக்குச் செய்தவைகளைக் கண்டு ஆச்சரியப்பட்டுச் சர்வேசுரனுக்கு



நன்றியறிந்த தோத்திரஞ்செய்து மென்மேலும் அதிக நம்பிக்கை கொள்வாயாக.

பிரதிக்கினை.—தேவ வரப்பிரசாதம் உன்னிடத்தில் சப்திக்கும்போது கவனமாய்க் காது கொடுத்து முற்றிலும் அதற்கு அமைந்து நட.

## 2-ம் பிரிவு

### அர்ச். இஞ்ஞாசியார் தேவ வரப்பிரசாதத்தோடு ஆச்சரியமான விதமாய் இணங்கி நடந்தது

தியானம்.—தேவ வரப்பிரசாதத்தின் ஒளி இவர் உள்ளத்தில் பாய்ந்து இறங்கினவுடனே அதுமட்டுந் தம்மிடத்திலிருந்த பாவங்களைப் பரிகரிக்கவும், சர்வேசுரன் தமக்கு நியமித்த அந்தஸ்துக்குத் தக்க புண்ணியங்களைச் சம்பாதிக்கவும் ஏற்படுகிறார். ஆகையால் ஒருவரும் அறியாமல் தமது அரமனையைவிட்டுப் புறப்பட்டு, மோன்செராத்தென்னும் பட்டணத்துக் கோவிலிலே போய்த் தேவமாதாவின் பீடத்தில் தமது வாளைத் தொங்க வைத்துப் பிச்சைக்காரரைப்போல் உடுத்திக்கொண்டு அவர்களோடு தாமும் ஒருவராய் இரந்து சாப்பிட்டு வந்தார். அதன்பின் பொதுப் பாவசங்கீர்த்தனஞ் செய்யப்போய்க் கண்ணீர்விட்டுத் தேம்பித்தேம்பி அழுதபடியால் பாவசங்கீர்த்தனத்தை நிறுத்தி நிறுத்திச் செய்யவேண்டியதாயிற்று. பின்னும் மான்ரேசென்னுங் குகையில் ஒதுங்கித் தமது சரீரத்தைக் கடினமாய் உபாதித்துப் பயங்கரமான தபசு செய்தார். அதைச் சொல்லக்கேட்டாலே யாவருக்கும் மயிர் கூச்சலெடுத்து நடுக்கமுண்டாகும். இவ்விதமாய் இவர் புடமிட்ட தங்கம்போல இயேசுநாதரிடத்தில் புது மனுஷனாகி முழுதுந் தேவசிநேக அக்கினியால் பற்றியெரிந்து வேகமான சுறுசுறுப்போடு பிறர் ஆத்தும இரக்ஷணிய அலுவலுக்குத் தம்மைக் கையளித்தார். ஆனால் இந்த அலுவல் பூரணமாய்க் கைகூடும்படி முந்தமுந்த ஆல்காலா பட்டணத்தில் இலத்தீன் இலக்கியங்களையும்,

பின்பு பரீஸ் பட்டணத்தில் மேலான சாஸ்திரங்களையும் படிக்கத் துவக்கினார். ஒரே தொடர்ச்சியான இந்தக் கல்வி கலைக்கியானங்களையெல்லாம் நீண்ட காலம் படிக்கிறதிலேயும், விசேஷமாய்த் தேவ ஏவுதலை அனுசரித்து அர்ச். பாப்புவின் அனுமதியோடு தாம் துவக்கின புதுச்சபைக்கு வேண்டிய ஒழுங்கு சட்டதிட்டங்களை ஏற்படுத்துகிறதிலேயும் தமக்கு நேரிட்ட விக்கினமெல்லாம் அஞ்சாத துணிவோடு செயித்துக்கொண்டார். இந்த ஒழுங்கு சட்டங்களை எழுதும்போது தாம் அதில் நிருபிக்கிறதெல்லாம் தேவ சித்தத்துக்கு ஒத்ததாகவும், சர்வேசுரனுக்கு அதிக மகிமை வருவிக்க ஏதுவாகவும் வேணுமென்று மனுஷ சஞ்சாரமில்லாத ஓரிடத்தில் போய் ஒருசந்தி பிடித்து செபத்தியானஞ் செய்து ஏகாந்தமாயிருந்தார். சர்வேசுரனுடைய அதிமிக மகிமை என்னும் இந்த வாக்கியம் இந்த மகாத்துமாவுக்குப் போர் விருதாக இருந்ததுமன்றி இவருடைய சபை ஏற்பாட்டில் 360 முறை திரும்பத்திரும்ப வருகிறதென்று பலருங் குறித்துக்காட்டியிருக்கிறார்கள். இவர் உலக மகிமைக்குஞ் சுய பட்சத்துக்கும் அடுத்த சகல விசாரங்களுக்கும் முற்றும் மரித்தவராகிச் சர்வேசுரனுக்கு மாத்திரமே சீவித்தது இதற்குக் காரணமாகும். இதெல்லாம் இவர் தேவ வரப்பிரசாதத்துக்கு இணங்கித் தளராத பிரமாணிக்கத்தோடு நடந்ததினால் வந்த பலனாமே.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.— அர்ச். இஞ்ஞாசியாரைக் கண்டுபாவித்து நாமுந் தாராள குணத்தோடும் நிலைமையான மனதோடுந் தேவ வரப்பிரசாதத்துக்கு இசைந்து நடக்கக்கடவோம். இப்படிச் செய்வோமானால் இந்த வரப்பிரசாதம் நமக்கு உண்டாகுஞ் சந்தேகங்களில் ஆலோசனையும் வருத்தங்களில் ஆறுதலும் ஞான யுத்தத்திலே உறுதி பலமுமாயிருக்கும். கடைசியாய் ஆரார் இந்தப் பிரசாதத்தை வழித்துணையாகப் பின்பற்றி எல்லாவற்றிலுஞ் சர்வேசுரனுடைய அதிமிக மகிமையைத் தேடுவார்களோ அவர்கள் யாவருக்கும் வாக்குத்தத்தஞ் செய்யப்பட்ட பிரதாப முடியை தாமும் அடையச்செய்யும்.



சம்பாஷணை.— அர்ச். இஞ்ஞாசியாரோடு சம்பாஷணை செய்.

அர்ச். சவேரியார் தமக்குச் சிரேஷ்டராயிருந்த அர்ச். இஞ்ஞாசியாருக்குக் காகிதம் எழுதும்போதெல்லாம் அதின் முடிவில் சேர்த்த செபத்தை இந்தச் சல்லாபத்திலுங் கோர்க்கலாம். அந்தச் செபமாவது: என் ஆத்தும பிதாவே, நான் எல்லாவற்றிலுந் தேவ திருவுளத்தை அறிந்து நிறைவேற்றும்படி வேண்டிய அனுக்கிரகத்தைச் சர்வேசுரன் கட்டளையிட்டருள அவரை இடைவிடாமல் எனக்காக மன்றாடவேணுமென்று உமது பாதத்தில் விழுந்து உம்மைப் பிரார்த்திக்கிறேன் என்பதேயாம்.

# ஆகஸ்டு மாதம்

## முதல் தேதி

### வித்தின் உவமை

**ஆயத்தச் சிந்தனை.**—இயேசுநாதர் படகில் உட்கார்ந்து கரை நெடுகக் கூடியிருந்த ஜனங்களுக்குப் புத்தி சொல்லுகிறதைப் பார்க்கிறதாக ரூபிகரித்துக் கொள்.

**தியானச் செபம்.**—இந்த உவமையில் இயேசுநாதசுவாமி நினைத்த பலனை நீ அடையும்படி வரப்பிரசாதங் கேட்பாயாக.

### முதல் பிரிவு

#### வழிப்பாதையில் விழுந்த விதையின்பேரில்

**தியானம்.**—இயேசுநாதசுவாமி பிரசங்கித்த இரண்டாம் வருஷத்தின் மத்தியில் சனங்களுக்குச் சாதாரணமும் பிரியமுமாயிருக்கிற உவமைகளினாலே மேலான சத்தியங்களை அவர்களுக்கு உபதேசிக்கச் சித்தமானார். அந்த உவமைகளில் சிறந்தவைகளுக்குள் இந்த வித்தின் உவமையும் ஒன்றாம். அதாவது ஒருவன் விதை விதைக்கப் புறப்பட்டான். அப்படியே அவன் விதைக்கிறபோது சில விதை வழியோரத்தில் விழுந்து மிதிபட்டது. ஆகாயத்துப் பறவைகள் அதைப் பட்சித்துப்போட்டது. சில கற்பாறையில் விழுந்து முளைத்தது ஆயினும் ஈரமில்லாமையால் காய்ந்து போயிற்று. (லூக். 8).

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—இந்த முந்தின பாகத்தில் நமது அநுசரணைக்குரிய கருத்தை நிதானித்துப் பார்ப்போமாக. இந்தக் கருத்து ஏதென்று இயேசுநாதர்தாமே சொல்லிக் காட்டுகிறார். அதாவது



விதையானது தேவ வாக்கியமாம். வழியோரத்தில் விழுந்த விதையினால் குறிக்கப்பட்டவர்கள் இவ்வாக்கியத்தைக் கேட்கிறவர்களாம். ஆனால் அவர்கள் விசுவசித்து இரக்ஷணியம் அடையாதபடி உடனே பசாசு வந்து அவர்கள் இருதயத்தினின்று அவ்வாக்கியத்தைப் பறித்துக்கொள்ளும் என்றார். (லூக். 8). கற்பாறையின்மேல் விழுந்த விதையினால் குறிக்கப்பட்டவர்கள் இவ்வாக்கியத்தைக் கேட்டபோது சந்தோஷத்தோடு அங்கீகரித்துக்கொள்ளுகிறவர்களாம். ஆனால் அவர்கள் இருதயத்தில் அது வேர் ஊன்றாததால் சில காலத்துக்கு விசுவசித்து சோதனை காலத்தில் பின்வாங்குகிறவர்களாம். ஆனதால் தேவ வாக்கியத்தைத் தியானிக்கிறதினாலே நாம் அடையவேண்டிய பலனை அடையாதபடிக்கு இரண்டு காரியம் விக்கினமாயிருக்கிறதென்று தெளிவாகிறது. முதலாவது நமது மனதிலுள்ள நல்ல நினைவெல்லாம் பசாசு பறித்துக்கொண்டு போவதற்கு ஏதுவான பராக்குகளும், 2வது, அந்த நல்ல நினைவுகள் நமது மனதில் பதிந்து வேர் ஊன்றாதபடி தடையாயிருக்கிற இருதய வறட்சியுங் கல்நெஞ்சத்தனமுமாம். இதை ஆழ்ந்து யோசிப்பாயானால் இது உண்மையென்று கண்டுகொள்வாய்.

**மனப்பற்றுதல்.**—நீ எப்போதும் பராக்காயிருக்கிறதையும் இருதயம் வறண்டு உணர்ச்சியற்றிருக்கிறதையுங் கண்டு சர்வேசுரன் சமுகத்தில் பிரலாபித்து உன்னைத் தாழ்த்தக்கடவாய்.

**பிரதிக்கினை.**—ஞானக் காரியங்களில் கவனங்கொள்ளும்படி பராக்குகளை ஒழிக்கவும் மன உருக்கம் அடையவுந் தனி ஆத்தும சோதனை செய்து பிரயாசப்படுவாயாக.

### 2-ம் பிரிவு

#### முள்ளுக்கள் நடுவே விழுந்த விதையின்பேரில்

**தியானம்.**—விதைத்த விதைகளில் வேறு சிலது முள்ளுக்கள் நடுவில் விழுந்தது; ஆனால் முள்ளுக்களுங் கூட எழும்பி அதை அமுக்கிப்போட்டனவென்று இயேசுநாதர்

திருவுளம்பற்றினார். இதின் கருத்து ஏதென்று அப்போஸ்தலர்கள் கேட்டதற்குத் திவ்விய கர்த்தர் அருளிச்செய்ததாவது: முள்ளுக்கள் நடுவே விழுந்த விதை சில இருதயங்களில் விழுந்த தேவ வாக்குக்குக் குறிப்பாயிருக்கின்றது. ஆனால் அது பிரபஞ்சக் கவலையினாலும், செல்வத்தாலும் சீவியத்தின் இன்ப சுகங்களாலும் அமுக்கப்பட்டுப் போகிறதினால் ஒரு பலனுந் தருகிறதில்லை என்றார் (லூக். 8).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—உலகத்தின் சகலவித கவலைகளுக்கும் நடுவே சீவித்துத் தங்கள் ஈடேற்ற வேலையை முடிக்கவேண்டியிருக்கிற கிறீஸ்துவர்களுடைய ஸ்திதியைக் கண்டு மனமிரங்கக்கடவோம். தேவ வாக்கியத்தை மாறாத கவனத்தோடு கேட்டு அதற்கொத்தபடி நடப்பதற்கு எத்தனையோ விக்கினங்கள் ஓயாமல் புதிது புதிதாய் அவர்களுக்கு வந்து கொண்டேயிருக்கின்றன. இதினாலேதான் அநேகரிடத்தில் விசுவாசமானது நெருக்கப்பட்டு மடிந்ததுபோல் இருக்கின்றது. நாம் மகா வருத்த பிரயாசத்தோடு உலக கவலை விசாரங்களுக்குத் தப்பி வந்திருக்கத் திரும்பவும் அவைகளில் விழுந்து சிக்கிக்கொள்ள நினைத்தாற்போல அவசரமின்றி அவர்களை இவர்களைப் பார்க்கும்படி மடத்துக்கு வெளியே அடிக்கடி சுற்றித்திரிகிறதும், செய்திப் பத்திரிகைகளை வாசிக்கிறதிலும் நாள் சமாச்சாரங்களைக் கேட்கிறதிலுங் கவனத்தைச் செலுத்திப் பொழுதைப் போக்குகிறதும், நமது பெற்றார் உற்றார் தாங்கள் உத்தியோகம் ஆஸ்தி பாஸ்தி அடைகிறதற்காகச் செய்கிற முயற்சி வழிவகைகளையுங் குடும்பத்திலுள்ள விசன மனஸ்தாபங்களையும் நாம் விசாரிக்கிறதும், அவர்கள் தங்கள் வீட்டுக்காரியங்களில் நாம் கரிசனம் கொள்ளும்படி தேடும்போது நாம் வலிய உடன்பட்டு இடங்கொடுக்கிறதும் ஆகிய இத்தொகைப்பட்டதெல்லாஞ் செய்வோமேயானால் நமக்கே நாம் சத்துராதிகளாகி எவ்வளவோ மதியீனராகிறோம். இப்படி நாம் பசாசின் வலையில் சிக்கிக்கொள்வோமானால் நமது ஸ்திதியும் உலகத்தாருக்கு ஒப்பந்தமாகி ஞானத்தில் விருத்தி அடையவேணு



மென்கிற ஆவலும், துறவற அந்தஸ்தின் ஒழுக்கமும் முள்
ளுக்கள் நடுவே அகப்பட்ட பயிர்போல் அமுக்கப்பட்டு
மடிந்துபோமென்பதற்குக் கேட்கவேணுமோ? ஆகையால்
நாம் எப்போதும் நமதுபேரில் எச்சரிக்கையாயிருக்கவே
ணும். எப்போதும் இப்படி நடந்தோமோ?

மனப்பற்றுதல்.—பசாசின் கண்ணிகளை அறிந்து
அவைகளுக்குத் தப்பித்துக்கொள்ளும்படி வரங் கேட்போ
மாக.

பிரதிக்கினை.—நமது அந்தஸ்தையும் நமக்குக் கொடுக்
கப்பட்ட அலுவலையுஞ் சாராத புறத்திக் காரியங்களிலே
நாம் பிரவேசியாதபடி அச்சத்தோடுஞ் சாக்கிரதையோடும்
விலகுவோமாக.

## 3-ம் பிரிவு

### நல்ல நிலத்தில் விழுந்த விதையின்பேரில்

தியானம்.—கடைசியாய் விதைத்த விதையில்
வேறொரு பங்கு நல்ல நிலத்தில் விழுந்து முளைத்து ஒன்
றுக்கு நூறாகப் பலன் கொடுத்தது. (லூக். 8). இதற்கும்
ஆண்டவர் சொன்ன வியாக்கியானத்தைக் கேள். நல்ல
நிலத்தில் விழுந்த விதையினால் குறிக்கப்பட்டவர்கள் யாரெ
னில் சீரும் நேர்மையும் பொருந்திய இருதயத்தோடு தேவ
வாக்கியத்தைக் கேட்டு அதை மனதில் பதித்துக் காப்பாற்றி
ஒன்றுக்கு முப்பதும் அறுபதும் நூறுமாகத் தங்கள்
பொறுமையால் பலன் கொடுக்கிறவர்களாம். (மாற். 4).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நாம்
இப்போது சொல்லப்பட்டவர்களுடைய கணக்கிலிருக்க
ஆசைப்படுகிறோமல்லவோ? இதற்குச் செய்யவேண்டியதே
தென்று இயேசுநாதர் சொல்லியிருக்கிறதைக் கேள். கிரம
மற்ற ஆசைப்பற்றுதல் இல்லாத இருதயத்தோடும்,
உண்மையை அறியவேணுமென்கிற அத்தியந்த ஆவலோ
டும், அதின்படி நடக்கவேணுமென்கிற திடமான மனசோ
டுந் தேவ வார்த்தையைக் கேட்டுத் தியானிக்கவேண்டியது.
ஆனால் நாம் வழக்கமாய் இப்படி நடக்கிறோமோ? எந்த

விஷயத்தில் இப்படி நடக்கக் கூடுமென்றும் எதில் இன்னம் நன்றாய்ச் செய்யக்கூடுமென்றும் பார்ப்போமாக.

சம்பாஷணை.—நமது திவ்விய குருவோடு சம்பாஷணை செய்வோமாக.

---

## 2-ம் தேதி

### திவ்விய இரட்சகருடைய சபையை உண்டாக்கின அர்ச். அல்போன்சு லிகோரியார் திருநாள்

ஆயத்தச் சிந்தனை.—இவர் பரிசுத்த தேவமாதா சுரூபத்துக்கு முன்பாகப் பரவசமாயிருக்கிறதைப் பார்க்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

தியானச் சேபம்.—இவர் நடந்து காட்டின மார்க்கமாய் நீயும் நடக்க வரப்பிரசாதங் கேள்.

### முதல் பிரிவு

**இந்த அர்ச்சியசிஷ்டவர் தம்மைப்போல நாமும் வேலை செய்து உழைக்கும்படி தூண்டுகிறார்**

தியானம்.—அர்ச்சியசிஷ்டவர்களுடைய சரித்திரத்திலே நமக்கு புத்திமதியுமல்லாமல் தென்பும் உண்டாகும்படி தேடவேண்டியது. இந்தத் தென்பு உண்டாவதற்கு உதவியான அநேக விஷயங்கள் அர்ச். அல்போன்சுடைய சரித்திரத்தில் காணலாம். நாம் துவக்கியிருக்கிற இந்தக் கஷ்டமான ஜீவிய அந்தஸ்திலே நமக்குப் பல தடவைகளில் வெகு தென்பு அவசரமாயிருக்கிறதன்றோ? இது நமக்குக் கிடைக்கும்படி இந்த அர்ச்சியசிஷ்டவர் செய்துவந்த வேலைகளை யோசித்துப் பார்க்கக்கடவோம். இவர் குருப்பட்டம் பெற்றது முதற்கொண்டு தள்ளாத விருத்தாப்பிய காலம் வரையில் பிரசங்கிக்கிறதிலும், பாவசங்கீர்த்தனம், தியானங் கொடுக்கிறதிலும் விடாமல் உழைத்துவந்தார். இவைகளைச் செய்துகொண்டே பதின்மூன்று வருஷமாய்த் தமது மேற்றிராசனத்தை ஆண்டு வந்ததுமல்லாமல் தாம் ஏற்படுத்தின சபையையும் நாற்பத்திரண்டு வருஷகாலம் நடப்பித்து வந்தார். இந்த வேலையெல்லாம் ஒரே ஆள் செய்து வருவது கடினம்; ஆயினும் அர்ச். லிகோரியார் ஒரு நிமிஷமாவது வீணாய்ப் போக்கமாட்டேனென்று வார்த்தைப்பாடு செய்திருந்ததினாலே அவர் அநேகாநேக சில்லறைப் புஸ்தகங்களை எழுதினதுமல்லாமல் ஐம்பத்திரண்டு பெரியபிரபந்தங்களையும் இயற்றுகிறதற்கு நேரம் தேடிக்கொண்டார். இவர் எழுதிய அறநெறிசாஸ்திரம், மரியாயின் வல்லபம் முதலியவைகளில் பேர்போன கிரந்தகர்த்தாக்களுடைய வசனங்களை அங்கங்கே சேர்த்திருக்கிறதினால் அறநெறிசாஸ்திரத்தின்மேலும், தேவமாதாவின்மேலும் அதற்குமுன் எழுதப்பட்ட பிரபந்தங்களை எல்லாம் வாசித்திருந்தாரென்று நினைக்கவேண்டியிருக்கிறது. கடைசியாய் இவ்விதம் உழைத்து வெகு தேகப்பலவீனராயிருந்தாலும் தொண்ணூறு பிரயமட்டும் உயிரோடிருந்தார்.



இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—தங்கள் சரீர சௌக்கியத்தின்பேரிலேயே கண்ணாயிருக்குஞ் சில சந்நியாசிகளுடைய அலங்கோலைக்கு நீயும் ஆளாகாதபடி எச்சரிக்கையாயிரு. அவர்கள் வேலையைக் கண்டால் நழுவி கனத்ததும் கஷ்டமுமான காரியத்தில் கை வைக்கத் துணியார்கள். பூமிக்குப் பாரம், சோற்றுக்குச் சேதம் என்கிற பழமொழிப்படி மடத்துக்குந் தங்களுக்கும் வெட்டிச்சுமையாகிறார்கள். நீ அவர்களைப்போல் நடவாமல், தங்கள் தேகம் எவ்வளவு பஞ்சையாயிருந்தாலும், உடலில் ஒட்டின உரோகத்துக்கு வேலையே பரம அவுழ்தமென்று உழைத்துவரும் உத்தம சந்நியாசிகளைக் கண்டு பாவிக்கக்கடவாய். ஒரே ஒழுங்குக்கிரமமான வேலை தீர்க்காயுசு கொடுக்கும். இதற்கு இந்த அர்ச்சியசிஷ்டவரே திருஷ்டாந்தம்.

மனப்பற்றுதல்.—இந்த மகாத்துமா செய்துவந்த மிகுந்த நன்மைக்காகச் சர்வேசுரனுக்குத் தோத்திரஞ்செய். தாராள குணத்தோடு ஒழுங்குத்திட்டமாய் வேலைசெய்யும் மனதைக் கேட்பாயாக.

**பிரதிக்கினை.**—தேக சௌக்கியம் கெட்டுப்போமென்கிற வீண் பயத்துக்கு இடங்கொடாதே.

## 2-ம் பிரிவு

### அர்ச். லிகோரியார் நமது உள்ளத்தில் ஞான வேகப் பற்றுதலை எழுப்புகிறார்

**தியானம்.**—இவர் தமது சீவிய காலமெல்லாம் பிறர் ஈடேற்றக் கவலையால் ஓய்வின்றி உழைத்துக்கொண்டுவந்தார். நெயாப்பொலி இராச்சியத்தைச் சேர்ந்த பட்டணம் பட்டிகளெல்லாம் சுற்றித்திரிந்து வெகு பிரயாசப்படுவார். இவருடைய மேலான ஆவலுக்குச் சம்பாவனையாகக் கடின பாவிகளை முதலாய் மனந்திருப்பவும் பிரஸ்தாபமான புதுமைகளைப் பலமுறை செய்யவும் பேறுபெற்றார். இவருக்கு அர்ச்சியசிஷ்டபட்டங் கொடுக்கிறதற்காகச் செய்த விசாரணையிலே நூற்றுக்கு அதிகமான அற்புதங்கள் இவர் செய்ததாக ருசுவாக்கப்பட்டது. இவர் திவ்விய பூசை செய்யும்போதும் பிரசங்கம் பண்ணும்போதுஞ் சில சமயத்தில் பூமியைவிட்டு ஆகாசத்தில் நிற்கவுங் கண்டார்கள். சில சமயத்திலே இவர் பிரசங்கத்தைத் திடீரென நிறுத்தி வெகு துலையிலே மரணமடைந்த யாதொரு கனவானுக்காக வேண்டிக்கொள்ளச் சொல்லுவார். அநேகந் தருவாயிலே அவரிடத்தில் ஆலோசனை கேட்க வந்தவர்கள் தங்கள் உள்ளாந்தரங்கத்தில் மறைத்து வைத்ததைத் திறந்து காட்டினார். பலமுறை அசாத்திய வியாதியஸ்தரைச் சிலுவை அடையாளத்தினால் சொஸ்தப்படுத்தினார். சில சமயத்தில் ஒரே நேரத்தில்தானே தூரமான இரண்டு இடத்திலும் இவர் இருந்ததாகக் கண்டார்கள். அப்படியே ஒரே பொழுதில் நெயாப்பொலி பட்டணத்திலே இவர் இருக்கிறதாகவும் அந்த நேரத்திலேயே உரோமாபுரியில் மரண அவஸ்தையாயிருந்த 14-ம் சாந்தப்பரென்னும் பாப்பானவருக்கு ஆறுதல் சொல்லிக்கொண்டிருக்கிறதாகவுங் காணப்பட்டார்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—சர்வேசுரனிடத்திலே கனமான சகாயம் அடையவேணுமானால்



இவரைப்போல நம்முடைய ஞான வேகப்பற்றுதலைக் காட்டக்கடவோம். அநேக விதமாய் இதை நாம் காண்பிக்கலாம். எப்படியானாலும் இந்த மகாத்துமாவின் பாவனையாகத் தேவதோத்திரத்தையும் பிறர் ஈடேற்றத்தையும் மாத்திரம் நாம் பாராட்டி நேர்மையான கருத்தோடு நமது அலுவல்களைச் செய்யக்கடவோம். நாம் எப்போதும் இப்படி நடந்தோமோ?

**மனப்பற்றுதல்.**—ஆண்டவருடைய திராட்சத் தோட்டத்திலே நாம் நெடுங்காலம் அதிக பிரயாசப்படவும் மிகுந்த பலனடையவும் அநுக்கிரகத்தைக் கேட்போமாக.

**பிரதிக்கினை.**—பிறர் இரட்சணிய அலுவலிலேயுஞ் கிர்த கிரியைகளிலேயும் நாம் படும் பிரயாசத்துக்குச் சம்பாவனையாக வரப்போகிற மோக்ஷபாக்கியத்தை நினைத்து அவசியமானபொழுது நம்மைத் தைரியப்படுத்திக்கொள்வோமாக.

## 3-ம் பிரிவு

### அர்ச். லிகோரியார் தேவமாதாவின்பேரில் நம்மிடத்தில் பத்தியை மூட்டுகிறார்

**தியானம்.**—இந்த அர்ச்சியசிஷ்டவரைப்போல் தேவமாதாவின்பேரில் அவ்வளவு உருக்கமான சிநேகம் வைத்தவர்களும் தாங்கள் செய்த பிரசங்கங்களினாலேயும் எழுதின புஸ்தகங்களினாலேயும் இந்தப் பரம நாயகியின் வணக்கம் எங்கும் பரம்பி ஓங்க ஏதுகரமானவர்களும் அர்ச்சியசிஷ்டவர்களுக்குள்ளே முதலாய்க் கொஞ்சம்பேரென்று சொல்லத்தகும். மேலும் இவர் உண்டாக்கின புஸ்தகங்களுக்குள் மரியாயின் வல்லபம் என்னும் ஒப்பற்ற புஸ்தகத்தில் கல்வித் திறமையும் பத்தியின் பரிமளமும் ஒன்றையொன்று மேவிட்டுப் போகிறது. இது எவ்வித பாஷைகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுப் பரலோக இராக்கினியின்மேல் பத்தி எங்கும் இன்னம் அதிக பிரபல்யம் பெறும்படி செய்கிறது. இந்த ஆண்டவளும் அதற்கு ஈடாக அவரை உச்சிதமான தேவ வரங்களினால் நிரப்பி மனிதருக்குள்ளே

அவரை மகிமைப்படுத்தச் சித்தமானாள். அப்படியே அவர் ஓர் சமயத்தில் அமால்பி என்கிற பட்டணத்திலே திரளான சனங்களுக்குப் பிரசங்கித்து அர்ச். கன்னிமரியாயை வாழ்த்தும்போது, இருந்தாற்போல் பிரசங்கத் தொட்டிக்குமேல் சில அடி உயரம் அந்தரமாய் நிற்கிறதையும், அக்கோவில் தேவமாதா சுரூபத்தினின்று புறப்பட்ட பிரகாசக்கதிர் இவரைச் சுற்றி வீசுகிறதையும் எல்லாருங் கண்டு ஆச்சரியப்பட்டார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—தேவமாதாவின்பேரிலே பிள்ளைக்குரிய சிநேக உணர்ச்சிகள் நம்மிடத்தில் பலமாய் வளரப் பிரயாசப்படுகிறதுமல்லாமல் மற்றவர்களிடத்திலும் அந்தப் பத்தி உண்டாகும்படி பிரயத்தனம் பண்ணக்கடவோம். இப்படிச் செய்தால் தாய் நேசம் பொருந்திய அவளுடைய வல்லமையின் பயன் இன்னதென்று விசேஷமான விதமாய்க் கண்டறிவோம்.

சம்பாஷணை.—அர்ச். அல்போன்சு லிகோரியாரோடு சம்பாஷணை செய். இவர் செய்த கணக்கற்ற நன்மைகளுக்காகவுந் தளராத பத்திவைராக்கியமுள்ள தமது சபையாரால் இதுவரையில் செய்விக்கிற நன்மைகளுக்காகவும் அவரை வாழ்த்திப் புகழக்கடவோம். அவரிடத்தில் விளங்கின திடன், பத்திவைராக்கியம், பிறசிநேகம், பரமநாயகியின்மேல் உருக்கமான பத்தி முதலியவைகளில் சிறிதளாவது நமக்கு அடைந்தருளும்படி அவரை மன்றாடுவோமாக.



# 3-ம் தேதி

## நல்ல விதை, களைகள் இவைகளின் உவமை

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதர் இந்த உவமையைத் திருவுளம்பற்றி வியாக்கியானஞ் செய்கிறதைப் பார்க்கிறதாக ரூபிகரித்துக்கொள்வாயாக.

தியானச் செபம்.—இதின் கருத்தை ஆழ்ந்து அறியவும் இதினால் புத்தி படிப்பினை அடையவும் வரங் கேட்பாயாக.

### முதல் பிரிவு

### இயேசுநாதர் இந்த உவமையைச் சொல்லி இதற்கு வியாக்கியானஞ் செய்ததின்பேரில்

தியானம்.—பரலோக இராச்சியம், அதாவது திருச்சபையானது தன் நிலத்தில் நல்ல விதையை விதைத்த மனிதனுக்கு ஒப்பாயிருக்கின்றது. ஆனால் ஊழியர் நித்திரை செய்கையில் சத்துராதி வந்து, கோதும்பை நடுவில் களைகளையும் விதைத்துவிட்டுப் போனான். ஆதலால் பயிர் வளர்ந்து கதிர் விட்டபோது களைகளுங் காணப்பட்டன. அதைக் கண்ட ஊழியர் எசமானை நோக்கி இந்தக் களைகளைப் பிடுங்கிப்போடலாமோவென்று கேட்க, அவன் மறுமொழியாக, வேண்டாம்; களைகளைப் பிடுங்கும்போது கோதும்பையும் வேர்விட்டுப் போகாதபடி இரண்டையும் அறுப்புக்காலம் வரைக்கும் விளையவிடுங்கள்; பின்பு அறுப்புக்காலத்தில் நான் அறுப்புக்காரரைப் பார்த்து: நீங்கள் முந்தமுந்தக் களைகளைப் பிடுங்கி அவைகளைச் சுட்டெரிப்பதற்குக் கட்டுகளாகக் கட்டுங்கள். கோதும்பையையோவெனில் என் களஞ்சியத்திலே சேர்த்துவையுங்கள் என்பேனென்று சொன்னதாக இயேசுநாதர் அருளிச்செய்தார். (மத். 13.)

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நமது ஆண்டவர் திருவாய்மலர்ந்து அருளிய இந்த உவமையை

ஆழ்ந்து யோசித்துப்பார். பின்னுந் திவ்விய கர்த்தர்தாமே அப்போஸ்தலர்களுடைய விண்ணப்பத்திற்கு இரங்கி இதை வியாக்கியானஞ் செய்திருக்கிறதைக் கேள். நல்ல விதை விதைத்தவன் மனுமகன்தான். பயிர் நிலமோ, இப்பூலோகமாம். நல்ல விதை பரலோக இராச்சியத்தின் புத்திரர்களாம். களைகளோ துன்மனப் பசாசின் பிள்ளைகளாம். அதை விதைத்த சத்துராதி ஆரெனில் பசாசுதான். அறுப்புக்காலமானது உலகத்தின் முடிவு. அறுப்புக்காரர்கள் ஆரென்றால் சம்மனசுகள்தான். மனுமகன் தன் தூதர்களை அனுப்பவே அவர்கள் அவருடைய இராச்சியத்திலுள்ள துர்மார்க்கரையும் பாவ அக்கிரமிகளையும் அதினின்று அப்புறப்படுத்தி அக்கினிச் சூளையில் தள்ளுவார்கள். அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும். அப்போது நீதிமான்கள் தங்கள் பிதாவின் இராச்சியத்திலே சூரியனைப்போலப் பிரகாசிப்பார்கள். (மத். 13.) இதில் அனுசரிக்கத்தக்கது ஏதென்றால் இயேசுநாதர் உன் பரிசுத்த சந்நியாச அந்தஸ்தின் விலையுயர்ந்த விதையை உன் இருதயத்திலே விதைத்து முளைக்கச் செய்ததற்கும், களையைப்போலொத்த உலகமாய்கையினின்று உன்னைக் காப்பாற்றினதற்கும் நன்றியறிந்தவனாயிரு. ஆகிலும் பயமற்று மிஞ்சின துணிகரங்கொள்ளாதே. ஏனென்றால் மடத்துக்குள்ளே முதலாய்ப் பசாசு நுழைந்து பாவம் அல்லது ஞான அசட்டைத்தனம் என்கிற களைகளை விதைக்கக்கூடும். உன்னிடத்திலுஞ் சிலவேளை இப்படிச் சம்பவித்திருக்கிறதாக்கும். ஆயினும் உன்னுடைய அச்சம் மிஞ்சிக் கோழைத்தனமாகவும்படாது. ஆகையால் பொதுத்தீர்வை நாளில் நடக்கப்போகிற வர்த்தமானங்களையும், தேவ வரப்பிரசாத ஏவுதல்களுக்கும் தங்கள் பரிசுத்த அந்தஸ்துக்கும் ஒத்து நடப்பவர்களுக்குக் கிடைக்குஞ் சம்பாவனையையும், நடவாதவர்களுக்கு வருந் தண்டனையையுந் தியானித்துப் பார்த்து, வேண்டிய சமயத்தில் மனத்தைரியம் வருவித்துக் கொள்வாயாக.

**மனப்பற்றுதல்.**—நீ உன்னைத்தானே அறிந்து உன்மேல் நம்பிக்கை வைக்காதிருக்கவும், தாராள மனதையும்



கடைசி நிலைமை வரத்தையும் உனக்கு ஆண்டவர் கட்டளையிடவும் மன்றாடு.

**பிரதிக்கினை.**—உலக துர்ப்புத்திக்கும் பசாசின் துர்விசாரத்துக்கும் இடங்கொடாதே.

## 2-ம் பிரிவு

### இந்த உவமைக்த விசேஷ வியாக்கியானம்

**தியானம்.**—நல்லவிதையுங் களைகளும் முளைக்கிற நிலம் சந்நியாச மடங்களென்றுஞ் சொல்லலாம். நல்ல விதை அல்லது கோதும்பையாகிறதேதென்றால் ஞான வேகமுள்ள சந்நியாசிகளாம். இவர்கள் தங்கள் பரிசுத்த அந்தஸ்தின் உத்தம குணசாரம் நிறைந்தவர்களாய்ச் சாங்கோபாங்கம் அடையும்வரையில் தருமத்தில் நாளுக்குநாள் வளருகிறார்கள். கெட்டவிதை அல்லது களைகள் ஏதென்றால் தங்களுடைய கசடுமுசுடான குணத்தினாலே மற்றவர்களுக்கு இடைஞ்சலாய் அவர்கள் வேலையைக் கலைத்து அவர்களை வருத்தப்படுத்துகிறவர்களும், தங்கள் ஒழுங்கீனத்தினாலேயுஞ் சீரற்ற பேச்சு மாதிரிகையினாலேயும் நல்லவர்கள் தருமத்தில் வளராதபடி தடைசெய்து பலவீனரை அவலபாதையில் இழுக்கிறவர்களும் இந்தக் கெட்ட வித்துக்குச் சமானமானவர்களாம்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—இதிலே நமது அநுசரணைக்கான யோசனைகள் அநேகமுண்டு. முதலாவது: உனக்கு மற்றவர்கள்மேல் அதிகாரமாவது மேல் விசாரணையாவது இருந்தால் உனக்குக் கீழாயிருக்கிறவர்களிடத்திலே தோன்றுங் குற்றங் குறைகள் பெரிய காரியமல்லவென்று பராமுகமாயிராதே. தின்மையானது களைக்கு ஒப்பந்தமாய் நாளுக்குநாள் வளர்ந்து வேரூன்றிப் போகிறதினால் பிடுங்குகிறதற்கு வருத்தமாயிருக்கும். 2வது, உனக்கு அதிகாரமில்லாதபோது உன் சகோதரரில் யாதாமொருவர் மேற்கூறிய ஆகாத சந்நியாசிகளுடைய கணக்கில் ஏறத்தாழச் சேருகிறதாகக் கண்டால் அவரை நல்லவராக்க உன்னால் கூடிய பிரயாசப்படு. ஆனால்

ஆத்திர வேகங்கொண்டு மனங்கசந்து, சுவாமி, இவனை இந்த உலகத்தினின்று அழைத்துக்கொள்ளுமென்று மன்றாடாதே. ஏனெனில் அவனுடைய தாறுமாறான நடக்கை உன்னுடைய பொறுமையையுஞ் சிநேகத்தையும் பத்திவைராக்கியத்தையும் காட்டுகிறதுக்கு வழியாகிறதல்லவோ? ஒருவேளை அவன் மனந்திரும்பித் தவத்திலேயும் பத்தி ஊக்கத்திலேயும் மற்றவர்களுக்குப் படிப்பினை ஆவானுக்கும். 3வது, கடைசியாய் உன் மட்டில் நீ எப்படியிருக்கிறாயென்றும், பிறர் மட்டில் எவ்விதம் நடந்துவருகிறாயென்றும் நன்றாய் அறியும்படி சர்வேசுரன் உனக்கு ஞானத் தெளிவைக் கொடுக்க வேணுமென்று கேள். பிறர் இடத்திலே உள்ள குற்றமாகிற களைகளைப் பிடுங்கிப்போட ஈவு இரக்கமில்லாமல் நீ ஆத்திரப்படுகிறாயே. அப்பேர்க்கொத்த களைகள் உன்னிடத்தில் எவ்வளவேனும் வளருகிறதில்லையோவென்று பார். ஐயோ! உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறாயல்லாமல் உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தைப் பார்க்கிறதில்லையேயென்று ஆண்டவர் சொன்ன வாக்கியத்துக்கு எத்தனையோ தடவை நாம் இலக்காகிறோம். சுயபட்சம் அவ்வளவு தூரம் நம்மைக் குருடாக்கிவிடுகிறது. இதெல்லாம் யோசித்துப் பார்த்த பின் உன் எண்ணங்களிலும் நடக்கையிலும் சீர்திருத்த வேண்டியதைப்பற்றி நல்ல பிரதிக்கினை செய்வாயாக.

**சம்பாஷணை.**—மகா மேன்மையான விதமாய்க் குடும்பத்தின் தகப்பனாகிய சுவாமியோடு சம்பாஷணை செய்.

---

## 4-ம் தேதி

### பிரசங்கிகள் சபையை உண்டாக்கின அர்ச். சாமிநாதர் திருநாள்

**ஆயத்தச் சிந்தனை.**—இவர் பிரசங்கம் பண்ணுகிறதற்குமுன்னே செபத்தியானம் செய்கிறதைப் பார்க்கிறதாக ரூபிகரித்துக்கொள்.



**தியானச் சேபம்.**—இவரைப் பின்பற்றி நடக்க ஆண்டவர் உனக்குக் கிருபை செய்யவேணுமென்று கேள்.

### முதல் பிரிவு

#### அர்ச். சாமிநாதர் சுயநலந் தேடாத சர்வ பரித்தியாகத்துக்குப் படிப்பினையாயிருக்கிறார்

**தியானம்.**—அர்ச். சாமிநாதர் காஸ்தீல் என்னும் நாட்டில் செல்வம் நிறைந்த உயர்ந்த கோத்திரத்தில் பிறந்து இயல்பிலே வாய்ச் சாலகமுள்ளவராயிருந்ததினால் இளம் பிராயத்தில்தானே பிரசங்கிக்கும் அலுவலுக்குத் தாம் அழைக்கப்பட்டிருக்கிறதாகக் கண்டுகொண்டார். இவர் சொல்லும் பிரசங்கத்தை இவர் ஊரார் மனப்பிரீதியாய்க் கேட்டு இவரைப் புகழுவார்கள். இப்படியிருக்க லாங்குதோக் என்னும் பிராஞ்சுதேச நாட்டில் எழும்பின துஷ்டப் பதிதரை மனந்திருப்பவும், அநேகாநேக சனங்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவும், இவ்வித அப்போஸ்தலத் தொழிலைத் தொடர்ந்து நடத்தும்படி ஓர் புதுச் சபையை ஏற்படுத்தவுந் தாம் தேவ திருவுளத்தால் நியமிக்கப்பட்டிருக்கிறதாக அறிந்து கொண்டார். ஆகையால் தாமதமில்லாமல் தேவ சித்தத்துக்குக் கீழ்ப்படிந்து, தாய் தந்தை, உடமை சம்பத்து, மகிமை பெருமை சர்வத்தையும் ஒருமிக்கத் துறந்துவிட்டு, கந்தைத்துணியைக் கட்டிக்கொண்டு, காலில் பாதரட்சையில்லாமல் நடந்து, பிச்சையெடுத்துச் சீவித்து வந்தார். இவ்விதமாய்த் தம்மை ஓயாமல் ஒறுத்து ஒடுக்கிச் சர்வேசுரனுக்காக மாத்திரமே சீவிக்கும்படி தமக்கு முற்றிலும் மரித்தவர்போலாக வருந்தினார். பின்னும் அப்போஸ்தலத் தொழிலில் தமக்குத் துணைவராகச் சிலரைத் தெரிந்துகொண்டு அவர்களுந் தம்மைப்போல சுயநலந் தேடாமல் சர்வ பரித்தியாகஞ் செய்து பிறர் ஆத்தும இரக்ஷணியத்தின்மேல் வேகமான ஆவல்கொள்ளும்படி ஏவினார்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—இவ்விதமாய் நடந்ததினால் அர்ச். சாமிநாதர் சர்வேசுரனுக்கு

உகந்த மனுஷனாகி, வாக்கிலுங் கிரியையிலும் வல்லபமுள்ளவராயிருந்தார். அவர் ஏற்படுத்தின பேர்போன சபையால் வேதத்துக்கு வெகு நன்மை பிரயோசனமுண்டானதுந் தவிர அதில் திருச்சபைக்கு அலங்காரமான அநேகாநேக அர்ச்சியசிஷ்டவர்களும் வேத சாஸ்திரிகளும் விளங்கினார்கள். இவர் நடந்த விதமாய் நாமும் நடந்து இப்பிரபஞ்ச காரியங்களையும் நம்மையுந்தானே பரித்தியாகஞ் செய்து விடுவோமானால் தேவ வரப்பிரசாதத்தின் ஏவுதலைச் சரியாய் அநுசரிக்கவும் ஆண்டவருடைய முந்திரிகைத் தோட்டத்தில் உழைத்துப் பலன் தரவும் தகுதியாவோமென்பதற்குச் சந்தேகமில்லை. இது விஷயத்தில் எப்படி நடந்தோமென்றும், மனத் தாராளமாய்ச் சகலத்தையுந் துறந்துவிட்டபின் திரும்பவும் அதில் ஏதாவது தேடிக் கைப்பற்றவில்லையோவென்றும் பார்க்கக்கடவோம்.

மனப்பற்றுதல்.—நாம் உலகத்துக்கும் நமக்கும் அதிகமதிகமாய் மரித்தவர்களாகும்படி ஆசித்து, இதற்கு வேண்டிய தேவ அநுக்கிரகத்தைக் கேட்போமாக.

பிரதிக்கினை.—நம்மைப் பின்பற்ற மனதுள்ளவன் தன்னைத்தானே பரித்தியாகம் பண்ணக்கடவான் என்று இயேசுநாதர் திருவுளம்பற்றின வாக்கியத்தை அடிக்கடி நினைத்துக் கொள்வோமாக.

## 2-ம் பிரிவு

### அர்ச். சாமிநாதர் தபசு ஒறுத்தலுக்கு மாதிரிகையாய் இருக்கிறார்

தியானம்.—வேதபோதகர் உலக சம்பத்தையும் பெருமை சலாக்கியத்தையும் மாத்திரம் வெறுத்து விடுவது போதாது. அர்ச். சின்னப்பர் சொல்லியிருக்கிறதுபோல அவர்கள் இயேசுநாதருடைய காயங்களின் அடையாளங்களைத் தங்கள் மேனியில் பதித்து, அவருடைய தவ ஒறுத்தல் தங்கள் சதையில் உறுத்தும்படி செய்யவும்வேண்டியது. (கலா. 6, 2 கொரி. 4). அர்ச். சாமிநாதர் இதைக் கண்டுபிடித்ததினால், தமது வேலை பிரயாசையினிமித்தம் வந்த சொல்லிமுடியாத களைப்புத் தவிப்பைப் பாராமல் அருந்



தவஞ் செய்துவந்தார். தாம் ஒருபோதும் மாமிசஞ் சாப்பிடாதிருந்ததுமன்றித் தமது சபையாரும் அப்படியிருக்கும்படி திட்டஞ்செய்தார். ஏறத்தாழ எப்போதும் ஒருசந்தி பிடிப்பார். தபசுநாட்களில் முக்கால்வாசிக்காலம் அவர் போசித்தது அப்பமுந் தண்ணீருந்தான். கட்டாந் தரையிலே படுத்துக்கொள்வார். இராக்காலத்தை அடிக்கடி செபத்தியானத்தில் செலவழிப்பார். தபசாக முள்ளொட்டியாணத்தைச் சரீரத்தில் கட்டியிருப்பார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நீ இம் மாத்திரங் கடின தபசு செய்ய முடியாதென்றாலும் உன் சரீரத் துராசாபாசங்களையாவது ஓயாமல் அடக்கிக் கீழ்ப்படுத்தி வரலாம். உன் ஆத்தும குருவின் ஆலோசனைப்படி சில தபசுமுயற்சிகளைச் செய்துவரலாம். மெய் வாய் கண் முதலிய ஐம்புலன்களையும் எப்போதும் ஒறுக்கலாம். துறவறத்தின் சட்டதிட்டங்களையெல்லாம் அனுப்பிசகாத பிரமாணிக்கத்தோடு காத்து இவ்விதமாய் உனக்கே வலுவந்தஞ் செய்து இடைவிடாத தபசு பண்ணிக்கொண்டு வரலாம். இப்படி நடந்துவந்தாயோ? இதில் உனக்குத் தைரிய உறுதி உண்டாகும்படி தபசு பண்ணுவதால் மரணவேளையில் வரும் மகிழ்ச்சியையும், பண்ணாதிருப்பதால் வருந் துயர கஸ்தியையும் யோசித்துக்கொள்.

மனப்பற்றுதல்.—அர்ச். சாமிநாதர் உனக்குத் தவ ஒறுத்தலின்மேல் பற்றுதலுள்ள மனதை அடைந்தருள வேணுமென்று மன்றாடு.

பிரதிக்கினை.—ஒறுத்தலின்பேரில் அடிக்கடி தனி ஆத்தும சோதனை செய்.

## 3-ம் பிரிவு

### அர்ச். சாமிநாதர் சாந்தகுணத்துக்கும் ஞான வேகத்துக்கும் பத்திக்கும் மாதிரிகையாயிருக்கிறார்

தியானம்.—இந்த அர்ச்சியசிஷ்டவர் தமதுமட்டில் மாத்திரங் கண்டிப்புள்ளவராய் இருந்தாரேயல்லாமல் பிறர்மட்டில் சாந்தம் தயாளம் இரக்கம் நிறைந்தவராய் இருந்தார்.

விசேஷமாய் அந்நாளிலிருந்த அல்பிஜென்ஸர் என்னும் பதித மதத்தில் மயங்கி விழுந்தவர்கள்மட்டில் வெகு தயவைக் காண்பிப்பார். இவர்கள் மதவெறி கொண்ட நிஷ்டூரராய்க் குடிகளின் குச்சுகளைக் கொளுத்தி எல்லாத்தையும் நிர்த்தூளியாக்கிவந்தார்கள். இவர்களை அடக்குவதற்குப் படை எடுத்துப்போய் என்ன பிரயாசப்பட்டாலுங் கூடாமற் போய்விட்டது. இவர்களைக் கீழ்ப்படுத்தி ஜெயங் கொள்ளும் மகிமையைச் சர்வேசுரன் அர்ச். சாமிநாதருக்குக் கொடுக்கச் சித்தமானார். எப்படியெனில் இந்த மகாத்துமா தமது சாதுகுண இன்பத்தினாலும் பத்தி வேகத்தினாலும் பிரஸ்தாபமான புதுமைகளினாலும் அந்தத் துஷ்டப் பதிதரைச் சத்திய நெறியில் கொண்டுவந்து சேர்த்தார். மரித்த மூன்று பேரை உயிரோடெழுப்பினார். இவ்வளவு நன்மை செய்வதற்கு வேண்டிய பெலனெல்லாம் செபம், ஒருசந்தி, அர்சியசிஷ்டவர்களுடைய மன்றாட்டு, விசேஷமாய்ப் பரலோக இராக்கினியின்மேல் பத்தி முதலிய சுபாவத்துக்கு மேற்பட்ட உபாயங்களினால் அடைந்துவருவார். அந்த ஆண்டவளையும் அவள் வழியாய் அவளுடைய திருக்குமாரனையுந் தக்க பிரகாரமாய் வணங்கும்படி சுளுவும் பிரயோசனமுமுள்ள வழியாகிய செபமாலை செபிக்கும் வகையை இந்தப் பரம தாயிடத்திலேயே கற்றுக்கொண்டார். இவர் பட்ட பிரயாசத்தினாலே திருச்செபமாலைப் பத்தி உலகம் எங்கும் பரம்பினது.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—நீ துவக்குங் காரியங்களிலும் உன் சுகிர்த கிரியைகளிலுந் தேவ ஆசீர்வாதம் வரவேணுமானால் இந்த அர்ச்சியசிஷ்டவர் கையாடின உபாயங்களை நீயும் கையாடக்கடவாய். அப்போது உனக்கு எல்லாம் கைகூடிவரும்.

**சம்பாஷணை.**—அர்ச். சாமிநாதரோடே சம்பாஷணை செய்.



# 5-ம் தேதி

## கடுகு மணி, புளித்த மா, புதையல் இவைகளின் உவமை

**ஆயத்தச் சிந்தனை.**—இயேசுநாதர்சுவாமி சொன்ன புத்திமதிகளைக் கேட்டவர்களுக்குள்ளே நீயும் இருக்கிறதாக நினைத்துக்கொள்.

**தியானச் செபம்.**—இந்த உவமையின் கருத்தை நன்றாய் உணரவும் அதினால் அதிக நல்லவனாகவும் வரங் கேட்பாயாக.

## முதல் பிரிவு

### கடுகுமணியின் உவமை

**தியானம்.**—நமக்குப் படிப்பினையாகவும் உறுதி திடனாகவும் நமது திவ்விய ஆசாரியர் சொல்லத் திருவுளமான மூன்று உவமைகளை யோசித்துப் பார்க்கக்கடவோம். அவைகளில் முதலாவதான கடுகுமணியின் உவமை ஏதென்றால் பரலோக இராச்சியமானது ஒரு மனிதன் தனது நிலத்தில் விதைத்த கடுகுமணிக்கு ஒப்பாயிருக்கின்றது. அது சகல விதைகளிலும் மகா சிறியதாயினும் வளர்ந்தபின் சகல செடிகளிலும் பெரிதாகி ஆகாயத்தின் பட்சிகள் அதின் நிழலில் வந்து இளைப்பாறத்தக்க அநேக பெருங் கிளைகள் விடுகிறது என்று இயேசுநாதர் திருவுளம்பற்றினார் (மத். 13). இந்த உவமையைக்கொண்டு திருச்சபையின் அற்புதமான வர்த்திப்பை ஆண்டவர் ஏற்கனவே அறிவித்திருக்கிறாரென்று சொல்லவேணும். ஆண்டவர் இவ்வுலகத்தில் இருந்தபோதும், இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரன் அப்போஸ்தலர்கள்மேல் இறங்கினபோதுந் திருச்சபை எவ்வளவோ சிறிதாயிருந்தது. கண்ணுக்குத் தெரியாத ஒரு சிறு வித்துக்கு ஒப்பாயிருந்ததன்றோ? ஆனால் இந்த விதை தேவப்பிரசாதத்தின் பனியினாலேயும், அப்போஸ்தலருடைய வாக்கின் ஞான உஷ்ணத்தினாலேயும்,

வேதசாட்சிகள் சிந்தின இரத்தத்தினாலேயும், வேதபோதகர்களின் வேர்வையினாலேயும் பிரமாண்டமான மரமாகி உலகத்தை முழுதுந் தனது நிழலால் மூடுகின்றது. என்ன சுகமான நிழல்! இந்த நிழலில் ஆகாயப் பறவைகளால் குறிக்கப்பட்ட பூலோக இராசாக்களும், கல்விகலைக்கியானப் பிரபுகளும் உலகங் கொடுக்கமாட்டாத மனச்சமாதானத்தையும் பாக்கியத்தையும் தேடவருகிறார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நீ உட்பட்டிருக்கிற சந்நியாச சபை இந்தக் கடுகு விதைக்கு ஒப்பாயிருக்கிறதல்லவோ? இதிலே பரலோகத்துக்கு வேண்டிய புண்ணியங்களைச் சம்பாதித்து உனது நாட்களைச் சாவதானமாய் போக்குகிறாயல்லவோ? இந்தச் சபை உண்டானபோது எவ்வளவு சிறிதாயிருந்தது! இதற்கு முதல் அஸ்திவாரம் போட்டவர்களுடைய பிரயாசத்தினாலுஞ் சுகிர்த நடக்கையினாலும் இது எவ்வளவோ விஸ்தாரமாய்ப் பரம்பி உறுதி திடங்கொண்டிருக்கிறது! ஆகையால் இந்தச் சபையின் அவையவங்களாகிற மற்றச் சகோதரரோடே நீயும் உன் கருத்தினால் ஏகோபித்து உன் முன்னோர் ஸ்தாபித்த ஞான ஏற்பாடுகள் சிறந்து விளங்கும்படி செய்வது உன் கடமையாமே. சபை ஏற்பாடுகளையும் ஒழுங்கு முறைமைகளையும் நுணுநுணுக்கமாய் அநுசரித்துச் செபத்தியானத்தினாலும் நன்மாதிரிகையினாலும் இதற்கு ஒவ்வொருவரும் பிரயாசப்படக்கடவார்கள். இதை யோசித்துப் பார்த்தாயோ?

மனப்பற்றுதல்.—ஆச்சரியம், சந்தோஷம், நன்றியறிதல், பெருந்தன்மையான ஆசை இவை முதலான பற்றுதல்களை மனதில் எழுப்பிக்கொள்.

பிரதிக்கினை.—நீ உட்பட்டிருக்கிற சபைக்கும் நீ வசிக்கிற மடத்துக்கும் அடுத்த சகல நன்மைகளின்பேரிலும் பற்றுதலுள்ளவனாய் அவைகளுக்காகச் சர்வேசுரனையுந் தேவமாதாவையுங் காவலான சம்மனசுக்களையும் மன்றாடிவருவாயாக.



## 2-ம் பிரிவு

### புளித்தமாவின் உவமை

தியானம்.—பரலோக இராச்சியமானது மூன்றுபடி மாவு முழுதும் புளிப்பேறும்படி (அதாவது அப்பத்துக்குத் தகுதியாகும்படி) அதற்குள் ஓர் ஸ்திரீ திணித்து வைத்த புளித்த மாவுக்கு ஒப்பாயிருக்கின்றது (மத். 13). தேவநற்கருணையில் நாம் உட்கொள்ளுகிற இயேசுநாதருடைய விலைமதியாத திருச் சரீரத்துக்கு இந்த உவமையை ஒப்பிடலாம். பரம இரகசியமான இந்தப் புளித்தமாவானது நம்மை முழுதும் ஊடுருவி நமது துர்ப்பலத்துக்கு மேலாக நம்மை உயர்த்தி நமது ஆத்துமத்தின் மூன்று புலன்களுக்குஞ் சுபாவத்துக்கு மேற்பட்ட சத்துவத்தைப் பகிர்ந்து கொடுக்கிறது. கடைசியாய் இதினாலே வாக்குக்கெட்டாத விதமாய் நாம் இயேசுநாதரிடத்தில் மறுரூபமாகிறோம். இதைப்பற்றித்தான் என் சரீரத்தைப் புசிக்கிறவன் எனக்குள்ளே வாசம் பண்ணுகிறான், நானும் அவனுக்குள்ளே வாசம்பண்ணுகிறேனென்று திவ்விய இரட்சகர் திருவாய் மலர்ந்தருளிச்செய்தார் (அரு. 6).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—தேவநற்கருணையாகிய இந்தப் பரம மாவை வாங்குகிறதற்கு வெகு சாக்கிரதையோடு ஆயத்தம் பண்ணக்கடவோம். இப்படிச் செய்தால் இந்தத் திவ்விய நற்கருணை நம்முடைய ஆத்துமத்திலே எவ்வளவோ அற்புதங்களைச் செய்யும், சுபாவத்துக்கு மேற்பட்ட வல்லமையை நமக்குத் தரும், நம்மை வெல்லப்படாத வீரராக்கும். நம்மைச் சர்வேசுரனுடைய இருதயத்துக்கு உகந்தவர்களாகச் செய்யும், அதாவது நாம் மெய்யாகவே ஞானிகளும் பரலோக மனுஷருமாகச்செய்யும்.

மனப்பற்றுதல்.—தேவநற்கருணை வாங்குகையில் நாம் காட்டின அசட்டைத்தனத்தைப்பற்றித் துயரப்பட்டு பொறுத்தலைக் கேட்போமாக.

பிரதிக்கினை.—பத்தியோடும் வெகு பலனோடுந் தேவநற்கருணை வாங்குகிறதற்கு இந்தப் புஸ்தகத்தின் கடைசி

யில் காண்பித்திருக்கும் உபாயங்களையாவது நீ முன்னே கையாடி வந்த வழிவகைகளையாவது புதிதாய்த் துவக்குகிறதுபோல வெகு அக்கறையாய் அனுசரித்து வருவாயாக.

## 3-ம் பிரிவு.

### புதையலின் உவமை

**தியானம்.**—பரலோக இராச்சியமானது ஓர் நிலத்தில் புதைத்திருக்கிற புதையலுக்கு ஒப்பாயிருக்கின்றது. அதைக்கண்ட மனிதன் அதை மூடி வைத்துவிட்டு, அடைந்த சந்தோஷத்தினிமித்தம் போய்த் தனக்குள்ள யாவற்றையும் விற்று அந்நிலத்தை வாங்கிக்கொள்ளுகிறான் (மத். 13). இந்த உவமையால் குறிக்கப்பட்டிருக்கிறதென்னவென்று சந்நியாசிக்குச் சொல்லவேண்டியதில்லை. ஏனெனில் அது துறவற அந்தஸ்தில் மறைந்து உலகத்தார் கண்ணுக்கு மூடப்பட்டிருக்கிற சாங்கோபாங்க மார்க்கந்தானென்று அவன் கண்டுகொள்ளுகிறதுமன்றி விலைமதியாத இந்தத் திரவியத்தைச் சுபாவத்துக்கு மேற்பட்ட ஒளியினாலே கண்டெடுத்து அதை மதிக்கத் தான் பாக்கியம் பெற்றிருக்கிறதாகவும் உணருகிறான்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—சந்நியாச வார்த்தைப்பாடு கொடுத்துத் துறவறமாகிய இந்தப் புதையலைக் கண்டு அதை உனக்கு நிலைவர சுதந்தரமாக்கிக்கொண்டபோது, உன் உள்ளத்தைப் பூரித்திருந்த ஆனந்த சந்தோஷத்தை நினைத்துக்கொள். இந்த நினைவானது உனக்குப் பலமுறை வெகு பிரயோசனமுள்ளதாய் இருக்கும். விசேஷமாய் உன் பரிசுத்த அந்தஸ்துக்கு விரோதமாய்த் தந்திரங்கள் வரும்போதும், உனக்கு நியமிக்கப்பட்ட வேலை அலுவல் பிடிக்காமல் மனம் பிரளும்போதும், இந்த நினைவு உனக்கு வெகு ஆறுதலாய் இருக்கும்.

**சம்பாஷணை.**—இந்த மாதத்தில் உனக்குப் பாதுகாவலான அர்ச்சியசிஷ்டவரோடாவது உன் காவல் சம்மனசானவரோடாவது சம்பாஷணை செய்.

---



# 6-ம் தேதி

## முத்து, வலை, குடும்பத்து எசமான் இவர்களின் உவமை

**ஆயத்தச் சிந்தனை.**—இயேசுநாதசுவாமி பிரசங்கிக்கிறதாகவும், சனங்கள் மகா கவனமாய் அவருக்குக் காது கொடுக்கிறதாகவும் ரூபிகரித்துக்கொள்.

**தியானச் செபம்.**—கீழ்ப்படிதலுள்ள மனமும் இருதயமும் உனக்குத் தரவேணுமென்று மன்றாடு.

## முதல் பிரிவு

### விலையேறப்பெற்ற முத்தின் உவமை

**தியானம்.**—பரலோக இராச்சியமானது நல்ல முத்துக்களைத் தேடுகிற வர்த்தகனுக்கு ஒப்பாயிருக்கின்றது. அவன் விலையேறப்பெற்ற ஓர் முத்தைக் கண்டமாத்திரத்தில் போய்த் தன்னிடத்திலுள்ளதெல்லாம் விற்று அதை வாங்கிக்கொள்ளுகிறான் என்று இயேசுநாதசுவாமி அருளிச் செய்தார் (மத். 13). நம்முடைய ஆத்துமத்தை அலங்கரிக்கத்தகும் புண்ணியங்களைத்தான் திவ்விய இரட்சகர் முத்துக்களென்று சொல்லுகிறார். இவைகளெல்லாம் விலையேறப்பெற்றதாமே. பத்தரைமாற்றுப் பசும்பொன்னிலும், சுத்தக்கட்டி வெள்ளியிலும் இவைகள் விலையுயர்ந்ததாமே. ஆயினுஞ் சகல புண்ணியங்களிலும் நிகரற்ற மேன்மை பொருந்தியது தேவசிநேகமாம். இதைத்தான் புண்ணியங்களுக்கெல்லாம் இராஜ புண்ணியமென்றும், தேவ சம்பந்தமான மூன்று புண்ணியங்களுக்குள் முக்கியமானதென்றுஞ் சொல்லவேண்டியது. பரலோக இராச்சியமே இதற்குச் சம்பாவனை. ஆகையால் நம்மிடத்திலிருக்குந் தேவசிநேகத்துக்கு அளவாகப் பரலோகத்தில் மகிமையும் பாக்கியமும் அடைவோமென்று அறியக்கடவோம்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—விலை மதியாத முத்தாகிய தேவசிநேகத்தை நாம் தேடி அலைய வேண்டியதில்லை. ஞானஸ்நானத்தின் வழியாய் அது தானாக நமது உள்ளத்தில் வந்து இறங்கியிருக்கிறது. ஆனால் நாம் அதைப் போக்கடிக்கக்கூடும். இந்தத் தேவ சிநேகத்தையும் இத்தோடு மோக்ஷ பாக்கியத்தையும் எல்லாத்துக்குமுந்தி இழந்துபோன பசாசு நம்மிடத்தினின்று இதைப் பறிப்பேனென்று சபதங் கூறியிருக்கிறது. மூர்க்கமுங் காய்மகாரமும் பொங்கி நம்மை மோசப்படுத்துகிறதற்காகப் புதிது புதிதான தந்திரங்களையெல்லாம் நமது உள்ளத்தில் ஓயாமல் மூட்டிக்கொண்டிருக்கிறது. இப்படியிருக்க நம்மை நாம் சுத்தமாய் நம்பாமல், எவ்வளவோ முன்பின் பார்த்து நடக்கவேண்டியிருக்கிறது! நாம் இப்படி நடக்கிறோமோ? அன்றியும் இந்த முத்தை நாம் இன்னும் அதிக பளபளப்பாக்கலாம்; அதாவது நம்மிடமுள்ள சிநேகம் நாளுக்கு நாள் அதிகமதிகமாய்க் கொழுந்துவிட்டு எரியப்பண்ணலாம். இதற்கு வேண்டிய வழிவகைகளும் நமக்குக் குறைவில்லை. அவைகளை நாம் அறிந்திருந்தும் எப்படி அவைகளை உதவிக்கொள்ளுகிறோம்?

**மனப்பற்றுதல்.**—இந்தத் தேவ சிநேகத்தை நமது உள்ளத்தில் பத்திரப்படுத்துகிறதற்காகவே நாம் சந்நியாசத்தில் பிரவேசித்தோமானதால் ஆண்டவரிடத்தில் சந்தோஷிப்போமாக.

**பிரதிக்கினை.**—இந்தப் புண்ணியம் நம்மிடத்தில் ஓங்கி வளரும்படி வருந்தக்கடவோம்.

## 2-ம் பிரிவு

### கடலில் வீசின வலையின் உவமை

**தியானம்.**—இயேசுநாதசுவாமி வேறொரு உவமையையுந் திருவுளம்பற்றியிருக்கிறார். அதாவது பரலோக இராச்சியமானது கடலில் வீசப்பட்டு எவ்வகை மச்சங்களையுஞ் சேர்த்துக்கொண்டுவரும் பெரும் வலைக்கு ஒப்பாயிருக்கின்றது. அது நிறைந்தபின் மீன் பிடிக்கிறவர்கள் அதை வெளியில் இழுத்துக் கரையில் உட்கார்ந்து நல்லவைகளைத் தெரிந்தெடுத்துப் பாத்திரங்களில் வைத்துக்கொண்டு ஆகாதவைகளை புறம்பே எறிந்துவிட்டார்கள். உலக முடிவிலே இப்படியே நடக்கும். தேவ தூதர் புறப்பட்டு நீதிமான்கள் நடுவினின்று தீயோரைப் பிரித்து அக்கினிச் சூளையில் அவர்களைப் போடுவார்கள் (மத். 13). இந்த வலையானது திருச்சபைக்கு உருவக அடையாளமென்பதற்குச் சந்தேகமில்லை. ஏனெனில் திருச்சபையானது உலகமெங்கும் விரிந்து பரவி நீதிமான்களையும், அக்கிரமிகளையும், தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும், தள்ளுண்டவர்களையுந் தன் மடியில் ஏந்தி அடக்கிக்கொண்டிருக்கிறது.



**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—நீ உட்பட்டிருக்கிற சந்நியாச சபையும் இந்தப் பெரும் வலைக்கு ஒப்பாயிருக்கலாம். இதில் நெடுகிலும் அனேகர் சேர்ந்து பெருங் கூட்டமாயிருந்தாலும் அவர்களெல்லோரும் நல்லவர்களோ, துறவற வார்த்தைப்பாட்டினிமித்தந் தங்கள் மேல் சுமத்திக்கொண்ட கண்டிப்பான கடமைகளைத் திட்டமாய்ச் செலுத்துகிறவர்களோ? ஐயோ! இவர்களுக்குள்ளே அயோக்கியரும் ஆசாரக்கள்ளரும் உண்டோ? இல்லையென்று நம்புகிறோம். ஆனால் யாராகிலும் இருந்தால், அவலமாய்ச் சாகும் பாவிகளைப்போல இவர்களையும் பிரித்து எடுத்துக் காட்டுகிறதற்கு ஓர் நாள் வரும். அப்போது அவர்களுக்கு உண்டாகும் வெட்கமுந் தீராத அவநம்பிக்கையும் எப்படிப்பட்டதாயிருக்கும்! ஆகிலும் உன் அதிகாரத்துக்கு உட்படாதவர்களை அவமதிக்காதபடி எச்சரிக்கையாயிரு. யாராயிருந்தாலும் அவர்கள்மேல் பழி போடாதே. இதினாலே நீ கனத்த மோசத்துக்குள்ளாகிறதுமல்லாமல் பிறசிநேகத்துக்குப் பொருந்தாத பாரிக் குற்றங்களிலேயும் விழுவாய். நமது இருதய இரகசியங்களும் நமது கிரியைகளின் பேறுபலனுஞ் சர்வேசுரன் ஒருவருக்கே தெரியும். ஆகையால் புறத்தியான்மேல் தீர்மானஞ் செய்வதற்கு நீ யாரென்று அர்ச். யாகப்பர் வசனித்திருக்கிறார் (இயா. 4).

மனப்பற்றுதல்.—ஆண்டவரே, இரட்சணியத்துக் கடுத்த தேவ பயத்தினால் என்னை ஊடுருவித் தற்காத்தருளும், என்னை உமது கருணைக் கண்ணால் விசேஷ விதமாய் நோக்கியருளும் (சங். 15).

பிரதிக்கினை.—உன் உள்ளத்தின் அந்தஸ்தின்பேரிலும் நீ நடக்கும் வகையின்பேரிலும் ஆண்டவர் இப்போது என்ன தீர்வையிடுவாரென்று அடிக்கடி உன்னை வினாவிக் கொள்.

## 3-ம் பிரிவு

### குடும்பத்து எசமான் உவமை

தியானம்.—இயேசுநாதர் அப்போஸ்தலர்களை நோக்கி இவையெல்லாங் கண்டு பிடித்தீர்களோவென்று கேட்க, அவர்கள் ஆமென்று மறுமொழி சொன்னார்கள். அப்போது இயேசுநாதசுவாமி அவர்களுக்குத் தாம் தந்த ஞானப்பிரகாசமாகிய பொக்கிஷத்தைக்கொண்டு அவர்கள் என்ன செய்யவேணுமென்று அறியும்படி வேறொரு உவமையைச் சொல்லத் திருவுளமானார்; அதாவது பரலோக இராச்சியத்துக்கு அடுத்தவைகளிலே தேர்ந்த வேதபாரகனவனுந் தன் பண்டகசாலையிலே நின்று புதியவைகளையும் பழையவைகளையும் எடுத்துப் பரிமாறுகிற வீட்டெசமானுக்கு ஒப்பாயிருக்கிறான் என்று திருவுளம்பற்றினார் (மத். 13). அந்த எசமான் தன் பிள்ளைகளின் அவசரத்துக்குத்தக்கது அவைகளைப் பகிர்ந்து கொடுப்பானல்லவோ?

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நானாவித சனங்களுக்குப் புத்திமதி சொல்லுகிறவர்களும் படித்துக்கொடுக்கிறவர்களும் ஒரே காரியத்தை ஒரே மாதிரி சலிப்பு உண்டாகும் விதமாய் திரும்பத் திரும்பச் சொல்லத்தகாதென்று அறியக்கடவார்கள். ஆகையால் நவமான கலைக்கியானங்களைக் கற்றுக்கொள்ளும்படி விடாமல் படிக்கத் தலைப்படுவார்களாக. இவ்வண்ணந் தலைப்பட்டால் அதிக இசைவாகவும், இன்பமாகவும், இயல்பிலே மாறாத சத்தியங்களை முதலாய் விசித்திரமாய் எடுத்துக்



காட்டத் திறமை அடைவார்கள். இதுவுமன்றி இவர்கள்
சிறுவரை நடப்பிக்க நியமிக்கப்பட்டிருந்தால் அவர்களுக்
குள் ரோசத்தை மூட்டி வளர்க்க ஏற்ற உபாயங்களெல்
லாம் புதிது புதிதாய்க் கண்டுபிடிப்பார்கள். நீ இப்படிச்
செய்கிறாயோ? அதில் உனக்கு உள்ள ஊக்க நிலைமை
யென்ன? வரும் ஆக்கப் பெருக்கமென்ன?

சம்பாஷணை.—இன்றையத்தினம் நமது ஆண்டவர்
தபோரென்ற மலையில் மறு ரூபமான காட்சியைத் திருச்
சபை உற்சவமாகக் கொண்டாடுகிறது. இந்த மகிமைப்
பிரதாப தோற்றத்தைக் காணப் பேறுபெற்ற அர்ச். இரா
யப்பர், யாகப்பர், அருளப்பரோடு சம்பாஷணைசெய்.

---

## 7-ம் தேதி

### இயேசுநாதருடைய சென்ம நாட்டார், அவரைப்பற்றி ஆச்சரியப்பட்டவர்களே அவரை இகழ்ந்து உபத்திரவப்படுத்தினது.

ஆயத்தச் சிந்தனை.—நசரேத்தூரிலிருந்த செபக்
கூடத்தில் திவ்விய கர்த்தர் தமது ஊராருக்குப் பிரசங்கிக்
கிறதைப் பார்க்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

தியானச் செபம்—இங்கே சொல்லப்படும் நல்ல
போதனையால் மிகுந்த பலனடைய வரப்பிரசாதங் கேள்.

### முதல் பிரிவு

நசரேத்தூரார் இயேசுநாதரைக் கண்டு ஆச்சரியப்படுகிறார்கள்.

தியானம்.—இதற்கு முந்தின தியானங்களில் சொல்லி
யிருக்கிற உவமைகளை இயேசுநாதர் வெளிப்படுத்தினபிறகு,
சுவிசேஷத்தில் சொல்லியிருக்கிறதுபோல தமது சென்ம
ஊராகிய நசரேத்துக்குத் தமது சீஷர்களோடுகூட வந்தார்.
ஓய்வுநாள் ஆனபோது அவர் தமது வழக்கப்படியே செபக்
கூடத்தில் பிரவேசித்து வாசிக்க எழுந்தபோது இசையாஸ்

ஆகமம் அவருக்குக் கொடுக்கப்பட்டது. அவர் அதைத்
திறந்த மாத்திரத்தில் தமக்கு எதிர்ப்பட்ட வாக்கியத்தை
வாசித்து வியாக்கியானம் பண்ணினார். அப்பொழுது
சகலருடைய கண்களும் அவரை நோக்கியிருந்ததுமன்றி
அவர் திருவாய்மலர்ந்து சொன்ன அமிர்தவசனங்களையுங்
கேட்டு ஆச்சரியமடைந்து, அவர்கள் தங்களுக்குள்ளே
சொல்லிக்கொண்டதாவது: இவருக்கு இந்த அறிவுங் கல்வி
யும் எங்கேயிருந்து வந்தது? இவரிடத்தில் விளங்கும்
ஞானம் எப்பேர்க்கொத்தது! இவர் செய்யும் இப்பேர்ப்
பட்ட பெரிய புதுமைகள் இவரால் செய்யப்படுவது எப்படி
யென்றார்கள் (லூக். 4, மாற். 6, மத். 12).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இயேசு
நாதசுவாமி நசரேத்தூரினின்று புறப்பட்டு ஏறத்தாழ
இரண்டு வருஷம் ஆனபின் கொஞ்ச நாள் அங்கே தங்கி
யிருக்க வந்த காரணமென்ன? தமது ஊரார் உறவினர் நடு
வில் இன்பமாய் இளைப்பாறவோ அல்லது அவர்கள் தம்மை
வாழ்த்தி மங்களம் பாடவேணுமென்றோ? அல்ல; ஆனால்
பட்சத்தின் அடையாளமாகவும், அவர்களுக்கு நன்மை
செய்து அவர்களை அர்ச்சிக்கவும் வந்தாரொழிய மற்றப்படி
யல்ல. ஆகையால் உன் உற்றார் பெற்றார் ஊரார்பேரிலே
விசேஷ பட்சம் வைக்கவும், அவர்களுக்குப் புத்தி பிரசங்
கஞ் சொல்லவுங்கூடாதென்று ஓர் சட்டமும் விலக்குகிற
தில்லை. ஆனால் இதிலே சந்நியாசிக்கு யோக்கியமான
முகாந்திரம் விளங்கவேணும். அதேதென்றால் அவர்க
ளுக்கு நன்மாதிரிகையும், சர்வேசுரனுக்குத் தோத்திரமும்,
அவர்கள் ஆத்துமத்துக்குப் பிரயோசனமும் உண்டாகும்
படி போகலாமேயல்லாமல், தன் மனப்பிரீதிக்காகவும்
வீண் சலாக்கியத்துக்காகவும் போகக்கூடாது. இது காரி
யத்தில் உன்னுடைய நோக்கம் எப்படி, புத்தியின்போக்கு
எப்படி, நடக்கை எப்படி?

மனப்பற்றுதல்.—என் திவ்விய இயேசுவே நான்
எப்போதும், எல்லாத்திலும் உமது அதிமிக்க மகிமையை
யும், என் ஆத்தும இரட்சணியத்தையுந் தேடும்படி எனக்
குப் படிப்பித்தருளுஞ்சுவாமி.



பிரதிக்கினை.—சர்வேசுரனிடத்திலும், சர்வேசுரனைப்
பற்றியும், அவருக்கு ஏற்ற விதமாகவுந் தன் ஊரையும் உற்
றார் பெற்றாரையுஞ் சிநேகிக்கிறது.

## 2-ம் பிரிவு

### நசரேத்தூரார் இயேசுநாதசுவாமியை இகழுகிறார்கள்

தியானம்.—இயேசுநாதசுவாமிமேல் நசரேத்தூரார்
ஆரம்பத்தில் கொண்டிருந்த நல்ல எண்ணங்கள் கெட்டுக்
காய்மகாரம் தலைகாட்டினது. அவர் பேருங் கீர்த்தியும்
அடைகிறது தங்களுக்கு ஏதோ பெருங் குறையென்று
எண்ணினார்கள். ஆகையால் அவர்கள் காய்மகாரத்தால்
அவரை நிந்திக்கவும், நிந்தித்து ஆவலாதிப்படுத்தவும், ஆவ
லாதிப்படுத்தி அவர்மேல் அவிசுவாசங் கொள்ளவுந் தலைப்
பட்டார்கள். இதினால் அவர்கள் சொன்னதாவது: இவன்
தச்சனாகிய சூசையின் மகனல்லவோ? இவன் தாய் மரியா
ளல்லவோ? இவன் யாகப்பன், யூதா, சீமோன் என்பவர்
களுடைய சகோதரனல்லவோ? இப்படியிருக்க இவனுக்கு
இவையெல்லாம் எங்கேயிருந்து வந்ததென்று அவதூறு
சொன்னார்கள். (மத். 12, மாற். 6, லூக். 4). இசரா
யேல் சனத்தின் போதகர் என்று அவர்தாமே தமக்குப்
பேர் வைத்துக்கொண்டது போலவும் இவர் கோத்திரம்
இளப்பமானதினாலே இவர் பேச்சைக் கேட்கவேண்டிய
தில்லை என்றாற்போலவும் அகந்தை காட்டினார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது—காய்
மகாரத்தின் துர்க்குணங்களையும் அதினால் விளையுங் கொடிய
தீங்குகளையுங் கண்டுகொள்ளக்கடவோம். காய்மகாரி
யானவன் தன்னைவிட வேறே யாராவது படிப்பிலும்
புண்ணியத்திலும் உயர்ந்து, எடுத்தகாரியஞ் செயித்து,
செல்வாக்குள்ளவனாய் இருந்தால், அவனை எரிச்சலின்றிப்
பார்க்கமாட்டான். மேலும் அப்பேர்க்கொத்த புத்தி
சமர்த்தன் சாதியிலாவது வயதிலாவது தனக்குத் தாழ்ந்த
வனாயிருந்தால் அப்போது எரிச்சல் அதிகமாய்ப் பொங்
கும். அவனிடத்தில் உண்டான குற்றங் குறை மெய்யா

னாலும் பொய்யானாலும் அதைத் தந்திரமாய் ஏற்றி வளர்த்திக்காட்டுவான். அவன் செய்கிற நன்மையிலும் முதலாய்க் குற்றம் பிடிக்கிறதுமல்லாமல் அவனை யாராவது புகழ்ந்தால், அது அநியாயம் என்பான். இந்த அவலட்சணமன காய்மகாரம் நசரேத்தூராரிடத்தில் நிறைந்திருந்ததைக்கண்டு அருவருக்கிறோமல்லவோ. ஆனால் நாமும் நமது இருதயத்தின் அடிமட்டும் இறங்கி நமது நடக்கையை வஞ்சகமின்றி விசாரித்தோமானால் ஒருவேளை அதை நம்மிடத்திலுங் கண்டு நாணவும், அதின் தீங்குகளுக்கு அஞ்சி நடுங்கவும் இடமுண்டாயிருக்குமாக்கும்.

**மனப்பற்றுதல்.**—காய்மகாரத்தின் மாய்கைகளினின்று ஆண்டவர் நம்மைக் காப்பாற்றவேணுமென்று ஆசையோடு கேட்போமாக.

**பிரதிக்கினை**—காய்மகாரத்தின் ஆரம்பமான நினைவுகளுக்கு முதலாய்ப் பயந்து விலகுவோமாக.

## 3-ம் பிரிவு

### இயேசுநாதசுவாமியை நசரேத்தூரார் உபத்திரவப் படுத்துகிறர்கள்

**தியானம்.**—நசரேத்தூரார் தாங்கள் இயேசுநாதசுவாமியை ஓர் சாதாரண மனுஷனென்று எண்ணியிருந்ததினால் அவர் அந்த எண்ணத்தை மாற்றித் தாங்கள் அவரைக் கனமாய் மதிக்கும்படி அனேக அற்புதங்களைச் செய்வாரென்று பார்த்துக்கொண்டிருந்தார்கள். இந்த நினைவினிமித்தமே அவர்கள் தமது அற்புதங்களைக் காணச் சுத்த அயோக்கியரென்று அவர்கள் உணரும்படி திவ்விய கர்த்தர் அவர்களை நோக்கிச் சொன்னதாவது: வைத்தியனே உன்னைத்தானே குணமாக்கிக்கொள்ளென்கிற பழமொழியையும், நாங்கள் கேள்விப்பட்டபடி கப்பர்நாவூம் ஊரில் நீ செய்தவைகளுக்கு ஒத்த பெரிதான காரியங்களை உன் சென்மவூராகிய இவ்விடத்திலுஞ் செய் என்பதையுஞ் சந்தேகமில்லாமல் எனக்குச் சொல்லுவீர்கள். ஆனால் எந்தத் தீர்க்கதரிசியுந் தன் சென்மவூரில் அங்கீகரிக்கப்படமாட்டானென்று நிச்ச



யமாய் உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். இதைக்
கோபமூண்டவர்
கேட்ட அளவில் சபை அடங்கலுங்
களாய் எழுந்து அவரைப் பட்டணத்துக்குப் புறம்பே
தள்ளித் தலைகீழாக விழத்தாட்டும்படி தங்கள் பட்டணங்
கட்டப்பட்டிருந்த மலை உச்சிமட்டாக அவரை இழுத்துக்
கொண்டு போனார்கள் (லூக். 4).

**யோசிக்கத்தக்கது.**—
**இதிலே விசேஷமாய்** அடக்காமல்விட்டால்
துவக்கத்திலேயே ஆசாபாசத்தை
அது மிதமிஞ்சிப்போய் எவ்வளவு பயங்கரமுள்ளதாகிற
தென்று இவ்விடத்தில் காண்கிறாயல்லவா? ஆகையால்
மோசத்துக்கு ஏதுவான யாதொரு ஆசாபாசத்தை மூடி
வைத்திருக்கிறாயோவென்று உன் உள்ளத்தில் இறங்கிச்
சோதித்துப்பார். வைத்தியனே முந்தமுந்த உன்னைத்தா
னே சொஸ்தமாக்கிக்கொள் என்று திவ்விய கர்த்தர்
சொன்ன பழமொழியை அனுசரித்து உன் சத்துவமெல்
லாங் கூட்டி ஆபத்தான அந்த ஆசாபாசத்தோடு போராடு
வாயாக. சர்வேசுரன் உன் பிரயாசைக்கு உதவியாயிருப்
பார்; நீயும் அதைச் செயித்து அடக்கிக் கொள்வாய்.
**சம்பாஷணை.**—உன் காவலான சம்மனசானவரோ
டே சம்பாஷணை செய்வாயாக.

---

## 8-ம் தேதி

### இயேசுநாதசுவாமி தமது பன்னிரண்டு அப்போஸ் தலர்களையும் போதிக்க அனுப்பினதின்பேரில்

**ஆயத்தச் சிந்தனை.**—கலிலேயாநாட்டின் பல திக்கி
லும் பிரசங்கிக்க அவர்களை அனுப்புகிற சமயத்திலே
அவர்கள் இயேசுநாதரைச் சூழ்ந்திருந்ததைப் பார்க்கிற
தாக ரூபிகரித்துக்கொள்.
**தியானச் சேபம்.**—இயேசுநாதசுவாமி தம்மிடத்தி
லுள்ள பிறாத்தும இரட்சணிய ஆவலையும் தேவசிநேகத்
தையும் உனக்கும் பகிர்ந்தருளும்படி கேட்பாயாக.

## முதல் பிரிவு

### இயேசுநாதர் அப்போஸ்தலர்களை அனுப்பினதின்பேரில்.

**தியானம்.**—இயேசுநாதசுவாமி தம்மைப் பிடித்துக் கீழே விழத்தாட்ட விரும்பினவர்களுடைய கைகளைக் கட்டப்பட்டவைகள் போலாக்கி, நசரேத்தை விட்டு அற்புதமாய் வெளியிற் புறப்பட்டுச் சுற்றுப்பக்கங்களிலுள்ள சனங்களுக்குப் போதிக்கப்போனார். நாலாபக்கத்திலுநின்று திரளான சனங்கள் வருகிறதைக்கண்ட ஆண்டவர் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போல் அவர்கள் கிடந்து வருத்தப்படுகிறதைப்பற்றி மனமிரங்கித் தம்முடைய சீஷர்களைப் பார்த்துச் சொன்னதாவது: வெள்ளாண்மை மிகுதியாயிருக்கிறது; வேலையாட்களோ கொஞ்சம் பேராயிருக்கிறார்கள். ஆகையால் தன் வெள்ளாண்மைக்குத் தேவையான வேலையாட்களை அனுப்ப அதின் எசமானை மன்றாடுங்களென்றார். இவ்விதமாய் அவர்கள் உள்ளத்தில் ஆத்துமாக்கள்மேல் ஆவலை எழுப்பி அவர்கள் அதை அனுசரிக்கும்படி சித்தமானார். இதற்காக தம்மிடத்தில் வந்து உபதேசங் கேட்கக்கூடாதவர்களுக்கு அவர்கள் போய்ச் சர்வேசுரனுடைய இராச்சியத்தைப் பிரசங்கிக்கும்படி இருவர் இருவராக அவர்களை நாலாதிசைகளிலும் அனுப்புகிறார். (மத். 9.)

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—இவ்விடத்தில் திவ்விய இரட்சகர் தமது அப்போஸ்தலர்களை நடப்பித்த விதத்தைக் குறிப்பாய் பார்த்துக்கொள். இந்த நடபடிக்கையானது சந்நியாச சபைகளை ஏற்படுத்தினவர்களுக்கு ஒரு மேற்சட்டமாயிருந்ததினாலே இது மகா முக்கியமானது. ஆண்டவர் முந்தமுந்த அப்போஸ்தலர்களைத் திடமான புண்ணியங்களில் பழக்கி ஞானவைராக்கியத்தை அவர்களிடத்தில் மூட்டி அப்போஸ்தலத் தொழிலுக்கு அவர்களை முன்னடியே சீராக்குகிறார். பின்பு தமது வாக்கினாலேயும் மாதிரிகையினாலேயும் அவர்கள் பிறாத்தும இரட்சணிய அலுவலைச் செய்வது எப்படியென்று படிப்பிக்கிறார். இது சந்நியாசத்தின் பரீட்சை அர்த[illegible]



தைப்போலிருக்கிறது. இதற்குப் பின் இலேசான பங்கு விசாரணையை அவர்களுக்கு ஒப்புவித்து அவர்களைச் சோடிசோடியாக அனுப்புகிறார். சந்நியாசிகள் துணைவரோடு போகவேணுமென்று விவேகமாய் ஏற்பட்டிருக்கிற ஒழுங்குக்கு ஆதாரம் இதோ இங்கே காண்கிறோம். சந்தேகங்களில் யோசனையும் பொல்லாப்பில் உதவியுந் தந்து ஒருவர் ஒருவருக்குக் காவல் சம்மனசுபோலிருக்கும்படியாய் அந்த ஒழுங்கு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. நம்முடைய சுபாவத்துக்கும் பலவீனத்துக்கும் இந்த நடக்கை எவ்வளவு ஒத்ததாயிருக்கிறதென்று அறிந்து மதிக்கிறாயோ?

**மனப்பற்றுதல்.**—சுளுவும் பிரயோசனமுமான இந்த வகையாய் ஆண்டவர் உன்னைப் புண்ணியத்துக்கும் பிறாத்தும இரக்ஷணிய வேலைக்கும் பழக்கினதற்காக அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்.

**பிரதிக்கினை.**—உன் நடக்கைக்குச் சாட்சியாக எப்போதும் ஒரு துணைவன் இருக்க ஆசைப்படுவாயாக.

## 2-ம் பிரிவு

### அப்போஸ்தலர்களுக்குச் சொன்ன புத்தியுங் கொடுத்த அதிகாரமும்

*தியானம்.**—இயேசுநாதசுவாமி அப்போஸ்தலர்களை அனுப்புகிறதற்குமுந்தி அவர்களுக்குப் பசாசுகளைத் துரத்தச் சர்வ அதிகாரமும் எவ்வித பிணி வியாதிகளையுந் தீர்க்கச் சத்துவமுங் கொடுத்தார். பிறகு அவர்களை நோக்கிச் சொன்னதாவது: நீங்கள் வழிக்கு ஊன்றுகோலும், பையும், இரண்டு அங்கியும், அப்பமும், பணமுங் கொண்டுபோகவேண்டாம். ஏனெனில் வேலைக்காரன் தன் உணவுக்குப் பாத்திரவானாயிருக்கிறான். நீங்கள் இலவசமாய்ப் பெற்றுக்கொண்டதை இலவசமாய்க் கொடுங்கள். நீங்கள் எந்தப் பட்டணத்திற்கும் ஊருக்கும் போனாலும் அங்கே உங்களை ஏற்றுக்கொள்ள யோக்கியவான்

ஆரென்று விசாரித்து அவன் வீட்டிலே தங்கியிருப்ப தேயல்லாமல் அதை விட்டுப் புறப்படுந்தனையும் வீட்டுக்கு வீடு போகாதேயுங்கள். அங்கே உங்களை ஏற்றுக்கொள்ளாமலும் உங்கள் வார்த்தைக்குச் செவிகொடாமலும் இருப்பார்களேயாகில், நீங்கள் அவ்விடத்தைவிட்டு வெளியே புறப்படுங்கள். புறப்பட்டுப் போகும் போது அவர்களுக்கு விரோதமான அத்தாட்சியாக உங்கள் பாதரட்சையின் தூசியைத் தட்டிப்போடுங்கள் என்றார் (மத். 10, மாற் 6, லூக். 9).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—திவ்விய கர்த்தர் தம்மால் அனுப்பப்பட்டவர்களுக்கும் அவர்கள் மூலமாய்ப் பிறர் ஈடேற்ற அலுவலில் உத்தியோகமாயிருக்கிற சகலருக்குஞ் சொன்ன புத்திமதிகளால் நமக்குப் பிரயோசனம் உண்டாகும்படி அவைகளைக் கவனமாய் யோசித்துப் பார்ப்போமாக. அவைகளாவன :—முந்த முந்த சர்வேசுரன் நமக்குக் கொடுக்குங் கற்பனைகளையும் நமது மேல் சுமத்துங் கடமைகளையுஞ் செலுத்த வேண்டிய உதவி உபாயங்களைத் தக்க அளவோடு எப்போதுந் தந்தருளுவாரானதால் அவர்பேரில் முழுதும் நம்பிக்கையாயிருக்கிறது. 2-வது. நமது சுய பிரயோசனத்தைத் தேடாமலிருக்கிறது. 3-வது. சர்வேசுரன் தமது ஊழியரில் சுய நன்மையைச் சற்றுந் தேடாதவர்களுக்கு ஒன்றுங் குறைபட விடமாட்டாரானதால் அவருடைய பராமரிப்புக்கு நம்மை முழுதுங் கையளிக்கிறது. 4-வது. சுக பிரியத்துக்கும் வீண் மகிமைக்குஞ் சார்பானதெல்லாம் மறுத்து நீக்குகிறது. 5-வது. கடைசியாய் நன்றியறியாமை, மூர்க்கம் முதலிய துஷ்ட குணமுள்ளவர்கள் மட்டில் சாந்தமாயிருக்கிறது. ஆனால் அவர்கள் எப்பேர்க்கொத்த ஆக்கினைக்கு ஆளாய்ப்போகிறார்களென்று அறியப் பண்ணுகிறது நல்லது. ஆயினும் அந்த ஆக்கினைகள் அவர்கள் தலைமேல் விழவேணுமென்றாவது, அவர்களைத் தெய்வங் கேட்கவேணுமென்றாவது சபிக்கப்படாது. ஆண்டவர் சொல்லும் இந்தப் புத்திமதிகளுக்கு நாம் எப்போதும் ஒத்து நடக்கிறோமோ?



மனப்பற்றுதல்.—நாம் ஆண்டவருக்குப் பிரியப்படும்படி இன்ன புண்ணியங்களைத் தேடவேணுமென்று அவரே நமக்கு அறிவித்தபடியால் அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்வோமாக.

பிரதிக்கினை.—இந்தப் புண்ணியங்களைச் சம்பாதிக்கவும் நம்மிடத்தில் இவைகள் விர்த்தியாகவும் பிரயாசப்படக்கடவோம்.

## 3-ம் பிரிவு

### அப்போஸ்தலர்கள் அநுகூலமடைந்து திரும்பி வந்ததின்பேரில்

தியானம்.—அப்போஸ்தலர்கள் புறப்பட்டு ஊருக்கு ஊர் போய் எங்குஞ் சுற்றித்திரிந்து, சுவிசேஷத்தைப் போதித்து, அநேக பசாசுகளைத் துரத்தி, அநேக வியாதிக்காரருக்குத் தைலத்தைப் பூசி அவர்களைச் சொஸ்தப்படுத்தினார்கள். பின்பு அவர்கள் இயேசுநாதர் அண்டையில் வந்து, தாங்கள் செய்ததும் போதித்ததுமாகிய எல்லாவற்றையும் அவருக்கு அறிவித்தார்கள். அப்போது அவர் அவர்களை நோக்கி வனாந்தரமான ஓரிடத்தில் தனித்திருந்து சற்று இளைப்பாறுங்கள் என்றார். (மாற். 6, லூக். 9).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது—நாலா பக்கமுஞ் சுற்றித்திரிந்து புத்தி பிரசங்கம் சொல்லுதல், யாதொரு விசேஷ காரியத்தை நடத்துதல், வியாதிக்காரர்களை விசாரித்தல் இவை முதலிய முகாந்தரங்களைப்பற்றிக் கூடக் குறைய சிலகாலம் மடத்துக்கு வெளியே சஞ்சரிக்கிற சந்நியாசிகளுக்கு உத்தமமான படிப்பினை இயேசுநாதர் சுவாமி கொடுக்கிறாராமே. இவர்கள் மடத்துக்குத் திரும்பி வருகையில் இரண்டு காரியம் பிரமாணிக்கமாய்ச் செய்ய வேண்டியது. முதலாவது, தாங்கள் செய்ததையும் தங்களுக்கு சம்பவித்ததையும்பற்றி ஒன்றும் விடாமல் சிரேஷ்டருக்குக் கணக்குக் கொடுக்கிறது. இரண்டாவது, இயேசுநாதர் கொடுத்த யோசனைப்படி நடக்கிறது. அதாவது ஏகாந்தம், செபத்தியானம் இவைகளின் வழியாய்த் தங்கள் புலன்களை வசப்படுத்தி ஞான வேகத்தைப் புதிப்

பிக்கிறது. இவ்விரண்டு காரியத்தையும் எந்தப் பிரகார
மாய் நடத்திவந்தாய்?

சம்பாஷணை.—நமது திவ்விய குருவும் மாதிரிகையு
மான இயேசுநாதரோடு சம்பாஷணை செய்.

---

# 9-ம் தேதி

## இயேசுநாதர்சுவாமி அப்போஸ்தலர்களுக்கு வரப்போகிற துன்ப துரிதங்களை முன்னறிவித்து அவர்களைத் திடப்படுத்துகிறர்

ஆயத்தச் சிந்தனை.—பன்னிரெண்டு அப்போஸ்தலர்
களுந் தாங்கள் அனுப்பப்பட்ட இடங்களினின்று திரும்பி
வந்து இயேசுநாதர்சுவாமியைச் சூழ்ந்திருக்கிறதாக உருபி
கரித்துக்கொள்.

தியானச் சேபம்.—இயேசுநாதருடைய மெய்யான
அப்போஸ்தலருக்குரிய இருதயத்தைக் கேள்.

இயேசுநாதர்சுவாமி அப்போஸ்தலருக்கு வரப்போகிற
துன்ப துரிதங்களை மூன்று வகையாய் அவர்களுக்கு
எச்சரித்து அவர்களைத் திடப்படுத்துகிருர்.

### முதல் பிரிவு

#### இதைக்குறித்து இயேசுநாதருடைய தீர்க்கதரிசனம் முதல்வகை

தியானம்.—அப்போஸ்தர் வேதம் போதிக்கிறதில்
செலவழித்த இந்தச் சொற்பக் காலத்துக்குள்ளே தங்க
ளுக்கு யாதொரு எதிரிடையும் உபத்திரவமும் உண்டாகா
ததினுல் எப்போதும் இப்படியே இருக்குமென்று நினைத்
திருக்கலாம். இந்தப் பிசகான எண்ணம் பிற்காலத்தில்
அவர்களுக்குக் கேடாய் முடியக்கூடுமாகையால் திவ்விய
கர்த்தர் அவர்கள் புத்தியினின்று இந்த எண்ணத்தை
மாற்றுகிறதற்கு இதுவே ஏற்ற சமயமாயிற்று. இதினிமித்
தம் ஆண்டவர் தாம் அவர்களுக்கு இனிமேல் ஒப்படைக்



கப்போகிற அலுவல் முழுதும் வேறு விதமாயிருக்கு
மென்றும், கொடிய ஓநாய்கள் நடுவில் ஆதரவற்ற ஆட்டுக்
குட்டிகளைப்போல அவர்கள் அஞ்ஞானிகள் நடுவில் வசிக்க
வேண்டியிருக்குமென்றும் ஏற்கனவே அவர்களுக்கு அறி
விக்கச் சித்தமானுர். இதினுலன்ரே ஓநாய்கள் நடுவில்
ஆடுகளைப்போல நான் உங்களை அனுப்புகிறேனென்றுர்
(மத். 10). ஆ, இதென்ன தோற்றம்! இதைக் கேட்ட
போது அப்போஸ்தலர்களுக்கு இனி நேரிடும் அகோர
போராட்டத்தின்மேல் எவ்வளவு பயங்கரமான நினைவு
வந்திருக்கவேண்டியது!

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—அப்
போஸ்தலரும் அவர்களுடைய முந்தின சீஷர்களுந் தங்கள்
விசுவாசத்தையுந் திடாரிக்கத்தையுங் காப்பதற்கு இந்தத்
துன்ப துரிதங்களை ஏற்கனவே அறிந்திருந்தது வெகு பிர
யோசனமாயிற்று. இதினுலேதான் என்ன வந்தாலும்
அவர்கள் திகைக்கவுமில்லை; பேதலிக்கவுமில்லை. நாமும்
இயேசுநாதருடைய சீஷர்களாயிருக்கிற நிமித்தம் இவ்
வுலகத்தில் நானுவித சிலுவைகளாகிற துன்ப துரிதங்களே
நமக்கு வரவேண்டிய பாகமென்று நமது உள்ளத்தில்
ஸ்திரமாய் எண்ணியிருப்போமானுல் நமக்கு நேரிடுந் துன்ப
வருத்தங்களில் நாம் கலங்கி மயங்கவும், திகைத்துப் பின்
வாங்கவும் மாட்டோம். இதற்கு விரோதமாய் அந்தத்
துன்பங்களைவிட இன்னும் அதிக கடின பொல்லாப்புகளும்
போராட்டங்களும் நமக்கு நேரிடவில்லையே என்று ஏங்கித்
தவித்திருப்போம். ஏனென்ருல் இவைகள் இயேசுநாத
ருடைய போர் வீரனுக்கு அதிக யோக்கியம். நீ இப்படி
மனதில் எண்ணியிருந்ததுண்டோ?

மனப்பற்றுதல்.—இயேசுநாதருடைய நாமத்தைப்
பற்றி எவ்வித துன்பத்தையும் நாம் கனமாய் மதித்துச்
சிநேகிக்கும்படி அவரை நோக்கி மன்ருடுவோமாக.

பிரதிக்கினை.—நாள்தோறுங் காலையில் எழுந்திருக்
கும்போது அன்றைக்கு அநேக பெருந்துன்ப இடையூறு
கள் தனக்கு வருமென்று நினைத்துக்கொள்ளுகிறது. இப்
படியே பத்தியுள்ள ஓர் சிரேஷ்டர் செய்து வந்தார். அவ

ருக்கு என்னென்ன எதிரிடை நேரிட்டாலும், அதெல்லாம் அவர் அபிகரித்திருந்ததுக்குக் கீழ்த்தரமாயிருந்ததினால் அவர் எப்போதும் மனமகிழ்ச்சி அடைந்திருந்தார்.

## 2-ம் பிரிவு

### ஸ்நாபக அருளப்பர் வேதசாட்சியான உதாரணம்

### இரண்டாம் வகை

**தியானம்.**—அப்போஸ்தலர்கள் சுற்றித்திரிந்து பிரசங்கம் பண்ணினபோது ஸ்நாபக அருளப்பர் வேதசாட்சியாக மரணமடைந்தார். இவருடைய மரணமானது இனிமேல் அப்போஸ்தலர்களுக்கு என்னென்ன ஆபத்து நேரிடுமென்று இயேசுநாதர் அறிவித்திருந்ததை உறுதிப்படுத்துவதற்கு ஏதுவாயிற்று. ஆண்டவருக்கு முன்னோடியாகிய இவருடைய வாழ் நாளெல்லாம் ஒரே அப்போஸ்தல வேலையாயிருந்தது. அவரிடத்திலிருந்த பத்தி வைராக்கியத்தைவிட அதிக பரிசுத்தமும் தன்னயம்பாராததுமான பத்தி வைராக்கியத்தை எக்காலத்திலுங் கண்டதில்லை. இதெல்லாம் அப்போஸ்தலருக்கு நன்றாய்த் தெரிந்திருந்ததுமல்லாமல் இயேசுநாதசுவாமி அவர்மேல் சொன்ன புகழ்ச்சிகளையுங் கேட்டிருந்தார்கள். இப்படியிருக்க, இதோ, அவர் தமது பத்தி வைராக்கியத்தினிமித்தம் பலியாய்ப் போனாரென்று அவர்களுக்குச் செய்திவந்தது. எரோது இராசா ஒரு வேசியானவளுடைய பழி ஆசை அடங்க அவரைக் கொலைசெய்தான். திவ்விய குருவும் அவருக்குச் சனுவாக வாராததினாலே அவர் ஒன்றரை வருஷங் காவலிலிருந்தபின் தலை வெட்டுண்டு மரித்தார். நீதியைப்பற்றி உபத்திரவப்படுகிறவர்கள் பாக்கியவான்கள், ஏனெனில் மோக்ஷராச்சியம் அவர்களுடையதாய் இருக்கிறதென்பதை இந்த உதாரணத்தினாலே அப்போஸ்தலர்கள் கண்டுபிடித்திருக்கவேண்டியது.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—ஸ்நாபக அருளப்பர் மகிமைப் பிரதாபமுள்ள வேதசாட்சியாய் மரணமடைந்ததை நினைத்துப் பிறரை ஈடேற்றவும், தமது கடமைகளைச் செலுத்தவும் நாம் செய்யும் முயற்சிகளில் துஷ்டரால் நேரிடும் எதிரிடை முதலிய பயத்துக்குப் பின்வாங்காமல் துணிந்து நடப்போமென்கிற நமது தீர்மானத்தைப் புதுப்பிக்கக்கடவோம். நம்மிடத்தில் உள்ளவைகளில் ஒன்றும் நமக்கென்று வைத்துக்கொள்ளாமல் நம்மை முழுதுஞ் சர்வேசுரன் கையில் ஒப்படைக்கக்கடவோம். பிறர் நமக்குச் செய்யுந் தின்மையை அவர் நன்மையாய் மாற்றுவார். இந்த அர்ச்சியசிஷ்டவர் தாம் பட்ட நிஷ்டூரமான பாடுகளினாலே வேதசாட்சி முடியை அடைந்ததுமல்லாமல் பூலோகத்திலே இயேசுநாதருக்கு இவர் முன்னோடியாய் இருந்ததுபோல பிதாப்பிதாக்கள் ஸ்தலத்திலேயும் இவர் சுவாமிக்கு முன்னோடியாயிருக்கப் பேறுபெற்றார்.



**மனப்பற்றுதல்.**—பிறர் இரக்ஷணிய ஆவலினிமித்தம் வேதசாட்சியாக வேகமான ஆசைப்படுகிறது.

**பிரதிக்கினை.**—நமது கடமைகளைச் செலுத்துகிறதிலே தேவ மகிமைக்கும் பிறராத்தும ஈடேற்றத்துக்கும் அடுத்தவைகளை மாத்திரங் கவனித்து நடக்கிறது.

## 3-ம் பிரிவு

### இயேசுநாதர்சுவாமியுடைய வாக்குத்தத்தமும் அவருடைய மாதிரிகையும் மூன்றாம் வகை.

**தியானம்.**—இயேசுநாதர் தமது அப்போஸ்தலர்களுக்குச் செய்த வாக்குத்தத்தங்களை இப்போது யோசித்துப் பார்ப்போமாக. உங்கள் தலை உரோமங்களெல்லாம் எண்ணப்பட்டிருக்கின்றன. அவைகளில் ஒன்றாகிலும் உங்கள் பிதாவின் சித்தமின்றிக் கீழே விழமாட்டாது. மனிதர் உங்கள் சரீரத்தை மாத்திரங் கொலை செய்யக்கூடும். என்னைப்பற்றியுஞ் சுவிசேஷத்தைப்பற்றியுந் தன் சீவனை இழந்து போகிறவன் மோக்ஷத்திலே மகிமையோடு அதைத் திரும்பவும் கண்டடைவான். என்னைத்தானே அவர்கள் உபாதித்திருக்க உங்களை எவ்வளவோ உபாதிக்கமாட்டார்கள்? சீஷன் தன் குருவிலும் பெரியவனல்ல. ஊழியன் தன் எஜமானைப்போல நடத்தப்படுகிறதே தனக்குப் பாக்கிய

மென்று நினைத்துக்கொள்ளவேண்டியது. (மத். 10, அரு. 16.)

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நமது திவ்விய குருவானவர் வசனித்த இந்த வாக்கியங்களை நமது மனதில் ஆழமாய்ப் பதியச்செய்வோமாக. இந்த வாக்கியங்கள் இக்கட்டு, இடையூறு, யுத்தமுதலிய உபத்திரவ காலங்களில் அப்போஸ்தலருடைய திடாரிக்கத்தைத் தாங்கினதுபோல நமது திடாரிக்கத்தையுந் தாங்கிக்காக்கும். விசேஷமாய்க் குருவுக்கு ஒத்தது சிஷனுக்கும் என்கிற இந்த உவமை இந்த லோகத்திலுமன்றி மறுலோகத்திலுஞ் செல்லுமென்கிறதினாலே நமக்கு எவ்வளவோ ஆறுதலுஞ் சந்தோஷமும் உண்டாகிறது! இயேசுநாதர்சுவாமியும் இதற்கு உறுதிமொழியாக: என் பிதா எனக்கு இராச்சியத்தை ஏற்படுத்தினதுபோல நானும் உங்களுக்கு ஏற்படுத்துகிறேனென்று அருளிச்செய்திருக்கிறார் (லூக். 22).

சம்பாஷணை.—நமது ஆண்டவருந் திவ்விய மாதிரிகையுமான இயேசுநாதரோடே சம்பாஷணை செய்.

---

## 10-ம் தேதி

### ஆத்துமாக்கள் ஈடேற்றத்திற்கும் பிறசிநேகத்திற்கும் அடுத்த கிரியைகளில் நமக்கு இருக்கவேண்டிய புண்ணிய பற்றுதல்கள்

ஆயத்தச் சிந்தனை.—எழுத்தினாலல்ல, உட்கருத்தினாலேயே புதிய ஏற்பாட்டின் தொழிலுக்குச் சர்வேசுரன் நம்மைத் தகுந்தவர்களாக்கினாரென்று அர்ச். சின்னப்பர் சொல்லுகிறதாக ரூபிகரித்துக்கொள். (2 கொரி. 3).

தியானச் சேபம்.—ஆத்துமாக்களின் ஈடேற்றத்துக்கும் பிறர் நன்மைக்கும் நீ உதவியாயிருக்கும்படி வேண்டிய புண்ணியம் உன்னிடத்தில் உண்டாக ஆண்டவரை மன்றாடு.



## முதல் பிரிவு

### தரித்திரம் தாழ்ச்சி என்னும் புண்ணியங்களின்பேரில் பற்றுதல்

தியானம்.—முந்தின தியானத்திலே ஆத்துமாக்கள் ஈடேற்றத்துக்கும் பிறசிநேகத்துக்கும் அடுத்த அலுவல்களில் நம்மைத் தாங்கித் தைரியம் வருவிக்கத்தக்க பலத்த ஞாயங்களைக் கண்டோம். ஆனால் அந்த அலுவல் முயற்சிகளுக்கெல்லாஞ் சீவ ஆதாரமாயிருக்கிற புண்ணியங்கள் எவை? அவைகள் துறவற அந்தஸ்துக்கு உயிர் கொடுக்கிற புண்ணியங்களேயன்றி வேறல்ல. இந்தப் புண்ணியங்களில் நாம் எவ்வளவுக்கு உத்தமராவோமோ, அவ்வளவுக்கும் பிறரீடேற்றத்தின்மேல் நமக்குள்ள ஆவல் சுவாமிக்கு உகந்ததும் அநுகூல சித்தியுள்ளதுமாயிருக்கும். உலகத்தையுந் தன்னையுந்தானே முழுதும் பரித்தியாகம் பண்ணுகிறதாகிய தரித்திரப் பற்றுதல் சந்நியாசிக்கு அகத்தியமாய் வேண்டிய முதல் காரியமாம். இதுவே வேதபோதகருக்கும் வேண்டிய குணமென்னத்தகும். நீங்கள் இலவசமாய்ப் பெற்றுக்கொண்டதை இலவசமாய்க் கொடுங்களென்று இயேசுநாதர் சொல்லியிருக்கிறார். (மத். 10). நாம் ஜனங்களுக்காகப் பிரயாசப்படும்போது மேலான முகாந்தரங்களைப்பற்றி உழைக்கவேண்டுமென்றும் அவர்களுடைய ஞான நன்மையையே முக்கியமாய் நோக்கவேணுமென்றும் அவர்கள் விரும்புகிறார்களல்லவா? ஆனால் நாம் பேராசை, வீண் சலாக்கியம், சுயநல முதலியவைகளை முன்னிட்டு நடக்கிறோமென்று பிறர் வெறுஞ் சமுசயமாத்திரம்பட்டாலும் நம்மை ஒருபோதும் நம்பப்போகிறதுமில்லை; நமது புத்தியைக் கேட்கப்போகிறதுமில்லை. நமது வாக்கினாலாவது கிரியையினாலாவது இப்பேர்க்கொத்த சந்தேகத்துக்கு யாதொரு பிடி கொடுத்தால் அப்போது என்னமாய்ப்போகும்!

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நீ வியாதிக்காரரை விசாரிக்கும்போது அவர்களிடத்தில் யாதொரு லௌகீக நன்மையைப் பெற்றுக்கொள்ளப் பிரதானமாய்த் தேடுகிறதில்லையோ? உன்னுடைய தேவ தொழிலில் சுயநல விசாரம் நுழைகிறதில்லையோ? நீ படிக்

கும்போதும், படித்துக்கொடுக்கும்போதுந் தேவ தோத்திரத்தைப்பார்க்க வீண்பெருமை உனக்கு அதிக ரோசம் வருவிக்கிறதல்லவோ? உன்னைப்பார்க்கப் பிறருக்கு அதிக அநுகூலமாகும்போதும் உலகம் மெச்சிக்கொள்ளாத தொழில்களில் நீ வேலையாயிருக்கும்போதும் மற்றவர்கள் உன்னைச் சட்டைபண்ணாததுபோல தோன்றும்போதும் மனக்கிலேசப்பட்டால் அது வீண் சலாக்கியத்துக்கு அடையாளமென்று அறியக்கடவாய். உன் சுயபட்சம் உன்னை மோசம்போக்காதபடி நீ மிகவும் அஞ்சி நடக்க வேண்டியிருப்பதால் அவ்வளவுக்குங் கண்டிப்பாய் உன்னை வினவிப் பரிசோதித்துப்பார்.

மனப்பற்றுதல்.—பிறாத்தும ஈடேற்ற அலுவலிலும், படித்தல், படிப்பித்தல், கோவாளிகளை விசாரித்தல் முதலிய அலுவல்களிலும் நீ சர்வேசுரனையும் பிறாத்தும நன்மையையுமாத்திரமே தேடுகிறாயென்று முழுதுஞ் சத்தியமாய்ச் சொல்லக்கூடுமாயிருக்கும்படி ஆண்டவருடைய அநுக்கிரகத்தைக் கேள்.

பிரதிக்கினை.—இந்த நல்ல கருத்தை அடிக்கடி புதுப்பித்துக்கொள்ளுகிறது.

## 2-ம் பிரிவு

### கீழ்ப்படிதல், வித்தியாசம் பாராமையாகிய நடுவுநிலை என்னும் புண்ணியங்களின்பேரில் பற்றுதல்

தியானம்.—நாம் சந்நியாசிகளானமட்டும் உலகத்தையும் அதின் வீண் ஆடம்பரங்களையுமன்றி நம்முடைய சுயமனதைப்புங்கூட விட்டு விலகவேணும். ஆகையால் நம்மிடத்தில் கீழ்ப்படிதல் என்கிற குணம் விளங்கத்தக்கதாக முயலவேண்டியது. இந்தப் புண்ணிய பற்றுதல் வேதியரிடத்திலுஞ் சிறந்து துலங்கவேண்டியதாம். வேதபோதகத் தொழில் சர்வேசுரனிடத்திலிருந்து சிரேஷ்டர்கள் மார்க்கமாய் நமக்கு வரவேண்டியது. தமது முந்திரிகைத் தோட்டத்தில் நாம் வேலை செய்யவேண்டிய பாகத்தைக் குறிக்கிறது அவருடைய காரியம். என் முந்திரிகைத்



தோட்டத்துக்குள் வா, அங்கேபோ, இதைச் செய், இதை இப்படிச் செய்யென்று சொல்லுகிறதும் அவருடைய மனசு. ஆகையால் தன் மனம்போல் நடக்க விரும்பி அந்தக் கட்டளை கற்பனைகளுக்கெல்லாந் தப்பித்துக்கொள்ளத் தேடுகிற சந்நியாசியானவன் தனக்கு நேரிடும் இக்கட்டுகளில் தேவ பராமரிப்பின் விசேஷ உதவியும் எவ்வித ஆறுதலுமற்றுத் தியங்குவான். வேலைசெய்தாலும் அதில் அநுகூலமும் மிகுந்த பேறு பலனுமில்லாமல் போவதற்குஆளாவான்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நீ உன் சிரேஷ்டர்களைத் தந்திரமாய் ஏமாற்றி அந்தந்த அலுவல்களைப் பங்கிடும்போது ஒருவகையிலே அவர்கள் கையைப் பிடித்துக்கொண்டதினாலே மேற்கூறிய ஆயாசமான காரியங்கள் தொடருவதற்கு வழிபண்ணவில்லையோ? இப்படியானால் கீழ்ப்படிதல் வழியாய்ச் சுவாமி கொடுத்த வேலையைச் செய்கிறேன்; அவர் காண்பித்த பிரகாரமே அதைச் செய்கிறேனென்று நீ எப்படித் துணிந்து சொல்லக்கூடும்? இந்த மாய்கைக்கு இரையாய்ப்போனேமே என்று ஒரு நாள் துயரப்படுகிறவர்கள் வெகுபேர் உண்டு. அவர்கள் கணக்கில் நீயும் ஒருவனாகாதபடி எச்சரிக்கையாயிரு.

மனப்பற்றுதல்.—என்ன வந்தாலுஞ்சரி என்றிருக்கும் பரிசுத்த நடுவுநிலையானது உன்னிடத்தில் பூரணமாயிருக்கவேணுமென்று மன்றாடு.

பிரதிக்கினை.—பிறசினேகத்துக்கும் ஆத்துமாக்கள் ஈடேற்றத்துக்கும் அடுத்த அலுவல்களில் இதுவேண்டாம், அதுவேண்டும் என்று கேட்க உத்தரவிருந்தால் கபடில்லாமல் நேர்மையோடே உன் ஞாயங்களைச் சொல்லிக்காட்டு.

## 3-ம் பிரிவு

### மனஒறுத்தல், தன்னைப் பலியாக ஒப்புக்கொடுத்தலாகிய எக்கியம் என்னும் புண்ணியங்கள்பேரில் பற்றுதல்

தியானம்.—நாம் சந்நியாசிகளானதினாலே மன ஒறுத்தல் மன எக்கியம் என்னும் புண்ணியங்களிலும் பேரோங்க வேண்டியது. ஆத்துமாக்கள் ஈடேற்றத் தொழிலுக்கும் இந்தக் குணம் அவசியம். வியாதிஸ்தரைப் பராமரித்தல்,

பிள்ளைகளைப் படிப்பித்தல், அவர்களை விசாரித்தல் முதலிய நற்பயிற்சிக்கடுத்த இன்னுமற்றத் தொழில்களுக்கும் எவ்வளவோ பொறுமையும், தைரியமும், தாராளமான மனதும் வேண்டியது! இரவும் பகலும் பாவசங்கீர்த்தனங் கொடுப்பதற்கும், புத்தி பிரசங்கஞ் சொல்லுவதற்கும், ஆத்துமாக்களைப் புண்ணிய நெறியில் நடப்பிப்பதற்கும் மேற்சொல்லிய புண்ணியங்கள் எவ்வளவோ அவசரம்!

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நவசந்நியாசியாயிருக்கும்போதே பிரயாசப்பட்டு இந்தத் தவக்குணத்தைச் சம்பாதிக்க ஒரே பிடிவாதமாய்த் தலைப்படுகிறவன் எவ்வளவோ பாக்கியவான்! அவனுடைய பத்தி சுறுசுறுப்பு வேகமுள்ளதுமாய், சூட்சமுள்ளதுமாய், நிலையுள்ளதுமாய், வேண்டியபோது வீரமுள்ளதுமாயிருக்கும். இப்பேர்க்கொத்தவன் எத்தனையோ ஆத்துமாக்களை ஈடேற்றுவான்! தன்னை ஒறுக்கவுந் தன்னை எக்கியம் பண்ணவுங் கற்றறியாதவனோ நிர்ப்பாக்கியனாவான். இவனுடைய பத்திவேகம் சோர்ந்துகிடக்கும். இவன் குற்றத்தினாலேயே அனேகானேக ஆத்துமங்கள் சேதமாய்ப்போகுமென்று அஞ்சுவதற்கு இடமுண்டு. இவ்விருவகைத் துறவறத்தாருக்குள் நீ யாரோடு சேர்ந்திருக்கிறாய்?

சம்பாஷணை.—பத்தி வைராக்கியத்தால் மகா பேரோங்கிய வேத போதகரான அர்ச். சவேரியாரோடாவது இன்றைபத்தினத் திருநாளாகக் கொண்டாடப்படும் அர்ச். லவுரேஞ்சியாரோடாவது சம்பாஷணை செய்.

---

## 11-ம் தேதி

### முந்தின தியானத்தின் தொடர்ச்சி

ஆயத்தச் சிந்தனை.—எழுத்தானது கொல்லும்; உட்கருத்தானது உயிர்கொடுக்குமென்று அர்ச். சின்னப்பர் சொன்னதைக் கேட்கிறதாக ரூபிகரித்துக்கொள் (2 கொரி. 3).



தியானச் சேபம்.—உன் நற்கிரியைகளுக்கெல்லாம் உயிர்கொடுக்கும் உட்கருத்தைக் கேட்பாயாக.

### முதல் பிரிவு

#### மனப் பரிசுத்ததனம், அர்ச்சியசிஷ்டதனத்தின்மேல் பற்றுதல்

தியானம்.—முந்தின தியானத்துக்கும் இந்தத் தியானத்துக்கும் உள்ள நோக்கம் ஏதெனில் நாம் நமது பரிசுத்த அந்தஸ்தின் உத்தம புண்ணியங்களில் எவ்வளவு உயருவோமோ அவ்வளவு பிறரீடேற்ற ஆவலிலுஞ் சிறந்து துலங்குவோமென்று நன்றாய் உணரவேண்டியதாமே. ஏனெனில் நமது அந்தஸ்தின் உத்தமதனந்தான் பிறரீடேற்ற ஆவலுக்கும் உயிராயிருந்து பலன் கொடுக்கச் செய்கிறது. இந்த நினைவானது நாம் கொண்ட கருத்தை நிறைவேற்றுவதற்கு நம்மைத் தூண்டி ஏவும்.

தேவ இஷ்டப்பிரசாதம், மனப்பரிசுத்தம், அர்ச்சியசிஷ்டதனம் ஆகிய இவைகள்தான் நமது அந்தஸ்துக்கு மெய்யாகவே அகத்தியமாய் வேண்டியவை. இந்த மனப் பரிசுத்தத்தினாலேதான் நாம் சுவாமிக்கு உகந்தவர்களாக வேணும். இதினாலேதான் மனச்சுத்தமாயிருங்கள்; உங்கள் கர்த்தராகிய நாம் பரிசுத்தராயிருக்கிறதுபோல நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று வேதாகமத்தில் சர்வேசுரன் மொழிந்திருக்கிறார். நாம் பாவத்தை விட்டு விலகி, தேவ இஷ்டப்பிரசாதத்தினால் சர்வேசுரனோடு அந்நியோந்நியமாய் ஒன்றித்திருப்பதினாலேதான் நாம் தொடங்கும் பிறர் இரட்சணிய அலுவலிலே அவருடைய சனுவை அடையவேண்டியது. அப்போதுதான் நம்முடைய வேலை சம்பூரணமாய்ப் பலித்து, நிலைநிற்கத் தக்க ஏராளமான பலனை விளைவிக்குமென்று நம்பத்தகும். திவ்விய கர்த்தரும் இதற்கு உறுதிமொழியாக, தேவ சிநேகத்தினாலே ஒருவன் என்னிடத்திலும் நான் அவனிடத்திலும் ஒன்றித்திருந்தால் அவனே வெகு பலனைத் தருவான் என்றார் (அரு. 15). அர்ச். சின்னப்பரும், என்னிடத்தில் தேவ சிநேகம் இல்லாமலிருந்தால் நான் வெண்கல ஓசைக்கு

ஒத்தவனாயிருப்பேன் என்றார் (1 கொரி. 13). இதற்கு அர்த்தம் ஏதென்றால் நான் என் சத்தத்தை உயர்த்தி, கேட்கிறவர்கள் காது வலியெடுக்கக் கத்தினாலும் ஒருவரையுந் திருப்பப்போகிறதில்லை என்பதாம்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நீ செய்யும் பிறரீடேற்ற அலுவலைச் சர்வேசுரன் ஆசீர்வதிக்க வேணுமானால், உன்னிடத்தில் தேவ இஷ்டப்பிரசாதத்தைக் காப்பாற்ற வேண்டியதுந் தவிர மகா இருதய பரிசுத்தத்தனத்தையும் அர்ச்சியசிஷ்டதனத்தையும் அடைய மிகவும் ஆவலாயிருக்கவேணும். இதற்காக நீ படும் பிரயாசமென்ன? அற்ப சொற்பக் குற்றங்களின்மட்டிலும் உனக்குள்ள அரோசகமென்ன? இவைகளைவிட்டு விலகுவதற்கு நீ என்ன உபாயம் எடுக்கிறாய்? எவ்வளவு ஆத்திரத்தோடே பச்சாத்தாபத்தினால் உன்னைச் சுத்தமாக்கப் பார்க்கிறாய்?

மனப்பற்றுதல்.—மனதில் பரிசுத்தம் அதிகரிக்க வேகமான ஆசையைக் கேள்.

பிரதிக்கினை.—இந்த ஆசை பலிக்கும்படி தக்க உபாயங்களை இன்னும் அதிக ஊக்கத்தோடு அனுசரிக்கத் தொடங்குவாயாக.

## 2-ம் பிரிவு

### தேவசிநேகம், சாந்தகுணம் என்னும் புண்ணியங்களின்பேரில் பற்றுதல்

தியானம்.—மாறாத சாந்தத்தோடு பொருந்தின இரக்க உருக்கமுள்ள பிறசிநேகமானது தாழ்ச்சியின் கனியென்று அறிக. இதுதான் நம்முடைய திவ்விய மாதிரிகையான இயேசுவின் திரு இருதயத்தில் உண்டான உத்தம புண்ணியமாம். இதினாலேதான் திவ்விய கர்த்தர் நான் உங்களைச் சிநேகித்ததுபோல நீங்களும் ஒருவர் ஒருவரைச் சிநேகிக்கவேணுமென்பதே நம்முடைய சித்தம் என்றார் (அரு. 13). நம்மைப்போல சாந்தகுணமும், மனத்தாழ்ச்சியுமுள்ளவர்களாயிருக்க நம்மிடத்தில் கற்றுக்கொள்



ளுங்கள் என்று உரைத்திருக்கிறார். ஆகையால் இயேசுநாதசுவாமி வைத்த தடத்தைப் பார்த்துக் கூடியவரையில் சரிவர நடக்கிறோமென்று காட்டுகிறவர்களிடத்தில் இந்தக் குணம் நன்றாய்த் துலங்கவேண்டியது. விசேஷமாய்ப் பிறரீடேற்றத் தொழிலிலே திவ்விய கர்த்தரைப் பின்செலத் துணிகிறவர்களிடத்தில் இது சிறந்து விளங்கத்தகும். பகை பழியென்னும் பாவத்தின் எவ்வித தோற்றமும் நம்மிடத்தில் உண்டான பிறசிநேகத்துக்குச் சுத்தமாய்ப் பொருந்ாதென்று அறிவிக்கும்படியாய், உங்களைப் பகைத்து அவதூறு சொல்லுகிறவர்களுக்காக வேண்டிக்கொள்ளுங்களென்று சொல்லியிருக்கிறார். நம்முடைய சாந்தகுணம் செம்மறிப்புருவைக்கும் மாடப்புறாவுக்கும் ஒத்ததாய்ப் பிச்சுக் கலப்பில்லாமலிருக்க வேண்டுமென்பது அவருடைய ஆசை. இதைப்பற்றியே ஓநாய்கள் நடுவே ஆட்டுக்குட்டிகளைப்போல் உங்களை அனுப்புகிறேன். புறாவைப்போல் கபடற்றிருங்கள் என்றார் (மத். 10). திவ்விய கர்த்தர் தாம் இவ்விதமாய்க் கொடுத்த கற்பனைகளை ஆச்சரியத்துக்குரிய தமது மாதிரிகையினால் உறுதிப்படுத்தினார். அப்போஸ்தலர்களும் வேதியத் தொழிலில் அவர்களுக்குப் பின் வந்தவர்களும் இவரைப் பின்சென்று உலகத்தைத் திருப்பி, ஓநாய்களைச் செம்மறிப் புருவையாக்கினார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—ஆகையால் பிறரை மனந்திருப்பி அர்ச்சிக்கிறதற்கு நாம் செய்யும் முயற்சிகள் பிறசிநேகத்தினாலுஞ் சாது குணத்தினாலுந்தான் கைகூடும். இந்தச் சிநேகமுஞ் சாதுகுணத்தோடு கூடிய பொறுமையும் நம்முடைய பத்தி வைராக்கியத்தின் வேகத்தைத் தணித்துப் பதப்படுத்தவேணும். படபடப்பாய்ப் பேசுவது கேட்போர் இருதயத்தைச் சுருக்கிக் கோபத்தை மூட்டும். சாந்தகுணமுஞ் சிநேகமுமோவென்றால் இருதயத்தை மலரச்செய்து நமது வசமாக்கும்.

மனப்பற்றுதல்.—உன் எரிச்சலினாலுங் கோபத்தினாலும் உனக்கும் மற்றவர்களுக்கும் நீ வருவித்த பொல்லாப்புக்கு ஆண்டவரிடத்தில் பொறுத்தல் கேள்.

**பிரதிக்கினை.**—ஒருவனைக் கண்டிக்கவேணுமானால் உனக்கும் அவனுக்குங் கோபந் தணிந்தபோது மாத்திரங் கண்டிக்கத்தகும்.

## 3-ம் பிரிவு

### பத்தி செபத்தின்பேரில் பற்றுதல்

**தியானம்.**—உருக்கமும் உறுதியுமான பத்தியும், செப அப்பியாசமும், அதின்பேரில் பற்றுதலும் இல்லாதிருப்போமானால் நாம் பேருக்குமாத்திரம் சந்நியாசிகளாயிருப்பதேயல்லாமல் சர்வேசுரனுக்கும் மனுஷருக்கும் இயற்கையான புண்ணிய முயற்சிகளைச் செய்யத் திராணியற்றவர்களாய் இருப்போம். இப்படியானால் ஆத்துமாக்களிடத்திலே ஞானப்பலனை விளைவிக்க நம்மால் எப்படியாகும்? பிறரீடேற்றத்துக்காக நாம் படும் பிரயாசம் பலிக்கச் செய்யவேண்டியது சர்வேசுரன்தான். ஆகையால் அவருடைய அநுக்கிரகப் பிரசாதமில்லாதிருந்தால் நாம் படும் பிரயாசமெல்லாம் வீணாய்ப்போகும். நடுகிறவனாலேயுமல்ல, தண்ணீர் பாய்ச்சுகிறவனாலேயுமல்ல, அதை வளரச்செய்கிற சர்வேசுரனாலேதான் காரியமாகுமென்று அர்ச். சின்னப்பர் வசனித்திருக்கிறார் (1 கொரி. 3).

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—நீ பிறரீடேற்றத்துக்காக என்ன பாடுதான் பட்டாலும் அவர்கள் அநேகமாய் ஒரு பிரகாரமாயிருந்து மந்தக் குணத்தைக் காட்டுகிறார்களென்று முறைப்படுகிறாயே. இது உன் குற்றமல்லவோ? ஒரு தெய்வந் தமது திரு இரத்தத்தைச் சிந்தின காலமுதல் இரத்தக்கிரயங் கொடுத்து ஆத்துமாக்களை வாங்கவேண்டுமென்று அர்ச்சியசிஷ்டவர்கள் உரைத்திருக்கிறார்கள். நீ என்ன அப்படி அதிசயமான காரியஞ் செய்கிறாய்? இந்தக் கருத்துக்காக நீ செய்த தபமென்ன, செபமென்ன, ஒறுத்தலென்ன, நவநாளென்ன? ஐயோ, ஒருவேளை முழுதும் மனுஷ சத்திக்கடுத்த உபாயங்களே போதுமென்று இருந்தாயாக்கும். இப்படியானால் உனக்கு என்னதான் கைகூடி வருமென்று காத்திருக்



கிறாய்? அர்ச். சின்னப்பர் சொன்னாற்போல நீ சர்வேசுரனுடைய மனுஷனாயிரு. அதாவது நீ செபமுந் தபமுங் கூடியவனாயிரு. அப்போது உன் வேதியத் தொழிலில் எல்லாம் பலிக்கும்.

**சம்பாஷணை.**—இயேசுநாதரோடே சம்பாஷணை செய். பிறரீடேற்ற ஆவலில் நீ சிறந்து விளங்கும்படி உன் பரிசுத்த அந்தஸ்தில் உத்தமதனத்தை அடையப் பிரயாசப்படக்கடவாய்.

---

# 12-ம் தேதி

## கிளாரிஸ் என்னும் சபையை உண்டாக்கின அர்ச். கிளாரம்மாள் திருநாள்

**ஆயத்தச் சிந்தனை.**—இந்த அர்ச்சியசிஷ்டவள் தன் வழியாய்ப் புண்ணியவதிகளான கணக்கற்ற கன்னியாஸ்திரிகளால் சூழப்பட்டு மகிமைப்பிரதாபத்தில் வீற்றிருக்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

**தியானச் செபம்.**—உன் பரிசுத்த அந்தஸ்திற்கு வேண்டிய உத்தம புண்ணியங்களை உனக்கு அடைந்தருளும்படி இந்த அம்மாளை மன்றாடு.

## முதல் பிரிவு

### இந்த அர்ச்சியசிஷ்டவளிடத்தில் விளங்கின ஆச்சரியமான மனத்தாராளத்தின்பேரில்

**தியானம்.**—அர்ச். கிளாரம்மாள் ஊரராகிய அர்ச். ஐந்துகாயப் பிரான்சீஸ்குவின் கடின தவ ஏற்பாடுகளைப் பெண்பிள்ளைகளுக்குள்ளும் பரப்பி நீடித்திருக்கச்செய்யச் சர்வேசுரன் இந்த அர்ச்சியசிஷ்டவளைத் தெரிந்துகொண்டார். அசிசென்கிற பட்டணத்தில் குலத்திலேயும் மகிமையிலேயும் முதன்மையாய் விளங்கின இவளுடைய தாய்தகப்பன் இவளை உலகத்தில் நிறுத்திக்கொள்ளும்படி வழி தேடினார்கள். ஆனால் இவளுக்குப் பதினெட்டு வய

தாகுமுன் வீட்டைவிட்டுப் போர்சியுங்கூலென்னும் மடத்துக்கு ஓடிப்போய், தன் தலை முடியை எடுக்கச்செய்து அர்ச். பிரான்சீஸ்குவினிடத்தில் தப உடையை வாங்கித் தரித்துக்கொண்டாள். இவளுடைய பக்திவேகத்துக்கும் மனத்தாராளத்துக்குஞ் சம்பாவனையாகச் சர்வேசுரன் அநேகங் கன்னியாஸ்திரிகளை இவளிடம் அனுப்பி ஒரு புதுச் சபைக்கு அவர்கள் அஸ்திவாரமாகச் சித்தமானார். இந்தச் சபைக்கு இவள் முதல் சிரேஷ்ட தாயாரானாள். இவள் காண்பித்த சுகிர்த மாதிரிகையினாலே இந்தக் கன்னியாஸ்திரிகள் எல்லாரும் பெண்பிள்ளைகளுக்குள்ளே அதுவரையிலும் நடந்திராத கடின தபஞ் செய்யத் துவக்கினார்கள். எப்படியெனில் இவர்கள் வெற்றுக்காலால் நடப்பார்கள். கட்டாந்தரையிலே படுத்துக்கொள்வார்கள். எப்போதுஞ் சுத்தபோசனமாயிருப்பார்கள். வருஷத்தில் அநேக நாள் உபவாசமாயிருந்து அப்போதும் பால் முட்டை மச்ச முதலியவைகளைத் தள்ளுபடி செய்வார்கள். தபசாக மயிர்ச் சட்டையைத் தரித்துக்கொள்வார்கள். எல்லாருங் கூடி தேவ சங்கீதத்தைப் பாடும்படி நடுச்சாமத்தில் நித்திரையை விட்டெழுந்திருப்பார்கள். அர்ச். கிளாரம்மாளோவென்றால் இந்தக் கடினமான ஒறுத்தல் முயற்சிகளோடே இன்னம் பலவற்றைக் கூட்டிச் சேர்ப்பாள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—மனத்தாராளமானது என்னதான் செய்யமாட்டாது? அதற்குத் தடை ஒன்றுந் தெரியாது. அசாத்தியம் என்னவென்றும் அறியாது. இந்த அர்ச்சியசிஷ்டவளிடத்திலே விளங்கின மனத்தாராளம் நம்மையுந் தூண்டினால் நாம் எவ்வளவோ தபசு செய்து புண்ணியத்தில் தேர்ந்தவர்களாவோம்!

மனப்பற்றுதல்.—உனக்கு இந்தப் புண்ணியத்தை ஆண்டவரிடத்தில் பெற்றுத்தரும்படியாக இந்த அம்மாளை நோக்கி விடாமல் மன்றாடு.

பிரதிக்கினை.—இந்த மனத்தாராளம் உன்னிடத்தில் விசேஷமாய் எது காரியத்திலே குறைவாயிருக்கிறதென்று கண்டு அதைத் தீர்க்கக் கெட்டியான பிரதிக்கினை செய்துகொள்.



## 2-ம் பிரிவு

### இந்த அர்ச்சியசிஷ்டவளிடத்தில் விளங்கின கடினமான தரித்திரத்தின்பேரில்

தியானம்.—இந்த அர்ச்சியசிஷ்டவள் தரித்திரத்தை எவ்வளவு கனமாய் எண்ணினாளென்று பார்க்கும்போது ஆச்சரியப்படவேண்டியதாயிருக்கிறது. மடத்திலுள்ள வஸ்துக்களில் இழிவானதையும் பார்வைக்குக் குறைவானவைகளையுந் தனக்கென்று எடுத்துக்கொள்வாள். சகலருஞ் சரிசமானமாய் நடத்தப்படவேண்டியதென்றும், யாரும் முதலாளியம்மாள் முதலாய்த் தனக்குச் சொந்தமாக எதையும் வைத்துக்கொள்ளக்கூடாதென்றும், மடத்துக்கு நிலைவரமான ஆஸ்தி இருக்கவொண்ணாதென்றும், எல்லாருந் தங்கள் கை வேலையினாலும் பிறர் கொடுக்குந் தருமத்தினாலும் பிழைக்கவேண்டுமென்றுந் தன் சபை ஏற்பாட்டில் சட்டங்கள் எழுதி வைத்தாள். மற்றக் கன்னியாஸ்திரி சபைகளைப்போல் இந்த அம்மாளுடைய மடங்களிலேயும் யாதோர் வருமானந் திட்டம் பண்ணவேணுமென்று பாப்புக்களாகிய 9-ம் கிறகோரியாரும் 4-ம் இன்னொசேஞ்சியாருந் தாற்பரியமாயிருக்கும்போது, இவள் அது உதவாதென்று ஒரே பிடியாய் நின்றாள். இந்தத் தரித்திரம் மட்டுக்கு மிஞ்சினதென்று மற்றவர்கள் குறைவாய்ப் பேசினபோது இவள் உரைத்த பதிலாவது: இந்த வறுமைக்கோலம் இயேசுநாதருடைய வாக்குக்கும் நடபடிக்கைக்கும் ஒத்திருக்கிறது. இதை இவ்விதமாய்க் காக்குமட்டும் என் மடங்களில் துறவற ஒழுக்கம் ஒருபோதுந் தளராமட்டாது; உலக விசாரப்பற்றுதல் நுழையமாட்டாது; உள்ளே கட்சிகள் கூடமாட்டாது; வெளியே கனவான்கள் தயவும் வேண்டியிராதென்றாள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.— விசேஷத்தரித்திரத்தைக் கனமாய் எண்ணுகிறதற்கு இந்த மகாத்துமம் எடுத்துக்காட்டுகிற முகாந்தரங்களைக் கருத்துடன் யோசித்தால் நீயும் இந்த அம்மாளைப்போல அதை மதித்துச் சிநேகிப்பாய். இது மகா கடினமென்று

னியாமல் இதைக் காத்து உனக்குப்பின் வருகிறவர்களும் இதைப் பழுதில்லாமல் காப்பாற்றும்படி உன் சுகிர்த மாதிரிகையினாலே ஏதுகரமாயிருப்பாய். இதுவரையில் இந்தப் புண்ணிய வர்த்திப்புக்காக நீ செய்ததென்ன ?

மனப்பற்றுதல்.—சுவிசேஷத் தரித்திரத்தை விரும்பி அதில் உத்தமதனம் அடையும்படி மன்றாடு.

பிரதிக்கினை.—இந்த அம்மாளைப்போல இயேசுநாத சுவாமி அனுபவித்த கடினமான தரித்திரத்தைத் தியானித்து இதை அனுசரிக்கும்படி உன்னிடத்தில் ஆசை எழுப்பிக்கொள்.

## 3-ம் பிரிவு

### அர்ச். கிளாரம்மாளிடத்தில் விளங்கின மிகுந்த பத்தியின்பேரில்

தியானம்.—இந்த அர்ச்சியஷ்டவள் அடிக்கடி திவ்விய நன்மை வாங்கி வாய்ச்செபம் மனத்தியானம் முதலிய நானாவித பத்தி முயற்சிகளினாலே ஞான ஆறுதலுந் தைரியமும் அடைந்துவந்தாள். இரவிலே வெகு நேரஞ் செபத்திலே செலவழிப்பாள். இவள் செய்த மன்றாட்டினாலே துலுக்கர் இவள் மடத்தைப் பிடிக்காதிருக்கவும் தான் பிறந்த ஊருக்கு வரவிருந்த கனத்த பொல்லாப்பு விலகிப் போகவும் புதுமை செய்தாள். இவள் தாழ்ச்சியும் நன்றியறிதலும் உள்ளவளாயிருந்ததினாலே தன் ஊரார் தனக்குந் தன் மடத்தாருக்கும் அன்றன்று பிழைப்புக்குச் செய்த தருமங்களைப்பற்றி அவர்களுக்குத் தான் கடன்காரியென்று எண்ணி அவர்களுக்காக எல்லாருஞ் சுவாமியைப் பார்த்து மிகவும் மன்றாடக்கட்டளையிட்டாள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நாமும் நமது உபகாரிகளுக்காக வேண்டிக்கொள்ளக்கடவோம். எத்தனையோ மகாத்துமாக்கள் மடங்களில் ஏகாந்தமாய் ஒதுங்கித் தங்கள் கரங்களை உயர்த்தி வானத்தை நோக்கிப் பிரலாபித்து உலகத்தார் செய்த பாவங்களுக்குத் தண்டனையாக அவர்கள் தலைமேல் விழப்போகிற



தேவகோபாக்கினைகளை நிறுத்த வேணுமென்று நேசத்தோடு சுவாமியைப் பார்த்துக் கெஞ்சி மன்றாடுகிறார்கள். இதைப் பற்றி உலகத்தார் துறவிகளுக்குக் கடனாளிகளாய் இருக்கிறார்களென்று அவர்கள் உணரும்படி நாம் செய்யவேண்டியது.

சம்பாஷணை.—அர்ச். கிளாரம்மாளோடே சம்பாஷணை செய்.

---

# 13-ம் தேதி

## இயேசுநாதசுவாமி அப்பத்தைப் பலுகச்செய்த புதுமை

ஆயத்தச் சிந்தனை.—புதுமையாகப் பலுகின அப்பத்தை அப்போஸ்தலர்கள் சனங்களுக்குப் பகிர்ந்து கொடுக்கிறதைப் பார்க்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

தியானச் செபம்.—இயேசுநாதர்பேரில் உனக்கு முன்னிலும் இரட்டிப்பான சிநேகமும் பற்றுதலும் உண்டாக வேணுமென்று கேள்.

## முதல் பிரிவு

### புதுமையாக அப்பங்களைப் பலுகச்செய்த சமயம்

தியானம்.—அப்போஸ்தலர்கள் சுவிசேஷத்தைப் போதித்துத் திரும்பி வந்தபோது இயேசுநாதர் அவர்களை ஏகாந்தமான ஒரு இடத்திற்குத் தம்மோடு கூட்டிக்கொண்டுபோனார். ஆனால் எங்கேயிருந்தாலுஞ் சன சந்தடி ஒழியவில்லை. அவர்கள் திவ்விய குருவின் போதனையைக் கேட்கவேணுமென்கிற ஆவலால் திரளாய்க் கூடி, காட்டுக்குள் புகுந்து அவரைச் சுற்றி வளைந்துகொண்டார்கள். அப்போது அவர்கள் ஈடேற்றத்தின்மேல் உள்ள ஆவலால் ஏவப்பட்டு அவர் ஒரு மேட்டின்மேல் உட்கார்ந்து சர்வேசுரனுடைய இராச்சியத்தின்பேரில் பேசத் துவக்கினார்

ரென்று அர்ச். மத்தேயு சொல்லியிருக்கிறார். இப்படிப் பேசிக்கொண்டிருக்கும்போதே நாழிகையாகி பொழுது இறங்கினது. சனக்கூட்டமோ இயேசுநாதசுவாமியுடைய வாயைப் பார்த்துக்கொண்டு அசையாமல் நின்றது. அப்போஸ்தலர்கள் இதைக் கண்டு பிரமித்து, திவ்விய கர்த்தரை நோக்கி: சுவாமி, இதுவோ வனாந்தரமான இடம்; பொழுது சாய்கிறது, சனங்கள் எங்கேயாகிலும் போய்த் தங்களுக்கு வேண்டிய ஆகாரந்தேடிக்கொள்ள அவர்களை அனுப்பிவிடவேணும் என்றார்கள். அதற்கு இயேசுநாதர் மாறுத்தரமாக: அவர்கள் இதை விட்டுப்போக அவசரமில்லை; நீங்களே அவர்களுக்குப் போசனங் கொடுங்களென்றார் (மத். 14.). இந்த மறுமொழியினாலே அப்போஸ்தலர்களுடைய விசுவாசக் குறையைப் பாராமல் அவர்கள் மூலமாய் தாம் ஒருபெரிய புதுமை செய்வோமென்று வேண்டியவரையில் தெளிவாய்ச் சொன்னதுபோலாயிற்று.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நாம் இந்த நல்ல இஸ்ராயேல் சனங்களைக் கண்டுபாவித்து ஆண்டவருடைய கற்பனைப்படியே எல்லாத்துக்கும்முன் சர்வேசுரனுடைய இராச்சியத்தையும் அவருடைய நீதியையுந் தேடுகிறோமோ? இதற்கு விரோதமாய் நமது தேக சௌக்கியத்தின்மேல் அதிக கரிசனையாயிருந்து சர்வேசுரனை மகிமைப்படுத்தவும் புண்ணியத்திலும் பரிசுத்த தனத்திலும் விருத்தியடையவும் நாம் அவ்வளவு தேடுகிறதில்லையென்று நம்மைத்தானே நாம் கண்டிக்கவேண்டியிருக்கிறதல்லவோ? ஐயோ, எத்தனையோ கிறீஸ்துவர்கள் இப்படித் தங்களைத் தாங்களே கடிந்துகொள்ளுகிறதற்கு நியாயமுண்டு! இதினாலல்லவோ தங்கள் சுபாவப் பலத்தினால் செய்யக்கூடாத காரியங்களிலே முதலாய்ச் சர்வேசுரனை அடுத்துப்போகாமலும், அவர்பேரில் நம்பிக்கை வையாமலுந் திரிகிறார்கள். இப்பேர்க்கொத்த குறையை நீ பிறரிடத்திலுமல்லாமல் உன் நடபடிக்கையிலும் காணவில்லையோ?

மனப்பற்றுதல்.—இதெல்லாம் மெய்யென்று கண்டு வெட்கி மனஸ்தாபப்படு; பின்னுஞ் சுவாமிபேரில் விசுவாச நம்பிக்கையை உன்னிடத்தில் எழுப்பிக்கொள்.



பிரதிக்கினை.—எல்லாத்துக்குமுந்திச் சர்வேசுரனுடைய இராச்சியத்தையும் அவருடைய நீதியையுந் தேடு. இவ்விதந் தேடுகிறவர்களுக்குப் பிழைப்புக்கு அவசியமானதெல்லாம் கொடுத்தருளப்படுமென்று இயேசுநாதசுவாமி வாக்குத்தத்தஞ் செய்திருக்கிறார். கணக்கற்ற அற்புத வர்த்தமானங்களும் இதற்கு அத்தாட்சியாமே.

## 2-ம் பிரிவு

### ஐந்தப் புதுமையின் பிரதாபம்

தியானம்.—இந்த புதுமையைப்பற்றிச் சுவிசேஷத்திலே எழுதியிருக்கிறதாவது: இயேசுநாதசுவாமி பிலிப்புவைச் சோதிக்கிறதற்காக அவரை நோக்கி இவ்வளவு சனங்களும் பொசிப்பதற்கு அப்பங்களை எங்கே வாங்குவோமென்றார். பிலிப்பு மாறுத்தரமாக, ஆண்டவரைப் பார்த்து: இவ்வளவு சனங்களுக்கும் ஆளொன்றுக்குக் கொஞ்சங் கொஞ்சம் வரும்படி இருநூறு பணத்துக்கு அப்பங்களை வாங்கினாலும் இவர்களுக்குக் காணாதே; ஸ்திரீகளுஞ் சிறுவருந்தவிர ஆண்பிள்ளைகள்மட்டும் ஏறக்குறைய ஐயாயிரம்பேர் இருக்கிறார்களேயென்றார். அப்போது இராயப்பருடைய சகோதரனாகிய பெலவேந்திரர் சொன்னதேதென்றால் இங்கே ஒரு சிறுவனிடத்தில் ஐந்து வாற்கோதும்பை அப்பங்களும் இரண்டு மீன்களும் இருக்கின்றன. ஆனால் இத்தனை பேர்களுக்கு அவைகள் எம்மாத்திரம் என்றார். அப்போது இயேசுநாதர் அவைகளைக் கொண்டுவரச்சொல்லி, அப்போஸ்தலர்களை நோக்கிச் சனங்கள் நூறு பேராகவும் ஐம்பது பேராகவும் பந்தி பந்தியாய் உட்காரச் செய்யுங்களென்றார். பின்னும் ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் எடுத்துப் பரலோகத்தை அண்ணாந்து பார்த்து அவைகளை ஆசீர்வதித்து நன்றியறிந்த தோத்திரஞ்செய்து அப்போஸ்தலர்கள் கையில் கொடுத்துச் சனங்களுக்குப் பகிர்ந்து கொடுக்கச் செய்தார். எல்லாருந் திருத்தியாய்ச் சாப்பிட்டபின் மீதியான துண்டுகளால் பன்னிரண்டு கூடைகள் நிறைந்தன (மத். 14; மாற். 6; லூக். 9; அரு. 6).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையுங்கொண்டு பதினாயிரம் பேர் சாப்பிட்டது எவ்வளவு உன்னதமான அற்புதம்! இப்பேர்க்கொத்த புதுமையைக் காணக் கிடைத்தாலல்லோ பாக்கியமென்று நீ அறியாமலே உன் வாய் சொல்லுமாக்கும். இதற்கு அர்ச். அகுஸ்தீன் சொல்லுகிறதைக் கேள்: மண்ணில் விதைத்த கொஞ்ச விதையைக்கொண்டு எத்தனையோ இலட்சாதி இலட்சம் சீவன்களுக்கு வருஷ முழுதும் ஆண்டவர் போசனங் கொடுப்பதை நீ கண்ணாலே காண்கிறாயல்லோவென்றார்.

மனப்பற்றுதல்.—இதெல்லாங் கண்டு ஆச்சரியப்பட்டு உன் கர்த்தாவான சர்வேசுரனுடைய வல்லமையையும் நன்மைத்தனத்தையும் வாழ்த்தி ஸ்துதிப்பாயாக.

பிரதிக்கினை.—நாம் சாப்பிடப்போகும்போது இயேசுநாதர் காண்பித்த மாதிரிகையாய் நமக்கு ஆகாரங்கொடுக்கிற ஆண்டவரை நோக்கி நமது கண்களையும் மனதையும் உயர்த்தி: ஆண்டவரே, எங்களையும் உமது அருளினால் நாங்கள் போசிக்கப்போகிற இந்தப் போசிப்புகளையும் ஆசீர்வதித்தருளுமென்று அவருடைய ஆசீர்வாதத்தைக் கேட்கிறதுமல்லாமல், சாப்பிட்டபின் முழுமனதோடே ஆண்டவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்வோமாக.

## 3-ம் பிரிவு

### இந்தப் புதுமையினால் வந்த பலன்

தியானம்.—இவ்வளவு திரளான சனக்கூட்டத்துக்கு உபகாரமாகச் செய்யப்பட்ட புதுமையினாலே உத்தமபலன் வருகிறதற்கு வெகு நேரஞ் செல்லவில்லை. அர்ச். அருளப்பர் சொல்லுகிறபடியே சனங்கள் எல்லாரும் ஒருவாய்ப்பட இவர்தான் உலகத்தில் வரவேண்டிய தீர்க்கதரிசியென்று கூவினார்கள். அவர்களுடைய விசுவாசமும் உறுதியாகி, இயேசுநாதர்பேரில் சிநேகமும் பற்றுதலும் அவர்கள் உள்ளத்தில் இரட்டிப்பாய் அதிகரித்தது. ஆனால் இயேசுநாதர் அவர்கள் தம்மைப் பலவந்தமாய்ப் பிடித்து இராசா-



வாக்க வருவார்களென்று அறிந்து மறுபடியுந் தனியே மலையின்மேலேறி விலகிப்போனார் (அரு. 6).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—புதுமையாகப் பலுகின இந்த அப்பங்கள் தேவ சற்பிரசாதத்துக்கு உருவகமாயிருந்ததற்குச் சந்தேகமில்லை. ஆகையால் நமது பீடங்களிலே வீற்றிருக்கும் இயேசுநாதசுவாமியை நாம் சந்திக்கும்போதும் விசேஷமாய் நற்கருணையிலே அவரை உட்கொள்ளும்போதும் பத்தியுள்ள இந்த இஸ்ராயேல் சனங்களைப்போல நடக்கக்கடவோம். விசுவாசம் சிநேகம் பத்திபற்றுதல், நன்றியறிதல் முதலான புண்ணியங்களை நம்மிடத்தில் காணவேணுமென்று இயேசுநாதசுவாமி ஆசிக்கிறபடியால் அந்தப் புண்ணிய முயற்சிகளை நமது இருதயத்தில் பிறப்பிப்போமாக.

சம்பாஷணை.—இன்று உற்சவமாகக் கொண்டாடப்படும் இயேசுசபை அர்ச்சியசிஷ்டவராகிய பெர்க்மான்ஸ் அருளப்பரோடே சம்பாஷணை செய். இவர் மன்றாட்டினாலே இக்காலத்திலேயும் புதிதாய் அநேகருடைய வியாதிக்கு ஆரோக்கியங் கிடைத்தது. இந்தப் புதுமைகளால் இவர்பேரிலே நாம் நம்பிக்கை வைத்து இவரை மன்றாடி வருவதுமல்லாமல் இவர்பேரிலே பத்தி பரம்பும்படியாகவும் பிரயாசப்படுவோமாக.

---

## 14-ம் தேதி

### தேவமாதா மோக்ஷத்துக்கு எழுந்தருளின திருவிழாவுக்கு முந்தினநாள்

ஆயத்தச் சிந்தனை.—பரிசுத்த கன்னிமரியம்மாள் [illegible]ரணமாகிற சமயத்திலே அப்போஸ்தலர்கள் அவளைச் சூழ்ந்திருக்கிறதாக ரூபிகரித்துக்கொள்வோமாக.

தியானச் செபம்.—நமக்கு அமரிக்கையும் பாக்கியமு[illegible] [illegible]மான மரணங் கிடைக்கும்படி [illegible] வரப்பிரசாதங் கேட்போமாக.

தேவமாதா சகலத்திலுந் தமது திவ்விய குமாரனுக்குச் சரி சாயலாய் இருக்கும்படியாக அவள் மகிமைப்பிரதாபமாய்ப் பரலோகத்துக்கு எழுந்தருளிப்போகுமுன் சாவுக்குள்ளாகவேணுமென்று சர்வேசுரன் சித்தமானார். ஆகையால் இன்று அந்த ஆண்டவளுடைய மரணத்தைத் தியானிப்போமாக. அவள் மரித்தது மெய்; ஆனால் அவஸ்தை வேதனை முதலிய யாதொரு கஷ்டமும் அவளை அண்டினதில்லை.

## முதல் பிரிவு

### அர்ச். கன்னிமரியம்மாள் யாதொரு துயரமுமின்றி மரித்தாள்

**தியானம்.**—அர்ச். அல்போன்சு லிகோரியார் சொல்லுகிறதுபோல மூன்று விஷயங்கள் சேர்ந்து வழக்கமாய்ச் சாவை கஷ்டமுள்ளதாக்குகின்றன. முந்த முந்தப் பொருளாசையாம். இதைக் குறித்து ஞானியானவர் (எக்கிள. 41) சொல்லியிருக்கிறதாவது: ஓ மரணமே, லௌகீக பொருளின்பேரிலே தன் பாக்கியத்தையும் நம்பிக்கையையும் வைத்திருக்கிறவனுக்கு உன் நினைவானது எவ்வளவோ கசப்பாயிருக்கின்றது! அவன் இத்தனை வருஷகாலமாய் அம்மாத்திரம் பாடுபட்டுச் சேகரித்த பொருள் சம்பத்தெல்லாம் ஒன்றும் நில்லாமல் என்றென்றைக்குந் தன்னைவிட்டு நழுவுகிற சமயத்தைப் பார்க்கும்போது அவன் மனது கசப்புந் துயரமுங் கொள்ளாதிருக்குமோ? ஐயோ! என்ன விழலும் வியர்த்தமுமான துக்கம் இது! அர்ச். கன்னிமரியம்மாளுக்கு இப்பேர்ப்பட்ட வருத்தம் ஒன்றுமில்லை. இவளுக்கு மூன்று வயசு நடக்கிறபோதுதானே தன் உற்றார் பெற்றாரையும், உலக செல்வ பாக்கியத்தையுந் துறந்துவிட்டாள். அவளுடைய பட்சம் பற்றுதல் எல்லாஞ் சர்வேசுரனிடத்திலேயே ஊன்றியிருந்ததினால் உலகத்தில் எதற்கும் அவள் துயரப்பட ஏதுவில்லை. இந்தப் பிரபஞ்சத்தை விட்டுத் தப்பி மோக்ஷத்தை நோக்கிப் பறந்துபோய்த் தனது சிநேகத்துக்கு ஏக பொருளாகிய தன் குமாரன் இயேசுவோடு சதாகாலமும் ஒன்றித்திருப்பதே அவளுக்கிருந்த ஏக்கமெல்லாம் என்றறி.



**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—தரித்திர வார்த்தைப்பாடு கொடுத்ததினாலும், சரீர சம்பந்தமான ஆசைப்பற்றுதல்களையெல்லாம் வெறுத்து நீக்கினதினாலும் உலகத்தின்மேல் உனக்கு இருந்த பாசபந்தனமெல்லாம் முறித்து எறிந்துவிட்டாயல்லோ? அப்படியிருக்க யாதொரு துயர வருத்தமின்றி நீயும் இந்த உலகத்தை விட்டுப் பிரியலாமென்பதற்குக் கேட்கவேணுமோ? முற்றும் முடிய உன்னுடைய துறவற நிலையில் நீ பிரமாணிக்கனாயிருந்தால் உன் மரணம் இந்தப் பரதேசத்தினின்று உன் சொந்தத் தேசத்துக்குச் செல்லும் இன்பமான பிரயாணமாயிருக்குமென்று அறியக்கடவாய்.

**மனப்பற்றுதல்.**—நீதிமான்களுடைய மரணம் எனக்கும் வரக்கடவது!

**பிரதிக்கினை.**—தாராளமான மனதுடன் எல்லாத்தையும் வெறுத்துவிட்டபின் அரைக்காசு பெறாத அற்ப சொற்பக் காரியங்களின்மேல் பற்றுதல் வையாதபடி எச்சரிக்கையாயிருக்கிறது.

## 2-ம் பிரிவு

### மனக்குத்தின்றி அர்ச். கன்னிமரியம்மாள் மரித்தாள்

**தியானம்.**—சாகப்போகிறவனுக்குத் தன் பாவங்களின் ஞாபகத்தினாலும் தேவ நீதிகோபத்தின் நினைவினாலும் உண்டாகிற மனக்குத்தும் வியாகுலமும் மரணத்தைக் கடினமாக்குகின்ற இரண்டாம் விஷயமாகும். ஆனால் சர்வ சிருஷ்டிகளுக்குள்ளும் அத்தியந்த பரிசுத்ததனம் நிறைந்த கன்னிமரியம்மாள் இருதயத்தில் இவ்வித விசனம் எப்படி நுழையக்கூடும்? இவளுடைய நீண்ட ஆயுசு காலமெல்லாம் பாவத்தின் நிழல் முதலாய் அவளை அணுகாதிருந்ததுமன்றி மகா அருமையான புண்ணிய நற்கிரியைகளெல்லாம் விடாத தொடர் மணிச்சரமாக அவளை அலங்கரித்துவந்தன. இந்த நற்கிரியைகளாகிய மணிகள் அவளைப்பார்த்து: நாங்கள் உமது வேலைப்பாடு, உம்மை இப்போது தனியே போக விடமாட்டோம் என்று, அந்த ஆண்டவளுடைய

ஒட்டோலக மகிமைப் பிரதாபம் அதிக பிரபல்லியமாகும் படி தேவ சிம்மாசனமட்டும் கூடப் போகுமன்றோ?

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நீ கட்டிக்கொண்ட பாவங்களின் கறை அற்பமாகிலும் உன் ஆத்துமத்தில் நில்லாதபடி எல்லாத்தையுங் கழுவித் துடைக்க வருந்திப் பிரயாசப்படு. எந்தத் தீவினையும், எந்தப் பாவமும் வராதபடி விழிப்பின்மேல் விழிப்பாயிரு. இப்படிச் செய்வாயானால் மரணம் முடுகிவரும்போது யாதொரு மனக்குத்தும்படாமல் நம்பிக்கையுஞ் சந்தோஷமும் நிறைந்தவனாய் நித்திய சம்பாவனை எப்போது வருமோவென்று அமரிக்கையோடு காத்திருப்பாய்.

மனப்பற்றுதல்.—ஆண்டவரே, என் பாவங்களினின்று என்னை அதிகமதிகமாய்க் கழுவிச் சுத்தமாக்கியருளும் (சங். 50).

பிரதிக்கினை.—அன்றன்று நீ செய்யப்போகிற வேலைகளையும் உனக்கு வருங் கஸ்தி துன்பங்களையும் உன் குற்றங் குறைகளுக்குப் பரிகாரமாகவுந் தபசாகவும் அதிகாலைச் செபத்தில் சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடு.

## 3-ம் பிரிவு

### யாதொரு அச்சமுமின்றி அர்ச். கன்னிமரியம்மாள் மரித்தாள்

தியானம்.—பட்சமோ, பகையோ, எதுக்குத்தான் பாத்திரவானென்று ஒருவனும் அறியமாட்டானென்பதாக வேதத்தில் வரையப்பட்டிருக்கிறது. இந்த வார்த்தைகளை நினைக்கும்போது என் உடலெல்லாம் நடுங்கி ஒருவகையில் மரண அவஸ்தையாய் விழுகிறேனென்று சியேன் நகரத்து அர்ச். பெர்நர்தீன் உரைத்திருக்கிறார். ஆகையால் தன் ஈடேற்றத்தைக் குறித்து இருமனப்படுகிறதுக்குள்ள நியாயமானது எல்லாத்தையும் பார்க்கச் சாகக்கிடக்கிறவனுக்குப் பயமுறுத்துகிற மூன்றும் விஷயமாம். ஆனால் தேவதாயாருக்கு உன்னத பரமண்டலத்தில் அவளுடைய திருக்குமாரன் பக்கமாய்ச் சோதிப்பிரகாச நிறைந்த சிம்மா



சனம் நியமிக்கப்பட்டிருந்தது. அந்தச் சிம்மாசனம் எப்போதும் அந்த ஆண்டவள் கண்முன் நின்றதினால், அவள் மரணசமயத்தில் யாதொரு அச்சம் இல்லாதிருந்ததுமன்றித் தம்மைப் பூலோகத்திலே நிறுத்திவைத்திருந்த கட்டுகள் எப்போது அவிழ்க்கப்படுமோவென்று மகா ஆசை வேகத்தோடு காத்துக்கொண்டிருந்தாள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நீ ரட்சணியம் அடைவாயென்று ஒருவரும் உனக்குத் தாட்டிதந்து அறிவிக்கவில்லையென்பது மெய்தான். இதைப்பற்றிப் பலமுறை உன் இருதயத்தில் அச்சம் பிறந்து, மனது பேதலிக்கும். ஆயினும் நீ திடன்கொள்வதற்கு எத்தனையோ முகாந்தரங்களுண்டு! அப்படியே என்னைப்பற்றித் தன் வீடு வாசல் முதலிய யாவற்றையும் விட்டுவிடுகிறவன் நித்திய சீவியத்தை அடைவானென்று இயேசுநாதர் உரைத்தது முந்தின முகாந்தரம். 2-வது, தேவமாதாவின் ஊழியன் மோசம்போகவே மாட்டானென்று பேர்போன வேதபாரகர் காரியத்தை ஆராய்ந்து சொன்னது நமக்குத் திருவுளச்சொல்போல் உறுதி வருவிக்கின்றது. ஆகையால் உன் இருதயத்தில் பூரண நம்பிக்கையும் சந்தோஷப் பெருக்கமும் உண்டாகச்செய். உன் பரமதாயாருக்கு நீ செய்ததிலும் அவள் உனக்கு அதிகந் தந்தருளுவாள். உன் கடைசி அவஸ்தையில் உனக்கு உதவி செய்வாள். அப்படியே அர்ச். ஸ்தனிஸ்லாஸ் சாகும்போது, இதோ அர்ச். கன்னிமரியாயைக் காண்கிறேனென்று சொல்லி மரித்தார். ஆகையால் தேவமாதாவின் சகல திருநாட்களிலும் அதிக முக்கியமான இந்தத் திருநாளில் அந்த ஆண்டவளைத் தக்கவிதமாய் வாழ்த்தி வணங்கும்படி அதற்கு முந்தின தினமாகிய இன்று பத்தி பற்றுதலினாலும் வேகமான ஆசையினாலும் உன்னை ஆயத்தப்படுத்தக்கடவாய். இப்படிச் செய்வாயானால், தேவமாதா முடிசூட்டப்பட்ட திருநாளை வருஷந்தோறும் பத்தியாய்க் கொண்டாடுகிற தமது மக்களுக்கு ஏராளமாய்ப் பொழியும் வரப்பிரசாதங்களில் உனக்கும் ஒரு பெரும்பங்கு கிடைக்கச் செய்தருளுவாள்.

சம்பாஷணை.—அர்ச். ஸ்தனிஸ்லாஸோடே சம்பாஷணை செய்வோமாக. இவர் பதினெட்டாம் பிராயத்தில் இயேசு சபையில் நவ சந்நியாசியாகி, தமது தாயாரென்று எப்போதும் பத்தியோடு கூப்பிட்டுப் பாராட்டிவந்த பரம நாயகியின் ஒட்டோலகத் திருநாளை மோக்ஷத்தில் கொண்டாட ஆசித்து அந்த வரம் தமக்குக் கிடைக்கும்படி மன்றாடி அடைந்துகொண்டார்.

---

# 15-ம் தேதி

## தேவமாதா மோக்ஷத்துக்கு எழுந்தருளின திருநாள்

ஆயத்தச் சிந்தனை.—சம்மனசுக்கள் பரிசுத்த கன்னிகையை ஒட்டோலகமாய் உந்நத பரமண்டலத்துக்கு எழுந்தேற்றஞ் செய்துகொண்டுபோனதைப் பார்க்கிறதாக ரூபிகரித்துக்கொள்வேனாக.

தியானச் சேபம்.—இந்தப் பெரிய திருநாளை யோக்கியமான பிரகாரமாய்க் கொண்டாட வரப்பிரசாதங் கேட்பேன்.

### முதல் பிரிவு

#### தேவமாதா கல்லறையினின்று உயிர்த்தெழுந்தருளினாள்

தியானம்.—பரிசுத்த கன்னியாஸ்திரியின் திரு மரணம் சிறந்த சுதந்தரம் பெற்றதாயிருந்ததுபோல அவள் உயிர்த்த விஷயமுஞ் சிறப்புற்றிருக்கிறது. இதன்மேல் பரம்பரையாய்த் திருச்சபையில் வழங்கிவந்த வர்த்தமானம் மெய்யென்று அர்ச். விரிசித்தம்மாள் கண்ட காட்சியால் உறுதிப்பட்டிருக்கின்றது. இதெல்லாம் அர்ச். தாமாசேன் அருளப்பர் வருணித்து எழுதியிருக்கிறார். அதெப்படியென்றால் இயேசுநாதருடைய பரிசுத்த தாயார் மரணமடையுஞ் சமயத்திலே அற்புதமான விதமாய் எருசலேம் பட்டணத்திலே வந்துகூடின அப்போஸ்தலர்கள் ஜெத்சேமானியென்னுந் தோட்டத்திலே ஒரு புதுக் கல்லறையில்



அவளுடைய திருச் சரீரத்தை அடக்கம் செய்தார்கள். கல்லறையில் அத்திரு சரீரத்தை மூன்றுநாள் பரியந்தம் சம்மனசுக்கள் சங்கீதம்பாடி ஸ்துதித்துக்கொண்டிருந்தார்கள். அதற்குப்பின் அர்ச். தோமையார் அச்சரீரத்தைக் காணவேணுமென்று கேட்டுக்கொண்டதின்பேரில் அப்போஸ்தலர்கள் கல்லறையைத் திறந்துபார்க்கவே அதில் திருச்சரீரத்தை மூடியிருந்த சீலையைத் தவிர வேறொன்றுங் காணவில்லை. இதைக்கண்டு அவர்கள் பிரமித்து, இயேசுநாதசுவாமி தம்முடைய தாயாரைத் தாமதமின்றி மகிமைப்படுத்தச் சித்தமாகி அவளை உயிர்ப்பித்தாரென்றும், சம்மனசுக்களுடைய கைங்கரியத்தால் ஆத்தும சரீரத்தோடே அவளைப் பரலோகத்துக்கு எழுந்தருளச்செய்து அவள் மகிமைப் பிரதாபமாய்த் தமது அருகே வீற்றிருக்கச்சித்தமானாரென்றுந் தங்களுக்குள் தீர்மானித்துக்கொண்டார்கள். இது விசுவாச சத்தியமல்லாதேபோனாலுந் திருச்சபையானது இதை அங்கீகரித்து நம்பிவருகின்றது. இதினாலேதான் தேவமாதா பரலோகத்துக்கு எழுந்தேற்றமானாளென்று சங்கீதமாலையிலும் இந்தத் திருநாள் பூசையிலுஞ் சொல்லக் கற்பித்திருக்கிறது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இந்தப் பெரிய மங்கள உற்சவ நாளிலே தமது அன்புருவமான தாயார் மகிமைப் பிரதாபத்தோடு உயிர்த்தெழுந்தருளினதை நினைத்து நாம் அக்களித்து மகிழுவோமாக. பரலோக தூதரோடும் பரிசுத்த திருச்சபையோடும் ஏகோபித்து அவளை வாழ்த்திப் போற்றக்கடவோம். நாமும் ஒருநாள் சந்தோஷமாய் உயிர்க்கப்போகிறதை நினைத்து மனங் களிகூறுவோம். ஆனால் நாம் மரித்தவுடனே உயிர்க்கமாட்டோமென்பது மெய்யென்றாலும், ஒருநாள் உயிர்ப்போமென்பது உறுதி. அப்போது பாக்கியவான்களாய் மகிமையோடு இலங்குகிறது இப்போது நம்முடைய கையிலிருக்கிறது.

மனப்பற்றுதல்.—இனிமேல் நாம் உயிர்க்கப்போகிறதை நினைத்து, மாங்கிஷ உத்தானத்தை விசுவசிக்கிறேனென்று அடிக்கடி சொல்லக்கடவோம்.

பிரதிக்கினை.—உன் சரீர அவயவங்களையும் ஐம்புலன்களையும் ஒடுக்கி அடக்கப் பிரயாசப்படு. சரீரத்தை எவ்வளவுக்கு ஒறுத்து அடக்குவாயோ அவ்வளவுக்கு அது மகா சௌந்தரியமுள்ளதாக எழுந்து நித்திய பாக்கியத்தை அடையத் தகுந்ததாகும்.

## 2-ம் பிரிவு

### தேவமாதா பரலோகத்துக்கு ஆரோகணமாகிறாள்

தியானம்.—அர்ச். கன்னிமரியம்மாள் மோக்ஷத்துக்கு எழுந்தருளிப்போனாள் என்கிற இந்தப் பரம இரகசியத்தின்மேல் அர்ச். அஞ்செலமும் அர்ச். பெர்னாதும் சொல்லுகிறதைக் கேட்டுத் தியானிப்போமாக. அனேக விலாச சபை சம்மனசுக்கள் மோக்ஷத்தினின்று அணி யணியாய் இறங்கிக் கன்னியுந் தாயுமான அவளைத் தாழப் பணிந்து வணங்கி, வான மண்டலங்களின் வழியாய் பரலோக வாசல்போய்ச் சேருந்தனையும் மகா சங்கையோடு எழுந்தேற்றஞ் செய்து கொண்டுபோனார்கள். பரகதி முகப்பில் இலட்சாதி இலட்ச மோக்ஷவாசிகள் அவளுக்கு எதிராக வந்து தெய்வீகமான அவளுடைய அழகு சோபனவடிவைக்கண்டு அதிசயித்து, அத்துவானக் காட்டினின்று மதுர இன்பத்தில் மூழ்கி இங்கே ஏறிவருகிற இவளாரென்று கூவிக் கேட்டார்கள். மேலும் இந்த ஆண்டவள் மோக்ஷத்திலே ஓட்டோலக மகிமையாய்ப் பிரவேசித்தபோது இவளுடைய திவ்விய குமாரன் இவளை உபசரித்து வாழ்த்தித் தமது நித்திய பிதாவின் சிம்மாசனம் வரையில் கூட்டிக்கொண்டு போகையில் சுற்றிலும் சம்மனசுக்களும் மற்ற மோக்ஷவாசிகளுங் கெம்பீர முழக்கமாய்த் தாவீதின் குமாரத்திக்குத் தோத்திரமங்களம், நமோ, நமோ, ஆண்டவர்போரால் எங்கள் அரசியாய் வருகிறவள் வாழ்க, வாழ்க, என்று கீதம் பாடினார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—தாயின் சந்தோஷ மகிமை மக்களுக்கும் சந்தோஷ மகிமையல்லோ? ஆகையால் நமது அன்புக்குரிய தாயார் பர



லோகத்துக்கு எழுந்தருளின வருஷாந்திரத் திருநாளில் [illegible]மும் பரிசுத்தமான மனதோடு அகமகிழ்ந்து பூரிக்கக் [illegible]டவோம். ஆனல் ஒரு காரியமாத்திரம் நாம் மறக்கப் படாது. அதாவது அவள் பரலோகத்தில் அம்மாத்திரம் உயர்ந்திருப்பதற்குக் காரணம் பூவுலகில் அவள் சகல [illegible]ஷ்டிகளுக்குள்ளும் அதிக தாழ்ச்சியுள்ளவளாயிருந்தது [illegible]ன். வானுலகில் அவள் அம்மாத்திரம் பேரின்பம் அடைந்ததற்குக் காரணம் இவ்வுலகில் அவள் வேதசாட்சிகளுக்கு அரசியாயிருந்ததுதான் என்று அறியவும்.

மனப்பற்றுதல்.—ஆச்சரியமுஞ் சந்தோஷமும்பட்டு நமது தாயாரை வாழ்த்தி அவளுடைய மாதிரிகையைப் பின்சென்று தாழ்ச்சியிலும் மன ஒறுத்தலிலும் மேலான படியில் ஏற வேகமான ஆசைகொள்ளுகிறது.

பிரதிக்கினை.—நமது ஆத்தும சரீரத்துக்கு வருந் [illegible]ந்தி துன்பங்களிலே பரகதியின் பேரின்பத்தை நினைத் [illegible]க்கொள்ளுகிறது.

## 3-ம் பிரிவு

### அர்ச். கன்னிமரியம்மாள் முடி சூட்டப்படுகிறாள்

தியானம்.—அர்ச். கன்னிமரியம்மாள் பரலோக [illegible]லோக இராக்கினியாக மகிமை முடிசூட்டப்பட்டது [illegible] மங்கல உற்சவ பரம இரகசியத்தில் மகா முக்கியமும் [illegible]வுமாமே. இதை எவ்வளவாகிலும் உன் புத்தியால் [illegible]ரித்து அறியும்படி பார். கன்னியுந் தாயுமான [illegible]ப் பாக்கியவதி நித்திய பிதாவின் சிம்மாசனத்தண்டை [illegible]ல் சேரவே, அவர் இவள் சிரசில் முடியைச் சூட்டிக் கை[illegible]ல் செங்கோலைக் கொடுத்து இவளைச் சம்மனசுக்களுக்கும் [illegible]னிதருக்கும் ஆண்டவளாகவும், பரலோக பூலோக இராக்[illegible]னியாகவும், தம்முடைய பிரசாதங்களைப் பங்கிடுகிறவளா[illegible]வும், கிருபைதயாபத்துக்கு மாதாவாகவும் ஏற்படுத்தினார். [illegible]தைக்கண்ட வானோர்கள் யாவரும் மன அக்களிப்பால் [illegible] எங்கள் இராக்கினிக்கு மங்கலம், ஸ்துத்தியம், [illegible]ம், ஜெயம். நீ அரசியே, கிருபை தயாபத்துக்கு

மாதாவே வாழ்க. உம்முடைய திருக்குமாரனும் நீரும் எங்கள்மேல் அரசாளுமென்று வாழ்த்திப் புகழ்சாற்றினார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நாமும் ஒட்டோலக சபையாரோடு ஒன்றித்து வேகமான ஊக்கங்கொண்டவர்களாய் அவர்களைப்போல நமது பரம தாயாரை வாழ்த்தி வந்தித்து அவளை நாம் சினேகிக்கிறோமென்றும், அவளுக்கு நம்மை நேர்ந்து கொள்ளுகிறோமென்றுங் கூவிச்சொல்லக்கடவோம். ஆனால் இங்கேயுங் கவனிக்கவேண்டிய காரியம் ஒன்று உண்டு. அதாவது இந்தப் பரமநாயகி மகிமையில் சகலருக்கும் மேலாக உயர்ந்து தமது திருக்குமாரனுக்கு அதிக கிட்டினவளாயிருப்பதற்குக் காரணம் அவர் பாடுபடும்போது அவரை நெருங்கிப் பின்சென்றதினால் தானமே. ஆகையால் நாம் இயேசுநாதரோடு நமது சிலுவையைச் சுமந்துகொண்டு கபாலமலையின் உச்சிமட்டும் நடக்கவும், இயேசுநாதசுவாமியோடு சிலுவையில் மரிக்கவும் ஆயத்தமாயிருக்கக்கடவோம்.

சம்பாஷணை.—பரிசுத்த கன்னிகையோடு சம்பாஷணைசெய்து, கிருபைதயாபமந்திரத்தின் ஒவ்வொரு வாக்கியத்தின் கருத்தையும் விரிவாய் யோசித்துப்பார்க்கிறது.

---

# 16-ம் தேதி

## அப்பங்களைப் பலுகப்பண்ணின அன்று இராத்திரி அப்போஸ்தலர் பட்டவருத்தம்

ஆயத்தச் சிந்தனை.—கலிலேயாக் கடலிலே எழும்பின புசலால் அப்போஸ்தலர் அலைக்கழிக்கப்படுகிறதைக் காண்கிறதுபோல் ரூபிகரித்துக்கொள்.



தியானச் செபம்.—உன் சீவியகாலத்தில் உண்டாகுஞ் சகல இடையூறுகளிலும் மாறாத நிலைமையாயிருந்த சர்வேசுரன்பேரில் உன் நம்பிக்கையெல்லாம் வைக்க வரங் கேட்பாயாக.

## முதல் பிரிவு

### அப்போஸ்தலர்களுக்குக் களைப்பு மிஞ்சுகிறது

தியானம்.—அப்பம் பலுகின புதுமை நடந்த அந்த நாள் முழுதும் இயேசுநாதசுவாமிக்கும் அவருடைய அப்போஸ்தலர்களுக்கும் மகா களைப்பான நாளாயிருந்தது. விடியற்கால முதல் பொழுது அஸ்தமித்து ஏறக்குறைய மூன்று நாழிகை நேரம் வரையில் ஒரு க்ஷணமுதலாய் அவர்களுக்கு இளைப்பாற்றி கிடைக்கவில்லை. ஆகிலும் அன்று இரவாகிலும் இளைப்பாறி நித்திரை செய்தார்களோ? அதுவுமில்லை. ஏறக்குறைய பதினாயிரஞ் சனங்களுக்கு அற்புதமாய்ப் பந்தி பரிமாறி, மிச்சமானதெல்லாம் வருத்தத்தோடு பொறுக்கிச் சேர்த்தமாத்திரத்திலே இயேசுநாதசுவாமி அப்போஸ்தலர்களைப்பார்த்து, நீங்கள் வந்த படகில் ஏறி, கடலைக் கடந்து பெத்சாயிதா ஊரை நோக்கிப்போங்கள். நாம் சனங்களை அனுப்பிவிட்டு வருவோமென்றார். அதின்பிறகு செபம் பண்ணும்படியாய் மலைமேல் ஏறிப்போனார். கர்த்தர் அப்போஸ்தலர்களுக்கு அந்தக் கற்பனை கொடுப்பதற்கு முகாந்திரமேதென்றால், சனங்கள் அவரை இஸ்ராயேல் கோத்திரத்திற்கு இராசாவாக்க வேணுமென்ற கருத்துக்கு அவர்களையும் இணக்கி உடன்படுத்தாதபடிதான். ஆனால் இது அவர்களுக்கு வெகு கடினமாய்த் தோன்றியிருக்கவேண்டியது. ஏனெனில் இதனிமித்தம் அவர்கள் இயேசுநாதசுவாமியை விட்டுப் பிரியவேண்டியிருந்ததுமன்றி, இரவெல்லாம் வெகு பிரயாசையோடு யாத்திரை செய்யவேண்டியிருந்ததால் முந்தின நாள் பட்ட களைப்பைத் தீர்ப்பதற்கும் அவர்களுக்கு வகையில்லாமல் போயிற்று.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இந்த அந்தஸ் சர்வேசுரன் நம்மை அழைக்கச் சித்தமான

திலே மிகுதியான வேலையும் துயர் இளைப்பும் களைப்பும்
உண்டென்று யாவரும் ஒத்துக்கொள்ளத்தகும். இவை
களை மட்டுப்படுத்துகிறதற்குச் சபை ஏற்பாட்டின் விசேஷ
மான ஒழுங்குகள் உண்டென்பது மெய்தான். ஆனால்
நினையாத அவசர வேலை சமயங்கள் குறுக்கிடும்போது பல
முறை பகல் முழுதும் வெகுவாய் வருந்திப் பாடுபட்டபின்
இரவிலும் விழித்திருந்து உடல் களைக்க உழைக்கும்படி
நேரிடுகிறதல்லோ? இச்சமயங்களில் மனச்சோர்
வடைந்த சந்நியாசி என்ன செய்வானென்றால் முணு
முணுப்பான்; அப்படியில்லையென்றாலும், மற்றவர்
களிடத்தில் எல்லாந் தன் துக்கத்தைச் சொல்லிக்காட்டு
அவர்கள் தனக்கு இரங்கி ஆறுதல் சொல்லும்படி தே
வான். இதுதான் அவன் தேடுகிற வீண் பரிகாரம்.
தாழ்ச்சியும் ஞானவேகமுமுள்ள சந்நியாசியோ அப்படி
நடவாமல் தான் செய்கிறதெல்லாந் தனக்குச் செய்யக்
கடமையென்று நினைப்பான். அர்ச்சியசிஷ்டவர்கள்
செய்ததுக்கு முன்பாக இதெல்லாம் ஒன்றுமில்லையென்று
எண்ணுவான். உலகத்தார் இலாபத்துக்காக அல்லது
வீண் பெருமைக்காகத் தன்னிலும் அதிகமாய் உழைக்
கிறார்களென்றிருப்பான். ஒரு வேலையை முடித்து
வேறொரு வேலையைத் தொடங்குவது அவனுக்கு இளைப்
பாற்றியாயிருக்கும். சமயத்துக்குத்தக்கது அவனுடைய
களைப்பே அவனுக்குப் புதிதாய் வீறு கொடுக்கும்.
இவ்விரு திறத்தாருக்குள்ளே உன்னை யாருக்கு ஒப்
பிடுகிறது?

மனப்பற்றுதல்.—ஆண்டவரே, எனக்கு அதிக
மதிகமாய் வேலைக்குமேல் வேலைதாருமென்று அர்ச். சவே
ரியார் பேரொலியிட்டுக் கேட்டாரே; அவரைப்போல்
உனக்கும் பெருந்தன்மையான இருதயந் தாவே
மென்று மன்றாடு.

பிரதிக்கினை.—வேலையைக்கண்டு அஞ்சும்போது
சம்பாவனையை நினைத்து மனதைத் தேற்றென்று அர்ச்.
அகுஸ்தீன் சொன்ன வாக்கை நினைத்து நானும் கஷ்ட
மான சமயங்களில் மனத்தைரியமடைவேன்.



## 2-ம் பிரிவு

### புசலோடு போராடுவதில் அப்போஸ்தலர்கள் இராவெல்லாம் கஷ்டப்படுகிறார்கள்

தியானம்.—இயேசுநாதர் வெளிப்படையாய்க்
கொடுத்த கட்டளையினாலே அப்போஸ்தலர்கள் படகில்
ஏறிப்போனாலும் அவர்களுக்கு விரோதமாய் எதிர்காற்று
விடாமல் அடித்துக்கொண்டிருந்தது. திவ்விய குருவான
வர் அவர்களுக்குக் குறித்த ஸ்தலமாகிய பெத்சாயிதா என்ற
ஊர்த் துறைமுகஞ் சேருவதற்குக் கரையோரமாய்ச் செல்ல
எவ்வளவுதான் எத்தனித்தாலுஞ் சற்றுங் கூடாமல்
போயிற்று. ஏனெனில் அத்தனை விசையும் அவர்களைக்
கடற் தூரத்தில் தள்ளிவிட்டது. இப்படி அவர்கள் நடுச்
சாமங் கடந்து இன்னுங் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கை
யில் கடலில் அகோரமான ஒரு காற்று எழும்பி அவர்கள்
படகை அங்கும் இங்குந் தள்ளி ஆட்டி அலைக்கழித்தது.
அப்போது திவ்விய கர்த்தர் செய்ததென்னவென்றால்,
தமது சீஷர்கள் காற்றுக்கு எதிர்முகமாய்த் தண்டுவலிக்கப்
படும் பிரயாசத்தைக் கண்டு அவர்களுக்கு யாதொரு மோச
மும் வராதபடி காத்து அவர்கள்மேல் கண்ணுண்டாயிருந்
தார். ஆயினும் உடனே பிரத்தியட்சமாய் அவர்களுக்கு
உதவியாக வந்து புசலை அமர்த்தாமல் கொஞ்சந் தாமதஞ்
செய்தார். ஏனெனில் அர்ச். கிறீசோஸ்தோம் அருளப்பர்
சொன்னபடி, அவர்களைப் பிரயாசத்திற்குப் பழக்கவும்,
விசுவாசம், தாழ்ச்சி, நம்பிக்கையில் உறுதிப்படுத்தவும்,
துன்பங்களில் கிடைக்கும் தேவ உதவி உபகாரத்தை அதிக
மாய் எண்ணி மதிக்கவும் இப்படிச் செய்தார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—
இவ்வித முகாந்தரங்களைப்பற்றிச் சர்வேசுரன் நம்மையும்
இவ்விதமாய் நடத்தி வருகிறதுண்டு. நம்முடைய அந்தஸ்
துக்கடுத்த கடமைகளை நிறைவேற்ற எவ்வளவுதான் எத்
தனித்தாலும், மகா உத்தம கருத்தோடே துவக்கின வேலை
யைத் தொடர்ந்து முடிக்க எவ்வளவுதான் தண்டித்தாலும்,
ஒன்றில் எவ்வித எதிர்மாறுந் தடை விக்கினங்களுங் குறுக்

கிடுகின்றன; அல்லது நமது ஊக்கத்துக்குத்தக்க ஆக்கம் பெறுகிறதில்லை. நமக்கு மனத்துயரமும் அகோரமான சோதனைகளும் எழும்பும்போது அவைகளைத் தொலைப்பதற்கு என்னென்ன உபாய தந்திரமெடுத்தாலும் எத்தனை தான் செபித்தாலும் வெகு காலத்துக்கு அவைகள் நம்மை விட்டு நீங்காமல் உபாதித்துக்கொண்டே வரும். இதெல்லாம் என்ன? தேவ திருவுளமன்றி வேறொன்றுமல்ல. இதற்கு என்ன செய்கிறதென்று கேட்பாயாக்கும். சர்வேசுரன் நம்மைக் கை நெகிழ்ந்தாரென்று எண்ணி அவநம்பிக்கையும் அதைரியமுங் கொள்ளாதபடி எச்சரிக்கையாயிருக்கவேண்டியது. அன்றியும் சர்வேசுரன் தமது வரப்பிரசாதத்தினால் நம்மைத் தாங்கிக்கொண்டிருக்கிறாரென்று மனதில் உறுதியாய் நினைத்துக்கொள். மேலும் சர்வேசுரன் நம்மிடத்தில் கேட்கிறது நமது வேலையில் பிரமாணிக்கத்தையேயன்றி அதின் அநுகூலத்தையல்லவென்று நன்றாய் அறியக்கடவோம். கடைசியாய் சர்வேசுரன் நம்மைச் சிலகாலஞ் சோதித்தபின் தாம் குறித்த காலம் வரும்போது நமக்கு அமரிக்கையுஞ் சந்தோஷமுமான தமது பிரசன்னத்தின் ஆறுதலைத் தந்தருளுவார். இதெல்லாம் யோசித்து உன் நினைவிலுஞ் செய்கையிலுஞ் சீர்திருத்தவேண்டியவைகள் எவையென்று விசாரித்து அதற்கேற்ற பிரதிக்கினை செய்துகொள்.

**சம்பாஷணை.**—நமது திவ்விய இரட்சகருங் குருவுமான இயேசுநாதர்சுவாமியோடு சம்பாஷணை செய்; நீ செய்த பிரதிக்கினைகளை அவருக்கு ஒப்புக்கொடுத்து அவைகளின்படி சுளுவாய் நடக்கவேண்டிய வரத்தைக் கேள்.



# 17-ம் தேதி

## முந்தின தியானத்தின் தொடர்ச்சி

**ஆயத்தச் சிந்தனை.**—அர்ச். இராயப்பர் கடல்மேல் நடந்து இயேசுநாதருக்கு எதிரே போகிறதாக ரூபிகரித்துக்கொள்.

**தியானச் செபம்.**—இயேசுநாதர்சுவாமியை அதிக மதிகமாய் அறிந்து சிநேகிக்க வரங்கேள்.

## முதல் பிரிவு

### இயேசுநாதர்சுவாமி தண்ணீரின்மேல் நடந்து அப்போஸ்தலர்களுடைய படகை நோக்கிச் செல்லுகிறார்

**தியானம்.**—அப்போஸ்தலர்களுக்கு உதவிசெய்யத் தேவ திருவுளத்தால் குறிக்கப்பட்ட நேரம் வந்தமாத்திரத்தில் அதாவது இரவின் நாலாஞ் சாமமாகிய விடியற்காலத்தில் இயேசுநாதர் கடல்மேல் நடந்து அவர்களை நோக்கி வந்தார். இன்னமும் இரா இருள் நீங்காததினால் சீஷர் அவரைத் தூரத்தில் மங்கலாய்க் கண்டார்கள். இப்படிப்பட்ட தோற்றம் அவர்களுடைய ரூபிகரத்தில் பயங்கரம் வருவிப்பதற்கு ஏதுவாயிருந்ததினாலே அவர்கள் கலங்கி இதோ பூதம் வருகிறதென்று அபயசத்தமிட்டார்கள். (மத். 14).

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—அப்போஸ்தலர்கள் இயேசுநாதர்சுவாமியை ஒரு பூதம் என்று பாவித்து மயங்கினது முழுதும் மட்டித்தனம். நம்மிடத்திலுள்ள குருட்டாட்டம் அவ்வளவு மட்டித்தனத்தைக் காட்டாதேபோனாலும் அது நமது ஆசாபாசங்களினின்று உண்டாகிறதினால் அதிக குற்றமுள்ளதாயிருக்குமல்லவோ? நமது ஆத்தும நன்மைக்காக இயேசுநாதர்சுவாமியிடத்திலிருந்து வரும் ஞான ஒளியையும் பரிசுத்த ஏவுதல்களையும் தேவ பயத்தையும் நாம் பூதமென்றும் மாயமென்றும் எண்ணுகிறதில்லையோ? அதற்குமாறாய் நமது

ரூபிகர தோற்றங்களையும் கிரமந் தப்பின இருதய நாட்டங்களையும் ஆங்காரத்தின் அபேட்சைகளையும் தேவ ஏவுதல்களாகக் கொள்ளவில்லையோ? இப்படிச் செய்கிறது இயேசுநாதர்சுவாமியை மாய்கையாகவும், மாய்கையை இயேசுநாதர்சுவாமியாகவும் எண்ணுகிறதற்குச் சமானம். இதில் ஒன்று மற்றொன்றைவிட அதிக அகந்தையுங் குற்றமுமுள்ளதென்று சொல்வதற்கு இடமில்லை.

மனப்பற்றுதல்.—*பரலோக பாதாள அரூபிகளின் வேற்றுமையைப் பகுத்தறியும் வரத்தை ஆண்டவரிடத்தில் இரந்துகேள். பிரகாசமுள்ள சம்மனசுவின் வேஷம்போடுகிற பசாசின் மாய்கைக்குள் அகப்படாதபடிக்கும் மெய்யாகவே சோதிக்கதிர் வீசும் பரம தூதரை அந்தகாரப் பசாசென்று அகற்றாதபடிக்கும் இந்த வரம் மகா அவசரம்.*

பிரதிக்கினை.—*ஆத்தும குருவுக்கு உன் இருதயத்தைத்திறந்து காண்பித்து நல்ல குணத்தோடு கீழ்ப்படிவாயாக.*

## 2-ம் பிரிவு

### இயேசுநாதர்சுவாமி அப்போஸ்தலர்களுடைய பயத்தை நீக்கி அவர்களைத் திடப்படுத்துகிறார்

தியானம்.—*அப்போஸ்தலர்கள் தண்ணீரின்மேல் நடந்துவருகிற மனுஷ உருவத்தைத் தொலையில் கண்டு அதைப் பூதமென்று எண்ணினார்கள். அந்த உருவமானது அவர்கள் பக்கமாய் வரவே, அவர்கள் பதறி அலறி கூக்குரலிட்டார்கள். உடனே இயேசுநாதர் அவர்களைத் திடப்படுத்தி நம்பிக்கையாயிருங்கள், நாம்தாம்; பயப்பட வேண்டாமென்று திருவுளம்பற்றினார். (மாற். 6).*

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—*அப்போஸ்தலர்கள் கடலிலே ஆபத்துக்குள் அகப்பட்டதற்குக் காரணம் இயேசுநாதர்சுவாமி அவர்களைப் புறப்படச் சொல்லி இட்ட கட்டளையானபடியினாலே, அவர் தங்களுக்கு உதவி செய்வாரென்று அவர்கள் நம்புவதற்கு நியாயமிருந்தது. அவரும் தப்பாமல் அவர்களுக்கு உதவி செய்தார். அப்படியே கீழ்ப்படிதலினிமித்தம் நாம் சுமந்து கொள்ளுகிற பிறாத்தும சரீர சம்பந்தமான அலுவல்களில்: அநேகாநேக தந்திர மோசங்களுக்குள் நாம் இயல்பாய் உட்படவேண்டியிருந்தாலும், விசேஷ தேவ உதவி நமக்குக் குறைபடாதென்று நம்பவேண்டியது. இந்தச் சத்தியம் நமக்கு எவ்வளவோ மன உற்சாகந் தர வேண்டியது!*



மனப்பற்றுதல்.—*உனக்கு நேரிடும் அச்சம் ஆபத்து முதலிய சமயங்களில் இயேசுநாதர்சுவாமி உன்னைப் பார்த்து: நான்தான்; பயப்படாதே நம்பிக்கையாயிருவென்று அமிர்தமான வார்த்தைகளைச் சொல்லும்படி அவரை மன்றாடுவாயாக.*

பிரதிக்கினை.—*கீழ்ப்படிதல் வழியாக நமக்குக் கொடுக்கப்படும் அலுவல்களிலே நாம் மோசம் போவோமென்று பயப்படாமல் அவைகளைக் கையேற்றுக்கொள்வோமாக.*

## 3-ம் பிரிவு.

### அர்ச். இராயப்பர் தண்ணீரின்மேலே நடந்து தம்மிடத்தில் வரும்படி இயேசுநாதர் உத்தரவு கொடுக்கிறார்.

தியானம்.—*அர்ச். இராயப்பர் தமது அன்புள்ள திவ்விய குருவின் குரலோசையைக் கேட்ட மாத்திரத்தில் தம்மை மறந்தாற்போல அவரை நோக்கி: ஆண்டவரே, நீரேயானால் நான் சலத்தின்மேல் நடந்து உம்மிடத்தில் வரக் கட்டளையிடுமென்றார். இயேசுநாதரோ வாவென்றார். என்றவுடனே இராயப்பர் படகை விட்டு இறங்கி இயேசுநாதரண்டையில் போக சலத்தின்மேல் நடந்தார். ஆனால் பலத்த காற்றினால் அலைகள் எழும்பி வரவே, அதைக்கண்டு பயந்து அமிழ்ந்திப்போகிறதாயிருக்கையில் ஆண்டவரே என்னை இரட்சியுமென்று கூப்பிட்டார். உடனே ஆண்டவரும் தமது கையை நீட்டி அவரைப் பிடித்து: அற்ப விசுவாசியே, ஏன் சந்தேகப்பட்டாயென்றார். பின்பு அவர் படகில் ஏறவே, அக்ஷணமே காற்று அமர்ந்ததுமன்றிப் படகும் அவர்கள் குறித்த கரை சேர்ந்தது. இந்தப் [illegible] காட்சியைக் கண்ணால் கண்ட அர்ச். மத்தேயு*

சொல்லுகிறதுபோல படகிலிருந்தவர்கள் எல்லாரும் இவ்வளவு பெரிய அற்புதத்தைக் கண்டு இயேசுநாதசுவாமி பாதத்திலே விழுந்து, மெய்யாகவே நீர் சர்வேசுரனுடைய குமாரனாயிருக்கிறீரென்று அவரை நமஸ்கரித்தார்கள். (மத். 14, அரு. 6.)

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.— மனதில் ஆழமாய்த் தைக்கத்தக்க விதமாய்ச் சுவிசேஷத்தில் விவரிக்கப்பட்டிருக்கிற இந்த வர்த்தமானத்தைக் கேட்கும்போது எவ்வளவோ புத்திமதிக்கும் நல்லொழுக்கத்துக்கும் அடுத்த யோசனைகள் நமது உள்ளத்தில் பிறக்கின்றன! ஒரு பக்கத்தில் திவ்விய கர்த்தர்மேல் அர்ச். இராயப்பருக்குள்ள வேகமான சிநேகத்தையும், ஆண்டவரிடத்தில் போகவேணுமென்று அவர் காண்பித்த ஆவலையும், அவருடைய உயிருள்ள விசுவாசத்தையும், அதற்குச் சம்பாவனையாக நடந்த சிறந்த புதுமையையும் பார்த்த பிறகு, எந்த ஆபத்துக்கும் அஞ்சாத வைரம்போலிருந்த அவருடைய விசுவாசம் ஒரு காற்று அடித்தவுடனே நிலையற்றுத் தடுமாறினதையுஞ் சிந்தித்துக்கொள். இன்னொரு பக்கத்தில் இயேசுநாதசுவாமியுடைய தயாள நிறைந்த நன்மைத்தனத்தை யோசித்துப்பார். அவரே முந்தக் கை நீட்டித் தமது சீஷனைத் தூக்கிவிடுகிறார். பின்னும் அவரை இகழ்ந்து கண்டிக்க நினையாமல், தைரியம் வருவிக்கும்படியாக: அற்ப விசுவாசியே, ஏன் சந்தேகப்பட்டாயென்று கேட்கிறார். ஆகையால் நீயும் உன் விசுவாசத்தின் உறுதி எம்மாத்திரமென்று பார்த்துக்கொள்.

சம்பாஷணை.—இயேசுநாதசுவாமியோடு சம்பாஷணை செய். அவர் முன்பாக அப்போஸ்தலர்களோடே கூடச் சாஷ்டாங்கமாக விழுந்து அவரை வணங்கி உன்னுடைய பத்தி விசுவாச முதலிய புண்ணியங்கள் மிகவும் வளரவேணுமென்று மன்றாடு.

---



# 18-ம் தேதி.

## செனேசரத்து நாட்டாருடைய விசுவாசமும் அற்புதமான சொஸ்தங்களும்.

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதசுவாமி தமது அங்கியின் விளிம்பைத் தொடப் பிரயாசப்படும் வியாதிக்காரர் நடுவே இருக்கிறதைப் பார்க்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

தியானச் செபம்.—செனேசரத்து நாட்டாருடைய விசுவாசத்தை மிகவுங் கனமாய் எண்ணும்படி வேண்டிய தேவ அனுக்கிரகத்தைக்கேள்.

### முதல் பிரிவு.

### இந்தச் சனங்களிடத்திலே விளங்கின வேகமும் உயிரும் நிறைந்த விசுவாசம்.

தியானம்.—இயேசுநாதரும் அப்போஸ்தலர்களும் ஏறியிருந்த படகு செனேசரேத்தென்னும் நாட்டில் விடியற்காலம் கரைபிடித்தது. இதற்கு முந்தின நாள் கர்த்தர் அப்பங்களைப் பலுகச் செய்த புதுமையைக் கண்டவர்கள் இரவிலே கடலைக் கடந்து அந்நாட்டிற்கு வந்திருந்தார்கள். அந்தப் புதுமையின் செய்தி எங்கும் பிரபல்லியமாயிருந்தது. ஆகையால் நேர்மையுள்ளவர்களுங் கபடற்றவர்களுமான அந்நாட்டார் தங்கள் ஊருக்கு இயேசுநாதசுவாமி வந்திருக்கிறாரென்று அறிந்தவுடனே நாலாபக்கத்திலுமிருந்து உயிருள்ள விசுவாசத்தோடு அவரிடத்தில் ஓடிவந்து, அர்ச். மத்தேயு சொல்லுகிறதுபோல அவரைப் பெரிய தீர்க்கதரிசியென்றும் சர்வேசுரனால் அனுப்பப்பட்ட தங்கள் மேசியாவென்றும் அறிந்துகொண்டார்கள். சகலருடைய இருதயமும் அவரை நோக்கியிருந்தது. இயேசுநாதரும் தமது பிள்ளைகள் நடுவே இருப்பதுபோல் அவர்கள் நடுவில் இருந்தார். (மத். 11.)

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நம்முடைய விசுவாசம் இன்னும் அதிக உயிருள்ளதாயிருந்தால் நாம் தேவாலயத்தில் பிரவேசிக்கும்போதே இயேசுநாதசுவாமியை நோக்கி நமது இருதயந் தாவி ஒருவகையில் பறந்துபோகாதோ? திவ்விய பூசை நேரத்தில் குருவானவர் தேவ வார்த்தை சொன்னவுடனே இயேசுநாதசுவாமி பீடத்தின்மேல் இறங்கி வரும்போதும், நம்மைத் தமது வரங்களால் நிரப்பும்படி தேவநற்கருணைப் பெட்டியினின்று வெளிப்பட்டுத் தம்மை நமக்குக் காட்டும்போதும், சிநேக அக்கினி பற்றி எரியுந் தமது இருதயத்தைத் திறந்து: வருந்திச் சுமை சுமக்கிற நீங்கள் எல்லாரும் நம்மிடத்தில் வாருங்கள்; நாம் உங்களைத் தேற்றுவோமென்று நம்மைப் பார்த்துச் சொல்லும்போதும், நமது இருதயஞ் சிநேகத்தால் அவரோடு ஒன்றாகவேணுமென்கிற ஆசையால் துடிக்கமாட்டாதோ?

மனப்பற்றுதல்.—நம்முடைய விசுவாசத்தைத் திடப்படுத்தி, மகத்துவம் பொருந்திய சர்வேசுரனையும், மகா வல்லமை நன்மை தயை நிறைந்த இரட்சகரையும் அறிந்து நமஸ்கரிப்போமாக.

பிரதிக்கினை.—தேவாலயத்தை நோக்கி நாம் செல்லும்போது இயேசுநாதர் மெய்யாகவே தேவநற்கருணையில் எழுந்தருளியிருக்கிறதை நினைத்துக்கொள்ளுகிறதுமல்லாமல் அதில் பிரவேசித்தவுடனே அவர் தமது கரங்களை நீட்டி நம்மைத் தம்மண்டையில் அழைக்கிறதாக நமது விசுவாசக் கண்ணாலே பார்க்கக்கடவோம்.

## 2-ம் பிரிவு

### முயற்சியோடும் பிறசிநேகத்தோடுங்கூடிய சேனேசாத்தாருடைய விசுவாசம்

தியானம்.—விசுவாசமானது சிநேகத்தினால் கிரியைகளைச் செய்கிறதென்று அர்ச். சின்னப்பர் எழுதியிருக்கிறார் (கலா. 5). இயேசுநாதர்சுவாமியை முந்த முந்த அறியும்படி பாக்கியம்பெற்ற அந்நாட்டாரிடத்தில் இந்தச் சிநே



கம் விளங்குகிறது. அவர்கள் தங்களுக்குக் கிடைத்த பாக்கியம் மற்றவர்களுக்கும் வரும்படி ஆசைப்பட்டு, இயேசுநாதசுவாமி தங்கள் நடுவில் வந்திருக்கிறாரென்று அறிவிக்க நாலாபக்கமும் ஆளனுப்பி வெகு தொலையிலிருந்து முதலாய் வியாதியஸ்தர் திவ்விய கர்த்தருடைய உதவிசகாயத்தைத் தேடும்படி வரச்செய்தார்கள். சுற்றுக் கிராமங்களுக்குப் போய் நடக்கக்கூடாத ரோகஸ்தரைக் கட்டிலில் கிடத்தி இயேசுநாதசுவாமியிடத்தில் தூக்கிக்கொண்டு வந்தார்கள் (மத். 14; மாற். 6).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இந்தச் சனங்களுடைய பிறசிநேகத்தைக் கண்டுபாவித்து வருத்தப்படுகிறவர்கள்பேரிலும் வியாதிக்காரர்பேரிலும் மெய்யான இரக்கத்தைக் கிரிகையினால் காண்பிப்போமாக. இன்னம் இந்த ஊராரைப்பார்க்க நாம் அதிக நன்மை செய்யக்கடவோம். எப்படியெனில் நாம் சரீர சம்பந்தமான [illegible] கிரியைகளோடு ஆத்தும சம்பந்தமான தர்மக் கிரியைகளையுஞ் சேர்த்து முடிக்கக்கடவோம். விசேஷமாய்ப் பாவிகளை மனந்திருப்பும்படி சமயங் கிடைக்கும்போது அவர்களுடைய ஆத்தும நோயின் கடினத்தை அவர்களுக்கு எடுத்துக் காண்பித்து ஞான ஆரோக்கியமும் நித்திய பாக்கியமுமான வாழ்வுந் தந்தருள வல்லவரான சர்வேசுரனுடைய அடைக்கலமாய்ப் போகும்படி அவர்களுக்குப் புத்தி சொல்லக்கடவோம். இப்படிப் பிறருடைய இரக்ஷணியத்துக்காகப் பிரயாசப்பட எத்தனையோ சமயம் வாய்த்தபோதிலும் அவைகளை நீ கை தவற விடவில்லையோ?

மனப்பற்றுதல்.—பிறருடைய ஆத்தும வறுமையைக் கண்டு நாம் யாதொரு கவலையும் இல்லாதிருக்கிறதி[illegible]த்தம் சுவாமிக்குமுன் நம்மைத் தாழ்த்தக்கடவோம். [illegible]லும் நம்மிடத்தில் பத்தி விசுவாசம் பிறரீடேற்றத்தின் [illegible] ஆவல் அதிகமதிகமாய் வளரும்படி மன்றாடுவோமாக.

பிரதிக்கினை.—எவ்விடத்தில், எப்படி, எந்தச் சுசூஷை [illegible]ளுக்கு நீ பிரயோசனமாயிருக்கலாமென்று பார்-

## 3-ம் பிரிவு

### சேனேசாத்தாருடைய சங்கையும் நம்பிக்கையும் நிறைந்த விசுவாசம்

தியானம்.—இந்தச் சனங்களுடைய விசுவாசம், சங்கை வணக்கம், நம்பிக்கை, இவைகளுக்குச் சம்பாவனையாக கணக்கில்லாத வியாதிக்காரர் புதுமையாக ஆரோக்கியம் அடைந்தார்கள். இதைக் குறித்து அர்ச். மாற்கு எழுதியிருக்கிறதாவது : இயேசுநாதர் கப்பர்நாவூம் ஊருக்குச் செல்லுகையில் அந்தப் பாதையிலிருந்த பட்டணங்களிலும் ஊர்களிலுங் கிராமங்களிலுமுள்ள வியாதிக்காரரைக் கொண்டுவந்து தெருக்களில் கிடத்தி அவருடைய சட்டையின் விளிம்பையாகிலும் அவர்கள் தொடும்படி விடைகொடுக்க அவரை மன்றாடுவார்கள். அப்படியே அவரைத் தொட்ட யாவரும் ஆரோக்கியமடைவார்கள் (மாற். 6).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—உன் திவ்விய மாதிரிகையான ஆண்டவருடைய மட்டற்ற நன்மைத்தனத்தையும் விசேஷமாய் அவருடைய கிருபையையும் பொறுமையையுங் குறிப்பிட்டுப்பார். வியாதியஸ்தரும் எவ்வித நிர்ப்பாக்கியருந் திரண்டு, யார் முந்தி அவரைத் தொட்டுச் சுகமாவோமென்று ஒருவர் ஒருவரை இடித்துக் கொண்டு வருகையில் அவர்கள் தமதுகிட்ட அணுகவுந் தம்மைத் தொடவும், இன்னமுந் தமதுமேலே விழுந்து நெருக்கவும் முதலாய் விட்டுவிடுகிறார். அவர்கள்மேல் யாதொரு குறையுஞ் சொல்லவுமில்லை; உள்ளம் பொங்கி எரிச்சலைக் காட்டவுமில்லை. இந்த ஆச்சரியமான மாதிரிகைக்கு ஏற்றவண்ணம் நீயும் ஆகும்படி பிரயாசப்படு. இன்னமும் இதில் கவனிக்கவேண்டிய ஓர் விசேஷமுண்டு. அதாவது : இந்தச் சமயத்தில் வியாதியஸ்தர் சுகமாக வேணுமானால் தமது வஸ்திரத்தைத் தொடவேண்டியதென்று இயேசுநாதசுவாமி சித்தமாயிருந்தார். இதற்கு முகாந்தரமேதென்றால் அன்றையத்தினம் இயேசுநாதசுவாமி கப்பர்நாவூம் ஊரிலுள்ள செபக்கூடத்தில் தேவநற்கருணையைப்பற்றி முதல் விசையாகப் பிரசங்கிக்கக் கருத்தாயிருந்ததினாலே, இந்தத் திவ்வியநற்கருணை வழியாக நாம் அவரை உட்கொள்ளும்போது அவருடைய திருச்சரீரம் நமது சரீரத்தோடு சேர்ந்து ஒன்றாய்ப் போகிறதினால் எம்மாத்திரம் வரப்பிரசாதங்களும் எம்மாத்திரம் மேலான சகாயங்களும் நாம் அடைவோமென்று காண்பிக்கும்படியாக அப்படிச் செய்தாரென்று வேதபாரகர் சொல்லுகிறார்கள்.



சம்பாஷணை.—நமது ஞான வைத்தியரான இயேசுநாதரோடு சம்பாஷணை செய்து நமது ஆத்தும வியாதிகளை அவருக்குக் காண்பித்து ஆரோக்கியந்தரக் கேட்போமாக.

---

## 19-ம் தேதி

### இயேசுநாதசுவாமி தாம் இனிமேல் ஏற்படுத்தப் போகிற தேவநற்கருணையைப்பற்றிச் செய்த பிரசங்கம்

ஆயத்தச் சிந்தனை.—கப்பர்நாவூம் ஊரிலுள்ள செபக்கூடத்தில் இயேசுநாதசுவாமி பிரசங்கம் பண்ணிக்கொண்டிருக்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

தியானச் செபம்.—பணிந்த மனதையும் சுவாமிக்கு நேர்ந்த இருதயத்தையுங் கேள்.

## முதல் பிரிவு

### இயேசுநாதசுவாமி கப்பர்நாவூம் ஊராரைக் கண்டித்தது

தியானம்.—இயேசுநாதசுவாமி சகல பிணியாளிகளுக்கும் ஆரோக்கியங்கொடுத்துச் செனேசரேத்து நாட்டைக் கடக்கிறதற்கு ஒருநாள் முழுதுஞ் சென்றது. வெள்ளிக்கிழமையாகிய அன்று பொழுது அஸ்தமித்தபின் யூதருக்கு

ஓய்வுநாளின் துவக்கமான சமயத்தில் இயேசுநாதசுவாமி
கப்பர்நாவூம் ஊரில் வந்து சேர்ந்தார். சேர்ந்தவுடனே சற்
றும் இளைப்பாறுமல் செபக்கூடத்தில் பிரவேசித்தார்.
அங்கே கூடிவந்த திரளான சனங்களுக்குள் முந்தினநாள்
அற்புதமாய்ப் பலுகின அப்பத்தைப் பொசித்துத் திருப்தி
யடைந்த வெகுபேரும் இருந்தார்கள். அவர்கள் இயேசு
நாதசுவாமியைத் தேடி வந்தது நல்லதாயினும், அதினுல்
அவர்களுக்கு யாதொரு புண்ணிய பலனும் இல்லாதிருந்
ததுமன்றி அவர்கள்மேல் குறை சொல்வதற்கும் ஏதுவா
யிருந்தது. ஏனென்றுல் அவர்கள் வந்ததற்குக் காரணம்
லௌகீக நன்மையும் இன்பப் பிரியமுமேயன்றி வேறென்று
மல்ல. திவ்விய கர்த்தர் அவர்களை நோக்கிச் சொன்ன
வாக்கியங்களும் இதற்கு அத்தாட்சியாமே. அதெப்படி
யென்றுல் மெய்யாகயே மெய்யாகவே உங்களுக்குச்
சொல்லுகிறேன், அற்புதங்களைக் கண்டதினுலல்ல (ஆனல்
உங்களுக்கு யாதொரு செலவும் பிரயாசமுமில்லாமல்) அப்
பங்களைப் புசித்துத் திருத்தியடைந்ததினுலல்லோ நீங்கள்
என்னைத் தேடுகிறீர்கள் என்றுர் (அரு. 6).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நீயுந்
சுயநலத்தை முன்னிட்டு முழுதுஞ் சுத்தக் கருத்தில்லாமல்
உன் நற்கிருத்தியங்களைச் செய்வதினுல் அவைகளின்
பேறுபலன் குறைந்துபோக வழிபண்ணுகிறுயல்லோ?
பிறசினேகத்துக்கும் ஆத்தும இரட்சணியத்துக்கும்
அடுத்த அலுவல்களைப்பற்றி வெகு தொலைபோகவேண்டிய
போதும் தொழில் உத்தியோகம் மாற்றவேண்டியபோதும்
நீ பறக்கப் பறக்கக் கீழ்ப்படிகிறது மெய்தான். ஆனல்
பயணஞ் செய்கிறது உனக்கு உல்லாசமாகவும் இன்பமாக
வும் இருக்கிறதினுலாவது வீண் பெருமை தேககசும்
இவற்றின் யோசனையினுலாவது தூண்டப்பட்டு இப்படி
நடக்கிறதில்லையோ? இதை உள்ளபடி அறியவேணுமா
னுல் உன் சுயபட்சத்திற்கும் சுபாவ நாட்டத்திற்கும் ஏற்
கையாயிருக்கிற அலுவல்களைச் செய்வதில் உனக்குள்ள
ஆத்திரம் உன் மனதுக்குப் பிடியாத சிலவேலைகளைச் செய்
கிறதில் உண்டோவென்றுபார்.



மனப்பற்றுதல்.—இதைக்கண்டு வெட்கி உலகத்துக்
கும் உனக்குஞ் செத்தவனைப்போலிருக்க ஆசைப்படு.

பிரதிக்கினை.—நீ செய்யும் அந்தந்தக் கிரியைகளை
என்ன முகாந்தரத்தைப்பற்றிச் செய்கிறுயென்று இன்றை
க்கு விசேஷமாய்க் கவனித்துப்பார்.

## 2-ம் பிரிவு

### கப்பர்நாவூம் ஊராருக்கு இயேசுநாதர் வெளிப்படுத்தின தேவரகசியம்

தியானம்.—இயேசுநாதசுவாமி வாக்குக்கெட்டாத
பரமஇரகசியமான தேவநற்கருணையைச் சனங்கள் விசு
வசிக்கும்படி அவர்கள் மனதை ஏற்கனவே இணக்கச்
சித்தமானுர். கப்பர்நாவூம் ஊரார் புசித்த அற்புதமான
அப்பமும் பிறகு அவர்களுக்கு வந்த கண்டனையும் மேற்
படி இரகசியத்தைப்பற்றிப் பேசுகிறதற்குத் தக்க சமயத்
தைக் கொண்டுவந்துவிட்டது. இயேசுநாதர் அப்போது
சொன்னதாவது: அழிந்துபோகிற போசனத்தைப்பற்றி
யல்ல, நித்திய சீவியமட்டும் நிலைநிற்கிறதுமாய், மனுமகன்
உங்களுக்குக் கொடுக்கப்போகிறதுமாகிய அப்பத்துக்காகப்
பிரயாசப்படுங்கள். பரலோகத்தினின்று இறங்கிவந்த
சீவியமுள்ள அப்பம் நானே; நான் உலக சீவியத்துக்காகக்
கொடுக்கப்போகிற அப்பம் என் மாமிசமாமே என்றுர்.
இதைக்கேட்ட யூதர்கள் இவன் தன் மாமிசத்தை எப்படிப்
பொசிக்கக் கொடுப்பானென்றுர்கள். அதற்கு இயேசுநா
தர் பொசித்தலென்கிற வார்த்தையைத் தாம் உருவகமாய்ச்
சொல்லாமல் மெய்யாகவே சாப்பிடுதல் என்கிற அர்த்தத்
தில் சொன்னதாக உறுதிப்படுத்தும்படி திருவுளம்பற்றின
தாவது: மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச்
சொல்லுகிறேன், நீங்கள் மனுமகனுடைய மாமிசத்தைப்
பொசியாமலும் அவருடைய இரத்தத்தைப் பானம் பண்
ணுமலும் இருந்தால் உங்களிடத்தில் சீவியத்தைக்
கொண்டிருக்கமாட்டீர்கள். ஏனென்றுல் என் மாமிசம்
மெய்யாகவே போசனமும் என் இரத்தம் மெய்யாகவே

பானமுமாயிருக்கின்றது. என் மாமிசத்தைப் போசித்து என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவன் என்னிடத்தில் வசிக்கிறான், நானும் அவனிடத்தில் வசிக்கிறேன். உங்கள் பிதாக்கள் மன்னாவென்கிற போசனத்தைப் போசித்தும் மரித்தார்கள். இந்த அப்பத்தைப் போசிக்கிறவனோவென்றால் என்றென்றைக்கும் பிழைப்பானென்றார். (அரு. 6.)

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இந்த அதிசயமான வார்த்தைகள் நமது அன்புக்குரிய இரட்சகருடைய திரு வாயினின்றல்ல, அவர் திரு இருதயத்தினின்றே புறப்படுகிறதை நாம் யோசித்தோமானால் நமது உள்ளம் பூரித்துப் பொங்கி அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்வோம்: ஏனென்றால் முந்த முந்த அவர் தம்மைத்தாமே நமக்கு உணவாகத் தருகிறதினாலே அவர் கொடுக்கக்கூடுமானதெல்லாம் நமக்குக் கொடுக்கிறார். இரண்டாவது சந்தேகப்படுவதற்கு இடமில்லாமல் மகா தெளிவாகவுந் திர்க்கமாகவும் புத்திக்கெட்டாத இந்தப் பரம இரகசிய சத்தியத்தை நிலைநிறுத்துகிறார். மூன்றாவது பரம இரகசியமான இந்தத் திவ்விய அப்பத்தை உட்கொள்ளும் பாக்கியம் நமக்கு எத்தனையோ விசை கிடைக்கக்கூடிய சத்திய திருச்சபையின் மடியில் நாம் பிறக்கச் சித்தமானார்.

மனப்பற்றுதல்.—விசுவாசம், நன்றியறிந்த தோத்திரம், சிநேகம் என்னும் புண்ணிய முயற்சிகளை ஆண்டவருக்கு ஒப்புக்கொடுப்போமாக.

பிரதிக்கினை.—இவ்வளவு தாராளமான குணத்தைக் காட்டின சுவாமி மட்டில் நாமும் உதாரமுள்ளவர்களாயிருக்கக்கடவோம்.

## 3-ம் பிரிவு

### கப்பர்நாவூம் ஊரார் சுவாமியைவிட்டு நழுவுகிறார்கள்; அப்போஸ்தலர் உறுதியாயிருக்கிறார்கள்

தியானம்.—இயேசுநாதசுவாமி தம்முடைய மாமிசத்தை அகத்தியமாய் எல்லாருஞ் சாப்பிடவேணுமென்று



சொன்னதைக் கேட்டுச் சீஷர்களில் அநேகர் தேவநற் கருணையின் பரம இரகசியத்தை இன்னம் உணராமல் தங்களுக்குள்ளே சொல்லிக்கொண்டதாவது: இந்தப் பிரசங்கங் கடினமாயிருக்கிறது, இதைக் கேட்கிறதாரென்றார்கள். அது முதல் அவர்கள் பின்வாங்கி மறுபடியும் அவரைப் பின்சென்று நடவாமற்போனார்கள். இயேசுநாதர் தமது பன்னிரண்டு அப்போஸ்தலர்களையும் நோக்கி: நீங்களும் போக மனதாயிருக்கிறீர்களோவென்று கேட்க, சீமோன் இராயப்பர் பிரத்தியுத்தாரமாக: ஆண்டவரே, நாங்கள் யாரண்டைக்குப் போவோம். நீர் நித்திய சீவியத்தின் வார்த்தைகளையுடையவராயிருக்கிறீர். நீரே சுயஞ்சீவியரான சர்வேசுரனுடைய குமாரனாகிய கிறீஸ்துவானவராயிருக்கிறீரென்று நாங்கள் விசுவசித்தும் அறிந்தும் இருக்கிறோமென்றார் (அரு. 6.)

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நமது திவ்விய குருவானவருக்கு நாமும் மாறாத பிரமாணிக்கமுள்ளவர்களாய் எப்போதும் அவரை அண்டியிருப்போமென்று அர்ச். இராயப்பரைப்போல சாதித்துச் சொல்லக்கடவோம். ஆனால் நமது நிலையற்ற சுபாவத்தை நாம் அறிந்திருக்கிறதினாலே நமது சொந்தப் பலவீனத்தினின்றும் நமது சத்துருக்களின் கபட தந்திரங்களினின்றும் நம்மைத் தற்காத்து இரட்சிக்கவேணுமென்று அவரைக் கெஞ்சி மன்றாடுவோமாக.

சம்பாஷணை.—சுபாவத்துக்கு மேலான உயிரை நம்மிடத்தில் வளர்த்துப் பலப்படுத்தும்படி தம்மைத்தாமே நமக்குப் போசனமாகத் தந்தருளும் அன்புந் தாராளமும் நிறைந்த நமது ஆயனாகிற இயேசுநாதசுவாமியோடு சம்பாஷணை செய்வோமாக.

# 20-ம் தேதி

## சீத்தோவென்னுஞ் சபையைத் திரும்ப ஸ்தாபித்தவராகிய அர்ச். பேர்நர்து திருநாள்*

ஆயத்தச் சிந்தனை.—இந்த அர்ச்சியஷ்டவர் அழியாத மகிமைப் பிரதாப வாசஸ்தலத்தில் இருக்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

தியானச் செபம்.—உத்தமதனத்தின்பேரில் வேகமான ஆசையை உனக்கு அடைந்தருளும்படி இவரை மன்றாடு.

### முதல் பிரிவு

#### அர்ச். பேர்நர்துடைய உலக வாசம்

தியானம்.—அர்ச். பெர்நர்து குலத்திலும் புண்ணியத்திலும் பேர்போன தாய் தகப்பனிடத்தினின்று பிறந்தார். தாய் தகப்பன் இவரை வெகு சாக்கிரதையாய் வளர்த்தார்கள். இயல்பாய்ச் சாதுரியமும் அதிசயமான புத்திக் கூர்மையும் உள்ளவராயிருந்ததினால் கல்வி சாஸ்திரங்களில் ஆச்சரியமான திறமை அடைந்தார். பக்தியுள்ள இவருடைய தாயார் இளம் பிராயத்திலேயே இவருள்ளத்தில் கற்பின்மேல் விருப்பமும் தேவமாதாவின்மேல் உருக்கமான பக்தியும் பிறப்பிக்கப் பிரயாசப்பட்டாள். அந்த அம்மாளுக்குத் தான்பட்ட பிரயாசத்துக்குத்தக்கது சம்பாவனை கிடைத்தது. அர்ச். பெர்நர்திடத்தில் யாவரும் பிரமிக்கத்தக்க உறுதியான கற்பு விளங்கினது. அவர் ஓர் சமயத்தில் எச்சரிக்கைக் குறைவாய்ப் பார்த்த ஒரு தகாத பார்வைக்கு ஆக்கினையாகப் பொறுக்க முடியாத குளிர்ந்த சலத்தில் அமிழ்ந்தியிருந்து தம்மை உபாதித்தார். அன்றியும் இவர் வளர்ந்த பின் இந்தக் கற்பின்

* குறிப்பு: அர்ச். பெர்நர்து 1091-ம் ஆண்டில் டிஜோன் என்னும் நகருக்கருகாமையில் பிறந்து, 1153-ம் ஆண்டில் மரித்தார்; 160 மடங்களை ஸ்தாபித்தார்.



நிமித்தமாகவே கன்னிகையான தேவமாதாவின் மகிமை தோத்திரங்களை ஒப்பற்ற அனுகூலத்தோடு புகழ்ந்து பாராட்டினார். இவருக்கு இருபத்துமூன்று வயது நடக்கும் போது மகாத்துமாவான ரோபேர்த்தென்பவரால் கொஞ்சத்துக்கு முன்னே ஏற்படுத்தப்பட்டு வெகு கடினமான சீர்திருத்தம் அடைந்திருந்த சீத்தோவென்னுஞ் சபையில் பிரவேசிக்கும்படி சர்வேசுரன் தம்மை அழைக்கிறதாக மனதில் உணர்ந்தார். இந்தத் தேவ ஏவுதலைப் பின்பற்றி நடக்கும்படி அவருடைய மனதில் எவ்வளவு வேகமான ஆவலிருந்ததென்றால், அவர் போகாதபடி தடுக்க அவருடைய சகோதரர் செய்த விக்கினங்களையெல்லாம் அவர் செயித்ததுமன்றி, அவர்களையும் வேறு இருபத்தைந்து துரைமக்களையுந் தமது கருத்துக்கு இணக்கி அந்தப் புதுச் சபையில் பிரவேசிக்க ஏவினார். இவ்விதமாய்த் தாமும் அவர்களுமாக முப்பது பேர் அன்றையத்தினமே மடத்தில் சேர்ந்து, மடத்துச் சிரேஷ்டரான அர்ச். முடியப்பர் கையில் மறு வருஷம் அதாவது 1114-ம் வருஷத்தில் சந்நியாசத்தின் பெரிய வார்த்தைப் பாடுகளைக் கொடுத்தார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—உன் சீவியகாலத்தின்மேல் உன் கண்ணைத் திருப்பிப்பார். நீ பிறந்ததும், வளர்ந்ததும், துறவறத்துக்கு அழைக்கப்பட்டதும் ஆகிய இவைகளெல்லாம் எவ்வளவு யோகமான சந்தற்பங்களோடு கூடியிருந்தனவென்று பார்ப்பாயானால், சர்வேசுரன் அர்ச். பெர்நர்தைப்போலவே உனக்குந் தமது உபகார சகாயங்களை ஏராளமாய்த் தந்தருளினாரென்று கண்டு கொள்வாய்.

மனப்பற்றுதல்.—சர்வேசுரன் உனக்குச்செய்த நன்மைகளுக்காக நன்றியறிந்த தோத்திரஞ் செய்து, இந்த அர்ச்சியசிஷ்டவர் தாம் பெற்றுக்கொண்ட உபகாரங்களுக்கு ஏற்றபடி நடந்ததுபோல, நீயும் நடவாததைப்பற்றி மனஸ்தாபப்படு.

பிரதிக்கினை.—நமது பரிசுத்த அந்தஸ்திலுள்ள பாக்கியத்தின்பேரிலும் நம்மை அர்ச்சிக்கிறதற்கு உண்டான

கணக்கற்ற வழிவகைகளின்பேரிலும் அடிக்கடி சிந்தனையாயிருப்போமாக.

## 2-ம் பிரிவு

### மடத்தில் அவருடைய ஏகாந்த வாசம்

தியானம்.—இந்த மகாத்துமாவானவர் மடத்தில் பிரவேசித்த முதல் நாளில் கொண்டிருந்த ஞானவேகம் ஒருபோதுஞ் சோரவுங் குறையவுமில்லை. இது அவருடைய ஏகாந்த வாசத்தில் விளங்கின அதிசயமென்னத்தகும். இதினிமித்தங் கொஞ்ச வருஷத்துக்குள்ளே சகலவித புண்ணிய சாங்கோபாங்கத்துக்குந் தேர்ந்த மாதிரிகையானார். ஐம்பொறிகளை அடக்குவது அவருக்குச் சுபாவமான காரியம்போலிருந்தது. சித்தோவென்னும் மடத்தில் ஒரு வருஷமாயிருந்தும் அதில் தாம் படுக்கிற அறையின் முகடு எப்படிப்பட்டதென்றும், கோவிலில் தாம் சங்கீதமாலை செபிக்கும் இடத்தில் எத்தனை சன்னல் இருந்ததென்றும் அவருக்குத் தெரியாமலிருந்ததாக மற்றவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். இப்படியே அவர் சகலத்திலுந் தம்மை ஒரே விதமாய் ஒறுத்துவந்தார். அவர் வழக்கமாய்ச் சாப்பிட்டுவந்தது வெந்நீரில் தோய்க்கப்பட்ட அப்பமாத்திரம். தமது வயிற்றுவலியைத் தணிக்க எண்ணெயுந் தேனுங்கலந்து சமைக்கப்பட்ட பயற்றைக் கீழ்ப்படிதலுக்காக மாத்திரஞ் சில சமயங்களில் சாப்பிடச் சம்மதித்தார். உலகத்துக்குந் தமக்குஞ் சவம்போலாகி சபையில் எல்லாத்திலும் இழிவுங் கஷ்டமுமான வேலைகளைத் தேடுவாரொழிய மற்ற எந்தக் காரியத்திற்கும் வேண்டும் வேண்டாமென்கிற மன இஷ்டமற்றவராயிருந்தார். செபத்துக்குக் குறித்த நேரம் அவருக்கு ஆனந்த பாக்கியமாயிருந்ததினால் எப்போதும் அது வெகு சுறுக்காய்க் கடந்துபோகிறதாக அவருக்குக் காணப்படும். அவர் இடைவிடாமல் செபம் பண்ணிக்கொண்டு வந்தாரென்று சொல்லத்தகும். ஏனெனில் வெளிமனுஷரோடே பேசும்போது முதலாய்த் தேவ சமூகத்தில் இருக்கிறோமென்று ஒருகாலும் மறந்தவரல்ல. இதினாலேதான் அவர் சர்வேசுரனைப்பற்றிப் பேசுகிறதைக்



கேட்கிறவர்கள் அவரிடத்தில் விளங்கும் உருக்கத்தைக் கண்டு அவர் சொன்னபடி செய்வார்கள். அவர் தமது பத்தி சுறுசுறுப்பைத் தூண்டுகிறதற்காகத் தம்மைத்தாமே நோக்கி: பெர்நர்தே, பெர்நர்தே, இங்கே ஏன் வந்தாயென்று கேட்பார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—ஐயோ, என்னிடத்தில் துவக்கத்திலிருந்த ஞானவேகத்தை நிலைமையாய்க் காப்பாற்றாமல் போனேனே! அதைக் காப்பாற்றியிருந்தால் இப்போது உத்தமதனத்தில் எவ்வளவு உயர்ந்து ஏறியிருப்பேனென்று சொல்லுவாயாக்கும். ஆனால் இந்த வெட்டித்துக்கம் போதுமென்றிராதே; போனகாலம் போய்விட்டது, அது உன் கைவசத்திலில்லை. ஆனால் நீ போக்கடித்ததைத் திரும்பக் கைக்கொள்ளும்படி உன் ஞான வேகத்தை ஒட்டிக்கிரட்டியாக்கக்கடவாய்.

மனப்பற்றுதல்.—இதெல்லாம் நினைத்துக் கஸ்திப்பட்டு நன்மை செய்வதற்கு அதிக உறுதி நிலைமையுள்ள ஏவுதல் வேணுமென்று கேள்.

பிரதிக்கினை.—அர்ச். பெர்நர்து பாவனையாகக் காலமே எழுந்திருக்கும்போதாகிலும் நான் இங்கே என்னத்துக்கு வந்திருக்கிறேனென்று உன்னைத்தானே வினவிக்கொள்.

## 3-ம் பிரிவு

### நானாவித காரியங்களுக்குள் இந்த மகாத்துமாவுடைய தனிவாசம்

தியானம்.—மடத்து ஏகாந்தத்தில் அர்ச். பெர்நர்து சுகித்த மனச் சமாதானமும் பாக்கியமும் இவ்வளவென்று வருணிக்குந் தன்மையல்ல. ஓ பாக்கியம்பெற்ற ஏகாந்தமே! ஓ ஏகாந்த பாக்கியமே! என்று அடிக்கடி கூவிச் சொல்லுவார். ஆனால் இந்த ஏகாந்தத்துக்கு அனேக விக்கினங்கள் உண்டாக ஆண்டவர் சித்தமாயிருந்தார். கிளேர்வோவென்னும் மடத்துக்குச் சிரேஷ்டரானபின் இவருடைய ஞானம் அனேகானேக சமயங்களில் வெகு துலக்கமாய் விளங்கினதினாலே திருச்சபையில் சகலரும்

அவர்மேல் ஆச்சரியப்பட்டிருந்தார்கள். இராசாக்களும் பிரபுக்களுந் தங்களுக்கு உண்டான வழக்கு வியாச்சியங்களில் அவரை மத்தியஸ்தராக நியமித்துக்கொள்வார்கள். அந்தந்தத் தேசத்தாரைச் சமாதானமாக்கவும், திருச்சங்கங்களை நடத்தவும், பிரிவினைகளை அழித்து ஒழிக்கவும், பலஸ்தீன் நாட்டிலுள்ள திருஸ்தலங்களை மீட்டுக் காக்கும்படி கிறீஸ்துவர்கள் படையெடுத்துப்போகப் பிரசங்கிக்கவும் வெகு கஷ்டமான தூரப்பயணங்கள் செய்யும்படி அர்ச். பாப்புக்கள் அவரை உடன்படுத்தினார்கள். இத்தனை பெருமைகளுக்கும் இத்தனை பராக்குக்கு இடமான அலைச்சல்களுக்கும் நடுவே அர்ச். பெர்நர்து தமது தாழ்ச்சியையுந் தேவ ஐக்கியத்தையுஞ் சற்றுவது போக்கடித்தவரல்ல. ஏனெனில் இவருடைய சரித்திரத்தை எழுதினவர் சொல்லுகிறதுபோல இவர் எங்கேபோனாலுந் தமது ஏகாந்தத்தையுங் கூடவே கொண்டுபோவார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நாமும் இப்படியே நடக்கப் பிரயாசப்படுவோமேயாகில் சர்வேசுரனோடு நாம் எப்போதும் எவ்விடத்திலும் நிலைமையாய் ஒன்றித்திருப்போம்.

சம்பாஷணை.—அர்ச். பெர்நர்தோடே சம்பாஷணை செய்.

---

## 21-ம் தேதி

(இயேசுநாதர் பிரசங்கித்துவந்த மூன்றும் வருஷமும் மூன்றும் பாஸ்கத்திருநாளும்.)

### பரிசேயருடைய கள்ளஞானமுங் காய்மகாரமும்.

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதசுவாமி வேதபாரகரோடும் பரிசேயரோடும் தர்க்கித்துக்கொண்டிருக்கிறதாக ரூபிகரித்துக்கொள்.



தியானச் சேடம்.—கள்ளஞானத்தை அடியோடு அருவருக்கவும், திடமான புண்ணியங்களை முழுமனதோடே நேசிக்கவும் வரங்கேள்.

### முதல் பிரிவு

#### இயேசுநாதசுவாமி வேத சட்டத்தின் ஒரு விஷயத்தில் தமக்கு மாப்புச் செய்துகொள்ளுகிறார்

தியானம்.—இயேசுநாதசுவாமி கப்பர்நாவூம் ஊரிலே ஓய்வுநாளைச் செலவழித்த பிறகு கலிலேயாநாட்டிலே சுற்றித்திரிந்தார். ஏனென்றால் யூதர்கள் அவரைக் கொல்லத் தேடிக்கொண்டிருந்ததினாலே யூதேயா நாட்டிற்குப்போக மனமில்லாதிருந்தார் (அரு. 7.) ஆகையால் இந்த வருஷம் இரட்சகர் எருசலேம் பட்டணத்தில் பாஸ்காப் பண்டிகையைக் கொண்டாடப் போகவில்லை. ஏனென்றால் விக்கினமில்லாதிருக்கிறவர்கள் மாத்திரம் அந்தத் திருநாளைக் கொண்டாடப் போகும்படி வேத சட்டத்தில் கற்பித்திருந்தது. ஆனால் இயேசுநாதசுவாமி சர்வேசுரனானதினால் தாம் கொடுத்த கற்பனைக்குத் தாமே மன்னிப்புச்செய்ய அதிகார சுதந்தரமுள்ளவராயிருந்தார். அன்றியும் யூதர் அவர் உயிரை வாங்கும்படி செய்த சதியோசனை இந்தமாப்புக்குத் தகுந்த முகாந்தரமாயிருந்தது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—சபை ஏற்பாட்டுக்கும் வெளி ஒழுக்க முறைமைகளுக்கும் விரோதமாய்ச் சிரேஷ்டர்கள் யாதோர் காரியத்தைச் செய்வதையும் அல்லது விட்டுவிடுவதையும் பார்க்கும்போது அவர்கள் பேரில் குற்றம் நினையாதபடி நாம் இங்கே படித்துக்கொள்ள வேண்டியது. மற்றவர்களுக்கு மாப்புச் செய்கிறவர்கள் தகுந்த நியாயமிருக்கும்போது தங்களுக்கே செய்துகொள்ளக்கூடாதோ? அவர்களுக்கு இருக்கிற நியாயம் என்னவென்று பொதுப்பட நமக்குத் தெரியாது. அதை நமக்கு அறிவிக்கவும் அவர்களுக்குக் கடமையில்லை. அனேக சமயத்தில் அதை நமக்கு சொல்வதுஞ் சரியல்ல. இதுவுந் தவிர துஷ்டர் சர்வேசுரனைப் பகைக்கிறதினிமித்தம் நம்

மைத் துன்பப்படுத்தவும், நமக்கு யாதொரு பொல்லாப்புச் செய்யவுந் தேடும்போது தப்பி ஓடியாவது சுபாவ நியாயத்துக்கொத்த யாதொரு உபாயத்தைப் பிரயோகித்தாவது அதற்கு விலகும்படி இயேசுநாதசுவாமி நமக்குப் படிப்பிக்கிறார். சரியான முகாந்திரமில்லாமல் இதற்கு விபரீதமாய் நடக்கிறது தனது சக்தியை நம்புகிற வெறுந் துணிகரமாகும். வேதசாட்சியாகிற வரத்தைச் சர்வேசுரன் தமக்குப் பிரியமான பேருக்கும் பிரியமான சமயத்திலுங் கொடுப்பார். அவருக்குச் சித்தமில்லாதபோது துஷ்டர் நமக்குப் பொல்லாப்புச் செய்ய நாமே வலிய இடங்கொடுத்தால் அவர்கள் செய்யுந் தின்மைக்கு நாமும் உடன்படுகிறது போலாகும்.

மனப்பற்றுதல்.—நீ மற்றவர்கள்பேரில் நியாயமின்றிக் குறை நினைத்ததற்கும் உன்னை அதிகமாய் நம்பி வலியத் துணிகரங் காட்டினதற்கும் பொறுத்தல் கேள்.

பிரதிக்கினை.—இவ்விரண்டு குறைகளையும் வெகு சாக்கிரதையாய்த் தவிர்த்துவிடு.

## 2-ம் பிரிவு.

வீணாசாரங்களை வேத ஏற்பாட்டுக்கு மேலாக எண்ணிவந்த பரிசேயரை இயேசுநாதர் கடிந்து கொள்ளுகிறார்.

தியானம்.—எருசலேம் பட்டணத்தில் இருந்த யூதர்கள் தங்கள் சதியோசனை வியர்த்தமானதைக் கண்டு சனங்களுடைய கண்ணுக்கு இயேசுநாதருடைய பேரைக் கெடுத்தாவது தங்கள் கருத்துக்குச் சரிக்கட்டும்படி பார்த்தார்கள். இதற்காகச் சில பரிசேயரும் வேத பாரகரும் எருசலேம் பட்டணத்திலிருந்து கலிலேயா நாட்டில் இயேசுநாதரண்டையில் வந்து உபாயமாய் அவரிடத்தில் குற்றம் பிடிக்கப் பார்த்தார்கள். இயேசுநாதருடைய சீஷர்களில் சிலர் கை கழுவாமல் அசனம்பண்ணுகிறதைக்கண்டு அவர்கள்பேரில் குற்றமாக: உம்முடைய சீஷர்கள் நமது முன்னோருடைய பாரம்பரையான வழக்கப்படி நடவாமற்போகிறதென்னவென்றார்கள். இப்படி அவர்கள் பேசும்போது தங்கள்



இருதயத்தில் மூடி மறைத்து வைத்திருந்த கள்ள ஞானத்தையுங் காய்மகாரத்தையும் வெட்டவெளியாய்க் காண்பித்தார்கள். ஏனென்றால் நீங்கள் குளித்துச் சுத்தமாயிருங்களென்று இசையாஸ் சொன்ன வார்த்தைகள் ஆத்துமத்துக்கடுத்த காரியத்திலே சுத்தமாயிருக்கவேணுமென்கிற அர்த்தங் கொள்ளுகிறதென்று இவர்கள் அறியாதவர்களல்ல. இதை அவர்கள் உணரும்படி இயேசுநாதர் அவர்களைப் பார்த்து: கள்ளஞானிகளே நீங்கள் தேவகற்பனைகளை விட்டுவிட்டு மனுஷர் ஏற்படுத்தின முறைமைகளைப் பற்றிக்கொண்டு, பண்டம்பாடி முதலியவைகளைக் கழுவுகிறது கடமையென்கிறீர்களே என்றார். பிறகு அந்தக் கள்ளஞானிகளால் மயக்கப்பட்ட சனங்களைப் பார்த்து: நீங்கள் எல்லாரும் எனக்குச் செவி கொடுத்து நான் சொல்வதை உணர்ந்துகொள்ளுங்கள். வாய்க்குள்ளே போகிறது மனிதனை அசுத்தப்படுத்துகிறதில்லை; வாயில் நின்று புறப்படுகிறதே அவனை அசுத்தப்படுத்துமென்றார். (மாற். 7; மத். 15.)

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—கள்ள ஞானமும் காய்மகாரமுமாகிய இவ்விரண்டும் வேதபாரகர் பரிசேயரிடத்திலே தோன்றின பெரிய துர்க்குணமாம். நீ இவ்விரு துர்க்குணங்களையும் அருவருக்கிறாயே. ஆனால் அவைகளை முற்றிலும் விட்டு நீங்கியிருக்கிறாயோ?

மனப்பற்றுதல்.—உன் இருதய சந்து பொந்தில் பதுங்கியிருக்கிற மகா மகா இரகசியங்களை முதலாய் அறிய வரங் கேட்பாயாக.

பிரதிக்கினை.—வீண் பெருமையினாலுங் காய்மகாரத்தினாலுந் தன் ஆத்துமத்துக்கு யாதொரு பொல்லாப்பு வருமோவென்று எப்போதும் அச்சத்தோடிருக்கிறது.

## 3-ம் பிரிவு

கட்டளைகளை மீறுகிறதுணம் இருதயத்திலிருந்து புறப்படுகிறதென்று இயேசுநாதர்சுவாமி காண்பிக்கிறார்

தியானம்.—இயேசுநாதர் ஜனக்கூட்டத்தைவிட்டு அப்புறம் போனபோது இராயப்பர் அவரை நோக்கி

இந்த உவமையை எங்களுக்கு வெளியாக்கியருளுமென்று கேட்க, அதற்கு இயேசுநாதர்: இன்னம் உங்களுக்குப் புத்தி இல்லையோ? புறம்பேயிருந்து மனுஷனுக்குள் பிரவேசிக்கிற எந்தப் பொருளும் அவன் இருதயத்துக்குள் பிரவேசியாததினால் அது அவனை அசுத்தப்படுத்தாதென்று நீங்கள் அறியீர்களோ? ஆனால் அவன் வாயினின்று புறப்படுகிறதோ அவன் இருதயத்திலிருந்து வெளிப்படுகிறது. மனுஷனுடைய உள்ளத்திலும் இருதயத்திலும் நின்று துர் நினைவு, மோகவிசாரம், கொலைபாதகம், களவு, சூது, லோபித்தனம், ஆங்காரம், தேவதூஷணம், இவை முதலான சகல தின்மைகளும் புறப்படுகின்றன. இவைகளே மனுஷனை அசுத்தப்படுத்தும்; மனுஷன் கை கழுவாமல் அசனம்பண்ணுகிறது அவனை அசுத்தப்படுத்தாதென்றார் (மத். 15; மாற். 7).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—முதலாவது எல்லாத்துக்குமுந்தி சர்வேசுரன் நம்மிடத்தில் இருதய சுத்தத்தைக் கேட்கிறாரென்றும்; 2-வது, நமக்குப் புறத்தியிலிருந்து வருகிற சோதனை, நினைவு, ரூபிகரம், மனதில் படியுந்தோற்றம் முதலானவைகளுக்கு நாம் இருதயத்தில் இடங்கொடாமலுஞ் சம்மதியாமலும் இருந்தால் நம்முடைய இருதயம் அசுத்தப்படமாட்டாதென்றும்; 3-வது, இதனிமித்தம் நம்முடைய மன ஆசைப்பற்றுதலின்பேரிலே விழிப்பாயிருக்கவேணுமென்றும், மேற்சொன்ன வாக்கியங்களினாலே வெளிச்சமாய்த் துலங்குகின்றது. நீ இது காரியத்தில் எப்படி நடந்துவருகிறாய்? யாதொரு கிரமந்தப்பின பற்றுதல், ஒரு சிறு விக்கிரகத்தைப்போல உன் இருதயத்தின் மூலை முடுக்கிலே வசிக்கிறதில்லையோ? நீயும் அதைப் பாராதபடி உன் கண்ணை மூடிக்கொள்ளுகிறதில்லையோ?

சம்பாஷணை.—விசித்தாசியோவென்னும் பேர்போன கன்னியாஸ்திரிகள் சபையை ஏற்படுத்தின அருளாயி பிரான்சீஸ்கம்மாளுடைய திருநாளைத் திருச்சபை இன்று கொண்டாடுகிறதினாலே அவளோடு சம்பாஷணை செய்.



# 22-ம் தேதி

## கனானையநாட்டு ஸ்திரீயின் ஆச்சரியத்துக்குரிய விசுவாசமும் மன்றாட்டும்

ஆயத்தச் சிந்தனை.—இவள் இயேசுநாதருடைய திருப்பாதத்திலே விழுந்து கெஞ்சி மன்றாடுகிறதைப் பார்க்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

தியானச் சேபம்.—இவளிடத்திலே விளங்கின விசுவாசத்தையும் நிலைமையையுங் கேட்பாயாக.

### முதல் பிரிவு

#### கனானைய ஸ்திரீயினிடத்தில் விளங்கின விசுவாசமுந் தாழ்ச்சியுள்ள மன்றாட்டும்

தியானம்.—இயேசுநாதர்சுவாமி எருசலேம் பட்டணத்தைவிட்டு வடதிசையைநோக்கி வரவர எட்டித் தொலையாய்ப் போய், கலிலேயா நாட்டுக் கடைசிக்கோடி மட்டுஞ் சென்று அதையுந் தாண்டி அப்பால் பெனிசியா தேசத்தில் பிரவேசித்தார். இந்தத் தேசத்தின் ஓர் பாகத்தில் பூர்வீக கனானையருடைய வமிசத்தார் குடியேறியிருந்தார்கள். அஞ்ஞானிகளாயிருந்த அத்தேசத்தாருக்குச் சுவிசேஷத்தைப் போதிக்கவேணுமென்கிற கருத்தோடே சுவாமி போகவில்லை. தீர் சிதோன் பட்டணங்களின் எல்லைக்கு அடுத்தாற்போலிருந்த ஒரு வீட்டிலே பிரவேசித்து அதை ஒருவரும் அறியாமலிருக்கவேணுமென்று விரும்பினாராயினும் முழுதும் மறைந்திருக்கக் கூடாமற்போயிற்று. ஏனென்றால் தேவ வரப்பிரசாதத்தால் ஏவப்பட்ட கனானைய நாட்டுப் பெண்பிள்ளை ஒருத்தி இயேசுநாதர் வந்திருக்கிறதை அறிந்தவுடனே அவரிடத்தில் ஓடிவந்து, அவர் அந்த வீட்டில் பிரவேசிக்கிறதற்குள்ளாக அவரை நோக்கி உரத்த சத்தமாய்: ஆண்டவரே, தாவீதின் குமாரனே! என் பேரில் இரக்கமாயிரும்; என் மகள் பசாசினால் கொடூரமாய் உபாதிக்கப்படுகிறாளென்று கூவினாள். (மாற். 7, மத். 15).

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—இந்தப் பெண்பிள்ளை செய்த மன்றாட்டின் இலட்சணங்களைக்கண்டு ஆச்சரியப்பட்டு அவைகள் உன்னிடத்திலும் விளங்கச்செய். அவையாவன:—முந்தமுந்த அவள் ஐயுறவு படாமலுந் தாமதியாமலும் இயேசுநாதரை அண்டிப்போகிறாள். 2-வது சர்வேசுரனைமட்டும் அவருடைய அளவில்லாத வல்லமையின் பேரிலும் மனுஷனைமட்டும் அவருடைய இரக்கத்தின்பேரிலும் அவள் உயிருள்ள பத்தி விசுவாசத்தோடு அவரை அடுத்து வந்து: ஆண்டவரே, தாவீதின் குமாரனே என்கிறாள். 3-வது தாழ்ச்சி வினைய நிறைந்த சிந்தனைகள் அவள் உள்ளத்தில் பெருகவே தனது நிற்பாக்கியத்தை முழுதும் உணர்ந்தவளாய்: என் பேரில் இரக்கமாயிரும் சுவாமி என்கிறாள். 4-வது தேவ திருவுளத்துக்குப் பூரணமாய் அமைந்து தன்னை முழுதும் நிக்கிரகம்பண்ணி, தன் மகளுடைய நிற்பாக்கியமான ஸ்திதியை வெளிப்படுத்தி இயேசுநாதருடைய தயவினால் எல்லாம் ஆகுமென்றிருக்கிறாள். நீயும் இப்படியே சர்வேசுரனை அண்டிப்பிரார்த்தித்து வருகிறாயா?

**மனப்பற்றுதல்.**—உன் செபம் பலியாமற் போவதற்குக்காரணமான குறைகள் எவையென்று அறிந்து அவைகளை விலக்கும்படி அவசரமான ஞானத்தெளிவையுந் திடனையுஞ் சர்வேசுரனிடத்தில் கேள்.

**பிரதிக்கினை.**—நீ செபம் பண்ணப்போகுமுன் தாழ்ச்சி விசுவாசப்பற்றுதல்களை உன்னிடத்தில் எழுப்பிக்கொள்வாயாக.

## 2-ம் பிரிவு

### இவள் ஒரே நிலைமையாய்க் காட்டின விசுவாசமுஞ் செய்த மன்றாட்டும்

**தியானம்.**—உலகம் எங்கும் பிரபல்லியமான இந்தப் பெண்பிள்ளையினுடைய விசுவாசத்தையும் நம்பிக்கையையும் இயேசுநாதர் நமது படிப்பினைக்காக வெகு கடினமாய்ச் சோதிக்கச் சித்தமானாரென்று தோன்றுகிறது. இவளு



டைய மன்றாட்டைச் சட்டை பண்ணாததுபோல இவளுக்கு ஒரு வார்த்தையாகிலுஞ் சொல்லாதிருந்ததுந் தவிர அப்போஸ்தலர்கள் இவளுக்குச் சனுவாக சுவாமியை நோக்கி வருந்தி மன்றாடி: குருவே இவளுக்கு விடைகொடுத்து அனுப்பிவிடவேணும்; நமது பிறகே ஓயாமல் அபயமிட்டுக்கொண்டு வருகிறாள். இவளால் உம்மை மற்றவர்களும் அறியப்போகிறார்களென்று விண்ணப்பஞ் செய்ததற்கு, ஆண்டவர் மறுமொழியாக: இஸ்ராயேல் சனங்களுக்குள் சிதறிப்போன ஆடுகளுக்காக மாத்திரம் நான் வந்திருக்கிறேனேயொழிய மற்றப்படியல்ல வென்றார். இதனால் இவளுடைய மன்றாட்டைத் தள்ளிவிட்டது போலாகிறது. ஆகிலும் இவள் மனந்தளராமல் அந்த வீட்டில் இயேசுநாதர் பிறகே போய் அவர் பாதத்தில் பணிந்து நமஸ்கரித்து: சுவாமி, என்மேல் இரக்கமாயிரும். என் மகளைப்பிடித்த பேயை எப்படியாவது விரட்டிவிட உம்மை மன்றாடுகிறேனென்று விடாமல் கெஞ்சிக்கொண்டிருந்தாள்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—நாம் உறுதி நிலைமையற்றவர்களாயிருப்பது நமது செப வேண்டுதல் பலியாமற்போவதற்கு ஒரு முக்கியமான காரணமாமே. அப்படியே நமக்காகிலும் நம்மைச் சேர்ந்த யாதொருவருக்கென்கிலும் ஒரு விசேஷமான தேவ சகாயத்தைப் பெற்றுக்கொள்ள ஆசைப்படுகிறோம். இந்தக் கருத்து நிறைவேறுவதற்காக நவநாள் செபந் துவக்குகிறோம். இரண்டு மூன்று நாளைக்குச் செய்யவேண்டிய செபத்தைப் பத்தியோடு சொல்லுகிறோம். ஆனால் ஆறாம் ஏழாம் நாட்களிலும் அதே சுறுசுறுப்பு நம்மிடத்தில் விளங்குகிறதோ? ஆகையால் நம்மிடத்தில் பத்தி சுறுசுறுப்பு நாட்படத் தங்குவது அருமையென்று ஒத்துக்கொள்ளவேண்டியதன்றோ? இரண்டு மூன்றுதரம் ஒரு மன்றாட்டைக் கேட்டும் அடையாமற்போனால் சுவாமியை அலட்டிக்கேட்கப் பயந்தாற்போல செய்த விண்ணப்பத்தை நிறுத்திப் போடவில்லையோ? இந்தக் கனானைய நாட்டாளுடைய உதாரணம் இந்தப் பயத்தை நீக்குகிறதுமன்றிப் பரிசுத்த கருத்தோடு

சுவாமியை நச்சுப்படுத்துகிறது அவருக்குப் பிரியமென்றுங் காட்டுகிறது.

மனப்பற்றுதல்.—நமது செபங்களில் உள்ள குறைகளை ஒத்துக்கொண்டு வெட்கி நாணக்கடவோம்.

பிரதிக்கினை.—இந்தப்பெண்பிள்ளையினுடைய வெல்லமுடியாத திடனையும் பத்தி நிறைந்த பிரிசாலத்தையுங் கண்டுபாவி.

## 3-ம் பிரிவு

### இந்தப்பெண்பிள்ளையினுடைய விசுவாசமும் மன்றாட்டுஞ் செயமடைகின்றன

தியானம்.—இதோ இவளிடத்தில் விளங்கின விசுவாசமும் நிலைமையும் இவளுக்குச் செய்யப்பட்ட கடினமான பரிட்சையில் செயங்கொண்டு மேலெழும்பின. ஆகிலும் இயேசுநாதர் அவள் மன்றாட்டைக் கேட்டருளுமுன் இன்னம் ஒருவிசை அவளைச் சோதித்துப்பார்க்கிறார். எப்படியெனில் இயேசுநாதர் அவளைப்பார்த்து: முந்த முந்தப் பிள்ளைகள் சாப்பிட்டுத் திருத்தியடையவேணும். பிள்ளைகளுடைய அப்பத்தை எடுத்து நாய்களுக்குப்போடுவது சரியல்லவென்றார். இந்தக் கடூரமான வார்த்தையைக் கேட்டும் அவள் மனங்கலங்காமல் அவரை நோக்கி: ஆண்டவரே! இது மெய்தான். ஆகிலும் பிள்ளைகள் பந்தியிலிருந்து சாப்பிடும்போது கீழே விழுகிற அப்பத்துண்டுகளை நாய்க்குட்டிகளுந் தின்னுமென்றாள். இதைக் கேட்ட இயேசுநாதர் தோற்வைப்பட்டாற்போல, அவளைப் பார்த்து: பெண்ணாய்ப் பிறந்தவளே, உன் விசுவாசம் பெரிதாயிருக்கின்றது. உன் ஆசையின்படியே உனக்கு ஆகக்கடவது. நீ உன் வீட்டுக்குப் போவென்றார். அந்த க்ஷணமே அவள் மகளைப் பிடித்திருந்த பசாசு அவளை விட்டு ஓடிப்போயிற்று. அவளும் உடனே ஆரோக்கியமடைந்தாள். (மத். 15.)

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இத்தனை ஏக்கத்துக்குக் காரணமாயிருந்த அந்தச் சிறுபிள்ளை



நமது ஆத்துமத்திற்கு உன்னத மேரையாய் உருவகமா
யிருக்கிறதென்று அர்ச். எரோனிமுஸ் சொல்லியிருக்கிறார்.
அந்தத் தாயின் ஏக்கம் நாம் நமது ஆத்துமத்தின் மட்டில்
வைக்கவேண்டிய ஓயாத கவலையின் சாயலாயிருக்கின்றது.
ஆகையால் அந்த ஆத்துமத்தைப் பேய் பிடியாதிருக்கவும்,
சூது வாது நிறைந்த அந்தக் கெட்ட அரூபி அதில்
யாதொரு அதிகாரமுஞ் செலுத்தாதிருக்கவும் நாம் எவ்வித
முயற்சியுஞ் செய்து காக்கக்கடவோம். ஆனால் ஐயோ!
ஒருவேளை உன்னை அறியாமலே பசாசுக்குக் கீழ்ப்பட்டு
நடக்கிறாயாக்கும். உன்னிடத்தில் ஐம்பொறி அடக்கமும்,
செபத்தில் விழிப்பும், சுவாமிபேரில் நம்பிக்கையுங் குறை
படும்போது இப்படி விசாரப்பட இடமில்லையோ?

சம்பாஷணை.—இயேசுநாதரோடே சம்பாஷணை
செய். உன் ஆத்துமம் என்ன பெறுமென்றும் நீ அதின்
மேல் எவ்வளவு கவலை விசாரங்கொள்ள வேணுமென்றும்
ஆண்டவர் உனக்குத் தெரிவிக்க மன்றாடு.

---

# 23-ம் தேதி

## நமது ஆத்துமத்தின் கிரயம்

ஆயத்தச் சிந்தனை.—மனுஷன் தன் ஆத்துமத்துக்கு
ஈடாகக்கொடுக்கக்கூடுமானது என்னவென்கிற இந்த
வார்த்தைகளை இயேசுநாதசுவாமி சொல்லுகிறதாக ரூபி
கரித்துக்கொள்.

தியானச் செபம்.—உன் ஆத்துமத்தின் கிரயம்
இன்னதென்று சரியாய் மதிக்க வரப்பிரசாதங் கேள்.

## முதல் பிரிவு

### நமது ஆத்துமத்துக்கு உலக முழுதுங் கொடுத்தாலுஞ் செல்லும் இன்னங் கூடவும் பெறும்

தியானம்.—நமது ஆத்துமத்தின் கிரயத்துக்கு
ஒன்றுஞ் சரிக்கட்டாது, உலக முழுதுங் கொடுத்தாலும்

ஈடாகாதென்று அர்ச். கிறீசோஸ்தோம் அருளப்பர் சொல்லியிருக்கிறார். இந்த உலகத்தில் காணக்கூடிய பெருமை அலங்காரம் எல்லாவற்றையும் பார்க்க நமது ஆத்துமம் ஒன்றே அளவற்ற விசை அதிக விலைபெற்றது. ஏனென்றால் இதெல்லாங் கண்டிப்புள்ள பொருளாய் அழிவுக்கு இரையாகும். நமது ஆத்துமமோ அரூபியாய், அக்ஷயமாய், அறிவுள்ளதாய்ப் பரம கதி அடைய நியமிக்கப்பட்டதாயிருக்கிறது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—வேதபாரகர் குன்றாத இச்சத்தியத்தை ஆராய்ந்து ஒரு ஆத்துமங் கெட்டுப்போகிறதைப் பார்க்கச் சர்வலோகமும் அழிந்துபோகிறது பெரிதல்லவென்று சாதித்துச் சொன்னார்கள். இதுவும் மேற்கூறிய சத்தியத்தைப்போல குன்றாத ஒரு சத்தியமாமே. இப்படியிருக்கத் தினந் தினம் க்ஷணத்துக்கு க்ஷணம் எத்தனையோ ஆத்துமங்கள் கெட்டுப்போகின்றன. மரத்தினின்று இலைகள் உதிருகிறதுபோல ஆத்துமங்கள் கெட்டு நரகத்தில் விழுகிறதை ஒரு பரவசத்தில் கண்டேனென்று அர்ச். தெரேசம்மாள் சொன்னாள். இந்தக் காட்சிகண்டது முதற்கொண்டு பாவ வழியில் அகப்பட்டுச் சிக்கிக்கிடக்கிற ஆத்துமாக்களை மனந்திருப்ப இவள் செய்த செபதபம் இவ்வளவென்று சொல்லிமுடியாது. ஆத்துமாக்களை இரட்சிக்க நீ படும் வருத்தம் பிரயாசமென்ன?

மனப்பற்றுதல்.—ஆத்துமாக்கள் கெட்டுப்போகிறதைப் பார்த்தும் உன் மனம் இளகாமலிருக்கிறதைக் கண்டு தேவ சமுகத்திலே உன்னை அத்தியந்த விதமாகத் தாழ்த்தக்கடவாய். துணிவுள்ளதும், களையாததும், தாராள நிறைந்ததும், வீரியங்கொண்டதுமான ஞான வைராக்கிய அக்கினியை உன் இருதயத்தில் மூட்டும்படி ஆண்டவரை மன்றாடு.

பிரதிக்கினை.—சகல ஆத்துமாக்களையும், விசேஷமாய் நமது விசாரணையிலுங் காபந்திலும் இருக்கிற ஆத்துமாக்களையும் நாம் இரட்சிக்கும்படி நம்மால் இயன்ற



இப்போதே நவக்குகிருப்போலே பாயங்களையெல்லாம் இப்போதே உபயோகிக்கக்கடவோம்.
திவேகத்தோடே திரும்பவும் உபயோகிக்கக்கடவோம்.

## 2-ம் பிரிவு

### ஒரு தெய்வத்தினுடைய இரத்தம் எவ்வளவு பெறுமோ அவ்வளவு நமது ஆத்துமமும் பெறும்

தியானம்.—ஆதிமனுஷன் செய்த பாவத்தினிமித்தம் நமது ஆத்துமம் பசாசுக்கு அடிமையாயிற்று. இந்த அடிமைத்தனத்தினின்று அதை மீட்டிரட்சித்துப் பரலோக சுதந்தரத்தை அதற்குத் திரும்பக் கொடுக்கத் தேவனும் மனிதனுமான இயேசுநாதசுவாமி ஒருவரே வல்லவராயிருந்தார். இந்த மகத்தான உபகாரஞ் செய்ய அவருக்குச் சித்தமுண்டானது. ஆனால் நம்மை மீட்கிறதற்கு அவர் கொடுத்த கிரயமென்ன? மனுஷனே, உன் ஆத்துமத்துக்குள்ள விலையை அறியவேணுமோ, தேவகுமாரன் அதை மீட்டிரட்சிக்கும்படி செலுத்தின கிரயம் ஏதென்று பார். அப்போது உன்னாத்துமம் எவ்வளவு விலையுள்ளதென்று கண்டு கொள்வாயென்பதாய் அர்ச். அகுஸ்தீன் சொல்லியிருக்கிறார். அவர் என்ன கொடுத்தாரென்றும் எதைக்கொண்டு அதை இரட்சித்தாரென்றுங் கேட்பாயாக்கும். அழிந்துபோகிற பொன்னையும் வெள்ளியையுங் கொடுத்தல்ல, தமது விலைமதியாத திரு இரத்தத்தைத்தானே கொடுத்தாரென்று அர்ச். இராயப்பர் சொல்லியிருக்கிறார். உத்தம பிரகாரமாய் அந்தந்தக் காரியத்தைச் சீர்தூக்கிப்பார்க்கிற இயேசுநாதசுவாமி தமது திரு இரத்தத்தைக் கடைசித்துளி பரியந்தம் ஆத்துமத்துக்காகக் கொடுத்திருந்தும், இது மிச்சமென்று நினைக்கவில்லை.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—சர்வேசுரன் என் ஆத்துமத்துக்காகச் செய்கிறதென்ன? சர்வேசுரனுக்குப் பிறகு அதைப்போல பெரிய காரியம் எனக்கு இல்லையென்று மதித்து அதைச் சிநேகிக்கிறேனோ? என் ஆத்துமத்தைவிட என் மகிமையின் பேரிலும், என் சரீரத்தின்பேரிலும், அதிக விசாரமாயிருக்கிறதில்லையோ? என்

னுடைய மகிமை கொஞ்ச மங்கினால் உடனே விசனப்பட்டுக்கலங்குகிறேன். ஆனால் நான் வாடிக்கையாய்க் கட்டிக்கொள்ளுஞ் சில அற்பப் பாவங்களினாலே என் ஆத்துமத்தில் படுகிற கணக்கற்ற கறைகளைக் கண்டும் ஒரு சுரணையுமில்லாமலிருக்கிறேன். பற்பல கல்வி சாஸ்திரத்தினாலே என் புத்தியை அலங்கரிக்க ஆத்திரப்படுகிறேன். என் ஆத்துமத்தைப் புண்ணிய பேறுகளினாலே அலங்கரிக்கிறதற்கோ சோம்பலாய் மெள்ள மெள்ள அசைகிறேன். என் உடம்பு கொஞ்சம் ஒரு விதமாயிருந்தால் அல்லது சற்று வருத்தப்பட்டால் உடனே வைத்தியனைப் பார்க்க ஓடி, வேண்டுமானால் கடும் பத்தியமும் பிடிக்கத் துணிகிறேன். என் ஆத்துமம் வெகு நாளாய் வாடி மெலிந்து சாகக்கிடக்கிறதாயிருந்தும் ஞானப் பண்டிதனைத் தேடி அவர் தமது அனுபோகத்தையும் என் பிரயோசனத்தையும் யோசித்துச் சொல்லும் பரம அவிழ்தத்தை உட்கொள்ளாமல் அசட்டையாயிருக்கிறேன்.

மனப்பற்றுதல்.—இதெல்லாங் கண்டு ஆச்சரியப்பட்டுத் தன்பேரில்தானே ஞான ஆயாசங்கொள்ளுகிறது. சுவாமிக்குமுன் பணிந்து மன்றாடுகிறது.

பிரதிக்கினை.—இது துவக்கி என் உடலுக்குச் செய்கிறதையாவது என் ஆத்துமத்துக்குச் செய்வேன்.

## 3-ம் பிரிவு

### சர்வேசுரன் எவ்வளவோ அவ்வளவு ஒருவகையிலே நம்முடைய ஆத்துமம் பெறும்

தியானம்.—ஒருவகையில் சர்வேசுரனுக்கு ஒத்தவிலை நமது ஆத்துமம் பெறுமென்று அநேக மகாத்துமாக்கள் சொன்னதற்கு நியாயம் ஏதென்றால் முதலாவது, நம்முடைய ஆத்துமந் தெய்வத்தினுடைய ஒரு சுவாசமாயிருக்கிறது. வேதத்தில் சொல்லியிருக்கிறதுபோல சுவாமி மனுஷனை உண்டாக்கி அவன் முகத்திலே சீவியமென்கிற ஆவியைவிடவே மனுஷனுக்குச் சீவ ஆத்துமமுண்டாயிற்று. 2-வது சர்வேசுரன் நம்முடைய ஆத்துமத்தைத்



தமது சாயலாக உண்டாக்கினதினாலே இந்த ஆத்துமம் பூமியிலே சர்வேசுரனுடைய உயிர்ச் சாயலாயிருக்கிறது. 3-வது மனுஷாவதாரமெடுத்த தேவ குமாரன் இந்தஆத்துமத்துக்காகத் தம்மைப் பலியாய் ஒப்புக்கொடுத்தார். இதைப்பற்றித்தான் எனக்காகத் தம்மைத்தாமே கையளித்தாரென்று அர்ச். சின்னப்பர் சொல்லியிருக்கிறார் (கலா. 2). 4-வது நாமே உங்களுக்கு மகா பெரிய சம்பாவனையாயிருக்கிறோமென்று சர்வேசுரன் திருவுளம்பற்றியிருக்கிறதினாலே ஆத்துமத்துக்கு அவரே வெகுமதியும் ஈடுமாயிருக்கிறார்.

மனப்பற்றுதல்.—இப்பேர்க்கொத்த மேலான எண்ணங்கொண்டிருந்த அர்ச்சியசிஷ்டவர்கள் தங்கள் ஆத்தும இரட்சணியத்துக்கும் அதின் அர்ச்சிப்புக்கும் என்ன பாடுபட்டாலும் போதாதென்று நினைத்திருந்தார்கள். நாமும் அவர்களைப்போல நடந்தால் அவஸ்தை சமயத்தில் மனோதர நம்பிக்கையோடே நமது சிருஷ்டிகர் கையில் நமது ஆத்துமத்தை ஒப்புக்கொடுப்போம். நமது ஆண்டவர் சிலுவையில் உயிர்விடுகையில்: என் பிதாவே, உமது திருக்கரங்களில் என் ஆத்துமத்தை ஒப்புக்கொடுக்கிறேனென்று சொன்னதுபோல நாமுஞ் சொல்லிச் சீவிப்போம்.

சம்பாஷணை.—நமது ஆத்துமத்துக்குக் காவலான சம்மனசானவரோடு சம்பாஷணை செய்வோமாக.

---

## 24-ம் தேதி

### இயேசுநாதர்சுவாமி கலிலேயா நாட்டிற்குத் திரும்பி வந்து அங்கே செவிடும் ஊமையுமானவனைக் குணமாக்குகிறார்

ஆயத்தச் சிந்தனை.—செவிடும் ஊமையுமானவன் ஒரு பிச்சைக்காரனைப்போல இயேசுநாதசுவாமிமுன் நிற்கிறதைப் பார்க்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

தியானச் செபம்.—ஞானச்செவிடும் ஊமைத்தனமுமாகிய குறைகள் நமக்கு வாராதபடி காப்பாற்றவும் அவை

கள் நம்மிடத்திலிருந்தால் அவைகளை நீக்கி நம்மைக் குணப்படுத்தவும் இயேசுநாதசுவாமியை நோக்கி மன்றாடக்கடவோம்.

## முதல் பிரிவு

### இயேசுநாதர் பெனிசியாவைவிட்டுக் கலிலேயாவுக்குத் திரும்புகிறார்

தியானம்.—அர்ச். மாற்கு என்பவர் கனானேய நாட்டாளின் சரித்திரத்தைச் சொன்னபிறகு இயேசுநாதர் தீரென்கிற பட்டணத்தின் எல்லைகளைவிட்டு சிதோன் வழியாகத் தேக்காப்போலியென்னும் நாடுகளுக்குக் குறுக்கே சென்று கலிலேயாவின் கடல் அருகே வந்தாரென்று சொல்லியிருக்கிறார் (மாற். 7). அந்தப் பெனிசியாப் பட்டணத்திலே வேறே புதுமை செய்ததாகவும் வேறே யாரையும் மனந்திருப்பினதாகவுஞ் சொல்லவில்லை. ஆகையால் அஞ்ஞானியான அந்தப் பெண்பிள்ளையைப்பற்றி மாத்திரந் திவ்விய கர்த்தர் அங்கே போனதாக நாம் நிதானித்துக் கொள்ளவேண்டியது. அவள் தேவ வரப்பிரசாதத்தின் இரகசிய ஏவுதலை அநுசரித்து நடந்ததற்குச் சம்பாவனையாகவும், அவளுடைய மகளுக்கு உபகாரமாகத் தாம்செய்த புதுமையைக்கொண்டு அவளுக்கு இரட்சணிய வழியைக் காட்டி, மெய்யான சர்வேசுரனை அவள் அறிந்து விசுவசிக்கச் செய்யவும், இவ்விதமாய் ஒரு ஆத்துமத்தைக் கரையேற்றவும் அவ்வளவு தூரம் போனாரென்று சொல்லத் தகும்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நமக்கு ஒப்பிக்கப்பட்ட ஒரு பெரிய அலுவலில் உழைத்துப் பாடுபடுவதினால் ஒரே ஒரு ஆத்துமமாத்திரங் கரையேறமென்றிருந்தாலும் அது நமது பிரயாசத்துக்குத்தக்க பலனென எண்ணிக்கொள்ளவேணுமென்று இயேசுநாதசுவாமி இவ்விடத்தில் நமக்குப் படிப்பிக்கிறார். ஆகையால் ஒரு வியாதிக்காரனைமாத்திரம் விசாரிக்கிற துணைச்சகோதரருக்கும், ஒருவனுக்கு மாத்திரம் படித்துக்கொடுக்கிற உபாத்தியாயருக்கும், பிரயாசப்பட்டு இரண்டு மூன்று பாவிகளைமாத்



திரம் மனந்திருப்புகிற குருவானவருக்கும் இந்த யோசனை வெகு ஆறுதலாயிருக்கும். மேலும் பெரிதோ சிறிதோ எந்த அலுவலிலிருந்தாலும் வெகு ஞான வைராக்கியத்தையும் பிறசிநேகத்தையும் ஒரே பிரகாரமாய்க் காட்டவேணுமென்று இயேசுநாதர் நமக்குப் படிப்பிக்கிறார். ஏனெனில் இடம் எப்படியிருந்தாலுங் கீழ்ப்படிதலால் வருகிற பலன் சரிசமானமாயிருக்கின்றது. இந்தத் தேவ படிப்பினையை நீ நம்புகிறது மெய்தான். ஆனால் உன் நடபடிக்கை இதற்கு ஒத்துவருகிறதோ? கீழ்ப்படிதலினிமித்தம் மகிமையுள்ள பெரிய பட்டணத்திலாவது ஒருவரும் அறியாத சிற்றூரிலாவது உனக்கு ஒரு அலுவல் உத்தியோகம் ஒப்பிக்கப்படலாம். பெரிய இடங்களுக்குப் போகவேணுமானால் நீ சாக்கிரதையோடும் உற்சாகத்தோடுந் தயார் பண்ணுகிறாய். சிற்றூர்களுக்குப் போகவேணுமென்றாலோ அசட்டைத்தனமும் ஆயாசமும் உண்டாகிறது. இந்த வித்தியாசம் எப்படி வருகிறது? தேவ மகிமைக்காக ஆத்திரப்படுகிறதினாலோ? இல்லை இல்லை. இது உன் பெருமை சலாக்கியத்தினாலே வருகிறது. இது உண்மையோவென்று உன் மனச்சாட்சியைக் கேட்டுப்பார்; அது ஆமென்று பதில் சொல்லும்.

மனப்பற்றுதல்.—இதெல்லாம் யோசித்துப்பார்த்து வெட்கி மனஸ்தாபப்படக்கடவாய்.

பிரதிக்கினை.—எல்லாக் காரியத்திலுஞ் சர்வேசுரனையும் அவருடைய திருச் சித்தத்தையுமாத்திரந் தேடு.

## 2-ம் பிரிவு

### இயேசுநாதர் செவிடும் ஊமையுமானவனைக் குணமாக்குகிறார்

தியானம்.—இயேசுநாதர் கலிலேயா நாட்டிலே பிரவேசித்தமாத்திரத்தில் அங்கே செவிடும் ஊமையுமாயிருந்த ஒருவனை அவரிடத்தில் கூட்டிவந்து அவன்மேல் தமது கையை வைக்கும்படி அவரை மன்றாடினார்கள். இயேசுநாதரோவென்றால் சனக்கூட்டத்தினின்று அவனைத் தனியே அழைத்து அவன் செவிகளில் தமது விரல்களை வைத்து

தமது உமிழ்நீரை அவன் நாவில் தொட்டுவைத்தார். பின்னும் வானத்தை அண்ணார்ந்து பார்த்துப் பெருமூச்செறிந்து: எப்பெத்தா அதாவது திறக்கப்படுங்களென்றார். அக்ஷணமே அவனுடைய செவியுந் திறக்கப்பட்டு அவன் நாவின் கட்டும் அவிழ்ந்துபோயிற்று. அவனும் வெகு தெளிவாய்ப் பேசினான் (மாற். 7).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இந்தச் சுவிசேஷ வரலாற்றில் சொல்லப்பட்டிருக்கிறதெல்லாம் ஓர் சித்திரப்படம்போல் கண்ணுக்கும் மனதுக்கும் பளிச்சென்று இலங்குகிறது. அதைப் பங்கு பங்காய்ப் பிரித்து உற்றுப்பார்த்தால் அதில் அடங்கிய புத்திமதியெல்லாம் தன்னாலே விளங்கும். முந்த முந்த இந்த வர்த்தமானத்தைச் சேர்ந்த ஆட்களைக் கவனித்துப்பார். இவர்கள் நாலா பக்கத்திலுமிருந்து இயேசுநாதரிடத்தில் ஓடி வருகிறார்கள். ஒருவித பாச பற்றுதலினாலே அவர்மேல் பிடிப்பாயிருக்கிறார்கள். நானோவெனில் அவருடைய ஆலயத்தில் போய் அவரைச் சந்திக்க இவ்வளவு மந்தமாயிருக்கிறேன். கோவிலைவிட்டு வெளியிலே போகிறதற்கோ ஆத்திரமாய்ப் பறக்கிறேன். 2-வது இயேசுநாதசுவாமியைப் புத்தியின் கண்ணால் நோக்கிப்பார். அவருடைய முகக்கூறுகளிலுஞ் சர்வாங்க மேரையிலுங் கனமும் அர்ச்சியசிஷ்டதனமும் வாக்குக்கெட்டாத சாந்தமுந் துலங்குகின்றன. ஐயோ, இதற்கும் என்னுடைய அசைவாட்டத்திற்கும் ஒய்யாரத்திற்கும் வெடுக்கு துடுக்குக்கும் எவ்வளவோ வித்தியாசம்! 3-வது அந்தச் செவிட்டு ஊமையை நோக்கிப்பார். அவனுடைய பார்வையில் தோன்றுகிற சிநேகத்தினாலும் நம்பிக்கையினாலும் மாத்திரந் தன் உள்ளத்திலிருக்கிற சிந்தனைகளை வெளியாக்குகிறான். அவன் உள்ளத்தை அறிந்த இயேசுநாதரும் அதைக்கண்டு மெத்தவும் அவன்பேரில் இரக்கப்படுகிறார். கடைசியாய் அவர் செய்த கிரியைகளை ஏறெடுத்துப்பார். அவையெல்லாம் பரம இரகசியமும் உத்தம படிப்பினையும் நிறைந்தவைகள். நாலு பேருக்கு முன்பாக நம்மைப் பாராட்டப்படாதென்று காண்பிக்க இயேசுநாதர் அந்த ஊமையை அப்பால் கூட்டிக்கொண்டு



போகிறார். அவன் செவிகளில் தமது விரல்களை வைத்துத் தமது உமிழ்நீரால் அவன் நாவைத் தொட்டுப் பரமண்டலத்தை நோக்கிப் பெருமூச்செறிந்து, திறக்கப்படுவதாகவென்று திருவுளம்பற்றுகிறார். இதினால் நாம் அறிந்துகொள்ளுகிறதென்னவென்றால், ஞானக் காரியத்தில் செவிடனையும் ஊமையையுங் குணப்படுத்துகிறது கடினம். இது நமது சொந்தப் பலத்தால் கூடாது. ஆகையால் இந்த அநுக்கிரகத்தைப் பெறவேணுமானால் சுவாமியை நோக்கிப் பத்தி சுறுசுறுப்போடு செபித்து, வருந்தி வருந்தி அவரைக் கெஞ்சி மன்றாடவேண்டியது. என் இரட்சகர் தந்த இந்தப் படிப்பினையில் நான் என்ன பிரயோசனமடைந்தேன்?

மனப்பற்றுதல்.—இந்தத் தியானத்துக்கு ஏற்ற உணர்ச்சிகளை மனதில் எழுப்பி உன் ஆத்தும நிலைமைக்குத் தக்க பிரதிக்கினை செய்துகொள்.

## 3-ம் பிரிவு

### எல்லாரும் இயேசுநாதரின்மேல் ஆச்சரியப்பட்டு அவரைத் தோத்தரிக்கிறார்கள்

தியானம்.—செவிடும் ஊமையுமானவனுக்குச் சனுவாக இயேசுநாதர் செய்த புதுமையையும், சனங்கள் நடுவே அவர் தமது இரக்கத்தினால் செய்த மற்ற எண்ணிறந்த அதிசயங்களையுங் கண்டவர்களெல்லாருஞ் சந்தோஷத்தினாலே மனம்பூரித்தெழும்பி இவர் எல்லாவற்றையும் நன்றாய்ச் செய்தாரென்று கூவினார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நீ செய்ததெல்லாம் நன்றாய்ச் செய்தாயென்கிற வசனத்தை மெய்யாகவே உன் கல்லறையின்மேல் எழுதக் கூடுமானால் நீ எவ்வளவோ பாக்கியம் பெற்றவனாயிருப்பாய்! எல்லாவற்றையும் நன்றாய்ச் செய்கிறது எப்படியென்றால் மகா பத்தி சுறுசுறுப்போடும் வெகு சுத்த கருத்தோடுந் தேவசித்தத்தை ஆன முறையோடு நிறைவேற்றினால் சர்வேசுரனுக்கு முன்பாக எல்லாம் நன்றாய்ச் செய்கிறாயென்கலாம்.

கீழ்ப்படிந்து நடந்து பிறருக்கு நன்மாதிரிகை காண்பித்தால் மனிதருக்குமுன் எல்லாம் நன்றாய்ச் செய்கிறாயென்கலாம். இந்த நல்ல அத்தாட்சி நமக்கு உண்டாகும்படி நாம் செய்வதெல்லாஞ் சோம்பலின்றி உத்தமமாய்ச் செய்யக்கடவோம்.

சம்பாஷணை.—இன்றையத் திருநாளுக்குரிய அப்போஸ்தலரான அர்ச். பர்த்தலோமையாரோடு சம்பாஷணை செய்வாயாக.

---

# 25-ம் தேதி

## இரண்டாமுறை அப்பம் பலுகின புதுமை

ஆயத்தச் சிந்தனை.—ஏழு அப்பங்களைக்கொண்டு புதுமையாய்ப் பசியாறின நாலாயிரஞ் சனங்கள் பந்தி பந்தியாய் உட்கார்ந்திருந்த இடத்தைக் காண்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

தியானச் சேபம்.—விசுவாசம், நம்பிக்கை, தேவசிநேகமென்கிற புண்ணிய உணர்ச்சிகள் உன்னிடத்தில் பெருகும்படி கேட்பாயாக.

### முதல் பிரிவு

#### இந்தப் புதுமையின் வரலாறு

தியானம்.—சில மாதங்களுக்கு முன் அப்பங்களை முதல் விசை பலுகப்பண்ணுவதற்கு என்ன அவசர சமய விசேஷங்கள் நேரிட்டனவோ அவ்விதமான அவசர சமய விசேஷங்கள் இரண்டாம் விசையும் நேரிட்டன. இதோ, அர்ச். மாற்கு இதைப்பற்றி எழுதியிருக்கிறதைக் கேள். அக்காலத்திலே மறுபடியுந் திரளான சனங்கள் கூடியிருக்கையில் சாப்பிடுகிறதற்கு அவர்களுக்கு ஒன்றுமில்லாததினாலே, இயேசுநாதர் தமது சீஷர்களை வரவழைத்துச் சொன்னதாவது: இந்தச் சனங்களின்மேல் மெத்த இரக்கமாயிருக்கிறேன். இதோ, இவர்கள் மூன்று நாளாய் நம்மைவிட்டுப் பிரியாமலும் ஒன்றுஞ் சாப்பிடாமலும்



இருக்கிறார்கள். இவர்களைப் பட்டினியாய்த் தங்கள் வீட்டுக்கு அனுப்பிவிடுவோமாகில் நடக்கச் சத்துவமில்லாமல் வழியில் சோர்ந்துபோவார்கள். ஏனென்றால் இவர்களில் அநேகர் வெகு தொலையிலிருந்து வந்திருக்கிறார்களென்றார். இதற்கு மாறுத்தரமாகச் சீஷர்கள் ஆண்டவரைப் பார்த்து: வனாந்தரமான இவ்விடத்தில் இத்தனை சனங்களுந் திருத்தியாய்ப் போசிக்க அப்பங்கள் கிடைப்பது எப்படியென்றார்கள். இதைக்கேட்ட இயேசுநாதர் உங்களிடத்தில் எத்தனை அப்பங்கள் உண்டென்று கேட்கச் சீஷர்கள் ஏழென்றார்கள். அப்போது இயேசுநாதர் சனங்களைப் பந்தி பந்தியாய்த் தரையில் உட்காரச் செய்து, அந்த ஏழு அப்பங்களையுங் கையிலேந்திச் சர்வேசுரனுக்குத் தோத்திரஞ்செய்து அவைகளைப் பிட்டு அப்போஸ்தலர்களிடத்தில் கொடுத்துப் பரிமாறச் சொன்னார். பின்னும் அவர்களிடத்திலிருந்த சிறு மீன்களையும் எடுத்து ஆசீர்வதித்து அவர்களிடத்தில் கொடுத்துச் சனங்களுக்குப் பரிமாறக் கட்டளையிட்டார். எல்லாரும் போசித்துத் திருத்தியடைந்தார்கள். அதில் மீதியான துண்டுகளை ஏழு கூடைகள் நிறைய எடுத்தார்கள். (மாற். 8.) போசித்துத் திருத்தியானவர்களோ ஸ்திரீகளும் பிள்ளைகளுந் தவிர ஆண்பிள்ளைகள் மட்டும் நாலாயிரம் பேரிருந்தார்கள். பின்பு இயேசுநாதசுவாமி விடைகொடுத்து அவர்களை அனுப்பிவிட்டார். (மத். 15, மாற். 8.)

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இந்த வரலாற்றில் சொல்லியிருக்கிறதெல்லாம் நமக்கு எவ்வளவோ ஆறுதலுந் தைரியமும் வருவிக்கிறது! இந்தச் சனங்கள்பேரில் இரக்கமாயிருக்கிறேனென்று இயேசுநாதர் திருவுளம்பற்றுகிறார். இதோ இயேசுவின் திரு இருதயம் எப்படிப்பட்டதென்று பார். நமது ஆத்தும சரீரத்துக்கு நேரிடும் அவசர இக்கட்டுகள் எவையென்று இத்திரு இருதயம் எந்நேரமுங் கண்ணோக்கிக் கவலையாயிருக்கின்றது. இந்த நினைவு நமது துன்பங்களில் எவ்வளவோ உறுதி பொறுமை வருவிக்கத் தக்கது! இவர்கள் மூன்று நாளாய் நம்மை விட்டுப் பிரியாமலிருக்கிறார்களே என்று சொல்லுகி

றார். ஆகையால் நமது திவ்விய கர்த்தருக்கு நாம் ஊழியம்
பண்ணுகிற நாட்கள் நிமிஷங்களின் கணக்கை வெகு திட்ட
மாய்ப் பதிந்து வைத்துக்கொள்கிறார். இவர்களில் அநேகர்
வெகு தொலையிலிருந்து வந்திருக்கிறார்கள் என்கிறார்.
ஆகையால் அவர் நமது சேவக நாட்களைக் கணக்கு வைத்தி
ருக்கிறதுமல்லாமல் நமக்கு ஒருநாள் நமது ஊழியத்துக்கு
ஏற்ற வெகுமானம் பண்ணும்படி அதின் பேறுபலன்களை
யுங் கணித்துக்கொண்டிருக்கிறார். இதினால் நமக்கு எவ்
வளவோ உற்சாகம் உண்டாகவேணும்! இவர்களைப் பட்
டினியாய் வீட்டுக்குப் போகும்படி அனுப்பிவிடுவோமா
கில் வழியில் நடக்கச் சத்துவமில்லாமல் சோர்ந்துபோவார்
களே என்கிறார். இனிமேல் நமக்கு என்ன சம்பவிக்கப்
போகிறதோவென்று அறியாமல் நாம் பலமுறை பயந்து
கலங்குகிறோமல்லோ? ஆனால் அவர் நம்மில் ஒவ்வொருவ
ருக்கும் வரப்போகிறதைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்.
இனிமேல் நாம் இருக்கப்போகிற அந்தந்த ஸ்திதி நிலைமை
களும், நாம் உட்படப்போகிற ஆபத்துகளும், நமக்கு அவ
சரமான உதவி ஒத்தாசைகளும் ஆகிய இவையெல்லாம்
அவர் கண்ணுக்கு வெட்டவெளியாயிருக்கின்றன. தரும
சமுத்திரமாகிய அவர் எவ்விதத்திலும் நம்மைப் பரா
மரித்து, வேண்டுமானால் புதுமை மு லாய்ச் செய்யத்
தயாராயிருக்கிறார். மேற்கண்ட புது யே இதற்கு ஒரு
திர்ஷ்டாந்தம்.

மனப்பற்றுதல்.—இதைக்கண்டு ஆச்சரியப்பட்டு
ஆண்டவரை வாழ்த்தித் தோத்திரஞ் செய்து அவருக்கு
நன்றியறிந்தவர்களாய் நம்பிக்கை விடா யிருப்போமாக.

பிரதிக்கினை.—இயேசுநாதருடை திரு இருதயத்
திலே நமக்கு ஆறுதலும் ஆதரவுந் தே கிறது.

## 2-ம் பிரிவு

இந்தப் புதுமையின் ஞான ர்த்தம்

தியானம்.—இயேசுநாதசுவாமி
களைப் பலுகச் செய்த முதல் வி துமையாக அப்பங்
 கும் இரண்டாம்



கிசைக்குமுள்ள வித்தியாசத்தைச் சில வேதபாரகர் எடுத்
துக்காட்டி அவைகளில் தேவ இரகசியம் அடங்கியிருக்கிற
தென்று தெளிவிக்கிறார்கள். அதெப்படியென்றால் அவர்
கள் யூதருடைய வேதத்துக்குந் திருச்சபைக்குமுள்ள சுபா
வக் கூறுபாடுகளை வருணித்து, திருச்சபையானது யூத
ருடைய வேதத்திற்கும், புதிய ஏற்பாடு பழைய ஏற்பாட்
டுக்கும் மேற்பட்டிருப்பது இந்தப் புதுமைகளால் விளங்கு
கிறதென்கிறார்கள். அவ்விதமே முதற் புதுமையிலே பந்தி
யிலிருந்த ஐயாயிரம்பேர்களும் பழைய ஏற்பாட்டுக்கு அடை
யாளமாயிருக்கிறார்கள். ஏனெனில் மோயீசன் எழுதின
பெந்தாத்தோக்கென்னும் ஐந்து ஆகமங்களில் பழைய ஏற்
பாடு அடங்கியிருக்கிறது. இரண்டாம் புதுமையில்
பந்தியமர்ந்த நாலாயிரம் பேர்களும் புது ஏற்பாட்டுக்கு
உருவகமாயிருக்கிறார்கள். ஏனெனில் நான்கு சுவி
சேஷத்தில் புது ஏற்பாடு அடங்கியிருக்கிறது. முந்தின
புதுமையிலே சனங்கள் திருத்தியாய்ப் போசனம் பண்ணி
னதினாலே இயேசுநாதரைத் தேடினார்களென்று சொல்லி
யிருக்க, பிந்தின புதுமையிலே இப்போக்கொத்த முகாந்
தரமொன்றுங் காணோம். ஏனெனில் கிறீஸ்துவர்கள்
ஞானவிதமாய்ச் சீவித்துத் தங்கள் மனதை இலெளகீக
நன்மைகளின்மேல் சாரவிடாமல் ஆத்தும காரியங்களின்
மேல் செலுத்தவேண்டியது. முந்தின புதுமையில் வாற்
கோதும்பை உரொட்டி கொடுக்கப்படுகிறது. இது அடிமை
களுக்குரிய உணவு. இரண்டாம் புதுமையில் உயர்ந்த
கோதும்பை உரொட்டி கொடுக்கப்படுகிறது. இது மக்
களுக்கான உணவு. கடைசியாய் முதற் புதுமையில் பன்
னிரண்டு கூடைகள் மீதிப்பட்டன. இவைகள் பழைய ஏற்
பாட்டின் பன்னிரண்டு பிதாப் பிதாக்களைக் குறிப்பிடு
கின்றன. இரண்டாம் புதுமையில் ஏழு கூடைகள் மிஞ்சி
னது. இவைகள் இஸ்பிரீத்துசாந்துவின் ஏழு வரங்களை
யும், விசேஷமாய் நித்திய சீவியத்தை நோக்கி நடக்கும்
பாதையில் நமக்கு ஞான ஆகாரமாக நியமிக்கப்பட்டிருக்
கிற ஏழு தேவதிரவிய அநுமானங்களையும் அறிவிக்
கின்றன.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—தேவ ஞானமானது இந்த இரண்டு ஏற்பாடுகளிலும் மனுஷரைப் பரிபாலனம் பண்ணுகிற வகையைக் கண்டு ஆச்சரியப்படக் கடவோம். சர்வேசுரன் நம்மைப் புதிய ஏற்பாட்டின் மக்களாய்ப் பிறக்கச்செய்த கிருபைக்காகவும், இந்தக் கிருபையினால் யூதர்களைவிட நாம் அடைந்த மேன்மைக்காகவும் அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்வோமாக. யூதரிடத்தில் சத்தியத்தின் சாயல் மாத்திரமிருந்தது. நம்மிடத்திலோ சத்தியமிருக்கிறது. மாமிசமான தேவ வார்த்தை நம்மோடிருக்கிறார். அவர்களிடத்திலோ அவரைப்பற்றின வாக்குத்தத்தங்கள் மாத்திரம் இருந்தன. கடைசியாய் அவருடைய திருச் சரீரத்தையுந் திரு இரத்தத்தையும் நாம் ஆகாரமாக உட்கொள்ளுகிறோம். அவர்களோ இதற்கு அடையாளமாக மாத்திரம் இருந்த மன்னாவென்கிற போசனத்தைப் போசித்தார்கள். ஆனால் நமக்குக் கிடைத்திருக்கிற அநுகூலங்கள் அதிகமாயிருப்பதற்களவாகச் சர்வேசுரன் அதிகமான பரிசுத்ததனத்தை நம்மிடத்தில் கேட்கிறார். நீ இதை அடையப் பிரயாசைப் படுகிறாயோ?

சம்பாஷணை.—நமது நேசமுள்ள இரட்சகரோடே சம்பாஷணை செய்து, அவர் நமக்கு உதாரமாய் அளித்த நன்மை உபகாரங்களுக்காகவும், நமக்காக இடைவிடாமல் செய்துவருந் தயாப நிறைந்த ஆச்சரியங்களுக்காகவும் நன்றியறிந்த தோத்திரஞ் செய்யக்கடவோம். அன்றியும் நம்மிடத்தில் தேவ சிநேகத்தை ஸ்திரப்படுத்தி நம்பிக்கையினாலும் ஞான சந்தோஷத்தினாலும் நமது இருதயத்தைப் பூரிப்பிக்கும்படி அவரை இரந்து மன்றாடுவோமாக.

இன்றைக்குப் பிராஞ்சுதேசத்து இராசாவாகிய அர்ச். [illegible]சியாருடைய திருநாளானதினால் இவரோடுஞ் சம்[illegible]ன செய்துகொள்ளலாம்.



## 26-ம் தேதி

### இயேசுநாதர் மகேதான் சீமைக்குட் பிரவேசம் பண்ணுகிறார்; அவ்விடத்தில் பரிசேயரும், சதுசேயரும் அவரைச் சோதிக்கிறார்கள்.

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதசுவாமி இவர்களோடு பேசிக்கொண்டிருக்கிறதைப் பார்க்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

தியானச் செபம்.—கபடற்ற நேர்மையான மனதைக் கேட்பாயாக.

### முதல் பிரிவு

#### இயேசுநாதர் படகேறி மகேதான் சீமையில் கரைபிடிக்கிறார்

தியானம்.—இயேசுநாதர்சுவாமி இரண்டாம் விசை அப்பங்களைப் புதுமையாகப் பலுகப்பண்ணினதும், சனங்களுடைய கொண்டாட்டத்துக்குத் தப்பித்துக் கொள்ளும்படி அவர்களை அனுப்பிவிட்டு அப்போஸ்தலர்களோடு ஒரு படகிலேறிக் கலிலேயாக் கடலைக் கடந்து மறு கரையில் தாம் இன்னும் வேதம்போதியாத மகேதான் சீமையில் வந்து சேர்ந்தார் (மாற். 8). இதைக்குறித்து வேதபாரகர் சொல்லுமாப்போல இயேசுநாதசுவாமி அங்கங்கே சுற்றித் திரிந்ததெல்லாம் பார்க்கும்போது, யூதேயா நாட்டின் ஒவ்வொரு சிற்றூரிலுந் தமது திவ்விய போதகத்தின் ஒளி பிரகாசிக்கவும், இஸ்ராயேல் கோத்திரத்தைச் சேர்ந்த யாவருந் தம்மை அறியவும் வேணுமென்று அவர் கருத்தாயிருந்ததாகத் தெரியவருகிறது. அன்றியும் பிற்காலத்தில் அப்போஸ்தலர்கள் பிரசங்கிக்கும்படி உலகமெங்குஞ் சுற்றித் திரியவேணுமென்பதற்கு இது ஒரு அடையாளமாயிருந்தது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—உன் நடக்கைக்கும் உன் திவ்விய மாதிரிகையான இயேசுநாதருடைய நடக்கைக்கும் உள்ள வித்தியாசத்தை இனை

விட்டுப் பார். நீயோ ஓரிடத்தில் உனக்குக் காரியம் அனுகூலமானால் எல்லாரும் உன்னைப் புகழும்படி ஒரு கூத்தாடியைப்போல் அங்கேயிருக்க ஆசைப்படுகிறாய். இதற்கு விரோதமாய் அங்கே ஒன்றும் உருப்படாவிட்டால் உடனே மற்றவர்கள் கண்ணுக்குத் தப்பித்துக்கொண்டு அப்பால் ஓடிப்போகவேணுமென்று பதைக்கிறாய். இயேசுநாதரோ இதற்கு முழுதும் எதிர் விரோதமாய் நடக்கிறார். அதெப்படியென்றால் தாம் செய்த பிரபல்லியமான புதுமைகளைக் கண்ட சனங்கள் ஆச்சரியப்பட்டுத் தம்மைப் புகழ்ந்து கொண்டாடக் கருத்தாயிருக்கையில் அவர்களுக்குத் தப்பித்துக்கொண்டுபோகத் தீவிரிக்கிறார். தமது ஞான வைராக்கியத்தினாலே எங்கும் பலனுண்டாக வேணுமென்பதே அவருக்கு ஏக கவலை. உன் திவ்விய குரு காண்பித்த மாதிரிகைக்கு உன் நடக்கை சரியாயில்லை என்று நீயே ஒத்துக்கொள்.

மனப்பற்றுதல்.—ஆண்டவரே, எங்களுக்கல்ல, உமக்கே தோத்திரமும் புகழ்ச்சியும் உண்டாகக்கடவது (சங். 113).

பிரதிக்கினை.—நமது நற்கிரியைகளுக்குச் சாட்சியாகச் சர்வேசுரன் ஒருவரை மாத்திரந் தேடி ஆசிக்கக்கடவோம்.

## 2-ம் பிரிவு

### இயேசுநாதர் பரிசேயரைக் கண்டித்து அவர்களைக் கைவிடுகிறார்

தியானம்.—மகேதான் சீமையிலே இயேசுநாதர் சொன்ன புத்தி பிரசங்கங்களையும், செய்த புதுமைகளையும் பற்றிச் சுவிசேஷகர் யாதொன்றுஞ் சொல்லவில்லை. பரிசேயருஞ் சதுசேயரும் அவர்மட்டில் கள்ளத்தனமாய் நடந்த விதத்தை மாத்திரம் எடுத்துக் காட்டுகிறார்கள். இவர்கள் மற்றப் பதித மார்க்கத்தாரைப்போல தங்களுக்குள்ளே சற்றாகிலும் ஒற்றுமையில்லாதவர்களாய் இருந்தபோதிலும் இரட்சகருக்கு விரோதமாய்ப் பேசுகிறதிலே



மாத்திரம் எல்லாரும் ஒருமனப்பட்டிருக்கிறார்கள். ஆகையால் இவர்கள் அவரிடத்திற் போய்த் தர்க்கம்பண்ணத் துவக்கிக் கடைசியாய் வானத்தினின்று ஒரு அற்புதத்தை எங்களுக்குக் காண்பியுமென்று கேட்டார்கள். அவர்கள் இப்படித் தந்திரமாய்க் கேட்டார்களென்று சுவிசேஷகர் சொல்லுகிறார். தாங்கள் கேட்டபடி புதுமை செய்தால் பில்லிசூனியக்காரனென்றும், புதுமை செய்யாதிருந்தால் சக்தியற்றவனென்றுஞ் சனங்களுக்குச் சொல்லி அவர் பேரைக் கெடுக்கக் கருத்தாயிருந்தார்கள். இயேசுநாதர் இவர்களுடைய கெட்ட கருத்தை அறிந்து மனதுக்குள்ளே பிரலாபித்துச் சொன்னதாவது: கெட்டுப்போன இந்தத் துஷ்டச் சந்ததி ஓர் அற்புதத்தைக் கேட்கின்றது. யோனாஸ் தீர்க்கதரிசியின் அற்புதமொழிய வேறே அற்புதம் இச்சந்ததிக்குக் கொடுக்கப்படுவதில்லையென்று மெய்யாகவே சொல்லுகிறேனென்றார். இவைகளைச் சொன்னபின் அவர்களைவிட்டு அகன்றுபோனார். (மத். 16. மாற். 9.)

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது —துஷ்டர் தின்மையைக் கோரிச் செய்யுங் காரியத்தை நீ நன்மையைக் கோரிச் செய்யக்கற்றுக்கொள். இயேசுநாதருக்கும் அவருடைய திருச்சபைக்கும் பதிதரும் மற்றத் துஷ்டரும் பொல்லாப்புச் செய்ய ஒருமனப்பட்டுத் தங்களுக்குள்ளிருக்கிற பற்பல வாக்குவாதங்களைப் பொருட்படுத்தாது தள்ளிவிடுகிறார்களல்லோ? அப்படியே நாமும் நம்முடைய சுயமனம், காய்மகாரம், சொந்த எண்ணத்தில் பிடிவாத முதலிய குறைகளை நம்மைவிட்டு அகற்றவேண்டியது. நமது செபத்திலும் பிரயாசத்திலும் ஒரே இருதயமும் ஒரே மனமுமுள்ளவர்களாய் நம்மைத்தானே மறந்து, அஞ்ஞான இருள் அகன்று மெஞ்ஞான ஒளி பிரகாசிக்கவும், தின்மை ஒழிந்து நன்மை விளங்கவும் பிரயத்தனப்படுவோமாக. இதுவரையில் நீ எவ்விதம் நடந்தாயென்று பார்.

மனப்பற்று.—சுயபட்சம், காய்மகாரம், வீண் பெருமை முதலிய துர்க்குணங்களுக்கு நாம் செத்தவர்கள் போலிருக்க வரங்கேட்போமாக.

பிரதிக்கினை.—நமது நினைவு, ஆசை, நாட்டங்கள் எவையென்று இன்றையத்தினம் விசேஷமாய்க் கவனிப்போமாக.

## 3-ம் பிரிவு

### இயேசுநாதர் அப்போஸ்தலர்களுடைய விசுவாசக் குறையையும் புத்தியீனத்தையும்பற்றி அவர்களைக் கண்டிக்கிறார்

தியானம்.—திவ்விய கர்த்தர் மகேதான் சீமையில் தாம் போன காரியத்தை முடித்துக் கலிலேயாக் கடலைக் கடந்துவந்தார். வழியில் அப்போஸ்தலர்களைப் பார்த்து: துஷ்டர்களுடைய பேச்சைக் கேட்டு மயங்காதிருங்களென்று எச்சரித்து, பரிசேயர் சதுசேயருடைய புளித்தமாவின் மட்டில் எச்சரிக்கையாயிருங்கள் என்றார். இந்த வார்த்தைகளைக் கேட்டு அவர்கள் அந்தப் புளித்தமாவினால் செய்யப்பட்ட அப்பத்தைப்பற்றித்தான் பேசுகிறாரென்று நினைத்து, ஐயோ, போசிப்பதற்கு அப்பங்களை வாங்க மறந்து விட்டோமேயென்று விசாரப்பட்டுக்கொண்டிருந்தார்கள். அவர்களுடைய எண்ணத்தை அறிந்த இயேசுநாதர் அவர்களைப் பார்த்து: அற்ப விசுவாசிகளே அப்பங்களை வாங்கவில்லையென்று ஏன் விசாரப்படுகிறீர்கள்? ஐந்து அப்பங்களைக்கொண்டு ஐயாயிரம்பேருக்குப் பகிர்ந்தபோது மீதியான துண்டுகளை எத்தனை கூடைகள் நிறைய எடுத்தீர்களென்றும், ஏழு அப்பங்களைக்கொண்டு நாலாயிரம் பேருக்குப் பகிர்ந்தபோது மீதியான துண்டுகளை எத்தனை கூடைகளில் எடுத்தீர்களென்றும் நீங்கள் உணராமற் போனதென்ன? பரிசேயர் சதுசேயருடைய புளித்தமாவின் மட்டில் எச்சரிக்கையாயிருங்களென்று நான் உங்களுக்குச் சொன்னது அப்பத்தைக் குறித்துச் சொல்லவில்லை என்றார். அப்போதுதான் அவர்கள் கண்டுபிடித்தார்கள். [illegible] இடத்தில் அப்பத்தைக் குறித்துச் சொல்லவில்லையென்றும், பரிசேயர் சதுசேயருடைய போதனைகளுக்கு எச்சரிக்கையாயிருக்க வேணுமென்று சொன்னதாகக் கண்டுபிடித்தார்கள். (மத். 16. மாற். 8.)



இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—சர்வேசுரனிடத்தில் நாம் எவ்வளவோ உதவி சகாயங்களை அடைந்திருக்கிறோம்! சாங்கோபாங்கத்தைக் கற்பிக்கிற துறவற அந்தஸ்தில் எவ்வளவு காலமாயிருக்கிறோம்! அப்படியிருக்கச் சர்வேசுரன்பேரிலே சரியான நம்பிக்கை வையாமலும் ஞானக் காரியங்களைச் சரியாய்க் கண்டுபிடியாமலும் இருக்கிறதினாலே அப்போஸ்தலர்களைப்போல நாமுங் கண்டனைக்குப் பாத்திரவான்களாய் இருக்கிறதில்லையோ?

சம்பாஷணை.—உனக்குப் பாதுகாவலான அர்ச்சிய ஷ்டவரோடே சம்பாஷணை செய்.

---

## 27-ம் தேதி

### இயேசுநாதர் பெத்சாயிதாப் பட்டணத்துக் குருடனைக் குணமாக்குகிறார்

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதர் குருடன் கண்ணிலே தமது கையை வைக்கிறதைப் பார்க்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

தியானச் சேபம்.—இஸ்பிரீத்து சாந்துவானவரிடத்தில் ஞானப் பிரகாசத்தையும் பத்தியுருக்கத்தையும் இரந்து கேள்.

## முதல் பிரிவு

### இயேசுநாதசுவாமி மற்றவர்கள் குருடனுக்காகச் செய்த மன்றாட்டை ஏற்றுக்கொள்கிறார்

தியானம்.—இயேசுநாதரும் அப்போஸ்தலரும் படகை விட்டிறங்கிப் பெத்சாயிதா நகரத்துக்குப் போனார்கள். அப்போது சனங்கள் ஒரு குருடனைக் கூட்டிக்கொண்டு வந்து இயேசுநாதரிடத்தில் விட்டு அவர் அவனைத் தொட வேணுமென்று மன்றாடினார்கள். இயேசுநாதர் மறுமொழியொன்றுஞ் சொல்லாமல் குருடன் கையைப் பிடித்து,

ஊருக்கு வெளியே அவனைக் கூட்டிக்கொண்டுபோய், அவன் கண்களின்மேல் தமது உமிழ்நீரைத் தடவி, அவன்மேல் தமது கையைவைத்து: ஏதாகிலுங் காண்கிறாயாவென்று கேட்டார். அப்போது குருடன் ஏறெடுத்துப் பார்த்து: நடமாடுகிற மனிதரை மரங்களைப்போல காண்கிறேனென்றான். (மாற். 8)

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.— இயேசுநாதர் அவனை ஊருக்கு வெளியே கூட்டிக்கொண்டு போய் அவன் கண்களில் உமிழ்நீரைப் பூசினார். இது இஸ்பிரீத்துசாந்துவானவர் நமதுள்ளத்தை ஞானத் தைலத்தால் பூசுகிறதற்கு அடையாளமாயிருக்கிறதென்று மகாத்துமாவான பேதாவென்பவர் உரைத்திருக்கிறார். இதில் திவ்விய இரட்சகர் நமக்குப் படிப்பிக்கிறதென்ன? நாம் ஞானக் காரியங்களைத் தீர்க்கமாய்க் கண்டு பிடித்து அவைகளைச் சுகிக்கவேணுமானால் வேளாவேளை உலகத்தையும் வெளிக்கவலை காரியங்களையும் ஒருமிக்க ஒழித்து ஏகாந்தத்திலிருக்கவேணுமென்று படிப்பிக்கிறார். ஞான ஏகாந்தமாயிருக்கவேணுமென்று ஒழுங்கில் நமக்குக் கற்பிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய வாழ்நாளெல்லாந் தியான யோகிகளைப்போல ஏகாந்தத்தில் இருக்கக் கூடுமானால் நமக்கு எவ்வளவோ பாக்கியம்! இதற்குச் சந்தேகமில்லை. ஆகிலும் இதைவிட இன்னும் அதிக உச்சிதமான பாக்கியத்தை நாம் கைக்கொள்ளலாம். அதெப்படியென்றால் தியான யோகத்தின் மதுரத்தையுந் தருமக் கிரியைகளின் பேறுபலனையும் ஒன்றாய்ச் சேர்த்துத் தேடினால் அந்தப் பாக்கியத்தைக் கைக்கொள்ளலாம். அதற்காக ஞான ஒடுக்கத்தில் நாம் அடைந்த பத்தி சுறுசுறுப்பையும் புண்ணியப் பற்றுதலையும் நமது உள்ளத்தில் காப்பாற்றி, ஐம்பொறிகளை அடக்கி, உள்ளாந்தரங்க சீவியமாய்ச் சீவிக்கவேண்டியது. இப்பேர்ப்பட்ட அடக்கவொடுக்கம் உன்னிடத்தில் இல்லாததினாலேயல்லோ குருடனைப்போல சுபாவத்துக்கு மேலான காரியங்களைச் செவ்வையாய் அறியாமலும் உள்ளதை உள்ளபடி பாராமல் தவறாய் நினைத்தும் மதித்தும் வருகிறாய்.



மனப்பற்றுதல்.—தியான யோகத்தையுந் தருமக் கிரியைகளையும் உத்தமமான விதமாய் ஆசித்துத் தேடவருந்தக்கடவாய்.

பிரதிக்கினை.—இந்தக் கருத்து நிறைவேற நிலைமையுந் தாராளமுமான மனதோடு விடாமல் முயற்சி செய்.

## 2-ம் பிரிவு

### இயேசுநாதர் குருடனைப் படிப்படியாய்ச் சொஸ்தப் படுத்துகிறார்

தியானம்.—இயேசுநாதர் திரும்பவுங் குருடன்மேல் தமது கைகளை வைக்கவே அவனும் வரவர நன்றாய்ப் பார்வையடையத் துவக்கினதுமன்றிக் கடைசியாய் எல்லாக் காரியங்களையுந் தெளிவாய்ப் பார்க்கத்தக்க விதமாய்ச் சொஸ்தமடைந்தான் (மாற். 8.). இந்தப் புதுமையிலேமாத்திரம் இயேசுநாதர் கொஞ்சங் கொஞ்சமாய்ச் சொஸ்தப்படுத்திக்கொண்டு வந்ததினாலே இது விசேஷிக்கத்தக்கதாமே. இந்தக் குருடனிடத்திலே துவக்கத்தில் தகுந்த ஆயத்தமில்லாமல் கடைசியில்மட்டும் உத்தம ஆயத்தமுண்டானதினாலேதான் இயேசுநாதர் இவ்விதம் நடத்தினாரென்று வேதபாரகர் சொல்லுகிறார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.— இந்தத் தியானத்தின் பலனாக நாம் அறியவேண்டியதாவது.—அவனவன் உள்ளத்திலிருக்கிற ஆயத்தத்துக்குத் தக்கது சர்வேசுரன் வழக்கமாய் அவனவனை நடப்பித்துக் கொண்டுவருகிறார். இவன் நல்ல ஆயத்தமாயிருந்தால் இவனால் உண்டாகும் அனுகூலம் உச்சிதமாயிருக்கும். இவன் நடுத்தரமாயிருந்தால் விளையும் பலனும் பூச்சியமாகும். இதைப்பற்றியல்லோ அநேகர் வழக்கமாய்ச் செய்யும் பத்திக்கடுத்த முயற்சிகளிலும், விசேஷமாய்த் தேவதிரவிய அநுமானங்களைப் பெறுகிறதிலும் அடைகிற ஞான ஒளிவு மங்கலாயிருக்கிறது. இவர்களிடத்தில் சுறுசுறுப்பும் ஞான வேகமுங் குறைபடுகிறதினாலே தேவப்பிரசாதத்தின் சலம் இவர்கள் இருதயத்தில் ஓடிப் பாயாமலும்,

சர்வேசுரன் இவர்கள்பேரில் வைத்த தயைநிறைந்த கருத்துகள் சம்பூரணமாய் நிறைவேறாமலும் போகிறது. இது காரியத்தில் உன்னுடைய அனுபோகமே உனக்குத் திருஷ்டாந்தமல்லோ? இன்னமும் இதில் அறியவேண்டிய வேறொரு காரியம் ஏதென்றால்: நாம் சிலகாலம் வெகு பிரயாசத்தோடு செபதபம் பண்ணினாலும் அதினால் நாம் நினைத்த தர்ம காரியம் அனுகூலமாகாமலும், நமக்குண்டான ஆத்தும வியாதி முழுதுந் தீராமலும், நாம் நினைத்த புண்ணியத்தை மேலான விதமாய் அடையாமலும்போகிறதைக் கண்டு மனப்பேதலிப்புக்கு இடங்கொடுக்கப்படாது. ஏனென்றால் அந்தந்தக் காரியம் நிறைவேறுவதற்குச் சர்வேசுரன் ஒவ்வொரு நேரத்தைக் குறித்திருப்பார். அவர் தாம் குறித்த கதிகு நம்மைப் படிப்படியாய்க் கூட்டிக்கொண்டுபோவார். ஆகையால் உறுதி நிலைமையென்கிற புண்ணியத்தைக்கொண்டுமாத்திரம் நாம் இதை அடையலாம். உன்னிடத்தில் இந்தப் புண்ணியம் இருக்கிறதோ இல்லையோவென்று பார்.

மனப்பற்றுதல்.—தர்ம வழியில் தீவிரித்து நடக்கிற குணத்தையும் பணிந்த இருதயத்தையும் ஒரே நிலைமையான ஞானவேகத்தையும் மன்றாடிக்கேள்.

பிரதிக்கினை.—தேவ ஆராதனைக்குந் தேவ பத்திக்கு மடுத்த முயற்சிகளை அத்தியந்த விசுவாச நம்பிக்கையோடு செய்யக்கடவோம்.

## 3-ம் பிரிவு

### இயேசுநாதர் குருடனைப் பார்த்து நீ பெத்சாயிதா ஊரில் நில்லாமல் நேராய் உன் வீட்டுக்குப் போவென்று கட்டளையிடுகிறார்.

தியானம்.—இதற்குப்பின் இயேசுநாதர் குருடனைப் பார்த்து நீ உன் வீட்டுக்குப் போ; ஆயினும் ஊருக்குள்ளே பிரவேசித்தால் உனக்குச் சம்பவித்ததை ஒருவருக்குஞ் சொல்லாதேயென்றார் (மாற். 8). இயேசுநாதசுவாமி குருடனை வீட்டுக்குப்போகச் சொன்னதேனென்றால்



அவன் தன் மனையில் அடங்கியிருந்து, சுவாமி தனக்குச்
செய்த உபகாரங்களையெல்லாம் ஆராய்ந்து விசாரித்து
அவருக்குத் தோத்திரஞ் செலுத்தும்படியாகத்தான்.
ஆனால் இந்த நூதன அதிசயத்தைப் பார்க்க விரும்
பின பெத்சாயிதா ஊராருடைய பிரியத்துக்கு இணங்க
வேண்டாமென்று விலக்கினதேன்? ஏனென்றால் இந்த
ஊரார்நடுவில் இயேசுநாதசுவாமி கணக்கற்ற புதுமைகளைச்
செய்திருந்தும், அவர்கள் பலன் அடையாததற்குத் தண்
டனையாக இந்த விலக்கம் பண்ணினாரென்று அறியக்கட
வோம். வேறொரு சமயத்தில் திவ்விய கர்த்தர் இவர்களைக்
குறித்துச் சொன்ன வார்த்தைகள் இதற்குத் திருஷ்டாந்தம்.
அதாவது கொறோசாயின் பட்டணமே, உனக்கு நிற்ப
பாக்கியம்! பெத்சாயிதா பட்டணமே உனக்கு நிற்பாக்
கியம்! ஏனென்றால் உங்கள் நடுவே செய்யப்பட்ட அற்
புதங்கள் தீர் நகரிலும், சிதோன் நகரிலுஞ் செய்யப்பட்
டிருக்குமேயாகில் அப்பட்டணங்கள் ஏற்கனவே கெட்டை
உடுத்துச் சாம்பலில் உட்கார்ந்து தபசு செய்திருக்குமே
யென்றார் (மத். 11).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—சர்வே
சுரன் நமக்குச் செய்த உபகாரங்களை மறவாமல் நமது
ஞாபகத்தில் நிறுத்தி அவர்மட்டில் நன்றியறிந்த பற்றுதல்
நிறைந்தவர்களாயிருக்கக்கடவோம். இந்த உபகாரங்களைப்
பெற்றிருந்தும், எங்கே நாளுக்குநாள் அதிக நல்லவர்களா
காமல் போகிறோமோவென்று அத்தியந்த பயத்தோடு
இருக்கக்கடவோம். இந்த இரண்டு காரியங்களிலும் நம்
மைக் கடிந்துகொள்வதற்கு ஏதுவில்லையோவென்று பார்.

சம்பாஷணை.—இயேசுநாதரிடத்தில் நமக்காகப்
பரிந்துபேசுகிற பரிசுத்த கன்னி மரியம்மாளோடு சம்பா
ஷணை செய்வோமாக.

# 28-ம் தேதி

## அர்ச். அகுஸ்தினார் திருநாள்*

ஆயத்தச் சிந்தனை.—இவர் தேவ சிநேகத்தால் பற்றியெரியும் ஒரு இருதயத்தைத் தமது கையில் ஏந்தின பிரகாரமாய் இருக்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

தியானச் செபம்.—இவர் ஆண்டவரிடத்தில் மன உருக்கத்தை உனக்கு அடைந்து தந்தருளும்படியாக கேட்பாயாக.

### முதல் பிரிவு

#### அர்ச். அகுஸ்தினார் துவக்கத்தில் சர்வேசுரனை விட்டு விலகியிருந்தார்

தியானம்.—மனுஷனுக்கு அலங்காரமான சுபாவ வரங்களையெல்லாம் அர்ச். அகுஸ்தினார் இயல்பாய்ப் பெற்றிருந்தார். ஆழ்ந்த புத்திச் சூட்சமும் அருமையான வாய்ச்சாலகமும் இவருக்கு இருந்தன. ஆயினும் இவைகள் அவருக்குத் தின்மைக்கு ஏதுவாயிருந்ததொழிய நன்மையாகவில்லை. எப்படியெனில் தாம் மற்றவர்களைவிட மேலான புத்தித் திறமையடைந்திருப்பதையும் எல்லாருந் தம்மைப் புகழ்ந்து கொண்டாடுவதையுங் கண்டு மனக்கர்வம் நிறைந்து சர்வேசுரனை விட்டு விலகி, தாழ்ச்சியோடு திருச்சபைக்குக் கீழ்ப்படியாமல், மனிக்கேயரென்னும் பதிதமதத்தில் உட்பட்டார். தேவ பயமுமற்று, அக்கிரமமான ஆசாபாசங்களுக்கு அடிமையாகி, முப்பது வயது வரையில் அசுத்தப் பாவச் சேற்றில் அமிழ்ந்திக் கிடந்தார். ஆயினும் இப்பேர்ப்பட்ட ஞானமுள்ளவர் தமது பாவ அக்கிரமங்களைப்பற்றி வெட்கமில்லாதிருந்தாரோ? இல்லை; இல்லை. சமயா சமயம் அவைகளை அருவருத்து நாணுவார். தமது பாவக்கட்டுகளை அறுத்து எறிந்துவிட விரும்புவார். ஆயினும் இதற்கு வேண்டிய திடாரிக்கமும் உறுதியும் அவரிடத்தில் கிடையாது; இந்த உறுதியான மனசு திருச்சபையால்தான் அவருக்கு வரவேண்டியிருந்தது. அவரோ அக்காலத்தில் இன்னும் திருச்சபைக்குப் பிள்ளையாகவில்லை.

* குறிப்பு: 354-ம் வருஷம் பிறந்து, 387-ம் வருஷம் ஞானஸ்நானம் பெற்றார். 430-ம் வருஷம் மரித்தார்.



இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—உன் பாலப் பிராயத்தை ஞாபகத்தில் வருவித்துப்பார். அதில் எவ்வளவாவது அர்ச். அகுஸ்தீனாருடைய இளம் பிராயத்துக்கு ஒத்திருக்கிறதில்லையோ? ஆசாபாசத்தின் மூர்க்கத்தினாலே நீ தேவ பய பத்தியெல்லாம் விட்டு ஆங்காரமுஞ் சிற்றின்ப அசுத்தமும் நிறைந்த உலக மாய்கையிலே அமிழ்ந்தவில்லையோ? அநேக நாள் இப்படி நீ சர்வேசுரனை விட்டு விலகி, அசங்கியமும் அவலட்சணமுமான துர் இச்சைகளுக்கு அடிமையாய் இருந்ததில்லையோவென்று பார். நீ இப்படியிருந்தது மெய்தானென்றால், சர்வேசுரன் தம்முடைய விசேஷ ஒத்தாசையினாலே உன்னை இந்தப் பாதாளத்தினின்று அற்புதமாய் மீட்டு இரட்சித்ததற்காக அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்வாயாக. ஆனால் உன்னைப் பாவ விஷந் தீண்டாதபடி சர்வேசுரன் தமது விசேஷ கிருபையால் காப்பாற்றியிருந்தால் அவருக்கு இரட்டிப்பாய் நன்றியறிந்ததோத்திரஞ் செய்.

மனப்பற்றுதல்.—உன் பாவங்களுக்காக மனநொந்து உத்தம மனஸ்தாபப்படக்கடவாய். மேலுஞ் சர்வேசுரன் உனக்குச் செய்த உபகாரத்துக்கு நன்றியறிந்ததோத்திரஞ் செய்து இனிமேல் பிரமாணிக்கமாய் நடப்பேனென்று சாதித்துச்சொல்.

பிரதிக்கினை.—பாவத்தினால் சர்வேசுரனை விட்டு விலகினவர்களுக்காக வேண்டிக்கொள்.

### 2-ம் பிரிவு

#### இவர் சர்வேசுரனை நோக்கித் திரும்புகிறார்

தியானம்.—இவர் தமது பாவ விலங்கைத் தறித்துத் தம்மிடத்திலுள்ள துர்ப்பழக்கங்களைச் செயிக்கும்படி

வெகு நாளாய்க் கடினமான ஞான போராட்டஞ் செய்ய வேண்டியிருந்தது. இவர் உண்டாக்கின தமது பாவ உச்சாரண புஸ்தகத்திலே எழுதிவைத்ததாவது: என்னிடத்தில் உண்டான துர் அப்பியாசம் எனக்கு மறு சுபாவம் போலிருந்தது. கற்புள்ளவனாய் விரதங் காத்து மட்டுத் திட்டமாயிருக்கிறது என்றால் கூடாத காரியம்போல் தோன்றினது. உள்ளபடி பார்த்தால் என்னிடத்தில் மனத்திடனும், தந்திரவேலையில் செயிக்கிற பழக்கமுமில்லாததினால் மேற்சொன்னதெல்லாம் அசாத்தியம்போல் தோன்றினதொழிய மற்றப்படியல்ல. குறித்த நேரத்திலே எழுந்திருக்கவேணுமென்று நினைத்து நித்திரை செய்யப்போய், நாழிகையானவுடனே எழுந்திருக்கச் சோம்பற்பட்டு மறுபடியுந் தூக்க மயக்கத்தினாலே படுத்துக்கொண்டவனைப்போல் நானும் இருந்தேனென்றார். கடைசியாய்த் துர்ப்பழக்க முற்றின இந்தப் பாவியைத் தேவப்பிரசாதமொன்றே செயித்து, பாவத்துக்குத் தபசு பண்ணுகிறவர்களுக்கு உத்தம மாதிரிகையாகவும், வேத சத்தியத்தைக் காக்கிற மகிமை நிறைந்த போர் வீரனாகவும், பதிதரை அடிக்குஞ் சம்மட்டியாகவும், திருச்சபையில் மகா பேர்போன சாஸ்திரிகளுக்குள் ஒருவராகவும் இவரை உருப்படி தெரியாமல் மாற்றிவிட்டது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—ஒரு துறவியானவன் தனக்கு ஆரம்பத்திலிருந்த ஞானவேகத்தை விட்டுச் சோர்ந்துபோய் கெட்ட வாடிக்கையில் அகப்பட்டுக்கொள்ளும்படியாய் நேரிடலாம். இந்த வாடிக்கை பலவகைப்படும். ஒருவன் சோம்பலாய்த் திரிவான்; கூச்சமின்றி ஒழுங்குகளைப் பலவாறு மீறுவான்; போக்குச் சாக்குச்சொல்லி ஞான முயற்சிகளை ஒன்றில் விட்டுவிடுவான்; ஒன்றில் அசட்டையாய் செய்வான். செபத்தில் பத்தி விநயமிராது; ஆபத்தான சகவாசத்துக்கும் மேரை மரியாதையற்ற பார்வைக்கும் இடங்கொடுப்பான்; அக்கிரமமாய்க் குற்றங் கோளாறு கூறுவான்; இல்லாவிட்டால் முறுமுறுத்துக்கொண்டிருப்பான். இந்தப் பழக்கங்கள் அர்ச். அகுஸ்தீனாரிடத்திலிருந்த கெட்ட வாடிக்கைகளைப்



போல அவ்வளவு அரோசிகமாயில்லாவிட்டாலும் இவைகளை வேர்ப்பிடுங்காய்ப் பிடுங்கி எறிவது அவ்வளவு வருத்தமில்லையென்று நினையாதே. இது அருமையென்று அர்ச். பெர்நர்து சொல்லி, இதற்குத் தாம் கண்ட அநுபோகமே திருஷ்டாந்தமென்கிறார். ஆகிலும் இதினாலே நமது மனத் தைரியத்தை ஒருபோதும் இழந்து போகக்கூடாது. தேவப்பிரசாதத்தால் எல்லாம் ஆகும். ஆனால் நீயும் பொறுத்தமனதோடும், தாராளமான குணத்தோடும் உடன்முயற்சி செய்யவேண்டியது. இது அசாத்தியமென்று சொன்னால் போக்கும் பொய்யுமாயிருக்கும். நீயே உன்னை ஒரு கோழையென்று காட்டுவாய். ஆகையால் என்ன முடிவு கட்டவேணுமென்று பார்த்துக்கொள்.

மனப்பற்றுதல்.—நீ செய்த குற்றங்களைக் கண்டு பிரலாபித்து பொறுத்தல் கேட்பாயாக.

பிரதிக்கினை.—தன்னை வெல்லவும், தன் நடக்கையைச் சீர்திருத்தவும் வேண்டிய தேவ வரப்பிரசாதத்தின் சர்வ வல்லபமுள்ள உதவி கிடையாதோவென்று ஒருபோதும் அவநம்பிக்கைப் படாதே.

## 3-ம் பிரிவு

### இவருடைய தேவ சிநேகம்.

தியானம்.—அர்ச். அகுஸ்தீனாருடைய படஞ் சுரூபஞ் செய்கிறவர்கள் அவரிடத்தில் உக்கிரமமாய் எரிந்த தேவ சிநேகத்துக்கு அடையாளமாக அக்கினிமயமான ஒரு இருதயத்தை அவர் கையில் ஏந்திக்கொண்டிருக்கிறதாகத் தோற்றுவிக்கிறது வழக்கம். இந்தத் தேவசிநேகம் அவருடைய அயராத ஞான வைராக்கியத்திலே முக்கியமாய் விளங்கினது. முப்பத்திரண்டு பிராயம் நடக்கிறபோது அர்ச். அம்புரோசியார் கையினால் ஞானஸ்நானம் பெற்றார். அது முதற்கொண்டு இன்னுந் தாம் உயிரோடிருந்த நாற்பத்துமூன்று வருஷத்துக்குள் ஒரு நாளாவது பிரசங்கம்பண்ணாமலும் ஞானப்புஸ்தகங்களை உண்டாக்காமலும் இருந்தவரல்ல. அநேக பாவிகளை நன்னெறியில்

திருப்பினர். தமது காலத்திலிருந்த பதிதர் பிரிவினைக்காரரில் கணக்கற்ற பேரை மனந்திருப்பிச் திருச்சபையிற் சேர்த்தார். பிறரீடேற்றத்துக்காக அவர் செய்த வேலைப்பாடுகள் இந்நாள்மட்டும் நிலைத்திருக்கின்றன. அவர் இறந்து ஆயிரத்துஐந்நூறு வருஷமானபோதிலும், தரும நடக்கையையும் வேத சாஸ்திரத்தையும்பற்றி அவர் எழுதிய எண்ணிறந்த புஸ்தகங்களினாலும் அவர் ஏற்படுத்தின துறவற சபைகளினாலும் அவர் பேர் எங்கும் பிரபல்லியமாயிருக்கிறது. விசேஷமாய் ஆச்சரியத்துக்குரிய பிறசிநேகமும் பத்தி வைராக்கியமுமுள்ள அகுஸ்தீனியென்னும் பேருடைய கன்னியாஸ்திரிகள் அனேகானேக பட்டணங்களிலுள்ள நோவாளி மடங்களில் வியாதிஸ்தரை வெகு சாக்கிரதையாய்ப் பராமரித்து வருகிறார்கள்.

சம்பாஷணை —அர்ச். அகுஸ்தீனோடு சம்பாஷணை செய். அவருக்குக் கிடைத்த மேலான பாக்கியத்தைப் பற்றி அவரைக் கொண்டாடி அவரை நோக்கி வேண்டிக் கொள். மேலுஞ் சர்வேசுரன்பேரிலும் புறத்தியார்பேரிலும் மிகுந்த சிநேகமும் உன் அர்ச்சிப்பின்மேல் மெய்யான ஆவலும் உனக்கு அடைந்தருளும்படி அவரை மன்றாடு.

---

## 29-ம் தேதி

### அர்ச். இராயப்பர் கர்த்தர்மட்டில் செய்த விசுவாசப் பிரமாணமும் அவர் அடைந்த தலைமைப்பட்டமும்.

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதர் அர்ச். இராயப்பரைப் பார்த்து நீ கல்லாயிருக்கிறாய்; இந்தக் கல்லின் மேல் என் திருச்சபையைக் கட்டுவேனென்று சொல்லுகிறதைக் கேட்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

தியானச் செபம்.—இயேசுநாதர் தமது திருச்சபையின்பேரில் உனக்கு உருக்கமான சிநேகத்தைக் கட்டளையிடவேணுமென்று மன்றாடு.



### முதல் பிரிவு

#### இயேசுநாதருடைய தெய்வீகம் அர்ச். இராயப்பருக்கு வெளிப்படுத்தப்படுகிறது.

தியானம்.—இயேசுநாதர் பெத்சாயிதாவினின்று புறப்பட்டுச் சனங்களை விட்டு விலகிச் செபம்பண்ணத் துவக்கினார். பின்பு பிலிப்புசெசாரையென்னும் பட்டணத்தைச் சுற்றியிருந்த கிராமங்களுக்குத் தமது சீஷர்களோடு எழுந்தருளிப் போனார். போகையில் தமது அப்போஸ்தலர்களோடு தாம் தனித்திருக்கும்போது அவர்களை நோக்கி: மனுமகனை மனிதர் யாரென்று சொல்லுகிறார்களென்று கேட்டார். அதற்கு அவர்கள் மாறுத்தரமாக: சிலர் ஸ்நாபக அருளப்பரென்றும், வேறு சிலர் எலியாசென்றும், இன்னஞ் சிலர் எரேமியாசென்றும், மற்றும் சிலர் பூர்வீக தீர்க்கதரிசிகளில் ஒருவர் உயிரோடெழுந்து வந்திருக்கிறாரென்றுஞ் சொல்லுகிறார்களென்றார்கள். அதற்கு இயேசுநாதர் அவர்களை நோக்கி: நீங்கள் என்னை யாரென்று சொல்லுகிறீர்களென்று கேட்டார். அதற்குச் சீமோன் இராயப்பர் மறுமொழியாக: சுயஞ்சீவியரான சர்வேசுரனுடைய குமாரனாகிய கிறீஸ்துநாதர் நீர்தாமே என்றார். இயேசுநாதர் அவரைப் பார்த்துத் திருவுளம்பற்றினதாவது: அருளப்பன் குமாரனான சீமோனே, நீ பாக்கியவானாயிருக்கிறாய்; மாமிசமும் இரத்தமுமல்ல, பரமண்டலங்களிலிருக்கிற என் பிதாவானவர்தாமே இதை உனக்கு வெளிப்படுத்தினாரென்றார். (மத். 16; மாற். 8; லூக். 9.)

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நமது படிப்பினைக்காக நாம் இதில் முந்தமுந்த நன்றாய்க் கவனிக்கவேண்டியதேதென்றால்: இயேசுநாதர் பன்னிரண்டு அப்போஸ்தலர்களைத் தெரிந்துகொள்வதற்கு முந்திச் செபஞ்செய்ததுபோல, அவர்களுக்குத் தலைமையாக ஒருவரைத் தெரிந்துகொள்வதற்கு முந்தியுஞ் செபஞ் செய்கிறார். ஆகையால் நாம் எது காரியத்தையுந் துவக்குவதற்கு முந்திச் செபஞ் செய்யக்கடவோம். அதின் பின்பு மனிதர்

தம்மை யாரென்று சொல்லுகிறார்களென்று கேட்கிறார். வீணான முகாந்தரத்தைப்பற்றி அவர் இப்படிக் கேட்கவில்லை. தம்முடைய அப்போஸ்தலர்கள் தமது தெய்வீகத்தை அறிந்துகொள்ளும்படியாகவும், விசேஷமாய் இராயப்பர் இதைப் பிரசித்தமாய் வெளிப்படுத்தவும் இப்படிக் கேட்டாரல்லாதே மற்றப்படியல்ல. நீயும் உன்பேரில் மற்றவர்கள் நினைக்கிறதும், பேசுகிறதும் ஏதென்றறிய ஆசைப்படுகிறாயே. ஆனால் இதை அறிந்து நல்லவனாவதற்கோ, மனதில் ஆங்காரத்துக்கு இடங் கொடுக்கிறதற்கோ, எதினால் இந்த ஆசைப்படுகிறாயென்று பார்.

மனப்பற்றுதல்.—திவ்விய இயேசுவே, நான் என் குற்றங்களைத் திருத்திக்கொள்ளும்படி என்னை அதிகமதிகமாய் அறிய அனுக்கிரகஞ் செய்தருளும்.

பிரதிக்கினை.—எந்த காரியத்திலும் நமது நடக்கை தேவ சித்தத்துக்கு இசைந்திருக்கும்படியாக, மனிதர் நமதுமேல் என்ன நினைக்கிறார்களோவென்று கவலைப்படாமல், சர்வேசுரன் நமதுபேரில் என்ன நினைக்கிறாரென்று அடிக்கடி விசாரிக்கக்கடவோம்.

## 2-ம் பிரிவு

### அர்ச். இராயப்பருக்குத் திருச்சபையை ஆளுந் தலைமைப் பட்டங் கொடுக்கப்படுகிறது.

தியானம்.—மேலான ஞானத்தெளிவடைந்த அர்ச். இராயப்பர் இயேசுநாதசுவாமி நித்திய பிதாவினாலே செனிப்பிக்கப்பட்டு சுயஞ் சீவிய சர்வேசுரனுடைய குமாரனாயிருக்கிறாரென்று அவருடைய தெய்வீகத்தை உச்சிதமான விதமாய்ப் பிரசித்தப்படுத்தி விசுவாச உச்சாரணம் பண்ணினார். இதைப்பற்றி உடனே அவருக்கு உன்னதமான சம்பாவனை கொடுக்கப்பட்டது. அதாவது இயேசுநாதர் அன்பு நிறைந்த கடாட்சத்தோடே அவரை நோக்கி: நானும் உனக்குச் சொல்லுகிறதேதென்றால் நீ இராயி அதாவது கல்லாயிருக்கிறாய். இந்தக் கல்லின்மேல் எனது திருச்சபையைக் கட்டுவேன், நரகத்தின் வாசல்கள் அதை



மேற்கொள்ளமாட்டாதென்று சொன்னார். (மத். 16.)
இந்த வசனங்களைக் கொண்டு திருச்சபையானது உலக
முன்னவரையிலும் நீளித்திருக்குமென்றும், துஷ்டர்களால்
அது எவ்வளவு கொடுமையாய் உபாதிக்கப்பட்டாலும் எப்
போதுஞ் செயங்கொண்டு எழும்புமென்றுந் தெளிவாய்
விளங்குகிறது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—
இதோ திருச்சபைக்கும் அதின் பிரத்தியட்ச தலைவருக்கும்
யுத்தமுஞ் செயமும் வருமென்று இயேசுநாதசுவாமி ஏற்
கனவே வெளிப்படுத்தியிருக்கிறார். இவ்விரண்டு தீர்க்கதரி
சனமும் மெய்யென்று காட்டுவதற்குக் கடந்துபோன இந்த
ஆயிரத்து தொள்ளாயிரம் வருஷங்களுஞ் சாட்சியாக நிற்
கின்றன. ஆகையால் வேத விரோதிகள் திருச்சபைக்கும்
அதின் பிரத்தியட்ச தலைவருக்கும் மற்ற மேற்றிராணி
மாருக்குங் குருக்களுக்குங் குரோதத்தினாலே என்னென்ன
தந்திர மோசம் பண்ணினாலும் நமதுள்ளத்தில் கலக்கமும்
ஆச்சரியமும் எள்ளளவும் வரப்படாது. சென்ற காலங்
களில் வந்த யுத்தங்களிலெல்லாந் திருச்சபை செயங்கொண்
டதுபோல இக்காலத்திலும் அதற்கு விரோதமாய் எழும்பி
யிருக்கிற கொடிய போராட்டத்திலும் அது வென்று
மேன்மை அடையுமென்பதற்கு அற்பமாகிலுஞ் சந்தேக
மில்லை. திருச்சபைக்கு உகந்த பிள்ளைகளாய் அதின்
விசேஷ உரிமை பெற்று அதின் படையின் முன்னணியில்
நிற்கிற நாம் முக்கியமாய்த் திருச்சபைக்கு ஆறுதலா
யிருந்து, இதற்கு வந்த நஷ்டத்தைப் பரிகரிக்கும்படி நமது
பத்தி சுறுசுறுப்பையுஞ் செபத்தையும் அந்தந்த நற்கிரியை
களையும் ஒன்றுக்கு இரண்டு மடங்காகச்செய்து ஒப்புக்
கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம். நாம் இவ்விஷயத்
தில் எப்படி நடந்து வருகிறோம். நமது தாயாராகிய திருச்
சபைக்கு வந்திருக்கிற பொல்லாப்பைக்கண்டு, ஐயோ
வென்று மனதில் பெருமூச்செறிந்து அதை உபாதிக்கிற
பாதகரைக் கண்டமட்டுந் திட்டுகிறது போதுமென்று
அனேகரைப்போல நாமும் எண்ணி, வேறொன்றுஞ் செய்
யாதிருக்கிறதில்லையோ?

மனப்பற்றுதல்.—நம்மைச் சர்வேசுரனுக்குப் பரிகாரப் பலியாக ஒப்புக்கொடுக்கக்கடவோம். மேலுந் திருச்சபையோடு ஒன்றித்து அதின் சத்துராதிகளைத் தாழ்த்த வேணுமென்று மன்றாடுவோமாக.

பிரதிக்கினை.—நாம் துறவிகளாயிருக்கிறதினிமித்தம் வேத சத்துராதிகளுடைய பகைக்கும் உபாதனைக்கும் எல்லாருக்கு மேலாக ஏதுவானவர்களாயிருக்கிறதினால் சந்தோஷப்படக்கடவோம்.

## 3-ம் பிரிவு

### திவ்விய கர்த்தர் அர்ச். இராயப்பருக்கு மோக்ஷ இராச்சியத்தின் திறவுகோல்களைக் கொடுப்போமென்று வாக்குத்தத்தஞ் செய்கிறார்

தியானம்.—இயேசுநாதசுவாமி யுத்த சபையின் குருத்துவ முறையிலும் ஞான அதிகாரத்திலும் அர்ச். இராயப்பருக்குத் தலைமைப்பட்டங் கொடுத்ததுமல்லாமல் ஓட்டோலக சபைவரையிலும் அவருடைய அதிகாரஞ் செல்லும்படி சித்தமானார். அதெப்படியென்றால் நீ கல்லாயிருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் எனது திருச்சபையைக் கட்டுவேனென்று இராயப்பருக்குச் சொன்னபின் திரும்பவும் அவரை நோக்கி: பரலோக இராச்சியத்தின் திறவுகோல்களை உனக்குக் கொடுப்பேன்; நீ பூலோகத்தில் கட்டுவதெல்லாம் பரலோகத்திலுங் கட்டப்பட்டிருக்கும்; நீ பூலோகத்தில் கட்டவிழ்ப்பதெல்லாம் பரலோகத்திலுங் கட்டவிழ்க்கப்பட்டிருக்குமென்று திருவுளம்பற்றினார். (மத். 16.)

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இயேசுநாதர் இராயப்பருக்கும் அவரிடமாய் அவரைப் பின்தொடர்ந்துவரும் பாப்புகளுக்குங் கொடுத்த ஆச்சரியமான அதிகாரமானது பூலோகத்திலுள்ள சகல இராசாக்களுக்கும் மற்றச் சகல அப்போஸ்தலர்களுக்கும் மேலாக அவரை உயர்த்தினது. அதெப்படியென்றால், இயேசுநாதர் அப்போஸ்தலர்கள் எல்லாரையும் நோக்கி: நீங்கள் இஸ்பிரீத்



துசாந்துவைப் பெற்றுக்கொள்ளுங்கள். எவரெவர் பாவங்களைப் பொறுப்பீர்களோ, அவர்களுக்கு அவைகள் பொறுக்கப்படுமென்று சொன்னது சரியே. ஆனால் அர்ச். இராயப்பர் ஒருவரை மாத்திரம் நோக்கி: மோக்ஷ இராச்சியத்தின் திறவுகோல்களை உனக்குக் கொடுப்பேனென்றார். அந்த திறவுகோல்கள் சர்வ அதிகாரத்துக்கு அடையாளமாயிருக்கின்றன. ஆகையால் இராயப்பர் அப்போஸ்தலர்களுக்குத் தலைவரானதைக் கண்டு அக்களிப்போமாக. இச்சமயத்தில் நமது அதிஷ்டத்தையும் நினைத்து அதிகமாய் அகமகிழக்கடவோம். ஏனெனில் அத்திறவுகோல்கள் அவருக்காக அல்ல, நமக்காகவே, நமக்கு மோக்ஷவாசலைத் திறக்கும்படியாகவே அவர் கையில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

சம்பாஷணை.—பிரதான அப்போஸ்தலராகிய அர்ச். இராயப்பரோடு சம்பாஷணை செய்.

---

## 30-ம் தேதி

### இயேசுநாதர் தமது பாடுகளை முன்னறிவித்து நம்மை நாம் பரித்தியாகம் பண்ணவேணுமென்று கற்பிக்கிறார்

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதர் தமது சிலுவை
யைச் சுமந்து நமக்குமுன் நடந்துபோகிறதாக ரூபிகரித்துக்
கொள்வோமாக.

தியானச் செபம்—நம்மை நாம் பரித்தியாகம் பண்ண
வுஞ் சிலுவையைச் சிநேகிக்கவும் வரங் கேட்போமாக.

## முதல் பிரிவு

### இயேசுநாதர் தாம் பாடுபட்டு மரிக்கப்போகிறதை அப்போஸ்தலர்களுக்கு அறிவிக்கிறார்

தியானம்.—அப்போஸ்தலர்கள் தங்கள் பரமகுருவாகிய இயேசுநாதசுவாமியுடைய தெய்வீகத்தின் பேரில் யாதொரு சந்தேகமும் இல்லாதவர்களாயிருந்தா

லும், இனிமேல் அவர் பூமியிலே இராசாவாகி இராச்சியபாரம் பண்ணுவாரென்று உறுதியாய் நம்பியிருந்தார்கள். இந்த நினைவானது அவர்களுடைய வீண் மகிமை சலாக்கியம் பெருகுவதற்கு ஏதுவாயிருந்தது. இந்த மாய்கையான எண்ணம் அவர்களை விட்டு முழுதும் அற்றுப்போகும்படி இயேசுநாதர் அவர்களைப் பார்த்து ஒன்றும் மறைக்காமல் வெட்டவெளியாய்: நாம் எருசலேம் பட்டணத்துக்குப் போய் அங்கே வெகு வேதனை அனுபவித்து, மூப்பராலும் பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலுந் தீர்வையிடப்பட்டு, கொலையுண்டு, மரித்த மூன்றாநாள் உயிர்த்தெழுந்திருப்போமென்று தெளிவித்தார். அப்போது அர்ச். இராயப்பர் தமது திவ்விய குருவின் மகிமைக்கு இப்பேர்க்கொத்த பொல்லாங்கு வரக்கூடாதென்று விரும்பி, ஆண்டவரே, வேண்டாம், உமக்கு இப்படிச் சம்பவியாதிருக்கக்கடவது என்றார். சிலுவையைக்கொண்டு மனுக்குலத்தை இரட்சிக்கும்படி மனுஷாவதாரஞ் செய்த தேவகுமாரனுடைய கருத்துக்கு இராயப்பர் சொன்ன வார்த்தைகள் நேர் விரோதமாயிருந்தன. ஆகையால் அவர் இராயப்பரைக் கண்டித்து: சாத்தானே, என்னை விட்டு அப்புறம் போ, எனக்கு இடறலாயிருக்கிறாய். நீ சர்வேசுரனுக்கடுத்த காரியங்களையல்ல, மனிதருக்கடுத்த காரியங்களையே உணருகிறாயென்றார். (மத். 16, மாற். 8.)

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இப்போது கடைசியாய்ச் சொன்ன கண்டிப்பான வார்த்தைகள் உனக்குஞ் சற்றாவது செல்லாதோ? அர்ச்சியசிஷ்டதனமாகிய சாஸ்திரத்தைப் படிக்கவும், ஞானப் புஸ்தகங்களை வாசிக்கவும், தாழ்ச்சி, ஒறுத்தல், பத்தி இவை முதலிய புண்ணியங்களில் பழகவும், நீ படும் பிரயாசத்தைப்பார்க்க இலௌகிக கல்வி சாஸ்திரங்களைக் கற்றறியவும், செய்திப் பத்திரிகைகளையும், கதைப் புஸ்தகங்களையும் வாசிக்கவும், உன் மகிமை பெருமையைத் தேடவும், சரீர சுகத்தைப் பேணிப்பலப்படுத்தவும் நீ அதிக பிரயாசையும் சுறுக்குங் காண்பிக்கிறாயல்லோ? இதைப்பற்றி உன்னைச் சோதித்து, யாதொன்றையும் மறையாமல் உள்ளதை உள்ளபடி பார்.



மனப்பற்றுதல்.—இதெல்லாங் கண்டு ஆச்சரியப்பட்டு, வெட்கி, மனஸ்தாபப்படக்கடவாய்.

பிரதிக்கினை.—மெய்யாகவே நீ புண்ணியத்தில் விருத்தி அடையும்படியாகப் புதிதான சில உபாயங்களைத் தேடு.

## 2-ம் பிரிவு

### இயேசுநாதர் நம்மை முழுவதும் பரித்தியாகம் பண்ணுதல் நமக்குக் கடமையென்கிறார்

தியானம்.—இரட்சகருடைய திரு மரணத்தினாலும் உத்தானத்தினாலும் நித்திய சாவினின்று மீட்கப்பட்ட மனுஷன், தம்மை முழுதும் பரித்தியாகம் பண்ணின சுவாமியுடைய மாதிரிகையைப் பார்த்து நடந்தால்தான் சதாகாலமும் மகிமையோடே வாழ்ந்திருப்பான். இந்தச் சத்தியத்தை அப்போஸ்தலர்களுமல்லாமல் சமஸ்த சனங்களும் உணரவேணுமென்று இயேசுநாதசுவாமி சித்தமானார். ஆகையால் சனக்கூட்டத்தை தமதருகில் வரவழைத்து, யாராவது நித்திய சீவியத்துக்குச் செல்லும் பாதையில் என்னைப் பின் சென்றுவர விரும்பினால் தன்னை முழுதும் பரித்தியாகம் பண்ணக்கடவான் என்றார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—ஒரு இராசாவுக்கு ஒப்பாய் இயேசுநாதசுவாமி இங்கே நமக்குக் கண்டிப்பாய்க் கற்பிக்கிற பரித்தியாகத்தை நமது ஆத்தும ஈடேற்றத்துக்கு விக்கினமான சகல விஷயத்திலும் அனுசரிக்கவேண்டியது. நமது உயிர்ச் சேதத்துக்கு முதலாய்ப் பயப்படாமல் இதை அனுசரிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். ஏனெனில் அவரே சொன்னதாவது: என்னைச் சேவியாமல் தன் உயிரைக் காக்கத் தேடுகிறவன் அதை இழக்கவே இழப்பான். என்னையுஞ் சுவிசேஷத்தையும்பற்றி அதை இழக்கத் துணிகிறவன் அதைக் காக்கவே காப்பானென்றார். இதற்கு அர்த்தமென்னவென்றால் மனுஷனுடைய உண்மையான வாழ்வு நிலையற்ற இந்த உலக சீவியத்திலல்ல, ஆனால் நித்திய பாக்கியத்தோடு

அல்லது நித்திய நிர்ப்பாக்கியத்தோடுகூடிய மறுலோக சீவியத்திலிருக்கிறது. அப்படியிருக்க மனுஷன் தன் கடமை ஏதென்று பாராமல் இவ்வுலக வாழ்வைக் காப்பாற்றவும் இதில் நீளித்திருக்கவும் ஆசைப்படுவானாகில் அவன் நித்திய பாக்கிய நிறைந்த மறு சீவியத்தை இழந்துபோவான். இப்படியில்லாமல் பாவத்தைக் கட்டிக்கொள்ளுகிறதைப்பார்க்க எல்லாம் நாசமாய்ப்போகட்டுமென்றிருக்கிறவனுக்குச் சதா கால பாக்கியம் நிச்சயமாகிறதுமன்றி அவன் போக்கடித்த யாவையுந் திரும்ப அடைவான். மற்றவனுக்கோ எல்லாம் பாழாகும், போனது வரவே வராது, ஒரு கைம்மாறுமில்லை. இதைப்பற்றியல்லோ மனுஷன் உலகமெல்லாந் தன் கைவசப்படுத்திக்கொண்டாலுந் தன் ஆத்துமத்தை சேதப்படுத்துவானாகில் அவனுக்கு இலாபமென்ன? தன் ஆத்துமத்துக்கு ஈடாக என்னத்தைக் கொடுக்கப்போகிறானென்று இயேசுநாதர் திருவுளம்பற்றினார் (மாற். 8).

**மனப்பற்றுதல்.**—நாம் இந்த நியாயத்தைக் கண்டுபிடிக்கவும் நமக்கு நித்திய பாக்கியம் நிச்சயமாகும்படி பிரபஞ்ச நன்மைகளைத் துறந்துவிடவுஞ் சர்வேசுரன் நமக்கு நல்ல நினைவுந் தைரியமுங் கொடுத்ததற்காக அவருக்குத் தோத்திரம் பண்ணக்கடவோம்.

**பிரதிக்கினை.**—தனக்கும் உலகத்துக்கும் நாளுக்கு நாள் அதிகமதிகமாய்ச் செத்தவனாகிறது.

## 3-ம் பிரிவு

### நாம் நமது சிலுவையைச் சுமந்துகொண்டு தம்மைப் பின்சென்று வரும்படி இயேசுநாதசுவாமி கற்பிக்கிறார்

**தியானம்.**—யாராவது என்னைப் பின்சென்றுவரவேணுமானால் தன்னைப் பரித்தியாகஞ் செய்யவேணுமென்று ஒருபோதும் மறக்கக்கூடாத இந்த வார்த்தைகளைத் திவ்விய கர்த்தர் உரைத்தபின், அவன் தன் சிலுவையை அநுதினமும் சுமந்து என் பிறகே வரவேணுமென்றுஞ் சேர்த்துச் சொன்னார் (லூக். 9).



**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—இயேசு
நாதசுவாமி தம்மைப் பின் செல்ல விரும்புகிறவன் அநு
தினமுந் தன் சிலுவையைச் சுமந்துகொண்டு தமது பிறகே
வரக்கடவானென்று சொன்ன இரண்டாம் வாக்கியத்தில்
அடங்கியிருக்கிற கடமை நமது மனச்சார்புக்குப் பொருந்
தாததாயிருந்தாலும் முந்தின வாக்கியத்தில் அடங்கிய
கடமையைப்போல அவ்வளவு வருத்தமானதல்ல.
ஏனெனில், அவர் சொல்லியிருப்பதை நன்றாய்க் கவனித்துப்
பார். அவர் தமது சிலுவையை நாம் சுமக்கவேணுமென்று
கற்பியாமல் அவருடையதைப் பார்க்க மகா இலேசான
நமது சிலுவையை நாம் சுமக்கவேணுமென்றார். இதன்றியே
சரியாய்ப் பேசவேணுமானால் நமது சிலுவையை நமது
தோளில் சுமத்துகிறது இந்த உலக சீவியமேயன்றி அவ
ரல்ல. ஏனென்றால் பாவத்தால் கெட்டுப்போன இந்த
உலகத்தில் நாம் உயிர்வாழுமட்டும் சிலுவையில்லாமலிருக்கக்
கூடாது. ஆகையால் நாம் அவரோடேகூட தேவ நீதிக்குப்
பரிகாரஞ் செய்யவும், அவருடைய சாயல் நம்மிடத்தில்
அதிகமதிகமாய் விளங்கவும், மகிமைப் பிரதாபத்தில் அவ
ருக்கு அதிக சமீபமாயிருக்கவும், அவர் பிறகே நமது சிலு
வையைச் சுமந்துகொண்டுபோவோமாக. இவ்விதஞ் செய்
தால் அது நமக்கு இலேசாய்க் காணப்படுகிறதுமல்லாமல்
கொஞ்சங் கொஞ்சமாய் அதின்பேரில் நமக்குப் பற்றுதல்
உண்டாகி, கடைசியாய் அது நமக்கு ஆனந்தமுமாயிருக்
கும்.

**சம்பாஷணை.**—சிலுவையின்மேல் நேசப் பற்றுதலா
யிருந்த லீமா பட்டணத்து அர்ச். ரோசம்மாளோடு சம்
பாஷணை செய். இவள் ஞானஸ்நானத்தில் அடைந்த பரி
சுத்தத்தைப் பழுதின்றிக் காப்பாற்றியிருந்தாலும் தபசு
என்னப்பட்டதெல்லாஞ் சரிவர அனுசரிக்க நானாவித சூட்
சங்களைத் தேடுவாள். இன்றையத்தினந் திருச்சபை இவ
ளுடைய திருநாளைக் கொண்டாடுகிறது.

# 31-ம் தேதி

## பரித்தியாகம் அல்லது தாழ்ச்சியின் மூன்று படிகள்

ஆயத்தச் சிந்தனை.—சிலுவையடியிலே பரிசுத்த கன்னிமரியம்மாள் நிற்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

தியானச் செபம்.—இயேசுநாதரைப்பற்றி அநுபவிக்கும் வேதனை அவமானத்தின்பேரில் உனக்கு ஆசை உண்டாகவேணுமென்று கேள்.

### முதல் பிரிவு

#### பரித்தியாகம் அல்லது தாழ்ச்சியின் முதற்படி

தியானம்.—நம்மையும் மற்ற சகல பொருள்களையும் பரித்தியாகம் பண்ணும்படி இயேசுநாதசுவாமி அழுத்தி அழுத்திச் சொன்னதைக் கேட்டோமல்லவோ! இந்தப் பரித்தியாகத்திலே பல படிகளுண்டு. அவைகளை விசேஷமாய் மூன்றாக வகுத்துக் காட்டலாம். அவைகளில் முந்தினது ஏதென்றால் ஓரே ஒரு சாவான பாவத்தைக் கட்டிக்கொள்ளுகிறதைப் பார்க்க ஆஸ்திபாஸ்தி மகிமை பெருமை சௌக்கியம் இவைகளையும் உயிரையுமுதலாய் இழந்துபோகவும், மற்ற எவ்வித வருத்தத்தையும் அநுபவிக்கவும் எப்போதுந் தயாராயிருக்கிறதுதான். தன்னை ஏய்த்து மோசம் போக்காமல் உண்மையான மனதோடு சர்வேசுரனைச் சிநேகிக்கவும் நித்திய சீவியமாகிய பரலோக வழி தவறாமல் நிலைநிற்கவும் விரும்புகிற எந்தக் கிறீஸ்துவனும் இந்த முதற்படியிலிருப்பது அகத்தியமாம்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—துறவற அந்தஸ்திலிருக்கிறவர்களெல்லோரும் இந்த முதற்படியிலேறி இதில் நிலைநிற்கிறார்களென்று எண்ணவேண்டியிருப்பதால் சர்வேசுரன் நம்மை இப்பேர்ப்பட்ட அந்தஸ்துக்கு அழைத்ததற்காக அவருக்கு நன்றியறிந்திருப்போமாக. ஆகிலும் இதிலே நாம் மோசம்போகலாம். தேவப்பிரசாதத்தின் உதவியின்றி முற்றும் முடிய இந்தப் படியில்



நிலைத்திருக்கிறது நம்மாலே ஏலாத காரியம். சில சமயங்களில் வழக்கமான பிரசாதமும் போதாமல் விசேஷ பிரசாதத்தின் உதவி நமக்கு வேண்டியிருக்கிறது. ஆகையால் எப்போதுந் தாழ்ச்சியுள்ளவர்களாய் நம்மை ஒருபோதும் நம்பாமல் தந்திர வேளையில் செபத்தினால் சர்வேசுரனுடைய உதவியைத் தேடக்கடவோம். ஆகிலும் இந்த முதற்படியே தனக்குப் போதுமென்று எண்ணி இதிலேயே ஒன்றி நிற்கப் பார்க்கிறவன் பேருக்குமாத்திரஞ் சந்நியாசியென்று சொல்லவேண்டியது. அவன் ஈடேறுகிறதும் அரிது என்கவேணும்.

மனப்பற்றுதல்.—விசுவாசம், தாழ்ச்சி, தன்னை நம்பாமை முதலிய முயற்சிகளைச் செய்கிறதுமல்லாமல் அடிக்கடி தேவ வரப்பிரசாதத்தின் உதவியைக் கேட்பாயாக.

பிரதிக்கினை.—எச்சரிக்கையோடு பாவ சமயங்களை விட்டு விலகு.

### 2-ம் பிரிவு

#### பரித்தியாகம் அல்லது தாழ்ச்சியின் இரண்டாம் படி

தியானம்.—மனமறிந்து ஒரு அற்பப் பாவத்தைக் கட்டிக்கொள்ளுகிறதைப் பார்க்கச் சகலத்தையும் இழந்துபோகவும் எவ்வித துன்ப துரிதங்களையும் அநுபவிக்கவும் எப்போதுந் தயாராயிருக்கிறது தாழ்ச்சியின் இரண்டாம் படியாகும். மெய்யான துறவியானவன் இந்த இரண்டாம் படியில் ஏறவும், தான் இதில் மெய்யாகவே நிற்கிறேனென்று தன் மனச்சாட்சிக்கு வஞ்சகமில்லாமல் சொல்லக் கூடுமாயிருக்கவும் பிரயாசப்படக்கடவான். இல்லாதே போனால் அநேக தின்மைகளுக்கு ஏதுவாவான். முதலாவது, அவன் முதற்படியில் நிற்கிறதே அருமையாகும்; அதில் நிலைக்கமாட்டானென்று சொல்லவேண்டியது. ஏனெனில் அற்பக் குற்றங்களை அசட்டை பண்ணுகிறவன் சன்னஞ் சன்னமாய்ப் பெரும் பாவங்களில் விழுவானென்று இஸ்பிரீத்து சாந்துவானவர் திருவுளம்பற்றியிருக்கிறார்.

அனுபோகமும் இது மெய்யென்று வேண்டிய மட்டுங்
காட்டுகிறது. 2-வது அற்பப் பாவமானது சாங்கோ
பாங்கத்துக்கு மகா விக்கினமாயிருக்கிறதினாலே மேற்படி
துறவியானவன் தான் உத்தமதனத்தை நாடி நடக்கிறே
னென்று சொல்வதற்கு ஒருபோதும் வகையிராது. 3-வது
சர்வேசுரன் இவன்பேரில் விசேஷ கருத்து வைத்து இவனை
அழைக்கும்போது இவன் மீறிக் கேளாமல் போகிறதினா
லே மனச்சமாதானத்தை ஒருபோதுஞ் சுகித்து அனுப
விக்கமாட்டான். சர்வேசுரனுக்கு அடங்காமல் சமாதானத்
தை அடைந்ததாரென்று யோபென்பவர் கேட்கிறார்.
4-வது ஆத்தும இரட்சணியத்துக்காகப் பெலத்த காரியங்
களைச் செய்துமுடிக்க இவன் தகுதியுள்ளவனாய் இருக்க
மாட்டான்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—
இந்த இரண்டாம் படியிலேறி இதில் நிலைத்திருக்கிறது நம்
மால் கூடுமான காரியந்தான். அனேகானேக தேவ ஊழி
யர்களுடைய நடபடிக்கைகளைக் கண்ணுற்றுப்பார்த்தால்
இதற்கு வேண்டிய திருஷ்டாந்தம் அகப்படும். மகாத்து
மாக்களான திப்போங்தே ஞானப்பிரகாசியாரும், கர்தினால்
பெல்லார்மீனும் ஒரு அற்பப் பாவத்தையாகிலும் மனம்
பொருந்திக் கட்டிக்கொள்வதில்லையென்று வார்த்தைப் பாடு
கொடுத்துச் சாகுந்தனையும் அதைச் சரியாய் நிறைவேற்றி
னார்களென்று அவர்களுடைய சரித்திரத்தில் சொல்லியிருக்
கிறது. அவர்கள் தேவ உதவியைக்கொண்டு நடந்தது
போல நாமும் நடக்கக்கூடும். ஆனால் நாம் பாரச் சிந்தனை
வைத்து இப்படி நடக்க நினைத்தோமோ? இதின்படி
நடப்பதற்கு நாம் எடுத்த உபாயமென்ன? என்ன உறுதி
நிலைமையோடு இதைக் கையாடினோம்?

மனப்பற்றுதல்.—அற்பப் பாவத்தின்பேரிலும் நம
துள்ளத்தில் அருவருப்பு அதிகரிக்கும்படி சர்வேசுரனைப்
பார்த்து மன்றாடுவோமாக.

பிரதிக்கினை—தனியாத்தும சோதனையைக்கொண்டு
கொஞ்சங் கொஞ்சமாய் நம்முடைய பாவக்காரணங்களை
அழித்து ஒழிக்கக்கடவோம்.



## 3-ம் பிரிவு

### பரித்தியாகம் அல்லது தாழ்ச்சியின் மூன்றும்படி

தியானம்.—இந்த மூன்றும் படியில் ஏறுகிறவர்களி
டத்தில் வழக்கமாய் இருக்கவேண்டிய குணமாவது: செல்
வத்தில் வாழுகிறதைவிட ஏழையாய்ச் சீவித்த இயேசுநாத
ரோடு தாங்களும் ஏழைகளாயிருக்க விரும்புவார்கள்;
மகிமை பெருமையோடு வாழ்ந்திருப்பதைவிட தாழ்மை
யும் நிந்தையும்பட்ட இயேசுநாதசுவாமியைப்போலத்
தாங்களும் எல்லாராலும் மறக்கவும் இகழவும்பட ஆசைப்
படுவார்கள். இப்பிரபஞ்ச வாழ்வின் இன்பசுகங்களை
அனுபவிக்கிறதைவிட சிலுவையில் அறையுண்ட இயேசு
நாதரோடு சிலுவையைச் சுமக்கப் பிரியப்படுவார்கள். திவ்
விய மாதிரிகையான இயேசுநாதருக்கு அதியோக்கிய சாய
லாகி, அவர்பேரில் தங்களுக்குள்ள நேசத்தை மென்மே
லுங் காட்டும்படியாக இவ்விதஞ் செய்துவருவார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—தேவ
இஷ்டப்பிரசாதமானது நம்மைத் தாங்கி நடத்தும்போது
தாழ்ச்சியின் மூன்றும்படியில் வந்துசேருகிறது நமது சத்
துவத்துக்கு மேற்பட்டதென்று சொல்லப்படாது.
இதோ அப்போஸ்தலர்களும் எண்ணிறந்த வேதசாட்சிக
ளும் இதற்கு அத்தாட்சிகளாய் இருக்கிறார்கள். இவர்கள்
இயேசுநாதரைப்பற்றித் தங்கள் ஆஸ்திபாஸ்தி சகலத்தை
யும் இழந்து, நிந்தை அவமானமடைந்து சாவுக்குத் தீர்வை
யிடப்பட்டபோதும் அகமகிழ்ந்திருந்தார்கள். இன்னம்
அத்தாட்சி வேணுமானால் இதோ செல்வத்தில் பிறந்து சுக
மாய் வளர்ந்த கணக்கில்லாத பேர்கள் இயேசுநாதசுவாமி
பேரில் வைத்த நேசத்தால் அவைகளெல்லாவற்றையும்
வெறுத்துவிட்டு மடங்களில் அடங்கித் தரித்திரமுந் தவ
மும் அநுசரித்துவருகிறதைப் பார். இவைகளெல்லாம்
நமக்கு ஒரு தூண்டுகோல்போல் இருக்கின்றன. மேலுந்
தாழ்ச்சியின் இந்த மூன்றும்படியிலே அடங்கியிருக்கிற
ஆத்தும நன்மைகள் இம்மாத்திரமென்று சொல்லி முடி
யுமோ? இதினால் நாம் இயேசுநாதசுவாமியை உத்தம பிர

காரமாய்க் கண்டுபாவிக்கிறோம்; இடையூறுகளுக்கு நடுவே நமக்குச் சமாதான ஆறுதல் உண்டாகிறது; தேவ ஆசீர்வாதம் நமதுள்ளத்தில் பெருகுகிறது. நமது ஈடேற்றத்தின்மேல் நமக்கு அதிக நிச்சயமாகிறது; கடைசியாய் மோட்சத்தில் உயர்ந்த மகிமைப்பிரதாபம் அடைவதற்குத் தாழ்ச்சியின் இந்தக் கடைசிப்படி ஓர் அச்சாரமாகிறது. இந்தப் படியில் ஏறுவதற்கு நீ இன்னும் எவ்வளவு தூரத்திலிருக்கிறாயென்று பார். என்ன பாடுபட்டும் இந்த மேலான அந்தஸ்தில் வந்துசேர்வேனென்று எத்தனையோ தியானங்களில் திரும்பத் திரும்பப் பிரதிக்கினை செய்தாயே! இதினாலே கண்ட பலனென்ன?

**சம்பாஷணை.**—இயேசுநாதசுவாமியுடைய நிந்தை அவமான நிறைந்த பாடுகளுக்கு விசேஷ பங்காளியான பரிசுத்த கன்னிமரியம்மாளோடு சம்பாஷணை செய்.

# செப்டெம்பர் மாதம்

## முதல் தேதி

### பேய்பிடித்துப் பைத்தியங்கொண்ட பிள்ளையின்பேரில்

**ஆயத்தச் சிந்தனை.**—அந்தப் பையனுடைய தகப்பன் இயேசுநாதர் பாதத்திலே விழுந்து மன்றாடுகிறதைப் பார்க்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

**தியானச் செபம்.**—உயிருள்ள விசுவாசம், பிறரீடேற்ற ஆவல், நிற்பாக்கியர்மட்டில் இரக்கம் என்னும் புண்ணிய உணர்ச்சிகள் உன் மனதில் பிறக்கும்படி கேள்.

### முதல் பிரிவு

**அப்போஸ்தலர்களால் குணமாக்கக் கூடாமற்போன பேயும் பைத்தியமும் பிடித்திருந்த ஒருவனை இயேசுநாதரிடத்தில் கூட்டிக்கொண்டு வருகிறார்கள்**

**தியானம்.**—நமது ஆண்டவரும் அவர் மறுரூபமானதைக்கண்ட மூன்று அப்போஸ்தலர்களும் தபோரென்ற மலையில் இராத்திரி தங்கி மறுநாள் அவ்விடத்தைவிட்டு இறங்கினபோது திரளான சனங்கள் அவர்களுக்கு முன்பாக வந்தார்கள். இயேசுநாதர் மற்ற ஒன்பது சீஷர்களிருந்த இடத்திலே சேர்ந்தபோது அவர்களைச் சுற்றித் திரளான சனங்கள் நிற்கிறதையும், வேதபாரகரில் அநேகர் அவர்களோடு தர்க்கம் பண்ணுகிறதையுங் கண்டார். தங்கள் திவ்விய குரு இல்லாத சமயத்திலே அப்போஸ்தலர்கள் பசாசை ஓட்டப் பிரயாசப்பட்டும் அவர்களால் கூடாமற்போனதுதான் இந்தத் தர்க்கத்துக்குக் காரணம்போல் தோன்றுகிறது. ஏனெனில் இயேசுநாதர் அவர்களைப் பார்த்து: எதின்பேரில் தர்க்கிக்கிறீர்களென்று கேட்டவுடனே, ஒருவன் சனங்களை விலக்கிக்கொண்டு அவருக்கு

முன்பாக வந்து தெண்டனிட்டுச் சொன்னதாவது: சுவாமி, என் மகன்பேரில் இரக்கமாயிரும்; இவன் புத்தி பேதகமுள்ளவனாய் வெகு வருத்தப்படுகிறான்; பசாசு திடீரென்றாற்போல இவன்மேல் ஆவேசமேறி இவனைத் தரையிலே விழத்தாட்டி வெகுவாய் அலைக்கழிக்கிறது; அது இவனை விடும்போது இவன்மேலெங்கும் நெக்குவிட்டு நொறுங்கினாற்போல வலியெடுத்துச் சோர்ந்துபோகிறான்; உம்முடைய சீஷர்கள் முன்பாகக் கொண்டுவந்து பசாசை ஓட்டும்படி அவர்களைக் கெஞ்சி மன்றாடினேன்; ஆனால் அவர்களால் கூடாமற்போயிற்று என்றான் (மத். 17; மாற். லூக். 9).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—அகோர கொடுங்கோலனான பசாசின் சுபாவ குணத்தை இவ்விடத்தில் காண்கிறோம். அந்தப் பிள்ளையின்பேரில் ஆவேசமேறி ஒரு சமயா சமயத்தில் அவனை உபாதிக்கலாமென்று ஆண்டவர் பசாசுக்கு விடைகொடுத்திருந்தார். ஆனால் அந்தப் பிள்ளையின் தகப்பன் சொன்னதுபோல பசாசு கூடுமானபோதெல்லாந் தன் சத்துவங்கொண்டமட்டும் அவனைப்போட்டு வாதித்துக்கொண்டு வந்தது. இதைப் பார்க்கும்போது நரகப் பசாசின்மேல் நமக்கு எவ்வளவோ பயங்கரமுண்டாக வேண்டியது. ஆயினும் கிறீஸ்துவர்களுக்குள்ளே எத்தனையோபேர் சாவான பாவத்தின் வழியாய்த் தங்கள் ஆத்துமத்தையுஞ் சரீரத்தையும் ஒருமிக்கச் சேர்த்துப் பசாசுக்கு ஒப்படைக்கிறார்கள். பத்தியுள்ளவர்களுக்குள்ளும் துறவிகளுக்குள்ளும் முதலாய் எத்தனையோபேர் வீண் சலாக்கியம், பெருமை, காய்மகாரம், சுகப்பிரியம் முதலிய துர்க்குணங்களுக்குத் தங்கள் நினைவிலும் மனதிலும் இடங்கொடுத்துப் பசாசின் சதிமானக் கருத்துக்கு இணங்கிநடக்கிறார்கள். இப்பேர்ப்பட்டவர்களுக்குள் நீயும் ஒருவனாயிருந்ததில்லையோ?

மனப்பற்றுதல்.—பசாசினுடைய உபாய தந்திரங்களிலே நின்று எங்களை இரட்சித்துக்கொள்ளுஞ் சுவாமீ!

பிரதிக்கினை.—விசேஷமாய் ஆங்காரம், சிற்றின்பமென்கிற பேயின்மேல் சமுசயமாயிருக்கவேண்டும்.



## 2-ம் பிரிவு

### இயேசுநாதசுவாமி தமது சீஷர்களையும் வேதபாரகரையுஞ் சனங்களையுங் கண்டித்துப் பேசுகிறார்

தியானம்.—இப்போது சொன்ன வர்த்தமானத்தைக் கேட்டுத் தமது சீஷர்களால் பசாசை ஓட்ட முடியவில்லையென்று சனங்கள் முறையிட்டு இடறல் பட்டதைப்பற்றி மனிதர்களுக்குள்ளே மகா மதுர குணமுள்ள இயேசுநாதர் மனங் கசந்து சொன்னதாவது: விசுவாசமுங் குணமுங்கெட்ட சந்ததியே, எத்தனை காலம் உங்களோடிருப்பேன்; எத்தனை நாள் உங்களைச் சகிப்பேனென்றார். (லூக். 9., மத், 17.) ஆண்டவர் இவ்வளவு கடுமையாய்ப் பேசுகிறதற்கு யூதஆசாரியர்களுடைய நெறிகெட்டதனமுமல்லாமல், முக்கியமாய் அப்போஸ்தலருடைய விசுவாசக் குறைவும் நம்பிக்கைத் தாழ்வுங் காரணமாயிருந்ததென்று வேதவித்தியாபாரகர் சொல்லுகிறார்கள். அப்போஸ்தலரிடத்தில் விசுவாசமும் நம்பிக்கையுங் குறைபட்டதினால்தான் அவர்களால் அந்தப் பேயை ஓட்டக்கூடாமற்போயிற்றென்று திவ்விய கர்த்தர் காண்பித்தருளினார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நமது திவ்விய கர்த்தர் யாராருக்குத் தமது அன்பின் விசேஷ அடையாளங்களைக் காண்பித்திருக்கிறாரோ, அவர்களிடத்தில் தமதுமேல் நம்பிக்கை குறைகிறதைக் கண்டால் அவருக்கு எவ்வளவோ பொருந்தாததாயிருக்குமென்று இதினாலே நமக்குத் தெரியவருகிறது. ஆண்டவர் தமது அன்பின் அடையாளங்களை நமக்கு முக்கியமாய்க் காண்பித்திருக்கிறார். இப்படியிருக்க அவர் நமது மன்றாட்டைக் கேட்டருளும்படி நாம் யோக்கியவான்களல்லவென்று எண்ணுகிறது தாழ்ச்சியின் வேஷமேயொழிய மெய்யான தாழ்ச்சியாகமாட்டாது. இதை நம்மைவிட்டு அகற்றக்கடவோம். பத்தியுள்ள அநேக ஆத்துமாக்கள் இதினால் ஏமாந்து நிர்ப்பாக்கியமாய்த் தவறிப்போகிறார்கள். நீயும் எப்போதாவது இந்தக் குருட்டாட்டத்துக்கு உள்ளாகவில்லையோவென்று பார்.

**மனப்பற்றுதல்.**—உன்னிடத்தில் உண்டான விசுவாச நம்பிக்கைக் குறைச்சலுக்காக இயேசுநாதரிடத்தில் பொறுத்தல் கேள். கேட்கிற எவனும் பெற்றுக்கொள்வானென்கிற அவருடைய வாக்கே நமக்கு அடைமானமாயிருக்கின்றது. இதில் ஒருவனுமிலுந் தள்ளுபடியில்லை.

**பிரதிக்கினை.**—அவநம்பிக்கைக்கடுத்த சோதனைகளுக்குக் கொஞ்சமாகிலும் இடங்கொடாமல் திடமனதாய் எதிர்த்துத் தள்ளு. ஏனென்றால் எவ்விதமாய்ப் பார்த்தாலும் அவநம்பிக்கைக்கு இடங்கொடுக்கிறது நமக்குப் பொல்லாப்பாயிருக்கிறதுந் தவிரச் சர்வேசுரனுக்கும் நிந்தையாயிருக்கிறது.

## 3-ம் பிரிவு

### அப்போஸ்தலர்களால் பசாசை ஓட்டக்கூடாமற் போனதற்கு முகாந்தரம்

**தியானம்.**— அப்போஸ்தலர்கள் இயேசுநாதரைப் பார்த்து: எங்களால் இந்தப் பசாசைத் துரத்தக் கூடாமற் போனதேனென்று கேட்டார்கள். அதற்கு மறுமொழியாக: விசுவாசக் குறைச்சலினாலேதான் இதை உங்களால் ஓட்டக் கூடாமற்போனது. ஏனெனில் சத்தியமாய்ச் சொல்லுகிறேம்; உங்களிடத்தில் ஓர் கடுகளவு விசுவாசம் இருக்குமேயானால் இந்த மலையைப் பார்த்து இவ்விடம் விட்டு அப்புறம் போவென்பீர்கள் அதுவும் அப்புறம் போம். உங்களாலே கூடாத காரியம் ஒன்றும் இராது. மேலும் இவ்வகைப் பசாசு செபத்தினாலும் உபவாசத்தினாலுந் துரத்தப்படுமேயல்லாமல் மற்றப்படியல்லவென்றார். (மத். 17.)

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—மூன்று காரியங்கள் இதில் தெளிவாய்ப் படிப்பிக்கப்பட்டிருக்கின்றன. முதலாவது, நாம் பாவிகளை மனந்திருப்பிப் பாவத்திலும் பசாசின் அடிமைத்தனத்திலும் நின்று அவர்களை மீட்கும்படி அழைக்கப்பட்டிருக்கிறதினாலே மற்றக் கிறீஸ்துவர்களைப்பார்க்க நாம் அதிக விசுவாசமுள்ளவர்



களாய் இருக்கவேணும். 2-வது நம்முடைய விசுவாசம் எவ்வளவுக்கு உருக்கமானதாயிருக்குமோ அவ்வளவுக்குத் தேவ தோத்திரத்துக்காகவும் பிறருடைய ஆத்தும ஈடேற்றத்துக்காகவும் பெரிய காரியங்களை நிறைவேற்ற நாம் தகுந்தவர்களாயிருப்போம். 3-வது சில சமயங்களில் நம்முடைய விசுவாசம் பலிப்பதற்குத் தபக் கிரியைகளுஞ் சேரவேண்டியது. இதுவே திவ்விய இரட்சகர் சொன்ன உபவாசமென்னும் வார்த்தையின் கருத்தாம். இந்தச் சத்தியம் நமது புத்தியில் உறுதிப்பட்டிருக்கிறதோ? நமது நடக்கை இதற்கு ஒத்திருக்கிறதோ? இப்போது நாம் செய்யவேண்டியதென்னவென்று யோசித்துப் பார்ப்போமாக.

**சம்பாஷணை.**—நமது திவ்விய இரட்சகரோடே சம்பாஷணை செய்யக்கடவோம். அக்காலத்தில் இன்னும் விசுவாசக் குறைச்சலாயிருந்த சீஷர்களுக்குக் கிடைத்த கண்டிப்பு நமக்குஞ் செல்லுமென்று ஒத்துக்கொள்வோமாக. அவர்கள் எல்லோரும் ஒன்றாய்ச் சேர்ந்து: ஆண்டவரே, எங்களிடத்தில் விசுவாசத்தை அதிகரிக்கச் செய்யுமென்று கேட்டுக்கொண்டதுபோல நாமும் வேண்டிக்கொள்வோம்.

---

## 2-ம் தேதி

### பேய்பிடித்த பிள்ளை ஆரோக்கியம் அடைகிறன்

**ஆயத்தச் சிந்தனை.**—பசாசானது பிள்ளையினுடைய சரீரத்தினின்று புறப்பட்டுப்போகும்படி இயேசுநாதசுவாமி அதற்குக் கட்டளையிடுகிறதாக ரூபிகரித்துக்கொள்.

**தியானச் செபம்.**—பசாசு உன் உள்ளத்தில் நுழைகிறதற்கு ஏதுவான சகல காரியங்களையும் அரோசித்துத் தள்ள வரங்கேள்.

## முதல் பிரிவு

### இயேசுநாதசுவாமி பேய் பிடித்திருந்த பிள்ளையைத் தம்மிடத்தில் கூட்டிவரக் கட்டளையிடுகிறார்

**தியானம்.**—அர்ச். சிங்கராயரென்னும் பாப்பானவர் சொல்லியிருக்கிறதுபோல நிறைந்த நன்மைத்தனமாயிருக்கிறதே சர்வேசுரனுடைய சுபாவம். இயேசுநாதசுவாமி தாமே இதற்கு அத்தாட்சி. அதெப்படியென்றால் அவர் தம்மைச் சுற்றியிருந்தவர்களையும் விசேஷமாய்த் தம்மிடத்தில் விண்ணப்பம் பண்ணின அந்த மனிதனையுங் கடிந்துகொண்டே க்ஷணமே தயவோடு அவனைநோக்கி: உன் மகனை இங்கே கூட்டிக்கொண்டுவா வென்றார். அப்படியே அவனைக் கூட்டிக்கொண்டுவந்து இயேசுநாதரிடத்தில் விட்டவுடன் பசாசு அவனை நிஷ்டூரமாய் உபாதித்துக் கீழே விழத்தாட்டவே அவன் வாயினின்று நுரை தள்ளித் தரையில் புரண்டுகொண்டு கிடந்தான். (லூக். 9.)

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—சுவிசேஷத்தில் வரையப்பட்டிருக்கிற இந்த விசேஷத்தைக்கொண்டு சர்வேசுரனுடைய கோபமும் மனமுறிவும் மறுலோகத்தில் நித்தியமானாலும், இவ்வுலகத்தில் தருணத்துக்கு மாத்திரம் இருக்கிறதென்று தெளிவாய் அறிகிறோம். அநேகம் விசை சர்வேசுரன் காண்பிக்கப்போகிற தயவுக்கு இதுவே முன் குறிப்பாயிருக்கும். அப்படியே அபாகூக் என்னுந் தீர்க்கதரிசியானவர் ஆண்டவரை நோக்கி: சுவாமீ, தேவரீர் கோபமாயிருக்கும்போது உமது இரக்கத்தை நினைவு கூர்ந்தருளுவீரென்கிறார். இந்தக் கருத்தாகவே யோப் என்கிற மகாத்துமாவும்: சுவாமீ, என்னைக் கொன்றாலும் உமதுமேல் நம்பிக்கை விடமாட்டேனென்கிறார். சர்வேசுரன் நம்மைத் தண்டிக்கிறபோதும், நம்மைக் கைவிடுகிறதாகக் காணப்படுகிறபோதும் முதலாய் நமது விசுவாசமும் நம்பிக்கையும் அசைபடாமலிருக்கவேணும்.

**மனப்பற்றுதல்.**—சுவாமீ, உம்மையே நம்பினேன், இதினால் ஒருபோதும் மனங்கலங்கமாட்டேன். (சங். 30.)



**பிரதிக்கினை.**—சர்வேசுரன்மேல் உனக்குப் பயமுண்டானால் அவர் மடியில் போய் விழுவென்று அர்ச். அகுஸ்தினார் சொன்ன வாக்கியத்தை என் மனதில் அச்சம் பிறக்கும்போதெல்லாம் நினைத்துக்கொள்வேன்.

## 2-ம் பிரிவு

### பசாசு பிள்ளையின் சரீரத்தை விட்டுப்போக வேணுமென்று இயேசுநாதர் அதற்குக் கட்டளையிடுகிறார்

**தியானம்.**—பேய்பிடித்த பிள்ளை கீழே விழுந்து புரண்டு நுரைதள்ளித் தமது பாதத்தில் கிடக்கிறதை இயேசுநாதசுவாமி கண்டு, அந்தப் பிள்ளையினுடைய தகப்பனை நோக்கி: எதுமுதல் இவனுக்கு இப்படிச் சம்பவிக்கிறதென்று கேட்டார். அதற்கு அவன்: சிறுப்பமுதல் இப்படிச் சம்பவிக்கிறது. ஆனால் தேவரீர் ஏதாகிலுஞ் செய்யக்கூடுமானால் எங்கள்பேரில் இரக்கமாயிருந்து எங்களுக்கு உதவியாகச் செய்யுமென்று மன்றாடினான். அதற்கு இயேசுநாதர் நீ விசுவசிக்கக்கூடுமானால் விசுவசிப்பவனுக்கு எல்லாம் ஆகுமென்றார். அப்போது அவன் இயேசுநாதருடைய வல்லமையின்பேரில் தான்பட்ட சந்தேகமானது கேட்ட மன்றாட்டை அடைகிறதற்கு விக்கினமாயிற்றென்று அறிந்து, கண் கலங்கி உரத்த சத்தத்தோடே: ஆண்டவரே, நான் விசுவசிக்கிறேன்; என் அவிசுவாசத்தில் எனக்கு உதவிசெய்யுமென்றான் (மாற். 6). இதற்கு அர்த்தம் என்னவென்றால் என்னாலானமட்டும் நான் விசுவசிக்கிறேன்; எனக்குக் குறைவானதைத் தேவரீர் நிவர்த்தி செய்தருளும்; விசுவசிக்கவேண்டியபிரகாரம் நான் விசுவசிக்க உதவி செய்தருளும் என்றாற்போலாயிற்று.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—நீயும் இந்த மனிதனுடைய மன்றாட்டைக் கண்டுபாவிப்பாயாக. இக்கட்டும் இடையூறும் நேரிடுகிற சமயத்தில் நீ உன்னால் ஆனதைச் செய்யத் துவக்கி உன்னால் ஏலாத காரியத்தில் சர்வேசுரன் உனக்கு ஒத்தாசைசெய்து குறைவானதை நிவர்த்திசெய்ய வேணுமென்று மன்றாடு. அப்போதே

உன் மன்றாட்டுக் கேட்கப்பட்டதென்றும், நீ ஆரம்பித்ததெல்லாம் கைகூடி வருமென்றும் உறுதி மனமாயிருக்கக் கடவாய். இந்த ஆறுதலான சத்தியத்தை அர்ச். அகுஸ்தீனார் ஆச்சரியத்துக்குரிய விதமாய் விளக்கிக் காட்டியிருக்கிறார். திரிதெந்தென்னும் நகரில் கூடின திருச் சங்கமும் அவர் சொன்ன வாக்கியங்களையே எடுத்துக்காட்டியிருக்கிறது. அந்த வாக்கியங்களாவன: சர்வேசுரன் ஏலாதவைகளைக் கற்பிக்கமாட்டார்; கற்பித்தவைகளையோ இயன்றமட்டுஞ் செய்யச் சொல்லுகிறார். கூடாதபோது தம்மை மன்றாடக் கற்பித்து, நீ அதை முடிக்கும்படி உனக்கு உதவியாக வருகிறார் என்பதாம். நாம் இப்படி நடந்துவந்தோமோ? உன் நடக்கையை ஞானம் நிறைந்த இந்தப் புத்திமதிக்கு ஒத்திருக்கச் செய்தாயோ? உன்னால் கூடியதை நீ செய்யாமல் ஆண்டவரைப் பார்த்துச் சும்மா கேட்கிறது மாத்திரம் போதுமென்றிருக்கவில்லையோ? அல்லது உன்னாலாகுமென்கிற வீண் நம்பிக்கைகொண்டு செபத்தினால் தேவ உதவியைத் தேடாமலிருந்ததில்லையோ?

**மனப்பற்றுதல்.**—ஆ! என் திவ்விய இயேசுவே, விசுவாசத்தினாலுஞ் செபத்தினாலும் எல்லாம் எனக்குக் கைகூடுமென்று விசுவசிக்கிறேன். ஆனால் என் விசுவாசம் மிகவுங் குறைவுள்ளதாயிருக்கிறது. தேவரீர் இந்தக் குறையை நிவர்த்தித்து என் விசுவாசத்தை அதிகரித்தருளும்.

**பிரதிக்கினை.**—இந்தச் செபத்தை அடிக்கடி சொல்லுவாயாக.

## 3-ம் பிரிவு

### இயேசுநாதர் அந்தப் பிள்ளையை முழுதுங் குணமாக்கி அவன் தகப்பனிடம் ஒப்புவிக்கிறார்

**தியானம்.**—அந்த மனிதனுடைய ஸ்திரமான விசுவாசத்துக்கு உடனே சம்பாவனை கிடைத்தது. அதெப்படியென்றால் இயேசுநாதர் அசுத்தப் பசாசை அதட்டி: இந்தப் பிள்ளையின் சரீரத்தைவிட்டுப்போ, மறுபடியும் இவனிடத்தில் பிரவேசியாதபடி நாம் உனக்குக் கட்டளையிடுகிறோமென்றார். அதற்குப் பசாசு கீழ்ப்படிந்தாலுந் தன் குணத்தைக் காட்டாமற்போகவில்லை. அதெப்படியென்றால் சுவிசேஷகர் சொல்லுகிறதுபோல அது அபயசத்தமிட்டு அலறிக் கதறிக்கொண்டு பிள்ளையை வெகுவாய் அலைக்கழித்து அவனை விட்டுப் புறப்பட்டது. அந்தப் பிள்ளை செத்தவனைப்போல் கிடந்தான். இதைக் கண்ட அநேகர் அவன் இறந்துபோனானென்றார்கள். ஆனால் இயேசுநாதர் அவன் கையைப் பிடித்துத் தூக்கவே அவன் எழுந்து அக்ஷணமே ஆரோக்கியமடைந்தான். இயேசுநாதர் அவனை அவன் தகப்பன் கையில் ஒப்புவித்தார் (மாற்., லூக். 9; மத். 17).



**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—பசாசானது ஒரு ஆத்துமத்தைக் கட்டாயமாய் விட்டுப் புறப்படவேண்டியபோது அந்த ஆத்துமத்தைப் படுத்துகிற பாடுகள் எவ்வளவு அகோரமாயிருக்குமென்று இதோ இந்த வர்த்தமானத்தில் தெளிவாய்க் காண்கிறோம். இது மரண அவஸ்தைக்குச் சமானம். இப்படிக் கொடிய அவஸ்தைப்பட்ட பிற்பாடு அந்த ஆத்துமஞ் செத்துப் பிழைத்ததுபோல நாட்பட்ட அசதி அசட்டைத்தனமெல்லாம் விட்டு பக்தி வேகங்கொண்டு ஞான உயிரைச் சம்பூரணமாய் அடையும். உனக்கும் இதில் எவ்வளவாவது அநுபோகத்தினால் தெரியுமாக்கும். எப்படியிருந்தாலுஞ் சரி, நீ இந்தத் தியானத்தில் அடைந்த ஞானத் தெளிவைக் கொண்டு உன் விசாரணைக்கு ஒப்புவிக்கப்பட்ட ஆத்துமாக்களைச் செவ்வையாய் நடப்பித்துத் தைரியப்படுத்தவும், வேண்டியசமயத்தில் உனக்குத் திடாரிக்கம் வருவிக்கவும் வழி பார்த்துக்கொள்.

**சம்பாஷணை.**—நமது திவ்விய இரட்சகரோடு சம்பாஷணை செய்.

# 3-ம் தேதி

## இயேசுநாதர் தபோரேன்கிற மலையைவிட்டுக் கப்பர்நாஹும் ஊருக்குப் போகையில் தாம் படப்போகிற பாடுகளை மறுபடியும் அப்போஸ்தலர்களுக்கு வெளிப்படுத்துகிறார்

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதர் தமது அப்போஸ்தலர் நடுவே நடந்துபோகிறதாக ரூபிகரித்துக்கொள்.

தியானச் செபம்.—ஞானக் காரியங்களைக் கண்டுணர்ந்து அவைகளை மதித்துச் சிநேகிக்கும்படி வேண்டிய ஒத்தாசை கேட்பாயாக.

### முதல் பிரிவு

#### இயேசுநாதர் தாம் படப்போகிற பாடுகளைத் திரும்பவும் வெளிப்படுத்துகிறார்

தியானம்.—இயேசுநாதர் பிரசங்கிக்கத் துவக்கின மூன்றாம் வருஷத்தின் மத்தியில் அவர் மறு ரூபமான விசேஷம் சம்பவித்தது. இதுவரையில் அவர் கலிலேயா நாட்டில் மாத்திரம் புத்தி பிரசங்கஞ் சொல்லிக்கொண்டு வந்தார். இப்போதுதான் யூதேயா நாட்டில் சுவிசேஷம் போதிக்கப் போகிறார். அங்கே போகுமுன்னே வழக்கமாய்த் தாம் வாசம்பண்ணிவந்த கப்பர்நாஹும் ஊரைக் கடைசி விசை பார்க்கச் சித்தமானார். தபோரென்ற மலையினின்று அந்த ஊருக்குப்போகிற பாதையில் அப்போஸ்தலர்களோடு தனியேயிருக்கும்படி வழி பண்ணிக்கொண்டாரென்று அர்ச். மாற்கு எழுதிவைத்தார். ஏனெனில் யூதேயா நாட்டின் தலைமைப் பட்டணத்தில் தமக்கு வரப்போகிற நிந்தை அவமானங்களுக்கும் அகோர மரணத்துக்குமடுத்த பரம இரகசியங்களைக் குறித்து அவர்களோடே கலந்து பேசக் கருத்தாயிருந்தார். ஆகையால் வழி நடக்கும்போது அவர்களை நோக்கி: நான் உங்களுக்குச் சொல்



லப்போகிறதை உங்கள் இருதயத்தில் நன்றாய்ப் பதித்துக்
கொள்ளுங்கள். அதேதென்றால் மனுமகன் மனிதருக்குக்
கையளிக்கப்படுவார். அவர்கள் அவரைக் கொலைப்படுத்து
வார்கள். அவர் மரித்த மூன்றாநாள் உயிரோடு எழுந்
திருப்பாரென்றார் (மாற்., ஊக். 9).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—மூந்த
மூந்த திவ்விய இரட்சகர் தாம் படப்போகிற பாடுகளை எந்
தச் சமயத்திலே நினைத்துக்கொள்ளுகிறாரென்றும், அதைத்
தமது சீஷர்களுக்கு என் நினைப்பூட்டுகிறாரென்றும் நமக்குப்
படிப்பினையாகக் கவனித்துப் பார்ப்போமாக. சகலமுந்
தமக்குக் கைகூடி வருங்காலத்திலேயுந் தாம் செய்யும் புது
மைகள் எங்கும் பிரசித்தமாகித் தம்மை யாவருந் துதித்துக்
கொண்டாடும்போதுந்தானே ஆண்டவர் இப்படித் தமது
பாடுகளை நினைத்துக்கொள்ளுகிறார். ஆகையால் நாம் செய்
யுங் காரியம் அநுகூலமாகி நம்மையெல்லாருங் கொண்டா
டும்போது நாம் ஆங்காரமான நினைவுக்கும் வீண் சலாக்கிய
மான வார்த்தைகளுக்கும் இடங்கொடாமல் தாழ்ச்சிக்
கடுத்த சிந்தனைகளை நமது ஞாபகத்தில் வருவித்துக்கொள்
வோமாக. நாம் உபயோகமற்ற ஊழியர்களென்றும்,
சாவுக்குத் தீர்வையிடப்பட்டவர்களென்றும், கல்லறையில்
மண்ணோடு மண்ணாய் மக்கிப்போகிறவர்களென்றும், சிநேக
த்துக்கோ சாபத்துக்கோ எதற்கு நாம் பாத்திரவான்களா
யிருக்கிறோமென்று நிச்சயமாய் அறியாதவர்களென்றும்
நினைத்துக்கொள்வோமாக. நீ இந்தப்பிரகாம் நடந்
தாயோ? மேலும் இயேசுநாதர் தமக்கு அடுத்திருக்கிற
பாடுகளை அப்போஸ்தலர்களுக்குத் திரும்பத் திரும்ப
வெளிப்படுத்தின முகாந்தரமேதென்று கூர்ந்து பார்.
தாம் பாடுபட்டு மரிப்பது தமது மன இஷ்டத்தினாலும்
மனுஷர்பேரில் வைத்த பட்சத்தினாலும் நடக்கிற காரிய
மென்று அவர்கள் அறியவும், அதினால் அவர்கள் இடறல்
படுவதற்கு வகையற்றுப்போகவும் இப்படிப் பேசிக்
கொண்டு வந்தாரென்றறிக. நாம் யாதொரு நன்மை செய்
யும்போது அதை எவ்விதத்திலும் நன்றாய்த் திருந்தச்
செய்வோமாக.

**மனப்பற்றுதல்.**—நமது நேச இரட்சகரான இயேசுநாதருக்குப் புகழ்ச்சியும் மகிமையும் நன்றியறிந்த தோத்திரமும் உண்டாகக்கடவது.

**பிரதிக்கினை.**—எல்லாக்காரியத்திலும் நம்மைச் சர்வேசுரன் சமுகத்திலே வாழ்த்திக்கொள்வோமாக.

## 2-ம் பிரிவு

### இயேசுநாதர் சொன்னதை அப்போஸ்தலர்கள் உணரவில்லை

**தியானம்.**—இயேசுநாதர் அப்போஸ்தலர்களுக்குச் சொன்னதை அவர்கள் கண்டுபிடிக்கவில்லை. ஏனென்றால் அது அவர்கள் கண்ணுக்கு மறைபட்டிருந்தது. (லூக். 6). கையளிக்கப்படுவார், கொலை செய்யப்படுவார் என்ற வார்த்தைகளை அவர்கள் மகா தெளிவாய்க்கேட்டது உண்மைதான். ஆனால் அவற்றின் கருத்து இன்னதென்று உணராமற் போனார்கள். அதேதென்றால் வார்த்தைக்கு வார்த்தை பொருளைப் பார்த்தால் அது இயேசுநாதர்பேரில் அவர்கள் வைத்த பட்சத்துக்கும் அவர்களுடைய பேராசை நோக்கத்துக்கும் முழுதும் எதிரிடையாயிருந்தது. இந்த விஷயத்தைப்பற்றி இயேசுநாதசுவாமியை வினவுகிறதற்குப் பயந்து மிகுந்த துயரப்பட்டிருந்தார்களென்று அர்ச். லூக்காஸ் சேர்த்துச் சொல்லியிருக்கிறார். இதைக்குறித்து வினவினால் எங்கே காரியத்தைத் தெளிவாய் அறியப்போகிறோமோவென்கிற அச்சந்தான் அவர்களுடைய மவுனத்துக்குக் காரணமாயிருந்திருக்க வேண்டியது. (மத். 17; லூக். 9).

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—அப்போது இன்னமும் உத்தமர்களாயிராத அப்போஸ்தலர்களுடைய சாயல் உன்னிடத்திலுந் தோன்றுகிறதில்லையோவென்று பார். உன்னை நடப்பிக்கிறவர்கள் எத்தனையோ காரியத்தை உனக்குத் தெளிவாய்ப் படித்துப் படித்துச் சொல்லியிருந்தும் அவைகள் உனக்கு மங்கலாயிருக்கின்றனவாக்கும். அவைகளை நீ கண்டுபிடிக்கிறதுமில்லை, கண்டுபிடிக்க உனக்கு மனசுமில்லை. உன் குணம்போகிற போக்



குக்கு அவர்கள் சொல்லுகிறது விரோதமாயிருக்கிறதினாலும், அதைக் கண்டுபிடித்தால் உன்னைத் திருத்திக்கொள்வதற்குக் கண்டிப்பாய் பிரயத்தனப்படவேண்டியிருப்பதினாலும் இப்படி நீ நெளித்துக்கொடுக்கிறாய். அப்படியே உன் கண் மனம்போல் சுழலுகிறதென்றும், நாக்கு பற்பல பாவங்களுக்கு ஊற்றாயிருக்கிறதென்றும், இன்னின்ன மிஞ்சின பற்றுதலையுஞ் சகவாச பழக்கத்தையும் முழுதும் மறுத்துவிடாவிட்டால் உன்னிடத்தில் சமாதானமும் பரிசுத்ததனமும் இராதென்றும், உன்னுடைய அலுவல்களில் சாக்கிரதையும் விழிப்புமில்லாததினாலே மற்றவர்கள் பழி உன்மேல் விழுமென்றும், பிறர்பேரில் குறை கூறுகிறதும் முறுமுறுக்கிறதும் தாறுமாறாய் நடக்கிறதும் உன் சகோதரருக்கு மிகுந்த இடறலாயிருக்கிறதென்றும், இவை முதலியவைகளை உன் நன்மைக்காகப் பெரியவர்கள் சொல்லிக் காட்டுவார்கள். அப்பொழுது நீ செய்வதென்ன?

**மனப்பற்றுதல்.**—உன் புத்திக்குத் தெளிவு உண்டாகி அது உன் மனதில் படவும் நீ மனந்திரும்பவும் வேண்டிய ஒத்தாசையை ஆண்டவரிடத்தில் கேள்.

**பிரதிக்கினை.**—சிலர் தங்களுக்கு வருஞ் சந்தேகங்களில் ஆத்தும குருவை வினவ அச்சப்படுவார்கள். தங்களுக்கு மோசமில்லை என்கிற பொய் எண்ணம் எங்கே கலங்குகிறதோவென்றும், என்னென்ன பரித்தியாகமும் பெரும் பிரயத்தனமும் பண்ணவேண்டியிருக்குமோவென்றும் அஞ்சி இப்படிப் பின்வாங்குகிறார்கள். ஆனால் இப்படியிருக்கும் வரையில் இந்தச் சீவியத்தின் நன்மைகளுக்குள் பெரும் நன்மையாகிய மனச்சமாதானத்தை இழந்துபோவார்கள். நீ ஒருக்காலும் இவர்களைப்போல் நடவாதே.

## 3-ம் பிரிவு

### இயேசுநாதர் தமது மரணத்தோடு உத்தானத்தையுஞ் சேர்த்து வெளிப்படுத்துகிறார்

**தியானம்.**—மனுமகன் மனிதருக்குக் கையளிக்கப்படுவார். அவரைக் கொலை செய்வார்கள். ஆனால் மரித்த

பின் மூன்றுநாள் உயிர்ப்பாரென்றார். இங்கே நாம் முக்கியமாய்க் கவனிக்கவேண்டிய காரியம் ஒன்றிருக்கிறது. அதாவது திவ்விய இரட்சகர் தமது அவமான நிறைந்த பாடுகளைப்பற்றிப் பேசும்போது தமது மகிமையான உத்தானத்தையும் எப்போதுஞ் சேர்த்து அறிவிக்கிறாரென்பதாம்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—நமக்குத் தைரியத்தை வருவிக்கத்தக்கதாக ஆண்டவர் இப்படித் திருவுளம்பற்றினாரென்று எண்ணவேணும். இதினாலே நாம் செய்யவேண்டிய ஞான யுத்தத்திலும் அதற்காக நாம் படவேண்டிய பிரயாச வருத்தங்களிலும் நமக்கு வார்த்தைப்பாடு கொடுக்கப்பட்ட மாங்கிஷ உத்தானத்தையும் மோக்ஷானந்த சந்தோஷத்தையும் நினைப்பது ஆறுதலான உதவியாயிருக்கும். இதினால் நமது விசுவாசத்துக்கு உற்சாகம் வரவும் நமது மனத்திடன் பலன்கொள்ளவுங்கடவது. நாம் வருத்தப்படுஞ் சமயங்களிலே அர்ச். சின்னப்பரைப்போல இனி ஒரு நாள் நம்முடைய பாத்தியமாகும் மோக்ஷ மகிமைப் பிரதாபத்துக்கு இந்த உலகத்தின் துன்பங்களெல்லாம் ஈடல்லவென்று சொல்லக்கடவோம்; அல்லது அர்ச். அகுஸ்தீனாரைப்போல வேலையைக் கண்டு மலைப்பு வந்தால் சம்பாவனையை நினைத்துத் திடன் கொள்ளக்கடவோம்.

**சம்பாஷணை.**—நமக்குப் பாது காவலான அர்ச்சிய சிஷ்டவரோடே சம்பாஷணை செய்வோமாக.

---

## 4-ம் தேதி

### இயேசுநாதர் திராக்குமாவென்னும் இரண்டு பணம் வரி கொடுத்ததின்பேரில்

**ஆயத்தச் சிந்தனை.**—அர்ச். இராயப்பர் தண்ணீரினின்று ஒரு மீனை வெளியே இழுத்துப்போட்டு அதின் வாயைத் திறந்து அதினின்று வரிப்பணத்தை எடுக்கிறதாக ரூபிகரித்துக்கொள்.



**தியானச் செபம்.**—அர்ச். இராயப்பரிடத்தில் இயல்பாய் விளங்கின விசுவாசத்தையுந் தாழ்ச்சியையுங் கேட்டுக்கொள்.

#### முதல் பிரிவு

##### இயேசுநாதர் வரி செலுத்துங் கடமைக்கு உட்பட்டவரல்ல

**தியானம்.**—இயேசுநாதர் கப்பர்நாவூம் ஊரில் கடைசி விசை வாசமாயிருந்தபோது அநேக அற்புதமான காரியங்களைச் செய்தாரென்று நம்பத்தக்கதாயிருந்தாலுஞ் சுவிசேஷத்தில் ஒரு காரியத்தைமாத்திரங் குறித்துச் சொல்லியிருக்கின்றது. அதேதென்றால் குடிவரி கேட்கிறவர்கள் இராயப்பரைப்பார்த்து: உங்கள் குரு இரண்டு திராக்குமா வரி செலுத்தவேண்டாமோவென்று கேட்டார்கள். ஒரு திராக்குமா சுமார் ஒரு பணம் என்றறிக. அதற்கு இராயப்பர் செலுத்தவேணுமென்று சொல்லி வீட்டில் பிரவேசித்த பிறகு எல்லாவற்றையும் அறிந்திருந்த இயேசுநாதர் இராயப்பரை நோக்கி: சீமோனே உனக்கு எப்படித் தோன்றுகிறது? பூலோக இராசாக்கள் யாரிடத்தில் வரி வாங்குகிறார்கள். தங்கள் மக்களிடத்திலோ அந்நியரிடத்திலோ என்றார். அதற்கு இராயப்பர் அந்நியரிடத்திலே என்றார். திரும்பவும் இயேசுநாதர் அவரைப் பார்த்து: அப்படியானால் மக்கள் இந்தக் கடமைக்கு உட்பட்டவர்களல்லவே என்றார். (மத். 17) அப்படியிருக்கப் பரலோக பூலோக இராஜாவாகிய சர்வேசுரனுடைய குமாரனாகிய தமக்கு வரிகொடுக்க கடமை ஏதென்று சொன்னாற்போலாயிற்று. இது விஷயத்தில் இயேசுநாதசுவாமி வரி செலுத்தாமலிருப்பதற்கு உண்மையும் ஸ்திரமுமான நியாயங்கள் இருந்தனவென்பதற்குச் சந்தேகமில்லை.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—ஒழுங்கு, வேலை, தவமுயற்சி முதலிய விஷயங்களில் நமக்கு மாப்பு வேணுமென்றிருக்கும்போது மெய்யாகவே ஸ்திரமான நியாயம் இருக்கிறதோவென்று பார்ப்போமாக. சில சமயத்தில் நமது தள்ளாப் பிராயமும், அசௌக்கியமும் ஒடும் வேலையும் ஒரு நியாயமென்று எண்ணுகிறோம்.

சில சமயத்தில் நாம் நெடுங்காலந் துறவிகளாயிருந்து, பல நன்மைசெய்து பேரெடுத்திருக்கிறோமென்று நினைத்து இதுவே போதுமான நியாயமென்று எண்ணுகிறோம். மனக்குருட்டாட்டம், சுயபட்சம், கோழைத்தனம், மனச்சோர்வு இவைமுதலியவைகளுஞ் சிலசமயங்களில் இதற்குக் காரணமாமே. சட்டதிட்டத்தைவிட்டு விடுதலையாக வேணுமென்கிற மனச்சார்பு நமக்கு இயல்பாயிருப்பதால் வெகு பார சிந்தனையோடு இந்தக் காரியங்களையெல்லாஞ் சீர்தூக்கிப் பார்ப்போமாக.

மனப்பற்றுதல்.—மடத்தில் பொதுச் சீவிய ஒழுக்கத்தின்மேல் மதிப்பும் பிரியமும் உனக்கு உண்டாகவும், அதை நிலைமை பிரமாணிக்கமாய் அநுசரிக்கவும உன் மனதில் ஆசையெழுப்பித் தேவ உதவியையும் இரந்து மன்றாடு.

பிரதிக்கினை.—கூடினமட்டும் மடத்தில் வேற்றுமை வித்தியாசமில்லாமல் மற்றவர்களைப்போல நடக்கிறது.

## 2-ம் பிரிவு

அப்படியிருந்தும் இயேசுநாதர் வரி செலுத்துகிறார்

தியானம்.—வரி செலுத்துவது இயேசுநாதருக்குக் கடமையில்லாதிருந்தும், ஜனங்கள் இடறல் படாதபடிக்கு அதைச் செலுத்தச் சித்தமானார். ஏனெனில் அவர் தேவ குமாரனென்றும், அதினாலே உலக அரசாட்சியின் யாதொரு சட்டத்துக்கும் உட்படாதவரென்றும், ஜனங்கள் தகுந்த மேரையாய் இன்னும் அறியாதிருந்தார்கள். இயேசுநாதரோ இந்தச் சமயத்தில் ஓர் பெரிய புதுமை செய்து தெய்வத்துக்கு யோக்கியமான விதமாய் இந்த வரியைச் செலுத்தினார். ஆண்டவர் இப்படி விசேஷ புதுமை செய்வதற்கு முகாந்தரமேதென்று பாராமல் அந்தப் புதுமையைமாத்திரம் விசாரிக்கக்கடவோம். அதாவது: இயேசுநாதர் இராயப்பரைப்பார்த்து: நீ போய்ச் சமுத்திரத்திலே தூண்டிலைப்போட்டு முந்த அகப்படுகிற மீனைப் பிடித்து அதின் வாயைத் திறந்து பார்த்தால் நாலு திராக்குமா கொண்ட ஒரு நாணயம் அகப்படுமென்றார்.



(மத். 17) இப்படிக் கற்பித்தது இராயப்பருடைய கீழ்ப்படிதலைக் கண்டிப்பாய்ச் சோதிக்கிறதற்கு ஏதுவாயிருந்தது. ஆனால் இதற்கு அவர் ஜெயசீலனாய்க் கீழ்ப்படிந்ததினாலே அதற்கான சம்பாவனையை அடைந்தார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நமது திவ்விய இரட்சகரை நாம் கண்டுபாவித்துப் பிறர் இடறல் படுவதற்கு அற்பமாகிலும் இடங்கொடாமலிருப்போமாக. நாம் இருக்கும் ஊரிலும் மடத்திலும் உண்டான வழக்கத்தை நம்மாலானமட்டுங் காப்பாற்றவேணும். மேலும் அர்ச். இராயப்பர் பாவனையாகத் தேவ பராமரிப்பையும் பரிசுத்த கீழ்ப்படிதலையும் சார்ந்த சகலத்துக்கும் மனம் அமைந்து நடக்கக்கடவோம்.

மனப்பற்றுதல்.—கிறீஸ்துவனுக்கடுத்த சாங்கோபாங்கத்தின் இந்தப் போதனைக்கு உன் நடக்கை எவ்விதத்திலும் ஒத்திருக்கும்படி வரப்பிரசாதங்கேள்.

பிரதிக்கினை.—இப்பேர்க்கொத்த உத்தமதனத்தை அடையத்தக்கதாக இடைவிடாமல் முயற்சி செய்யக்கடவாய்.

## 3-ம் பிரிவு

இயேசுநாதர் அர்ச். இராயப்பருக்குஞ் சேர்த்து வரி கொடுக்கிறார்

தியானம்.—இயேசுநாதர் இராயப்பரைப் பார்த்து மீன் வாயில் பணம் அகப்படுமென்று சொன்னபின் அதை எடுத்து உனக்கும் எனக்கும் வரியாகச் செலுத்தென்றார். (மத். 17). அப்போஸ்தலர்களுடைய சங்கத்துக்குத் தலைமையான இயேசுநாதரிடத்தில் மாத்திரம் வரிப்பணங் கேட்டிருக்க, அவர் தமது பிரதான சீஷனுக்குஞ் சேர்த்துக்கொடுத்தார். அர்ச். இராயப்பருக்குச் சனுவாக இந்த வேற்றுமை காட்டின முகாந்தரமென்ன? அவருக்குத் தாம் தந்தருளின தலைமைப்பட்டத்தை நிலைநிறுத்தும்படி இவ்விதஞ் செய்தாரென்று வேத வித்தியாபாரகர் சொல்லியிருக்கிறார்கள். மேலும் அவருடைய விசுவாசத்துக்கும் உத்தம கீழ்ப்படிதலுக்குஞ் சம்பாவனையாக இயேசுநாதர் இப்பேர்க்கொத்த விசேஷ பட்சத்தின் அடையாளத்தைக் காண்பித்தாரென்றுஞ் சொல்லத்தகும்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நமக்குக் குருவும் இரட்சகருமான திவ்விய கர்த்தருடைய விசேஷ பட்சத்திற்கு நாமும் பாத்திரவான்களாகும்படி வருந்துவோமாக. மேலும் இராயப்பருக்குக் கிடைத்த மேலான அதிகார வரிசையைப்பற்றி அவரை வாழ்த்தித் தோத்திரிப்போமாக. நமது நன்மைக்காகவே இந்த மேலான அதிகாரம் அவருக்குக் கொடுக்கப்பட்டதென்று நினைத்துக் களிகூரக்கடவோம். சத்திய சாதாரண திருச்சபையில் நாம் எந்நாளும் மாறாத விசுவாச ஒற்றுமையைக் கொண்டிருப்பதற்கும், இந்த விசுவாசத்திற்குச் சம்பாவனையாக நித்திய மோக்ஷ பாக்கியங் கிடைக்குமென்று நம்புவதற்குங் காரணம் ஏதென்று கேட்டால், இயேசுநாதர் சுவாமி அர்ச். இராயப்பருக்கும் அவரைப் பின்தொடர்ந்து வரை பிசகாமல் வரும் பாப்புகளுக்குங் கொடுத்த தலைமைப் பட்டமும் மேலான ஞான அதிகாரமுமென்று அறியக்கடவோம். நாம் ஞானஸ்நானத்தின் வழியாய் இந்தச் சத்திய திருச்சபைக்குப் பிள்ளைகளாய்ப் பிறந்திருப்பது எவ்வளவோ விலைமதிக்கப்படாத நன்மையென்று அடிக்கடி யோசித்து இந்த நன்மைக்காகச் சர்வேசுரன்மட்டில் நமது நன்றியறிதலைக் காண்பிக்கும்படியாகத் திருச்சபைக்கு மாறாத பிரமாணிக்கத்தோடு கீழ்ப்படியக்கடவோம். நமது கீழ்ப்படிதல் சர்வேசுரனுடைய மெய்யான பிள்ளைகளுக்கு யோக்கியமானதாயிருக்கத்தக்கதாகக் கபடான ஒப்பாசாரமும் அடிமைக்குரிய பயமுமின்றி விசுவாசமுஞ் சிநேகமும் பொருந்தியதாயிருக்கவேணும். ஆகையால் கற்பிக்கிறவர்கள் தெய்வ ஸ்தானத்திலிருக்கிறார்களென்றும் அவர்களை நோக்கித்தான் இயேசுநாதர்சுவாமி: உங்கள் வார்த்தையைக் கேட்கிறவன் என் வார்த்தையையுங் கேட்கிறானென்று சொல்லியிருக்கிறாரென்றும் நினைத்துக்கொள்ளக்கடவோம் (லூக். 10).

சம்பாஷணை.—இன்றையத் திருநாளுக்குரிய அர்ச்சியசிஷ்டவரோடு சம்பாஷணை செய்.



# 5-ம் தேதி

## அப்போஸ்தலர்கள் தங்களுக்குள் பெரியவன் யாரென்று சடுத்தஞ் செய்ததின்பேரில்

ஆயத்தச் சிந்தனை.—முதன்மையாயிருக்க ஆசைப்படுகிறவன் எல்லாருக்குங் கடைசியனுமாய் ஊழியனுமாயிருக்கக்கடவனென்று இயேசுநாதர் சொல்லுகிறதைக் கேட்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

தியானச் செபம்.—நம்முடைய கண்ணுக்கே நாம் சிறியவர்களாகும்படி தேவ உதவியைக் கேட்போமாக.

## முதல் பிரிவு

### அப்போஸ்தலர்களுடைய பேராசையின்பேரில்

தியானம்.—இரட்சகர் இராயப்பரை விசேஷித்து மகிமைப்படுத்தினதினாலே மற்றவர்களுக்குப் பொறாமையுண்டாயிற்று. ஓர் சமயத்தில் திவ்விய குருவும் இராயப்பருந் தனித்துப் பேசிக்கொண்டிருக்கும்போது இந்தப் பொறாமை அவர்களுக்குள் வாக்குவாதத்தை மூட்டினது. பின்பு அவர்களெல்லாரும் ஒருமிக்க இயேசுநாதரிடத்தில் சேர்ந்தபோது அவர் அவர்களுடைய நினைவை அறிந்து அவர்களைச் சீர்திருத்தச் சித்தமாகி அவர்களை நோக்கி: நீங்கள் வழியில் எதைக்குறித்துப் பேசிக்கொண்டிருந்தீர்களென்றார். வழியில் தங்களுக்குள் யார் பெரியவனென்று வாக்குவாதஞ் செய்துகொண்டிருந்ததினாலே, சுவாமி கேட்ட கேள்விக்குப் பதில்சொல்லாமல் மவுனமாயிருந்தார்கள் (மாற்., லூக். 9).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இந்தச் சமயத்திலே அப்போஸ்தலர்களுடைய நடக்கை சரியல்லவென்று நீ அரோசிகப்பட்டு, இதென்ன, இப்போதுதானே, சற்று நேரத்துக்கு முந்திச் சற்குருவானவர் அவர்களைப்பார்த்து: நான் சத்துராதிகளுக்குக் காட்டிக்

கொடுக்கப்படுவேன், அவர்கள் என்னை உபாதித்துக் கொலை செய்வார்களென்று சொன்னதை இவர்கள் காதால் கேட்டார்களே. அப்படியிருந்தும் எள்ளளவேனும் இவர்கள் மனம் உருகாததுபோல் தோன்றுகிறதே! சுயநாட்டமும் பேராசையுமல்லோ அவர்கள் மனதைப் பிடித்திருக்கிறதென்று வெகு எரிச்சலோடே சொல்லுவாயாக்கும். இது நியாயமான எரிச்சல்தான்; ஆனால் மனிதருடைய பலவீனத்தையும் விசேஷமாய் உன் துர்ப்பலத்தையும் நன்றாய் யோசித்துப் பார்ப்பாயானால் ஒருவேளை எரிச்சலை அடக்கித் தாட்சணியமாய்ப் பேசுகிறதற்கு மனசுவரும். இயேசுநாதர் அநுபவித்த நிந்தை அவமானத்தைக் குறித்து நீ அநேக சமயங்களில் தியானஞ் செய்து முடித்தமாத்திரத்திலேயே வீண் பெருமைக்கும், சலாக்கியமான நினைவுக்கும் இடங்கொடுத்ததில்லையோ? அல்லது குருவானவர் பாதத்திலே விழுந்து தாழ்ச்சியோடே பாவப்பொறுத்தல் அடைந்து வெளியில் வந்த க்ஷணமே ஒருவன் உன்னைப் பார்த்துச் சொன்ன ஒரு கடுஞ் சொல்லைத் தாழமாட்டாமல் ஆத்திரமாய்க் கோபித்துக்கொண்டதில்லையோ? ஐயோ, பாவசங்கீர்த்தனஞ் செய்கிறபோதுமுதலாய்க் குருவானவர் உனக்கு நல்ல புத்தி சொல்வதைக்கேட்டு நீ ஒருவித மனத்தாங்கல் அடைகிறதில்லையோவென்றுபார்.

மனப்பற்றுதல்.—இதெல்லாம் மெய்யென்று ஒப்புக்கொண்டு வெட்கி மனஸ்தாபப்படக்கடவாய்.

பிரதிக்கினை.—ஆங்காரத்துக்கு இடங்கொடாமல் பிறரிடத்தில் உண்டான பலவீனத்தை மன்னித்துக்கொள்.

## 2-ம் பிரிவு

### தாழ்ச்சியின்பேரில் அப்போஸ்தலர்களுக்குச் சொல்லப்பட்ட புத்தி

தியானம்.—பேராசையும் மற்றத் துர்க்குணங்களைப்போலவே தன்னைக் காட்டாமல் மறைந்திருந்து தன் வேலையைச் செய்து முடிக்கும். இதற்கு அப்போஸ்தலர்களிடத்திலேதானே அத்தாட்சி காணலாம். எப்படியெனில் அர்ச். மத்தேயு சொல்லியிருக்கிறபடி இயேசுநாதசுவாமி



உட்கார்ந்திருக்க, அவரிடத்தில் வந்த அப்போஸ்தலர் தங்களுக்குள் பெரியவனாரென்று அவரைக் கேட்கத் துணியாமல் தங்களை மறந்துவிட்ட யோகிகளைப்போல பாசாங்கு பண்ணி: சுவாமீ, மோக்ஷராச்சியத்தில் எல்லோருக்கும் பெரியவனாரென்று பொதுவாய் வினவினார்கள். அவர்களுடைய உட்கருத்தை அறிந்திருந்த இயேசுநாதர் அவர்களுக்கு நாணம் வரும்படி யாதொன்றுஞ் சொல்லாமல்: உங்களுக்குள்ளே முதன்மையாயிருக்க விரும்புகிறவன் எவனோ அவன் எல்லாருக்கும் பணிவிடைக்காரனாயிருப்பானாகவென்று பதில் சொன்னார் (மத். 18; மாற். 9).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—சர்வேசுரன் நம்மைப் பெரியவர்களாக மதிக்கவேணுமென்றும், பரலோக மகிமைப் பிரதாபத்திலே மேன்மையானவர்களாயிருக்க வேணுமென்றும் நாமெல்லாரும் ஆசைப்படுகிறோமன்றோ? இதற்கு நாம் செய்யத்தக்கதென்னவென்று இயேசுநாதர் காண்பிக்கச் சித்தமானார். எப்படியென்றால்: நம்முடைய மனதிலே நம்மைச் சிறியவர்களென்றும்; சகலரிலும் அற்பமானவர்களென்றும் எண்ணிக்கொள்ளக்கடவோம். தேவ கிருபையால் உன்மேல் இந்தத் தாழ்வான எண்ணங் கொண்டிருக்கிறாயோவென்று அறியவேணுமானால், மற்றவர்கள் உன்னை மறந்து விடும்போதும், அல்லது உன்னை ஒன்றுக்கும் உதவாதவனென்று நினைக்கும்போதும், மற்றவர்களுக்கு நல்ல காரியங்களையும் உயர்ந்த அலுவல்களையுந் தந்து உனக்குக் கடைகெட்ட பண்டங்களையும் இழிவான வேலையையுங் கஷ்டமான தொழிலையுங் கொடுத்து, இயேசுநாதர் சொன்னதுபோல உன்னை எல்லாருக்கும் பணிவிடைக்காரனாக்கும்போதும், உன் மனங் கலங்காமல் திருப்தியாயிருக்கிறதோ இல்லையோவென்று யோசித்துப்பார். இது காரியத்தில் என்ன நினைக்கிறாய்?

மனப்பற்றுதல்.—தாழ்ச்சியிலும், சுயபரித்தியாகத்திலும் நீ வளர்ந்து விர்த்தியடையும்படி அனுக்கிரகங் கேள்.

பிரதிக்கினை.—மனுஷர் முன்பாக நீ தாழ்த்தப்படும்போது சர்வேசுரன் முன்பாக அகமகிழுவாயாக.

## 3-ம் பிரிவு

### அப்போஸ்தலர்களுக்குச் சுவிசேஷத்துக்கடுத்த பாலத்துவம் கற்பிக்கப்பட்டிருக்கிறது

தியானம்.—சுயபரித்தியாகத்தின்பேரிலும், தாழ்ச்சியின்பேரிலும் இயேசுநாதசுவாமி சொல்லிவந்த புத்தியை இலௌகிக பெருமையின்மேல்மட்டுங் கண்ணுயிருந்த அப்போஸ்தலர்கள் அரைகுறையாய்மாத்திரம் உணர்ந்திருக்கக் கூடும். ஆகையால் இது ஒரு கண் காட்சியைப்போல அவர்களுக்குத் தெளிவாய்த் தோன்றும்படி திவ்விய இரட்சகர் ஒரு சிறு பாலகனைத் தமது அண்டையில் வரவழைத்து அவனைத் தழுவி அரவணைத்தபின் அவர்கள் நடுவே நிறுத்தி அவர்களைப் பார்த்து : உண்மையாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் சிறு பாலகரைப்போலாகாவிட்டால் பரலோக இராச்சியத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள். ஆகையால் இப்பாலகனைப்போல தன்னைத் தாழ்த்துகிறவனும் பரலோக இராச்சியத்தில் அதிக பெரியவனுயிருப்பானென்றுர் (மத். 18; மாற். 9).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.— ஆகையால் சர்வேசுரனுக்குப் பிரியப்படவும் அவருடைய உருக்க நேசத்துக்கும் விசேஷமான பிரசாதங்களுக்கும் நாம் பங்காளிகளாயிருக்கவும் வேணுமானல் சுவிசேஷத்தில் கற்பிக்கப்பட்டபடி நாமும் குழந்தைகளுக்கு ஒத்தவர்களாகக்கடவோம். அதாவது குழந்தைகளுக்கு இயல்பானகுணங்கள் நமக்குத் தருமநடத்தையால் வரவேண்டியது. அவர்களைப்போல மாசு கபடின்றி தாழ்ச்சி சாந்தஞ் சிரவணமுள்ளவர்களாயிருப்போமாக. இது எளிதல்லவென்பது மெய்தான். தாராளமான மனதாய் நிலைத்துப் பிரயாசப்பட்டால்மாத்திரம் இப்போர்க்கொத்த புண்ணியங்களை அடையலாம். நாம் இப்படிச் செய்து வருகிருேமோ? இதுவரையில் இதினுல் அடைந்த அனுகூலமென்ன?

சம்பாஷணை.—நமக்காகப் பாலனுய்ப் பிறந்து முன்னிட்டியில் வளர்த்தப்பட்டு முப்பது வருஷகாலம் நசரேத்தூரிலே அந்தரங்கமாய்ச் சீவித்து தமது கைத்தாதையோடு கஷ்டமான தாழ்ந்தவேலை செய்துவந்தவரும் நமது திவ்விய மாதிரிகையுமான இயேசுநாதரோடு சம்பாஷணை செய்வோமாக. நமது ஆங்காரமான நினைவுக்கும் பேராசையான கருத்துக்கும் அவரிடத்தில் பொறுத்தல்கேட்டு உதாரமான மனதோடு சில பிரதிக்கினைசெய்து அவருக்கு ஒப்புக்கொடுப்போமாக.



---

## 6-ம் தேதி

### இயேசுநாதர் இடறல் உண்டாகக் காரணமானவர்களுக்கு இட்ட சாபம்

ஆயத்தச் சிந்தனை.—இடறலைப்பற்றி உலகத்துக்கு ஐயோ கேடென்று இயேசுநாதர் சொல்லுகிறதாக ரூபிகரித்துக்கொள்.

தியானச் செபம்.—இடறலாகிய பாவத்தை நீ மகா அருவருப்போடு வெறுக்கவும், அதினுல் மயங்கிக் கெடாமலிருக்கவும் வரப்பிரசாதங் கேட்பாயாக.

## முதல் பிரிவு

### உலகத்திலுள்ள இடறல்

தியானம்.—அப்போஸ்தலர்களுக்கு மாதிரிகையாக அவர்கள் நடுவில் ஒரு சிறு பாலகன் நிறுத்தப்பட்டிருந்தானல்லவோ? இயேசுநாதர் அவனுடைய மாசற்றதனத்தைக் கண்டு அப்பேர்ப்பட்ட பாலகரைக் கெடுக்குந் துர்மாதிரிகைக்காரர்மேல் ஆத்திரக் கோபமானுர். ஏனெனில் புறத்தியாரும் முக்கியமாய்ச் சிறு பிள்ளைகளும் வாலிபரும் பாவத்தில் விழுந்து முழுதும் நெறி தவறிக் கெட்டுப்போகிறதற்கு அவர்கள் காரணமாகிறுர்கள். அப்பேர்ப்பட்டவர்களைப்பற்றி இயேசுநாதர் சொன்னவைகளைக் கவனித்துக் கேள் : என்பேரில் விசுவாசமாயிருக்கிற இப்பேர்க்கொத்த பாலகருக்கு இடறலாயிருப்பவன் எவனே அவன்

கழுத்திலே எந்திரக் கல்லைக் கட்டி அவனைச் சமுத்திரத்தில் தள்ளிப்போடுகிறது தாவிளை. இடறலால் உலகத்துக்கு ஐயோ கேடாம்! உலகங் கெட்டுப்போயிருக்கிறதைப் பார்த்தால், அதிலே இடறல் வராமலிருக்கமாட்டாது. ஆகிலும் இடறல் எவனால் வருகிறதோ அவனுக்கு ஐயோ கேடாமென்றார் (மத். 18; லூக். 17).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—ஒருவனைப் பாவத்தில் விழச் செய்கிறது பாவத்திலும் மகா பெரிய பாவமென்று அர்ச். சின்னப்பர் சொல்லியிருக்கிறார். ஆகையால் இடறலாகிய பாவத்தின் தோஷத்தையும் அதினால் வருங் கனமான பொல்லாப்புகளையும் நன்றாய் யோசித்துப் பார்த்தாயானால், இயேசுநாதரைப்போல நீயும் அந்தப் பாவத்தையும் அதற்குக் காரணமானவர்களையுஞ் சினந்து வெறுப்பாய் என்பதற்குச் சந்தேகமில்லை. வேதபாரகரும் இப்பேர்ப்பட்ட துன்மார்க்கரை நெற்றியில் சுட்டாற்போல அவர்களைப்பற்றிக் கடினமாய்ப் பேசியிருக்கிறார்கள். எப்படியென்றால் இடறலுக்குக் காரணமானவன் பசாசுக்கு ஒப்பாயிருந்து மனிதரைப் பாவத்துக்கு இணக்குவதினாலும் பசாசைவிட அவன் அதிக சுளுவாய் அவர்களைப் பாவத்தில் விழத்தாட்டுவதினாலும் அவன் பசாசின் காரியக்காரனென்றும், பசாசினால் அனுப்பப்பட்ட தூதனென்றும், மனுஷ ரூபமுள்ள பசாசென்றும், மனுஷருடைய சரீரத்தைக் கொலை செய்கிறவனைப்பார்க்க ஆயிரம் பங்கு அதிக குற்றவாளியான ஆத்துமக் கொலைபாதகனென்றும் இயேசுநாதர் பட்ட பிரயாச முயற்சியைக் கெடுக்கும் அந்திக்கிறீஸ்துவென்றும், எவ்விடத்திலும் ஆத்துமத்துக்குத் தொற்றுவியாதியையுஞ் சாவையும் வருவிக்க உயிர் வடிவாய்த் தோன்றிய கொள்ளை நோயென்றுஞ் சொல்லியிருக்கிறார்கள். நீயும் இப்படி வாக்கினாலாவது கிரியையினாலாவது செய்யவேண்டியதைச் செய்யாததாலாவது எப்போதாகிலும் இடறலுக்குக் காரணமாய் இருந்ததில்லையோ?

மனப்பற்றுதல்.—இப்பேர்க்கொத்த இடறலால் உண்டாகும் கனமான பொல்லாப்புக்கு நீ தப்பித்துக் கொண்டதற்காகவும் கோடாகோடி சனங்களைப்போல நீயும்



நிர்ப்பாக்கியமாய் நித்திய நரக ஆக்கினைக்கு இரையாகாமலிருப்பதற்காகவுஞ் சர்வேசுரனுக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்வதுமன்றி இடறல்பட்டுக் கெட்டுப்போனவர்களுக்காகவும் வேண்டிக்கொள்.

பிரதிக்கினை.—இடறலினிமித்தம் கணக்கற்ற ஆத்துமாக்கள் சேதமாய்ப்போகிறது இயேசுநாதசுவாமிக்கு நஷ்டமானபடியினாலே இந்த நஷ்டத்தைப் பரிகரிக்கும்படி உன் பத்தி சுறுசுறுப்பும் பிறரீடேற்றத்தின்மேல் ஆவலும் மென்மேலும் அதிகரிக்கப் பிரயாசப்படு.

## 2-ம் பிரிவு

### சந்நியாச மடங்களில் வரும் இடறல்

தியானம்.—இடறலினிமித்தம் உலகத்துக்கு ஐயோ கேடென்று இயேசுநாதர் பிரலாபித்துச் சொன்னபோது சந்நியாச மடங்களை நினையாமற்போனாரோ? இல்லையே. துர்மாதிரிகையானது மடங்களில் அண்டாதோ, அது இன்னவென்று அங்கே தெரியாதோ? ஐயோ இல்லையென்று எப்படிச் சொல்லக்கூடும்! ஏனெனில் மடங்களிலிருக்கிறவர்களும் மற்றவர்களைப்போல மனுஷரானதினாலே தங்களுக்கு இளக்காரங் கொடுக்கவுஞ் சட்டதிட்டங்களை மீறி நடக்கவுஞ் சுபாவ விருப்பமுள்ளவர்களன்றோ? இதுதான் துர்மாதிரிகை வருவதற்கு வழி. மற்றவர்கள் இடறல் படுகிறதற்குத் துர்மாதிரிகை ஒன்றே போதும்; அவர்களைக் கெடுக்கவேணுமென்கிற கருத்து ஒருவனிடத்திலிருக்க வேணுமென்கிறது அவசியமல்ல. பேர்போன சாஸ்திரியாகிய அர்ச். தோமாஸ் சொல்லியிருக்கிறபடி வாக்கினாலுங் கிரியையினாலுமல்லாமல், செய்யவேண்டியதைச் செய்யாமல் விடுவதினாலும் பிறருக்குப் பாவத்தருணம் அல்லது காரணமாயிருக்கிறதுதான் இடறலென்னும் பாவமாகும். அப்படியே ஒருவன் மடத்தில் கட்டிக்கொள்ளுங் குற்றங்களைச் சிரேஷ்டர் அசட்டையினாலாவது சக்தியற்றதனத்தினாலாவது, தண்டியாமல் விட்டால் அது இடறலாமே. இதினால் பின்னுக்கு உண்டாகும் இளக்காரமும் அலங்கோலையும் நாளுக்குநாள் அதிகமதிமாய்ப் பர

விப் பரிகரிக்க வகையில்லாமற்போவதற்கு அவரே காரணமாயிருப்பார். அன்றியும் மடத்திலே எவ்வளவாவது செல்வாக்குள்ள சந்நியாசியானவன் பிரசித்தமாயும் வாடிக்கையாயுஞ் சபை ஏற்பாட்டின் சட்டதிட்டங்களை மீறிக்கொண்டு வந்தால் வேறே அனேகரும் அவனைப்போல் நடந்து இளக்காரந் தேடுவார்கள். இன்னும் ஒரு சந்நியாசி பெரியோர்மட்டில் சொல்லும் விஷ நிறைந்த கோளாறுகளாலும் இடைவிடாத முறுமுறுப்பினாலும் அதிகாரத்தையுங் கீழ்ப்படிதலையும் நிலைநிறுத்த வழியில்லாமல் எல்லாந் தாறுமாறாய்ப் போகக் காரணமாயிருப்பான். வேறு சிலர் மடத்தில் செய்யப்படுந் தாழ்ச்சி தபசு பத்தி முதலிய முயற்சிகளின்பேரிலுஞ் சிரேஷ்டர்பேரிலுங் குறைவாயும் பரியாசமாயும் பேசுகிறதினாலே ஒன்றுஞ் சரிவர நடவாமற்போவதற்கும், அந்தந்த ஆளுக்குங் காரியத்துக்கும் பொருந்தின மரியாதை முழுதுங் கெடுவதற்கு வழிபண்ணுவார்கள்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—எவ்விதத்திலாவது இடறல் வருவதற்கு நீ இடங்கொடுத்தாயோவென்று பார். அப்படி இடங்கொடுத்திருந்தால் அதற்குப் பொறுத்தல் கேட்டு உன்னால் வந்த பொல்லாப்புக்குப் பரிகாரஞ்செய்யப் பிரயாசப்படு. மேலும் மற்றவர்களுடைய துர்மாதிரிகைக்கு இணங்காமலும் அதினால் மயங்காமலுமிருக்க எச்சரிக்கையாயிரு. இது காரியத்திலே அர்ச். பெர்க்மான்ஸ் அருளப்பரைக் கண்டுபாவிக்கக்கடவாய். இவர் மற்றவர்களிடத்திலே குற்றமான யாதொரு காரியத்தைக் கண்டால் அதற்கு விரோதமான நன்மையை மகா பிரயாசத்தோடே செய்ய வருந்துவார். மேலும் இதைக் குறித்து அவர் சொல்லியிருக்கிறதாவது : நான் மற்றவர்களைச் சீர்திருத்த நினைக்கிறதுமில்லை; மற்றவர்களால் நான் சீரழியப்போகிறதுமில்லை யென்றார்.

**சம்பாஷணை.**—உனக்குக் காவலான சம்மனசானவரோடு சம்பாஷணை செய்து, துர்மாதிரிகையின் மாய்கையினின்று அவர் உன்னைக் காப்பாற்றவேணுமென்று மன்றாடு.

---



# 7-ம் தேதி

## பிறரைத் திருத்துவதின்பேரிலும் மன்னிப்பதின் பேரிலும் இயேசுநாதர் கொடுத்த கற்பனை

**ஆயத்தச் சிந்தனை.**—அப்போஸ்தலர் இயேசுநாதரைச் சூழ்ந்திருக்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

**தியானச் செபம்.**—பகுத்தறிவும் பிறசிநேகமும் நிறைந்த குணத்தைக் கேட்கக்கடவாய்.

### முதல் பிரிவு

#### பிறரைத் திருத்துவதற்கு ஏற்ற ஒழுங்கு

**தியானம்.**—இயேசுநாதர் கப்பர்நாவூம் ஊரிலிருந்து எருசலேம் பட்டணத்துக்குச் செய்த தூரப் பயணத்தில் வழி நெடுகத் தமது அப்போஸ்தலர்களுக்குப் புத்திமதி சொல்லிக்கொண்டு போனார். முந்தமுந்த இடறலுக்குக் காரணமானவர்கள்பேரில் தாம் கடுமையாய்ப் பேசினதைக் கேட்டு அப்போஸ்தலர்கள் அவர்களைப் பகைக்கலாமென நினைப்பார்களோவென்று பயந்து எல்லாத்துக்கும் முந்தித் தமது கற்பனை பிறசிநேகத்தோடு கூடிய கற்பனையென்று காண்பிக்கச் சித்தமானார். நமக்கு இடறலாயிருக்கிறவர்களையுந் தீங்கு செய்கிறவர்களையும் பகையாமலிருப்பதுமன்றி அவர்கள்மேல் மனமிரங்கி, அவர்களை நமக்குச் சகோதரராகப் பாவித்துச் சீர் திருத்தவேணுமென்று படிப்பிக்கிறார். இதுவிஷயத்தில் நாம் அனுசரிக்கவேண்டியதை நுணுநுணுக்கமாய்த் தெளிவித்துச் சொல்லியிருக்கிறதாவது : உன் சகோதரன் உனக்கு விரோதமாய்க் குற்றஞ் செய்திருப்பானேயாகில் நீ அவனுக்குத் தனித்துப் புத்தி சொல். அவன் உன் சொல்லைக்கேட்டு நடந்தால் அவனை உனக்கு ஆதாயமாக்கிக்கொள்வாய். அவன் உனக்குக் காது கொடாவிட்டால் இன்னும் உன்னோடுகூட ஒருவர் அல்லது இருவரை அழைத்துக்கொண்டுபோ. அவர்களுக்

கும் அவன் செவிகொடாதிருப்பானாகில் திருச்சபைக்கு அறிக்கைசெய். திருச்சபை சொற்படியுங் கேளானாகில் அவன் உனக்கு அக்கியானியைப்போலவும் ஆயக்காரனைப் போலவும் இருக்கக்கடவான் என்றார். (மத். 18.)

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நூதன போதகங்களைப் பிதற்றுகிறவர்கள்மட்டிலுங் குழப்பக்காரர் மட்டிலும் ஆத்தும மேய்ப்பருந் திருச்சபை அதிகாரிகளும் எப்படி நடந்துகொள்ளவேணுமென்று இயேசுநாதர் இவ்விடத்தில் பிரதானமாய்க் குறித்துக்காட்டுகிறதாகத் தோன்றுகிறது. அதெப்படியென்றால் முந்தமுந்த அப்பேர்ப்பட்டவர்களை அழைப்பித்து அவர்களுடைய துர்ப்போதனையையும் துர்மாதிரியையும் விளக்கிக் காண்பித்துப் புத்தி சொல்லவேணும். இன்னமும் அவர்கள் சலஞ்சாதிப்பார்களானால் கூடச் சிலரைச் சாட்சியாகவைத்து அவர்களுக்கு வேண்டிய புத்திமதி சொல்லி அவசரமானால் பெரியோர்களுக்கு அறிவிக்கவேண்டியது. அதற்கும் அவர்கள் அடங்காமல் மூர்க்கமாயிருந்தால் பிரசித்தமாய் அவர்கள் மேல் தீர்ப்புசெய்து சபைக்குப் புறம்பாக்கவேணும். இதோ 1900 வருஷமாய்த் திருச்சபையின் விசுவாசத்தையும் அதின் ஒன்றிப்பையும் பழுதில்லாமல் காப்பாற்றிக்கொண்டுவருகிற விவேக நிறைந்த ஒழுங்கு; இந்த ஒழுங்கையும் நியாயத்தையுங்கண்டு ஆச்சரியப்பட்டுச் சுவாமியைத் தோத்தரிப்போமாக. இந்த ஒழுங்கைத் துறவறத்தார் விஷயமாய் அநுசரித்து சகோதரரைச் சீர் திருத்துகிற வகை இன்னதென்று பார்க்கக்கடவோம். ஒரு சந்நியாசியினுடைய நடக்கை தவறுதலாகவும் அல்லது மற்றவர்கள் குற்றத்தில் விழ வழியாகவும் இருக்கிறதைக் கண்டால் அவன் செய்த குற்றத்தைச் சகோதரபட்சமாய் அவனுக்குத் தனித்துச் சொல்லிக் காண்பிக்கவேணும். உன் சொல்லுக்கு அவன் காது கொடாவிட்டால் வேறொருவரைக்கொண்டு அவனுக்குப் புத்தி சொல்லவேணும். இதிலுந் தன் குற்றத்தைத் திருத்திக்கொள்ளாவிட்டால் அல்லது நீ எச்சரிப்பதினாலே யாதொரு பலனும் வராதென்று கண்டால் சிரேஷ்டருக்கு அறிக்கையிடு. இதுவே இயேசுநாதர் காண்பித்த முறை



யாம். இதற்கு ஏற்றபிரகாரம் நடந்தாயோ? இதைவிட்டு, மற்றவன் கெட்டால் எனக்கென்னவென்று நினைத்து மனதிலும் புறத்தியிலும் அவனை நிந்தித்து அவனைச் சீர்திருத்துகிறதற்கு யாதொன்றுஞ் செய்யாமற்போனாயோ? அல்லது அவனைத் திருத்தக் கடமையில்லாதவர்களுக்கு அவனுடைய மறைவான குற்றங்களை அவிவேகத்தினால் வெளிப்படுத்தினாயோ? சிரேஷ்டருக்கு அறிக்கையிடுகையில் ஆத்திரத்தினாலே அவன் குற்றத்தை மிகுதிப்படுத்திச்சொன்னாயோ? ஒருவன் செய்த தப்பிதத்தைப்பற்றி நீ அவனைக் கண்டிக்கும்போது அவனைக் குத்தும்விதமாய்ப் பேசினதினால் அவன் வேறொரு தப்பிதத்தில் விழுவதற்குங் காரணம் நீயல்லவோ? சகோதரர், மாணாக்கர், வேலைக்காரர் முதலியவர்கள்பேரில் உனக்கு யாதொரு அதிகாரமிருந்தால் அவர்களை அவசரமின்றி முன்பின் பாராமல் எல்லாருக்கு முன் கடிந்துகொண்டாயோ? அல்லவென்று தனிப்படக் கண்டித்தாலும் வெடுவெடென்று சீறவில்லையோ? அல்லது உனக்கும் அவர்களுக்கும் மனத்தாங்கலிருக்கிற நேரத்திலேயே கண்டிக்கத் துவக்கினாயோ? இத்தனையுஞ் சர்வேசுரன் சமுகத்தில் யோசித்துப் பார்க்கவேண்டிய விஷயங்களாம்.

மனப்பற்றுதல்.—பகுத்தறிவு, விவேகம், பிறசிநேகம் என்னுங் குணங்கள் உன்னிடத்தில் விளங்க ஆண்டவரைப் பார்த்து மன்றாடு.

பிரதிக்கினை.—ஒருவனைக் கண்டிக்குமுன் அவனுடைய காவலான சம்மனசானவரைப் பார்த்து மன்றாடி அவர் உதவியைக் கேள்.

## 2-ம் பிரிவு

### மன்னிப்புக்கடுத்த ஒழுங்குகள்

தியானம்.—எத்தனைவிசை மன்னிக்கவேணும், எப்படி மன்னிக்கவேணுமென்று இயேசுநாதசுவாமி இன்னுந் தங்களுக்குத் தெளிவாய்ப் படிப்பிக்கவில்லையென்று அப்போஸ்தலர்கள் நினைத்ததாகத் தோன்றுகிறது. இதினாலே

தான் இராயப்பர் மற்றவர்கள் பேரால் ஆண்டவரைப் பார்த்து விண்ணப்பஞ் செய்து: சுவாமீ, என் சகோதரன் எனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்தால் எத்தனைவிசை பொறுத்தல் கொடுக்கவேணும்? ஏழுவிசையோவென்று கேட்க, இயேசுநாதர் திருவுளம்பற்றினதாவது: ஏழுவிசை மாத்திரமல்ல. ஏழு எழுபதுவிசை பொறுத்தல் கொடுக்க வேணுமென்றார். அதாவது எப்போதும் எப்போதும் முழுமனதோடே பொறுத்தல் கொடுக்கவேணுமென்றாற் போலாயிற்று. (மத். 18.)

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இரட்சகர் நமக்குக் கற்பிக்கும் இந்தப் படிப்பினையை நாம் பின்செல்லவேணுமானால் அவர் தமது ஸ்தானபதியாகிய குருவின் வழியாய்ப் பாவசங்கீர்த்தனத்திலே நமக்கு என்ன செய்கிறாரோ அதைத்தான் நாமும் பிறருக்குச் செய்யக் கடவோம். எத்தனைவிசை நாம் பாவசங்கீர்த்தனஞ் செய்தாலும், செய்த குற்றத்தைத் திரும்பத்திரும்பக் கட்டிக் கொண்டாலும் எப்போதும் அவர் நமக்குப் பொறுத்தல் கொடுக்கிறார். இன்னமும் நம்மிடத்தில் தாழ்ச்சியும் உத்தமமனஸ்தாபமும் நிறைந்த இருதயத்தைக் கண்ட மாத்திரத்திலே நமக்குப் பொறுத்தல் கொடுக்க எப்போதும் ஆயத்தமாயிருக்கிறார். நமது குற்றத்தையெல்லாம் அவர் முற்றும் பொறுத்துக்கொள்ளுகிறார். அவர் வார்த்தைக்கு இரண்டில்லை. இயேசுநாதர் உன்மட்டில் செய்து வருகிறதை நினைத்து அவருடைய குறையாத தயவையும் பொறுமையையும் மனத்தாராளத்தையும் வாழ்த்தி மென்மேலுங் கொண்டாடுவாயாக. நீயோவென்றால் பிறர் உனக்குச் செய்த சொற்ப பொல்லாங்கை மறப்பதற்கானாலும் முழுமனதோடு பொறுப்பதற்கென்கிலும் எவ்வளவு வருத்தப்படுகிறாய்? எவ்வளவு தாமதம் பண்ணுகிறாய்? இப்படி அவர்களுக்கு ஒருவிசை மன்னித்தாலும் மறுபடி ஒருகால் இல்லையென்கிறாயாக்கும். மறந்துபோன பழைய குற்றங்களை முதலாய் அவர்களுக்குச் சொல்லிக் காட்டுகிறாய். இதை நினைத்து வெட்கப்பட வேண்டாமோ? இனிமேல் இப்படிச் செய்யாதிருக்க வார்த்தைப்பாடு



கொடுத்து உன் தீர்மானத்தைப் பிரமாணிக்கமாய் நிறைவேற்றும்படி சுவாமியைப் பார்த்து மன்றாடு.

சம்பாஷணை.—நேசமுள்ள உன் திவ்விய இரட்சகரோடு சம்பாஷணை செய்.

---

## 8-ம் தேதி

### தேவமாதா பிறந்த திருநாள்

ஆயத்தச் சிந்தனை.—அந்தத் திருக்குழந்தை படுத்திருக்கும் மஞ்சத்தைச் சூழ்ந்துகொண்டிருந்த சம்மனசுக்களோடு நாமும் ஞான மேரையாய் ஒன்றித்திருப்போமாக.

தியானச் செபம்.—பரிசுத்த கன்னிமரியம்மாளை மென்மேலும் அறிந்து சிநேகித்துத் தோத்திரிக்க வரங் கேட்போமாக.

### முதல் பிரிவு

#### அர்ச். மரியாயின் பிறப்பு நமது சந்தோஷத்துக்குக் காரணம்

தியானம்.—உலகத்தின் பிரதிதின சரித்திராகமங்களில் குறிக்கப்பட்ட மிகவுஞ் சிறந்த நாட்களில் இந்த ஆச்சரியத்துக்குரிய கன்னி பிறந்த நாள் ஒன்றென்பதற்குச் சந்தேகமில்லை. ஏனெனில் இவள்தான் சீர்கெட்ட உலகத்தை மாற்றி அதற்கு வந்த அபகீர்த்தியையுஞ் சாபத்தையும் நீக்கி மகிமையுந் தேவ ஆசீர்வாதமுங் கிடைக்கப் பண்ணினவள். இவளே பாவத்தினால் குற்றவாளிகளாய்ப்போய் மனஸ்தாபப்பட்டிருந்த நமது ஆதித்தாய் ஆதித்தகப்பனுக்கும் அவர்கள் சந்ததிக்கும் இரட்சணியத்தின் ஏக நம்பிக்கையாகக் கர்த்தரால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவள். இந்தக் கன்னிதான் நாலாயிரம் வருஷத்துக்கு அதிகமாய் மகா ஆத்திர ஆவலோடே சகலரும் எதிர்பார்த்துக்கொண்டிருந்த இரட்சகரை உலகத்துக்குத் தந்தவள். இப்போர்க்

கொத்த கன்னியுந்தாயுமான அர்ச். மரியம்மாள் பிறந்த இந்தத் திருநாளை நாமும் மகா சந்தோஷத்தோடும் ஆரவாரத்தோடுங் கொண்டாடுகிறோம். திருச்சபையும் இந்தத் திருநாளை மகா அக்களிப்போடு கொண்டாடவாருங்களென்று நம்மை அழைக்கின்றது. ஏனெனில் இவள் பிறந்ததினாலே சர்வலோகத்துக்குஞ் சந்தோஷமும் பாக்கியமும் உண்டாயின. மோக்ஷத்தில் சம்மனசுகள் தங்கள் இராக்கினி பிறந்தாளென்று கொண்டாட்டம் பண்ணினார்கள். பிதாப்பிதாக்கள் ஸ்தலத்தில் நீதிமான்கள் தங்களை விடுதலையாக்கப் போகிறவள் உதித்தாளென்று அக்களித்தார்கள். ஆதாமுடைய மக்களோ தங்கள் தாயும் இரட்சணியமுமாயிருப்பவள் தங்கள் நடுவில் தோன்றினாளென்று கெம்பீரமாயிருக்க ஏதுவாயிற்று. இவ்விதமாய்த் தேவ தாயே, உம்முடைய பிறப்பு சர்வலோகத்துக்கும் அகமகிழ்ச்சியான செய்தியாயிற்றென்று திருச்சபை பாடுகின்றது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—திருச்சபையின் கருத்துக்கு இணங்கி இந்தத் திருநாளைப் புத்தியோடு கொண்டாடவும், தேவமாதாவுக்குப் பிரியமான விதமாய் நமது அகமகிழ்ச்சியைக் காண்பிக்கவும் நாம் செய்யத்தக்கதென்னவென்றால் முந்தமுந்த இந்த ஆண்டவளை நீதிச் சூரியனின் உதயமென்றும் நமது இராக்கினியென்றும் தாயென்றும் வாழ்த்தி, இவளுடைய பிரமாணிக்கமுள்ள தாசரும் நேசமுள்ள பிள்ளைகளுமாயிருக்கிறவர்களுக்குள் நாமும் ஒருவராயிருக்க ஆசிப்போமாக. 2-வது, மகா பெரிய அர்ச்சியசிஷ்டவர்கள் எக்காலத்திலும் சர்வேசுரனிடத்தில் பெற்றுக்கொண்ட வரங்களெல்லாவற்றையும் பார்க்க இந்த ஆண்டவள் சுபாவ ஒழுங்கிலும் ஞான ஒழுங்கிலும் மேலான வரங்களைத் தாம் பிறந்த க்ஷணத்திலே பெற்றுக்கொண்டதற்காக இவளைப் புகழ்ந்து பாராட்டக் கடவோம். 3-வது, இவள்மேல் பத்திவணக்கம் எங்கும் பரம்பவும், நமது பரிசுத்ததனத்தினாலும் உத்தம நடக்கையினாலும் அவளுடைய சாயலாகவும் வருந்துவோமென்று இவளுக்கு வாக்குத்தத்தஞ் செய்வோமாக.



மனப்பற்றுதல்.—அர்ச். மரியாயே, எங்கள் சந்தோ
ஷத்தின் காரணமே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.
பிரதிக்கினை.—இன்று முழுதும் மேற்சொன்ன பிர
காரம் நமது சந்தோஷத்தை அவளுக்குக் காண்பிப்போ
மாக.

## 2-ம் பிரிவு

### அர்ச். மரியாயின் பிறப்பு நமது நம்பிக்கைக்குக் காரணம்

தியானம்.—ஒரு நல்ல இராக்கினியின் பிரசைகள்
அவள் பிறந்த உற்சவ நாளில் தங்களுக்கு வெகு சகாயங்
களும் மேலான வெகுமானங்களுந் தந்தருளுவாளென்று
எண்ணி அந்த உற்சவ நாள் எப்போது வருமோவென்று
ஆசையோடு எதிர்பார்த்திருப்பார்கள். அவர்களுடைய
நம்பிக்கை வீணாய்ப்போகிறது அபூர்வம். ஆகிலும் உல
கத்திலுள்ள மகாமகாப்பட்ட இராக்கினிகளுடைய பொக்கி
ஷங்கள் எவ்வளவாயிருந்தபோதிலும் அவைகள் மட்டுள்ள
வைகளாயிருக்கிறதினாலே அவர்கள் தங்கள் பிரசைகளுக்
குக் கொடுக்கும் வெகுமான உபகாரங்களும் அப்படியே
மட்டுள்ளவைகளாயிருக்கும்; எல்லாரையுந் திருப்தியாக்க
அவர்களாலே முடியாது. தேவமாதாவினிடத்திலோ அப்
படியல்ல. ஏனென்றால் இயேசுநாதசுவாமி தமது பாடு
களினாலும் மரணத்தினாலும் அடைந்த அளவில்லாத பேறு
பலன்களாகிய தேவ வரப்பிரசாதங்களையெல்லாம் தமது
தாயார் கையில் கொடுத்து அவள் தன் இஷ்டம்போல்
அவைகளைப் பகிர்ந்து கொடுக்கும்படி செய்திருக்கிறார்.
ஆகையால் இந்தப் பொக்கிஷம் எவ்வளவாவது குறையு
மென்கிற பயமின்றித் தேவமாதா தமது கை நிறைய
அள்ளி அள்ளிக்கொடுக்கலாம். இதிலே யாதொரு மட்டு
மிதமில்லாமல் அவள் எப்போதுங் கொடுக்கவுங்கூடும்.
மேலும் அன்புள்ள தாய்மார்களுக்குள் இவள் மேலான
அன்புள்ள தாயாராயிருக்கிறதினாலே ஏராளமாய்க் கொடுக்
கப் பிரியப்படுகிறாளென்று நமக்கே தெரியும். அப்படி
யிருக்க நாம் இன்றைக்கு எவ்வளவோ வரப்பிரசாதங்களை
அடைவோமென்று நம்பிக்கையோடிருக்கவேண்டியது!

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—ஆகையால் இன்று பூரண நம்பிக்கையோடு அவளை அண்டிப் போய் அநேகாநேக வரப்பிரசாதங்களைக் கேட்கக்கடவோம். நமக்காகவும் மற்றவர்களுக்காகவும் நமது குடும்பத்துச் சனங்களுக்காகவும் நமது சபையைச் சேர்ந்தவர்களுக்காகவும் நமது விசாரணைக்குட்பட்டிருக்கிறவர்களுக்காகவும் சர்வ திருச்சபைக்காகவும் உலகத்தில் வசிக்கிற தொண்ணூறு கோடி சனங்களுக்காகவும் ஏராளமான வரப்பிரசாதங்களைக் கேட்போமாக. கடைசியாய் இந்தத் தொண்ணூறு கோடி சனங்களும் ஒரே விசுவாசத்தால் ஒன்றித்து ஒரே ஞானக் குடும்பமும் ஒரே திருச்சபையும் ஆகும்படி வெகுவாய் மன்றாடுவோமாக. பட்சம் நிறைந்த நமது தாயாருடைய திருநாட்களில் அனந்த முறை விசேஷ தேவ வரப்பிரசாதத்தை நாம் அடையாமல் போவதற்கு காரணமென்ன? நாம் சொற்பக் காரியங்களைக் கேட்கிறதும், விசேஷமாய் நமது நம்பிக்கை அற்பமாயிருக்கிறதும் இதற்குக் காரணமாகும். ஆனால் நாம் பூரண நம்பிக்கையாயிருப்பதற்கு எல்லா முகாந்தரமுமிருக்க நமது நம்பிக்கை குறைந்துபோவதேனென்று கேட்பாயோ? ஒருவேளை நமது நடத்தை நம்முடைய பரிசுத்த தாயாருடைய நடத்தைக்கு முழுதும் வேற்றுமையாயிருக்கிறதினாலோவென்று பார். அவள் ஏகாந்தத்தில் ஒடுங்கித் தன்னை முழுதும் ஒறுத்துவந்தாள். நாமோ நமது மனதை அலையவிட்டு ஆயிரம் போக்குச்சொல்லி வெளியே சுற்றித் திரிந்து எப்போதும் உல்லாச சுகத்தைத் தேடுகிறோம். அவள் தமது வாழ்நாளெல்லாங் கீழ்ப்படிதலுக்குஞ் சம்மனசுக்குரிய சாந்தகுணத்துக்கும் உத்தம மாதிரிகையாயிருந்தாள். நாமோவெனில் முறுமுறுத்து அநேகாநேகமுறை வெடுவெடுப்புள்ளவர்களாய் ஆத்திர எரிச்சல் குபீரென்றெழும்ப விடுகிறோமன்றோ? இதெல்லாம் விட்டு நமது பரிசுத்த தாயாருடைய சாயல் நம்மிடத்தில் விளங்கும்படி அதிக மகிமையாய்ப் பிரபாசப்படுவோமாக. இப்படிச் செய்வோமானால் நமக்கு நன்மையாயிருக்கிறதெல்லாம் அவளுடைய மன்றாட்டினால் நிச்சயமாய்க் கைக்கொள்வோமென்று நம்பி அவளைப் பிரார்த்திக்க வழியாகும்.



**சம்பாஷணை.**—பரிசுத்த கன்னியாஸ்திரியோடே சம்பாஷணை செய்து கிருபைதயாப மந்திரத்தின் அர்த்தத்தை விரிவாய் ஆராய்ந்து பார்ப்பாயாக.

---

## 9-ம் தேதி

## இராசாவும் அவன் கடன்காரனுமாகிய இருவர் உவமை

**ஆயத்தச் சிந்தனை.**—இயேசுநாதர் தமது அப்போஸ்தலர்களுக்கு இந்த உவமையை வெளிப்படுத்துகிறதாக ரூபிகரித்துக்கொள்.

**தியானச் சேபம்.**—உன் பேரில் நீ கண்டிப்பாயிருந்தாலும் பிறர்மட்டில் எப்போதும் அதிக தயவுள்ளவனாயிருக்க ஆண்டவரை மன்றாடு.

### முதல் பிரிவு

#### இராசாவினிடத்தில் விளங்கின சாந்தமும் மனத்தாராளமும்

**தியானம்.**—இயேசுநாதர் அப்போஸ்தலருக்குச் சொன்னதைக்கொண்டு பிறரை மன்னிப்பது எவ்வளவு அவசியமென்றும் மன்னிக்க மாட்டேனென்பது எவ்வளவு கொடிய அநியாயமென்றும் வெகு தெளிவாயிருக்கின்றது. ஆயினும் அவர்கள் இதை அதிக துலக்கமாய்க் கண்டுணரும்படி ஒரு உவமையைச் சொல்லிக்காண்பிக்கிறார். அதாவது பரலோக இராட்சியம் தன் ஊழியரிடத்தில் கணக்குக் கேட்கச் சித்தமான ஓர் அரசனுக்கு ஒப்பாயிருக்கின்றது. அவன் கணக்குக் கேட்கத் துவக்கினபோது பதினாயிரந் தாலந்து என்னும் பணங் கடன்பட்டி

ருந்த ஒருவனை அவன் முன்பாகக் கொண்டுவந்து விட்டார்கள். அந்தக் கடனை உத்தரிக்க அவனுக்கு நிருவாகமில்லாததினாலே, அவனையும் அவன் பெண்சாதி பிள்ளைகளையும் அவனிடத்தில் இருந்த யாவற்றையும் விற்றுக் கடனை அடைக்கும்படி அரசன் கட்டளையிட்டான். அவ்வூழியனோவெனில் அரசன் பாதத்தில் விழுந்து: என் மட்டில் பொறுமையாயிரும். உமக்கு எல்லாவற்றையுஞ் செலுத்திவிடுகிறேனென்று கெஞ்சி மன்றாடினான். அப்போது அரசன் அவ்வூழியன்மேல் மனமிரங்கி அவனை விடுதலைசெய்து, கடனையும் மன்னித்துவிட்டான் (மத். 18).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—தன் ஊழியர் நினையாத சமயத்தில் அவர்களிடத்தில் கணக்குக் கேட்க வந்த இந்த அரசன் யாரென்றால் இராசாதி இராசனாகிய சர்வேசுரன்தானென்று அறிவாயாக. நீ ஒருபோதும் நினையாத சமயத்தில் உனக்கு மரணத்தை அனுப்பி, உன்னிடத்தில் கணக்குக் கேட்பார். நீ அதற்குத் தயாராயிருக்கிறாயோ? பதினாயிரந் தாலந்து என்பது, ஐந்து இலட்சம் ரூபாய்க்குச் சமானம். இது மகா பெரிய கடனென்பதற்குச் சந்தேகமில்லை. இதினாலே நாம் தினந்தோறுங் கட்டிக்கொள்ளுகிற பாவங்களுங் குற்றங்குறைகளும் இயேசுநாதருடைய கண்ணுக்குமுன் எவ்வளவோ பெரிய கடனாக ஏறிப்போகிறதென்று நீயே பார். ஐயோ, இதை எவ்வளவாகிலும் நினைத்தாயோ? உன்மேல் சுமந்த கடனைத் தீர்ப்பதற்கு ஏற்ற அனேகானேக உபாயங்கள் உன் கையிலிருக்க, நீ அந்தக் கடனை அடைக்க வருந்துவதற்குப் பதிலாய் அதை நாளுக்குநாள் அதிகரிக்கிறாயாக்கும். மேலும் நம்பிக்கைக்கேடான அந்த ஊழியன் வெகுபாரிக் கடன்பட்டிருந்தும், இராசாவானவன் சுளுவாய் மனமிரங்கி அதை மன்னித்தானல்லவோ? இதைக் கண்டு, உன்னைக் கணக்குக் கேட்கப்போகிற சர்வேசுரனிடத்தில் இப்போதே உன் பாவக்கடன்களுக்கு மன்னிப்படைகிறது எவ்வளவு இலேசென்று பார். இப்படியிருக்க இனிமேல் உத்தரிக்கிறஸ்தலத்திலே போய் அந்தக் கடனைத் தீர்த்துக்கொள்ளலாமென்று நினைப்பது எவ்வளவு மதியீனம்!



மனப்பற்றுதல்.—இந்தச் சத்தியங்களின்மேல் விசுவாச முயற்சி செய்துகொள்.

பிரதிக்கினை.—உன் பாவத்தினிமித்தஞ் சர்வேசுரன் மட்டில் நீ பட்டிருக்குங் கடனெல்லாம் இப்பொழுதே தீர்க்கும்படி உன்னாலானமட்டும் பிரயாசப்படு.

## 2-ம் பிரிவு

### மன்னிப்படைந்த ஊழியன் காண்பித்த கல்நெஞ்சத்தனமும் உலோபத்தனமும்

தியானம்.—இயேசுநாதர் இன்னுந் தொடர்ந்து சொன்னதாவது: அவ்வூழியன் மகா தயவும் பெருந்தன்மையுமுள்ள அந்த இராசாவின் சமுகத்தைவிட்டு வெளியில் புறப்பட்டபோது தன்னிடத்தில் நூறு தேனியரென்னுஞ் சொற்பத்தொகையான பணங் கடன்பட்டிருந்த ஊழியன் ஒருவனைக் கண்டு அவனைப் பிடித்து அவன் தொண்டையை நெரித்து: நீ எனக்குக் கொடுக்கவேண்டிய கடனைக் கொடுவென்றான். அப்போது அந்த ஊழியன் அவனுடைய காலில் விழுந்து: கொஞ்சம் பொறுமையாயிரு; உனக்கு எல்லாவற்றையுஞ் சரியாய்ச் செலுத்திவிடுகிறேனென்று அவனைக் கெஞ்சி மன்றாடினான். அவனோ அதற்குச் சம்மதியாமல் தன் கடனைச் செலுத்தும்வரைக்கும் அவனைச் சிறைச்சாலையிலே போடுவித்தான் (மத். 18).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நாம் செய்த எண்ணிக்கைக்குள்ளடங்காத கனமான பாவங்களுக்குச் சர்வேசுரன் பொறுத்தல் கொடுத்திருக்க, பிறர் நமக்குச் செய்யுஞ் சொற்ப நிந்தை முதலிய குற்றங் குறைகளை முழுமனதோடே பொறுக்க வருத்தப்படுவோமாகில் நம்மிடத்தில் எவ்வளவோ அநியாயமும் நன்றிகெட்டதனமும் இருக்கின்றனவென்று நாம் தெளிவாய் உணரும்படி இயேசுநாதர் இந்த உவமையைச் சொல்லிக்காட்டியிருக்கிறார். உன்னிடத்தில் இந்த இரண்டு குறைகளுமில்லையோ? நம்மை மனநோகப்பண்ணிப் பழித்துத் தாழ்த்தினவர்கள்மேல் நாம் எப்போதுங் கொஞ்சம் இரகசியப்

பகை வைத்திருக்கிறதில்லையோ? அவர்கள் நமக்கு எதிர்ப்பட்டபோதிலும் நாம் பாராமலும் முகங்கொடுத்துப் பேசாமலும்போகிறதில்லையோ? சிலரைப்போல நாமும் மற்றவர்களுடைய குற்றங் குறைகளைச் சகிக்கவும் மன்னிக்கவும் மனமில்லாமல், நமது குற்றங்களை மாத்திரம் மற்றவர்கள் சாடையாய் விட்டுவிடவேணுமென்றும், நமது வீணிச்சைகளையும் ஆத்திரமான நடபடிக்கைகளையும் பாராமல் கண்ணை மூடிக்கொள்ளவேணுமென்றும் விரும்புகிறதில்லையோ?

**மனப்பற்றுதல்.**—சர்வேசுரன் சமுகத்தில் உன்னைத் தாழ்த்திப் பொறுத்தல் கேட்பாயாக.

**பிரதிக்கினை.**—நமதுபேரில் கண்டிப்பாயும் புறத்தியார் மட்டில் மனச்சகிப்பாயுந் தயை தாட்சணியமாயும் நடக்க வருந்தக்கடவோம்.

## 3-ம் பிரிவு

### இந்த உவமையின் முடிவு

**தியானம்.**—அந்த ஊழியன் தன் கடன்காரனுக்குச் செய்த அக்கிரமத்தை இராசாவானவன் அறிந்து அவனை அழைப்பித்துச் சொன்னதாவது: கெட்ட ஊழியனே, நீ என்னை மன்றாடினதினால் எனக்கு நீ செலுத்தவேண்டிய கடனையெல்லாம் நான் உனக்கு மன்னிக்கவில்லையோ? இப்படி நான் உன்பேரில் இரக்கமாயிருந்ததுபோல நீயும் அந்த ஊழியன்பேரில் இரக்கமாயிருக்க வேண்டாமோவென்று கண்டித்து, அவன் தன் கடனையெல்லாம் உத்தரிக்குந்தனையும் அவனை உபாதிப்பவர்களுக்குக் கையளித்தான். இது போல நீங்களும் மனம்பொருந்தி உங்கள் சகோதரருக்குப் பொறுத்தல் கொடாவிட்டால், பரலோகத்திலிருக்கிற என் பரமபிதாவானவரும் உங்களை அப்படியே நடப்பிப்பாரென்று இயேசுநாதர் திருவுளம்பற்றினார்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—திவ்விய இரட்சகர் இங்கே முடிவில் சொல்லியிருக்கிற வார்த்தை



கள் உன் இருதயத்தில் தைத்து ஆழமாய் இறங்கும்படி
செய். ஏனென்றால் உன் எதிராளியின்மேல் கோபமும்
பகையும் பழிநினைவும் உன் உள்ளத்தில் வேகமாய்க் கிளம்
பும்போது இந்த வார்த்தைகளை நினைத்தால், அவையெல்
லாம் அடங்கி அமர்ந்துபோம்.

**சம்பாஷணை.**—மகா இரக்கமுள்ள உன் திவ்விய
இரட்சகரோடு சம்பாஷணை செய்வாயாக. பாவத்தால் நீ
சர்வேசுரனை விட்டு விலகியிருக்க, அவர் தேவ பயத்தை
யும் மேலான நம்பிக்கையையும் உன் இருதயத்தில் ஒரு
மிக்க எழுப்பி உன்னை நல்வழியில் கொண்டுசேர்த்ததற்
காக அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செலுத்தி, இந்த
உலக மாய்கையால் வரும் ஆபத்துக்களினின்று நீங்கும்படி
அவரை மன்றாடு. மேலும் உனக்குப் பொல்லாப்புச் செய்
கிறவர்கள்பேரில் இனி ஒருபோதுங் கர்வங்கொள்ளமாட்
டேனென்று அவருக்கு வாக்குத்தத்தஞ்செய்.

---

## 10-ம் தேதி

### இயேசுநாதர் கலிலேயா நாட்டைக் கடந்தபோது சம்பவித்தவைகள்

**ஆயத்தச் சிந்தனை.**—இயேசுநாதர் தமது
அப்போஸ்தலர்கள் சீஷர்கள் முதலியவர்கள் நடுவே நடந்து
போகிறதாக ரூபிகரித்துக்கொள்.

**தியானச் சேபம்.**—அவரிடத்தில் விளங்குந் திவ்விய
குணங்கள் உன்னிடத்திலும் உண்டாகி மனத்தைரியம் வரு
விக்கும்படி வரங்கேள்.

## முதல் பிரிவு

### இயேசுநாதர் எருசலேம் பட்டணத்தை நோக்கி விரைவாய் நடந்துபோக அவரைத் துரிதப்படுத்துகிறார்கள்

**தியானம்.**—இயேசுநாதசுவாமி கப்பர்நாவூம் ஊரி
லிருந்து எருசலேம் பட்டணத்துக்கு வழியில் தங்கித்

தங்கிப் போகையில் நடந்த பல விசேஷ சம்பவங்களைச் சுவிசேஷகர் குறித்திருக்கிறார்கள். முந்தமுந்த அர்ச். சூசையப்பருடைய தமையன் மக்களாகிய அநேக பந்து சனங்கள் வழியில் அவரோடு சேர்ந்துகொண்டு கூடாரத் திருநாளுக்கு முந்தின நாளில் எருசலேம் பட்டணத்தில் சேரும்படி சீக்கிரம் நடந்துபோமென்று அவரைத் துரிதப் படுத்தினார்கள். அந்தத் திருநாள் செப்டெம்பர்-மீ 15-ம் தேதி நடந்ததென்று அறியவும். அந்தத் திருநாளிலே அவர் அநேக அற்புதஞ் செய்வாரென்றும், அது தங்களுக்கு ஒரு பெருமையென்றும் எண்ணி அவரைப் பார்த்து: உம்மை உலகத்துக்கு வெளிப்படுத்தும், நீர் அவ்விடத்தில் செய்யப்போகிற அற்புதங்களை உமது சீஷர்கள் காணச் செய்யும் என்றார்கள். அதற்கு இயேசுநாதர் நீங்கள் இந்தத் திருநாளுக்குப் போகவேணுமானால் போங்கள். நானோ அவ்விடத்துக்கு வரமாட்டேன். ஏனெனில் என் நேரம் இன்னும் வரவில்லையென்றார் (அரு. 7). ஆகையால் அங்கே போகிறதற்கு மனதில்லாதிருந்தாரென்று தோன்றுகிறது. கடைசியாய்ப் போனாலும் திருநாள் துவக்கி மூன்று நாள் ஆனபின் மாத்திரம் போனார். ஏனெனில் தமது உயிரைப் பறிக்கவேணுமென்று யூதர்கள் இரகசியத்தில் செய்திருந்த சதியோசனை உற்சவத்தின் முதல் நாளில் தான் வெளிப்பட்டுப் பிரசித்தமாகுமென்று அறிந்திருந்தார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—உன்னை உலகத்துக்குக் காட்டு, பேர் எடு, நாலுபேர் உன்னைக் கொண்டாடும்படி பார் என்று வழக்கமாய் ஆங்காரமானது நமது மனதுக்குள்ளே சொல்லிவருகிறது. ஐயோ, இந்த ஆங்காரந்தான் நாம் அந்தந்தக் கிரியைகளைச் செய்யும்படி நம்மைத் தூண்டிவிட்டு அவைகளுக்குச் சர்வேசுரனுடைய சமுகத்திலே யாதொரு பேறுபலனுமில்லாமற்போகச் செய்கிறது. நீ எவ்வளவு தூரம் ஆங்காரத்துக்கு அடிமைப்பட்டிருக்கிறாயென்று உன்னைப் பரிசோதித்துப்பார். ஏழைகளை விட்டு ஆஸ்திக்காரரோடே சகவாசம்பண்ண வேணுமென்று நீ ஆசிக்கிறதில்லையோ? ஒருவருஞ் சட்டை



பண்ணாத வேலைகளை விட்டு, பேரெடுக்கும்படியான காரியங்களிலே தலைப்படத் தேடவில்லையோ? நாட்டுப் புறத்தாரை விட்டு உயர்ந்த மனுஷர் சபையில் பேசிப் புழங்கப் பிரியப்படவில்லையோ? சர்வேசுரனைவிட வழக்கமாய் மனுஷருக்கே மிகவும் பிரியப்படக் கவலையாயிருக்கவில்லையோ? உன் நெஞ்சிலே கை வைத்து இவையெல்லாம் நன்றாய் ஆராய்ந்து பார்.

மனப்பற்றுதல்.—சர்வேசுரனுக்குப் பிரியப்பட வேணுமென்று செய்கிற காரியத்தைத் தவிர மற்ற எதுவும் அவர் கண்ணுக்கு முன் பெரிதுமல்ல, ஒரு பொருட்டுமல்லவென்று நன்றாய் உணரும்படி மெய்யாகவே ஆசிக்கக் கடவாய்.

பிரதிக்கினை.—மறுக்கப்படாத இந்தச் சத்தியத்துக்கு ஒத்தபிரகாரம் உன் நடக்கையைச் சீர்படுத்து. தாழ்ச்சி முயற்சி செய்து வீண் சலாக்கியமான நினைவு ஆசையெல்லாத்தையும் உடனே தள்ளிவிடு.

## 2-ம் பிரிவு

### சமாரியா நாட்டிலுள்ள ஒரு ஊரிலே இயேசுநாதருக்குத் தங்க இடங் கொடாமற்போகிறார்கள்

தியானம்.—சுவிசேஷகரான அர்ச். லூக்காஸ் சொல்லியிருக்கிறதாவது: இயேசுநாதர் சமாரியா நாட்டின் வழியாய்ப் போகும்போது ஒரு சிற்றூரில் தங்க நினைத்து இல்லிடங் கேட்க, அவ்வூர்ச் சனங்கள் இங்கே இடமில்லை போவென்று சொன்னார்கள். ஆகையால் யாகப்பர் அருளப்பர் என்கிற இரண்டு சீஷர்கள் இதைக் கண்டு ஆத்திரப்பட்டு: ஆண்டவரே, வானத்தினின்று அக்கினி விழுந்து இவ்வூராரை அழிக்கக் கற்பிக்கட்டுமா என்றார்கள். அப்போது இயேசுநாதர் அவர்களைக் கண்டித்து: நீங்கள் என்ன புத்தியுடையவர்களாய் இருக்கிறீர்களென்று அறியீர்கள். மனுமகன் மனிதர்களை நிர்மூலமாக்க வந்தவரல்ல; அவர்களை இரட்சிக்கிறதற்காகவே வந்தாரென்றார் (லூக். 9).

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—நம்மிடத்தில் சுபாவமாய் எழும்பும் மிதமிஞ்சின ஆத்திர
மெல்லாம் எவ்வளவுதான் நியாயமென்று தோன்றினாலும்,
திவ்விய இரட்சகர் சொன்ன இந்த வாக்கியங்களினாலே
அதை நம்மை விட்டு அகற்றவேணுமென்று நன்றாய்
விளங்குகிறது. சண்டாளப் பாவிகளுக்கும் வேதவிரோதி
களுக்குஞ் சர்வேசுரன் தக்க ஆக்கினையை உடனே இட
வேணுமென்று கேட்கிறது சுத்தப் பிசகு. இது இயேசு
நாதருடைய குணமல்ல. ஏனென்றால் மனிதர்களை நிர்மூல
மாக்குவதற்கல்ல; ஆனால் அவர்களை இரட்சிக்கிறதற்
காகவே வந்திருக்கிறேனென்கிறார். அன்றியும் நம்மை
உபத்திரவப்படுத்துகிறவர்களுக்காக நாம் வேண்டிக்கொள்
ளச் சொல்லுகிறார். அவரே சிலுவையில் தொங்கும்போது
தமது சத்துருக்களுக்காக வேண்டிக்கொண்டதுமல்லாமல்,
அர்ச். இராயப்பர் சொல்லுகிறதுபோல ஒருவராகிலுஞ்
சேதமாகாமல் எல்லாருந் தபசு செய்யும்படி அவர் நமது
குற்றங்களைச் சகித்துக்கொண்டுவருகிறார்.

**மனப்பற்றுதல்.**—துஷ்டர்களுக்குச் சர்வேசுரன்
புதுமையாக ஆக்கினையிட்டுப் பழிவாங்கவேணுமென்று
கேளாமல் அற்புதமாய் அவர்களை மனந்திருப்ப மன்றாடு.

**பிரதிக்கினை.**—பாவிகள் மனந்திரும்புவதற்காக அடிக்
கடி பிரார்த்திக்கவேண்டியதேயன்றி அவர்கள் மனந்திரும்ப
மாட்டார்களென்று ஒருபோதும் அவநம்பிக்கைப்படக்
கூடாது.

## 3-ம் பிரிவு

### வேறொரு ஊரிலே இயேசுநாதருக்கு இடங் கிடைக்கிறது

**தியானம்.**—இயேசுநாதரும் அவருடைய சிஷர்க
ளும் ஒரு ஊரில் தங்க இடங் கேட்டும் அந்தக் குடிகள்
கொடாமல் அவர்களைத் தள்ளிவிட்டார்கள். அப்போது
அவர்கள் வேறே ஊருக்குப் போய்த் தங்கினார்களென்று
அர்ச். லூக்காஸ் சொல்லியிருக்கிறார் (அதி. 9).



**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—
இயேசுநாதருக்குத் தங்க இடங்கொடுத்த அந்த ஊரார்
மெய்யாகவே பாக்கியவான்கள். ஏனென்றால் திவ்விய
இரட்சகர் வழிநடந்துபோகையிலே நன்மை செய்திருக்க
அந்த ஊரில் கொஞ்சநேரந் தங்கியிருந்தபோது அவர்
களுக்கு எவ்வளவோ நன்மைசெய்திருப்பார்! இப்படியிருக்
கத் தேவநற்கருணை வழியாய் இயேசுநாதர்சுவாமியை உட்
கொண்டு தன் இருதயத்தில் அவருக்கு இடங்கொடுக்கிற
வனும் பாக்கியவானல்லவோ!

**சம்பாஷணை.**—என் திவ்விய இயேசுவே, என் இரு
தயத்தைத் தேவரீர் கைக்கொண்டு அதில் வாசம்பண்ண
எழுந்தருளிவாரும். அது வேறெந்தச் சிருஷ்டிக்கும் பாத்
தியமாகாமல் முழுதும் உமக்குச் சொந்தமாகக்கடவது.
ஒருவன் என்னை சிநேகிப்பானானால் என் பிதாவும் அவ
னைச் சிநேகிப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவ
னுக்குள் வாசஞ்செய்வோமென்று தேவரீர் செய்தருளின
உன்னத வாக்குத்தத்தம் என்னிடத்திலும் நிறைவேறக்கட
வது (அரு. 14).

---

## 11-ம் தேதி

### இயேசுநாதருடைய பயணத்திலே நடந்த வேறே சம்பவங்கள்; பத்துக் குஷ்டரோகிகள் எதிர்ப்பட்டது

**ஆயத்தச் சிந்தனை.**—இயேசுநாதர் குஷ்டரோகிக
ளைப் பார்த்து நீங்கள் போய்க் குருப்பிரசாதிகளுக்கு உங்க
ளைக் காண்பியுங்களென்று சொல்லுகிறதைக் கேட்கிறதாக
ரூபிகரித்துக்கொள்.

**தியானச் செபம்.**—பாவமாகிய குஷ்டரோகம் நமது
ஆத்துமத்தை ஒருபோதும் அண்டாதபடி மன்றாடுவோ
மாக.

## முதல் பிரிவு

### குஷ்டரோகிகளுடைய மன்றாட்டு

தியானம்.—எருசலேம் பட்டணத்துக்குப்போகும் சாலைப் பாதையின் கிட்ட இருந்த ஒரு ஊரில் இயேசுநாதர் பிரவேசித்தபோது குஷ்டரோகிகளாகிய பத்துப்பேர் அவருக்கு எதிராக வந்து, சற்றுத்தூரத்தில் நின்று: எங்கள் குருவாகிய இயேசுவே, எங்கள்பேரில் இரக்கமாயிருமென்று உரத்த சத்தத்தோடு விண்ணப்பஞ் செய்தார்கள் (லூக். 17). அவர்கள் செய்த இந்த மன்றாட்டின் விசேஷ குணங்களை யோசித்துப் பார்ப்போமாக. முதலாவது அந்த மன்றாட்டு மகா தாழ்ச்சியுஞ் சங்கையுமுள்ளதாயிருந்தது. எப்படியென்றால் அவர்கள் குஷ்டரோகத்தால் அருவருப்பான தங்கள் அந்தஸ்தைக் கண்டு கூச்சப்பட்டு இயேசுநாதரிடத்தில் நெருங்கி வரத் தாங்கள் யோக்கியரல்லவென்று எண்ணியிருந்தார்கள். 2-வது, நம்பிக்கை நிறைந்தது. ஏனெனில் தாங்கள் எட்ட நின்றாலுஞ் சுபாவமான யாதொரு அவுழ்தமுமில்லாமல் ஆரோக்கியம் அடையலாமென்று உறுதியாயிருந்தார்கள். 3-வது, சுறுசுறுப்புள்ளது. ஏனென்றால் குணப்படவேணுமென்கிற மட்டற்ற ஆவலோடே மனந்துடித்துப் பிரார்த்தித்தார்கள். 4-வது, மனதை இளக்கக்கூடியது. அதெப்படியென்றால் இயேசுவே, இரட்சகரே, குருவேயென்று மனம் உருகிப் போகும்படியான பேர்களைச் சொல்லிக் கூப்பிட்டார்கள். கடைசியாய் இந்த மன்றாட்டு பிறசிநேகத்தோடு கூடினது. ஏனென்றால் ஒவ்வொருவனுந் தனக்காகமாத்திரம் மன்றாடாமல் பொதுவாய்த் தங்களெல்லாருக்காகவுஞ் சேர்ந்து மன்றாடுகிறார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நீ இப்போது தியானித்த இந்தக் குணங்களெல்லாம் உன் செபங்களிலும் விளங்குகின்றனவாவென்று பார். உன் செபங்களும் இந்தக் குணங்களோடு பொருந்தியிருக்கச் செய்வாயாகில் நீ கேட்கும் மன்றாட்டு எப்போதும் பலிக்கும். இது



உனக்கு வருத்தமாய்த் தோன்றுகிறதோ? செபம் பண்ண
வேணுமென்று குஷ்டரோகிகளுக்கிருந்த அவசரம்
உனக்கு இல்லையென்று நினைக்கிறாயோ? உன் ஆத்துமத்
தைத் தொற்றியிருக்கிற பாவமென்கிற குஷ்ட வியாதியி
னால் அவர்களைப் பார்க்க நீ சர்வேசுரன் கண்ணுக்கு முன்
அதிக நிர்ப்பாக்கியமுள்ளவனாகவும் அதிக அவலக்ஷண
முள்ளவனாகவுந் தோன்றுகிறதில்லையோ?

மனப்பற்றுதல்.—செபத்தின்மேல் பற்றுதலாகிய வார்த்தைக் கேட்பேன்.

பிரதிக்கினை.—இன்றையத்தினம் என் செபங்களையெல்லாம் நன்றாய்ச் செய்ய வருந்துவேன்.

## 2-ம் பிரிவு

### குஷ்டரோகிகளுடைய கீழ்ப்படிதல்

தியானம்.—இயேசுநாதர் குஷ்டரோகிகளைக் கண்டு அவர் அவர்களுடைய விண்ணப்பத்தைக் கேட்டவுடனே அவர்களை நோக்கி: நீங்கள் போய் உங்களைக் குருக்களுக்குக் காண்பியுங்களென்றார். திவ்விய கர்த்தர் இந்தக் கட்டளை விட்டபோது, அவர்கள் போய்த் தங்களைக் குருக்களுக்குக் காண்பிக்கு முன்னமே அவர்களுடைய குஷ்ட வியாதி நீங்கிப்போகவேணுமென்று சித்தமாயிருந்தார். ஆகிலும் இதைப்பற்றி அவர்களுக்கு யாதொரு உறுதியும் வாக்குத்தத்தமுங் கொடுத்தவரல்ல. அவர்களும் இயேசுநாதரிடத்தில் இந்த வியாதி குணமாவதற்கான வழியென்னவென்றும் இப்படித் தங்களை அனுப்புவதற்கு முகாந்தரமேதென்றுங் கேட்பது உலகநியாயத்துக்கு ஒத்ததாகத் தோன்றினாலும் யாதொன்றுங் கேட்டவர்களல்ல. வேறு யோசனைக்கு இடங்கொடாமல் அவர் சொன்னபடி கேட்டு வழிநடந்துபோகையிலே தங்கள் கீழ்ப்படிதலுக்கான சம்பாவனையை அடைந்தார்கள். அர்ச். லூக்காஸ் சொல்லியிருக்கிறதுபோல அவர்கள் போகும்பொழுதே சொஸ்தமானார்கள் (லூக். 17).

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—இதுவே உத்தம கீழ்ப்படிதலுக்கு யோக்கியமான மாதிரிகை. குருட்டுக் கீழ்ப்படிதல் எவ்வளவோ பேறுபலனும் அனுகூலசித்தியும் உள்ளதென்று நமது புத்தியில் நன்றாய்ப் பதிவதற்கு இதுவே தகுந்த அத்தாட்சி. இதைக் குருட்டுக் கீழ்ப்படிதலென்று சொல்வதற்கு நியாயமேதென்றால் சர்வேசுரனையும் அவருடைய பெயரையுமாத்திரம் நாம் உத்தேசித்து நமக்குக் கட்டளையிடுகிற சிரேஷ்டருடைய குணாகுணங்களையும் அவர் கட்டளை இடுவதற்கான முகாந்தரங்களையும் அது கூடுங் கூடாதென்கிற ஞாயத்தையும் அதிலுள்ள வருத்தத்தையும் யோசித்துப் பாராமல் கண்ணை மூடிக்கொண்டு கீழ்ப்படிகிறதினாலே இந்தப் பேர் கொடுக்கப்படுகிறது. இப்படிக் கீழ்ப்படிகிறது பைத்தியமென்று உலகத்தார் சொன்னாலுஞ் சர்வேசுரன் சமுகத்திலே இது விலைமதிக்கப்படாததாயிருக்கின்றது. ஏனென்றால் இதினிமித்தம் மனுஷன் தன்னிடத்தில் உள்ளவைகளில் மகா உன்னதமாகிய மனதைச் சர்வேசுரனுக்குப் பலியாகக் கொடுக்கிறதினாலே இது விலைமதிக்கப்படாதது. இதைப்பற்றிச் சர்வேசுரனும் இப்பேர்க்கொத்த கீழ்ப்படிதலுக்குச் சிறந்த சம்பாவனையைக் கொடுத்துவருகிறதுமன்றி, அனந்த விசை வெகு புதுமைகளையுஞ் செய்திருக்கிறார். இதற்கு எடுத்துக்காட்டக் கூடுமான கணக்கற்ற அத்தாட்சிகளுக்குள் இங்கே சொல்லப்பட்டதும் ஒன்றென்று எல்லாருக்கும் வெட்டவெளியாகிறது. இப்படியிருக்க இந்த உத்தம கீழ்ப்படிதலை நீ எப்போதும் பெரிதாய் மதித்து வந்தாயோ? இதை அப்பியாசம் பண்ணி வருகிறாயோ?

**மனப்பற்றுதல்.**—இப்பேர்க்கொத்த உத்தம கீழ்ப்படிதலுக்கு அவசரமாய் வேண்டிய உயிருள்ள விசுவாசத்தை உனக்குக் கொடுக்கவேணுமென்று சர்வேசுரனைக் கெஞ்சி மன்றாடு.

**பிரதிக்கினை.**—சிரேஷ்டராயிருக்கிறவர் மற்ற மனுஷர்களைப்போல குற்றமுங் குறையுமுள்ளவரென்று பாராமல் சர்வேசுரனிடமாயிருந்து கற்பிக்கிறவரென்று நினைத்து நடக்கப் பிரயாசப்படுவாயாக.



## 3-ம் பிரிவு

### குஷ்டரோகிகளிடத்தில் தோன்றின நன்றியறியாமை

**தியானம்.**—பத்துக் குஷ்டரோகிகளுஞ் சொஸ்தமடைந்தார்கள். ஆனால் ஒருவன் மாத்திரந் தன் நன்றியைக் காட்டினான். அர்ச். லூக்காஸ் சொல்லியிருக்கிறதைப் போல அவர்களுள் ஒருவன் தான் சொஸ்தமானதைக் கண்டமாத்திரத்திலே உரத்த சத்தத்தோடு சர்வேசுரனைத் துதித்துக்கொண்டு திரும்பிவந்து இயேசுநாதருடைய பாதத்தில் சாஷ்டாங்கமாய் விழுந்து அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்தான். இவனோ சமாரித்தானாயிருந்தான். மற்றவர்கள் தாங்கள் அடைந்த நன்மைக்கு நன்றியறியாமல் தங்களுக்கு உபகாரஞ் செய்தவரை மறந்துவிட்டார்கள். அப்போது இயேசுநாதர் அவனைப் பார்த்து: பத்துப்பேரும் ஆரோக்கியம் அடையவில்லையோ; மற்ற ஒன்பது பேரும் எங்கே? அந்நியனான இவன் மாத்திரஞ் சர்வேசுரனுக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்தானென்று சொல்லி அவனை நோக்கி: நீ எழுந்திருந்து போ, உன் விசுவாசம் உன்னை இரட்சித்ததென்றார்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—இந்த வார்த்தைகளினாலே இயேசுநாதர் நன்றியறிதலை எம்மாத்திரங் கனமாய் எண்ணுகிறாரென்றும், அதினால் நாம் சர்வேசுரனுக்கு நன்றி செலுத்தும்படி எவ்வளவோ கவனிக்கவேணுமென்றும் உச்சிப்பகலிலுந் தெளிவாய் விளங்குகிறது. அப்போஸ்தலரும் ஓயாமல் நன்றியறிந்த தோத்திரஞ் செய்யுங்களென்று நம்மை ஏவுகிறார். ஆயினும் எத்தனையோ விசை இதில் தவறிப்போகிறோம்! கொள்ளைநோய் பரம்புங் காலத்தில் அதற்குத் தப்பித்துக்கொள்ளும்படியாக எல்லாரும் நம்மை வேண்டிக்கொள்ளச் சொல்லுகிறார்கள்; நாமும் ஆகட்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறோம். ஆனால் அந்த ஆபத்து நீங்கின பிறகு நாம் சுவா

மிக்கு நன்றியறிந்ததோத்திரஞ் செய்ய நினைக்கிறதில்லை. ஒரு வியாதி விலகி நாம் சுகமாகும்போது சிலவிசை சர்வேசுரனுக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்கிறோம். இதைப் பார்க்கப் பெரிய உபகாரமாகச் சர்வேசுரன் நம்மைச் சரீர சௌக்கியத்தோடு காப்பாற்றிவருகிறதற்காக நன்றியறிந்திருக்கிறோமோ? தினந்தோறும் அசனத்துக்குப் பின் நன்றியறிந்த தோத்திரஞ் செய்யும்போது அதைக் கவனத்தோடு செய்கிறோமோ? ஐயோ, எத்தனையோ முறை உதடு மாத்திரம் அசைகிறது!

சம்பாஷணை.—உனக்குக் காவலான சம்மனசோடு சம்பாஷணை செய்.

---

# 12-ம் தேதி

## அடிக்கடி பாவசங்கீர்த்தனம் செய்வதின்பேரில்

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதர் குஷ்டரோகிகளை நோக்கி: நீங்கள் போய், உங்களைக் குருக்களுக்குக் காண்பியுங்களென்று சொல்லுகிறதாக ரூபிகரித்துக்கொள்.

தியானச் செபம்.—எப்போதுந் தக்க பிரகாரமாய்ப் பலனோடு பாவசங்கீர்த்தனஞ் செய்ய வரங் கேள்.

### முதல் பிரிவு

#### பாவசங்கீர்த்தனத்துக்கு வேண்டிய ஆயத்தம்

தியானம்.—குஷ்டரோகமானது நமது ஆத்துமத்தைச் சர்வேசுரன் பார்வைக்கு மகா அவலட்சணமாக்குகிற பாவத்துக்கு உருவகமாயிருக்கிறதென்று வேதபாரகர் சொல்லுகிறார்கள். குஷ்டரோகிகள் தங்களைக் குருக்களிடத்தில் காண்பிக்கவேணுமென்று இயேசுநாதர் இட்ட கட்டளையானது பச்சாத்தாபமாகிற தேவ திரவிய அநுமானத்தின் வழியாய்ப் பாவமாகிற வியாதியினின்று நாம் சொஸ்தமடையும்படி சர்வேசுரனுடைய ஸ்தானபதிகளா



கிய குருக்களிடத்திற்போகவேண்டியதற்கு அடையாளமாயிருக்கின்றது. ஆகையால் பச்சாத்தாபமென்கிற தேவதிரவிய அநுமானத்தினாலே நமக்கு வருஞ் சகல நன்மைகளும் அதை யோக்கியமான விதமாய்ப் பெற்றுக்கொள்வதற்கு வேண்டிய காரியங்களும் எவையென்று நினைத்துக்கொள்வோமாக. முந்தமுந்த அதற்கு ஆயத்தஞ் செய்யவேணும். இதைக் கருத்தோடுங் கவனத்தோடுஞ் செய்யவேண்டியது. ஆனால் மிஞ்சின கவலையாகாது. பத்தியுள்ள சில ஆத்துமாக்களுக்குப் பாவசங்கீர்த்தனமானது ஒரு வேதனை போலிருக்கும். சிலர் ஆத்துமசோதனை செய்கிறதிலேயும் உத்தமமனஸ்தாபப்படத் தங்கள் மனதை எழுப்புகிறதிலேயும் மித மிஞ்சிப்படுகிற பிரயாசத்தினாலே தவிக்கிறார்கள். இவ்விரண்டு காரியத்திலுந் தாங்கள் என்ன செய்தாலும் போதாதென்று நினைக்கிறார்கள். இது ஆபத்துக்குரிய கேடு. ஆயினும் இதைவிடத் துறவிகளாயிருக்கிறவர்கள் அஞ்சவேண்டிய வேறொரு பொல்லாப்பு உண்டு. அதேதென்றால் சிலர் பாவசங்கீர்த்தனத்தை வெறும் வாடிக்கையாக்கி, ஆத்தும சோதனையை அசட்டை பண்ணுவார்கள். தங்கள் குற்றங்களுக்கெல்லாம் ஒரு வரிசைமுறைமை வைத்துக்கொண்டு அதைச் சற்று மாற்றியும் மாற்றாமலும் அப்படியே பாவசங்கீர்த்தனத்தில் சொல்லப்போவார்கள். உத்தமமனஸ்தாபம் உண்டாவதற்கு யாதொரு பிரயாசமும் படாமல் சர்வேசுரனிடத்திலே முதலாய் இதைக் கேட்கவேணுமென்று நினையார்கள். இப்படி அயோக்கியமான ஆயத்தத்தோடு செய்கிற பாவசங்கீர்த்தனத்தைக் குறித்து என்னதான் நினைக்கிறது?

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—பாவசங்கீர்த்தனம் பண்ணுவதற்கு உன்னால் கூடுமான வரையில் ஒரு நாளையும் ஒரு நேரத்தையுங் குறித்துக்கொள். அப்படிச் செய்யாவிட்டால் சில சமயங்களில் அதிக நாள் கடந்துபோகும். மெய்யான உத்தம மனஸ்தாபத்தை அடையும்படி பாவசங்கீர்த்தனம் பண்ணுவதற்குக் குறித்த நாளில் பூசை நேரத்திலே இந்த வரத்தைக் கேட்கிறதுமல்லாமல் விசேஷமாய்க் குருவானவர் தேவ வசீகரம்பண்ணு

கிறபோது உன் இருதயத்தில் மனஸ்தாபத்தை எழுப்பு. நடுப்பூசைக்கு முந்தி ஆத்தும சோதனை செய்துகொள்ளலாம். இப்படி முந்தியே பாவசங்கீர்த்தனத்துக்கு ஆயத்தஞ் செய்திருந்தால் பாவசங்கீர்த்தனம் பண்ணவேண்டிய நேரம் அடுத்து வரும்போது கொஞ்ச நிமிஷம் இதைப்பற்றி நினைக்கிறதுபோதும்.

மனப்பற்றுதல்.—இது விஷயத்தில் உன்னிடத்திலுள்ள அசட்டைத்தனத்துக்காக மன நொந்து பொறுத்தல் கேள்.

பிரதிக்கினை.—பாவசங்கீர்த்தனத்துக்குமுன் நீ செய்யப்போகிறதென்னவென்று கவனமாய் யோசித்து மேற்சொன்ன முயற்சிகளையும், இன்னும் உன் அனுபோகத்தினால் உனக்கு நன்மையாகத் தோன்றுவதெல்லாவற்றையும் பிரமாணிக்கமாய் அனுசரித்து வரக்கடவாய்.

## 2-ம் பிரிவு

### குருவானவரிடத்தில் தன் பாவத்தை வெளிப்படுத்தும் வகை

தியானம்.—தாழ்ச்சியும் நேர்மையுங்கூடிய மனதோடு நமது பாவங்களை வெளிப்படுத்தவேண்டியது. எந்தக் குருவானவரிடத்திலும் பாவசங்கீர்த்தனம் பண்ணிக்கொள்ளலாம் என்பது உண்மை; ஆயினும் சாதாரணமாய் ஒரே குருவானவரிடம் செய்துவருவதால், நேர்மையென்கிற குணம் சில சமயங்களில் அதிக வருத்தமாயிருக்கும். மனுஷன் என்னப்பட்ட எவனுந் தவறிப்போகக்கூடுமென்கிறதினாலே, மகா கனமான பாவத்தைக் கேட்டாலும் அதின்மேல் ஆத்தும குருவானவர் ஆச்சரியப்படமாட்டார். இது எல்லாருக்குந் தெரிந்திருக்கவேண்டியது. ஏனென்றால் அனேகானேக தேவதுரோகங்களுக்குக் காரணமான வெட்கத்தைச் செயிக்கும்படி இந்த நினைவு உதவியாயிருக்கும். நமது நடக்கை நாளுக்கு நாள் அதிக பரிசுத்தமாக வேணுமென்கிற கருத்தோடல்லவா நாம் அடிக்கடி பாவசங்கீர்த்தனம் பண்ணப்போகிறோம். இப்படியிருக்க நாம்



பலவீனத்தினாலே தவறிக் கட்டிக்கொள்ளுங் கணக்கற்ற
அற்பக் குற்றங் குறைகளுக்கெல்லாம் மெய்யாகவே உத்தம
மனஸ்தாபப்படுகிறது அருமையான காரியமென்பதினாலே
அவைகளையெல்லாம் ஒப்புக்குச் சொல்லுகிறதை விட, சில
முக்கியமான குற்றங்களை மாத்திரம் வெளிப்படுத்துகிறது
அதிக நலம். அப்படிச் செய்யாவிட்டால் மொத்தமாய்
மேலெழுந்தவாரியாய் மாத்திரம் பிரதிக்கினை செய்யும்படி
நேரிடும். இப்படிப்பட்ட பிரதிக்கினையால் யாதொரு சீர்
திருத்தமும் புண்ணிய விர்த்திப்பும் பரிச்சேதம் வரா
தென்று ஏற்கனவே நிச்சயிக்கலாம்.

ஒதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இதில்
நமது நடபடிக்கைக்கான சில புத்திமதிகள் அடங்கியிருக்
கின்றது. அவையாவன: முந்தமுந்த யாதொரு கனமான
பாவத்தைக் கட்டிக்கொண்டால் அதைப் பாவசங்கீர்த்த
னத்தில் எல்லாத்துக்கு முந்திச் சொல்லவேணும். அப்
படிக்கில்லாமல் பாவசங்கீர்த்தனத் துவக்கத்திலே அற்பக்
குற்றத்தைச் சொன்னால் பின்பு பெரிய குற்றத்தைச் சொல்
வதற்கு மனசு வராது. 2-வது, தன் குற்றங் குறைகளில்
பிரதானமான மூன்று நான்கு குற்றங்களை விசேஷமாய்ப்
பாவசங்கீர்த்தனத்தில் வெளிப்படுத்தி, அவைகளுக்குள்
ஒன்றை முக்கியமாய்ப் பிரயாசப்பட்டுத் தள்ளுவேனென்று
பிரதிக்கினை செய்யவேண்டியது. தன் குற்றங்களையெல்
லாம் ஒன்றுக்குப்பின் ஒன்றாய் நிர்மூலமாக்குவதற்கு
இதுவே தகுந்த வழி. 3-வது, தன் சீவிய காலத்தில் எப்
போதாவது தான் கட்டிக்கொண்ட கனமான பாவத்தை
மற்றக் குற்றங்களோடு சேர்த்துச் சொல்லுகிறதுமாத்திரம்
பற்றாது. அந்தப் பாவத்தைச் சொல்லும்போது முதல்
தடவை அதைப் பாவசங்கீர்த்தனத்தில் சொல்லுகிறது
போல அதற்காகவும் மனஸ்தாபப்படவேண்டியது.
இதுவே தன்னாலியன்றமட்டும் மனஸ்தாபப்பட்டிருக்கிற
தாக மனத்திருப்தி அடைகிறதற்கு மகா இலேசான உபா
யம்.

மனப்பற்றுதல்.—எத்தனையோ விசை பாவசங்கீர்த்
தனஞ் செய்திருந்தும் இன்னும் நம்மிடத்தில் புண்ணிய

வர்த்திப்பு அரைகுறையாயிருக்கிறதென்று கண்டு சுவாமிக்கு முன் நம்மைத் தாழ்த்துகிறது.

பிரதிக்கினை.—இப்போது சொன்ன பிரகாரம் நடந்து கொள்வாயாக.

## 3-ம். பிரிவு

### நன்றியறிந்த தோத்திரஞ் செய்வதின்பேரில்

தியானம்.—அடிக்கடி பாவசங்கீர்த்தனஞ் செய்வதினால் மிகுந்த பலன் அடையும்படி செய்யவேண்டியதென்னவென்றால் முந்தமுந்தப் பாவசங்கீர்த்தனஞ் செய்தபின், இந்தத் தேவதிரவிய அநுமானம் மகா சக்தியுள்ளதென்று நமது விசுவாசத்தை உறுதிப்படுத்துகிறது. 2-வது, நாம் செய்துகொண்ட பிரதிக்கினையைப் புதுப்பிக்கிறது. 3-வது, அதைப் பிரமாணிக்கமாய் அநுசரிக்கத் தேவ உதவியைக் கேட்கிறது; இம்மூன்றும் வெகு பிரயோசனமுள்ள வழிகளாம்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—பாவப் பொறுத்தல் அடைந்தபின், அடியில் கண்டிருக்குஞ் செபத்தைச் சொல்வது வெகு நலமாயிருக்கும். இந்தச் செபமாவது: என் ஆண்டவராகிய இயேசுவே, பச்சாத்தாபமென்னும் இந்த ஞான வாய்க்கால் வழியாக உமது திரு இரத்தத்தை என் ஆத்துமத்தில் பாயவிட்டு அதைச் சுத்தமாக்கி நவமான வரங்களால் அதை அலங்கரித்திருக்கிறீரென்று விசுவசிக்கிறேன். இதற்காகத் தேவரீருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்கிறேன். இனிமேல் எந்தப் பாவத்தையுஞ் செய்வதில்லையென்றும், விசேஷமாய் இன்ன பாவம் இன்ன குற்றத்தை விலக்கி நடப்பேனென்றுந் திரும்பவும் பிரதிக்கினை செய்கிறேன். இனிமேல் அந்தப் பாவத்திலாவது குற்றத்திலாவது விழுவேனாகில் அதற்குத் தபசாக எனக்கு ஒரு ஆக்கினையிட்டுக்கொள்வேன். என் திவ்விய கர்த்தாவே, அடியேன் இதில் படும் பிரயாசத்தை ஆசீர்வதித்தருளவேணுமென்று தேவரீரை இரந்து மன்றாடுகிறேன். ஆமென் சேசு.



சம்பாஷணை.—பச்சாத்தாபமாகிற இந்தத் தேவதிரவிய அநுமானத்தை ஸ்தாபித்த நமது இரட்சகரோடே சம்பாஷணை செய்து அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்வோமாக. நாம் முந்திச் செய்த பாவசங்கீர்த்தனங்களிலே நம்மிடத்திலுண்டான அசட்டைத்தனத்துக்காக அவரிடத்தில் பொறுத்தல் கேட்டு இனிமேல் சரியாய் நடக்க அவர் ஒத்தாசை செய்யவேணுமென்று மன்றாடுவோம்.

---

# 13-ம் தேதி

## இயேசுநாதர் எருசலேம் பட்டணத்தை விட்டுப் பதினெட்டு மாதம் அகன்றிருந்தபின் அங்கே திரும்பிப் போகிறார்

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதர் தேவாலயத்தில் திரண்டுவந்த சனங்களுக்குப் பிரசங்கம் பண்ணுகிறதாக ரூபிகரித்துக்கொள்.

தியானச் செபம்.—பிறரீடேற்றத்தின்மேல் இயேசுநாதருக்குள்ள ஆவலையும் அவருடைய பொறுமையையுங் கண்டுபாவிக்க வரங் கேட்பாயாக.

## முதல் பிரிவு

### எருசலேம் பட்டணத்தார் இயேசுநாதர்மேல் பலவிதமாய் நினைக்கிறார்கள்

தியானம்.—இயேசுநாதசுவாமி கூடாரத்திருநாளின் மூன்றுநாள் மாத்திரம் எருசலேம் பட்டணத்தில் சேரக் கருத்தாகி வழியில் தங்கித்தங்கிப் போனார். கடைசியாய் யாதொரு பிரஸ்தாபமுமில்லாமல் அஸ்தமான சமயத்தில் தமது அப்போஸ்தலர்களோடு பட்டணத்தில் பிரவேசித்து, திருநாளாயிருந்த மறுநாளில் தேவாலயத்தில் தம்

மைச் சகலரும் காணும்படி செய்தார். இவ்விதமாய்த்
தமது உயிரைப் பறிக்க யூதர் கொண்டிருந்த சதி யோசனை
நிறைவேருதபடி தடுத்தார். ஆகிலும் அவர் அங்கே சேர்ந்
ததுமுதல் எங்கெங்கே பார்த்தாலும் அவர்பேரில் பேச்சே
யொழிய வேறு பேச்சில்லை. பத்துக் குஷ்ட ரோகிகளைக்
குணமாக்கின புதுமையும் பிரபல்லியமாகி அவருடைய
கீர்த்தி அதிகரிக்க வழியாயிற்று. அர்ச். அருளப்பர்
சொல்லியிருக்கிறதுபோல எல்லாரும் அவரைத் தேடி
அவர் எங்கே இருக்கிறரென்று கேட்பார்கள். சனங்
களுக்குள்ளே அவரைக் குறித்துப் பற்பல விதமாய்ப் பேசு
வார்கள். சிலர் அவரை நல்லவரென்றும், சிலர் அப்படி
யல்ல, அவர் சனங்களை வஞ்சித்துக் கெடுக்கிறரென்றுஞ்
சொல்வார்கள் (அரு. 7).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இயேசு
நாதர்பேரிலே அவர்கள் இவ்வளவு வேற்றுமையாய்ப் பேசி
னதைப்பற்றிப் பிரமிக்கப்படாது. சனங்களுடைய நன்
மைக்காகப் பிரயாசப்படுகிறவர்களுக்கு இதுவரையிலும்
அப்படியே நடந்துவந்ததுமல்லாமல் இனிமேலும் எப்போ
தும் அப்படியே நடக்கும். இவர்கள் படும் பிரயாசத்தைப்
பார்த்துச் சிலர் நன்மையாகவும், சிலர் தின்மையாகவும்
பேசுவார்கள்; அல்லது இல்லாத அர்த்தம் பண்ணுவார்
கள். நல்ல கருத்துள்ளவர்கள் முதலாய் இப்படி விபரீத
மாய்ப் பேசுகிறதுண்டு. உனக்கும் இப்படிச் சம்பவித்தால்
நீ ஆச்சரியப்படத் தேவையில்லை. நீ பிரசங்கியாய், உப
தேசியாய், உபாத்தியாய், ஆத்தும குருவாய் அல்லது
வைத்தியனுயிருந்தால் அந்தத் தொழில்களில் உனக்குள்ள
திறமையையும் அநுகூலத்தையுங் குறித்து உன் கூட இருக்
கிற சகோதாருஞ் சிரேஷ்டர்களுமுதலாய் நானுவிதமாய்
நினைக்கிறார்களென்று நீ ஆச்சரியமும் விசனமுங் கொள்ள
வேண்டாம். நீ மெய்யாகவே தாழ்ச்சியுள்ளவனாய் உன்னை
நன்றாய் அறிந்திருந்தால் உன்னை அநேகர் இன்னங் கனமா
யெண்ணிக்கொள்கிறார்களென்று அதிசயப்படுவாய். ஆகி
லும் உன்னையும் உன்னுடைய கிரியைகளையும்பற்றி மற்ற
வர்கள் சொல்லுங் கோளாறுகளைக் கண்டு நீ திருந்த



மனத்தாங்கலும் அசூசியமும்
விசேப்பாயேயொழிய நீ இப்படி நடக்கிறாயோ?
படவேமாட்டாய்.

மனப்பற்றுதல்.—எப்போதும் இயேசுநாதருடைய
தாழ்ச்சியுள்ள சிஷுகை நடக்க வரங் கேள்.

பிரதிக்கினை.—உங்களுக்குக் கற்பிக்கப்பட்டதெல்
லாஞ் செய்தபிற்பாடு, நாங்கள் பிரயோசனமில்லாத ஊழி
யர்களாயிருக்கிறோமென்று சொல்லுங்களென்று நமது
தேவிய குரு படிப்பித்ததை அடிக்கடி நினைத்துக்கொள்.

## 2-ம் பிரிவு

### இயேசுநாதர் எருசலேம் பட்டணத்துத் தேவாலயத்தில் பண்ணின பிரசங்கத்தைக் கேட்டு எல்லாரும் ஆச்சரியப்படுகிறார்கள்

தியானம்.—இயேசுநாதர் அவ்விடத்தில் போய்ச்
சேர்ந்த மறுநாள் உற்சவத்தின் நாலாம் நாளாயிருந்தது.
அன்றையத்தினம் இயேசுநாதர் தேவாலயத்தில் பிரவேசித்
துப் போதிக்கத் துவக்கினாரென்று சுவிசேஷ அருளப்பர்
எழுதிவைத்திருக்கிறார். அவர் என்ன சொல்லப் போகிறா
ரென்று கேட்கும்படி நூதனப் பிரியத்தால் கூடிவந்த சனங்
கள் அவருடைய பிரசங்கத்தைக் கேட்டுப் பிரமித்து உரத்த
சத்தமாய்க் கூவிச்சொன்னதாவது: இந்த மனிதன் படி
யாமலிருக்க இவருக்கு இவ்வளவு ஞானம் எப்படி வந்த
தென்றார்கள். சனங்களுடைய ஆச்சரியத்தைக் கண்டு,
அவர்களுக்கு நல்ல புத்தி கற்பிக்கவும், தாம் யாரென்று
அறிவிக்கவும் இதுவே தக்க சமயமென்றெண்ணி இயேசு
நாதசுவாமி அவர்களை நோக்கிச் சொன்னதாவது: என்
போதகம் என்னுடையதல்ல, என்னை அனுப்பினவருடை
யது. தன் யுத்தியாய்ப் பேசுகிறவன் தன் சொந்த மகிமை
யைத் தேடுகிறான். தன்னை அனுப்பினவருடைய மகிமை
யைத் தேடுகிறவனோவெனில் உண்மையைச் சொல்லு
கிறான். அவனிடத்தில் அநீதம் இராதென்றார் (அரு. 7).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நாம்
தனித்தனியாயாவது சனங்களுக்குப்
பிரசங்கமாயாவது

படிப்பிக்கும் போதனை நம்மை அனுப்பின இயேசுநாத ருடையதல்லாமல் நம்முடைய தல்லவே. ஆகையால் அதை நன்றாய்க் கற்று ஆராய்ந்து அதற்கான ஆயத்தஞ் செய்யவேண்டியதுந் தவிர ஏறத்தாழ ஒன்றைவிட்டு ஒன் றைச் சேர்த்து மொழியாமலும் மனிதருக்குப் பிரியப்படும் படி அவர்களுடைய போதனையை இத்தோடு கலவாமலும் வெகு எச்சரிக்கையாயிருக்கவேணும். இதுகாரியத்திலே உன்மேற் குறைசொல்ல இடமில்லையோவென்று பார். தேவ போதனையை மாற்றினதினாலே உண்மைக்கு விரோத மாகவும், உன் மகிமையைத் தேடினதினாலே நீதிக்கு விரோ தமாகவும் நடந்து இரு வித குற்றத்தில் நீ ஒருமிக்க விழ வில்லையோ?

மனப்பற்றுதல்.—நன்றாய்ப் பிரசங்கம்பண்ணிப் புத் தியைத் தெளிவித்து மனதை இளக்குகிற வரத்தை உனக் குக் கேட்பாயாக.

பிரதிக்கினை.—கொஞ்ச நேரம் புத்தி பிரசங்கஞ் சொல்லுகிறபோது முதலாய்த் தேவ வாக்கியத்தைச் சங் கையும் கனமும் பொருந்திய விதமாய்ச் சொல்லவேணும். விசுவாசத்துக்கடுத்த சத்தியங்களைப் பிறருக்கு அறிவிக்கும் போது தன்னுடைய மகிமையை முழுதும் மறந்து விட வேணும்.

## 3-ம் பிரிவு

### எருசலேம் பட்டணத்திலிருந்த பெரியவர்கள் இயேசுநாதரைப் பகைக்கிறார்கள்

தியானம்.—யூத ஆசாரியரும் சனத்தின் மூப்பர்க ளும் இயேசுநாதசுவாமி கீர்த்தியடைவதினால் தங்கள் மகிமை குறைந்துபோகிறதென்று எண்ணிச் சனங்களுக் குள் அவர் பேரைக் கெடுக்கவும், ஓர் கலாபனையை எழுப்பி அதில் அவர் உயிரைப் பறிக்கவும் வெகுநாளாய் முயற்சி செய்துவந்தார்கள். கலாபனையில் அவரைக் கொலைப்ப டுத்த நினைத்ததேதென்றால், அவர் அதற்குக் காரணமா யிருந்தாரென்றும், அதினால் நீதியின்படி அவர் சாகவேணு



மென்றும் பிரசித்தமாகி, தங்கள்மேல் யாதொரு பாதகமு
மில்லையென்று காட்டும்படி அவ்விதம் நினைத்தார்கள். இந்
தச் சூது சனங்களுக்குத் தெரியாமற்போயிற்று. இயேசு
நாதசுவாமி இதெல்லாம் அறிந்து, அச்சனங்களுக்கு முன்
பாக அவர்களைக் கண்டித்து: ஏன் என்னைக் கொல்லத்தேடு
கிறீர்களென்றார். இதைக் கேட்டவுடன் அவர்களும் அவர்
கள் பக்கத்தாருங் கோபத்தாற் பொங்கி இயேசுநாதசுவா
மியை நோக்கி: உன்னைப் பேய் பிடித்திருக்கிறதோ?
உன்னை யார் கொல்லத்தேடுகிறதென்றார்கள் (அரு. 7).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—ஐயோ
இக்காலத்திலே முதலாய் ஆங்காரிகளும் அவிசுவாசிகளுஞ்
சூது வினையத்தினாலே பொய்யும் புறணியுஞ் சொல்லி இயே
சுநாதருக்கு விரோதமாய்ச் சனங்களை எழுப்பிவிடுகிறார்
கள். விசேஷமாய்த் திருச்சபையின் தலைவருக்கும் மற்றத்
தேவ ஊழியருக்கும் எதிரிடையாய் வெகு அநியாயஞ்
செய்கிறார்கள். இதினால் அதிசயப்படவும் மனம் பேதலித்
துத் தத்தளிக்கவும் படாது. நம்முடைய திவ்விய குருவா
னவர் தமக்கு மற்றவர்கள் செய்த நிந்தை அவமானங்களுக்
குப் பதிலாக அதிக பத்திவைராக்கியத்தோடு சனங்கள்
மனதைத் தெளிவித்துத் துஷ்டருடைய மாய்கையினின்று
அவர்களைக் காப்பாற்றி இரட்சிக்க முயற்சிசெய்தாற்போல
நாமுஞ் செய்யக்கடவோம். இப்படி நடந்தோமோ?

சம்பாஷணை.—தேவமாதா பிறந்த எட்டாம் நாளான
இன்றைக்கு அந்தப் பரிசுத்த கன்னியாஸ்திரியோடு சம்பா
ஷணை செய்து விசேஷமான விதமாய் அவளை மன்றாடு
வோம்.

# 14-ம் தேதி

## இயேசுநாதர் மறுபடியுந் தேவாலயத்தில் பிரசங்கம் பண்ணினதின்பேரில்

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதருடைய அமிர்தமான பிரசங்கத்தைக் கேட்கத்தக்கதாக தேவாலயத்தில் கூடின சனங்கள் நடுவே நாமும் இருக்கிறதாக ரூபிகரித்துக் கொள்வோமாக.

தியானச் சேபம்.—இந்தத் திவ்விய வார்த்தைகளுக்கு நாம் காதுகொடுத்து நடக்க வரங் கேட்போமாக.

### முதல் பிரிவு

#### இயேசுநாதர் நீதியின்மேல் தாகமாயிருக்கிறவர்களைத் தம்மிடத்தில் அழைக்கிறர்

தியானம்.—திருவிழாவின் கடைசி நாளன்று இயேசுநாதர் தேவாலயத்தில் மறுபடியும் பிரவேசித்தார். மற்ற நாட்களைவிட அது மகா உற்சவ நாளாயிருந்தது. அன்றையத் தினந்தான் யூதர்கள் சீலோவென்னும் ஊற்றுத் தண்ணீரைக் குடித்துத் தங்கள் பயிர்கள் நன்றாய் விளையும்படி பீடத்திலும் அந்தத் தண்ணீரைத் தெளிப்பார்கள். இதற்காகச் சனங்கள் வெகு திரளாய்வந்து மொய்த்ததினாலே இயேசுநாதர் தமது திவ்விய போதனையைப் பிரசங்கிப்பதற்கு அது நல்ல சமயமாயிற்று. ஆகையால் அர்ச். அருளப்பர் சொல்லுகிறதுபோல அவர் நின்றுகொண்டு உரத்த சத்தமாய்ச் சொன்னதாவது: யாதொருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில்வந்து பானஞ் செய்யக்கடவானென்றார். இதற்கு அர்த்தமேதென்றால்: ஆத்துமத்துக்குப் பரம சீவியத்தையும் ஞான செழிப்பையுந் தருகிற உண்மையின்பேரிலும் நீதியின்பேரிலும் ஆவலாயிருக்கிறவன் என்னிடத்தில் வரட்டும். உயிருக்கு ஊற்றாயிருக்கிற என்மட்டில் விசுவாச நம்பிக்கையாயிருக்கட்டும். அவனுடைய ஆசையாகிய தாகம் உடனே தணிந்துபோம். அப்



போது வற்றாத ஊறணியினின்று சலம் ஓடிவருகிறது போல அவனிருதயத்தினின்றுஞ் சீவிய இஷ்டப்பிரசாதத்தின் சலம் சுரந்து வெகு தூரம் பாயும் என்பதேயாம். இதுவே என்னை விசுவசிக்கிறவனுடைய உதரத்தினின்று சீவிய சலப்பிரவாகம் புறப்படுமென்று அவர் சொன்ன வாக்கியத்தின் கருத்தாம்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—சுபாவத்துக்கு மேலான உயிரையும், தேவ இஷ்டப்பிரசாதத்தையுந் தருகிற இந்தத் திவ்விய சலத்தை நமக்குக் கட்டளையிட வேணுமென்று இயேசுநாதசுவாமியை நோக்கி மிகவும் இரந்து மன்றாடுவோமாக. இந்தத் திவ்விய சலந்தான் நம்மை உள்ளாந்தரங்க சீவியமுள்ளவர்களாக்கித் தேவ ஞானத்தால் நமது ஆத்துமத்தை நிரப்புகிறது. இதுதான் நம்மை அப்போஸ்தலருக்கு ஒத்த வேதபோதகராக்கி, இயேசுநாதருடைய சுகந்த பரிமளமாகிய புண்ணிய வாசனை நம்மைச் சுற்றி வீசவும், நமது புத்தி பிரசங்கங்களால் நானா வித நன்மைகள் விளையவுஞ் செய்கிறது.

மனப்பற்றுதல்.—உள்ளாந்தரங்க சீவியத்துக்கும் அப்போஸ்தலத் தொழிலுக்கும் ஏற்ற குண இலட்சணங்களெவையென்று கண்டாயே. அவைகள் உன்னிடத்திலும் உன சகோதரரிடத்திலும் விசேஷமாய்ப் பிரதேச வேதபோதகரிடத்திலும் உண்டாகும்படி இயேசுநாதர் சுவாமியை மன்றாடு.

பிரதிக்கினை.—சகல சாங்கோபாங்கத்துக்கும் ஊறணியும் மாதிரிகையுஞ் சம்பூரணமுமாயிருக்கிற இயேசுநாதரோடு மகா அன்னியோன்னியமாய் ஒன்றித்திருக்கப் பிரயாசப்படுவாயாக.

### 2-ம் பிரிவு

#### இயேசுநாதர்சுவாமியைப் பிடிக்கும்படி அனுப்பப்பட்ட சேவகர் அவருடைய அமிர்த பிரசங்கத்தைக்கேட்டு அவரைத் தொடத் துணியவில்லை

தியானம்.—இயேசுநாதசுவாமி திரும்பவுந் தேவாலயத்துக்கு வந்தால் அவரைப் பிடித்துத் தங்களிடத்தில்

கொண்டு வரச் செய்யவேணுமென்று பிரதான ஆசாரியருஞ் சனத்தின் மூப்பரும் ஆலோசனை செய்து அதற்காக அனேகஞ் சேவகர்களை அனுப்பினர்கள். அந்தச் சேவகர்கள் இரட்சகர் செய்த திவ்வியமான பிரசங்கத்தைக் கேட்டு அதின் இன்பத்தால் இளகி அவருக்கு விரோதமாய் யாதொன்றுஞ் செய்யத் துணியவில்லை. சுவிசேஷத்தில் சொல்லியிருக்கிறபடி அவர்களில் ஒருவனாகிலும் அவர் மேலே கை வைக்கவில்லை. ஆகையால் இவர்கள் ஆசாரியர்கள் பரிசேயர்களிடத்தில் திரும்பப் போனபோது, ஏன் அவரைக் கூட்டிக்கொண்டு வரவில்லையென்று அவர்கள் கேட்டதற்கு, அந்த மனிதன் பேசுகிறதுபோல இதுவரையிலும் ஒருவரும் பேசினதில்லை என்றார்கள் (அரு. 7).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இயேசுநாதர் தம்மைப் பிடித்துச் சிறையிலடைக்கும்படி தேவாலயத்தில் ஆட்கள் வைக்கப்பட்டிருக்கிறார்களென்று நன்றாயறிந்திருந்தார். ஆயினும் பிறசிநேகத்துக்கும் ஆத்தும ஈடேற்றத்துக்குமடுத்த கடமையை நிறைவேற்றும்படி அவர் அங்கே போவதற்குச் சற்றும் மலைக்கவில்லை. நாம் இந்தத் தைரியத்தையும் உறுதியையுங் கண்டுபாவித்து, சிறைச்சாலைக்குப் போகவேண்டியிருந்தாலும் நமது உயிருக்கு மோசம் வருமென்றிருந்தாலும் இதெல்லாம் பாராமல் சந்நியாசத்துக்கும் வேதியத் தொழிலுக்கும் அடுத்த கடமைகளிலே பிரமாணிக்கமாயிருப்போமாக. இப்படியிருக்கச் சொற்ப சௌக்கியத் தாழ்வுக்கு அஞ்சியானாலும் மற்றவர்கள் பண்ணுங் கேலி பரியாசத்துக்குப் பயந்தேனிலும் நமது கடமைகளைச் சரியாய்ச் செலுத்தாதிருப்பது நியாயமோ? இதிலே நாம் கவனிக்கவேண்டிய விசேஷமேதென்றால்: திவ்விய இரட்சகர் தமது சத்துராதிகள் கையால் தாம் பலியாவதற்குச் சித்தமான காலம் அதுவரையில் வராததினால் அவர்மேல் ஒருவருங் கை நீட்டவில்லை (அரு. 7). ஆகையால் துஷ்டர் நம்மை இன்ன சமயத்தில், இன்னவிதமாய் உபாதிக்கலாமென்று சர்வேசுரன் விடைகொடுத்தாலொழிய மற்றப்படி நமக்கு விரோதமாய் அவர்களால் ஒன்றுஞ் செய்ய மாளாதென்று இதினால் அறியக்



கடவோம். ஆயினும் அவர்களால் நமக்கு யாதொரு தீங்கு நேரிடுமென்று கண்டால் அதை நமது விவேகத்தினாலும் புத்தி சாமர்த்தியத்தினாலும் தடுத்து விலக்குவதற்கு ஆக்ஷேபனையில்லை. இயேசுநாதர் தமது மாதிரிகையால் நமக்குக் கற்பிக்கிறதும் இதுவே. எப்படியென்றால் உற்ச வந் துவக்கின மூன்றும்நாள் மாத்திரம் அவர் எருசலேம் பட்டணத்துக்குப் போனார். அங்கேயுந் தேவாலயத்தில் பிரவேசித்ததொழிய நாலுபேர் காண வேறெங்கும் போனவரல்ல.

மனப்பற்றுதல்.—உன்மேல் கிருபைக் கண்ணோக்கியிருக்குந் தேவ பராமரிப்பின்மேல் உயிருள்ள விசுவாசத்தையும், சகல சம்பவங்களிலுந் தேவதிருவுளத்துக்கு அமைந்து நடக்கும் வரத்தையுங் கேட்பாயாக.

பிரதிக்கினை.—வீண் பயத்தைச் சட்டைபண்ணுகிருக்கக்கடவாய்.

## 3-ம் பிரிவு

### யூதருடைய ஆலோசனைச் சங்கத்தில் நீக்கோதேமென்பவர் இயேசுநாதருக்காகப் பரிந்துபேசுகிறர்

தியானம்.—ஆசாரியரும் வேதபாரகருந் தாங்கள் நினைத்த காரியம் வீணாய்ப்போனதினால் எரிச்சலடைந்து கடைசியாய் எவ்விதத்திலுந் திவ்விய இரட்சகரைப் பிடிக்க வேணுமென்றும் அதற்கு என்ன உபாயஞ் செய்யவேணுமென்றும் ஆலோசிப்பதற்காகச் சாயுங்காலமான வேளையில் சங்கங் கூடினார்கள். ஆகிலும் அச்சங்கத்தில் இயேசுநாதருக்காகப் பரிந்துபேசத்தக்கவர் ஒருவர் இருந்தார். அவர் யாரென்றால் இயேசுநாதர் பிரசங்கம் பண்ணத் துவக்கின முதல்வருஷம் ஒருநாள் இரவிலே அவரைப் பார்க்க வந்த நீக்கோதேமென்பவர்தான். இவர் சங்கத்திலே இருந்தவர்களைப் பார்த்து, ஒருவனை வாய்மொழி கேளாமலும் அவனுடைய கிரியைகள் எவையென்று விசாரியாமலும் அவனை ஆக்கினைத் தீர்வையிட நமது வேதப் பிரமாணத்

தில் சட்டம் உண்டோவென்று கேட்டார். நீதிக்கெல்லாம் ஆதிமூலமாகிய இந்த ஒழுங்கை எடுத்துக்காட்டினதற்கு அவர்கள் மாறுத்தரமாக அவரை நிந்தித்து நீயுங் கலிலேயனோ? வேதாகமங்களைச் சோதித்துப்பார்; கலிலேயாவில் நின்று ஒருவனுந் தீர்க்கதரிசியாகப் புறப்படானென்று அறிந்துகொள்ளெனச் சொல்லி ஒவ்வொருவருந் தங்கள் தங்கள் வீட்டுக்குப் போய்விட்டார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இந்த யூதத் தலைவர்கள் ஆசாபாசத்தினால் மனக்குருடராகிக் கனமான பாவதோஷமுள்ளவர்களாயிருக்கிறதைக் கண்டு அவர்கள்மேல் கோபங்கொள்ளுகிறோமே. ஆனால் நாம் நமது சகோதரருடைய கிரியைகளுக்குள்ள முகாந்தரத்தை அறியாமலும் அவைகளை ஆராய்ந்து பாராமலும் அவர்கள்மேல் குறைசொல்லி அவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்கும்போது நாமும் இந்த யூதர்களைப்போல நடக்கிறதில்லையோ?

சம்பாஷணை.—நமது அன்புக்குரிய திவ்விய இரட்சகரோடு சம்பாஷணை செய்வோமாக.

---

## 15-ம் தேதி

### விபசாரப் பெண்பிள்ளையின்மேல் செய்யப்பட்ட தீர்ப்பு

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதர் தேவாலயத்தின் நடுவிலிருந்துகொண்டு பாவியான அந்தப் பெண்பிள்ளையை நோக்கி: நீ போ, இனி பாவத்தைச் செய்யாதேயென்று சொல்லுகிறதாக ரூபிகரித்துக்கொள்.

தியானச் சேபம்.—இயேசுநாதருடைய மதுர குணத்தை நன்றாய் அறியவும் நாமும் அந்தத் திவ்விய குணம் நிறைந்தவர்களாகவும் அநுக்கிரகங் கேட்போமாக.



### முதல் பிரிவு

#### பாவியான அந்தப் பெண்பிள்ளைக்கு இயேசுநாதர் தீர்ப்புச் சொல்லவேணுமென்று கேட்கிறார்கள்

தியானம்.—இயேசுநாதர்சுவாமி எருசலேம் பட்டணத்துக்குச் சமீபமான ஒலிவேத்து மலையில் இராத்திரி தங்கியிருந்து மறுநாள் அதிகாலமே தேவாலயத்துக்குத் திரும்பிவந்தபொழுது ஜனங்களெல்லாரும் அவரைப் பின்தொடர்ந்து வரவே, அவர் உட்கார்ந்து போதிக்கத் துவக்கினார். அப்போது வேதபாரகரும் பரிசேயரும் விபசாரத்தில் அகப்பட்ட ஒரு பெண்பிள்ளையைக் கூட்டிவந்து நடுவில் நிறுத்தி, இயேசுநாதரைப்பார்த்து: போதகரே, இவள் விபசாரத்தில் அகப்பட்டவள். இப்போர்க்கொத்தவர்களைக் கல்லாலெறிந்து கொல்லவேணுமென்று மோயீசன் வேதக் கட்டளையாகக் கற்பித்திருக்கிறார். அப்படியிருக்க நீர் என்னசொல்லுகிறீரென்றார்கள். அதாவது, நீர் இடுந் தீர்வைக்கு நாங்கள் சம்மதிக்கிறோமென்று சொன்னாற்போலாயிற்று. கள்ளஞானிகளான இந்த யூதத் தலைவர் இயேசுநாதரிடத்தில் அந்தப் பெண்பிள்ளையின்மேல் தீர்ப்புச் சொல்லவேணுமென்று கேட்டதினால் அவரைக் கனமகிமைப்படுத்தினதாகத் தோன்றுகிறது. ஆனால் இது வஞ்சகமேயன்றி வேறல்ல. ஏனென்றால் அவர்கள் அவரைச் சோதித்து ஒன்றில் அவர் இரக்கமில்லாதவரென்றும், அல்லது வேதகற்பனையை மீறி நடக்கிறவரென்றும் அவரைக் குற்றஞ்சாட்டவேணுமென்ற எண்ணமுள்ளவர்களாயிருந்தார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இந்த வஞ்சக யூதர் திவ்விய கர்த்தருக்குச் செய்த தந்திரத்தைக் கவனித்துப் பார்த்தால் அவர் எவ்விதத்திலும் தப்புவதற்கு இடமில்லாததுபோல் தோன்றுகிறது. எப்படியென்றால் அவர் என்ன செய்தபோதிலும் அவர்கள் கண்ணியில் சிக்கிக்கொள்ளவேண்டியதுபோலிருக்கிறது. அவள்மேல் தீர்ப்புச் சொல்லமாட்டோமென்பாரானால், தாம் சர்வேசுர

ளுல் அனுப்பப்பட்டு இஸ்ராயேல் கோத்திரத்துக்கு உன்னத போதகராக வந்தவரல்லவென்றுற்போலாகும். இது அவருக்கு நிந்தை. அவள்மேல் தீர்ப்புச்சொல்லச் சித்தமாளுல் ஒன்றில் அவளுக்கு ஆக்கினை, அல்லது மன்னிப்புச் செய்யவேண்டியது. மன்னிப்புச் செய்தால் அவர் மோயீசன் கட்டளைக்கு விரோதியென்று எல்லாருங் கூவுவார்கள். சட்டப்படி ஆக்கினையிட்டால் தாம் மனுஷரை இரட்சிக்க வந்ததல்லாதே அவர்களை நாசமாக்க வரவில்லையென்று பிரசித்தமாய்ச் சொல்லிவந்திருக்க அந்தத் தீர்ப்பு ஈவு இரக்கமற்றதென்றும், அவர் வாக்குக்கே ஒவ்வாததென்றுங் குறைசொல்லுவார்கள். ஆளுல் மனுஷன் தன் சூது உபாயங்களால் சர்வேசுரனுக்கு விரோதமாய் என்ன செய்யக்கூடும்? இயேசுநாதர் எப்படித் தமது சத்துராதிகளுடைய வஞ்சக யோசனையெல்லாந் தட்டுக்கெட்டுப்போகவும் அதிளுல் அவர்கள் வெட்கி நாணவுஞ் செய்தாரென்று நன்ருய் யோசித்தால் எந்த ஞானமும் எந்த விவேகமும் எந்த யோசனையுஞ் சர்வேசுரனை மேற்கொள்ளாதென்கிற தேவ வாக்கியத்தில் அடங்கிய உண்மையைத் தீர்க்கமாய் உணருவாய். அதிளுல் உன் ஆச்சரியம், வணக்கம், சிநேகம் அதிகமதிகமாய் வளர்ந்தோங்கும்.

**மனப்பற்றுதல்.**—சர்வேசுரனுடைய மட்டற்ற ஞானத்தைக் கண்டு அவரை வாழ்த்தி ஸ்துதிப்பாயாக.

**பிரதிக்கினை.**—அளவில்லாத ஞானமுந் தயையும் நிறைந்த சர்வேசுரன் உன்னை ஆண்டு நடத்தும்படி அவர் கையில் உன்னை ஒப்படைத்துவிடு.

## 2-ம் பிரிவு

### பாவியான பெண்பிள்ளையின்பேரில் குற்றஞ்சாட்டினவர்களை இயேசுநாதர் நாணும்படி செய்கிறர்

**தியானம்.**—பாவியான பெண்பிள்ளையின்மேல் தீர்ப்புச் செய்யவேணுமென்று அவளைத் தம்மிடத்தில் கூட்டிக் கொண்டுவந்தவர்களுடைய ஆழ்ந்த வஞ்சகத்தை அறிந்த



இயேசுநாதர் அவர்களுக்கு யாதொரு மறுமொழியுஞ்
சொல்லாமல் குனிந்து தமது விரலால் தரையில் எழுதிக்
கொண்டிருந்தார். பின்னும் குற்றஞ் சாட்டினவர்கள் சாதித்
துக் கேட்டுக்கொண்டிருந்ததினாலே அவர் தலையை உயர்த்தி
அவர்களை நோக்கி: உங்களுக்குள்ளே பாவமில்லாதவன்
இவள்மேல் முந்தமுந்தக் கல் எறியக்கடவானென்று சொல்
லித் திரும்பவுங் குனிந்து தொடர்ந்து எழுதிக்கொண்டிருந்
தார் (அரு. 8). அப்போது குற்றஞ் சாட்டினவர்களு
டைய இரகசியமான பாவங்களை இயேசுநாதர் எழுதிக்
கொண்டிருந்தாரென்று அநேக வேதவித்தியாபாரர்கள்
நினைக்கிறார்கள். ஆயினும் உண்மை ஏதென்றால் பாவமில்
லாதவன் முந்த முந்தக் கல் எறியக்கடவானென்ற வார்த்தை
களைக் கேட்டு மூப்பர்கள் முதற்கொண்டு ஒருவனுக்குப்பின்
ஒருவனாய் எல்லாருங் கலைந்துபோய்விட்டார்கள். கடைசி
யாய் இயேசுநாதருஞ் சபை நடுவிலே நிறுத்தப்பட்ட அந்த
ஸ்திரீயுமாத்திரம் இருந்தார்கள்.

**யோசிக்கத்தக்கது.**—
இதிலே விசேஷமாய் முந்த முந்தக் கல் எறியக்கடவா
பாவமில்லாதிருக்கிறவன் திருவுளம்பற்றினதற்கு அர்த்தம்
னென்று இயேசுநாதர் யாதொரு குற்றமுங்
என்னவென்றால் தன்னிடத்தில் மகா விசேஷமான
குறையுமில்லாமல் தன் நடக்கையில் குற்றஞ்
ஒழுக்கம் உள்ளவன்தான் தன் சகோதரர்பேரில் எப்போ
சாட்டலாமென்பதாம். இந்த புத்தியை நாம் நடக்க
தும் நமது கண்முன்பாக வைத்து இதற்கு ஏற்றபடி பேரிலேயே
வருந்துவோமேயாளுல் மற்றவர்களைவிட நமது மெய்யான
எப்போதும் ஆயாசமாயிருப்போம். அன்றியும் நமதுமட்டில்
தாழ்ச்சியும் பிறசிநேகமுங் கற்பிக்கிறபடி உள்ளவர்களாயிருப்
கண்டிப்பும், பிறர்மட்டில் இளக்காரமும்
போம்.

**மனப்பற்றுதல்.**—நமது பாவந் தப்பிதங்களை நினைத்து வெட்கி மனஸ்தாபப்பட்டு, நல்ல பிரதிக்கினை செய்து, வேண்டிய தேவ உதவியை இரந்து மன்றாடக் கடவோம்.

பிரதிக்கினை.—மற்றவர்களைப்பற்றி நீ தயவு தாட்சணியமில்லாமல் நினைக்கும்போது நீ உனக்கே தீர்வையிட்டுக்கொள்ளுகிறாய். ஏனெனில் அவர்கள்மேல் சாட்டுகிற குற்றத்தை நீயே செய்கிறாயென்று அர்ச். சின்னப்பர் வசனித்திருக்கிறார். இந்த வார்த்தைகள் ஆன சமயத்தில் உனக்கு ஞாபகத்தில் வரும்படி இவைகளை உன் இருதயத்தில் ஆழமாய்ப் பதியும்படி செய்.

## 3-ம் பிரிவு

### பாவியான அந்தப் பெண்பிள்ளைக்கு இயேசுநாதர் பொறுத்தல் கொடுக்கிறார்

தியானம்.—அந்தப் பெண்பிள்ளையைக் குற்றஞ்சாட்டினவர்களெல்லாரும் ஒருவருக்குப்பின் ஒருவராய்ப் போய்விடவே, இயேசுநாதர் முன்பாக அவள் தனியே நின்றாள். அப்போது அவர் நிமிர்ந்து அவளைப் பார்த்து: உன் பேரிலே குற்றஞ்சாட்டினவர்களெல்லாரும் எங்கே? ஒருவனும் உன்னைத் தீர்வையிடவில்லையோவென்றார். அதற்கு அவள்: ஆண்டவரே, ஒருவரும் என்னைத் தீர்வையிடவில்லை என்றாள். அப்போது இயேசுநாதர் நாமும் உனக்குத் தீர்வையிடுகிறதில்லை. இனிமேல் ஒருகாலும் பாவத்தைச் செய்யாதே, போவென்றார். இப்படி ஆத்தும சரீர சாவினின்று அவளை ஒருமிக்க இரட்சித்துக் காப்பாற்றினார். இவ்விதமாய்த் தன்னைக்காத்திரட்சித்த இயேசுநாதர்மட்டில் அவள் இருதயத்தில் எவ்வளவோ ஆச்சரியமும், சிநேகமும், நன்றியறிந்த பற்றுதலும் பிறந்திருக்கும்!

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இந்தத் திவ்விய இரட்சகர்தாமே நமக்குஞ் செய்த கணக்கற்ற உபகாரங்களை நினைத்துப்பார்க்கக்கடவோம். எத்தனையோ ஆபத்துகளில் நமக்குக் கைகொடுத்து எத்தனையோ பாவங்களை நமக்கு மன்னித்திருக்கிறார்! இதை யோசித்துப்பார்த்தால் அந்த ஸ்திரீயினிடத்தில் விளங்கின சுகிர்த பற்றுதல்கள் நம்மிடத்திலும் விளங்காதோ? இந்தத் தியானத்தை முடிக்கையில் இவ்வித உணர்ச்சிகளால் நாம்



மனம் பூரித்து வாய்விட்டு ஆண்டவரைப் புகழுவதுமல்லாமல் இன்று முதல் நமது கிரியையிலும் அவைகளைக் காண்பிப்போமாக.

சம்பாஷணை.—நமது அன்புக்குரிய இரட்சகரும் திவ்வியமாதிரிகையுமான இயேசுநாதரோடு சம்பாஷணை செய்வோமாக.

---

## 16-ம் தேதி

### இயேசுநாதர் உலகத்துக்கு ஒளியாயிருக்கிறார்

ஆயத்தச் சிந்தனை.—நமது ஆண்டவர்: நான் உலகத்தின் ஒளியாயிருக்கிறேனென்று சொல்லுகிறதாக ரூபிகரித்துக்கொள்ளுவோமாக.

தியானச் செபம்.—தேவ அருள்பிரகாசம் ஏராளமாய் வரும்படி கேட்போமாக.

## முதல் பிரிவு

### இயேசுநாதர் உலகத்துக்கு ஒளியாயிருக்கிறார்

தியானம்.—நான் உலகத்துக்கு ஒளியாயிருக்கிறேனென்று இயேசுநாதசுவாமி அர்ச். அருளப்பர் சுவிசேஷத்தில் திருவுளம்பற்றியிருக்கிறார். இந்த உன்னத வாக்கியத்தைச் சொல்லித்தான் தேவாலயத்தில் தமது மூன்றாம் பிரசங்கத்தை ஆரம்பிக்கிறார். இயேசுநாதருடைய மனுஷீகத்தில் பூரணமாய் விளங்கின இந்தத் தேவ ஒளியினால் உலகத்துக்குவந்த நன்மை எம்மாத்திரமென்று அறியவேணுமானால், அவர் மனுஷாவதாரமாகுமுன் உலகம் இருந்த சீரேதென்று பார்க்கவேணும். ஏகமெய்யான சர்வேசுரனுடைய ஆராதனைக்குப் பதிலாய் மகா மூடத்தனமுங் கொடுமையும் நிறைந்த விக்கிரக ஆராதனை எங்கும் பரவியிருந்தது. எப்படியென்றால் கல்லையும், மரத்தையும், புத்தியற்ற

மிருகத்தையுந் தெய்வங்களென்றெண்ணி, அவைகளுக்கு மனுஷர் பணிந்து தேவ ஆராதனை செலுத்திவந்ததுமன்றி, மகா நிஷ்டூர கொடுமையோடு தங்கள் மக்களைமுதலாய் வெட்டி அவைகளுக்குப் பலியிடுவார்கள். நாகரீகம் அடைந்த தேசங்களிலேமுதலாய் வெகு வெகுபேர் மற்ற வர்களுக்கு அடிமைப்பட்டுப் பொதி சுமக்கும் மிருகங்களைப் போல கடுமையாய் நடத்தப்படுவார்கள். பெற்றோர்கள் தங்கள் இஷ்டம்போல பிள்ளைகளை நன்றாய் வளர்த்தாலும் வளர்ப்பார்கள், குப்பைக்குழியில் எறிந்தாலும் எறிவார்கள். கடைசியாய் வெட்கத்துக்குரிய படுபாவங்களுக்கு முதலாய் மனங்கூசாதிருக்கும்படி துர்க்குணங்களைத் தெய்வரூபமாக வைத்து வணங்குவார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நாம் இத்தொகைப்பட்ட தப்பறைகளுக்குள் அகப்பட்டு மயங்காமலும், அஞ்ஞான நிறைந்த உலகத்தின் அசுசியான அக்கிரமங்களுக்கு உடன்பட்டுப் பாவ சாகரத்தில் அமிழ்ந் தாமலுமிருந்தால் இதெல்லாம் யாராலே வந்தது? இயேசு நாதசுவாமியால்தானல்லோ? ஏனெனில் அவர்தாம் தமது அப்போஸ்தலர்வழியாய் உலகத்தின் எத்திசையிலும் சத்தி யத்தின் ஒளி பரவி வீசும்படிசெய்கிறார். சுபாவ முறையி லும் ஞான முறையிலும் நாம் சுகித்து அநுபவிக்கும் சகல நன்மைகளும் அவர் ஒருவராலேதான் நமக்கு வருகின்றன. அந்த ஒளியைப் பாராமல் கண்ணை மூடிக்கொள்ளாத சகல ரையும் பிரகாசிப்பிப்பது அவரே. அவரே நமது உற்பத் தியின் மேன்மையையும், நமது கதியின் மகத்துவத்தையும், சர்வேசுரன்மட்டிலும் பிறர்மட்டிலும் நமதுமட்டிலுமுத லாய் நாம் அநுசரிக்கவேண்டிய கடமைகள் எவையென்றும் நமக்குத் தெளிவிக்கிறார். இந்தக் கடமைகளைப் பிரமாணிக் கமாய் அநுசரிப்போமாகில் இகத்திலும் பரத்திலும் பாக்கிய வான்களாயிருப்போம். இதெல்லாம் பார்க்கையில் நாம் இயேசுநாதசுவாமிக்கு எவ்வளவோ நன்றியறிந்தவர்களாய் இருக்கவேணும்! இயன்றமட்டும் நாம் இதை நினைத்துப் பார்க்கிறோமோ? மற்றவர்களும் இதைப்பற்றி நினைக்கும் படி நம்மாலானமட்டும் பிரயாசப்படுகிறோமோ?



மனப்பற்றுதல்.—இன்னும் அந்தகாரத்திலும் மரண நிழலிலும் உட்கார்ந்திருக்கிற சனங்களைப் பிரகாசிப்பித் தருளுஞ் சுவாமி.

பிரதிக்கினை.—சத்திய விசுவாசம் எங்கும் பரம்பும் படி நாம் வேண்டிக்கொள்வதுமன்றி மற்றவர்களையும் வேண்டிக்கொள்ளச் செய்கிறது.

## 2-ம் பிரிவு

### இயேசுநாதரைப் பின்செல்லுகிறவன் இருளில் நடக்கிறதில்லை

தியானம்.—என்னைப் பின்செல்லுகிறவன் இருளில் நடக்கிறதில்லையென்று இயேசுநாதர் திருவுளம்பற்றியிருக் கிறார். (அரு. 8). அதாவது அவன் இருளுக்கு ஒப்பாகிய தப்பறை எண்ணங்களையுந் துர்க்குணங்களையும் விட்டு, சத்தியத்தின் பிரகாசத்தை அறிந்து தருமத்தின் வழியில் நடப்பானென்று அர்த்தமாம். அப்படியே அஞ்ஞான அந்தகாரத்தில் அமிழ்ந்தி மிருகங்களைப்போல முரட்டுத் தனமாய்ச் சீவித்த சனங்கள் இயேசுநாதரிடத்தில் வந்து அவருடைய சுவிசேஷ போதனையை அறிந்து அநுசரிக்கத் துவக்கவே மகா அருமையான புண்ணியங்களையும் வீரிய மாய்ச் செய்து யாவருக்கும் உத்தம மாதிரிகையானார்கள். இதற்கு விரோதமாய் இந்தத் திவ்விய போதனையைக் கை விட்ட மகமதியர் முதலான பேர்கள் சீர்திருத்தங்கெட்டு முரடரானார்கள். இந்தச் சத்தியவேதத்தைப் புரட்டின பதிதர் சந்தேகக் கடலில் விழுந்து நீந்தி நீந்திக் கரைகாணா மல், ஒவ்வொருவரும் ஒவ்வொரு எண்ணமுள்ளவர்களாய் நிலைதவறி அலைகிறார்கள். பிரிவினைக்காரரோ உலக அதிபதி களின் கையில் பம்பரம்போல் ஆடுகிறார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—கனமான இந்தச் சத்தியங்களைத் தியானித்துப் பார்ப்பதினால் நமக்கு எவ்வளவோ இன்பமும் ஆறுதலும் உண்டாகும்! அர்ச். இராயப்பர் பூர்வீகக் கிறீஸ்துவர்களுக்குச் சொன்னதுபோல சர்வேசுரன் நம்மை அஞ்ஞான அந்த காரத்தினின்று அதிசயத்துக்குரிய தமது பிரகாசத்துக்

குள் வரும்படி அழைத்திருக்கிறார். கத்தோலிக்கு வேதத்திலே பிறந்து பாலபிராயமுதல் இயேசுநாதரை அறிந்து சிநேகிக்கும்படியாகப் படிப்பிக்கப்பட்டிருக்கிறோம். சர்வேசுரன் நமக்குச் செய்த இவ்வளவு பெரிய உபகாரத்துக்கு நாம் அயோக்கியராகாதபடி எச்சரிக்கையாயிருக்கக்கடவோம்.

மனப்பற்றுதல்.—இயேசுநாதருக்கு ஆச்சரியத்தோடு நன்றியறிந்த தோத்திரஞ்செய்து அவரை அதிகமதிகமாய்ச் சிநேகிக்க ஆசிப்பாயாக.

பிரதிக்கினை.—இயேசுநாதரை எல்லாரும் அறிந்து சிநேகிக்கும்படி பிரயாசப்படுவோம்.

## 3-ம் பிரிவு

### இயேசுநாதரைப் பின்செல்லுகிறவன் சீவியந்தரும் பிரகாசம் உடையவனாயிருப்பான்

தியானம்.—என்னைப் பின்செல்லுகிறவன் இருளிலே நடவாமற் சீவியத்தின் ஒளி உடையவனாயிருப்பானென்று நம்முடைய திவ்விய இரட்சகர் திருவுளம்பற்றியிருக்கிறார். அதாவது நித்திய சீவியத்துக்குந் தேவ தெரிசனைக்கும் வழியாகிய ஞான சீவியத்தின் ஒளியைக்கொண்டிருப்பானென்று அர்த்தமாம். சாவான பாவமில்லாமல் தேவ இஷ்டப்பிரசாதத்தைக் காப்பாற்ற வழக்கமுள்ளவன் இந்த ஞான சீவியத்தின் முதல் வரிசையில் இருக்கிறான். மனம் பொருந்தி அற்பப் பாவத்தைக் கட்டிக்கொள்ளாதவன் அதின் இரண்டாம் வரிசையில் இருக்கிறான். இலௌகிக ஆசைப்பற்றுதல் எல்லாவற்றையுந் தள்ளி இயேசுநாதரை மாதிரிகையாக வைத்து அவரை ஓயாமல் கண்டுபாவிக்கிற வாடிக்கையுள்ளவன் அதின் மூன்றாம் வரிசையில் இருக்கிறான்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இந்த மூன்றாம் வரிசையின் உத்தமதனத்தை அடைந்திருக்கிறவர்கள் வாக்குக்கெட்டாத மதுரம் பொழியும் [illegible]



யாகிற ஞான ஒளியை இவ்வுலகத்தில் ஏராளமாய் அடைகிறதுமன்றிப், பரலோகத்திலுந் தேவ தெரிசனையின் மதுர இன்பத்திலே மேலான பங்கு அடைவார்களென்பதற்குச் சந்தேகமில்லை. நீயும் அவர்களுடைய பாக்கியத்தை மதித்து அதை அடைய அங்கலாய்க்கிறாயல்லோ? இதை அடைவேனோவென்று ஐயப்படாதே. ஏனென்றால் இயேசுநாதசுவாமி இதற்காகவே உன்னை அழைத்து இதற்கு வேண்டிய உபாயமெல்லாம் உனக்குத் தந்திருக்கிறார். ஆகையால் தாழ்ச்சியோடும், நம்பிக்கையோடும், உற்சாகத்தோடும் அவைகளைக் கையாடிவருவாயானால் உன் பிரயாசத்துக்குச் சம்பாவனையாக வெற்றிமுடி பெறுவாய்.

சம்பாஷணை.—நமது ஒளியும், சீவியமும், நித்திய பாக்கியத்துக்கு அச்சாரமுமான திவ்விய இயேசுவை நமக்குத் தந்த அர்ச். கன்னிமரியம்மாளோடு சம்பாஷணை செய்வோமாக.

---

# 17-ம் தேதி

## இயேசுநாதர் செய்த பிரசங்கத்தின் தொடர்ச்சி

### பரிசேயருடைய எதிரிடையும் மூர்க்கத்தனமும்

ஆயத்தச் சிந்தனை.—பரிசேயரும் வேதபாரகரும் இயேசுநாதர் செய்த பிரசங்கத்தில் குற்றம்பிடிக்கத் தேடுகிறதைப் பார்க்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

தியானச் செபம்.—எதிரிடையாய்ப் பேசுகிற துர்க்குணத்தை மகா அருவருப்போடு வெறுக்க வரங் கேட்பாயாக.

## முதல் பிரிவு

### பரிசேயருடைய எதிரிடைக் குணம்

தியானம்.—நான் உலகத்தின் ஒளியாய் இருக்கிறேனென்ற இவ்வுன்னத வாக்கியத்தை இயேசுநாதர் சொன்ன

மாத்திரத்தில் பரிசேயர் அவரைத் தடுத்து: நீரே உம்மைக் குறித்துச் சாட்சி சொல்லுகிறீர். உம்முடைய வாக்கு மூலஞ் செல்லாதென்றார்கள். அதற்கு இயேசுநாதர் மாறுத்தரமாக: என் வாக்குமூலம் செல்லுகிறதற்கு நியாயமுண்டு. ஏனெனில் நான் தனிமையாயில்லை. என்னை அனுப்பின என் பிதாவும் என்னோடிருக்கிறாரென்றார். அதற்கு அவர்கள்: உம்முடைய பிதா எங்கே இருக்கிறாரென்று கேட்க, அவர் பிரதியுத்தாரமாக: என்னை நீங்கள் அறிந்திருப்பீர்களேயானால் என் பிதாவையும் அறிந்திருப்பீர்கள் என்றார். பின்னும் தமதுபேரில் விசுவாசம் வைத்திருந்தவர்களைப் பார்த்துச் சொன்னதாவது: நான் படிப்பிக்கிறதை நீங்கள் அனுசரித்துவந்தால் மெய்யாகவே என் சீஷர்களாயிருப்பீர்கள், சத்தியத்தையும் அறிவீர்கள்; சத்தியம் உங்களைச் சுயாதீனராக்குமென்றார். அப்போது சில பரிசேயர் சத்தமிட்டுச் சொன்னதாவது: சுயாதீனராவோமென்று நீர் எப்படிச் சொல்லலாம். நாங்கள் அபிரகாமுடைய பிள்ளைகளல்லவோ? நாங்கள் ஒருபே[illegible] யாருக்குட் அடிமைகளாயிருந்ததில்லை என்றார்கள். அ[illegible] இயேசுநாதர் மாறுத்தாரமாக: நான் உங்களுக்கு உ[illegible] யாகவே சொல்லுகிறேன், எவனெவன் பாவத்தை[illegible] கொள்ளுகிறானோ அவன் அந்தப் பாவத்துக்கு அ[illegible] யிருக்கிறான் என்றார் (அரு. 8).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்த[illegible] பரிசேயர் இப்படி அநேகம்விசை தடுத்துக் கூ[illegible] பேசினது, இயேசுநாதருக்கு எதிரிடைசெய்யவே[illegible] கிற மூர்க்க வெறியினாலேயேயொழிய மற்றப்[illegible] ஏனெனில் ஞானத்திலும் அர்ச்சியசிஷ்டதனத்திலு[illegible] காரத்திலும் அவர் தங்களுக்கு மேற்பட்டிருந்த[illegible] இப்படி அவர்கள் மூர்க்கங்கொண்டார்கள். இ[illegible] நாதருடைய மேன்மையைக்கண்டு அவர்கள் ஆங்காரம் பொங்கி எழும்பினது. ஆங்காரத்தினாலே காய்மகாரமும் எதிரிடைக்குணமும் பிறந்தன. ஐயோ, உன்னிடத்திலும் இப்பேர்க்கொத்த குணம் சற்றாவது காணப்படுகிறதில்லையோ? இந்தக் குணம் விசேஷமாய் யாருக்கு விரோத



மாய் எழும்புகிறதென்று பார். நாலாவிதத்திலும் நீ தலை குனிந்து வாயை மூடிக்கொண்டிருக்கவேண்டியவர்களுக்கு விரோதமாயல்லவோ? இதுகாரியத்தில் உன்னைக் கவனமாய்ச் சோதித்துப் பார்.

மனப்பற்றுதல்.—ஆங்காரம் வழக்கமாய் நமது கண்ணை மறைக்கிறதினாலே இது விஷயத்தில் உன்னை நன்றாய்ச் சோதித்துப் பார்க்கும்படி ஆண்டவரிடத்தில் அனுக்கிரகங் கேள்.

பிரதிக்கினை.—எதிரிடையாய்ப் பேசுகிற கெட்ட குணத்துக்குப் பயந்து அதை அருவருத்துத் தள்ளு.

## 2-ம் பிரிவு

### இயேசுநாதருடைய ஆச்சரியத்துக்குரிய பொறுமையும் ஞான வைராக்கியமும்

தியானம்.—பரிசேயருடைய துர்ப்புத்தியையும் அகந்தையையுங் கண்டு நல்ல ஆயனாகிய இயேசுநாதர் தமது பொறுமையும் ஞான வைராக்கியமுந் தளரவிடாமல் அவர்களை மனந்திருப்ப மறுபடியும் பிரயாசப்படுகிறார். அவர்களை நோக்கி அவர் சொன்னதாவது: இதைப்பற்றி நீங்கள் ஆபிரகாமுடைய மக்களாயிருந்தால் அவருக்கு யோக்கியமான கிரியைகளைச் செய்யுங்கள். ஆனால் அதற்கு விரோதமாய் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிற என்னைக் கொல்லத் தேடுகிறீர்கள். பசாசு கீழ்படியாமல் கெட்டுப்போன நாள் துவக்கி எந்நாளும் சத்தியத்தைப் பகைத்து வருகிறது. அதன் இச்சைகளைத்தான் நீங்கள் நிறைவேற்ற மனதாயிருக்கிறீர்கள். அதின் பேச்சுக்கே நீங்கள் காதுகொடுக்கிறீர்கள். சர்வேசுரனுக்குப் பிள்ளையாயிருக்கிறவன் அவருக்குச் செவிகொடுப்பான். எவன் என் வார்த்தையைக் காப்பானோ அவன் ஒருபோதுஞ் சாவதில்லை என்றார். இதைக்கேட்டு எல்லாரும் உரத்தசத்தமாய்க் கூவிச் சொன்னதாவது, நீ பேய்பிடித்தவனென்று இப்போது நன்றாய்த் தெரியவருகிறது. ஆபிரகாமுந் தீர்க்கதரிசிகளும் இறந்துபோனார்களே. நீயோவென்றால் என்

வார்த்தையைக் காப்பவன் ஒருபோதும் சாகமாட்டானென்கிறாய். இதினாலே நீயே உன்னை எப்படிப்பட்டவனென்று காண்பிக்கிறாய் என்றார்கள் (அரு. 8).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—உன் திவ்விய குருவின் பொறுமையையும் ஞான வைராக்கியத்தையுங் கண்டு ஆச்சரியப்பட்டு அவைகளைக் கண்டுபாவிக்கப் பிரயாசப்படு. பிறசிநேகத்துக்கும் ஆத்தும ஈடேற்றத்துக்கும் அடுத்த அலுவல்களை நீ செய்துவருகையில் யாராவது உன் வார்த்தைக்குக் காது கொடாமல் எதிர்த்து அகந்தையாயிருக்கிறதைக் கண்டால் சலிப்படையவும் வேண்டாம். அவர்கள் மனந்திரும்புவார்களோவென்று ஐயப்படவும் வேண்டாம். நீ துவக்கினது கைகூடாதே போனாலும் அதினால் உன் பத்தி வைராக்கியத்துக்கும் பிறசிநேகத்துக்குஞ் சம்பாவனை குறையுமென்று ஒருபோதும் நினையாதே.

பிரதிக்கினை.—தின்மை உன்னைச் செயங்கொள்ள விடாதே. ஆனால் நீயே தின்மையை நன்மையால் செயித்துக்கொள்ளென்று அர்ச். சின்னப்பர் சொன்னபடி நடக்கப் பிரயாசப்படு.

## 3-ம் பிரிவு

### எதிரிடையாய்ப் பேசுவதினாலும் தேவ வரப்பிரசாதத்தைத் தட்டிவிடுவதினாலும் வரும் பயங்கரமான கேடுகள்

தியானம்.—இயேசுநாதர் தம்மைத் தடுத்துப் பேசுகிறவர்களை மனந் திருப்பக் கடைசிமட்டும் பிரயாசப்பட்டார். சகல சாதி சனங்களால் ஆசிக்கவும் தீர்க்கதரிசிகளால் முன்னறிவிக்கவும்பட்ட தேவ குமாரன் தாமேயென்று அவர்களுக்கு ஒப்பித்தார். மேலும் அவர் சொன்னதாவது: நானே என்னை மகிமைப்படுத்தினால் என் மகிமை ஒன்றுமில்லாததுதான். என்னை மகிமைப்படுத்துகிறவர் என் பிதாவானவர் தாமே. ஆபிரகாம் என்னுடைய நாளைக்காண ஆசித்தார். அதைக் கண்டு களிகூர்ந்தாரென்றார். அப்போது யூதர்கள் அவரைப்



பார்த்து: என்ன? உனக்கு இன்னம் ஐம்பது வயது இல்லையே. நீ ஆபிரகாமைக் கண்டது எப்படி என்றார்கள். அதற்கு இயேசுநாதர் ஆபிரகாம் பிறப்பதற்கு முன்னமே நான் இருக்கிறேனென்று சத்தியமாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். சுருக்கமாய்ச் சொன்ன இந்த வார்த்தைகளைக்கொண்டு இயேசுநாதர் தாம் மெய்யாகவே சர்வேசுரனுக்குச் சரிசமானமென்று வெளிப்படுத்துகிறதாக யூதர்கள் கண்டுகொண்டார்கள். ஆனகையால் அவர் தேவ தூஷணஞ் சொன்னதாகப் பாவித்து அவரைக் கல்லால் எறிந்து கொல்லக் கல்லுகளை எடுத்தார்கள். ஆனால் இயேசுநாதர் அவர்கள் அறியாமல் தேவாலயத்தைவிட்டுப் புறப்பட்டுப்போனார் (அரு. 8).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—எதிரிடையாய்ப் பேசுவதும் தேவப்பிரசாதத்தைத் தட்டிவிடுவதுமாகிற துர்க்குணத்தை நீ சாக்கிரதையாய் வெறுத்துத் தள்ளும்படி இஸ்றாயேல் சனங்களுக்குள் வேதபாரகராயிருந்தவர்கள் எப்படிப் போனார்களென்று பார். அவர்கள் மனக்குருடும் மூர்க்கத்தனமும் அவிசுவாசமும் கன்னெஞ்சத்தனமுமாகிய நிர்ப்பாக்கியங்களுக்கு உள்ளாகி அந்திய வேளையில்முதலாய் மனந்திரும்பாமல் செத்தார்கள். உங்கள் பாவங்களில்தானே நீங்கள் சாவீர்களென்று இயேசுநாதர் சொன்னதே இதற்கு அத்தாட்சி. எதிரிடைப்பேச்சு பிடிவாதத்துக்கும் அவல மரணத்துக்கும் பலமுறை ஏதுவானதினாலே அதற்கு இடங்கொடாதிருக்கும்படி எச்சரிக்கையாயிருக்கக்கடவோம்.

சம்பாஷணை.—நாளதுவரையில் சர்வேசுரன் வெகு பிரசித்தமாய் மகிமைப்படுத்திக்கொண்டு வருகிற பேர்போன வேதசாட்சியான அர்ச். ஜனுவாரியாரோடு சல்லாபஞ் செய். இன்று திருச்சபை அவருடைய திருநாளைக் கொண்டாடுகிறது.

# 18-ம் தேதி

## எருசலேம் பட்டணத்தின் பிறவிக் குருடன் அற்புதமாய்க் குணமடைகிறான்

**ஆயத்தச் சிந்தனை.**—இயேசுநாதசுவாமி பிறவிக் குருடன் கண்ணில் சேற்றைப் பூசுகிறதைப் பார்க்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

**தியானச் செபம்.**—குருட்டுக் கீழ்ப்படிதலை மதிக்கவும் அதைச் சிநேகிக்கிறோமென்று நமது நடக்கையால் காட்டவும் வரங் கேட்போமாக.

### முதல் பிரிவு

#### அந்தக் குருடன் கண்தெரியாமல் பிறந்ததற்குக் காரணம்

**தியானம்.**—இயேசுநாதருக்கு எதிரிடையாய்ப் பேசினவர்கள் எவ்வளவு அயோக்கியராயிருந்தபோதிலும் அவர் எருசலேம் பட்டணத்தை விட்டுப் புறப்படுமுன் அவர்களுக்குத் தமது தெய்வீகத்தின்பேரில் ஓர் அத்தாட்சி கொடுக்கச் சித்தமானார். இதற்காக அவர் தெரிந்துகொண்ட புதுமை யாவர் மனதிலும் நன்றாய்ப் பதியக்கூடியதும், மறக்கப்படாததுமாயிருந்ததுமன்றி அதின்பேரில் யூத ஆசாரிய சங்கத்தார் தீர்ப்புச் சொல்லவேண்டியிருந்ததினாலே பட்டணமெங்கும் பிரபலியமானது. அர்ச். அருளப்பர் இதைப்பற்றித் தமது சுவிசேஷத்தில் சொல்லியிருக்கிறதாவது: இயேசுநாதர் வழி நடந்துபோகையில் பிறவிக் குருடனான ஒரு மனிதனைக் கண்டார். அப்போது அவருடைய சீஷர்கள் அவரை நோக்கி: சுவாமீ, இவன் குருடனாய்ப் பிறப்பதற்குப் பாவத்தைச் செய்தவனார்? இவனோ, இவன் பிதா மாதாவோவென்று வினவினதற்கு, இயேசுநாதர் மறுமொழியாகப் பாவத்தைச் செய்தது இவனுமல்ல, இவனுடைய மாதாபிதாவுமல்ல; ஆனால் சர்வேசுரனுடைய செயல் இவனிடத்தில் விளங்கும்படி இப்படியாச்சுதென்றார் (அரு. 9). இதில் கவனிக்கவேண்டியது என்னவென்றால்: சீஷர்கள் கேட்ட கேள்விக்கு



இசைவாக இயேசுநாதர் அந்த மனிதன் குருடனாய்ப் பிறந்ததைப்பற்றி மாத்திரம் மறுமொழி சொன்னாரல்லாதே மற்றப்படியல்ல. ஏனென்றால் வேதத்தில் எழுதியிருக்கிறபடி பாவஞ் செய்யாதவன் ஒருவனுமில்லையென்கிறதினாலே சந்தேகமில்லாமல் அவனும் அவன் பெற்றோர்களும் பாவிகள்தான்; ஆனால் அவன் குருடனாய்ப் பிறந்தது அவர்களுடைய பாவத்துக்கு ஆக்கினையாக வந்ததல்ல.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது**—இந்தச் சீவிய காலத்தில் வரும் சகல துன்ப துரிதங்களுக்குங் காரணம், அவரவர் செய்த பாவமல்லவென்று மேற்சொல்லிய வர்த்தமானத்தால் நிச்சயமாய்த் தெரியலாகிறது. ஆகையால் எப்போதும் அந்தத் துன்ப வருத்தங்களைச் சர்வேசுரன் ஆக்கினையாக அனுப்பாமல், நீதிமான்களையும் பெரிய அர்ச்சியசிஷ்டவர்களையுமுதலாய்ச் சோதிக்கவும், அதினால் தமது மகிமை விளங்கவும் அவர்களுடைய பேறுபலன் அதிகரிக்கவும் அனுப்புகிறார். இப்படியே யோப், தோபியாஸ் என்னும் மற்ற மகாத்துமாக்களிடத்திலும், இன்னமும் பழைய புதிய ஏற்பாடுகளில் விளங்கின கணக்கற்ற நீதிமான்களிடத்திலும் நடந்தது அறிவோம். இதினின்று நாம் கைக்கொள்ளவேண்டிய புத்திமதி என்னவென்றால்: முந்த முந்த சர்வேசுரன் நமதுமேல் தமது கையை ஓங்கும்போது நம்பிக்கையும் தைரியமும் இழந்துபோகாதிருக்கவேண்டியதுமன்றி, அர்ச். யாகப்பர் தீர்க்கமாய்ச் சொல்லியிருப்பதுபோல் நாம் சந்தோஷமுமாயிருக்கவேண்டியது. 2-வது, கெட்டவர்களுக்கு வரும் பொல்லாப்பைக்கண்டு அது அவர்களுடைய பாவத்துக்கு ஆக்கினையாகவே வந்ததென்று சொல்லப்படாது. ஏனென்றால் ஓர் சமயம் அவர்களும் இப்படி நமதுமேல் திருப்பிச் சொல்லக்கூடும். இந்த இரண்டு புத்தியும் உன் நடக்கையில் தோன்றுகிறதோவென்று பார்.

**மனப்பற்றுதல்.**—சர்வேசுரன் உனக்கு அனுப்பச் சித்தமாகும் சகல சிலுவைகளையும் தைரியத்தோடும் ஞான சந்தோஷத்தோடுஞ் சுமந்துகொள்ள ஒத்தாசை கேட்பாயாக.

பிரதிக்கினை.—சுபாவத்துக்கு வருத்தமாயிருக்குஞ் சமயங்களிலே விசேஷமாய் இந்த மன்றாட்டைக் கேட்க வேணும்.

## 2-ம் பிரிவு

### குருடன் ஆச்சரியமானபிரகாரமாய்ச் சௌக்கியமடைகிறன்

தியானம்.—இயேசுநாதர் மேற்சொன்ன வார்த்தைகளைத் திருவுளம்பற்றினபின் தரையில் உமிழ்ந்து சேறுண்டாக்கி அந்தச் சேற்றைக் குருடன் கண்ணில் தடவினார். பின்னும் அவனை நோக்கி: சீலோயே என்னுங் குளத்தில் போய் உன்னைக் கழுவென்றார். குருடனும் அப்படியே போய்க் கழுவிப் பார்வையடைந்து திரும்பிவந்தான் (அரு. 9).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இங்கே எதின்பேரில் ஆச்சரியப்படுகிறதென்போம். குருடனுடைய விசுவாசத்தையுங் கீழ்ப்படிதலையும் இயேசுநாதர் சோதித்த வகையையோ? அல்லது குருடன் யாதொன்றும் பேசாமல் சுவாமி சொன்னபடி நருக்கென்று செய்ததையோ, என்ன சொல்வோம்? ஆயினும் இவ்விரண்டிலும் நமக்கு மகா உச்சிதமான படிப்பினை அடங்கியிருக்கின்றது. இதைக்கொண்டு நாம் விசுவாசத்தில் உறுதிப்படவும், தேவ பராமரிப்புக்கு நம்மை முழுதுங் கையளிக்கவும், சகலத்திலும் நமது சிரேஷ்டர்களுக்கு உத்தமமாய்க் கீழ்ப்படியவுங் கற்றுக்கொள்ளக்கடவோம். இந்தப் புண்ணியங்களின் பேறுபலனும் சம்பாவனையும் எப்பேர்க்கொத்தனவென்றுகையும் மெய்யுமாய்க் கண்டோமே. இவைகளை அனுசரிப்பதற்கு நமக்குத் தைரியம் வருவிக்கும்படி இன்னும் வேண்டியதென்ன?

பிரதிக்கினை.—சுவாமி, நான் உமது கேசத்தை அறிவேன். ஆகையால் என்னை உமது மனம்போல நடத்துமென்று அர்ச். அகுஸ்தீனர் சர்வேசுரனை நோக்கி உருக்கமாய்ச் சொன்னதுபோல நாமும் சொல்லப் பழகக்கடவோம்.



## 3-ம் பிரிவு

### பிறவிக் குருடனுக்கு அயலாரான எல்லாரும் ஆச்சரியமும் சந்தேகமும்பட்டது

தியானம்.—பிச்சை எடுத்துப் பிழைத்த இந்தக் குருடனைப் பட்டணத்தில் எல்லாரும் அறிவார்கள். இவன் ஆரோக்கியம் அடைந்த செய்தி இயல்பாகவே எங்கும் பிரசித்தமானது. அப்போது அவனுடைய அயல் வீட்டாரும் அவன் பிச்சையெடுத்து வருவதை நெடு நாளாய்ப் பார்த்திருந்தவர்களுந் தங்களுக்குள்ளே சொல்லிக்கொண்டதாவது: கோவில் வாசலிலிருந்து பிச்சைவாங்கிக்கொண்டிருந்தவன் இவன்தானல்லோவென்று கேட்க, சிலர் அவன்தானென்றும், வேறு சிலர் அவன் அல்ல, அவன் சாயலான வேறொருவனென்றுஞ் சொல்வார்கள். இவனோவென்றால் அவன் நானே என்பான். அப்போது அவர்கள் உன் கண் திறக்கப்பட்டதெப்படியென்க, அவன் பிரதியுத்தாரமாக: இயேசுவென்னப்பட்ட அந்த மனுஷன் மண்ணைச் சேறாக்கி என் கண்ணிற் பூசி: நீ சீலோவென்னுங் குளத்திற்போய் உன்னைக் கழுவென்று சொல்ல, நானும் அப்படியே செய்து, இதோ பார்வையடைந்திருக்கிறேன் என்றான் (அரு. 9).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—குருடன் யாதொரு ஒளிப்பு மறைப்பின்றி மகா குண இயல்பாய்ச் சொன்ன இந்த மறுமொழியைக்கொண்டு தனக்குச் சுகங் கிடைத்தது தேவ வல்லமையால்தானென்று தெளிவாய்க் காட்டுகிறான். ஏனென்றால் சேற்றுக்குஞ் சீலோவென்னுங் குளத்துக்குஞ் சுபாவமாய் இல்லாத அந்தச் சக்தியைக் கொடுத்தது தேவ வல்லமையேயன்றி வேறென்ன? நாமும் நமது ஆத்தும சரீர நன்மைகளுக்கும் நாம் செய்யும் புண்ணியங்களுக்குஞ் சர்வேசுரன் ஒருவரே காரணமென்றும் எல்லாம் அவரிடத்திலிருந்தே வருகிறதென்றும் இந்தக் குருடன் பாவனையாக விசுவசித்து அங்கீகரிக்கக்கடவோம். இதுவே வீண் சலாக்கியத்தை நம்மிடத்தினின்று அகற்றவும், சர்வேசுரனிடத்தில் நவ

மான நன்மைகளைப் பெற்றுக்கொள்ளவும் தக்க வழியாம். இதுவரையில் இதை எப்படி அநுசரித்து வந்தாய்?

**சம்பாஷணை.**—நமது திவ்விய இரட்சகரோடு சம்பாஷணை செய்யக்கடவோம். அவருடைய வரப்பிரசாத உதவியில்லாமல் நம்மால் யாதொரு நன்மையுஞ் செய்யக்கூடாதென்று உறுதியாய்ச் சொல்லி, அந்தந்தப் புண்ணியக் கிரியைகளைச் செய்யும்படி நமக்கு அவர் உதவியாயிருந்ததற்காக அவருக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரஞ் செய்கிறது. மேலும் நமது சிரேஷ்டர்களுக்குக் குருடனைப்போல கீழ்ப்படிந்து நடக்கும்படியாகச் சிரவணமுள்ள இருதயத்தை நமக்குத் தரவேணுமென்று மன்றாடுகிறது.

---

# 19-ம் தேதி

## முந்தின தியானத்தின் தொடர்ச்சி

**ஆயத்தச் சிந்தனை.**—அந்தக் குருடன் பரிசேயர் சபை நடுவில் நின்று அவர்களுக்கு மறுமொழி சொல்லுகிறதாக ரூபிகரித்துக்கொள்.

**தியானச் செபம்.**—அந்தக் குருடனிடத்தில் விளங்கின இருதய நேர்மையையுந் தாராள குணத்தையுங் கேட்பாயாக.

## முதல் பிரிவு

### பார்வையடைந்த குருடன் சனநிறைந்த சங்கத்தில் பரிசேயரைத் திகைக்கச்செய்கிறன்

**தியானம்.**—குருடனுக்கு உபகாரமாக இயேசுநாதர் செய்த இந்தப் பெரிய அற்புதத்தைக் கண்ட பரிசேயருக்குக் கோபம் உச்சந்தலைமட்டும் ஏறினது. அதினுடைய பிரஸ்தாபம் மங்கும்படிக்கு அது நடந்தது மெய்யோ பொய்யோவென்று சந்தேகப்பட்டு ஓய்வுநாளிலே கர்த்தர் சேறுகுழைத்துப் பூசினதினாலே பெரிய குற்றவாளியென்று



அவதூறு சொன்னார்கள். குருடனையும் அவன் தாய் தகப்பனையுஞ் சங்கத்துக்குமுன் முறைமுறையாய் வரச்செய்தார்கள். தாய் தகப்பன் வந்து அவன் தங்கள் மகன்தானென்றும், குருடனாய்ப் பிறந்தானென்றும் வாக்குமூலம் கொடுத்தார்கள். அந்தக் குருடனும் என் கண்ணில் சேற்றைப் பூசிப் போய்க் கழுவு என்று சொன்னவர் இயேசுநாதர் தான்; அவர் சொன்னபடி செய்யவே பார்வையடைந்தேனென்று திரும்பவும் வாக்குமூலங் கொடுத்தான். நடந்ததை இல்லையென்று சொல்லக்கூடாததினாலே, அதற்குத் தெய்வ முத்திரையில்லையென்று காட்ட எத்தனித்து, ஓய்வு நாளை அநுசரியாத மனுஷன் சர்வேசுரனுக்கு உகந்தவனல்லவென்று குருடனை நோக்கிச் சொன்னார்கள். அதினாலே அவர் பசாசினுடைய கூட்டாளியென்று அவர்கள் சொன்னாற்போலாயிற்று. இதைக் குருடனுக்கு ஒப்பிக்க அவர்கள் என்ன பாடுபட்டாலும் அவன் அசையவில்லை. ஏனெனில், குருடன் அவர்களைப் பார்த்து: பூலோகந் தோன்றின நாள் முதற்கொண்டு இதுவரையில் பிறவிக் குருடனாயிருந்தவனை யாரும் கண்திறக்கச் செய்ததாகக் கேட்டதில்லையே. இந்த மனுஷன் சர்வேசுரனிடத்தினின்று வந்தவரல்லாவிட்டால் இப்பேர்க்கொத்த காரியம் யாதொன்றுஞ் செய்திருக்கமாட்டார் என்றான். படியாத இந்தப் பிச்சைக்காரன் இப்படித் தங்கள் வாயை அடைத்துப்போட்டானென்று அவர்கள் வெட்கிக் கோபங்கொண்டு வேறே நியாயஞ்சொல்ல இடமில்லாமல் அவன் மேல் சீறிவிழுந்து: அடா பாவி, நீ பிறந்தது முதல் உன் சர்வாங்கமும் பாவமாயிருக்க எங்களுக்குப் புத்திசொல்லத் தலைப்படுகிறாயோவென்று சொல்லி அவனைத் தங்களைவிட்டு அப்பால் துரத்திவிட்டார்கள் (அரு. 9).

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—நமது படிப்பினைக்காகவும் ஆறுதலுக்காகவும் இந்த விபரங்களெல்லாம் இஸ்பிரீத்துசாந்துவானவர் நமக்கு எழுதிவைக்கச் சித்தமானார். இது நமக்குப் புத்தியாயிருக்கவேண்டியது. ஆகையால் காய்மகாரமென்னும் நீசக்குணத்தை நாளுக்குநாள் அதிகமதிகமாய் அறிந்து அருவருக்கக் கற்றுக்

கொள்வோமாக. காய்மகாரத்தினுல் ஆவதென்ன? அதினுல் பரிசேயர் காலாகாலத்துக்குந் தங்கள் பேர் கெட்டழிய வழிபண்ணிக்கொண்டதேயல்லாமல், அதினின்று அவர்கள் அடைந்த பலன் ஒன்றுமில்லையே. இப்படியிருக்க நமதுபேரில் யாராவது காய்மகாரப்பட்டாலும் நாம் அஞ்ச வேண்டியதொன்றுமில்லை. புண்ணியமும் உண்மையும் நம்மிடத்தில் இருக்குந்தனையும் மற்றவர்களுடைய காய்மகாரத்தினலே நமக்கு நன்மைவருமல்லாதே தின்மைவர மாட்டாது. இந்தப் பிரகாரமே இயேசுநாதருடைய சத்துருக்கள் காய்மகாரத்தினுல் தொடங்கினதெல்லாம் இந்தப் பெரிய அற்புதத்தின் உண்மையையும் இரட்சகருடைய தெய்வீகத்தையும் ஒப்பிக்க உதவியாயிருந்தது. அர்ச். சின்னப்பர் சொல்லியிருக்கிறதுபோல சர்வேசுரனைச் சிநேகித்துச் சுத்த இருதயத்தோடு அவரைத் தேடுகிறவர்களுக்குச் சகலமும் நன்மையாய் மாறும். இதைவிட ஆறுதலானது வேறென்ன உண்டு? (உரோ. 8).

மனப்பற்றுதல்.—மகா நேர்மையான இருதயத்தைக் கேட்பாயாக. காய்மகாரத்துக்கு எவ்வளவும் இடங்கொடாதிருக்கவும் இந்தத் துர்க்குணம் தன்னை மறைக்கும்படி போடும் வேஷத்தைக் கண்டு அருவருப்போடு தள்ளவும் அநுக்கிரகங்கேள்.

பிரதிக்கினை.—நன்மையானது எப்படி வந்தாலும், யார் வழியாய் வந்தாலும், அதைக் கொண்டாடி அதற்கு ஒத்தாசையாயிருக்கவேணும்.

## 2-ம் பிரிவு

### பார்வையடைந்த குருடன் தனது பரம உபகாரியை அறிந்து அவரை வணங்குகிறன்

தியானம்.—இயேசுநாதர் தம்மை யூதர்கள் நடுவே மகிமைப்படுத்தின குருடனுடைய நேர்மையான மனதையுந் தாராளகுணத்தையுங் கண்டு அவனுக்குச் சிறந்த சம்பாவனையை அளித்தார். அதெப்படியென்றால் அர்ச். அருளப்பர் சொல்லியிருக்கிறதுபோல யூதர்கள் அக்குருடனை



சபையினின்று தள்ளினதை அறிந்த இயேசுநாதர் அவனைக்
கண்டு: நீ தேவகுமாரன்பேரில் விசுவாசமாயிருக்கிறாயோ
வென்று கேட்க: சுவாமீ, நான் அவரை விசுவசிக்க அவர்
யாரென்று அறியேனென்றான். அதற்கு இயேசுநாதர்
மாறுத்தரமாக: நீ அவரை அறிவாய்; அவர் இப்போது
உன்னிடத்தில் பேசுகிறவர்தானென்றார். அதற்கு அவன்:
ஆண்டவரே, நான் விசுவசிக்கிறேனென்று சொல்லி
இயேசுநாதர் பாதத்தில் விழுந்து அவரை ஆராதித்தான்.
இவ்விதமாய் அவன் தன் சரீரக் கண்ணுக்குப் பிரகாசத்
தோடு கூட ஆத்தும பிரகாசத்தையும் விசுவாச வரத்தை
யும் அடைந்தான். மேலும் அவன் இயேசுநாதரைப் பின்
பற்றி அவருடைய எழுபத்திரண்டு சீஷர்களில் ஒருவனு
யிருந்தானென்றும், லாசரை யூதர்கள் பிறதேசத்திற்குத்
துரத்திவிட்டபோது அவரோடு இவனும் காலியாதேசத்
தில் அற்புதமாய்க் கரைபிடித்தானென்றும், அவ்விடத்தில்
வெகு பிரயாசப்பட்டு வேதத்தைப் போதித்து ஆயேசென்
கிற ஊரிலே பாக்கியமான மரணத்தையடைந்தானென்
றும் பாரம்பரையாய்ச் சொல்லிவருகிறார்கள். சர்வேசுரன்
ஆங்காரிகளை எதிர்த்துத் தள்ளித் தாழ்ச்சியுள்ளவர்களுக்
குத் தமது பிரசாதத்தைக் கொடுக்கிறாரென்கிற சத்தியம்
இதினால் வெட்டவெளியாய்த் தெரிகிறது (உரோ. 12).
எப்படியெனில் ஆங்காரமுள்ள பரிசேயர் ஞானக் குருடர்
களாகித் தங்கள் அந்திய வேளையில் முதலாய் மனந்திரும்
பாமல் இயேசுநாதசுவாமி சொன்னதுபோல தங்கள் பாவத்
திலே செத்தார்கள். பிறவிக்குருடனயிருந்தவனோவென்
றால் தன்னை எல்லாரிலுங் கடை கெட்டவனென்றும், தன்
நன்றியைக்காட்ட வகையற்றவனென்றும் எண்ணிக்கொண்
டிருந்தபடியால் தேவ வரங்களால் பூரிக்கப்பட்டு மோக்ஷத்
திலும் மகிமைப் பிரதாபம் அடைந்தான்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—தேவ
வரப்பிரசாதங்களும் இயேசுநாதருடைய தயவும் நமக்கு
அதிகமாய்க் கிடைக்கவேணுமானால், நாம் அவர்மட்டில்
மனத்தாராளமும் விசேஷமாய் நன்றியறிதலுமுள்ளவர்க
ளாய் இருக்கக்கடவோம். அவர் நமது ஆத்துமக் கண்

களைத் திறந்து, தம்மை நமக்கு விசேஷமாய் வெளிப்படுத்தி, சுவிசேஷத்தின் மேலான புத்திமதிகளை அனுசரிப்பதினால் வரும் பலாபலன்களைக் கண்டுணரச்செய்து, நமது மேல் வைத்த மகா தயவினால் தம்மை நாம் பின்சென்று வரும்படி அழைத்து, இத்தொகைப்பட்ட உபகாரங்களைச் செய்ததற்காக அவருக்கு அடிக்கடி நன்றியறிந்த தோத்திரஞ் செய்யக்கடவோம். இன்னமும் யாவரும் அவரை அறிந்து சிநேகிக்கும்படி நம்மாலானவரையில் பிரயாசப்பட்டு நமது நன்றியறிதலைக் காண்பிப்போமாக.

சம்பாஷணை.—நமது நேச இரட்சகரோடு சம்பாஷணை செப்பக்கடவோம்.

---

# 20-ம் தேதி

## எழுபத்திரண்டு சீஷர்கள் போதிக்க அனுப்பப்பட்டது

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதர் எழுபத்திரண்டு சீஷர்களுக்கும் புத்தி கற்பிக்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

தியானச் சேபம்.—திவ்விய கர்த்தர் அவர்களுக்கு ஒப்புவித்த வேதியத் தொழிலில் அவர்கள் காண்பித்த கீழ்ப்படிதலையும் பிறர் ஈடேற்ற ஆவலையும் உனக்குக் கட்டளையிடவேணுமென்று மன்றாடு.

### முதல் பிரிவு

### இயேசுநாதர்சுவாமி எழுபத்திரண்டு சீஷர்களைத் தெரிந்து அனுப்பினதின்பேரில்

தியானம்.—இயேசுநாதர் பரிசேயருடைய தந்திரமாய்கையினால் தமது சீஷர் மயங்காதபடி அவர்களுக்கு வேண்டிய புத்திமதி சொல்லித் திடப்படுத்தினபிறகு யூதேயாநாட்டின் மற்றப் பட்டணம் பட்டிகளில் தமது சுவிசேஷத்தைப் போதிக்கத்தக்கதாக செப்டெம்பர் மாதக்



கடைசியில் எருசலேம் பட்டணத்தைவிட்டு புறப்பட்டார். இந்த வேலை மகா பெரிதாயிருந்தாலும் இதற்கு அவர் செலவழிக்கக்கூடிய நாட்கள் வெகு சொற்பமாயிருந்தன. ஏனென்றால், அவர் இவ்வுலகத்தை விட்டுப் போகுங்காலம் நெருங்கி இன்னும் ஆறுமாதமாத்திரம் இருந்தது. இப்படியிருக்க அந்த வேலையை எளிதாக்கவும், சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டியவர்களை ஏற்கனவே தயாராக்கவுஞ் சித்தமாகித் தமது பன்னிரண்டு அப்போஸ்தலருக்கு ஒத்தாசையாக எழுபத்திரண்டு பேரைத் தெரிந்துகொண்டு தாம் போகவேண்டிய பட்டணங்களுக்கும் ஸ்தலங்களுக்குந் தமக்கு முன்னே அவர்களை இருவர் இருவராக அனுப்பினார் (லூக். 10).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இந்தச் சீஷர்களுக்குக் கிடைத்த அதிஷ்டம் உனக்குங் கிடைக்கவேணுமென்று ஆசிக்கிறாயல்லோ? இயேசுநாதர் குறிப்பிட்டாற்போல இவர்களைத் தெரிந்தெடுத்ததும், ஒன்றிரண்டு வருஷம் தமது கிட்ட வைத்துத் தமது ஞானத்தைப் போதித்து அவர்களை உருவாக்கினதும், மனிதருடைய மனதைத் திருப்பித் தமது பாரிசமாய்ச் சேர்ப்பிக்கிற வேலையாகிய மகா உன்னதமும் பேறுபலனுமுள்ள வேதியத் தொழிலுக்கு அவர்களை நியமித்ததுமாகிய இவையெல்லாம் எவ்வளவோ அதிஷ்டமென்பாய்! சந்தேகமில்லாமல் இது யாவரும் ஆசிக்கத்தக்க அதிஷ்டந்தான். ஆனால் இந்த அதிஷ்டம் உனக்குங் கிடைக்கவில்லை என்கலாமோ? இல்லையே. ஏனென்றால் நீ துறவியானமட்டுந் திவ்விய கர்த்தர் உன்னையுந் தமக்குச் சீஷனாகத் தெரிந்துகொண்டதுமன்றி, பிறசிநேகத்துக்கும் ஆத்தும ஈடேற்றத்துக்குமடுத்த அலுவலை அந்த எழுபத்திரண்டு சீஷர்களுக்குக் கொடுத்ததுபோலவே உனக்குங் கொடுத்திருக்கிறார். இதினால் வரும் நன்மைகளை நீ கைக்கொண்டு அனுபவிக்கிறாயல்லோ?

பிரதிக்கினை.—இயேசுநாதர் தமது சீஷர்களை இருவர் இருவராக அனுப்பின பாவனையாக, சந்நியாசிகள் துணையோடன்றி வெளியே போக வொண்ணாதென்று, அந்தந்தச்

சபையை ஸ்தாபித்தவர்கள் முக்கியமான ஒழுங்குகளுக்குள் ஒன்றாக ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்த ஒழுங்கை நீ கனமாய் எண்ணி அனுசரிக்கக்கடவாய்.

## 2-ம் பிரிவு

### இயேசுநாதர் எழுபத்திரண்டு சீஷர்களுக்குச் சொன்ன புத்திமதி

தியானம்.—சில மாதத்துக்குமுன் இயேசுநாதசுவாமி கலிலேயா நாட்டில் பிரசங்கிக்க அப்போஸ்தலர்களை அனுப்புகையில் அவர்களுக்குச் சொன்ன புத்திமதிகளையே ஏறக்குறைய இந்த எழுபத்திரண்டு சீஷர்களுக்குஞ் சொன்னாரென்று அறியவும். அவையாவன:—ஓநாய்கள் நடுவே செம்மறி ஆடுகளைப்போல நான் உங்களை அனுப்புகிறேன். நீங்கள் பணத்தையும் பையையுங் கொண்டு போகவேண்டாம். வழியிலே நிற்கவும், அங்கே போகிற வருகிற பேர்களுக்கு மங்களவார்த்தை சொல்லவும் வேண்டாம். நீங்கள் எந்த வீட்டிலே பிரவேசித்தாலும் முந்தமுந்த அந்த வீட்டுக்குச் சமாதானம் உண்டாகக்கடவதென்று சொல்லுங்கள். அதைவிட்டு வீட்டுக்கு வீடு போகாதேயுங்கள். எந்தப் பட்டணத்தில் பிரவேசித்தாலும் அதிலே உங்களை ஏற்றுக்கொள்ளுவார்களேயாகில் உங்களுக்குப் பரிமாறப்படுகிறதைப் போசியுங்கள். அதிலே உங்களை ஏற்றுக்கொள்ளாவிட்டால் அதின் தெருவீதிகளில் புறப்பட்டு: உங்கள் பட்டணத்தில் எங்கள் பாதத்தில் ஒட்டிய தூசியை முதலாய் உங்களுக்கு எதிரிடையாகத் தட்டிப்போடுகிறோமென்று சொல்லுங்கள். கடைசி நாளில் இந்தப் பட்டணத்தாரைப் பார்க்கச் சோதோம் நகருக்கு அதிக இளக்காரங் கிடைக்குமென்று நாம் உங்களுக்குச் சொல்லுகிறோம். ஆகிலும் அவர்களை விட்டுப் போகும்போது சர்வேசுரனுடைய இராச்சியம் சமீபித்திருக்கிறதென்று சொல்லுங்கள் என்றார் (லூக். 10).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நல்லொழுக்க முறைமையாகிய இந்தத் திவ்விய போதனைக்கு



நீ ஆன சமயத்தில் ஒத்து நடக்கும்படி உன் இருதயத்தில் இதை அழியாத அட்சரம்போல் பதித்துக்கொள். இதை நாலு வார்த்தையில் சுருக்கிச் சொல்லலாம். சாந்தம், சுயநலம்பாராமை, தைரியம், இணக்கம், கபடின்மை, மன அடக்கம் என்னுஞ் சுகிர்த குணங்களோடு சுவிசேஷத்துக்கடுத்த உறுதியையும் அனுசரிக்கவேண்டியது. ஆனால் இந்த உறுதி மிதமிஞ்சாதபடி தயாளத்தால் இதைப் பதப்படுத்திப் பாவிகளை எப்போதும் அன்போடு பச்சாத்தாபத்துக்கு ஏவ வேண்டியது. இவைகளில் உனக்குக் குறைபடுவதேதென்று பார்த்துத் திருத்திக்கொள்.

மனப்பற்றுதல்.—பிறசிநேகத்துக்கும் ஆத்தும ஈடேற்றத்துக்குமடுத்த அலுவல்களில் நீ செய்வதெல்லாம் சுவாமிக்குப் பிரியமாகவும் பிறருக்கு மிக்க நலமாகவும் இருக்கும்படி அவைகளில் வருங் குறைகளைத் தெளிவாய் அறிய வரங்கேள்.

பிரதிக்கினை.—ஆத்தும ஈடேற்றத்துக்கும் பிறசிநேகத்துக்கு மடுத்த சகல அலுவல்களிலுஞ் சர்வேசுரனையும் ஆத்தும நன்மையையுமாத்திரங் கண்முன்பாக வைத்து நடப்பேன்.

## 3-ம் பிரிவு

### தேவ வார்த்தைக்கு இணங்காத பட்டணத்தாருக்கு இட்ட சாபம்

தியானம்.—இந்த மூன்றாம் பிரிவிலே துயரமும் பயங்கரமுமான ஒரு விசேஷம் நமது ஞாபகத்தில் வருகின்றது. அதாவது: அப்போஸ்தலருடைய பிரசங்கத்துக்குக் காதுகொடாத பட்டணங்களின்மேல் திவ்விய இரட்சகர் இட்ட சாபமாம். பெத்சாயிதா பட்டணமே, உனக்கு ஐயோ கேடு! கொறோசாயின் பட்டணமே, உனக்கு ஐயோ கேடு! ஏனென்றால் உங்களிடத்தில் செய்யப்பட்ட அற்புதங்கள் தீர் சீதோன் நகரங்களில் செய்யப்பட்டிருக்குமேயாகில் அவ்விரு பட்டணங்களும் முன்னமே மயிர்ப் போர்வையணிந்து சாம்பலில் புரண்டு தவஞ்செய்திருக்குமே. மேலுந் தீர்வைநாளில் உங்களைப்

பார்க்கத் தீர் சீதோன் நகரங்களுக்கு இடப்படும் ஆக்கினை தணிவாயிருக்கும். கப்பர்நாவும் ஊரே, வானமட்டும் எப்போதும் உயர்ந்து போவாயோ? பாதாளத்தின் அடிவரையில் தாழ்த்தப்படுவாய் என்றார் (மத். 19).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இந்தச் சாபத்தைக் கேட்டு நாம் தெய்வபயம் அடையவேணும். கப்பர்நாவூம் ஊராருக்குக் கிடைத்த தேவ வரப்பிரசாத வரங்களைவிட நமக்குக் குறைவாய்க் கிடைக்கவில்லையே. இந்த வரங்களுக்கு அளவாக நமது உடன் முயற்சியும் சரிக்கட்டி வரவேண்டியதல்லவோ? அப்படி நடந்தாயோ இல்லையோவென்று ஆலோசித்துப்பார்.

சம்பாஷணை.—தேபேனென்னும் சேனைக்குத் தளகர்த்தரான அர்ச். மவுரிசியாரோடு சம்பாஷணை செய். இன்று திருச்சபை இவரையும் இவருடைய தோழரான வேதசாட்சிகளையுங் குறித்துத் திருநாள் கொண்டாடுகின்றது.

---

## 21-ம் தேதி

### எழுபத்திரண்டு சீஷர்களுஞ் சந்தோஷமாய்த் திரும்பிவந்ததின்பேரில்

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதர் சந்தோஷ நிறைந்த சீஷர்கள் நடுவே வீற்றிருக்கிறதைப் பார்க்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

தியானச் செபம்.—நமது திவ்விய இரட்சகர் நினைத்த கருத்தின்படி சந்தோஷமென்னும் வரத்தைக் கேட்போமாக.

### முதல் பிரிவு

**இயேசுநாதர் தமது சீஷர்களுடைய சந்தோஷத்தைத் தணிக்கிறார்**

தியானம்.—இவர்கள் தங்கள் திவ்விய குருவின் கற்பனைகளைச் சரியாய் அநுசரித்ததினாலே தாங்கள் போன



காரியம் முழுதும் அநுகூலமாயிற்று. சிரவணமுள்ளவன் செயம் கூறுவானென்னும் வேத வாக்கியப்படி அவர்கள் பசாசினால் வரலான சகல இடையூறுகளையுங் கீழ்ப்படிதலினாலே அடக்கி வென்றார்கள். அர்ச். லூக்காஸ் சொல்லியிருக்கிறப்போல இவர்கள் மகா சந்தோஷத்தோடு திரும்பி வந்து ஆண்டவரைப் பார்த்து: சுவாமி, உம்முடைய நாமத்தினாலே பசாசுகள் முதலாய் எங்களுக்குக் கீழ்ப்படிந்தனவென்றார்கள் (லூக். 10). இது கிரமமான சந்தோஷந்தான். ஆகிலும் இதிலே கொஞ்சம் வீண் பெருமை கலந்திருந்ததென்று இயேசுநாதர் சொன்ன மறுமொழியினாலே விளங்குகின்றது. இதைப்பற்றித்தான் அவர்களைப் பார்த்து: சாத்தான் மின்னலைப்போல வானத்தினின்று விழுந்ததைக் கண்டேன் என்றார். இதற்கு அர்த்தமேதென்றால் வீண் சலாக்கியமென்கிற மாயத்துக்குப் பயந்து எச்சரிக்கையாயிருங்கள்; அதினால் ஆங்காரம் வினையும்; ஆங்காரமானது லூசிப்பேயையும் அதின் கூட்டாளிகளையும் பரமண்டலத்திலிருந்து நரகத்திலே தள்ளினதுபோல உங்களையும் விழத்தாட்டலாமென்பதாம்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—மகா முக்கியமான இரண்டு விசேஷங்களை இதில் நாம் கற்றுக்கொள்ளத்தகும். முந்த முந்தக் கீழ்ப்படிதலினிமித்தம் நமக்கு இடப்படும் கற்பனைகளுக்கு முற்றிலும் அமைந்து நடக்கவேண்டியது. இதுவே நாம் துவக்குங் காரியங்களுக்குத் தவறாமல் அநுகூலம் பெறுவிக்கும். இரண்டாவது, நமது காரியம் பலிக்கும்போது சுபாவமாய் வீண் சலாக்கியம் நமது மனதில் நுழைந்து நமது பேறுபலன்களை அடியோடாவது அரைவாசி கால்வாசியாவது அழித்துப்போடலாமென்கிறதினாலே, அதின் உபாய தந்திரங்களையெல்லாம் மகா சாக்கிரதையாய்த் தள்ளவேண்டியது.

மனப்பற்றுதல்.—வீண் பெருமையின்பேரில் பயமும் அதை அறிந்து விலகும்படி வேண்டிய விவேகமுந் தந்தருளவேணுமென்று மன்றாடு.

பிரதிக்கினை.—ஆங்காரமென்னுஞ் சோதனை வரும்போது தாழ்ச்சி முயற்சி செய்து: என் சர்வேசுராசுவாமி,

என்மேல் இரக்கமாயிரும். இன்னும் என்னை நான் மறந்து நிந்திக்கவில்லையே என்று சொல்லக்கடவாய். இந்தச் சோதனையை நமக்குப் பிரயோசனமாக மாற்றிக்கொள்ளும் விதம் இதுவே.

## 2-ம் பிரிவு

### இயேசுநாதர் சீஷர்களுடைய சந்தோஷத்தைச் சிட்சிக்கிறார்

தியானம்.—சீஷர்களிடத்தில் தோன்றின சந்தோஷம் அவர்கள் அடைந்த அநுகூலத்தினால் உண்டாயிற்று. ஆனால் அநுகூலமானது நமது கைவசத்தில் அடங்கினதல்லவென்றும், அதினால் நாம் நீதிமான்களாகிறதில்லையென்றும், நமது சம்பாவனைக்கு அது எப்போதும் சாதனமாகாதென்றும், அதினால் மனுஷன் மோசம் போகலாமென்றும் இயேசுநாதர் அவர்களுக்குக் காண்பிக்கச் சித்தமானார். மேலும் சந்தோஷப்படுவதற்கு அதிக யோக்கியமான முகாந்தரமேதென்று அவர்களுக்கும் அவர்களிடமாய் நமக்குங் காண்பிக்கிறார். அதெப்படியென்றால் பசாசுகள் உங்களுக்குக் கீழ்ப்படிந்ததினாலே நீங்கள் சந்தோஷப்படத்தக்கதல்ல. ஆனால் உங்களுடைய நாமங்கள் பரமண்டலத்திலே அதாவது சீவிய புத்தகத்திலே எழுதப்பட்டிருக்கிறதினாலே சந்தோஷப்படுங்கள் என்றார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நாம் துவக்குகிற நல்ல காரியம் அனுகூலமாக வேணுமென்று ஆசைப்படுகிறது நியாயந்தான். அதற்காக நாம் பிரயாசப்படவேண்டியதுதான். நாம் அனுகூலம் அடையும்போது சந்தோஷப்படுகிறதும் அனுகூலமாகாதபோது கஸ்திப்படுகிறதும் விலக்கப்பட்ட காரியமல்ல. ஆனால் இவைகளெல்லாவற்றிலும் நாம் சர்வேசுரனுடைய மகிமையையும் பிறருடைய நன்மையையுமாத்திரந் தேடுகிறோமென்று நமது கருத்து நேராயிருக்க வேணும். ஆனால் நமது காரியம் பலியாதபோது நாம் துயரப்பட்டுத் தைரியமிழந்துபோவதேன்? ஏனென்றால் நாம் சர்வேசுரனுடைய மகிமையை விட நம்முடைய சொந்தப் பெருமையை அதிக



மாய்க் கருதுகிறதினாலே இப்படியாகிறதென்று வெட்டவெளியாய்த் தெரியவருகிறது. அன்றியும் நமது காரியம் அனுகூலமாக வேணுமென்று சர்வேசுரன் கேட்கிறதில்லையென்றும், அது பலியாமற்போவதற்கு நமது அசமந்தம் காரணமாயிராவிட்டால் நமது பிரயாசத்துக்கு வாக்குத்தத்தஞ் செய்யப்பட்ட சம்பாவனை குறையாதென்றும் அறிவோம். நாம் சுயமகிமையைத் தேடுகிறதினாலல்லவா தாழ்மையும் உலகத்தின் கண்ணுக்கு மறைவுமான வேலைகளை விட்டுச் சகலரும் நம்மைப் புகழ்ந்து கொண்டாடத்தக்க சிறந்த வேலைகளைத் தேடுகிறோம். நமது சுயபட்சத்தின் அற்பத்தனத்தைவிட்டு மேலான சிந்தனையுள்ளவர்களாகக் கடவோம். நமது நினைவைப் பரலோகமட்டும் உயர்த்திச் சர்வேசுரனுக்குப் பிரியப்படுகிறதும், இயேசுநாதருடைய திரு இருதயத்திலும், நித்திய சீவியத்தின் புத்தகத்திலும் நமது பேர் பதியச் செய்கிறதுமே நமக்கு ஆனந்தமும் பாக்கியமுமாயிருக்கக்கடவது.

மனப்பற்றுதல்.—நம்து நினைவுங் கருத்தும் இவ்விதமேயிருக்கவேணுமென்று கேட்போமாக.

பிரதிக்கினை.—நமது வேலை அனுகூலமாகும்படி சலியாமல் உழைத்தபின் அது அநுகூலமாவதும், ஆகாததும் சுவாமிசித்தம் போலாகட்டுமென்று இருக்கவேண்டியது.

## 3-ம் பிரிவு

### இயேசுநாதர் தம்முடைய சீஷர்களின் சந்தோஷத்துக்குக் காரணமான அனுகூலம் தமது பரமபிதாவினால் வந்ததென்று உரைக்கிறார்

தியானம்.—திவ்விய இரட்சகர் தமது சீஷர்களை மகா உருக்கமாய்ச் சிநேகித்திருந்ததினாலே அவர்களுடைய சந்தோஷத்தைக் கண்டு தாமும் சந்தோஷித்து மகிழ்ந்திருந்தார். அன்றியும் இந்தச் சந்தோஷம் தமது தேவ பிதாவினிடத்தினின்று வந்ததினாலே அதிகமாய் ஆனந்தமடைந்து தமது பிதாவை வாழ்த்திப்புகழ்ந்து கொண்டாடினார். எப்படியென்றால் அர்ச். லூக்காஸ்

சொல்லியிருப்பதுபோல, அவர் இஸ்பிரீத்துசாந்துவினுல் ஏவப்பட்டு மனம்பூரித்து: பிதாவே, பரலோகத்துக்கும் பூலோகத்துக்குங் கர்த்தாவே, நீர் இவைகளை ஞானிகளுக்கும் விவேகிகளுக்கும் மறைத்துச் சிறியோர்களுக்கே வெளிப்படுத்தச் சித்தமானதினுலே நான் உம்மைத் துதிக்கிறேன். ஆம், பிதாவே இவ்வண்ணமே திருவுளமானீரென்றுர் (லூக். 10).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நமது சகோதரருக்கு யாதொரு காரியஞ் சித்தியாகும்போது நாமும் அவர்களோடு சந்தோஷிக்கக்கடவோம். புத்தி சாமர்த்தியத்திலும் புண்ணியத்திலும் அவர்கள் நமக்கு மேற்பட்டவர்களாயிருந்தால், அந்த வரத்தை அவர்களுக்குத் தந்த நமது பரம பிதாவைக் கொண்டாடவேண்டியதே தவிர, மனதுக்குள் எள்ளளவும் காய்மகாரத்துக்கு இடங்கொடுக்கப்படாது. ஏனென்றுல் நாமும் அவர்களும் ஓரே ஞான சரீரத்தின் அவயவங்கள்போலிருக்கிறபடியால் அவர்களுடைய நன்மைகளில் நமக்கும் பங்குண்டு. சர்வேசுரன் அவரவர்களுக்குப் பகிர்ந்தளித்த வரங்களை நாம் இவ்விதமாய் மதித்து வந்தோமோ?

சம்பாஷணை.—அர்ச். இராயப்பருக்குப்பின் அவருடைய ஸ்தானத்தில் முதல் பாப்புவும் வேதசாட்சியுமான அர்ச். லீனு என்பவருடைய திருநாளைத் திருச்சபை இன்று கொண்டாடுவதால் அவரோடு சம்பாஷணை செய்.

---

## 22-ம் தேதி

### இயேசுநாதசுவாமி நம்மைச் சிநேகித்துத் தம்மிடத்தில் நாம் வரும்படி உருக்கமாய் அழைக்கிறர்

ஆயத்தச் சிந்தனை.—சகலரும் நம்மிடத்தில் வாருங்கள். நமது நுகத்தடியை உங்கள்மேல் சுமந்துகொள்ளுங்கள். சாந்தமும் இருதயத் தாழ்ச்சியுமுள்ளவராயிருக்கிறேமென்று நம்மிடத்தில் கற்றுக்கொள்ளுங்களென்று இயேசுநாதசுவாமி சொல்லுகிறதாக ரூபிகரித்துக்கொள்வோமாக.



தியானச் செபம்.—இயேசுநாதர் பட்சமாய் நம்மை அழைக்கிற சத்தத்துக்குப் பிரமாணிக்கமாய்க் கீழ்ப்படிந்து நடக்க வரங்கேட்போமாக.

### முதல் பிரிவு

#### இயேசுநாதர் நம்மைத் தம்மிடத்தில் வரவழைக்கிறர்

தியானம்.—இயேசுநாதர் தமது பிரிய சீஷர்கள்மேல் விசேஷ கவலைவைத்திருந்தாலும், மற்றச் சனங்களை அசட்டையாய் விட்டுவிடுகிறதில்லை. அவருடைய இரக்கநிறைந்த பட்சம் இஸ்ராயேல் சனங்களெல்லாரையும் அரவணைத்துக்கொள்ளுகிறது. பின்னை தம்முடைய அப்போஸ்தலர்களையும் அவர்களுடைய ஸ்தானத்தில் முறைமுறையாய் இருப்பவர்களையுங்கொண்டு சர்வ லோகத்திலும் இந்தச் சிநேகம் பரம்பும்படி செய்வார். இந்த உலகம் முழுவதையும் அடக்கிக்கொள்ளும்படியான இரக்கம் நிறைந்த சிநேகம் தமது அப்போஸ்தலர்களுக்கு உண்டாகும்படி அவர்கள் காணச் சனங்களை நோக்கி: வருந்திச் சுமை சுமக்கிற நீங்கள் எல்லாரும் நம்மிடத்தில் வாருங்கள், நாமே உங்களைத் தேற்றுவிப்போமென்று எல்லாரையும் உருக்கமாய் அழைத்தார் (மத். 11). இதில் ஒருவருந் தள்ளுபடியல்ல. உலகத்தில் நிந்திக்கப்பட்ட ஏழைகள், அறிவீனர், நிர்ப்பாக்கியர்களை விசேஷமாய்த் தம்மிடத்தில் அழைத்தார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—படிப்பறியாத சிறுபிள்ளைகள், அறிவீனர், வியாதிக்காரர், ஏழைகள், விசாரித்து பேசமாட்டாத பேதைகள் முதலியவர்களை விசாரித்து நடத்தும்படி நீ பெரியவர்களால் நியமிக்கப்படும்போது உன் கண்முன் வைத்து அனுசரிக்கவேண்டிய மாதிரிகை இது தான். மற்றவர்களைப்பார்க்கத் திக்கற்றவர்களையும், அதிகமாய் வருத்தப்படுகிறவர்களையும், மனுஷர்களால் நிந்திக்கப்பட்டவர்களையும் விசேஷ கரிசனமாய் விசாரிக்கக்கடவாய். இப்படிச் செய்வாயாகில் உன்னுடைய திவ்விய குருவின் சாயல் உன்னிடத்தில் அதிகமாய் விளங்கும். ஒருபோதும் உன்னைக் தைரியமற்று அருவருப்பைக் காண்பியாதே.

கொண்டு இவைகளை நடப்பிக்கிற இயேசுநாதர் சர்வ வல்லபமுள்ளவராயிருக்கிறதினாலே தமது சேவப்பிரசாத ஆறுதலைக்கொண்டு உன்னைத் தாங்கி நடத்துவார். உனக்கு உண்டாகும் வருத்தம், சுபாவ அரோசிகமெல்லாவற்றையும் நீ அடக்கி வெல்லத் தயைசெய்வார். இந்நிமித்தமே, சர்வேசுரன் இயேசுநாதர்வழியாய் நாம் எப்போதுஞ் செயங்கொள்ளச் செய்கிறதினாலே அவருக்குத் தோத்திரமாகக்கடவதென்று அர்ச். சின்னப்பர் சொல்லியிருக்கிறார் (2 கொரி. 14).

மனப்பற்றுதல்.—மிகவும் இரக்கம் நிறைந்த பிறசினேக உணர்ச்சிகள் நம்மிடத்தில் உண்டாகும்படி கேட்போமாக.

பிரதிக்கினை.—நமக்கும் பிறருக்கும் உண்டாகும் சகல துன்ப துரித அவஸ்தைகளிலும் மட்டற்ற நம்பிக்கையோடு இயேசுநாதரை அடுத்து அவரே தஞ்சமென்று ஓடுவோமாக.

## 2-ம் பிரிவு

### இயேசுநாதர் மதுரமும் இலகுவுமான தமது நுகத்தைச் சுமந்துகொள்ளும்படி நம்மை அழைக்கிறார்

தியானம்.—இயேசுநாதர் வருத்தப்படுகிறவர்களெல்லாரையுந் தமது அண்டையில் வரவழைத்தபிறகு இவ்வுலக இராசாவாகிய பசாசு கொடுக்கிற பொய்வாக்கை நம்பி அதற்குத் தங்களை அடிமைகளாக்கிக்கொள்ளுகிற நிர்ப்பாக்கியர்களையுந் தம்மிடத்தில் வரும்படி கூப்பிடுகிறார். பசாசினுடைய இராசாங்கத்தில் இந்தப் பாவிகள் வெட்கத்துக்குரிய ஆசாபாசங்களுக்கு அடிமைகளாகி வருத்தமும், கலக்கமும், மனக்குத்தும் அதிகமதிகமாய் அனுபவிக்கிறார்களே ஒழிய மற்றப்படியல்ல. இயேசுநாதசுவாமி இரக்கமாய் இவர்களை நோக்கி: நம்மிடத்தில் வாருங்கள்; நமது நுகத்தடியைச் சுமந்துகொள்ளுங்கள்; நாம் சாந்தமும் இருதயத் தாழ்ச்சியுமுள்ளவராயிருக்கிறோமென்று நம்



மிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள். இப்படிச் செய்வீர்களாகில் உங்கள் ஆத்துமத்துக்கு இளைப்பாற்றியைக்காண்பீர்கள். ஏனென்றால் என் நுகத்தடி மதுரமும் இலகுவுமாயிருக்கிறதென்றார் (மத். 11).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—திவ்விய இரட்சகர் தம்மைப் பின்சென்றுவரும்படி அழைத்த சத்தத்துக்கு முழுதுங் காது கொடுத்து, அவருடைய கற்பனைகளையும் புத்திமதிகளையும் அனுசரிக்க ஏற்பட்டுச் சகலத்தையுந் துறந்துவிட்ட சொற்பப் பேர்களுக்குள் நாமும் ஒருவராயிருக்கிறோம். ஆனால் நாம் தேவ ஊழியத்தில் அமருமுன் ஒருவேளை துராசாபாசத்தின் கொடுங்கோன்மைக்கு அடிமைகளாகி உலக ஊழியத்தில் வெகு காலம் போக்கினோமாக்கும். அப்படியானால் அது எவ்வளவோ நிர்ப்பாக்கியம்! நாம் அப்படிச் சீவித்திருந்தபோதிலும் அதினின்றும் நமக்குச் சில நன்மைகள் வரலாம். அவையேதென்றால் இயேசுநாதருடைய நுகத்தடியைச் சுமந்து அவருடைய கற்பனைகளின்படி நடப்பதற்கும், உலகத்துக்கும் பசாசுக்கும் அடிமைப்பட்டுப் பாவச்சேற்றில் புரளுவதற்கும் உள்ள வித்தியாசத்தை அதிகத் தெளிவாய் மதிக்கக்கூடுமாயிருப்போம். நமது பரிசுத்த அந்தஸ்திலுள்ள நிலைபெற்ற பாக்கியத்தை வெகு நன்றாய்க் கண்டுபிடிப்போம். மகா பக்தி சுறுசுறுப்பாய்ச் சீவிக்கும்படி வேகமான ஆவலடைவோம். அன்றியும் நமது பத்தி வேகம் எவ்வளவுக்கு அதிகரித்து நீளிக்குமோ அவ்வளவுக்கு: நமது நுகத்தடியைச் சுமந்துகொள்ளுங்கள், உங்கள் ஆத்துமங்கள் இளைப்பாற்றியைக் கண்டடையுமென்று இயேசுநாதசுவாமி சொன்ன வாக்கியத்தின் உண்மையை அறிந்துகொள்வோம். அந்த இளைப்பாற்றி இருதயச் சமாதானமாம். இதை உலகம் நமக்குத் தரவுங் கூடாது, இதென்னவென்று அது அறியவுமாட்டாது. இந்தச் சமாதானம் சில சமயங்களில் நமக்கு வருவிக்கும் ஞான மனோகரத்தினால் இனிமேல் மோக்ஷத்தில் நாம் அநுபவிக்கப்போகிற பாக்கியத்தில் அற்பமாகிலும் உணர்ந்துகொள்ளலாம்.

மனப்பற்றுதல்.—நம்மைச் சர்வேசுரன் சந்நியாச அந்தஸ்திற்கு அழைத்த உபகாரத்துக்காக அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ்செய்து இதிலே நாம் அசட்டைத்தனத்தினால் கட்டிக்கொண்ட குற்றத்துக்காக அவரிடத்தில் பொறுத்தல் கேட்கக்கடவோம்.

பிரதிக்கினை—சர்வேசுரன் கொடுக்கிற ஞான ஆறுதலைப் பாராமல் அவரைப்பற்றியே அவருக்கு ஊழியஞ்செய்யக்கடவோம்.

## 3-ம் பிரிவு

### நாம் தாழ்ச்சியை அநுசரிக்கும்படியாக இயேசுநாதர் நம்மை அழைக்கிறார்

தியானம்.—நாம் சாந்தமும் இருதயத் தாழ்ச்சியுமுள்ளவரென்று நம்மிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள், அப்போது உங்களாத்துமங்களுக்கு இளைப்பாற்றியைக் கண்டடைவீர்களென்று திவ்விய இரட்சகர் திருவுளம்பற்றினாரல்லவோ? ஆகையால் அவரைப் பின்சென்று பிரமாணிக்கமாய் நடப்பவர்களுக்கு வாக்குத்தத்தஞ்செய்யப்பட்ட மதுரமான மனச்சமாதானத்தை நாமும் அடைந்து அனுபவிக்கவேணுமானால், தேவ இஷ்டப்பிரசாதத்தை முன்னிட்டு தாழ்ச்சியுஞ் சாந்தமும் பொருந்திய இருதயச்சிரடைந்து அதில் நிலைத்திருக்கக்கடவோம். அன்றியும் பிறர் நமக்குக் காண்பிக்கும் நன்றியறியாமையையும், செய்யும் நிந்தை அவமானங்களையும் நம்முடைய பாவத்துக்கு ஆக்கினை என்றெண்ணிப் பொறுமையாய்ச் சகித்து, நமது திவ்விய குருவின் பாவனையாகத் தின்மைக்கு நன்மை செய்ய வருந்தக்கடவோம்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நமது சுபாவ நாட்டத்துக்கு முழுதும் விரோதமாயிருக்கிற இந்த உத்தம குணத்தையடைந்து அதில் நிலைபெறவேணுமானால், நமது அன்புக்குரிய இரட்சகர் காண்பித்த மாதிரிகையையும் கொடுத்த வாக்குத்தத்தங்களையும் எப்போதும் நமது கண்முன்பாக வைத்து நடக்கக்கடவோம்.



சம்பாஷணை.—நாம் இயேசுநாதருடைய பாதத்தில் சேர்ந்து கிருபைதயாபத்தைப் பெற்றுக்கொள்வதற்கு வழியாகிற பரிசுத்த கன்னிமரியம்மாளோடு சம்பாஷணை செய்யக்கடவோம். ஏனென்றால் இன்று திருச்சபையெங்கும் தேவமாதாவின் இரக்கத்தைக்குறித்துத் திருநாள் கொண்டாடுகிறது.

---

# 23-ம் தேதி

## இயேசுநாதர் வஞ்சகனான ஓர் வேத சாஸ்திரியை நாணும்படி செய்கிறார்.

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதர் சமுகத்தில் திரளான சனங்கள் கூடிய சபையில் வஞ்சகநிறைந்த ஒரு வேத சாஸ்திரி நிற்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

தியானச் செபம்.—சர்வேசுரனையும் பிறரையும் தகுந்த விதமாய்ச் சிநேகிக்க வரப்பிரசாதங் கேள்.

## முதல் பிரிவு

### இரட்சணியம் அடைவதற்குச் செய்யவேண்டியதின்பேரில்

தியானம்.—ஓர் ஓய்வுநாளில் இயேசுநாதர் தமது வழக்கப்படி சனங்களுக்குப் பிரசங்கிக்கத்தக்கதாக ஓர் செபக்கூடத்தில் பிரவேசித்தபோது வேதசாஸ்திரி ஒருவன் அவரைச் சோதிக்கவேணுமென்ற கருத்தோடு எழுந்து: நான் நித்திய சீவியம் அடைவதற்குச் செய்யவேண்டியது என்னவென்று கேட்டான் (லூக். 10). கள்ளஞானியான அந்தச் சாஸ்திரி இப்படிக்கேட்டது வஞ்சகமேயன்றி மனநேர்மையல்ல. ஏனென்றால் சுவிசேஷகர் சொல்லியிருக்கிறதுபோல அவன் இயேசுநாதருடைய மறுமொழியைக்கொண்டே அவரைப் பிடிக்கவேணுமென்று வழி பார்த்துக்கொண்டிருந்தான். இயேசுநாதர் அவனைக் கவனியாமலும் அவனுக்கு யாதொரு மொழி சொல்லாமலும் இருந்திருக்கலாம். ஆயினும் கூடியிருந்த

சனங்களுக்கு வரலான நன்மையைக் கோரி மறுமொழி சொல்லச் சித்தமானார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—அவிசுவாசிகளாவது துன்மார்க்கராவது வேதசத்தியங்களின்மேல் பல சந்தேகங்களைக் கொண்டுவிட்டுத் தந்திரமாகக் கள்ள ஞாயங்களை எடுத்துக் காட்டவந்தால், அவர்கள் நல்ல கருத்தோடு இப்படிச் செய்கிறார்களென்று சுளுவாய் நம்பி அவர்களோடு தர்க்கிக்க இணங்காதே. இணங்குவாயானால் உன்னை ஏமாந்த பேதை என்பார்கள். ஆனால் வேதத்துக்கு மகிமையும், சூழ்ந்து நிற்பவர்களுக்குப் பிரயோசனமும், நன்மாதிரிகையும் உண்டாகுமென்று பரிஷ்காரமாய்த் தெரிந்தால் அப்போது மாத்திரம் நியாயத்தைக் காண்பிப்பதற்காகத் தர்க்கஞ்செய்யலாம். அந்தச் சமயத்திலே முதலாய் அவிவேக துணிகரமாய்ப் போய்விழாதே. ஏனென்றால் உங்கள் விரோதிகளெல்லாரும் எதிர்த்து மாறுத்தாரஞ் சொல்லக் கூடாத விதமாய் நாமே உங்களுக்கு வாக்கும் ஞானமுந் தந்தருளுவோமென்று இயேசுநாதர் சொன்னது சகலருக்கும் பொதுவாய்ச் சொன்னதல்ல. நீ குருவாய் அல்லது வேதசாஸ்திரத்தில் தேர்ந்தவனாயிராவிட்டால் இப்பேர்ப்பட்ட தர்க்கத்துக்கு உபாயமாய் விலகிக்கொள். அப்படி வீணாய்த் தர்க்கிக்கிறபோது வேதத்துக்கும் பார்க்கிறவர்களுக்குங் கேடுண்டாகிறதுமல்லாமல் அவிசுவாசிகளுக்குச் செயங்கிடைத்தாற்போலுமிருக்கும்.

மனப்பற்றுதல்.—இயேசுநாதருடைய கற்பனைக்கு இசைந்தபடி மாடப்புறாவுக்குரிய கபடின்மையையும் சர்ப்பத்துக்குரிய விவேகத்தையும் அனுசரிக்க வரங்கேள்.

பிரதிக்கினை.—உன் வார்த்தைகள்மட்டிலும் நடபடிக்கைகள் மட்டிலுங் கவனமாயிருப்பாயாக.

## 2-ம் பிரிவு

### சர்வேசுரனை எப்படிச் சிநேகிக்க வேணுமென்பதின் பேரில்

தியானம்.—அந்தக் கள்ள ஞானியானவன் கேட்ட கேள்வி தன் அறியாமையினாலேயும் உண்மையை அறிய



வேணுமென்கிற மனதினாலேயும் வந்ததல்லவென்று அவனே ஏற்றுக்கொள்ளும்படி இயேசுநாதர் அவனைப் பார்த்து வேதப்பிரமாணத்தில் எழுதப்பட்டதென்ன, அதிலே நீ வாசித்ததென்னவென்றார். அதற்கு அவன் மாறுத்தரமாக: உன் கர்த்தாவாகிய ஆண்டவரை உன் முழுமனதோடும் முழு ஆத்துமத்தோடும் முழுப் புத்தியோடுஞ் சிநேகிக்கிறதுமல்லாமல் உன் அயலானையும் உன்னைப் போல சிநேகிப்பாயாகவென்று எழுதியிருக்கிறதென்றான். அதற்கு இயேசுநாதர்: நீ நன்றாய் மறுமொழி சொன்னாய். இதன்படி நடந்தாயானால் சீவித்திருப்பாயென்றார் (லூக் 10).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இந்த உன்னத தேவகற்பனைக்கு நீ கூடியவரையில் இணங்கி நடக்கும்படியாக அதிலடங்கிய ஒவ்வொரு வார்த்தையையும் ஆழ்ந்து யோசித்துப்பார். முதலாவது சர்வேசுரனைத் தன் முழு இருதயத்தோடுஞ் சிநேகிக்கவேண்டியது. அதெப்படியென்றால் சர்வேசுரனைப்போலே வேறெவரையும் சிநேகியாமலிருப்பதுமன்றி, யாரையாவது சிநேகிக்கவேணுமானால் சர்வேசுரனைப்பற்றியும் அவரை உத்தேசித்துமே சிநேகிக்கவேண்டியது. சர்வேசுரனுக்குப் பிரியப்படவும் அவரைப்பற்றி எல்லாத் துன்பங்களையும் அனுபவிக்கவும் இயல்பாய் எப்போதும் ஆயத்தமாயிருக்கவேணும். நாம் சர்வேசுரனிடம் செல்வதற்கு வழியான காரியங்களை மாத்திரம் ஆசித்து அவரை விட்டு நம்மை அகற்றுகிறவைகளையெல்லாம் அரோசித்துத்தள்ளவேணும். 2-வது சர்வேசுரனைத் தன் முழு ஆத்துமத்தோடுஞ் சிநேகிக்கவேண்டியது. அதெப்படியென்றால்: சர்வேசுரனைப்பற்றித் தன் உயிரைக் கொடுக்கவும் அவருடைய இஷ்டப்பிரசாதத்தை இழப்பதைப்பார்க்க மற்றெல்லாத்தையும் இழந்துபோகவுந் தயாராயிருக்கவேணும். சர்வேசுரனுக்குப் பிரியப்பட்டு அவரோடு அன்னியோன்னியமாய் இருப்பதற்கு விக்கினமாயிருக்கிற நினைவு விசாரங்களெல்லாத்தையும் தன் மனதை விட்டுத் தள்ளிப்போடவேணும். 3-வது சர்வேசுரனைத் தன் சத்துவமெல்லாங்கொண்டு சிநேகிக்கவேண்டியது.

அதெப்படியெனில் சர்வேசுரனுக்கு மகிமை உண்டாகும்படி எவ்வித வேலை பிரயாசத்திற்கும் பின்வாங்காம கிறதுமல்லாமல், தன் நேரத்தையுஞ் சாமர்த்தியத்தையுஞ் விசு உடம்பையும் சரீர சவுக்கியத்தையும் இளைப்பாற்றியையு ஆத்தும சத்துவத்தையும் தேக வலிமையையும் எல்லா ஒருமிக்க அவருக்கு ஒப்புக்கொடுக்கவேணும். 4-வ தன் புத்தியெல்லாங்கொண்டு சர்வேசுரனைச் சிநேகிர் வேண்டியது; அதெப்படியென்றால் சர்வேசுரனுடைய ல் வில்லாத இலட்சணங்களையும் அவருடைய திருச்சித்தத் தையும், பிரியத்தையும் சகலரும் மென்மேலும் நன்ன அறிந்துகொள்ளும்படி நிலைமையாய்ப் பிரயாசப்படுகிறத் மேலும் தேவ ஊழியத்துக்குத் தான் அதிகமாய் உகப் படி மாத்திரம் உலக கல்வி சாஸ்திரங்களைப் படிக்கிறத இப்போது சொன்னவைகளைக்கொண்டு உன்னிடத்தி தேவ சிநேகம் எவ்வளவு விர்த்தியாயிருக்கிறதென்ப நீயே தீர்மானித்துக்கொள்.

மனப்பற்றுதல்.—இந்தச் சத்தியங்களுக்கு அடுத் விசுவாச முயற்சிசெய்கிறது. சர்வேசுரனை நீ இவ்விரு மாய்ச் சிநேகியாததைப்பற்றி வெட்கப்பட்டு, சிநே தோடுந் தாழ்ச்சியோடும் ஆண்டவரைப் பார்த்து பொறு தலை இரந்து மன்றாடு.

பிரதிக்கினை.—சுவாமி, உமது சித்தப்பிரகாரம் நாங் கள் உம்மைச் சிநேகிக்கப் படிப்பித்தருளுமென்று அடிக் கடி சொல்லக்கடவோம்.

## 3-ம் பிரிவு

### பிறரை எப்படிச் சிநேகிக்க வேணுமென்பதின்பேரில்

தியானம்.—மேற்சொன்ன சாஸ்திரி தான் நினைத்த வஞ்சகம் வெளியாயிற்றென்று கண்டு வெட்கப்பட்டாலும், தான் தோர்வைப்பட்டதைப் பார்த்திருந்த திரளான சனங் கள் முன்பாகத் தான் சமர்த்தனென்று காண்பிக்கத்தக்க தாக மறுபடியும் இயேசுநாதரை நோக்கி: என் புறத்தி யான் யாரென்று வேறொரு கேள்வி கேட்கத் தலைப்பட்



இதினால் அவனுக்கு வெட்கமாச்சுதேயொழிய வேறு ன்றுமில்லை. ஏனென்றால் இயேசுநாதர் அவ அவ ய கேள்விக்கு மறுமொழியாகச் சமாரித்தானுடைய பார் மையைத் திருவுளம்பற்றினதினால், அவன் இருதயத் லும், அவனைப்போலொத்த சாஸ்திரிகள் இருதயத்திலும் ரிந்திருந்த ஆங்கார கர்வமும், சூதும், சுயபட்சமும் வ முதலிய துர்க்குணங்களெல்லாம் வெட்டவெளியா மன்றி, அவர்களெல்லாரும் பேருக்குமாத்திரஞ் சாஸ் ளும், காரியத்தைப்பார்த்தால் வேத சட்டத்தை நாச குகிறவர்களுமென்று யாவருக்குந் தெரியலானது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது—ஆங் ான இந்த வேத சாஸ்திரியைப்போல நம்மை நாமே ான்களென்று காண்பிக்கத்தேடி, நமது குற்றத்தை க்கப் போக்குக்குமேல் போக்குச் சொல்லுவோமா , தேவசமுகத்திலும் மனிதர் முன்பாகவும் நாம் அதிக றவாளிகளும் கெட்டவர்களுமென்று எண்ணப்படுவதற் ச் சந்தேகமில்லை.

சம்பாஷணை.—நமது திவ்விய இரட்சகரோடு சம்பா ணை செய்வோமாக.

---

## 24-ம் தேதி

### சமாரித்தான் உவமைக்குரிய இயல்பான கருத்து

ஆயத்தச் சிந்தனை.—கள்ளர் ஓர் மனிதனை அடித் ப் பறித்துக் காயப்படுத்திக் குற்றுயிராய் விட்டுப்போகிற ாகவும் தர்ம இஷ்டனான ஓர் வழிப்போக்கன் அவனுக்கு இரங்கி உதவி செய்கிறதாகவும் ரூபிகரித்துக்கொள்.

தியானச் செபம்.—இரக்கமுந் தயாளமும் நிறைந்த பிறசிநேக உணர்ச்சிகள் உன்னிடத்தில் உண்டாகும்படி கேள்.

## முதல் பிரிவு

### யூதக் குருக்களுக்கும் சாஸ்திரிகளுக்கும் இருந்த சுயபட்சம்

தியானம்.—யூதக் குருக்களும் சாஸ்திரிகளும் தங்கள் சாதியாரான யூதர் மாத்திரம் தங்களுக்கு அயலாரென்றும், அவர்களுக்குள் தாங்கள் மாத்திரமே நீதிமான்களென்றும் எண்ணி வெகு வீம்பு பாராட்டிவந்தார்கள். சுயபட்சம் நிறைந்த இந்த எண்ணத்தைப் பிரசித்தமாய் அடக்கி ஒடுக்குவதற்காகவே இயேசுநாதர் தர்ம இஷ்டனான சமாரித்தானுடைய உவமையைச் சொல்லத் திருவுளமானார். இது உவமையல்ல; மெய்யாகவே நடந்த வர்த்தமானமென்று சில வேதபாரகர் சொல்லுகிறார்கள். போன தியானத்தில் சொன்னபடி எனக்குப் புறத்தியான் யாரென்று சாஸ்திரி கேட்ட கேள்விக்கு மாறுத்தரமாக இயேசுநாதர் சொன்னதாவது: ஒருவன் எருசலேம் பட்டணத்திலிருந்து ஜெரிக்கோ பட்டணத்துக்குப் போகையில் கள்ளர் கையில் அகப்படவே, அவர்கள் அவனிடத்திலிருந்ததெல்லாம் பறித்துக்கொண்டு அவனையும் அடித்து வெகு காயப்படுத்திக் குற்றுயிராய் விட்டுப்போனார்கள். அப்போது அவ்வழியாய்ப்போன ஓர் ஆசாரியன் அவனைக் கண்டும் ஒன்றும் பேசாமல் அப்பால் போய்விட்டான். அப்படியே லேவித்தன் ஒருவனும் அவ்வழியே வந்தவிடத்தில் அவனைக் கண்டு விலகிப்போய்விட்டான் (லூக். 10).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இயேசுநாதர் வெளிப்படுத்தின இந்த உவமையினால் அக்காலத்திலிருந்த யூதக் குருக்களிடத்திலும், கோவில் பணிவிடைக்காரரிடத்திலும் இருந்த பிறசிநேகக்குறை எவ்வளவென்று பட்டப்பகல்போல் தெளிவாய்த் தோன்றுகிறது. இப்போதோவெனில் நமது குருக்களுடைய தளராத பிறசிநேகம் நமது கண்ணுக்கு எவ்வளவோ இன்பமும் ஆறுதலுமான காட்சியாயிருக்கின்றது! இவர்கள் ஆற்றிப் பரிகரிக்கத் தேடாத ஆத்தும நோயுமில்லை; சரீர இக்கட்டுமில்லை. எவ்வித நிர்ப்பாக்கியருக்குந் தஞ்சமாக இவர்கள் மகா பிறசிநேகத்தோடு கட்டுவித்த தரும சாவடிகளும், ஏற்படுத்திய



சபைகளும் உலகமெங்கும் நிறைந்திருக்கின்றன. தொட்டிலில் கிடக்குங் குழந்தைகளுக்கும் நிராதாரமாய் விடப்பட்ட பிள்ளைகளுக்கும் வயதுசென்ற விருத்தாப்பியருக்கும், கூன், குருடு, செவிடு, ஊமை, பைத்திய முதலிய ஊனமுள்ளவர்களுக்கும், எந்த அந்தஸ்திலும் வயதிலுமுள்ள வியாதியஸ்தருக்கும், கொள்ளைநோய் குஷ்டமுதலிய பெரும் பிணியாளிகளுக்கும் இவர்களால் வரும் நன்மை எண்ணிமுடியாது. இந்தத் தரும விஷயத்தில் எங்குமுள்ள கிறீஸ்துவர்கள் குருக்களுக்குத் தாராளமாய் உதவிசெய்வதுமன்றிப் பெண்பிள்ளைகளுக்குள்ளே முதலாய்க் கணக்கற்றபேர் தங்கள் ஆஸ்திபாஸ்தியெல்லாம் கொடுத்ததும் போதாமல் தங்களையும் இந்தத் திருத் தொழிலுக்குக் கையளித்துக் கடலைக்கடந்து தீவு தீவாந்தரங்களுக்கும் உலகத்தின் கடைசி எல்லைமட்டும் போய் அங்கங்குள்ள நோவாளிகளைத் தேற்றி, பாவிகள் மனதை இளக்கி, எங்கும் இயேசுநாதசுவாமியுடைய வரப்பிரசாத அரசாட்சியை ஸ்தாபிக்கும்படி குருக்களுக்கு உதவியாயிருக்கிறார்கள். சுவாமி, தேவரீர் மனுஷனாக உலகத்துக்கு வருமுன் இந்தப் பிறசிநேக அற்புதங்களைக் கண்டதும் கேட்டதும் இல்லையே. இதற்கெல்லாம் உமது போதனையும் மாதிரிகையுமே காரணமல்லாமல் வேறொன்றுமல்ல!

மனப்பற்றுதல்.—இதையெல்லாம் யோசித்து ஆச்சரியப்பட்டு இயேசுநாதசுவாமியைப் புகழ்ந்து கொண்டாடி அவருக்கு நன்றியறிந்ததோத்திரஞ் செய்வோமாக.

பிரதிக்கினை.—மனுஷர் படும் • துன்பதுரிதங்களைப் பார்த்துப்பார்த்து நமக்கு அப்பியாசமாய்ப் போனதினாலே நமது இரக்கமும் பிறசிநேகமும் குறைந்துபோகாதபடி எச்சரிக்கையாயிருப்போம்.

## 2-ம் பிரிவு

### சமாரித்தானிடத்தில் விளங்கின தாராளமுள்ள பிறசிநேகம்

தியானம்.—இயேசுநாதர் யூத குருக்கள் ஆசாரியரிடத்தில் தோன்றின அகந்தையான கர்வம் எவ்வளவு

அரோசிகத்துக்குரியதென்று காண்பித்தபிறகு அந்தச் சமாரித்தானிடத்தில் விளங்கின ஆச்சரியமான பிறசிநேகத்தை வருணித்துக் காட்டுகிறார். அதெப்படியென்றால் கள்ளர் கையில் அகப்பட்டு காயம்பட்டுக்கிடந்த அந்த மனிதன் பக்கமாய் வழிப்போக்கனான ஓர் சமாரித்தான் வந்தபோது அவனைக்கண்டு மனமிரங்கி அவன் கிட்டப்போய் அவனுடைய காயங்களில் திராட்சரசமுந் தைலமும் வார்த்துக் கட்டினபின் தான் ஏறிவந்த குதிரையின்மேல் அவனை ஏற்றி ஒருசத்திரத்தில் கொண்டுபோய் அவனைப் பராமரித்தான். மறுநாள் தன் கையிலிருந்த தெனியரென்னும் இரண்டு பணத்தைச் சத்திரக்காரனுக்குக்கொடுத்து: இவனை நன்றாய் விசாரித்துக்கொள். நான் திரும்பிவரும்போது நீ அதிகமாய்ச் செலவழித்திருப்பதெல்லாவற்றையும் உத்தரித்துவிடுகிறேனென்றான் (லூக். 10).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இயேசுநாதர் இந்த உவமையை வருணித்து நமக்குப் பரிஷ்காரமாய்க் கற்பிக்கச் சித்தமானதென்னவென்றால் முதலாவது, யூதர் சமாரித்தாரிடத்தில் சாதி வேற்றுமை வேத வித்தியாசம் பார்த்ததுபோல், நாம் யாதொன்றும் பாராமல் சகலரையும் நமக்கு அயலாராக எண்ணிக்கொள்ளவும், 2-வது கிரியையால் தோன்றுஞ் சிநேகமே மெய்யான பிறசிநேகமென்று அறிந்துகொள்ளவும்; 3-வது மேற்கண்டபடி சமாரித்தானானவன் யூதருக்கும், உலகத்தானானவன் குருக்கள் சாஸ்திரிகளுக்கும் தன் நல்நடக்கையால் புத்தி கற்பித்தபடியினாலே ஆங்காரிகளான சாஸ்திரிகளைப் பார்க்கப் படிப்பில்லாமல் மனநேர்மையுள்ளவர்கள் தங்கள் கடமையை அதிக நன்றாய் அறிந்து நிறைவேற்றுவார்களென்று நாம் கண்டுகொள்ளவும் வேணுமென்பதேயாம். ஆகையால் மற்றவர்களைவிடத் துறவறத்தாராகிய நாம் பிறர்மட்டில் மேலான சிநேகத்தைக் காண்பித்து அவர்களுக்காக நம்மை முழுவதுஞ் செலவழிக்கக்கடவோம்.

மனப்பற்றுதல்.—பிறசிநேகத்தினிமித்தம் ஒருநாள் உன் உயிரைக் கொடுக்கவேணுமென்று மனதில் ஆசையை



எழுப்பி அந்த ஆசையைப் பூரணமனதோடு சுவாமிக்கு ஒப்புக்கொடு.

பிரதிக்கினை.—நம்மோடு இணங்கிவராதவர்கள் மட்டில் விசேஷமாய் நமது பிறசிநேகத்தைக் காட்டுகிறது.

## 3-ம் பிரிவு

### வேதசாஸ்திரி இதைத் தாழ்ச்சியோடு ஏற்றுக்கொள்கிறன்

தியானம்.—இயேசுநாதர் இந்த உவமையைச் சொல்லிக்காட்டினபிறகு அந்தச் சாஸ்திரியைப்பார்த்து: கள்ளர் கையிலகப்பட்டவனுக்கு இந்த மூவரில் யார் சிநேகமுள்ள அயலானாயிருந்தானென்று கேட்டார். அதற்கு அவன் மாறுத்தரமாக: அவனுக்கு உபகாரம்பண்ணினவன்தான் என்றான். இவ்விதமாய் இயேசுநாதர் அகந்தை நிறைந்த அந்தச் சாஸ்திரியை இரண்டாந்தரமுந் தன் குற்றத்தை ஏந்துகொள்ளும்படி செய்தார். அதற்குப் பின் இயேசுநாதசுவாமி அவனைப் பார்த்து: நீயும் இவ்வண்ணமே செய்யென்று, இந்த இரண்டு வார்த்தை சொல்லுகிறது போதுமென்று அவனை அனுப்பிவிட்டார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நீயும் இவ்விதமே செய்யென்கிற வார்த்தைகளினால் இயேசுநாத சுவாமி சமாரித்தானுடைய பிறசிநேகத்தைப்போல நமது பிறசிநேகமும் கிரியையினாலுந் தாராளகுணத்தினாலும் விளங்கவேணுமென்று காண்பிக்கிறார். எப்படியெனில் பிறர் ஆத்தும ஈடேற்றத்துக்காக நமது இளைப்பாற்றியையும், மன இஷ்டத்தையும், சுகசௌக்கியத்தையும் இழந்து போகவும், அவசியமானால் உயிரைக்கொடுக்கவுந் துணிந்திருக்கவேணுமென்று கற்பிக்கிறார். உன்னிடத்தில் பிறசிநேகம் எவ்வளவு ஸ்திரமாயிருக்கிறதென்று பார். அதிலே குறைபடுகிறதென்ன?

சம்பாஷணை.—பிறசிநேக வேதசாட்சிகளுக்கு இராக்கினியான தேவமாதாவோடு சம்பாஷணைசெய்.

# 25-ம் தேதி

## சமாரித்தான் உவமையில் மறைந்திருக்கிற பொருளின் விளக்கம்

**ஆயத்தச் சிந்தனை.**—கள்ளர் அடித்துக் காயப்படுத்தின ஒரு ஏழைக்குப் பிறசினேகமுள்ள சமாரித்தான் உதவி செய்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

**தியானச் செபம்.**—இரக்கமுந் தயாளமுமுள்ள இருதயத்தை ஆண்டவரிடத்தில் கேட்பாயாக.

## முதல் பிரிவு

**கள்ளர் கையிலகப்பட்ட வழிப்போக்கன் பாவிக்கு அடையாள—**

**தியானம்.**—இயேசுநாதசுவாமி சமாரித்தானை உவமையைத் திருவுளம்பற்றும்போது தமது கருத் கொண்டிருந்த ஞான அர்த்தமேதென்று அர்ச்சியசி வர்களான பல வேதபாரகர்கள் விவரித்திருக்கிறா அதேதென்று அறிவது வருத்தமல்ல. ஆதிமனு டைய பாவத்தால் மனுக்குலத்தாரெல்லாரும் கெட்டழி நொறுக்கப்பட்டிருக்கையில் மனுஷாவதாரமெடுத்த விய இரட்சகர் அவர்கள் எல்லாரையுங் கைதூக்கி குண படுத்தி இரட்சித்த வர்த்தமானம் இந்த உவமையால் குறி கப்பட்டிருக்கிறதென்கலாம். இந்த அர்த்தத்தை விரிவா காமல் சுருக்கிக் காட்டினால் அப்போது ஒருபக்கத்திலே பாவியையும் மற்றொருபக்கத்தில் இரட்சகரையும் இந்த உவமை எடுத்துக்காட்டுகிறதென்கலாம். அதெப்படியென்றால்: முந்த முந்தக் கள்ளர்கையில் அகப்பட்ட நிர்ப்பாக்கியனான வழிப்போக்கனுக்கு வந்த பொல்லாப்பெல்லாஞ் சாவானபாவத்தினால் பசாசின் கையில் அகப்பட்ட ஆத்துமத்துக்குஞ் செல்லுமல்லவோ? அந்த வழிப்போக்கனைப் போல இந்த ஆத்துமமும் எல்லா நன்மையையும் பறி கொடுக்கிறது. எவ்விதமெனில் அதினுடைய மாசில்லாத



தனமாகிற உடைமையையும், தேவ இஷ்டப்பிரசாதமாகிற கலியாண ஆடையையும், அதைச் சம்மனசுக்களுக்கு நிகராக்குகிற சுபாவத்துக்கு மேற்பட்ட அழகு சௌந்திரியத்தையும் பசாசானது உரிந்துகொள்ளுகிறது. அதினாலே சர்வேசுரனுக்குச் சுவிகாரப் பிள்ளையென்கிற சுதந்தரத்தையும், தன் பேறுபலன்களையும் இந்த ஆத்துமம் இழந்துபோய் பாவத்தினால் வந்த அசுசியான இரணங்களால் மூடப்பட்டிருக்கிறது. கடைசியாய் அதினிடத்திலிருக்கிற விசுவாசம் தேவசிநேகத்தோடு கூடியிராததினாலே அது குற்றுயிராயிருக்கிறதென்று சொல்லப்படும்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—நான் ஒரே ஒரு சாவானபாவத்தை மாத்திரங் கட்டிக்கொண்டிருந்தாலும் என்னை நிர்ப்பாக்கியன் நிர்ப்பாக்கியனென்றே சொல்லவேண்டியதன்றோ? அப்படியிருக்க எத்தனையோ கிழமைகள், எத்தனையோ மாதங்கள் இந்த அவலமான ஸ்திதியில் கிடந்தேன்! இந்த நிர்ப்பாக்கிய ஸ்திதி எவ்வளவு கனமான கேடென்றும் பாராமல் அதிலே பிரியப்பட்டுக் கிடந்ததினாலே நான் அதிக நிர்ப்பாக்கியன் ஆனேனல்லவா? இந்த ஸ்திதியில் மரணம் அசுப்பிலே வந்திருந்தால் இந்நேரம் நான் எங்கே இருக்கவேண்டியது? இந்த நிர்ப்பாக்கியங்களெல்லாம் எனக்கு எங்கிருந்து வந்தன? நானும் அந்த வழிப்போக்கனைப்போல எருசலேம் பட்டணத்தைவிட்டு ஜெரிக்கோ பட்டணத்துக்குப் போனதினாலல்லவா? அதாவது என்னுடைய சிந்தையும் பற்றுதலும் என் கடைசிக் கதியாகிய சர்வேசுரனையும் மோக்ஷத்தையும் விட்டுவிலகி இலௌகீக நன்மைகளைத்தேடிச் சிற்றின்ப சுகங்களை நாடிப் போனதினாலேயல்லவோ? ஐயோ, நான் சந்நியாசியாயிருந்தும் இன்னும் இப்படி வழிதப்பிப் போகக் கூடுமே! அநேக சந்நியாசிகள் பசாசின் கண்ணியிலே அகப்பட்டது போல நானும் அகப்பட்டுக்கொண்டு எங்கே நிலைதவறிப் போகிறேனோவென்று எவ்வளவோ பயந்து நடுநடுங்க வேணும்!

**மனப்பற்றுதல்.**—தன்னை நம்பாமலிருக்கவுந் தேவ பயமுண்டாகவும் வரங் கேட்கிறது.

பிரதிக்கினை.—சுய இச்சையும் ஒறுத்தலின்மையுமாகிய இந்த இரண்டு துர்க்குணங்களையும் வெறுத்து விலக்க வேண்டியது. ஏனெனில் மனம்போல் திரிகிறவன் தேவ சன்னதியை மறந்து விடுகிறான். வாடிக்கையாய் இந்திரியங்களின் இச்சைப்படி நடக்கிறவன் இலௌகிகனாகி சன்னஞ் சன்னமாய் எவ்வித அலங்கோலைக்கும் உள்ளாகிறான்.

## 2-ம் பிரிவு

### பிறசிநேக சமாரித்தான் திவ்விய இரட்சகருக்கு அடையாளம்

தியானம்.—பிறசிநேகமுள்ள சமாரித்தானிடத்தில் உனது நேச இரட்சகரான இயேசுநாதருடைய சாயலைக் கண்டறிவாயாக. இந்தச் சாயலின் ஒற்றுமை வெகு துலக்கமாயிருக்கிறதினாலே பிசகாய் நினைக்கிறதற்கு இடமில்லை. குற்றுயிராய்க் கிடந்த யூதன் சமாரித்தானுக்கு அன்னியனாயிருந்ததுமல்லாமல், இயல்பாய் அவனுக்கு எதிரியும் மகா வெறுப்பும் அரோசிகமும் வருவிக்கிற நிர்ப்பாக்கியனுமாயிருந்தான். ஆகிலுஞ் சமாரித்தான் இந்த யூதனைக் கண்ட மாத்திரத்தில் மனமுருகித் தன் குதிரையை விட்டிறங்கி குற்றுயிராய்க் கிடந்த அவன் அண்டையிற்போய் அவனுக்கு உதவி செய்தானல்லோ? அப்படியே நாமும் பாவத்தினால் நித்திய பிதாவின் திருச்சுதனுக்கு அன்னியரும் அவலட்சணமுள்ள சத்துராதிகளுமாய்ப் போனோம். ஆகிலும் நாம் உள்ளாயிருந்த நிர்ப்பாக்கியங்களைக் கண்டு, அவர் மனமிரங்கி நமக்கு உதவிசெய்யவேணுமென்று பரலோகத்தைவிட்டு மனுஷ சுபாவமெடுத்து நமது சாயலாகி நம்மிடத்தில் வருகிறார். நமக்கு உதவிசெய்வதே ஏக கவலையாயிருக்கிறார். பின்னும் அந்த உவமையில் கண்டபடி சமாரித்தானானவன் அந்த நிர்ப்பாக்கியனுக்கு ஆரோக்கியமும் ஆறுதலுமுண்டாகும்படி செய்த உபகாரமெல்லாம் ஆராய்ந்து பார்ப்பாயானால் அதைப் பார்க்க இயேசுநாதர் உனக்கு ஆயிரமடங்கு அதிகஞ் செய்திருக்கிறாரென்று கண்டுகொள்வாய். பாவத்தினால் குத்துக் காயம்பட்ட உன் ஆத்துமத்திலே உத்தமமனஸ்தாபமாகிற



இரசத்தையும், தேவ இஷ்டப்பிரசாதமாகிற எண்ணெயையும் வார்த்துப் பாவசங்கீர்த்தனத்தின் வழியாய்த் தமது விலைமதியாத திரு இரத்தத்தின் தைலத்தைப்பூசிப் பாவப் புண்ணை ஆற்றுகிறார். பின்னும் அந்தச் சமாரித்தான் அவனை ஒரு வாகனத்தின்மேல் ஏற்றி ஒரு சத்திரத்துக்குக் கொண்டுபோனதுபோல செய்யாமல் நல்ல ஆயனைப்போல் உன்னைத் தமது திருத்தோளின்பேரில் சுமந்து சந்நியாசியாயிருக்கிற உன்னைத் தமது சொந்த வீடாகிற மடத்திலே கொண்டுவந்து சேர்த்தார். அங்கே தம்முடைய ஸ்தானத்திலிருக்கிற சிரேஷ்டருக்கு உன்னை ஒப்புவித்து இனிமேல் தாமே வந்து தமது மோக்ஷானந்த அரமனைக்கு உன்னை அழைத்துக்கொண்டு போகும்வரையில் உன் ஆத்தும சரீரத்துக்கு வேண்டியதெல்லாம் விசாரிக்கவேண்டுமென்று அவரைத் திட்டம்பண்ணியிருக்கிறார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இந்த உவமையில் சொல்லப்பட்ட சமாரித்தான் காண்பித்த பட்சத்தை யோசித்துப்பார்க்கையில் ஆச்சரியத்தோடுகூடிய உருக்கமான சிநேக உணர்ச்சிகள் உன் இருதயத்தில் உண்டாகாதிருக்குமோ? அப்படியானால் மெய்யான சமாரித்தானாகிற இயேசுநாதசுவாமி தமது நன்மைத்தனத்தையுந் தாராள மனதையும் உனக்கு இதுவரையில் காட்டினதுமன்றி இன்னம் நாள்தோறுங் காட்டிக்கொண்டுவருகிறதினாலே அவர்பேரில் எம்மாத்திரம் அன்பு வைக்கவேண்டியது. உன் சிநேகத்தையும் நன்றியையும் அவருக்கு எப்படிக் காண்பிப்பாய்? அதற்காக நீ செய்யவேண்டியதென்னவென்றால்: முதலாவது, அவருடைய ஊழியத்தில் மகா சுறுசுறுப்பாயிருந்து அவரிடமாயிருக்கிற சிரேஷ்டர்களுக்கு முற்றும் பணிந்து நட. 2-வது வியாதியஸ்தர்கள் ஏழைகள் முதலிய நிர்ப்பாக்கியரைக் கண்டால் அவர்களிடமாய் இயேசுநாதசுவாமி சீவிக்கிறாரென்றும், வருத்தப்படுகிறாரென்றும், பசிதாகம் அனுபவிக்கிறாரென்றும் நினைத்து அவர்களுக்குவேண்டிய ஆறுதல் வருவிக்கப் பிரயாசப்படு. இதற்கொத்தவண்ணம் இயேசுநாதசுவாமியும்: நான் வியாதியாயிருந்தேன், என்னைப் பார்க்க வந்தீர்கள்; பட்டினியாயி

ருந்தேன், எனக்கு அன்னம் தந்தீர்கள்; என் சகோதரர்களில் அதிக சிறியவர்களுக்கு நீங்கள் செய்ததெல்லாம் எனக்கே செய்தீர்களென்று வசனித்திருக்கிறார். உன்னுடைய நன்றியறிதலை அவருக்கு இவ்விதமாய்க் காட்டுகிறாயோ?

சம்பாஷணை.—பிறசிநேகத்தை முன்னிட்டு மனுஷாவதாரமெடுத்துத் தமது உயிரையே பலியாகத்தந்த இயேசு இரட்சகரோடு சம்பாஷணை செய்வாயாக.

---

## 26-ம் தேதி

### சகோதர சிநேகத்தின்பேரிலும் அதற்கான முகாந்தரம் குணங்களின்பேரிலும்

ஆயத்தச் சிந்தனை.—எல்லாத்துக்குமுன்னே, நீங்கள் ஒருவர் ஒருவரைச் சிநேகித்திருங்களென்று அர்ச். இராயப்பர் சொல்லுகிறதைக் கேட்கிறதாக ரூபிகரித்துக்கொள் (1. இரா. 4).

தியானச் செபம்.—சகோதர சிநேகத்தில் உத்தமதனம் அடைய வேணுமென்கிற வேகமான ஆசையைக் கேள்.

### முதல் பிரிவு

#### இயேசுநாதர் இட்டகட்டளை பிறசிநேகத்துக்கு முதலாவது முகாந்தரம்

தியானம்.—தர்ம சிலனை சமாரித்தானைப்பற்றித் தியானித்தபின் சகோதர சிநேகமென்னும் பெருங்கடமை இயல்பாய் நமது ஞாபகத்தில் வருகிறதன்றோ? இந்தச் சிநேகந்தான் இறவற சீவியத்தைப் பாக்கியமும் இன்பமுமாக்க வேண்டியது. இந்தப் புண்ணியத்தை நாம் உத்தம



பிரகாரமாய் அனுசரிக்க வருந்துவதற்கு எத்தனையோ
முகாந்தரங்களுண்டு! முதலாவது, இயேசுநாதசுவாமி
இதைத் தமக்கு உகந்த கற்பனையாகக் கொடுத்திருக்கிறார்.
எப்படியென்றால் நாம் உங்களைச் சிநேகித்ததுபோல நீங்
களும் ஒருவர் ஒருவரைச் சிநேகிக்கக்கடவீர்கள். இதுவே
நமது கற்பனையென்றார் (அரு. 13). 2-வது பிறசிநேக
மானது இயேசுநாதசுவாமியுடைய மெய்யான சீஷர்கள்
யாரென்று எடுத்துக் காட்டுங் குறிப்பாயிருக்கும்படி சித்த
மானார். எப்படியெனில்: நீங்கள் ஒருவரை ஒருவர்
சிநேகித்தால் நம்முடைய மெய்யான சீஷர்களாயிருக்கிறீர்
களென்று சர்வ சனங்களும் அறிந்துகொள்வார்களென்றார்.
3-வது நாமெல்லாரும் நம்மைப்பெற்ற தாய் தகப்பனை
விட்டபின் பரமண்டலங்களிலிருக்கிற ஏக பிதாவுக்குப்
பிள்ளைகளானதினாலே நாமெல்லாரும் மெய்யாகவே அண்
ணன் தம்பிமாராகி ஒரே பந்தியில் அமர்ந்து ஒரே சட்
திட்டத்தைக் காத்து ஒரே கதியை நோக்கிச் செல்லு
கிறோம். 4-வது நாம் அடிக்கடி தேவநற்கருணை வாங்குகிற
தினிமித்தம் நமது தாதுகளில் ஒரே இரத்தம் ஓடிக்
கொண்டிருக்கிறது. இது நமது ஆண்டவராகிய இயேசுக்
கிறீஸ்துநாதருடைய திரு உதிரமேயொழிய வேறல்ல.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இந்த
முகாந்தரங்களையெல்லாங் கவனமாய் யோசித்துப் பார்த்தா
யானால் நீ பிறசிநேகத்தை அதிக கனமாய் மதிப்பதுமல்
லாமல் அதின் முதல் குணமாகிய மனச் சகிப்பையும்
சமுத்திரையாய் அனுசரிக்க விருப்பங்கொள்வாய். மனச்
சகிப்பில்லாமல் சபைக்கூடத்தில் சமாதானம் நிலைபெற
மாட்டாது. மனச் சகிப்புக்கு இரண்டு காரியம் வேணு
மென்றறியக்கடவாய். முந்த முந்த நமது சகோதரருடைய
குற்றங் குறைகளைப் பொறுமையோடு சகிக்கிறதுமன்றி
அவைகளைப் பாராட்டாமல் யாதொரு போக்குச்சொல்லிச்
சாடையாய் விட்டுவிடவேண்டியது. அன்றியும் யாதொரு
வர் உனக்கு ஏதேனும் வருத்தம் வருவித்தால் அதை மன
மறிந்து செய்யாமல் புத்திக் குறைவினாலுந் துடுதுடுப்பினா
லுஞ் செய்தார்களென்று அதை மறந்து விடவேண்டியது.

அப்படியிருக்க, எனக்கு எரிச்சல் வராதபடி இன்ன சகோ
தரரை நான் அண்டுகிறதில்லையென்றும், அவரோடு இசைந்
துபோக என்னால் முடியாதென்றும், எல்லாரோடும்
இணங்கி வாழப் பிரயாசப்படுகிறேன், ஆனால் யாதொருவர்
என்னைக் குத்தும்படி பேசினால் நானும் அவர்களைக் குத்தும்
படி பேசுவேனென்றும் இவைமுதலிய வார்த்தைகள் உன்
வாயினின்று வரவொண்ணாது. ஏனெனில் இது ஒருவர்
ஒருவரைச் சகித்துக் கொள்ளும் விதமுமல்ல, உலகத்தின்
பேச்சே ஒழிய பிறசினேகத்தின் பேச்சுமல்ல.

மனப்பற்றுதல்.—உன்னிடத்தில் பிறசினேகம் அவ்
வளவு சொற்பமாயிருக்கிறதை அறிந்து சர்வேசுரன் சமு
கத்தில் உன்னைத் தாழ்த்திக்கொள்வாயாக.

பிரதிக்கினை.—சகோதர சினேகத்துக்கு விரோத
மாய் உன் நினைவு வாக்குக் கிரியைகளால் கட்டிக்கொள்ளும்
குற்றங்களின் பேரில் அடிக்கடி தனி ஆத்தும சோதனை
செய்யக்கடவாய்.

## 2-ம் பிரிவு

### இயேசுநாதர் காண்பித்த மாதிரிகை பிறசினேகத்துக்கு இரண்டாம் முகாந்தரம்

தியானம்.—இயேசுநாதருடைய சீவியத்தில் முக்கிய
மாய் விளங்கினது சினேகமேயன்றி வேறல்ல. அவரால்
யாதொரு வருத்தமும் இடைஞ்சலும் அடைந்தவர்கள் ஒரு
வருமில்லை. தமது உபகாரத்துக்கு அபகாரம் கைமாறாய்
வந்தாலும் அதைப்பற்றி முறையிடாமல் சகலருக்கும்
நன்மைசெய்வதில் தமது வாழ்நாள் எல்லாம் செலவழித்
தார். நமது நிர்ப்பாக்கியங்களுக்கு ஆறுதலும் நமது
அக்கிரமங்களுக்குப் பரிகாரமும் வருவிக்கும்படி அவை
களைத் தமதுமேல் போட்டுக்கொண்டார். இவ்விதமே
தமது சீவியகாலமெல்லாம் எவ்வித வருத்தங்களையும் வலிய
மனதோடு அநுபவித்துவந்தார். தம்மைக் கொலைப்படுத்
தினவர்களுக்காகத் தமது பிதாவைநோக்கி: என் பிதாவே,
இவர்கள் செய்கிறது இன்னதென்று அறியாததினாலே



இவர்கள் குற்றத்தை மன்னித்தருளுமென்று சொல்லி, பிற
சினேகத்துக்காக தமது உயிரைக்கொடுத்து மரித்தார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நமது
நேச இரட்சகரைக் கண்டுபாவித்து நமது சகோதரர்களுக்
காக நம்முடைய இளைப்பாற்றியையும் வேணுமானால் நமது
சௌக்கியத்தையும் உயிரையுமுதலாய்ப் பாராமல் பலியாக
ஒப்புக்கொடுக்கக் கற்றுக்கொள்வோமாக. இப்படிச்
செய்யச் சமயம் நேரிடாமற்போனாலும் ஒருவரை ஒருவர்
சகித்துக்கொள்வதற்குப் பிரமாணிக்கமாய் இருக்கவேணும்.
மனச்சகிப்புக்கு வேண்டிய இரண்டாங் காரியமென்ன
வென்றால் பிறருக்கு அற்பமேனும் வருத்தம் வருவியாதபடி
எப்போதும் விழிப்பாயிருந்து நம்மையே அடக்கி நடத்த
வேணும். இதற்காக நம்மைச் செயிக்கவும், நமதுகுணம்
சகலத்துக்கும் வளைந்துகொடுக்கவும், எல்லாருக்கும்
எல்லாமாகவுங் கற்றுக்கொள்ளவேண்டியது. நீ இன்
னின்னவிதமாய் இருக்கிறதுஞ் செய்கிறதும் உன் சகோதர
ருக்குப் பிடியாமற் போனால் அதைமாற்றி அவர்களுக்கு
இணங்கப் பிரயாசப்படு. உன் கேலி பரியாசம் யாருக்காவது ஆயாசம் வருவிக்குமானால் அதை விட்டுவிடு. சில
நாள் வியாதிப்பட்டு உன் குணம் மாறியிருந்தால் அற்ப
சொற்பக்காரியத்துக்கும் எரிச்சலுண்டாகுமென்பதினால்
அந்தச்சமயத்தில் மகா எச்சரிக்கையாய் இருக்கக்கடவாய்.
பிறசினேக விஷயத்தில் மகா முக்கியமான இந்த ஒழுங்கு
களை உன் நடபடிக்கையில் எவ்விதம் அநுசரித்து வருகிறு
யென்றும், எதிலே விசேஷமாய்த் தவறிப்போகிறு
யென்றும்பார்.

மனப்பற்றுதல்.—மெய்யான பிறசினேகத்துக்கும்
அன்னியோன்னிய சகிப்புக்கும் தேவையானதெல்லாம்
உத்தமபிரகாரமாய் அநுசரிக்கும்படி வேண்டிய தேவாநுக்
கிரகத்தைக் கேள்.

பிரதிக்கினை.—எல்லாரையும் ஈடேற்ற எல்லாருக்கும்
எல்லாமுமானேனென்று அர்ச். சின்னப்பர் சொன்ன
பாவனையாய்ச் சகலருடைய நன்மையைக் கோரிச் சகலருக்
குஞ் சகலமுமாகக்கடவோம் (1. கொரி. 9).

## 3-ம் பிரிவு

### இயேசுநாதர் செய்த வாக்குத்தத்தமுங் கண்டிப்பும் பிறசிநேகத்துக்கு மூன்றும் முகாந்தரம்

தியானம்.—மகா பயங்கரமாகிய தீர்வைநாளில் இயேசுநாதசுவாமி நமக்கு இடுந் தீர்ப்பு நன்மையாயிருப்பதுந் தின்மையாயிருப்பதும் நாம் அனுசரிக்கும் பிறசிநேகக் கிரியைகளுக்குத் தக்கபடியிருக்குமென்று அவர் திருவுளம் பற்றின வாக்கியங்களால் தெரிய வருகிறது. அவையாவன: என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, வாருங்கள். உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற இராட்சியத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள். ஏனெனில் நான் பசியாயிருந்தேன்; எனக்குப்போசனங் கொடுத்தீர்கள். நான் தாகமாயிருந்தேன்; எனக்குத் தண்ணீர் கொடுத்தீர்கள். நான் வஸ்திரமில்லாதிருந்தேன்; எனக்கு வஸ்திரங்கொடுத்தீர்கள். நான் வியாதியாயிருந்தேன்; அப்போது என்னைப் பார்க்கவந்தீர்களென்பார். பின்னும் தமது இடதுபாரிசத்தில் இருப்பவர்களை நோக்கிச் சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு நித்திய அக்கினிக்குள் போங்கள். ஏனெனில் நான் பசியாயிருந்தேன்; நீங்கள் எனக்குப் போஜனங் கொடுக்கவில்லை. நான் தாகமாயிருந்தேன்; எனக்குத் தண்ணீர் கொடுக்கவில்லை. நான் வஸ்திரமில்லாதிருந்தேன்; எனக்கு வஸ்திரங்கொடுக்கவில்லை. நான் வியாதியாயிருந்தேன்; நீங்கள் என்னைப் பார்க்கவந்ததில்லை. எப்படியெனில் இச்சிறியவர்களில் ஒருவனுக்கு நீங்கள் செய்யாதிருந்தது எதுவோ அதை எனக்கே செய்யாதிருந்தீர்களென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார் (மத். 25).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நாம் மற்றதெல்லாம் விட்டு நமது சுயநலத்தை மாத்திரம் தேடுகிறோமென்றிருந்தபோதிலும் அப்போதும் பிறசிநேகத்தில் உத்தமராகப் பிரயாசப்படவேண்டியதென்று மேற்சொன்னதைக்கொண்டு காண்கிறோமல்லவோ? ஆகையால் பிறசிநேகத்துக்கு விரோதமானதெல்லாம் தவிர்க்கவும்



அந்தச் சிநேகக் கற்பனைகளை மீறுவதற்கு முந்தின காரணமாகிய நமது கிரமந்தப்பின சுய பட்சத்தை எதிர்த்து வீரியமாய்ப் போராடவும் வருந்தக்கடவோம்.

சம்பாஷணை.—பிறசிநேக வேதசாட்சிகளுக்கு இராசாவாகிய இயேசுநாதரோடு சம்பாஷணை செய்வாயாக.

---

## 27-ம் தேதி

### சகோதர சிநேகத்துக்கு வேண்டிய இலட்சணங்களின் பேரில்

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதர் அப்போஸ்தலர்களைப் பார்த்து: நாம் உங்களைச் சிநேகித்துவந்ததுபோல நீங்களும் ஒருவரை ஒருவர் சிநேகியுங்களென்று சொல்வதைக் கேட்கிறதாக ரூபிகரித்துக்கொள் (அரு. 13).

தியானச் செபம்.—பிறசிநேகத்தை அதின் சர்வ உத்தமதனத்தோடு அனுசரிக்க ஆண்டவரிடத்தில் வரப்பிரசாதங் கேள்.

### முதல் பிரிவு

### நமது பிறசிநேகம் சுபாவத்துக்கு மேற்பட்டதுமாய் எல்லாத்துக்கும் பொதுவுமாய் இருக்கவேண்டியது

தியானம்.—இயேசுநாதர் தாம் நம்மைச் சிநேகித்ததுபோல நாமும் ஒருவர் ஒருவரைச் சிநேகிக்க வேணுமென்று சித்தமாயிருக்கிறார். நமதுமேல் இயேசுநாதசுவாமி வைத்த சிநேகம் சுபாவத்துக்கு மேலானதுமாய், பொதுவுமாய், கிரியையால் தோன்றுவதுமாய், இரக்கம் தாராளம் வீரியம் நிறைந்ததுமாயிருந்தது. பிறர்மேல் நாம் வைக்கவேண்டிய சிநேகமும் இவ்வித இலட்சணங்களைக் கொண்டிருக்கவேண்டியது. எல்லாத்துக்கு முந்தி அது சுபாவத்துக்கு மேற்பட்டதாய் இருக்கவேணும். எப்படி

யெனில் அதற்கு விசுவாசத்தை அஸ்திவாரமாக வைத்து நமது சகோதரர்கள் சர்வேசுரனுடைய உயிருள்ள சாயலென்றும் இயேசுநாதருடைய ஞானச்சரீரத்தின் உறுப்புகளென்றும் பாவித்து அவர்களைச் சிநேகிக்கவேண்டியது. இதினிமித்தமே இயேசுநாதசுவாமியும் தம்முடையவர்களுக்குள் அதிக சிறியவனொருவனுக்குச் செய்யப்பட்டது தமக்கே செய்யப்பட்டதென்று எண்ணிக்கொள்வதாகச் சொல்லியிருக்கிறார் (மத். 25). நமது சகோதரரெல்லாரும் சர்வேசுரனுக்குப் பிள்ளைகளுமாய் இயேசுநாதசுவாமிக்குச் சகோதரர்களுமாய் இருப்பதினாலே நம்முடைய சிநேகம் சுபாவத்துக்கு மேற்பட்டதாயிருக்குமானால் அதினிமித்தமே பொதுவுமாயிருக்கும்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—அநேக கிறீஸ்துவர்கள் தங்களிடத்திலே பிறசிநேகமுண்டென்று பாராட்டினாலும் அவர்களிடத்தில் அதின் கோலமாத்திரம் இருக்கிறதொழிய வேறொன்றுமில்லை. அவர்கள் பொதுவாய் ஒருவரையுஞ் சிநேகியாமல் மகிமை செல்வாக்குள்ள சனங்களையும், குண ஒற்றுமையுள்ளவர்களையும் அல்லது வெளிப்பார்வைக்கு வசீகரமானவர்களையுங் கண்டால் அவர்களை முன்னிட்டு ஆசார உபசாரமெல்லாங் குறையாமல் செய்வார்கள். மற்றவர்களைக் கண்டாலோ, பார்த்தும் பாராததுபோல ஒரு பிரகாரமாயிருப்பார்கள். நீயும் அவர்களில் ஒருவனோ? இதிலே பிறசிநேகத்தின் நிழலாட்டமுதலாய் இல்லை. தன் சுயநன்மையும் குண இணக்கமும் முகப்பிரீதியும் தோன்றுவதல்லாதே மற்றப்படியல்ல. இந்தக் குருட்டாட்ட மயக்கத்தை அருவருத்துச் சுபாவத்துக்கு மேற்பட்ட மெய்யான பிறசிநேகத்தில் அதிகமாய் வர்த்திக்கக் கவனித்துப் பிரயாசப்படு. இது யாதொரு பாரபட்சமின்றி சகோதரர் எல்லாரையும் இயேசுநாதரிடத்தில் ஒரேமட்டாய்ச் சிநேகிக்கச் செய்யும். இதற்கு விரோதமாய் யாதொரு வித்தியாசம் செய்யவேணுமானால் நமது குணத்துக்கு ஒத்துவராதவர்கள் பேரிலும் நமக்கு அதிக பத்தி சுறுசுறுப்புக்குக் காரணமானவர்கள்பேரிலும் மாத்திரம் அதிக பிரியங் காட்டச்செய்யும்.



**மனப்பற்றுதல்.**—இந்த உத்தம சிநேகம் உன்னிடத்தில் மெய்யாகவே விளங்கும்படி ஆசைப்படு.

**பிரதிக்கினை.**—பிறசினேகத்தை அனுசரிப்பதில் சுயபட்சமும் இந்திரிய மாய்கையுந் தன்னை மோசம்போக்காதபடி எச்சரிக்கையாயிருக்கிறது.

## 2-ம் பிரிவு

### பிறசிநேகம் கிரியையில் தோன்றுவதுமாய் இரக்கம் உள்ளதுமாயிநக்கவேணும்

**தியானம்.**—இயேசுநாதசுவாமி மனிதர்மேல் வைத்த சிநேகமானது பற்றுதலுள்ளதாய் அவருடைய தயாளமுள்ள இருதயத்தில்மாத்திரம் அடங்கி நில்லாமல் கிரியைகளாலும் வெளியில் தோன்றினது. அநேகாநேக வர்த்தமானங்களால் நாம் நிச்சயமாய் அறிந்திருக்கிறதுபோல, அவருடைய வெளியரங்க சீவியமெல்லாம் இடையறாத பிறசிநேகக் கிரியைகள் நிறைந்ததுமாய், கேட்குமுன் வலிய உபகாரஞ் செய்கிறதுமாயிருந்தது.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—உன் பிறசிநேகத்திலே இப்பேர்ப்பட்ட குண இலட்சணங்கள் காணப்படுகின்றனவா? அதற்கு உழைக்கிற குணமுண்டோ? உன்னாற் கூடியமாத்திரம் உன் சகோதரருக்கு உதவி செய்து அவர்களை ஆற்றித் தேற்றும்படி நிலைமையாய் வருந்தி, இவ்விதமாய் உன் சிநேகத்தைக் காட்டுகிறாயோ? உன் சகோதரருடைய அவசர சமயங்களைக் கவனித்து வலியப்போய் உதவிசெய்கிறாயோ? அதற்குமாறாய் உன்னை ஒருவிதத்தில் அநேகவிசைக் கெஞ்சிக் கேட்டபிறகுமாத்திரம் அவர்களுக்குக் கைகொடுக்கப் போகிறாயோ? உன் சகோதரர்கள் மிஞ்சின வேலைத் தொந்தரையினால் சோர்ந்து சங்கடப்படும்போது: ஐயோ நீங்கள் வருத்தப்படுகிறீர்களே, என்கிறதுமாத்திரம் போதுமென்றிருந்திருக்கிறாயோ? அல்லது அவர்களுக்கு உதவியாக அனுப்பப்பட்டால் முகத்தைக் குறுக்கிக்கொண்டு போகிறாயோ? உன்னிடத்தில் அதிக உயிருள்ள விசுவாசமிருந்தால் உன் பிற

சிநேகமும் அதிக உத்தமமாகும். நீயும் உன் சகோதரர்களுக்குச் செய்வதெல்லாம் தமக்கே செய்ததுபோலாகுமென்று இயேசுநாதசுவாமி சொன்னதை நினைத்து அவர்களுக்கு உதவிசெய்ய எப்போது சமயம் வாய்க்குமோவென்று வலிய தேடிப்போவாய்.

மனப்பற்றுதல்.— உயிருள்ள விசுவாசத்தையும், உழைத்து வலிய உபகாரஞ்செய்யும் பிறசிநேகத்தையும் உனக்குக் கட்டளையிடவேணுமென்று மன்றாடு.

பிரதிக்கினை.—யாதாமொருவனுக்கு நீ அவமானமாவது மனத்தாங்கலாவது வருவித்திருந்தால், அதை நீ மனதாரச் செய்யாதபோதிலும், அவனைப் பொறுத்தல் கேட்டு நல்ல வார்த்தை சொல்லி முன்னிலும் அவனுக்கு அதிக மரியாதை செய்.

## 3-ம் பிரிவு

### பிறசிநேகம் தாராளமும் வீரத்துவமும் உள்ளதாய் இருக்கவேணும்

தியானம்.—இயேசுநாதர் நமக்குக் காண்பித்த சிநேகமானது நமது சரீர இக்கட்டுகளையுமல்லாமல் விசேஷமாய் ஆத்துமக் குறைகளையும் பரிகரிக்கத் தேடினது. அவருடைய சிநேகம் எவ்வளவு வீரியமுள்ளதாயிருந்ததென்றால்: அவர் தம்மைத் தாமே நமக்காகப் பலியாய் ஒப்புக்கொடுக்கும்படி அவரை உடன்படுத்தினது. ஒருவன் தன் சிநேகிதர்களுக்காகத் தன் உயிரைக் கொடுப்பதிலும் அதிகமான சிநேகங் கிடையாதென்று அவரே சொன்னதுபோல நமக்காகத் தமது உயிரைக் கொடுத்துத் தமது அன்பைக் காட்டினார் (அரு. 15).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இதுவே நமது சிநேகத்துக்கு மாதிரியும் அளவுமாயிருக்கவேணும். அதேதென்றால், பிறர்மட்டில் நம்முடைய சிநேகம் உதாரகுணமுள்ளதாயிருக்கிறதுமல்லாமல் அவசரமான சமயத்திலே நம்முடைய சகோதரருடைய ஆத்தும நன்மைக்காகவும் சில தருணங்களில் சரீர நன்மைக்காகவுமுதலாய் வீரனைப்போல் நம்முடைய உயிரைக்கொடுக்க நம்மை உடன்படுத்தவேணும். அப்பேர்ப்பட்ட சமயம் நேரிடாதபோது நாம் அவர்களைத் தேற்றித்தாங்கி நமது நன்மாதிரிகைகளினாலே அவர்களுக்கு நற்படிப்பினையாயிருக்கவேணும். அவர்களுக்காக சுவாமியை அடிக்கடி மன்றாடவும் வேண்டும். விசேஷமாய் நாம் உட்பட்டிருக்கிற மடம் பலுகி, பத்தி சுறுசுறுப்பில் விர்த்தியாகும்படியாக மிகவும் வேண்டிக்கொள்ள வேண்டியது. இப்படியோ நீ பிறசிநேகத்தை எண்ணி நடந்து வந்தாய்? வழக்கமாய் எதில் தவறிப் போகிறாய்?



சம்பாஷணை.—கூடப்பிறந்து பேர்போன வைத்தியர்களான கோஸ்மாவுந் தமியானுமென்கிற வேதசாட்சிகளோடு சம்பாஷணை செய். இன்று அவர்களுடைய திருநாள். அவர்கள் தங்கள் சுயநன்மையைத் தேடாமல் தருமத்துக்கு வைத்தியஞ்செய்து அனேக அஞ்ஞானிகளைத் திருப்பி, நித்திய சாவினின்று அவர்களை இரட்சித்தது போல் நமது வியாதிகளையுந் தங்கள் மன்றாட்டினாலே முழுதுங் குணமாக்க வேணுமென்று அவர்களைப் பிரார்த்திப்போமாக.

---

## 28-ம் தேதி

### இயேசுநாதர் மார்த்தம்மாள் மரியம்மாள் என்கிற இரு சகோதரிகள் வீட்டில் தங்குகிறார்

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதர் பாதத்திலே மரியமதலேனம்மாள் தியானப் பரவசத்திலிருக்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

தியானச் செபம்—தியானத்தோடு புண்ணிய நற்கிரியைகளையும் சேர்த்து அநுசரிக்கும்படி அநுக்கிரகங் கேள்.

## முதல் பிரிவு

### இயேசுநாதர் மார்த்தம்மாளையும் மரியம்மாளையும் பார்க்கப் போகிறார்

**தியானம்.**—இயேசுநாதர் கப்பர்நாஊம் ஊரைவிட்டுப் புறப்பட்டது முதல் யாதொரு இல்லிடமில்லாமல் தம்மை விருந்துக்கு அழைத்த இடங்களில் சாப்பிட்டு அநேக விசை அங்கே தங்கியிருப்பார். அர்ச். லூக்காஸ் எழுதி வைத்ததுபோல இயேசுநாதரும் அவருடைய அப்போஸ்தலர்களும் பெத்தானியாவென்னும் ஊரில் பிரவேசித்தபோது மார்த்தம்மாள் தன் வீட்டுக்கு அவர்களை வரவழைத்தாள். இவளுடைய சகோதரியாகிய மரியம்மாளென்கிறவள் இயேசுநாதருடைய பாதத்தின் அருகே உட்கார்ந்து அவருடைய வாக்கியத்துக்குச் செவி கொடுத்துக்கொண்டிருக்கையில் மார்த்தம்மாள் விருந்துக்கு அவசரமானதெல்லாம் விசாரிக்கிறதிலே கவன கரிசனமாயிருந்தாள், (லூக். 10).

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—இந்தச் சமயத்தில் இவ்விரண்டு சகோதரிகளுடைய பிரியமும் தொழிலும் ஒன்றுக்கொன்று பொருந்தாமல் வித்தியாசமாயிருந்தாலும் அவர்கள் தங்களுக்குள் அன்னியோன்னியமாய் ஒன்றித்திருந்தார்கள். இவர்களுக்குள் மரியம்மாள் தியான யோகத்துக்கும் மார்த்தம்மாள் கருமயோகமாகிய புண்ணியக் கிரியைகளுக்கும் உருவகமாயிருந்தார்களென்று வேத வித்தியாபாரகர் சொல்லுகிறார்கள். இவர்கள் தங்களுக்குள் ஒற்றுமையாயிருந்ததைக்கண்டு நாமும் தியான யோகத்தையும் கரும யோகத்தையும் ஒன்றித்து அநுசரிக்கக்கூடுமென்று அறியக்கடவோம். ஆச்சரியத்துக்குரிய இந்த ஒன்றிப்பைத்தான் கலந்த சீவியமென்பார்கள். ஆனால் பிறசிநேகத்துக்கும் ஆத்துமாக்கள் ஈடேற்றத்துக்கும் அடுத்த அலுவல்களோடு, சங்கீதமாலை முதலிய சில பத்தி முயற்சிகளைச் செய்தால் இந்த ஒன்றிப்புக்குப் போதுமென்கலாமோ? இல்லை. பற்றாது. உலகத்தின் யாக்குசந்தடிகளின்மத்தியிலும் எவ்வித புறத்தி அலுவல்களைச்



செய்துவருவதிலும் நமது கருத்தும் பற்றுதலும் சர்வேசுரனோடு ஒன்றித்திருக்கப் பழகினால் மாத்திரம் கலந்த சீவியமென்கிற இந்தப் பேர் செல்லும்.

**மனப்பற்றுதல்.**—இந்த ஆச்சரியமான ஒன்றிப்பை நாம் அநுசரிக்க இஸ்பிரீத்துசாந்துவானவர் நமக்குப் படிப்பித்தருளவேணுமென்று மன்றாடுவோமாக.

**பிரதிக்கினை.**—இடைவிடாமல்நம்மைச் சர்வேசுரனோடு ஒன்றிக்கச் செய்கிற சில' மனவல்லய செபங்களை வாடிக்கையாய்ச் சொல்லிவரும்படி அப்பியாசம்பண்ணுவோமாக.

## 2-ம் பிரிவு

### மார்த்தம்மாள் மரியம்மாள்பேரில் சொன்ன முறைப்பாட்டுக்கு இயேசுநாதர் கொடுத்த மறுமொழி.

**தியானம்.**—அசனநேரமாகிறவரையில் மரியம்மர்ள் இயேசுநாதருடைய பாதத்தில் உட்கார்ந்து அவருடைய திவ்விய வாக்கைத் தன்னாத்துமத்துக்குப் போசனமாக அருந்தி மதுரமான தியானசாந்தி அடைந்திருந்தாள். மார்த்தம்மாளோவெனில் வீட்டு அலுவல்களில் முழுதும் அமிழ்ந்தி வெகு கவலையோடு பல காரியங்களைத் தயார் பண்ணிக்கொண்டிருந்தாள். அப்படியிருக்கத் தனக்கு உதவிசெய்ய மரியம்மாள் எழுந்து வராததைக் கண்டு இயேசுநாதரிடத்தில் முறையிட்டு: சுவாமீ என் சகோதரி நான் தனியே வேலைசெய்யப் பார்த்துக்கொண்டிருக்கிறதைத் தேவரீர் கவனிக்கவில்லையோ? அவள் எனக்கு ஒத்தாசை செய்யக் கற்பித்தருளுமென்று மன்றாடினாள். அதற்கு இயேசுநாதர் பிரத்தியுத்தாரமாகத் திருவுளம் பற்றினதாவது: மார்த்தா, மார்த்தா, நீ அனேக காரியங்களைப்பற்றிக் கலங்கிச் சங்கடப்படுகிறாய். ஆகிலும் அவசரமானதெல்லாம் ஒரே காரியந்தான். மரியம்மாள் உத்தமமான பங்கைத் தெரிந்துகொண்டாள். அது அவளிடத்தினின்று எடுபடாதென்றார். (லூக். 10.)

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—நமது ஆண்டவர் வசனித்த இந்த வாக்கியங்களையெல்லாம் கவனமாய் ஆராய்ந்து பார்க்கக்கடவோம். நீ பல காரியக்

கவலைகளால் சங்கடப்படுகிறாய் என்கிறார். இந்தக் கண்டிப்பு பத்தி வைராக்கியமுள்ள சந்நியாசிகளுக்குள்ளே முதலாய் எத்தனையோ பேருக்குச் செல்லும்! ஏனெனில் அவர்கள் தங்களுக்குப் புறத்திப்பட்ட அலுவல்களில் தலையிட்டுக்கொண்டு தங்கள் கடமைகளை ஆத்திர படபடப்போடு செய்து தாங்கள் கைதொட்ட வேலை எங்கே உருப்படாமல் போகிறதோவென்று கலங்கி நிற்கிறார்கள். இயேசுநாதசுவாமி செய்த இந்தக் கண்டிப்பு உனக்கு எவ்விதத்திலுஞ் செல்லுமோவென்று பார்த்துத் திருத்த வேண்டியதைத் திருத்திக்கொள். மேலும் ஒரே காரியம் அவசரமென்கிறார். இதற்கு அர்த்தமென்னவென்றால் உலகத்திலிருக்கிறவர்களுடைய அந்தந்த அந்தஸ்துக்குத் தக்கது அனேகானேக காரியங்கள் ஏறத்தாழ அவசியமென்பது மெய்யாயினும், தன் கடைசிக் கதியாகிற ஆத்தும இரட்சணியத்தை அடைய விரும்புகிறவனுக்கு ஒன்றுமாத்திரம் அவசியமாம். அதாவது தன் ஆத்தும ஈடேற்றம் நிச்சயமாகும்படி உழைப்பதுதான். ஏனென்றால் அர்ச். அகுஸ்தீனார் சொல்லியிருப்பதுபோல நமது பிரயாசமில்லாமல் நம்மை உண்டாக்கின சர்வேசுரன் நமது பிரயாசமில்லாமல் நம்மை இரட்சிக்கமாட்டார். ஆகையால் மற்ற எந்தக் கவலையையும்விட உன் இரட்சணியக் கவலை உனக்கு ஏககரிசனமாயிருக்க வேண்டியது. உனக்கு இப்படியிருக்கிறதோ? அதிகாலையில் நீ கண் விழிக்கும்போது உனக்கு வருகிற முந்தின நினைவும் இரவில் நீ கண் அயர்ந்து தூங்கப் போகும்போது வருகிற கடைசி நினைவும் இதுவோவென்று பார்.

மரியம்மாள் உத்தமமானதைத் தெரிந்துகொண்டாள்; அது அவளிடத்தில் நின்று எடுபடமாட்டாதென்கிறார். மரியம்மாள் தெரிந்துகொண்ட தியானயோகத்தை இயேசுநாதசுவாமி அதிக உச்சிதமானதென்பது ஏன்? ஏனென்றால் முதலாவது புண்ணியக் கிரியையானது எப்போதும் நிலையாமல் ஒரு காலத்தில் முடியும். தியானயோகமோவென்றால் ஒருபோதும் முடியாமல் நிலைநிற்பதுமல்லாமல் மோட்சத்திலும் அதுவே நமக்கு நித்திய ஆனந்தமாகும்.



ஏனெனில் மோட்சத்தில் உன்னத தேவ இலட்சணங்களை நித்தியமுந் தியானித்துப் பார்ப்பதே முத்திப்பேறு பெற்றவர்களுடைய பாக்கியமாமே. 2-வது, சர்வேசுரனுடைய அளவற்ற நன்மைத்தனத்தை வெளியாக்கி நமது இருதயத்தில் அவருடைய சிநேகத்தை மூட்டி, எதுக்கும் அஞ்சாத ஞான வீரசூரத்தையும் மனத்தாராளத்தையும் நமக்குத் தருவதுந் தியானமாமே. இதைப்பற்றியல்லோ இயேசுநாதர் கபாலமலையிலே சிலுவையில் அறையப்பட்டிருந்தபோது அங்கே மார்த்தம்மாள் இல்லாதிருக்க மரியம்மாள் மாத்திரம் அஞ்சாத் துணிவோடு நின்றதாகக் காண்கிறோம். ஆகிலும் நாம் அந்தந்தக் கடமைகளை நிறைவேற்றவேண்டியபோது அவைகளை விட்டுத் தியானம் என்கிற மதுர இளைப்பாற்றியைத் தேட நினைக்கிறது பெருங் குருட்டாட்டம். ஒவ்வொரு காரியத்துக்கும் அதற்குத் தக்க நேரமுண்டென்று வேதவாக்கியத்தில் சொல்லியிருக்கின்றது. சர்வேசுரனைப்பற்றியே சர்வேசுரனை அடிக்கடி விட்டுப்போகவேண்டுமென்று கிறீஸ்துநாதர் அநுசாரத்திலுஞ் சொல்லியிருக்கிறதறிவோம். இதற்கு அர்த்தம் ஏதென்றால் கடமையான வேலைகளையும், பிறசிநேகம், ஆத்தும ஈடேற்றம் இவைகளுக்கடுத்த காரியங்களையும் பார்க்கவேண்டியபோது செபத்தியானங்களை நிறுத்திவைக்கவேணும். மீளவும் புறத்திக் கவை காரியங்கள் எவ்வளவுதான் பராக்குக்கு உரியவைகளாயிருந்தபோதிலுஞ் சுத்த கருத்தினாலுஞ் சிறு மனவல்லயச் செபத்தினாலும் நாம் எப்போதும் சர்வேசுரனோடு ஒன்றித்திருக்கலாம். இடைவிடாமல் செபம்பண்ணவேணுமென்று இயேசுநாதர் கொடுத்த கற்பனைக்கு இதுவே கருத்து. இந்த மகத்தான போதனைக்கு உன் நடத்தை ஒத்திருக்கப் பிரயாசப்படுகிறாயோ?

**சம்பாஷணை.**—திருச்சபையில் பேர்போன சாஸ்திரியான அர்ச். எரோணிமுஸ் என்பவரோடு சம்பாஷணை செய்து, அவரைப்போல் தியானமும் கர்மமும் ஒன்றாய்க் கலந்த சீவியத்தில் உத்தமதனம் அடையும்படி அவருடைய சனுவைக்கேள்.

# 29-ம் தேதி

## உலோபியான ஒரு ஐசுவரியன் உவமை

### ஐசுவரியத்தினால் வரும் நிர்ப்பாக்கியமும் ஆபத்தும்

ஆயத்தச் சிந்தனை.—எவ்வித உலோபித்தனத்தையும் சாக்கிரதையாய் வெறுத்துத் தள்ளுங்களென்று இயேசுநாதர் சொல்லுகிறதைக் கேட்கிறதாக ரூபிகரித்துக் கொள்.

தியானச் செபம்.—தரித்திரமென்கிற வார்த்தைப் பாட்டின் கடமைகளை மிகவும் மதித்து அதைச் சுமுத்திரையாய் நிறைவேற்ற வரப்பிரசாதங் கேள்.

## முதல் பிரிவு

### ஐசுவரியம் மனுஷனைப் பாக்கியவானாக்க மாட்டாது

தியானம்.—ஒருநாள் இயேசுநாதசுவாமி தம்மைச் சூழ்ந்துவந்த திரளான சனங்களுக்கு உபதேசித்துக்கொண்டிருக்கையில் சபை நடுவே ஒருவன் எழுந்து: போதகரே, என் சகோதரன் என்னோடு காணியாட்சிகளைப் பங்கிட்டுக் கொள்ளச் சொல்லுமென்றான். அதற்கு இயேசுநாதர் பிரதியுத்தாரமாக: உங்களுக்குள்ளே நம்மை மத்தியஸ்தனாக நியமித்ததாரென்று கேட்டார். பின்னும் சனங்களை நோக்கி: உலோபித்தனம் உங்களை அண்டாதபடி சாக்கிரதையாயிருங்கள். ஏனென்றால் ஒருவன் எம்மாத்திரம் ஆஸ்திவந்தனாயிருந்தபோதிலும் அவனுடைத்தாயிருக்கிற ஐசுவரியம் அவனுடைய உயிரைத் தாங்காதென்றார் (லூக். 12).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இரண்டு சகோதரருக்குள் அவர்களுடைய சுயநலத்தைப் பற்றி வந்த வியாச்சியத்தில் இயேசுநாதர்சுவாமி தாம் பிரவேசிக்கமாட்டோமென்றதினால் நமக்குப் படிப்பிக்கிறதென்னவெனில் முந்த முந்த நாம் புறத்தியாருடைய லௌகீக காரியங்களிலே கலந்துகொள்ளாமல் ஞானக்காரி



யங்களிலேமாத்திரம் நோக்கமாயிருக்கவேணும். இந்தப் புத்தியை நீ அனுசரித்து வருகிறாயோ? இரண்டாவது ஐசுவரிய அவாவினால் உண்டாகும் வியாச்சியங்களைக் காணும்போது, லௌகீக நன்மைகள் சுத்த சூனியமென்று சனங்கள் கண்டுணரும்படி அது நமக்கு உயிர் தருகிறதில்லையென்றும், இருக்கிற உயிரை நீளிக்கப்பண்ணாதென்றும், நம்மைப் பாக்கியவான்களாக்காதென்றும், சாவினால் ஒரு க்ஷணத்தில் நம்மை விட்டு அகன்றுபோமென்றும் மனதில் நன்றாய்த் தைத்திறங்கும்படி சொல்லிக்காட்டக் கடவோம். இந்தச் சத்தியத்தை எத்தனையோபேர் அறியாமலுங் கனவில் முதலாய் நினையாமலும் போகிறார்கள்! அவர்களெல்லாருடைய மனதிலும் இந்தச் சத்தியம் ஆழமாய்ப் பதியும்படி செய்வோமானால் எவ்வளவோ நன்மையாகும்! ஏனெனில் ஒருவனுடைய மனதில் இந்தச் சத்தியம் ஸ்திரமாயிருந்தால் அவனுடைய ஆசையும் முயற்சியும் பரலோக நன்மைகளைத் தாவித் தேடுவது எளிதாகும். பிறருக்கு இந்த நன்மையைப் பெறுவிக்கும்படி நீ படும் பிரயாசமென்ன?

மனப்பற்றுதல்.—மனுஷர் புத்தியைத் தெளிவித்து அவர்கள் மனதைத் திருப்பி அவர்களை அர்ச்சியசிஷ்டவர்களாக்கத்தக்க சமர்த்தையும் வரப்பிரசாதத்தையும் சர்வேசுரனிடத்தில் கேள்.

பிரதிக்கினை.—நித்தியமல்லாததெல்லாம் சுத்த சூனியமென்று அர்ச். அகுஸ்தீனார் சொன்னதை ஆஸ்தியின் மேல் ஆவலாகிய பைத்தியங்கொண்டவர்களுக்கு அடிக்கடி நினைப்பூட்டு.

## 2-ம் பிரிவு

### உலோக ஆஸ்திபாஸ்தி நம்மைப் பாக்கியர்களாக்காமல், நிர்ப்பாக்கியர்களாக்குகிறது

தியானம்.—திரவியமானது, வியர்த்தமென்று யாவரும் அதிக நன்றாய்க் கண்டுபிடிக்கத்தக்கதாக இயேசுநாதர் சொன்ன உவமையாவது: ஆஸ்திக்காரான் ஒருவனி

ருந்தான். அவன் தன் காணி பூமியில் வெகு வெள்ளாண்மை விளைந்ததைக்கண்டு இந்தப் பலன்களைக் கட்டிவைக்க இடமில்லையே, என்னசெய்வேன் என்று தனக்குள்ளே யோசித்து: சரி, இதோ நான் செய்யப்போகிறது: என் களஞ்சியங்களை இடித்து இன்னம் பெரிதாய்க்கட்டி அதிலே என் தானியதவசங்களை எல்லாங் கொட்டி வைப்பேன்; பிறகு என் ஆத்துமத்தைப்பார்த்து: ஓ! என் ஆத்துமமே, அனேக வருஷங்களுக்கு வேண்டிய சம்பத்து உனக்குக் குவித்துவைத்திருக்கிறேன். நீ சுகமாய் இளைப்பாறிக் குடித்து நல்லவிருந்தாடலாமென்பேன் என்றான். ஆனால் சர்வேசுரன் அவனைப்பார்த்து: மதிகெட்டவனே, இன்று இராத்திரியே உன் ஆத்துமத்தை உன்னிடத்திலிருந்து பறிக்க வருவார்களே; அப்போது நீ குவித்து வைத்ததெல்லாம் யாரைச் சேரப்போகிறதென்று கேட்டார். இப்படிச் சர்வேசுரனிடத்தில் ஐசுவரியவானாயிராமல், தனக்கே திரவியத்தைச் சேர்த்துவைக்கிறவன் இவ்விதமாயிருக்கிறானென்றார் (லூக். 12).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இங்கே வருணிக்கப்பட்டதும், பிரலாபத்துக்குரியதுமான ஸ்திதியானது உலோபியான ஐசுவரியனுக்குமல்லாமல் பண ஆவலால் தவிக்கிற சகலருக்கும் பொதுவாமே. இப்பேர்க்கொத்தவர்கள் மெய்யாகவே நிர்ப்பாக்கியவான்கள். இவர்கள் சீவியகாலமெல்லாம் ஆகாசத்தில் கோட்டைகட்டுவதிலும், பல கவலை யோசனைகளிலும், கஷ்டமான பயணங்களிலும் கழிந்துபோகின்றது. பின்னும் அவர்கள் என்ன செய்வோம், எவ்வளவு தூரம்போவோம், என்ன திட்டம் பண்ணுவோம் என்று இரவும் பகலும் ஓயாத கவலை கொண்டு ஏக்கம் பிடித்துத் திரிகிறதினாலே அவர்களுடைய ஏக்கம் ஒட்டிக்கு இரட்டியாய்விடுகிறது. பின்னுந் தங்களுக்கு நஷ்டம் வருமென்கிற நினைவினாலே கலங்கித் திகைப்பார்கள். அப்படி யாதொரு சேதபாதகம் வந்தால் மனம் நொந்துபோக நித்திரை ஒழியும். அனேகானேகமுறை அவநம்பிக்கையும் வந்துகூடும். ஆகையால் அவர்களுக்கு இளைப்பாற்றி என்பதே கிடையாது. ஒருகாரி



யத்தைச் சந்தோஷமாய்ச் சுகித்து அனுபவிப்பதும் அபூர்வமாயிருக்கும். சேர்த்து வைத்ததுக்கு அளவாய்க் கலக்கமும் ஏக்கமும் வளர்ந்துகொண்டேயிருக்கும். கடைசியாய் அதினால் இளைப்பாற்றி சுகத்தை அடையலாமென்றிருக்கையில் சாவு அசுப்பில் வந்து அவர்களைக் கொண்டுபோகும். அப்போது எல்லாம் அவர்களை விட்டுப் பறந்துபோக அவர்களுக்கு மூடுசீலைமாத்திரம் நிலைக்கும்.

மனப்பற்றுதல்.—இப்பேர்க்கொத்த துன்ப துரிதமில்லாத அந்தஸ்திற்குச் சர்வேசுரன் நம்மை அழைத்ததற்காக அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ்செய்து நாளையென்கிற கவலையில்லாமலுஞ் சாவுக்கு முதலாய் அஞ்சாமலுஞ் சர்வேசுரன் கொடுத்ததே போதுமென்று சந்தோஷமாய்ச் சீவிப்போமாக.

பிரதிக்கினை.—நற்கிரியையினாலும், தேவ ஊழியத்தில் சுறுசுறுப்பினாலும் நம்முடைய நன்றியறிதலைக் காண்பிப்போமாக.

## 3-ம் பிரிவு

### ஆஸ்திபாஸ்தி அநேகமாய் மனுஷனை நித்தியந்துக்கும் நிர்ப்பாக்கியவானாக்குகிறது

தியானம்.—ஆஸ்திபாஸ்தி வெகுபேர்களுக்கு ஆத்தும கேடாயிருப்பதினாலே அதை நாம் அதிகமதிகமாய் பிறக்கணித்துத் தள்ளவேணும். ஆஸ்தி சம்பத்து தன்னிலே பொல்லாப்பற்றதாயினும் நானாவித தாறுமாறுகள் உண்டாவதற்குக் காரணமாயிருக்கிறது. அது சர்வேசுரனையும் மோட்சத்தையும் நோக்கி நம்முடைய நினைவை நாடவொட்டாது. பத்தி உணர்ச்சிகளையெல்லாம் அமுக்கிப்போடும். வேத கடமைகளையெல்லாம் அசட்டைபண்ணிச் சன்னஞ்சன்னமாய் லோபித்தனம், அநியாயம், போசனப்பிரியமுதலியவற்றைப் பிறப்பித்து காமத்தைத் தூண்டி மனதைக் கல்லாக்கிக் கடைசியாய் அவலமான சாவை வருவிக்கும். இதினாலன்றோ இயேசுநாதசுவாமி ஆஸ்திக்காரரைப் பார்த்து: ஐயோ உங்களுக்கு கேடு! என்றும், ஆஸ்திக்

காரர் சர்வேசுரனுடைய இராச்சியத்திலே பிரவேசிக்கிறது மகா அருமையென்றுஞ் சொன்னார் (லூக். 6, 18). ஏனென்றால் அர்ச். சின்னப்பர் சொல்லியபடி ஆஸ்திக்காரரா யிருக்க ஆசைப்படுகிறவர்கள் பசாசினுடைய கண்ணியிலே விழுவார்கள் (1 திமோ. 6).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நீ கொடுத்த தரித்திர வார்த்தைப்பாட்டினாலே இந்தப் பயங்கரமான ஆபத்துக்குத் தப்பியிருக்கிறாய். இதைப்பற்றி நீ களிகூர்வது ஞாயந்தான். ஆகிலும் நீ கொடுத்த வார்த்தைப் பாடே உன்னை இரட்சிக்குமென்றும், இயேசுநாதசுவாமி தந்தருளுவோமென்று சொன்ன சிறந்த சம்பாவனைகளை உனக்குத் தப்பாமல் பெறுவிக்குமென்றும் நினையாதே. நீ இதை அடையவேண்டுமானால் அந்த வார்த்தைப் பாட்டின்படியே பிரமாணிக்கமாய் நடக்கவேணுமென்று அறிந்துகொள். ஆகையால் நீ சேர்ந்திருக்கிற சபையின் சட்ட திட்டத்துக்கு ஒத்தவண்ணம் தரித்திரத்துக்கடுத்த ஒழுங்குகளையெல்லாம் சரிவர நிறைவேற்றக்கடவாய்.

சம்பாஷணை.—பரிசுத்த திருச்சபைக்கும் சகல விசுவாசிகளுக்கும் விசேஷ பாதுகாவலான அதிதூதராகிய அர்ச். மிக்கேலோடு சம்பாஷணை செய்.

---

## 30-ம் தேதி

### சடுதி மரணத்தின்பேரில்

ஆயத்தச் சிந்தனை.—நீங்கள் நினையாத வேளையில் மனுமகன் வருவாரென்று இயேசுநாதர் சொல்லுகிறதைக் கேட்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

தியானச் செபம்.—மனச்சமாதானத்தோடு பாக்கியமாய் மரிக்கும்படி வேண்டிய வரங்கேட்பாயாக.



### முதல் பிரிவு

#### அசுப்பிலும் நினையாத நேரத்திலும் வரும் மரணம்

தியானம்.—உலோபியான ஆஸ்திக்காரனைக் குறித்தும், விசேஷமாய் அவனுக்கு அசுப்பில் வந்த அவல மரணத்தைக் குறித்தும் இயேசுநாதர் சொன்ன உவமையைக் கேட்ட சனங்களெல்லாரும் மிகவும் பயந்து திடுக்கிட்டிருந்தார்கள். சடுதிமரணம் வராதபடி எச்சரிக்கையாயிருக்கவேணுமென்று அவர்களுக்கு நல்ல புத்தி கற்பிக்க இதுவே சமயமென்று இயேசுநாதர் கண்டு அவர்களை நோக்கி: நீங்கள் நினையாதிருக்கும்போது மனுமகன் வருவாரென்கிறதினாலே எப்போதும் ஆயத்தமாயிருங்களென்றார். உள்ளபடியே அசுப்பில் சாகிறது அபூர்வமான சங்கதியல்லவே. ஆயினும் சடுதி மரணத்தைப் பெரும் நிர்ப்பாக்கியமென்கலாமோ? இல்லை; பரிச்சேதமில்லை. அதுவும் ஒரு தேவ அநுக்கிரகமென்றே சொல்லவேணும். அநேக மகாத்துமாக்களும் இந்த அநுக்கிரகந் தங்களுக்குக் கிடைக்கவேணுமென்று சுவாமியை நோக்கி மன்றாடியிருக்கிறார்கள். ஏனென்றால் வருத்தப்பட்டு நெடுநாள் அவஸ்தையாயிருக்குஞ் சமயங்களில் பசாசு மனுஷனை வெகுவாய்ச் சோதிக்கிறபடியால் அதினுடைய போராட்டத்துக்குத் தப்பித்துக்கொள்ளும்படி இப்படிப் பிரார்த்தித்திருக்கிறார்கள். ஆகையால் சடுதிமரணம் தன்னிலே பயங்கரத்துக்குரியதல்ல. யாதொரு ஆயத்தமுமின்றி அசுப்பில் சாகிறதுதான் பயங்கரமான காரியம். சாவான பாவத்தோடு திடீரென்று இருந்தாற்போல சாகிறவனுடைய ஸ்திதி இப்போர்க்கொத்தது. இதைப்பற்றித்தான் அசுப்பிலே வருந் துர்மரணத்திலே நின்று எங்களை இரட்சித்துக்கொள்ளுஞ் சுவாமியென்று பிரார்த்தனையில் சொல்ல திருச்சபை கட்டளையிட்டிருக்கிறது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இந்தச் செபம் பலிக்கவேணுமென்று ஆசிப்பவன் செய்யவேண்டியதென்ன? மனதறிய ஒருபோதும் சாவானபாவ அந்தஸ்தி

விருக்கப்படாது. அதாவது ஒருவேளை நிர்ப்பாக்கியமாய் யாதொரு சாவானபாவத்தில் விழுந்தால் உடனே எழுந்து சர்வேசுரனோடு சமாதானமாய்ப் போவதற்குத் தாமதிக்கலாகாது. இப்படித் தாமதிப்பது அவிவேகத்துக்கெல்லாம் அவிவேகம். நீ எப்போதாகிலும் இவ்விதமாய் நடந்ததில்லையோ?

மனப்பற்றுதல்.—இப்பேர்க்கொத்த குற்றம் நீ எப்போதாகிலும் கட்டிக்கொண்டிருந்தாயானால் உனக்குச் சொரணையும், நல்லபுத்தியும் வந்து நீ மனந் திரும்பும்வரையில் சர்வேசுரன் தமது இரக்கத்தினாலே பொறுமையோடு காத்திருந்ததற்காக அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்து, இனிமேல் எப்போதும் அவருடைய திவ்விய சிநேகத்தில் நிலைத்திருக்க வரங் கேள்.

பிரதிக்கினை.—சாவானபாவத்தில் விழும்படியான நிர்ப்பாக்கியம் உனக்கு நேரிட்டால், மனந்துடித்துத் தாமதமில்லாமல் சர்வேசுரனோடே சமாதானமாய்ப் போகக்கடவாய்.

## 2-ம் பிரிவு

### தகுந்த ஆயத்தத்தோடிருக்கையில் வரும் சடுதி மரணம்

தியானம்.—சர்வேசுரனுக்குப் பத்தி பிரமாணிக்கமாய் ஊழியஞ்செய்த புண்ணியவான் ஒருவன் திடீரென மரித்து, மரித்தக்ஷணமே இப்பிரபஞ்ச லோகத்தைவிட்டு தேவலோகத்தில் பிரவேசித்தால், அதின் உன்னத காட்சி அவனுக்கு எப்படியிருக்குமென்றால், பிறவிக்குருடன் ஒருவனுக்குத் திடீரெனப் பார்வை வந்தால் இவ்வுலோக அலங்காரக் காட்சி எப்படியோ அப்படியென்கலாம். இவ்வுலக காட்சி எவ்வளவுதான் ஆச்சரியத்துக்குரியதாயினும் நீதிமானுடைய ஆத்துமம் சர்வேசுரனையும் அவருடைய அளவற்ற சௌந்தரிய சோபனத்தையும் தரிசிக்கிறபோது உணர்கிற ஆச்சரிய சந்தோஷப் பரவசத்துக்குமுன் இது பரும்படியாய் வரையப்பட்ட சித்திரப்பாவை என்னத்தகும். ஏனென்றால் சர்வேசுரனைப்பற்றித்தான் அந்த ஆத்துமம்



உதாரமான மனதோடு எல்லாத்தையும் இழந்து, எல்லாத்தையும் பலியாக ஒப்புக்கொடுத்து, அவருடைய ஊழியத்தில் அநேகாநேக வருஷம் செலவழித்து அவருக்காகவே வெகு தாழ்மையையும், சிறுமை வறுமையையும், துன்பப்பாடுகளையும் பொறுமையாய்ச் சகித்துவந்தது. சுவாமிக்கே பயந்து எள்ளளவும் அவருக்குத் துரோகம்பண்ணாதபடி எச்சரிக்கையாய் நடந்தது. அதின் ஆசைப் பற்றுதல்களெல்லாம் அவரை நோக்கித் தாவ, அதின் கிரியைகளெல்லாம் அவரைக் குறித்தே செய்யப்பட்டன. செல்வத்திலுஞ் சிறுமையிலும் அவரை ஆராதித்து, வாழ்த்தி அவருடைய மகிமைப் பிரதாப வாசஸ்தலத்தில் அவரைத் தெரிசிக்கிற நேரம் எப்போது வருமோவென்று பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்தது. கடைசியாய் அந்த நேரம் வரவே, திவ்விய பத்தாவானவர் அந்த ஆத்துமத்தைப் பார்த்து: என் பத்தினியே, உனது மோட்ச முடியைப் பெற்றுக்கொள்ள வா. உன் ஆண்டவராகிய சர்வேசுரனுடைய ஆனந்த சந்தோஷ வெள்ளத்தில் பிரவேசியென்கிற இன்பமான தொனியைக் கேட்டது!

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இந்த மரணம் இவ்வளவு ஆனந்தமாயிருக்க, இதற்கு நாம் பயந்து நடுங்குவதேன்? மரண அவஸ்தையின்றி ஒரு நொடியில் இவ்வளவு பரமானந்தத்தை நமக்குப் பெறுவிக்கிற சடுதி மரணத்தை ஒரு துர் அதிஷ்டமென்று நினைப்பது ஏற்குமோ?

மனப்பற்றுதல்.—ஆண்டவரே, தேவரீரிடத்தில் நான் எப்போது வருவேன்? தேவரீரை முகமுகமாய் நான் எப்போது தரிசிப்பேனென்று தாவீது இராசாவைப்போல் நீயுஞ் சொல்லிச் சர்வேசுரனைக் கண்டு அவருடைய பேரின்ப பாக்கியத்தைச் சுகித்திருக்கவேணுமென்று உன் மனதில் ஆசை எழுப்பக்கடவாய்.

பிரதிக்கினை.—சாவின் நினைவினாலே உண்டாகுஞ் சஞ்சல விசாரமெல்லாத்தையுந் தூரத் தள்ளிவிடு.

## 3-ம் பிரிவு

### நோய் அமர வருஞ் சாவின்பேரில்

தியானம்.—சாதாரணமாய் உலோகத்தில் நடந்து வருகிறதை உற்றுப் பார்த்தால் நீயும் மற்றவர்களைப் போலவே ஒன்றில் நாட்பட ஒன்றில் கொஞ்சநாள்மாத்திரம் வியாதியாயிருந்து சாவாயென்கலாம். ஆகையால் தேவ சித்தத்துக்கு அமைந்து ஏறத்தாழ உதவியில்லாமல், ஒண்டியாய் வருத்தப்படவும், விசேஷமாய் வெகு காரியங்களைச் சகித்துக்கொள்ளவும், ஆயத்தமாயிருக்கவேணும். நீ சந்நியாசிகள் மடத்திலே வசித்து வியாதியாய் விழுந்தால் அதிலிருக்கிற சந்நியாசிகள் பட்சத்தோடு உன்னை விசாரித்த போதிலும் அவர்களுக்குப் பல வேலை சோலியிருக்கிறபடியால் நீ ஆசிக்கிறபடி உன்னைப்பார்க்க வரவும் அற்பக் குறையில்லாமல் வேண்டிய சவரட்சணையெல்லாஞ் செய்யவுங் கூடாமற் போகும். மேலும் வியாதியினால் சரீரம் அசதியாயிருக்கும்போது வியாதிக்காரனை அறியாமலே அவனிடத்தில் வெடுவெடுப்பும் முறுமுறுப்பும் உண்டாகுமென்பது நாம் நாள்தோறும் கண்டுவருகிற காரியமல்லவோ?

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—சௌக்கியமாயிருக்கும்போது மற்றவர்களோடு எப்போதும் பேசிச் சிரித்துத்திரியத்தேடாமல் ஏகாந்தத்திலிருக்க ஆசைப்பட்டு, சர்வேசுரனோடுங் காவலான சம்மனசு முதலிய அர்ச்சியசிஷ்டவர்களோடும் பழகிச் சம்பாஷணை செய்துகொண்டுவரக் கற்றுக்கொள். உனக்கு அநேக காரியங்கள் குறைபடும்போதும், உன்னைப் பிறத்தியார் மறந்து, உனக்குச் செய்யவேண்டிய உதவியைச் செய்யாமல் அசட்டையாயிருக்கிறதுபோல் தோன்றும்போதும் நீ பொறுமையோடு இவைகளைச் சகித்துக்கொள். அப்போது தான் நீ மெய்யாகவே பாக்கியவானாயிருப்பாய். இதுவரையில் நீ பொறுமையாயிருக்கப் படியாதிருந்தாலும், இனிமேல் வியாதியின் உபத்திரவத்தினாலே நீ படுத்த படுக்கையில் கிடக்க நேரிடுமுன் பொறுமையைக் கற்றுக்கொள். அல்லாதேபோனால் நீ நிர்ப்பாக்கியவானாயிருப்பதுமன்றி



வியாதிவேளையிலே உன் நடத்தை பிறருக்கு நன்மாதிரிகையாயிராதென்றும் நினைக்கவேண்டியது. ஆகையினாலே உனக்குக் குறைவாயிருக்கிறதேதென்று நினைத்துப் பார்த்து, உனக்கு வரும் வியாதியினாலே உன் ஆத்துமத்துக்கு ஞானப்பிரயோசனமும், பிறருக்கு நன்மாதிரிகையும், உன்னை விசாரிக்கிறவர்களுக்கு ஞானச் சந்தோஷமும் உண்டாக இப்போதுதானே வெகு அக்கறையோடு செய்யவேண்டியதென்னவென்று பார்.

சம்பாஷணை.—நல்லமரணத்துக்குப் பாதுகாவலான அர்ச். சூசையப்பரோடு சம்பாஷணை செய்.

# அக்டோபர் மாதம்

## முதல் தேதி

### பதினெட்டு வருஷம் வியாதியாயிருந்த ஒரு ஸ்திரியை இயேசுநாதர் குணப்படுத்தினதின் பேரில்

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதர் அவள்பேரில் கையை நீட்டி அவளுக்கு ஆரோக்கியங் கொடுக்கிறதைப் பார்க்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

தியானச் செபம்.—அவர் என் ஞான வியாதிகளைக் குணப்படுத்தவேணுமென்று கேட்பேன்.

### முதல் பிரிவு

**வியாதிகொண்ட இந்த ஸ்திரீயினுடைய நிர்ப்பாக்கியத்தின் பேரில்**

தியானம்.—இயேசுநாதர் அடிக்கடி போக வர இருந்த பெத்தானியா ஊரைவிட்டுப் புறப்பட்டுத் தாம் சென்ற இடங்களில் சுவிசேஷத்தைப் போதித்து, அடி வைத்த இடமெல்லாம் தமது நன்மை சகாயங்களை விதை தெளித்தாற்போல் தெளித்துக்கொண்டு போனார். இப்படியாய் ஓய்வு நாளான ஒருநாள் செபக்கூடத்திலே பிரசங்கித்துக்கொண்டிருக்கும்போது வெகு உபத்திரவப்பட்டுக் கொண்டிருந்த ஒரு பெண்பிள்ளையை இயேசுநாதர் குணப்படுத்தினார். அர்ச். லூக்காஸ் சொல்லியிருக்கிறப்போல அவளிடத்திலே பசாசு ஆவேஷமேறிப் பதினெட்டு வருஷமாய் அவள் வியாதிப்பட்டுக் கூன்தள்ளிச் சுத்தமாய் மேலே நிமிர்ந்து பார்க்கக் கூடாதவளாயிருந்தாள். (அதி. 13.)

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—பசாசினால் இந்தப் பெண்பிள்ளைக்கு வந்த நிர்ப்பாக்கிய ஸ்திதியையுந் துன்பத்தையும் பார்க்குமிடத்தில் நமக்கு இரக்கமுண்டாகிறதல்லவோ? ஆகிலும் எண்ணிக்கையில்லாத கிறீஸ்துவர்களை லோபித்தனமும், மோக ஆசையுங் கொண்ட



பசாசு படுத்திவைக்கும் பாடுகளுக்குமுன்னே இவளுடைய உபத்திரவ வேதனையெல்லாம் வெகு சொற்பமென்று சொல்லவேணும். பசாசு அவர்களுடைய ஆசை நினைவெல்லாம் உலகத்தின்பேரிலும், சிற்றின்பத்தின்பேரிலும் கவிழ்ந்திருக்கும்படி செய்கிறதினாலே அவர்கள் மோக்ஷத்தைப்பற்றி நினைக்கக்கூடாமற்போகிறார்கள். சர்வேசுரனையும், தங்கள் கடைசிக் கதியான மோக்ஷானந்தத்தையும், அது தவறினால் வரும் பயங்கரத்துக்குரிய நரக வேதனையையும்பற்றி யோசிக்க அவர்களுக்குக் கருத்து வராது. மேலும் புண்ணிய வழியில் சுறுசுறுப்பாய் நடந்துவர வேண்டிய சந்நியாசியைச் சோம்பேறிப் பசாசு கெடுத்து இலௌகீகனுக்குகிற மேரையை இதினால் ஓர்விதத்தில் கண்டுகொள்ளலாம். இப்போர்க்கொத்தவன் சர்வேசுரனிடத்தில் தன் புத்தியைச் செலுத்தவும், கொஞ்சநேரமுதலாய் தெய்வ நினைப்பில் அமர்ந்து அமயவுந் திறமையில்லாதவனாய்ப்போவான். இவன் கருத்திலாவது நோக்கத்திலாவது மேன்மையும் பரலோகத்துக்கு அடுத்ததுமான யாதொன்றுமிராது. உலக கவலைகளிலும், நிசிதமான காரியங்களிலும், சரீரசுகத்துக்கடுத்த பற்றுதல்களிலும் கண்ணுக்குத் தெரியாத ஒரு கை தன்னைப் பிடித்து அமிழ்த்தி வைத்திருப்பதாக உணருவான். உன்னுடைய ஆத்துமமும் இவ்வித அவலமான ஸ்திதியிலிருந்தால் உன்னை எவ்வளவோ நிர்ப்பாக்கியன் என்கவேண்டும்!

மனப்பற்றுதல்.—அசமந்தப் பேயின் மாய்கையில் நீ அகப்பட்டு மடியாதபடி வரங்கேள்.

பிரதிக்கினை.—தேவ ஊழியத்தில் நீ அசமந்தகுணமுள்ளவனாகாதபடி முந்தியே அதற்கு அஞ்சி அதை வெறுத்துத் தள்ளு.

### 2-ம் பிரிவு

**வியாதிக்காரி ஆரோக்கியம் அடைந்ததின்பேரில்**

தியானம்.—இயேசுநாதர் அந்தப் பெண்பிள்ளையைப் பார்த்து: பெண்ணாய்ப் பிறந்தவளே, உன் வியாதி உன்னைவிட்டு விலகிப்போச்சுதென்று சொல்லித் தமது திருக்

கையை அவள்பேரில் நீட்டின அந்த க்ஷணத்திலேயே அவளுடைய கூன் நிமிர்ந்துபோக, அவள் ஆண்டவருக்குத் தோத்திரஞ் செய்தாளென்று அர்ச். லூக்காஸ் எழுதிவைத்திருக்கிறார் (லூக். 13).

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—இந்த வியாதிக்காரி சௌக்கியமான இடத்தையும் நேரத்தையும் பத்தும் பத்தாய் யோசித்துப் பார்த்தால், இதில் வெகு நல்ல புத்திமதி படிக்கலாம். வாரந்தோறும் சகலருங் கூடிச் செய்யவேண்டிய ஞானமுயற்சிகளுக்குக் குறிக்கப்பட்ட தேவாலயத்திலும், அப்படிக் கூடுகிறதற்கு நியமிக்கப்பட்ட மணி நேரத்திலும், இந்தப் பெண்பிள்ளை ஆரோக்கியம் அடைந்தாள். இவள் தன் வியாதியினிமித்தம் தைரியக் குறைச்சலால் கோவிலுக்குப் போகப் பழக்கமில்லாதவளாயிருந்தால், திவ்விய இரட்சகரைக் காணும் பாக்கியம் இவளுக்குக் கிடைத்திருக்கமாட்டாது. தன்னுடைய சீவிய காலமெல்லாம் கூனியாகவே இருந்திருப்பாள். ஆகையால் மடத்தில் ஞான முயற்சிகள் நடக்கும்போது நாம் தவறாமல் அங்கே போகிறது எவ்வளவு முக்கியமான காரியம்! ஏனெனில்: எந்த ஞான முயற்சிகள் நடக்கும் வேளையில் சர்வேசுரன் நமக்குத் தம்முடைய விசேஷ வரங்களையும், தேவ வரப்பிரசாதங்களையுங் கொடுக்கக் காத்துக்கொண்டிருக்கிறாரென்று நமக்குத் தெரியாததினால், அவைகளில் ஒன்றிற்காகிலும் நாம் தவறிப்போனால் நமக்கு வெகு நஷ்டமுண்டாகிறதற்கு இடமாகும். அப்படியிருந்தும், வீணான அற்பப்போக்கை வைத்துக்கொண்டு நாம் ஞான முயற்சிகளுக்குப் போகாமலிருக்கிறதில்லையோ?

**மனப்பற்றுதல்.**—ஆரோக்கியமடைந்த அந்தப் பெண்பிள்ளையைப்போல் நாமும் மகா தாழ்ச்சி, நன்றியறிதல், அணைகடந்த நம்பிக்கை முதலிய குணங்களோடு தேவ ஊழியத்தில் நம்மைமுழுதும் நேர்ந்து ஆண்டவரை மகிமைப்படுத்துவோமாக.

**பிரதிக்கினை.**—மடத்திலே பத்தி முயற்சிக்காக எல்லாரும் கூடும்போது நாம் ஒருபோதும் பிந்திப் போகாமலிருக்கப் பிரயாசப்படவேணும்.



# 3-ம் பிரிவு

## கள்ள ஞானியான செபக்கூடத் தலைவன் காண்பித்த கோபம்

**தியானம்.**—அங்கே கூடியிருந்த சனங்கள் இயேசுநாதர் செய்த புதுமைகளைக் கண்டு மகா ஆச்சரியத்தோடு சந்தோஷப்பட்டிருக்கையில் பரிசேயர் வெகு விசனமடைந்திருந்தார்கள். இயேசுநாதருக்கு வந்த கீர்த்தி அவர்களுடைய கண்ணைக் குத்தினாற்போலிருந்தது. ஆகையால் அவருடைய மகிமையை மங்கடிக்கும்படியாய் பொறாமையினிமித்தம் தங்களுக்குத் தென்பட்ட உபாய தந்திரங்களையெல்லாங் கூச்சமில்லாமல் உபயோகித்தார்கள். ஆனதினால் தங்கள் சதியோசனைகளையெல்லாம் மேலான ஞான வைராக்கியமாகக் காட்டிச் சனங்களை ஏய்க்கப் பிரயாசப்பட்டார்கள். எப்படியென்றால், சுவிசேஷகர் சொல்வதுபோல செபக்கூடத் தலைவன் இயேசுநாதர் ஓய்வுநாளில் குணப்படுத்தினாரென்று கோபங்கொண்டு சனக்கூட்டத்தை நோக்கி: வேலைசெய்யவேண்டியதற்கு ஆறு நாளிருக்க, நீங்கள் சௌக்கியமடையவேண்டியிருந்தால் அந்த நாட்களிலே வரலாம்; ஓய்வுநாளிலே வராதேயுங்கள் என்றான். இப்படிச் சொன்ன அந்தக் கள்ள ஞானிக்கு அவமானம் அப்பொழுதே வந்தது. அது எப்படியென்றால் இயேசுநாதர் கூடியிருந்த சனங்களுக்குமுன்பாக அவனைப் பார்த்துச் சொன்னதாவது: கள்ள ஞானிகளே, உங்களுக்குள் எவனாகிலும் ஓய்வுநாளில் தன் எருதையாவது கழுதையையாவது தொழுவத்திலிருந்து அவிழ்த்துத் தண்ணீர்காட்டுகிறதில்லையோ? அப்படியிருக்க இதோ பதினெட்டு வருஷகாலமாய்ப் பசாசு தன் அடிமைத்தனத்தில் கட்டிவைத்துக்கொண்டிருந்த இந்த அபிரகாமுடைய குமாரத்தியை ஓய்வுநாளில் விடுதலையாக்கக்கூடாதோவென்றார். இந்த வார்த்தைகளைக் கேட்டு இயேசுநாதருடைய எதிரிகளெல்லாரும் வெட்கி நாணிப்போனார்கள் (லூக். 13).

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—எவ்வித கள்ள ஞர்னத்தையும் மூடியிருக்கிற முக்காடெல்லாம்

ஒருநாள் எடுபடுமென்கிறதினாலே இந்தத் துர்க்குணத்தை அரோசித்துத் தள்ளக்கடவோம். ஆகையால் யாதொரு வஞ்சனையுமின்றி நமது ஆத்தும குருவுக்கு நம்முடைய இருதயத்தை முழுதுந் திறந்து காண்பிப்போமாக. நேர்மையான மனதுள்ளவர்களோடு ஒன்றித்திருக்கப் பிரியப்படுகிற சர்வேசுரன் நமது ஆத்தும நோய்களையெல்லாந் தீர்த்துப் போடுவார்.

சம்பாஷணை.—நமது ஞான வியாதிகளையெல்லாங் குணப்படுத்துகிற பட்சநிறைந்த வைத்தியராகிய இயேசுநாதசுவாமியோடு சம்பாஷணை செய்வோமாக.

---

## 2-ம் தேதி

### காவலான சம்மனசுக்களின் திருநாள்

**ஆயத்தச் சிந்தனை.**—சின்னத் தோபியாஸ் இரபயேலென்கிற சம்மனசானவரோடு யாத்திரை செய்கிறதாக ரூபிகரித்துக்கொள்ளுகிறது.

**தியானச் சேபம்.**—நமது காவலான சம்மனசுவின் பேரிலே நமக்கு உண்மையும் ஸ்திரமுமான பத்தியுண்டாக வேணுமென்று கேட்போமாக.

### முதல் பிரிவு

#### நமது காவல் சம்மனசுவின் மகத்துவம்

**தியானம்.**—சர்வேசுரன் இவ்வுலகத்தில் நமக்குக் கிருபையாய்ச் செய்திருக்கிற உச்சிதமான உபகாரங்களுக்குள்ளே இரண்டு நன்மைகளை இங்கே விசேஷமாய்க் கவனிக்கக்கடவோம். முதலாவது, சம்மனசுக்களோடு நமக்குச் சமூதீத பிரயோசனமென்னப்படுகிற ஒரு ஞான சம்பந்தத்தை ஏற்படுத்தச் சித்தமானார். 2-வது, தேவ தரிசனையின் பேரின்ப பாக்கியமடைந்திருக்கும் இந்தச் சம்



மனசுக்களை நம்மில் ஒவ்வொருவருக்குங் காவலாயிருக்கும்படி கற்பித்தார். இதைப்பற்றியே உன் சகல வழிகளிலும் உன்னைக் காப்பாற்றும்படி சர்வேசுரன் தமது சம்மனசுக்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறாரென்று தாவீது இராசா பாடியிருக்கிறார் (சங். 60). ஆனால் காவலான சம்மனசுக்கள் யாரென்று கேட்பாயோ? அவர்கள் பரிசுத்த அரூபிகள்; தெய்வசாயலான சிருஷ்டிகள்; மனிதனுடைய புத்திக் கெட்டாத சௌந்தரியம், வல்லமை, இலகு, ஞானம், இவைகளெல்லாம் ஒருமிக்கக் கொண்டிருக்கிறவர்கள். அரசனுக்கும் அவனுடைய அரமனைக்குஞ் சாமாசிகளும் இராச்சியத்தின் பிரபுக்களும் எப்படிச் சம்பந்தப் பட்டிருக்கிறார்களோ, அப்படியே சர்வேசுரனுக்கும் அவருடைய மகிமைப் பிரதாபம் விளங்குகிற பரமண்டலத்துக்குஞ் சம்மனசுக்கள் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். இரவும் பகலும் என் அருகில் காவலாயிருக்கிற சம்மனசானவர் வானலோக அரமனையைச் சேர்ந்த பிரபுவானதினால், இவ்வுலகத்தில் மகா மகா வல்லமையுள்ள இராசாக்களையெல்லாம் பார்க்க அதிக மகத்துவம் பொருந்தியவராயிருக்கிறார்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—நான் இந்தச் சத்தியத்தை விசுவசித்திருந்தும் இதைக் கொஞ்சமாகிலும் நினைத்துப் பார்க்கிறதில்லை. தனித்திருக்கும்போது நான் யோசிக்கிறதையுஞ் செய்கிறதையும் பார்த்தால் ஒரு பிராணியும் என்கிட்ட இல்லாததுபோலும், ஒருவரும் என் வருத்தங்களையும் என் கிரியைகளையும் பாராததுபோலும் இருக்கிறேன். என்னுடைய விசுவாசம் அதிக தெளிவாயிருந்தால் எவ்வளவோ ஆறுதல் இன்பத்தோடு ஒருவரோடும் ஒப்பிடக்கூடாத இந்த உத்தம சிநேகிதனுடன் சகவாசமாய்ப் பேசிக்கொண்டிருப்பேன்! எப்படி என் மனக்கலக்கத்தையும் வருத்தத்தையும் அவருக்கு வெளிப்படுத்திச் சகல சந்தேகங்களிலும் அவருடைய யோசனையைக் கேட்டு, எனக்குவரும் இடையூறு தந்திரங்களில் பலமும் உறுதியுந் தந்தருளும்படி அவரைப் பிரார்த்திப்பேன்! அநேக மகாத்துமாக்கள் காவலான சம்மனசுக்கள்மட்டில் உயிருள்ள பத்திவிசுவாசப் பற்றுதல்

உள்ளவர்களாயிருந்தபடியினாலே அவர்களை முகமுகமாய்த் தரிசித்து அவர்களோடு அந்நியோந்நியமாய்ப் பேசிக்கொண்டிருக்கும் வரத்தை அடைந்தார்கள். விசேஷமாய் அர்ச். கமில்லார், பிரஞ்சீஸ்கம்மாள், ரோசம்மாள் இவர்களிடத்திலே இப்பேர்ப்பட்ட காரியஞ் சம்பவித்தது.

மனப்பற்றுதல்.—சர்வேசுரன் நமக்கு ஒரு காவலான சம்மனசானவரைக் கட்டளையிட்டதற்காக அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்வதுமன்றி அந்தச் சம்மனசானவரை நாம் பலதடவைகளில் நினையாமற்போனதற்காகப் பொறுத்தல் கேட்போமாக.

பிரதிக்கினை.—நமது காவலான சம்மனசுவை அடிக்கடி மன்றாடி அவரிடத்தில் யோசனைகேட்டு அவர்பேரிலே பத்தி பரம்பும்படி பிரயாசப்படுவோமாக.

## 2-ம் பிரிவு

### நமது காவலான சம்மனசு நமக்குச் செய்யும் உபகாரம்

தியானம்.—உன்னைக் காப்பாற்றவும் உன் சகல வழிகளிலும் உன்னை நடப்பிக்கவுஞ் சர்வேசுரன் தம்முடைய சம்மனசுக்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறாரென்று தாவீது என்பவர் 60-ம் சங்கீதத்தில் பாடியிருக்கிறார். இந்தக் கட்டளையின் நிமித்தமாக நமது காவலான சம்மனசு முந்த முந்த நமது சரீர சௌக்கியத்தைக் காப்பாற்றவும், நமக்கு எதிரிடும் ஆபத்துகளில் நம்மைத் தற்காக்கவும் மகா கவலையோடே விழிப்பாயிருக்கிறார். 2-வது அழியாத நமது ஆத்துமத்தையும், நமது ஞான நன்மைகளையுஞ் சரீரத்தைவிட அதிகக் கரிசனமாய் விசாரிக்கிறார். நமக்கு ஞானத்தைக் கற்பித்து, நல்ல நினைவுகளை மனதில் எழுப்பி, நம்மைப் பிடிக்கப் பசாசு நமது காலடியில் மறைத்து வைத்திருக்குங் கண்ணிகளை நமக்கு வெளிப்படுத்துகிறார். ஞானயுத்தத்தில் நமக்கு உறுதி சொல்லி நம்மைத் தாங்குகிறார். நாம் வழி தவறும்போது நமது உள்ளாந்தரங்கத்தில் நம்மைக் கண்டித்து, நமது கடமைகளை நாம் சரிவர முடிக்கும்படி நம்மை இன்பமாய் ஏவி ஒத்தாசை செய்கிறார்.



3-வது இரபயேல் சம்மனசு சின்னத் தோபியாசுக்குச் செய்த நன்மைகளெல்லாம் இவரும் நமக்குச் செய்து இச்சீவியத்தின் ஆபத்துகளுக்குள்ளே நமக்கு வழிகாட்டியாகிறார். 4-வது நாம் சாகும் வேளையில் முக்கியமாய் நமக்கு ஒத்தாசை செய்வார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—உன் காவலான சம்மனசானவருக்குப் பிரியப்படவேணுமானால் முந்தமுந்த உன்னால் இயன்றமட்டும் அவருடைய பாவனையாய் நட. எப்படியெனில் 1-வது, உனக்குக் கற்பிக்கப்பட்டிருக்கிறதையெல்லாம் அவரைப்போல சற்றும் வித்தியாசமில்லாமல் நிறைவேற்று. 2-வது, உலகத்தின் சந்தடிகளிலும் பாவ மாய்கைகளிலும் அவரைப்போல மன அடக்கமாயிருந்து பரிசுத்ததனத்தைக் காப்பாற்று. 3-வது, மனிதர்களுக்கு அவர் செய்யுங் கணக்கற்ற உபகாரங்கள் அனேகானேக முறை பலனற்றுப்போனாலும், அவர் மன அமரிக்கை குறையாதிருக்கிறதுபோல நீயும் எப்போதும் மனச் சமாதானத்தைக் காக்கக்கடவாய்.

மனப்பற்றுதல்.—உன் காவலான சம்மனசுவினிடத்திலே விளங்குகிற ஆச்சரியமான சாங்கோபாங்கத்தை உன்னாலானமட்டுங் கண்டுபாவிக்கும்படி சர்வேசுரனை நோக்கி மன்றாடு.

பிரதிக்கினை.—எனக்குக் காவலான சர்வேசுரனுடைய சம்மனசானவரே, தெய்வீக கிருபையால் உம்மிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட எனக்கு இன்று ஞானத்தெளிவு தந்து, என்னைக் காத்து நடத்தி ஆண்டருளும் என்கிற செபத்தைச் சொல்லப் பழக்கம்பண்ணக்கடவோம். 6-ம் பத்திநாதர், 7-ம் பத்திநாதர் என்னும் பாப்புக்கள் இந்தச் செபத்துக்குப் பலன் கட்டளையிட்டிருக்கிறார்கள்.

## 3-ம் பிரிவு

### நமது காவலான சம்மனசுமட்டில் நமக்குள்ள கடமைகள்

தியானம்.—காவலான சம்மனசுக்கள்மட்டில் நமக்குச் சங்கை, பத்தி, நம்பிக்கை—ஆகிய இம்மூன்று கடமைகள்

உண்டென்று அர்ச். பெர்னர்து வசனித்திருக்கிறார். காவல் சம்மனசினுடைய சமுகத்திலிருக்கிறபடியினாலே சங்கையோடிருக்கவேணும். அவர் நமக்குப் பெரிய உபகாரியாயிருப்பதினாலே நன்றியறிந்து அவர் பேரில் பத்தியாயிருக்கத்தகும். இராப் பகலாய் அவர் நம்மோடிருந்து நம்மைக் காத்து ஆதரித்துக்கொண்டுவருகிறதினாலே அவர் பேரில் நம்பிக்கை வைப்பது நமதுபேரில் சுமந்த கடமை. ஆகிலும் மனிதர்களுக்குள் வெகு வெகு பேர் இதை நினைக்கிறதுமில்லை; திருச்சபையானது காவலான சம்மனசுக்களைக் குறித்துக்கொண்டாடும் இந்தத் திருநாளை அவர்கள் சட்டைபண்ணுகிறதுமில்லை.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நீயோவெனில் உன் சங்கை பத்தி நம்பிக்கை இவைகளை உன் காவலான சம்மனசுக்குக் காட்டும்படி இரட்டிப்பாய் முயற்சி செய். முதலாவது: எப்போதும், விசேஷமாய் நீ தனியேயிருக்கும்போதும், ஒரு கனவான் முன்பாக இருந்தால் எப்படியோ, அப்படியே உன் காவலான சம்மனசானவர் சமுகத்திலுஞ் சங்கையோடிருப்பாயாக. நான் இந்நேரத்தில் செய்கிறதற்கும் நினைக்கிறதற்கும் ஓர் நாள் என் சம்மனசானவர் ஒன்றில் எனக்குச் சனுவாக ஒன்றில் விரோதமாகச் சாட்சி சொல்லுவாரென்று நினைப்பாயானால் நீ எப்போதுஞ் சங்கையோடிருப்பாய். 2-வது, அவர் உனக்கு ஏவும் நல்ல விசாரங்களுக்குப் பணிந்த மனதோடு இடங்கொடுத்து, உனக்குச் செய்துவரும் உபகாரங்களுக்காகச் சாயந்தரந்தோறும் அவருக்குத் தோத்திரஞ் செய்து உன் பத்தியையும் நன்றியறிதலையுங் காண்பிப்பாயாக. 3-வது, அவருடைய தஞ்சம் ஒருபோதும் தவறாதென்ற உறுதி நிச்சயத்தோடு உனக்கு நேரிடும் அவசர இக்கட்டுகளில் அவருடைய சகாயத்தை இரந்து மன்றாடி, உன் சந்தேகங்களில் அவருடைய ஆலோசனையைக் கேட்டு அவர் மட்டில் உனக்குள்ள நம்பிக்கையை காண்பிப்பாயாக.

சம்பாஷணை.—உனக்குக் காவலான சம்மனசானவரோடு சம்பாஷணை செய்.

---



# 3-ம் தேதி

## அர்ச். குழந்தை தெரேசம்மாள் திருநாள்

ஆயத்தச் சிந்தனை.—அர்ச். குழந்தை தெரேசம்மாள் தனது மரணப்படுக்கையில், பாடுபட்ட சுரூபத்தைக் கரத்தேந்தி வானத்தை அண்ணார்ந்து பார்த்தவண்ணமாய், முகமலர்ந்து சிநேக பலியாய்த் தன்னைச் சிருஷ்டிகரிடம் ஒப்படைக்கிறதைப்பார்க்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

தியானச் சேபம்.—இந்த அர்ச்சியசிஷ்டவளிடம் விளங்கின பிள்ளைக்குரிய விசுவாசம், நம்பிக்கை, தேவசிநேகம் உன் சீவியத்திலும் விளங்கும்படி மன்றாடு.

### முதல் பிரிவு

#### அர்ச். குழந்தை தெரேசம்மாளுடைய விசுவாசம்

தியானம்.—அவளுடைய வயதுக்கு மிஞ்சின விசுவாசம் அவளிடம் காணப்பட்டது. மிகவும் சிறு பிள்ளையாயிருக்கும்போதே, சர்வேசுரனுடைய வல்லமையின் மட்டிலும் மோட்சத்தின் நினைவின்பேரிலும், ஒறுத்தல் முயற்சிகளைப்பற்றியும், அவள் சொல்லியிருக்கிற விஷயங்கள் இதை நன்றாய் விளக்கிக்காட்டுகின்றன. "நான் செய்யும் சகல கிரிகைகளிலும் சேசுநாதருக்குப் பிரியப்படப்பிரயாசப்பட்டேன். அவருக்கு ஒருக்காலும் மனவருத்தங்கொடாதபடி, வெகு எச்சரிக்கையாயிருந்தேன்" என்று சொல்லியிருக்கிறாள். அவள் முதன்முதல் செய்த பாவசங்கீர்த்தனத்தில், சிறந்த விசுவாசத்தைக்காட்டினாள். 5½ வயது நடக்கும்போது, சேசுநாதருடைய பாடுகளின் பேரில் அவள் கேட்ட ஓர் பிரசங்கம் அவளுடைய இருதயத்தில் வெகு ஆழமாய்ப்பதிந்து, அது முதல் ஞானப்போதகங்களின் கருத்தை நன்றாய் உணரவும், அவைகளை ஆவலோடு விரும்பவும் பழகிக்கொண்டாள். கோவிலில் அவள் இருந்த பேரையும், பக்திக்குரிய விஷயங்களைப்

பற்றிப்பேசுவதிலும், கேட்பதிலும் அவளுக்கிருந்த இன்பமும் பக்தியும் சாமான்யமானதல்லவென்று பிரசித்தமாய்க் காட்டின. அவளது முகத்தில் பரலோக ஜோதிப் பிரகாசம் துலங்கினது. "இவளைப்போல் அழகான பிள்ளைகள் அநேகர் இருக்கிறார்கள்; ஆயினும் இவளிடமுள்ள அழகு விநோதமானது. சிறிய தெரேசின் கண்களில் பரலோக ஆனந்தம் பிரகாசிக்கிறது" என்று சொல்லுந்தன்மையாய் அவள் சீவித்தாள்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—நாம் செய்யும் எந்தக் காரியத்தையும் நன்றாய்ச்செய்து முடிப்பதற்கும், நமது கிரிகைகளைப் பேறுபலனுள்ளவைகளாக்குவதற்கும், நம்மிடத்தில் உயிருள்ள விசுவாசம் இருப்பது அவசியம் என்று பலதடவைகளில் சொல்லக் கேட்டிருக்கிறோம். இது உண்மையென்று நாம் உணருகிறோம். ஆனால் நமது நடத்தை இதற்கு ஒத்தவண்ணம் இருக்கிறதா? "சகல கிரிகைகளிலும் சேசுநாதருக்குப் பிரியப்படப் பிரயாசப்பட்டேன்" என்று அர்ச். குழந்தை தெரேசம்மாள் சொன்ன வாக்கியத்தில் மறைந்து கிடக்கிற பொருள் என்ன? எப்போதும் சேசுநாதர் தன் கண் முன்பாக இருக்கிறார், தனது கிரிகைகளைப்பார்க்கிறார், என்று விசுவசித்தாள். அதாவது தேவ சந்நிதான முயற்சி செய்து வந்தாள். நாமும் தேவ சந்நிதான முயற்சியைப்பற்றித் தனி ஆத்தும சோதனை செய்வதாகப் பல தடவைகளில் தீர்மானித்திருக்கிறோமல்லவா? ஆயினும், நாம் அடைந்த பலன் என்ன? சேசுநாதருக்கு ஒருக்காலும் மனவருத்தங் கொடாதபடி நாம் நடந்திருக்கிறோமா? மெய்யாகவே, தேவ சந்நிதியில் நாம் இருக்கிறோம் என்கிற உறுதியான விசுவாசம் நம்மை ஆட்கொண்டிருக்குமாகில், எவ்விதமான தவறுதலுக்கும் ஆளாகமாட்டோம் என்று நிச்சயமாயிருக்கலாம்.

**மனப்பற்றுதல்.**—"பாலனைப் இருப்பவன் எவனும் என்னிடம் வருவானாக" என்று திருவுளம்பற்றியிருக்கிற ஆண்டவரே, சிறு பிள்ளையைப்போல் உமதுமட்டில் நான் விசுவாசமாயிருக்கக் கிருபை செய்தருளும்.



**பிரதிக்கினை.**—எங்கே போனாலும், எங்கே வந்தாலும், என்னென்ன காரியஞ் செய்தாலும் எப்போதும் தேவ சமுகத்தில் நானிருப்பதை நினைப்பூட்டிக்கொள்வேன்.

## 2-ம் பிரிவு

### அவளிடமிருந்த நம்பிக்கை

**தியானம்.**—சோதனை வேளையிலும் அதைரியம் உண்டானபோதும், அவள் தைரியத்தைக் கைநெகிழாமல் இருந்தது எவ்விதமென்று சிலர் அவளைக்கேட்டதற்கு, அவள் சொன்ன மறுமொழியாவது: "அவ்வேளைகளிலுங் கூட, நல்ல சர்வேசுரனையும், சகல அர்ச்சியசிஷ்டவர்களையுங் கூவி அழைத்து அவர்களுக்கு நன்றி செலுத்துகிறேன். எனது நம்பிக்கை எவ்வளவு தூரந்தான் நீடிக்குமென்று சோதிக்க விரும்புகிறார்களென்று எண்ணிக்கொள்வேன்." 'சர்வேசுரன் என்னைக் கொன்றுபோட்டாலும், இன்னும் அவர்மட்டில் நம்பிக்கையாயிருப்பேன்' என்று யோப் என்னும் மகான் சொன்ன வசனம் என் இருதயத்தில் பதிந்திருக்கிறது. இந்த நம்பிக்கை என்னிடம் ஏற்படுவதற்கு வெகு காலஞ்சென்றது என்பது உண்மை. இப்போது அது என்னிடம் குடி கொண்டிருக்கிறது. சர்வேசுரனை நம்பினால் சகலமும் கைகூடிவரும்" என்று சொல்வாள்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—நமக்கு வருந்துன்பங்களிலும், சஞ்சலங்களிலும், நாம் நடந்துகொள்ளுகிற விதம் என்ன? தியான காலத்தில் செய்த பிரதிக்கினைகளை வெகு சீக்கிரம் மறந்துபோகிறோம். நமது நடத்தை சற்றேனும் திருந்தினபாடில்லை என்று அறியும்போது, மனஞ் சோர்ந்து தத்தளித்து, அநுதின ஞான முயற்சிகளை முதலாய் அலட்சியஞ் செய்கிறோமல்லவா? சோதனைகள் அடுத்தடுத்து வருவதைக்கண்டு அங்கலாய்த்து அவநம்பிக்கைக்கு இடங்கொடுத்து, சர்வேசுரன் என்னை இவ்விதஞ் சோதிக்கிறாரே, நான் என்ன பொல்லாப்பு செய்தேன் என்று முறையிட்டு முறுமுறுப்

பதில்லையா? நாம் பல தடவைகளில் கேட்ட மன்றாட்டு பலிக்கவில்லையென்று மனங்குருவி, செபத்தில் பக்தி சுறுசுறுப்பின்றி, கடமைக்காக மாத்திரம் அதைச் செய்து முடிப்பதில்லையா? சர்வேசுரன் நமது நல்லதந்தை, சகலமும் நமது நன்மைக்காகவே செய்வார் என்கிற பூரண நம்பிக்கை நமக்கு இருக்குமாகில், என்னென்ன துன்பம் நேர்ந்தாலும் நாம் ஒருக்காலும் அதைரியப்படமாட்டோம் என்பது திண்ணம். இந்த உறுதியான நம்பிக்கை நம்மிடம் குடிகொண்டிராததினால்தான் வெகு சுலபமாய்ச் சலிப்பும் தவிப்பும் ஏற்படுகின்றன. இனிமேலாகிலும், பிள்ளைக்குரிய நம்பிக்கைகொண்டு சகலவித இக்கட்டுகளின் மத்தியிலும் மனந்தளராதிருப்போமாக.

மனப்பற்றுதல்.—சேசுவின் திரு இருதயமே, என் நம்பிக்கையெல்லாம் உமதுபேரில் வைக்கிறேன்.

பிரதிக்கினை.—இந்த மனவல்லயச் செபத்தை அடிக்கடி சொல்வேனாக.

## 3-ம் பிரிவு

### அவளிடத்தில் பற்றியெரிந்த தேவசிநேகம்

தியானம்.—ஓர் நாள் அவள் சுறுசுறுப்பாய் வேலை செய்துகொண்டிருந்தாலும், உள்ளத்தில் அடக்கமான சிந்தனையுள்ளவளாய்த் தோன்றினதைக் கண்ட ஓர் சகோதரி தனக்குண்டான ஆச்சரியத்தை அடக்கமாட்டாமல், "என்னத்தைப்பற்றித்தான் நினைத்துக்கொண்டிருக்கிறாய், சகோதரி" என்று வினவினாள். பரமண்டல மந்திரத்தின் மேல் தியானித்துக்கொண்டிருக்கிறேன். நல்ல சர்வேசுரனை நோக்கி எங்கள் பிதாவே, என்றழைப்பது எவ்வளவோ இன்பகரமானது என்று சொன்னாள். சர்வேசுரனைப்பற்றியும், அவருடைய தயாளத்தைப்பற்றியும், அன்பைப்பற்றியும் அவள் பேசும்போது, அவளது வார்த்தைகளில் விளங்கின உருக்கத்தையும் இருதயப்பற்றுதலையும் கவனித்தவர்கள் அவளுடைய உள்ளத்தில் தேவசிநேக அக்கினிச்சுவாலை சுடர்விட்டெரிந்துகொண்டிருந்ததாக உணர்ந்தார்கள். இந்த அக்கினிச்சுவாலையே அவள் எழுதின ஏட்டுகளிலும் விளங்குகிறது. இவைகளை வாசிக்கிற சகலருக்கும் பேரானந்தமும் அவர்களுடைய உள்ளத்தில் பத்தியின் பேரில் தாகமும் உண்டாகும். அவளது ஜீவிய வரலாறு வெகு சீக்கிரத்தில் உலகத்தின் நாற்றிசையும் பரவுவதற்கு இதுவே காரணம். அவள் வார்த்தைப்பாடு கொடுத்த தினமன்று பின்வரும் வாக்கியங்களை எழுதித் தனது மார்பில் அணிந்துகொண்டாள். அவையாவன: "ஓ! சேசுவே, என் திவ்விய பத்தாவே, எனது ஞானஸ்நானத்தின் தூய ஆடையில் ஒரு நாளும் மாசு படியாதபடி செய்தருளும். மனம்பொருந்தி நான் ஓர் அற்பக் குற்றஞ்செய்து, அதனால் என் ஆத்துமத்தைக் கறைப்படுத்திக்கொண்டு இவ்வுலகத்தில் இருப்பதைப்பார்க்கிலும் என்னை உம்மிடம் அழைத்துக்கொள்வது நல்லது. உம்மைத் தவிர வேறெதையும் நான் ஆசியாமலும் அடையாமலும் இருக்கச்செய்தருளும். நான் எப்போதும் உம்மையே ஆசித்து, உம்மையே அடையும்படி செய்தருளும்... ...ஓ! சேசுவே, நான் உம்மிடம் கேட்பது சமாதானம் ஒன்றே. சமாதானம் விசேஷமாய் அணைகடந்த அளவற்ற சிநேகம் தான் எனக்கு வேண்டும்"........

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—தேவ சிநேக முயற்சி செய்வது கடினம் என்று எண்ணுவது வெகு சகஜம். ஆயினும், அப்பியாசம் பிரதானம் என்றும் சொல்வார்கள். முயற்சி திருவினையாக்குமன்றோ? வெளிக்காரியங்களில் அலுவலாயிருக்கும்போதுகூட, நம்மிடம் சுத்த கருத்து இருக்குமேயாகில், தேவ சிநேக முயற்சி செய்வது கடினமாய்த்தோன்றாது. சில அர்ச்சிய சிஷ்டவர்களிடத்தில் வெளிப்படையாய்த்தோன்றின பக்தி உருக்கப்பற்றுதல் நம்மிடம் விளங்காவிடினும், சர்வேசுரனைப்பற்றிச் சகலமும் செய்துவருகிற வழக்கமும், விசேஷமாய்த் தேவ சிநேகத்தை நம்மிடத்திலிருந்து பறித்துக்கொள்ளக்கூடிய எவ்விதமான குற்றத்தையும் செய்வதைவிட, உயிரையே இழக்க மனத்துணிவும் உறுதியான தீர்மானமும் இருக்குமாகில், தேவ சிநேக முயற்சி

செய்வது சுலபமாயிருக்கும். சர்வேசுரனைப்பற்றியும் அவரோடு ஒன்றித்தும் சீவிப்பதே தேவ சிநேக பலிக்கு அவசியமானது. இது அப்பியாசத்தால் ஆகக்கூடியதே.

சம்பாஷணை.—அர்ச். தெரேசம்மாளோடு சம்பாஷித்து, அவளைப்போல் நீயும் சர்வேசுரன்மட்டில் பிள்ளைக்குரிய நேசங்காண்பித்து, தேவ பராமரிப்பில் பூரண நம்பிக்கைகொண்டு, அவள் காட்டிய புண்ணிய பாதையில் நீயும் நடந்துசென்று சந்தோஷ அமரிக்கையாய் மரிக்கும் பாக்கியம் கிடைக்கும்படி மன்றாடு.

---

# 4-ம் தேதி

## ஐந்துகாய வரம்பெற்ற அர்ச். பிரான்சீஸ்கு திருநாள்

ஆயத்தச் சிந்தனை.—இவர் தமது எண்ணிக்கையில்லாத ஞானப்பிள்ளைகளின் நடுவே மோக்ஷத்தில் பேரின்ப பாக்கியம் அநுபவிக்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

தியானச் சேபம்.—சந்நியாசிக்கடுத்த மெய்யான தரித்திரம் தாழ்ச்சி என்கிற புண்ணிய வரத்தைக்கேள்.

### முதல் பிரிவு

**அர்ச். பிரான்சீஸ்குவின் தரித்திரத்துக்குக் கிடைத்த சம்பாவனை**

தியானம்.—இந்த மகாத்துமா ஒருவகையில் மிதமிஞ்சின விதமாய்ச் சுவிசேஷத்துக்கடுத்த தரித்திரத்தைச் சிநேகித்து அநுசரித்துக்கொண்டு வந்தாரென்கலாம். இவர் ஏழைகளுக்கும், அர்ச். தமியான் கோவிலுக்கும் வெகு தர்மஞ்செய்து வந்ததினாலே இவருக்கு இருபத்தைந்து பிராயம் நடக்கும்போது இவருடைய தகப்பனார் கோபத்தோடே மேற்றிராணியாரிடத்தில் பிராதுசெய்து இவருக்குத் தன்னுடைய சொத்தில் பாத்தியமில்லை



யென்று தீர்ப்புக்கொடுக்கும்படி கேட்டார். இதைக் கேட்டு அர்ச். பிரான்சீஸ்கு உடனே சம்மதித்து தஸ்தவேஜில் கையெழுத்துப் போட்டுத் தன் வஸ்திரத்தையுங்கூட உரிந்து தகப்பன் பாதத்தில் வைத்து: இன்றுதொடங்கி எனக்குச் சர்வேசுரனைத்தவிர வேறே ஆதாரமில்லை என்று சொல்லி, தகப்பனிடத்தில் விடை பெற்றுக்கொண்டது மன்றி அதுமுதல் அந்த நாட்டு இடையர்களைப்போல கொங்காணித் துணியை அணிந்துகொண்டு பிச்சையெடுத்துக் காலக்ஷேபம்பண்ணி, பாழாய்க்கிடந்த அர்ச். தமியானுடைய கோவிலில் ஒதுங்கியிருந்தார். இப்படியிருக்கையில் ஓர்நாள் பூசையில் வாசித்த சுவிசேஷத்தில்: பொன்னும், வெள்ளியும், இரண்டு வஸ்திரங்களும், காலில் பாதரட்சையும் கையில் ஊன்றுகோலும், நீங்கள் வைத்துக்கொள்ளவேண்டாமென்று சொல்லப்பட்டதைக் கேட்டுத் தன்னுடைய பாதரட்சையும், ஊன்றுகோலும் மிச்சமானகாரியமென்றெண்ணி, அவைகளைத் தூர எறிந்துவிட்டு, இடையில் அணிந்த வார்க்கச்சைக்குப்பதிலாய் ஒரு கயிற்றைக் கட்டிக்கொண்டு தவத்தைப் பிரசங்கிக்கத் துவக்கினார். இவர் இப்படி மனத்தாராளமாய்த் தம்மை முழுதும் சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுத்து எவ்வித வருத்தங்களுக்குமுள்ளானதைக் கண்டு சர்வேசுரனும் இதற்குச் சம்பாவனையாக அபூர்வமான அனேக வரங்களை இவருக்கு அளிக்கச் சித்தமானார். இவர் சொன்ன புத்திமதிகள் மனிதர் இருதயத்திலே தைத்திறங்கவே, அனேகர் இவருக்குச் சீஷராக வந்துசேர்ந்தார்கள். இவர்கள் எல்லாரையும் ஓர் சந்நியாச சபையாகச் சேர்த்து இந்தச் சபையின் ஏற்பாடுகளை அக்காலத்திலிருந்த மூன்றாம் இன்னோசென்சியூஸ் என்கிற பாப்பானவரிடத்தில் காண்பித்து அங்கீகாரம் பெற்றுக்கொண்டார். இவர் கையில் ஒரு காசுமில்லாதிருந்தாலும் மூன்று வருஷத்துக்குள் தமது சபைக்காக அறுபது மடங் கட்டவும், அவைகளில் திரளான சந்நியாசிகளுக்குக் காலக்ஷேபம் நடக்கவும் சர்வேசுரன் விசேஷ கிருபையால் உதவிசெய்து, இவ்விதமாய்த் தமது ஊழியனுடைய தரித்திரத்துக்குச் சம்பாவனை அளித்தார்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—இந்த மகாத்துமாவைப்போல நாமும் தரித்திர வார்த்தைப்பாட்டைச் சந்நியாசத்துக்குக் கோட்டைச் சுவரென்று எண்ணி, அதை நமது தாயைப்போல நேசிப்போமாக. நமது தரித்திரத்தைப்பற்றி ஒருக்காலும் வெட்கப்படாமல் தரித்திரமே நமக்கு மகிமையென்று நம்பி இதற்கடுத்த சொற்ப ஒழுங்குகளை முதலாய் நுணுநுணுக்கமாய் அநுசரிப்போமாக. இதுவரையில் இப்படி நடந்தோமோ?

**மனப்பற்றுதல்.**—தரித்திரத்தின்பேரில் நாளுக்குநாள் அதிக மதிப்பும், சிநேகமும் நம்மிடத்திலுண்டாக வரங்கேட்க வேணும்.

**பிரதிக்கினை.**—தரித்திரத்தினால் நாம் கஷ்டப்படும்போது சந்தோஷப்படுவோமாக.

## 2-ம் பிரிவு

### அர்ச். பிரான்சீஸ்குவினிடத்தில் விளங்கின தாழ்ச்சிக்குச் சர்வேசுரன்கொடுத்த சம்பாவனை

**தியானம்.**—இந்த அர்ச்சியசிஷ்டவருடைய ஆச்சரியமான தாழ்ச்சியை யோசித்துப்பார். அசிசியென்னும் பட்டணத்திலே ஒரு வியாபாரியினுடைய மகனாகிய இவர் உலகத்தில் யாரும் அறியாத ஒரு வாலிபனாயிருக்கும்போதே தன்னைத்தானே பெருமையாக நினைத்துத் தனக்குப் பேரும் கீர்த்தியும் உண்டாக ஆசைப்பட்டு ஏதோ தனக்கு வந்த அவமானத்தைப்பற்றி ஆயுதம் எடுத்துப் பழிவாங்கவேணுமென்று கர்வங்கட்டித்திரிந்தார். இவர் மனந்திரும்பின பிறகு பன்னீராயிரம்பேருக்கு அதிகமாயிருந்த தமது சந்நியாசிகளுக்கு அதிசிரேஷ்டராக நியமிக்கப்பட்டு உலகத்துக்கெல்லாம் ஆச்சரியமாகச் சகல சனங்களாலும் வாழ்த்தப்பட்ட காலத்தில் இந்த மகாத்துமா தன்னைத் தானே நீசனுஞ் சிறுவனும் ஒன்றுமில்லாதவனுமாக எண்ணி, குருப்பட்டம் பெறத் தான் அயோக்கியனென்று தன் சீவியகாலமெல்லாம் தியாக்கோனாயிருந்ததுந்தவிர சர்வேசுரனையும் அவருடைய தோத்திரத்தையும்பற்றித் தாம் சகலராலும்



மறக்கவும் நிந்திக்கவும்பட ஆசையாயிருந்தார். வித்தியாசம் எப்படி வந்ததென்றால் சர்வேசுரன் இவருக்குக் கொடுத்த ஞான ஒளியினாலே படைக்கப்பட்ட சகல வஸ்துக்களிடத்திலும் மனிதரென்னப்பட்ட யாவரிடத்திலுங் காணப்படும் நலம் நன்மையென்னப்பட்டதெல்லாம் சர்வேசுரனாலே வந்ததென்றும் அவருக்கே சொந்தமென்றுந் தெளிவாய் அறிந்துகொண்டார். ஆகையால் சர்வேசுரனுக்கு மாத்திரமே சகல மகிமையுந் தோத்திரமுஞ் செல்லுமென்றும் நமக்கு இகழ்ச்சியே பொருந்துமென்றும் நிச்சயித்துக்கொண்டார். ஏனெனில் நாம் பாவமும் பாவத்துக்குச் சார்பும் உள்ளவர்களாயிருக்கிறதேயல்லாமல் மோட்சமடையத்தக்க ஒரு புண்ணிய முயற்சியாகிலும் நமது சொந்தப் பலத்தினால் செய்யக்கூடாதவர்களாயிருக்கிறோம்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—இந்தச் சத்தியங்களை நாமும் அறிந்திருக்கிறோம். இதைக்குறித்து விரிவாயும் நமக்கு விவரித்துச் சொல்லியிருக்கிறார்கள். இப்படியிருக்க அர்ச். பிரான்சீஸ்குவினிடத்திலே நாம் கண்டு ஆச்சரியப்படுகிற குணங்கள் நம்மிடத்திலும் விளங்காமலிருப்பதேன்? இவரைப்போல நாமும் தாழ்ச்சியுள்ளவர்களாயிராததினாலேயும் இந்த சத்தியங்களை ஆழ்ந்து யோசித்து அநுசரியாததினாலேயும் நாம் ஒரு பலனும் அடையாமற்போகிறோம். இது எப்போதும் நமது புத்தியில் பதிந்திருக்கச் செய்வோமாகில் இவரைப்போல நாமும் தாழ்ச்சியை அடைந்து அத்தோடு சேர்ந்த மற்றச் சகல புண்ணியங்களிலும் சீக்கிரத்தில் விருத்தியடைவோம். இவரைப்போல தாழ்ச்சியுள்ளவர்களுக்குச் சர்வேசுரன் உதாரமாய் அளிக்கச் சித்தமாயிருக்கிற விசேஷ வரப்பிரசாதங்களையும், வரங்களையும், தயவையும் நாமும் பெற்றுக்கொள்வோம். சென்ற அறுநூறு வருஷகாலமாய் கலகக் குழப்ப உபத்திரியங்களுக்குள் அகப்பட்டும், அழியாமல் துலங்கி வளர்ந்து உலகத்தின் நாலு திக்கிலும் பரம்பியிருக்கும் இவருடைய சபையிலுட்பட்ட கணக்கில்லாத சந்நியாசிகளோடு இன்றையத் திருநாளிலே நாமும் ஒன்றித்து

அவரை மன்றாடுவோம். சர்வேசுரன் அவருக்கு அளித்த ஐந்து திருக்காய வரம், புதுமை வரம், பரவச வரம் முதலிய வைகளை அவரிடத்தில் கேளாமல், தரித்திரம், தாழ்ச்சியின் பேரில் மெய்யான ஆசை நம்முடைய இருதயத்தில் உண்டாகும்படி அவருடைய உதவியைக் கேட்போமாக.

சம்பாஷணை.—அவரை வாழ்த்தி நாம் தெரிந்துகொண்ட அந்தஸ்துக்கு அஸ்திவாரமாயிருக்கிற தாழ்ச்சியென்னும் புண்ணியத்தில் உயர்ந்து ஓங்க அவருடைய சனுவை இரந்து கேட்போம்.

---

## 5-ம் தேதி

### மனஞ்சோர்ந்த சந்நியாசியும் ஞானவேகமுள்ள சந்நியாசியும் மரணசமயத்திலிருக்குந் தன்மை

ஆயத்தச் சிந்தனை.—புண்ணிய ஆத்துமாக்களைப் போல எனக்கும் நல்ல மரணம் கிடைக்கவேணுமென்று பாலாமென்கிற தீர்க்கதரிசி சொன்னதைக் கேட்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

தியானச் செபம்.—உன்னை அறியவும், உன் குற்றங்களைத் திருத்திக்கொண்டு இவ்விதமாய் உனக்கு நல்ல மரணம் நிச்சயமாகவும் அவசரமான ஞான வெளிச்சத்தையுந் திடனையுங் கேட்பாயாக.

### முதல் பிரிவு

#### மனஞ்சோர்ந்த சந்நியாசி சாகிற சமயத்திலே இருக்குந் தன்மை

தியானம்.—வியாதி வேளையிலாகிலுஞ் சாகிற சமயத்திலென்கிலும் ஒருவனுடைய குணம் மாறாமல் அவன் எப்படிப்பட்டவனென்று மாத்திரம் தெளிவாய்க் காட்டுமென்று ஒரு மகாத்துமா சொல்லியிருக்கிறார். அப்போது



பாசாங்கு பண்ணுகிறது வெகு வருத்தமான காரியமானதால் மனஞ்சோர்ந்த சந்நியாசியிடத்தில் இந்த வாக்கு எப்படி நிறைவேறுமென்றும் அவன் அந்திய வேளையில் எப்படி இருப்பானென்றும் நீயே யோசித்துப் பார்த்துக்கொள். இவன் வியாதிப்படுவதற்கு வெகுகாலத்துக்கு முந்தியே கண்டதெல்லாம் தேவை தேவையென்று தன்னை ஒறுக்காமலும், பொறுமையில்லாமலும், எதற்கும் எடுத்தாற்போல் முறைப்பாடு சொல்லிக்கொண்டு வந்தவன். இவன் தேக சௌக்கியத்தின்பேரில் மனங் கவிழ்ந்தவனாய், தன் ஆத்தும நலத்தையும் நித்திய பாக்கியத்தையும் அசட்டை பண்ணினவன். ஐயோ, மரண சமயத்தில் இவனுக்கு யார் என்ன புத்தி சொல்லியும், தானிருக்கிற ஆபத்தான ஸ்திதியைத் திருஷ்டாந்தமாய் அறிந்திருந்தும் ஒன்றும் அறியாத குருடன்போல சாவான். உத்தம சந்நியாசியாயிருந்து சாகிறதினால் வரும் பாக்கியத்தைக் குறித்தும், முழுமனதோடு தன் சீவனைச் சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுக்கிறதினாலே பரலோகத்தில் தனக்கு வரப்போகிற பேறுபலன்களைக் குறித்தும் அவனிடத்தில் பேசினால் கேளாதவன்போலிருப்பான். நல்ல மரணம் அடைய ஆயத்தமாக யாதொரு செபத்தை அவன் காதில் சொல்லவும், கிறீஸ்துநாதர் அநுசாரத்தில் அவனுக்கு இஷ்டமான யாதொரு அதிகாரத்தை வாசிக்கவும் பிரியமாவென்று கேட்டாலோ, செவிடனுக்கு ஒப்பந்தம் ஒரு பிரகாரமாயிருப்பான். இப்பேர்ப்பட்டவனிடத்தில் ஊர்ச் செய்தியைக் குறித்தும், தேர்ந்த வைத்தியர் கொடுக்கும் மருந்தைப்பற்றியும் பேசத் தலைப்பட்டால் அந்தக்ஷணமே அவன் கவனமாய் உற்றுக் கேட்கவும், ஆசையாய்ப் பேசவுந் துவக்குவான். யாதொரு உருக்கமான மனவல்லயச் செபஞ்செய்து சர்வேசுரனையும் அர்ச்சியசிஷ்டவர்களையும் பார்த்து வேண்டிக்கொள்ளமாட்டான். அடிக்கடி தேவநற்கருணை கொடுப்பது வெகு சுளுவாயிருந்தபோதிலும் அதை வாங்கவேணுமென்று ஆவலோடு பதைத்துக் கேட்கமாட்டான். இவனை விசாரிக்கிறவர்களும் இவனைப் பார்க்க வருகிறவர்களும் இவனிருக்கிற ஸ்திதியைக்கண்டு வெகு மனவருத்தப்பட்டு: ஐயோ,

நாங்கள் சாகும்போது இந்த ஸ்திதியிலிருக்கப்படாது! எவ்வளவோ பேறுபலன்களை நித்தியகாலத்துக்கும் இழந்து போகிறானென்று தங்களுக்குள்ளே நினைத்துக்கொள்வார்கள்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—இவர்கள் நினைப்பதுபோலவே நீயும் யோசித்து: நான் சாகும்போது இந்த மனஞ்சோர்ந்த சந்நியாசியைப்போல் இருப்பது எனக்குப் பிரியமில்லையென்பாயல்லவோ? மெய்யாகவே அது நியாயந்தான். அப்படி இல்லாதிருக்கவேணுமானால் நன்றாயிருக்கும்போதுதானே வேறுவிதமாய் நடந்துகொள்ளவேண்டியது. நீ சாகும்போது எப்படி இருப்பாயென்று அறியவேணுமோ, கேள். இப்போது நீ வழக்கமாய் எந்தப் பிரகாரம் நடக்கிறாயென்று பார்த்துக்கொள்; அப்படியே மரணநேரத்திலும் இருப்பாய். நீ இருக்கிற விதமுஞ் செய்கிற விதமும் பத்தியற்ற இந்தச் சந்நியாசியின் மாதிரிகையாயிருந்தால் நீ சாகும்போது நல்ல ஸ்திதியில் வந்துசேரமாட்டாயென்று உறுதியாய் நினைத்துக்கொள். நீ எந்த விஷயத்தில் இந்தச் சந்நியாசியைப்போல் இருக்கிறாயென்றும் இதில் உன் நடத்தையைத் திருத்திக்கொள்ளவேணுமென்றும் பார்த்து இன்னங் காலமிருக்கும்போதே செய்யவேண்டியதைச் செய்.

**மனப்பற்றுதல்.**—உன்னை அறியவும், உன் நடத்தையைச் சீர்திருத்தவும் வேண்டிய உதவியை ஆண்டவரிடத்தில் கேட்பாயாக.

**பிரதிக்கினை.**—நீ மாதாந்தர ஆத்துமசோதனை செய்து உன் நடக்கை எப்படியிருக்கிறதென்று யோசிக்கவேண்டியபோது இந்தத் தியானத்தைச் சில சமயங்களில் செய்.

## 2-ம் பிரிவு

### ஞானவேகமுள்ள சந்நியாசியானவன் சாகிற தருணத்திலிருக்குந் தன்மை

**தியானம்.**—வியாதியும், சாகிற சமயமும் ஒருவனுடைய குணத்தை மாற்றாமல் அவன் எப்படிப்பட்டவ



னென்றுமாத்திரம் காட்டுமென்கிற சுலோபம் நல்ல சந்நியாசியிடத்திலும் உண்மையாகவே விளங்கும். ஆனால் இவனிடத்தில் சகலமும் முன் சொன்னதற்கு முழு விரோதமாய்த் தோன்றும். இவனை மற்றச் சகோதரர் ஓயாமல் பார்த்து வருகிறதினாலே இவன்பேரில் முன்னிருந்த எண்ணம் குறைவதற்குப் பதிலாய் இவனை நெருங்கிப் பார்க்கப் பார்க்க அதிக மேன்மையாய் மதிப்பார்கள். அதற்குக் காரணமேதென்றால் முன்னே தாழ்ச்சியினால் பாதி மறைந்திருந்த அவனுடைய மெய்யான நடபடிக்கையை இப்போது தெளிவாய் அறிவார்கள். புண்ணிய வழியில் உறுதியாய் நடந்து, உலகத்துக்கும் தனக்கும் மரித்தவனாகித் தன் ஆத்தும நன்மையை எல்லாத்துக்குமேலாக எண்ணிவந்தானென்று கண்டுகொள்ளுவார்கள். இந்தச் சந்நியாசி கடினமான வியாதியாய் விழுந்தவுடனே தன் அந்தஸ்தைக் குறித்து வைத்தியன் என்ன நினைக்கிறானென்று தன் சிரேஷ்டரிடத்தில் கேட்பான். தனக்கு மரணகாலம் அடுத்திருக்கிறதென்று வைத்தியன் மூலமாக அறிந்தால் முழுமனதோடு தன்னைச் சர்வேசுரனுக்குப் பலியாக ஒப்புக்கொடுப்பான். கடைசித் தேவதிரவிய அநுமானங்களைப் பெறத் தானே வலியக் கேட்பான். தன் வியாதி காலமுழுதும் பொறுமை, சர்வேசுரனுடைய சித்தத்துக்கு அமைதி, தன்னை விசாரிக்கிறவர்களுக்கு நன்றியறிந்ததனம், இவை முதலிய புண்ணியங்களைச் செய்வதினால் தன் சகோதரர்களுக்கு எப்பொழுதும் நல்ல மாதிரிகை காண்பிப்பான். இன்னம் தனக்கிருக்கும் மீதியான காலமெல்லாம் தன் ஆத்துமத்தைப் புண்ணியங்களால் அலங்கரிப்பதே அவனுடைய ஏக கவலையும், மகா கரிசனமுமாய் இருக்கும். பத்தி உருக்கம் நிறைந்த மனவல்லயச் செபங்களை அடிக்கடி சொல்லிச் சர்வேசுரனோடே ஒன்றித்திருந்து தன்னால் கூடியபோதெல்லாம் தேவநற்கருணை வாங்குவது மகா பாக்கியமென்று காண்பிப்பான். தான் வழக்கமாய்ச் செய்யும் செபங்களையெல்லாம் செய்யக்கூடாதிருக்கிறதையும், வேதாகமத்திலும், கிறீஸ்துநாதர் அநுசாரத்திலும், சபை ஏற்பாடுகளிலும், விசேஷமாய் வியாதியஸ்தர்களுக்கடுத்த

ஒழுங்குகளிலும் யாதொரு பாகம் வாசிக்கக்கூடாமலிருக்கிறதையும் நினைத்து மனம் நொந்திருப்பானொழிய வேறெதையும்பற்றி வருத்தப்படமாட்டான். தனக்கு ஆறுதலாக மற்றச் சகோதரர்கள் யாதொன்றை வாசிக்கவும், இயேசுநாதர் தேவமாதா முதலிய அர்ச்சியசிஷ்டவர்களைக் குறித்தும், சந்நியாச அந்தஸ்திலுள்ள பாக்கியத்தைப்பற்றியும், ஆண்டவர் நல்லவர்களுக்கு வார்த்தைப்பாடு கொடுத்திருக்கிற மோக்ஷானந்த சந்தோஷத்தைக் குறித்தும் பேசும்படி வெகுவாய் மன்றாடுவான். அப்படிப் பேசும்போதும், வாசிக்கும்போதும் இவன் மோக்ஷானந்த பாக்கியத்தை அநுபவித்து வருகிறவன்போல் இருக்கிறதாக மற்றவர்களுக்குத் தோன்றும்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—பத்தியுள்ள சந்நியாசி சாகிற சமயத்திலிருக்கும் பாக்கியமான ஸ்திதியைப்பற்றி நீ நினைக்கும்போது உனக்கு ஆனந்தமுண்டாகி: நானும் அப்படியே சாகவேணுமென்று ஆசைப்படுகிறாயல்லோ? உன் ஆசை தப்பாமல் நிறைவேறவேணுமானால் பத்தி சுறுசுறுப்புள்ள சந்நியாசியாய் நடந்துகொள். ஏனெனில் நமது வாழ்நாள் எப்படியோ சாகும் நாளும் அப்படியே. ஆயினும் நீ இருந்தாற்போல் வியாதியாய் விழுந்து உனக்குச் சோபம் சோர்வுண்டாகும்போது மற்றவர்கள் உனக்கு ஆறுதல் வருவிக்கும்படி சொல்லவேணுமென்று நீ ஆசைப்படுகிற மனவல்லயச் செபங்களையும், வேதவாக்கியத்திலும் கிறீஸ்துநாதர் அநுசாரத்திலுமிருந்து நீ கேட்க வாசிக்கவேணுமென்று பிரியப்படுகிற வாக்கியங்களையும் இப்பொழுதே ஒரு சீட்டில் எழுதி வைத்துக்கொள். அப்படி இதுவரையிலும் செய்யாமலிருந்தால் தாமதமின்றி அதைச் சேர்த்து எழுதத் துவக்கு.

சம்பாஷணை.—நல்ல மரணத்துக்குப் பாதுகாவலான அர்ச். சூசையப்பரோடு சம்பாஷணை செய்.

---



# 6-ம் தேதி

## கர்த்தூசியான் சபையை உண்டாக்கின அர்ச். புருனோவென்கிறவர் திருநாள்

ஆயத்தச் சிந்தனை.—ஏகாந்தமே பாக்கியமென்று இந்த மகாத்துமா சொல்லுகிறதைக் கேட்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

தியானச் செபம்.—நாம் ஏகாந்தத்தையும் மௌனத்தையும் சிநேகிக்க வரப்பிரசாதங் கேட்போமாக.

### முதல் பிரிவு

#### இந்தச் சபையை ஸ்தாபித்ததில் தேவ பராமரிக்கை விளங்குகிறது

தியானம்.—அர்ச். புருனோவென்கிறவர் 1035-ம் வருஷத்திலே கொலோனியாப் பட்டணத்தில் வங்கிஷபதிகளுமாய், ஆஸ்திக்காரர்களுமாயிருந்த தாய்தகப்பனிடத்திலே பிறந்து, முற்காலத்தில் தெபயிதென்கிற வனத்திலே வசித்திருந்த ரிஷிகளுடைய சீவியத்துக்கு ஒத்தபிரகாரம் நடந்து வரும்படியாக ஐரோப்பாக்கண்டத்தில் ஒரு சந்நியாச சபையை ஏற்படுத்தினார். இவர் இந்தச் சந்நியாச சபையை ஏற்படுத்தவேணுமென்று சர்வேசுரன் சித்தமாயிருந்ததினால் தமது கருத்து நிறைவேறும்படியாக இவருக்கு ஏகாந்தம், தபசு, தியானம் இவற்றின்பேரில் பிரியத்தைக் கொடுத்து நடத்திவந்தார். இவருந் தேவ வரப்பிரசாதத்தின் இந்த ஏவுதலுக்கு அமைந்து உலகத்தை முற்றுந் துறந்து வனாந்திரத்தில் ஒதுங்கி வசிக்கத் தீர்மானித்தார். ஆனதினால் கல்வி கலைக்கியானத்திலும், அருமையான தர்ம நடபடிக்கையிலும் ரெமிஸ் பட்டணத்தில் சகலராலும் மதிக்கப்பட்டிருந்த இவர் அந்தப் பட்டணத்தை விட்டுப் புறப்பட்டுப்போனார். சிலநாள் ஜோலேசிம் என்கிற மடத்தில் சஞ்சரித்தபிறகு தம்முடைய முதல் ஆறு சீஷர்களோடு கிரனோபிளென்னும் பட்டணத்தின் மேற்றிராணியாராகிய உகோன் என்பவரிடத்தில் போய்ச்சேர்ந்

தார். சீஷர்களும் இவரும் என்ன கருத்தோடு வந்தார்களென்று மேற்றிராணியார் காட்சியினால் அறிந்து அந்தப் பட்டணத்துக்குக் கொஞ்சத்தூரமாயிருந்த கர்த்தூசியான் என்கிற வனத்திலே வசிக்கும்படி இவர்களைக் கூட்டிக்கொண்டுபோய்விட்டார். கற்பாறைகள் மிகுந்திருந்த அந்த வனாந்தரம் வருஷத்திலே பாதிக்குமேல் உறைபனியாலும் மஞ்சிமூட்டத்தாலும் மூடப்பட்டிருந்தது. மனுஷ சஞ்சாரமில்லாத அந்த இடத்திலே ஒரு சிறு கோவிலும், கொஞ்சங் கொஞ்சந் தூரத்தில் சிறு குடிசைகளுங் கட்டி அவைகளிலே பலஸ்தீன் நாட்டு வனவாசிகளைப்போல செபம், தபம், தியானம் முதலிய முயற்சிகளில் பத்தி சுறுசுறுப்போடு நடந்துவந்தார்கள். உலகமெங்கும் பேர்போன இந்தச் சபை இப்படியாய் உண்டாகி எண்ணூறு வருஷத்துக்கு மேலாக அந்த இடத்திலேதானே நாளையவரையில் விளங்கிக்கொண்டு வருகின்றது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நீ பிரவேசித்திருக்கிற சபையின் சரித்திரத்தையும், நீ இதிலே சேருகிறதற்கு ஏதுவாயிருந்த பலபல விஷயங்களையும் ஞாபகத்துக்கு வரப்பண்ணினால் இதினாலே உனக்கு விசுவாசம், நம்பிக்கை, ஞான சந்தோஷ முதலிய நல்லுணர்ச்சிகள் உண்டாகி, நீ அழைக்கப்பெற்ற அந்தஸ்தின்பேரில் மிகுந்த சிநேகமும், இதிலே அர்ச்சியசிஷ்டவனாகக் காலம்பண்ணவேணுமென்கிற மிகுந்த ஆசையும் உன்னிடத்தில் பிறக்கும்.

மனப்பற்றுதல்.—இந்த ஆசை நிறைவேறும்படி வரப்பிரசாதங் கேள்.

பிரதிக்கினை.—நீ துறவற அந்தஸ்துக்கு அழைக்கப்பட்டபோது தேவாதீனமாய் நடந்த சங்கதிகளையும், நீ பெற்ற வரங்களையும் அடிக்கடி நினைத்துக்கொள்.

## 2-ம் பிரிவு

### இச்சபை பரம்பினதில் தேவ பராமரிப்பு விளங்குகிறது

தியானம்.—தேவ பராமரிக்கையினாலே நடந்த வருத்தமானம் ஒன்று இந்த மகாத்துமாவையும், இவருடைய



துணைவர்களையும் உலகம் அறியும்படி காரணமாயிருந்தது. அதெப்படியென்றால் முந்தி இந்த மகாத்துமாவிடத்தில் ரேமிஸ் என்கிற பட்டணத்தில் சீஷனாயிருந்த இரண்டாம் ஊர்பானுஸ் என்கிற அர்ச். பாப்பானவர் தமக்கு இவர் திருச்சபைக் காரியங்களில் ஆலோசனை சொல்லி உதவத்தக்கதாக இவரை உரோமாபுரிக்கு வரவழைத்தார். இப்படி இவருக்கும் இவருடைய சீஷர்களுக்கும் அர்ச். பாப்பானவர் காண்பித்த மகா சங்கை மரியாதையினாலே இவர் உண்டாக்கின புதுச் சபையை எல்லாருமறிந்து மதிக்கிறதற்கு இடமாயிற்று. ஆனால் தமக்கு மிகவும் பிரியமாயிருந்த ஏகாந்தத்தைக் கட்டாயமாய் விட்டுவந்திருந்த புருனோவென்பவர் அர்ச். பாப்பானவர் அநுமதியின்பேரில் உரோமாபுரிக்கு அடுத்திருந்த காலாபிரியா நாட்டு வனத்திற்குப் போய்த் தமது சபைச் சந்நியாசிகளுக்கு இரண்டாம் மடம் ஒன்று கட்டிவைத்தார். இதிலே இவர் மகா கடுந் தபசு செய்து, தியானத்தில் முழுதும் அமிழ்ந்திக் கடைசியாய் 1101-ம் வருஷம் அர்ச்சியசிஷ்டவராய்க் காலம்பண்ணினார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இந்த அர்ச்சியசிஷ்டவரையும், இவருடைய பத்தி சுறுசுறுப்புள்ள சீஷர்களையும்போல நாம் வனத்திற்குப்போய் எப்போதும் ஒருசந்திபிடித்துக் கடின தபசுசெய்யக் கொடுத்துவைக்காமற்போனாலும், நம்மாலானமட்டும் அடக்க ஒடுக்கமாயிருந்து ஓயாமல் ஒறுத்து நடக்கவாகிலும் வருந்துவோமேயானால் நாமும் புண்ணிய சாங்கோபாங்கத்திலும் அர்ச்சியசிஷ்டதனத்திலும் கொஞ்சத்துக்குள் விருத்தியடைவோம்.

மனப்பற்றுதல்.—உத்தம சாங்கோபாங்கத்தின் பேரில் வேகமான ஆசையை உன் உள்ளத்தில் மூட்டி எழுப்பு.

பிரதிக்கினை.—பேர்போன அர்ச்சியசிஷ்டவர்களுக்குள் மகா பெரியவர்கள் தங்களாலானமட்டும் உலக சஞ்சாரத்தைத் தவிர்த்து வந்தார்களென்று கிறீஸ்துநாதர் அநுசாரத்தில் சொல்லியிருக்கிற வாக்கியத்தை அடிக்கடி நினைத்துக்கொள்.

## 3-ம் பிரிவு

### இந்தச் சபையின் பரிபாலனத்தில் தேவ பராமரிப்பு விளங்குகிறது

**தியானம்.**—பூர்வீக சந்நியாச சபைகளுக்குள்ளே இந்தச் சபை ஒன்றே யாதொரு சீர் திருத்தமும் அவசியமின்றி ஒரே நிலையில் நிற்கிறதென்று பலபேருங் குறித்துக் காட்டியிருக்கிறார்கள். இந்த அற்புதமான காரியம் விசேஷ தேவபராமரிப்பின் செயலென்று தெளிவாயிருக்கின்றது. மற்றச் சந்நியாச சபைகளுக்கும் இந்தச் சபைக்கும் உண்டான வித்தியாசத்தைப் பார்க்குமிடத்தில், இந்தச் சபையார் பூர்வீக வனவாசிகளைப்போல உலக சந்தடியையெல்லாம் முழுதும் விட்டுவிட்டு, அவரவர் தனித்தனியே ஒரு சிறு குடிசைக்குள்ளே தபசு பண்ணிக்கொண்டு வருகிறார்கள். வியாதியாயிருக்குங் காலத்திலே முதலாய் மாமிசம் சாப்பிடாமல், ஒருசந்தி உபவாசம் பிடித்து, முள்ளுபோல உறுத்தும் மயிர்ச் சட்டைகளை இராப்பகல் அணிந்து, பகல் பதினைந்து நாழிகையும், இரவு பதினைந்து நாழிகையுந் திருச்சபைச் செபத்தில் உண்டான சங்கீத மாலைகளையும் தேவமாதாவின் தோத்திரங்களையுஞ் சடங்கு சிறப்போடு பாடிக்கொண்டு வருகிறார்கள். ஆகையால் இந்தச் சபையிலே அலங்கோலையும், அசட்டைத்தனமும் உண்டாகிறதற்கு இடமில்லாமலிருக்கின்றது.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—அர்ச். புருனோவென்கிறவரும், அவருடைய சீஷர்களும் அநுசரித்துவந்த கடின தபசைப் பார்க்குமிடத்தில், நாம் செய்ய வேண்டிய தபசைச் சரியாய்ச் செய்யாமல் அசட்டையாயிருக்கிறதைக் கண்டு வெட்கி நாணக்கடவோம். இதிலே நீ எந்தத் தப முயற்சியை அலட்சியம்பண்ணினாயென்று பார்த்து அதைத் திரும்பவும் மனவேகத்தோடு புதிதாய்த் துவக்குகிறவனைப்போல செய்ய ஏற்படு.

**சம்பாஷணை.**—அர்ச். புருனோவென்கிறவரோடு சம்பாஷணை செய்.

---



## 7-ம் தேதி

### செபமாலைமாதாத் திருநாள்

**ஆயத்தச் சிந்தனை.**—பரிசுத்த கன்னியாஸ்திரி அர்ச். சாமிநாதருக்குத் தரிசனையாகிச் செபமாலையின் மேல் பத்தி இன்னதென்று படிப்பிக்கிறதாக ரூபிகரித்துக் கொள்.

**தியானச் செபம்.**—செபமாலையின் மேன்மையையும் அதிலுண்டான நன்மையையும் நன்றாய் அறிந்து மதிக்க வரப்பிரசாதங் கேள்.

## முதல் பிரிவு

### செபமாலையின் உற்பத்தி

**தியானம்.**—1208-ம் வருஷத்தில் திருச்செபமாலையின் பத்தி ஆரம்பமானது. அக்காலம் அனேக பொல்லாப்பு மிகுந்ததாயிருந்ததுமன்றி விசேஷமாய்ப் பிராஞ்சு தேசத்தின் தென்பாகத்தில் அல்பிஜென்சர் என்னும் பதிதர் முளைத்துக் குடிகளின் இரத்தத்தைச் சிந்தி சகலத்தையும் நிர்த்தூளியாக்கிவந்தார்கள். அவர்களால் வரலான சேதபாதங்களை நிறுத்தும்படி எடுத்த உபாயமொன்றும் பலியாமல் போனதைக்கண்டு, பிரசங்கிகள் சபையை ஸ்தாபித்த அர்ச். சாமிநாதரை அங்கே அனுப்பினார்கள். அவர் தமது நம்பிக்கையெல்லாம் தேவதாயார் மேல்வைத்து, அல்லும் பகலும் அந்தப் பரமநாயகியைப் பார்த்து மன்றாடி வருவார். அவருடைய நம்பிக்கை வீண்போகவில்லை. தேவதாயார் அவருக்குத் தெரிசனையாகி நூற்றைம்பத்து மூன்று மணிச் செபமாலையைச் செபிப்பது எப்படியென்று படிப்பித்து, இதை அவர் சனங்களுக்குப் பிரசங்கித்து அவர்களும் இதைச் செபிக்கும்படி செய்தால் அதினால் அனேக கனமான நன்மைகள் உண்டாவதற்கு வழியாகுமென்று நிச்சயத்தருளினாள். இந்தத் திருவாக்கின்படியே காரியமுஞ் சம்பவித்தது. எப்படியெனில் செபமாலை செபித்த-

வுடனே இலட்சத்துக்கு அதிகமான பதிதர்களும் மூர்க்கரான கணக்கற்ற பாவிகளும் மனந்திரும்பினார்கள். இதனால் திருச் செபமாலைப் பத்தி எவ்வளவு சக்தியுள்ளதென்று யாவருக்கும் உச்சிப்பகலிலும் அதிக தெளிவாயிற்று. ஆகையால் இந்தப் பத்தி தீவிரமாய்ச் சகல கிறீஸ்துவ இராட்சியங்களிலும் பரம்பிற்று. இதற்குப்பின் அர்ச். பாப்புக்கள் செபமாலையின்பேரால் ஒரு சபையை ஏற்படுத்தி அதற்கு அனேகானேக பலன்களைக் கட்டளையிட்டு வெகுகாலமாக அக்டோபர் மாசத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமையை, இப்போது அக்டோபர் மாதம் 7-ம் தேதியை செபமாலைமாதாத் திருநாளாக நியமித்து அதற்குரிய பூசை சங்கீதமாலை முதலிய யாவற்றையும் ஆசீர்வதித்து அங்கீகரித்துக்கொண்டார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இந்தத் திருநாளினால் நாம் கைக்கொள்ளவேண்டிய ஞானப்பிரயோசனம் என்னவென்றால் முதலாவது திருச்சபையின்மேல் எப்போதுங் கண்ணுண்டாயிருந்து அதற்கு நேரிடும் ஆபத்து இக்கட்டுகளுக்குத் தக்கது வேண்டிய உதவிசெய்து வருகிற தேவபராமரிக்கையின் பேரில் உறுதியான விசுவாசம் அடையவேணும். 2-வது, தேவமாதாவின் வழியாகவே நாம் சகல நன்மையும் அடையும்படி சர்வேசுரன் சித்தமாயிருக்கிறாரென்று அர்ச். பெர்நார்து சொன்ன வாக்கியத்தின் உண்மையைக் கண்டுகொள்ளவேணும். 3-வது, இந்தத் திவ்விய கன்னிகையின்மேல் நமக்குள்ள நம்பிக்கையும் செபமாலையின்மேல் சிறப்புமுதல் நாம் கொண்டிருக்கிற மேலான எண்ணமும் பத்தியும் நாளுக்குநாள் அதிகரித்து வரவேணும். இந்த நன்மைகளெல்லாம் இந்தத்திருநாளில் நமக்குக் கிடைக்கும்படியாகப் பிரயாசப்படக்கடவோம்.

மனப்பற்றுதல்.—பத்தியோடு செபமாலை செபிக்கிறவர்களுக்குத் தேவமாதா செய்துவருஞ் சகாயத்துக்காக அவளுக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செலுத்தி, நாம் அநேகவிசை பத்தியில்லாமலும் பராக்கோடும் செபமாலை செபித்ததற்காக அவளிடத்தில் பொறுத்தல் கேட்போமாக.



பிரதிக்கினை.—தினந்தோறும் பத்தியோடே செபமாலை செபிக்கப் பிரமாணிக்கமாயிருப்போம்.

## 2-ம் பிரிவு

### செபமாலையின் மேன்மை

தியானம்.—செபமாலையின் மேன்மையையும் பலனையுங் கண்டுபிடிக்கவேணுமானால் அதின் ஆரம்பமும் அதிலடங்கிய மந்திரங்களும் தேவரகசியத் தியானமும் எவையென்று கவனிப்பதே போதும். முந்தமுந்தச் செபமாலை தேவமாதாவின் கையில்நின்று வருகிறது. 2-வது, குருக்களுடைய சங்கீதமாலையிலுள்ள நூற்றைம்பது சங்கீதங்களுக்கு ஒப்பாய் இதிலும் பதினைந்து விசை பத்து, ஆக நூற்றைம்பது பிரியதத்த மந்திரமும் ஒவ்வொரு பத்து மணியில் தியானிக்கவேண்டிய தேவ இரகசியமும், அதற்கு முன் சொல்லவேண்டிய பரமண்டல மந்திரமும் அடங்கியிருக்கின்றன. இந்தத் தேவரகசியங்களெல்லாம் இயேசுநாதருடைய சீவியத்தைச் சார்ந்தவைகளானபடியால் இவைகளை நாம் நன்றாய்த் தியானித்தால் திவ்விய இரட்சகர் மட்டில் நமக்குள்ள கடமைகளெவையென்றும், நமது இரட்சணியத்தோடுகூட மேலான புண்ணிய சாங்கோபாங்கத்தையும் அடைவதற்குச் செய்யவேண்டியதேதென்றுங் கண்டுகொள்வோம்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—திருச் செபமாலைப் பத்தியினால் வரும் பலன்களும் நன்மைகளும் உன் மனதில் நன்றாய்ப் பதிந்திருக்கின்றனவா? நீ செபமாலை செபித்துவரும் விதத்தைப் பார்த்து இதற்கு மறுமொழிசொல். செபமாலை செபிப்பது தேவமாதாவின் பேரிலுள்ள பத்தியின் கடமையாயிருக்க, நீ அதைச் செபிக்கும் விதமென்ன? செபத்துக்குத் தகாத இடங்களிலும் நேரங்களிலும் இதைச் செபித்துவருகிறாயல்லோ? தேவரகசியங்களையும் வழக்கமாய்த் தியானிக்கிறதில்லையாக்கும். இப்படியானால் செபமாலைப் பலனை வெகுவாய் இழந்துபோகிறாயென்பதற்குச் சந்தேகமில்லை. இது விஷயத்தில் உன்னி

டத்திலுள்ள குறை ஏதென்று விசாரித்து அதை உறுதி மனதோடு திருத்திக்கொள்.

**மனப்பற்றுதல்.**—முன்போல் இதில் அசட்டையாயிராமல் பத்தியோடே இதைச் செபிக்க வரப்பிரசாதங் கேள்.

**பிரதிக்கினை**—செபமாலையை நன்றாய் செபிப்பதற்கான உபாயங்களைத் தேடிக் கொள்வதுமல்லாமல் மற்றவர்களும் அதின் மேன்மை பிரயோசனத்தைக் கண்டு கைக்கொள்ளும்படி பிரயாசப்படு.

## 3-ம் பிரிவு

### செபமாலை சொல்லும் வகை

**தியானம்.**—செபமாலையைப் பத்தியோடாவது ஓயாத பராக்கில்லாமலாவது செபிப்பது மகா வருத்தமென்று பொதுப்பட யாவரும் முறையிடுவார்கள். இரண்டு மந்திரங்களை மாத்திரந் திரும்பத்திரும்பச் சொல்வதால் ஒருவகை சலிப்பு உண்டாவதாலும், நமது கவனத்தை ஒரு நிலையில் நிறுத்துவதற்கான ஆதாரமும் புஸ்தகமுமில்லாமல் செபிக்கிறதினாலும் இந்த வருத்தம் உண்டாகிறது. இந்த விக்கினத்தை நீக்குவதற்கு இப்போது சொல்லப் போகிற உபாயத்தைக்கேள். அந்தந்தப் பத்துமணிச் செபம் சொல்லத்துவக்குமுன் அதில் நீ தியானிக்கவேண்டிய தேவ ரகசியம் ஓர் சித்திரப்படத்தில் எழுதப்பட்டதுபோல் உன் கண்முன்னிருக்கிறதாக ரூபிகரித்துக்கொண்டு அதின்மேல் நினைப்பாயிரு. இப்படிச் செய்வாயானால் நீ உன் வார்த்தையையாவது அதின் அர்த்தத்தையாவது கவனியாமற் போனாலும் திவ்விய இரட்சகர்மேல் உன் நினைவு மாறாமலிருக்கும்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—இந்த உபாயத்தைப் பிரயோகித்து வருவாயானால் யாதொரு வருத்தமுமின்றி வாய்ச்செபத்தோடு மனச்செபத்தையும் ஒன்றித்து இரண்டிலுமுள்ள பலனைக் கைக்கொள்வாய்.



அன்றியும் இதினால் உன் புத்தியில் பரிசுத்த நினைவுகளும் இருதயத்தில் மதுரமான பற்றுதல்களும் பிறக்கும்.

**சம்பாஷணை.**—திருச்சபையில் முற்காலந்தொடங்கி இக்காலம் வரையில் மகா பிரபலியமாயிருக்கிற ஓர் சந்நியாச சபையை ஸ்தாபித்த அர்ச். சாமிநாதரோடு சம்பாஷணை செய்.

---

# 8-ம் தேதி

## ஒரு பரிசேயன் இயேசுநாதரை விருந்துக்கு அழைக்கிறன்

### அவன் தன் ஆத்துமகாரியத்தை அசட்டைசெய்து வெளி ஆசாரங்களைமாத்திரங் கவனிக்கிறதைப்பற்றிக் கண்டிக்கப்படுகிறன்

**ஆயத்தச் சிந்தனை.**—விருந்துக்கு அழைக்கப்பட்டவர்களெல்லாரும் இயேசுநாதர்சுவாமியுடைய கனம், மேரை மரியாதையைக் கண்டு அவரைச் சங்கையோடு பார்க்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

**தியானச் செபம்.**—உள்ளரங்கம் வெளியரங்கமாகிய இவ்விரண்டு புண்ணிய குணங்களும் உனக்குக் கிடைக்க வரப்பிரசாதங் கேள்.

## முதல் பிரிவு

### பரிசேயன் வெளிச்சடங்கை மாத்திரங் கவனிக்கிறதைப்பற்றி இயேசுநாதர் அவனைக் கண்டிக்கிறர்

**தியானம்.**—ஒருநாள் பரிசேயன் ஒருவன் இயேசுநாதரைத் தன் வீட்டில் விருந்துக்கு வரவழைத்தான். அவரும் போய்ப் பந்தியிலிருக்கும்போது அசனத்துக்கு முன்னே ஏன் அவர் கை கழுவாமலிருக்கிறரென்று அவன் யோசித்துக்கொண்டிருக்கையில், ஆண்டவர் அவனுடைய நினைவை அறிந்து அவனை நோக்கி: பரிசேயராகிய நீங்கள் பாத்திரத்தின் வெளிப்புறத்தைமாத்திரஞ் சுத்தம் பண்ணுகிறீர்கள்; உங்களுடைய உள்ளமோவெனில் களவுங், கப

டும் நிறைந்திருக்கிறதென்றார் (லூக். 11). மனுஷனை ஒரு பாத்திரத்திற்கு இணையிட்டுச் சொன்ன இந்த வாக்கியத்திலே அவனவனிடத்தில் மற்றவர்கள் காண்கிற குறைகளைச் சுத்தமாய்க் கவனிக்கவேண்டாமென்று இயேசுநாதர் சொல்லுகிறதில்லை. ஆனால் நமது உள்ளரங்கம் அல்லது ஆத்துமபரிசுத்தம் மாத்திரம் சர்வேசுரன் கண்ணுக்குப் பேறுபெற்றதாயிருப்பதால் அதை எல்லாத்துக்குமுன் கவனிக்கவேணுமென்று காட்டச் சித்தமானார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நமது பேரில் மற்றவர்கள் குற்றங் குறை சொல்லுகிறதற்கு இடங்கொடாமலிருக்கவேணுமானால் ஸ்திரமான புண்ணியங்கள் நமது உள்ளத்தில் ஊன்றியிருக்கும்படி விசேஷமாய்ப் பிரயாசப்படக்கடவோம். ஆயினும் யோக்கியத்துக்கான வெளி மேரையையும் மறக்கப்படாது. அடக்கம், சுத்தம், சுசிகரம், இவைகளுக்கடுத்த ஒழுங்குகளையும், ஆசார உபசாரத்துக்கடுத்த சட்டங்களையும், அலட்சியம்பண்ணுகிற சந்நியாசி தன்னையும், தன்னைச்சேர்ந்தவர்களையும் எல்லாரும் நிந்திக்க வழிபண்ணுகிறானென்பதற்குச் சந்தேகமில்லை. இதினால் பிறராத்துமத்துக்குச் செய்யக்கூடுமான நன்மையைச் செய்யாமற்போவதுமன்றி வேதத்துக்கும், தன் சபைக்கும் இழிவு வருவிக்கிறான்.

மனப்பற்றுதல்.—சர்வேசுரனுக்கு முன்பாகவும் மனுஷருக்கு முன்பாகவும் சந்நியாசிக்கடுத்த உத்தமதனத்தை அடைய வெகு பிரயாசப்படு.

பிரதிக்கினை.—கர்த்தருக்குமுன்பாக மாத்திரமல்ல, மனிதருக்கு முன்பாகவும் நாங்கள் நன்மைசெய்ய வருந்துகிறோமென்று அர்ச். சின்னப்பர் சொன்னதை அடிக்கடி மனதில் நினைத்துக்கொள்வோமாக (2 கொரி. 8).

## 2-ம் பிரிவு

### தன் உள்ளரங்கத்தைக் கவனிக்கிற சந்நியாசியின்பேரில்

தியானம்.—ஒருவன் உள்ளரங்க சீவியமும் சர்வேசுரனுடைய பார்வைக்கும் பிரியத்துக்கும் யோக்கியமுமுள்ள சந்நியாசி ஆகும்படி செய்கிற காரியங்கள் விசேஷமாய் மூன்று. முதலாவது, ஆத்தும சுத்தம் அல்லது பாவ மாசில்லாமையாம். அதாவது சாவானபாவமுமல்லாமல் கூடினவரையில் அற்பப்பாவமுதலாய் இல்லாமலிருப்பதாம். இந்த ஆத்துமசுத்தம் எவ்வளவுக்கு அதிகமாயிருக்குமோ அவ்வளவுக்குச் சர்வேசுரன் தமது பட்சத்தை நமக்குக் காண்பித்து நம்முடைய இருதயத்தில் வாசஞ்செய்யப் பிரியப்படுவார். இரண்டாவது, தியானத்தினாலும் ஓயாத மனவல்லயச் செபத்தினாலும் சர்வேசுரனோடு ஒன்றித்திருப்பதாம். இந்த ஒன்றிப்பினால் அப்போஸ்தலர் சொல்லுகிறதுபோல் நாம் சர்வேசுரனுடைய திருச் சித்தத்துக்கு ஒத்தபிரகாரம் நடந்து சர்வேசுரனாலும், சர்வேசுரனிடத்திலும் சீவித்து, சகலத்திலும் சர்வேசுரனையே நாடி சர்வேசுரனிடத்தில் சகலத்தையும் பார்த்து வருவோம். மூன்றாவது நேர்மையான கருத்தாம். இதினாலே ஒருவிதத்தில் நம்முடைய கிரிகைகளெல்லாம் தெய்வீகமான கிரியைகள்போலாகிச் சர்வேசுரனுக்கு மாத்திரம் பிரியப்படத் தேடுவோம்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இருதயப் பரிசுத்தமும், சர்வேசுரனோடு ஒன்றிப்பும், நேரான கருத்தும் உன்னிடத்தில் எப்படியிருக்கிறதென்று பார். இம்மூன்றையும் அடைகிறதற்காக நீ பிரயோகிக்கும் ஞான உபாய வழிகள் எவை? ஆத்தும பரிசுத்ததனம் அதிகரிக்கவும், சர்வேசுரனோடு ஐக்கியம் அன்னியோன்னியமாகவும், தன் கருத்தின் நேர்மை அதிக உத்தமமாகவும் விரும்புகிறவனுக்கு உபாய சூட்சங்கள் அகத்தியம் அவசியமாம்.

மனப்பற்றுதல்.—நீ உள்ளரங்க சீவியமில்லாமலும், சர்வேசுரனோடு ஒன்றித்து அவருடைய திருச் சித்தத்துக்கு ஏற்றபடி நடவாமலிருக்கிறதைப் பார்த்துத் தேவசமுகத்தில் உன்னைத் தாழ்த்திக்கொள்.

பிரதிக்கினை.—உள்ளரங்க சீவியத்தில் உத்தமனாவதற்கு வேண்டிய வழிகளை உற்சாகமுள்ள மனதோடே உபயோகிப்பேன்.

## 3-ம் பிரிவு

### தன்னுடைய வெளியரங்க நடத்தையைக் கவனிக்கிற சந்நியாசியின்பேரில்

தியானம்.—வெளியில் காணப்படுகிறதைக்கொண்டு மாத்திரம் ஒருவன் நல்லவன் அல்லது பொல்லாதவனென்று மனிதர் தீர்மானிக்கிறதினால், ஓர் சந்நியாசியினுடைய உள்ளரங்க புண்ணிய சீவியத்தைப்பற்றி அவனிடத்தில் தோன்றும் வெளிக்கிரியைகளைக் கொண்டுதான் மதிப்பார்கள். இதினாலே பிறசிநேகத்துக்கும் ஆத்தும ஈடேற்றத்துக்கும் அடுத்தவைகளில் உத்தியோகமாயிருக்கிற சந்நியாசி மனிதர் தன்னை மதித்துத் தன்பேரில் விசுவாசமாயிருக்கும்படி தன்னுடைய வெளிக் கிரியைகளை எல்லாம் திட்டப்படுத்தக் கடனுள்ளவனாயிருக்கிறான். இதற்காக அநேக காரியங்கள் அவனுக்கு வெகு உதவியாகும். முதலாவது: கனம்பொருந்திய மேரையும், அடக்கமும், ஒய்யாரமில்லாத யோக்கியமும், மனுஷரோடு சஞ்சரிக்கும்போது லோகத்தாரைப்போல நயபயத்தால் அசையாத பெருந்தன்மையுமாம். 2-வது, தன் சுய நன்மையைத் தேடாமல் பிறருக்காகத் தன்னாலான்மட்டும் உழைப்பதும், தயை சாந்தமும், புத்திவிவேகமுமுள்ள ஞான வைராக்கியமும், கல்வியும், காரியப் பகுத்தறிவுங் கூடிய இயல்பான நடக்கையும், நமது அந்தஸ்தின் கனத்துக்குத் தக்கது பிறர் நம்மிடத்தில் எளிதாயணுகும்படி மலர்ந்த முகங்கொடுத்துப் பேசுதலுமாம். 3-வது, தன் நடக்கை ஒழுங்காயும் ஒரே சீராயுமிருக்கப் பிரயாசப்படுவதும், தனக்கு இடையூறுகள் நேரிடும்போது நிலைமையோடும் மதுர குணத்தோடுமிருப்பதும், தனக்கு அநுகூலமாய் காரியம் பலிக்கும்போது தாழ்ச்சியாயிருப்பதுமாம்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இதில் உனக்குக் குறைவாயிருக்கிறதை யோசித்துப் பார்த்து அதை நீ அடைகிறதற்கு அவசரமான தேவ உதவி உனக்குத் தப்பாமல் கிடைக்குமென்று நிச்சயித்துக் கொண்டு பிரயாசப்படு. ஆகிலும் இது சுலுவான காரியமல்லவென்பது மெய்தான். ஆகையால் எந்நேரமும் உன் மட்டில் வெகு கவனமாயிருக்கக்கடவாய். ஏனென்றால் இது நமக்கு மகா மகா முக்கியமான காரியம். இதைக் குறித்துத் தனி ஆத்துமசோதனை செய்கிறது உனக்கு வெகு பிரயோசனமாயிருக்கும்.

சம்பாஷணை.—நீ உட்பட்டிருக்கிற சபையை உண்டாக்கின அர்ச்சியசிஷ்டவரோடாவது அதற்குப் பாதுகாவலான அர்ச்சியசிஷ்டவரோடாவது சம்பாஷணைசெய்து, அவருடைய உள்ளரங்க வெளியரங்க நடக்கையைக் கண்டு பாவித்து சர்வேசுரனும் மனுஷரும் உன்னைப் பார்த்து அகமகிழும்படி உனக்கு வேண்டிய வரப்பிரசாதங்கேள்.



---

## 9-ம் தேதி

### காய்க்காத அத்திமரத்தின் உவமை

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதர்சுவாமி தம்முடைய பிரசங்கத்தைக் கேட்க ஆசையோடு வந்த ஜனங்களுக்குப் புத்தி சொல்லுகிறதாக ரூபிகரித்துக்கொள்.

தியானச் செபம்.—ஆத்தும இரட்சணியத்துக்கும், புண்ணிய சாங்கோபாங்கத்துக்கும் உதவியான நற்கிரியைகள் உன்னிடத்தில் உண்டாகும்படி சர்வேசுரனைப்பார்த்து மன்றாடு.

## முதல் பிரிவு

### காய்க்காத அத்திமரம் அல்லது சந்நியாசியின் ஆத்தும வறட்சி

தியானம்.—கலிலேயருக்குள் குற்றவாளிகளான அநேகருக்குப் போஞ்சுபிலாத்து இட்ட பயங்கரமான தண்டனையைக் கண்ட சில யூதர் அதை இயேசுநாதருக்கு அறிவிக்க வந்தார்கள். அதைக்கேட்ட கர்த்தர் தாம் பிரசங்கித்துவந்த மூன்றுவருஷ காலமாய் அவர்களுக்கும்

அவர்கள் சாதியாருக்கும் ஏராளமாய்க் கட்டளையிட்ட தேவ வரப்பிரசாதத்துக்கு ஒத்தவண்ணம் அவர்கள் நடந்து தக்க பலனைக் கொடாதேபோனால், போஞ்சு பிலாத்து இட்ட தெண்டனையைவிட அவர்களுக்கு அதிக தெண்டனை வருமென்று காண்பிக்க இதுவே நல்ல சமயமென்று நினைத்து அவர்களுக்கு ஒரு உவமையைச் சொல்லத் துடங்கினார். அதாவது ஒரு மனிதன் தன் முந்திரிகைத் தோட்டத்திலே ஓர் அத்திமரத்தை நட்டுவைத்திருந்தான். பின்பு அதில் கனிகள் உண்டோவென்று தேடினபோது ஒன்றுமில்லாததைக் கண்டு, தோட்டக்காரனிடத்தில் சலிப்பாய்ச் சொன்னதாவது: இதோ, மூன்று வருஷகாலமாய் இந்த மரம் கனி கொடுக்குமென்று நம்பியிருந்தும் ஒரு பலனையும் காணேம். ஆகையால் இதை வெட்டிப்போடு; என்னத்துக்கு இடத்தை அடைத்துக் கொண்டிருக்கிறதென்றான். அப்போது தோட்டக்காரன் மாறுத்தரமாக: ஐயா, இன்னும் ஒரு வருஷம் பார்ப்போம். நான் சுற்றிலும் கொத்தி எருப்போட்டுப் பிரயாசப்படுகிறேன். கனி தந்தால் நல்லது, வைத்துக் கொள்வோம். இல்லாவிட்டால் வெட்டி எறிந்து போடுவோம் என்றான் (லூக். 13).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இயேசுநாதர் இந்த உவமையை அக்காலத்திலிருந்த யூதர்களைக் குறித்துச் சொன்னதுமல்லாமல் பின்வருங்காலத்தில் விசேஷ தேவ வரப்பிரசாதத்தைப் பெற்றுக் கொள்பவர்களையுங் குறித்துச் சொன்னாரென்று வேதவித்தியாபாரகர் எழுதிவைத்திருக்கிறார்கள். அப்படியிருக்கத் துறவறத்தில் உட்பட்டவனே, இந்த உவமை உனக்கே விசேஷமாய்ச் சொல்லப்பட்டதாக எண்ணிக்கொள்ளக் கடவாய். ஒரு பலனும் தராத தரிசு நிலமாகிய உலகத்தினின்று சர்வேசுரன் உன்னைப் பெயர்த்துச் சந்நியாசமாகிய பூங்காவனத்தில் கொண்டு நட்டார். இதில் வெகு பத்திரமாய் வளர்க்கப்பட்டுக் கோடாகோடி சனங்கள் அநேக வாரங்களிலும், மாதங்களிலுமுதலாய் அடையாத வரங்களை நீ ஒரே நாளில் ஏராளமாய்ப் பெற்று வருகிறாய். இதி



னால் வந்த புண்ணிய பேறுபலன் எங்கே? நீ செய்த கடைசி ஒடுக்கத்துக்கும் மாதாந்தர ஆத்தும சோதனைக்கும் பிறகு, அடைந்த புண்ணிய வர்த்திப்பு என்ன? ஐயோ, யாதொரு பலனும், வர்த்திப்புமில்லாமல் உன் ஆத்துமம் பாழடைந்து வறண்டு கிடக்கின்றதுமன்றி, நீ பெற்ற அநேக தேவ வரப்பிரசாதங்களையும் வீணாய்ப் போக்கடித்தாயாக்கும். இதுகாரியத்தில் உன் புத்தியை ஆண்டவர் துலக்கவேணுமென்று மன்றாடு.

மனப்பற்றுதல்.—இதெல்லாங் கண்டு வெட்கித் தேவபயத்தோடு உத்தம மனஸ்தாபப்படு.

பிரதிக்கினை.—இதுவரையில் நீ வருவித்துக் கொண்ட புண்ணிய நஷ்டத்தைப் பரிகரிக்க ஒட்டிக்கிரட்டியான மன ஊக்கத்தோடு பிரயாசப்படு.

## 2-ம் பிரிவு

### இந்த அத்திமரம் தீர்வையிடப்படுகிறது: அதாவது அசட்டைத்தனமுள்ள சந்நியாசியின் ஆத்துமம் சாபத்துக்குள்ளாகிறது

தியானம்.—நீ மனஞ்சோர்ந்து உன் ஆத்துமம் பாழ் நிலம்போலிருக்கிறதினாலே உனக்கு நேரிட்டிருக்கிற பொல்லாப்பு நஷ்டங்களை யோசித்துப்பார். நீ சர்வேசுரனுக்குச் செலுத்தவேண்டிய மகிமையைச் செலுத்தாமற் போனாய். உன்னை இரட்சிக்கும்படி இயேசுநாதசுவாமி பட்ட பாடுகளின் பலன் வீணாய்ப் போகும்படி செய்தாய். பிறருக்கு உன்னால் வரவேண்டிய நன்மையெல்லாம் வரவில்லை. உன் பத்தி சுறுசுறுப்பினாலே பெறுவிக்கத்தக்க தேவ ஆசீர்வாதத்தை உன்னோடு மடத்திலிருக்கிறவர்கள் அடையாமற் போனார்கள். சிரேஷ்டருக்கு உன்னால் உண்டாகவேண்டிய ஞானச் சந்தோஷம் உண்டாகாமற் போயிற்று. நீ அடையவேண்டிய ஏராளமான ஞானப் பொக்கிஷப்பலன்களையெல்லாம் இழந்துபோனாய். இவையெல்லாம் நீ விபரமாய் ஆராய்ந்து பார். இதன்பின் உன் பத்திக் குறைவினாலும் உன் ஆத்தும வறட்சியினாலும்

உனக்கு வந்த ஆபத்துக்களை யோசித்துக்கொள். நற்கனி கொடாத மரம் யாவும் வெட்டுண்டு அக்கினியில் போடப்படும். ஒன்றுக்கும் உதவாத ஊழியனைப் புறத்திப்பட்ட இருண்ட சிறையிலே தள்ளிப்போடுங்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்குமென்று இயேசுநாதர் திருவுளம்பற்றின வாக்கியத்தைக் கூர்ந்து யோசித்தால் உன் ஆத்துமத்துக்கு வந்த ஆபத்தைக் கண்டுபிடிப்பாய் (லூக். 13; மத். 25).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நற்கனிகொடாத இந்த வகை மரங்களுக்குள்ளே, அதாவது சர்வேசுரனால் சபிக்கப்பட்ட உதவாத ஊழியர்களுக்குள்ளே நீ அறிந்தவர்களும் ஒருவேளை இருக்கிறார்களாக்கும். ஐயோ! அவர்களுஞ் சந்நியாசத்துக்கு அழைக்கப்பட்டு உனக்குச் சகோதரராய் ஒரே மடத்தில் வசித்திருந்தபோதிலும், அதினின்று நீக்கப்பட்டுப் போனார்களாக்கும், அல்லது அவலமான சடுதி மரணம் வந்து அவர்களைக் கொண்டுபோய்விட்டதாக்கும்! நீ இதெல்லாம் ஆழ்ந்து யோசித்தால் உன்னிடத்தில் தேவபயமுண்டாகி, கவலை கரிசனத்தோடு உன் உள்ளத்தைப் பரிசோதித்து உதாரமுள்ள மனதோடு நல்ல பிரதிக்கினை செய்யும்படி தக்க உறுதியடைவாய்.

மனப்பற்றுதல்.—சர்வேசுரன் இதுவரையில் உன்னைப் பொறுமையோடு சகித்துக்கொண்டிருந்ததற்காக நன்றியறிந்த தோத்திரஞ் செய்து, உன்னை நீ நன்றாய் அறிந்து திருத்திக்கொள்வதற்கு அவசரமான ஞான ஒளியையும், திடனையும் கேட்பாயாக.

பிரதிக்கினை.—யாதொரு நியாயமுமின்றி அதைரியம் வருவிக்கிற பயமும், யாதொரு அபாயமுமில்லையென்று தப்பிதமாய் எண்ணிக்கொள்ளச் செய்கிற வீண் அமரிக்கையுமாகிய இந்த இரண்டு கண்ணிகளிலே நீ அகப்படாதிருக்கும்படி உன் ஆத்தும குருவுக்கு உன் உள்ளத்தை முழுதும் திறந்து காண்பித்து, அவருடைய ஆலோசனையைப் பின்சென்று நட.



## 3-ம் பிரிவு

### அத்திமரத்துக்கு அதாவது சந்நியாசியின் ஆத்துமத்துக்குக் கொடுக்கப்பட்ட கெடு

தியானம்.—அந்த அத்திமரத்துக்கு ஒரு வருஷ காலம் கெடு கொடுக்கவேணுமென்று கேட்டுப் பெற்றுத் தந்த பிறசிநேகமும் பற்றுதலுமுள்ள அந்தத் தோட்டக்காரன் யாரென்றால்: இயேசுநாதர்சுவாமிதானென்று அறிந்துகொள். அவர் மனுஷனாகியமட்டும் நமது தேவ பிதாவினிடத்தில் உனக்காக மன்றாடி மனுப்பேசி, புதிதான தேவ வரப்பிரசாதங்களையும், உலகத்தில் நீ இன்னுஞ் சிலகாலம் உயிர் வாழும்படி ஆயுசுகாலத்தையும் உனக்கு அடைந்து தந்திருக்கிறார். நமக்குத் திடனும் உறுதியும் வருவிக்கத்தக்க இவ்வித அன்பும் சிநேகமுமாகிய சுகிர்த இலட்சணங்கள் நமது திவ்விய இரட்சகரிடத்தில் பூரணமாய் நிறைந்திருக்கின்றனவென்று அர்ச். அருளப்பர் சொல்லுகிறார். இதினிமித்தமே: நீதிபரரான இயேசுக்கிறீஸ்துநாதர் நமக்காகத் தேவ பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராய் இருக்கிறாரென்று எழுதிவைத்திருக்கிறார் (1 அரு. 2).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இவைகளை நினைத்து உன் இருதயத்தில் நம்பிக்கையையுந் தைரியத்தையும் எழுப்பி: என்னைத் திடப்படுத்துகிறவருடைய உதவியைக்கொண்டு என்னால் சகலமுங் கூடுமென்று அர்ச். சின்னப்பரோடு நீயும் சொல்லுவாயாக. மேலும் அவர் எனக்குக் கொடுத்திருக்கிற காலத்தையும் இஷ்டப்பிரசாத உதவியையுங்கொண்டு பலன் அடையப் போகிறேன்; அவர்பேரால் என்னை நடத்தும் ஆத்தும குருவினிடத்தில் போய், என் ஆத்தும அசமந்தத்தை நீக்கவும், புண்ணிய பேறு பலன்களை ஏராளமாய் அடையவும் எனக்கு தக்க வழி காண்பிக்கவேணுமென்று கேட்பேன்; என்ன வந்தாலும் இந்த வழிகளை விடாமல் அகத்தியமாய் அநுசரிப்பேனென்று தீர்மானித்துக்கொள். மேலும் தேவ சங்கீதத்தில் "சொன்னேன், சொன்னதுந்

துவக்கினேன்" என்று பாடியிருக்கிற பிரகாரம் நீயும் உன் நல்ல தீர்மானங்களைத் தாமதமின்றி அநுசரிக்கத் துவக்குவாயாக (சங். 76).

சம்பாஷணை.—இதுவரையில் உன்னிடத்திலிருந்த பிரமாணிக்கக் குறையையும், இப்போது உன்னிடத்திலுள்ள நல்ல பிரதிக்கினையையும் பார்த்துக்கொண்டிருக்கிற உன் காவலான சம்மனசானவரோடு சம்பாஷணை செய்.

---

## 10-ம் தேதி

### பரிசேயர் இயேசுநாதரைப் பயமுறுத்தும்படி வீணாய்ப் பிரயாசப்பட்டதின்பேரில்

ஆயத்தச் சிந்தனை.—சில பரிசேயர் இயேசுநாதரை நோக்கி: ஏரோதேஸ் என்பவன் உம்மைக் கொலைசெய்ய நினைத்திருக்கிறதினாலே நீர் இவ்விடம்விட்டு அப்புறம்போமென்று சொல்லுகிறதைக் கேட்கிறதாக ரூபிகரித்துக் கொள்.

**தியானச் சேபம்.**—நீ துவக்கின நன்மையைப் பசாசினுடைய தந்திரத்தினாலாவது மனுஷருடைய முகப்பிரீதியினாலாவது ஒருகாலும் விட்டுவிடாதிருக்கும்படி வேண்டிய வரப்பிரசாதங் கேள்.

### முதல் பிரிவு

#### இயேசுநாதசுவாமியைப் பரிசேயர் பயமுறுத்தப் பார்க்கிறார்கள்

தியானம்.—இயேசுநாதர் எருசலேம் பட்டணத்தை விட்டு நாளுக்கு நாள் அதிக தூரம் பயணஞ்செய்து கலிலேயா தேசத்துக்கடுத்த ஊர்களுக்குப் போய் அங்கே வெகு பலனோடு தமது சுவிசேஷத்தைப் போதித்துக் கொண்டுவந்தார். பரிசேயர் காய்மகாரப்படுவதற்கு இதுவே போதுமானதாயிருந்தது. ஆகையால் அவரு



டைய திவ்விய போதகத்தைக் கேட்டுச் சனங்கள் அடைந்த நன்மையைக் கெடுக்கவும், அவர் இனி அவ்விடங்களில் பிரசங்கியாதபடி தடுக்கவும் எத்தனித்துச் சில கள்ள ஞாயங்களை அவருக்குச் சொல்லத் தீர்மானித்தார்கள். இந்தத் தீர்மானத்தோடு நல்ல யோக்கியஸ்தர்போல அவரிடத்திற் போய்: குருவே, ஸ்நாபக அருளப்பரைக் கொலைசெய்த ஏரோதேஸ் இராசா உம்முடைய உயிரையும் வாங்க நினைத்திருக்கிறான்; ஆகையால் இவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டு வேறிடத்திற்குப்போய் உம்முடைய உயிரைக் காப்பாற்றிக் கொள்ளுமென்று சொன்னார்கள் (லூக். 13).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—பிறசிநேகம், ஆத்தும ஈடேற்றம், இவைகளுக்கடுத்த அலுவல்களைச் செய்து வருகிறவர்களால் உண்டாகும் நன்மையைக் கண்டு பசாசு காய்மகாரப்பட்டு அவர்களுடைய முயற்சி அநுகூலமாகாதபடி தன்னாலானதெல்லாஞ் செய்து தடுக்கவும், அவர்களை அவ்விடத்தைவிட்டு அப்புறப்படுத்தவும் வழிதேடும். சில சமயத்தில் அவர்களுக்குப் பயம்வருவித்து மனந்தத்தளிக்கச் செய்யும். சில சமயத்தில் அவர்களுக்கு விரோதஞ்செய்யச் சில சகோதரரைப் பொய்யான ஞாயங்களால் தூண்டிவிட்டு அவர்கள் இன்ன ஊரிலாவது மடத்திலாவது இருக்கிறது மற்றவர்களுக்குப் பிடிக்காதென்று காண்பித்து அவர்களைத் தொலையில் அனுப்பிவிட முயற்சி செய்யும். வேறு சில சமயத்தில் காய்மகாரிகளை எழுப்பிவிட்டுச் சிரேஷ்டரிடத்தில் அபாண்டமாய்க் கோள் குண்டணி சொல்லும்படி செய்து அவர்கள்மேல் பழுது நினைக்கப்பண்ணும். இத்தொகைப்பட்ட விரோதங்கள் உனக்கு நேரிட்டாலும் நேரிடும். இப்படியே அநேக மகாத்துமாக்களுக்கும் நேரிட்டது. அவர்களுக்குள்ளே அர்ச். சிலுவை அருளப்பர், அர்ச், இராசேந்திர அருளப்பர் முதலிய அநேக பேர்போன தேவ ஊழியர் வெகு உபத்திரவப்பட்டார்கள். இவைகளுக்கெல்லாம் அவர்கள் மயங்காமல் சர்வேசுரன் கையிலே தங்களை முழுதும் ஒப்படைத்ததினாலே சர்வேசுரன் அவர்களை அபாயவேளையில் தேற்றி அதன்பின் மகிமையில் உயர்த்தினார்.

மனப்பற்றுதல்.—காய்மகாரிகளும் அவிசுவாசிகளும் உனக்கு விரோதமாய்ச் செய்யும் குழப்பத்தினால் வரும் துன்பங்களை நீ விசுவாசத்தினால் மேற்கொள்ளும்படி வரப்பிரசாதங் கேள்.

பிரதிக்கினை.—துஷ்டர் உனக்குச் செய்யும் மிரட்டுகளைப் புறக்கணித்து, என்ன சங்கடம் வந்தாலும் எல்லாத்தையும் பொறுமையோடு சகித்து நன்மை செய்.

## 2-ம் பிரிவு

### இயேசுநாதசுவாமி காண்பித்த தைரியமும் உறுதியும்

தியானம்.—பரிசேயர் இயேசுநாதரைப் பயமுறுத்தத் தேடினபோதிலும் அவர் அஞ்சாமல், தங்கள் கடமையை நிறைவேற்றுகிறவர்களிடத்தில் விளங்கத்தகும் அமரிக்கையும் உறுதியுமான மனதோடு சொன்னதாவது: நான் இன்றும், நாளையும், நாளை நின்றும் பசாசுக்களை ஓட்டி, வியாதிக்காரரைக் குணமாக்க வேண்டுமென்று அந்த நரியினிடத்தில், அதாவது தந்திர வினையமாய் அரசாண்டு வருகிற எரோதெஸிடத்தில் போய்ச் சொல்லுங்களென்றார் (லூக். 13). இயேசுநாதர் சொன்ன இந்தத் திடமான மறுமொழியைக் கேட்டுப் பரிசேயர் வாய் அடைபட்டுப் போயிற்று. இந்த மறுமொழிக்குத் தார்ப்பரியமேதென்றால் நமக்குப் பிரியமானதையும், நாம் வந்த அலுவலுக்குத் தேவையானதையுஞ் செய்கிறோம். நாம் ஒருவருக்கும் பயப்படுகிறதில்லை. நமக்குச் சித்தமான காலத்திலும் விதத்திலுமன்றி நாம் மரிக்கப்போவதில்லையென்றாற்போலாயிற்று.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—ஒருவன் சந்நியாசியாயிருந்தாலுஞ்சரி உலகவாசியாயிருந்தாலுஞ்சரி, தன் மனச்சாட்சிக்கேற்கத் தன் கடமையைச் சரியாய் நிறைவேற்றுவானாகில் அவனுக்கு நமது ஆண்டவரைப்போலத் துணிகரமாய்ப் பேசுவதற்கு ஞாயமுங் கடமையுமுண்டு. நான் சர்வேசுரனுக்குச் சித்தமானதைச் செய்கிறேன்; கீழ்ப்படிதலினால் எனக்குக் கட்டளையிடப்



பட்டதைச் செய்கிறேன்; சர்வேசுரன் ஒருவருக்கே பயப்படுகிறேன்; அவர் தீர்மானிக்கிற விதத்திலும் காலத்திலும் நான் சாவேன்; என்னுடைய கடமையைப்பற்றியாவது கீழ்ப்படிதலைப்பற்றியாவது நான் உயிரிழக்க எனக்குக் கொடுத்து வைத்திருந்தால் எவ்வளவோ பாக்கியமென்று நல்ல சந்நியாசி சொல்லுவான். இப்போர்க்கொத்த உறுதியும் திடாரிக்கமும் உன்னிடத்தில் காணப்படுகின்றனவா? நீயே நிதானித்துப் பார். சிலவிசை வீண் பயத்தினால் மலைத்துத் திகைத்து, உனக்கு நேரிட்ட வருத்தம் சலிப்பு முதலிய இடையூறுகளோடு எதிர்த்து நிற்கத் திராணியற்றவனாய், உனக்குச் சௌக்கியக் குறையென்று வீண் போக்குச் சொல்லி, நீ இருந்த இடத்தையும் செய்துவந்த வேலையையும் மாற்றும்படி கேட்கவில்லையோ? உனக்குக் குறிக்கப்பட்ட அலுவலிலே எங்கே அநுகூலமாகாமல் நாலுபேருக்குமுன் வெட்கம் உண்டாகுமோவென்று பயந்து இந்த ஒரே முகாந்தரத்தைப்பற்றிமாத்திரம் சாக்குப்போக்குச் சொல்லி அந்த அலுவலை விட்டு விலகுவதற்கு நீ வழி தேடவில்லையோ?

மனப்பற்றுதல்.—உதார குணத்தோடு தேவ ஊழியத்தில் முழுப் பற்றுதலான இருதயத்தையும், சர்வேசுரனுக்குத் துரோகம் பண்ணுகிறதற்கு மாத்திரம் பயந்து வேறெதுக்கும் அஞ்சாத மனதையும் ஆண்டவரிடத்தில் கேள்.

பிரதிக்கினை.—நன்மைசெய்து, உனக்கு வரும் எவ்வித விரோதத்தையும் பொறுமையோடு சகிப்பாயாக.

## 3-ம் பிரிவு

### எருசலேம் பட்டணத்துக்கு வரப்போகிற நிர்ப்பாக்கியத்தைக் கண்டு இயேசுநாதசுவாமி மனமிரங்குகிறார்

தியானம்.—திவ்விய கர்த்தர் பரிசேயரை நோக்கி: எந்தத் தீர்க்கதரிசியும் எருசலேம் பட்டணத்துக்குப் புறம்பாகச் சாகிறது தகாதென்றார் (லூக். 13). இந்த வார்த்தைகளினாலே யூதேயா நாட்டின் ராஜதானிப் பட்டணத்

திலே தாம் பிரவேசிப்பதற்குப் பரிசேயர் தம்மை உடன்படுத்தப்பண்ணின தந்திரங்களெல்லாம் தமக்குத் தெரியுமென்றும், அந்தப் பட்டணத்திலேதான் தாம் சாவோமென்றும், ஆயினும் அது தமக்குப் பிரியமானபோது மாத்திரந்தானென்றும் அவர்கள் அறிந்துகொள்ளும்படி செய்தார். பின்னும் அவர் எருசலேம் பட்டணத்தாருக்கு வரப்போகிற நிர்ப்பாக்கியத்தை நினைத்துப் பெருமூச்செறிந்து சொன்னதாவது: எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்து உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லால் எறிகிற எருசலேமே, கோழியானது தன் குஞ்சுகளைத் தன் இரக்கையின் கீழ் அணைத்துக்கொள்வதுபோல் நாமும் எத்தனையோமுறை உன் குமாரர்களை அணைத்துக்கொள்ளச் சித்தமாயிருந்தோம்! ஆனால் நீ இடங்கொடாதிருந்தாயென்றார் (மத். 23).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இவ்விடத்தில் நமது திவ்விய இரட்சகருடைய இருதயத்தின் தயாளப் பெருக்கத்தைக் கண்டு ஆச்சரியப்படக்கடவோம். இப்பேர்க்கொத்த உருக்கமான பட்சமும் ஆத்தும இரட்சணிய ஆவலும் நிறைந்த இந்தத் திரு இருதயத்தைப் போல நம்முடைய இருதயமும் இருந்தாலல்லோ பாக்கியம்! நமது சகோதரர்களும் நமது விசாரணைக்கு ஒப்பிக்கப்பட்ட சகலரும் படும் இக்கட்டு அவசரங்களைக் கண்டு அவர்களுக்கு உதவி ஆறுதல் வருவிக்கத் தேடி நம்மையே நாம் மறந்துவிட்டாலல்லோ தாவிளை. இந்தச் சாங்கோபாங்கத்தை அடைவதற்கு நாம் என்ன முயற்சி செய்கிறோம்?

சம்பாஷணை.—இன்றையத்தினம் அர்ச். பிராஞ்சீஸ்கு போர்ஜியாவென்கிறவருடைய திருநாளானதினால் அவரோடு சம்பாஷணை செய். இவர் கர்த்தலோனியா பட்டணத்தில் ராஜ பிரதிநிதியாயிருந்து அதை விட்டு இயேசுசபையிலே பிரவேசித்து அதின் மூன்றும் அதிசிரேஷ்டராகித் தவத்திலும் தாழ்ச்சியிலும் ஆச்சரியமான மாதிரிகையாயிருந்தார்.

---



# 11-ம் தேதி

## சிதறிப்போன ஆட்டின் உவமை

ஆயத்தச் சிந்தனை.—திவ்விய ஆயனானவர் காணாமற்போன ஆட்டைத் திரும்பக் கண்டு அதைத் தமது தோளின்பேரில் சுமந்துகொண்டு வருகிறதைப் பார்க்கிறதாக ஞாபிகரித்துக்கொள்.

தியானச் சேபம்.—நம்பிக்கையினாலும், சிநேகத்தினாலும் உன் இருதயம் பூரிக்கும்படி வரங்கேள்.

## முதல் பிரிவு

### சிதறிப்போன ஆட்டை ஆயன் தேடும்விதம்

தியானம்.—நல்ல ஆயன் உவமையோடு தோதாய் வந்து முடிகிற உருக்கமான இந்த உவமையை இயேசுநாதசுவாமி பரிசேயருக்குக் கேள்வி கேட்கிறவிதமாய்ச் சொல்லிக்காண்பித்தார். ஏனெனில் அவர் பாவிகளைத் தம்மிடத்தில் தாராளமாய் வரவிடுகிறாரென்றும், அவர்களோடு அசனம்பண்ணுகிறாரென்றும் பரிசேயர் அவர் பேரில் குற்றஞ் சாட்டினார்கள். அவர் இதைக்கண்டு அவர்களைப்பார்த்து: உங்களில் ஒருவன் நூறு ஆடு வைத்திருந்தும் அவைகளில் ஒன்று காணாமற்போனால் தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் காட்டில் விட்டுவிட்டு காணாமற்போன ஆட்டைக் கண்டுபிடிக்குமட்டும் அதைத் தேடாமலிருப்பானோவென்றார் (லூக். 15). இந்த உவமையில் சொன்னபடி தவறிப்போன ஆட்டைத்தேடித் திரிகிறதிலே ஆயனுக்கு உண்டான ஆத்திரத்தைக் கவனித்துப்பார். ஒரு ஆடு குறைகிறதென்று கண்டமாத்திரத்தில் தான் சாப்பிடவும் யாதொரு ஆகாரம் கொண்டுபோகவும் நினையாமல், அதைத் தேடிக்கொண்டு ஓடுகிறான். அதைத் தேடுகிறதிலே அவனுக்குண்டான பொறுமையையும், கவலையையும் யோசித்துப்பார். தான் போகவேண்டிய தூரத்தையும், பாதையிலுள்ள கல்லு, முள்ளு, கரடுகளையும், தனக்கு

வரும் களைப்பு, தவிப்பையும் பார்த்து அவன் பின்வாங்குகிறதுமில்லை; தனது அன்பான ஆடு அகப்படுமட்டும் நிற்கப்போகிறதுமில்லை.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நீ நிர்ப்பாக்கியமாய்ப் பாவத்தில் விழுந்து சர்வேசுரனை விட்டுப் பிரிந்து தூரமாய் அலைந்து திரியும்போது அவர் உனக்கு இவ்விதம் செய்யவில்லையோ? உனக்கு மனத் துன்பத்தையும், கவலை கலக்கத்தையும் அனுப்பி, நீ உன் பிடிவாதத்தையும், பசாசின் தந்திர பிரயாசங்களையுஞ் செயித்துவருமட்டும் உனக்குத் தமது அநுக்கிரகப்பிரசாதத்தைத் தந்து இவ்விதமாய் உன்னைத் தேடி அழைக்கவில்லையோ?

மனப்பற்றுதல்.—ஆண்டவர் உன்மட்டில் காண்பித்த தயாளத்தைக்கண்டு ஆச்சரியப்பட்டு, அவரைப் போற்றிப் புகழுவாயாக.

பிரதிக்கினை.—சர்வேசுரன் உன்னை நடப்பிக்கிறது போல நீயும் உனக்குக் கீழ்ப்பட்டவர்களை நடப்பிக்கக்கடவாய்.

## 2-ம் பிரிவு

### காணமற்போய்க் கண்டுபிடிக்கப்பட்ட ஆட்டை ஆயன் நடத்தும் விதம்

தியானம்.—அந்த ஆயன் காணமற்போன ஆட்டின் தடத்தைப் பார்த்துக்கொண்டேபோய்க் கடைசியாய் அதைக் கண்டபோது அது ஓடி அலையாமல் நிற்கும்படி பட்சத்தோடு அதைத் தன்னிடத்தில் கூப்பிடுகிறான். அது தன்கிட்டச் சேர்ந்தவுடனே அதைக் கோபித்து அடியாமல் அதின்பேரில் தனக்கு ஆயாசமில்லையென்று காண்பிக்கத்தக்கதாகச் சந்தோஷத்தோடு அதைத் தடவிக்கொடுக்கிறான். இத்தோடு முடியவில்லை. ஆடு இளைத்துக் களைத்து மூச்சு வாங்குகிறதைக் கண்டு அதின்பேரில் மனமிரங்கி அந்த நல்ல ஆயன் என்னசெய்கிறானென்றால், இயேசுநாதசுவாமி சொன்னதுபோல மகா அன்போடு அதைத் தன் தோளின்மேல் சுமந்து கிடையில் கொண்டுவந்து சேர்க்கிறான்.



இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—மகா ஆச்சரியப்பிரமிப்பைவருவிக்கத்தகும் இந்த உவமையைக்கொண்டு நமது திவ்விய இரட்சகர் நமதுமேல் தமக்குள்ள அணைகடந்த நேசப்பற்றுதல் இவ்வளவென்று காண்பிக்கிறார். அவரிடத்தில் மாத்திரந்தான் இந்த உருக்கமான சிநேகம் பூரணமாய் விளங்குகிறது. பாவ வழியில் நடந்தபின், தான் செய்த பாவத்தின்பேரில் உத்தம மனஸ்தாபப்படுகிற எவனும் இதற்கு அத்தாட்சியாயிருக்கிறான். அதெப்படியென்றால் அவன் தன் பாவத்தை வெறுத்து முழுமனதோடு சர்வேசுரனிடத்தில் திரும்பிவரும் க்ஷணத்தில்தானே, அவன் மனதுக்குள்ளிருந்த மனக்குத்தெல்லாம் நீங்கி அதற்குப் பதிலாக வாக்குக்கெட்டாத அமரிக்கை உண்டாகிறது. சர்வேசுரன் அவனுக்குக் கொடுக்கிற ஏராளமான இஷ்டப்பிரசாதத்தினாலே அவனைத் தமது வசமாக்கி, அவனுக்கு உதவிசெய்கிறதினால் அவன் புண்ணிய வழியில் வருத்தப்பட்டு நடவாமல், இயேசுநாதசுவாமி தன்னைத் தமது திருத்தோளில் தூக்கிக்கொண்டுபோகிறதாக உணருவான். அவனுக்கு ஒன்றும் பாரமாயிராது. இதுவரையில் அவனுக்குக் கூடாததுபோல் தோன்றினதெல்லாம் இப்போது சுளுவாகிறது. ஒரு ஆத்துமத்தை இரட்சித்ததினாலே தேவ குருப்பிரசாதியிடத்தில் உண்டாகிற மகிழ்ச்சியானது மனஸ்தாபப்படுகிற பாவியையும் மகிழ்ச்சியடையச் செய்யும். நெடுநாளாய் அவன் அறியாத மனச்சமாதானத்தையும் பாக்கியத்தையும் சுகித்து அநுபவிப்பான். இதெல்லாம் நீ அநுபோகத்தினால் கண்டதில்லையோ?

மனப்பற்றுதல்.—ஆண்டவரே, தேவரீர் சகலத்திலும் எவ்வளவோ நன்மையும் மதுரமும் உள்ளவராயிருக்கிறீர்!

பிரதிக்கினை.—மற்றவர்களோடு புழங்கும்போது நல்ல ஆயனாகிய இயேசுநாதசுவாமியுடைய மதுரகுணத்தையும் இரக்கத்தையுங் கண்டுபாவிப்பேன்.

## 3-ம் பிரிவு

### காணாமற்போன ஆட்டை ஆயன் திரும்பக் கண்டதினாலே தான் அடைந்த மனச்சந்தோஷத்தைக் காட்டும்விதம்

தியானம்.—மேலும் இயேசுநாதசுவாமி தொடர்ந்து சொன்னதாவது: ஆயன் தன் வீட்டில் சேர்ந்த மாத்திரத்தில் தன் சிநேகிதரையும் அடுத்த வீட்டாரையும் அழைத்து, காணாமற்போன ஆட்டை நான் திரும்பக் கண்டதினாலே என்னோடுகூட நீங்களும் சந்தோஷப்படுங்களென்றான் (லூக். 15). நமது நேச இரட்சகர் தாமே இந்த உவமையின் மூன்றாம் பாகத்துக்குஞ் சொன்ன வியாக்கியானம் நமக்கு வெகு ஆறுதல் வருவிக்கத் தக்கதாயிருக்கிறதினாலே அதை நாம் விசேஷமாய்க் கவனிக்கக் கடவோம். எப்படியெனில் ஒரு பாவி தன் பாவத்துக்காகத் தபசு செய்தால், தபசு செய்யக் கடமையில்லாத தொண்ணூற்றொன்பது நீதிமான்களைவிட அந்தப் பாவியைப்பற்றிப் பரலோகத்திலே அதிக சந்தோஷமுண்டாகுமென்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேனென்றார் (லூக். 15).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—வாக்குக்கெட்டாத நேசத்தைக்காட்டும் இந்தத் திவ்விய வாக்கியத்தைக்கொண்டு மனந்திரும்பின பாவியின்பேரில் சர்வேசுரன் காண்பிக்கும் இரக்கமும், தயாளமும் இம்மாத்திரமென்று உணர்ந்து மதிக்கக்கடவோம். நாம் முன் கட்டிக்கொண்ட பாவங்களையெல்லாம் பாவசங்கீர்த்தனத்தில் வெளிப்படுத்தியிருந்தபோதிலும், அவைகள் நமது ஞாபகத்தில் வரும்போது, சர்வேசுரன் அவைகளைப் பொறுத்தாரோ அல்லவோவென்றும், ஒருவிசை பொறுத்தல் கொடுத்தபின் திரும்ப அதை மாற்றிப்போடுவாரோவென்றும் சந்தேகப்பட்டுக் கலங்கி அதைரியப்படுவது சர்வேசுரனுக்கு எவ்வளவு நிந்தையென்றும் நமக்கு எவ்வளவு கெடுதியென்றும் இந்த உவமையினால் கண்டுகொள்ளக் கடவோம். சிலவிசை நீயும் இப்படி நடந்ததில்லையோ? அப்படியானால் நீ செய்தது குற்றமென்று நன்



றாய் அறிந்துகொள். இனிமேல் இப்படிப்பட்ட சோதனை வந்தால் நீ மனந்திரும்பினதினாலே பரலோகத்தில் சம்மனசுக்களுக்கும், அர்ச்சியசிஷ்டவர்களுக்குஞ் சந்தோஷத்துக்கு இடமாச்சுதென்று இயேசுநாதர் சொன்னதை நினைத்துக்கொள். இந்த நினைவினாலே உன் இருதயத்திலே நம்பிக்கை ஸ்திரப்பட்டு, சந்தோஷத்தினால் உன் உள்ளம் பூரிக்கும். அன்றியும் நீ சாங்கோபாங்கத்திலே நாளுக்கு நாள் வர்த்திக்க இது உனக்கு வெகு உதவியாயிருக்கும்.

சம்பாஷணை.—உன் ஆத்துமத்தின் திவ்விய ஆயனாகிய இயேசுநாதசுவாமியோடு சம்பாஷணை செய்.

---

## 12-ம் தேதி

### இயேசுநாதர்சுவாமி தமக்குச் சீஷராயிருக்க மனதுள்ளவர்களிடத்திலே கேட்குஞ் சங்கேத நிபந்தனைகள்

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதர்சுவாமி திரளான ஜனங்கள் நடுவே வீற்றிருக்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

தியானம்.—திவ்விய இரட்சகர் தம்மைப் பின்செல்ல மனதுள்ளவர்களிடத்தில் ஆசிக்கிற குணங்கள் எவையென்று அறிந்து அநுசரிக்கும்படி வேண்டிய வரப்பிரசாதத்தைக் கேள்.

## முதல் பிரிவு

### நமது உற்றார் பெற்றாரை ஞானவிதமாய்ப் பகைக்க வேண்டியதின்பேரில்

தியானம்.—கள்ள ஞானிகளான பரிசேயரைப்போல் வஞ்சகக்குணமில்லாமல் இயேசுநாதரைப் பின்தொடர்ந்து அவருடைய பிரசங்கத்தைக் கேட்டுவந்த திரளான ஜனங்களில் அநேகம்பேர் அவருக்குச் சீஷர்களாயிருக்க ஆசை காண்பித்தார்கள். திவ்விய கர்த்தர் அவர்களைத்

தமக்குச் சீஷர்களாக்கிக்கொள்வதற்குச் செய்த நிபந்தனைகளைக் கேட்டு அவர்கள் ஆச்சரியப்பட இடமாயிருந்தது. அவைகளில் முந்தினது ஏதென்றால்: என்னிடத்தில் வர விரும்புகிறவன் தன் தாய், தந்தை, பெண்சாதி, பிள்ளைகள், சகோதரர் சகோதரிகளைப் பகைக்காமலிருப்பானாகில், அவன் எனக்குச் சீஷனாயிருக்கக் கூடாதென்றார் (லூக். 14). இதற்கு அர்த்தம் ஏதென்றால் ஒருவன் தன் தாய் தந்தையர்கள்மேல் வைத்த சிநேகமானது தேவசிநேகத்தை இழந்துபோவதற்கு ஏதுவும் வழியுமாயிருந்தால் அதை வெறுத்துவிடத் துணிவில்லாமலும், கடமையான காரியங்களிலே சர்வேசுரனுடைய சித்தம் இன்னதென்று அறிந்தும் அவர்கள் அதற்கு விரோதஞ் செய்வார்களாகில் அவர்களைவிட்டு விலகிக்கொள்ளத் தீர்மானஞ் செய்யமாட்டாமலுமிருப்பானாகில் அவன் இயேசுநாதருக்குச் சீஷனாயிருக்கக் கூடாதென்று அர்த்தமாகும்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது—இயேசுநாதருடைய சீஷராயிருக்கப் பாக்கியம்பெற்ற நமக்கு அவர் தமது கர்த்தத்துவத்தோடு கற்பிக்கிறவைகளாவன:—முதலாவது, நாம் எந்தச் சமயத்திலும் அவரையே சகலத்துக்கு மேலாக எண்ணிச் சிநேகிக்கவேணும், 2-வது, உலகத்துக்கும் நமக்கும் யாதொரு ஒட்டுப்பற்றில்லாமல் சகலத்தையும் விட்டுவிடவேணும், அப்படி இல்லாவிட்டால் அவரோடு நாம் தாராளமாய் ஒன்றித்திருப்பதற்குத் தடையான பற்றுதலையாகிலும் அடியோடு நமது இருதயத்தினின்று பிடுங்கி எறிந்துவிட்டு, நம்மை முழுதும் சர்வேசுரனுக்குக் கையளித்து எல்லாவற்றிலும் அவர் சித்தத்துக்கு அமைந்திருக்கவேணும். உன் இருதயம் இந்த மனச்சுவாதீனத்தை எப்போதும் சுகித்து அநுபவித்துக்கொண்டிருந்ததோ? இப்போது நீ இருக்கிற சீர் எப்படிப்பட்டது?

மனப்பற்றுதல்.—உன்னிடத்திலுள்ள ஒழுங்கற்ற சகல பற்றுதல்களையுந் தள்ளிவிட்டு ஆண்டவரிடத்தில் அவைகளுக்காகப் பொறுத்தல் கேள்.

பிரதிக்கினை.—சர்வேசுரன் ஒருவருக்கே நாம் சொந்தமாகி அவரோடு ஒன்றித்திருக்கத்தக்கதாக நமது



பெற்றார் உற்றார்மேல் நமக்குள்ள நேசபந்தனங்களை அறுத்தெறியும்படி வேண்டிய மனத்திடனைத் தந்ததை நினைத்து அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்வோமாக.

## 2-ம் பிரிவு

### நம்மைத்தானே பரிசுத்தவிதமாய்ப் பகைக்கவேண்டியதின்பேரில்

தியானம்.—பின்னும் இயேசுநாதர்சுவாமி திருவுளம்பற்றினதாவது: .யாதொருவன் தன் சீவனைப் பகையாமலிருந்தால், அவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டானென்றார் (லூக். 14). இந்த இரண்டாம் நிபந்தனையின் கருத்தேதென்றால், அர்ச். எரோனிமூஸ் சொல்லியிருக்கிறதுபோல தேவ விசுவாசத்தையும், தேவ இஷ்டப்பிரசாதத்தையும் நாம் இழந்துபோகிறதைப்பார்க்க நமது உயிரை இழந்துபோக ஆயத்தமாயிருக்கவேண்டியதுமன்றி நமது சுயப்பட்சத்தையும் பஞ்சேந்திரியங்களையும் ஏய்த்து மயக்கி, சர்வேசுரன் சமுகத்தில் நமது ஆத்துமத்தை அசுத்தமாக்குகிற யாவற்றையும் அருவருத்து நம்மைவிட்டுத் தூர அகற்றக்கடவோம். இதுவே மேற்கூறிய வாக்கியத்தின் பொருள். இவ்விதம் அநித்தியகாலத்தில் தன்னைப் பகைப்பது நித்தியகாலத்துக்கும் தன்னைச் சிநேகிப்பதாகுமென்று அர்ச். அகுஸ்தீன் வசனித்திருக்கிறார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—திவ்விய கர்த்தர் இவ்வளவு கர்த்தத்துவத்தோடு நம்மிடத்தில் கேட்கும் இந்த இரண்டாம் நிபந்தனையை நிறைவேற்றுவதற்கு இரண்டுகாரியம் அவசியமாய் வேண்டியது. முதலாவது: நமது ஐம்பொறிகளின்பேரிலும் நமது இருதயத்தின் அந்தரங்க நாட்டங்களின்பேரிலும் எப்போதும் விழிப்பாயிருக்கவேண்டியது. இரண்டாவது, நமது புத்தியில் உண்டாகும் ஆங்காரமான எண்ணங்களையும் அவற்றால் இருதயத்தில் கிளம்பும் வீண் ஆசைகளையும் சதா பலவந்தமாய் எதிர்த்து அடக்கவேண்டியது. இயேசுநாதர்சுவாமி திருவுளம்பற்றியிருக்கிற ஓர் வாக்கியமும் இதை வெகு விளக்கமாய்க் காட்டுகிறது. அதாவது பரலோக

இராட்சியம் பலவந்தப்படுகின்றது. பலவந்தக்காரரே அதைப் பறித்துக்கொள்ளுகிறார்களென்றார் (மத். 11). மேற்சொல்லியபடி நமதுபேரில்தானே நாம் எப்போதும் கண்ணுண்டாயிராமலும், நமக்கே நாம் பலவந்தஞ்செய்யாமலும் போவதனாலன்றோ நாம் இன்னும் நமக்கும் உலகத்துக்கும் நமது ஆசாபாசங்களுக்குஞ் சரியானபடி மரித்தவர்களாகாமல் இயேசுநாதருடைய ஊழியத்திலும் வெகு குறைவுள்ளவர்களாயிருக்கிறோம்!

**மனப்பற்றுதல்.**—உலகத்தார் சர்வேசுரன்மட்டிலுந் தங்கள் மனச்சாட்சியின்மட்டிலும் தங்களுக்குள்ள கடமைகளுக்குக் கேடாய் பெரிதும் மதித்துத் தேடுகிற சகலத்தையும் நீ வெறுத்துத் தள்ளுவதுமல்லாமல், உன்னை நீ அறியவும், இயேசுநாதர்சுவாமியுடைய கருத்துக்கொத்தபடி உன்னையே நீ பகைக்கவும் வேண்டிய அநுக்கிரகத்தை ஆண்டவரிடத்தில் இரந்து மன்றாடு.

**பிரதிக்கினை.**—தன்பேரில் முன்னிலும் அதிக விழிப்பாகவும் கண்டிப்பாகவுமிருக்கிறது.

## 3-ம் பிரிவு

### நமக்கு வரும் சிலுவையின்பேரில் வைக்கவேண்டிய பரிசுத்த சிநேகம்

**தியானம்.**—தினந்தினம் தன் சிலுவையைச் சுமந்துகொண்டு என்னைப் பின்செல்லாதவன் என் சீஷனாயிருக்கத் தக்கவனல்ல (லூக். 9, 14). திவ்விய கர்த்தர் தமக்கு மெய்யாகவே சீஷர்களாயிருக்க மனதுள்ளவர்களிடத்திலே கேட்கும் மூன்றாம் நிபந்தனை இதுதான். அவர் அருளிச்செய்த இந்த வாக்கியத்திலே நமக்கு மறைவாயிருக்கிறதொன்றுமில்லை. இயேசுநாதர் பிறகே சிலுவையைச் சுமந்துகொண்டு போகிறதென்னவென்றால்: நமக்குத் தொல்லை தொந்தரவாயிருக்கிறதையும், நமது கருத்து, பிரியம், ஆசை முதலிய பற்றுதல்களுக்கு விரோதமாயிருக்கிறதையும், நமது மனப்போக்கு, சார்பு, வாடிக்கை முதலியவைகளுக்குப் பொருந்தாதிருப்பதையும், நமது ஆத்தும சரீரத்துக்கு



வருத்தமாயிருக்கிற சகலத்தையும் அவருடைய திவ்விய சிநேகத்தைப்பற்றிப் பொறுமையோடு அநுபவிக்கிறதுதான். மேலும் அர்ச். சின்னப்பர் சொல்லியிருக்கிறது போல இயேசுநாதர் பிறகே சிலுவையைச் சுமந்துகொண்டு போகிறதென்னவென்றால்: அவருடைய ஒறுத்தலை நமது சரீரத்தில் தரித்துக்கொள்ளுகிறதாம். அதாவது நாம் சர்வேசுரன் ஒருவருக்கே உயிருள்ளவர்களாயிருக்கும்படி உலகத்துக்கும் நமக்குஞ் செத்தவர்களாய் எந்தக் காரியத்திலும், எந்த வேளையிலும் நம்மைத்தானே ஒறுத்துவருகிறதாம்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—உன்னையே ஒறுத்துச் சர்வேசுரனுக்கு உன்னைப் பலியாய் ஒப்புக்கொடுப்பதில் நீ எவ்வளவுதூரம் விர்த்தியடைந்திருக்கிறாயென்று சாவதானமாய் ஆராய்ந்து பார். எதிலும் உன்னைத்தானே ஒறுக்கிற குணம் உன்னிடத்திலிருந்தால் நிச்சயமாகவே நீ பாக்கியவான்தான். இது உன்னிடத்தில் இராவிட்டால் நீ எவ்விதத்திலும் அஞ்சவேண்டியதாமே. அர்ச். சின்னப்பர் தெளிவாய்ச் சொல்லியிருக்கிறதும் இதுவன்றோ. இயேசுநாதருக்குச் சொந்தமாயிருக்கிறவர்கள் யாரென்றால்: தங்கள் சரீரத்தையும் அதினுடைய இச்சைகளையும் சிலுவையிலே அறைந்தவர்கள்தான். நம்மிடத்திலிருக்கவேணுமென்று இயேசுநாதர்சுவாமி விரும்புகிற இந்தக் குணமில்லாதவன் அவருக்குச் சொந்தமல்ல (கலா. 5; உரோ. 8).

**சம்பாஷணை.**—உன் பாதுகாவலான அர்ச்சியசிஷ்டவரோடு சம்பாஷணை செய்.

---

## 13-ம் தேதி

### ஒறுத்தல் என்கிற புண்ணியத்தின் பேரில்

**ஆயத்தச் சிந்தனை.**—உங்கள் அவயவங்களை ஒறுத்து அடக்குங்களென்று அர்ச். சின்னப்பர் சொல்லுகிறதாக ரூபிகரித்துக்கொள்.

தியானச் செபம்.—ஒறுத்தலென்னும் புண்ணியத்தை அறியவும், அதை மதித்துச் சிநேகிக்கவும் வரங்கேள்.

## முதல் பிரிவு

### ஒறுத்தலின் தன்மை

தியானம்.—ஐம்புலன்களுக்குப் பிரியமாயிருக்கிற யாவற்றின் பேரிலும் நமது மனம் இயல்பாகவே வெகு ஆவலாய் நாடுகிறது. இதினாலே விளைகிற பாவங்களுக்கும் தாறுமாறுகளுக்கும் கணக்கில்லை. இந்தத்துர்நாட்டத்தோடு எதிர்த்துப் போராடுவதுதான் ஒறுத்தலென்னப்படும். ஆகையால் நமது ஆசாபாசத்தினின்று உற்பத்தியாகும் துராசைகளை அடக்கி அவற்றைச் சாகடிக்கிற மனமுயற்சியே ஒறுத்தலென்று நினைத்துக்கொள். இந்த முயற்சியைச் சர்வேசுரனைப்பற்றிச் செய்து அதில் நாளடைவில் அப்பியாசப்பட்டால் ஒறுத்தல் என்கிற புண்ணியம் நம்மிடத்தில் உண்டென்கலாம். ஆகையால் ஒறுத்தல் முயற்சிக்கும் ஒறுத்தல் என்கிற புண்ணியத்துக்கும் வெகு பாரதூர வித்தியாசமுண்டாமே. மேலும் மற்றப் புண்ணியங்களைப்போல இந்தப் புண்ணியத்திலும் அனேக படியுண்டு. இந்தப் புண்ணியத்தின் முயற்சிகளை எவ்வளவுக்கு இலகுவாயும் நிலைமையாயும் அநுசரித்துக்கொண்டு வருவோமோ அவ்வளவுக்கு இது உத்தமமாயிருக்கும்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நீ சந்நியாச அந்தஸ்தில் உட்பட்ட நாள் துவக்கி ஒறுத்தலென்கிற புண்ணியம் இன்னதென்று நீ அறிந்து அநுசரிக்கும்படி உனக்குக் கற்றுக்கொடுத்தார்கள். ஏனெனில்: என்னைப் பின்சென்றுவர மனதுள்ளவன் தன்னை ஒறுத்து அநுதினமும் தன் சிலுவையைச் சுமந்துகொள்ளக்கடவானென்று திவ்விய இரட்சகர் திருவுளம்பற்றின வாக்கியத்தின்படி ஒறுத்தலென்னும் புண்ணியமானது சந்நியாச சாங்கோபாங்கத்துக்கெல்லாம் அஸ்திவாரமாமே (லூக். 9, 14). இப்படியிருக்க நீ இதை எப்படி மதித்திருக்கிறாயென்றும் இதில் நீயடைந்த விருத்தி யேதென்றும் யோசித்துப்பார். எத்தனையோபேர் இந்த முயற்சிகளை வெகு ஊக்கத்தோடு அனுசரிக்கத் துவக்கிக் கொஞ்ச நாளுக்குள் அது வெகு பாடாயிருக்கிறதென்று சலித்துச் சன்னஞ்சன்னமாய் அவைகளை அலட்சியம்பண்ணிக் கடைசியாய் அந்தப் புண்ணியத்தையும் அதின் பற்றுதலையும் அடியோடு இழந்துபோகிறார்கள்! நீயும் அப்படிப்பட்டவர்களில் ஒருவனோவென்று பார்.



மனப்பற்றுதல்.—ஒறுத்தலென்னும் புண்ணியத்தை நீ அதிகமதிகமாய் அறிந்து மதிக்கும்படி வரப்பிரசாதங் கேள்.

பிரதிக்கினை.—நீ அசட்டையால் விட்டுவிட்ட ஒறுத்தல் முயற்சிகளைப் புதிதாய்த் துவக்குகிறவனைப்போல திரும்பவும் வீரியத்தோடு ஆரம்பிக்கக்கடவாய்.

## 2-ம் பிரிவு

### ஒறுத்தலின் அவசரம்

தியானம்.—நமது உள்ளும் புறமும் சகலமும் நமக்கு ஒறுத்தல் மகா மகா அவசியமென்று காட்டுகிறது. முந்தின தியானத்தில் சொன்னபடி நமது புற இந்திரியங்களை அடக்கி ஒடுக்கவேணுமென்று இயேசுநாதசுவாமி நமக்குக் கற்பித்து மாதிரிகை காண்பித்ததுபோல அப்போஸ்தலர்களும் தங்கள் வாக்கினாலும் மாதிரிகையினாலும் நமக்குப் படிப்பித்திருக்கிறார்கள். சகல அர்ச்சியசிஷ்டவர்களும் நமக்கு இதுகாரியத்தில் மாதிரிகையும் அத்தாட்சியுமாயிருக்கிறார்கள். ஒறுத்தல் முயற்சியிலே உயர்ந்து ஓங்காத மகாத்துமா யாராகிலும் உண்டோ? உள்ளிந்திரியங்களை ஒறுக்கவேணுமென்று நமது அனுபோகமே நமக்குப் படிப்பிக்கின்றது. நாம் எந்நேரமும் மனத்திடமாய் நின்று யுத்தம்பண்ணாமற்போனால் எவ்வித அக்கிரமங்களிலும் அலங்கோலங்களிலும் விழுவோமென்பது நமக்கு நன்றாய்த் தெரிந்த காரியமல்லவோ? இந்தச் சத்தியத்தை அர்ச். சின்னப்பர் நமக்கு நினைப்பூட்டும்படி: மாங்கிசத்துக்

கடுத்த ஆசாபாசங்களை உன் புத்தி ஞானத்தைக்கொண்டு சாகடித்தால் நீ பிழைப்பாயென்கிறார் (உ.ரோ. 8).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—ஆகையால் ஒறுத்தலில்லாமல் நாம் புண்ணியத்தில் நிலைக்கப்போகிறதுமில்லை, இரட்சணியம் அடையப்போகிறதுமில்லை. இன்னமும் ஒறுத்தலில்லாமல் புண்ணியத்தில் வர்த்திப்பு அடைகிறதும் கூடாத காரியமாமே. இது வெட்டவெளியான காரியமானபடியால் ஒப்பிக்கத் தேவையில்லை. உன் நெஞ்சில் கை வைத்து உன் உள்ளத்தை ஆராய்ந்து பார்ப்பாயானால், உன்னிடத்தில் ஒறுத்தல் குறைபடுகிறதினாலேதான் நீ செய்த பிரதிக்கினைகளில் பிடிப்பில்லாமலும், செபத்தியானத்தில் பற்றுதலில்லாமலுமிருக்கிறாயென்றும், உன் சபை ஒழுங்குகளிலும், உன் அலுவல் கடமைகளிலும், அனேகானேக காரியங்களில் தவறிப்போகிறாயென்றும், பிறருக்கு நீ காட்டும் நன்மாதிரிகையும், சினேகமும் வெகு சொற்பமாயிருக்கிறதென்றும், பத்தி வைராக்கியம், பொறுமை, தேவசித்தத்துக்கு அமைவு முதலிய புண்ணியங்கள் உன்னிடத்தில் வெகுவாய்க் குறைபடுகிறதென்றுங் கண்டுகொள்வாய். இது மெய்யோ பொய்யோவென்று தேவசமுகத்தில் யோசித்துப்பார்.

மனப்பற்றுதல்.—இதெல்லாம் மெய்யென்று ஒத்துக்கொண்டு வெட்கி நாணி ஒறுத்தலின்பேரில் ஆசையுண்டாகும்படி ஆண்டவரிடத்தில் கேள்.

பிரதிக்கினை.—ஒறுத்தலைக்குறித்து வேளா வேளை தனி ஆத்துமசோதனை செய்.

## 3-ம் பிரிவு

### ஒறுத்தலின் மேன்மையும் அதினால் வரும் நன்மையும்

தியானம்.—ஒருவன் தன்னை மெய்யாகவே ஒறுத்து வருவானாகில் அவனடையும் மேலான நன்மை யேதென்றால், அவன் தனக்கு மரித்துச் சர்வேசுரனுக்காகவே சீவிப்பான்; தன்னிடத்தில் குடிகொண்டிருந்த பாவத்தை நிர்மூலமாக்கி, தன்னிருதயத்தில் இயேசுநாதசுவாமி ஏகாதி



பதியாய் அரசாட்சி செலுத்தச் செய்வான். தான் உத்தம
தனமடைவதற்குத் தடையாயிருப்பதெல்லாம் தன்னை
விட்டுத் தூர அகற்றுவான். சர்வேசுரனுக்குப் பிரியப்
படாத யாதொன்றும் தன்னிடத்தில் இராதபடி அழித்து
ஒழிப்பான். அர்ச். அருளப்பர் சொல்லியிருக்கிற பிரகா
ரம், சத்தியமாகவே கிரியைகளைக்கொண்டு சர்வேசுரனைச்
சினேகிப்பான். கடைசியாய்த் தன் சிலுவையைச் சுமந்து
கொண்டு இயேசுநாதரைப் பின்சென்று நடந்து, இயேசு
நாதரோடு சிலுவையில் அறையுண்டிருக்கிறேனென்று
அர்ச். சின்னப்பர் சொன்னதுபோல, அவனும் சிலுவை
யில் அறையுண்டிருப்பான்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—
ஒறுத்தல் என்னும் புண்ணியம் சுபாவமாய்க் கடுமையா
யிருந்தபோதிலும் அதினால் ஆத்துமத்துக்கு உண்டாகும்
நன்மையைப்பற்றி நீ அதை ஆவலோடு அனுசரிக்க உன்னை
உடன்படுத்தும்படி வேறே என்னதான் அதிகமாய்ச்
சொல்லக்கூடும்? உன் தேகம் மெலிந்து, பலன் குறைந்து
நீ எவ்வளவுதான் அசவுக்கியமுள்ளவனாய் இருந்தபோதி
லும் இன்னம் இலட்ச விதமாய் உன்னை ஒறுக்கலாம்.
இதெல்லாம் உனக்குத் தெரிந்த காரியந்தான். ஒருகாலத்
திலே இதெல்லாம் உனக்கு மதுரமாயிருந்தது. ஆனால்
இப்போதெப்படியோ? இது விஷயத்தில் முந்தி உனக்கி
ருந்த சுறுசுறுப்புத் திரும்பிவந்தால் மரணவேளையில் எவ்
வளவோ ஆனந்தமடைவாய்! நித்திய காலத்துக்கும் எவ்
வளவோ இன்பப் பெருக்காகும்.

சம்பாஷணை.—இன்றைக்கு அர்ச். எதுவார்து இரா
சாவுடைய திருநாளானதினால் அவரோடு சம்பாஷணை
செய். அவருடைய திருச்சரீரம் அடக்கப்பட்டிருந்த
கெபியில் முப்பத்தாறுவருஷம் அழியாமலிருந்தபின்
இந்தத் தேதியில் வேறிடத்தில் பெயர்த்து வைக்கப்பட்
டது. இவர் செய்த கடுந்தபசுக்குப் பலனாகவும் இவரு
டைய ஆச்சரியமான கற்புக்குச் சம்பாவனையாகவும் இப்படி
நடந்ததென்று நம்பத்தகும்.

## 14-ம் தேதி

### நமது பஞ்சேந்திரிய இச்சையினிமித்தம் நம்மை ஒறுக்கிறது கடன்

**ஆயத்தச் சிந்தனை.**—*மேலாங்கிஷ சட்டத்துக்கு விரோதமாய் யுத்தம் செய்கிற ஒரு எதிர் விரோத சட்டம் என் சரீர அவயவங்களிலிருக்கிறதாக உணருகிறேனென்று அர்ச். சின்னப்பர் சொல்லுகிறதாக ரூபிகரித்துக்கொள்.*

**தியானச் சேபம்.**—*ஒறுத்தல் அவசியமென்பது உன் புத்திக்கு மென்மேலும் தெளிவாகும்படி வரம் கேள்.*

### முதல் பிரிவு

**பஞ்சேந்திரிய இச்சையானது நம்மைத் தின்மைக்கு இழுக்கின்றது**

**தியானம்.**—*சென்மப்பாவத்தின் தோஷத்தினால் நமக்குக் கணக்கற்ற தீங்குகள் வந்ததோடுகூட நமது இருதயமுங் கெட்டு அதில் துர் ஆசாபாசம் பிறந்ததினிமித்தம் நம்மை எப்போதும் ஒறுத்துவருவது மகா அவசியமாமே. ஐம்பொறிகளுக்கு இன்பமும் சரீரத்துக்குச் சுக சந்தோஷமும் வருவிக்கத்தக்க காரியங்களின்பேரில் நமது மனதைப் பலவந்தமாய் இழுத்துக்கொண்டுபோகிற சுபாவ நாட்டமும், அவைகளுக்கு விரோதமான காரியங்களின்பேரில் நமக்குள்ள வெறுப்புமே ஆசாபாசமென்று சொல்லப்படும். இதினிமித்தந்தான் மனுஷருடைய புலன்களும் இருதய சிந்தனைகளும் சிறுபந்துவக்கித் தின்மைமேல் கவிழ்ந்திருக்கின்றனவென்று இஸ்பிரீத்துசாந்துவானவர் வேதாகமத்தில் வசனித்திருக்கிறார். நமது மனதிலுள்ள இந்தக் கெட்ட நாட்டமானது நாம் செத்தாலொழிய நம்மைவிட்டு நீங்காது. சர்வேசுரனையும் நமது கடைசிக் கதியையும்விட்டு நம்மை அப்புறப்படுத்துகிற சகலவித அக்கிரமமான பற்றுதல்களும் இதினின்றுதான் உற்பத்தியாகின்றது. இடைவிடாத ஒறுத்தலினாலே தைரியமாய் இத்தோடு யுத்தஞ் செய்யாதவன் அவலமாய் இந்த ஆசாபாசத்துக்கு அடிமையாவானென்பது தப்பாது.*



**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—
*ஐயோ, நம்மிடத்தில் இந்தத் துர்ச்சார்பு குடிகொண்டிருக்
கிறதாக நாம் நன்கு உணர்ந்து கண்டு கொள்ளுகிறோம்.
எந்நேரமும் இது நம்மோடு மல்லுக்கட்டித் தாறுமாறான
வழிக்கு நம்மை இழுக்கின்றது. முதலாவது, கண்ட
தெல்லாம் வாசிக்கவும், கண்டதெல்லாம் பார்க்கவும், கண்ட
தெல்லாம் ஆராயவும் தாறுமாறான நமது கண் நம்மைத்
தூண்டுகிறதாக உணருகிறோம். மடத்துக்குள் நமது
சிரேஷ்டர், சகோதரர் முதலியவர்களுடைய நடபடிக்
கைகையும், புறத்தியிலே கண்ணுக்கு மின்னி அதைப்
பசப்புகிற பொருட்களையும் நாம் உற்றுப்பார்க்கிறதி
னாலே கணக்கில்லாத வீண் எண்ணங்களுக்கும் பல
சோதனைகளுக்கும் பாவங்களுக்கும் உள்ளாகிறோம்.
2-வது, காதினால் வருகிற பொல்லாப்பு ஏதென்றால் தினந்
தினம் நடக்கிற செய்திகளையும், மடத்திலும் புறத்திலும்
சொல்வது செய்வது எல்லாத்தையும், விசேஷமாய் நன்
மையைவிடத் தின்மையான காரியங்களையும் அறிய வெகு
ஆத்திரப்படுகிறோம். இதினாலே மற்றவர்களோடு வீணாய்ப்
பேசி, நியாயமின்றி அவர்கள் இவர்களைச் சந்திக்கப்போய்,
விலைமதிக்கப்படாத நேரத்தை வியர்த்தமாய்ப் போக்கி,
மௌன ஒழுங்கை மீறும்படி நேரிடுகிறது. இன்னும் இதி
னால் விளையும் அதிக கெடுதியென்னவென்றால் மற்றவர்க
ளுடைய குண செய்கைகளைப்பற்றிக் குற்றங்கூறவும், முறு
முறுப்பு, புறணி, அவிவேகவார்த்தைகள் முதலியவைகளைப்
பேசவும் நேரிடுகிறது. கடைசியாய்ப் புத்தி எங்கும் சிதறி
ஓட, இருதயத்தில் நல்லுணர்ச்சி அற்றுப்போக, அடக்க
வொடுக்கமாயிருந்து செபிக்கவும் தியானிக்கவுந் திராணி
யற்றவர்களாய்ப் போகிறோம். 3-வது, ருசியிலேயும் நித்
திரையிலேயும் சரீர சுகத்தைப்பற்றி மிதமிஞ்சின கவலைப்
படுகிறதினால் வருந் தின்மையேதென்றால் மட்டுக்கடந்து
சாப்பிடுகிறதும் குடிக்கிறதும், அவசரத்துக்குத்தக்க நித்
திரையையும் நியாயமான சரீர சம்ரட்சணையையும் விட்டு
மிதமிஞ்சினபிரகாரம் உடலைப் பேணி வளர்க்கிறதுந்தான்.
ஆகையால் தங்களுடைய இன்பசுகப் பிரியத்தை ஒறுத்*

தலினாலே அடக்கி அத்தோடு போராடாதவர்களிடத்தில் இங்கே காட்டிய தாறுமாறுகளெல்லாம் அகத்தியமாய் உற்பத்தியாகும்.

**மனப்பற்றுதல்.**—நாம் எதிலே நம்மை அதிகமாய் ஒறுக்கவேணுமென்று சர்வேசுரன் நமக்குக் காண்பிக்கவும் அதற்கு அவர் உதவி செய்யவும் கண்ணீர்சிந்தி அவரைக் கெஞ்சிக் கேட்போமாக.

**பிரதிக்கினை.**—நமது சோதனைகளையும், சரீரத்துக்கு நாம் கொடுக்கும் அற்ப இளக்காரத்தையும் நமது ஆத்தும குருவுக்கு வெளிப்படுத்தி அவருடைய அபிப்பிராயப்படி நடப்போம்.

## 2-ம் பிரிவு

### ஆசாபாசமானது நாம் நன்மையைவிட்டு விலகச்செய்யும்

**தியானம்.**—மேற்சொன்னதுபோல ஆசாபாசமானது பஞ்சேந்திரியங்களைப் பசப்புகிற காரியங்களின்பேரில் நமது மனதைப் பலவந்தமாய் இழுத்துக்கொண்டுபோவதுமல்லாமல் நமக்குப் பாடும் தொல்லையுமாயிருக்கிற காரியங்களெல்லாத்தையும் நாம் சுபாவமாகவே வெறுத்து விலகச் செய்கிறது. ஆகையால் கட்டுப்பாடென்கிறதே அதற்குப் பிரியப்படாது. இதினாலல்லவோ நாம் சந்நியாசத்துக்கடுத்த ஒழுக்கத்தில் தவறிப் பிறருக்கு இடறலாயிருந்து, நமது அந்தஸ்தின் கடமைகளையும் நமது அலுவலின் கடமைகளையும் நிறைவேற்றுவதில் அசட்டையாயிருக்கிறோம். ஞானமுயற்சிகளைச் சரியாய் நிறைவேற்றாமல் நமது கிரியைகளையெல்லாம் அரைகுறையாய்ச் செய்து கடைசியாய் அசமந்தராகிறோம்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—மனோவியாகுலம் வருவிக்கிற இந்த உண்மையை ஒப்பிக்கிறதற்கு வெகு நியாயங்கள் வேண்டியதில்லை. உன் மனதே இதற்குச் சாக்ஷி சொல்லும். உன்னுடைய கடமைகளில் இன்னின்ன பங்கை நன்றாய் முடித்து வேறே இன்னின்ன பங்கை அசட்டையாய் விட்டுவிடுகிறாயல்லவா? இதின் காரணம் அறிய உன் மனதைச் சோதித்தால் உள்ள செய்தி



விளங்கும். அதாவது சில காரியங்களைச் செய்து முடிப்பது உனக்கு வருத்தமல்ல. வேறு சில காரியங்களோவென்றால் உனது பிரியத்துக்கும், குணத்துக்கும், வாடிக்கைக்கும் ஒத்துவரமாட்டா. சென்ற ஒடுக்கத்தில் நல்ல முகாந்தரங்களைப்பற்றி நீ இன்னின்ன பிரதிக்கினைகள் செய்திருந்தபோதிலும் அவைகளை அநுசரியாமல் விட்டுவிட்டாய். ஏனென்றால் அவைகள் உன் மனப்பிரியத்துக்கு விரோதமாயிருந்ததினாலே நீ உனக்குத்தானே வலுவந்தஞ் செய்யவேண்டியதாயிருந்தது. உன்னுடைய தியானத்தைச் சாக்கிரதையாய் ஆயத்தம் பண்ணாமலும், அதைச் சரிவரச் செய்யாமலும், காலமே சுறுசுறுப்பாய் எழுந்திராமலும், மடத்தின் ஞானமுயற்சிகளைச் சுமுத்திரையாய் அநுசரியாமலுமிருந்தாயல்லவா? உன்னைத் தானே செயிக்கவேணுமென்கிற பயந்தான் இதற்குக் காரணம். இவைகளையெல்லாம் ஒத்துக்கொள்ளுகிறது உனக்கு வெட்கமாயிருக்குமென்பது மெய்தான். ஆனால் அவதைரியப்படவேண்டாம்; அதற்கு விரோதமாய் உன்னிடத்தில் பத்தி சுறுசுறுப்பை எழுப்பி இனிமேல் அதிகமாய் ஒறுத்தல் பரித்தியாக முயற்சி செய்வேனென்று பிரதிக்கினை செய். நீ தைரியத்தோடே யுத்தம் செய்கிறதற்குத்தக்கது மகிமையான செயம் அடைவதுமல்லாமல் அதினால் மகா பெரிய நன்மை உண்டாகுமென்றெண்ணி உறுதியோடு போராடு. இன்னம் நாம் யுத்தத்தில் மனந்தளராதிருக்கும்படி நினைத்துக்கொள்ள வேண்டியதென்னவென்றால்: நாம் உலகத்துக்கும் நமக்கும் மரித்தவர்களாகி இவ்வுலகத்தில் சகல துன்ப வருத்தப்படவும் மறு உலகத்தில் மிகுந்த பேரின்ப பாக்கியம் அநுபவிக்கவுமே சந்நியாசிகளானோமென்றெண்ணிக்கொள்ளுவதுதான். ஆகையால் நாம் எப்போதும் நம்மைத்தானே ஒறுக்கவேண்டியதன்றோ?

**சம்பாஷணை.**—ஒறுத்தல் முயற்சியை வெகு பற்றுதலோடு செய்துவந்த அர்ச். தெரேசம்மாளுடைய திருநாளுக்கு முந்தின நாளாகிய இன்றைக்கு இந்த அர்ச்சியசிஷ்டவளோடு சம்பாஷணை செய்.

# 15-ம் தேதி

## பழைய கார்மேல் சபையைப் புதுப்பித்த *அர்ச். தேரேசம்மாள் திருநாள்

ஆயத்தச் சிந்தனை.—ஒன்றில் பாடுபடுகிறது ஒன்றில் சாகிறதென்று அந்த அர்ச்சியசிஷ்டவள் கூவிச் சொல்லுகிறதைக்கேட்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

தியானச் சேபம்.—இயேசுநாதசுவாமியை மிகவும் சிநேகிக்கும்படி அவளுடைய சலுகையைக் கேள்.

### முதல் பிரிவு

#### அர்ச். தேரேசம்மாளுடைய ஞான யுத்தத்தின்பேரில்

தியானம்.—அதிசயத்துக்குரிய இந்தக் கன்னியாஸ்திரி தன் சிரேஷ்டர் கட்டளைப்படி எழுதின தன் சொந்தச் சரித்திரத்திலே தனக்கு நடந்ததாகச் சொல்லியிருக்கிற ஒரு விஷயத்தை நாம் முக்கியமாய் யோசிக்கத்தகும். அதேதென்றால் ஆவிலாப் பட்டணத்திலிருந்த கார்மேல் மடத்தில் இவள் கன்னியாஸ்திரியாயிருந்த முந்தின இருபது வருஷகாலம் சில வெளி மனுஷரோடு வெகு சகவாசமாய்ப் பேசவும் புழங்கவும் பிரியப்பட்டிருந்தாள். இவள் இந்தப் பாசத்தை விட்டுவிடும்படி தேவ வரப்பிரசாதம் இவளை அத்தனை காலமுந் தூண்டித் தன் பாரிசமாயிழுக்கும்போது அவள் அத்தோடு போராடிக்கொண்டு வந்தாள். அதைக் குறித்து அவளே எழுதினதாவது: ஒருபக்கத்தில் சர்வேசுரன் என்னை அழைக்க, மற்றொரு பக்கத்தில் உலகப் பற்றுதல் என்னை இழுத்துக்கொண்டு போனதினால் என்னாத்துமம் எந்நேரமுங் கலங்கித் தத்தளித்துக்கொண்டிருந்தது. இந்த மாறாட்டத்திலே இருபது வருஷகாலங்

* குறிப்பு: அர்ச். தெரேசம்மாள் 1515-ம் ௵ பிறந்தாள். 1536-ம் ௵ கன்னியர் மடத்தில் சேர்ந்து, 1582-ல் மரித்து, 1622-ல் அர்ச். பட்டம் பெற்றாள். கார்மேல் சபை சீர்திருத்தமாகி, முதலாவது மடம் ஸ்தாபிக்கப்பெற்றது 1562-ல்



கடந்துபோனது. நான். இதிலே வெகுவாய்த் தவறிப்போனேன். இதைவிட்டு எழும்புவதற்கான நல்லமனது காட்டவில்லை. இதினாலே சர்வேசுரனுக்குச் சுமுத்திரையாய் ஊழியஞ் செய்வதில் உண்டாகும் ஆனந்தத்தை நான் அநுபவிக்கவுமில்லை; பூலோகத்திலே யுண்டான இன்பத்தை நான் சுகிக்கவுமில்லையென்றாள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இங்கே இவள் வெளிப்படுத்துகிற விஷயத்தினாலே நமக்குத் தக்க படிப்பினையும் மனத்திடனுமுண்டாகிறது. எப்படியெனில்: முதலாவது, கிரமந்தப்பின யாதொரு பற்றுதல் எவ்வளவுதான் அற்பமாயினும் ஞான விர்த்திக்கும், சர்வேசுரனோடு அன்னியோன்னிய ஒன்றிப்புக்கும் விக்கினமாயிருக்கின்றது. இரண்டாவது, அர்ச்சியசிஷ்டவர்களுடைய சுபாவத்துக்கும் நம்முடைய சுபாவத்துக்கும் வித்தியாசமில்லை. பலவீனமுங் குற்றமும் ஓர் காலத்தில் அவர்களிலும் சிலரிடத்திலிருந்தது. மூன்றாவது, சிலர் உத்தம சாங்கோபாங்கத்தை அடையுமுன் நெடுநாளாய்ப் புண்ணிய வழியில் சோர்ந்து நடந்து வெகுகாலம் புண்ணியத்தில் கீழ்த்தரமான அந்தஸ்திலிருந்தார்கள். நான்காவது, இப்படியிருக்க நாம் ஒருகாலும் மனந்திரும்பமாட்டோமென்றும், நமக்குத் தேவ அனுக்கிரகம் கிடையாதென்றும் அவநம்பிக்கைப்படுவதற்கு ஞாயமில்லை.

மனப்பற்றுதல்.—சர்வேசுரன் உன்மட்டில் காண்பித்துவந்த பொறுமைக்காக அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்.

பிரதிக்கினை.—சர்வேசுரன் நெடுநாளாய் உன்னிடத்தில் கேட்கிற இன்னின்ன பலியை அவருக்குச் செலுத்துகிறதற்கு இனி தாமதிக்காதே.

### 2-ம் பிரிவு

#### அர்ச். தேரேசம்மாள் அடைந்த ஜெயத்தின்பேரில்

தியானம்.—அந்த அர்ச்சியசிஷ்டவள் எழுதிவைத்ததாவது: ஒருநாள் என் ஆத்தும குருவின் கட்டளைப்படி

சர்வேசுரன் தமது சித்தத்தை எனக்கு அறிவிக்கவேணுமென்று வெகுவாய்க் கெஞ்சி மன்றாடினேன். உடனே நான் ஒரு பரவசமடைந்து, 'இன்று முதல் நீ சம்மனசுக்களோடு சம்பாஷணை செய்வதே நமது சித்தமென்று தெளிவாய் ஓர் குரல் சத்தஞ் சத்திக்கக்கேட்டேனென்று எழுதினாள். அது அவள் மனதில் தேவ வரப்பிரசாதத்தின் ஓர் இடிபோல் முழங்கினதினாலே தன் பழைய சிநேகப் பந்தனங்களையெல்லாம் எப்போதைக்கும் விட்டுவிலகி இயேசுநாதருடைய சிநேகத்தைப்பற்றிச் சிலுவையையும் பாடுகளையும் அனுபவிக்கவேணுமென்று மகா ஆவல்கொண்டாள். அது முதற்கொண்டு அவள் புண்ணிய சாங்கோபாங்கத்தில் அடைந்த வர்த்திப்பு இவ்வளவென்று சொல்லி முடியாது. சர்வேசுரனும் மகா உச்சிதமான வரங்களினாலே அவளை நிரப்பினார். அந்தக் காலத்தில் அவள் உலகத்துக்கு ஒரு அற்புதம்போலிருந்ததுமல்லாமல் அவள் எழுதின ஆச்சரியமான புஸ்தகங்களுக்கும் அவளுடைய பேருக்குமுண்டான சங்கை அந்நாள் முதற்கொண்டு இந்நாள் வரையிலும் மங்காமல் விளங்கிக்கொண்டுவருகின்றது. ஆ! என் சர்வேசுரா, உம்மைப்பற்றி ஒன்றில் வருத்தப்படுகிறது, ஒன்றில் சாகிறதென்று அவள் சிநேகத்தால் பெருமூச்செறிந்து கேட்ட மன்றாட்டை அடைந்தாள். எப்படியென்றால் அவள் எப்போதும் சரீரத்திலே வேதனை அனுபவித்ததுமன்றி புறத்தியிலும் வெகுகாலம் மனிதரால் துன்பப்பட்டு வந்தாள். அவளைப் பைத்தியகாரியென்றும், கள்ள ஞானியென்றும், கட்டுப்பாடாய்ப் பிதற்றுகிறவளென்றும், பேய்பிடித்தவளென்றும், பதிதப் புத்தியுள்ளவளென்றும் பலவாறாய் மனிதர் இகழ்ந்து வந்தார்கள். இந்தத் துன்ப துரிதங்கள் அதிகரித்த அளவுக்கு அவளுடைய தாழ்ச்சியும் பொறுமையும் அதிகரித்தன.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—நாமும் அர்ச். தெரேசம்மாளைப்போல சர்வேசுரனுக்கு நம்மைப் பலியாக ஒப்புக்கொடுத்து அவர் நமக்கு அனுப்பச் சித்தமாயிருக்கிற சிலுவைகளையெல்லாம் சந்தோஷமாய்க் கையேற்றுக்கொள்ளுவோமாகில் அவர் உதாரமாய்க் கொடுக்கிற



ஞான வரங்களில் நமக்கும் வெகு பங்கு கிடைக்குமென்கிறது தப்பாது.

**மனப்பற்றுதல்.**—ஆண்டவரிடத்தில் நமக்குத் தாராளமான இருதயத்தைப் பெற்றுத்தரும்படி அந்த அம்மாளை இரந்து மன்றாடிக் கேட்போமாக.

**பிரதிக்கினை.**—இதுவிஷயத்தில் அவளுடைய வல்லமையுள்ள சிபாரிசோடுகூட நாமும் பிரயாசப்படுவோமாக.

## 3-ம் பிரிவு

### அர்ச். தெரேசம்மாள் கார்மேல் சபையைச் சீர்திருத்துகிறள்

**தியானம்.**—பேர்போனதும் மகா பூர்வீகமாயுள்ளதுமான கார்மேல் சபை கீழ்த்திசையினின்று 1229-ம் வருஷம் ஐரோப்பாக்கண்டத்தில் ஏற்படுத்தப்பட்டபோது அக்காலத்தில் நேரிட்ட நிர்ப்பந்தங்களினிமித்தம் அதின் பூர்வீக ஏற்பாட்டின் ஒழுங்குகள் அத்தனை நுணுநுணுக்கமாய் அனுசரிக்கப்படவில்லை. அதைத் திரும்பவும் புதுப்பிக்கவேணுமென்கிற நினைவைச் சர்வேசுரன் இந்த அர்ச்சியசிஷ்டவளுக்கு ஏவினார். அதற்கொத்தபடி அந்தச் சபையை வெகு கடுமையாய்ச் சீர்திருத்தி அதைப் பெண்பிள்ளைகளுமல்லாமல் ஆண்பிள்ளைகளும் ஏற்றுக்கொள்ளும்படி செய்தது அவள் சீவிய காலத்தில் நடத்தின பெரிய அற்புதங்களில் ஒன்றென்கவேணும். இந்தச் சபையில் உட்பட்டிருக்கிற கன்னியாஸ்திரிகளும் சந்நியாசிகளும் இவளைத் தங்களுக்கு ஞானத்தாயென்கிறார்கள். ஆயினும் ஆரம்பத்தில் வந்த விக்கினங்களுக்கு கணக்குவழக்கில்லை. இந்த வருத்தமான வேலையில் அவள் செலவழித்த கடைசி இருபது வருஷகாலமும் அவள்பட்ட துன்பமும், பாடும், சலிப்பும் இவ்வளவென்று சொல்லுந் தன்மையல்ல. தன் நம்பிக்கையெல்லாம் சர்வேசுரன்மேல் வைத்து வெகு யூக சாமார்த்தியமாய்க் காரியங்களை நடத்திச் சகலமும் அனுகூலம் பெறச் செய்தாள். அவள் பரலோக பிராப்தியாகுமுன் சந்நியாசிகளுக்குப் பதினைந்து மடங்களும் கன்னியாஸ்

திரிகளுக்குப் பதினேழு மடங்களும் கட்டுவித்து தான் சீர்திருத்தின சபை ஏற்பாடுகளை அவைகளில் உறுதியாய் ஸ்தாபித்து அவைகள் ஒழுங்காய் நடக்கிறதைக் கண்டு களிகூர்ந்தாள். இவள் இறந்த பிறகும் இந்த மடங்கள் அதிகமாய்ப் பலுகி நாளதுவரையிலே இந்தக் கார்மேல் சபை எங்கும் பிரபலியமாகி அதிலே அநேகம் அர்ச். கன்னியாஸ்திரிகளும் புண்ணியத்திலும், கல்வியிலும், வேதியத்தொழிலிலும் விளங்கின சந்நியாசிகளும் திரளாய் உண்டாயிருக்கிறார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—சர்வேசுரன் அர்ச். தெரேசம்மாளுக்கும் அவளால் அநேகாயிரம் பேருக்குஞ் செய்துவருகிற நன்மைக்கெல்லாம் அவருக்குத் தோத்திரஞ்செய்வோமாக. புண்ணியங்களால் மிகவும் அலங்கரிக்கப்பட்ட இந்த அர்ச்சியசிஷ்டவளைப் புகழ்ந்து கொண்டாடி சர்வேசுரனைப்பற்றி மேலான காரியங்களைச் செய்ய ஆசைப்படுவோமாக. அப்படி இல்லாவிட்டாலும் நாம் அர்ச்சியசிஷ்டவர்களாகவேணுமென்கிற ஆசையோடு பிரயாசப்பட உறுதியான பிரதிக்கினை செய்து கொள்ளக் கடவோம்.

சம்பாஷணை.—இந்த அர்ச்சியசிஷ்டவளோடு சம்பாஷணை செய்.

---

# 16-ம் தேதி

## முந்தின தியானத்தின் தொடர்ச்சி

### அர்ச். தேரேசம்மாளுடைய ஞானப் போதகம்

ஆயத்தச் சிந்தனை.—இந்த அர்ச்சியசிஷ்டவள் ஞானப்போதகப் புத்தகமுண்டாக்கிறதாக ரூபிகரித்துக் கொள்.

தியானச் சேபம்.—இவளுடைய ஞானபோதகம் உன்னுடைய நடக்கையின் சட்டமாகும்படி வரங்கேள்.



## முதல் பிரிவு

### நம்முடைய பேச்சைச் சீர்படுத்துவதற்கான புத்திமதிகள்

தியானம்.—இந்த அர்ச்சியசிஷ்டவள் ஆச்சரியமும் பிறருக்கு நன்மாதிரிகையுமான அனேக காரியங்களை எழுதினதோடுகூட உத்தம சாங்கோபாங்கத்தைக்குறித்துஞ் சில ஒழுங்குகளையெழுதி அவைகளைக் கார்மேல் சபையாருக்குத் தமது சிநேகத்தின் அடையாளமாகக் கொடுத்தாள். அவைகளால் நமக்கும் ஞானப்பிரயோசனமுண்டாகும்படி அவைகளில் சிலவற்றை மூலப்பிரதியிலிருக்கிறபடி எடுத்து இன்று தியானிப்போமாக. பேச்சைக் கிரமப்படி நடத்த அவள்கொடுத்த ஒழுங்காவது: பேசுகிறது சொற்பமாயிருக்கட்டும். விசேஷமாய் நீ பலபேரோடிருக்கும்போது இந்த ஒழுங்கைக் கவனித்துக்கொள். உன்னைப் பற்றியாவது உன்கல்வி, நற்கிரியை, உன் கோத்திரம், பிறப்பு முதலியவைகளைப்பற்றியாவது ஒருபோதும் பாராட்டிப் பேசாதே. இவைகளைப்பற்றிப் பேசுவதினால் ஏதேனும் நன்மை வருவதற்கு இடமாயிருந்தால், அப்போது இவையெல்லாம் சர்வேசுரன் உனக்குத் தயவாய்த் தந்த நன்மையென்று மனதில் உறுதியாய் எண்ணிக்கொண்டு தாழ்ச்சியோடு பேசக்கடவாய். பலத்த நியாயமில்லாமல் ஒரு சாக்குஞ் சொல்லாதே: வாக்குவாதங்களைத் தவிர்த்துவிடு. விசேஷமாய்க் காசுபெறாத அற்பக் காரியங்களில் இதைக் கவனித்துக்கொள். யாரோடு பேசினாலும் அடக்கத்தோடு கூடிய முகமலர்ச்சியுடன் பேசு. காரியங்களை உள்ளதுக்கு மேல் ஏற்றி வளர்த்திப் பேசாதே. எதுகாரியத்தையும் தீர அறியாமல் உறுதியாய்ச் சொல்லாதே. யாருக்கும் மனத்தாங்கல் வருவிக்கத்தக்க ஒருவார்த்தை முதலாய் உன் வாய் தவறி வாராதபடி, நீ பேசப்போகிறதென்னவென்று நன்றாய்ச் சிந்தித்துப் பேசத் துவக்கு. யாதொருவர் ஞானக் காரியத்தைக் குறித்துப் பேசும்போது தாழ்ச்சியோடு அதை உற்றுக்கேள். மற்றவர்களோடே பேசும்போதும் சம்பாஷணை செய்யும்போதும் ஞான சீவியத்துக்கடுத்த

சில வார்த்தைகளைக் கலந்து பேசுவாயாக. இதினால் வீண் பேச்சையும் புறணிகளையும் தவிர்ப்பாய்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—இப்போது சொன்னதெல்லாம் எவ்வளவு ஞானமுள்ளதென்று நீ யோசித்துப் பார்த்தபின் இதை அப்பியாசிக்கத் தலைப்படு. எதுவரையில் இதற்கொத்தபடி நடந்திருக்கிறாயென்றுபார். பிறகு எந்த விஷயங்களில் இன்னம் அதிக நன்றாய் நடக்கக்கூடுமென்றும், நடக்க உனக்குப் பிரியமென்றும் யோசித்துப்பார்.

**மனப்பற்றுதல்.**—நீ செய்த பிரதிக்கினையில் பிரமாணிக்கமாயிருக்க ஆண்டவருடைய ஒத்தாசையைக் கேள்.

**பிரதிக்கினை.**—நீ நாக்கை எப்படி நடத்துகிறாயென்று அநுதின ஆத்துமசோதனையிலே விசேஷமாய்க் கவனித்துப்பார்.

## 2-ம் பிரிவு

### நமது கிரியைகளைச் சீர்ப்படுத்துவதற்கான புத்திமதிகள்

**தியானம்.**—உன்னோடு புழங்குகிற மனிதர்களுடைய குணாகுணத்துக்கு இசைந்து நடந்துகொள், எல்லாரையும் உன் வசமாக்கும்படி உன்னைச் சகலருக்கும் சகலமுமாக்கிக்கொள். சபையில் நாலுபேருக்கு ஒத்தபடி நீயும் கூடிய வரையில் நடக்கவேணுமொழிய யாதொரு விசேஷமும் செய்யப்படாது. ஏனென்றால் அதைப்போலச் சபைக்குக் கேடானது வேறொன்றுமில்லை. சர்வேசுரனை மெய்யாகவே உன் கண்முன் கண்டாற்போல நீ செய்கிறதைத் திருந்தச் செய். தரும வழியில் நீ விரைவாய் நடக்கிறதற்கு இதுவே நிச்சயமான உபாயம். யாதொரு கனமான அவசரமின்றி உன் இருதயத்துக்குள்ளிருக்கிற பத்தியை வெளியில் தோன்றவிடாதே. இதைப்பற்றி என் இரகசியம் எனக்கே சொந்தமென்று அர்ச். பெர்நர்தும், அர்ச். பிராஞ்சிஸ்கும் சொல்லியிருக்கிறார்கள். உன்னைச் சாராத காரியங்களிலே நீ தலையிட்டுக்கொள்ளாதே. அதைக்குறித்து யாதொன்றும் விசாரியாதே. உன்மட்டில் கண்டிப்புள்ளவனாகவும்



பிறர்மட்டில் சாந்தமுள்ளவனாகவும் இரு. நீ யாதொரு அதிகாரம் பெற்றவனாயிருந்தால் கோபமாயிருக்கும்போது ஒருவரையும் கண்டியாமல் கோபம் அடங்குமட்டும் காத்திரு. உன் சந்தோஷமானது எந்நாளும் தாழ்ச்சி, சாந்தம், அடக்கமும், பிறருக்கு நன்மாதிரிகையுள்ளதுமாயிருக்கட்டும். உன் சிரேஷ்டர் அல்லது ஆத்தும குரு உனக்குத் தகுந்த யோசனை கொடுக்கும்படி உனக்குள்ள சோதனைகள், குறைகள் உனக்குண்டான வெறுப்பு முதலிய எல்லாத்தையும் அவர்களுக்குத் திறந்துசொல். குறிக்கப்பட்ட நேரத்திலேமாத்திரம் அன்னபானம் பண்ணு. உன் மரணபரியந்தம் எதுகாரியத்திலும் எப்போதும் உன்னைத் தாழ்த்தி ஒறுத்து நட. மேலும் அர்ச். சூசையப்பர்பேரில் விசேஷ பத்திவைப்பாபாக.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—நல்லொழுக்கத்துக்கடுத்த இந்த ஒழுங்குகளெல்லாம் என் சத்துவத்துக்கு மேற்பட்டதல்லவென்று நான் ஒத்துக்கொள்ளவேண்டியதன்றோ? என் ஆத்தும சமாதானத்துக்கும் பிறருக்குக் காட்டவேண்டிய நன்மாதிரிகைக்கும் வேண்டியதெல்லாம் இதிலடங்கியிருக்கிறதே.

**மனப்பற்றுதல்.**—ஆ, என் சர்வேசுரா, இந்த ஒழுங்குகளையெல்லாம் இன்று துடங்கியே அநுசரிக்கும்படி வருந்திப் பிரயாசப்படப்போகிறேன். என் நல்ல மனதைத் திடப்படுத்தியருளும். ஏனெனில் அது நிலையற்றதுமாய் அநேகமுறை தாராளமில்லாததுமாயிருக்கின்றது.

**பிரதிக்கினை.**—எந்தச் சமயத்தில், எந்த இடத்தில் இந்தப் பிரதிக்கினையை அனுசரிக்கவேணுமென்று அறியும்படியாக என் அநுதினக் கிரியைகளை ஒன்றுக்குப்பின் ஒன்றாய்ப் பார்வையிடக்கடவேன்.

## 3-ம் பிரிவு

### நமது நினைவு ஆசைகளைச் சீர்படுத்துகிறதற்கான புத்திமதிகள்

**தியானம்.**—காலமே நீ செய்த தியானத்தை அன்று முழுதும் வேளைக்கு வேளை நினைத்துப்பார். அடிக்கடி

தேவசினேக முயற்சிசெய். பிறர்விஷயத்தில் அவர்களுடைய புண்ணியங்களையன்றிக் குற்றங்களை நினையாதே. உன் விஷயத்திலோவென்றால் குற்றங் குறைகளைமாத்திரம் நினைத்துக்கொள். உனக்கு ஒரே ஒரு ஆத்துமமுண்டென்றும், ஒரேவிசை சாவாயென்றும், கொஞ்சக்காலமாத்திரம் உயிரோடிருப்பாயென்றும், பின் நித்தியகாலம் நிலைத்திருக்கும் மகிமை பாக்கியம் ஒன்றென்றும் நிதானித்துப்பார். அப்போது அநேகாநேக காரியங்களின்பேரில் உனக்குள்ள பற்றுதலெல்லாம் விட்டுப்போம். எந்தக் காரியங்களிலும் நீ சர்வேசுரனைத் தேடினால் அவரைக் காண்பாய். சர்வேசுரனைக் காணவேணுமென்கிறதே உனக்கு ஆசையாகவும், அவரை இழந்துபோவோமோ என்கிறதே உனக்குப் பயமாகவுமிருக்கட்டும். அவரை இன்னமும் அநுபவிக்கவில்லையென்கிறதே உனக்குத் துயரமாகவும் நீ அவரிடத்தில் செல்லுவதற்கு உதவியானதெல்லாம் உனக்கு ஆனந்தமாகவும் இருக்கக்கடவது. அப்போது மனச்சமாதானத்தில் வாழ்வாய்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—இந்த மூன்றும்பிரிவில் சொல்லப்பட்ட ஞான நிறைந்த யோசனைகளைக் கவனமாய் ஆராய்ந்து பார்த்தபின் உன்னிடத்தில் அவைகளுக்கு விரோதமாயிருக்கிறதெல்லாத்தையுந் திருத்திக்கொள்ளப் பிரதிக்கினைசெய்.

**சம்பாஷணை.**—அர்ச். தெரேசம்மாளோடே சம்பாஷணை செய். அவள் திரளாய் அடைந்திருந்த திவ்வியப் பிரகாசத்திலும் பரம வரங்களிலும் உனக்கு ஏதாகிலும் பங்குகிடைக்க அவளை மன்றாடுவாயாக.



# 17-ம் தேதி

## காணாமற்போய்த் திரும்பக் கண்டெடுத்த திராகுமாவென்னும் நாணயத்தின் உவமை

**ஆயத்தச் சிந்தனை.**—நமது இரட்சகர் இந்த உவமையைச் சொல்லுகிறதைக் கேட்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

**தியானச் சேபம்.**—இதின் கருத்தையும் இதிலடங்கிய புத்தியையும் நன்றாயறிந்து அனுசரிக்க வரங்கேள்.

### முதல் பிரிவு

### திராகுமாவென்பது நம்மை அர்ச்சிக்கிற தேவ இஷ்டப்பிரசாதத்துக்கேத்த அடையாளம்

**தியானம்.**—காணாமற்போன ஆட்டின் உவமையும் போக்கடிக்கப்பட்ட திராகுமாவென்னும் நாணயத்தின் உவமையும் ஒரே கருத்தைக் காண்பித்தாலும், இரண்டையும் வெவ்வேறுவிதமாய் விளக்கிக் காட்டலாம். இயேசுநாதர் பரிசேயரை நோக்கிச் சொன்னதாவது: பத்து நாணயங்களையுடைய எந்த ஸ்திரியானாலும் அவற்றில் ஒன்று காணாமற்போனால் விளக்கைக் கொளுத்தி வீட்டைப் பெருக்கி அதைக் காணுந்தனையுந் தேடாதிருப்பாளோவென்றார். (லூக். 15.) இந்தப் பெண்பிள்ளை தேவ இஷ்டப்பிரசாதத்தை இழந்துபோன கிறீஸ்துவனுக்கு ஓர் விதத்தில் உருவகமாயிருக்கிறாளென்று வேத சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். ஆயினும் நம்மை அர்ச்சிக்கிற தேவ இஷ்டப்பிரசாதத்தோடு திராகுமாவென்னும் நாணயத்தை இணை இடப்படாது. ஏனென்றால் இந்த நாணயஞ் சொற்ப விலையுள்ளதாயிருக்கத் தேவ இஷ்டப்பிரசாதம் விலைமதிக்கப்படாததாயிருக்கின்றது. இஷ்டப்பிரசாதத்தின் கிரயமுஞ் சரி, இயேசுநாதசுவாமியுடைய திரு இரத்தத்தின் கிரயமுஞ் சரி. இந்த நாணயம் சொற்ப இலௌகீக நன்மைகளைமாத்திரம் நமக்குப் பெருவிக்கக்கூடும். இஷ்டப்பிரசாதமோவெனில் நித்திய மோக்ஷானந்த பாக்கியத்துக்கு

நம்மைச் சுதந்தரவாளிகளாக்கும். இப்படியிருந்தபோதிலும் அந்தப் பெண்பிள்ளை ஒரு நாணயத்தை இழந்து போனதைப்பற்றித் தனக்கு மகா நிர்ப்பாக்கியம் நேரிட்டதுபோலெண்ணி அதைக் கண்டெடுக்குமட்டுஞ் சற்றும் இளைப்பாராமல் தேடினாள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—கணக்கற்ற கிறீஸ்துவர்கள் சாவானபாவத்தைக் கட்டிக்கொண்டு தேவ இஷ்டப்பிரசாதத்தை இழந்து அனேக நாள், அனேக மாசம், அனேக வருஷஞ் சென்றபோதிலும் அதைத் திரும்ப அடையும்படி யாதொரு பிரயாசமும்படாதிருக்கிறதைக் கண்டு அவர்களுடைய மதியீனத்தையும் நிர்ப்பாக்கியத்தையும் நினைத்து மனமிரங்கிப் பிரலாபிப்போமாக. அவர்கள் எவ்வளவோ கேடுகெட்டவர்கள்! தேவ இஷ்டப்பிரசாதத்தைப் போக்கடித்ததினால் சர்வேசுரனுடைய இஷ்டத்தையும் போக்கடித்தார்கள். ஞானஸ்நானத்தினாலே பெற்ற மோக்ஷ சுதந்தரத்தையும் இழந்துபோனார்கள். ஆகையால் அவர்களை விழுங்க நரகம் வாய்திறந்து காத்துக்கொண்டிருக்கிறது. இந்த அந்தஸ்திலே அவர்களுக்குச் சடுதிமரணம் வந்தால் அவர்கள்மேல் விழும் நித்திய சாபத்தின் தீர்ப்பு ஒருகாலும் மாறாது. இப்பேர்க்கொத்த குருட்டாட்டத்தை நினைத்து மெத்தவும் இரக்கங்கொள்வோமாக. ஆனால் இந்த இரக்கம் பலிக்கும்படி அவர்கள் புத்தியைத் தெளிவிக்கவும் அவர்களுக்குத் தேவபயம் வருவிக்கவும் தக்கசமயங் கிடைக்கும்போது அதைக் கைதவறவிடாதிருப்பதுமன்றி அவர்களுக்காக எப்போதும் வேண்டிக்கொள்வோமாக.

மனப்பற்றுதல்.—ஆண்டவரே, அந்தகாரத்திலும் மரணநிழலிலும் அகப்பட்டுத் தங்களுக்கு யாதொரு பொல்லாப்பும் வராதென்று அபத்தமாய் நம்பியிருக்கிறவர்களுடைய புத்தியைத் தெளிவித்தருளுஞ் சுவாமி.

பிரதிக்கினை.—பாவிகள் மனந்திரும்புவதற்காகச் சுறுசுறுப்போடு யாதொரு செபத்தையாவது ஒறுத்தல் முயற்சியையாவது ஒப்புக்கொடுக்க ஒருபோதுந் தவறாதே.



## 2-ம் பிரிவு

### திராகுமாவென்பது பக்தியென்னும் பிரசாதத்துக்கு அடையாளம்

தியானம்.—பக்தியென்னும் பிரசாதத்தை இழந்துபோன சந்நியாசிக்கும் இந்தப் பெண்பிள்ளை உருவகமாயிருக்கிறாளென்கலாம். உருக்கமும் ஆறுதலும் தரும் இந்தப் பக்திதான் சந்நியாசியைப் பாக்கியவானாக்குகிறது. மகா பராக்கு வருவிக்கும் கவைகாரியங்களினிடையே முதலாய்ப் புண்ணிய அப்பியாசத்தையும் சர்வேசுரனுடைய ஐக்கியத்தையும் இலகுவாகப் பண்ணுகிறது. உறுதியான இந்தப் பக்தி எவ்வித வறுமை ஒறுத்தலிலும் மதுர இன்பத்தைக் காணும்படி செய்கிறது. இதை இழந்த சந்நியாசி எவ்வளவோ நிர்ப்பாக்கியன்!

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—பக்தியென்னும் பிரசாதத்தை இழக்கிறதினாலே நமக்கு வரவேண்டிய ஆயாசத்தைப்போல வேறெந்த சேதபாதமும் அவ்வளவு வருத்தம் வருவிக்கத் தக்கதல்ல. ஏனெனில் இந்தப்பிரசாதம் சகல நன்மைக்கும் ஊற்றாயிருக்கின்றது. ஆகிலும் நாமிதை இழந்துபோனபிற்பாடு திரும்ப இதை அடைகிறதற்குச் செய்கிறதென்ன? நமது மனவறட்சியைக்கண்டு விம்மிப் பரிதபித்து: ஐயோ, ஆண்டவர் என்னோடிருந்தபோது எனக்கிருந்த வாலிபத்தைத் திரும்பக் காணக்கொடுப்பதாரென்று ஜோப் என்பவர் பிரலாபித்ததுபோல நாமும் நமது பழைய பக்தியை இழந்தோமேயென்று விசனப்படுகிறது போதுமென்றிருக்கிறோமாக்கும். சொல்லுகிறதைவிடச் செய்கிறதன்றோ நன்று. ஆகையால் துவக்கத்தில் நம்மிடத்திலிருந்த ஒழுங்கு அநுசரணை, அடக்கவொடுககம், ஒறுத்தல் இவை முதலியவற்றை திரும்பவும் அப்பியசிப்போமாக. விசேஷமாய்த் தியானமுதலிய ஞான முயற்சிகளைச் சுறுசுறுப்போடு பிரமாணிக்கமாய்ச் செய்துவருவோமாகில் இழந்துபோன திராகுமாவை அந்தப் பெண்பிள்ளை திரும்பக்கண்டதுபோல நாமும் பக்தியாகிற பிரசாதத்தைத் திரும்பவும் அடையலாம்.

**மனப்பற்றுதல்.**—இந்த நல்ல ஏவுதலின்படி பிரமாணிக்கமாய் நடக்கிறதற்கு வேண்டிய தைரியத்தையும், தாராளகுணத்தோடு நாம் செய்துகொண்ட யோசனைகளை நிறைவேற்றுவதற்கு அவசரமான உறுதி திறமையையுங் கேட்போமாக.

**பிரதிக்கினை.**—பத்தியைப் போக்கடிக்கக் கூடுமானதெல்லாத்தையும் வெகு சாக்கிரதையாய்த் தவிர்த்து விடுவேன்.

## 3-ம் பிரிவு

**இழந்துபோன திராகுமாவைக் கண்டதினால் உண்டான சந்தோஷமானது பாவி மனந்திரும்புகிறதினாலே சம்மனசுக்களுக்கு உண்டாகும் மனமகிழ்ச்சியைக் காட்டுகிறது**

**தியானம்.** அந்தப் பெண்பிள்ளை தான் இழந்துபோன திராகுமாவைத் திரும்பவுங் கண்டதினால் அடைந்த சந்தோஷத்தை யோசித்துப்பார். அவள் தன் சந்தோஷத்தை உள்ளடக்கமாட்டாமல், இயேசுநாதசுவாமி சொல்லுகிறதுபோல, தன் தோழிகளையும் அயல் வீட்டாரையும் அழைப்பித்து: நான் இழந்துபோன திராகுமாவைத் திரும்பவும் கண்டதினாலே நீங்களும் என்னோடு சந்தோஷங்கொண்டாடுங்களென்றாள் (லூக். 15).

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—இந்த உவமையிலே மறைந்திருக்கிற சத்தியமென்ன? நமது திவ்விய இரட்சகர்தாமே இதை வெளிப்படுத்தாமலிருந்தால் மற்றொருவராலும் இது வெளியாகமாட்டாது. இதின் மறைபொருள் அவ்வளவு அதிசயத்துக்குரியதாயிருக்கிறது! எப்படியெனில் இயேசுநாதசுவாமி இந்த உவமைக்கு முடிவாகச் சொன்னதாவது: ஒரேயொருபாவி மனந்திரும்புகிறதினாலே பரலோகத்தில் சம்மனசுகளுக்கு வெகு ஆனந்த சந்தோஷமுண்டாகுமென்றார். பத்தி குறைந்து மனந்தளர்ந்துபோன சந்நியாசியொருவன் திரும்பவும் பத்திவேகமடைகிறதைக் குறித்தும் இப்படிச் சொல்லவொண்ணாதோ? சந்தேகமறச்சொல்லலாம். இது எவ்வளவோ உற்சாகம் வருவிக்கத்தக்க யோசனை! ஆகையால் யாராவது நெடுநாளாய் ஒழுங்கு தவறிச் சம்மனசுக்களை மனநோகப்பண்ணியிருந்தால் தீவிரமாய் முழுதும் மனந்திரும்பி அவர்களுக்குச் சந்தோஷம்வருவிக்கத் துரிதப்படக்கடவான். அதினால் அவர்களுடைய சலுகையை அடைவானென்பதற்குச் சந்தேகமில்லை.



**சம்பாஷணை.**—உன் காவலான சம்மனசோடு சம்பாஷணைசெய்.

---

# 18-ம் தேதி

## விருந்துக்கு அழைக்கப்பட்டவர்களுடைய உவமை

**ஆயத்தச் சிந்தனை**—இயேசுநாதசுவாமி இந்த உவமையைச் சொல்லுகிறதாக ரூபிகரித்துக்கொள்வோம்.

**தியானச் சேபம்.**—இயேசுநாதசுவாமி இந்த உவமையில் எடுத்துக் காட்டியிருக்கிற மூன்று விக்கினங்களை நாம் செயித்துக்கொள்ளவும் மற்றவர்கள் அவைகளைச் செயிக்க நாம் உதவியாயிருக்கவும் வேண்டிய தேவானுக்கிரகத்தைக் கேட்கக்கடவோம்.

## முதல் பிரிவு

**ஆங்காரமானது ஆத்தும இரட்சணியத்துக்கு விக்கினம்**

**தியானம்.**—இயேசுநாதசுவாமி சொன்னதாவது: ஒருவன் பெரிய விருந்துசெய்து அநேகம்பேர்களை அழைப்பித்தான். அவர்களெல்லாரும் பல போக்குச் சொல்லிவிட்டார்கள். அதெப்படியென்றால் ஒருவன்: கிராமம் வாங்கினேன், அதைப் போய்ப்பார்க்கவேணுமென்றான், வேறொருவன்: நான் ஐந்து ஏர்மாடு வாங்கினேன், அவைகளைப் பரீக்ஷிக்கப் போகவேணுமென்றான். மூன்றாவது ஒருவன் நான் கலியாணஞ் செய்துகொண்டதினாலே வரக்கூடாது,

மன்னித்துக்கொள்ளுமென்றான். அப்போது குடும்பத்தெசமான் கன கோபமடைந்து தன் ஊழியனை நோக்கி: நீ போய் என் வீடுநிறையுமட்டாக ஏழைகள் குருடர்முதலானவர்களைக் கூட்டிக்கொண்டு வா, ஏனென்றால் அழைக்கப்பட்டவர்களில் ஒருவனாகிலும் என் விருந்தைச் சுகிக்கமாட்டானென்றான் (லூக். 14.) அஞ்ஞானிகளைச் சத்தியவேதத்துக்கும், சகலரையும் மோக்ஷத்துக்கும் அழைக்கிறதைக் காண்பிக்கிற இந்த உவமையிலே மோக்ஷானந்த விருந்தாகிய நித்திய இரட்சணியமடைகிறதற்கு மனிதர் செய்கிற மூன்றுவித தடைகளை இயேசுநாதசுவாமி இதில் குறித்துக் காட்டுகிறார்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—நான் ஒரு கிராமத்தை வாங்கினேன்; அதினாலே வரக்கூடாதென்று ஒருவன் சொல்லுகிறான். இதினாலே எவ்வித அக்கிரமத்துக்கும் பின்வாங்காமல் எப்படியாவது தான் உலகத்தில் சகலருக்கும் மேலாக உயர்ந்து போகவேணுமென்கிற ஆங்காரமும், சகலருந் தன்னைக் கனமாய் எண்ணித் தன்னைச் சங்கிக்கவேணுமென்கிற பெருமையும் மோக்ஷமடைவதற்கு முதல் விக்கினமென்று அறியவும். ஏனென்றால் சகலரும் சர்வேசுரனுக்குப் பணிந்து அவருடைய திவ்விய கற்பனைகளின்படி நடக்கவேண்டியிருக்க, யாதொருவன் அப்படி நடவாமல் எதுகாரியத்திலும் தன் சுய பெருமையைத் தேடித்திரிந்தால், அவனுக்குச் சர்வேசுரன் தம்மையே சம்பாவனையாகவும், தமது பேரின்ப மோக்ஷத்தை வெகுமானமாகவுங் கொடுப்பாரென்று நினைக்கலாமோ? பரிச்சேதமில்லை. ஆகையால் அப்பேர்க்கொத்தவர்களைக் கேடுகெட்டவர்களென்கவேணுமொழிய மற்றப்படியல்ல. அவர்கள் தேடும் மகிமை ஒருக்ஷணத்தில் தோன்றி மறையும் நீர்க்குமிழியேயன்றி வேறென்ன? அதற்காக வெகு சிரமப்பட்டு ஒருவேளை அதையடைந்தபோதிலும், அதன்பின் கடைகெட்டவர்களாய்ச் சபிக்கப்பட்ட பாவிகளோடு நரகத்தில் தள்ளுண்டு சர்வேசுரனுக்கும் அர்ச்சியசிஷ்டவர்களுக்கும் மகா அருவருப்புக்குரியவர்களாவார்கள். இந்தப் பொல்லாப்பினின்று சர்வேசுரன்



நம்மைக் காத்து, நமது மெய்யான பாக்கியமின்னதென்று தெளிவித்ததற்காக அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செலுத்தக்கடவோம். அன்றியும் ஆங்காரத்துக்கு அடிமைகளாகி அறிவாகிய கண்கெட்ட குருடர்கள் உலக வீண் மகிமையைத் தேடுவது நிசிதமென்றும், சர்வத்துக்கும் அதிபதி கர்த்தாவாகிய சர்வேசுரனுக்குப் பணிந்து நடப்பதே மகா மகிமையென்றும் சமயங்கிடைக்கும்போது அவர்களுக்குத் தெளிவிக்கப் பிரயாசப்படக்கடவோம்.

**மனப்பற்றுதல்.**—இந்தச் சத்தியங்களை நாம் பிறர் மனதிலும் புத்தியிலும் நன்றாய்ப் பதிப்பிக்கத்தக்கதாக, முந்த முந்த இவைகள் நமது மனதில் ஆழமாய்ப் பதிந்து இறங்கும்படி அநுக்கிரகங் கேட்போமாக.

**பிரதிக்கினை.**—நம்மிடத்திலும் பிறரிடத்திலும் சர்வேசுரனுடைய மகிமை வெற்றிகொள்ளும்படி தேடுவோம்.

## 2-ம் பிரிவு

### பொருளாசையானது ஆத்தும இரட்சணியத்துக்கு இரண்டாம் விக்கினம்

**தியானம்.**—நான் ஐந்து ஏர்மாடு வாங்கினேன், அவைகளைப் பரீக்ஷைபார்க்கவேண்டியதினால் வரக்கூடாதென்று வேறொருவன் சொன்னான். இதைக்கொண்டு திவ்விய கர்த்தர் பொருளாசை, உலோபத்தனம் அல்லது திரவியத்தின்மேல் தீராத தாகம் இரக்ஷணியத்துக்கு இரண்டாம் விக்கினமென்று காண்பிக்கிறார். ஏனென்றால் உலோபியானவன் தான் எப்போதும் இந்த உலகத்தில் இருக்கிறவனைப்போல ஆஸ்திபாஸ்தியின்மேல் கவலையாய் இன்னும் எப்படித் தேடிக் குவிக்கலாமென்று யோசித்து யோசித்து இரவும் பகலும் போக்குகிறான்; இவன் எப்படி பரலோகத்தைப்பற்றி நினைக்கப்போகிறான்? பணமே இவனுக்குத் தெய்வம்; அது வந்தாலே போதும்; அதற்காக என்னகெட்டாலும் பரவாயில்லையென்றிருப்பான்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**— நாம் தரித்திர வார்த்தைப்பாடு கொடுத்து ஆத்தும இரக்ஷணியத்

துக்கு மகா தடையான இந்த விக்கினத்தை நம்மைவிட்டு எப்போதைக்கும் தூர அகற்றும்படி சர்வேசுரன் நமக்கு நல்ல புத்தி ஏவினது எவ்வளவோ அதிஷ்டம்! நமக்கு அவசரமான சம்ரக்ஷணைசெய்து உலகத்தில் மகா மன அமரிக்கையையும், மோக்ஷத்தில் அழியாத செல்வதிரவியங்களையும் பெருவிக்குந் தரித்திரம் எவ்வளவோ பாக்கியமுள்ளது! இதினிமித்தம் சர்வேசுரன்மட்டில் நமக்குள்ள நன்றியறிதலை எப்படிக் காண்பிக்கப்போகிறோம்? இதற்காக நாம் செய்யவேண்டியதென்னவென்றால் தரித்திரப் பற்றுதலில் நாளுக்குநாள் அதிகரித்து உத்தமதன மடைவதுமன்றி, பொருளாசைகொண்டவர்களுக்கு நல்ல புத்தி சொல்லி, ஒருநாளைய நன்மையாகிய இவ்வுலக ஆஸ்தியின் அற்பத்தனத்தையும் அதின் மாயத்தையும் தெளிவித்து, அழியாததும் விலைமதிக்கப்படாததுமான மோக்ஷ நன்மைகளைத்தேடி அடையும்படி அவர்களிடத்தில் ஆவலைப் பிறப்பிக்கக்கடவோம்.

மனப்பற்றுதல்.—விலைமதிக்கப்படாத முத்து மாணிக்கத்துக்கு ஒப்பான சுவிசேஷ தரித்திரத்தை நமக்கு ஆண்டவர் அறிவித்ததினாலே அவருக்கு நன்றியறிந்திருக்கக்கடவோம்.

பிரதிக்கினை.—தரித்திரமென்கிற வார்த்தைப்பாட்டை அடிக்கடி புதுப்பித்து இதிலுள்ள கடமைகளையெல்லாம் சந்தோஷமாய் நிறைவேற்றுவோமாக.

## 3-ம் பிரிவு

### சிற்றின்பம் ஆத்தும இரட்சணியத்துக்கு மூன்றும் விக்கினம்

தியானம்.—கலியாணம் செய்துகொண்டேன்; அதினாலே நான் வரக்கூடாது, என்னை மன்னிக்க வேணுமென்று இன்னொருவன் சொன்னான். அழைக்கப்பட்ட இந்த மூன்றும் மனிதன் சொன்ன போக்கைக்கொண்டு ஆண்டவர் ஆத்தும இரட்சணியத்துக்குண்டான மூன்றும் விக்கினத்தை எடுத்துக்காட்டுகிறார். ஆயினும் சில பதிதர் பிதற்றினதுபோல, இதைக்கொண்டு மெய்



விவாகம் கெட்டதென்று தீர்மானிக்கிறதில்லை. ஆனால் சரீர சுகபோகத்தின்பேரிலுள்ள ஆவலானது மட்டுக்கடந்து மனிதனை அசுசியான பாவப்பாதாளத்தில் கொண்டு தள்ளக்கூடுமென்றும் அந்தப் பாவமானது அவனுடைய புத்தியை மயக்கி, பரலோகத்தின் பேரிலும் அதையடைவதற்குப் படவேண்டிய பிரயாசத்தின்பேரிலும் அவனுக்கு வெறுப்பு பிறப்பிக்குமென்றுங் காண்பிக்கிறார். மேலும் கற்பின் வார்த்தைப்பாடு கொடுத்திருக்கிற நாம் அந்த அசுத்தப் பாவ நோய்பிடித்தவர்களைக் குணமாக்கி இரட்சிக்கப் பிரயாசப்படும்போது, அது நம்மை ஒட்டாதபடி சர்வ சாக்கிரதையாயிருக்கவேணுமென்றும் நமக்கு எச்சரிக்கிறார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இது விஷயத்தில் நமது அன்புக்குரிய இரட்சகருடைய நோக்கத்தைப் பின்சென்று சிற்றின்ப சோதனைகளில் சிக்கிக்கொள்ளாதபடி விழித்திருந்து செபிக்கக்கடவோம். அன்றியும் இந்தப் பாவத்தில் விழுந்து அவலட்சண பசாசுகளுக்கு அடிமையாய்க்கிடக்கிற நிர்ப்பாக்கியர்கள் மனந்திரும்பும்படி நாம் எடுக்கும் உபாயமெலலாம் அனுகூலமாய் முடியும்படி ஆண்டவரை இரந்து மன்றாடுவோமாக.

சம்பாஷணை.—நமது திவ்விய இரட்சகரோடே சம்பாஷணை செய்யக்கடவோம்.

---

## 19-ம் தேதி

### பிரமாணிக்கமற்ற காரியஸ்தனுடைய உவமையும் இயேசுநாதசுவாமி இதைக்கொண்டு நமக்குக் கற்பிக்கும் புத்திமதியும்

ஆயத்தச் சிந்தனை.—அநேக சனங்கள் இயேசுநாதரைச் சூழ்ந்துகொண்டு அவர் சொல்லுகிறதைக் கேட்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

**தியானச் செபம்.**—இயேசுநாதர் சொன்ன புத்திக்கு அமைந்து பிரமாணிக்கமாயிருக்க வரங்கேள்.

## முதல் பிரிவு

### பிரமாணிக்கமற்ற காரியஸ்தன் பட்ட கலக்கம்

**தியானம்.**—இயேசுநாதசுவாமி சொன்னதாவது : ஒரு மகராசனிடத்திலிருந்த ஒரு காரியஸ்தன் பணம் அபகரித்துக்கொண்டதாகக் குற்றஞ் சாட்டப்பட்டான். ஆகையால் அந்த எசமான் அவனை அழைப்பித்துச் சொன்னதாவது : உன்பேரில் நான் கேள்விப்படுகிறதென்ன ? உன்னுடைய விசாரணைக்குக் கணக்குச்சொல். இனிமேல் என்னிடத்தில் நீ அலுவல் பார்க்கமாட்டாய் என்றான். காரியஸ்தன் தன் கணக்கைச் சரிவர ஒப்புவிக்கக்கூடாததினால் அத்தியந்த கலக்கத்துக்குள்ளானான். இதைப்பற்றி அவன் தனக்குள்ளே சொல்லிக்கொண்டதாவது : இனிமேல் நான் பிழைக்கிறதெப்படி ? உழுது பயிரிடவும் அறியேன், பிட்சையெடுக்கவும் வெட்கமாயிருக்கிறதே என்றான் (லூக். 16).

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—அந்தக் காரியஸ்தன் நான்தான். அந்த மகராசனோ சகல நன்மைக்குமுடையவரான சர்வேசுரன்தான். அவர் தமது நன்மைகளிலே எனக்கு ஓர் அற்பப் பங்கைமாத்திரங் கொடுத்து விசாரிக்கச் சொல்லியிருந்தாலும் அந்தப் பங்கு விலையேறப்பெற்றதாயிருக்கின்றது. அதேதென்றால் என் சரீரமும், சரீரத்திலுண்டான பஞ்சேந்திரியங்களும், ஆத்துமமும், அதிலுள்ள ஆச்சரியமான தத்துவங்களும், எனக்குக் கொடுத்த காலமும், என் மனச்சுதந்தரமும், சீவியமும், தேவஇஷ்டப்பிரசாதமும் அநேக வரங்களும் இன்னமும் என்வசமாய்க் கொடுக்கப்பட்டிருக்கிற கணக்கில்லாத படைக்கப்பட்ட வஸ்துக்களுமாமே. இவைகளை நான் விசாரிக்க என்வசத்தில் ஒப்புவித்திருக்கிறார். ஒரு நாள் நான் நினையாத நேரத்திலே இந்தக் காரியங்களின் பேரில் என்னிடத்தில் கண்டிப்பாய்க் கணக்குக்கேட்பார்.



ஐயோ, நான் என்னசெய்வேன் ! அவர் கருத்துக்கும் கற்பனைக்கும் ஒத்தபடி நான் அவைகளை விசாரியாமலும், அவைகளினின்று நியாயமாய் அவருக்குச் செல்லவேண்டிய பலனைப் பிறப்பியாமலும் இருந்தால், அல்லது அவைகளை அவருக்குச் செலுத்துவதற்குப் பதிலாய் எனக்கே சொந்தமாக்கிக் கொண்டேனானால் எனக்கு எவ்வளவோ கேடு ! ஐயோ ! என் கணக்கெல்லாம் சரியாயிருக்கிறதோ ! இந்த க்ஷணத்தில் சர்வேசுரன் என்னை அழைத்து : நீ விசாரித்து வந்ததற்கெல்லாம் கணக்குச் சொல்லென்றால், பிரமாணிக்கமற்ற அந்தக் காரியஸ்தன் பட்ட வருத்தத்திலும் நான் படும் வருத்தஞ் சொற்பமாயிருக்குமோ !

**மனப்பற்றுதல்.**—உன்னை நீ நன்றாய் அறியவும் சர்வேசுரனுக்கு நீ கொடுக்கவேண்டிய கணக்கெல்லாஞ் சரியாய்த் திட்டப்படுத்தவும் வேண்டிய வரத்தைக் கேள்.

**பிரதிக்கினை.**—அன்றாடஞ் செய்யவேண்டிய ஆத்தும சோதனையை நன்றாய்ச் செய்வதுமல்லாமல் பாவசங்கீர்த்தனத்துக்கு முன் செய்யும் ஆத்தும சோதனையையும் மகா கருத்தாய்ச் செய்வாயாக.

## 2-ம் பிரிவு

### பிரமாணிக்கமற்ற அந்தக் காரியஸ்தன் எடுத்த உபாயம்

**தியானம்.**—அந்தக் காரியஸ்தன் தன் அலுவலினின்று நீக்கப்படும்போது என்ன உபாய சூட்சஞ் செய்யலாமென்று யோசித்துத் தனக்குள்ளே சொல்லிக்கொண்டதாவது : என்னை அலுவலினின்று நீக்கும்போது தங்கள் வீட்டிலே என்னை ஏற்றுக்கொள்ளத்தக்கவர்கள் இருக்கும்படி நான் செய்யவேண்டியதென்னவென்று எனக்குத் தெரியுமென்றான். பின்னும் தன் எசமானிடத்தில் கடன்பட்டவர்களைத் தனித்தனியே அழைப்பித்து, முந்தினவனைப் பார்த்து : நீ எவ்வளவு கொடுக்கவேணுமென்று கேட்க, அவன் : நூறு பீப்பாய் எண்ணெய் என்றான்.

அதைக் கேட்ட காரியஸ்தன்: இதோ உன் பத்திரத்தை வாங்கிக்கொண்டு சீக்கிரமாக உட்கார்ந்து வேறொரு பத்திரத்திலே ஐம்பதுமாத்திரமென்று எழுதென்றான். இப்படியே கடன்கொடுக்கவேண்டிய மற்றவர்கள் மட்டிலும் செய்வித்தான். எசமான் இதைக்கேட்டு அவன் வெகு சமர்த்தாய்க் காரியம் முடித்தானென்று அவனை மெச்சிக்கொண்டான். இதைக் குறித்து இயேசுநாதர் சொல்லியிருக்கிறதாவது: இவ்வுலகத்தின் மக்கள் ஒளியின் மக்களைப்பார்க்கத் தங்கள் காரியத்தை நடப்பிக்கிறதிலே மெத்தச் சமர்த்துள்ளவர்களென்றார் (லூக். 16).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—தேவகுமாரன் இந்த உவமையைச் சொல்லிக்காண்பித்தபோது அந்தக் காரியஸ்தனுடைய நம்பிக்கைத் துரோகத்தைச் சரியென்று ஒத்துக்கொண்டதாகச் சொல்லாமல், நம்மைச் சேர்ந்த ஞானக்காரியங்களிலே நாம் வெகு சொற்பக் கவலை வைக்கிறதைப்பற்றி நாம் வெட்கப்படவேணுமென்று விரும்புகிறார் என்பதைக் கவனி. உலகத்தின் மக்கள் தங்கள் பிழைப்புக்கடுத்த காரியங்களில் பின் வரப்போகிறதை முன்னமே யோசித்துத் தக்க உபாய சூட்சங்களைக் கையாடும்போது, பிரகாசமடைந்த பிள்ளைகளாகிய நாமோ உத்தமதனத்திலும் பரிசுத்ததனத்திலும் விர்த்தியடைவதற்கு ஏற்ற வழிகளை உதவிக்கொள்வதில், அவ்வளவு சூட்சமும் சாக்கிரதையும் காட்டுகிறதில்லையென்பது மெய்யல்லவோ? நமது நடக்கையை நாம் பத்தும் பத்தாய் ஆராய்ந்தோமேயானால் இப்போது சொன்னதெல்லாம் உண்மையென்று நாமே ஒத்துக்கொள்வோம்.

மனப்பற்றுதல்.—இதெல்லாம் சரியென்று ஒத்துக்கொண்டு இதற்காகப் பரிசுத்த விதமாய்த் தன்னைத்தானே சினந்துகொள்ளவேணும்.

பிரதிக்கினை.—முந்தி நான் பத்தி சுறுசுறுப்பாயிருந்த காலத்திலே புண்ணிய சாங்கோபாங்கத்தில் விரைவாய் வர்த்திக்க நாமெடுத்த நல்ல உபாயங்களை இப்போது திரும்பவும் உதவிக்கொள்வேன்.



## 3-ம் பிரிவு

### பிரமாணிக்கமற்ற அந்தக் காரியஸ்தனுடைய உவமையின் முடிவு

தியானம்.—நமது திவ்விய இரட்சகர் இதற்கு முடிவுகட்டிச் சொன்ன வார்த்தைகளை யோசித்துப்பார். அதாவது, நானும் உங்களுக்குச் சொல்லுகிறதேதென்றால்: நீங்கள் ஆஸ்திபாஸ்திகளைக்கொண்டு உங்களுக்குச் சிநேகிதரை ஏற்படுத்திக்கொள்ளுங்கள். ஏனெனில் பின்னால் உங்களுக்கு அவசரமாயிருக்கும்போது அவர்கள் நித்திய கூடாரங்களில் உங்களைச் சேர்த்துக்கொள்வார்களென்றார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—பல அக்கிரமங்களுக்கு ஏதுவான ஆஸ்தியைக்கொண்டு ஏழைகளுக்குப் பிச்சை கொடுத்து, அவர்களை நமக்காகச் சர்வேசுரனிடத்தில் பரிந்துபேசும் சிநேகிதராக்கிக்கொள்ளவேணுமென்பது இயேசுநாதசுவாமி இந்த உவமையில் காட்டின கருத்தாமே. ஆனால் நாம் தரித்திராயிருக்க இதற்கொத்த பிரகாரம் நடப்பதெப்படி? எப்படியென்றால்: முதலாவது மகராசராயிருக்கிறவர்கள் எளியவர்களுக்கு வெகு தர்மஞ்செய்ய நாம் அவர்களை உடன்படுத்தலாம். 2-வது, நாம் அவர்களுக்கு ஞானதர்மம் செய்யலாம். இது, அவர்கள் மோக்ஷ இராச்சியத்திற்போய் நமக்காக ஆண்டவரிடத்தில் மனுப்பேசுகிறதற்குச் சக்திகொடுக்கிறதினாலே காசு பணத்தைவிட அதிக விலைபெற்றது. அன்றியும் நாம் விசுவாசக்கண்ணால் பார்க்கும்போது இவ்வுலக தரித்திரரைவிட உத்தரிக்கிற ஆத்துமாக்கள் அதிக தரித்திராகவும் பிரலாபத்துக்குரியவர்களாகவுந் தோன்றுகிறார்களல்லவோ? ஏனென்றால் அவர்கள் தாங்களே தங்கள் அவதியைத் தீர்க்கச் சற்றுங்கூடாதவர்கள். அவர்களிடும் அபய சத்தமும் சுபாவமாய் நமது காதில் விழமாட்டாது. இப்படியிருக்க அவர்களுக்கு நம்மால் கூடிய உதவியாகிய தர்மம் செய்ய அசட்டையாயிருக்கலாமோ? அவர்களுக்கு உதவி புரிய நமது கையில் எத்தனையோ உபாயங்களுண்டு! விசேஷமாய் நாம்

அடையக்கூடுமான கணக்கற்ற பரிபூரண பலன்களை அடைந்து அவர்களுக்காக ஒப்புக்கொடுக்கக்கடவோம்.

சம்பாஷணை.—உத்தமதனத்தில் நாள்தோறும் ஓங்கி உயர்ந்துவந்த அர்ச். அல்காந்தர் இராயப்பரோடு சம்பாஷணை செய். இன்று அவருடைய திருநாள்.

---

# 20-ம் தேதி

## சோற்பக் காரியங்களில் பிரமாணிக்கமாயிருக்கிறதைக் குறித்து இயேசுநாதர் கற்பித்த போதகம்

**ஆயத்தச் சிந்தனை.**—சொற்பக் காரியத்தில் பிரமாணிக்கமாயிருக்கிறவன் பெரிய காரியத்திலும் பிரமாணிக்கமாயிருப்பானென்று இயேசுநாதர் சொல்லுகிறதைக் கேட்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

**தியானச் சேபம்.**—சொற்பக் காரியத்திலும் பிரமாணிக்கமாயிருப்பதற்கு வேண்டிய மனத் தாராளத்தையும் உறுதியையுங் கேட்பாயாக.

### முதல் பிரிவு

**சொற்பக் காரியத்தில் பிரமாணிக்கமாயிருப்பதின்பேரில்**

**தியானம்.**—நம்பிக்கைத் துரோகஞ் செய்த அந்தக் காரியஸ்தனுடைய உவமையைத் திவ்விய கர்த்தர் திருவுளம்பற்றினபிறகு, அற்பக் காரியங்களில் பிரமாணிக்கந் தவறுவதினால் அஞ்சத்தக்க பொல்லாப்பு எவ்வளவென்றும்; அதற்கு விரோதமாய், அவைகளில் பிரமாணிக்கமாயிருப்பது எவ்வளவு பிரயோசனமென்றும் காண்பிக்கத்தக்கதாக அருளிச்செய்ததாவது: சிறிய காரியங்களில் பிரமாணிக்கமாயிருக்கிறவன் பெரியகாரியங்களிலும் பிரமாணிக்கமாயிருப்பானென்றார் (லூக். 16). இந்த உன்னத வாக்கியத்தை நாம் நன்றாய்ச் சிந்தித்து ஆராய்வோமானால், அற்பக் காரியங்களிலும் பிரமாணிக்கமாயிருப்பதே நமது நடக்கைக்கு மாறாத ஒழுங்காயிருக்கும்படி செய்துகொள்வோம். இதற்கு நம்மை உடன்படுத்துகிற முகாந்தரங்கள் எத்தனையோ உண்டு! முதலாவது, சர்வேசுரனைப்பற்றிய முகாந்தரம். சர்வேசுரனைச் சிநேகிக்கிறதும், நமது சிநேகத்தின் அத்தாட்சியை நிலைமையாய் அவருக்குக் காண்பிக்கிறதும் நமக்கு உண்டான கடமைகளுக்குள் முந்தினதும் மகா மதுரமுமான கடமையல்லோ? ஆனால் சொற்பக் காரியங்களிலே முதலாய் அவருடைய திருச் சித்தத்தைப் பிரமாணிக்கமாய் நிறைவேற்றினால்தான் இந்த அத்தாட்சியைக் காட்டுவோம். மேலும் தினந்தோறும், க்ஷணத்துக்கு க்ஷணம், சொற்பக் காரியங்களோடு நாம் ஊழியத்திலே ஏறக்குறைய இடைவிடாமல் இந்த அத்தாட்சியை அவருக்குக் காண்பிக்கக் கூடுமாயிருக்கிறோம். இரண்டாவது, பிறரைப்பற்றிய முகாந்தரம். சகலருடைய ஆத்துமத்திலும் மிகுதியான ஞானப்பலனை விளைவிக்கவும், கல்நெஞ்சரான பாவிகளை முதலாய் மனந்திருப்பவும் நாம் ஆசைப்படுகிறோமே. ஆனால் சர்வேசுரனுடைய விசேஷ அநுக்கிரகமில்லாமல் இது நம்மால் முடியாது. சின்னஞ் சிறிதான காரியத்தில் முதலாய்ப் பிரமாணிக்கமாயிருந்து, தாராள குணத்தைக் காட்டுவோமானால் ஆத்தும இரட்சணிய வேலை பலிக்குமென்பது உறுதி. ஏனெனில் மகா பிரமாணிக்கத்தோடும், தாராள மனதோடும் தமக்கு ஊழியம்பண்ணுகிறவர்கள் துவக்கின காரியத்துக்கு அவரும் தாராளமாய் உதவிசெய்யப் பிரியப்படுவார். மூன்றாவது, நம்மைப்பற்றிய முகாந்தரம். சிறிய காரியத்தில் பிரமாணிக்கமாயிருக்கிறவன் பெரிய காரியங்களிலேயும் பிரமாணிக்கமாயிருப்பானென்று நமது திவ்விய இரட்சகர் நிச்சயித்துச் சொல்லுகிறார். ஆகையால் கடுஞ் சோதனைகளிலேயும் பலத்த தந்திரங்களிலேயும் நாம் உறுதி நிலையாயிருப்பதற்கு இது எப்பேர்ப்பட்ட அச்சாரமாயிருக்கிறது!

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—மேலே காட்டிய இந்த முகாந்திரங்களில் அடங்கியிருக்கிற உறுதியான சத்தியங்களையெல்லாம் நீ நன்றாய்க் கூர்ந்து

யோசித்து விசேஷமாய் இவைகளில் ஒவ்வொன்றின்பேரிலும் விசுவாசமுயற்சி செய்வாயாக. பின்னும் தினந்தோறும் நீ செய்யும் கிரியைகளையெல்லாம் ஒவ்வொன்றாய்ப் பிரித்துப்பார்த்து, சொற்பக் காரியங்களிலே நீ எவ்வளவு தூரம் பிரமாணிக்கமாயிருக்கிறாயென்றும், எதிலே தவறி நடக்கிறாயென்றும், உன்னைத்தானே வினவிக் கேட்டுக் கொள்வாயாக.

**மனப்பற்றுதல்.**—சொற்பக் காரியங்களிலும் மாறாத பிரமாணிக்கமாயிருக்க வேண்டிய திடனை ஆண்டவரிடத்தில் கேட்பாயாக.

**பிரதிக்கினை.**—சொற்பக் காரியங்களிலிருக்க வேண்டிய பிரமாணிக்கத்தைப்பற்றித் தருணத்துக்குத் தருணம் விசேஷ ஆத்தும சோதனை செய்யக்கடவாய்.

## 2-ம் பிரிவு

### சொற்பக் காரியங்களில் பிரமாணிக்கந் தவறுதல்

**தியானம்.**—சிறிய காரியங்களில் வஞ்சகஞ் செய்கிறவன் பெரிய காரியங்களிலும் வஞ்சகனாயிருப்பானென்று இயேசுநாதர் சொல்லியிருக்கிறார். இந்த இரண்டாம் சுலோகமும் தப்பில்லாத சத்திய சரூபியின் வாக்காமே. நாம் சொற்பமென்று நினைத்திருக்கும் சில ஒழுங்குகளை வாடிக்கையாய் மீறி நடக்கிறது கனமான தின்மையாயிருக்கிறதுமன்றி, அதினால் நமக்கும் மற்றவர்களுக்கும் பெரிய நஷ்டம் வருமென்று நமது புத்தியில் நன்றாய் உணரவேண்டியது. அதேதெனில்: முதலாவது, பரலோகத்தில் மிகுந்த பேறுபலன்களைச் சேர்த்துவைக்கிறதற்கான சமயத்தை நாம் இழந்து போகிறோம். 2-வது, இதினால் நமது கண்ணுக்குத் தோன்றாத கணக்கற்ற மாசுகள் நமது ஆத்துமத்தில் பெருகி அதை ஆண்டவர் கண்ணுக்கு மகா அவலக்ஷணமாக்குகின்றன. 3-வது, ஆண்டவர் தமது வரப்பிரசாதத்தை நமக்கு ஏராளமாய்ப் பொழிவதற்கும், தமது ஞான ஏவுதலைத் தந்து நம்மைக்கொண்டு யாதொரு நன்மை



செய்விப்பதற்கும் இது பெருந் தடையாயிருக்கும். 4-வது, நாம் வசிக்கும் மடத்திலே நம்மோடு மற்றவர்களும் பத்திக் குறைவாய் நடப்பதற்கு ஏதுவாகும். ஏனென்றால் ஒருவன் வெளி ஒழுக்கந் தப்பி, காட்டுந் துர்மாதிரிகையால் பலபேர் மயங்கிக் கெடுவதுமல்லாமல் நாள் வட்டத்தில் மடமெல்லாம் அழிந்து அலங்கோலையாய்ப் போவதற்கும் அது வழியாகும். இவ்விதமாய்த் திருச்சபையில் வெகு காலம் ஞானமாளிகையாயிருந்த சபைகள், சிறுகச் சிறுக இடிந்து கடைசியாய்க் குட்டிச்சுவரானதென்று சரித்திரங்களைக்கொண்டு அறிவோம்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—இந்த யோசனைகளெல்லாம் மகா கவனத்தோடு நிதானித்துப் பார்க்கத் தக்கவைகளாமே. ஆகையால் உன்னிடத்தில் உள்ளதை உள்ளபடி சோதித்துப் பார். மற்றவர்கள் என்ன கோலமாய் நடந்தாலும் சிறிய காரியங்களிலே வஞ்சகன் பெரிய காரியங்களிலும் வஞ்சகனாவானென்று இயேசுநாதர் சொன்னதை உனக்கே சொன்னதாக எண்ணிக் கொள். இதின்மட்டில் நீ அசட்டையாய் நடந்திருந்தால் இன்றுமுதல் சீர்திருத்திக்கொள்.

**மனப்பற்றுதல்.**—இதுமட்டும் நீ அசட்டையாய் நடந்ததைக்குறித்து உத்தம மனஸ்தாபப்பட்டு இனிமேல் சரியாய் நடக்கத் தாழ்ச்சியோடு தேவ உதவியை இரந்து மன்றாடு.

**பிரதிக்கினை.**—உன்பேரில்தானே அதிக கண்ணுண்டாயிருப்பாயாக.

## 3-ம் பிரிவு

### சொற்பக் காரியங்களிலே நாம் தவறிப்போவதற்கு உண்டான முகாந்தரம்

**தியானம்.**—அற்ப சொற்ப காரியங்களிலேமுதலாய் வெகு சட்ட திட்டமாய் நடப்பது எவ்வளவு முக்கியமான காரியமென்று நம்மெல்லோருடைய புத்திக்கும் தோன்றா

கிற விஷயந்தான். இது நமது மனதில் பட்டிருந்தும் நாம் இதற்கு விபரீதமாய் நடக்கிறதென்ன? சொற்பக் காரியங்களிலும் மாறாத பிரமாணிக்கமாயிருப்பதற்கு எந்நேரமும் விழிப்பும், ஊக்கமும், சுயபரித்தியாகமும் அவசியம். இவையெல்லாம் சுபாவத்துக்குப் பிரியமானவைகளல்லவே. இதுதான் இந்தத் தவறுதலுக்குக் காரணம். ஆனால் இந்தக் காரணத்தைச் சாடையாய் மறைத்துத் தங்களுக்குப் பூரண இளக்காரம் கொடுக்கிறவர்களும், மனஞ்சோர்ந்து நடக்கிறவர்களுஞ் சொல்லும் போக்குகளை ஏற்றுக்கொண்டு, நமது மனச்சாட்சியை அமர்த்தத் தேடுகிறோம். எப்படியென்றால்: அர்ச்சியசிஷ்டதனம் அற்பக் காரியங்களில் அடங்கினதல்ல. நான் இப்போது நவ சந்நியாசியல்லவே. நுட்ப நுணுக்கமான கூறுபாடுகளுக்கும் என் குணத்துக்கும் இசைந்து வராது. அகத்தியமாய் அநுசரிக்கவேண்டிய காரியந்தான் நான் கடைப்பிடிக்கிறது. அற்பக் காரியங்கள் அற்பப் புத்தியுள்ளவர்களுக்கு என்று இவை முதலியவைகள் சோம்பேறிகள் சொல்லி வரும் போக்குகளாகும்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—நாம் இப்பேர்ப்பட்ட அருவருப்பான போதகங்களை நம்மை விட்டு அகற்றி அவைகளுக்கு முழு விரோதமான கோட்பாடுகளைப் பின்பற்றக்கடவோம். அதாவது: அற்பக் காரியங்களை அசட்டை செய்பவன் பெரிய காரியங்களிலும் மோசம் போவான். மெய்யாகவே சர்வேசுரனைச் சிநேகிக்கிறவன் யாதொன்றையும் அசட்டையாய் விடமாட்டானென்று நித்திய சத்திய சுரூபியானவர் சொல்லியிருக்கிறார். மேலும் அர்ச்சியசிஷ்டவர்கள் அநுசரித்ததும், போதித்ததும், இந்தக் கோட்பாடுதான். அதெப்படியென்றால்: சொற்பக் காரியங்களில் தேறாதவன் பெரிய காரியங்களிலும் தேறமாட்டானென்று அர்ச். சவேரியார் எழுதிவைத்தார். என் ஒழுங்குகளில் ஒன்றையானாலும் மனம் பொருந்தி மீறுகிறதைவிட, துண்டு துண்டாய் வெட்டப்பட ஆசிக்கிறேனென்று அர்ச் பெர்க்மான்ஸ் அருளப்பர் வசனித்திருக்கிறார்.



**சம்பாஷணை.**—அற்பக் காரியங்களில் முதலாய் மாறாத பிரமாணிக்கமாய் நடந்து அர்ச்சியசிஷ்டவரான பெர்க்மான்ஸ் அருளப்பரோடு சம்பாஷணை செய்.

---

# 21-ம் தேதி

## அர்ச். ஊர்சுலம்மாள் திருநாள்

**ஆயத்தச் சிந்தனை.**—இந்த அர்ச்சியசிஷ்டவள் பரலோகானந்த பேரின்பத்தில் வீற்றிருக்கிறதாகவும், கணக்கற்ற கன்னியர்கள் இவளைப் புடைசூழ்ந்து தங்களுக்குத் தாயாராக இவளை வாழ்த்தித் துதிக்கிறதாகவும் ரூபிகரித்துக் கொள்.

**தியானச் சேபம்.**—இந்த அர்ச்சியசிஷ்டவளிடத்தில் விளங்கின விசுவாசம், ஞானவைராக்கியம், மனத்தாராளமென்னும் புண்ணியங்களைக் கேட்பாயாக.

## முதல் பிரிவு

### கன்னியாஸ்திரீயும் வேதசாட்சியுமான அர்ச். ஊர்சுலம்மாளுடைய மகிமை

**தியானம்.**—சத்தியவேதம் இங்கிலாந்து தேசத்தில் மிகவும் செழிப்புற்றோங்கின காலத்தில், சுமார் முந்நூற்றறுபதாம் வருஷத்தில், இந்த அம்மாள் கோர்னூவே இராச்சியத்திலே தியோனோக்கென்கிற இராசாவினிடமாய்ப் பிறந்து கலக்கியானங்களில் தேர்ந்து விளங்கினாள். சர்வேசுரன் தமது வரப்பிரசாதங்களினால் ஏற்கனவே இவளைத் தமது வசப்படுத்திக்கொண்டார். இவளும் பத்தி நெறியிலே வெகு சுறுசுறுப்பாய் வளர்ந்து தன் கன்னிமையைச் சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுத்தாள். அப்படியிருக்க, கால்லியாதேசத்திலுள்ள பிரித்தானியாவென்கிற நாட்டைச் சண்டையில் செயித்துப் பிடித்துக்கொண்ட கோனோனென்கிற ஓர் பெரிய துரைமகனுக்கு இவளைக் கலியாணஞ்செய்து கொடுப்பதாக இவள் தகப்பன் உறுதிவாக்குக் கொடுத்தி-

ருந்தான். ஆகையால் அந்தச் சண்டைக்குப்போன அனேகந் துரைமக்களுக்கும் சேவர்களுக்கும் வாழ்க்கைப்பட நியமிக்கப்பட்ட அநேகமாயிரம் பெண்களோடு, ஊர்சூலம்மாளும் தன் மனதுக்கு விரோதமாய்க் கப்பலேறி யாத்திரை செய்யவேண்டியதாயிற்று. ஆனால் இந்த அர்ச்சியசிஷ்டவள் கொடுத்த வார்த்தைப்பாட்டைச் சர்வேசுரன் ஒப்புக்கொண்டதினாலே இவள் சாகுந்தனையும் இவள் கற்புக்குப் பழுது வராமலிருக்கச் செய்தருளினார். அதெப்படியென்றால்: இவர்கள் ஏறிப்போன கப்பல் புசலில் அகப்பட்டுத் திசை தப்பி வடக்கே சென்று ரைன் ஆற்றுமுகத்தில் வந்து ஒதுங்கவே, அவர்கள், ஹன் ஜாதியாரான அஞ்ஞானிகளும் துஷ்டர்களுமான கொடிய சனங்கள் கையில் அகப்பட்டார்கள். அவர்களுடைய தலைவனை கோனாஸ் என்பவன் அர்ச். ஊர்சூலம்மாளுடைய அழகுசௌந்திரியத்தைக்கண்டு இச்சைப்பட்டு, அவள் சத்தியவேதத்தைவிட்டுத் தனக்கு வாழ்க்கைப்படக் கட்டாயப்படுத்தினான். அதற்கு அந்த அர்ச்சியசிஷ்டவள் தன்னை இயேசுநாதருக்குப் பத்தினியாக ஒப்புக்கொடுத்திருக்கிறேனென்று கெம்பீரத்தோடு சொன்னதுமல்லாமல், அவளும் அவளோடிருந்த பெண்களும் தாங்கள் ஞானஸ்நானம் பெறும்போது கொடுத்த வார்த்தைப்பாட்டுக்கு விரோதமாய் நடக்கிறதைப்பார்க்க ஆயிரம் விசை சாகத் துணிந்திருக்கிறோமென்று சாதித்தார்கள். அதைக்கேட்ட கொடிய தலைவன் சிநேகத்துக்குப்பதிலாய்க் கோபமடைந்து, அவர்களெல்லாரையும் கொல்லத் தன் இராணுவத்தாருக்குக் கட்டளையிட்டான். இவ்விதமே அர்ச். ஊர்சூலம்மாளும் கன்னிமைமுடியும் வேதசாட்சி முடியும் பெற்றாள்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—சர்வேசுரன் தாம் தெரிந்துகொண்டவர்கள்மட்டில் காண்பிக்கிற பராமரிக்கையைக்கண்டு ஆச்சரியப்பட்டு அவரைத் துதிப்போமாக. அவர்களை ஆச்சரியமான விதமாய் நடப்பித்துத் தங்கள் கடைசிக் கதியை அடையச் செய்கிறார். மேற்கண்டதுபோல பஞ்ச பூதியங்களும் துஷ்டருடைய கொடுமையுமுதலாய் அவர்கள் தங்கள் கதியையடைவதற்கு



உதவியாயிருக்கச் செய்கிறார். அர்ச். ஊர்சூலம்மாளும் அவள் தோழிகளான கணக்கற்ற பேரும் புசலில் அடிபட்டு கொடிய சனங்கள் கையில் அகப்பட்டு, கடைசியாய் வாளுக்கு இரையாய்ப் போனதை அறிந்து, அவர்களுடைய தாய் தந்தை முதலிய பந்து சனங்கள் இது சொல்லிமுடியாத நிர்ப்பாக்கியமென்று எண்ணியிருப்பார்கள். இத்தனைபேரும் தங்களை முழுதும் சர்வேசுரனுக்கு நேர்ந்துஒப்புக்கொடுத்திருந்தார்களே. ஏன் சர்வேசுரன் அவர்களைப் புசலினின்றுங் கொடிய கொலையினின்றுங் காக்கவில்லையென்று பலருஞ் சொல்லியிருப்பார்கள். ஆனால் அவர்களுக்குப் புசல் அடிக்கவும், கப்பல் உடையவும், இவ்விதமாய் தப்பாமல் அவர்கள் இரக்ஷணிய கரைசேர்ந்து, மோக்ஷத்தில் பிரதாபமுள்ள வேதசாட்சிகள் முடிபெறவும் வேணுமென்று சர்வேசுரன் தமது கிருபாகடாட்சத்தில் தீர்மானித்திருந்தார். இதைப்பற்றித்தான், சர்வேசுரனைச் சிநேகிக்கிறவர்களுக்குச் சகலமும் நன்மையாய் மாறுமென்று அர்ச். சின்னப்பர் வசனித்திருக்கிறார் (உரோ. 8). உனக்கு நேரிடும் இடையூறுகளில் விசுவாசம், நம்பிக்கை, தைரியம் முதலிய புண்ணியங்களை உன்னிடத்தில் திடப்படுத்துவதற்கு இப்பேர்ப்பட்ட நினைவு தகுந்ததல்லவா?

**மனப்பற்றுதல்.**—இந்தப் பரிசுத்த கன்னியாஸ்திரியின் மன்றாட்டினால் தேவபராமரிக்கையின்பேரில் உனக்கு உயிருள்ள விசுவாசத்தையும் அணைகடந்த நம்பிக்கையையும் சர்வேசுரனிடத்தில் கேட்பாயாக.

**பிரதிக்கினை.**—துன்பகாலம் நேரிடும்போது, விசுவாசமுள்ளவர்கள் நடப்பதுபோல நீயும் உன் யோசனையிலும் கிரியைகளிலும் நடந்துவருவாயாக.

## 2-ம் பிரிவு

### அர்ச். ஊர்சூலம்மாளுக்கு அப்போஸ்தலத் தொழிலினால் வந்த மகிமை

**தியானம்.**—அர்ச். ஊர்சூலம்மாள் கன்னிமை முடியோடு வேதசாட்சி முடியும் அடைந்ததுமல்லாமல், பெண்

பிள்ளைகளுக்குள்ளே அபூர்வமாகிய அப்போஸ்தல முடியையும் அடையப் பாக்கியம்பெற்றாள். எப்படியென்றால்: அவள் தன்னோடுகூடக் காலியா இராச்சியத்துக்குப் போக நியமிக்கப்பட்ட வாலிபப் பெண்கள் தன்னிடத்திற் சேரச் சேர, அவர்களுக்குப் புத்திமதி சொல்லி, விசுவாசத்திலும், தேவ சிநேகத்திலும், கற்பென்கிற புண்ணியத்திலும் அவர்களை ஸ்திரப்படுத்தி, இயேசுநாதருக்கு அவர்களை மெய்யாகவே யோக்கியமான பத்தினிகளாக்கப் பிரயாசப்பட்டாள். அவள் பட்ட பிரயாசை வீண்போகாமல் ஆச்சரியத்துக்குரிய பலனைத் தந்தது. அதெப்படியென்றால்: அவளுடைய நல்ல புத்தியைக் கேட்டு அந்தப் பெண்களெல்லாரும் மகா தைரியமடைந்து மரணமட்டும் யுத்தத்தில் பிரமாணிக்கமாய் நின்றார்கள். இவ்விதமாய் அவர்களைக் கேட்டினின்று காத்து, சர்வேசுரனுக்குப் பிள்ளைகளாக்கி, உலகமெங்கும் அவர்களுக்கு வணக்கமுஞ் சங்கையும் பெறுவித்தது அர்ச். ஊர்சுலம்மாளுடைய பெருமையாமே. அவள் துவக்கின அப்போஸ்தலத் தொழில் அவள் மரணத்தோடு முடியாமல், திருச்சபையில் நிலைபெறவேணுமென்று சர்வேசுரன் சித்தமாகி, அவள் பேர்கொண்ட அனேகானேக கன்னியாஸ்திரி மடங்கள் ஏற்படவும், அவைகளில் உட்பட்டவர்கள் இளம் பெண்களுக்குக் கல்வியும், ஞானப்போதகமும் வெகு பத்தி வைராக்கிய அநுகூலத்தோடு கற்பித்துவரவுஞ் செய்திருக்கிறார். இவ்விதமாய் அனேகாயிரம் வாலிபப் பெண்பிள்ளைகள் உலகத்தின் பாவக்கொடுமைக்குத் தப்பி, சர்வேசுரனுக்குப் பிள்ளைகளாகிறார்கள். பத்தியுள்ள இந்தக் கன்னியாஸ்திரிகள் அர்ச். ஊர்சுலம்மாளுடைய சற்குணங்களை அநுசரிப்பதுமல்லாமல், தாங்கள் படிப்பிக்கும் பிள்ளைகளிருதயத்திலும் இந்தக் குணங்கள் உண்டாகும்படி செய்கிறார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—சர்வேசுரனுடைய கிருபையால் நாம் உட்பட்டிருக்கிற சபையை ஏற்படுத்தினவருடைய, அல்லது அதற்குப் பாதுகாவலாயிருக்கிறவர்களுடைய உத்தம கருத்தும் சுகிர்த குணமும் நம்மிடத்திலுமுண்டாகி, நீடித்திருக்கப் பிரயாசப்படக்கடவோம். இதினால் நாம் அர்ச்சியசிஷ்டவர்களாய்ச் சீவித்துவருவதுமன்றி, சிறுவர்களைப் படிப்பிப்பது நமது கடமையானால், அதில் நாம் படும் பிரயாசத்தையும் சர்வேசுரன் ஆசீர்வதித்தருளுவார். இந்தக் குணம் நம்மிடத்திலிருக்கிறதோ மாறிப்போய்விட்டதோவென்று சமயத்துக்குச் சமயம் நம்மையே உசாவி விசாரிக்கக்கடவோம். இதை இழந்துபோகிற நிர்ப்பாக்கியம் நமக்கு வராதபடி, நமது சபையை ஏற்படுத்தினவருடைய சரித்திரத்தை அடிக்கடி வாசிக்கக்கடவோம். மேலும் அவர் நமக்காக எழுதிவைத்த ஏற்பாடுகளையும் ஒழுங்குகளையுஞ் சமயாசமயம் தியானித்து, அவருடைய சாயலான படத்தையும் நமக்கு ஞாபகமாக நமது கண்முன்பாக வைத்துக்கொள்ளக்கடவோம். இந்தச் சுளுவான உபாயங்களைக் கையாடிவருவதோடு செபத்தையும்விடாமல் அநுசரித்து வருவோமாக. கடைசியாய் மேற்சொல்லியவைகளுக்கு ஏற்றவண்ணம் பிரதிக்கினை செய்து தியானத்தை முடிக்கக்கடவோம்.



சம்பாஷணை.—மகா பேர்போன அர்ச். ஊர்சுலம்மாளோடு சம்பாஷணை செய்து, பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள அவளுடைய ஞானப்பிள்ளைகளோடு நாமும் ஒன்றித்து, அந்த அர்ச்சியசிஷ்டவளைக் கொண்டாடுவோமாக. நமது பரிசுத்தமான அந்தஸ்தின் சீர் ஒருபோதுங் கெட்டு அலையாதபடி அவளுடைய சஹாவை மன்றாடக்கடவோம்.

---

# 22-ம் தேதி

## முந்தின தியானத்தின் தொடர்ச்சி

### படித்துக்கொடுக்கிறதும் ஒரு அப்போஸ்தலத் தொழில் என்பதின்பேரில்

ஆயத்தச் சிந்தனை.—அர்ச். ஊர்சுலம்மாள் தனக்கு ஒப்புவிக்கப்பட்ட திரளான கன்னிகைகளுக்குப் புத்தி சொல்லுகிறதாக ரூபிகரித்துக்கொள்.

**தியானச் செபம்.**—உன் விசாரணைக்குள்ளடங்கியவர்களுக்குத் தக்க படிப்பினை கொடுத்து அவர்களைச் சர்வேசுரனுக்கு யோக்கியமான பிள்ளைகளாக்கும்படி வேண்டிய சாமர்த்தியமும் பத்தி சுறுசுறுப்புங் கேட்பாயாக.

## முதல் பிரிவு

### படித்துக்கொடுக்குந் தொழிலின் மேன்மை

**தியானம்.**—கன்னியாஸ்திரீகளுடைய பல சபையாருக்குள்ளே, அர்ச். ஊர்சுலம்மாள் சபையார் முந்த முந்தச் சிறு பெண்பிள்ளைகளைப் படிப்பிக்குந் தொழிலைத் தங்கள் உத்தியோகமாக ஏற்றுக்கொண்டார்கள். இந்த வர்த்தமானத்தைக் கேட்கும்போது படிப்பிக்கிற அலுவலைப்பற்றி நாம் சில யோசனை செய்யவேணுமென்று தோன்றுகிறது. ஏனென்றால், கல்வியே மனுஷனை ஆளாக்கித் தலைமுறை தலைமுறையாகச் சனங்களை நாகரீகமாக்குகின்றது. கல்வியே, அவனவன் இம்மையிலும் மறுமையிலும் அடையப்போகிற ஸ்திதியையும், குடும்பங்கள் இராச்சியங்களுடைய நிலைமையையும் திட்டம்பண்ணுகிறது. தேவாலயத்துக்கு குருக்கள் முதலிய யோக்கிய தேவ ஊழியர்களையும், இராச்சியத்துக்கு நீதியுள்ள இராசாக்கள் முதலிய அதிகாரிகளையும், குடும்பங்களுக்கு நன்மாதிரிகையான தாய் தந்தைகளையும், சற்குண சீலரான குழந்தைகளையும், வேதத்துக்குப் பலமான பரிபாலிகளையும், மோக்ஷத்துக்கு உன்னத புண்ணிய ஆத்துமாக்களையும் பிறப்பிப்பது நற்படிப்பினையாமே. பிள்ளைகளுக்குக் கல்வியும் நல்லொழுக்கமும் கற்றுக்கொடுக்கிற தொழிலைவிட பிரபலியமான தொழில் அநேகம் இருப்பது மெய்தான். ஆனால் இதைவிட அதிக ஸ்திரமுள்ளதும் பலனுள்ளதும் சர்வேசுரனாலும் மனிதராலும் மேன்மையாய் மதிக்கப்பட்டதுமான தொழில் வேறே கிடையாது.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—இந்த நினைவு உன் புத்தியில் எப்போதும் பிரசன்னமாயிருந்தால், சலிப்பினாலாவது அதைரியத்தினாலாவது வெகு இலேசாய்



நீ மனந்தளர்ந்து போகமாட்டாய். உன்னிடத்திலுண்டான கல்வி சாமர்த்தியத்தைக் கொண்டு வேறே அலுவல் பார்ப்பது அதிக நலமாயிருக்குமென்று நினைத்து, படிப்பிக்குந் தொழிலையும் பிள்ளைகளை விசாரித்து நடப்பிக்குந் தொழிலையும் விட்டுவிட வேணுமென்கிற சோதனையில் மயங்கவுமாட்டாய்.

**மனப்பற்றுதல்.**—படிப்பிக்கும் தொழிலில் ஏற்பட்டிருக்கிறவன் அதன்பேரில் தனக்குப் பற்றுதல் தரும்படி ஆண்டவரிடத்தில் அடிக்கடி கேட்பானாக.

**பிரதிக்கினை.**—சர்வேசுரனுக்குப் பிரியமானால் தன் சீவியகாலமெல்லாம் படிப்பித்துக்கொடுக்கிறதில் செலவழிக்கிறது.

## 2-ம் பிரிவு

### படித்துக்கொடுக்கிறதில் அநுகூலம் அடைவதற்கான உபாயங்கள்

**தியானம்.**—கிறீஸ்துவ வேதத்துக்கு யோக்கியமான விதமாய்ப் பிள்ளைகளைப் படிப்பிப்பது எவ்வளவு மேன்மையோ, அவ்வளவுக்கு அதில் வருத்தமும் சிரமமுமுண்டு. இதில் அநுகூலம் பெறவேண்டுமானால் நல்ல மனது மாத்திரம் பற்றாது. காரியங் கைகூடும்படி தக்க உபாயங்களைக் கையாடவேண்டியதவசரம். அதற்காக எல்லாத்துக்கு முந்தி உருக்கமான பிறசிநேகம், அத்தியந்த தாழ்ச்சி, மிகுந்த மனப் பரிசுத்ததனம், நேர்மையான கருத்து முதலிய சுகிர்தங்களால், நாம் துவக்குகிற வேலையில் தேவ கிருபாகடாட்சம் கிடைக்கும்படி பிரயாசப்படவேணும். அன்றியும் அடங்காத சண்டித்தனமுள்ளவர்களும், அடிக்கடி மிதமிஞ்சின ஆசாபாச வேகங்கொள்ளுகிறவர்களுமான அத்தனை பிள்ளைகளையும் அடக்கிவரவேண்டிய உதவியும் தைரியமும், தேவ வரப்பிரசாதத்தால் கிடைக்கும்படி நாம் செபயோக முள்ளவர்களாயிருக்கவேணும். சர்வத்திலும் நமது நோக்கமுங் கிரியையும் ஒன்றித்துப்போகும்படி, கீழ்ப்படிதலினாலே நமது சிரேஷ்டர்களோடு நாம் நெருங்கிய பந்தனமாயிருப்பதுமன்றி, நம்மோடு படித்துக்

கொடுப்பவர்கள்மட்டிலும் பிறசிநேகத்தினாலே பிராணசிநேகிதர்போலிருக்கவேண்டியது. நம்மிடத்தில் தோன்றவேண்டிய சங்கையும் மேரை மரியாதையும் நல்லொழுக்கமும், வார்த்தைகளைவிட அதிகத் திடமாய்ப் பிரசங்கித்து, கேட்கிறவர்களை இணக்கி, அவர்கள்பேரில் நாம் செல்வாக்கு செலுத்தும்படி வழியாகவேண்டியது. வேறெந்தத் தொழிலின்பேரிலும், படிப்பின்பேரிலும், நமக்குப் பிடிப்பிருந்தாலும் அதெல்லாம் தள்ளிவிட்டு நாம் செய்யவேண்டிய வேலையிலே முழுதும் கரிசனமாயிருப்போமாக. ஒரே வார்த்தையில் சொல்லவேணுமானால் நமது அலுவலை விடாமல் பொறுத்துப் பார்க்கவும், அதைப்பற்றி நம்மை ஓயாமல் பரித்தியாகம் பண்ணவும் வேண்டியது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இப்போது சொன்ன காரியங்களுக்குள்ளே உன்னிடத்தில் குறைவானது இன்னதென்று பார்த்துக்கொள்.

மனப்பற்றுதல்.—உன்னிடத்தில் குறைபடுகிறதை அடையச் சர்வேசுரன் உனக்கு உதவிசெய்யவேணுமென்று கேள்.

பிரதிக்கினை.—கல்வி ஒழுக்கம் கற்பித்தலாகிய தொழில் விர்த்தியாகும்படி வேண்டிய பிரயாசத்துக்குப் பின்வாங்காதே.

## 3-ம் பிரிவு

### படிப்புக்கடுத்த காரியங்களில் நமக்கு இருக்கவேண்டிய எச்சரிக்கை

தியானம்.—படித்துக்கொடுக்கிற தொழிலிலே விசேஷமாய் நிரம்ப வயதில்லாதவர்களுக்கு அபாயம் ஆபத்தில்லாமல் போகாது. நல்ல பேரெடுப்பார்களென்று எண்ணப்பட்டிருந்த அநேகம்பேர் தங்கள் அவிவேகத்தினாலே எச்சரிக்கையில்லாமல் நடந்து படுமோசம் அடைந்தார்கள். அவர்களுக்கு வந்த கேடு உனக்கும் வராதபடி நீ கவனிக்கவேண்டியதாவன: 1-வது, சில பிள்ளைகள்மட்டில் விசேஷபற்றுதலுண்டாகும்போது வெகு எச்சரிக்கையாயிரு. இப்



பேர்ப்பட்ட பற்றுதலுக்கும் கிரமந்தப்பின சிநேக சகவாசத்துக்கும் ஓர் அடி தூரந்தான். 2-வது, உன் மனதைப் போனபோக்கில் எதேச்சையாய்த் திரியவிடாதே. ஏனெனில் இதினால் மனஞ்சோர்ந்து துறவறப்பற்றுதல் அற்றுப் போவதற்கு வழியாகும். 3-வது, உனக்கு நேரிடும் எதிரிடைகளால் வரும் சலிப்பைத் தள்ளிவிடு. அப்படித் தள்ளாதிருந்தால் உன் அந்தஸ்தாகிய துறவறத்தின்பேரில் தானே உனக்கு வெறுப்புண்டாகும். இதுவுமல்லாமல் படிப்பிக்கிறதாகிய இந்த முக்கியமான வேலை அநுகூலமாவதற்கு உன் பக்கத்தில் யாதொரு குறையும் வராதபடி, மேற்சொன்னவைகளையுமல்லாமல் இன்னமும் நீ எச்சரிக்கையோடு விலகவேண்டியதென்னவென்றால்: பாரபட்சம், குணத்திலும் செய்கையிலும் நிலையற்றதனம், மிஞ்சின கண்டிப்பு, மிகுந்த இளக்காரம், முன்கோபம், பழிப்புச்சொல், ஒருவனைப் பொதுவில் வைத்து அவமானப்படுத்துதல், குறித்த நேரந் தவறுதல், சொல்லவேண்டியதையும் படிப்பிக்கவேண்டியதையும் முந்தியே தயார் செய்யாதிருத்தல், பிள்ளைகளுக்குள் படிப்பில் ரோசமும் போட்டியுமுண்டாகும்படி யாதொரு உபாயமுஞ் செய்யாமல் வாடிக்கைமேல் நடத்துதல் இவை முதலியவைகளைத் தவிர்த்துவரக்கடவாய்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இந்த மூன்றும் பிரிவில் அடங்கிய காரிய விபரங்களின்பேரில் அடிக்கடி ஆத்தும சோதனை செய்.

சம்பாஷணை.—அர்ச். ஊர்சூலம்மாளோடு சம்பாஷணை செய். நீயும், உன்னைப்போல வாலிபருக்குப் படித்துக்கொடுக்கிறவர்களும் கணக்கற்ற ஆத்துமாக்களை நன்னெறியில் நடத்திக் கரைசேர்க்கத்தக்கதாக, வேண்டிய தேவ அநுக்கிரகத்தை இந்த அம்மாள் பெற்றுத் தரும்படி வேண்டிக்கொள்.

# 23-ம் தேதி

## ஊதாரிப்பிள்ளையின் உவமை

**ஆயத்தச் சிந்தனை.**—இந்த ஊதாரிப்பிள்ளையானவன் ஏக்கம் பிடித்திருக்கும் தன் தகப்பனுடைய கைகளை விட்டுத் திமிறிக்கொண்டு ஓடிப்போகிறதாக ரூபிகரித்துக்கொள்.

**தியானச் செபம்.**—பரமண்டலங்களிலிருக்கிற உன் பிதாவோடு மகா உருக்கமுள்ள சிநேகத்தினாலே எப்போதும் ஒன்றித்திருக்க வரங்கேள்.

## முதல் பிரிவு

### ஊதாரிப்பிள்ளை வீட்டைவிட்டுப் புறப்படுகிறான்

**தியானம்.**—அர்ச். லூக்காஸ் சுவிசேஷம் 15-ம் அதிகாரத்தில் இயேசுநாதர் சொல்லியிருக்கிறதாவது: ஒருவனுக்கு இரண்டு பிள்ளைகளிருந்தார்கள். அவர்களில் இளையவன் தகப்பனைப் பார்த்து: ஐயா, உம்முடைய ஆஸ்தியில் எனக்குள்ள பங்கைப் பகிர்ந்து கொடுமென்றான். அப்படியே தகப்பனும் தன் ஆஸ்தியில் அவனுக்கு உண்டானதைப் பகிர்ந்துகொடுத்தான். சில நாளைக்குப்பின் அவன் தன் ஆஸ்தியெல்லாம் சேர்த்துக்கொண்டு தூரதேசத்துக்குப் போய் விட்டான். மூத்தவன் தகப்பனிடத்திலிருந்தான். இயேசுநாதர் கருத்தில் இந்தத் தகப்பனும் இரண்டு பிள்ளைகளும் யாருக்கு உவமானமாயிருக்கிறார்களென்றால்: அர்ச். எரோணிமுஸ் சொன்னபடியே, அந்தத் தகப்பனானவன் சர்வேசுரனுக்கும், இரண்டு பிள்ளைகளும், இந்த உலகத்தில் வசிக்கிற இரண்டு பிரிவான சனங்களுக்குங் குறிப்பாயிருக்கிறார்கள். இதில் ஒரு பிரிவைச் சேர்ந்தவர்கள் சர்வேசுரனுக்குப் பிரமாணிக்கமாயிருந்து அவருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து பாக்கியவான்களாயிருக்க ஆசிக்கிறவர்கள். இரண்டாம் பிரிவைச் சேர்ந்தவர்கள் சுவாமிக்குத் துரோகிகளாகித் தங்கள் மனம்போல எதேச்சையாய்த் திரிகிறவர்கள். ஊதாரிப்பிள்ளையானவன் இந்த இரண்



டாம் வகுப்பின் சாயலாயிருக்கிறான். இவன் பட்ட அவதியைக் கண்டு நாம் எப்போதும் நல்ல புத்தியடையவும், மனம்போல் நடக்கிறதற்கு மிகவும் அஞ்சி நடுங்கவும் வேணுமென்று திவ்விய கர்த்தர் சித்தமாயிருக்கிறார்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—இந்த இரண்டு வகுப்புக்குள் நீ எப்போதும் முந்தின வகுப்பில் சேர்ந்திருந்தாயோ? உன் சீவியகாலத்தில் எப்போதாகிலும் உன் மனம்போல் நடந்து பாவத்திலே பழகி, சர்வேசுரனையும் பரலோகத்தையும் விட்டு, தூரமாய் அலைந்து திரியவில்லையோ? அதினால் நிர்ப்பாக்கியமாய்ச் செத்து நரகத்தில் விழ வழிபண்ணவில்லையோ? சர்வேசுரனல்லவா இந்தக் கேட்டில் நின்று உன்னைத் தற்காத்தார். அதுவும் போதாதென்று உன் கண்ணைத் திறந்து உன்னைத் துறவற அந்தஸ்தில் நிறுத்தினதுமன்றி, உன் நன்றிகெட்டதனத்தையும், நீ வருவித்துக்கொண்ட பொல்லாப்புகளையும் பரிகரிக்கும்படி ஆயிரம் வழிவகைகளையும் உனக்குத் தந்தருளியிருக்கிறார். இவைகளைக்கொண்டு நீ அடைந்த பலனென்ன?

**மனப்பற்றுதல்.**—உன் பாவங்களின்பேரில் மனஸ்தாபம், சர்வேசுரனுடைய கிருபையினிமித்தம் நன்றியறிந்த தோத்திரமுதலிய முயற்சிகளை மனதில் எழுப்பி, சர்வேசுரனுக்காக உழைத்துப் பிரயாசப்படவும், துன்ப வருத்தப்படவும் ஆசிப்பாயாக.

**பிரதிக்கினை.**—தவ முயற்சிகளை வேகமான மனதோடு அநுசரிக்கத் துவக்குவாயாக.

## 2-ம் பிரிவு

### ஊதாரிப்பிள்ளை மோசம் போகிறான்

**தியானம்.**—இந்த வாலிபன் தன் கையில் திரண்ட ஐஸ்வரியமிருக்கிறதையும் முகமறியாத தேசத்திலேபோய்த் தன் மனதிஷ்டப்படி நடக்கலாமென்கிறதையும் நினைத்து, தன்னைப் பூரண பாக்கியவானென்று எண்ணிக்கொள்கிறான். இப்போது இன்ப சுகங்களையெல்லாம் சுகிப்பேன், என்னைக் கேட்கிறதற்கு ஒருவருமில்லை; என் மன

வாஞ்சையெல்லாம் இரம்மியமடையுமென்று தள்ளுகிறான். இதெல்லாம் மாய்கையின் மயக்கம்! ஆனால் இவனுக்கு நடந்ததென்ன? அந்த உவமையில் சொல்லியபடி கொஞ்சக் காலத்துக்குள்ளாகத் தன் பொருளெல்லாம் தாறுமாறாய்ச் சிதறடித்து அட்டதரித்திரனானான். அப்போது ஒரு எசமான் அண்டையில் ஊழியஞ்செய்ய ஏற்பட்டான். அவனோ தன் பன்றிகளை மேய்க்கும்படி இவனைத் தன் காட்டுக்கு அனுப்பினான். அப்போது பன்றிகளுக்குப் போடுகிற தவிட்டையாகிலும் தின்று பசியாறத் தேடினாலும் அதை முதலாய் அவனுக்குக் கொடுப்பாரில்லை. (லூக். 15).

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—சர்வேசுரனுடைய கற்பனையை எறிந்துவிட்டுத் தன் மனம் போல் திரிகிறதே பாக்கியமென்று நினைக்கிற மதியீனனுடைய துயரமான சரித்திரத்தை, தேவசுதன் ஒரு சித்திரத்தில் எழுதி நமது கண்ணுக்குமுன் வைத்ததுபோல இந்த உவமையைச் சொல்லிக்காண்பிக்கிறார். தனக்கு ஆதியிலிருந்த பக்தி சுறுசுறுப்பைவிட்டு அசந்து நடக்கிற சந்நியாசிக்கும் இந்த உவமை செல்லும். ஏனெனில் இப்படிப்பட்டவன் துறவற அந்தஸ்தில் தனக்கு வருகிற சலிப்பை மாற்றுகிறதற்காகச் சிருஷ்டிகளிடத்திலும் பஞ்சேந்திரிய சுகத்திலும் ஆறுதலைத் தேடுகிறான். இதினால் வருகிறதென்ன? சர்வேசுரன் அவனுக்குக் கொடுத்த இஷ்டப்பிரசாதம், பேறுபலன்கள் ஆகிய அளவற்ற ஞானத் திரவியங்களையெல்லாம் கொஞ்சத்துக்குள் வாரி இறைத்துவிட்டு, ஒருவகையிலும் மனத்திருத்தியடையாமல் வெறுமையாய் நிற்பான். அவன் புத்தியிலே பன்றியின் சாயலான சிற்றின்ப விசாரங்கள் வந்து நிறையும்; அப்போது அவனுக்கு இரவோ, பகலோ, சமாதானமுங் கிடையாது, இளைப்பாற்றியுங் கிடையாது. சர்வேசுரனுக்கப்பால் பாக்கியத்தைத் தேடுகிற எவனுக்கும் நேரிடுகிறது இதுவே. இதிலே ஏதாகிலும் உன்னிடத்தில் சம்பவித்ததில்லையோ?

**மனப்பற்றுதல்.**—ஆண்டவரே, ஞானவேகத்தின் மனோகரத்தை எனக்குத் திரும்பக் கொடுத்தருளும். என்



ஆசாபாசத்தோடு நான் போராடும்போது உமது சர்வ வல்லப இலட்சணத்தினாலே என் இருதயத்தைத் திடப்படுத்தியருளும்.

**பிரதிக்கினை.**—ஆசாபாசத்துக்கு எள்ளளவும் இளக்காரங் கொடுக்க அஞ்சுவாயாக.

## 3-ம் பிரிவு

### ஊதாரிப்பிள்ளை அடைந்த இழிவு

**தியானம்.**—இவன் இப்படிப் பசியினால் மெலிந்து அட்டதரித்திரனாயிருக்கையில் தான் முன்னிருந்த பாக்கியமான அந்தஸ்தையும், இப்போது படுகிற இழிவையும், ஒருகாலத்தில் தனக்கு ஊழியர்களாயிருந்தவர்களுக்கு முதலாய்த் தான் கீழ்த்தரமானதையும் நினைத்து துக்கசாகரத்தில் அமிழ்ந்துகிறான். ஐயோ, என் தகப்பன் வீட்டிலே எத்தனையோ ஊழியர் திருப்தியாய்ச் சாப்பிட்டுக்கொண்டிருக்கிறார்கள்! நானோ இங்கே பசியினால் மடிகிறேன். மனுஷசாதிகளைவிட்டுத் தள்ளுபடியாகிப் பன்றிகளை மேய்க்கலாயிற்றே என்று புலம்புகிறான்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—சர்வேசுரன் எனக்குத் தகப்பனாயிருக்க வேண்டியதில்லையென்று சொல்லுகிறவனுக்கு இப்படித்தான் நேரிடுமென்று அர்ச். கிறிசோலோகு இராயப்பர் கூவிச் சொல்லுகிறார். மகா வெட்கத்துக்குரிய கொடிய ஆசாபாசங்கள் அவனைப் போட்டு அலைக்கழிக்கிறதினால், நீசமான மிருக போகமல்லாது வேறே சுகம் அவனறியான். புத்திகெட்ட பொதி மாட்டுக்கு இணையானானென்று இஸ்பிரீத்துசாந்துவானவர் இப்பேர்ப்பட்டவர்களைக் குறித்து வசனித்திருக்கிறார். நீ இவ்வளவு நீச ஸ்திதியில் விழுந்து புரளவில்லையாக்கும்; அல்லது விழுந்தாலும் துரிதமாய் எழுந்துகொண்டாயாக்கும். ஆனால் நீ துறவற அந்தஸ்தில் சாதாரணமான மற்ற மனுஷர்களுக்கு மேலாக உயர்ந்திருப்பதால் உன்னுடைய அந்தஸ்துக்குரிய மேன்மையை எப்போதுங் காத்து வந்தாயோ? சாதாரண கிறீஸ்துவர்கள் முதலாய்ச் செபத்தி

ளும் திவ்விய நற்கருணையிலும் திருத்தியாய் மதுரமான உணவை உண்டிருக்கையில், நீ இவைகளில் உருசியும் பலனும் காணாமற்போனால் அவர்களைவிட நீ கீழ்த்தரமானாயென்று சொல்லவேண்டியதில்லையோ? ஓ, ஒன்றுமொன்றும் குறையில்லாத இடத்திலே நீ பசியினால் மடிகிறாயென்று யாரும் சொல்லாதபடி பார்த்துக்கொள்!

**சம்பாஷணை.**—உன் காவலான சம்மனசானவரோடு சம்பாஷணை செய்.

---

# 24-ம் தேதி

## ஊதாரிப்பிள்ளையிருந்த இருவித அந்தஸ்துக்கும் உள்ள வித்தியாசம்

**ஆயத்தச் சிந்தனை.**—பன்றிகள் நடுவே குப்பை மேட்டில் ஊதாரிப்பிள்ளை உட்கார்ந்திருக்கிறதைப் பார்ப்பதாக ரூபிகரித்துக்கொள்.

**தியானச் சேபம்.**—சர்வேசுரனைவிட்டு நம்மை அகன்றுபோகச்செய்யும் சகல காரியங்களையும் அத்தியந்த அச்சத்தோடு விலக்க வரங்கேள்.

### முதல் பிரிவு

#### ஊதாரிப்பிள்ளைக்குத் தன் தகப்பன் வீட்டிலிருந்த சுகம்

**தியானம்.**—சுகமான நிழலாடும் ஒரு கணவாயிலே சௌக்கியம் நிறைந்த ஒரு பெரிய அரமனை கட்டியிருக்கிறதாகவும், அதில் சமாதானமும் செல்வ பாக்கியமும் குடிகொண்டிருக்கிறதாகவும் எண்ணிக்கொள். இந்த அரமனையில்தான் ஊதாரிப்பிள்ளை வாசஞ் செய்கிறான். இவனுடைய அண்ணனும் இவனுக்குத் தாட்சணியங் காட்டி இவனுக்கு ஒரு குறைவராமல் விசாரித்து இவனோடுகூட வாழ்ந்துவருகிறான். இவர்கள் இருவரையும் தகப்பன்மார்களுக்குள் உத்தமனான ஒரு தகப்பன் வெகு ஞானமாய்



நடத்தி ஆண்டுவருகிறான். தேவபராமரிப்பால் இந்தப் பையனுக்குக் கிடைத்த யோகத்தை என்னென்று சொல்வோம்! அதிலே யாதொரு ஏக்கமுங் கவலையுமின்றி, புத்தி விர்த்திக்கும் சரீர போஷிப்புக்கும் வேண்டியதெல்லாம் இவனுக்குச் சம்பூரணமாயிருந்தபடியால், உலகத்திலுள்ள துன்பமென்னவென்று காதால் கேட்டாலொழிய மற்றப்படி அறியான்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—அந்த அரமனையை நாம் யோசிக்கும்போது, சந்நியாச அந்தஸ்தின் மெய்யான பாக்கியத்தை ஓர் சித்திரத்தில் எழுதி நமது கண்முன் வைத்ததுபோல் தோன்றுகிறதல்லவோ? எப்படியெனில்: நாம் சந்நியாசிகளானமட்டில் சர்வேசுரனுடைய அரமனையில் உலக கவலை விசாரமில்லாமல் குடியிருக்கிறோம். இதில் நம்முடைய சகோதரர்கள் பூரண பிறசிநேகத்தோடு நம்மை உபசரிக்கிறார்கள். ஓர் தகப்பனைப்போலிருக்கிற சிரேஷ்டர் நமது ஆத்தும சரீரத்துக்கு வேண்டியதெல்லாம் குறைவில்லாமல் சவரட்சணை செய்து ஞானத்தோடு நம்மை ஆண்டுவருகிறார். இதைப்பற்றி அர்ச்சியசிஷ்டவரான ஒரு சந்நியாசியார் அடிக்கடி கூவிச்சொன்னதாவது: ஆ, என் சகோதரர்களே! நமது அந்தஸ்தைச் சரியாய் மதிக்கக் கற்றுக்கொள்ளக்கடவோம். அப்போது பரிசுத்தராய் மனரம்மியத்தோடு வாழுவோம். இப்பேர்ப்பட்ட வாழ்வை நாளுக்குநாள் கனமாய் எண்ணிச் சிநேகிப்போம். இப்படி எண்ணிச் சிநேகித்தோமானால் நாம் இதிலே நிலைத்திருந்து புண்ணியத்திலே வெகு விர்த்தி அடைவோமென்பார். இவர் சொன்னதே உண்மையான காரியம். ஊதாரிப்பிள்ளையும் தனக்கிருந்த பாக்கியத்தை மெய்யாகவே மதித்திருந்தால், தன் தகப்பன் அரமனையை விட்டுப் போகவேணுமென்று ஒருபோதும் கனவில் முதலாய் நினைத்திருக்கமாட்டான்.

**மனப்பற்றுதல்.**—நாம் அழைக்கப்பட்ட பரிசுத்தமும் பாக்கியமுமான அந்தஸ்தின்மட்டில், மதிப்பும் சிநேகமும் மென்மேலும் நம்மிடம் அதிகரிக்கவேணுமென்று கெஞ்சி மன்றாடுவோமாக.

**பிரதிக்கினை.**—சலிப்பு வரும் வேளையிலே தன்னைத் தானே நோக்கி: ஆ, என் ஆத்துமமே, நீ இவ்விடத்தில் எவ்வளவு பரிசுத்த மனோகரத்தோடு காலக்ஷேபம்பண்ணலாம்; இப்படியிருக்க நீ சலிப்பாயிருப்பானேன்; நீ கலங்கித் தவிப்பதேனென்று சொல்வாயாக (41-ம் சங்.)

## 2-ம் பிரிவு

### ஊதாரிப்பிள்ளை, தகப்பன் வீட்டைவிட்டு அப்புறம்போனபோது பட்ட துன்பம்

**தியானம்.**—அந்த ஊதாரிப்பிள்ளை இப்போதிருக்கிற விபரீத ஸ்திதியை யோசித்துப்பார். தன் ஆஸ்தியையெல்லாம் தாறுமாறாய் அழித்துப்போட்டான். அவனோடு சேர்ந்த காமாதுரரும் அவனைக் கைவிட்டார்கள். பஞ்சத்தில் அடிபட்டுக்கிடக்கிற முகமறியாத சீமையிலே அவன் ஒண்டியாய்த் தவிக்கிறான். முகம் வெளுத்து, மேனி மெலிந்து, சதை கரைந்து, கந்தைத் துணியைப் போர்த்திக்கொண்டு வீதிகளில் திரிகிறான். இந்த பரிதாபக் கோலத்தோடு இரப்பாளிகளுடன் கூடி, பிச்சை வாங்க வீட்டுக்கு வீடு கைநீட்டுகிறான். மற்றவர்களால் சீயென்று தள்ளுபடியாகிறதே இவன் வழக்கமாய்க் கண்ட பலன். ஆ! இதென்ன கண்ணராவி!

**இதிலே விசேஷமாய்யோசிக்கத்தக்கது.**—ஞானக் காரியங்களில் நீ நிர்ப்பாக்கியமாய் பிரமாணிக்கந் தப்பி அசமந்தத்தில் விழுந்து கிடக்கிறாயானால், உன் ஆத்துமத்தின் பரிதாப ஸ்திதியை அறியும்படி அந்த ஊதாரிப் பிள்ளையை நோக்கிப் பார். என்னென்ன குறைகள் அவனை இந்தக் கோலமாக்கி வைத்ததென்று யோசித்தால், அந்தக் குறைகள் உன் ஆத்துமத்திலுமுண்டென்றும், ஆகையால் அவன் உன் ஆத்தும நிர்ப்பாக்கியங்களின் சாயலாயிருக்கிறானென்றுங் காண்பாய். இதைக்கண்டு உன் மனது இளகும். உன்பேரிலேயே நீ மனமிரங்கி, பாவ அந்தஸ்தை விட்டுப் பழைய புண்ணிய சுறுசுறுப்பையடைவதற்கு வேண்டிய ஊக்கமும் உறுதியுங்கொள்வாய்.



**மனப்பற்றுதல்.**—பத்தி சுறுசுறுப்பை அடைய நீ படும் பிரயாசையில் அநுகூலமாகும்படி தேவ உதவியைக் கேள்.

**பிரதிக்கினை.**—பாவத்துக்கும் புண்ணிய அசமந்தத்துக்கும் வழியாயிருக்கிறதையெல்லாம் நீ அத்தியந்த பயத்தோடும் மகா சாக்கிரதையோடும் விலக்கக்கடவாய்.

## 3-ம் பிரிவு

### ஊதாரிப்பிள்ளை ஒரு எசமானுக்கு அடிமைப்பட்டிருந்ததின்பேரில்

**தியானம்.**—அப்போது அவன் ஒரு எசமானிடத்தில் ஊழியத்துக்கு அமர்ந்தான். அந்த எசமான் எப்பேர்க்கொத்தவனென்றால்: தன் காரியத்தைமாத்திரம் பார்க்கிறவன்; பெரும் உலோபி; தன்னிடத்தில் ஒரு பிடி சாதங் கைநீட்டிக் கேட்கிற ஏழைகளுக்கு முதலாய் இரங்கிக் கொடுக்கமாட்டாத கொடியன். இப்பேர்ப்பட்டவன் அந்த ஊதாரிப்பிள்ளைக்குத் தன் வீட்டில் கொஞ்சமாகிலும் இல்லிடங் கொடாமல், இரவும் பகலும் பன்றிகளோடு திரிந்து, பன்றிகளை அடைக்கும் குடிசைகளில் குடியிருக்கச் செய்து, அந்த நீச மிருகங்களுக்குப்போடும் தவிட்டை முதலாய் அவனுக்குக் கொடாமற்போனான். ஆ, இதென்ன விகாரம்! இதைக்கண்டு ஈரற்குலை துடிக்குதே! கொஞ்சத்துக்குமுன் சொந்த ஊரிலிருக்கும்போது அவனை எவரும் மதித்து உபசரித்தார்கள். அவன் இட்ட வேலை செய்யத் திரளான ஊழியர் காத்திருந்தார்கள். தினந்தோறும் சம்பிரமமான விருந்துண்டு சொகுசாய் வாழ்ந்துவந்தான். இப்போதோ குப்பைமேட்டில் குந்தி, திக்கற்று, எவராலும் சீ யென்று வெறுக்கப்பட்டு, அசுசியான மிருகங்கள் நடுவே பசியால் மடிகிறான்!

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—மேற்சொன்னதைக்கொண்டு, திவ்விய இரட்சகர் மகா மதுரமும் மகிமையும் பொருந்திய தமது நகத்தடியைவிட்டு, ஈவிரக்கமற்ற கொடுங்கோலனை உலகத்துக்கு அடிமையாய்ப் போகிறவர்கள், எவ்வளவு இலச்சைகெட்ட நிர்ப்பாக்கியரா

கிறார்களென்று தெளிவாய்க் காண்பிக்கிறார். அநேகமாயிரம்பேர் இப்படிப் பைத்தியங்கொண்டு திரியவில்லையோ? உனக்கும் ஒருவேளை இந்தப் பைத்தியம் பிடித்திருந்ததாக்கும். ஆனால் திவ்விய ஒளியானது உன் ஆத்துமத்தில் பிரகாசித்ததினாலே நீ மோசம்போனதை அறிந்து, உன் ஆண்டவராகிய சர்வேசுரனிடத்தில் திரும்பி வந்திருக்கிறாயாக்கும். ஆகையால் முன்னிலும் அதிக நெருங்கின பந்தனமாய் அவரோடு ஒன்றித்திரு. அவருடைய திரு ஊழியத்திலே அதிகமதிகமாய்ச் சுறுசுறுப்பைக் காண்பித்து, உன் பழைய அக்கிரம நடத்தையை அவர் மறந்துவிடச்செய்.

சம்பாஷணை.—அர்ச். அகுஸ்தீனாரோடு சம்பாஷணை செய். அவர் முப்பது வயதுமட்டும் ஊதாரிப்பிள்ளையைப்போல் திரிந்து கடைசியாய் மனந்திரும்பி, தாம் முந்தி எவ்வளவுக்கு அக்கிரமமாய் நடந்தாரோ அவ்வளவுக்கு அதிகமாய்ச் சர்வேசுரனைச் சிநேகித்து வந்தார். அது முதல் சாகுந்தனையும் அவரிடத்தில் விளங்கின உத்தம மனஸ்தாபம், தாழ்ச்சி, பத்திவைராக்கியம் இவைகளுக்கடுத்த மேலான உணர்ச்சிகள் உன்னிடத்திலுண்டாகும்படி அவர் சனுவைக் கேள்.

இன்றையத் திருநாளுக்குரிய அர்ச். இரபேயேல் சம்மனசானவரோடும் சம்பாஷணை செய்துகொள்ளலாம்.

---

## 25-ம் தேதி

### முந்தின தியானத்தின் தொடர்ச்சி

ஆயத்தச் சிந்தனை.—ஊதாரிப்பிள்ளை கண்ணீர்சிந்தி அழுகிறதையும் தகப்பன் அவனைத் தன் நெஞ்சோடு அணைத்திருக்கிறதையும் பார்க்கிறதாக ரூபிகரித்துக் கொள்வோமாக.

தியானச் சேபம்.—நமது இருதயம் நம்பிக்கையினாலும் சிநேகத்தினாலும் மலரும்படி கேட்போமாக.



### முதல் பிரிவு

**ஊதாரிப்பிள்ளை தகப்பனிடத்தில் திரும்பிவந்தது**

தியானம்.—ஆசாபாசம் கண்ணை மறைக்கும்; துன்பமோ புத்தியைத் துலக்குமென்று இசையாஸ் தீர்க்கதரிசி சொல்லியிருக்கிறார். ஏனெனில் துன்பந்தான் நாம் நமது மேல் கண்ணைத் திருப்பி நாம் யாரென்று பார்க்கச்செய்யும். இதற்கு ஊதாரிப்பிள்ளையே அத்தாட்சி. இவன் தனக்குள்ளே தானே பிரவேசித்து யோசித்ததினால் தான் தகப்பனை விட்டு ஓடிப்போனது அக்கிரமமென்றும், அதுவே தன் நிர்ப்பாக்கியத்துக்குக் காரணமென்றும் அறிந்துகொண்டான். அதினால் அவனிடத்தில் ஆயாசமும், மனச்சாட்சியின் குத்துமுண்டாகவே தேவ இஷ்டப்பிரசாதம் வருவதற்குச் சமயமாயிற்று. அவனும் அந்தச் சமயத்தைக் கைவிடாமல் என் நிர்ப்பாக்கிய ஸ்திதியைவிட்டு நீங்கி, சாகிறாப்போலிருக்கிற என் உயிரைக் காக்க என்னசெய்வேனென்று யோசிக்கத் துடங்கினான். தகப்பனாரிடத்தில் திரும்பிப்போய் அவருடைய பொறுத்தலைக் கெஞ்சிக் கேட்க வேணுமென்ற யோசனைதான் அவன் புத்தியில் தென்பட்டது. அப்போது அவன் தன் மனதுக்குள் சொல்லிக்கொண்டதாவது: நான் எழுந்து என் தகப்பனிடத்திற் போய்: பிதாவே, பரலோகத்துக்கும் உமக்கும் விரோதமாய்ப் பாவத்தைச் செய்துவிட்டேன். உம்முடைய பிள்ளையென்கிற பேருக்கு நான் இனி யோக்கியனல்ல. உமது கூலியாட்களில் ஒருவனாக என்னை ஏற்றுக்கொள்ளத் தயவு கூறுமென்பேனென்றான். இந்தத் தீர்மானம் வெறுந்தீர்மானமல்ல; உறுதியானதாயிருந்தபடியால் அவன் உடனே எழுந்து தகப்பனிடத்துக்குத் திரும்பினான் (லூக். 15).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இதைக் கொண்டு திவ்விய கர்த்தர் நமக்குப் படிப்பிக்கிறதேதென்றால்: முந்தமுந்த ஒவ்வொரு சமயத்தில் நமக்கு வரும் இக்கட்டு, அவமானம், மனக்கலக்கம் முதலிய துன்பங்கள் நாம் நமக்குள் பிரவேசிக்கவும் நமது ஆத்துமம் வாடி வதங்கி

யிருக்கிறதற்குக் காரணமான பாவ ஸ்திதியினின்று நாம் வெளிப்படவும் சர்வேசுரன் நமக்குக் கொடுக்கிற உதவியென்று அறியக்கடவோம். 2-வது, இப்பேர்ப்பட்ட சமயங்களிலே நம்பிக்கையற்று அதைரியத்துக்கு இடங்கொடுத்து நமக்கு நேரிட்ட பொல்லாப்பை அதிகரிக்கவிடாமல் அதினின்று தப்புவதற்கான உபாயங்களைத் தேடி, உறுதியான பிரதிக்கினை செய்யவேண்டும். 3-வது, அந்தப் பிரதிக்கினையை நிறைவேற்றவேண்டிய உறுதியையும் நிலைமையையும் சர்வேசுரனிடத்திலே தப்பாமல் அடைகிறதற்காக அவர் நம்முடைய பிதாவென்று அவருடைய தஞ்சமாய்ப் போகவேண்டுமொழிய நமது நியாயாதிபதியென்று அஞ்சிப் பின்வாங்கப்படாது. சர்வேசுரனை நாம் பிதாவேயென்று அழைப்பதினால் அவர் நீதிக் கோபந் தணியவும் நமது இருதயத்தில் நம்பிக்கை பிறக்கவும் வழிபண்ணுகிறோம்.

**மனப்பற்றுதல்.**—தேவசமுகத்தில் நீ பாவியென்று ஒத்துக்கொள்வதுமன்றி நீ காண்பித்த அவநம்பிக்கைக்கும் பொறுத்தல் கேட்பாயாக.

**பிரதிக்கினை.**—எனக்குண்டான வருத்தந் தொந்தரவு ஆயாசங்களில் சர்வேசுரன் என் தகப்பனென்று அவரிடத்தில் ஓடி அவரே சொல்லிக்கொடுத்தபடி இரக்கம் நிறைந்த பிதாவே, சர்வ ஆறுதலுந் தரும் கர்த்தாவேயென்று அவரை நோக்கிக் கூப்பிடுவேன்.

## 2-ம் பிரிவு

**ஊதாரிப்பிள்ளையைத் தகப்பன் ஏற்றுக்கொள்ளும் விதம்**

**தியானம்.**—இந்த ஊதாரிப்பிள்ளையைத் தகப்பன், எப்படித் தன்னிடத்தில் ஏற்றுச் சேர்த்துக்கொண்டானென்று இயேசுநாதர்சுவாமி சொல்லுகிறதைக் கேள்: அவன் இன்னமும் தொலையில் வரும்போது தகப்பன் அவனைக் கண்டான். ஆனால் அவன் வெகு துன்பப்பட்டு முன்னிருந்த உரு மாறி வந்ததினால் வருகிறவன் இன்னானென்று துவக்கத்தில் தகப்பன் அறியாமற்போனான்.



அவன் கிட்ட வரவரத் தன் மகன்தானென்று அறிந்தமாத்திரத்திலே அவனுள்ளமெல்லாம் இரக்கத்தினால் பதறி அவனை நோக்கி ஓடுகிறான். உடனே அந்தப் பிள்ளை தகப்பன் பாதத்திலே விழுந்து தேம்பித் தேம்பி அழுதுகொண்டு பிதாவே, நான் பாவியானேனென்று தன் குற்றத்தை வெளிப்படுத்த வாயெடுத்தான். சொச்சத்தையுஞ் சொல்லிமுடிக்குமுன் தகப்பன் அவனைத் தடுத்துச்சொல்லவொட்டாமல் அவன் மனஸ்தாபப்படுகிறதே போதுமென்று அவனைத் தூக்கி எடுத்து அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு அநேகம்விசை முத்தஞ் செய்தான் (லூக். 15).

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—இவ்வளவு தயாளம் நிறைந்த உத்தம தகப்பன் யாரென்றால் உந்நதமான விதமாய் எங்கள் பிதாவேயென்று நாம் கூப்பிட்டு வருகிற நமது கர்த்தாவாகிய சர்வேசுரன்தான். இவருக்கே நாம் பொருந்திய மனதோடும் மாறாத நிலைமையோடும் ஊழியஞ் செய்வோமென்று ஏற்பட்டிருக்கிறோம். இப்படியிருக்க இதை மறந்து கொடிய குரூரமான ஓர் எசமானுக்கு நாம் பிணைபட்டிருந்ததுபோல ஐயோ, சர்வேசுரன் எங்கள் பாவத்தைப் பொறுத்தாரோ, மறந்தாரோ, என்னவோவென்று சந்தேகத்தில் மூழ்கி, அடிமைகளைப்போல் பயந்து இருதயம் நொறுங்கிப் புண்ணாவோமானால் அது எவ்வளவோ அக்கிரமமான குருட்டாட்டம். அதினால் சர்வேசுரனுக்கு எவ்வளவோ நிந்தை! நமக்கும் எவ்வளவோ கேடு!

**மனப்பற்றுதல்.**—நாம் மோசம்போய்த் தவறி நடந்ததற்குப் பொறுத்தல் கேட்போமாக.

**பிரதிக்கினை.**—நம்பிக்கையினாலுஞ் சந்தோஷத்தினாலும் சிநேகத்தினாலும் பூரித்த மனதோடு இன்றுமுதல் சர்வேசுரனுக்கு ஊழியஞ்செய்ய ஆசையாயிருக்கிறேன்.

## 3-ம் பிரிவு

**திரும்பிவந்த ஊதாரிப்பிள்ளைக்குத் தகப்பன் செய்த விருந்து**

**தியானம்.**—இந்த உவமையில் சொல்லப்பட்ட தகப்பனிடமாய் இயேசுநாதர்சுவாமி தமது பரம பிதாவின் சாயலை

எவ்விதமாய் வருணித்துக் காண்பிக்கிறாரென்று இந்தப் பிரிவில் கவனமாய்ப் பார். இந்தத் தகப்பன் தன் மகன் செய்த குற்றத்துக்கு மனஸ்தாபப்படுகிறதைப் பார்த்து முழுதும் பொறுத்தல் கொடுத்து அவன் செய்ததையெல்லாம் அடியோடு மறந்துவிட்டேனென்று அவனுக்கு உறுதி சொல்லி, முன்போல அவனுக்குரிய சுதந்தரமெல்லாம் திரும்பக்கொடுக்க மனதாகிறான். தன் ஊழியர்களை அழைத்து இருக்கிறதுக்குள் உயர்ந்த வஸ்திரங்களைச் சீக்கிரமாய்க் கொண்டுவந்து என் மகனுக்கு உடுத்துங்கள். பின்னும் அவன் கைக்குக் கணையாழியுங் காலுக்குப் பாதரட்சையும் போடுங்கள். கொழுத்த கன்றையும் பிடித்து அடியுங்கள். எல்லாருங் கூடி விருந்துண்டு மகிழ்ந்திருப்போம். ஏனென்றால் இறந்துபோன என் மகன் இதோ திரும்பவும் உயிரோடே வந்திருக்கிறானென்றான் (லூக். 15).

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—இப்போது சொல்லப்பட்ட தயையின் இலக்ஷணங்களெல்லாம் பாவி மனந்திரும்பும்போது ஓர் எழுத்து முதலாய்ப் பிசகாமல் அவனிடத்தில் நடந்துவருகிறதைக் காண்கிறோம். பாவிக்குச் சர்வேசுரன் முழுதும் பொறுத்தல் அளிக்கிறது மாத்திரம் போதாதென்று அவன் இழந்துபோன நன்மையெல்லாம் திரும்பவுங் கொடுக்கிறார். அதாவது அவன் ஞானஸ்நானத்தில் அடைந்த மாசின்மையென்னும் ஆடை ஆபரணத்தையும், தமது சிநேகத்தின் அச்சாரமாகிய கணையாழியையும், புண்ணியபாதையில் உறுதியாய் நடப்பதற்கு அவசியமான வரப்பிரசாதமென்னும் பாதரட்சையையும், வாக்குக்கெட்டாத நன்மையும் மதுரமும் நிறைந்த நற்கருணைப் பந்தியில் அமருகிறதற்கு உரிமையையும் அவனுக்குத் தந்தருளுகிறார். இவ்வளவு நன்மையும் உதாரமுமுள்ள சர்வேசுரன் மட்டில் நமக்குள்ள சிநேகமும் மனத்தாராளமும் ஒட்டிக்கு இரட்டியாகும்படி பிரயாசப்படக்கடவோம்.

**சம்பாஷணை.**—நமது பரலோக பிதாவோடு சம்பாஷணை செய்வோமாக.



# 26-ம் தேதி

## சர்வேசுரன் நமக்குத் தமது தேவப்பிரசாதத்தை வலியத் தருவதினால் காண்பிக்கும் அளவற்ற நன்மைத்தனத்தின்பேரில்

**ஆயத்தச் சிந்தனை.**—ஊதாரிப்பிள்ளையின் தகப்பனிடமாய் உருவகமாய் விளங்குகிற சர்வேசுரனுடைய நன்மைத்தனத்தை ரூபிகரித்துக்கொள்.

**தியானச் செபம்.**—பரமண்டலங்களிலிருக்கும் உன் பிதாவாகிய சர்வேசுரனுக்கு நீ காண்பிக்கவேண்டிய நன்றியறிதலிலும் சிநேகத்திலும் மென்மேலும் வளர வரப்பிரசாதங் கேட்பாயாக.

## முதல் பிரிவு

### சர்வேசுரன் வலியக் காண்பிக்குந் தயவை அரைகுறையாய் ரூபிகரித்தல்

**தியானம்.**—நாம் சர்வேசுரனைச் சிநேகிப்பதற்கு முந்தியே அவர் நம்மைச் சிநேகித்துத் தமது தேவப்பிரசாதத்தை நமக்குத் தந்தருளுகிறதினால் காண்பிக்கும் தயாளம் நிறைந்த நன்மைத்தனத்தை எவ்வளவாகிலும் கண்டுபிடிக்கும்படி மேற்சொல்லிய ஊதாரிப்பிள்ளையின் உவமை உதவியாயிருக்கும். ஆகிலும் அந்தத் தகப்பனுடைய தயாளத்தைக்கொண்டு தேவபிதாவின் தயாளத்தைச் சரியாய்க் கண்டுபிடிக்கலாமென்று எண்ணுவது பெரும் பிசகு. இப்படி நினைக்கிறது மங்கலான விளக்கை உச்சிப்பகல் சூரியன் என்பதற்கு ஒப்பாகும். இந்த உவமையில் சொல்லப்பட்ட தகப்பனுடைய அத்தியந்த தயவை நாம் கேட்டு மனதுருகிக் கண்ணீர் முதலாய்ச் சிந்துவதற்கு ஏதுவானாலும், இது சர்வேசுரனுடைய தயவில் ஓர் அற்பப்பங்கை மாத்திரம் நமக்கு வெளியாக்குகிறதே தவிர முழுதுங் காட்டுகிறதில்லை. ஏனென்றால் இது மனந்திரும்பின பாவியைச் சர்வேசுரன் ஏற்றுக்கொண்டு அவனுக்கு மன்னித்தல்

தருவதற்கு மாத்திரம் அடையாளமேயன்றி, நன்றிகெட்ட மூர்க்கப் பாவிகள்மேல் மனமிரங்கி அவர்களை வலியத் தேடிப்போகும் சர்வேசுரனுடைய கரைகாணாத கருணை சமுத்திரத்துக்கு அடையாளமல்ல.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—தயவைப்போல நமது இருதயத்தைக் கைவசப்படுத்துகிறது வேறொன்றுமில்லை. ஒருவனிடத்தில் நாம் பெற்றுக்கொள்ளும் தயவின் அடையாளங்களைவிட அவன் பாரிசமாய் நமது மனஞ் சாயச்செய்கிறது யாதுமில்லை. அப்படியிருக்க நம்முடைய இருதயம் சர்வேசுரன் பக்கமாய்ச் சாய்வதற்குமாத்திரம் ஏன் இவ்வளவு வருத்தப்படுகிறது? அவரை ஏன் இவ்வளவு அற்பமாய்ச் சிநேகிக்கிறது? ஐயோ, அதேதென்றால் அவரை நாம் சரியாய் அறிகிறதுமில்லை, நமதுமட்டில் அவருக்குள்ள தயவை வேண்டியமட்டும் நினைக்கிறதுமில்லை. ஊதாரிப்பிள்ளை தன் தகப்பன் வீட்டுக்குத் திரும்பினபோது அந்தத் தகப்பனானவன் அவன் பேரில் மிகுந்த பட்சத்தைக் காண்பித்து அவன் செய்ததெல்லாம் நல்ல மனதோடு பொறுத்துக்கொண்டதைக் கண்டு அவன் தகப்பனுக்கு எவ்வளவு பட்சமும் நன்றியறிதலுஞ் செலுத்தக் கடமைப்பட்டிருந்தானென்று நாம் எளிதில் உத்தேசிக்கலாம். ஆனால் நாம் நமது பரம பிதாவை விட்டு ஓடிப்போய்க் கெட்டு அலையும்போது, அவரே நம்மை வலியத் தேடி அழைத்து, தம்மிடத்தில் சேர்த்துவைத்திருக்க அவரை நாம் ஆயிரமடங்கு அதிகமாய்ச் சிநேகிக்க நமக்குக் கடனுண்டல்லவோ?

மனப்பற்றுதல்.—நம்முடைய நன்றியறியாமையை ஒத்துக்கொண்டு கடந்த காலங்களில் சர்வேசுரன்மட்டில் நமது பத்திசோர்ந்துபோனதற்காக மனஸ்தாபப்பட்டு இனிமேல் அவரை மாத்திரம் உத்தம பிரகாரமாய்ச் சிநேகிப்போமென்று சாதித்துச் சொல்லக்கடவோம்.

பிரதிக்கினை.—தேவ சிநேக முயற்சியைச் சொல்லும்போது வாயினால்மாத்திரம் சொல்லாமல் முழு இருதயத்தோடுஞ் சொல்லும்படியாகப் பிரயாசப்படுவேன்.



## 2-ம் பிரிவு

### சர்வேசுரன் வலியக் காண்பிக்கும் தயவைச் சற்று அதிகத் தெளிவாய் ரூபிகரித்தல்

தியானம்.—சர்வேசுரன் பாவிக்கு வலியக் காண்பிக்குந் தயவு ஊதாரிப்பிள்ளையின் உவமையில் தீர்க்கமாய் விளங்கும்படிக்கும், அந்தத் தகப்பன் சர்வேசுரனுக்குச் சரியான சாயலாயிருக்கும்படிக்கும் வேண்டியதென்னவென்றால்: அந்தத் தகப்பனானவன் புத்தி தப்பித் தன்னை விட்டு ஓடின மகனைப் பின் தொடர்ந்து, அவன் தாறுமாறாய்த் திரியும் தூரதேசங்களுக்கெல்லாம் போய் அவனைத் தேடியிருக்கவேண்டியது. அக்கிரமத்தில் அமிழ்ந்தி, கைகெட்டுப் பசியால்வருந்துகிற அவனைக்கண்டு கோபித்துக் கொள்ளாமல் தன் வீட்டுக்கு அவன் திரும்பிவரவும் பழையபடி தன்னோடு உண்டு தன் சொத்துக்களை அநுபவிக்கவும் அவனை அழைத்திருக்கவேண்டியது. அவன் வரமாட்டேனென்றால், அவனை அலட்டிக் கெஞ்சிக் கேட்டிருக்கவேண்டியது. அப்போதுதான் சர்வேசுரனுடைய நன்மைத்தனத்தின் சாயல் அவனிடத்தில் தோன்றியிருக்கும். இதுவே சர்வேசுரன் நமக்கு வலியக் கொடுக்கும் இஷ்டப்பிரசாதத்துக்கு உரிய இலட்சணம். ஆயினும் இயேசுநாதசுவாமி இந்த உவமையை இவ்வளவு விஸ்தீரண அர்த்தமுள்ளதாய்ச் சொல்லிக்காட்டத் திருவுளமாகவில்லை. ஏனென்றால், இவ்வளவு தூரம் தயவுகாட்டுகிற தகப்பன் உண்டென்று சொன்னால் ஒருவரும் நம்பமாட்டார்கள். மெய்யாகவே இப்பேர்ப்பட்ட தயவு, சர்வ நன்மைத்தனத்தையும் அளவின்றிக் கொண்டிருக்கிற பரம பிதாவுக்கு மாத்திரம் உரியதல்லாமல் மனிதரிடத்தில் ஒருபோதுங் காணக்கிடையாது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—மனந்திரும்பின எத்தனையோ பெரும் பாவிகள் இந்தச் சத்தியத்துக்குச் சாட்சிகளாக வரக்கூடும்! சர்வேசுரனுடைய அளவற்ற தயையினாலும் அவர் ஏற்கனவே வலியத் தந்த வரப்பிரசாதத்தின் வல்லமையினாலும், நீயும் செயிக்கப்பட்டு

மனந்திரும்பி இந்தச் சத்தியத்துக்கு அத்தாட்சியாய் இருக்கிறுயாக்கும். அப்படியில்லாவிட்டாலும் நீ ஆத்துமங்களை விசாரிக்கிறவனுயிருந்தால் கணக்கற்ற பேர்களிடத்தில் இப்பேர்ப்பட்ட அற்புத கிருத்தியங்கள் நடக்கிறதைக் கண்டதில்லையோ? சில சமயங்களில் நீ ஆச்சரியத்தால் மெய் மறந்து: ஓ, சர்வேசுரன் நேர்மையான மனதுள்ளவர்கள் மட்டில் எவ்வளவோ நல்லவரென்று கூவிச் சொல்லும்படியாய் நேரிடவில்லையோ?

**மனப்பற்றுதல்.**—சர்வேசுரனுடைய அளவில்லாத தயையை வாழ்த்திப் புகழ்ந்து கொண்டாடுவோமாக.

**பிரதிக்கினை.**—இப்போது உன்னிடத்தில் உண்டாகிற நல்லுணர்ச்சிகளால் மற்றவர்களுக்கும் நன்மையுண்டாகப் பிரயாசப்படு.

## 3-ம் பிரிவு

### தேவ தயவைச் சுமுத்திரையாய் ரூபிகரித்தல் நமது புத்திக்கெட்டாத காரியம்

**தியானம்.**—இதுவரையில் நாம் தியானித்ததைக் கொண்டு சர்வேசுரனுடைய தயவானது சகல எல்லையையும் அளவையும் கடந்ததும், நம்பக்கூடாததுமாயிருப்பதாக நமக்குத் தோன்றினபோதிலும் நாம் அதைச் சரியாய் ரூபிகரித்துக்கொண்டோமென்று சொல்லவும் நினைக்கவும் படாது. அதில் நாம் அறிந்தது மகா சொற்பமேயன்றி மற்றப்படியல்ல. ஏனென்றால் நமது புத்தி மட்டுள்ளது. சர்வேசுரனுடைய தயையோ மட்டில்லாதது. ஆகையால் எந்த உவமை ஒப்பனையைக்கொண்டு பேசினபோதிலும் தேவ தயவைச் சுமுத்திரையாய்க் கண்டுபிடிக்கக்கூடாது. அளவுள்ளது அளவில்லாததை அறியக்கூடுமோ? சொல்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—இதெல்லாம் நாம் ஆராய்ந்தபின் செய்யத்தக்கதென்னவென்றால்: கரை காணுத கருணைசமுத்திரமாகிய சர்வேசுரனுடைய தயையை ஆச்சரியத்தோடு நோக்கி மகா பத்தி விநயத்தோடு ஆராதிக்கக்கடவோம். இது நமது புத்திக்



கெட்டாத பரம இரகசியமாயிருந்தாலும், தப்பில்லாத சத்திய சுரூபியானவர் இதை வெளிப்படுத்தினபடியால் கெட்டியான மனதோடு விசுவசிக்கவேண்டியது. உன் இருதயத்தில் தேவ சிநேக அக்கினி பற்றிக்கொள்ளவும், உன்னை அடுத்துப் பழகுகிறவர்களிடத்தில் தக்க சமயம் பார்த்து, இதை நீ பற்றுவிக்கவுங் கூடுமாயிருக்கும்படி இந்த நினைவை உன் மனதில் ஆழமாய்ப் பதித்துக்கொள். சர்வேசுரனையும் அவர் நமக்குச் செய்துவருகிற எண்ணிறந்த உபகார சகாயங்களையும் அவர்களுக்கு அடிக்கடி நினைப்பூட்டப் பிரயாசப்படு.

**சம்பாஷணை.**—இயேசுநாதசுவாமியோடு சம்பாஷணைசெய்து அவர் நமக்குத் தமது தேவ பிதாவையும், அவருடைய நன்மைத்தனம், பொறுமை, தயாளமுதலிய இலக்ஷணங்களின் அளவற்ற பொக்கிஷத்தையும் தெரிவிக்கவும், அவரைப்பற்றி நாம் யோக்கியமான விதமாய்ப் பேசி, சர்வத்துக்குமேலாய் அவரைச் சிநேகிக்க அநுக்கிரகஞ் செய்யவும் மன்றாடக்கடவோம்.

---

## 27-ம் தேதி

### கெட்ட ஆஸ்திக்காரனும் இலாசாரும் ஆகிய இருவருடைய உவமை

**ஆயத்தச் சிந்தனை.**—சபிக்கப்பட்ட அந்த ஆஸ்திக்காரன்: இந்த அக்கினிச் சூளையில் வாதிக்கப்படுகிறேனேயென்று கூவிச் சொல்வதைக் கேட்கிறதாக ரூபிகரித்துக் கொள்.

**தியானச் செபம்.**—நிலையில்லாமல் ஓடுகிற காரியமெல்லாம் சுத்த சூனியமென்று கண்டுபிடிக்கவும், அதின் பேரில் ஒருகாலும் மனப்பற்றுதல் வைக்காதிருக்கவும் தேவ உதவியைக் கேள்.

## முதல் பிரிவு

### இந்த உவமையின் வரலாறு

தியானம்.—இந்த உவமையிலே இயேசுநாதசுவாமி ஓர் பக்கத்தில், ஏழைகளுக்கு இரங்காத கொடிய நெஞ்சராய் இலௌகிக சுகபோகமே தங்களுக்குப் பாக்கியமென்று எண்ணும் உலக ஐசுவரியவான்களுக்குள் ஒருவனையும்; வேறொரு பக்கத்தில், வெகு இக்கட்டு இடையூறுகளுக்குள்ளே தேவசித்தத்துக்கு அமைந்து தரும வழியைக் கைவிடாத ஏழை ஒருவனையும் வருணித்து நமது கண்முன்பாகக் காட்டுகிறார். எப்படியென்றால்: தூமிரப் பட்டு உடுத்து, நித்தம் சம்பிரமமாய் விருந்துண்டுவந்த மகராசன் ஒருவனிருந்தான். அவன் வாசலில் இலாசாரென்னும் ஓர் ஏழை வெறுந் தரையில் கிடந்தான். இவன் சர்வாங்கமும் புண்ணாய், மகராசன் சாப்பிடும் பந்தியிலிருந்து கீழேவிழும் எச்சில்களைப் பொறுக்கித் தின்ன ஆசைப்பட்டாலும், அதை இவனுக்குக் கொடுப்பார் ஒருவருமில்லை. அப்படியிருக்க நாய்கள் வந்து இவனுடைய புண்களை நாக்கினால் நக்கிக்கொண்டிருக்கும். இவ்விருவருக்கும் வந்த கடைசி முடிவு என்னவெனில்: இயேசுநாதசுவாமிதாமே தொடர்ந்து சொல்லியிருக்கிறதுபோல, ஏழையானவன் மரிக்கவே அவன் ஆத்துமத்தைச் சம்மனசுகள் கொண்டுபோய் அபிரகாம் என்பவருடைய மடியிலே வைத்தார்கள். மகராசனும் மரித்து நரகத்திலே புதைக்கப்பட்டான் (லூக். 16).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நேற்று மகராசனாயிருந்தவன் இன்று ஓடெடுத்துப் பிச்சை வாங்குகிறதும், இன்று பிச்சை எடுக்கிறவன் நாளை மாளிகை கட்டி மகராசனாகிறதும் உலகத்தில் நாளதுவரையில் நடந்துவருகிற சங்கதிதான். இப்படியே உயர்ந்தோர் தாழ்வாகிறதும், தாழ்ந்தோர் உயர்வாகிறதுமாகிய ஏற்றக்குறைச்சல் எப்போதும் நடந்துவரும். ஆயினும் அக்காலத்தில் யூதருக்குள் காணாத ஓர் காரியம் இக்காலத்தில் நமக்குள் எங்குங் காணலாம். அதாவது: வெகு ஐசுவரியவான்கள் ஏழைகளுக்கு இரங்கி உதாரமாய்த் தானம் அளிப்பதையும், வெகு தரித்திரர் ஆச்சரியத்துக்குரிய பொறுமையோடு தேவ சித்தத்துக்கு அமைந்து புண்ணியவான்களாய் இருப்பதையுங் காணலாம். ஆகையால் ஐசுவரியவான்களிலும், தரித்திரர்களிலும், அநேகாநேகருடைய கடைசி முடிவு பாக்கியமானதாயிருக்குமென்று சொல்லுவதற்கு நியாயமுண்டு.



மனப்பற்றுதல்.—இந்த நன்மைக்கெல்லாம் இயேசுநாதர்சுவாமியுடைய திவ்விய போதனை ஒன்றே காரணமென்று ஒத்துக்கொள்ளக்கடவோம். ஏனெனில் தனவான்கள் தங்களுக்குள்ள செல்வத்தில் ஏழைகளுக்குத் தர்மம் பகிர்ந்துகொடுக்கவும், ஏழைகள் தங்களுடைய வறுமையைப் பொறுமையோடும் பேறுபலனோடுஞ் சகித்துக் கொள்ளவும் படிப்பிப்பது சுவிசேஷப் போதனையேயன்றி வேறல்ல.

பிரதிக்கினை.—தனவான்களும் ஏழைகளும் இந்த நல்ல குணம் அடைந்து அதில் உறுதிப்படும்படி நாம் அவர்களோடு புழங்கும்போதெல்லாம் பிரயாசப்படக்கடவோம்.

## 2-ம் பிரிவு

### இந்த உவமையின் நோக்கம்

தியானம்.—சுவிசேஷத்தில் இந்த உவமைக்கு முன்னும் பின்னுஞ் சொல்லியிருக்கிறதைப் பார்த்தால், இயேசுநாதர்சுவாமி யூதர்களுக்குள்ளே உண்டாயிருந்த மகா தப்பறையான ஓர் எண்ணத்தை அழித்து நிர்மூலமாக்குவதற்காக, இந்த உவமையைச் சொல்லிக் காண்பித்தாரென்று வெட்ட வெளியாகிறது. அந்தத் தப்பறை ஏதென்றால்: இந்த உலகத்தில் ஒருவன் அநுபவிக்கிற சுகபோக பாக்கியங்கள் அவன் செய்த புண்ணியத்துக்குச் சம்பாவனையும் அத்தாட்சியுமாயிருக்கிறதென்றும்; தரித்திரமும், துன்பமும், அவன் செய்த பாவத்துக்கு ஆக்கினையாயிருக்கிறதென்றும் யூதர்கள் நினைத்திருந்தார்கள். இதைப்பற்றி முந்த

முந்த யாதொருவன் நிர்ப்பாக்கியனாய்ப் பிறந்தால் அல்லது நிர்ப்பாக்கியவானாய்ப் போனால், அவன் பாவியென்றும் பிறர் இரக்கத்துக்கு அபாத்திரவானென்றும், ௨-வது, இவ்வுலக சுக செல்வத்தைக் கொண்டிருக்கிறவன் பரம பாக்கியமுள்ளவனென்றும் அவர்கள் முழுக் குருட்டாட்டமாய்ப் போதித்துவந்தார்கள். இக்காலத்து மனுஷர் இவ்வளவு மதிகேடாய்ப் பேசாதேபோனாலும் அவர்களுக்கு உலக சுக பாக்கியத்தின்பேரில் ஆசையாகிய தாகம் இல்லையென்கலாமோ? அல்லவே. இந்த ஆசைதான், கணக்கற்ற கிறீஸ்துவர்களைக் கெடுத்து அவர்களை இரட்சணிய பாதையை விட்டு விலக்கி நரகத்துக்குக் கூட்டிக்கொண்டு போகிறது!

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—இப்படிப் பிசகான எண்ணத்தினாலே புத்தி தடுமாறி, நித்திய கேட்டுக்குள்ளாகப்போகிறவர்களுடைய மனதைத் தெளிவித்து அவர்களுடைய குருட்டாட்டத்தை நீக்க, நமதுபேரில் கடன் சுமந்திருக்கின்றது. இதில் நாம் அநுகூலமாகும்படியாகச் செய்யத்தக்கது என்னவென்றால்: அப்பேர்ப்பட்டவர்களிடத்தில் நாம் புழங்கும்போது அடிக்கடி நாம் தியானித்து அறிந்திருக்கிற வேத சத்தியங்களை அவர்களுக்கு உபாயமாய்ச் சொல்லி, அவர்கள் மனதில் தைக்கும்படி பிரயாசப்படுவோமாக. இதற்கு ஆன சமயம் இல்லையென்று சொல்லப்படாது. ஏனெனில், இப்படிச் சொல்லுகிறது நம்மிடத்தில் பிறர் இரக்ஷணியத்தின்மேல் ஆவல் இல்லையென்பதற்குச் சரியாகும். இந்தக் குறை உன்னிடத்தில் இல்லையோவென்று பார்.

**மனப்பற்றுதல்.**—நம்மிடத்தில் விசுவாசமும் பிறரீடேற்ற ஆவலும் அதிகரிக்கும்படி சர்வேசுரனை நோக்கி மன்றாடுவோமாக.

**பிரதிக்கினை.**—மனிதரிடத்தில் நாம் சகசமாய்ப் பேசும்போது முதலாய், விசுவாசத்துக்கடுத்த சில சத்தியங்களை அவர்களுக்கு நினைப்பூட்டுவதற்குத் தகுதியான ஒரு சமயத்தையும் விட்டுவிடக்கூடாது.



## 3-ம் பிரிவு

### இந்த உவமையினால் வரும் பலன்

**தியானம்.**—இந்த உவமையைத் தியானிப்பதால் நாம் கைக்கொள்ளவேண்டிய பலன் ஏதென்றால்: இந்தச் சீவியத்தோடு அழிந்துபோவதும், மறுசீவியத்துக்கு உதவாததுமான யாவற்றையும் நாம் வெறுத்துத் தள்ளாதேபோனாலும், அவைகளின்மேல் நமது மனப்பற்றுதலையாகிலும் வைக்காதிருக்கக்கடவோம். இதனால் வரவேண்டிய வேறோர் பலன் ஏதென்றால்: புண்ணியங்களின்பேரில் மதிப்பும், சர்வேசுரனுக்குப் பிரியப்படவும், நமது பாவங்களுக்குப் பரிகாரமாகவும் நாம் படும் நிந்தை அவமான வருத்தங்களின்பேரில் மேலான எண்ணமுங்கொள்ளக்கடவோம்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—இப்படியிருக்க உன்னுடைய புத்தி சாமர்த்தியக் குறைவினாலாவது, சௌக்கியத் தாழ்வினாலாவது, படிப்பில் விர்த்தியடையாமலும் வேலையில் தேறாமலுமிருப்பதைக் கண்டு உன்னை மற்றச் சகோதரருக்கெல்லாம் கடைசியானவனாகவும், ஓர்வகையில் தள்ளுபடியானவனைப்போல் நீக்கிவைத்திருக்கிறதாகவுந் தோன்றும். இத்தோடு நீ பலபிணிகளால் நொந்து வருந்தவுங் கூடும். அப்போது நீ சஞ்சலத்துக்குள்ளாகி மனமடிந்து முறைப்படாதபடி எச்சரிக்கையாயிரு. அன்றியும் இதெல்லாம் இயேசுநாதசுவாமி உன்மேல் வைத்த தயவினால் நீ தாழ்ச்சி, பொறுமை, தேவ சித்தத்துக்கு அமைவு முதலிய புண்ணியங்களை அநுசரித்து, இந்த வழியாய்ச் சதாகாலத்துக்கும் அளவற்ற பேறுபலன்களாகிய பொக்கிஷங்களைக் குவித்துவைக்கும்படி உனக்கு அனுப்பிய நல்ல சமயமென்று எண்ணிக்கொள். இதற்காக அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ்செய்து உன்னை யோகம்பெற்றவனென்று நினைத்துக்கொள்ளவேண்டியது. உன் நினைவிலும் நடக்கையிலும் இதற்கு விரோதமாயிருக்கிறதேதென்று விசாரித்து, சீர்திருத்திக்கொள்ளக்கடவாய்.

**சம்பாஷணை.**—உன் காவலான சம்மனசானவரோடு சம்பாஷணை செய்.

# 28-ம் தேதி

## கெட்ட ஆஸ்திக்காரனுக்குக் கிடைத்த நரகத்தின் பேரில்

ஆயத்தச் சிந்தனை.—ஆஸ்திக்காரன் நரகத்தில் புதைக்கப்பட்டானென்று இயேசுநாதசுவாமி சொல்லுகிறதைக் கேட்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

தியானச் சேபம்.—தேவபயம் ஒருகாலும் உன்னை விட்டுப் பிரியாதிருக்க வரங்கேட்பாயாக.

### முதல் பிரிவு

#### நரக நினைப்பின்பேரில்

தியானம்.—கெட்ட ஐசுவரியவானுக்குக் கிடைத்த நித்திய கதியேதென்று நேற்றுத் தியானித்தபின், இன்று அந்தக் கதியாகிய நரகத்தின்பேரில் தியானிப்பது நியாயமாயிருக்கின்றது. ஆகையால் இந்த நினைப்பில் நமது புத்தியைச் சற்று நிறுத்திச் சாவதானமாய் யோசிக்கக்கடவோம். நரக நினைப்பு நமது புத்தியில் ஆழமாய்ப் பதிந்திருக்கவும் அதினாலே நமக்குத் தேவபயம் உண்டாகவும், நாம் வேளாவேளையில் நரகத்தைக்குறித்துத் தியானஞ் செய்வது நன்மையாயிருக்கும். மேலும் நாம் சந்நியாசிகளாயிருந்தாலுஞ் சரி, குருக்களாயிருந்தாலுஞ் சரி, மன அந்தகாரமும் ஆசாபாச மயக்கமும் உண்டாகும்படியான சமயங்கள் நமக்கும் நேரிடலாம். அப்போது நித்திய வேதனைகளின் பயம் ஒன்றே நம்மை நன்னெறியில் நிலைநிறுத்த வல்லதாயிருக்கும். இந்த முகாந்தரத்தைப்பற்றித்தான் இயேசுநாதசுவாமி சனங்களுக்கும் விசேஷமாய் அப்போஸ்தலர்களுக்கும் சொன்ன புத்தி பிரசங்கங்களில், நரகத்தைப்பற்றி முக்கியமாய் அடிக்கடி நினைப்பூட்டுகிறார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—மேற்சொன்ன முகாந்தரமுமன்றி நம்முடைய ஞான வர்த்திப்புக்கும், நரகத்தைக் குறித்துத் தியானிப்பது மெத்தப் பிர-



யோசனமாயிருக்கும். அர்ச். பிரான்சீஸ்கு போர்ஜியார் மகா உச்சிதமான புண்ணியங்களை அநுசரிக்கிறதற்கு இந்த நினைவு ஓர் தூண்டுகோல்போலிருந்தது. அவர் தாம் நரக பாதாளத்தின் ஓரத்திலிருப்பதாக உத்தேசித்துக்கொண்டு, பாவத்தால் கெட்டு அதில் விழுந்து கிடக்குங் கணக்கற்ற பசாசுகளையும், எவ்வகை அந்தஸ்திலுமுள்ள மனுஷரையும் விசுவாசக் கண்ணால் கூர்ந்து பார்த்து, தம்மை நோக்கி: ஓ பிரான்சீஸ்கே, இதோ உன்னுடைய இடம். இதோ உனக்கு வந்திருக்கவேண்டிய ஆக்கினை. ஓரே ஒரு பாவத்தைச் செய்து கெட்டுப்போன இத்தனை ஆயிரம் பசாசுகளைவிட உனக்கே இந்த ஆக்கினை அதிகமாய்ச் செல்லும்; செய்த பாவத்துக்குத் தபசுபண்ண நேரங்கிடையாமல் இங்கே விழுந்துகிடக்கிற இத்தனை ஆயிரம் சனங்களைவிட நீ இந்த ஆக்கினைக்கு அதிக பாத்திரவான் என்பார். இதினாலே தம்மை அத்தியந்தவிதமாய்த் தாழ்த்தி சகலரிலுந் தாம் கடைகெட்டவனென்று தம்மை நிந்தித்துவருவார். இதைப்பற்றி அவருடைய சரித்திரத்தில் சொல்லியிருப்பதைப் பார்த்தால் நம்பக்கூடாதது போல் தோன்றும். மேலும் அவர் எவ்வளவு ஞானமுள்ளவராயிருந்தாலும், பசாசின் கண்ணியில் அகப்படுவேனோவென்று பயந்தாற்போல் தமது புத்தியை ஒருபோதும் நம்பாமல், எப்போதும் பெரியவர்கள் சொற்படி நடக்கவும், அற்பக் காரியத்திலும் பிறர் ஆலோசனையைக் கேட்கவும் பிரியப்படுவார். தமக்கு நேரிட்ட கடினமான சோதனைகளில், இந்தத் தியானத்தைக்கொண்டுதான் மாறாத பொறுமையாயிருப்பார். ஒருவிதத்தில் மிதமிஞ்சின வகையாய்த் தம்மை ஒறுத்துவருவார். இந்தத் தியானத்தினாலேதான் அவருடைய பக்தி சுறுசுறுப்பு நாளுக்குநாள் அதிகமாய் வளர்ந்துவந்தது. அவர் நரக அக்கினியைத் தியானிக்கத் தியானிக்க, அவருள்ளத்தில் தேவசிநேக அக்கினி வேகமாய்ப் பற்றியெரிந்தது. அவருள்ளத்தில் எரிந்த பக்தி வைராக்கிய சுவாலை, பிறரீடேற்றத்துக்காக அவர் மா பெரிய காரியங்களை எடுத்துச் செய்யக் காரணமாயிருந்தது. நாமும் அவரைக் கண்டுபாவித்து இவ்விதமாய் நரகத்-

தின்பேரில் தியானஞ்செய்வோமாகில் சகலவித புண்ணியங்களிலும் வர்த்தித்துவருவோமென்பதற்குச் சந்தேகமில்லை.

**மனப்பற்றுதல்.**—இவ்வளவு பிரயோசனமான தியானப்பொருளையும், இதைத் தக்கபிரகாரமாய்த் தியானிக்கும் விதத்தையும், உனக்குச் சர்வேசுரன் அறிவித்ததற்காக அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்.

**பிரதிக்கினை.**—இதினால் உனக்கு ஞான ஆதாயம் வரும்படி பார். எவ்வளவு அடையக்கூடுமோ அவ்வளவும் அடையும்படி பிரயாசப்படு.

## 2-ம் பிரிவு

### நரக வேதனையின்பேரில்

**தியானம்.**—இந்தச் சீவியகாலத்துக்குப்பின் வரும் மறு சீவியத்திலுள்ள காரியங்களையும், அவைகளில் விசேஷமாய் நரகத்தையும், பாவிகள் அதில் படும் கொடிய வாதைகளையும் நாம் சரியாய்க் கிரகித்து அறியக்கூடாதபடியால், பொதுத் தீர்வையில் இயேசுநாதசுவாமி பாவிகளுக்குச் சொல்லும் அகோரத் தீர்வையையாகிலும் கவனமாய்த் தியானிக்கக்கடவோம். அதாவது: சபிக்கப்பட்டவர்களே, நம்மைவிட்டு அகன்று நித்திய அக்கினியில் விழப்போங்கள் என்பதாம் (மத். 25). நம்மை விட்டு அகன்றுபோங்கள் என்பார். ஆகையால் நரகமாவதென்னவென்றால்: மறுமையில் அளவற்ற ஏக பாக்கியமாகிய சர்வேசுரனை இழந்து, அவரைவிட்டுச் சதாகாலமும் பிரிந்திருக்கிறதே நரகமென்னப்படும். இதினாலே நரகபிராப்தியாய்ப் போகிறவனுக்கு ஓர் ஆறுதலான நினைவு முதலாய் எப்போதாவது உண்டாவதற்கு வழி கிடையாது. சபிக்கப்பட்டவர்களே என்பார். இதோ சர்வேசுரனுடைய சாபம். இனிமேல் அவர்களுக்கு இரக்கங் கிடைக்கப் போகிறதில்லை. அவர்களுடைய ஆத்துமத்திலேயும் சாபம், ஞாபகத்திலேயும் சாபம், புத்தியிலேயும் சாபம், சகலத்திலும் சாபம். அழிந்துபோகிற இழிவும் அக்கிரமமும் வெட்கமும் நிறைந்த காரியங்களுக்



காக மோக்ஷத்தை இழந்துபோனோமேயென்ற மனக்குத்தும், அவநம்பிக்கையும், அவர்களை இடைவிடாமல் உபாதிக்கும். இதுதவிர சரீரத்திலேயும் சாபம், பஞ்சேந்திரியங்களெல்லாம் ஒட்டுக்குச் சாபமடையும்; கண்ணிலும் சாபம், காதிலும் சாபம், மூக்கிலும் சாபம், நாக்கிலும் சாபம். பின்னும் நித்திய நெருப்பிலே விழப்போங்களென்பார். அதாவது: நெருப்பிலே சன்னஞ் சன்னமாய் வெந்து சாகிறது எப்பேர்க்கொத்த நிஷ்டூர சாவு. ஆனால் ஒருகாலும் சாகவே சாகாமல் எந்நேரமும் நெருப்பிலே கிடந்துவேகிறது என்ன பிழைப்பு! எப்பேர்க்கொத்த நித்திய காலம்! ஆ, மனுஷரிதை நினைத்துப் பார்ப்பார்களேயானால் அல்லது நரகவேதனை அவர்கள் கண்முன்னே இருக்குமாகில் பாவத்தைக் கட்டிக்கொள்ளுவார்களோ? பாவத்தோடு சற்றுநேரமாகிலும் இளைப்பாறி அமரிக்கையாயிருப்பார்களோ? இன்னின்ன பிரயத்தனம் பண்ணவும் இன்னின்ன காரியத்தைவிட்டுத் துலைக்கவும் ஆத்தும குரு கற்பிக்கும்போது, எங்களால் கூடாதென்று போக்குச் சொல்லுவார்களோ? அல்லவென்று: ஆண்டவரே, என்னை வெட்டும், சுடும், நித்திய நரகத்துக்கு நான் தப்பித்துக்கொண்டாலே போதும்; இம்மையிலே என்னை என்னென்ன பாடுபடுத்தவேணுமோ அதெல்லாம் படுத்துமென்று அர்ச். அகுஸ்தீனோரோடு சொல்லமாட்டார்களோ?

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—நீ இப்போது தியானித்துவந்த பயங்கரமான சத்தியங்களின் ஞாபகமானது, ஒருகாலும் உன்னைவிட்டு மாறாமல் உன் புத்தியிலே நன்றாய் ஊன்றி நிற்கவேணுமென்று சர்வேசுரனை நோக்கிக் கேள். அவர் உனக்கு உத்தம மனஸ்தாபத்தைக் கொடுத்து, உன்னை நீ ஒருபோதும் நம்பாதிருக்கவும் உன்னைத்தானே நீ நிந்திக்கவுஞ்செய்வார். உன் ஆசாபாசங்களோடு யுத்தஞ்செய்து அவைகள் எவ்வளவு அகோரமாயிருந்தாலும் அவைகளை நீ வெல்லும்படி பண்ணுவார். இதைப்பற்றியல்லவோ, உன் கடைசி முடிவுகளை நினைத்துக்கொள், நித்தியத்துக்கும் பாவத்தைச் செய்யமாட்டாயென்று இஸ்பிரீத்துசாந்துவானவர் வேதாகமத்

தில் சொல்லியிருக்கிறார் (ஞான. 7). மேலும் நரக நினைவானது உன்னை ஐசுவரியத்தில் தாழ்ச்சியும் அடக்க ஒடுக்கமும் உள்ளவனாக்கும். உன் அந்தஸ்திலும் உனக்கு நியமிக்கப்பட்ட அலுவலிலும் உன் மனதுக்கு விரோதமாயிருக்கிற காரியங்களில் உன்னைத் தேற்றி உதாரகுணமுள்ளவனாக்குவதுமன்றி, நீ முற்றமுடிய நிலைத்திருந்து இரட்சணியமடைவதற்கு இந்த நினைவு அச்சாரமாயிருக்கும். இதினாலே வேறுசில நன்மைகளுமுண்டாகும். அதாவது: பிறரீடேற்றத்தின்பேரில் உன்னிருதயத்தில ஆவல் நிறையப்பண்ணும். இந்த ஆவல் வேகமுள்ளதும மகா சூட்சமுள்ளதுமாயிருக்கும். எங்கும் நீ ஒரு அப்போஸ்தலனாயிருப்பாய்.

சம்பாஷணை.—மிலேச்சரான அநேக சாதியாருக்கு வேதத்தைப் போதித்து எண்ணிக்கையில்லாத ஆத்துமாக்களை நரக வாசலினின்று காத்தவர்களான சீமோன் ததேயு என்னும் அப்போஸ்தலர்களோடு சம்பாஷணை செய். இன்று திருச்சபை அவர்களுடைய திருநாளைப் பத்தி ஆடம்பரமாய்க் கொண்டாடுகிறது.

---

## 29-ம் தேதி

### இயேசுநாதசுவாமியுடைய தயவும் உருக்கமும் பற்றுதலும்

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதசுவாமி சிறு பிள்ளைகள்மேல் தமது கையை நீட்டிவைத்து ஆசீர்வதிக்கிறதைப் பார்க்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

தியானச் செபம்.—உன் திவ்விய மாதிரிகையான இயேசுநாதரிடத்திலே விளங்குகிற புண்ணியங்கள் உன்னிடத்திலும் விளங்க வரப்பிரசாதங் கேள்.



### முதல் பிரிவு

#### இயேசுநாதர்சுவாமி யாருக்கு முகங்கொடுத்துப் பேசுகிறார்

தியானம்.—சுவிசேஷகர் எழுதிவைத்த ஒரு வரலாற்றினாலே நமது திவ்விய இரட்சகர் எப்போதும் ஒரு கண்டசீராய், சகலரும் தம்மைச் சகசமாய் அண்டிவரும்படி அத்தியந்த தயைபட்சத்தோடு எல்லாருக்கும் முகங்கொடுத்துப் பேசிவந்தாரென்று காண்கிறோம். ஒருநாள் திவ்விய கர்த்தர் வேதபாரகரோடும் பரிசேயரோடும் மெய்விவாக முறைமைகளின்பேரிலும் கன்னிமை மகத்துவத்தின்பேரிலும் தர்க்கித்துக்கொண்டிருக்கும்போது சில தாய்மார் தங்கள் பிள்ளைகளின்மேல் அவர் தமது திருக்கையை வைத்து ஆசீர்வதிக்கவேணுமென்று அவர்களை அவரிடத்தில் கூட்டிக்கொண்டுவந்தார்கள். இந்தச் சமயத்திலே அவர்களைக் கூட்டிக்கொண்டுவந்தது சரியல்ல என்கவேணும். அதினாலேதான் அப்போஸ்தலர்கள் அவர்களைத் தடுத்து விலக்கினார்கள். ஆயினும் இயேசுநாதசுவாமி அப்போஸ்தலர்கள் செய்தது தமக்குப் பிரியமில்லையென்று காண்பித்து, சிறுபிள்ளைகளை நம்மிடத்தில் வரவிடுங்களென்றார் (மத். 19; மாற். 10).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—எந்தச் சமயத்திலேயும் நம்மிடத்தில் வருகிறவர்களை அமரிக்கையோடும் சாந்தகுணத்தோடும் ஏற்றுக்கொண்டு, அவர்களுக்குச் செவிகொடுக்கிற குணத்தைத்தான் முகமலர்ந்துபேசுதல் என்று சொல்லுகிறோம். இது, தங்களுக்குக் கீழாயிருக்கிறவர்களை நடத்துகிற சிரேஷ்டர்களுக்கும், பிறசிநேகத்துக்கும் ஆத்தும இரட்சணியத்துக்கும் அடுத்த அலுவல்களில் ஏற்பட்டிருக்கிற சந்நியாசிகளுக்கும் மகா விலையேறப்பெற்றதும் அவசியமுமான குணமாகும். இப்பேர்க்கொத்த குணம் அனேகம்விசை உன்னிடத்தில் குறைபடவில்லையோ? சில வேளையில் உன்னண்டையில் வருகிறவர்களை நீ முகத்தைச் சுண்டிக்கொண்டு பார்க்கிறதுமல்லாமல் கோபித்துத் தள்ளுகிறதுமில்லையோ? சில சமயத்தில் அன்னியர்மட்டில் சாந்தகுணத்தையும் தயவையுங்

காண்பித்து, உன் சகோதரர்மட்டிலும் உன் விசாரணைக்குள் இருக்கிறவர்கள்மட்டிலும் ஈரமற்ற நெஞ்சாயிருக்கவில்லையோ?

**மனப்பற்றுதல்.**—இதெல்லாம் உள்ளதென்று ஒத்துக்கொண்டு இனிமேல் சரியாய் நடக்கவேணுமென்கிற நல்ல மனசை ஆண்டவரிடத்தில் கேள்.

**பிரதிக்கினை.**—எப்போதும் விசேஷமாய்ப் பலசோலியாய் இருக்கும்போது, மன அமரிக்கையோடும் பதஷ்டமில்லாமலும் சகலருக்குஞ் சாதுவாய் முகங்கொடுத்துப் பேசுவேன்.

## 2-ம் பிரிவு

### இயேசுநாதசுவாமி காண்பித்த உருக்கமான பட்சம்

**தியானம்.**—நமது திவ்விய குருவானவர் தம்மிடத்தில் அந்தத் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளைக் கூட்டிவர உத்தரவுகொடுத்தது போதுமென்றிருக்கவில்லை. ஓர் மெய்யான தகப்பனைப்போல அவர்கள்பேரில் தாம் வெகு கரிசனமும் பட்சமும் வைத்திருக்கிறோமென்று காட்டச் சித்தமாகி, அவர்கள்பேரில் தமது திருக்கரங்களை வைத்து ஆசீர்வதித்து அவர்களை அரவணைத்துக்கொண்டார் (மாற் 10).

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—இயேசுநாதர் இச்சிறு குழந்தைகள்மட்டில் இவ்வளவு உருக்கமான பட்சம் காண்பித்ததின் நோக்கம் மகா பரிசுத்தமும் உன்னதமுமானது. அதேதெனில்: அந்தக் குழந்தைகள் ஒவ்வொருவரிடத்திலுமுள்ள தமது பரமபிதாவின் உயிருள்ள சாயலையும், விலைமதிக்கப்படாததும், பரலோக பாக்கியத்துக்காகப் படைக்கப்பட்டதும், பசாசு பறிக்கத் தேடுகிறதுமான ஆத்துமத்தையும் நோக்கி அதினிமித்தம் அவர்களைச் சிநேகித்தார். உன் மாணாக்கரும், உன் விசாரணைக்குள் அடங்கினவர்களுமான பிள்ளைகள்மட்டில் நீயும் உருக்கமான பட்சமாயிருக்கிறாயே. இந்தப் பட்சம் சுபாவத்துக்கு மேலான முகாந்தரத்தினாலே வருகிறதோ? சுபாவமும் பஞ்சேந்திரிய இச்சையும் எள்ளளவு



மின்றி முழுதும் விசுவாசத்துக்கடுத்த முகாந்தரத்தினால் வருகிறதோ? இதுவிஷயத்தில் உன்னை நீ அற்பமும் நம்பாமல் எச்சரிக்கையாயிரு. உன்னைப்பார்க்கப் புண்ணியத்தில் அதிகமாய் ஸ்திரப்பட்டிருந்த சந்நியாசிகள் பிரலாபத்துக்குரிய தாறுமாறுகளில் சன்னஞ் சன்னமாய் இழுபட்டு விழுந்தார்கள். இவர்களாலே தாங்கள் சேர்ந்திருந்த சபையின் கீர்த்தியும் வெகு ஆபத்துக்குள்ளானது. ஏனெனில், ஒருவன் செய்த குற்றத்தைச் சபையெல்லாத்தின்பேரிலும் ஏற்றிச்சொல்லுகிறது மனுஷருடைய வழக்கமன்றோ?

**மனப்பற்றுதல்.**—பசாசின் அபாய தந்திரங்களினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளுமேன் சுவாமி.

**பிரதிக்கினை.**—என்னை ஒருக்காலும் நம்பாமல் விவேகத்தோடு கூடிய எச்சரிக்கையாயிருக்கவும், என் கருத்தை ஆரம்பத்திலிருந்ததுபோல அடிக்கடி சுத்தமாக்கவும் ஆசிக்கிறேன்.

## 3-ம் பிரிவு

### இயேசுநாதரிடத்தில் விளங்கின ஞான வைராக்கியம்

**தியானம்.**—திவ்விய இரட்சகருடைய ஆசீர்வாதம் பெறும்படி குழந்தைகள் கொண்டுவரப்பட்டபொழுது நடந்த இன்னொரு விஷயத்தையுங் கவனிக்கக்கடவோம். அதாவது: இயேசுநாதசுவாமி தம்மைச் சூழ்ந்திருப்பவர்களுக்குச் சில நல்ல புத்திசொல்வதற்கு அது நல்ல சமயமென்று கண்டு, குழந்தைகளை நம்மிடத்தில் வரவிடுங்களென்று திருவுளம்பற்றினமாத்திரத்தில் சேர்த்துச் சொன்னதாவது: பரலோக இராச்சியம் இப்பேர்ப்பட்டவர்களுக்கே சொந்தம். ஒரு சிறுபிள்ளையைப்போல் சுவிசேஷமாகிய சர்வேசுரனுடைய இராச்சியத்தைக் கைக்கொள்ளாதவன் அதில் பிரவேசிக்கமாட்டானென்று நிச்சயமாய் உங்களுக்குச் சொல்லுகிறேனென்றார் (லூக். 18). திவ்விய கர்த்தர், தமது பிரசங்கத்தைக் கேட்கிறவர்கள் ஆங்காரிகளும் பிடிவாதக்காரருமான பரிசேயரைக் கண்டுபாவியாதிருக்கும்படி இந்தச் சொற்ப வார்த்தைகளைக்கொண்டு எச்

சரித்து, ஒரு குழந்தைக்குச் சமானமாய், கபடற்ற குணத்தோடும் பணிந்த மனதோடும் தமது திவ்விய போதனைகளைக் கேட்டு அநுசரிக்கவேணுமென்று கற்பிக்கிறார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இயேசுநாதருடைய பாவனையாக உன் சகோதரர் முதலிய பிறத்தியாருடைய ஈடேற்றத்துக்கு உதவும்படி, அதற்குத் தக்க சமயத்தைத் தேடி உபயோகித்துக்கொள்ளுகிற வழக்கம் உன்னிடத்தில் உண்டோ? உன் பேச்சிலும் காகிதங்களிலும் ஆத்தும ஈடேற்ற ஆவல் விளங்குகிறதோ? மற்றவர்களோடு நீ சஞ்சரிக்கும்போது தருணம்பார்த்து நீ சொல்லும் நாலு வார்த்தையினால் எவ்வளவோ நன்மை விளையச் செய்யலாம்! இதின்பேரில் வாடிக்கையாய் அசட்டையாயிருக்கிறாயாக்கும். ஆனால் இதற்கெல்லாம் சர்வேசுரன் உன்னைக் கணக்குக் கேட்பாரென்று அறிந்துகொள். ஆகையால் உன் பழைய குற்றங்களுக்குப் பரிகாரஞ்செய்யப் பிரயாசப்படுவாயாக.

சம்பாஷணை.—நமது திவ்விய கர்த்தரோடு சம்பாஷணைசெய்து சிறு பிள்ளைகளிடத்திலே இயல்பாயிருக்கிற கபடற்றதனம், நம்மிடத்திலே சுபாவத்துக்கு மேற்பட்டதாயிருக்க வரங் கேட்கக்கடவோம். சர்ப்பங்களைப்போல விவேகிகளும், புறாக்களைப்போல கபடில்லாதவர்களுமாயிருங்களென்று இயேசுநாதர் நமக்குக் கற்பிக்கிறார். ஆகையால் நாம் கபடற்றதனத்தை அநுசரித்துச் சர்வேசுரன் மட்டில் நேரான கருத்தும், சிரேஷ்டர்கள் மட்டில் திறந்த இருதயமும், சகோதரர்கள்மட்டில் உண்மையான பேச்சும் உண்மையான கிரியையுமுள்ளவர்களாயிருக்கக்கடவோம்.



# 30-ம் தேதி

## பரிசேயனையும் ஆயக்காரனையும்பற்றிய உவமை

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதருடைய வார்த்தைகளைப் பரிசேயர் எரிச்சலோடு கேட்கிறதாக ரூபிகரித்துக் கொள்.

தியானச் செபம்.—சந்தோஷத்தோடும் பலனோடும் ஆண்டவருடைய வார்த்தைக்குக் காதுகொடுக்க அநுக்கிரகங்கேள்.

### முதல் பிரிவு

#### பரிசேயனுடைய ஜெபம்

தியானம்.—நாம் தியானிக்கப்போகிற இந்த உவமையைக்கொண்டு திவ்விய கர்த்தர் பரிசேயரை நாணும்படி செய்ததுமன்றி நமக்கும் வெகு நன்மையான புத்திமதிகளைச் சொல்லிக் காண்பிக்கிறார். இவைகள் நமக்குப் பிரயோசனமாகும்படி வருந்தக்கடவோம். இரண்டுபேர் செபம் பண்ணத் தேவாலயத்துக்குப் போனார்கள். அவர்களில் ஒருவன் பரிசேயன், மற்றொருவன் ஆயக்காரன். பரிசேயனானவன் நின்றுகொண்டு தனக்குள் செய்த செபமாவது: சர்வேசுரா: நான் திருடர், அநீதர், விபசாரக்காரராகிய மற்ற மனிதர்களைப்போல் அல்ல; இந்த ஆயக்காரனைப் போலவும் அல்ல; இதற்காக உமக்குத் தோத்திரஞ்செய்கிறேன். நான் வாரத்தில் இரண்டுவிசை ஒருசந்தியாயிருக்கிறேன்; எனக்குள்ள ஆஸ்திகள் யாவற்றிலும் பத்திலொரு பங்கு காணிக்கையாய்க் கொடுக்கிறேன் என்றான (லூக். 18).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—பரிசேயனுடைய இந்தப் போலி செபத்தில் ஆங்காரத்தினாலே விளையும் சில அக்கிரமங்களை நாம் கவனிக்கும்படி இயேசுநாதர் விரும்புகிறார். இவைகள் மனுஷருடைய கண்ணுக்குத் தெரியாதேபோனாலும், தேவசமுகத்தில் அற்பக் குற்றங்களாயிருக்கமாட்டா. அதாவது தன்னை உயர்த்திப்

பிறரை நிந்திக்கிறதும், தன் நற்கிரியைகளையும் தான் செய்துவருந் தபசையும் தாழ்ச்சி முயற்சிகளையும் தேவ உதாரத்தினால் பெற்றுக்கொண்ட விசேஷ சகாயங்களையும் நினைத்து உள்ளத்தில் சுயபட்சம் கொள்ளுகிறதுமாம். இவைகளில் ஒன்றிரண்டு உன்னிடத்திலில்லையோ? இது மகா நுட்பமான காரியமானபடியால் மனதில் உபாயமாய் நுழைந்து ஒளிந்துகொண்டிருக்கும். ஆகையால் உன்னை நன்றாய் ஆராய்ந்துபார். அர்ச்சியசிஷ்டவர்கள் முதலாய் ஓயாமல் இதற்குப் பயந்து நடுங்கிவந்தார்கள். அவர்களை விட நீ எவ்வளவு அற்பமானவன்! அப்படியிருக்க நீ சுயபட்சத்தின்பேரில் பயப்படத்தக்கதில்லையென்பாயோ?

மனப்பற்றுதல்.—ஆண்டவரே என்னிருதயத்தின் மூலைமுடுக்குகளில் பதுங்கி மகா இரகசியமாயிருக்கிறதை முதலாய் நான் கண்டுகொள்ளச் செய்தருளும்.

பிரதிக்கினை.—வீண்பெருமையாகிய சோதனை வரும்போது சுவாமியைப்பார்த்து: என் சர்வேசுராசுவாமி என்பேரில் இரக்கமாயிரும்; என்னிடத்தில் இன்னம் தாழ்ச்சியில்லையே, தாழ்ச்சியில்லாமல் புண்ணியமுண்டோவென்று செபிப்பேன். இவ்விதமாய்த் தனக்கு வருஞ் சோதனையை நன்மையாக மாற்றிக்கொள்ளலாம்.

## 2-ம் பிரிவு

### ஆயக்காரன் செய்த செபம்

தியானம்.—பரிசேயன்செய்த செபத்திலே மறைந்திருந்த அரோசத்துக்குரிய ஆங்காரத்தை இன்னுமதிக துலக்கமாய் எடுத்துக் காட்டும்படி, இயேசுநாதசுவாமி ஓர் ஆயக்காரன் செய்த செபத்தை அதற்கு எதிராக வைத்துக் காண்பிக்கிறார். சர்க்காருக்குச் சுங்கம் வரி முதலியவைகளைத் தண்டுகிறது ஆயக்காரருடைய தொழிலாகையால் பரிசேயர் அவர்களை அநீதரென்றும் பாவிகளென்றும் எண்ணி நிந்தித்து நடத்துவார்கள். அப்படிப்பட்டவர்களில் ஒருவனாகிய இவனுடைய செபத்தைப்பற்றி இயேசுநாதசுவாமி சொல்லுகிறதாவது: ஆயக்காரனோவென்றால்



தூரத்திலிருந்து, பரலோகத்தை முதலாய் அண்ணார்ந்து பார்க்கத் துணியாமல் மார்பிலே அறைந்துகொண்டு: சர்வேசுராசுவாமீ பாவியாகிய என்பேரில் இரக்கமாயிருமென்றான் என்றார் (லூக். 18).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இந்த ஆயக்காரன் செய்த செபத்தைக்கொண்டு திவ்விய குருவானவர் நாம் செபஞ் செய்யத்தக்க ஓர் உத்தம மாதிரிகையை நமக்குக் காண்பிக்கச் சித்தமானார். அவருடைய படிப்பினையின்படி செபத்திற்கு முக்கியமாய்ப் பலன் கொடுக்கிறது தாழ்ச்சியேயன்றி வேறல்ல. ஆயக்காரன் தெரிந்துகொண்ட இடமாகிய ஆலயத்தின் தலைவாசல் தாழ்ச்சியைக் காண்பிக்கின்றது. அவனிருந்த மேரையும் தாழ்ச்சியுள்ளதாயிருந்தது. எப்படியெனில்: தன் நியாயாதிபதிக்குமுன் தோன்றுகிற குற்றவாளியைப்போல நெற்றி தரையில்பட வணங்கி மார்பிலே அறைந்துகொள்ளுகிறான். அவன் வார்த்தையிலும் தாழ்ச்சி விளங்குகிறது; தான் பாவியென்று ஒத்துக்கொண்டு தனக்குச் சர்வேசுரன் இரக்கமாய்ப் பொறுத்தல் அளிக்கவேணுமென்றும் அவரன்னியில் தனக்கு வேறே ஆதாரமில்லையென்றும் வெளிப்படுத்துகிறான். ஆகையால் நாம் நமது நிர்ப்பாக்கியத்தை நன்றாய் உணர்ந்துகொண்டு தாழ்ச்சியோடு செபிப்போமானால் அந்தச் செபம் சர்வேசுரனுக்கு அதிக பிரியமாயிருந்து நாம் கேட்ட மன்றாட்டைப் பலிக்கச் செய்யுமென்று அறியக்கடவோம். இவ்வித உணர்ச்சிகள் உன் இருதயத்தில் வேரூன்றாததினால் அல்லது வெகு சொற்பமாய் மேலெழுந்தவாரியாக இருப்பதினால் உன் செபங்கள் சோர்ந்து பலனற்றுப் போகின்றன.

மனப்பற்றுதல்.—எப்போதும் விசேஷமாய்ச் செபஞ்செய்யும்பொழுதும் உன் ஒன்றுமில்லாமையையும் நிர்ப்பாக்கியத்தையும் உன் கண்முன்பாக வைத்து ஆண்டவர் உனக்குத் தயவுசெய்ய வேணுமென்று கேள்.

பிரதிக்கினை.—தன்னைத் தாழ்த்திக்கொள்ளுகிறவனுடைய மன்றாட்டு பரலோகமட்டும் ஏறுமென்று வேதா

கமத்தில் சொல்லிய வாக்கியத்தை நினைத்து உன்னிடத்தில் அடிக்கடி நம்பிக்கையை எழுப்புவாயாக (எக்கிளே. 30).

## 3-ம் பிரிவு

### பரிசேயனும் ஆயக்காரனும் செய்த செபத்தின் பேரில் இயேசுநாதசுவாமி சொன்ன தீர்ப்பு

**தியானம்.**—இந்த இரண்டு பேரும் தேவாலயத்தில் செபம் பண்ணப்போனதைக் கண்ட யூதர்கள், பரிசுத்ததனத்தின்மேல் தங்களுக்கு இருந்த எண்ணத்துக்கொத்தபடி பரிசேயன் செய்த செபம் மேலானதும் வெகு பலனுள்ளதென்றும், ஆயக்காரன் செய்த செபம் உதவாததும் பலனற்றதுமென்றும் நினைத்திருப்பார்கள். ஆனால் ஒவ்வொருவருடைய இருதயத்தையும் பார்த்துவருகிற சர்வேசுரனுடைய தீர்மானத்துக்கும் மனுஷருடைய தீர்மானத்துக்கும் பாரதூர வித்தியாசமுண்டு. இயேசுநாதர் அவர்களைக் குறித்துச் சொன்னதாவது : ஆயக்காரனாகிய இவன் நீதிமானாய்த் தன் வீட்டுக்குத் திரும்பிப்போனான். மற்றவனோ அப்படியல்லவென்று உங்களுக்கு வெளிப்படுத்துகிறேன். ஏனெனில் தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான், தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவானென்றார் (லூக். 18).

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—ஆகையால் நாம் ஒருவரையும் வெளித்தோற்றங்களைக் கொண்டு மாத்திரம் மதிக்கவும் அவமதிக்கவும் படாது. அநேகந் தடவையில் வெளித்தோற்றங்கள் மோசம் பண்ணும். அன்றியும் மனுஷருடைய தீர்மானத்தையே நமக்கு ஆதாரமாகவும் ஆறுதலாகவுங் கொள்ளப்படாது. நமது சகோதரராவது சிரேஷ்டராவது நமதுமேல் நல்லெண்ணங்கொண்டிருப்பதினாலே நமக்குப் பயமில்லையென்று நம்பவுங்கூடாது. நம்மை நடுத்தீர்க்கிறவர் சர்வேசுரன் ஒருவரேயென்று நினைத்துக்கொள்ளக்கடவோம். ஆகையால் கபடற்றமனதோடு அவரிடத்தில் நேராகப் போய் : சுவாமீ, தேவரீருக்குப் பிரியமானதை நாங்கள்



அநுசரித்துப் பிரியமில்லாததைத் தவிர்க்கும்படி எங்களுக்கு அறிவும் அநுக்கிரகமும் தந்தருளுமென்று அடிக்கடி மன்றாடக்கடவோம். இப்படி நாம் நடந்தோமாகில் மரணவேளையிலே எவ்வளவோ ஞான ஆனந்தம் அடைவோம் !

**சம்பாஷணை.**—நேசமுள்ள நமது திவ்விய இரட்சகரோடு சம்பாஷணை செய்வோமாக.

---

# 31-ம் தேதி

## சகல அர்ச்சியசிஷ்டவர்களுடைய திருநாளுக்கு முந்தின நாள்

**ஆயத்தச் சிந்தனை.**—சகல அர்ச்சியசிஷ்டவர்களும் மகிமைப் பிரதாபத்தில் வீற்றிருக்கிறதாக ரூபிகரித்துக் கொள்.

**தியானச் செபம்.**—நாளைக்குக் கொண்டாடப் போகிற பெரிய உற்சவத்துக்கு ஏற்ற நல்லுணர்ச்சிகள் இன்றே உன்னிடத்திலுண்டாகும்படி தேவாநுக்கிரகத்தை மன்றாடு.

இந்த மன்றாட்டுப் பலிக்கும்படி அடியில் சொல்லப் போகிற காரியங்களை ஞாபகப்படுத்திக்கொண்டு இன்று முழுதும் இந்தத் திருநாளுக்கொத்த உணர்ச்சிகளை உன் உள்ளத்தில் மூட்டி வளர்க்க முயலுவாயாக.

## முதல் பிரிவு

### அர்ச்சியசிஷ்டவர்கள் செய்த யுத்தம்

**தியானம்.**—அர்ச்சியசிஷ்டவர்கள் பிறக்கும்போதே அர்ச்சியசிஷ்டவர்களாய்ப் பிறக்கவில்லை. தங்களை அர்ச்சியசிஷ்டவர்களாய் ஆக்கிக்கொண்டார்கள். நம்மைப் போல அவர்களும் ஆதித்தகப்பன் பிள்ளைகளாய் தங்களிருதயத்தின் துர்ச்சார்புகளினின்றும் துர்க்குண மாய்கை

யினின்றும் தங்களைக் காக்கவேண்டியிருந்தது. அவர்களுக்குள் அநேகரைக் கெடுக்கவேணுமென்று துஷ்டர் தங்கள் சத்துவமெல்லாம் ஒன்றாய்க்கூட்டி அவர்கள்மேல் எதிர்த்து ஒருபக்கத்தில் நிற்க, சர்வேசுரனுக்குத் துரோகஞ் செய்யலாமோவென்று அவர்கள் மனச்சாட்சி அவர்களை அதட்டி மறுபக்கத்தில் நிற்க, அவர்கள் நடுவில் அகப்பட்டு வருந்தினார்கள். ஆயினும் பின்வாங்காமல் துஷ்டரோடு எதிர்த்து : செத்தாலும் பாவத்தைச் செய்யோமென்று கெம்பீரமாய்க் கூவிப் போராடி வந்தார்கள். விசுவாசம் அவர்களுக்கு ஓர் கேடையம்போலிருந்து படைமுகத்தில் அவர்களை வெல்லப்படாத வீராக்கினது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—அர்ச்சியசிஷ்டவர்கள் உன்னைவிட அதிக மேன்மையான சுபாவத்தைக்கொண்டிருக்கவில்லையென்றும், அவர்களில் அநேகர் உன்னைவிட அதிக கொடூரமான ஆசாபாசங்களோடு போராடி, அதிக பலத்த விக்கினங்களைச் செயித்து மேற்கொள்ள வேண்டியிருந்ததென்றும் நினைத்துவருவாயாகில் நீ ஒருபோதும் தைரியம் இழந்துபோகாமல் வீரியமாய் நின்று போராடுவாய். இன்னம் உனக்கு அதிக தைரியமுண்டாகும்படி, அர்ச்சியசிஷ்டவர்கள் அர்ச்சியசிஷ்டவர்களாவதற்குப் பிரயோகித்த உபாயங்களே உன் கையில் இருக்கின்றனவென்றும் நீ சந்நியாசியாயிருந்தால் அவர்களில் அநேகரைவிட உனக்கு அதிக சக்தியுள்ள உபாயங்களும் நிச்சயமான வழிவகைகளும் உண்டென்றும் யோசித்துக்கொள். இப்படியிருக்க அர்ச்சியசிஷ்டவர்களின் சாயல் உன்னிடத்தில் அவ்வளவு சொற்பமாய்த் தோன்றுவதேன் ? ஏனென்றால் நீ யுத்தகாலத்தில் சோர்வடைந்து கோழைத்தனம் காட்டுவதினாலும் மன உற்சாகமற்றுத் திரிவதினாலுந்தான். அர்ச்சியசிஷ்டதனம் அடைவதற்கு உறுதியான மனதோடு தனக்குத்தானே பலவந்தஞ்செய்யவேண்டும். பரலோக இராச்சியம் பலவந்தப்படுகின்றது; பலவந்தக்காரரே அதைப் பறித்துக்கொள்ளுகிறார்களென்று இயேசுநாதர்சுவாமி திருவுளம்பற்றியிருக்கிறார் (மத். 11).



மனப்பற்றுதல்.—இந்த முதல்பிரிவிலே அடங்கியிருக்கிற சத்தியங்களின்பேரில் அடிக்கடி விசுவாசமுயற்சி செய்கிறது.

பிரதிக்கினை.—உற்சாகத்தைப் புதுப்பித்துக்கொண்டு உன் ஞானசத்துருக்கள் அனைவரோடும் விசேஷமாய் உன்னிடத்தில் வலுத்திருக்கிற ஆசாபாசத்தோடும் போராடு.

## 2-ம் பிரிவு

### அர்ச்சியசிஷ்டவர்கள் அடைந்த ஜெயம்

தியானம்.—அர்ச்சியசிஷ்டவர்கள் அதிவேகமாய் யுத்தம்பண்ணினதுமல்லாமல் தங்களை அர்ச்சிப்பதற்கு ஏதுவான வழிவகைகளையெல்லாம் நிலைமையோடு கையாடி வந்தார்கள். முடிவுவரையில் நிலைநிற்பவன் இரட்சிக்கப்படுவானென்று இயேசுநாதர்சுவாமி வசனித்தபடியே அவர்களும் தங்கள் ஞானப்போராட்டத்தில் வெற்றிகொள்ளும்படி முடிவுபரியந்தம் தர்ம வழியில் நிலைத்திருந்தார்கள். இதினாலே சகலத்தையும் வென்று ஜெயசீலரானார்கள். உலகத்தின் பகடி பரியாசங்களையும், நயபயத்தையும், பசாசினுடைய துர்க்கருத்தையும், வெறி உக்கிரமத்தையும், பகையினாலே கொடுங்கோலர் நவமாய் உண்டுபண்ணின வாதனைகளையுமல்லாமல், இவைகளெல்லாத்தையும்விட ஜெயிப்பதற்கு அதிக வருத்தமாகிய தங்கள் இருதயத் துர்ப்பலத்தையும், மாய்கைகளையுமுதலாய் ஜெயங்கொண்டார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—பொதுவில் நமக்குக் குறைவாயிருக்கிறதேதென்றால் நல்ல மனதும் நல்ல பிரதிக்கினையுமல்ல ; நாம் செய்த பிரதிக்கினைகளை நிறைவேற்றுகிறதிலே பிரமாணிக்கந்தான் குறைபடுகிறது. முற்றமுடிய நிலைமைதான் குறைவாயிருக்கின்றது. நீ நவசந்நியாசியாயிருந்தகாலத்தில் இன்னவிதமாய் இனி எப்போதும் நடந்துவரவேண்டுமென்பதற்கு எழுதிக்கொண்ட தீர்மானங்களையாவது, வருஷாந்தர ஒடுக்கத்தில் நீ பண்ணின பிரதிக்கினைகளையாவது பிரமாணிக்கமாய் நிறைவேற்றிவந்தால் இப்போது நீ எவ்வளவோ உத்தம

தனத்தில் ஏறியிருப்பாய்! ஐயோ நாம் செய்த பிரதிக்கினைகள் ஒரு வருஷத்துக்காகிலும் நிலைப்பதற்குப் பதிலாய் ஒரு நாள் முதலாய் நிலையாமற்போகின்றனவே! நீ காலமே தியானத்தில் செய்துகொண்ட பிரதிக்கினைகள் மத்தியானத்துக்குள்ளாகப் பறந்து போகின்றனவல்லவா?

**மனப்பற்றுதல்.**—இதெல்லாங் கண்டு ஆச்சரியப்பட்டு, வெட்கி நமது அற்பப் புத்தியையும் நிலையற்றதனத்தையும் அரோசித்துத் தள்ளித் தாழ்ச்சியோடு ஆண்டவரிடத்தில் பொறுத்தல் கேட்போமாக.

**பிரதிக்கினை.**—பிரதிக்கினைகளை நன்றாய் அநுசரிக்கிறதற்காகப் புதிதான சூட்சங்களைத் தேடிப்பார்.

## 3-ம் பிரிவு

### அர்ச்சியசிஷ்டவர்கள் அடைந்த மகிமையுஞ் சந்தோஷமும்

**தியானம்.**—அர்ச்சியசிஷ்டவர்களுடைய யுத்தத்தையும் ஜெயத்தையும் யோசித்தபின் அவர்களுக்குக் கிடைத்த ஒட்டோலக மகிமையையுங்கூடத் தியானிக்கக்கடவோம். சர்வேசுரனுக்காகவே அவர்கள் போராடினார்கள். அவருக்காகவே முடிவுபரியந்தம் யுத்தம் பண்ணினார்கள். ஆகையால் சர்வேசுரன் தமது ஊழியத்தில் கடைசிமட்டும் பிரமாணிக்கமாய் நிலைத்திருக்கிறது எவ்வளவு பெரிய காரியமென்று அவர்கள் அறிந்து ஆநந்தங்கொள்ளும்படி திருவுளமானார். தெய்வம் தெய்வத்துக்கு யோக்கியமான வெகுமதி பண்ணும். ஆகையால் நமது புத்திக்கு எட்டியவரையில் என்னென்ன மகிமை சந்தோஷ பாக்கிய இன்பங்களைத் தான் நாம் கருதிக்கொண்டாலும், அதெல்லாம் மோக்ஷ சம்பாவனைக்குமுன் ஒன்றுமில்லாததுபோலிருக்கும். இது வேத சத்தியம். ஏனெனில் சர்வேசுரன் தம்மைச் சிநேகிக்கிறவர்களுக்குக் கொடுக்க நியமித்திருப்பதை மனுஷனுடைய இருதயம் ஒருக்காலும் கண்டுபிடிக்க வல்லதல்லவென்று அர்ச். சின்னப்பர் பேரொளியிட்டு உரைக்கிறார். (1 கொரி. 2).



**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—நாம் இதை நினைக்கும்போது நமது இருதயம் பூரித்து நமது தைரியம் வேகங்கொள்ளுகிறதாக உணருகிறோம். நாம் இம்மையில் படுந் துன்ப துரிதங்களெல்லாம் ஒருநாள் நமக்கு வெளியாகப்போகிற மகிமைப்பிரதாபத்துக்கு நிகரில்லையென்று அர்ச். சின்னப்பரோடு நாமும் பேரொளியிட்டுச் சொல்லுவோம் (உரோ. 8). நமக்கு உண்டாகும் இக்கட்டு வருத்தங்களால் ஒருக்காலும் மனந்தளராமல் அர்ச். சவேரியாரைப்போலவும், அர்ச். தெரேசம்மாளைப் போலவும் யுத்தத்தையும் அவமான துன்ப துரிதங்களையும் ஆவலோடு வலியத் தேடுவோம். சகல அர்ச்சியசிஷ்டவர்களுடைய திருநாளுக்கு ஆயத்தமாக இந்தத் தியானத்தைச் செய்தோமே. இதற்குப் பலனாக மேற்சொல்லிய நல்ல உணர்ச்சிகள் நம்மிடத்தில் உற்பத்தியாகும்படி நம்மாலானதைச் செய்து அதற்காக இன்றையச் செப தபங்களை ஆண்டவருக்கு ஒப்புக்கொடுப்போமாக.

**சம்பாஷணை.**—உன் பேர்கொண்ட அர்ச்சியசிஷ்டவரோடு சம்பாஷணை செய்து, அவர் மன்றாட்டினால் முந்த முந்த மோக்ஷ வெகுமதியை அவருக்குப் பெறுவித்த தைரிய நிலைமையையும், இரண்டாவது, இந்த வெகுமானத்தை நீ மதித்து அவரோடே நித்தியகாலமும் அதற்குப் பங்காளியாகத்தக்க வரப்பிரசாதத்தையுஞ் சர்வேசுரனிடத்தில் கேட்பாயாக.

# நவம்பர் மாதம்

## முதல் தேதி

### சகல அர்ச்சியசிஷ்டவர்கள் திருநாள்

**ஆயத்தச் சிந்தனை.**—மோக்ஷத்தில் சகல அர்ச்சியசிஷ்டவர்களுடைய மகிமைப் பிரதாபங்களைப் பார்க்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

**தியானச் சேபம்.**—அவர்கள் அநுபவிக்கும் பாக்கியத்தைக் கண்டுபிடிக்கும்படி அநுக்கிரகங் கேள்.

சகல அர்ச்சியசிஷ்டவர்களுடைய திருநாள் நமக்கு மோக்ஷத்தை நினைப்பூட்டுவதினால் இன்றையத்தினம் புத்தியின் கண்ணால் அதில் பிரவேசித்து அங்கே அமைந்திருக்கும் அழகு அலங்கார பாக்கியங்களை எவ்வளவாகிலும் கண்டுபிடிக்க வருந்துவோமாக.

### முதல் பிரிவு

#### ஒரு தீன்மையுமில்லாத ஸ்தலம் மோக்ஷமென்னப்படும்

**தியானம்.**—அன்னியன் ஒருவன் ஓர் ஊர்ச் சனங்களையெல்லாங் கூட்டிவைத்து அடியிற் சொல்லப்போகிற விதமாய்ப் பேசுகிறானென்று வைத்துக்கொள்வோம். எப்படியென்றால்: நான் உலகமெல்லாம் சுற்றிவந்தேன். அறியாத கடலெல்லாம் கடந்துவந்தேன். கடைசியாய்த் தீவு ஒன்றைக் கண்டேன். அதில் மனிதருடைய சீவிய நிலைமை இவ்விடத்திலிருக்கிறதுபோலல்ல. இதற்கும் அதற்கும் வெகுதூர வித்தியாசம். அங்கே மனுஷருக்கு யாதொரு துன்பமும் துயரமும் இல்லை. குளிர் உஷ்ணம் அவ்விடத்தில் தோன்றாமல் எப்போதும் ஒரே சீரான வசந்தகாலம் குடிகொண்டிருக்கும். அங்கே வேலைசெய்து சீவனம்பண்



ணத் தேவையில்லை. பூமி தன்னிச்சையாய்ச் செழித்து விளையும். கள்ளர் வஞ்சகர் காய்மகாரிகள் அங்கே கிடையாது. துராசாபாசம் அவ்விடத்தில் என்னவென்று தெரியாது. மனுஷருக்கு அங்கே வியாதியுமில்லை, விருத்தாப்பியமுமில்லை, மரண அவதியும் கிடையாது என்று இவை முதலியவைகளைச் சொன்னால் கேட்கிறவர்கள் என்ன சொல்வார்கள்? ஆ! இது ஒரு நேர்த்தியான கனவு, சிறந்த கட்டுக்கதை யென்பார்களொழியக் கொஞ்சமும் அதை நம்பமாட்டார்கள்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—இது நியாயந்தான். மேற்கண்டதெல்லாம் இந்த உலகத்தைப்பற்றிச் சொல்லுகிறதாயிருந்தால் அது ஒரு கனவு, கட்டுக்கதையென்று சொல்லத்தகுமே யல்லாமல் மெய்யாகவே எங்கேயாவது இருக்கிறதென்றால் பைத்தியமாகும். ஆனால் இதெல்லாம் பரலோகத்தில் உண்மையாகவேயிருக்கிறதென்று சத்திய விசுவாசம் நமக்குப் படிப்பிக்கின்றது. அவ்விடத்தில் சாவுமில்லை நோவுமில்லையென்று அர்ச். அருளப்பர் காட்சியாகமத்தில் சொல்லியிருக்கிறார் (காட்சி. 21). ஆ, பரலோகத்தில் இவ்வளவு பாக்கியமாத்திரம் உண்டாயிருந்தபோதிலும் அதை நிச்சயமாய்க் கைக்கொள்ளும்படிக்கு இவ்வுலகத்தில் என்னென்ன பாடுபடவும், என்னென்ன பலியிடவும் வேண்டியிருந்தாலும் அதற்கு நாம் பின்வாங்கலாமோ? அந்த யாத்திரைக்காரன் சொன்ன பாக்கியமான தீவு மெய்யாகவே யிருக்கிறதென்று நம்புகிறவர்கள் தங்கள் ஆஸ்திபாஸ்தியெல்லாம் விற்றுச் செலவுக்கு வைத்துக்கொண்டு அந்தத் தீவுக்குப் போய்ச் சேரத் தீவிரியாதிருப்பார்களோ? அல்லவே. ஏனென்றால் இவ்விடத்தில் விருத்தாப்பியத்துக்கும் எல்லாத்தையும் பறித்துக்கொள்ளுகிற சாவுக்குந் தப்பித்துக்கொள்ளக் கூடாததினாலே அவ்விடத்திற்குப்போவது உத்தமமென்பார்கள்.

**மனப்பற்றுதல்.**—இதைக்குறித்து விசுவாசமுயற்சி செய்து உலகத்தை நிந்தித்துப் பரலோகத்தின்பேரில் ஆசையை எழுப்பு.

**பிரதிக்கினை.**—இன்று முழுதும் இந்த நினைவுகளையும் இந்தப் பற்றுதல்களையும் உன் உள்ளத்தில் மூட்டி வளர்த்துக் கொண்டிரு.

## 2-ம் பிரிவு

### சகல நன்மைகளும் நிறைந்த ஸ்தலம் மோக்ஷமென்று சொல்லப்படும்

**தியானம்.**—மோக்ஷத்திலே சுயஞ்சீவியராய் நன்மையென்னப்பட்ட யாவையுங் குறைபற்ற பிரகாரமாய்த் தம்மில் அடக்கிக்கொண்டிருக்கிற சர்வேசுரனை நாம் அநுபவிக்கப்போகிறதினால் நமது பாக்கியம் அவ்விடத்தில் சம்பூரணமாயிருக்கும். அப்படியே முந்தமுந்த நமது ஆத்தும புலன்களெல்லாம் சம்பூரண பாக்கியமடையும். நமது ஞாபகத்திலே வாக்குக்கெட்டாத மதுரம் பொருந்திய நினைவுகள் எழும்பும். நமது புத்தியிலே சொல்லிலடங்காத இன்பம் நிறைந்த யோசனைகள் ஓடும். உலகத்திலுள்ள சகல சாஸ்திரிகளையும்விட அத்தியந்த மேலான விதமாய்ச் சகல காரியங்களையும் அங்கே நாம் வருத்தமில்லாமல் அறிவோம். நமது மனதிலோவென்றால் நம்மாலாசைப்படக்கூடுமானதெல்லாம் ஒரு க்ஷணத்திலே பூரணமாய் நிறைவேற்றுவோம். இரண்டாவது, நமது சரீரம் உயிர்த்தெழுந்த இயேசுநாதர் சரீரத்துக்கொப்பாயிருந்து அதின் பஞ்சேந்திரியங்கள் யாவுங் குறையற்ற பாக்கியத்தை அநுபவிக்கும். கண்ணால் பார்க்கக்கூடுமான அழகு சௌந்திரியமுங் காதால் கேட்கக்கூடுமான மதுரம் பொருந்திய குரல்களும், நாவினாலும் நாசியினாலும் அநுபவிக்கக்கூடுமான இனிய மதுரங்களும், இப்படிச் சர்வாங்கமும் அநுபவிக்கக்கூடுமான இன்ப சுகங்களெல்லாம் மட்டற்ற விதமாய், மிதமிஞ்சிப் போகுமென்கிற பயமின்றி நமக்குக் கொடுக்கப்படும். ஏனென்றால் அவைகளைச் சுகிக்கிற நமது புலன்கள் நன்மையும் யோக்கியமுமென்னப்பட்டதைமாத்திரம் நாடுமேயல்லாமல் மற்றதையுந் தேடமாட்டா.



**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—ஆகையால் எவ்விதத்தில் பார்த்தாலும் பரலோகத்திலே நமது பாக்கியமானது மெய்யாகவே பரிபூரணமாயிருக்கும். நாமும் இதை விசுவசிக்கிறோம். இதை அநுபவிக்கிற சகல அர்ச்சியசிஷ்டவர்களையுங் கொண்டாடுகிறோம். அவர்களுக்குக் கிடைத்த அதிஷ்டம் நமக்குங் கிடைக்கவேணுமென்று அங்கலாய்க்கிறோம். அப்படியிருந்தும் நமது பரதேச ஸ்தலமாகிற துன்பநிறைந்த இந்தப் பூமியோடு ஒட்டிக்கொண்டிருக்க நாம் ஆசைப்படுகிறது என்ன விகாரம்? பரலோகத்தை எவ்வளவு சொற்பமாய் நினைக்கிறோம்! அர்ச். சின்னப்பரைப்போல வானத்தின் மூன்றும் மண்டலம்வரையில் நாம் பரவசமாய்ப்போய் அதில் ஒரே ஒரு நிமிஷம் பேரின்பபாக்கியத்தைச் சுகிப்போமானால் நமது நினைவு முழுதும் வேறு விதமாயிருக்கும். இனி பூமியில் யாதொன்றையும் விரும்பாமல் எப்போது பரலோகத்தில் போய்ச் சேருவோமோவென்று ஆசையோடு எதிர்பார்த்திருப்போம்.

முந்தின பிரிவில் சொல்லியிருக்கிறதுபோல மனப்பற்றுதலை எழுப்பிப் பிரதிக்கினை செய்துகொள்.

## 3-ம் பிரிவு

### சகல நன்மையையுஞ் சதாகாலமும் அநுபவிக்கிறது மோக்ஷமென்று சொல்லப்படும்

**தியானம்.**—பரலோகத்திலே நமக்கு வார்த்தைப்பாடு கொடுக்கப்பட்ட வாக்குக்கெட்டாத நன்மைகளை நாம் அளவற்ற விதமாய் மதிக்கச்செய்வது ஏதென்றால்: அந்த நன்மைகள் ஒருபோதும் முடியாமலும், அவைகளை எப்போதாவது இழந்துபோவோமென்கிற பயமில்லாமலும் அநுபவிப்போமென்கிறதுந்தான். ஆனால் இப்பேர்க்கொத்த நன்மைகளைத்தானே எப்போதும் பார்த்து, எப்போதும் அநுபவிப்பதினால் நமக்குச் சலிப்பு உண்டாகாதோவென்பாய். இந்த அபத்த நினைவைத் தள்ளிவிடு. ஏனென்றால் சர்வேசுரன் சுயஞ்சீவியராய் மட்டற்ற அழகு சவுந்தரியமாய்

அளவில்லாத நன்மைச் சுரூபியாயிருக்கிறதினாலே, முத்திப் பேறுபெற்றவர்கள் அவரிடத்தில் எப்போதும் நவமான பாக்கியங்களையும் நவமான சுக சந்தோஷங்களையும் சுகித்து, சலிப்பென்பது தெரியாமல் என்றென்றைக்கும் பூரண திருத்தியடைந்திருப்பார்கள். ஏனெனில் அளவுள்ளது அளவில்லாததை ஒருபோதும் குறைபடவும் வற்றவுஞ் செய்யமாட்டாது.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—இந்த நினைவுகளை நமது மனதில் நன்றாய்ப் பதியச்செய்துகொண்டு, நமது ஆத்துமத்திலாவது சரீரத்திலாவது யாதொரு வருத்தப்பட நேரிடும்போது, நாம் இம்மையில் படுந் துன்ப துரிதங்களெல்லாம் ஒரு நாள் பரலோகத்திலே நமக்குக் கிடைக்கப்போகிற மகிமைப் பிரதாபத்துக்கு நிகரில்லையென்று அர்ச். சின்னப்பரோடுகூட நாமுஞ் சொல்லுவோமாக. அன்றியும் இலௌகீக பற்றுதல்களையெல்லாம் நம்மைவிட்டு அகற்றி, அர்ச்சியசிஷ்டவர்களைப்போல எப்போது பரலோக இராச்சியத்தில் பிரவேசிப்போமோவென்று ஆவலோடு காத்துக்கொண்டிருக்கக்கடவோம். மேலுந் தாவீது இராசாவைப்போல: ஆண்டவரே, உமது மகிமைப்பிரதாபத்தில் நான் எப்போது வருவேன்; எப்போது உமது திருமுகத்தைக் காண்பேன்; நான் அவ்விடத்திற்குப் பறந்துவந்து இளைப்பாறும்படி எனக்கு இறக்கைகளைத் தருவதாரென்று சொல்லுவோமாக (சங். 14).

**சம்பாஷணை.**—சகல அர்ச்சியசிஷ்டவர்களுக்கும் இராக்கினியான பரிசுத்த கன்னியாஸ்திரியோடு சம்பாஷணை செய். அவளை வாழ்த்தி உனக்கு உயிருள்ள விசுவாசமும் பத்தியுள்ள சிநேகமும், பூலோகத்தின்பேரில் மிகுந்த வெறுப்பும், சுகிர்த கிருத்தியங்களை நிறைவேற்ற நல்ல மனதும், மோக்ஷ நன்மையின்பேரில் கொழுந்துவிட்டு எரிகிற ஆசையும் அந்த ஆண்டவள் பெறுவிக்கும்படி மன்றாடுவாயாக.



## 2-ம் தேதி

### உத்தரிக்கிற ஆத்துமாக்கள் திருநாள்

#### அவர்களுக்கு நாம் உதவிசெய்வதற்கான முகாந்தரங்களும் வகை விதங்களும்

**ஆயத்தச் சிந்தனை.**—ஆத்துமாக்கள் உத்தரிக்கிற ஸ்தலத்தில் அடைபட்டிருக்கிறதாகப் பாவித்துக்கொள்.

**தியானச் செபம்.**—உத்தரிக்கிற ஸ்தலத்து ஆத்துமாக்கள் பேரில் மெய்யான பற்றுதலைக் கேட்கக்கடவாய்.

உத்தரிக்கிற ஸ்தலத்து ஆத்துமாக்களுக்கு உதவி செய்யவேண்டிய முகாந்தரங்கள்.

### முதல் பிரிவு

#### சர்வேசுரன் பாரிசமான முகாந்தரங்கள்

**தியானம்.**—இந்த ஆத்துமாக்கள் சர்வேசுரனுக்கு மிகவும் உகந்தவர்கள். அர்ச்சியசிஷ்டவர்கள் பூலோகத்திலிருந்தபோது இஷ்டப்பிரசாதத்தினாலே சர்வேசுரனோடு ஒன்றித்திருந்ததைவிட இந்த ஆத்துமாக்கள் அதிகமாய் அவரோடு ஒன்றித்திருக்கிறார்கள். அர்ச்சியசிஷ்டவர்கள் பூலோகத்திலிருந்தபோது, இந்த இஷ்டப்பிரசாதத்தை இழந்துபோகக் கூடுமாயிருந்தார்கள். இந்த ஆத்துமாக்களோ அதை ஒருபோதும் இழந்துபோகக் கூடாதவர்களாயிருக்கிறார்கள். ஆகையால் மோக்ஷானந்தபாக்கியம் அவர்களுக்குக் கிடைக்குமென்பது உறுதி. அவர்கள் தங்கள் பாவத்துக்கு இன்னும் உத்தரித்துத்தீராத கடனைச் சர்வேசுரன் மன்னித்துக்கொண்டு, உடனே மோக்ஷபாக்கியத்தை அவர்களுக்குக் கொடுக்கச் சித்தமாயிருந்தாலும், அவர் நித்தியகாலத்தில் செய்திருக்கிற ஒரு தீர்ப்பு இதற்கு விக்கினமாயிருக்கின்றது. இந்தத் தீர்ப்பின் முகாந்தரமாகச் சர்வேசுரன் பூலோகத்தில் உயிரோடிருப்பவர்கள் அந்த ஆத்துமாக்களுக்காகத் தம்மை நோக்கி இரந்து மன்றாடும்.

செபத்தைக்கொண்டுமாத்திரம் அவர்களுடைய அவதியைக் குறைக்கலாம். இப்படியிருக்கப் பரதேசிகளான அந்த ஆத்துமாக்கள்மேல் அவர் தமக்குள்ள அன்பினால் நாம் அவர்களுக்காக வேண்டிக்கொள்ளவேணுமென்று நம்மைத் தூண்டிக் கேட்கிறார். நாம் அதைக்கேட்டுச் சும்மாயிருக்கலாமோ?

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இப்போது நாம் தியானித்ததைக்கொண்டு இந்த ஆத்துமாக்கள் நீண்டகாலம் உத்தரிக்கிறஸ்தலத்தில் கிடப்பதும், அல்லது அவ்விடத்தைவிட்டுச் சீக்கிரம் பரலோகத்தில் சேர்வதுமாகிய அவர்களுடைய ஸ்திதியை, சர்வேசுரன் ஒரு விதத்தில் நமது கையில் வைத்திருக்கிறாரென்று சொல்லத்தகும். இப்படியிருக்க அவர்கள்மட்டில் நாம் ஒரு பிரகாரமாய் இரக்கமில்லாதவர்கள்போலிருந்தால், சர்வேசுரன் பேரில் தானே நாம் ஒரு பிரகாரமாயிருக்கிறப்போலாகும். இப்போர்க்கொத்த குறை ஒருநாள் அவர் சொல்லாதிருக்கும்படி அவர்களுக்காகக் குறிக்கப்பட்ட இன்றையத்தினத்தில் அவர்கள்பேரில் நமக்குள்ள இரக்கத்தைப் புதுப்பித்து நம்மிடத்தில் அது வளர வழிபண்ணிக்கொள்வோமாக. எத்தனையோ விதத்தில் நாம் அவர்களுக்கு ஆறுதல் வருவிக்கலாம்! முந்த முந்த நாம் இலேசாய் அடையக்கூடுமான கணக்கில்லாத பரிபூரண பலன்களையும் சில்லறைப் பலன்களையுங்கொண்டு அவர்களுக்கு உதவி செய்யலாமே. நீ இவற்றை அலட்சியம் பண்ணுகிறதில்லையோ? யாரும் நினையாத பரதேசிகளுடைய ஆத்துமங்களுக்காக அவைகளை ஒப்புக்கொடுக்கிற வாடிக்கை உனக்குண்டோ? இதற்கு ஒருபோதும் பின்வாங்காதே. ஏனென்றால் உனக்குக் கைம்மாறாகக் கிடைப்பது இலாபமேயொழிய நஷ்டமில்லையென்று நிச்சயித்துக்கொள்.

மனப்பற்றுதல்.—சர்வேசுரன் தமது அன்புநிறைந்த பிள்ளைகளிடத்தில் முதலாய் ஒரு பாவ மாசும் பொறாமல் கண்டிக்கிறதினாலே அவருடைய அளவில்லாத நீதியைக் கண்டு ஆச்சரியப்பட்டு, பாவமென்னப்பட்டதெல்லாத்துக்குந் தப்பித்துக்கொள்ளவேணுமென்கிற திடமான மனதை



உன் இருதயத்தில் எழுப்பக்கடவாய். மேலும் உத்தரிக்கிற ஆத்துமாக்களுக்குப் பயன்படக்கூடிய உதவிசெய்யப் பிரயாசப்படு.

பிரதிக்கினை.—தினந் தினம் நீ அடையக்கூடுமான பலன்களையெல்லாம் அடைந்து, உத்தரிக்கிற ஆத்துமாக்களுக்காக ஒப்புக்கொடுக்கவேணுமென்கிற கருத்தை, மற்ற நல்ல கருத்துகளோடு காலமேதோறும் புதுப்பித்துக் கொள்.

## 2-ம் பிரிவு

### ஆத்துமாக்கள் பாரிசமான முகாந்தரங்கள்

தியானம்.—முந்தமுந்த அந்த ஆத்துமாக்கள் அவ்விடத்தில் வாக்குக்கெட்டாத வேதனைப்படுகிறார்கள். உத்தரிக்கிற ஸ்தலத்திலுள்ள வேதனைகளில் ஓர் அணுப்பிரமாணமான வேதனைக்குமுன் வேதசாட்சிகள் பட்ட வேதனைகளெல்லாம் வைத்துப் பார்த்தால் அதற்கு இணையாகமாட்டாவென்று அர்ச். தோமாஸ் எழுதிவைத்தார். மேலும் இந்த வேதனை வெகுகாலத்துக்கு நீளித்திருக்கக் கூடுமென்கிறதினாலே, திருச்சபையானது இவ்வளவு காலமென்று மட்டுத் திட்டங் குறியாமல், மரித்த விசுவாசிகளுக்காக வருஷாந்தரச் சடங்குகள் செய்ய உத்தரவுகொடுத்திருக்கின்றது. 2-வது, அவ்விடத்தில் அவர்களுக்கு மனச்சுதந்தரமில்லாததினாலே தங்களுக்குத் தாங்களே யாதொரு நன்மை உதவியுஞ் செய்யக்கூடாதவர்களாயிருக்கிறார்கள். 3-வது, நமது இருதயந் துக்கத்தால் பிளந்துபோகக்கூடியவிதமாய் அவர்கள் அழுது பிரலாபித்து நமது உதவியைக் கேட்கிறார்கள். ஆனால் அந்த அழுகைக்குரல் நமக்குக் கேட்கிறதில்லை. 4-வது, இயேசுநாதர்சுவாமி பேராலே பிறசிநேகத்தினிமித்தம் தங்களுக்கு உதவிசெய்ய நம்மைக் கெஞ்சுகிறார்கள். நான் சிறையிலிருந்தேன்; நீங்கள் என்னைப் பார்க்க வந்தீர்களென்று ஆண்டவர் வசனித்திருக்கிறதினாலே அந்த ஆத்துமாக்களிடமாய் அவரும் ஒருவகையில் வேதனைப்படுகிறார் (மத். 25). 5-வது, அவர்களுக்குள்ளே அநேகர் தங்கள்மேல் நமக்குள்ள நீதிக்கட

மையையும் நன்றியறிதலையுங் கிட்டின உறவையும்பற்றி நமது உதவியைக் கேட்கிறார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—பேர்போன வேதபாரகர் படிப்பித்த இந்தச் சத்தியங்களை ஒவ்வொன்றாய் ஆராய்ந்து பார்த்தாயாகில், அவர்களுக்காக நீ செய்யுந் தருமக் கிருத்தியங்களுக்கு அளவும் மட்டுமிருக்க மாட்டாது. அன்றியும் அநேக கிறீஸ்துவர்கள் தங்கள் பாவங்களுக்குப் பரிகாரமாகச் செய்யுந் தவக்கிரியைகளெல்லாத்தையும் உத்தரிக்கிற ஆத்துமாக்களுக்கு உபயோகமாக விட்டுவிட விசேஷ வார்த்தைப்பாடு கொடுத்திருக்கிறது போல நீயும் செய்ய ஆசைப்படுவாய். பதின்மூன்றாம் ஆசீர்வாதப்பரென்கிற அர்ச். பாப்பானவர் இந்த வார்த்தைப்பாட்டை அங்கீகரித்ததுமல்லாமல் இந்த வீரியமான புண்ணிய முயற்சிக்குச் சகலரையுந் தூண்டி ஏவும்படி மூன்று விசேஷ சகாயத்தைக் கட்டளையிட்டிருக்கிறார். முதலாவது, இந்த விசேஷ வார்த்தைப்பாடு கொடுத்திருக்கிற குருக்கள் எந்தப் பீடத்தில் பூசை செய்தாலும் அந்தப் பீடம் விசேஷ உரிமைப் பீடமாகும். ஒரு ஆத்துமத்தை உத்தரிக்கிற ஸ்தலத்தினின்று உடனே மீட்கிறதற்கு எவ்வளவு பலன்கள் வேண்டியதோ, அவ்வளவும் ஒரே பூசைக்கு உண்டாயிருக்கச் செய்கிறதுதான் விசேஷ உரிமைப் பீடமாகும். இரண்டாவது, மற்றக் கிறீஸ்தவர்களெல்லாரும் தேவநன்மை வாங்கும் ஒவ்வொருவிசையும் திங்கட்கிழமைகளில் திவ்விய பூசை காணும்போதும் பரிபூரணபலன் அடையலாம். மூன்றாவது, இந்த வார்த்தைப்பாடு கொடுத்தவர்கள் தாங்கள் அடையுந் திருச்சபைப் பலன்களையெல்லாம் உத்தரிக்கிற ஸ்தலத்து ஆத்துமாக்களுக்காக ஒப்புக்கொடுக்கலாம். இந்த விபரங்கள் அநேகம் பேர்களுக்குத் தெரியாததினாலே நீ இவைகளை அவர்களுக்கு அறிவிக்கப் பிரயாசப்படு.

மனப்பற்றுதல்.—மரித்த சமஸ்த விசுவாசிகளுக்கும் நித்திய இளைப்பாற்றியைக் கட்டளையிட வேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம், எங்கள் மன்றாட்டைக் கேட்டருளுஞ் சுவாமி.



பிரதிக்கினை.—உத்தரிக்கிற ஸ்தலத்து ஆத்துமாக்களுக்குச் சகாயஞ் செய்யவேணுமென்கிற ஆசையைப் புதுப்பித்து இதற்காகத் தன்னாலானமட்டும் மற்றவர்களுக்கும் புத்தி சொல்லிப் பிரயாசப்படுகிறது.

## 3-ம் பிரிவு

### நமது பாரிசமான முகாந்தரம்

தியானம்.—பிறசிநேகக் கற்பனையினிமித்தம் உத்தரிக்கிற ஸ்தலத்து ஆத்துமாக்களுக்கு உதவி செய்யவேணுமென்பது மெய்யானாலும், நமதுமேல் நமக்குள்ள சிநேகமும் இந்த உதவி செய்ய நம்மை உடன்படுத்தவேண்டியது. ஏனென்றால் இம்மையிலும் மறுமையிலும் இதினால் வரும் பலன்களுக்குக் கணக்கில்லை. அப்படியே உத்தரிக்கிற ஆத்துமாக்களுக்கு நாம் சகாயஞ் செய்யும்போது முந்த முந்தத் தேவ நீதியின் கடினத்தை நினைத்துக்கொள்ளுகிறோம். இதினால் நமக்குப் பாவத்தின்மட்டில் அருவருப்பு அதிகரித்து நமது பழைய பாவங்களையுங் குற்றங்களையுந் தவக்கிரியைகளால் பரிகரிக்கவேணுமென்கிற நமது பிரதிக்கினை உறுதிப்படும். இரண்டாவது, இதினால் சர்வேசுரனிடத்தில் நமக்கு உத்தம சிநேகிதர்களையும் சிபாரிசுக்காரர்களையும் தேடிக்கொள்ளுகிறோம். மூன்றாவது, இரக்கம் உள்ளவர்கள் பாக்கியவான்கள், ஏனெனில் அவர்கள் இரக்கம் அடைவார்களென்று இயேசுநாதர் சொன்னது போல, நாம் மரித்தபிறகு நமக்கு உண்டாகும் உத்தரிப்பு வேதனையின் அகோரம் அமருவதற்கு இது நிச்சயமான வழியாயிருக்கும் (மத். 5).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—உத்தரிக்கிற ஆத்துமாக்களுடைய அவதி குறைய இன்றையத் தினம் நன்மை வாங்கிப் பரிபூரணபலனடைந்து ஒப்புக்கொடுப்போமாக. மீளவும் இனிமேல் அவர்களைக் குறித்துச் செய்யத்தக்கதேதென்றும், இதுவரையிலும் அவர்களுக்காக நாம் செய்துவந்ததோடுகூட இன்னும் ஏதேனும்

சேர்த்துச் செய்யக்கூடுமோவென்றும் விபரமாகப் பார்த்துத் தீர்மானித்துக்கொள்ளக்கடவோம்.

சம்பாஷணை.—சகல மோக்ஷவாசிகளோடு சம்பாஷணைசெய்து நமது மன்றாட்டுகளுக்கு அவர்கள் சனுவாயிருக்கக் கேட்போமாக.

---

# 3-ம் தேதி

## மரணத்தின்பேரில்

**ஆயத்தச் சிந்தனை.**—மரித்த ஓர் சந்நியாசியை உன் கண்முன் கிடத்தியிருக்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

**தியானச் செபம்.**—மரண நினைப்பினாலே புண்ணியவானாய்ச் சீவிக்கவேணுமென்கிற வேகமான ஆசை உனக்குண்டாகும்படி கேள்.

### முதல் பிரிவு

#### சாவின் இரகசியம்

**தியானம்.**—உத்தரிக்கிற ஆத்துமாக்களின்பேரில் நாம் வைக்கத்தக்க பத்தியைப்பற்றித் தியானித்தபின் இயல்பாய் நமக்கு மரணத்தின் நினைப்பு வருகின்றது. இந்த நினைப்பு இரட்சணியத்துக்கு மகா உதவியான நினைப்பாகையால் இன்று நமது புத்தியை இதில் நிறுத்தித் தியானிக்கக்கடவோம். முந்த முந்தச் சாவின் பரம இரகசியத்தை யோசிக்கக்கடவோம். நாம் அதை ஒருபோதும் கவனியாதேபோனாலும் எந்த நேரமும் அது நமது தலைமேல் விழுந்து நம்மை நசுக்கக்கூடும். நாம் ஒரே ஒருவிசை மாத்திரம் சாவோமல்லாதே இரண்டு மூன்றுவிசை சாவதில்லையென்றும், அந்த ஒரே சாவில்தான் நமது ஆத்தும சரீரத்தின் நித்திய பாக்கியமோ நித்திய நிற்பாக்கியமோ அடங்கியிருக்கிறதென்றும், அதினிமித்தம் நமக்குள்ள சகல கவை காரியங்களையும்விடச் சாவொன்றே சந்தேகமில்லாமல் மகா



முக்கியமானதென்றும் நிச்சயமாய் அறிந்திருக்கிறோம். ஆகையால் கிரமப்பிரகாரம் மற்றச் சகல காரியங்களையும் பார்க்க இதுவே நமக்கு ஏக நினைப்பும், ஏக கவலையுமாயிருக்கவேண்டியது. இப்படியிருக்க நம்மிடத்தில் நடப்பதைப் பார்க்குமிடத்தில் இதற்கு முழுதும் விபரீதமாகவும், கண்டுபிடிக்கக்கூடாத இரகசியமாகவுமிருக்கின்றது. ஏனென்றால் மற்ற நினைப்புகளெல்லாத்தையும்விட நமக்கு மரணநினைப்பு மகா அரிதாய் வருகின்றது. அதுவுமன்னியில் இந்த நினைப்பு வரும்போது ஏதோ துர்க்குறி நினைப்பு வந்தாற்போல உடனே இதைத் தள்ளிப்போடுகிறோம். இதெல்லாம் உண்மையல்லவா?

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—இதற்கு மறுக்கப்படாத திஷ்டாந்தம் உன்னிடத்திலே நீ காண்கிறதில்லையோ? ஒரு வாரத்துக்கு ஒருவிசையாவது சாவின்பேரில் கண்டிப்பாய் யோசித்து நான் இப்போது சாகவேணுமானால் எனக்கு நம்பிக்கையுண்டாகுமோ, பயமுண்டாகுமோவென்றும், நான் இப்போதே சாகிறதாயிருந்தால் இதுவரையிலும் எப்படி நடந்திருக்க விரும்புவேனென்றும் உன்னையே வினாவிவந்தாயோவென்று கையை நெஞ்சில் வைத்துச் சொல்லு பார்ப்போம். சிலவேளை ஐயோ, நான் இதைப்பற்றி ஒருபோதும் நினைத்ததில்லை என்பாயாக்கும். உன் சகோதரரில் யாராவது இறந்துபோனதாகச் செய்திகேட்கும்போது சுதாவாய் உனக்கு மரண நினைவு வருகிறதல்லவோ? ஆனால் உன்னையறியாமலே அந்த நினைவைத் தள்ளிவிட்டு: எனக்கு இப்படி வருமோ? நான் இன்னும் வாலிபனன்றோ? அப்படிக்கில்லையென்று அவனைப் பார்க்க எனக்கு வயது அதிகமானாலும் என்னுடைய தேகக்கூறு அதிக சௌக்கியமும் உரமுமுள்ளது. சாவை நினைக்கிறதற்கு இது சமயமல்ல. இன்னம் நாளிருக்கிறதென்று பிதற்றவில்லையோ? இது எவ்வளவோ ஒன்றுக்கொன்று ஒவ்வாத காரியமாயிருக்கிறது! இந்த இசைகேட்டுக்குக் காரணமென்ன? சாதாரணமாய் இதற்குப் பல வீண் நியாயங்களைச் சொல்லுகிறோம். ஆனால் மெய்யான காரணமொன்றே. அதை ஒத்துக்கொள்ளுகிறதற்கு மிகவும்

கஷ்டப்படுகிறோம். அதாவது: நான் சாவின்மேல் அடிக்கடி கன சிந்தனையாயிருந்தால் ஓயாமல் என் மனதில் குத்துமேல் குத்து உண்டாகும். இப்படிக் குத்துப்படாதபடி நான் அதிக நல்லவனாகி இன்னின்ன காரியங்களைப் பரித்தியாகம் பண்ணுகிறதற்கு அத்தியந்த முயற்சி செய்யவேண்டியிருக்கும். ஆனால் இந்தப் பிரயாசை எனக்குப் பிரியமில்லையென்பதுதான் உண்மையான காரணமாகும். இவ்விதமாய் மனவஞ்சகஞ்செய்து, உன்னை ஏய்த்துப் பொய்யான மன அமரிக்கையில் தூங்குகிறதற்கல்லவா இவ்வளவு பிரயோசனமான மரண நினைப்பை உன்னைவிட்டு அகற்றுகிறாய். இது எப்பேர்ப்பட்ட குருட்டாட்டம்! உன்னையே ஏய்த்துவிட்டு நீ அடையும் பலனென்ன?

மனப்பற்றுதல்.—இதெல்லாங் கண்டு பிரமித்து உன்னையே சினந்துகொள்.

பிரதிக்கினை.—தன் மரணநேரத்தை எப்போதுங் கண்முன்பாக வைத்துக்கொண்டு, நாள்தோறுஞ் சாவுக்கு ஆயத்தஞ்செய்கிறவன் பாக்கியவானென்று கிறீஸ்துநாதர் அநுசாரத்தில் சொல்லியிருக்கப்பட்ட இந்த வாக்கியத்தை அடிக்கடி நினைத்துக்கொள் (கி. அ. முதல் காண். 23).

## 2-ம் பிரிவு

### சாவுக்கு ஆயத்தஞ் செய்கிறதின்பேரில்

தியானம்.—இன்று எனக்குச் சாவு, நாளை உனக்குச் சாவு. அந்த நாளையென்பது எனக்கு வந்துவிட்டதாகவும் நான் கிடந்த கிடையில் அசையமாட்டாமலிருக்க, உயிர் சன்னஞ் சன்னமாய் என்னைவிட்டுக் கரைகிறதாகவும் என் ஆத்துமத்தைச் சரீரத்தோடு பிணைத்த கட்டுகளெல்லாம் ஒன்றுக்குப்பின் ஒன்றாய்த் தெறித்து விழுகிறதாகவும் என் ஆத்துமந் தேவ நீதிச் சிம்மாசனத்துக்குமுன் ஒரு நொடிக்குள்ளே ஆஜராகப்போகிறதாகவும் ரூபிகரித்துக்கொள்ளுவேன். இந்த அவதி வேளையிலே என்னைப் பார்த்து நான் கேட்கத்தக்க காரியம் இரண்டு உண்டு. முதலாவது, என் மனதில் யாதொரு பாவத்தின் பழுவிருந்து அழுத்திக்



கொண்டிருக்கிறதோ? என் உள்ளத்தில் யாதொரு சந்தேகம் இருந்து அதை அரித்துப் புண்ணாக்குகிறதோ? அதைத் தீர்த்துக்கொள்ள வெகுநாள் அசட்டைசெய்து, இப்போது அத்தோடு தேவ சமுகத்துக்குமுன் போக நான் துணிகிறதில்லையோ? ஆனால் இன்னமும் நேரமிருக்கிறதினாலே அந்த அவதிவேளையில் செய்திருக்கப் பிரியப்படுகிறதை இப்போதே செய்வேன். அந்தச் சந்தேகத்தை என் ஆத்தும குருவுக்குக் கபடற்றதனமாய் வெளிப்படுத்தி முழு நம்பிக்கையோடு அவருடைய புத்தியைக்கேட்டு நடந்துகொள்வேன். இரண்டாங் கேள்வி ஏதென்றால்: இதுவரையில் நான் நடந்த நடக்கையைப்பார்த்து நினைக்கிறதென்ன? என்னதான் நினைக்கவேண்டியது? மற்ற அநேகரைப்போல நானும் பிரலாபித்து: ஐயோ நான் ஏன் அதிக பத்தி சுறுசுறுப்பாய் நடக்கவில்லை? ஏன் என்னை அதிகமாய் ஒறுக்கவில்லை? ஏன் மெய்யான சந்நியாசியாகவில்லையென்று கதறிச் சொல்ல ஏதுவில்லையோ? என் சீவியகாலத்திலே மகா அசட்டையாயிருந்து ஒழுங்கைச் சரியாய் அநுசரியாமல் பாவத்தைக் கட்டிக்கொண்டதை இப்போது பார்க்கிறேன். ஆ, மறுபடியும் இவைகளைத் துவக்கிச் செய்யக்கூடுமானால் எவ்வளவோ நன்மை! சர்வேசுரா சுவாமீ, எனக்கு ஆரோக்கியத்தைக் கொடும். இன்னும் ஒரு வருஷம் மாத்திரம் நான் சீவனோடிருந்தால் எல்லாத்துக்கும் பரிகாரஞ் செய்வேனென்று பிரார்த்திக்கவேண்டியிராதோ?

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நீ ஏகாந்தமாயிருந்து உன் புத்திக்குச் சர்வேசுரன் ஞானத்தெளிவைக் கொடுக்கவேணுமென்று கேட்டு விபரமாய் நீ ஆராயவேண்டிய காரியமாவது: முந்த முந்தச் சர்வேசுரனுக்கும் நீ கொடுத்த வார்த்தைப்பாட்டிற்கும் உன் சகோதரருக்கும் உன் அலுவலுக்குந் தகாத காரியங்களைச் செய்யாதிருக்க உன்னிடத்தில் மனமுண்டோ? இரண்டாவது, நீ ஞானக்காரியத்தை எப்படிச் செய்ய விரும்புகிறாய்? மூன்றாவது, உன்னிடத்தில் விசேஷமாய்க் குறைபடுகிற புண்ணியமேது? சர்வேசுரன் உன்னிடத்தில்

கேட்கும் பலியென்ன? ஞானத்தெளிவுள்ள இவ்வித நல்ல யோசனைகளை எந்தப்பிரகாரமாய் அநுசரிக்கலாமென்று தீர்மானித்துத் தகுந்த பிரதிக்கினை செய்துகொள். இவைகளைச் சுருக்கமாய் எழுதி, இப்போது மகா நன்மையும் இரக்கமுமுள்ளவருமாய்ப் பின்னால் உன்னை நடுத்தீர்க்கிறவருமான இயேசுநாதர் பாதத்திலே தேவமாதாவின் வழியாகக் காணிக்கையாக வை.

சம்பாஷணை.—தேவமாதாவோடு சம்பாஷணை செய்து, பாவிகளாயிருக்கிற எங்களுக்காக இப்போதும் எங்கள் மரண நேரத்திலும் வேண்டிக்கொள்ளுமென்கிற செபத்தின் வார்த்தைகளை ஒன்றொன்றாய் யோசித்துப்பார்.

---

## 4-ம் தேதி

### முந்திரிகைத் தோட்டத்துக்கு அனுப்பப்பட்ட வேலையாட்களின் உவமையின் பதப்பொருள்

ஆயத்தச் சிந்தனை.—இந்த உவமையை இயேசுநாதர் சொல்லுகிறதாக ரூபிகரித்துக்கொள்.

தியானச் செபம்.—இந்த உவமையை நீ கண்டுபிடித்து இதில் புதிதான ஞானத் தெளிவையும் மனத்திடனையும் அடையும்படி சர்வேசுரனை நோக்கி மன்றாடு.

### முதல் பிரிவு

#### வேலைக்காரர் அனுப்பப்பட்டது

தியானம்.—மோக்ஷ இராச்சியத்துக்கு நியமிக்கப்பட்டவர்களைச் சர்வேசுரன் தெரிந்துகொள்ளுகிற வகை இன்னதென்று காட்ட இயேசுநாதசுவாமி சொன்ன உவமையாவது: மோக்ஷ இராச்சியமானது ஒரு குடும்பத்து எசமானுக்கு ஒப்பாயிருக்கின்றது. அந்த எசமான் தன் முந்திரிகைத் தோட்டத்துக்குக் கூலியாட்களைத் தேடு



கிறதற்காக அதிகாலையில் ஆறுமணிக்குப் புறப்பட்டான். அவர்களுக்கு நாள் ஒன்றுக்கு ஒரு பணங் கொடுப்பதாக ஒப்பந்தம் பேசித் தன் தோட்டத்துக்கு அனுப்பினான். ஒன்பது மணி வேளையிலே மறுபடியும் வெளியே வந்து இன்னும் அநேகர் வேலையில்லாமல் வீதிகளில் நிற்கிறதைக் கண்டு அவர்களைப் பார்த்து: நீங்களும் என் தோட்டத்தில் வேலைக்குப் போங்கள்; நியாயமான கூலியை உங்களுக்குங் கொடுப்பேனென்று சொல்லவே, அவர்களும் வேலைக்குப் போனார்கள். பின்னும் மத்தியானத்திலும் மூன்று மணிக்கும் வெளியே புறப்பட்டு அப்படியே செய்தான். கடைசியாய்ச் சாயங்காலம் ஐந்துமணிநேரத்திலும் வெளியே புறப்பட்டு அங்கே நின்றவர்களைப்பார்த்து: நீங்கள் நாள் முழுதும் இங்கே சும்மா நிற்பானேனென்று சொல்லி, நீங்களும் என தோட்டத்தில் வேலைக்குப் போங்களென்றான் (மத். 20).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இந்த உவமையின் முந்தின பாகத்துக்குப் பதப்பொருளாவது: அந்தக் குடும்பத்து எசமான் யாரென்றால் மனுஷ சந்ததியாகிய மகா பெரிய குடும்பத்துக்கு எசமானான சர்வேசுரன்தாமே. முந்திரிகைத்தோட்டமோ வாக்குத்தத்தஞ் செய்யப்பட்ட மெசியாவாகிய இரட்சகர் உற்பத்தியைக்கொண்டிருந்த மனுக்குலந்தான். வேலைக்காரர் யாரென்றால் அந்தத் திவ்விய இரக்ஷகரை மனுக்குலத்துக்கு நினைப்பூட்டி அவர் வருகைக்கு ஆயத்தஞ்செய்யும்படி சர்வேசுரனால் உலகத்தின் அந்தந்த யுகத்தில் அனுப்பப்பட்ட பிதாப்பிதாக்களும், தீர்க்கதரிசிகளும், நியாயாதிபதிகளும், அப்போஸ்தலர்களுமாம். ஒப்பந்தஞ்செய்த சம்பளமென்னவென்றால் மனிதருடைய இரக்ஷணியமாம். அதாவது தக்கவிதமாய் உழைத்துப் பேறு பெற்றவர்களுக்கு மெசியாஸ் வாக்குத்தத்தஞ்செய்து திறந்தருளின பேரின்ப மோக்ஷமாமென்றறியவும்.

மனப்பற்றுதல்.— சர்வேசுரனுடைய முந்திரிகைத் தோட்டமாகிற மனுக்குலத்தார் யாவருக்கும் எக்காலத்திலும் எவ்வித மாறுபாடு கோலாகோலங்களிலும் உண்டா

யிருக்குந் தேவபராமரிக்கையையுந் தயவையும் நாம் கண்டு ஆச்சரியப்பட்டுச் சர்வேசுரனுக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்வோமாக. சர்வேசுரன் இம்மாத்திரம் உபகார சம்ரட்சணை செய்துவருகையில் மனுஷர் அடைகிற பலன் வெகு வெகு சொற்பமாயிருப்பதேன்? என்னுடைய சீவியகாலத்தின் அந்தந்தப் பருவத்திலே அதிக தாராள நிலைமையோடு இத்தனை உபகாரங்களுக்கும் ஏற்றபடி நானும் நடவாமற் போனதேன்? இதெல்லாம் பருவம் பருவமாய் ஞாபகப் படுத்திப்பார்.

பிரதிக்கினை.—இன்றுமுதல் சர்வேசுரனுடைய உபகாரங்களுக்கு அதிக யோக்கியனாய் நடக்க வருந்துவேன்.

## 2-ம் பிரிவு

### வேலைக்காரருக்குக் கூலிகொடுத்தது

தியானம்.—பொழுதுபோனமாத்திரத்திலே தோட்டத்தின் எசமான் தன் கணக்கனை அழைப்பித்துச் சொன்னதாவது: வேலைக்காரரை வரவழைத்துக் கடைசியில் வந்தவர்களுக்கு முந்தியும் முந்தி வந்தவர்களுக்குப் பிந்தியுமாக எல்லாருக்குங் கூலிகொடுத்துவா வென்றான். இப்படிக் கடைசியானவர்கள் முந்தினவர்களாகத் தலைமாறிக் கூலி கொடுத்ததிலே இனிமேல் நடக்கப்போகிற ஒரு விஷயம் குறிக்கப்பட்டிருக்கிறதென்று வேதசாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். இந்த உவமையின் முடிவில் இயேசுநாதசுவாமி உரைத்த வாக்கியத்தால் இந்த விஷயம் தெளிவாய்க் காட்டப்பட்டிருக்கிறது. அதாவது முந்தினோர் பிந்தினோராகவும், பிந்தினோர் முந்தினோராகவும் இருப்பார்களென்று திருவுளம்பற்றினார். இதின் பதப்பொருள் ஏதென்றால் யூதர்கள் சர்வேசுரனுடைய இராச்சியத்துக்குந் திருச்சபைக்கும் சகலருக்குமுன் அழைக்கப்பட்டிருந்தபோதிலும் எல்லாருக்கும் கடைசியில்தான் அவர்கள் மொத்தமாய்த் திருச்சபையில் பிரவேசிப்பார்கள். ஏனென்றால் அவர்களில் கொஞ்சம்பேர் தவிர மற்றவர்களெல்லாருங் கடைசிக் காலம் வரையில் தேவ ஒளிவுக்குந் தேவ வரப்பிரசாத



அழைத்தலுக்கும் விரோதிகளாயிருப்பார்கள். இதைப் பற்றித்தான் இயேசுநாதர்சுவாமி அழைக்கப்பட்டவர்கள் அநேகம் பேர், தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ கொஞ்சம் பேர் என்றார். இதற்கு அர்த்தமாவது: யூதர்களில் ஒருவராகிலும் பாக்கியில்லாமல் சகலரும் அழைக்கப்பட்டவர்களாயினும் அவர்களுக்குள் இயேசுநாதர்சுவாமியுடைய சீஷர் கணக்கில் சேரப்போகிறவர்களுடைய தொகை வெகு சொற்பமாயிருக்குமென்பதாம்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—அழைக்கப்பட்டவர்கள் அநேகம்பேர் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் கொஞ்சம்பேர் என்பதற்கு இதுவே மெய்யான அர்த்தமும் கருத்துமாம். சிலர் இதைக் கிறீஸ்துவர்கள்மேல் சாட்டிப் பிசகாய் வியாக்கியானஞ் செய்கிறதினாலே அநேகாநேகமுறை ஆத்துமாக்கள் அவதைரியமடைகிறார்கள். நீயும் இப்படி விகாரமாய் அர்த்தம்பண்ணியிருந்தால் அதைத் திருத்திக்கொள்ளுகிறதுமல்லாமல் மற்றவர்களும் இதில் மோசம்போகாதிருக்க உன்னாலான பிரயாசப்படு.

மனப்பற்றுதல்.—நீ ஞானஸ்நானம் பெற்றபோது சர்வேசுரன் தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்குள்ளேயுந் தமது சீஷர்களுக்குள்ளேயுந் திருச்சபையின் பிள்ளைகளுக்குள்ளேயும் உன்னையும் ஒருவனை ஏற்றுக்கொண்டதற்காக அவருக்கு நன்றியறிந்ததோத்திரஞ் செய். யூதர்கள் மனந்திரும்பவும் வேண்டிக்கொள்.

பிரதிக்கினை.—ஆண்டவர் எனக்குச் செய்த உபகாரங்களுக்குத்தக்க அளவாக அவருக்கு நன்றியறிந்தவனாய் நடக்க வருந்துவேன்.

## 3-ம் பிரிவு

### வேலைக்காரர் முறுமுறுத்தது

தியானம்.—சாயங்காலம் ஐந்துமணிநேரத்தில் வந்தவர்களும் ஆளுக்கு ஒருபணம் வாங்கினதினாலே முந்தமுந்த வந்தவர்கள் தங்களுக்கு அதிகமாய்க் கொடுப்பார்களென்று

நினைத்திருந்தார்கள். அவர்களுக்கும் ஒரு பணந்தான் கிடைத்தது. இதைக்கண்டு அவர்கள் குடும்பத்து எஜமான்பேரில் முறுமுறுத்துச் சொன்னதாவது: கடைசியிலே வந்தவர்கள் ஒருமணிநேரமாத்திரம் வேலை செய்திருக்க, நாள் முழுதும் வெயிலிலே உருகி உழைத்த எங்களுக்குக் கொடுத்ததைப்போல அவர்களுக்குஞ் சரியாய்க் கூலி கொடுத்ததென்னவென்றார்கள். அப்போது எஜமான் அவர்களில் ஒருவனைப் பார்த்து: சிநேகிதா, நான் உனக்கு ஒரு பொல்லாப்புஞ் செய்யவில்லையே; மேலும் நாள் ஒன்றுக்கு ஒரு பணங் கூலியென்று நீ ஒத்துக்கொள்ளவில்லையோ? நான் ஒருவனுக்கு நன்மைசெய்ய எனக்குச் சுதந்தரமில்லையோ? நான் நல்லவனாயிருக்கிறதினால் உன் கண்ணுக்குப் பொல்லாப்பாயிருக்கிறதோவென்றான்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இதின் வியாக்கியானமேதென்றால் திருச்சபையிலே சேரப்பட்ட அஞ்ஞானிகளும் மனந்திரும்பின யூதர்களும் ஒரே பிரகாரமாய் நடத்தப்படுவதின்பேரில் யூதர்கள் முறுமுறுப்பார்களென்று இந்த உவமையின் வழியாய் இயேசுநாதர்சுவாமி முன்னதாக அறிவிக்கிறதுமல்லாமல், அப்போஸ்தலர்களும் அந்த யூதர்களுக்குச் சொல்லவேண்டிய மறுமொழியேதென்று குறிப்பாய்க் காட்டுகிறார். அப்படியே அப்போஸ்தலர்களும் மனந்திரும்பின யூதர்களுக்கு மறுமொழி சொன்னார்களென்று நடபடி ஆகமத்தில் காண்கிறோம். ஆகையால் நாம் சந்நியாசத்தில் வெகுகாலமாயிருக்கிறதைப் பற்றிப் பெருமை பாராட்டக்கூடாது; காய்மகாரத்துக்கடுத்த சகல எண்ணங்களையும் அரோசித்துத் தள்ளுவோமாக.

சம்பாஷணை.—தமது விசாரணைக்கு ஒப்புவிக்கப்பட்ட முந்திரிகைத் தோட்டமாகிய கிறீஸ்துவர்களை மகா கவலையோடு பராமரித்துவந்த அர்ச். கார்லூஸ் பொரோமையென்பவரோடு சம்பாஷணை செய். இன்றையத்தினம் அவருடைய திருநாள்.

---



# 5-ம் தேதி

## முந்திரிகைத் தோட்டத்துக்கு அனுப்பப்பட்டவர்களின் உவமைக்கு ஞான அர்த்தம்

ஆயத்தச் சிந்தனை.—ஓர் உத்தம எசமான் தன் வேலைக்காரருக்குச் சம்பளங்கொடுக்கிறதைப் பார்க்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

தியானச் சேபம்.—உன் வசத்தில் ஒப்புவிக்கப்பட்ட முந்திரிகைத் தோட்டத்தில் நீ நல்ல வேலையாளாயிருக்க வரப்பிரசாதங் கேள்.

### முதல் பிரிவு

#### வேலைக்காரரை அனுப்பினதின்பேரில்

தியானம்.—குடும்பக் கர்த்தனாகிய சர்வேசுரன் அம்மாத்திரம் பிரிய நோக்கம் வைத்திருந்த முந்திரிகைத் தோட்டமானது, ஞான அர்த்தத்திலே அவருடைய சாயலாய்ப் படைக்கப்பட்டு அவர் திருக்குமாரனுடைய இரத்தத்தினால் செழிப்பாகவேண்டிய நமது ஆத்துமந்தான். இந்த ஆத்துமத்தின் விசாரணையை நமக்குக் கொடுத்திருக்கிறார். இந்த ஆத்துமத்தில் பரிசுத்ததனமென்கிற ஞானக் கனிகள் உண்டாகும்படி ஜாக்கிரதையாய்ப் பயிரிட நம்மை அழைத்து, சீவியகாலத்தின் உதயமுதல் அஸ்தமானமட்டும், அதாவது நமது இளம்பிராயமுதல் முதிர்ந்த பிராயம் வரையில் நமக்குப் புத்திசொல்லித் தூண்டுகிறார். நாம் இந்த அலுவலை வைராக்கிய மனதோடு செய்யும்படி ஒருபோதும் முடியாத அணைகடந்த பாக்கியத்தை நமக்குச் சம்பாவனையாகக் கொடுக்க வாக்குத்தத்தஞ் செய்திருக்கிறார். ஆகையால் இந்த அலுவலுக்கு நம்மை முழுதுங் கையளிக்க எவ்வளவோ முகாந்தரமிருக்கிறது!

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—உன் இளம்பிராயமாகிற நல்ல காலத்திலே நீ உலகத்தில் சீவித்தபோது உன் ஆத்தும இரட்சணியவேலையில் நீ காண்பித்த

பத்தி சுறுக்கென்ன? நீ துறவற நிலையைத் தெரிந்துகொண்டபின், நவசந்நியாசியாயிருக்கும்போது எப்படி நடந்தாய்? சாஸ்திரம் படிக்கும்போது எப்படி? மடத்து வேலைகளில் பழகும்போது என்ன செய்தாய்? பள்ளிக்கூடங்கள் பெரிய கலாசாலைகள் முதலியவைகளிலாவது பரோபகாரமாக ஏற்பட்டிருக்கும் தரும மடம், வைத்தியசாலை முதலியவைகளிலாவது நீ அலுவலாயிருந்திருந்தால் அவைகளில் செய்ததென்ன? இந்த நானாவித அலுவல்களில் எதிலாவது நீ இன்னம் உட்பட்டிருந்தால் ஒட்டிக்கு இரட்டியான விழிப்பு ஆத்திரத்தோடு திரளான ஞான ஆதாயம் வரும்படி பிரயாசப்படு. அல்லவென்று அந்தக்காலங்கள் கடந்துபோய் ஒரு சந்தோஷம் அல்லது துக்க நினைவுமாத்திரம் மனதிலிருந்தாலுஞ் சரி, நீ விருத்தாப்பியனானாலுஞ் சரி, சுறுசுறுப்போடு உழைக்கக்கூடிய நடுப்பிராயமாயிருந்தாலுஞ் சரி, உன் ஆத்துமத்தை மறந்து உன் மனதை எதேச்சையாய்த் திரியவிடாதபடி எச்சரிக்கையாயிரு. உன்னுடைய பத்தி வேகத்தை அதிகமதிகமாய் ஸ்திரப்படுத்தி, நீ படும் பிரயாசையும் உனக்குவரும் களைப்புத் தவிப்பும் உன் ஆத்தும விருத்திக்கு உதவும்படி நடந்துகொள்.

**மனப்பற்றுதல்.**—முன் நடந்த அசட்டைத்தனத்துக்காக அழுது பொறுத்தலைக் கேள்.

**பிரதிக்கினை.**—விருத்தாப்பிய காலத்தில் என்னிடத்திலிருக்கவேணுமென்று நான் ஆசைப்படுகிற நல்ல பழக்கங்களிலே இப்போதே உறுதிப்பட முயற்சிசெய்வேன்.

## 2-ம் பிரிவு

### வேலைக்காரருக்குக் கொடுத்த கூலி

**தியானம்.**—பொழுது சாய்ந்த பிறகு மாத்திரம் வேலைக்காரருக்குக் கூலிகொடுக்க உத்தரவாகிறதை மனதில் குறிப்பாய் வைத்துக்கொள். சர்வேசுரன் அவனவன் செய்த வேலைக்குச் சம்பாவனை கொடுப்பது உயிரோடிருக்கும்போதல்ல. ஆனால் இந்தச் சீவியமுடிந்து மரணத்தின் வழியாய் நாம் நித்தியத்தில் பிரவேசிக்கும்போதுதாமென்



றறியவும். அதற்கு வெகுநாள் காத்திருக்கவேணுமேயென்று கலங்காதே. ஒருநாட்பொழுது எவ்வளவு விரைவாய்ப் பறந்துபோகிறது! நமது சீவியகாலத்தையெல்லாம் இயேசுநாதர் ஒருநாளுக்குச் சமானமென்று சொல்லியிருக்கிறார். ஏனென்றால் நித்திய காலத்துக்குமுன்னே ஆயிரம் வருஷம் ஒருநாள்போலிருக்குமென்று அர்ச். இராயப்பர் வசனித்திருக்கிறார் (2 இரா. 3). பின்னும் எசமான் கணக்கனை நோக்கி வேலைக்காரரையெல்லாம் அழைத்து அவர்களெல்லாருக்கும் பேசினபடி, ஒரே கூலி கொடுக்கக் கட்டளையிடுகிறதையுங் கவனித்துக்கொள். இதற்கு அர்த்தமாவது: தெரிந்துகொள்ளப்பட்டவர்களெல்லாரும் ஒரே மோக்ஷபாக்கியத்தை அடைந்து அவரவர் இருதயங்கொள்ளுமட்டுஞ் சம்பூரண பூரிப்படைவார்கள். ஆனால் அவனவன் ஏற்றக் குறைச்சலாய்ப் பட்ட பிரயாசவேகத்துக்குத் தக்கது, மோக்ஷ ஆநந்தத்தையும் அவனவன் கூடக் குறைய அநுபவிப்பான். கடைசியில் வேலைக்கு வந்தவர்கள் ஒருமணி நேரமாத்திரம் உழைத்தாலும் நாள் முழுதும் உழைத்தவர்களைப்போல சரிசம்பளம் வாங்கினார்கள். ஆகையால் சர்வேசுரன் உலகத்திலேயாகிலுஞ் சந்நியாசத்திலெங்கிலுந் தமக்கு ஊழியஞ்செய்கிறவர்கள் இத்தனை வருஷஞ் செய்தார்களென்று கணக்குப்பாராமல், எவ்வளவு பத்தி சுறுசுறுப்போடு ஊழியஞ் செய்தார்களென்று பார்த்து அதற்குத் தக்கது சம்பாவனை கொடுப்பாரல்லாமல், நாள் கணக்கை அவர் பார்க்கிறதில்லையென்று நமக்கு அறிவித்தாற்போலாயிற்று. ஆகையால் குறைபட்ட நாளை பத்தி வைராக்கியத்தால் நிரப்பிப்போடலாமென்கிற சத்தியம் இங்கே துலக்கமாகிறது.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—இந்த யோசனை நமக்கு எவ்வளவோ படிப்பினையும் ஆறுதலும் தருகின்றது! என்னிடத்தில் பத்தி சுறுசுறுப்பை வளர்க்க, ஆண்டவருக்கு என்னை முழுதும் வெகு தாமதமாயன்றோ ஒப்புக்கொடுத்தேனென்கிற நினைவினாலே தைரியமற்றுப்போகாதிருக்கவும், இந்த யோசனையை அடிக்கடி ஞாபகத்தில் வரப்பண்ணிக்கொள்வேன்.

மனப்பற்றுதல்.— இப்போது தியானித்ததில் அடங்கியிருக்கிற ஒவ்வொரு சத்தியத்தையும் உறுதியாக விசுவசிக்கிறேன்.

பிரதிக்கினை.—இதுவரையில் நான் பத்திக்குறைச்சலாயிருந்ததுக்குத் தக்கது இன்றுமுதல் இனிமேல் அதிக பத்தி சுறுசுறுப்பாய் நடக்க மனதாயிருக்கிறேன்.

## 3-ம் பிரிவு

### வேலைக்காரர் முறுமுறுத்தது

தியானம்.—இப்படி முணங்கினவர்களாரென்றால்: முந்தமுந்த முந்திரிகைத் தோட்டத்தில் வேலைக்கு அழைக்கப்பட்டு, பிந்தினவர்கள் வருமுன்னே வெகு நேரம் வேலை செய்தவர்களாம். இவர்கள் முறுமுறுத்த காரணமென்ன? என்னவெனில்: பிந்தினவர்களுக்கு அவர்களைப்போல சரியொத்த சம்பளங் கொடுத்ததும், அதையும் அவர்களுக்கு முந்திக்கொடுத்ததினால் எசமான் இவர்களைவிட அவர்களைக் கனமாயெண்ணினதாகத் தோன்றினதுமாம்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இதினாலே சந்நியாச மடங்களில் வயது சென்றவர்களுக்கும் வெகுநாளாயிருப்பவர்களுக்கும் ஒரு நல்ல படிப்பினை கற்பிக்கப்பட்டிருப்பதாகவும், அவர்கள் இயல்பாய் விழக்கூடிய சில குற்றங்குறைகள் எவையென்று காண்பித்திருக்கிறதாகவும் சில வேத சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். அவையாவன: வீண்பெருமை, முறுமுறுப்பு, சமுசய முதலியவைகள், மற்றவர்களைப்போலத் தாங்கள் ஒழுங்கு அநுசரியாதிருக்க விசேஷ சுதந்தரமுண்டென்கிறதும், தங்களைக் கனிசமாய் நடத்தவேணுமென்று கர்வங்கொள்ளுகிறதும், தங்களைக் கேளாமல் செய்கிறதெல்லாவற்றையும் நிராகரிக்கிறதும், சகிப்பில்லாமல் அற்பசொற்பக் காரியத்துக்கெல்லாம் சீறி விழுகிறதும், முக்கியமாய் ஞானச்சோர்வடைகிறதுமாகிய இத்தொகைப்பட்ட குறைகளாம். தேகப்பலன் குறையக் குறைய ஞானச்சோர்வும் சன்னஞ் சன்னமாய் வருகிறதுண்டு. வெள்ளத்துக்குமுன் அணை போடு



வதுபோல இந்தக் குறைகளெல்லாம் வருமென்று முன்னதாகவே உணர்ந்து, அவைகளைத் தடுத்து நம்மைப் பத்திரமாய்க் காப்போமாக. இவைகளையெல்லாம் ஏற்கனவே விலக்குகிறதற்கான உபாயங்களைப் பிரயோகிக்கிறதுமன்றி விசேஷமாய்ச் செபத்தையும் விடாமல் கைபாடிவரக்கடவோம். மகாத்துமாவான தாவீதரசனைப்போல ஆண்டவரைப்பார்த்து: சுவாமீ, என் தள்ளாப் பிராயத்தில் என் சத்துவம் தளரும்போது என்னைக் கைவிடாதேயுமென்று நாமும் அடிக்கடி சொல்லுவோமாக (சங். 70).

சம்பாஷணை.— மனுக்குலத்துக்கெல்லாம் பட்சமுள்ள உத்தம தகப்பனாகிய தேவபிதாவோடு சம்பாஷணைசெய்வோமாக.

---

## 6-ம் தேதி

### ஆத்தும ஈடேற்றத்தின்மேல் நாம் வைக்கவேண்டிய ஞானவைராக்கியமான ஆவல்

ஆயத்தச் சிந்தனை.—நீங்களும் என் முந்திரிகைத் தோட்டத்தில் வேலைக்குப் போங்களென்று இயேசுநாதர் சுவாமி சொல்லுகிறதாக ரூபிகரித்துக்கொள்.

தியானச் செபம்.—ஆத்தும ஈடேற்ற ஆவலின் மேன்மையையும் பேறுபலனையும் நன்றாய்க் கண்டுபிடிக்க அநுக்கிரகங் கேள்.

### முதல் பிரிவு

#### பிறரீடேற்ற ஆவலைப்பார்க்கச் சர்வேசுரன் சமுகத்தில் அதிகப் பெரிதானது ஒன்றுமில்லை

தியானம்.—பிறர் ஈடேற்றத்துக்காக உழைப்பது என்னவென்றால்: புதிதுபுதிதாய் மனிதரைச் சர்வேசுரன் பாரிசமாய் மனந்திருப்பி, அவருடைய இராச்சியத்தை உல

கத்தில் ஸ்தாபித்துப் பரம்புவிக்கப் பிரயாசப்படுவதுதான். இது மகா உன்னதமான தொழில் என்பதற்கும், இதற்கு நிகரான தொழில் உலகத்தில் வேறில்லையென்பதற்குஞ் சந்தேகமில்லை. ஏனென்றால்: முந்தமுந்த இந்தத் தொழிலைச் செய்கிறவன் மனுஷர் சர்வேசுரனை அறிந்து சிநேகித்துச் சேவிக்கும்படி அவர்களுக்குக் கற்பித்து, இவ்விதமாய்ச் சர்வேசுரன் அவர்களை என்ன கதிக்காகச் சிருஷ்டித்தாரோ அந்தக் கதியை அவர்கள் அடையும்படி செய்வதினால் தேவபிதாவின் தொழிலுக்கு உடந்தையாகிறான். இரண்டாவது, மனுஷர் இரக்ஷணியத்துக்காக இயேசுநாதசுவாமி சிந்தின திரு இரத்தம் வீணாய்ப்போகாமல் ஒன்றுக்கு நூறாய்ப் பலன்தரும்படி அவன் பிரயாசப்படுகிறதினாலே, இயேசுநாதர்சுவாமியோடும் உடன்முயற்சி செய்கிறான். மூன்றாவது, இஸ்பிரீத்துசாந்துவோடுங்கூடப் பிரயாசப்படுகிறான். ஏனென்றால்: தெரிந்துகொள்ளப்பட்டவர்களை அர்ச்சித்து, அவர்களிடத்தில் பாவப் பகையையும், புண்ணிய சிநேக அனுசரணையையும் உறுதிப்படுத்துவதாகிய இஸ்பிரீத்துசாந்துவின் தொழிலுக்கு அவனும் ஓர் விதத்தில் உடந்தையாயிருக்கிறான். இது நிமித்தமாக ஆத்தும இரட்சணிய வேலையில் சர்வேசுரனோடு கூட்டாயிருக்கிறது தெய்வீகமான காரியங்களுக்கெல்லாம் அதிக தெய்வீகமான காரியமென்று அர்ச். தியோனீசியூசென்பவர் சொல்லியிருக்கிறார்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—நாமும் ஓர் சந்நியாச சபையில் உட்பட்டுச் சர்வேசுரன் சமுகத்தில் மகா மேன்மையும் பெருமையும் பொருந்திய ஆத்தும இரட்சணிய அலுவல்களுக்குப் பங்காளிகளாயிருப்பதைப் பற்றி அகமகிழக்கடவோம். இந்த அலுவல்கள் எப்பேர்க்கொத்தவைகளாயினும் எல்லாந் தேவ சமுகத்தில் மகா மேன்மையும் பெருமையும் பொருந்தியதென்பதற்குச் சந்தேகமில்லை. இப்படியிருக்க நாம் படிப்பிப்பதில் பெரிய பிள்ளைகள் சிறிய பிள்ளைகளென்றும், புத்தி பிரசங்கஞ் சொல்லுவதில் பெரிய பட்டணத்து மேற்றிராசனக் கோவில், பட்டிக்காட்டுக் குச்சுக்கோவிலென்றும், வியாதிக்



காரரை விசாரிப்பதில் ஐசுவரியவான், தரித்திரனென்றும் இவை முதலிய வித்தியாசம் பார்ப்போமானால், இது நமது ஆங்கார சலாக்கியத்தைக் காண்பிக்குமேயன்றி, பிறர் ஈடேற்றத்தின்மேல் மெய்யான பற்றுதலைக் காண்பிக்கமாட்டாது. விசுவாசத்தை முன்னிட்டு நடக்கிறவன் ஒருபோதும் இந்த வித்தியாசம் பார்க்கமாட்டான். நீ இந்த வித்தியாசம் பார்த்ததில்லையோ? இதினாலே உனக்கு ஒப்புவித்த வேலையை அநேக சமயங்களில் மனம்பொருந்தி அசட்டைசெய்து, பிறர் ஆத்துமம் நஷ்டமடைவதற்குக் காரணமாகவில்லையோ?

**மனப்பற்றுதல்.**—பிறர் ஈடேற்ற அலுவலுக்குச் சர்வேசுரன் உன்னையும் நியமித்ததினால் அவருக்கு நன்றியறிந்ததோத்திரஞ்செய்து, இதைச் சரிவர நிறைவேற்றும்படி வேண்டிய தேவ அனுக்கிரகத்தைக்கேள்.

**பிரதிக்கினை.**—ஆத்தும இரக்ஷணியத்துக்கடுத்த அலுவல்களில், எது மனுஷர் கண்ணுக்குப் பிரபலியமில்லாமலும் வீண்பெருமைக்குப் பிடிகொடாமலுமிருக்குமோ அதைத்தான் முந்தி ஆசையோடு தெரிந்துகொள்.

## 2-ம் பிரிவு

### ஞானவைராக்கியத் தொழிலைப்பார்க்கச் சர்வேசுரனுக்கு அதிகப் பிரியமானதொன்றுமில்லை

**தியானம்.**—தேவதோத்திர மகிமையை எங்கும் பிரபலியமாக்குவதற்கும் அத்தோடு ஆத்துமாக்கள் இரக்ஷணியமடைவதற்கும் வருந்திப் பிரயாசப்படுவதே ஞானவைராக்கியத் தொழிலாகையால், இதைவிடச் சர்வேசுரனுக்கு உகந்த தொழில் வேறில்லையென்பதற்குச் சந்தேகமில்லை. சர்வலோகத்திலும் என்னென்ன அலங்கார மகத்துவம் அமைந்த காரியங்களிருந்தபோதிலும் அவைகளெல்லாத்தையும்விட, ஒரே ஒரு ஆத்துமம் சர்வேசுரனுடைய சமுகத்தில் அதிக விலைபெற்றதாயிருக்கின்றது. ஆத்துமங்களை இரட்சிக்கும்படியாக நமது திவ்விய கர்த்தர் அனுபவித்த அவமானங்களையும், பட்ட பிரயாசங்களையும்,

சிந்தின கண்ணீரையும், சிலுவையில் அடைந்த கடின மரணத்தையும் யோசித்தோமானால் இந்த அலுவலைவிடச் சர்வேசுரனுக்குப் பிரியமான அலுவல் வேறே கிடையாதென்று கண்டுகொள்வதற்கு நெடும் பிரசங்கந் தேவையாயிராது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—அப்போஸ்தலர்கள் இதைக் கண்டுபிடித்தார்கள். இதினாலே அவர்கள் உள்ளத்தில் ஞானவைராக்கியம் அக்கினியாய்ப் பற்றியெரிந்தது. இந்த அக்கினியின் உக்கிரத்தால் தூண்டப்பட்டு ஆத்துமாக்களை இரக்ஷிக்கவேணுமென்று சொல்லிலடங்காத பிரயாசைகளுக்கும் பிரயாணங்களுக்கும் உள்ளானார்கள். கடலிலும் பூமியிலும் அவர்களுக்கு நேரிட்ட கணக்கற்ற ஆபத்துகளுக்கு அஞ்சாமல், கடின உபாதைகளுக்கும் நிஷ்டூர மரணத்துக்கு முதலாய்த் துணிந்துநின்றார்கள். அவர்களிடத்தில் பற்றியெரிந்த தேவ அக்கினியின் வேகத்தில் எவ்வளவாகிலும் உன்னிடத்தில் எரிகிறதோ? இதற்குள்ள அத்தாட்சியென்ன? ஞானவைராக்கியத்தைக் காண்பிப்பதற்கு ஆன சமயம் வரும்போது அதை எவ்வித ஆவலோடு கைப்பற்றுகிறாய்? உன் விசாரணையிலிருக்கும் ஞானத் தோட்டத்தை நீ எப்படிப் பயிற்சி செய்கிறாய்? அநேகர் தங்கள் உள்ளத்தில் மறைந்திருக்கும் ஆங்காரத்துக்கு அடிமைகளாகி, இனிமேல் பலத்த காரியங்களைச் செய்வோமென்கிற வீண் ஆசையால் தங்கள் கையிலிருக்கிற வேலையை அசட்டை செய்வார்கள். அவர்களுக்குள் நீயும் ஒருவனோ அல்லவோவென்று பார்.

மனப்பற்றுதல்.—தேவ தோத்திரத்துக்காகவும் ஆத்தும இரக்ஷணியத்துக்காகவும் மிகவும் பாடுபட்டு உழைக்க ஆசைப்படு.

பிரதிக்கினை.—கீழ்ப்படிதலால் உனக்கு ஒப்புவிக்கப்பட்டிருக்கிற ஆத்தும இரட்சணியத்துக்கடுத்த அலுவலில் நீ உன் கவலையெல்லாம் செலுத்தக்கடவாய்.



## 3-ம் பிரிவு

### ஞானவைராக்கியத் தொழிலைவிடச் சர்வேசுரன் சமுகத்தில் அதிக பேறுபலனுள்ளது ஒன்றுமில்லை

தியானம்.—பிறர் ஈடேற்றத்துக்காக உழைப்பதைவிடச் சர்வேசுரனுக்குப் பிரியமான காரியம் வேறில்லையென்றபோதே, இதைவிட அவர் சமுகத்தில் அதிக பேறுபலனுள்ளதும் அதிக சிறந்த சம்பாவனைக்குரியதுங் கிடையாதென்பது நியாயமாமே. வேதாகமங்களில் இஸ்பிரீத்துசாந்துவானவர் திருவுளம்பற்றினதும் இதைக் குறிக்கிறதாகத் தோன்றுகிறதன்றோ? அதாவது: நீதியாகிய நன்னெறியைப் பலருக்குப் போதிப்பவர்கள் சதாகாலத்துக்கும் வானத்தின் நட்சத்திரங்களைப்போல மின்னுவார்களென்று தானியேல் ஆகமத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது (தானி. 12). ஒரே ஒரு ஆத்துமத்தை மனந்திருப்பி இரட்சிக்கிறதே நாம் நித்திய சம்பாவனை அடைவதற்குப் போதுமான உரிமை கொடுக்குமென்று அர்ச். இயாகப்பர் நிச்சயித்துச் சொல்லுகிறார். ஒரு பாவி தன் தாறுமாறான வழியைவிட்டு வரும்படி செய்கிறவன், தன் ஆத்துமத்தைச் சாவினின்று இரட்சிக்கிறதுமன்றித் தான் செய்த திரளான பாவங்களையும் மூடிப்போடுவானென்கிறார் (இயா. 5).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—பிறர் ஈடேற்ற அலுவல்களில் ஏற்பட்டிருக்கும் துறவற சபையார்களும் அச்சபைகளுக்கு அவயவங்கள்போலிருக்கிறவர்களும், தங்கள் பிரயாசை வருத்தங்களில் தைரியமடைவதற்கு மேற்சொல்லிய யோசனைகள் மிகவுந் தகுதியானவைகள். ஆகையால் மடங்களில் மார்த்தம்மாள் தொழிலாகிய பணிவிடை வேலைகளில் தங்கள் வாழ்நாளைக் கழிக்கிறவர்களும், படிப்பிலேயே ஊர்ந்து திருத்தொழிலுக்குத் தங்களை முன்னடியே ஆயத்தஞ் செய்கிறவர்களும், அல்லது இந்தத் திருத்தொழிலைச் சிலகாலம் நடத்தினபின் வியாதியினாலேயும் பலவீனத்தினாலேயும் கடைப்படாதவர்களும் தைரியமடையக்கடவார்கள். ஏனெனில்: இவர்க

ளெல்லாரும் ஒரே ஞான உடலின் அவயவங்களாயிருப்பதினால் தங்கள் சகோதரருடைய சம்ரக்ஷணைக்கு வேண்டிய வேலைகளைச் செய்தாலுஞ் சரி, அவர்களுடைய திருத்தொழில் அநுகூலமாகும்படி தங்கள் படிப்புகளையும் வியாதி சஞ்சலங்களையும், செபங்களையுஞ் சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுத்தாலுஞ்சரி, எல்லாரும் ஒரே கதியை நோக்கி அதை அடையும்படி ஒருமிக்க உழைத்து வருகிறார்களென்கவேணும்.

சம்பாஷணை.—அர்ச். சவேரியாரோடு சம்பாஷணை செய்யக்கடவோம். இவர் இந்துதேசத்திலும் ஜப்போனியாதீவிலும் எண்ணிக்கையில்லாத ஆத்துமாக்களைத் திருப்பினதினாலே, இவரிடத்தில் பற்றியெரிந்த மகா தூய்மையான ஞானவைராக்கியத்தில் ஒரு பொறி நமதுள்ளத்தில் விழும்படி இவரை மன்றாடிக்கேட்போமாக.

---

## 7-ம் தேதி

### சுவிசேஷத்தின் உத்தமதனத்துக்கு அழைக்கப்பட்ட தனவானான ஒரு வாலிபன்பேரில்

ஆயத்தச் சிந்தனை.—இந்த வாலிபன் இயேசுநாதசுவாமிமுன் முழந்தாளிலிருப்பதாக ரூபிகரித்துக்கொள்.

தியானச் செபம்.—நீ அழைக்கப்பட்டிருக்கிற அந்தஸ்திலே உத்தமனாவதற்கு வேண்டிய தேவ அனுக்கிரகத்தைக் கேள்.

### முதல் பிரிவு

#### இயேசுநாதரிடத்தில் இந்த வாலிபன் கேட்ட கேள்வி

தியானம்.—இயேசுநாதர் யோர்தான் நதிக்கு அப்புறமுள்ள ஊர்களிலே பிரசங்கித்துக்கொண்டு வரும்போது, ஆஸ்திக்காரனான ஒரு வாலிபன் அவர் முன்னேவந்து முழந்தாளிட்டு அவரை நோக்கிக் கேட்டதாவது: நல்ல



குருவே, நித்திய சீவனை அடைவதற்கு நான் செய்யவேண்டிய நன்மை யேதென்றான் (மத். 19, மாற். 10, லூக். 18).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இயேசுநாதசுவாமி மட்டில் நமக்கு எவ்வளவு சங்கையும் பற்றுதலும் தாழ்ச்சியோடு கூடிய ஆசாரமும் இருக்கவேணுமென்றும், நமது ஆத்தும இரக்ஷணியத்தின்பேரில் நாம் எவ்வளவு கவலை கொண்டிருக்கவேணுமென்றும் இந்த வாலிபன் நமக்கு உத்தமமாதிரிகை காண்பிக்கிறான். தான் செய்யத்தக்க நன்மையென்னவென்று அறியும்படி அவன் காண்பித்த ஆசையையே நாம் முக்கியமாய்க் கண்டு பாவிக்கத்தகும். அவன் இயேசுநாதசுவாமியை நோக்கி: நான் மோக்ஷத்தை அடையும்படி என்னென்ன பாவங்களையுந் தப்பிதங்களையுந் தவிர்க்கவேண்டியதென்று கேளாமல் என்ன நன்மையைச் செய்யவேணுமென்று கேட்டான். நாமோ இதற்கு நேர் விரோதமாய் நடந்து வருகிறோமல்லவோ? எப்படியென்றால்: நாம் இந்த உலகத்தில் பாவஞ் செய்யாதிருந்தாலே போதுமென்றாற்போலவும், அதுதான் நமக்கு ஏக கதியென்றாற்போலவும் எண்ணி, நாம் கட்டிக்கொள்ளும் பாவங்களும் அவைகளில் விழாதபடி தக்க உபாயங்களும் எவையென்று முக்கியமாய்க் கவனித்து அதின்பேரிலேயே ஆத்தும சோதனையும் பிரதிக்கினையுஞ் செய்துவருகிறோம். நாம் செய்யத்தக்க நன்மையேதென்று அவ்வளவு அக்கறையாய் விசாரிக்கிறதில்லையே? இனிமேலாகிலும் அதிக நன்றாய் நடக்க வருந்தக்கடவோம். அதிகாலையில் நமது முந்தின நினைப்பு நாம் அன்று செய்யக்கூடிய நன்மையின்பேரிலும் அதைச் செய்யத்தக்க சமயத்தின் பேரிலுஞ் செல்லவேண்டியது. பின்னும் அன்று செய்யப்போகிற கிரியைகளையெல்லாம் ஒன்றுக்குப்பின் ஒன்றாய் விசாரித்து, அவைகளையெல்லாம் நன்றாய்ச் செய்கிற வகை எப்படியென்று பார்த்துத் தக்க தீர்மானங்கள் செய்து ஆண்டவர் அவைகளை ஆசீர்வதிக்கவேணுமென்று கேட்போமாக. சாயங்காலமானபோது அன்று செய்த கிரியைகளையெல்லாம் நினைப்பூட்டித் தேவ உதவியால் நாம் நன்றாய்ச் செய்தவைகளுக்காக மனோகர

பூரிப்போடு ஆண்டவருக்குத் தோத்திரஞ்செய்து, மறுநாள் அவைகளையெல்லாம் அதிக நன்றாய்ச் செய்யத் தீர்மானிப்போமாக. இப்படிச் செய்துவருவோமானால் நாம் எப்போதும் நம்பிக்கையோடும் பூரித்த இருதயத்தோடும் ஆண்டவருக்கு ஊழியஞ்செய்து வரலாம். நமது நிர்ப்பாக்கிய துர்ப்பலங்களையும், பாவங்களையுமே எப்போதுஞ் சுற்றிச் சுற்றி சோதித்து நமது மனத்தைரியங் குறைவதைவிட, மேற்சொன்ன வகையினாலே ஆயிரமடங்கு அதிக ஞான விர்த்தியும் பத்திச் சுறுக்கும் அடைவோம். ஆகையால் இதுவே நாம் பின்செல்லத்தக்க வழியாகும்.

**மனப்பற்றுதல்.**—இந்தப் பாதையிலே சரியாய் நடக்க வேண்டிய தேவ ஒத்தாசையைக் கேள்.

**பிரதிக்கினை.**—இப்படிப் பிறரும் நடக்கப் புத்தி சொல்லித் தானும் இதிலே நிலைகொண்டு உத்தமனாக வருந்துகிறது.

## 2-ம் பிரிவு

### அந்த வாலிபனுக்கு இயேசுநாதர் சொன்ன மறுமொழி

**தியானம்.**—நித்திய சீவனையடைய நான் செய்ய வேண்டிய நன்மையேதென்று அந்த வாலிபன் கேட்டதற்கு இயேசுநாதர் மாறுத்தாரமாக: கற்பனைகளை அநுசரியென்றார். அதற்கு அவன்: நான் சிறுபந்தொடங்கி அவைகளையெல்லாம் அநுசரிக்கிறேனே. எனக்கு இன்னமுங் குறைவாயிருக்கிறதேதென்று கேட்டான். அப்போது இயேசுநாதர் அவனைப் பட்சமாய்ப் பார்த்துச் சொன்னதாவது: நீ உத்தமனாயிருக்க ஆசித்தால், போய் உனக்குள்ளதெல்லாம் விற்றுப் பிச்சைக்காரருக்குக் கொடு; உனக்கு மோக்ஷத்திலே பொக்கிஷங் கிடைக்கும். மேலும் வந்து என்னைப் பின் செல் என்றார் (மத். 19, மாற். 10).

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—இயேசுநாதசுவாமி தமக்குப் பிரியம் வருவித்த அந்த வாலிபனை நோக்கிச் சொன்ன மறுமொழியின்பேரில் நீ நினைக்கிறதென்ன? அதைக் கேட்கும்போது நமக்கு மனம்



பூரிக்கிறதன்றோ? எவ்வளவோ மாட்சிமை பொருந்திய சம்பாவனை அளிப்போமென்கிறார்! வெகு தின்மைகள் கலந்து அழிவுக்குரியதாயிருக்கிற இலௌகீக பாக்கியத்துக்குப் பதிலாய் யாதொரு தின்மை கலப்பில்லாத மோக்ஷ பாக்கியத்தையும், ஒருதுண்டு நிலத்துக்குப் பதிலாய் ஒரு இராச்சியத்தையும், அதிலும் மோக்ஷ இராச்சியத்தையும் அவனுக்குக் கொடுப்போமென்கிறார். அன்றியும் அவன் எவ்வளவு மனத்தாராளத்தோடு அவைகளையெல்லாம் பலியிட்டுத் தன்னிடத்தினின்று அகற்றுவானோ, அவ்வளவுக்கு அதிகமாய் அவனுடைய மகிமை சந்தோஷ பாக்கியம் பெருகுமென்று வாக்குத்தத்தஞ் செய்கிறார். அந்த வாலிபனும் இதை நன்றாய்க் கண்டுணர்ந்து, ஆண்டவர் கொடுத்த அந்த யோசனையை நன்றாய் அநுசரித்திருப்பானேயானால் அது அவனுக்கு எவ்வளவோ பாக்கியமாயிருந்திருக்கும்!

**மனப்பற்றுதல்.**—இந்த மேலான யோசனையை நாம் கண்டுபிடித்து அநுசரித்ததற்காக மனங்களித்து ஆண்டவரைப் புகழ்ந்து வாழ்த்தி அனவரதகாலமும் அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்யக்கடவோம்.

**பிரதிக்கினை.**—நான் உட்பட்டிருக்கிற சந்நியாச சபையிலே தாரித்திரம், விரத்தத்துவம், கீழ்ப்படிதலென்கிற மூன்று வார்த்தைப்பாடுகளைக்கொடுத்து, இயேசுநாதரோடு நான் செய்துகொண்ட உடன்படிக்கையில் முற்றும் பிரமாணிக்கமாயிருக்கப் பிரயாசப்படுவேன்.

## 3-ம் பிரிவு

### அந்த வாலிபனுக்கு வந்த சலிப்பு

**தியானம்.**—அந்த வாலிபனுக்கு இயேசுநாதர் கொடுக்கச் சித்தமான விலைமதிக்கப்படாத நன்மைகளால் அவன் வெகு சந்தோஷப்பட்டு அக்களிக்கவேண்டியிருந்தது. ஆனால் காரியம் இதற்கு முழுதும் விபரீதமாய் நடந்தது. அதெப்படியென்றால்: இயேசுநாதசுவாமியுடைய மறுமொழியைக்கேட்டு அவன் வெகு விதனமடைந்து சலிப்பாய்ப் போய்விட்டான். ஏனென்றால் அவன் வெகு

திரவிய சம்பன்னனாயிருந்ததினாலே தன் ஆஸ்தியை வைத்துக்கொண்டு திவ்விய இரட்சகருடைய நிபந்தனைப்படி நடக்கக் கூடாதென்று கண்டுகொண்டான் (லூக். 18, மத். 19).

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—இந்த வாலிபன் இரக்ஷணியமடைந்தானோ அல்லது நித்தியகேடு அடைந்தானோ? அவனுடைய கடைசி முடிவு என்னவென்று அறிய யாருக்கும் ஆசை உண்டாகும். அவன் இரட்சணியமடையவில்லையென்று அர்ச். அகுஸ்தீனார் நினைக்கிறார். ஏனென்றால்: அவன் உத்தமதனத்துக்கடுத்த மேலான யோசனையை அநுசரியாததினாலே கெட்டானென்காமல், அவனுடைய மன உற்சாகக் குறையினாலே ஆஸ்திக்காரரைச் சூழ்ந்திருக்கிற மாய்கையில் விழுந்து கெட்டானென்று நினைக்கவேணும். ஆண்டவர் அவனை அழைத்தபடியே அவரைப் பின்சென்று நடந்திருப்பானாகில் இந்த நித்திய நிர்ப்பாக்கியத்துக்குத் தப்பித்திருப்பானென்றார். மேலும் அவன் இயேசுநாதரைவிட்டுப் போன மாத்திரத்தில், "ஆஸ்திக்காரன் சர்வேசுரனுடைய இராச்சியத்திலே பிரவேசிப்பது அரிதென்று" ஆண்டவர் சொன்ன வசனம் மகாத்துமாவான இந்த வேதபாரகர் கொண்ட எண்ணத்திற்கு மிகவுஞ் சார்பாயிருக்கின்றது. பரிசுத்தமும் பாக்கியமுமான துறவற நிலையில் நாம் பிரவேசிக்காதபடி, வந்த விக்கினங்களையெல்லாம் ஆண்டவர் உதவியினாலே நாம் மேற்கொண்டபடியால் அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்யக்கடவோம். இது அவருடைய வரப்பிரசாதத்தின் செயலானதினாலே நாம் அவருக்குக் கடனாளிகளாயிருக்கிறோம். இதினாலே அவருக்குச் செலுத்த வேண்டிய நன்றியை எப்படிச் செலுத்திவருகிறோம்?

**சம்பாஷணை.**—நமது திவ்விய இரட்சகரோடு சம்பாஷணை செய்வோமாக.

---



# 8-ம் தேதி

## இலாசருடைய வியாதியும் மரணமும்

**ஆயத்தச் சிந்தனை.**—இலாசருடைய சகோதரிகள் திவ்விய கர்த்தரிடத்திற்கு அனுப்பின ஆள் வந்து சேர்ந்த சமையத்திலே அவர் இருந்த விதத்தைக் காண்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

**தியானச் செபம்**—சகலத்திலுந் தேவ சித்தத்துக்குப் பூரண அமைவும், மிகுந்த நம்பிக்கையுங் கொண்டிருக்கும்படி வரங்கேள்.

### முதல் பிரிவு

### இலாசருடைய சகோதரிகள் இயேசுநாதரிடத்திற்கு ஆள் அனுப்பினது

**தியானம்.**—இயேசுநாதர் தமது தெய்வீக சுபாவத்தைக் காண்பிப்பதற்காகச் செய்யத் திருவுளமான அற்புதங்களுக்குள்ளே, இலாசரை உயிர்ப்பித்தது மனுஷர் புத்தியில் பட்டுப் பதியத்தக்கதும் எவரும் மறுக்கக்கூடாததுமான விஷயங்களில் ஒன்று என்பதற்குச் சந்தேகமில்லை. இந்தப் புதுமையைச் சேர்ந்த காரியங்களெல்லாம் சாதாரணமாயிராமல் வெகு விசேஷமாயிருக்கின்றன. ஏனென்றால் எருசலேம் பட்டணத்துக்குச் சமீபமான ஊரில் ஆஸ்தியிலும் குலத்திலும் பேர்போன ஒரு மனிதனிடமாய் இந்தப் புதுமை செய்யப்பட்டது. நாலு நாளைக்குமுன் இவனைத் தன் மூதாக்கள் கல்லறையில் அடக்கஞ் செய்த திரளான பட்டணத்துச் சனங்கள் முன்பாக, இந்தப் புதுமை நடந்தபடியால் அவர்களெல்லாரும் இதற்குச் சாட்சிகளாயிருந்தார்கள். இந்தப் புதுமைக்கு முந்தி நடந்த சில விசேஷங்களையும், பிரதானமாய் மார்த்தாள் மரியாளென்கிறவர்கள் இயேசுநாதசுவாமிக்கு ஆள் அனுப்பினதையும் யோசித்துப் பார்ப்போமாக. தங்கள் சகோதரன் கடின வியாதியாயிருக்கிறதைக்கண்டு: ஆண்டவரே, உம்மால் சிநேகிக்கப்

பட்டவன் வியாதியாயிருக்கிறானென்று சொல்லக் கர்த்தரிடத்திற்கு ஆள் அனுப்பினார்கள் (அரு. 11).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நமக்கு நல்ல படிப்பினையாக நாம் அறியவேண்டியதேதென்றால்: யாதொரு கஸ்தி விதனம் வரும்போது மனுஷர் செய்யக்கூடுமான உதவியெல்லாஞ் செய்து முடியுந்தனையுங் காத்திராமல், உடனே விரைவாய்த் தேவகிருபை ஒத்தாசையைத் தேடவேண்டியது. 2-வது, நமது மன்றாட்டைச் சர்வேசுரன் கேட்கத்தக்கதாக அதற்கடுத்த அநேக நியாயங்களைச் சொல்லிக்காண்பிப்பது அவசரமில்லை. ஆண்டவரே, உம்மால் சிநேகிக்கப்பட்டவன் வியாதியாயிருக்கிறானென்று இலாசருடைய சகோதரிகள் செய்த மன்றாட்டு, உத்தமமான செபத்துக்கு ஒரு சட்டமாயிருக்கிறதென்று அர்ச். அகுஸ்தீன் சொல்லியிருக்கிறார்.

மனப்பற்றுதல்.—இந்தப் பிரகாரமாய் நீயும் இயேசுநாதசுவாமியைப் பார்த்து: ஆண்டவரே, தேவரீர் சிநேகித்துப் பட்சத்தினாலே ஓயாத உபகார சகாயங்களைச் செய்துகொண்டுவந்த ஆத்துமம் வியாதியாயிருக்கிறது. சரீரத்தைவிட ஆத்துமத்தில்தான் அதற்கு அதிக நோய்பிடித்திருக்கிறது. இதோ, உமது பாதத்திலே விழுந்து கிடக்கிறேன். இதைப் பார்க்க அதிகமாய் நானென்ன சொல்லப்போகிறேன்! உமது திவ்விய இருதயத்தின் தயாளத்துக்கு முழுதும் என்னைக் கையளிக்கிறேனென்று சொல்லுவாயாக.

பிரதிக்கினை.—தேவநற்கருணை சந்திக்கும்போது அடிக்கடி இந்தச் செபத்தைச் செய்வேன்.

## 2-ம் பிரிவு

### இயேசுநாதசுவாமி சொன்ன பதில்

தியானம்.—இயேசுநாதசுவாமி வந்த ஆட்களை நோக்கி: இந்த வியாதி சாவுக்கு ஏதுவான வியாதியல்ல. ஆனால் தேவசுதன் ஸ்துதிக்கப்படும்படி தேவ மகிமையைப் பற்றி வந்த வியாதியென்று மறுமொழியாகச் சொன்னார்.



அதன்பின் அவர் அப்போஸ்தலர்களைப் பார்த்து நமது சிநேகிதனாகிய இலாசர் தூங்குகிறானென்றார். மறைபொருளுள்ள இந்த வார்த்தைகளையும் இதற்குமுந்தி இயேசுநாதசுவாமி சொன்ன மாறுத்தாரத்தையும் கேட்டவர்களெல்லாரும், வியாதிக்காரனைக் குறித்துப் பயப்படத்தக்கதொன்றுமில்லையென்று நினைக்கும்படியாயிற்று. ஆனால் வெகு நம்பிக்கையோடு ஆளனுப்பித் தங்கள் அன்பான சகோதரனுடைய உயிரைக் காப்பாற்றவேணுமென்று மன்றாடின இரு சகோதரிகளும், அவன் வெகு சீக்கிரத்தில் பலந்தளர்ந்து சாகப்போகிறதைக் காணும்போது என்ன நினைத்திருக்கவேண்டியது? அவர்களுடைய விசுவாசமும் தேவசித்தத்துக்கு அமைவும் கலங்கிப்போக, சர்வேசுரன் பேரில் முறைப்பாடு சொல்லும்படி சோதனை வந்திருக்குமாக்கும். ஆனால் அவர்கள் முறையிட வாய்திறவாமல் திவ்விய கர்த்தர் தங்களுக்கு உதவிசெய்ய வரும்படி, தாங்கள் வேண்டியமட்டும் வருந்தி மன்றாடாதது தங்கள்மேல் குற்றமென்றாற்போல ஒருவர் ஒருவரை நோக்கி: ஐயோ, அவர் இங்கேயிருந்தால் நமது சகோதரன் மரித்திருக்கமாட்டானே யென்றார்கள். மெய்யாகவே அவர்கள் இருதயத்தில் விசுவாசமும் நம்பிக்கையும் ஆழமாய் வேரூன்றியிருந்தன. இதினால் அவர்களுடைய நடக்கை எவ்வளவு ஞானமும் விவேகமுள்ளதாயிருந்ததென்று பின் நடந்த வர்த்தமானத்தால் விளங்குகிறது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—உன்னிடத்தில் விசுவாசமும், தேவசித்தத்துக்கு அமைவும் எவ்வளவு திடமாயிருக்கின்றன? விசேஷமாய் ஒரு காரியம் நன்மையும் பிரயோசனமுமாயிருக்குமென்று எண்ணி அதை வெகு ஆவலோடு கைக்கொள்ளும்படி நெடுநாள் வேண்டிக்கொண்டும், அந்தக் காரியம் நீ நினைத்ததற்கு விரோதமாய் நடந்தால் அந்தச் சமயத்தில் உன்னிடத்தில் உண்டாகும் நினைப்பென்ன? விசுவாசத்தில் தத்தளியாமல் தேவ சித்தம்போல் ஆகட்டுமென்று சொல்வதற்குப் பதிலாய், சர்வேசுரனுக்கு நிந்தையான நினைவுகள் உன் மனதில் எழும்ப விடவில்லையோ? செபத்தினாலே என்ன பல-

னென்று மற்றவர்கள் வாயால் சொல்வதை நீ மனதால் நினைத்துப் பொறுமையில்லாமல், முறையிட்டு நம்பிக்கை யிழந்துபோகவில்லையோ?

மனப்பற்றுதல்.—மகா நீதியுள்ளதும், அன்புக்குரியதும், மனோவாக்குக்கெட்டாததுமான தேவ சித்தம் சகலத்திலும் நிறைவேறி, புகழவும் சதாகாலமும் வாழ்த்தவும் படக்கடவது. (ஏழாம் பத்திநாதரென்னும் பாப்பானவர் இதற்குப் பலன் அளித்திருக்கிறார்.)

பிரதிக்கினை.—நீ செபத்தினால் நீக்கலாமென்றெண்ணியிருந்த துன்பம் நீங்காமல் நேரிடும்போது, மேற்சொன்ன சிறந்த மனவல்லயச் செபத்தை முழுமனதோடு சொல்லுவாயாக.

## 3-ம் பிரிவு

### இயேசுநாதர்சுவாமி அவ்விடத்துக்குத் தாமதித்துப் புறப்பட்டது

தியானம்.—இயேசுநாதர்சுவாமி: மார்த்தம்மாள், மரியம்மாள், இலாசர் மூவரையுஞ் சிநேகித்து வந்தாரென்று அர்ச். அருளப்பர் சொல்லியிருக்கிறார். அந்தப் பரிசுத்த குடும்பத்தின்பேரில் ஆண்டவர் தமக்குள்ள சுகிர்த பட்சத்தை, அதுவரைக்கும் ஒருபோதும் கேட்டிராத விசேஷ சகாயத்தைக்கொண்டு காண்பிக்கச் சித்தமாயிருந்தாலும், அதற்குமுன் அவர்களைத் துன்ப துரிதமென்னும் உலையில் போட்டுக் காய்ச்சத் திருவுளமானார். ஆகையால் இலாசர் மரிக்கவும், அவன் சகோதரிகள் பிரலாபிக்கவும் விட்டு, அதைத் தாம் கவனியாததுபோலிருந்தார். இதினிமித்தமாகவே, தம்மைத்தேடி ஆள் வந்தவுடனே அவ்விடத்திற்குப் போகாமல், தாமிருந்த ஊரில் இன்னும் இரண்டு நாள் தங்கியிருந்தாரென்று அர்ச். அருளப்பர் சொல்லியிருக்கிறார். மேலும் யோர்தான் நதிக்கரையினின்று பெத்தானிய ஊருக்குவர இன்னும் இரண்டுநாள் சென்றது. கடைசியாய் அவன் இறந்த நாலாம்நாள் மாத்திரம் அவ்வூருக்கு வந்துசேர்ந்தார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—சர்வேசுரன் தமது ஊழியர்மட்டிலும் தமக்கு மகா பிரியமான



ஆத்துமாக்கள்மட்டிலும் பலமுறை நடக்குமுறை இதுவே. அவர்கள் தம்மை நோக்கிக் கூப்பிடும் அபய சத்தத்துக்குக் காது கொடாததுபோலிருப்பார். அவர்கள் கேட்கும் மன்றாட்டைத் தள்ளிவிடுகிறதாகத் தோன்றும். அவர்களுடைய பேறுபலன் அதிகரிக்கவும், மகா உச்சிதமான புண்ணியங்களெல்லாம் அவர்களிடத்தில் ஓங்கி வளரவும், அவர்கள்மேல் தாம் வைத்திருக்கும் அன்பின் பலன் ஒருநாள் மகா பிரபலியமாய் விளங்கவும் இவ்விதம் செய்கிறாரொழிய மற்றப்படியல்ல. ஆகையால் உன்னிடத்திலுள்ள விசுவாசத்தையும் தேவசித்தத்துக்கு அமைவையும் ஆண்டவர் சோதிக்கச் சித்தமானால், அதெல்லாம் உன் அதிமிக நன்மைக்காகவேயென்று முடிவு கட்டிக்கொள்.

சம்பாஷணை.—இன்று சகல அர்ச்சியசிஷ்டவர்களுடைய திருநாளின் எட்டாம் நாளானபடியால் அவர்களில் ஒருவர் அல்லது பலரோடு சம்பாஷணை செய்துகொள்.

---

# 9-ம் தேதி

## இயேசுநாதசுவாமி பெத்தானியாவூருக்குப் போகும் போது நடந்த முதல் வர்த்தமானம்

### தம்முடைய திருப்பாடுகளை மூன்றந்தாம் அறிவிக்கிறார்

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதசுவாமி தாம் படப்போகிற பாடுகளைப்பற்றி அப்போஸ்தலரோடு பேசிக்கொண்டு, அவர்கள் நடுவே நடந்துபோகிறதைக் காண்கிறதாக ரூபிகரித்துக்கொள்ளக்கடவோம்.

தியானச் செபம்.—ஆண்டவருடைய பாடுகளின் ஞாபகம் எப்போதும் நமது கண்முன் நிற்கவும், அதினால் நாம் வெகு ஞானப்பலனை அடையவும் வரப்பிரசாதங் கேட்போமாக.

## முதல் பிரிவு

### திவ்விய கர்த்தர் தாம் படப்போகிற பாடுகளை அப்போஸ்தலருக்கு மூன்றாம்விசை அறிவிக்கிறார்

**தியானம்.**—யோர்தான் நதிக்கரையிலிருந்து பெத்தானியாவூரில் இலாசரைப் புதைத்திருந்த கல்லறைக்குப் போகும் பாதையில் நாலு வர்த்தமானங்கள் சம்பவித்தன. முதலாவது: தமக்கு அடுத்திருக்கும் மரணத்தை மூன்றாம் முறை வெளிப்படுத்தத் துவக்கி முந்தியைவிட அதைப் பற்றி அதிக விபரங்களைச் சொல்லுகிறார். ஏனென்றால் அவர் மரணமாவதற்கு இன்னஞ் சில வாரமாத்திரமிருந்தது. ஆனகையால் அவர் சொன்னதாவது: இதோ, நாம் எருசலேம் பட்டணத்தையடுத்துப் போகிறோம். மனுமகன் பிரதான குருக்கள், வேதபாரகர், மூப்பர் முதலானவர்களுக்குக் கையளிக்கப்படுவார். அவர்களும் அவரைச் சாவுக்குத் தீர்வையிட்டுக் கடைசியாய் அவரை அஞ்ஞானிகள் வசம் ஒப்புக்கொடுப்பார்கள். அவர்களோ அவரை நிந்தித்து, முகத்தில் துப்பி, கட்டியடித்து அவரைக் கொலை செய்வார்கள். மேலும் அவர் மூன்றாம்நாள் உயிர்த்தெழுந்திருப்பாரென்றார் (மாற். 10).

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—இயேசுநாதசுவாமி தாம் அநுபவிக்கப்போகிற நிர்ப்பந்தமான பாடுகளின் நினைவு தமது இருதயத்துக்கு மகா இன்பமுள்ளதாயிருந்ததினாலல்லவோ இதைக் குறித்து அடிக்கடி பேசிக்கொண்டுவந்தார். ஏனென்றால் இருதயப் பூரிப்பினாலே வாய் பேசுமென்று அவரே திருவுளம்பற்றியிருக்கிறார் (மத். 12). இயேசுநாதருடைய திரு இருதயத்துக்கு நாம் பிரியப்படவும் அவரிடத்தில் மகா அருமையான வரங்களை அடையவும் வேணுமானால், அவர் நமக்காகப் பட்ட பாடுகளை எந்நேரமும் நமது கண்முன்பாக வைத்திருக்கப் பிரயாசப்படவேண்டியது. நமது சகோதரர்களோடு இதைக்குறித்து அடிக்கடி பேசவும், தேவநற்கருணை சந்திக்கும்போது அதில் எழுந்தருளியிருக்கும் ஆண்டவரோடு இதைக்குறித்து அந்நியோந்நியமாய்ச் சம்பாஷிக்கவும் கடவோம். இப்படிச் செய்து ஆண்டவருடைய திரு இருதயத்தை எனக்குச் சனுவாக்கிக்கொண்டேனோ?



**மனப்பற்றுதல்.**—விசுவாசம், ஆச்சரியம், சிநேகம், நன்றியறிதல் முதலிய முயற்சிகளைச் செய்து என்னிமித்தம் இத்தனை பாடுபட்ட இயேசுநாதருக்காக நானும் மெத்தப் பாடுபட வேணுமென்று ஆசைப்படுவேன்.

**பிரதிக்கினை.**—நான் பாவசங்கீர்த்தனம் பண்ணும்போதுந் தேவநற்கருணை வாங்கும்போதும் பிள்ளைக்குரிய சிநேகத்தால் உண்டாகும் உத்தமமனஸ்தாபமும், பத்தி பற்றுதலும் என்னிடத்தில் எழும்பும்படி என் அன்பராகிய இயேசுநாதர் பட்ட பாடுகளை அடிக்கடி நினைத்துக்கொள்ளுவேன்.

## 2-ம் பிரிவு

### இயேசுநாதர் சொன்னதை அப்போஸ்தலர்கள் கண்டுபிடிக்கவில்லை

**தியானம்.**—இயேசுநாதர்சுவாமி தமக்கு அடுத்திருந்த பாடுகளையும் மரணத்தையும்பற்றிப் பேசினதைவிட இன்னும் அதிகத் தெளிவாகவும் திட்டமாகவும் பேசியிருக்கக் கூடாதாயினும், அப்போஸ்தலர்கள் அவைகளில் சுத்தமாய் ஒன்றுங் கண்டுபிடிக்கவில்லையென்று சுவிசேஷகர் வசனிக்கிறார். தங்கள் குருவின் மகிமைக்கு இதெல்லாம் ஒவ்வாத காரியமென்றாற்போல் எண்ணி அவருடைய வாக்கை மறுக்கவுந் தலைப்பட்டார்களென்று அர்ச். மத்தேயு சொல்லியிருக்கிறார். எப்படியெனில் இராயப்பர் இயேசுநாதர் சுவாமியைப் பார்த்து: ஆண்டவரே, இப்படிச் சம்பவியாதிருப்பதாக; இது உமக்கு வராதிருப்பதாக என்றார்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—வேதத்துக்கு விரோதிகளாயிருக்கிறவர்களைக் குறித்து நாம் தீர்மானித்துப் பேசுவதில், மட்டுத்திட்டமும் விவேகமுமுள்ளவர்களாயிருக்க இதினின்று கற்றுக்கொள்ளுவோமாக. சிலர் விசுவாசத்துக்கடுத்த விஷயங்களிலே பிசகாய் எண்ணுகிறதையும் சிலர் வேதத்திலுள்ள சில ஏற்பாடு

அநுசரணைகளைத் தள்ளிப்போடுகிறதையும் நாம் பார்த்து, அவர்கள் அவிசுவாசமும் அவபத்தியும் நிறைந்த கொள்கையுள்ளவர்களென்று இலேசாய் அவர்கள் பேரில் குற்றஞ் சுமத்தாதிருக்கக்கடவோம். இவர்களில் அநேகர் வீட்டில் வளர்ந்த வகையையும், கற்ற படிப்பினையையும் பார்த்தால் அப்போஸ்தலர்களைப்போலே தங்களை அறியாமலே தவறான எண்ணங்களுக்கு உள்ளாகிக் குருடரானார்களென்று அறிந்துகொள்வோம். இன்ன வேலை, இன்ன அலுவல், இன்ன இடம் எனக்குச் சுத்தமாய் ஒத்துவராதென்று நாமுஞ் சில சமயங்களில் சொல்லுகிறோமே; இதெல்லாம் அநுபோகம் இல்லாமல் மனதில் வலிய உண்டான தப்பறையெண்ணமல்லாது வேறென்ன? ஏனெனில்: அநேகந் தருவாயிலே முடியாததாகத் தோன்றின காரியம் கொஞ்சஞ் செய்துபார்த்தபின், வெகுநேர்த்தியாய் முடியுங் காரியமென்று நாமே கண்டு அதிசயப்படவில்லையோ?

**மனப்பற்றுதல்.**—புறத்தியார்பேரில் நாம் கொள்ளும் எண்ணங்களில் விவேகமும் பிறசிநேகமுங் கூடியிருக்கவும், நமது ஞான விருத்திக்குப் பொல்லாப்பாயிருக்கிற விபரீத எண்ணங்களுக்கு இடங்கொடாதிருக்கவும் சர்வேசுரனை நோக்கி மன்றாடுவோமாக.

**பிரதிக்கினை.**—சிலகாரியம் அசாத்தியமென்கிற நினைவு நமது புத்திக்குள் வராதபடி எச்சரிக்கையாயிருப்போமாக. அநேக சமயங்களில் பார்வைக்குக் கூடாததாய்த் தோன்றினாலும் நம்மாலே கூடுமென்று மனதைத் தேற்றிக்கொள்ளக்கடவோம்.

## 3-ம் பிரிவு

### இயேசுநாதர் தமது பாடுகளை அப்போஸ்தலருக்கு அறிவித்த முகாந்திரம்

**தியானம்.**—கர்த்தர் : தாம் படப்போகிற பாடுகளின் பரம இரகசியத்தைக் கண்டுபிடிக்க, அப்போஸ்தலர்களுடைய விபரீதமான நினைவு விக்கினமாயிருக்குமென்று



அறிந்திருந்தாலும், அதற்கடுத்த காரியங்களை விபரமாய் அவர்களுக்கு வெளிப்படுத்தாமல் போகவில்லை. இதற்குக் காரணமென்ன? முதலாவது, தாம் அவர்களுக்கு அவ்வளவு தீர்க்கமாய் முன்னறிவித்த பாடுகள் தம்மிடத்தில் நிறைவேறுவதைக் கண்டு அவர்கள் இடறல் படாதிருக்கவும், அந்தப் பாடுகளுக்குக் காரணந் தமது சிநேகமேயன்றி தமது சத்துராதிகளின் வர்மமல்லவென்று அவர்கள் அறிந்துகொள்ளவும்; 2-வது, தமது அன்புக்குத் தக்க பிரதியன்பு அவர்கள் இருதயத்தில் உண்டாகவும்; 3-வது, தாம் அவர்களுக்குத் தருவதாக வாக்குத்தத்தஞ் செய்த சிம்மாசனமும், இராச்சியமும், அவர்கள் படும் நிந்தை அவமானங்களுக்கும், பாடு வருத்தங்களுக்கும் சம்பாவனையாயிருக்குமென்று அவர்கள் உணரவும் இப்படிச் செய்தாரென்று அறியவும்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—நாமும் நமது அன்புக்குரிய திவ்விய இரட்சகருடைய பாடுகளையும், மரணத்தையும் அடிக்கடி நினைத்து மேற்சொன்ன பலன்களையெல்லாம் அடையப் பிரயாசப்படுவோமாக.

**சம்பாஷணை.**—நமக்காகச் சிலுவையிலறையுண்டு மரித்த இயேசுநாதசுவாமியோடு சம்பாஷணை செய்யக்கடவோம்.

---

## 10-ம் தேதி

### இயேசுநாதர் பேத்தானியாவூருக்குப் போகும்போது வழியில் சம்பவித்த இரண்டாம் வர்த்தமானம்

#### இரண்டு அப்போஸ்தலர்களுடைய யோசனையற்ற நடபடிக்கை

**ஆயத்தச் சிந்தனை.**—அருளப்பரும் இயாகப்பரும் தங்கள் தாயாரோடுகூட இயேசுநாதரண்டையில் ஒரு சலுவு பெற்றுக்கொள்ளக் கேட்கிறதாக ரூபிகரித்துக் கொள்.

தியானச் செபம்.—இந்தத் தியானத்துக்குப் பலனாக மெய்யான தாழ்ச்சியின் குணத்தைக் கேள்.

## முதல் பிரிவு

### இரண்டு அப்போஸ்தலர்களுடைய பேராசை

தியானம்.—பெத்தானியாஊருக்குப் போகும்போது வழியில் சம்பவித்த இரண்டாம் வர்த்தமானமேதென்றால்: இயேசுநாதர் தாம் படப்போகிற பாடுகளைச் சொல்லி முடித்தவுடனே செபதேயின் குமாரர்களாகிற இயாகப்பரும் அருளப்பருந் தங்கள் தாயாரோடுகூடத் திவ்விய கர்த்தரண்டையில்வந்து சொன்னதாவது: போதகரே, தேவரீரிடத்தில் நாங்கள் கேட்கப்போகிறதெல்லாம் எங்களுக்குக் கட்டளையிடக் கோருகிறோமென்றார்கள். அதற்குக் கர்த்தர் நாம் உங்களுக்குச் செய்யத்தக்கதென்னவென்று கேட்க, அவர்கள் மாறுத்தரமாக: தேவரீர் மகிமைப் பிரதாபத்தில் வீற்றிருக்கும்போது எங்கள் இருவரில் ஒருவன் உமது வலதுபாரிசத்திலும் மற்றொருவன் இடதுபாரிசத்திலும் இருக்கக் கட்டளையிடவேணுமென்றார்கள் (மாற். 10; மத். 20). இப்பேர்க்கொத்த சமயத்திலே இவர்கள் இந்தச் சனுவைக் கேட்கவந்ததைப் பார்க்குமிடத்தில் அப்போஸ்தலர்களிடத்திலே அறியாமையும் மட்டித்தனமான எண்ணங்களும் இருந்தனவென்பது உறுதியாகிறது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—பொதுப்பட அப்போஸ்தலர்களிடத்திலிருந்த மூடத்தனத்தைப் பார்க்கிலும் இவ்விருவருடைய அடங்காத பேராசையைப் பார்க்கும்போது அதிக ஆச்சரியமாயிருக்கிறது. அவர்கள் இஸ்ராயேல் பன்னிருகோத்திரத்தையும் நடுத்தீர்க்கிறவர்களாய்ப் பன்னிரண்டு சிம்மாசனங்களிலிருக்கச் செய்வோமென்று ஆண்டவர் வார்த்தைப்பாடு கொடுத்ததும் போதாதென்று அதிலே முதன்மையான இரண்டு இடங்களுந் தங்களுக்குக் கிடைக்கவேணுமென்று பேராசைப்படுகிறார்கள். ஏழைச் செம்படவர்களிடத்திலே இப்பேர்ப்பட்ட கெர்வமான எண்ணமுண்டானதேயென்று நாம்



ஆச்சரியப்படுகிறோம். ஆகிலும் சற்று யோசித்துப்பார்த்தால் ஆச்சரியத்துக்கு இடமிராது. ஏனென்றால்: சகல மனுஷரிடத்திலும் ஆங்காரம் கூடப் பிறந்ததாயிருக்கிறதினாலே பேராசையானது எந்த அந்தஸ்துக்கும் உரியதுதான். இதினால் மனுஷர்களுக்குள்ளே எந்தெந்தச் சாதி வகையிலும் குழப்பங்களும், வாக்குவாதங்களும், கலகங்களும், வேதத்துரோகங்களும் உண்டாகின்றன. இன்னமும் தரித்திரம், தாழ்ச்சி, பரித்தியாகம் முதலியவைகளை வெளியரங்கமாய் அநுசரிக்கிற சந்நியாசிகளிடத்திலே முதலாய் இந்தக் காலாகோலங்களைக் காண்கலாம். ஆகையால் அபாயத்துக்குரிய ஆங்காரம் நம்மிடத்தில் முளைத்து வளர்ந்து நம்மை நாசமாக்காதபடி சர்வ சாக்கிரதையாயிருக்கக்கடவோம்.

மனப்பற்றுதல்.—ஆங்காரத்தினால் வரும் மாயத் தோற்றங்களிலும் இருதய மயக்கத்திலுனின்று ஆண்டவர் நம்மைக் காத்து இரட்சிக்க மன்றாடுவோமாக.

பிரதிக்கினை.—என் பேச்சு வார்த்தைகளில் மற்றவர்களைவிட என்னைப் புத்தி சமர்த்தனென்று பாராட்டிப் பேசுகிறேனோவென்றும், என்னிலும் வேறே யாராவது அதிகமாய்ப் புகழ்ந்து மதிக்கப்படுகிறதைக் கண்டால் மனங் குன்றிப்போகிறேனோவென்றும் என் உள்ளத்தை நன்றாய்ச் சோதித்துப்பார்ப்பேன்.

## 2-ம் பிரிவு

### இயேசுநாதர் அவ்விருவருக்குஞ் சொன்ன மறுமொழி

தியானம்.—இயேசுநாதசுவாமி அவ்விருவருடைய கேள்விக்கு மாறுத்தரமாக அவர்களைத் தாழ்த்தத்தக்கவிதமாய்: நீங்கள் கேட்பது இன்னதென்று அறியீர்களென்றார். ஏனென்றால்: அவர்கள் செய்துகொண்ட விண்ணப்பமானது, இயேசுநாதசுவாமி இவ்வுலகத்தில் மகாராசாவாயிருந்து இஸ்ராயேல் கோத்திரத்தின்மேல் செங்கோல் செலுத்துவாரென்ற தப்பறை எண்ணத்தில் ஊன்றியிருந்தது. அன்றியும் இயேசுநாதசுவாமியோடு

பரலோகத்தில் அரசாட்சி செய்யவேணுமானால் இவ்வுலகத்தில் நிந்தைப்பட்டு, அவமானப்பட்டு, கொலையுண்டு வேதசாட்சிகளாக வேண்டியிருந்தது. இதை அவர்கள் அறியாமலே அப்படிக் கேட்கத் துணிந்தார்கள். திவ்விய கர்த்தர் இதை அவர்களுக்கு எண்பிப்பதற்காக: நாம் உட்கொள்ளப்போகிற பாத்திரத்தை நீங்கள் உட்கொள்ளக்கூடுமோவென்றார். அதாவது: மகிமைப் பிரதாபத்தில் நமதருகேயிருக்கவேணுமானால், நமது தாழ்மை, நிந்தை, அவமானபாடுகளுக்கெல்லாம் உள்ளாயிருக்கவேண்டியிருக்க, நீங்கள் மகிமை பெருமையையும், பாக்கிய சந்தோஷத்தையுந் தேடுவதேதென் என்றாற்போலாயிற்று. பின்னும் அவர் சொன்னதாவது: மெய்யாகவே, நீங்கள் இந்தப் பாத்திரத்தை உட்கொள்வது உள்ளதுதான். அதற்கான தேவ உதவியும் உங்களுக்குக் கொடுக்கப்படும். ஆனால் நமது வலதுபாரிசத்திலும் இடதுபாரிசத்திலும் உட்காரச் செய்வது நம்மைச் சேர்ந்ததல்ல. நமது பிதாவால் நியமிக்கப்பட்டவர்களுக்கே அது கொடுக்கப்படுமென்றார் (மத். 20).

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—இந்தத் திவ்விய போதகத்தினால் நாம் கைக்கொள்ளத்தக்க முக்கியமான நற்படிப்பினை ஒன்றுண்டு. அதாவது: தேவதோத்திரத்தையும் நமது ஈடேற்றத்தையும் முழுதும் நேராய்ச் சார்ந்த காரியங்கள் நீங்கலாக, மற்றக்காரியங்களை நாம் சர்வேசுரனிடத்தில் மன்றாடிக்கேட்கும்போது, அவைகள் நமது ஆத்தும இரட்சணியத்துக்கு நன்மை உதவியாயிருந்தால், கட்டளையிடவேணுமென்று வாயினால் சொல்லியாவது மனதில் எண்ணியாவது கேட்கத்தகுமொழிய மற்றப்படியல்ல. ஏனென்றால் அநேகந் தறுவாய்களிலே நாம் கேட்கிறது இன்னதென்று நாமே அறியோம். நாம் வேண்டுமென்று ஆசைப்படுகிறது ஒருவேளை நடக்கவொண்ணாத காரியமாயிருக்கலாம்; அல்லது தேவதோத்திரத்துக்கும் பிறர் நன்மைக்கும் நமது இரட்சணியத்துக்கும் பிரயோசனமென்று நாம் நினைக்கிற காரியங்கள் அநேக சமயங்களில் அவைகளுக்கு ஒரு தடையாயிருக்கலாம் என்பதை நாம் அறிகிறதில்லை.



**மனப்பற்றுதல்.**—சர்வேசுரனுக்குப் பிரியமானதைமாத்திரம் ஆசிக்க வரங்கேள்.

**பிரதிக்கினை.**—நாம் யாதொரு மன்றாட்டைக் கேட்கும்போது: சர்வேசுரா சுவாமீ, இது தேவரீருக்குப் பிரியமாகவும் எனக்கு பிரயோசனமாகவுமிருந்தால் எனக்குத் தந்தருளுமென்று வாயினாலாவது மனதினாலாவது சொல்லவேணும்.

## 3-ம் பிரிவு

### மற்ற அப்போஸ்தலர்கள் அடைந்த மனத்தாங்கலும் சுவாமி சொன்ன அதிசயமான புத்தியும்

**தியானம்.**—அர்ச். மத்தேயு சொல்லியிருக்கிறதாவது: மற்றப் பத்து அப்போஸ்தலர்களும் இந்த இரண்டு பேர் செய்த மன்றாட்டைக்கேட்டு இவர்கள்பேரில் சினங்கொண்டார்கள். இதை அறிந்த இயேசுநாதர் அவர்களெல்லாரையுந் தம்மிடத்தில் வரவழைத்துச் சொன்னதாவது: சனங்களுடைய அதிபதிகள் அவர்களை ஆண்டுகொண்டு வருகிறதையும், பெரியோரானவர்கள் அவர்கள்பேரில் அதிகாரஞ் செலுத்துகிறதையும் நீங்கள் அறிந்திருக்கிறீர்களே. உங்களுக்குள்ளே அப்படியாகாது. ஆனால் உங்களுக்குள்ளே அதிக பெரியவனாயிருக்க ஆசையுள்ளவன் உங்கள் ஊழியனாயிருப்பானாக. அவ்விதமே மனுமகன் பணிவிடை செய்யப்பட வராமல், தாமே பணிவிடை செய்யவும் அநேகம் பேர்களுடைய இரட்சணியத்துக்காகத் தமது உயிரைக் கொடுக்கவும் வந்தாரென்றார் (மத். 20).

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—மகா பிரயோசனமான இந்தப் புத்தியை நாம் மனதிலே நன்றாய்த் தரித்துக்கொண்டு இதற்கு ஒத்தபிரகாரம் நடக்க வருந்துவோமாக. இதுவரையில் நாம் எப்படி நடந்தோமென்று பார்த்து நம்மிடத்தில் காணுங் குறைகளைத் திருத்திக்கொண்டு, நாம் அநுசரிக்கவேண்டிய உத்தமதனத்துக்கும் நமது திவ்விய குரு காண்பித்த மாதிரிகைக்கும் நம்மிடத்தில் சகலமும் ஒத்திருக்கச் செய்யக்கடவோம்.

**சம்பாஷணை.**—காவலான சம்மனசானவரோடு சம்பாஷணை செய். இவர் தம்மை முழுதும் மறந்துவிட்டுச் சகலத்திலுந் தேவ மகிமை ஒன்றைமாத்திரங் கவனித்து வருகிறார்.

---

# 11-ம் தேதி

## பெத்தானியாவூருக்குச் செல்லும் பாதையில் நடந்த மூன்றும் வர்த்தமானம்

### ஜெரிக்கோ பட்டணத்தின் குருடனைக் குணமாக்கினது

**ஆயத்தச் சிந்தனை.**—இயேசுநாதர் ஜெரிக்கோ பட்டணத்தை அடுத்துப் போகும்போது திரளான சனங்கள் அவரைச் சூழ்ந்துகொண்டு போகிறதாக ரூபிகரித்துக் கொள்.

**தியானச் செபம்.**—நன்றாய்ச் செபம்பண்ண வரப்பிரசாதங் கேள்.

### முதல் பிரிவு

#### குருடன் இயேசுநாதரை நோக்கிக் கூப்பிடுகிறான்

**தியானம்.**—இயேசுநாதர் யோர்தான் நதிக்கும் பெத்தானியாவூருக்கும் நடுவிலிருந்த ஜெரிக்கோ பட்டணத்துக்கருகே போகும்போது சம்பவித்ததாவது: பார்த்திமேயென்னும் ஒரு குருடன் வழி ஓரத்தில் உட்கார்ந்து பிச்சை கேட்டுக்கொண்டிருந்தான். அப்போது சனங்கள் சந்தடியாய்ப்போகிற சத்தங்கேட்டு: இதென்னவென்று வினவ, நசரேத்தூராராகிய இயேசுநாதர் இவ்வழியாய்ப் போகிறாரென்று சொன்னார்கள். இதைக் கேட்டவுடனே அவன் சத்தமாய்க் கூப்பிட்டு: இயேசுவே, தாவீதின் குமாரனே, என்பேரில் இரக்கமாயிருமென்றான். ஆனால் அவனுக்கு முன் நடந்துபோனவர்கள் அந்தச் சத்தத்தைக் கேட்டு எரிச்சலோடு அவனைச் சும்மாயிருக்கும்படி அதட்டினா



கள். அவனோவென்றால் இன்னமும் அதிக சத்தமாய்க் கூப்பிட்டு தாவீதின் குமாரனை இயேசுவே, என்பேரில் இரக்கமாயிருமென்றான் (லூக். 18, மாற். 10.)

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—அந்தக் குருடன் செய்த மன்றாட்டிலுள்ள குணங்களை நமது படிப்பினைக்காக ஆராய்ந்து பார்ப்போமாக. முந்த முந்தத் தகுந்த சமயத்தில் மன்றாடுகிறான். எப்படியென்றால்: இயேசுநாதர் அவ்வழியாய் வரப்போகிறாரென்று அவன் கேள்விப்பட்ட க்ஷணத்திலே தேவப்பிரசாதம் அவனைத் தூண்டுகிறது. அதுவே அவனுக்குக் கிருபையின் வேளையாயிருந்தது. அதை அவன் தாமதமில்லாமல் கைக்கொண்டு இயேசுநாதரை நோக்கி ஓயாமல் கூப்பிடுகிறான். ஆண்டவர் அவன் மன்றாட்டைக்கேட்டு அவனுக்கு ஒரு புதுமை செய்கிறார். அவன் கொஞ்சநேரந் தாமதித்திருப்பானாகில் அவனுக்குக் கண் பார்வை வந்திருக்குமோ? ஐயோ, நாம் தாமதத்தினாலே எவ்வளவோ சனுவையும் வரப்பிரசாதத்தையும் இழந்துபோகிறோம்! 2-வது, அவன் செய்த மன்றாட்டு பத்திவேகமுள்ளதாயிருந்தது. ஏனென்றால்: தன் நிர்ப்பாக்கியத்தை இருதயத்தில் நன்றாயுணர்ந்து இதைவிட்டு நீங்கவேணுமென்று மகா வேகமான ஆவலோடு மன்றாடினான். நாம் நமது ஆத்துமத்தின் நிர்ப்பந்தங்களைச் சரியாய் உணராததினாலல்லவோ அநேகாநேக சமயங்களில் நமது செபம் சோர்ந்து பலனற்றுப்போகிறது. 3-வது, அவனுடைய செபம் அலட்டும் நிலைமையுமுள்ளது. ஏனென்றால்: திவ்விய கர்த்தர் அவன் சத்தமிட்டுக் கூப்பிட்டதைக் கவனியாதவர்போலிருந்தாலும், கூடப்போனவர்களெல்லாரும் அவனைப் பேசாதபடி தடுத்தாலும், அவன் அதிகமதிகமாய் ஓயாமல் கூப்பிட்டுக்கொண்டிருந்தான். இப்படிப்பட்ட நிலைமை நமக்கு இல்லாததினாலேயன்றோ நாம் செய்கிற செபம் அநேகந்தரம் வாயிலே பலிக்காமற்போகிறது!

**மனப்பற்றுதல்.**—ஆண்டவரே, இந்தப் பாக்கியம் பெற்ற பிச்சைக்காரனுக்குத் தேவரீர் படிப்பித்ததுபோல நாங்களும் நன்றாய்ச் செபிக்கவும், வரப்பிரசாத சம

யத்தைத் தவறவிடாமல் அதை நற்பிரயோகஞ்செய்யவும் எங்களுக்குப் படிப்பித்தருளுஞ் சுவாமி.

**பிரதிக்கினை.**—செபத்திலே உனக்கு உண்டான நம்பிக்கைக் குறையையும் நிலையற்றதனத்தையுந் தள்ளிவிட்டுப் பலனோடு செபிக்கும்படி வேண்டிய அநுக்கிரகத்தைக் கேள்.

## 2-ம் பிரிவு

**இயேசுநாதர் முன்பாகக் குருடன் கூட்டிக்கொண்டு வரப்படுகிறான்**

**தியானம்.**—திவ்விய இரட்சகர் குருடனுடைய அபயசத்தத்தை அலட்சியம் பண்ணினாற்போலத் தோன்றினாலும் அவருடைய இருதயம் தயாளத்தால் இளகிப்போயிருந்தது. ஆயினும் அவனுடைய மன்றாட்டுக்குக் காது கொடுக்கத் தாமதித்ததேதென்றால்: அவனுடைய விசுவாசமும் நம்பிக்கையும் வெளியாகும்படி அவனுக்குச் சற்று நேரம் கொடுக்கச் சித்தமானதேயன்றி மற்றப்படியல்ல. அர்ச். லூக்காஸ் எழுதினபடி அவனைத் தமதருகில் கூட்டிவரச்செய்து அவனைப்பார்த்து: நாம் உனக்கென்ன செய்ய விரும்புகிறாயென்றார். அதற்குக் குருடனானவன்: ஆண்டவரே, நான் பார்வையடையச் செய்யுமென்றான் (லூக். 18).

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—நாம் ஆசைப்படுகிறதைச் சர்வேசுரன் கொடுக்கத் தாமதித்தால் அது நமது நன்மைக்குத்தானென்று அறியவும். அந்தக் குருடனைப்போல நாமும் நமது அவசரங்களைத் தமக்கு வெளிப்படுத்தவேண்டுமென்று சர்வேசுரன் சித்தமாயிருக்கிறார். அதேதென்றால்: நமது அவசரம் அவருக்குத் தெரியாததைப்பற்றியல்ல; ஆனால் அது நமக்கு நன்மையாயிருப்பதைப்பற்றித்தான் இப்படித் திருவுளமாகிறார். ஏனென்றால், நாம் இப்படிச் செய்யும்போது நமக்கு அவசரமான நன்மையெல்லாம் சர்வேசுரனாலேதான் வருகிறதென்று நாம் வெளிப்படையாய்க் கண்டறிகிறதுமல்லாமல், அவர் மட்டில் நமக்குள்ள நம்பிக்கையையும் பிள்ளைக்குரிய பட்



சத்தையும் தீர்க்கமாய்க் காட்டுகிறோம். ஆண்டவர் நம்மை நடத்திவருகிற மேரையிலே எவ்வளவு நல்லவரும் நேசமுள்ளவருமாயிருக்கிறாரென்று இப்போது தியானித்ததைக்கொண்டு நன்றாய்க் கண்டுபிடிக்கலாம்.

**மனப்பற்றுதல்.**—என் சர்வேசுரா, என் பிதாவே, நான் உம்மைச் சிநேகிக்கவும், என் மனம் உம்மில் இளைப்பாறவும் படிப்பித்தருளுஞ் சுவாமி.

**பிரதிக்கினை.**—என் ஆத்தும சரீரத்துக்குத் தேவையான சகல காரியங்களிலும் குழந்தைக்குரிய கபடற்ற மனதோடும் பூரண நம்பிக்கையோடும் சர்வேசுரனை அண்டிப்போவேன்.

## 3-ம் பிரிவு

**இயேசுநாதசுவாமி அந்தக் குருடனுக்குப் பார்வை கொடுக்கிறார்**

**தியானம்.**—குருடனுடைய விசுவாசத்துக்கும் நிலைமைக்கும் சம்பாவனை உடனே கிடைத்தது. அவன் பார்வை அடையவேணுமென்று கேட்டதினாலே இயேசுநாதர் அவனை நோக்கி: பார்வையடைவாயாக, உன் விசுவாசம் உன்னை இரட்சித்ததென்றார். அக்ஷணமே அவன் கண்கள் திறக்கப்பட்டன, அவனுஞ் சர்வேசுரனுடைய மகிமைப் பிரதாபத்தைப் பிரஸ்தாபப்படுத்திக்கொண்டு இயேசுநாதரைப் பின்சென்றுபோனான். இந்தப் புதுமையைக் கண்ட சகல சனங்களுஞ் சர்வேசுரனுக்குத் தோத்திரஞ் செய்தார்கள் (லூக். 18).

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—நமது நேசமுள்ள இரட்சகருடைய தயாள குணத்தைப் பார். அவன் கேட்ட மன்றாட்டின்படி அவனுக்குப் பார்வை கொடுத்ததுமல்லாமல் அவனுடைய ஆத்துமக் கண்களையுந் திறக்கிறார். அவனுக்குத் தேவ இஷ்டப்பிரசாதத்தையுந் தந்து இரட்சணியவழியில் அவனை நிலைநிறுத்துகிறார். அவனோவென்றால் தனக்கு இந்த உபகாரஞ் செய்த இவரே உலகத்தை இரட்சிக்கும்படி வருவாரென்று வாக்குத்தத்தஞ்செய்யப்பட்ட மெஸ்சியாஸ் என்று அறிந்துகொள்

ளுகிறான். அவர் காலடியைப் பிடித்துக்கொண்டு அவரைப் பின்செல்லுகிறான். சனங்களுக்கு முன்பாக அவரைப் போற்றிப் புகழுகிறான். அவனுடைய பத்தி கெம்பீரத்தைக்கண்டு அவர்களும் ஞானக் கெம்பீரங்கொண்டார்கள். நாமும் அவனோடு ஒன்றித்து நமது இரட்சகரை வாழ்த்தி நமஸ்கரித்துக் கொண்டாடுவோமாக. ஜெரிக்கோ பட்டணத்தின் இந்தப் பிச்சைக்காரனைப் பார்க்க நாம் திவ்விய கர்த்தரிடத்தில் அதிக பெரிதும் மிகுதியுமான உபகாரங்களைக் கைக்கொண்டிருக்கிறோமல்லவோ? ஆகையால் நமது நல்லுபகாரியாகிய அவர்மட்டில் நமக்குள்ள நன்றியறிதலைக் காண்பிக்கும்படியாக அவரையே நமக்கு மாதிரிகையாகவைத்து, அவர் நடந்து காண்பித்த தருமவழியைப் பின்பற்றி நடக்கவும், அவரை மென்மேலும் அதிகமதிகமாய் அறிந்து சிநேகிக்கவும், மற்றவர்களால் அவர் அறிந்து சிநேகிக்கப்படவும் நமது பத்தி வைராக்கியத்தால் ஆன உபாயமெல்லாந் தேடிப் பிரயாசப்படக்கடவோம்.

சம்பாஷணை.— தூர்சுபட்டணத்தின் மேற்றிராணியாரான பேர்போன அர்ச். மர்த்தீனாரோடு சம்பாஷணை செய்வோமாக. அவர் இயேசுநாதரை உத்தமவிதமாய்க் கண்டுபாவித்து, வார்த்தையிலுங் கிரியையிலும் வல்லபமுள்ளவராய் விளங்கி, எண்ணிக்கையில்லாத அஞ்ஞானிகளையுங் கல்நெஞ்சரான பாவிகளையும் மனந்திருப்பினார். இன்றைக்கு அவருடைய திருநாளாயிருப்பதால் அவரை நோக்கி: உமது பாவனையாக, தாராளகுணத்தோடும் நிலைமையோடுந் திவ்விய மாதிரிகையான இயேசுவின் திருவடியைப் பின்சென்று நடக்கவும், நன்மாதிரிகையினாலும், செபத்தினாலும், பத்தி சுறுசுறுப்பினாலும் பிறர் ஆத்தும இரட்சணியத்துக்கு உதவியாயிருக்கவும் எங்களுக்கு வரமடைந்தருளுமென்று வேண்டிக்கொள்ளக்கடவோம்.



# 12-ம் தேதி

## இயேசுநாதர் பெத்தானியாவூருக்குப் போகும்போது நடந்த நாலாம் வர்த்தமானம்

### சக்கேயுஸ் என்பவன் ஆச்சரியமானவிதமாய் மனந்திரும்பினது

ஆயத்தச்சிந்தனை.—சக்கேயுஸ் என்பவன் வீட்டிலே இயேசுநாதர் பிரவேசிக்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

தியானச் செபம்.—இரட்சகர் சக்கேயுஸ் என்பவனை அர்ச்சித்ததுபோல என்னையும் அர்ச்சிக்கும்படி மன்றாடுவேன்.

## முதல் பிரிவு

### இயேசுநாதரைக் காணவேணுமென்று சக்கேயுஸ் என்பவனுக்குள்ள ஆவல்

தியானம்.— இயேசுநாதர் ஏழைக் குருடனுக்கு அற்புதமாய்ப் பார்வைகொடுத்த வர்த்தமானம், அப்போது வியாபாரத்தால் மிகவும் வளர்ந்து பேரோங்கியிருந்த ஜெரிக்கோபட்டணத்தாருக்குள் மகா கெம்பீர முழக்கமாயிருந்தது. இயேசுநாதர் அதில் ஒட்டோலகராய்ப் பிரவேசித்தார். ஆனால் 1500 வருஷத்துக்குமுன் யோசுவன் நீதி செலுத்தும்படி அதில் பிரவேசித்ததுபோல் போகாமல், பாவிகளைத் தம்மிடத்தில் வரவழைத்து அவர்களை அர்ச்சிக்கும்படி போனார். அதில் ஒரு பாவி ஆச்சரியமான விதமாய் மனந்திரும்பின வரலாற்றை நமக்குப் படிப்பினையாக இஸ்பிரீத்து சாந்துவானவர் அர்ச். லூக்காஸைக்கொண்டு எழுதிவைக்கச் சித்தமானார். எப்படியெனில்: அங்கே சக்கேயுஸ் என்னப்பட்ட ஒருவனிருந்தான். அவன் ஆயக்காரருக்குத் தலைவனுமாய்த் தீர்வைப் பணம் வாங்குகிறவனுமாய், மகா ஆஸ்திபந்தனாயிருந்தாலும் உலோபியென்றும் அநியாயக்காரனென்றும் பேர் பெற்றிருந்தான். அப்படியிருக்க இவன் இயேசுநாதரை இன்னாரென்று கண்டறியத் தேடினான். ஆனால் உருவத்தில் குள்ளனா

யிருந்தபடியால் சனக்கூட்டத்தில் அவரைப் பார்க்கக் கூடாமல் முந்திப்போய், அவர் போகும்பாதையில் அவரைக் காணவேணுமென்று அங்கிருந்த ஒரு காட்டு அத்திமரத்தின்மேல் ஏறியிருந்தான். (லூக். 19.)

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இதுவரையில் நடவாத அற்புதங்களை நடத்திக்கொண்டு வருகிறவரை, கிட்டப்போய்ப் பார்க்கவேணுமென்று யாவருக்குஞ் சுபாவமாய் ஆசையுண்டாயிருக்கும். ஆனால் வேதபாரகர் சொல்லியிருக்கிறபோல: இவனிடத்திலிருந்த இந்த ஆசையானது மற்றவர்களிடத்திலிருப்பதுபோல வினோதப் பிரியமாயிராமல், சர்வேசுரன் முன்னதாகவே தந்தருளுகிற தேவ வரப்பிரசாதத்துக்கு அடையாளமாயிருந்தது. இவன் தான் மரத்திலேறி அதின் மேலிருந்து அவரைப் பார்த்தால் காண்கிறவர்கள் சிரிப்பார்களோவென்று யோசியாமல், தேவ வரப்பிரசாத ஏவுதலுக்கு ஒத்தபிரகாரம் நடக்கவேணுமென்கிற ஆவலினாலும் தாராளகுணத்தினாலும், மரத்திலேறினது இயேசுநாதர் இவனுக்கு உசிதமான நன்மை செய்கிறதற்கு இடமாயிற்று. நீயும் உனக்கு அளிக்கப்பட்ட எண்ணிக்கைக்குள்ளடங்காத தேவ ஏவுதலுக்கு ஒத்து நடக்கும்படி மனவேகங் காட்டியிருந்தால், அதற்குச் சம்பாவனையாக எவ்வளவோ சகாயங்களை ஆண்டவர் உனக்குக் கட்டளையிட்டிருப்பார்!

மனப்பற்றுதல்.—இது மெய்யென்று தாழ்ச்சியோடு ஒத்துக்கொண்டு, வெட்கி மனஸ்தாபப்படுவாயாக.

பிரதிக்கினை.—வரப்பிரசாதத்தின் ஏவுதலுக்கு அதிகப் பிரமாணிக்கமாய்க் காதுகொடுத்து இணங்கி நடப்பாயாக.

## 2-ம் பிரிவு

### சக்கேயுஸ் தன் வீட்டுக்கு இயேசுநாதர் வரப் பாக்கியம்பெற்றது

தியானம்.—இயேசுநாதர் அந்த அத்தி மரத்துக்கு நேரே வந்தபோது சக்கேயுஸ் என்பவனை அண்ணாந்து



பார்த்துச் சொன்னதாவது: சக்கேயுவே தீவிரமாய் இறங்கி வா, இன்றைக்கு உன் வீட்டில் நாம் தங்கவேணுமென்றார். இதைக் கேட்டமாத்திரத்தில் சக்கேயுஸ் என்பவன் எவ்வளவோ ஆச்சரியமுஞ் சந்தோஷமும் பாக்கியமுமடைந்திருக்கமாட்டான்! எவ்வளவோ ஆத்திரத்தோடு தன் வீட்டுக்குப்போய்ச் சகலருக்கும் இந்த நல்ல செய்தியை அறிவித்து, திவ்விய கர்த்தரை யோக்கியமான விதமாய் உபசரிக்கும்படி வேண்டிய தயார் செய்ய எல்லாரையுந் தூண்டியிருப்பான்! எப்போதும் வார்த்தைகளை மட்டாய் உபயோகிக்கிற சுவிசேஷத்தில் சுருக்கமாய்ச் சொல்லியிருக்கிறதாவது: சக்கேயுஸ் என்பவன் விரைவாய் மரத்தினின்று இறங்கிச் சந்தோஷமாய் அவரை வரவழைத்தானென்று சொல்லியிருக்கிறது (லூக். 19).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இயேசுநாதசுவாமி தேவநற்கருணையின் வழியாய் உன்னிடத்தில் எழுந்தருளிவரச் சித்தமாகும்போது, மிதமிஞ்சின பயத்தினாலே உன் இருதயத்தைச் சுருக்கிக்கொண்டு அவரை வாங்காதே. அநேகம் பத்தியுள்ள ஆத்துமாக்கள் இப்படி நடந்து வருகிறார்கள். இது சரியல்ல. சக்கேயுஸ் என்பவனைப்போல உன் இருதயஞ் சந்தோஷத்தினாலும் நம்பிக்கையினாலும் எப்போதும் பூரித்திருக்கவேணும். தேவநற்கருணை வாங்குஞ் சமயத்தில் இப்போர்க்கொத்த நினைவுங் கருத்தும் உன்னிடத்தில் திடமாயிருக்கத்தக்கதாக: சக்கேயுஸ் என்பவன் சந்தோஷமாய் அவரை வரவழைக்கவே, அவன் வீட்டில் பாக்கியம் புகுந்ததென்று சுவிசேஷத்தில் சொல்லியிருக்கிறதை நினைத்துக்கொள்.

மனப்பற்றுதல்.—நீ நன்மை வாங்கும்போது கட்டிக்கொண்ட குற்றங்களுக்கும், விசேஷமாய் உன்னிடத்திலிருந்த நம்பிக்கைக் குறைவுக்கும் பொறுத்தலைக் கேள்.

பிரதிக்கினை.—தேவநற்கருணை வாங்கும் நாட்களில் காலமே கண்விழித்தவுடனே இயேசுநாதர் உன்னை நோக்கி: நீ தீவிரமாய் இறங்கி வா, இன்றைக்கு நாம் உன் இருதயத்தில் வாசம்பண்ண வேணுமென்று சொல்லுகிற

தாக நினைத்துக்கொள். இந்த நினைவு உன் இருதயத்தை மலரச்செய்து, இயேசுநாதசுவாமி அதில் காண ஆசிக்கிற உணர்ச்சிகளாலும், விசேஷமாய் ஞானச்சந்தோஷம் நம்பிக்கையினாலும் அதை நிரப்பும்.

## 3-ம் பிரிவு

### சக்கேயுஸ் என்பவன் இயேசுநாதரால் மனந்திரும்பப்பட்டு அர்ச்சிக்கப்பட்டது

**தியானம்.**—சக்கேயுஸ் என்பவன் வீட்டிலே இயேசுநாதரோடுகூடப் பாக்கியமும் பிரவேசித்தது. கண்ணுக்கு மறைந்த இஷ்டப்பிரசாதத்தின் செயலானது பாவியாயிருந்தவனை நீதிமானாகவும் அர்ச்சியசிஷ்டவனாகவும் பண்ணினது. இதை அவன் கிரியையினால் காண்பிக்கும்படி இயேசுநாதரைப் பார்த்துச் சொன்னதாவது: ஆண்டவரே, இந்த க்ஷணத்திலேதானே என் ஆஸ்தியில் பாதி தரித்திரர்களுக்குக் கொடுக்கிறேன். அல்லாமலும் நான் யாதொருவர் உடைமையை அநியாயமாய் அபகரித்திருப்பேனாகில் அதற்கு நாலு மடங்கு அதிகங்கொடுத்து உத்தரிக்கிறேனென்றான். இயேசுநாதர் அவனைப் பார்த்துத் திருவுளம்பற்றினதாவது: இன்றைக்கு இவ்வீட்டிற்கு இரட்சணியமுண்டாயிற்று. ஏனென்றால் சிதறிப்போனதையே மனுமகன் தேடவும் இரட்சிக்கவும் வந்தாரென்றார் (லூக். 19).

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—சக்கேயுஸ் காண்பித்த உதாரத்தனத்தைக் கண்டுபாவித்து அவனைப்போல நமது பிரதிக்கினைகளை உடனே தாமதமில்லாமல் நிறைவேற்றுவோமாக. வாக்கினாலும் பொறுமைக் குறையினாலுந் துர்மாதிரிகையினாலும் நமது சகோதரருக்கு நாம் செய்த தீங்கைப் பரிகரிக்கக்கடவோம். இப்படிச் செய்வோமாகில் அவனைப்போல இயேசுநாதருடைய தயவையடைந்து பாக்கியமாய் வாழ்வதுமல்லாமல், ஒருநாள் அவர் திருவாக்கினின்று இரட்சணியமும் ஆசீர்வாதமும் நிறைந்த வார்த்தைகளைக் கேட்போமென்பதற்குச் சந்தேகமில்லை.



**சம்பாஷணை.**—நமது அன்பான இரட்சகரோடு சம்பாஷணை செய்வோமாக. அவர் தேவநற்கருணையின் வழியாய் தம்மைத்தாமே நமக்குத் தந்து அநேகமுறை தமது பிரசன்னத்தால் நமது இருதயத்தைக் கனப்படுத்தினதற்காக அவருக்கு நன்றியறிந்திருக்கக்கடவோம். அவர் சிநேகிக்கப்படத்தக்க அளவாய் நாம் அவரைச் சிநேகிக்கவும் அல்லது நமக்கு அவர் காண்பிக்கும் அணைகடந்த அன்புக்காவது நன்றியறிதல் செலுத்தத் தவறாதிருக்கவும் அனுக்கிரகஞ்செய்யவேணுமென்று மன்றாடுவோமாக.

---

## 13-ம் தேதி

### இயேசுநாதர் பெத்தானியாவூரில் வந்துசேர்ந்து இலாசரை உயிர்ப்பித்தது

**ஆயத்தச் சிந்தனை.**—இலாசர் கல்லறையை விட்டெழுந்திருக்கிறதைப் பார்க்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

**தியானச் சேபம்.**—மாம்ஸ உத்தானமாகிற கனமான பரம இரகசியத்தின்பேரில் உயிருள்ள விசுவாசத்தைக் கேட்கக்கடவாய்.

## முதல் பிரிவு

### இயேசுநாதசுவாமி இலாசருடைய சகோதரிகளோடு பேசினது

**தியானம்.**—முந்தின இரண்டுநாளும் வழியில் நடந்த பலபல விசேஷங்களுக்குப்பின் கடைசியாய் இயேசுநாதர் பெத்தானியாவூரில் இலாசர் இறந்த நாலாம் நாள் வந்து சேர்ந்தார். அவன் சகோதரியாகிய மார்த்தம்மாள் இரட்சகர் வந்ததைக் கேட்டு அவருக்கு முன்பாகப்போய்: சுவாமீ, தேவரீர் இவ்விடத்திலிருந்திருப்பீரானால் என் சகோதரன் மரித்திருக்கமாட்டானென்றாள். அதற்கு அவர் மாறுத்தரமாக உன் சகோதரன் உயிரோடெழுந்திருப்பானென்றார். என்றதற்கு அவள் கடைசிநாளிலே

உயிர்க்குங்காலம் வரும்போது, உயிரோடெழுந்திருப்பானென்று அறிவேனென்றாள். உயிரோடிருக்கிற எவனும் என்னை விசுவசித்தால் ஒருபோதுஞ் சாகமாட்டான், இதை நீ விசுவசிக்கிறாயோவென்றார். அதற்கு அவள் ஆம், சுவாமீ, தேவரீர் கிறீஸ்துநாதரென்றும், இவ்வுலகத்தில் எழுந்தருளிவந்த சுயஞ்சீவிய சர்வேசுரனுடைய குமாரனென்றும் விசுவசிக்கிறேனென்றாள் (அரு. 11).

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—இயேசுநாதசுவாமி அந்தம்மாளை நோக்கிக் கேட்டது போல உன்னையும் நோக்கி: விசுவசிக்கிறாயோவென்று கேட்கிறதாக நினைத்துக்கொள். நமக்கு மகா ஆறுதல் தரும் பரம இரகசியமான மாம்ஸ உத்தானத்தின்பேரில் உனக்குள்ள விசுவாசத்தைத் திடப்படுத்துகிறதற்கான இந்தச் சமயத்தைத் தவறவிடாதே. உன்னுடைய விசுவாசம் எவ்வளவுக்கு உயிருள்ளதாயிருக்குமோ அவ்வளவுக்குச் சர்வேசுரனைப்பற்றி அநேகங் காரியங்களில் உன்னையொறுத்துப் பலியிடத் தாற்பரியமுள்ளவனாயிருப்பாய். அல்லாமலும் உன் சௌக்கியம் கெட்டுப்போமென்று அவ்வளவு பயப்படவுமாட்டாய்.

**மனப்பற்றுதல்.**—விசுவாசம், நம்பிக்கை, மன்றாட்டு முதலிய முயற்சி செய்வாயாக.

**பிரதிக்கினை.**—தேவவூழியத்திலும் பிறசினேகவூழியத்திலும் என் சரீரங் களைத்துத் தவித்து வருந்தினதற்கு அளவாக உத்தான நாளில் அது மகா அலங்காரமுமாய் மோக்ஷ ஆனந்தபாக்கியத்தை அனுபவிக்கத்தக்கதுமாயிருக்குமென்கிறதை நினைத்து மெத்த வருத்தமும் பாடுகளுமுண்டாகிற சமயத்திலே என்னைத்தானே தேற்றிக்கொள்வேன்.

## 2-ம் பிரிவு

### இயேசுநாதர் இலாசருடைய கல்லறையை வந்துபார்த்தது

**தியானம்.**—மார்த்தம்மாள் கர்த்தர் வந்த செய்தியைத் தன் சகோதரி மரியம்மாளுக்கு அறிவிக்க, அவள் உடனே



எழுந்து அவரைக் காணப்போனாள். அச்சமயத்தில் அவளுக்கு ஆறுதல் சொல்லும்படி எருசலேம்பட்டணத்திலிருந்து வந்திருந்தவர்கள் அவள் கல்லறையிடத்தில் அழப்போகிறாளென்று நினைத்துத் தாங்களுங் கூடப்போனார்கள். மரியம்மாள் இயேசுநாதரைக் கண்டமாத்திரத்திலே அவருடைய பாதத்தில் விழுந்து அவரை நோக்கி: சுவாமீ, தேவரீர் இவ்விடத்தில் இருந்திருப்பீரானால் என் சகோதரன் இறந்திருக்கமாட்டானென்றாள். இயேசுநாதர் அவள் அழுகிறதைக்கண்டு தாமும் கண்ணீர் சிந்தினார். இதைக் கண்ட யூதர்கள் இவர் அவனை எவ்வளவு சினேகித்தாரென்று பாருங்களென்று சொல்ல, அவர்களில் சிலர்: பிறவிக் குருடனுக்குப் பார்வை கொடுத்த இவர் அவன் சாகாமலிருக்கச் செய்யக்கூடாதோவென்றார்கள் (அரு. 11).

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—இவ்விடத்தில் நமது நடபடிக்கைக்கு உதவுமான பலபல யோசனைகளுக்குள் சிலவற்றை மாத்திரங் குறித்துக்கொள்வோம். அவையாவன: முந்தமுந்த இயேசுநாதர் ஊருக்கடுத்தாப்போல் வருகிறாரென்று மரியம்மாள் அறிந்த மாத்திரத்திலே தனக்கு ஆறுதல் சொல்லவந்த சகலரையும்விட்டுத் திடீரென்று எழுந்து அவர் பாதத்திலே போய் விழ ஓடிவந்தாளே. நாமும் இப்படியே எல்லாத்துக்கு முந்தி சர்வேசுரனிடத்திலும், அன்பின் தேவதிரவிய அனுமானமாகிய சற்பிரசாதத்தில் எழுந்தருளியிருக்கிற இயேசுநாதரிடத்திலும் ஆறுதலைத் தேடவேணும். 2-வது, அவ்விரண்டு சகோதரிகளும் விம்மி அழுகிறதை இயேசுநாதர்கண்டு மனமிரங்கித் தாமும் அழுது உள்ளம் கலங்கும்படி சித்தமானாரென்று சுவிசேஷத்தில் சொல்லியிருக்கிறது (அரு. 11). ஆகையால் நமது பந்துசனங்கள் சினேகிதர் துக்கப்படுகிறதைப்பார்த்து நாமும் பரிதபிக்கவும் நமது பரிதாபத்தை வெளியில் காட்டவும் கூடாதென்று விலக்கிறது ஒன்றுமில்லை. 3-வது, மார்த்தம்மாள் மரியம்மாள் என்பவர்களுடைய துயரத்தைக்கண்டு இயேசுநாதர் மனமிரங்குகிறது போதுமென்றிராமல் அந்தத் துயரத்துக்குக் காரணத்தை ஒழிக்கும்படி அவர்களு

டைய நேச சகோதரனை உயிர்ப்பித்து அவர்களுக்குக் கையளித்தார். நாமும் நம்மால் இயன்றமட்டும் இவ்விதஞ் செய்வோமாக. செத்தவர்களை உயிர்ப்பிக்கவும், பொருள் இழந்தவர்களுக்கு மறுபடி அதைக்கொடுக்கவும் நம்மாலாகாதென்பது மெய்தான். ஆனால் நாம் தேவ உதவியால் படும் பிரயாசத்தினாலே பாவிகள் இழந்துபோன தேவ இஷ்டப்பிரசாத சீவியத்தை அவர்களுக்குத் திரும்பக் கொடுக்கவும் அவர்கள் பாவத்தால் போக்கடித்த மோக்ஷத்தைத் திரும்ப அடையவுஞ்செய்யலாம். இவ்வளவு கனமான பாக்கியநிறைந்த பலாபலன்களை விளைவிப்பதற்கு நாம் செய்துவந்ததென்ன? நமது ஞானவைராக்கியம் எவ்வளவு சக்தியுள்ளது? நமது குற்றத்தினாலே அனேகம் விசை அது பலனற்றுப்போகவில்லையோ?

**மனப்பற்றுதல்.**—நிர்ப்பாக்கியரான கணக்கற்ற பாவிகளுக்கு நாம் ஒத்தாசைசெய்ய வழிபண்ணும்படி இயேசுநாதசுவாமியை மன்றாடுவோம். அந்தப் பாவிகள் தங்கள் நிர்ப்பாக்கியத்தை எவ்வளவுக்கு உணராதிருக்கிறார்களோ, அவ்வளவுக்கு அதிக பிரலாபத்துக்குரியவர்களென்று கண்டுகொள்ளக்கடவோம்.

**பிரதிக்கினை.**—நீ மற்றவர்களுக்கு உதவிசெய்யாதே போனாலும் உன் ஆத்தும நிர்ப்பாக்கியத்தையாவது கண்டு பரிகரிக்கத் தேடு.

## 3-ம் பிரிவு

### இலாசர் உயிரோடெழுந்தது

**தியானம்.**—அர்ச். அருளப்பர் எழுதிவைத்ததுபோல இயேசுநாதர் அவனைப் புதைத்திருந்த கல்லறைக்குப் போனார். அந்தக் கல்லறை குகைவடிவாய் வெட்டப்பட்டு ஒரு பெருங்கல்லினால் மூடப்பட்டிருந்தது. அவ்விடத்துக்கு ஆண்டவர் சேர்ந்து அவர்களை நோக்கிக் கல்லை எடுத்துப் போடுங்களென்று கற்பிக்க, மார்த்தம்மாள் அவரை நோக்கி: ஆண்டவரே, நாற்றமெடுக்குமே, ஏனென்றால் அடக்கம்பண்ணப்பட்டு நாலு நாளாயிற்றே என்றாள்.



அதற்கு இயேசுநாதர் மாறுத்தரமாக: நீ விசுவசித்தால் சர்வேசுரனுடைய மகிமையைக் காண்பாயென்று நாம் உனக்குச் சொல்லவில்லையோவென்றார். அப்போது கல்லைப் புரட்டிப்போட்டார்கள். இயேசுநாதரும் வானத்தை அண்ணார்ந்துபார்த்து: என் பிதாவே, தேவரீர் என் மன்றாட்டைக் கேட்டருளினதற்காக உமக்குத் தோத்திரம் பண்ணுகிறேன். தேவரீர் என்னை அனுப்பினீரென்று இங்கேயிருக்கிற சனங்கள் விசுவசிக்கும்படி அவர்களுக்காக நானிதைச் சொல்லுகிறேனென்று வசனித்தார். இந்த வார்த்தைகளைச் சொன்னபின் உரத்த சத்தமாய் இலாசரே வெளியில் வாவென்று கூப்பிட்டார். அக்ஷணமே மரித்தவன் கல்லறையைவிட்டு வெளியே எழுந்துவந்தான். (அரு. 11.)

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—நமது திவ்விய குருவாகிய இயேசுநாதர் தமது தெய்வீகத்தை ஒப்பிப்பதற்கு மறுக்கப்படாத அத்தாட்சியான இந்தப் பெரிய அற்புதத்தைச் செய்ததினாலே அவருடைய வல்லபத்தையுந் தயாளத்தையும் நினைத்து ஆச்சரியப்பட்டு அவரை வாழ்த்துவோமாக. யூதர்கள் அவரை விசுவசிக்கவும் நாம் அவருடைய அளவில்லாத வல்லமையையுந் தயவையும் நினைத்து மென்மேலும் அவரைச் சிநேகிக்க நமக்கு அதிக ஆசையுண்டாகவும் இந்தப் புதுமை செய்யப்பட்டபடியினாலே இதை எப்போதும் நமது மனதில் பதித்துவைத்துக்கொள்ளக்கடவோம்.

**சம்பாஷணை.**—இயேசுநாதர்சுவாமியோடு சம்பாஷணை செய்வோமாக.

# 14-ம் தேதி

## இயேசுநாதருக்கு விரோதமாய் யூதர்கள் கூட்டின மகா சங்கம்

**ஆயத்தச் சிந்தனை.**—யூதர்கள் இயேசுநாதரைக் கொல்லும்படி சதியோசனை செய்த சங்க சாலையைப்பார்க்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

**தியானச் சேபம்.**—நமது திவ்விய குருவும் இரட்சகருமான இயேசுநாதர்பேரில் நமக்குப் பத்தியும் நேசப்பற்றுதலும் உண்டாகவேணுமென்று மன்றாடக்கடவோம்.

## முதல் பிரிவு

### இயேசுநாதருடைய சத்துராதிகளின் காய்மகாரம்

**தியானம்.**—இலாசர் உயிர்த்ததைக் கண்ட அநேகர் இயேசுநாதரை விசுவசித்தார்களென்று அர்ச். அருளப்பர் சொல்லியிருக்கிறார். ஆகிலுஞ் சிலர் பரிசேயரைத் தேடிப் போய் சுவாமி செய்த காரியங்களை அவர்களிடத்தில் சொன்னார்கள். இதைக் கேட்ட பரிசேயர் ஏதோ தங்கள் குலத்துக்கெல்லாம் ஒரு பெரிய அபாயம் நேரிட்டதுபோல திடுக்கிட்டு தங்கள் மகா சங்கத்தைக் கூட்டி வைத்துச் சொன்னதாவது: நாம் என்ன செய்கிறோம்? அந்த மனுஷன் அநேகம் அற்புதங்களைப் பண்ணிக்கொண்டுவருகிறானே; இப்படி அவனைச் செய்யவிட்டு நாம் பார்த்துக்கொண்டிருந்தால் எல்லாரும் அவனை விசுவசிப்பார்களேயென்றார்கள் (அரு. 11.)

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—சனங்கள் இயேசுநாதசுவாமியை விசுவசிக்கிறதையும், அவருடைய திவ்விய நடக்கை தாறுமாறான தங்கள் நடக்கைக்கு முழுதும் விரோதமாயிருக்கிறதையும் கண்ட பரிசேயர் பிரதான ஆசாரியரோடு சேர்ந்துகொண்டு பேசின அந்தப் பேச்சில் அவர்களுக்குக் கர்த்தர்பேரிலுள்ள பகையும் காய்மகாரமும் வெளிப்படுகின்றனவல்லவோ? அவர்கள் தங்கள் மனக்குரோதத்தினால் அவரைப் பகைக்கிறதுமல்லாமல், தங்களுக்குத் தாங்களே சத்துராதிகளாய்த் தங்களை அதிகமாய்ப் பகைக்கிறார்களென்றுஞ் சொல்லத்தகும். ஏனென்றால் அவர்கள் தங்களை இரட்சிக்க வேண்டியவரைக் கொலைப்படுத்தத் தேடுகிறார்கள். ஒருவன் தன் ஆசாபாசத்துக்கு முழுதுந் தன்னைக் கையளித்தால் அவன் என்ன கேடு கெடமாட்டான்? திருச்சபையின் ஞான அரசாட்சியில் உயர்ந்த அந்தஸ்திலிருந்தவர்களுக்குள்ளும் கல்வி சாமர்த்தியத்தினாலே விளங்கின சந்நியாசிகளுக்குள்ளும் எத்தனையோ பேர் தங்கள் ஆசாபாசத் துர்க்குணங்களைச் சரியாய் அடக்காததினாலே அவைகளுக்கு இரையாய்ப் போனார்கள்! திருச்சபைச் சரித்திரத்தைபார்த்தால் இப்படிக் கெட்டவர்களுடைய கணக்கு தெரியவரும். இப்படியிருக்க நமதுமட்டில் நாம் அச்சமில்லாதிருக்கலாமோ?



**மனப்பற்றுதல்.**—உன் ஆசாபாசங்களில் மகா ஆபத்துக்குரியதேதென்று உனக்கு அறிவிக்கவும் அத்தோடு நீ வீரியமாய் நின்று போராடிச் செயங்கொள்ளவும் வேண்டிய மனத்திடனைத் தரவேணுமென்று ஆண்டவரை மன்றாடு.

**பிரதிக்கினை.**—ஆசாபாசம் உன் இருதயக் கதவைத் தட்டினவுடனே அதை எதிர்த்துப் போராடு.

## 2-ம் பிரிவு

### யூதர் தங்கள் காய்மகாரத்தை மறைப்பதற்கு எடுத்த வேஷம்

**தியானம்.**—ஆசாபாசமானது சுபாவ மரியாதைக்கும் யோக்கியத்துக்கும் விரோதமாயிருக்கிற சகல காரியங்களையும் போலவே மகா வெட்கத்துக்குரியதாயிருக்கிறபடியால் அது தன்னை ஒருபோதும் உள்ளது உள்ளபடியே வெளியில் காண்பிக்கத் துணியாமல், எப்போதும் மாய்கையான அழகு வேஷம் பூண்டு அந்த வேஷத்துக்குள் தன்னை மறைத்துக்கொள்ளும். பரிசேயரிடத்திலும் யூதருடைய பிரதான குருக்களிடத்திலும் நாம் காண்கிறதும் இதுவே.

ஏனென்றால் அவர்கள் கர்த்தர்மேல் தங்களுக்குள்ள காய்மகாரத்தைப் பொது நன்மையாகிய வேஷத்துக்குள் மறைத்தாற்போல் சொன்னதாவது: இந்த மனிதனை இப்படிச் செய்ய விட்டுவிடுவோமாகில், சனங்களெல்லாரும் இவனை மெசியாவென்றெண்ணித் தங்களுக்கு இராசாவாக்கிக் கொள்வார்கள். அப்போது ரோமானர் வந்து நமது பட்டணத்தையும் சனத்தையும் நிர்மூலமாக்கிப்போடுவார்களே யென்றார்கள் (அரு. 11).

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**— மனதில் ஒன்றும் வாக்கில் ஒன்றும் வைத்துக்கொண்டு நயவஞ்சகம் பேசித் திரியுந் துஷ்டர் இக்காலத்திலுங் கிடையாதோ? படித்துத் தேறி மேலான உத்தியோகங்களில் அமர்ந்திருக்கிற எத்தனையோ பேர் அக்காலத்துப் பரிசேயரையும் யூத ஞானிகளையும்போல இயேசுநாதரைப் பகைத்து அவருடைய திருச்சபையை அடியோடு நாசமாக்கவேணுமென்று இராப்பகலாய் முயற்சிசெய்து வருகிறார்கள்! ஏனென்றால் இத்திருவேதம் எவராலும் மதிக்கவும் பூச்சியமாய்க் கைக்கொள்ளவும்படுகிறதை அவர்களுக்குக் காணச் சகிக்கவில்லை. மேலும் அவர்களுடைய அநீதங்களையும் அசுசியான நடக்கைகளையும் இத்திருவேதம் அருவருத்து சபித்துத் தள்ளுகிறதினாலே அவர்கள் அமரிக்கையில்லாமல் எப்போதும் மனச்சாட்சியில் குத்துப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதற்காகத்தான் அவர்கள் வேதத்தை விரோதிக்கிறார்கள். ஆயினும் இந்தப் பகைக்குக் காரணம் தங்கள் ஆசாபாசமென்று கண்டுகொண்டாலும் அதை ஒத்துக்கொள்ளாமல், சனத்தின் பொதுநன்மைக்குத் திருச்சபை எதிரிடையாயிருக்கிறதினாலே அதைப் பகைக்கிறோமென்பார்கள். இதினால் விளையும் தின்மையேதெனில்: அவர்கள் தங்களையே மோசம்போக்குகிறதுமல்லாமல் விசேஷமாய் வாலிபர்களுக்குள் புத்திமட்டான அநேகம் பேர்களையும் தங்கள் பாரிசமாய் இழுத்துக் கெடுப்பார்கள். இவ்விதமாய் ஆசாபாசமானது பலவித கண்ணிகளையும் இரைகளையும் போட்டு மனிதரைப் பிடித்து மோசப்படுத்துகிறது.



**மனப்பற்றுதல்.**—ஆசாபாச வலையில் நாம் அகப்பட்டுக் கெடாதபடி நம்மைக் காப்பாற்றின ஆண்டவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செலுத்தக்கடவோம். அன்றியும் வாலிபரைப் படிப்பிக்குந் தொழில் நமக்குண்டானால் அதற்கு நாம் படும் பிரயாசத்தை ஆண்டவர் ஆசீர்வதிக்க மன்றாடுவோமாக.

**பிரதிக்கினை.**—சர்வேசுரன் என்மேல் விசேஷ கிருபா கடாட்சம் வைத்து எனக்குச் செய்துவரும் கணக்கில்லாத உபகாரங்களை நினைவில் வரப்பண்ணி, அவருடைய திரு ஊழியத்திலே பத்தி சுறுசுறுப்பையும் தாராளமனதையும் என்னிடத்தில் மூட்டிக்கொள்வேன்.

## 3-ம் பிரிவு

### யூதர் தங்கள் சதியோசனையை வெளியரங்கமாய்க் காட்டுகிறார்கள்

**தியானம்.**—இந்தக் காய்மகாரிகளின் உள்ளத்தில் துவக்கத்திலே மறைந்திருந்த பகையானது கடைசியாய் நாணமுங் கூச்சமுமில்லாமல் வெளிப்பட்டது. எப்படியென்றால்: இந்தக் கூட்டத்தாரில் ஒருவனுமாய் அந்த வருஷத்தில் பெரிய குருவுமாயிருந்த கைப்பாஸ் சொன்னதாவது: உங்களுக்கு ஒன்றுந் தெரியாது; நமது சாதி முழுதுங் கெட்டுப்போகாதபடி அவர்களுக்காக ஒருவன் மாத்திரஞ் சாகிறது நன்மையென்று உங்களுக்குத் தோன்றுகிறதில்லையோவென்றான். கைப்பாசென்பவன் சூட்சவினையமாகவும் கொடிய துஷ்டத்தனமாகவும் பேசினாலும், தன்னையறியாமலே இஸ்பிரீத்துசாந்துவினால் ஏவப்பட்டுப் பேசினானென்று அர்ச். அருளப்பர் உரைத்திருக்கிறார். ஏனெனில் யூதர்களை இரட்சிக்கமாத்திரமல்ல, உலகமெங்குஞ் சிதறி நிற்கிற சர்வேசுரனுடைய பிள்ளைகளாகிய சகல சாதி ஜனங்களையும் ஒன்றாய்ச் சேர்த்து இரட்சிக்கும்படி இயேசுநாதர் மரிக்கவேணுமென்கிற தீர்க்கதரிசனத்தை இவன் உறுதிப்படுத்தினாற்போலாயிற்று. இவனுடைய அபிப்பிராயஞ் சங்கத்தாரால் அங்கீகரிக்கப்பட்டது.

ஏனென்றால் அன்றுமுதல் அவர்கள் இயேசுநாதரைக் கொல்லவேணுமென்பதைவிட வேறொன்றும் நினைக்கவில்லையென்று வேத புஸ்தகத்தில் சொல்லியிருக்கிறது. இரட்சகரோவென்றால் அவர்களுடைய கோப மூர்க்கத்துக்கு விலகி யூதேயா நாட்டைவிட்டு வனாந்தரத்துக்குச் சமீபமான எபிரேமூருக்குப் போய் அவ்விடத்திலே தமது சீஷர்களோடு கூட சுமார் ஆறுநாளிருந்தார் (அரு. 11).

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—கைப்பாஸ் பெரிய குருவாயிருந்ததினாலே மெய்யாகவே சர்வேசுரனால் ஏவப்பட்டுத் தீர்க்கதரிசனஞ் சொன்னானே. ஆகையால் சுபாவத்துக்கு மேற்பட்ட காரியங்களிலே குருவானவருடைய அதிகாரமானது அவர் பெற்ற பட்டத்தினாலே செல்லுகிறதல்லாமல், அவருடைய சுய புண்ணியபலன்களினால் அல்லவென்று அறியக்கடவோம். இதினாலே நாம் எப்பேர்ப்பட்ட குருவானவரிடத்தில் தேவத்திரவிய அனுமானங்களைப்பெற நேரிட்டாலும் அவைகள் மெய்யான தேவத்திரவிய அனுமானங்களென்பதற்கு இது உறுதியான அத்தாட்சியாயிருக்கின்றது. இயேசுநாதர் தாமிருந்த இடம்விட்டு வேறேயிடத்துக்குப் போனதைப் பார்க்கும்போது, நம்மை உபாதிக்கிறவர்களை விட்டு விலகுகிறது கோழைத்தனமல்லவென்றும், அவர்களிடத்தில் வலியப்போய் அகப்பட்டுக்கொள்ளுகிறது அவிவேகத்தோடுகூடிய மிஞ்சின துணிகரமென்றும் உணர்ந்துகொள்ளக்கடவோம். இதில் திவ்விய கர்த்தர் நமக்குக் கொடுத்த இந்த இரண்டு புத்திமதிகளையும் நன்றாய் யோசித்து இவைகளுக்கு இணங்கி விமரிசையோடு நடந்துகொள்வோமாக.

**சம்பாஷணை.**—நமக்குத் திவ்விய உபாத்தியாயரும் மாதிரிகையுமான இயேசுநாதரோடு சம்பாஷணை செய்யக்கடவோம்.



# 15-ம் தேதி

## இயேசுநாதர் எபிரேமூரில் ஒதுங்கியிருக்கிறார்

### நமது வருஷாந்திர ஞான ஒடுக்கத்தின்பேரில்

**ஆயத்தச் சிந்தனை.**—இயேசுநாதர் மனுஷ சந்தடியில்லாத ஓரிடத்தில் தமது அப்போஸ்தலர்களோடுகூட ஒதுங்கியிருந்ததைப் பார்க்கிறதாக ரூபிகரித்துக்கொள்ளுவோமாக.

**தியானச் சேபம்.**—வருஷாந்தர ஞான ஒடுக்கத்தின் கனத்தைச் சரியாய்க் கண்டுபிடிக்கவும் அதிக நல்லவர்களாகும்படியான விதமாய் அதை நாம் செய்யவும் வரங் கேட்கக்கடவோம்.

## முதல் பிரிவு

### ஞான ஒடுக்கம் மகா முக்கியமானது

**தியானம்.**—இயேசுநாதர்சுவாமி பாடுபடுவதற்கு இரண்டு வாரத்துக்குமுன் தமது அப்போஸ்தலரோடுகூட எபிரேமூரில் மகா அமரிக்கையான இடத்தில் ஆறுநாள் ஒதுங்கியிருந்த வர்த்தமானத்தை யோசிக்குமிடத்தில், நமது ஒழுங்கில் கண்டிருக்கிறபடி நாம் வருஷந்தோறும் ஆறு அல்லது எட்டுநாள் செய்யவேண்டிய ஞான ஒடுக்கத்தின் நினைவு வருகின்றது. இந்த ஆறு அல்லது எட்டு நாட்கள் நமக்கு எவ்வளவோ விலையேறப்பட்ட நாட்கள்! இந்த நாட்களில் நாம் அடையவேண்டிய பலன்கள் வருஷத்திலுள்ள ஒவ்வொரு நாட்களையுமல்லாமல் நமது சீவியகாலமெல்லாத்தையும் ஒழுங்குபண்ணிச் சீர்படுத்த வேண்டியவை. இந்த ஞான ஒடுக்கத்தின்மேல் நமக்கு மகா மேலான எண்ணம் உண்டாகும்படிக்கு இதின் கதியென்னவென்று ஆராய்ந்து பார்க்கக்கடவோம். தனக்குள்ளே பிரவேசித்து, சகல புறத்திக் கவை காரியங்களையுந் தன்னை விட்டுத் தூர அகற்றி ஆதியோடந்தமாய்த் தன்னை அறிகிற

தும், தன் அந்தஸ்துக்கடுத்த குறைகுணமும், வார்த்தைப்பாடுகளின் அநுசரணையும் தன்னிடத்தில் என்ன சிரா யிருக்கிறதென்று பார்க்கிறதும் ஒடுக்கத்தின் முதல் கதியாகும். இதுவரையில் தனக்குவந்த ஞான நஷ்டத்தைப் பரிகரித்து, உருக்கக் கண்ணீராலும் வருஷத்துப் பொதுப் பாவசங்கீர்த்தனத்தாலும் அல்லது பொது ஆத்தும சோதனையினாலும் தன்னிருதயத்தை மேலான மனஸ்தாபத்தின் வழியாய்ச் சுத்திகரிப்பது இரண்டாங் கதியாகும். இனிமேல் சரியாய் நடக்கும்படி செய்யத்தக்கதேதென்று விசாரித்து மகா பத்தி சுறுசுறுப்போடே அதின்பேரில் பிரதிக்கினை பண்ணிக்கொள்ளுகிறது ஞான ஒடுக்கத்தால் அடையவேண்டிய மூன்றாம் கதியென்று சொல்லப்படும். ஏனெனில், நாம் நம்மிடத்தில் முந்தியிருந்த பத்தி சுறுசுறுப்பைவிட்டு வழக்கமாய்த் தளர்ந்துபோகிறோம். நமது ஞான முயற்சிகள் நமது பத்தி வேகத்தைத் தாங்கி வளர்க்க வேண்டுமென்பது உள்ளதுதான். ஆனால் அந்தச் சாங்கோபாங்க எத்தனங்கள் இயல்பிலே எவ்வளவுதான் சத்தியுள்ளவைகளாயிருந்தாலும், அவைகளை நாம் புழங்கப் புழங்க நமது கையிலே அவைகள் தேய்ந்து உபயோகமற்றுப் போகின்றன. இந்தப் பொல்லாப்பை நீக்கி, அநுதினம் நாம் செய்யவேண்டிய பத்திக் கிருத்தியங்களிலே நமது மனதைப் புதுப்பிக்கிறதும் இனிமேல் அவைகளை நன்றாய் அநுசரிக்கப் பழக்கமுண்டாக்கிறதும் ஞான ஒடுக்கத்தின் கதியென்றுஞ் சொல்லலாம்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—இவ்விடத்தில் ஞான ஒடுக்கத்தைப்பற்றி ஏற்றி வளர்த்திப் பேசாமல், சுருக்கமாய் உள்ளதை உள்ளபடி எடுத்துக் காட்டியிருக்கிறதைப் பார்க்குமிடத்தில் இது எவ்வளவு கனத்த காரியமென்றும் இதை அசட்டையாய்ச் செய்கிறதினால் உண்டாகும் ஆபத்து எப்பேர்ப்பட்டதென்றுங் கண்டுகொள்ளாதவனார்? இதுவரையில் நீ ஞான ஒடுக்கத்தை எப்படிச் செய்தாயென்று உன் மனச்சாட்சியைத் தட்டி எழுப்பிக் கேள். அது உண்மையைச் சொல்லும்.



**மனப்பற்றுதல்.**—சென்ற காலத்தில் நீ அசட்டையாயிருந்ததற்குப் பொறுத்தலைக் கேள். என்னிடத்தில் அநேக குற்றங் குறைகளிருந்தபோதிலும் வருஷந்தோறும் செய்யும் ஞான ஒடுக்கத்தை எப்போதும் கரிசனத்தோடு செய்தேனென்று சாகுஞ் சமயத்திலே நீ சொல்லக்கூடுமாயிருக்கும்படி ஞான ஒடுக்கத்தை நன்றாய்ச் செய்யவேணுமென்று மிகுதியான ஆசையை மனதில் எழுப்பிக்கொள்.

**பிரதிக்கினை.**—நான் ஒடுக்கஞ் செய்த நாள் எவ்வளவுக்குத் தொலையாய்ப் போகிறதோ அவ்வளவுக்கு அந்த ஒடுக்கத்தில் நான் அடைந்த பலனை இழந்துபோகாதபடி முயற்சி செய்வேன்.

## 2-ம் பிரிவு

### ஒடுக்கத்தை நன்றாய்ச் செய்வதற்கான உபாயங்கள்

**தியானம்.**—ஞான ஒடுக்கத்தை நீ ஆனவகையோடு செய்யத்தக்கதாக முந்தமுந்த அந்தக் காலத்திலே நீ உன் சொந்த நன்மைக்காகவே உழைத்துப் பிரயாசப்படுகிறாயென்று நினைத்துக்கொள். வருஷத்தில் அத்தனை நாள் பிறருடைய நன்மைக்காகச் செலவிட்டபின்பு உன் சொந்தப் பிரயோசனத்துக்காக எட்டு அல்லது பத்து நாள் வைத்துக்கொள்வது நியாயமல்லவோ? மேலும் நீ செய்யப்போகிற அந்தத் தியானத்துக்குச் சர்வேசுரன் விசேஷ வரப்பிரசாதந் தந்தருள நித்தியமாய் நிருபித்திருக்கிறாரென்றும், நீ புண்ணியத்தில் நிலைகொள்ளுகிறதோ நித்திய கேட்டை அடைகிறதோ இவ்விரண்டில் ஒன்று, நீ அந்தத் தியானத்தை நன்றாய் அல்லது அசட்டையாய்ச் செய்வதற்குத் தக்காப்போலிருக்குமென்றும் நினைத்துக்கொள். அன்றியும் அதுவே உனக்குக் கடைசி ஞான ஒடுக்கமாயிருக்கக்கூடும். அதைக்கொண்டு நீ மரணத்துக்கு ஆயத்தஞ் செய்யவேணுமென்று சர்வேசுரனுடைய அந்தரங்க தீர்மானமாய் இருந்தாலும் இருக்கும். 2-வது, அதை நன்றாய்ச் செய்து முடிக்கவேணுமென்கிற வேகமான ஆசையை மனதில் எழுப்பிக்கொண்டு சர்வேசுரன்பேரில்

உன் நம்பிக்கையெல்லாம் வைக்கக்கடவாய். தம்மை நம்பினவர்களைக் கைவிடாதவரான சர்வேசுரன் நீ அந்த ஒடுக்கத்தின் பலனை அடையும்படி வேண்டிய உதவிசெய்யத் தவறமாட்டார். 3-வது, உன் விண்ணப்பத்தை ஆண்டவர் கையேற்றுக்கொள்ளுவாரென்று திண்ணமாய் மனதில் எண்ணிக்கொண்டு வெகுவாய் வேண்டிக்கொள். விசேஷமாய்ச் செபத்தோடு யாதொரு ஒறுத்தல் முயற்சியுஞ் செய்து தேவமாதாவின் பெயரால் பிரார்த்திப்பாயானால் உன் மன்றாட்டைச் சர்வேசுரன் அகத்தியமாய்க் கேட்டருளுவார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நாம் சர்வேசுரனைப்பற்றி யோசித்தாலும் பிறரைப்பற்றி யோசித்தாலும், மேற்காட்டிய உபாயங்களை உதவிக்கொள்வதற்குப் பல ஞாயங்களைக் காணலாம். முதலாவது, சர்வேசுரனைப் பற்றிய ஞாயம் என்னவென்றால்: ஞான ஒடுக்கம் செய்யும் பாக்கியம் சர்வேசுரன் உனக்குக் கட்டளையிட்டதினாலே அதற்கு உனனிடத்தில் கண்டிப்பான கணக்குக் கேட்பார். இது எல்லாருக்குங் கிடைக்கிற பாக்கியமல்லவே. நரகத்தில் விழுந்து கிடப்பவர்களுக்குள் எத்தனையோ பேருக்கு இது கிடைக்கவில்லை. கிடைத்திருக்குமானால் எத்தனையோ பேர் பெரிய அர்ச்சியசிஷ்டவர்களாய்ப் போயிருப்பார்கள்! 2-வது, பிறரைப்பற்றிய ஞாயமேதென்றால், நீ ஞான ஒடுக்கத்தை நன்றாய் செய்து மிகுந்த பத்தி வைராக்கியமும் பிறரீடேற்ற ஆவலுமடைந்து அதினால் அநேகமாயிரம் ஆத்துமாக்களைக் கரையேற்றுவாயென்றும், அதை நன்றாய்ச் செய்யாதேபோனால், அத்தனை ஆத்துமாக்களும் கெட்டுச் சேதமாய்ப் போவார்களென்றும் நினைத்துக் கொள்.

மனப்பற்றுதல்.—ஞான ஒடுக்கத்தைச் செம்மையாய்ச் செய்ய உதவிசெய்யவேணுமென்று தாழ்ச்சி ஆவலோடு ஆண்டவரை மன்றாடு.

பிரதிக்கினை.—ஞான ஒடுக்கஞ் செய்யும்போதெல்லாம் அது எனக்குக் கடைசி ஒடுக்கமென்று எண்ணிக் கொண்டு செய்வேன்.



## 3-ம் பிரிவு

### ஞான ஒடுக்கத்தில் அடைந்த பலன்கள் நிலைத்திருக்கும்படி செய்யத்தக்க உபாயங்கள்

தியானம்.—நீ செய்யும் ஞான ஒடுக்கத்தின் பலன்கள் நாட்பட நிற்கத்தக்கதாக இப்போது சொல்லப்போகிற உபாயங்களைக் கையாடி வருவாயாக.

முதலாவது, ஞான ஒடுக்கத்தைவிட்டு வெளிப்படுமுன் சர்வேசுரனுக்கும் மனுஷருக்கும் முன்பாக உன் நடக்கையிலும் செய்கையிலும் தள்ளவேண்டிய குற்றங் குறைகள் இன்னின்னதென்றும், நீ அடையவிரும்புகிறதும் அடைய வேண்டியதுமான சுகிர்த அப்பியாசங்கள் இன்னின்னதென்றும் திட்டமாய் வரையறுத்து ஓர் சீட்டில் குறித்துக் கொள்.

2-வது, இப்படித் திட்டவட்டமாய்க் குறித்துக் கொண்ட காரியங்களைப் பங்கு பங்காயெடுத்து அவைகளின் மேல் தனி ஆத்துமசோதனை செய்.

3-வது, ஞாயிற்றுக்கிழமை அல்லது திங்கட்கிழமை தோறுமாவது, கூடாதபட்சம் பதினைந்து நாளுக்கு ஒருவிசையாவது இதின்பேரில் தியானஞ் செய்.

4-வது, மாதாந்தர ஒடுக்க நாளில் இவைகளைப்பற்றி வெகு நுணு நுணுக்கமாய் உன்னைப் பரிசோதித்து, ஆத்தும குருவிடத்தில் கணக்கொப்பிக்கக்கடவாய்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—மேற்சொன்னவைகளில் நீ எதைத் தவறவிட்டாயென்று பார்த்து இனிமேல் அதிகப் பிரமாணிக்கமாய் நடப்பேனென்று பிரதிக்கினை செய்துகொள். இயேசுநாதசுவாமி எபிரேம் ஊரில் ஒதுங்கியிருந்ததின்பேரில் தியானஞ் செய்கிறது துவக்கத்தில் பார்வைக்கு அவ்வளவு பிரயோசனம் போல் தோன்றாவிட்டாலும், காரியத்தை உள்ளபடி விசாரிக்குமிடத்தில் எந்நாளும் நமது நடபடிக்கைக்கு மகா பிரயோசனமும் நன்மையுமுள்ளதாய்க் காண்கிறோம்.

சம்பாஷணை.—எபிரேமூரில் ஒதுங்கியிருந்த திவ்விய கர்த்தரோடு சம்பாஷணை செய்.

# 16-ம் தேதி

## எப்போதுஞ் சேபிக்கவேண்டும் என்பதின்பேரில்

**ஆயத்தச் சிந்தனை.**—ஒருபோதுஞ் சலியாமல் எப்போதுஞ் செபிக்கவேண்டுமென்று இயேசுநாதர்சுவாமி திருவுளம்பற்றுகிறதாக ரூபிகரித்துக்கொள்.

**தியானச் சேபம்.**—இந்தக் கற்பனையைச் சுமுத்திரையாய் நிறைவேற்ற அநுக்கிரகங் கேள்.

### முதல் பிரிவு

#### சேபத்தின் அவசரம்

**தியானம்.**—செபத்தின் அவசரத்தைவிட வேறெந்தக் கடமையையும் சுவிசேஷம் நமக்கு அத்தனைவிசை திரும்பத் திரும்ப ஞாபகப்படுத்துகிறதில்லை என்கலாம். இந்தக் கடமை எவ்வளவு பெரிதென்று காண்பிக்கத்தக்கதாக திவ்விய கர்த்தர் இடைவிடாமல் செபிக்கவேண்டியதென்று கற்பித்திருக்கிறார். ஏனென்றால்: நமது சீவியகாலத்தில் எப்போதும் எவ்வித நிலைமையிலும் பசாசின் தந்திரங்களோடு போராடி ஜெயங்கொள்வதற்கானாலும் நமது கடமைகளைச் சரிவர நிறைவேற்றி முடிப்பதற்கென்கிலும் தேவ வரப்பிரசாதம் அத்தியந்த அவசரமாயிருக்கின்றது. ஆனால் செபமும் வரப்பிரசாதமும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டிருப்பதினால் செபமில்லாமல் வரப்பிரசாதம் வரமாட்டாது. இதைப்பற்றியே: கேளுங்கள்; கொடுக்கப்படுமென்று இயேசுநாதர்சுவாமி ஏற்பாடு செய்திருக்கிறார். ஆகையால் நீ நிரம்பக் கேட்டால், நிரம்ப அடைவாய், குறையக்கேட்டால் குறைய அடைவாய். இதைப் பற்றித்தான் செபத்தால் எல்லாம் ஆகும்; செபமில்லாமல் ஒன்றும் ஆகாதென்கிற சுலோபம் வழங்கிவருகிறது.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—எப்போதும் இடைவிடாமல் செபிக்கவேணுமென்கிற இந்தக் கற்பனையை நாம் எப்படி அநுசரித்துவரலாம்? இதற்கு அநேக வழிவகைகளுண்டு. அவைகளுக்குள் யாதொரு மனவல்லயச் செபத்தைச் சொல்லிவர அப்பியாசப்படுவது ஒன்றுமே. ஏனென்றால்: இந்த அப்பியாசத்தினாலே யாதொரு பிரயாசமும், நமது வேலைகளுக்கு யாதொரு விக்கினமுமின்றி தன்னிச்சையாய் வாயினாலாவது மனதினாலாவது அநந்தமுறை இந்தச் செபத்தைச் சொல்லிவருவோம். இவ்விதமே மகாத்துமாவான தெப்போங்தே லூயிஸ் என்பவர்: என் சர்வேசுரா, உமக்காக அதாவது உமது தோத்திரமாக எல்லாஞ் செய்கிறேன் என்னும் இந்த வார்த்தைகளை ஏறக்குறைய இடைவிடாமல் சொல்லப் பழகியிருந்தார். இந்த நல்ல அப்பியாசத்தைக்கொண்டு சர்வேசுரனோடு ஓயாமல் அன்னியோன்னியமாய்த் தாம் ஒன்றித்திருந்ததாக அவரே சொல்லியிருக்கிறார். இதினாலே அவர் எப்போதும் ஓயாமல் செபித்துவந்தாரென நவேணும். இதையறிந்து, நீயும் அவரைப்போல் யாதொரு பத்தியுள்ள செபத்தை உனக்கு அப்பியாசமாக்கி, அதைக்கொண்டு சர்வேசுரனோடு ஒன்றித்திருந்தாலல்லோ நல்லது என்று ஆசிக்கிறாயாக்கும். மெய்யாகவே இந்த ஒன்றிப்பு எவ்வளவோ நன்மை பிரயோசனமுள்ளது! சகல தந்திர சோதனைகளுக்கும் சீவியகாலத்தில் நேரிடும் எவ்வித ஆபத்து மோசங்களுக்கும் புண்ணிய சாங்கோபாங்கத்தை அடைவதற்கு வரும் விக்கினங்களுக்கும் ஒருபோதும் பின்வாங்காமல் தீர்க்கமாய் நடப்பதற்கு இந்த ஒன்றிப்பு எவ்வளவோ மனத்தைரியத்தைக் கொடுக்கும்! ஆயினும் இது உன் கையில்தானிருக்கிறது. அநந்தம்பேர் நிலைமையோடும் தாராளகுணத்தோடும் இதற்கு முயற்சி செய்ததுபோல நீயுஞ் செய்துவந்தால் அவர்களடைந்த அப்பியாசத்தை நீயும் அடைவதற்குத் தடையென்ன?

**மனப்பற்றுதல்.**—இத்தனை நன்மைகள் வருவதற்கு வழியாகிய இந்த நல்ல அப்பியாசம் உனக்கு உண்டாகத் தக்கதாக ஆன உபாயமெல்லாம் உதவிக்கொள்ளத் திடமான மனதை உன்னிடத்தில் எழுப்பிக்கொள்.

**பிரதிக்கினை.**—என்ன வருத்தம் என்ன பாடு பட்டாலும் இந்த நல்ல அப்பியாசத்தைக் கைக்கொள்ளுமட்டும் சும்மா இருக்கமாட்டேன்.

## 2-ம் பிரிவு

### செபத்தில் அதைரியம் வராதபடி முன்னதாகச் செய்யத்தகும் வழிவகைகள்

**தியானம்.**—திவ்விய இரட்சகர் எப்போதும் செபஞ் செய்யவேணுமென்று கற்பித்ததோடுகூட செபத்தில் சலித்துப்போகக் கூடாதென்றுஞ் சேர்த்துக் கற்பித்திருக்கிறார். நாம் கேட்கும் மன்றாட்டைக் கைக்கொள்வதற்கு வெகு காலஞ் சென்றாலும் அதினால் நாம் செபத்தை விடப்படாதென்பது இதின் கருத்தாகும். இயேசுநாதர்சுவாமி அந்தக் கற்பனை கொடுத்தபோது திருவுளம்பற்றிய ஓர் உவமையும் இந்தக் கருத்தை உறுதிப்படுத்துகிறது. அதாவது: ஒருவன் ஒரு ஏழை விதவைக்குச் செய்த அநியாய கொடுமையினிமித்தம் அவள் நெடுநாள் நியாயாதிபதியிடத்தில் முறையிட்டும் அவன் கேளாததுபோல் இருந்தான். அவளோ சலியாமல் விண்ணப்பத்தின்மேல் விண்ணப்பஞ் செய்துவந்தபடியால் அவளுடைய அலட்டைப் பொறுக்கமாட்டாமல் அவன் தனக்குள்ளே சொல்லிக்கொண்டதாவது: இந்த விதவை எந்நேரமும் என்னை அலட்டிக்கொண்டிருக்கிறதினால் இவள் நியாயத்தைக் கேட்டுத் தீர்ப்பிடுவேனென்றான் (லூக். 18).

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—எப்போதும் செபஞ்செய்ய வேணுமென்று திவ்விய குருவானவர் நமக்குக் கற்பித்தபிறகு, செபத்திலே நிலைமையாயிருக்கவும் அதிலே எளிதாய் வருஞ் சலிப்புக்கு இடங்கொடாமலிருக்கவும் நம்மை எச்சரிப்பது அவசரமாயிருந்தது. ஏனெனில்: இக்கட்டு வரும்போது பத்தி நம்பிக்கையோடு செபம் பண்ணுகிறவர்கள் அநேகராயினும், வெகுநாள் மன்றாடியும் தேடின பலனைக் காணாமல் மனத்திடனற்று நம்பிக்கையிழந்து போகிறவர்கள் எத்தனையோ பேர்! அந்த



உவமையில் சொல்லப்பட்ட விதவை நிலைமையோடு அலட்டிக் கேளாதிருந்தால் அவளுக்கு நியாயங் கிடைத்திருக்குமோ? ஆண்டவர் நமது மன்றாட்டைக் கேட்டருள அநேக சமயங்களில் தாமதமாயிருக்கிறதைக் கண்டும், நமது அயோக்கியத்தையும், குற்றங்களையும், தவறுதல்களையும் நினைத்துச் சர்வேசுரன் நமது மன்றாட்டைக் கேட்க நாம் பாத்திரமல்லவென்று எண்ணியும் செபத்தைக் கைவிடுகிறோம். இது பசாசின் மாய்கையென்பதற்குச் சந்தேகமில்லை. இதினால் அதைரியமும் அத்தோடுகூடிய பல தீங்குகளும் வருமென்பதினாலே அவைகளை ஏற்கனவே தடுப்பதற்காக, தாழ்ச்சியும் மனஸ்தாபமுமுள்ள இருதயத்தினின்று பிறக்கும் செபம் சர்வேசுரனுக்கு எப்போதும் உகந்ததென்றும், நமது நிற்பாக்கியங்கள் எவ்வளவுக்கு அதிகமாயிருக்குமோ அவ்வளவுக்குந் தேவ கிருபை ஒத்தாசையை நாம் நம்பியிருக்கத்தகுமென்றும் நினைத்துக் கொள்ளக்கடவோம். அன்றியும் கேட்கிற எவனும் பெற்றுக்கொள்வானென்று இயேசுநாதசுவாமி செய்த வாக்குத்தத்தம் ஒருவருக்குச் செல்லும், ஒருவருக்குச் செல்லாதென்று சொல்லப்படாது. அது சகலருக்கும் பொதுவான வாக்குத்தத்தம். கடைசியாய்ச் செபத்தைச் செய்கிறவன் பாவியோ புண்ணியவானோ எப்படிப்பட்டவனாலுஞ் சரி, நன்றாய்ச் செய்யப்பட்ட செபம் எப்போதும் சர்வேசுரனால் கேட்டருளப்படும். இவைகளை மனதில் ஸ்திரமாய் வைத்துக்கொண்டு அதைரியத்துக்கு இடங்கொடாதிருக்கக்கடவோம். நாம் கேட்கிற மன்றாட்டை அடையாமற்போனாலும், அதற்குப் பதிலாய் அநேகாநேக முறை அவைகளைவிட அதிக விலையேறப்பெற்ற சகாயங்களை நமக்குத் தெரியாமலே நாம் பெற்றுக்கொள்வோமென்கிறதற்குச் சந்தேகமில்லை.

**சம்பாஷணை.**—செபம்பண்ண வேணுமென்று நமக்குக் கற்பித்து மாதிரிகையுங் காண்பித்த இயேசுநாதரோடே சம்பாஷணை செய். அவர் பகல் முழுதும் பிரசங்கித்துப் பிரயாசப்பட்டபின் அடிக்கடி இராக்காலமெல்லாஞ் செபத்தில் செலவழிப்பார் (லூக். 6). நமக்கும் செபத்

தியானப் பற்றுதல் தந்தருளவேணுமென்று அவரை இரந்து மன்றாடக்கடவோம். அதில்லாதேபோனால் சர்வேசுரனையும் நம்மையும் பிறரையும்பற்றி யாதொரு பலத்த காரியமுஞ் செய்ய நம்மாலாகாது.

---

# 17-ம் தேதி

## இயேசுநாதர் பேத்தானியாவூரில் இரண்டாம்விசை அசனம்பண்ணினபோது மரியமதலேனம்மாள் அவர்மட்டில் திரும்பவும் காண்பித்த பத்தி சிநேக அடையாளம்

ஆயத்தச் சிந்தனை.—மரியமதலேனம்மாள் இயேசுநாதருடைய சிரசில் பரிமளத் தைலத்தை வார்க்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

தியானச் சேபம்.—மரியமதலேனம்மாள் இயேசுநாதரைச் சிநேகித்ததுபோல் நீயும் அவரைச் சிநேகிக்க வரப்பிரசாதங் கேள்.

### முதல் பிரிவு

**மரியமதலேனம்மாள் நடந்த வகை**

தியானம்.—பெத்தானியாவூரிலே பரிசேயனான சீமோன் வீட்டில் இயேசுநாதர் முதல்விசை அசனம்பண்ணினபோது மரியமதலேனம்மாள் அவர் பாதத்திலே பரிமளத் தைலத்தைப் பூசினாள். அவர் பாடுபடுவதற்கு முந்தின ஆறும்நாளாகிய இந்தச் சமயத்தில் இலாசருங் கூடப் பந்தியிலிருக்க அவர் செய்த இரண்டாம் அசனத்திலே, மரியமதலேனம்மாள் வெகு விலையுள்ள ஒரு இராத்தல் பரிமளத் தைலத்தை எடுத்து, அசனஞ் செய்துகொண்டிருந்த அவருடைய சிரசிலே வார்க்கவே வீடெங்கும் பரிமளத்தால் நிறைந்தது. அதை அவருடைய பாதத்திலும் பூசித்



தன் தலைமுடியால் துடைத்தாள் (அரு. 12). இவ்விதமாய் இந்தப் புண்ணியவதி, இயேசுநாதசுவாமிமட்டில் தனக்குள்ள பத்தி பற்றுதலையும் நன்றியறிதலையும் காண்பிக்க எப்போது சமயங் கிடைக்குமோவென்று பார்த்து, ஆன சமயங் கிடைத்தவுடனே அதைத் தவறவிடாமல் உதவிக்கொள்ளுகிறதைப் பார். மேலும் முந்தித் தனக்குப் பெருமை சலாக்கியத்துக்கு ஏதுவாயிருந்த பரிமளதைலத்தையும் தன் நீண்ட கூந்தலையும் இப்போதும் ஆண்டவருக்குப் பலியிட்டு, அவைகளைக்கொண்டு அவருக்குப் பணிவிடை செய்கிறதைக் கவனித்துப்பார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இந்தப் பேர்போன தபசியைக் கண்டுபாவித்து, உன் திவ்விய குருவின்மட்டில் உனக்குள்ள நன்றியறிதலையும் மனத்தாராளத்தையும் காண்பிக்கும்படி கிடைக்கும் சமயங்களைக் கைவிடாதே. அந்த அம்மாளைப்போல நீயும் உன்னிடத்திலுள்ள விலையேறப்பெற்றவைகளை அவருக்குக் காணிக்கையாக ஒப்புக்கொடு. அதாவது: உன் மனச் சுயாதீனத்தையும், சுயபுத்திபெண்ணங்களையும் அவருக்கு வசீகரமாக்கி, சுபாவத்துக்கு வருத்தமான சமயங்களிலேமுதலாய் அவரைக் குறித்துக் கீழ்ப்படிந்து நட. அர்ச். சின்னப்பர் சொல்வதுபோல நீ இயேசுநாதருடைய பரிமள வாசமாயிருக்கவும், மகா ஒழுங்குக் கிரமமாய் நடந்து சகலருக்கும் நன்மாதிரிகை காண்பித்து, அந்தப் பரிமளம் எங்கும் வீசவும் பிரயாசப்படக்கடவாய். அவருடைய திருப்பாதத்தில் பரிமளத் தைலத்தைப் பூசினாற்போல, அவருடைய ஞான அவயவங்களுக்கு ஒப்பாயிருக்கிற தரித்திரர் நோவாளிகள் முதலியவர்களுக்கு உன்னால் கூடிய ஒத்தாசை செய். இது விஷயத்தில் நீ இதுமட்டும் நடந்தவிதமென்ன?

மனப்பற்றுதல்.—உன் மனத்தாராளக் குறைவைப் பற்றி ஆண்டவரிடத்தில் பொறுத்தலைக் கேள்.

பிரதிக்கினை.—முன்னால் நீ எதெதைப் பாவத்துக்கு உதவிக்கொண்டாயோ அதைச் சுவாமிக்குப் பலியிட்டு உன் தாராளத்தைக் காண்பிக்கக்கடவாய்.

## 2-ம் பிரிவு

### யூதாஸ் இஸ்கரியோத்து நடந்தவிதம்

**தியானம்.**—மதலேனம்மாள் ஆண்டவருக்கு உதாரமாய்ச் செய்ததை யூதாஸ் இஸ்கரியோத்து கண்டு மனஞ் சகிக்கவில்லை. ஆயினும் அவனுக்கு யாராவது அப்படிச் செய்திருந்தால் அவன் மனங் குளிர்ந்திருக்கும். ஆகையால் அவன் தன் கிட்ட இருந்தவர்களை நோக்கி: இதை முந்நூறு தெனியர் பணத்துக்கு விற்றுத் தரித்திரருக்குக் கொடுத்திருக்கக்கூடாதோவென்றான். இப்படிப் பொருளாசையென்னுந் துர்க்குணத்தைத் தர்மமென்கிற போர்வைக்குள் வைத்து மறைத்துக் காட்டினான். அர்ச். அருளப்பர் சொல்லுவதும் இதுவே. ஏனென்றால்: அவன் தரித்திரர்மட்டில் கவலைப்பட்டுச் சொன்னதல்ல; கள்ளனும், பணப்பையை வைத்துக்கொண்டு காணிக்கைகளைச் சுமக்கிறவனுமாய் இருந்தபடியால் அப்படிச் சொன்னானென்றார். அப்போது இயேசுநாதர் மதலேனம்மாளுக்குச் சனுவாக: ஏன் இந்தப் பெண்பிள்ளையைத் துன்பப்படுத்துகிறீர்கள்? இவள் செய்தது நன்மையான காரியந்தான். அடக்கத்துக்காக ஏற்கனவே என் சரீரத்தைப் பூசியிருக்கிறாள். உலகத்தின் எத்திசையிலும், இந்தச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படும் இடமெல்லாம் இவள் செய்ததும் இவளுக்குப் புகழ்ச்சியாகச் சொல்லப்படுமென்று உங்களுக்குச் சத்தியமாகவே சொல்லுகிறேனென்றார் (மாற். 14).

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது**—இந்த வர்த்தமானத்தில் நமக்கு ஒரு பக்கத்தில் ஞானக் கோபமும், மற்றொரு பக்கத்தில் மகா ஞான சந்தோஷமும் உண்டாகிறதல்லவோ? பன்னிருவரில் ஒருவனாகிய யூதாஸ் முழுதுங் கெட்டுக் கள்ளனும் வஞ்சகனுமாகி, தன் தேவ குருவுக்கு மகிமையாகச் செய்த காரியத்திலே முதலாய் மனம் பொறாமல் குறைசொன்னதைப் பார்க்கும்போது, யாருக்குத்தான் கோபம் வராதிருக்கும்! இன்னொரு பக்கத்தில் மகா சாந்தமுள்ள இயேசுநாதர் யூதாசுடைய மனதிலிருந்ததெல்லாம் வெட்டவெளியாய் அறிந்திருந்தாலும், அவனு-



டைய கபடத்தையுங் கள்ள வேஷத்தையும் அடாத முறுமுறுப்பையும்பற்றி உடனே கண்டியாமல், பொறுத்திருந்ததைப் பார்க்கும்போது எவ்வளவோ ஞான ஆனந்தம் உண்டாகிறது! சபை நடுவில் அவனைக் கோபித்துக்கொண்டால், அவனுடைய மரியாதை குறைந்து அவன் மனந் திரும்புவதற்கு விக்கினமாகுமென்று கண்டு, அப்படிச் செய்யாமல், மதலேனம்மாள் செய்த நற்கிருத்தியத்தைப் புகழ்ந்துகொண்டு, அவ்விதமாய் அவன் செய்தது சரியல்லவென்று மறைமுகமாய் அவனைக் கண்டிக்கிறது போதுமென்றிருந்தார்.

**மனப்பற்றுதல்.**—இந்த அம்மாள் செய்த நற்கிரியையைப் புகழ்ந்து, அவள் கர்த்தர்மட்டில் காண்பித்த சிநேகத்திலும் மனத்தாராளத்திலும் நமக்கும் எவ்வளவாவது அடைந்தருளும்படி அவளைக் கேட்போமாக.

**பிரதிக்கினை.**—உன் அதிகாரத்துக்குட்பட்டவர்களைப் பொதுவில்வைத்துக் கண்டியாமலும், அவர்களுக்கு அதைரியம் வருவியாமலும் சாக்கிரதையாயிரு.

## 3-ம் பிரிவு

### எருசலேம்பட்டணத்தார் நடந்தவிதம்

**தியானம்.**—இயேசுநாதசுவாமி பெத்தானியாவூருக்கு வந்த செய்தியை எருசலேம்பட்டணத்து யூதருக்குள் அனேகர் கேள்விப்பட்டு, அவ்விடத்துக்குத் திரளாய்க் கூடிவந்ததாக அர்ச். அருளப்பர் சொல்லியிருக்கிறார். அந்த யூதர்களை நாம் நாலுவகுப்பாகப் பிரிக்கலாம். அவர்களுக்குள் ஒருவகுப்பார் இலாசர் உயிர்த்த புதுமையை அறிந்து ஞானத்தெளிவடைந்து, வாக்குத்தத்தஞ் செய்யப்பட்ட மெசியாஸ் இயேசுநாதசுவாமிதானென்று உணர்ந்து அவரை ஆராதித்து வணங்கவும், இலாசரைக்கண்டு களிகூரவும் பெத்தானியாவுக்கு வந்தவர்களாம். இரண்டாம் வகுப்பாரோவென்றால்: வெறும் விநோதப்பிரியத்தால் தூண்டப்பட்டு வந்தவர்களாம். மூன்றாம் வகுப்பார் யாரெனில்: இப்பேர்ப்பட்ட பெரிய அற்புதத்தைச் செய்த

வர் யாரென்று விசாரித்துத் திவ்விய இரட்சகரை அறிந்து தாங்கள் ஈடேறும் வழியைத் தேடுவதற்குப் பதிலாய், அது தங்களுக்கு ஈனமென்றாற்போல யாதொரு கவலையு மின்றித் தங்கள் வீட்டிலிருந்தவர்களாம். இவர்கள்தான் மற்றவர்களைவிட எண்ணிக்கையில் அதிகம். நாலாம் வகுப்பார் இயேசுநாதருடைய விரோதிகளாகிய குருப்பிர சாதிகளாம். இலாசர் உயிர்த்த புதுமையைக்கண்ட அனேக யூதர், தங்களைவிட்டு இயேசுநாதரை விசுவசிக்க தைப்பற்றி இலாசரையும் கொல்லவேணுமென்று அவர்கள் வழி தேடிக்கொண்டிருந்தார்கள் (அரு. 12).

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—இந்தச் சுவிசேஷ வர்த்தமானத்தினால் நாம் அறியவேண்டியதென்ன வென்றால்: இயேசுநாதருடைய திருச்சபை அடையும் வெற்றிகளாலும் மேற்சொன்ன காரியங்களே சாதாரண மாய்ச் சம்பவிக்கும். அதாவது: சீரான இருதயமுடைய வர்கள் மனந்திரும்புவார்கள். மெய்யான விசுவாசிகள் ஆறுதல் அடைவார்கள். வேத விரோதிகள் கர்வம் மேலிட்டு முன்னிலும் அதிகமாய் அதைப் பகைப்பார்கள். மிஞ்சின பேர்கள் சுகபோகத்தையும் உலக செல்வ பாக்கி யத்தையுமே கவனித்து தேவகாரியத்தை அலட்சியம்பண் ணுவார்கள். நாமோவென்றால்: நமது தேவ குருவின் மகி மைக்காகவும், பாவிகள் மனந்திரும்புதலுக்காகவும் ஒட்டிக் கிட்டியான ஞான ஆவல் வேகத்தோடு பிரயாசப்படக்கட வோம்.

**சம்பாஷணை.**—எருசலேம்பட்டணத்துப் பக்தி மான்களோடு நீயும் ஒன்றித்து இயேசுநாதருடைய மகிமை யைக்கண்டு களிகூறுவாயாக. மேலும் ஆசாபாசத்தினால் மனக்கண் குருடாகி, கர்த்தருக்குச் சத்துருக்களாயிருப் பவர்களுக்காகவும் தேவகாரியங்களை அலட்சியம் பண்ணு கிறவர்களுக்காகவும், ஆண்டவரிடத்தில் பொறுத்தலைக் கேட்டு, அவர்கள் மனந்திரும்பும்படி வேண்டிக்கொள்.

---



# 18-ம் தேதி

## இயேசுநாதர் ஒட்டோலகமாய் எருசலேம்பட்டணத்தில் பிரவேசித்ததின்பேரில்

**ஆயத்தச் சிந்தனை.**—இயேசுநாதர் வேசரி வாகனத் தில் ஏறிப் பட்டணத்தை அடுத்து வருகிறதையும், திர ளான சனங்கள் ஆரவார முழக்கத்தோடு அவரைச் சூழ்ந்து நடக்கிறதையும் பார்க்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

**தியானச் செபம்.**—இயேசுவின் சிநேகமானது உன் இருதயத்தையும் சகல மனுஷருடைய இருதயங்களையுஞ் செயித்து ஆளவேணுமென்று மன்றாடு.

## முதல் பிரிவு

### இயேசுநாதருடைய ஒட்டோலக மகிமைக்காகச் செய்த ஆயத்தம்

**தியானம்.**—இயேசுநாதர் சீமோன்வீட்டில் அசனம் பண்ணின மறுநாள் ஓய்வுநாளானதால் அன்றுமுழுதும் பெத்தானியாவில் தங்கியிருந்தார். அதற்கு அடுத்த நாளாகிய குருத்து ஞாயிற்றுக்கிழமை எருசலேமை நோக் கிப் புறப்பட்டார். புறப்பட்டு ஒலிவேத்து மலையடிவாரத் தில் இருந்த பெத்பாஜே என்னும் ஊரினருகே சேர்ந்த வுடனே தமது சீஷர்களில் இருவரை அனுப்பி அவர்களுக் குச் சொன்னதாவது: உங்களுக்கு நேரேயிருக்கிற ஊருக் குப் போங்கள்; அதிற்பிரவேசித்து அங்கே கட்டப்பட்டி ருக்கிற வேசரியையும் இன்னம் ஒருவரும் ஏறாத அதின் குட்டியையுங் காண்பீர்கள். அவைகளை அவிழ்த்துக் கொண்டுவாருங்கள். ஏன் அவைகளை அவிழ்க்கிறீர்க ளென்று எவனாவது கேட்டால், ஆண்டவருக்கு அவசர மென்று சொல்லுங்கள். சொன்னமாத்திரத்திலே அவை களைப் போக விட்டுவிடுவானென்றார் (லூக். 16; மாற். 11). இவைகளுக்குள் நாம் எதின்பேரில் அதிக ஆச்சரியப்படத் தகுமென்று சொல்வது அருமையாமே. ஒன்றும் விடா

மல் சகலத்தையுந் தீர்க்கமாய் அறிந்திருக்கிற இயேசுநாதருடைய ஞானத்தைக் கண்டோ, தமது சர்வ சிருஷ்டிகளின் பேரிலும் அவர் சுதாவாய்ச் செலுத்துகிற கர்த்தத்துவத்தைக் கண்டோ, அல்லது சுபாவமாய் அவிவேகமும் அபாயமுமுள்ளதென்று தோன்றின இந்தக்காரியத்தில் ஆண்டவருடைய சீஷர்களிடத்தில் விளங்கின கீழ்ப்படிதலைப் பற்றியோ, வேசரிகளுக்கு உடையவன் இரட்சகரால் அனுப்பப்பட்டவர்கள் வசமாய் அவைகளைப் பிடித்தனுப்பத் தீவிரப்படுகிறதைப்பற்றியோ? எதின்பேரில் அதிக ஆச்சரியப்படத்தகும்?

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இப்படி ஆச்சரியப்பட்டபின் நமது படிப்பினைக்கு ஆனதேதென்று பார்க்கக்கடவோம். முந்த முந்த எதுவிஷயத்திலும் சர்வேசுரனுடைய பராமரிக்கைக்கு நம்மைக் கையளிப்போமாக. அவர் நம்மில் ஒவ்வொருவர்மட்டிலுங் கண்ணுண்டாயிருக்கிறார். நமக்குச் சம்பவிக்கப்போகிறதும் நமக்கு நன்மையாயிருப்பதும் ஏதென்று ஒன்றும் விடாமல் அறிந்திருக்கிறார். நம்மையும் உருக்கமான பட்சத்தோடு சிநேகிக்கிறார். 2-வது, நமது சரீர சௌக்கியம் புத்தி படிப்பு முதலியவைகள் எப்படியிருந்தாலும் அவைகளெல்லாவற்றையும் அவருக்கு அடிக்கடி காணிக்கையாக ஒப்புக்கொடுப்போமாக. 3-வது, சிரேஷ்டர் நமக்கு இடும் கட்டளைகள் புத்திக்குறையுள்ளதும் வருத்தமானதுமாய்த் தோன்றினாலும் முன்பின் பாராமல் அதற்குத் தீவிரமாய் விசுவாசக் கருத்தோடு கீழ்ப்படியக்கடவோம். இப்படிச் செய்வோமாகில் இயேசுநாதருடைய சீஷருக்குச் சம்பவித்ததுபோல நமக்கும் சகல விக்கினங்களும் விலகி நாம் துவக்கின காரியங் கைகூடிவரும்.

மனப்பற்றுதல்.—ஞானநிறைந்த இந்த ஒழுங்குகளின்படி நடக்க மனதாயிருக்கிறேனென்று தீர்மானித்து அந்தத் தீர்மானத்தைச் சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடு. இதற்கு வேண்டிய பிரமாணிக்கத்தையும் அவரிடத்தில் கேள்.



பிரதிக்கினை.—விசேஷமாய் விசுவாசத்தை முன்னிட்டுக் கீழ்ப்படியக்கடவாய். சுபாவத்துக்கு அருவருப்பாயிருப்பதையெல்லாம் செயிப்பதற்கு இதுவே ஏக வழி.

## 2-ம் பிரிவு

### இயேசுநாதசுவாமியுடைய ஒட்டோலகப் பிரதாபம்

தியானம்.—பூலோக வெற்றி வேந்தர் செயசிலராய்ப் பண்ணும் பட்டணப்பிரவேசத்திற்கு முழுதும் வேற்றுமையாயிருக்கிற, நமது இரட்சகரின் ஒட்டோலகப் பிரவேசத்தைக் கண்குளிரப்பார்த்து அகமகிழுவோமாக. இதிலே முந்த முந்த நமது ஆண்டவரையும், பிறகு அவரைச் சூழ்ந்த சனங்களையும் கடைசியாய் அவர்கள் பண்ணுகிற கொண்டாட்டத்தையும் நோக்கிப் பார்க்கக்கடவோம். நமது ஆண்டவரிடத்தில் விளங்கும் மகத்துவம் எவ்வளவோ வாக்குக்கெட்டாத மதுரமும் அன்பும் நிறைந்தது! அவருடைய சவுந்தரிய மகத்துவத்தைக் காணச் சகலருடைய கண்களும் அவரை நோக்கியிருக்கின்றன. அவருடைய மதுர அன்பு சகலருடைய இருதயங்களையும் தமது வசமாய் இழுக்கின்றது. பட்டணத்துக் குடிகளும் அன்னியரும், சுற்றுக்கிராமத்தாருமான கணக்கற்ற சனங்கள் நாலாதிசையிலுமிருந்து ஓடிவந்து, அவர் மூன்றுவருஷமாய்த் தாம் சென்றவிடமெல்லாம் செய்த அற்புதங்களையும் உபகாரங்களையும் நினைத்து, யார் அவருக்கு அதிக சங்கை மகிமை செய்வோமென்று போட்டியாய்ப் பிரயத்தனஞ் செய்கிறார்கள். சுவிசேஷத்தில் சொல்லியிருப்பதுபோல: சிலர் குருத்துகளைக் கையிலேந்தி முன் நடந்துபோக, சிலர் மரங்களின் இலைகளையும் தழைகளையும் ஒடித்து வழியில்போட, வேறநேகர் தங்கள் வஸ்திரங்களை வழியில் விரித்துக் கொண்டுபோனார்கள். இப்படிப் போகும்போது சகலரும் ஓரே வாய்ப்பட்டாற்போல ஆகாயம் அதிர்ந்து ஒலிக்க ஜெயங்கூறி, ஓசன்னா ஓசன்னாவென்றும், ஆண்டவருடைய நாமத்தினாலே வரும் இஸ்ராயேல் அரசனுக்கு மங்களம்,

மங்களமென்றும் புகழ்பாடிக்கொண்டு நடந்தார்கள் (மத். 22; அரு. 12).

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—உனக்கு ஒப்புவிக்கப்பட்ட தேவ ஊழியத்திலாவது பிறகேனெ அலுவலிலாவது நீ உழைத்துப் பிரயாசப்பட்டுச் சனங்களுக்கு உபகாரமாய் நன்மை செய்யுங் காலத்திலே, எல்லாரும் உன்னைக் கனப்படுத்தி அர்ச்சியசிஷ்டவரென்று கொண்டாடித் துதிக்கும்படியாய்ச் சிலவேளை நேரிடலாம். அப்பேர்ப்பட்ட சமயத்திலே பெருமை சலாக்கியத்துக்கு இடங்கொடாதபடி வெகு எச்சரிக்கையாயிரு. உனக்குக் கிடைத்த அநுகூலமெல்லாஞ் சர்வேசுரனாலே வந்ததென்றும், அதினால் வரத்தக்க தோத்திரமெல்லாம் அவருக்கே செல்லவேண்டியதென்றும் உணர்ந்து அதை அவருக்கு ஒப்புக்கொடு. இயேசுநாதர் மகிமைப் பிரதாபமாய்ப் பிரவேசித்த அந்தப் பட்டணத்திலேதானே ஐந்துநாள் பொறுத்து, அவரைச் சிலுவையில் அறைந்து கொல்லவேணுமென்று கூக்குரலிட்டு அவரைக் கொலைப்படுத்தினதுபோல, உன்னையும் இருந்தாப்போல இகழ்ந்து தூஷணித்தால் சகித்துக்கொள்ளும்படி உன் மனதைத் திடப்படுத்திக் கொள்.

**மனப்பற்றுதல்.**—என் திவ்விய இயேசுவே, என் சுய நன்மையை முழுதும் மறந்து சகலத்திலும் உமது தோத்திரத்தையும் உமது திருச்சபையின் வெற்றியையும் என் ஆத்தும அர்ச்சிப்பையுமாத்திரம் நான் தேட எனக்குப் படிப்பித்தருளும்.

**பிரதிக்கினை.**—வீண் சலாக்கியமென்னும் மாய வலையில் அகப்படாதபடி அடிக்கடி என் நல்ல கருத்தைப் புதுப்பிப்பேன்.

## 3-ம் பிரிவு

### இயேசுநாதருடைய ஒட்டோலக மகிமையைக் கண்டு பரிசேயர்பட்ட பொறாமை

**தியானம்.**—இயேசுநாதர் எருசலேம்பட்டணத்தில் ஒட்டோலகராய்ப் பிரவேசித்தது, தீர்க்கதரிசியான சக்கரி



யாஸ் எழுதினபடி: மேசியாஸ் வந்ததற்கு வெட்டவெளியான திருஷ்டாந்தமாயிருந்தது. தீர்க்கதரிசனங்களை வியாக்கியானஞ்செய்யும் வேதபாரகரும் பரிசேயரும் இதை அறிந்திருந்தாலும், தங்கள் பொறாமையையும் பகையையும் எதேச்சையாய்த் திரியவிட்டு வெளிச்சத்தைப் பாராமல் கண்ணை மூடிக்கொண்டார்கள். ஆகையால் ஒருவர் ஒரு வரைப் பார்த்து: நாம் செய்கிற முயற்சியால் ஒரு பிரயோ சனமுமில்லையென்று காண்கிறதில்லையா? இதோ உலக முழுதும் அவனைப் பின்தொடர்ந்து போகிறதேயென்றார் கள் (அரு.. 12.) வேறு சிலர் இயேசுநாதரைப்பார்த்துச் சொல்லத் துணிந்ததாவது: போதகரே, உமது சீஷர்களைப் பேசாதிருக்கச் சொல்லுமென்றார்கள். அந்தச் சமயத்திலே மகிமையடையச் சித்தமாயிருந்த இயேசுநாதர் அவர்களைப் பார்த்துச் சொன்னதாவது: இவர்கள் பேசாமற் போனால் கல்லுகள் தானே சத்தமிட்டுத் தொனிக்குமே யென்றார் (லூக். 19). அப்படியே ஆண்டவர் பாடுபடும் போது அவருடைய சீஷர்கள் பயத்தினால் பேசாதிருக்கையில், கற்பாறைகள் பிளந்து அவருடைய தெய்வீகத்தைப் பிரசித்தப்படுத்தின.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—உன்னோடு அலுவல் பார்க்கிறவர்கள் அநுகூலமடைகிறதைக் காணும்போது உனக்குக் கண் கூசுகிறதுபோலிருந்தாலும் பரிசேயருடைய காய்மகாரத்தை நீ கண்டுபாவியாதே. யாரார் நன்மை செய்தாலும் அதற்காக நீ சர்வேசுரனுக்குத் தோத்திரஞ்செய்.

**சம்பாஷணை.**—அன்று ஒட்டோலகராய் எழுந்த இயேசுநாதரோடு சம்பாஷணை செய்துகொள்.

# 19-ம் தேதி

## முந்தின தியானத்தின் தொடர்ச்சி

### இயேசுநாதர் எருசலேம் பட்டணத்தைப் பார்த்துக் கண்ணீர் சிந்துகிறார்

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதர் எருசலேம் பட்டணத்தை நோக்கிக் கண்ணீர் சிந்துகிறதாக ரூபிகரித்துக்கொள்.

தியானச் செபம்.—விசுவாசத் துரோகங் கட்டிக்கொண்ட அந்தப் பட்டணத்துக்கு இயேசுநாதர் செய்த கண்டிப்பு உனக்கும் வராதபடி மன்றாடு.

## முதல் பிரிவு

### எருசலேம் பட்டணத்தின் விசுவாசத் துரோகம் இயேசுநாதர் கண்ணீர் சிந்தினதற்கு முந்தின காரணம்

தியானம்.—இயேசுநாதர் அந்தப் பட்டணத்தை அடுத்துவரக் கெம்பீர முழக்கமும் ஒட்டிக்கு இரட்டிப்பாயிற்று. அந்நேரத்தில் அவர் மனிதருடைய இருதய அந்தரங்கங்களையும் வருங் காரியங்களையும் கண்டறிகிற தமது கண்களால், அந்தப் பட்டணத்தை நோக்கிப் பார்த்து மனங் கலங்கிக் கண்ணீர் சிந்தி அழுதார் (லூக். 19). ஆ, இதென்ன அரிய காட்சி! ஒரு நர தெய்வம் கண்ணீர்விட்டழுகிறார். இந்தக் கண்ணீருக்குக் காரணமென்ன? எருசலேம் பட்டணம் அவருக்கு வருவிக்கப்போகிற நிஷ்டூரமான சாவை நினைத்தோ? ஒருக்காலுமல்ல. எப்போது அந்தச் சாவு வருமோவென்று அவர் ஆசைப்பட்டுக்கொண்டிருந்ததினாலே: நான் ஒரு இரத்த ஸ்நானம் பெற இருக்கிறேன், அதைப் பெறுகிறதற்கு எவ்வளவோ தாமதமாகிறதென்றார் (லூக். 12). அவர் கண்ணீர் சிந்தினதற்கு ஏக மெய்யான காரணமேதென்றால்: எருசலேம் பட்டணத்தார் கள்ள ஞானிகளாகிய தங்கள் குருக்கள் பேச்சைக் கேட்டு, கண்கெட்டுக் கடைசிபரியந்தம் கல்நெஞ்சர் ஆவார்



களென்கிற நினைவும், தேவ வரப்பிரசாதத்தை மூர்க்க வெறியால் எதிர்த்ததற்கு ஆக்கினையாகச் சர்வேசுரனால் கைவிடப்பட்டு, சாபத்துக்கு உள்ளாவார்களென்கிற நினைவும் இதற்குக் காரணமாகும். அந்தச் சமயத்தில் இயேசுநாதசுவாமியுடைய திரு இருதயத்தில் நின்று புறப்பட்ட துயரத்துக்குரிய வார்த்தைகளைக்கொண்டு நாம் இதை அறிந்துகொள்ளலாம். எப்படியென்றால்: ஐயோ, எருசலேமே, உனக்குக் கிடைத்த இந்நாளிலாகிலும் உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நீயும் அறிந்திருந்தாலல்லோ தாவிளை. ஆனால் இதெல்லாம் உன் கண்ணுக்கு மறைக்கப்பட்டிருக்கிறதென்றார். (லூக். 19). ஆகையால் அவர்கள் ஆத்துமம் சேதமாய்ப் போகிறதைக் குறித்து இயேசுநாதர் அழுதாரல்லாமல் மற்றப்படியல்ல.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இயேசுநாதர் கண்ணீர் சிந்தினதைக்கொண்டு நாம் அறியத்தக்கதாவது: முந்த முந்த நமக்கு நேரிடும் அற்ப சொற்பத் துன்ப துரிதங்களைக்கண்டு அவ்வளவு ஏக்கங்கொள்ளாமல், அக்கிரம நடத்தையால் குருடரும் கல்நெஞ்சருமான கணக்கில்லாத பாவிகளை நினைத்து மனமிரங்கிப் பரிதபிக்கத் தகும். அவர்கள் மனந்திரும்பும்படி நாம் கண்ணீர்விட்டு வருந்தி மன்றாடுவதுமல்லாமல் நமது செபத்தோடுகூட தப முயற்சிகளையுஞ் சேர்த்து ஒப்புக்கொடுக்கக்கடவோம். இயேசுநாதசுவாமி அவர்களைப்பற்றிக் கண்ணீரையுமல்லாமல் தமது இரத்தத்தையும் சிந்தவில்லையோ? 2-வது, ஐயோ நாம் இதுவரையில் மெய்யான மனஸ்தாபமின்றி அதின் பேரைமாத்திரம் அறிந்திருந்தோமென்று மனம் நொந்து உருக்கமான இருதய மனஸ்தாபத்தை நம்மிடத்தில் காப்பாற்றக்கடவோம். 3-வது, தேவப்பிரசாதத்தின் ஏவுதலுக்கு நாம் வேண்டிய பிரமாணிக்கமாய் நடக்கவில்லையேயென்று அத்தியந்த பயத்தோடிருக்கக்கடவோம். அர்ச்சியசிஷ்டவர்கள் முதலாய் இதன்மட்டில் வெகு பயமுள்ளவர்களாயிருந்தார்கள். அவர்களுக்கும் எனக்கும் அளவற்ற வித்தியாசமாயிருக்க நான் பயப்படத் தேவையில்லையோ?

**மனப்பற்றுதல்.**—உன் பாவங்களினாலும் அசமந்தத்தினாலும் இயேசுநாதருடைய திரு இருதயத்துக்கு இத்தனை துயரம் வர நீ காரணமாயிருந்ததைப்பற்றிப் பொறுத்தலைக் கேட்பாயாக.

**பிரதிக்கினை.**—என் நேச இரட்சகருடைய இருதயத்துக்குத் துயரம் வருவிக்கக் கூடுமானதையெல்லாம் இதுமுதல் எச்சரிக்கையாய்த் தள்ளிப்போடவும், என் பத்தி சுறுசுறுப்பினாலே அநேகம் ஆத்துமாக்களைத் திருப்பி அவருடைய திரு இருதயத்துக்குச் சந்தோஷம் வருவிக்கவும் மனதாயிருக்கிறேன்.

## 2-ம் பிரிவு

### எருசலேம் பட்டணத்தின் அழிவு இயேசுநாதர் கண்ணீர் சிந்தினதற்கு இரண்டாம் முகாந்தரம்

**தியானம்.**—இயேசுநாதர் எருசலேம் பட்டணத்தை உருக்கமாய்ச் சிநேகித்தார். ஏனெனில்: அவருடைய பரம பிதாவானவர் தமது சொந்தப் பிரசைகளையெல்லாம் ஒன்றாய்க் கூட்டிச்சேர்க்கவும், தமது மகிமை விளங்கும்படி பூமியில் தமக்குக் கட்டுவித்த ஏக தேவாலயத்துக்குக் காவலாயிருக்கவும், அந்த எருசலேம்பட்டணத்தைத் தெரிந்துகொண்டார். இதினிமித்தம் அது பரிசுத்த பட்டணமென்றுஞ் சர்வேசுரனுடைய பட்டணமென்றுஞ் சொல்லப்பட்டிருந்தது. அப்படியிருக்க அந்தப் பட்டணத்தாருடைய அவிசுவாசத்தினிமித்தம் அது முழுதும் அழிந்துபோகிறதாயிருந்தது. இதுவே அவர் இருதயம் துக்கித்து அவர் கண்ணீர் விட்டு அழுவதற்கு இரண்டாம் முகாந்தரமாயிற்று. அந்தப் பட்டணத்தின் அழிவைக்குறித்து இயேசுநாதர் அறிவித்ததாவது: உன் இரட்சணிய காலத்தை நீ அறியாததினால், இதோ உன் சத்துருக்கள் உன்னைச் சூழ வளைந்து முற்றிகைபோட்டு எப்பக்கத்திலும் உன்னை நெருக்கடித்து, உன்னையும் உன்னிலுள்ள உன் பிள்ளைகளையும் தரைமட்டமாக்கி, உன்னில் கல்லின்மேல் கல் நில்லாதபடிக்குப் பண்ணும் நாட்கள் வருமென்றார். அவர்களுடைய ஈடேற்றத்



தின்மேல் அவருக்குள்ள வேகமான ஆவலினாலேதான் இந்தப் பயங்கரமான ஆக்கினைகளைத் தீர்க்கதரிசனமாய் அவர்களுக்கு முன்னறிவித்தார். ஏனென்றால்: அப்போது உயிரோடிருந்த யூதர் இதைக்கேட்டு மனந்திரும்பித் தம்மிடத்தில் வரவேணுமென்றும், அதற்குப் பிற்காலம் உலகத்தில் வரப்போகிறவர்கள் இவைகள் நிறைவேறினதையறிந்து தமது வேதத்திலுட்பட்டுக் கரையேற வேணுமென்றுஞ் சித்தமாயிருந்தார். முப்பத்தெட்டு வருஷத்துக்குப்பின் தேவ நீதிக்கு எத்தனமாயிருந்த உரோமையர்கள் அந்தப் பட்டணத்தைச் சுற்றி வளைந்து, இரட்டைச் சுவர்களெழுப்பி அதை மகா பயங்கரமான பஞ்சத்துக்குள்ளாக்கி, அதின் குடிகளையெல்லாஞ் சங்கரித்து, அந்தப் பட்டணத்தை அடியோடு அழித்து நாசமாக்கிப்போட்டார்கள். இவ்விதமாய்த் திவ்விய இரட்சகர் சொன்ன தீர்க்கதரிசனம் அப்போது சம்பூரணமாய் நிறைவேறிற்று.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—எருசலேம் பட்டணத்தின் அழிவு சாவான பாவத்தினால் ஆத்துமங் கெட்டுச் சேதமாய்ப்போவதற்கு அடையாளமாயிருக்கின்றது. அதெப்படியென்றால்: சர்வேசுரனுடைய பார்வைக்கு ஆத்துமத்திலுண்டான ஞான சௌந்தரியமெல்லாம் சாவான பாவத்தினாலே அழிந்துபோய் அதற்குப் பதிலாய் அதிலே நரகப் பேயினுடைய அகோர அவலட்சணரூபம் தோன்றும். ஞானஸ்நானத்தின் வழியாய் அது அடைந்திருந்த மோக்ஷ சுதந்தரத்தை இழந்துவிடும். பாவத்துக்குமுன் அந்த ஆத்துமம் சுகித்திருந்த மனச் சமாதானமும் பாக்கியமும் அதற்கு ஆதாரமான தேவ ஒன்றிப்பும் அதைவிட்டு நீங்கிப்போம். தேவ இஷ்டப்பிரசாதமும் அதற்கு உரித்தான நன்மைகளும் அதில் இருக்கமாட்டா. கடைசியாய் அதுவரையில் அந்த ஆத்துமஞ் செய்த புண்ணியங்களுடைய பேறுபலன்களும், அவைகளுக்கு மோக்ஷத்தில் செல்லுமான பாக்கியங்களும் எல்லாம் போய்விடும். இப்பேர்ப்பட்ட பொல்லாப்புகள் உன் ஆத்துமத்துக்கு வரும்படி நீ எப்போதாவது வழிபண்ணவில்லையோ? இரக்க நிறைந்த சர்வேசுரா, என் நிர்ப்பாக்கி

யங்களினின்று என்னைக் காத்தவரே, அடியேன் உமது சிநேகத்தில் இடைவிடாமல் அதிகமதிகமாய் வளரும்படி அநுக்கிரகஞ் செய்தருளும்.

சம்பாஷணை.—மகா இரக்கமுள்ள நமது திவ்விய இரட்சகரோடு சம்பாஷணை செய்யக்கடவாய். உன்பேரில் அவர் காண்பித்த பொறுமை தயாளத்துக்கு நன்றியறிந்த தோத்திரஞ்செய். எண்ணில்லாத பாவிகள் தங்கள் குருட்டாட்டத்தில் மூர்க்கராயிருக்கிறதையும், அவர்களுக்காகத் தாம் சிந்தின இரத்தம் வியர்த்தமாய்ப் போவதையும் நினைத்து, அவர் அநுபவித்த வியாகுலத்தையும் விட்ட கண்ணீரையும் கண்டு, நீயும் அவரோடு பரிதபிக்கக்கடவாய். என் இரத்தத்தைச் சிந்தியும் என்ன பயனென்று அவர் தீர்க்கதரிசி வாயால் முறையிட்டதை நினைத்து, உன்னை முழுதும் அவருக்குப் பரிகாரப் பலியாக ஒப்புக்கொடு.

---

# 20-ம் தேதி

## இயேசுநாதசுவாமியுடைய சீவியகாலத்தின் கடைசி வாரம்

### குருத்து ஞாயிற்றுக்கிழமையில் நடந்த வர்த்தமானம்

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதர் எருசலேம் பட்டணத்துத் தேவாலயத்தில் பிரசங்கித்துக்கொண்டிருக்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

தியானச் சேபம்.—அவருடைய திவ்விய மாதிரிகைக்கு ஒத்தபிரகாரம் நடக்க வரப்பிரசாதங் கேள்.

## முதல் பிரிவு

### இயேசுநாதரைக் காண அஞ்ஞானிகள் தேடிவந்தது

தியானம்.—தேவ குமாரனாகிய இயேசுநாதர் இவ்வுலகத்திலிருந்த கடைசி ஆறுநாளும் அவர் வைத்த ஒரு



அடி முதலாய் விடாமல் கூர்ந்து பார்ப்போமாக. அந்த முடிவு நாட்களை வினோதம்போல் பாராமல், அந்த நாட்களில் நடந்த கனத்த காரியங்களைப்பற்றி அவைகளை நுணுநுணுக்கமாய்த் தியானிக்கக்கடவோம். இந்தக் கடைசி ஆறுநாட்களுக்கும் அர்ச்சியசிஷ்டவாரமென்றும் பெரிய வாரமென்றும் பேருண்டாயிருக்கிறது. எருசலேம் பட்டணத்தில் இயேசுநாதர் ஒட்டோலகராய்ப் பிரவேசித்தது, குருத்து ஞாயிறாகிய முந்தினநாளில் நடந்த பிரதான வர்த்தமானமாம். இதை ஏற்கனவே தியானித்துப் பார்த்தோம். இதற்குப் பிற்பாடு இரண்டு விஷயங்கள் சுவிசேஷத்தில் குறிக்கப்பட்டிருக்கின்றன. இவைகள் அவ்வளவு பிரபல்லியமல்லாவிட்டாலும் நமக்குப் படிப்பினையாயிருப்பதற்குக் குறைச்சலில்லை. அவையாவன: முதலாவது, இயேசுநாதசுவாமி சனங்களுடைய ஆரவாரப் புகழ்ச்சி வாழ்த்துதல்களைக் கையேற்றுக்கொண்டு நேரே தேவாலயத்துக்குச் சென்றதும், 2-வது, அவரைப் பின்சென்று போன திரளான சனக்கூட்டத்தில் அஞ்ஞானிகளாயிருந்து மனந்திரும்பின பலருமிருக்க, அவர்களில் சிலர் இயேசுநாதசுவாமியைக் கண்டு பேசப் பாக்கியம் பெற்றதுமாம். அதெப்படியென்றால் சில அஞ்ஞானிகள் பிலிப்பென்பவரைப் பார்த்து: ஐயா, இயேசுநாதரைக் காண ஆசையாயிருக்கிறோமென்று மன்றாடினார்கள். பிலிப்பென்பவர் இதைக்குறித்து பெலவேந்திரரோடு பேசி இவ்விருவரும் இயேசுநாதரண்டையில் விண்ணப்பஞ் செய்து அந்தச் சகாயம் அவர்களுக்குப் பெறுவித்தார்கள் (அரு. 12).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—உனக்கு யாதொரு காரியம் அநுகூலமாகும்போது, திவ்விய இரட்சகருடைய மாதிரிகையாக விரைவாய்க் கோவிலுக்குப் போய் ஆண்டவருக்குத் தோத்திரஞ்செய். சிரேஷ்டர்கள் உன்னை எந்தப் பட்டணம் பட்டிக்காவது புத்தி பிரசங்கஞ் சொல்ல அனுப்பும்போது, கூடுமானவரையில் முந்தமுந்தக் கோவிலுக்குப் போய்த் தேவநற்கருணையில் எழுந்தருளியிருக்கும் இயேசுநாதருக்கு ஆராதனை வணக்கஞ் செய்து, நீ வந்த காரியத்தை அவர் ஆசீர்வதிக்கும்படி மன்

ருடு. உத்தம சந்நியாசிக்கு யோக்கியமான இவ்விரு கடமையையும் நீ நிறைவேற்றின விதமேது? தேவநற்கருணையிலிருக்கும் இயேசுநாதசுவாமியை நீ தீவிரமாய் அண்டிப் போவதற்கும், மற்றவர்களை அவரிடத்தில் கூட்டி வருவதற்கும், உன் பத்திக் குறைவினால் அசட்டையாயிருந்தாயோவென்று பார். அப்படியிருந்தால், உன்னுடைய நடத்தைக்கும் அந்தப் புதுக்கிறீஸ்துவர்களும் அப்போஸ்தலரும் நடந்த நடத்தைக்கும் எவ்வளவோ பாரதூர வித்தியாசமிருக்கிறதென்றும், இதினால் நீ எவ்வளவு துக்கப்படவேணுமென்றும் யோசித்துப்பார்.

மனப்பற்றுதல்.—நீ இதுவரையில் பத்திவேகமில்லாமல் குளிர்ந்தவனாய் இருந்ததற்காக ஆண்டவரிடத்தில் பொறுத்தலை இரந்து மன்றாடி, இனிமேல் உனக்கு அதிவேகமான பத்தியும் பிறர் ஈடேற்ற ஆவலுந் தந்தருளும்படி பிரார்த்தித்துக்கொள்.

பிரதிக்கினை.—சிநேக தேவதிரவிய அநுமானமாகிய தேவநற்கருணையை மற்றவர்களைவிட நீ அடிக்கடி சந்திக்கப் பிரதிக்கினை செய்.

## 2-ம் பிரிவு

### இயேசுநாதர் தமக்கு அடுத்திருக்கும் மரணத்தை அறிவிக்கிறார்

தியானம்.—மனந்திரும்பின அஞ்ஞானிகளுக்காக அப்போஸ்தலர்கள் செய்த விண்ணப்பத்தைத் திவ்விய கர்த்தர் கேட்டருளின பின், அவர்களுக்கும் அங்கே கூடின திரளான யூதர்களுக்கும் உவமை மேரையாக ஓர் தீர்க்கதரிசனத்தை வெளிப்படுத்தினார். அது கொஞ்சத்துக்குள் நிறைவேறுவதைக் கண்டு, அந்த உவமையின் பொருளென்னவென்று அவர்கள் அறியக்கூடுமாயிருந்தது. அந்தத் தீர்க்கதரிசனமாவது: மனுமகன் மகிமைப்படுங் காலம் வந்தது. மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்: மண்ணில் விதைத்த கோதுமை மணி அழியாவிட்டால் அது வெறுமனே கிடக்கும்; அது அழியுமேயாகில் வெகு பலனைத் தருமென்றார் (அரு. 12). இதைக்கொண்டு கர்த்தர்



தமக்கு அடுத்திருக்கிற மரணத்தையும், அந்த மரணத்திற்கு உத்தம பலனாக அஞ்ஞானிகள் மனந்திரும்பப்போகிறதையும் முன்னறிவிக்கிறார். நம்மை மீட்பதற்குச் சர்வேசுரன் என்ன கிரயம் கொடுத்தாரென்று இதினால் அறிந்துகொள்ளக்கடவோம். மெய்யாகவே உலகத்துக்கு உயிரும் உத்தானமுங் கொடுக்கத்தக்கதாக இயேசுநாதசுவாமி மரிக்கவும், மரித்த மூன்றாநாள் உயிர்க்கவும் வேண்டியதாயிருந்தது. இவ்விதமாய் அவருடைய மரணத்தினின்றும் அவருடைய கல்லறையினின்றும் உலகத்துக்கு ஞான உயிர் வந்ததென்று சொல்லத்தகும்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நமக்கு இது எப்பேர்க்கொத்த போதகம்! இயேசுநாதர் தமது உயிரையன்றோ விலையாகக் கொடுத்துச் சம்மை மகிமைப்படுத்தி நம்மையும் மீட்டு இரட்சித்தார்! நாமோ வருத்தப்பட மாட்டோமென்கிறோம். சிலுவையாகிற இராச பாதையைவிட்டு வேறே வழியாய் நாம் மோக்ஷத்துக்குப் போகவும், மற்றவர்களையும் அங்கே கூட்டிக் கொண்டு போகவும் மனதாயிருக்கிறோம். ஆ, இதென்ன அடாத குருட்டாட்டம். இதைவிட்டு எப்போது குணப்படுவோம்?

மனப்பற்றுதல்.— இயேசுநாதருடைய சிலுவைக்கு நம்மைச் சத்துராதிகளாக்குகிற நமது பேராசையையும், கோழைத்தனத்தையும் சுகத்தின்மேல் நமக்குள்ள நாட்டத்தையும் நினைத்து, திவ்விய மாதிரிகையான இயேசுநாதர் முன்பாக வெட்கி நாணக்கடவோம்.

பிரதிக்கினை.—சந்தோஷத்தோடுஞ் சிநேகத்தோடுஞ் சிலுவையைச் சுமக்காவிட்டாலும், தேவதிருவுளத்துக்கு அமைந்த மனதோடாவது அதைச் சுமந்துகொள்வேன்.

## 3-ம் பிரிவு

### இயேசுநாதர் மனக்கலக்கம் அடைந்ததின்பேரில்

தியானம்.—அந்நேரத்தில் இயேசுநாதர் சொன்னதாவது: இப்போது என் ஆத்துமங் கலங்கிக்கொண்டிருக்கிறதென்றார் (அரு. 12). இந்தக் கலக்கத்துக்குக் காரண

மென்ன? அவர் இரண்டு மூன்று தினத்துக்குள்ளாக மகா அவமானப்பட்டு அடையப்போகிற கொடிய மரணத்தின் நினைப்பே இதற்குக் காரணமொழிய வேறல்ல. ஆயினும் சகலமும் தேவபிதாவின் சித்தம்போல் ஆகட்டுமென்று பூரண அமைவோடு வேண்டிக்கொண்டு தமது கலக்கத்தை அர்ச்சிக்கத் தீவிரித்தார். இதினிமித்தமே: என் பிதாவே அந்த நேரத்தினின்று என்னைக் காத்திரட்சியுமென்றார். என்றவுடனே சேர்த்துச் சொன்னதாவது: ஆனால் அந்த நேரத்தைப்பற்றியல்லோ நான் உலகத்துக்கு வந்தேன். என் மரணத்தினால் நீர் மகிமையடைய வேண்டியதினால் என்னை இளக்காரமாய் நடத்தவேண்டாம். என் பிதாவே உமது நாமத்தை மகிமைப்படுத்தியருளுமென்றார். அக்ஷணமே வானத்தினின்று ஒரு சத்தமுண்டாகி: ஏற்கனவே அதை மகிமைப்படுத்தினோம்; இன்னம் மகிமைப்படுத்துவோமென்று சப்தித்தது. இவ்விதமாய் உலகத்தில் துன்பமும் ஆறுதலுங் கலந்திருக்கக் காண்கிறோம்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நமது திவ்விய கர்த்தருக்குச் சம்பவித்த இந்த விசேஷத்திலே நமக்கு மகா ஆறுதலான சில காரியங்கள் அடங்கியிருக்கின்றன. நமக்கு யாதொரு அவமானமாவது இடையூறாவது வரப்போகிறதென்று கண்டால், அச்சமயத்தில் நமக்குண்டாகும் கலக்கம் குற்றமல்லவென்பது நிச்சயம். இயேசுநாதசுவாமிக்கே இப்படி உண்டானதினாலே இதிலே குற்றமும் குற்றத்தின் நிழலுமுதலாய் இருக்கப்படாது. ஆனால் அந்த ஆயாசத்தை நாமும் நமது ஆண்டவரைப்போல செபத்தினாலும் தேவ திருவுளத்துக்கு அமைதலினாலும் அர்ச்சிப்போமாக. இதைவிட்டு நமது பொறுமைக் குறையினாலும் முறுமுறுப்பினாலும் அதின் பலனை நாம் பலமுறையும் போக்கடிக்கிறதில்லையோ?

சம்பாஷணை.—அடிமைகளை மீட்கும் அர்ச். தமதிரித்துவத்தின் சபையையுண்டாக்கின அர்ச். மாத்தா அருளப்பருக்குத் துணைவராயிருந்த அர்ச். வாலுவா பாக்கியநாதரோடு சம்பாஷணைசெய். இன்றைக்கு அவருடைய திருநாள்.

---



# 21-ம் தேதி

## தேவமாதா மூன்றுவயதில் எருசலேம் பட்டணத்துத் தேவாலயத்தில் காணிக்கையாக ஒப்புக் கொடுக்கப்பட்ட திருநாள்

ஆயத்தச் சிந்தனை.—இன்னம் குழந்தையான அர்ச். கன்னிமரியம்மாள் தேவாலயத்தில் சாஷ்டாங்கமாய் விழுந்து வணங்குகிறதாக ரூபிகரித்துக்கொள்.

தியானச் செபம்.—இந்தப் பரிசுத்த குழந்தையைப் போல தாராளமாய் நம்மைச் சர்வேசுரனுக்குப் பலியாக ஒப்புக்கொடுக்க அநுக்கிரகங் கேட்கக்கடவோம்.

### முதல் பிரிவு

**அர்ச். கன்னிமரியம்மாள் தம்மைத் தாமதமில்லாமல் சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுக்கிறாள்**

தியானம்.—இந்தப் பரிசுத்த குழந்தைக்கு மூன்று வயதான மாத்திரத்திலே, எருசலேம் பட்டணத்துத் தேவாலயத்தில் தன்னை முழுதும் எப்போதைக்கும் ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்ததை, திருச்சபை இன்றையத்தினம் நமக்கு நினைப்பூட்டுகிறது. அந்த வர்த்தமானமேதென்றால்: தேவமாதாவின் தாய்தந்தையர் பூர்வீகமாய் நடந்தேறின வழக்கப்படி தேவாலயத்தில் ஊழியமும் செபதபமுஞ் செய்துவந்த பத்தியுள்ள விதவைகளிடத்தில் தங்கள் குமாரத்தியைக் கூட்டிப்போய் அவர்களுக்கு வேண்டிய பணிவிடை செய்துகொண்டு அவர்களிடத்தில் படித்து வளரும்படி ஒப்புவித்தார்கள். ஆனால் அந்தப் பரிசுத்த குழந்தைக்கு இதைவிட ஆயிரமடங்கு அதிக மேலான எண்ணமும் நோக்கமுமிருந்தது. தன்னைத் தேவாலயத்தில் ஒப்புக்கொடுக்கும்போது இந்த எண்ணத்தை நிறைவேற்றினாள். அதாவது: அந்தக் குழந்தை சர்வேசுரனிடத்திலிருந்து மகா உன்னதமான ஞான தெளிவடைந்து அவருடைய இஷ்டப்பிரசாதத்தால் சம்பூரணமாய் நிறையப்

பெற்றவளாயிருந்ததினாலே சர்வேசுரன் ஒருவரே தனக்குச் சர்வ ஆஸ்தி பாக்கியமென்று அவருக்குத் தன் கன்னிமையை என்றென்றைக்கும் வசீகரம்பண்ணினாள். யூதகோத்திரத்தில் பெண்ணாய்ப் பிறந்தவர்களுக்குள்ளே இவள் தான் முந்தினவளாய் இந்த வார்த்தைப்பாடு கொடுத்தாள்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—நீ தாயென்று பாராட்டுகிற இந்தக் கன்னிகைக்குப் பத்தியுள்ள தாய் தந்தையரிருந்ததினாலும், சிறுப்பமுதல் இவள் சர்வேசுரனுக்குச் சொந்தமாயிருப்பதே நன்மையென்று உணர்ந்து அப்போதே துவக்கிப் பரலோகத்துக்காக ஞானப் பொக்கிஷங்களைச் சேர்த்துவந்ததினாலும், இவளைப் பாக்கியவதியென்று கூறுகிறாயே; அது ஞாயந்தான். ஆனால் உனக்கும் பத்தியுள்ள ஒரு தாயிருந்து, நீ குழந்தையாயிருக்கும்போதே உன்னைக் கோவிலுக்குக் கொண்டுபோய்ச் சர்வேசுரனுக்கு உன்னை ஒப்புக்கொடுக்கவில்லையோ? நீ வளர்ந்து புத்தி விவரமடைந்தபின், நீ சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட பிள்ளையென்றும் அதற்குத் தக்கபடி நீ நடக்கவேணுமென்றும் அந்தத் தாய் உனக்குக் கற்பிக்கவில்லையோ? அப்பேர்ப்பட்ட தாய் உனக்கில்லாவிட்டாலும் நீ புதுநன்மைவாங்கின அன்றைக்காவது உன்னைமுழுதும் சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுத்திருப்பாயே. அதற்கேற்றாப்போல் நீ பிரமாணிக்கமாய் நடந்தாயோ? ஐயோ, ஒரு வேளை நீ கொடுத்த வார்த்தைப்பாட்டைச் சன்னஞ் சன்னமாய் மறந்துவிட்டாயாக்கும்! சிலவேளை துர்மாதிரிகையினால் மயங்கிப் பாவத்தில் விழவில்லையோ? யாதொரு பாவத்தில் பழகி நெடுநாளாய்த் திரியவில்லையோ? இதனால் சர்வேசுரனுக்கு எவ்வளவோ அவமானமும், உன் ஆத்துமத்துக்கு எவ்வளவோ பொல்லாப்பும் உண்டாயிற்று!

**மனப்பற்றுதல்.**—சர்வேசுரனுடைய உபகாரங்களை நினைத்து அவருக்கு நன்றியமிந்த தோத்திரஞ்செய். உன் பாவங்களுக்காக மனம் நொந்து அழுது பாவிகளுக்கு அடைக்கலமாகிற பரிசுத்த கன்னிமரியாயின் வழியாக உன்னைத் திரும்பவும் சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடு.



**பிரதிக்கினை.**—தேவ ஊழியத்துக்கடுத்த சகல காரியங்களிலும், வழக்கத்துக்கு அதிகமான சுறுசுறுப்போடு பிரயாசப்பட்டு முன்செய்த அக்கிரமங்களைப் பரிகரிக்கப் பிரயாசப்படுவேன்.

## 2-ம் பிரிவு

### பரிசுத்த கன்னிமரியம்மாள் தன்னிடத்தில் ஒன்றுந் தனக்கு வைத்துக்கொள்ளாமல் தன்னைமுழுதுஞ் சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுக்கிறாள்

**தியானம்.**—பரிசுத்த கன்னிமரியம்மாள் தன்னைக் காணிக்கையாகக் கொடுத்தநாளிலே அவளுடைய பலியானது குறையற்றதும் உத்தமமானதுமாயிருந்தது. ஏனென்றால்: சர்வேசுரனைப்பற்றிச் சகலத்தையுந் துறந்துவிட்டாள். தாய் தந்தையரோடு வீட்டிலிருப்பது தனக்கு எவ்வளவு பிரியமாயிருந்தாலும் அந்தப் பிரியத்தையும், உலக ஆஸ்திபாஸ்திகளையும், பாவத்தின் யாதொரு அற்ப மாசுமில்லாமல் அனுபவிக்கக்கூடுமான சகல சந்தோஷங்களையும் பரித்தியாகம் பண்ணிவிட்டாள். உலக இரட்சகர் வருங்காலம் அடுத்திருந்ததினாலே, அவருக்குத் தாயாராயிருக்கவேணுமென்று அக்காலத்தில் யூத ஸ்திரீகளுக்குள் ஒவ்வொருவருக்கும் மிகுந்த ஆசையிருந்தது. ஆனால் இந்தக் கன்னிகை தன் கன்னிமையைச் சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுத்ததினால் இந்த ஆசையையும் நம்பிக்கையையும் கைவிடவேண்டியதாயிற்று. கடைசியாய் அவளிடத்தில் மனச் சுயாதீனமாத்திரம் இருந்தது. அதையும் விட்டுவிடும்படி சக்கரியாஸ் என்கிற பெரிய குருவுக்குச் சகலத்திலும் கீழ்ப்படிய அன்றைக்கே வார்த்தைப்பாடு கொடுத்தாளென்று அர்ச். அஞ்சல்முஸ் எழுதிவைத்தார். இப்படி அவள் கொடுத்த பலியானது சுயபட்சத்தையுஞ் சுய நன்மையையுந் தேடாமல் மெய்யாகவே சம்பூரணமும் உத்தமமுமாயிருந்தது.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—நாம் சந்நியாசத்தில் வார்த்தைப்பாடு கொடுத்தபோதே தேவ ஊழியமென்கிற பீடத்திலே நம்மை முழுதும் சர்வேசுர

னுக்குச் சம்பூரண பலியாக ஒப்புக்கொடுத்தோமல்லவா? இந்தப் பலியினால் நாம் நமது மேல் சுமத்திக்கொண்ட கடமைகளை எந்நாளும் அநுசரித்து வரவேண்டியதினால், அநுதினமும் மனதினாலாவது இந்தப் பலியைப் புதுப்பித்துக் கொள்ளவேண்டியது. நம்மிலுள்ளதெல்லாம் சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுத்திருக்கக்கொள்ள அதில் ஏதாவது யோசியாமல் நமக்கென்று வைத்துக்கொள்ளவில்லையோ? நமது இருதயத்தைப் பங்கிட்டாற்போல அதின் பட்சத்தில் பாதி சர்வேசுரனுக்கும் பாதி சிருஷ்டிக்கப்பட்ட வஸ்துகளுக்குங் கொடுக்கவில்லையோ?

**மனப்பற்றுதல்.**—இது விஷயத்தில் உன் தவறுதல்களை உனக்குத் தெளிவிக்கவும், உன்னை முழுதும் என்றென்றைக்கும் ஆண்டவர் தமக்குச் சொந்தமாய் ஏற்றுக்கொள்ளவுங் கிருபைசெய்யவேணுமென்று மன்றாடு.

**பிரதிக்கினை.**—கிரமந்தப்பின அற்பப் பற்றுதலுக்கு முதலாய் இடங்கொடாதபடி எச்சரிக்கையாயிரு.

## 3-ம் பிரிவு

### பரிசுத்த கன்னிமரியம்மாள் மாறாதவிதமாய்த் தன்னைச் சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுக்கிறாள்

**தியானம்.**—அர்ச். மரியம்மாள் கொடுத்த காணிக்கை பரிபூரணமாயிருந்ததெப்படியென்றால்: அவள் தான் கொடுத்த காணிக்கையில் யாதொன்றுந் திரும்ப எடுத்துக் கொள்ளாமல், அதை நாளுக்குநாள் அதிக உத்தமமும் சர்வேசுரனுக்கு மென்மேலும் உகந்ததுமாய் இருக்கப்பண்ணினாள். ஆண்டவர் அதற்கு ஈடாக, ஓயாமல் நவமான வரப்பிரசாதங்களை அவளுக்குக் கொடுத்துக் கொண்டு வந்தார். அவளும் அந்த வரப்பிரசாதங்களுக்குப் பிரமாணிக்கமாய் உடன்முயற்சி செய்துவந்தாள். இதைக்கொண்டு அதிதூதரான கபிரியேல் சம்மனசு மங்களவார்த்தை சொல்ல வந்தபோது அவளை நோக்கி: தேவ இஷ்டப்பிரசாதத்தினால் சம்பூரணமானவளே, வாழ்க, பெண்சாதிகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவள் நீரே என்று சொன்ன வாக்கியம்



எவ்வளவு சத்தியமானதென்று நாம் கண்டுபிடிக்கலாம். ஆனால் இயேசுநாதசுவாமி அவதரித்த நாள் முதல் அவள் பரலோக பிராப்தியான காலம்வரையிலே, அவளிடத்தில் எவ்வளவு தேவஇஷ்டப்பிரசாதம் குவிந்ததென்று அளவிட்டுச் சொல்லக் கூடியவர்களார்?

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—மகாஸ்திரமான முகாந்தரங்களை முன்னிட்டு, நாம் செய்த பிரதிக்கினைகளிலே முதலாய் எத்தனையோவிசை பிரமாணிக்கந் தவறிப்போகிறோம்! இப்படியிருக்க நமது நடக்கைக்கும் அந்த ஆண்டவளுடைய பிரமாணிக்கத்துக்கும் எவ்வளவோ வித்தியாசம்! ஐயோ! நாம் இதைப் பார்க்கும்போது வார்த்தைப்பாடுகளை மீறுவதற்காகவே அவைகளைக் கொடுத்ததுபோல் தோன்றுகிறதல்லவா? நமது நிலையற்ற தன்மையைக் கண்டு மனம் நொந்து இனிமேலாவது எப்போதும் அதிக உறுதியாய் நடக்கும்படி இந்தத் திருநாளில் நமது மனதைத் தூண்டியெழுப்பக்கடவோம்.

**சம்பாஷணை.**—தேவமாதாவோடு சம்பாஷணை செய்வோமாக. அவளைத் துதித்துக் கொண்டாடி அவள் நம்மை இயேசுநாதருக்கு ஒப்புக்கொடுக்கவும் அவருடைய திரு ஊழியத்தில் நமக்கு நிலைமையான மிகுந்த பக்தி சுறுசுறுப்பைப் பெறுவிக்கவும் மன்றாடுவோமாக.

---

# 22-ம் தேதி

## கடைசித் திங்கட்கிழமை நடந்த வர்த்தமானம்

### காய்ப்பில்லாத அத்திமரத்தை இயேசுநாதசுவாமி சபிக்கிறார்

**ஆயத்தச் சிந்தனை.**—காய்ப்பில்லாத அத்திமரத்தை இயேசுநாதசுவாமி சபிக்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

**தியானச் சேபம்.**—இரட்சணியத்துக்குரிய திரளான ஞானப்பலனை விளைவிக்கும்படி வரப்பிரசாதங்கேள்.

## முதல் பிரிவு

### இயேசுநாதர் பசியினால் வருந்துகிறார்

**தியானம்.**—இயேசுநாதர்சுவாமி எருசலேமிலிருக்கிறது க்ஷேமமல்லவென்று நினைத்து, குருத்து ஞாயிற்றுக்கிழமைச் சாயங்காலம் பெத்தானியாவூருக்குப் போனார். மறுநாள் எருசலேம் பட்டணத்தில் திரும்பப் பிரவேசித்து, நாள்முழுதும் அதில் செலவழித்தார். கர்த்தர் அங்கே கனிகொடாத மரத்தைச் சபித்து, தேவாலயத்தின் சங்கைக்கு விரோதமாய் அதில் வியாபாரம் நடத்தினவர்களை வெளியே துரத்தி, அநேகம் பிரசங்கங்கள் செய்ததும்; அவருடைய சத்துராதிகள் அவருக்கு விரோதமாய் மறுபடியும் ஆலோசனைச் சங்கம் கூடினதும் ஆகிய இவையெல்லாம் அன்று நடந்த வர்த்தமானங்கள். இவைகளில் முந்தின வர்த்தமானமாகிய அத்திமரம் சபிக்கப்பட்டதின் பேரில் இன்று தியானிப்போம். இயேசுநாதர் பெத்தானியாவூரிலிருந்து எருசலேம் பட்டணத்துக்குத் திரும்பிவரும்போது அவர் பசியாயிருந்தவேளையில் இந்த மரம் சபிக்கப்பட்டதென்று அர்ச். மத்தேயு அருளிச்செய்தார் (மத். 21). இந்தச் சங்கதியைக்கொண்டு, இயேசுநாதர்சுவாமி தேவாலயத்துக்குப் பட்டினியாய் வந்தாரென்றும், அன்று முழுவதும் ஒன்றுஞ் சாப்பிடாமல் பெத்தானியாவூருக்குப் பொழுதுசாயத் திரும்பினாரென்றும் நாம் முடிவுகட்ட வேண்டியிருக்கிறது. ஆகையால் அவர் அன்றைபத்தினம் பசியினால் எவ்வளவோ வருத்தப்பட்டிருப்பார்!

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—இப்படி இயேசுநாதசுவாமி அநேகம் விசை பசியோடிருந்தாரென்பதற்குச் சந்தேகமில்லை. ஆகிலும் இந்தச் சமயத்தில் அவர் அநுபவித்த பசியைக்குறித்து வெளிப்படையாய்ப் பேச, இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரனுக்குச் சித்தமானதேதென்றால்: ஆண்டவருடைய திரு அடியார்களில் யாராவது இப்பேர்ப்பட்ட சமயத்திலே பசிதாகம் அநுபவிக்க நேரிடும்போது, அவர்கள் இதை நினைத்து மனத்தைரியமாய் இருக்கும்படியாகத்தானென்று சொல்லத்தகும்.



மேலும் அவரிடத்தில் சரீரப் பசியைப்பார்க்க ஞானப்பசி அதிகமாயிருந்ததென்று எல்லாத்துக்குமுந்தி நினைத்துக் கொள்ளக்கடவோம். நமது ஆண்டவர் அநுபவிக்கும் இவ்வகைப் பசியை ஆற்றுகிறதெப்படி? நாம் செய்யும் புண்ணிய நற்கிரியைகளாகிற கனிகளைக்கொண்டு இதை ஆற்றலாம். தினந்தோறும் அநேக புண்ணிய பலன்களாகிய கனிகளை அவருக்கு நீ ஒப்புக்கொடுக்கக்கூடுமே. ஆனால் இப்படிச் செய்யச் சோம்பலாயிருக்கவில்லையோ? பலனற்ற வீண் யோசனைகளில் உன் நாட்கள் கழிகிறதில்லையோ? இதை நினைத்து நீ அஞ்சவும் உன்னுடைய ஞானவேகத்தைச் சற்றே தூண்டியெழுப்பவும் வேண்டாமோ?

**மனப்பற்றுதல்.**—இதெல்லாங்கண்டு நாணி, துக்கப்பட்டு உன்னை ஆண்டவருக்கு ஒப்புக்கொடுப்பாயாக.

**பிரதிக்கினை.**—நன்மை செய்யத்தக்க சமயமேதென்று மகா கவனமாய்ப் பார்த்து அதைக் கைதவற விடாதே.

## 2-ம் பிரிவு

### இயேசுநாதர் அத்திமரத்தில் கனிகள் உண்டோவென்று வியர்த்தமாய்த் தேடினதின்பேரில்

**தியானம்.**—இயேசுநாதர் இலைகள் நிறைந்திருந்த ஒரு அத்திமரத்தைக் கண்டு அதில் ஏதாகிலுங் கனி உண்டோவென்று பார்க்கப்போய்க் கிட்ட நெருங்கினபோது இலைகள் மாத்திரம் இருக்கக் கண்டார். ஏனென்றால் அந்தக் காலம் பழக் காலமல்ல (மாற். 14). இவ்விடத்தில் நாம் அறியவேண்டியதென்னவெனில்: வழக்கமாய் அத்திமரங்கள் பழக்காலம் ஓய்ந்தபின்மாத்திரந் துளிர்க்கத் துவக்கும். ஆனால் இயேசுநாதர் கிட்டப்போய்ப் பார்த்த மரமானது காலத்துக்குமுன் துளிர்த்திருந்ததினாலே அது மலட்டு மரமல்லாமல் வேறல்ல. அது யூதர் குலத்துக்கு அடையாளமாயிருந்தது. ஏனென்றால்: அவர்கள் தேவ கற்பனைகளின் எழுத்தைக் கவனித்து, சில வெளிச் சடங்குகளை அநுசரிக்கிறதே தங்களுக்கு வேதமென்று எண்ணி

வந்தார்களொழிய அந்தக் கற்பனைகளின் கருத்தைக் கவனிக்கவுமில்லை; மெய்யான கனிகளுக்கு ஒப்பான புண்ணியங்களை அநுசரிக்கவுமில்லை.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—கிறீஸ்துவர்களாயிருந்தும், மெய்யான கிறீஸ்துவர்களுக்குரிய பத்தி சுறுசுறுப்பும், பற்றுதலும் இல்லாதவர்களுக்கு மேற்சொன்ன அத்திமரம் ஓர் சாயலாயிருக்கிறதென்கலாம். ஏனென்றால்: அப்பேர்ப்பட்டவர்கள் வேதத்திற்கு அத்தியாவசியமான புண்ணியங்களை அநுசரியாமல், தங்கள் கவனத்தையும் மனப்பற்றுதலையும் வேறே காரியங்களில் சிதறித் திரியவிட்டு, வாயினாலேமாத்திரம் சில மந்திரங்களை உளறிக் குளறிச் சொல்லுவார்கள்; அல்லது வேதத்துக்கடுத்த சில வெளிச் சடங்குகளைப் பேருக்குமாத்திரம் நிறைவேற்றுவார்கள். இந்தப் பொல்லாப்பு நமக்கும் வராதபடி பயத்தோடிருக்கக்கடவோம். பல பராக்குகளால் இந்தப் பொல்லாப்பு வெகு தீவிரமாய் வரக்கூடுமென்கிறதினாலே நமதுமேல் கண்ணுண்டாயிருந்து நம்மை அடிக்கடி சோதித்துவரக்கடவோம்.

**மனப்பற்றுதல்.**—உன் ஆத்துமத்திலுண்டான பராக்கு அசமந்தம் வறட்சி, இவைமுதலியவைகளின் பேரில் உனக்கு மிகுந்த பயமுண்டாகச் சர்வேசுரனைப்பார்த்து மன்றாடு.

**பிரதிக்கினை.**—நாம் ஆத்துமசோதனை செய்யும்போது நமது கிரியைகளையும் விசேஷமாய் இயல்பிலே நன்மையும் தின்மையுமல்லாத காரியங்களையும், ஞான நோக்கத்தினாலும் நற்கருத்தினாலும் அர்ச்சிக்க நாம் படும் பிரயாசமேதென்று முக்கியமாய் யோசித்துப் பார்ப்போமாக.

## 3-ம் பிரிவு

### காய்க்காத அத்திமரத்தை இயேசுநாதசுவாமி சபிக்கிறார்

**தியானம்.**—இரட்சகர் அந்த அத்திமரத்தைப் பார்த்து உரத்தசத்தமாய்ச் சொன்னதாவது: உன்னிடத்தில் ஒருபோதும் யாதொரு கனியும் இல்லாமற்போகட்டு



மென்றார். என்ற க்ஷணத்திலே அந்த மரம் பட்டுப்போயிற்று. மறுநாள் அப்போஸ்தலர்கள் அந்த மரத்தின் வேர்முதலாய்ப் பட்டுப்போனதைக் கண்டு மிகவும் ஆச்சரியப்பட்டார்கள் (மத். 12).

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—நான் மனந்திரும்புவேன் மனந்திரும்புவேனென்று மேலெழுந்தவாரியாய் நினைத்துக்கொண்டிருக்கிற பாவிக்குத் திடீரெனச் சடுதிமரணம் வந்து: சபிக்கப்பட்டவனே நம்மைவிட்டு நித்திய அக்கினியில்போய் விழுவென்று கோடை இடிக்குச் சமானமாய்த் தேவ நீதியின் சத்தந் தொனிக்கும்போது, அவன் எவ்வளவோ பிரமிப்படைவான்! அவனுக்கு அந்நேரத்தில் உண்டாகும் அவநம்பிக்கையும் திகிலும் இவ்வளவென்று யாரால் சொல்லக்கூடும்? ஆனால் அவன் அப்போது எவ்வளவு அங்கலாய்த்துக் கிலேசப்பட்டாலும் அதெல்லாம் வீணாயிருக்கும். ஏனென்றால்: தபசு செய்து தேவகிருபையை அடைய வேண்டிய காலங் கடந்துபோயிற்று. திரும்ப அது ஒருபோதும் வராது. இந்த நினைவானது பாவிகளை மனந்திருப்ப நாம் பிரயாசப்படுவதற்கும், நமது இரட்சணியத்துக்கும் அர்ச்சிப்புக்கும் மகா கவலையோடு உழைப்பதற்கும், எவ்வளவோ வேகமான சுறுசுறுப்பை நம்மிடத்தில் மூட்டவேண்டியது.

**சம்பாஷணை.**—உலகமெங்கும் இன்று வெகு பிரபலியமாய்க் கொண்டாடப்படுகிற கன்னியும் வேதசாட்சியுமான அர்ச். செயசீலியம்மாளோடு சம்பாஷணை செய்வோமாக. அவளுடைய பிரயாசத்தின் பலன் ஆச்சரியமுள்ளதாயிருந்தது. வலேரியார், திபூர்சியார், மாக்சீம் என்பவர்களை அவள் மனந்திருப்பினதுமல்லாமல் தன்னோடே அவர்களும் வேதத்துக்காகத் தலைகொடுக்கச் செய்தாள். அவளை நாம் வாழ்த்திக் கொண்டாடி ஆண்டவருடைய முந்திரிகைத்தோட்டத்திலே கனிகொடாத மரமென்கிற அவமானம் நமக்கு வராமல் மிகுந்த கனிகளை விளைவிக்கும்படி நமக்காக அவள் இரந்து மன்றாடக் கேட்போமாக.

# 23-ம் தேதி

## கடைசிவாரஞ் செவ்வாய்க்கிழமை நடந்த பிரதான சங்கதிகள்

### விதவை கொடுத்த காணிக்கையும், வேதபாரகருக்கும் சதுசேயருக்குஞ் சொன்ன மாறுத்தரமும்

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதர் ஒரு ஏழை விதவையின் தாராளகுணத்தைக் கண்டு அவளைப் புகழுகிறதையும், வேதபாரகர் சதுசேயரானவர்களைக் கலங்கச் செய்கிறதையும் பார்க்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

தியானச் சேபம்.—இயேசுநாதர் உன்னைப் புகழ்ந்துகொள்ளத்தக்க விதமாய் நடப்பதற்கு வேண்டிய அநுக்கிரகத்தைக் கேள்.

## முதல் பிரிவு

### இயேசுநாதர் விதவை கொடுத்த காணிக்கையைப் புகழுகிறார்

தியானம்.—இயேசுநாதர் பெத்தானியாவூரில் இராத்திரி தங்கியிருந்து திரும்பவும் எருசலேம் பட்டணத்தில் போய்த் தமது பிரசங்கங்களைத் தொடர்ந்து நடத்தி, நாள் முழுதும் அங்கே செலவழித்தார். அந்தச் செவ்வாய்க்கிழமை விதவையொருத்தி கொடுத்த காணிக்கையைப் புகழ்ந்துகொண்டார். பின்னுஞ் சேசார் இராயன் பேரால் கொடுக்கவேண்டிய பகுதியைக்குறித்து வேதபாரகரும், உத்தானத்தைக் குறித்துச் சதுசேயரும், உலகமுடிவைப் பற்றி அப்போஸ்தலர்களும் கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொன்னார். இவைகளில் முதல் மூன்று விசேஷங்களையுமெடுத்து இந்தத் தியானத்தின் மூன்று பிரிவுகளில் தியானிக்கக்கடவோம். முந்தமுந்த விதவை கொடுத்த காணிக்கையின்பேரில் தியானிப்போமாக. இயேசுநாதர் தேவாலயத்தின் வாசற்படியில் வைத்திருந்த உண்டியல் பெட்டிக்கு நேரே உட்கார்ந்து சனங்கள் அதில் காணிக்கை



போடுகிறதையும் அநேகம் ஐசுவரியவான்கள் அதிகமாய்ப் போடுகிறதையும் பார்த்துக்கொண்டிருந்தார். அப்போது ஏழையான ஒரு விதவை வந்து கால்துட்டுப் பெறுமான இரண்டு சின்னக்காசைப் போட்டாள். அதைக்கண்டு இயேசுநாதர் தம்முடைய சீஷர்களை நோக்கிச் சொன்னதாவது: ஏழையாகிய இந்த விதவை மற்றவர்களைப்பார்க்க அதிகமாய்ப் போட்டாளென்று நான் உங்களுக்கு உண்மையாகவே சொல்லுகிறேன்; ஏனென்றால்: மற்றவர்களெல்லாரும் தங்களுக்கு மிச்சமாயிருந்ததைக் கொடுத்தார்கள். இவளோவெனில் தன் எளிமைக்குத் தக்கது தன் பிழைப்புக்கு வைத்திருந்ததையெல்லாங் கொடுத்தாளென்றார் (மாற். 12).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நீ ஒன்றில் வயது சென்றவனாய், ஒன்றில் இளம்பிராய ரோகஸ்தனாயிருந்தால், தேவ ஊழியத்தில் வெகு பிரயாசப்படவும் மிகுந்த பத்தி ஊக்கத்தைக் காண்பிக்கவும் கூடாதென்று மனவருத்தப்படாதே; அல்லது நீ வாலிபனாய்ப் பலசாலியாயிருந்தும் உனக்குக் கொடுக்கப்பட்ட வேலை அவ்வளவு முக்கியமானதல்லவென்றும் ஆயாசப்படாதே. ஏனென்றால்: இயேசுநாதசுவாமி தமது ஊழியத்தில் நாம் செய்யுந் தொழில் என்னவென்று பாராமல், அதை நாம் எவ்வளவு பற்றுதலோடும் தாராள சுறுசுறுப்போடும் எவ்வித கருத்தோடும் செய்கிறோமென்று பார்த்து அத்தொழிலை மதிப்பாரொழிய மற்றப்படியல்ல.

மனப்பற்றுதல்.—இந்தச் சத்தியத்தைக் குறித்து விசுவாச முயற்சி செய்.

பிரதிக்கினை.—எந்தக் காரியத்திலும் உன் கிரியைக்குச் சர்வேசுரன் சாட்சியாயிருந்து அதை அங்கீகரிக்கும்படி தேடு.

## 2-ம் பிரிவு

### பகுதி செலுத்துவதைப்பற்றி இயேசுநாதர் வேதபாரகருக்குச் சொன்ன மாறுத்தரம்

தியானம்.—இயேசுநாதர்சுவாமியுடைய பேரைக் கெடுக்கும்படி வேதபாரகரும் பரிசேயரும் தாங்கள் அது

வரையில் பட்ட பிரயாசமெல்லாம் பலிக்காமல் போனதைக் கண்டு, இன்னும் கடைசியாய் ஒரு பிரயத்தனம்பண்ணிச் சூட்சமாய் அவரை ஒரு கேள்வி கேட்கத் துணிந்தார்கள். அதற்கு அவர் எப்படி மாறுத்தரம் சொன்னாலும், தப்பாமல் ஒன்றில் ஜனங்களுக்குப் பகையாளியாய் ஒன்றில் ரோமாபுரி இராயனுக்குமுன் குற்றவாளியாய்ப் போக வேண்டியிருக்குமென்று எண்ணிக்கொண்டார்கள். அவர்கள் கேட்ட அந்தக் கேள்வி என்னவென்றால்: போதகரே, சேசார் இராயனுக்கு நாம் பகுதி செலுத்தலாமோ? உமக்கு எப்படித் தோன்றுகிறதென்று யோக்கியர்போல வேஷம் போட்டு வினவினார்கள். ஆனால் மனுஷருடைய சூதும் கபடமும் தேவஞானத்தை ஏய்க்கமுடியுமோ? அதில்லையே. ஆகையால் இயேசுநாதர் அவர்களைப் பார்த்து: கள்ள ஞானிகளே, பகுதி செலுத்துகிற நாணயத்தை எனக்குக் காண்பியுங்களென்றார். அவர்களும் அப்படியே ஒரு பணத்தைக் காண்பிக்க, இதில் பதிந்திருக்கிறது யாருடைய சாயலும் பேருமென்று கேட்டார். அதற்கு அவர்கள்: சேசாருடையது என்றார்கள். அப்போது இயேசுநாதர்: அப்படியானால் சேசாருக்குச் செல்லுமானதைச் சேசாருக்குச் செலுத்துங்கள்; சர்வேசுரனுக்குச் செல்லுமானதைச் சர்வேசுரனுக்குச் செலுத்துங்களென்றார் (மத். 22; மாற். 11). அவர்கள் தாங்கள் நினையாத இந்த மறுமொழியைக் கேட்டு ஆச்சரியப்பட்டுச் சனங்களுக்கு முன்பாகத் தங்களுக்கு அவமானமாயிற்றென்று வெட்கிப் போய்விட்டார்கள்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—பொல்லாதவர்கள் நினைக்குங் காரியங்களைச் சர்வேசுரன் இப்படிக் கலங்கடிக்கச் செய்வார். ஆகையால் சர்வேசுரனுடைய சத்துராதிகள் நமக்கு விரோதமாய் வீசும் உபாயவலைகளைக் கண்டு, அவர்களுக்குச் செயமும் நமக்குத் தோற்வையும் தப்பாமல் வருமென்று பயந்து நம்பிக்கையற்றுப்போகிறது அடாத காரியமல்லவோ? இப்படிப்பட்ட தவறான எண்ணம் உன்னிடத்தில் இல்லையோ? இருந்தால் இது சர்வேசுரனுக்கு ஏற்காது. ஏனெனில் இது அவருக்கு



ஒரு நிந்தையாயிருக்கிறது. உனக்கும் ஏற்காது. ஏனெனில்; இது உன்னிடத்தில் வீண் கவலை ஏக்கத்தை உண்டாக்கி உன் ஆத்தும சமாதானத்தை முழுதும் அழித்துப் போடும்.

**மனப்பற்றுதல்.**—ஆண்டவரே, என் நம்பிக்கையெல்லாம் உமதுமேல் வைத்திருக்கிறேன் ஆகையால் ஒருபோதுங் கலங்கமாட்டேன் (சங். 30).

**பிரதிக்கினை.**—இனி என்ன நடக்கப்போகிறதோவென்று வீணாய்க் கலங்காமல் முழு நம்பிக்கையோடு என்னை ஆண்டவருக்குக் கையளிப்பேன்.

## 3-ம் பிரிவு

### உத்தானத்தின்பேரில் சதுசேயருக்குக் கொடுத்த மறுமொழி

**தியானம்.**—வேதபாரகர் வெட்கப்பட்டுப் போனவுடனே, மாம்ச உத்தானமில்லையென்கிற சதுசேயர் தர்க்கத்துக்கு வந்தார்கள். தந்திரமான கேள்விகளைக் கேட்டு இயேசுநாதரைக் கலங்கடிக்கவேணுமென்பது அவர்களுடைய கருத்தாயிருந்தது. ஆகையால் அவர்கள் அவரை நோக்கி: போதகரே, ஒரு ஸ்திரீ ஏழு சகோதரர்களுக்கு ஒருவனுக்குப்பின் ஒருவனுக்காய் வாழ்க்கைப்பட்டிருந்தாள். இப்படியிருக்க உத்தான நாளில் அவள் அந்த ஏழுபேரில் யாருக்கு மனைவியாய் இருப்பாளென்றார்கள். அதற்கு இயேசுநாதர் மறுமொழியாக: உத்தான காலத்தில் கலியாணமும் கலியாணப் பேச்சுங் கிடையாது. ஏனென்றால்: உயிர்த்தபின் சகலரும் சாகாதவரம் பெற்றிருப்பார்களாகையால் ஒருவரும் மரிக்கவுமாட்டார்கள். மரித்தவர்களுக்குப் பதிலாய் வேறேபேர் பிறக்கவுந் தேவையிராது; அப்போது நீதிமான்கள் மோக்ஷத்திலே சம்மனசுக்களைப்போல் இருப்பார்களென்றார் (லூக். 20).

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—நீதிமான்கள் சர்வேசுரனுடைய சம்மனசுக்களைப்போல் இருப்பார்களென்று இயேசுநாதர் சொன்ன வாக்கியத்திலே எவ்வளவு ஆறுதலான பரம ரகசியங்கள் அடங்கியிருக்கின்

றன! நமக்குச் சரீரமிருந்தும், சுத்த அரூபிகளான சம்மன சுக்களுக்கு ஒப்பாயிருப்போமென்கிறது எப்பேர்க்கொத்த அதிசயம்! அதேதெனென்றால்: நமது சரீரங்கள்தானே சம் மனசுகளுக்குப் பொருந்தின அட்சயம், சூட்சம், இலகு, பிரகாசமென்னுங் குணங்களைக்கொண்டிருக்கும். அப் போஸ்தலர் சொல்லியிருக்கிறதுபோல: கண்டிப்புள்ள இந் தச் சரீரம் கண்டிப்பற்றதாகி இப்போது நம்மால் கண்டு பிடிக்கக்கூடாத விதமாய்ப் பேரின்பங்களை அநுபவிக்க வல் லதாயிருக்கும். நமது பஞ்சேந்திரியங்களில் ஒவ்வொன் றும் அததற்கு ஏற்ற நன்மையைச் சுகித்தநுபவிக்கும். இது எப்பேர்க்கொத்த பாக்கியமான ஸ்திதி! இதை நாம் எப்போதும் உயிருள்ள விசுவாசத்தோடு நினைத்துப் பார்ப் போமாகில் இந்தப் பிரபஞ்ச சீவியத்தின்பேரில் எள்ளள வும் பற்றுதல் வையாமல் பரலோக பாக்கியங்களையே நினைத்துப் பெருமூச்சு விட்டுக்கொண்டிருப்போம்.

சம்பாஷணை.—இன்றையத் திருநாளுக்குரிய வேதசாட்சிகளாகிய அர்ச். சாந்தப்பர், பாக்கியத்தம்மாள், அவளுடைய ஏழு பிள்ளைகள் ஆகிய இவர்களுடைய மன் றாட்டினால், சர்வேசுரன் மேற்சொன்ன நன்மையை நமக் குக் கட்டளையிட்டருளும்படி பிரார்த்திக்கக்கடவோம்.

---

## 24-ம் தேதி

### செவ்வாய்க்கிழமை நடந்த வர்த்தமானங்களின் தொடர்ச்சி

#### திராட்சப் பயிரிட்ட துஷ்டக் குடிகளின் உவமை

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதர் தேவாலயத்தில் பிரசங்கஞ் செய்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

தியானச் சேபம்.—நீங்கள் நன்றிகெட்டவர்களும் மூர்க்கருமாயிருக்கிறீர்களென்று இயேசுநாதசுவாமி இந்த



உவமையில் யூதருக்குச் சொன்ன கண்டனை நமக்கும் நேரி டாதபடி வரங் கேட்போமாக.

### முதல் பிரிவு

#### திராட்சத் தோட்டம் வேத கவனமாய்ப் பயிரிடப்படுகிறது

தியானம்.—பெரிய செவ்வாய்க்கிழமை நடந்த பல வர்த்தமானங்களில் மூன்று விசேஷங்களை நேற்றுத் தியா னித்ததே தவிர, இயேசுநாதசுவாமி யூத சனங்களுடைய அறியாமையைத் தெளிவிக்கவும், அவர்களை அக்கிரமமாய்க் கெடுத்திருந்த தலைவர்களை மனந்திருப்பவும் அன்று திரு வுளம்பற்றின உவமைகளைத் தியானிக்கவில்லை. அவைக ளில் திராட்சத் தோட்டத்தைப் பயிரிட்ட குடியானவர்கள் உவமை, முக்கியமும் மனதில் தைத்து உறுத்தத் தக்கதுமா யிருக்கிறது. அதின் கருத்து ஏதென்றால்: அந்தக் குடி யானவர்கள் தங்கள் எசமான் அனுப்பின ஆட்களில் சிலரை உபாதித்து, சிலரைக் கொன்றபின், அவனுடைய ஏக புத்திரனையும் கொலை செய்துவிட்டார்களென்பதாம். இயேசுநாதரைக் கொலைசெய்ய வேணுமென்று நினைத் திருந்த அந்த யூதர்கள் இதைக்கேட்டு மேற்படி தோட்டக் காரரால் குறிக்கப்பட்டவர்கள் தாங்கள்தானென்றும், சர் வேசுரன் தங்கள் சனங்களுக்குச் செய்த உபகாரங்களும், அவைகளுக்குக் கைம்மாறாகத் தாங்கள் காட்டின நன்றியறி யாமையும், நினைத்த கொலைபாதகமும், சர்வேசுரன் தங் க்ளுக்கு விதிக்கப்போகிற ஆக்கினையும் இந்த உவமையின் விபரங்களிலே காணப்படுகிறதென்றும் சந்தேகமில்லாமல் அறிந்திருக்கவேண்டியது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இந்த உவமையை இயேசுநாதசுவாமி நம்மைக்குறித்துஞ் சொல் லியிருப்பதினாலே, நமது துறவற அந்தஸ்த்தைத் திராட்சத் தோட்டமாகப் பாவித்து, அதில் நமக்குள்ள நன்மைகளை யும் கடமைகளையும் யோசித்துப் பார்ப்போமாக. யோசித் துப்பார்த்தால் அதிலடங்கிய புத்தி தன்னால் வெளியாகும். ஆகையால் முந்த முந்த அந்தத் தோட்டத்துக்காக எச

மான் பட்ட பிரயாசத்தையும், சிரமத்தையும்பற்றி இயேசுநாதர் சொல்லியிருப்பதெல்லாம் துறவற அந்தஸ்துக்கு எவ்வளவு ஆச்சரியமானவிதமாய்ப் பொருந்துமென்று பார்க்கக் கடவோம். குடும்பத்தெசமான் ஒருவன் திராட்சத் தோட்டம்போட்டுச் சுற்றிலும் வேலியடைத்து, அதில் ஆலையு நாட்டி, கோபுரமும் எழுப்பிக் குடியானவர்களுக்கு அதைக் குத்தகைக்குவிட்டு அந்நியதேசத்துக்குப் போனான் (மத். 21). மனுக்குலத்துக்கெல்லாம் பொதுத் தகப்பனாகிய சர்வேசுரன் துறவறத்தையும், அதின் ஒவ்வொரு சபையையும் ஏற்படுத்தியிருக்கிறாரென்பதற்குச் சந்தேகமில்லை. இதைப்பற்றியே, உன்னைத் தெரிந்தெடுத்த முந்திரிகைத் தோட்டமாக நானே வைத்துப் பயிராக்கினேனென்று சர்வேசுரன் எரேமியாஸ் என்னும் தீர்க்கதரிசியின் வாயால் வசனித்திருக்கிறார். அதைச் சுற்றியடைத்த வேலியானது துறவற வார்த்தைப்பாடுகளும், சபை ஒழுங்குகளும், சிரேஷ்டர்களுடைய கண்காணிப்பும் ஆகிய மூவித மதில்களாம். ஏராளமாய் இரசம் பிழிகிற ஆலையானது மற்ற அந்தஸ்துகளுக்கு மேலாய்த் துறவற அந்தஸ்தில் அடங்கிய ஞான நன்மைகளும் தேவ வரப்பிரசாதங்களுமாகிய வற்றாத பொக்கிஷத்தின் சாயலாம். அதின் நடுவில் எழுப்பப்பட்ட கோபுரமானது தேவநற்கருணைப்பெட்டகத்துக்கு அடையாளமாம். இயேசுநாதசுவாமி இதிலிருந்துகொண்டு தமது முந்திரிகைத் தோட்டத்திலே தாம் கையேற்றுக்கொண்டவர்களை விசேஷ கிருபையோடு பார்த்து வருகிறார். அது அவருடைய சொந்தத் தோட்டம். ஆனால் அதை நாம் பயிர்செய்யும்படி நமது கையில் விட்டிருக்கிறார். பழக்காலம் வருந்தனையும் அவர் நமது கண்ணுக்குக் காணாதவராயிருக்கிறபடியால் நம்மைவிட்டு அவர் வெகு தொலையாய்ப் போனாற்போலிருக்கிறது. ஆனால் அவர் நமது கிட்டவே இருக்கிறார் என்பதற்கு சந்தேகமில்லை. நாம் படும் பிரயாசத்துக்குத் தக்க சம்பாவனை கொடுக்கும்படி நமது உழைப்பையும் ஊக்கத்தையும்கவனித்து வருகிறார்.

மனப்பற்றுதல்.—சர்வேசுரன் துறவறமாகிய தமது திராட்சத்தோட்டத்துக்கு நம்மை அழைத்த மகத்தான



உபகாரத்துக்காக அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்வோமாக.

பிரதிக்கினை.—நமக்கு ஒப்புவிக்கப்பட்ட இந்தத் திராட்சத்தோட்டமானது, அர்ச்சியசிஷ்டதனத்தின் கனிகளை ஏராளமாய்ப் பொழியத்தக்கதாக முன்னிலும் இருமடங்கு அதிக சுறுசுறுப்போடு முயற்சி செய்வோமாக.

## 2-ம் பிரிவு

### குடிகளுடைய துரோகமும் நன்றிகெட்டதனமும்

தியானம்.—பழங்களைச் சேகரிக்கும் காலம் ஆனபோது, அந்தக் குடும்பத்து எசமான் அவைகளை வாங்கி வரும்படி முந்தத் தன் ஊழியர்களையும், கடைசியாய்த் தன் ஏக குமாரனையும் அனுப்பினான். குடியானவர்களோவென்றால் அவர்களைத் தோட்டத்துக்கு வெளியே தள்ளிக் கொன்றுபோட்டார்கள் (மத். 21).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நன்றிகெட்டவர்களும் மூர்க்கரும் தேவ கொலைக்காரருமான யூதர்களுடைய கூர்கெட்ட நடத்தையை இயேசுநாதர்சுவாமி ஒரு சரித்திரம்போல் விளக்கிக் காட்டுகிறாரல்லவோ? ஆனால் கீழ்ப்படியாத கிறீஸ்துவர்களும், துறவறத்தாரும் நடக்கிறவிதமும் இதிலே சாடையாய்க் காணப்படுகிறதல்லவோ? இவர்கள் சர்வேசுரனால் அனுப்பப்பட்ட சிரேஷ்டர்களுடைய கற்பனைகளையும் புத்திகளையுந் தள்ளிப்போடுகிறார்கள். தங்களுக்கு ஒப்பிக்கப்பட்ட திராட்சத் தோட்டமாகிய தங்கள் ஆத்துமத்திலும் பிறர் ஆத்துமத்திலும் ஞானப் பலனாகிற புண்ணியங்களை விளைவிக்கும்படி ஆண்டவர் கொடுக்கிற வரப்பிரசாதத்தைச் சட்டைபண்ணாமல் அது தங்கள் இருதயத்துக்குள்ளேதானே அமுங்கி மடியச் செய்கிறார்கள். இதெல்லாம் இயேசுநாதர் இந்த உவமையில் சொல்லிக் காண்பித்தாற் போலாயிற்று.

மனப்பற்றுதல்.—உன்னை நடுத்தீர்க்கப்போகிற இயேசுநாதர், நன்றிகெட்ட பாவிகளான கிறீஸ்துவர்களைப்

பார்த்துத் தீர்வை நாளில் சொல்லும் முறைப்பாட்டுக்கு நீயும் ஆளாகாதபடி அநுக்கிரகங் கேள்.

**பிரதிக்கினை.**—நான் பிரவேசித்த நல்ல வழியில் எப்போதும் பிரமாணிக்கமாயிருக்கும்படி, ஞான ஒடுக்கத்தில் நான் செய்துகொண்ட பிரதிக்கினைகளை அடிக்கடி புதுப்பித்துவருவேன்.

## 3-ம் பிரிவு

### அந்தக் குடிகளுக்கு வந்த ஆக்கினை

**தியானம்.**—இயேசுநாதர்சுவாமி இந்த உவமையை முடித்து யூதரை நோக்கி: தோட்டத்து எசமான் வரும்போது அந்தக் குடியானவர்களை எப்படி நடப்பிப்பானென்று கேட்டார். அதற்கு அவர்கள் மறுமொழியாக: எசமான் அவர்கள் குடியைக் கெடுத்துத் தோட்டத்தை வேறே ஜனங்களுக்குக் கையளிப்பானென்றார்கள். ஐயோ, அவர்கள் தெரியாமல் தங்களுக்குத் தாங்களே இப்படித் தீர்வையிட்டுக்கொண்டார்கள். அவர்கள் அதை இன்னும் அதிகத் தெளிவாய்க் கண்டுபிடிக்கத்தக்கதாக இயேசுநாதர் சொன்ன பயங்கரமான வாக்கியமாவது: சர்வேசுரனுடைய இராச்சியம் உங்களைவிட்டு எடுபட்டுப்போய், நற்கனிகளை விளைவிக்கும்படி வேறே ஜாதியாருக்குக் கொடுக்கப்படுமென்று உங்களுக்கு நான் சொல்லுகிறேனென்றார் (மத். 21).

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—துறவறத்தாரில் எத்தனையோபேர் நெடுங்காலம் துறவிகளாயிருந்தபின்னும், கடைசியாய்க் கெட்டு நிர்ப்பாக்கியமாய்த் தங்கள் சபையினின்று நீக்கப்பட்டார்கள்! பொல்லாப்புக்கெல்லாம் பெரிய பொல்லாப்பும், ஏக பொல்லாப்புமாகிய இந்த நிர்ப்பாக்கியத்தினின்று நீ தப்பவேணுமானால், உன் இருதயத்தை முழுதும் உன் ஆத்தும குருவுக்குத் திறந்து காண்பி. நீ செய்த பாவங்களையுமல்லாமல், உனக்கு வருஞ் சோதனைகளையும், சந்தேகங்களையும், உன் மன நாட்டங்



களையும், பயங்களையும் அவருக்கு வெளியாக்கி அவர் சொல்வதைக் கேட்டுச் சரியாய் நட.

**சம்பாஷணை.**—இன்றையத் திருநாளுக்குரிய அர்ச். சிலுவை அருளப்பரோடு சம்பாஷணைசெய்வாயாக. இவர் இயேசுநாதருடைய திரு இருதயத்துக்கும் அர்ச். கன்னிமரியம்மாளுடைய பரிசுத்த இருதயத்துக்கும் மிகவும் பிரியமான திராட்சத் தோட்டமாகிய கர்மேல் சபையின் ஏற்பாடுகளைக் கண்டிப்பாய் அநுசரிக்கும்படி தமது சகோதரர்களை உடன்படுத்துவதற்கு அர்ச். தெரேசம்மாளோடு வெகு பிரயாசப்பட்டு வந்தார்.

---

## 25-ம் தேதி

### செவ்வாய்க்கிழமை நடந்த கடைசி வர்த்தமானம்

### பொதுத்தீர்வையைப்பற்றி இயேசுநாதர்சுவாமி முன்னதாக அறிவித்த விசேஷங்கள்

**ஆயத்தச் சிந்தனை.**—இயேசுநாதர் மேகத்தின்மேல் மகிமைப்பிரதாபத்தோடு எழுந்தருளிச் சீவியர்களையும் மரித்தவர்களையும் நடுத்தீர்க்கிறதைப் பார்க்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

**தியானச் செபம்.**—சர்வேசுரனுடைய பயங்கரமான நீதி சிம்மாசனத்துக்குமுன் போய் நிற்க எப்போதும் ஆயத்தமாயிருக்கும்படி வேண்டிய வரப்பிரசாதங் கேள்.

## முதல் பிரிவு

### பொதுத்தீர்வைக்குமுன் தோன்றும் அடையாளங்கள்

**தியானம்.**—இயேசுநாதர் செவ்வாய்க்கிழமைச் சாயந்தரம் எருசலேம் பட்டணத்தினின்று புறப்பட்டுப் போகும்போது, அந்தப் பெரிய பட்டணமும் அதின் தேவாலயமும் கொஞ்சக் காலத்துக்குள்ளே அழிந்துபோகப்போகிறதைத் தம்முடைய அப்போஸ்தலர்களுக்குத் தீர்க்கதரிசன

மாக வெளிப்படுத்தினார். அத்தோடுகூட உலக முடிவையும், தாம் திரும்பிவரப்போகிறதையும் முன்னதாக அறிவித்தார். அதற்குமுன் தோன்றும் அடையாளங்களை அவர் வருணித்தபிரகாரம் தியானித்துப்பார். சூரிய சந்திர நட்சத்திரங்களிலே மகா விநோத ஆச்சரியங்கள் தோன்றும்; பூமியிலே சகல ஜாதி ஜனங்களும் சமுத்திரத்தின் அலை முழக்கத்தினாலே கலங்கிப் பதறித் திகைத்து நிற்பார்கள். உலகத்துக்கெல்லாம் என்ன நடக்கப்போகிறதோவென்கிற பயத்தினாலே ஜனங்களெல்லாம் விடவிடத்து உலர்ந்துபோவார்கள். சூரியன் மங்கிப்போம்; சந்திரன் ஒளியற்றிருக்கும்; நட்சத்திரங்கள் வானத்தினின்று உதிர்ந்து விழும். வானத்தின் சத்துவங்களெல்லாம் நடுநடுங்கிக்கொண்டிருக்கும் (லூக். 21., மத். 25).

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—இயேசுநாதர் பூலோகத்தில் மனுஷனாய்ச் சஞ்சரித்தபோது சிதறிப்போன ஆட்டைத் தேடித் திரியும் நல்ல ஆயனுக்கு ஒப்பாய் அன்பு தயாளம் முதலிய இலக்ஷணங்களோடு காணப்பட்டார். ஆனால் அவர் இரண்டாந்தரம் வரும்போது அப்படி வராமல், மனிதனை அந்தந்த விதமாய் நடத்திவந்த தேவபராமரிக்கை மகா நீதியுள்ள பராமரிக்கையென்று சர்வலோகத்துக்கும் பிரசித்தமாக்கவும், சத்தியத்தை எதிர்த்துத் திருச்சபைக்கும் நல்லொழுக்கத்துக்கும் விரோதமாய் நின்ற பாவிகளைக் கலங்கடித்துத் தீர்வையிடவும் வருவாரென்பதினாலே வாக்குக்கெட்டாத சோதிப் பிரதாப வல்லமையோடு எழுந்தருளிவருவார். இவ்வுலகத்தில் அவருடைய பொறுமையையும் தயவையும் பிறக்கணித்த பாவிகள் அவருடைய பிரதாப சோதியைக்கண்டு நடுநடுங்கி நிற்பார்கள். நீ பொதுத் தீர்வையையும் மரணமட்டும் மனந்திரும்பாத பாவிகளுக்குச் சுவாமி அந்தத் தீர்வைநாளில் சொல்லப்போகிற அகோரமான தீர்ப்பையும் இப்போது அடிக்கடி நினைத்துக்கொள். பாவத்தின்மேல் சாய்ந்த உன் மனதைத் தேவ சிநேகம் தாங்கி நிலைநிறுத்தக்கூடாவிட்டால் ஆக்கினையின் பயமாவது அதை நிலைநிறுத்தும்.



**மனப்பற்றுதல்.**—ஆண்டவரே, என் இரட்சணியமான தேவ பயத்தால் என் சர்வாங்கத்தையும் ஊடுருவியருளும். (சங். 118.)

**பிரதிக்கினை.**— என் முடிவுகளின்பேரில் அடிக்கடி தியானித்து வருவேன்.

## 2-ம் பிரிவு

### பொதுத்தீர்வையின் சோப சிறப்பு

**தியானம்.**—அப்போது மனுமகனுடைய அடையாளமாகிய சிலுவை வானத்தில் காணப்படும். மனுமகன் மகா மாட்சிமை வல்லமையோடு மேக சிம்மாசனத்தில் எழுந்தருளி வருகிறதைக் காண்பார்கள். அக்ஷணமே அவர் தமது தூதர்களை அனுப்புவார். அவர்கள் இடிமுழங்கினது போல் எக்காளமெடுத்து ஊதி, பூமியின் நாலுதிக்கிலும் அவரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களை ஒன்றாய்ச் சேர்ப்பார்கள். சகல சாதியாரும் அவர்முன்னே வந்து கூடுவார்கள். இடையன் வெள்ளாடுகளையுஞ் செம்மறியாடுகளையும் பிரிக்கிறதுபோல அவரும் அவர்களை ஒருவரினின்று ஒருவரைப் பிரிப்பார். செம்மறியாடுகளை வலதுபுறமாகவும் வெள்ளாடுகளை இடதுபுறமாகவும் நிறுத்துவார். பின்னும் அவர் வலதுபாரிசத்தில் நிற்பவர்களைப் பார்த்து: என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே வாருங்கள்; உலகம் உண்டானதுமுதல் உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்ட இராச்சியத்தைச் சுதந்தரிக்க வாருங்களென்பார். இடது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்தோ: சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு அப்புறம் போங்கள். பசாசுக்கும் அதின் தூதருக்குங் குறிக்கப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போய்விழுங்களென்பார் (மத். 25).

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—இந்த ஆச்சரியங்களை எவ்வளவாகிலும் ரூபிகரித்துக்கொள்ளப் பிரயாசப்படக்கடவோம். உலகம் அழிந்து சர்வ சங்காரமானவுடனே எங்கும் காரிருள் அடர்ந்து கருங்குமென்றிருக்கையில், இயேசுநாதருடைய திருச் சிலுவை மேக

மண்டலத்தில் தோன்றும். அக்ஷணமே இருளெல்லாம் பறந்தொழிய மகா உன்னதமான பிரகாசம் எப்பக்கத்திலும் நிறைந்து வீசிக்கொண்டிருக்கும். இயேசுநாதரைப் பின்சென்று தாராளமனதோடு தங்கள் சிலுவையைச் சுமந்துகொண்டவர்களுக்கு, அதைக் கண்டமாத்திரத்தில் உண்டாகும் ஆனந்தம் எவ்வளவென்று சொல்லுந் தன்மையல்ல. அவர்கள் இயேசுநாதசுவாமி சொன்னபடியே நித்திய சீவியத்தில் தங்கள் சரீரத்தைக் காக்கும்படி உலகத்திலிருக்கும்போது அதைப் பகைத்துவந்தார்கள். அப்போது அவர்களுடைய ஆத்துமங்கள் என்ன அக்களிப்போடு தங்கள் தங்கள் சரீரங்களோடு ஒன்றிக்குமென்று யாரால் சொல்லக்கூடும்? இப்படி நீதிமான்கள் ஆனந்தங்கொண்டாடுகையில், கள்ள ஞானிகளும், அவிசுவாசிகளாய்த் திரிந்த பாவிகளும் தாங்கள் குடியரோடும், காமாதுரரோடும் மனுஷருக்குள் கழிக்கப்பட்ட கழிசிறைகளோடுங் கூட இடது பக்கத்தில் நிறுத்தப்பட்டிருக்கிறதைக் காணும்போது அவர்களுக்குண்டாகும் கூச்சம் வெட்கம் நாணம் இம்மாத்திரமென்று சொல்லிமுடியுமோ? ஐயோ, ஒரே குடும்பத்திலும், ஒரே சபையிலுங் கூடியிருந்தவர்கள் நித்தியத்துக்கும் ஒருவரை விட்டு ஒருவர் பிரியும்போது எவ்வளவோ மனம் பிளந்து வருந்துவார்கள்! இதை நன்றாய் யோசித்துப்பார். இந்நேரத்தில் உனக்குத் திடீரென மரணம் வந்தால் நீ எந்தப் பக்கத்திலிருப்பாய்? உன் ஸ்திதி எப்படிப்பட்டதாயிருக்கும்?

மனப்பற்றுதல்.— இயேசுநாதர் அப்போஸ்தலர்களுக்குப் பொதுத் தீர்வையை முன்னதாக அறிவிக்கும்போது அவர்களுக்கு என்ன நன்மை வரவேணுமென்று ஆசித்தாரோ, அந்த நன்மை நமக்கும் கிடைக்கவேணுமென்று மன்றாடக்கடவோம்.

பிரதிக்கினை.—யாதொரு காரியத்தைச் செய்யலாமோ செய்யப்படாதோவென்று சந்தேகமுண்டாகும்போது ஆண்டவர் சமுகத்தில் தீர்வைக்குப்போய் நிற்கையில் எப்படிச் செய்திருக்க விரும்புவேனென்று விசாரித்து அதற்குத் தக்கபடி நடப்பேன்.



## 3-ம் பிரிவு

### பொதுத்தீர்வைக்கு ஆயத்தம்

தியானம்.—பொதுத் தீர்வை எப்போது நடக்கும்? எப்போதென்று ஒருவருக்கும் தெரியாது. சர்வேசுரன் அதைச் சம்மனசுகளுக்கு முதலாய் அறிவிக்கவில்லையென்று இயேசுநாதசுவாமி சொல்லியிருக்கிறார். ஆனால் நமக்குத் தெரிந்ததேதென்றால்: சாவு நெருங்கியிருக்கின்றது; தீர்வையும் அதைத் தொடர்ந்து வரும். நமது சீவியம் எப்படியோ, சாவும் அப்படியே. சாவு எப்படியோ, தீர்வையும் அப்படியேயிருக்கும். இதைப்பற்றித்தான் இயேசுநாதசுவாமி சனங்களை நோக்கி: விழிப்பாயிருங்கள், ஏனென்றால் உங்கள் எசமான் எந்தவேளை வருவாரென்று நீங்கள் அறியீர்கள். உங்களுக்கு நான் சொல்லுகிறதுபோல, விழித்திருங்களென்று சகலருக்குஞ் சொல்லுகிறேனென்றார் (மாற். 13).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நீதிமான்களுக்கு மங்களோற்சவ நாளாகிய நடுத்தீர்வை நாளில், நீ எவ்வளவும் அச்சமின்றி முழு நம்பிக்கையோடு இருக்கவேணுமானால், இப்போதே உத்தமமும் பரிசுத்தமுமான வழியில் நடந்து அதற்கு ஆயத்தஞ் செய். இயேசுநாதசுவாமி சொல்லியிருக்கிறதுபோல தயாராயிரு; அதாவது: எப்போதும் சாவதற்கு ஆயத்தமாயிருக்கும்படியான விதமாய் நடந்துகொள். இந்நேரத்தில் சாகத் தயாராயிருக்கிறாயோ?

சம்பாஷணை.—இன்றையத் திருநாளுக்குரிய கன்னியும் வேதசாட்சியுமான அலேக்சாந்திரியா பட்டணத்து அர்ச். கத்தரீனம்மாளோடு சம்பாஷணை செய். இவள் மாக்சிமின் என்னும் இராயன் முன்பாகச் செய்த வேத தர்க்கத்தில் தேவ தீர்வையின் அகோரத்தை வெளிப்படுத்தவே, அதைக்கேட்ட அஞ்ஞான சாஸ்திரிகள் திடுக்கிட்டு அஞ்ஞானத்தை முழுதும் விட்டு மனந்திரும்பி வேத சாட்சிகளாய்ப் பிராணனைத் தந்தார்கள்.

# 26-ம் தேதி

## கடைசி வாரத்தின் புதன்கிழமை சம்பவித்த வர்த்தமானங்கள்

### இயேசுநாதர் பரிசேயரைக் கண்டித்ததின்பேரில்

**ஆயத்தச் சிந்தனை.**—இயேசுநாதர் வேதபாரகரையும் பரிசேயரையும் மிகவுங் கண்டிக்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

**தியானச் செபம்.**—இப்பேர்க்கொத்த கண்டிப்புக்கு நீ ஆளாகாதபடி ஆண்டவரைப்பார்த்து மன்றாடு.

### முதல் பிரிவு

**பரிசேயர் நுட்பமான சில வெளி ஆசாரங்களையும், புண்ணியத்தின் கோலத்தையுமாத்திரம் அநுசரித்ததைப்பற்றி இயேசுநாதர் அவர்களைக் கண்டிக்கிறார்**

**தியானம்.**—அக்காலத்தில் இந்த நாளில்தான் யூதருடைய மூப்பரும் வேதபாரகரும் கைப்பாசின் வீட்டில் சங்கங்கூடி இயேசுநாதரை எப்படியாவது கொலைக்கவேண்டுமென்று தீர்மானித்தார்கள். யூதாசும் அன்றுதான் தன் திவ்விய குருவை அவர்கள் கையில் காட்டிக்கொடுக்க ஒப்பந்தஞ் செய்துகொண்டான். ஆயினும் இயேசுநாதர் பெத்தானியாவினின்று எருசலேம் பட்டணத்துக்கு வராமலிருந்ததுமில்லை; நாள் முழுதும் தேவாலயத்திலிருந்து பிரசங்கியாமற் போனதுமில்லை. அவருடைய ஞான வைராக்கியங் குறைவதற்குப்பதிலாய் நாளுக்கு நாள் க்ஷணத்துக்கு க்ஷணம் வளர்ந்துகொண்டிருந்ததென்க வேணும். சனங்களைக் கெடுத்துவந்த வேதபாரகர் பரிசேயர் முதலியவர்கள்பேரில் விசேஷமாய் இந்த ஞான வைராக்கியத்தைக் காண்பித்தார். அந்த சண்டாளருடைய பேச்சைக் கேட்டுச் சனங்கள் மயங்கிக் கெடாதபடி அவர்களுடைய கள்ளவேஷத்திற்குள் மறைந்திருந்த துர்க்குணங்களை இயேசுநாதர் யாதொரு தாக்ஷணியமுமில்லாமல் வெளிப்படுத்தி அவர்களை நோக்கிச் சொன்னதாவது: கள்ளஞானிகளான வேதபாரகரே, பரிசேயரே, நீங்கள் துளசியிலும் பெருஞ்சீரகத்திலும் பத்தில் ஒரு பங்கு கோவிலுக்குக் கொடுத்து வேத ஏற்பாட்டின் முக்கியமான காரியங்களை அலட்சியம் பண்ணுகிறீர்களே; ஐயோ உங்களுக்குக் கேடு. குருடராகிய வழிகாட்டிகளே! ஒரு கொசுவை உட்கொள்ளாதபடிக்கு நீங்கள் குடிக்கிறவைகளை வடிகட்டி, ஒட்டகத்தை விழுங்குகிறீர்கள்; உங்களுக்கு ஐயோ கேடு; ஏனெனில் உங்கள் அன்னபான பாத்திரங்களின் வெளிப்புறங்களைச் சுத்தஞ் செய்கிறீர்கள். உங்கள் உள்ளமோ சாந்துபூசப்பட்ட கல்லறைக்கு ஒப்பாய்க் கொள்ளையும் காமமும் அசுத்தமும் நிறைந்திருக்கிறதென்றார் (மத். 23).



**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—இந்த அகோரமான வார்த்தைகளை இயேசுநாதசுவாமி பரிசேயரை நோக்கிச் சொல்லியிருந்தாலும், இவைகள் அவர்களைத் தவிர வேறே யாருக்காவது செல்லாதென்பது அவருடைய கருத்தோ? ஐயோ, சந்நியாசிகளுக்குள் அற்ப சொற்பக் காரியங்களையும் வெளி ஆசாரங்களையும் கரிசனமாய்க் காத்து, சிரேஷ்டர்களுடைய குணுகுணங்களையும், நடபடிக்கைகளையும் யாதொரு அச்சமுமின்றிப் பரிசோதித்து அவைகளில் குறைபிடிக்கிறவர்கள் கிடையாதோ? தங்கள் சகோதரருடைய தவறுதல்களை ஏற்றி வளர்த்துகிறவர்களும், சபை ஒழுங்குகளில் பலவற்றை விட்டுவிட்டு, தியானம், ஆத்துமசோதனை முதலிய பக்தி முயற்சிகளை வெகு அசாக்கிரதையாய்ச் செய்கிறவர்களுமில்லையோ? இப்படிச் செய்கிறவர்கள் கொசுவை உட்கொள்ளாதபடி உசாராயிருந்து ஒட்டகத்தை விழுங்கக் கூசாதிருப்பவர்களல்லவோ?

**மனப்பற்றுதல்.**—உன் ஆத்தும ஸ்திதியின்மட்டிலும், உன் இருதய நாட்டங்களின்மட்டிலும் நீ மோசம் போகாமல் உள்ளதை உள்ளபடி அறிய வரப்பிரசாதங்கேள்.

பிரதிக்கினை.—திடமான புண்ணியங்களை நான் நிலைமையாய் அப்பியாசிக்கும்வரையில் என்னிடத்திலிருப்பதெல்லாம் ஒன்றுமில்லாமையாக எண்ணிக்கொள்வேன்.

## 2-ம் பிரிவு

### பரிசேயர் தங்கள்மேல் இளக்காரமும் மற்றவர்கள்மேல் மிதமிஞ்சின கண்டிப்புமாயிருந்ததைப்பற்றி இயேசுநாதர் அவர்களைக் கடிந்துகொள்ளுகிறார்

தியானம்.—பிறர்மட்டில் மிஞ்சின கண்டிப்பாயிருந்து தங்கள்மட்டில் மகா இளக்காரமாயிருப்பது கள்ளஞானிகளுடைய சுபாவமாம். இப்படி மற்றவர்கள்மேல் மிதமிஞ்சின வகையாய்க் கடுமை செலுத்துவதினால் தங்களுடைய புண்ணிய அசமந்தத்தை மறைத்து பத்தி வேகமுள்ளவர்கள்போல் மற்றவர்களுக்குத் தோன்றலாமென்றெண்ணுவார்கள். பரிசேயரும், வேதப்பிரமாணத்தின்மேல் கள்ளப்பற்றுதல் காண்பித்த மற்றவர்களும் இப்பேர்க்கொத்தவர்கள்தான். ஏனெனில்: அவர்கள் வேதகற்பனைகளை மட்டுமிதமின்றிப் பெருக்கிச் சனங்களால் தாளக்கூடாத பெருஞ் சுமையாக்கினதினால், அவர்கள் புண்ணியத்தையும் மோக்ஷ வழியையும் விட்டுப் பிசகி நடக்கும்படி செய்துவந்தார்கள். இதைப்பற்றித்தான் இயேசுநாதசுவாமி அவர்களுக்குச் சாபத்தின்மேல் சாபமென்று இரட்டித்துச் சொன்னார். கள்ளஞானிகளான வேதபாரகரே, பரிசேயரே, உங்களுக்கு ஐயோ கேடு, ஏனெனில் நீங்கள் மனிதருக்குப் பரலோக இராச்சியத்தை அடைத்துப்போடுகிறீர்களென்றார். பின்னும் அவர் சனங்களைப் பார்த்து: நீங்கள் அவர்களைப்போல் நடவாதேயுங்கள். ஏனெனில் அவர்கள் சொல்பவர்களேயன்றிச் செய்பவர்களல்ல. சுமக்கமுடியாத பாரச்சுமைகளைக் கட்டி மனிதர் தோள்மேல் சுமத்துவார்கள். தாங்களோ தங்கள் விரலால் முதலாய் அவைகளை அசைத்துப்பார்க்கமாட்டார்களென்று எச்சரித்தார் (மத். 23).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இவர்கள் நடத்தையைப்பற்றி ஆண்டவர் சினந்துகொண்ட



துபோல நீயும் சினந்துகொள்வாயாக்கும். ஆனால் பதஷ்டப்படாதே. தங்களுக்குக் கீழ்ப்பட்டவர்களை நெருக்கிப்பிடித்து அகோரமாய்க் கண்டிக்கிறதும் தங்கள்மட்டில் மிஞ்சின இளக்காரமாயிருக்கிறதுமாகிய குற்றம் கொஞ்சமாவது உன்னிடத்தில் இல்லையோ? நீ சொல்லும் பிரசங்கத்தினாலும் புத்திமதி ஆலோசனையினாலும் பிறர் அனுசரிக்கும்படி படிப்பிக்கிறதை நீயே அனுசரிக்கிறாயென்று உன் மனச்சாட்சி சொல்லுகிறதோ?

மனப்பற்றுதல்.—இதெல்லாங்கண்டு வெட்கித் தேவ பயத்தோடு உத்தம மனஸ்தாபப்படுவாயாக.

பிரதிக்கினை.—புறத்தியார் செய்யும்படி நான் சொல்லுகிறதை நானே செய்கிறேனோவென்றும், என் வார்த்தையானது என் நடக்கைக்கு விரோதமாயிருக்கிறதோ, இல்லையோவென்றும் என்னைத்தானே அடிக்கடி கேட்பேன்.

## 3-ம் பிரிவு

### பரிசேயருடைய ஆங்காரம், வீண் பெருமை, சுய நன்மை விருப்பம் இவைகளைப்பற்றி இயேசுநாதர் அவர்களைக் கண்டிக்கிறார்

தியானம்.—ஆங்காரம், வீண் பெருமை, பேராசை முதலிய துர்க்குணங்களுக்குப் பரிசேயர் அடிமைப்பட்டிருந்ததைப்பற்றி இயேசுநாதர் அவர்களைக் கண்டித்துச் சொன்னதாவது: அவர்கள் மனிதரால் புகழப்படும்படி தங்கள் கிரியைகளைச் செய்கிறார்கள். மகா ஒய்யாரமாய் நீண்ட குஞ்சங்களுள்ள சட்டைகளைப் போட்டுக்கொண்டு, பந்தியில் முதல் இடத்தையும், சபாமண்டபத்தில் முதல் ஆசனத்தையும் தேடுகிறார்கள். நெடுநேரஞ் செபம் பண்ணுவதாகப் பாசாங்குசெய்து, விதவைகளின் வீட்டை விழுங்குகிறார்களென்றார் (மத். 23, மாற். 12).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—உலகத்தாரில் சிலர் மேற்சொன்ன மூன்று துர்க்குணங்களையும் பிடிவாதமாய் நமதுமேல் சாட்டுவதுமன்றி, பொதுப்படத்

தேவ ஊழியர்கள்மேல் முறைப்பாடு சொ வதும் வழக்கம். ஆகையால் அவர்கள் சொல்வது அபாண் மென்று நமது நடக்கையால் சகலருக்கும் பிரசித்தப க்கக்கடவோம். மேலும் இதுவிஷயத்தில் சர்வேசுரன் சமு த்திலே நமது கருத்து, வார்த்தை, நடத்தை எல்லாம் ப தும் பத்தாய் இன்றையத்தினஞ் சோதித்துப் பார்ப்போமா

சம்பாஷணை.—நமது திவ்விய இரட்சகரோ சம்பாஷணை செய்யக்கடவோம். அவர் நமது புத்தியைத் தெளிவிக்கவும் பரிசேயர் வேதபாரகரைப் பார்த்து அவர் சொன்ன கண்டிப்புக்கு நாம் ஆளாகாதிருக்கவும் வரப்பிரசாதங் கேட்போமாக.

---

## 27-ம் தேதி

### இயேசுநாதசுவாமி மரிக்கிறதற்கு முந்தின நாளாகிய பெரிய வியாழக்கிழமை நடந்த வர்த்தமானம்

#### பாஸ்காவின் இராப்போசனம்

ஆயத்தச் சிந்தனை.—எருசலேம்பட்டணத்தில் அசன சாலையிலே இயேசுநாதர் தமது சீஷர்களோடே பந்தியமர்ந்திருக்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

தியானச் சேபம்.—நல்ல ஆயத்தத்தோடு தேவநற்கருணை வாங்கும்படி வேண்டிய வரப்பிரசாதங்கேள்.

### முதல் பிரிவு

#### பாஸ்காவென்னும் இராப்போசனம் தயார்செய்தது

தியானம்.—புதன்கிழமை சாயந்திரம் இயேசுநாதர் எருசலேம் பட்டணத்திலிருந்து மறுபடியும் புறப்பட்டு இராத்தங்கும்படி பெத்தானியாவூருக்குப் போனார். மறுநாளாகிற வியாழக்கிழமை சூரியன் அஸ்தமிக்குந்தனையும் அவ்விடத்திலிருந்தார். அந்த வருஷம் அந்த வியாழக்



கிழமைதான் புளியாத அப்பப்பண்டிகையின் முதல்நாளாயிருந்தபடியால் அன்றுதான் பாஸ்கா செம்மறிப்புருவையைப் பலியிட வேண்டியதாயிருந்தது. ஆகையால் அப்போஸ்தலர்கள் இயேசுநாதரைப்பார்த்து தேவரீர் பாஸ்காவைப் புசிக்கும்படி நாங்கள் எங்கேபோய் ஆயத்தம்பண்ணச் சித்தமாயிருக்கிறீரென்றார்கள். அதற்கு அவர் இராயப்பரையும் அருளப்பரையும் நோக்கி: நீங்கள் பட்டணத்துக்குப் போங்கள்; அதில் பிரவேசிக்கையில் ஒருவன் தண்ணீர்க் குடஞ் சுமந்துகொண்டு போவதைக் காண்பீர்கள். அவனைப் பின்தொடர்ந்து அவன் போகும் வீட்டிற்குப் போய் வீட்டு எசமானைப்பார்த்து: இதோ எங்கள் குரு சொல்லுகிறதென்னவென்றால்: என் காலம் நெருங்கியிருக்கிறது; என் சீஷர்களோடே உன் வீட்டில் பாஸ்காப் பண்டிகை கொண்டாடவேணும்; அவர்களோடே அசனம் பண்ணவேண்டிய இடமெங்கேயென்று கேட்கிறாரென்பீர்கள். அவன் வேண்டிய சாமானுள்ள ஒரு பெரிய சாலையை உங்களுக்குக் காண்பிப்பான். அதில் பாஸ்காவுக்கு வேண்டியதைத் தயார்செய்யுங்களென்றார். அவர்களும் அப்படியே போய்ப் பட்டணத்தில் பிரவேசித்தவுடனே அவர் தங்களுக்குச் சொன்னபடி காரியங்களையெல்லாங் கண்டு பாஸ்காவுக்கு ஆகவேண்டியதெல்லாம தயார்செய்தார்கள் (லூக். 22, மாற். 14). இவ்விடத்தில் இயேசுநாதருடைய சர்வ ஞானமுள்ள அறிவும், மனுஷருடைய இருதயத்தின் மட்டில் அவருக்குள்ள சர்வ வல்லமையும் எவ்வளவோ துலக்கமாய் விளங்குகின்றன!

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—அக்காலமுதல் உலகமெங்கும் எந்நாளும் பிரபலியமான இந்த அசனசாலையானது, தேவநற்கருணையின் வழியாய் இயேசுநாதர் அடிக்கடி இறங்கிவருகிற நமது இருதயத்தின் சாயலாயிருக்கிறது. ஆனால் நமது இருதயம் அவர் எழுந்தருளிவருவதற்கு அயோக்கியமாயிராதபடி முந்த முந்தப் பெரிதும் விஸ்தீரணமுமுள்ளதுமாயிருக்கவேணும். எப்படியென்றால்: அதிலே மேலான ஆசையும் தாராளகுணமும் அதிகரிக்கவேண்டியது. இதற்கு விரோதமாய் இரு

தயத்தைச் சுருக்கிக்கொண்டு, தேவ ஊழியத்தில் இவ்வளவு அவ்வளவுமாத்திரம் செய்யக் கடமையென்று எண்ணுகிறதும், சாவானபாவத்துக்கு மாத்திரம் பயந்து நடக்கிறதும், தேவ முனிவையும் சாபத்தையும் தன்மேல் வருவித்துக்கொள்ளாதபடி என்ன செய்தால் போதுமோ அது மாத்திரஞ் செய்வேனென்றிருப்பதும் ஆகிய இந்தக் குறைகளையெல்லாம் நம்மைவிட்டுத் தூர அகற்றக்கடவோம். இரண்டாவது, நமது இருதயம் தட்டுமுட்டுகளால் நிறைந்திருக்கவேண்டியது; அதாவது: உயிருள்ள விசுவாசம், அத்தியந்த தாழ்ச்சி, அணைகடந்த நம்பிக்கை, உருக்கமான சிநேகமுதலிய புண்ணியங்களால் சிங்காரிக்கப்பட்டிருக்கவேண்டியது.

**மனப்பற்றுதல்.**—உன் இருதயத்தில் இந்தக் குணங்கள் இருக்க ஆசைப்படு.

**பிரதிக்கினை.**—பக்தியோடே நன்மைவாங்குகிறதற்கு ஆயத்தமாக இப்புத்தகக் கடைசியில் காட்டியிருக்கும் உத்தம வழிகளை அநுசரித்துவருவாயாக.

## 2-ம் பிரிவு

### பாஸ்காப்போசனஞ் செய்த நேரம்

**தியானம்.**—சாயந்திரமானபோது இயேசுநாதர் அவ்விடத்திற்கு தமது பன்னிருவரோடும் வந்து, அசனநேரமான சமயத்தில் அதாவது வேதமுறைமைப்படி சூரியன் அஸ்தமித்து ஒரு மணிக்குப்பிறகு அவர்களோடு பந்தியில் அமர்ந்தார். அப்போது அவர்களைப் பார்த்து: நான் பாடுபடுமுன்னே உங்களோடு இந்தப் பாஸ்காவை உண்ண வெகு ஆவலோடு காத்திருந்தேனென்றார் (லூக். 22).

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—உனக்கு உத்தம படிப்பினையும் தைரியமும் உண்டாகும்படி இயேசுநாதசுவாமி வேதத்தில் கற்பிக்கப்பட்டவைகளையெல்லாம் எவ்வளவு பிரமாணிக்க நுணுநுணுக்கத்தோடு அநுசரித்தாரென்றும், அப்போஸ்தலர்களும் அவைகளை



அநுசரிக்கச் செய்தாரென்றும் கவனித்துப்பார். மேலும் பாஸ்கா செம்மறிப்புருவையைக் கொன்று ஒப்புக்கொடுத்த பலியானது, மறுநாள் அவர் சிலுவை மரத்தில் நிஷ்டூரக் கொலைக்குள்ளாகித் தம்மைத் தாமே பலியாகக் கொடுப்பதற்கு அடையாளமாயிருந்ததினால், அதைப் பார்க்கும்போது சுபாவமாய் அவருடைய மனங்கலங்கிக் கிலேசம் மேலிடவேண்டியிருந்தாலும், அந்தச் சடங்குகளையெல்லாம் எவ்வளவோ சாவதானத்தோடும் அமரிக்கையோடும் செய்து முடித்தாரென்று யோசித்துக்கொள். நீயும் உன் திவ்விய மாதிரிகையான இயேசுநாதரைச் சகல விஷயத்திலும் கண்டுபாவிக்கப் பிரயாசப்படுவாயாக.

**மனப்பற்றுதல்.**—திவ்விய கர்த்தருடைய ஒப்பற்ற குணாதிசயங்களைக் கண்டு ஆச்சரியப்பட்டு அவர்மேல் உருக்கமும் அன்பும் உன்னிடத்தில் எழுப்புவாயாக.

**பிரதிக்கினை.**—தருமவழியில் எனக்கு நேரிடும் சகல விக்கினங்களையும் என் திவ்விய இரட்சகருடைய சிநேகத்தைப்பற்றி மனப்பூரணமாய்ச் செயித்துத் தள்ள வருந்துவேன்.

## 3-ம் பிரிவு

### யூதாஸ் தமக்குச் செய்யப்போகிற சதிமானத்தை முன்னறிந்து போசன நேரத்தில் அறிவிக்கிறார்

**தியானம்.**—மேற்சொன்னதுபோல, யூதாஸ் இஸ்காரியோத்தென்பவன் முப்பது வெள்ளிக்காசுக்காக இயேசுநாதரை அவருடைய சத்துருக்கள் கையிலே காட்டிக்கொடுக்க முந்தினநாளில்தானே ஒப்பந்தஞ் செய்திருந்தான். இந்தச் சதிமானத்தை இயேசுநாதர்சுவாமி அறியாமல் அகப்பட்டுக்கொண்டாரென்றால், அவருடைய திவ்விய மகிமைக்குக் குறைவாகுமென்கிறதினால் இதைத் தடுத்து அவர் தமது மகிமையைக் காப்பாற்றுவது அவசியமாயிருந்தது. இதைப்பற்றியே அசன நேரத்தில் எல்லாருந் தெளிவாய் அறியும்படி அவர் சொன்னதாவது: உண்மையாகவே, உண்மையாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். என்னோடு

பந்தியில் சாப்பிடுகிற உங்களுக்குள் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பானென்றார் (அரு. 13; மாற். 14). இதைக் கேட்டு அப்போஸ்தலர்கள் திடுக்கிட்டு எல்லாரும் ஆண்டவரைப் பார்த்து: சுவாமீ, நானோ, நானோவென்று கேட்டார்கள். ஆனால் யூதாஸ் தன் சதிமர்னம் வெளியான பிறகும் கல் நெஞ்சாயிருந்ததுமல்லாமல், மனுமகனைக் காட்டிக்கொடுப்பவனுக்கு ஐயோ கேடு, அவன் பிறவாதிருந்தால் உத்தமமாயிருக்குமென்று ஆண்டவர் சொன்ன பயங்கரமான வார்த்தையைக் கேட்டும் அவன் இருதயம் இளகவில்லை.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—அப்போஸ்தலனாயிருந்தவனே இப்படிப் பிரலாபத்துக்குரிய விதமாய்க் கெட்டுப்போனதைப் பார்த்து, மனிதனுடைய இருதயப் பலவீனத்தையும் ஆசாபாசத்தையும் நன்றாய் உணர்ந்து நம்மைத் தேவசமுகத்தில் தாழ்த்திக்கொள்ளக் கடவோம். மேலும் நமதுபேரில் நாம் ஒருபோதும் நம்பிக்கை வைக்காதிருக்கவும், சர்வேசுரனுக்கு எந்நாளும் பிரமாணிக்கமாய் நடக்கும்படி அவர் தமது சர்வ வல்லபமுள்ள இஷ்டப்பிரசாதத்தால் நம்மைத் தாங்கி நடத்தவும் மன்றாடக்கடவோம்.

சம்பாஷணை.—தேவபிதாவோடு சம்பாஷணை செய்.

---

## 28-ம் தேதி

### வியாழக்கிழமை நடந்த வர்த்தமானங்களின் தொடர்ச்சி

#### இயேசுநாதர்சுவாமி அப்போஸ்தலர்களுடைய கால்களைக் கழுவுகிறார்

ஆயத்தச் சிந்தனை.—இயேசுநாதர் தமது அப்போஸ்தலர்களின் கால்களைக் கழுவுகிறதாக ரூபிகரித்துக்கொள்.



தியானச் சேபம்.—இயேசுநாதர் அப்போஸ்தலர்களுடைய கால்களைக் கழுவினதிலே கருதின பலனைக் கண்டுபிடித்து அநுசரிக்க வேண்டிய வரப்பிரசாதத்தைக் கேள்.

### முதல் பிரிவு

#### இயேசுநாதர் அப்போஸ்தலர்கள் கால்களைக் கழுவும்படி அவர்களுடைய பாதத்தில் பணிந்து நிற்கிறார்

தியானம்.—அந்த நாள் பழைய வேதத்தில் உருவகமாய்க் கற்பிக்கப்பட்டிருந்தவைகளை நீக்கி, புது வேதத்தின் சத்தியமான விஷயங்களை ஸ்தாபிக்கவும், மோயீசனுடைய இராப்போசன சடங்கை மாற்றித் தேவ செம்மறிப்புருவையானவர் தம்மைத்தாமே போசனமாகக் கொடுக்கும் சற்பிரசாத விருந்தை ஏற்படுத்தவும், சர்வேசுரனால் நியமிக்கப்பட்ட காலமாயிருந்தது. ஆகையால் இயேசுநாதர்சுவாமி இந்தப் புது விருந்தை ஏற்படுத்துமுன் வாக்குக்கெட்டாத ஓர் தாழ்ச்சிமுயற்சி செய்யச் சித்தமாகி, தமது அப்போஸ்தலர்களுடைய கால்களைக் கழுவினார். சதித்துரோகியான யூதாஸ் என்பவனைமுதலாய் இதில் நீக்கிவைக்கவில்லை. இப்படிக் கால் கழுவினதினாலே தேவநற்கருணை உட்கொள்ளுகிறதற்கு ஆத்தும பரிசுத்தமும் தாழ்ச்சியும் அவசியமாய் வேணுமென்று காண்பித்தருளினார். இதைக்குறித்து அர்ச். அருளப்பர் சொல்லியிருக்கிறதாவது: இராப்போசனத்துக்குப் பின், இயேசுநாதர் தமது வசமாகப் பிதாவானவர் சகலத்தையும் ஒப்புக்கொடுத்ததையுந் தாம் சர்வேசுரனிடத்திலிருந்து வந்ததையுந் திரும்ப அவரிடத்திற்குப் போகிறதையும் அறிந்து, பந்தியைவிட்டு எழுந்திருந்து தமது மேற்சட்டையைக் களைந்து ஒரு துணியை இடையில் கட்டிக்கொண்டு ஒரு பாத்திரத்தில் தண்ணீர் வார்த்துத் தமது அப்போஸ்தலர்களுடைய கால்களைக் கழுவவும் தமது இடையில் கட்டியிருந்த துணியினால் துடைக்கவுந் தொடங்கினார் (அரு. 13). இங்கே அர்ச். அருளப்பர் இயேசுநாதசுவாமி கால் கழுவின வர்த்தமானத்தை வருணிக்குமுன் அவர்: மனுஷன் மாத்திரமல்ல, நித்தியகாலமாய்ச்

சர்வேசுரனால் சென்மிக்கப்பட்ட தேவ குமாரனாயிருக்கிறாரென்றும் நமக்கு நினைப்பூட்டுவானேன்? பழையகாலத்தில் அடிமைகள்தான் விருந்தாளிகளுக்குக் கால் கழுவுவது வழக்கமாயிருந்தது; இப்போது திவ்விய கர்த்தர் அவர்களுடைய கால்களைக் கழுவினதினாலே, அவர் தம்மை அத்தியந்த விதமாய்த் தாழ்த்தினதை நாம் நன்றாய்க் கண்டுணரும்படியாகவே இதை நினைப்பூட்டுகிறார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—உலகத்தின் கண்ணுக்கு இழிவும் தாழ்வுமான பணிவிடைகளை உன் சகோதரர்களுக்கும், ஏழைகள் நோவாளிகளுக்கும் செய்யும்படி அநேகாநேகமுறை தருணம் வந்தாலும், உன்னுடைய சொகுசு சலாக்கிய முகாந்தரமாக அவைகளை அருவருத்து நீ ஒன்றுஞ் செய்யாமற்போனாயாக்கும்; அல்லது அந்த ஊழியங்களை உன்னைவிட்டு நீக்கும்படி சாக்குப்போக்குத் தேடினாயாக்கும். ஆ! இந்தச் சமயத்தில் சர்வேசுரனுடைய நித்திய சுதனானவர் ஏழைச் செம்படவருக்கும், யூதாஸ் இஸ்காரியோத்துக்குந்தானே கால் கழுவுகிறதை நீ பார்க்கையில் உனக்கு எவ்வளவோ நாணமும் மனக்குத்தும் உண்டாகவேண்டியது!

மனப்பற்றுதல்.—உன் எண்ணமும் உணர்ச்சிகளும் இரட்சகருடைய எண்ணம் உணர்ச்சிகளுக்கு எவ்வளவோ எதிரிடையாயிருக்கின்றனவென்று பார்த்து வெட்கி வியாகுலமடைவாயாக.

பிரதிக்கினை.—தாழ்மையான யாதொரு பிறசிநேகக் கிரியை செய்யச் சமயம் வாய்க்கும்போது அதைக் கைதவறவிடாதே.

## 2-ம் பிரிவு

### இயேசுநாதர் அர்ச். இராயப்பருடைய கால்களைக் கழுவும்படி அவர் பாதத்தில் பணிந்து நிற்கிறார்

தியானம்.—இயேசுநாதர் சீமோன் இராயப்பருடைய கால்களைக் கழுவ வந்தபோது அவர் ஆச்சரியத்தால் கூவி: சுவாமீ, நீரோ என் கால்களைக் கழுவுகிறதென்க, கர்த்தர்



அவரை நோக்கி: நாம் செய்வது இன்னதென்று உனக்கு இப்போது தெரியாது, இனிமேல் தெரியவருமென்றார். அதற்கு இராயப்பர்: தேவரீர் என் கால்களைக் கழுவ எனக்கு ஒருபோதும் மனமொப்பாதென்க, இயேசுநாதர் அவருக்கு மறுமொழியாக: நாம் உன் கால்களைக் கழுவாவிட்டால் நம்மோடு உனக்குப் பாத்தியமில்லையென்றார். இதைக்கேட்டு இராயப்பர்: அப்படியானால், ஆண்டவரே, என் கால்களை மாத்திரமல்ல, என் கைகளையும் சிரசையுங் கூடக் கழுவியருளுமென்று வேண்டினார். அதற்கு இயேசுநாதர்: ஸ்நானஞ் செய்தவன் முற்றுஞ் சுத்தமாயிருக்கும்படி கால்களை மாத்திரம் கழுவவேண்டியிருக்கும்; நீங்களும் சுத்தமாயிருக்கிறீர்கள்; ஆனால் எல்லாருமல்லவென்றார் (அரு. 13).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—அர்ச். இராயப்பருடைய தாழ்ச்சியையும் தெய்வீகத்தின் மட்டில் அவருக்குள்ள அத்தியந்த சங்கை வணக்கத்தையும்பற்றி ஆச்சரியப்பட்டுக் கண்டுபாவிக்கக்கடவாய். ஆனால் தேவ திருவுளத்துக்கு ஒருபோதும் எதிரிடை செய்யாதபடி எச்சரிக்கையாயிரு. மகிமை அதிகாரம் பொருந்திய உத்தியோகங்களைத் தவிர்க்கிறது நல்லதுதான். அர்ச்சியசிஷ்டவர்களும் இப்படியே செய்துவந்தார்கள். ஆனால் சிரேஷ்டர்கள் திட்டமாய்க் கற்பிக்கும்போது அந்தக் கற்பனையைத் தட்டிவிட்டு அந்த உத்தியோகங்களை வேண்டாமென்பது நல்ல காரியமல்ல. இது பிடிவாதமேயல்லாமல் தாழ்ச்சியாயிருக்கமாட்டாது. அப்படியே சிலருக்குப் பொதுப் பாவசங்கீர்த்தனஞ் செய்தலும் செய்ததைத் திரும்பச் செய்தலும், அனுவசியமென்றும், மோசமென்றும் ஆத்தும குரு சொன்னபோதிலும் அவர்கள் அதற்கு இணங்கி நடவாமல், தேவநற்கருணைவாங்கத் தாங்கள் அபாத்திரரென்று அதை வாங்காதிருப்பார்கள். இவர்களும் பிடிவாதக்காரரோடு சேர்த்தியாமே.

மனப்பற்றுதல்.—ஆண்டவரே, என் அக்கிரம அசுத்தங்களினின்று என்னை அதிகமதிகமாய்க் கழுவி, என் பாவத்தினின்று என்னைச் சுத்தமாக்கியருளும் (சங். 50).

பிரதிக்கினை.—திவ்விய நன்மை வாங்குவதற்கு என்ன ஆயத்தம் போதுமென்கிற விஷயத்திலே ஆத்தும குருவின் தீர்மானத்துக்கு முழுதும் தாழ்ச்சியோடு இணங்கி நடப்பேன்.

## 3-ம் பிரிவு

### இயேசுநாதர் கால் கழுவின பிறகு சொன்ன புத்திமதிகள்

தியானம்.—கர்த்தர் தமது அப்போஸ்தலர்களின் கால் கழுவின் பிறகு அவர்களைப் பார்த்து: நாம் இப்போது செய்ததை அறிந்துகொண்டீர்களோ? நீங்கள் நம்மைக் குருவென்றும் ஆண்டவரென்றும் அழைக்கிறீர்கள். இது நியாயந்தான். அப்படியே நாம் குருவும் ஆண்டவருமாயிருக்கிறது உண்மைதான். ஆகையால் உங்கள் ஆண்டவருங் குருவுமாயிருக்கிற நாம் உங்கள் கால்களைக் கழுவின போதே, நீங்களும் ஒருவர் ஒருவருடைய கால்களைக் கழுவக்கடவீர்கள். ஏனென்றால் நாம் உங்களுக்குச் செய்தபடி நீங்களுஞ் செய்ய உங்களுக்கு மாதிரிகை காட்டினோமென்றார் (அரு. 13).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இந்தக் கடைசி வாக்கியத்தினாலே இயேசுநாதசுவாமி நமது கிரியைகள் நடத்தைகள் முதலிய யாவற்றையும் தமது பாவனையாக நாம் திட்டப்படுத்தவேணுமென்று நமக்குக் கற்பிக்கிறார். ஆயினும் இதை வெறும் யோசனையாகக் கொடாமல் நாம் அநுசரிக்கவேண்டிய கட்டளையாகவே நமதுமேல் சுமத்துகிறார். நாம் தம்மைக் கண்டுபாவிக்கலாமென்று அவர் உத்தரவளிக்கிறதே நமக்குப் பெரிய சனுவாயிருக்க, நாம் கண்டுபாவிக்கவேணுமென்று அவர் கற்பிப்பது ஆச்சரியமாகத் தோன்றுகிறதல்லவோ? ஏனென்றால்: மனுஷனாய்ப் பிறந்த சர்வேசுரனுடைய திருஅடிகளை நாம் பின்பற்றி, நடக்கிறதைவிட நமக்கு அதிக மகிமையும் சந்தோஷமுமானது வேறேதாகிலும் உண்டோ? இல்லையே. ஆகையால் என் திவ்விய



இயேசுவே, நான் உம்மைக் கண்டுபாவியாததேன்? என் திவ்விய குருவின் தாழ்ச்சியே, சிநேகமே, ஆத்துமப்பற்றுதலே, நீங்கள் என்னை ஆண்டு நடத்தாததேன்? உங்களை நான் அறிந்தது போதுமோ? அநுசரித்தாலன்றோ பாக்கியவானாயிருப்பேனென்று பிரமித்துச் சொல்லக்கடவாய்.

சம்பாஷணை.—நமது திவ்விய கர்த்தரோடு சம்பாஷணை செய்.

---

## 29-ம் தேதி

### வியாழக்கிழமை நடந்த வர்த்தமானங்களின் தொடர்ச்சி

#### தேவநற்கருணையாகிய போசனம்

ஆயத்தச்சிந்தனை.—இயேசுநாதர் தமது அப்போஸ்தலர்கள் நடுவேயிருந்து கடைசி இராப்போசனஞ் செய்கிறதைப் பார்க்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

தியானச் செபம்.—இயேசுநாதரை அதிகமதிகமாய் அறிந்து சிநேகிக்க வரப்பிரசாதங்கேள்.

## முதல் பிரிவு

### தேவநற்கருணையாகிய அற்புத போசனம்

தியானம்.—இயேசுநாதர் அப்போஸ்தலர்களுடைய கால்களைக் கழுவினபிறகு திரும்பவும் அவர்களோடே பந்தியில் உட்காருகிறார். இப்போது நவமான காரிய ஏற்பாடும் வேறே வகை விருந்துந் துவக்கமாகிறது. பாஸ்காவுக்குரிய ஆட்டுக்குட்டியைப் போசித்ததற்குப்பதிலாய் நரதேவனை தெய்வீக செம்மறிப்புருவையின் மாமிசமும் இரத்தமும் இப்போது சாப்பிடக் கொடுக்கப்படப்போகிறது. பழைய ஏற்பாட்டின் குருத்துவத்துக்கும் பற்பல உருவகப் பலிகளுக்கும் பதிலாய் புதிய ஏற்பாட்டின் அளவற்ற

பேறுபலனுள்ள ஏக பலியும் குருத்துவமும் ஸ்தாபிக்கப்படப்போகிறது. கடைசியாய் இயேசுநாதர் தாம் மரிக்கு முன்னே தேவநற்கருணையாகிற தேவதிரவிய அநுமானத்தின் வழியாய்ச் சதாகாலத்துக்கும் தம்மைத்தாமே ஒரு சாசனமாக நமக்குக் கையளிக்கப்போகிறார். இப்பேர்ப்பட்ட தேவ சிநேகத்தின் அற்புதங்களுக்கு நம்மை ஆயத்தப்படுத்தத்தக்கதாக இயேசுநாதரால் மிகவுஞ் சிநேகிக்கப்பட்ட சீஷன் சொல்வதைக் கேள்: இயேசுநாதர் இந்த உலகத்தைவிட்டுத் தமது பிதாவினிடத்திற்குப்போக வேண்டியகாலம் வந்ததென்றறிந்து இந்த உலகத்திலேயிருந்த தம்முடையவர்களை அவர் சிநேகித்திருக்கையில், கடைசிபரியந்தம் அவர்களைச் சிநேகித்தாரென்கிறார் (அரு. 13).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—தேவநற்கருணையிலே இயேசுநாதர் தம்மைத்தாமே நமக்குச் சர்வ தானமாகக் கொடுத்ததினாலே அவருடைய அளவில்லாத ஞானத்தையும், வல்லமையையும், தயவையும் நன்றாய் யோசித்து அவரை மென்மேலும் அறிந்து சிநேகிக்க வருந்தக்கடவோம்.

முதலாவது, அவருடைய அளவற்ற ஞானத்தை யோசித்துப் பார்ப்போமாக. தான் சிநேகிக்கிறவர்களுக்காகத் தன் உயிரைக் கொடுத்தபின்னும் அவர்களோடுகூட எப்போதும் இருக்கிறது மனுஷருடைய புத்திக்கு எட்டாத காரியமல்லவா? ஆயினும் அவதரித்த ஞானமாகிய இயேசுநாதர் தேவநற்கருணையை உண்டுபண்ணினதினால் இது கூடுமான காரியமென்று காட்டியருளினார்.

2-வது, அவருடைய மட்டற்ற வல்லமையை யோசிக்கக்கடவோம். அவருடைய திரு வாயினின்று சில வார்த்தைகள் புறப்பட்டவுடனே, அல்லது அந்த வார்த்தைகளைக் குருவானவர் உச்சரித்தவுடனே, அவர் அப்பத்தைத் தமது சரீரமாக மாற்றுகிறார். இதினாலே அப்பத்தின் பொருள் ஒழிந்து, நரதேவனுடைய திருச்சரீரம் உயிருள்ளதுமாய், மாட்சிமை நிறைந்ததுமாய், ஆராதனைக்குரியதுமாய் மோக்ஷத்திலிருக்கிற பிரகாரம் அங்கே எழுந்தருளி



வருகிறது. அப்பத்தின் ரூபம், ருசி, நிறமுதலிய வெளிக்குணங்கள் மாத்திரம் அழியாமல் நிற்கின்றன.

3-வது, அவருடைய அளவில்லாத தயவை யோசிக்கக்கடவோம். தன் சிநேகிதனுடைய உயிரைக் காக்கும்படி தன் உயிரைக் கொடுப்பது சிருஷ்டிகள் காண்பிக்கக்கூடிய தயவுக்கெல்லாம் மேலான தயவென்று சொல்ல வேணும். அதற்கப்பால் மனுஷனால் ஒன்றுஞ் செய்ய முடியாது. இயேசுநாதர் மனிதர்மேல் வைத்த தயவோ இந்த அளவையெல்லாங் கடந்து இன்னும் மேலிட்டுப் போகிறது. நித்திய சாவினின்று மனிதர்களை மீட்டிரட்சித்தபின்னும், தமது சரீரத்தையும் இரத்தத்தையும் அவர்களுக்கு ஞானப்போசனமாகக் கொடுத்து ஊட்டி அவர்கள் ஆத்தும உயிரைத் தாங்கிவருகிறார். தம்மைத்தாமே அவர்களுக்காக அநுதினமும் ஓயாத பலியாக ஒப்புக்கொடுக்கிறார். உலக முடிவுபரியந்தம் இப்படியே தம்மை ஒப்புக்கொடுத்துவருவார்.

மேலும் இயேசுநாதர் ஆராதனைக்குரிய தேவநற்கருணையை உண்டாக்கின நேரம் ஏதென்று பார்: அந்த நேரம் யூதர்கள் அவரைப் பிடித்துக் கொல்லவேணுமென்று சதியோசனை செய்த நேரம். மீளவும் அந்த நேரத்திலே இயேசுநாதர் தமது உபகாரங்களுக்குக் கைம்மாறாக மனிதர் காட்டும் நன்றியறியாமையையும், தமது அன்பின் தேவதிரவிய அநுமானத்துக்கு அவர்கள் செய்யும் அனாசாரம், அவசங்கைகளையும் தேவதிருஷ்டியால் கண்டறிந்திருந்தார். ஆயினும் இதெல்லாம் பாராமல் தேவநற்கருணையை உண்டாக்கியருளினார்.

மனப்பற்றுதல்.—ஆண்டவரே, என்னிருதயத்தின் சர்வ சத்துவங்களோடும் உம்மைச் சிநேகிக்கிறேன். உமக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்கிறேன். எங்கும், எந்நாளும் எங்கள் பீடங்களின்மேல் எழுந்தருளியிருக்கிற உமக்குச் செய்யப்படும் சகல நிந்தை அவமானங்களுக்கும் பரிகாரஞ்செய்ய ஆவலாயிருக்கிறேனென்று சாதித்துச் சொல்.

**பிரதிக்கினை.**—நான் தேவநற்கருணை சந்திக்கும்போதெல்லாம் இயேசுநாதசுவாமியை அதிகமதிகமாய் அறியவும் சிநேகிக்கவும் எனக்கு அநுக்கிரகஞ் செய்யவேணுமென்று பிரார்த்திப்பேன்.

## 2-ம் பிரிவு

### இயேசுநாதர் தேவநற்கருணையை உண்டாக்கின வரலாறு

**தியானம்.**— இயேசுநாதர்சுவாமி தேவநற்கருணையை உண்டாக்கினபோது நடந்த காரியங்களையெல்லாங் கவனமாய் ஆராய்ந்து பார். அவைகளைச் சுவிசேஷகரும் அர்ச். சின்னப்பரும் அதிசயத்துக்குரியவிதமாய் எளிதான நடையில் வர்ணித்திருக்கிறார்கள். எப்படியெனில்: ஆண்டவராகிய இயேசுநாதர் மரிக்கிறதற்கு முந்தின நாளில், அவர் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரிதானே தமது அப்போஸ்தலர்களுடைய கால்களைக் கழுவினபின், திரும்பவும் பந்தியில் உட்கார்ந்து அப்பத்தைக் கையிலேந்தி நன்றியறிந்த தோத்திரஞ்செய்து அதை ஆசீர்வதித்துப் பிட்டு அப்போஸ்தலர்களுக்குக் கொடுத்துச் சொன்னதாவது: இதை வாங்கிப் போசியுங்கள்; இது உங்களுக்காகக் கையளிக்கப்படப்போகிற என் சரீரம். இதை என் ஞாபகமாகச் செய்யுங்களென்றார். அப்படியே பாத்திரத்தையும் எடுத்துத் தோத்திரஞ்செய்து அவர்களுக்குக் கொடுத்துச் சொன்னதாவது: நீங்கள் எல்லாரும் இதிலே பானம் பண்ணுங்கள்; ஏனென்றால்: இது உங்களுக்காகவும் அநேக மனுஷர்களுக்காகவும் பாவப்பரிகாரமாகச் சிந்தப்படும் என் இரத்தம் என்றார். அவர்கள் எல்லாரும் அதைப் பானம்பண்ணினார்கள் (மத். 26; மாற். 14; லூக். 23; 1 கொரி. 11).

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—பூசை காணும் பாக்கியம் எனக்குக் கிடைக்கும்போதெல்லாம் கடைசி இராப்போசனத்தில் இயேசுநாதர் செய்த சகல அற்புதங்களும் திரும்பவும் என் கண்முன்பாக நடக்கிறதாகக் காண்கிறேன். இதை என் ஞாபகமாகச் செய்யுங்களென்று இயேசுநாதர் சொன்ன வாக்கியத்தினாலே குருத்துவம் எக்காலமும் நிலைநிற்கிறதென்று கண்டுகொள்ளுகிறேன். அப்பத்தையும் இரசத்தையும் இயேசுநாதருடைய திருச் சரீரமாகவும் இரத்தமாகவும் மாற்றுகிற குருவானவரிடமாய்த் திவ்விய கர்த்தரைக் காண்கிறேன். குருவானவருடைய கையால் திவ்விய நன்மை வாங்குகிற கிறீஸ்துவர்களைக் காணும்போது இயேசுநாதர் கையால் திவ்விய நன்மை வாங்கின அப்போஸ்தலர்களைக் காண்கிறேன். இப்படி நாம் இவைகளை யோசிக்காவிடில் உள்ளடக்கத்தோடும், பக்தியோடும் பூசை காண்கிறோமென்று சொல்லக்கூடாது. இந்தக் குறை வராதபடி நாம் கோவிலுக்குப் போகும்போது இயேசுநாதர் நமக்காக மரிக்குமுன்னே இராப்போசனத்தில் செய்த அற்புதங்களையெல்லாம் பார்க்கும்படியே அங்கே போகிறோமென்று நினைத்துக்கொள்ளப் பழகுவோமாக.

**சம்பாஷணை.**—இயேசுநாதரோடு பத்தி வேகமாய்ச் சம்பாஷணை செய்.

---

## 30-ம் தேதி

### வியாழக்கிழமை நடந்த வர்த்தமானத்தின் தொடர்ச்சி

#### இராப்போசனத்துக்குப்பின் இயேசுநாதர் செய்த பிரசங்கம்

**ஆயத்தச் சிந்தனை.**—இயேசுநாதர் திருவாய்மலர்ந்து சொன்ன அமிர்த வாக்கியங்களைக் கேட்டுச் சுகிப்பதற்காக நீயும் அப்போஸ்தலர்களோடுகூட நினைவினால் ஏகோபித்திருக்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

**தியானச் செபம்.**—அவருடைய திவ்விய போதனையினால் உன்னிடத்திலே பரிசுத்ததனத்தின் கனிகள் விளையும்படி மன்றாடுவாயாக.

## முதல் பிரிவு

### இயேசுநாதர் அப்போஸ்தலர்கள்மேல் வைத்த சிநேகத்தை உருக்கமானவிதமாய்க் காட்டுகிறார்

**தியானம்.**—ஒரு தகப்பன் தன் பிள்ளைகள்பேரில் வைத்திருக்கிற உருக்கமான நேசம் அவனுடைய அந்திய காலம் நெருங்கி வரவர அதிகமதிகமாய்த் துலங்கும். அப்படியே யூதாஸ் இஸ்காரியோத்து அசனசாலையைவிட்டு வெளியே போனபின், இயேசுநாதர் தமது பிரிய சீஷர்களோடு பேசுகையில் அவருடைய பட்சம் நன்றாய் விளங்கினது. அதுவரையில் அவர் காண்பியாத அன்பும் விசாரமும் பட்சமும் வெளியாயின. முந்தமுந்த அவர்களைத் தமக்குப் பிரியமான சிறுபிள்ளைகளென்று அழைக்கிறார். அவர்களைவிட்டுப் பிரிகிறதற்குத் தாம் படும் வருத்தத்தைக் காட்டி: உங்களோடு இன்னம் கொஞ்ச நேரந்தான் இருக்கப்போகிறேனென்கிறார். இரண்டாவது, இதைக்கேட்ட சீஷர்கள் துக்கமாயிருக்கிறதைக் கண்டு அவர்களை நாலா விதத்திலும் தேற்றப்பிரயாசப்பட்டு: இதோ என் பிதாவின் வீட்டிலே அநேக வாசஸ்தலங்களுண்டு; நான் இருக்குமிடத்திலே நீங்களும் இருக்கத்தக்கதாக அதிலே உங்களுக்கு இடம் தயாராக்கப்போகிறேன்; அப்போது உங்களுடைய துக்கம் சந்தோஷமாய் மாறிப்போம்; அதுவரையிலே உங்களை நிராதாரமாக விடமாட்டேன். என் பிதாவைப் பார்த்து மன்றாடுவேன், அவர் எப்போதும் உங்களோடிருக்கும்படி வேறே தேற்றுகிறவரை உங்களுக்குத் தந்தருளுவாரென்றார். மூன்றாவது, ஆயினும் இதனால் அவர்கள் துக்கம் மாறாமல் தங்களுடைய சக்திக்கு மிஞ்சின சங்கடம் ஏதேனும் இனிமேல் நேரிடுமோவென்று மனங்கலங்கி நின்றதைக் கர்த்தர் கண்டு, திரும்பவும் அவர்களைத் தேற்றித் திடப்படுத்த வருந்தினார். இதைப்பற்றி அவர்களைப் பார்த்து: உலகத்தில் நீங்கள் அலைக்கழிக்கப்படுவீர்களென்பது மெய்தான். ஆனால் உங்கள் மனங்கலங்கவேண்டாம். உங்களுக்கு என் சமாதானத்தைக் கொடுத்துவிட்டுப் போகிறேன். உங்களைத் தெரிந்துகொண்ட என்பேரில்



நம்பிக்கை வையுங்கள், உலகத்தை ஜெயித்த என்பேரில் விசுவாசமாயிருங்களென்றார். நான்காவது, கடைசியாய் அவர்களுக்கு ஒரு குறையும் வராதென்று வார்த்தைப்பாடு கொடுத்து: என் பேரால் என் பிதாவினிடத்தில் நீங்கள் கேட்பதெல்லாம் உங்களுக்கு நான் அளிப்பேனென்றார் (அரு. 13, 14, 15).

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—அப்போஸ்தலர்களிடமாய் நம்மில் ஒவ்வொருவருக்கும் இயேசுநாதர் தமது உருக்கமான பட்சத்தின் அத்தாட்சியை இந்த அதிசயத்துக்குரிய சம்பாஷணையால் காட்டுகிறாரென்று நினைக்கும்போது நமது இருதயத்தில் எவ்வளவோ சந்தோஷமும் நம்பிக்கையுங்கூடிய உணர்ச்சிகள் எழும்ப வேண்டியது! ஏனெனில்: ஆண்டவர் அப்போஸ்தலர்களைப் பார்த்து அன்புநிறைந்த இந்த வார்த்தைகளைச் சொல்லும்போது அவருடைய நினைவிலே நாமும் அப்போஸ்தலர்களோடுகூட ஏகோபித்திருந்தோம். இவ்விதமே ஒரு சமயத்தில் இயேசுநாதசுவாமி: தம்மைப்பற்றி அப்போஸ்தலர்கள் தங்கள் ஆஸ்திபாஸ்திகளை விட்டுவிட்டதற்கு ஈடாக அவர்களுக்கு நூறுமடங்கு தருவோமென்று சொன்னபோது, நாமும் அப்போஸ்தலர்களோடு ஒன்றுபட்டிருக்கவில்லையோ? யாரார் உங்களைப்போல என்னைப்பற்றித் தன் வீட்டையும், தந்தையையும், நிலபலங்களையும் விட்டுவிடுவானோ, அவன் உங்களுக்குச் சரியாய் நூறுமடங்கு அடைவானென்று இயேசுநாதசுவாமியே சொல்லியிருக்கிறதினாலே, நாமும் அப்போஸ்தலர்களோடு ஒன்றுபட்டிருக்கிறோமென்கிறதற்குச் சந்தேகமில்லை. நமக்கு யாதொரு கலக்கம் ஆயாசம் உண்டாகும்போது இதை நினைத்துக் கொள்ளக்கடவோம்; உடனே சந்தோஷமும் சமாதானமும் அமரிக்கையும் நமது மனதில் வந்து குடிகொள்ளும்.

**மனப்பற்றுதல்.**—இந்த நினைவு உன் மனதில் படிந்து, சோதனைவேளையில் உன்னைத் தாங்கி நடத்தவேணுமென்று ஆண்டவரை மன்றாடு.

**பிரதிக்கினை.**—சமயாசமயங்களிலும் விசேஷமாய்த் திவ்விய நன்மை வாங்கும் நாட்களிலும் இயேசுநாதர் இராப்போசனத்துக்குப்பின் செய்த பிரசங்கத்தின்பேரில் தியானஞ்செய்வேன்.

## 2-ம் பிரிவு

### சகோதர சிநேகத்தைக்குறித்து இயேசுநாதர் சொன்ன உருக்கமான புத்திமதிகள்

**தியானம்.**—இயேசுநாதர் தமது சிஷர்கள்மேல் தாம் வைத்திருந்த சிநேகத்தை அச்சமயத்தில் வெளியரங்கமாய்க் காட்டினதுமல்லாமல், சகோதர அந்நியோன்னிய பட்சத்தைப்பற்றி உருக்கமும் ஊக்கமும் பொருந்திய புத்திமதிகளை அவர்களுக்குச் சொல்லியருளினார். சாகப்போகிற தகப்பன் தன் பிள்ளைகள் இனிமேல் எப்படியிருப்பார்களோவென்று நினைத்து, விசாரப்பட்டு அவர்கள் அந்நியோன்னியமாய் ஒன்றித்திருக்கும்படி புத்திசொல்லுவது வழக்கந்தானே. அப்படியே இயேசுநாதரும் அப்போஸ்தலர்களுக்குச் சகோதர சினேகத்தைப்பற்றிப் புத்திமதி சொன்னார். அதை நீயுங் கவனித்து அதில் உன் ஞானப் பிரயோசனத்தைத் தேடக்கடவாய். அவர் சொன்னதாவது: நீங்கள் ஒருவரை ஒருவர் சிநேகியுங்கள், இதுவே நமது கற்பனை. நமது இருதயத்திற்கு எல்லாத்திலும் அதிக பிரியமான கற்பனை இதுவேயென்றார். மேலும் இந்தக் கற்பனையை முழுதும் நவமான விதமாய் யாவரும் கண்டுபிடித்து அனுசரிக்கவேணுமென்று காண்பிக்கத்தக்கதாக அவர்களை நோக்கி: நாம் உங்களைச் சிநேகித்தது எவ்வண்ணமோ அவ்வண்ணமே நீங்களும் ஒருவரையொருவர் சினேகிக்கக்கடவீர்களென்றார். கடைசியாய் இப்படிப்பட்ட சிநேகந்தான் தமது மெய்யான சிஷர்களின் அடையாளமாயிருக்குமென்று அவர்களுக்கு அறிவிக்கத்தக்கதாக: நீங்கள் நமது சிஷர்களாய் இருக்கிறீர்களென்று இதைக்கொண்டு சகலரும் அறிந்துகொள்வார்களென்றார் (அரு. 13, 18).



**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—உன் திவ்விய குருவானவர் இவ்வளவு உருக்கமான பட்சத்தோடு படித்துப் படித்துச் சொன்ன புத்திமதிகளுக்கும், அவர் தமது சகல நடபடிக்கைகளிலும் காண்பித்துவந்த மாதிரிகைக்கும் உன்னுடைய பிறசிநேகம் ஒத்திருக்கிறதோ? அவர் தமது இருதயத்தில் உனக்கு விஸ்தாரமான இடங்கொடுக்க வேணுமென்று, அதாவது: உன்னை வெகுவாய்ச் சிநேகிக்கவேணுமென்று ஆசிக்கிறாயே. ஆகையால் அவர் உன்னைச் சிநேகித்ததுபோல நீயும் உன் சகோதரரைச் சிநேகித்து மெய்யான பிறசிநேகத்தில் சிறந்து ஓங்க எத்தனிக்கக்கடவாய். உன் சிநேகம் அவருடைய சிநேகத்துக்கு இணையாயிருக்கவேணும். ஆகையால் அது முந்த முந்தச் சுபாவத்துக்கு மேற்பட்டதுமாய், விசுவாசத்தில் ஊன்றினதுமாய் இருக்கவேண்டியது. 2-வது, சகலருக்கும் பொதுவாய்ப் பாரபட்சமில்லாமலும் ஒருவரையும் நீக்கிவைக்காமலும் இருக்கவேண்டியது. 3-வது, காரியமற்ற விருப்பமும் 'எல்லாரும் நன்றாயிருக்கவேணுமென்கிற வெறும் ஆசையும் போதுமென்றிராமல் முயற்சியுடையதாயிருக்கவேண்டியது. 4-வது, அவனவனுடைய அவசரத்தை விசாரித்து, அவனவன் வாய்திறந்து கேட்குமட்டுங் காத்திராமல் வலிய முன்னதாய்ப்போய் உதவி செய்கிறதாயிருக்கவேணும். 5-வது, பிள்ளைமேல் தாய்க்குள்ள பட்சத்தைப்போல இரக்கமும் பொறுமையுமுள்ளதாயிருக்கவேணும். 6-வது, தம்மை உபாதித்தவர்களையும் தம்மைக் கொலைப்படுத்தினவர்களையு முதலாய்ச் சிநேகித்து, அவர்களுக்காக வேண்டிக்கொண்ட இயேசுநாதருடைய சினேகத்தைப்போல நிலைமையும் தாராளமுமான சிநேகமாயிருக்கவேணும். இப்படியிருக்க உன் சிநேகத்தில் குறைவானது ஏதென்று யோசித்துப்பார். இயேசுநாதருடைய திரு இருதயத்துக்கு மகா பிரியமுள்ளதும் நீ வாசம்பண்ணும் மடத்திலுள்ளவர்களுக்கு மகா இன்பத்தைக் கொடுக்கிறதுமான இந்தப் புண்ணியத்திலே உயர்ந்து ஓங்க நீ என்னசெய்தாலும் மிச்சமென்றெண்ணாதே.

**சம்பாஷணை.**—என்னைச் சிநேகிக்கிறவனை என் பிதாவுஞ் சிநேகிப்பார். நாங்கள் அவனிடத்திலே வந்து அவன் இருதயத்துக்குள்ளே வாசம்பண்ணுவோமென்று இயேசுநாதசுவாமி இராப்போசனத்துக்குப்பின் சொன்ன வாக்கியம் உன்னிடத்திலும் நிறைவேறத்தக்கதாக, அவர் பாதத்திலே தாழ்ச்சியோடே விழுந்து தெண்டனிட்டு உன் இருதயத்திலே தேவசிநேகம் பிறசிநேகமாகிற அக்கினியைப் பற்றுவிக்கவேணுமென்று அவரை மன்றாடுவாயாக.

# டிசம்பர் மாதம்

## முதல் தேதி

### வியாழக்கிழமை நடந்த வர்த்தமானங்களின் கடைசிப் பாகம்

#### இயேசுநாதசுவாமி செய்த சேபம்

**ஆயத்தச் சிந்தனை.**—இயேசுநாதர் பரலோகத்தை அண்ணாந்து பார்த்துத் தமது பரம பிதாவை நோக்கி வேண்டிக்கொள்வதையும், அப்போஸ்தலர்கள் மெய்மறந்து அவரை ஏறெடுத்துப் பார்த்துக்கொண்டிருக்கிறதையும் காண்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

**தியானச் செபம்.**—இந்தத் தியானத்துக்குப் பலனாக இயேசுநாதர் செய்த செபத்தின் ஆழ்ந்த கருத்தை நன்றாய்க் கண்டுபிடிக்கவும் அதினால் பிரயோசனமடையவும் வரப்பிரசாதங்கேள்.

## முதல் பிரிவு

#### இயேசுநாதர் தமக்காக வேண்டிக்கொள்ளுகிறார்

**தியானம்.**—இயேசுநாதர் தமது பிரசித்த சீஷியமாகிய கடைசி மூன்று வருஷத்தையுஞ் செபத்தைக்கொண்டு துவக்கினதுபோல செபத்தைக்கொண்டே முடிக்கச் சித்தமானார். ஒரு தகப்பன் தனக்கு மரணகாலம் அடுத்திருக்கிறதையும், தன் பிள்ளைகளைவிட்டுத் தான் பிரியப்போகிறதையுங் கண்டு, அவர்களெல்லாரையுந் தன்கிட்டக் கூட்டிவைத்து, வேண்டிய புத்திமதி சொல்லுவதுபோல; இயேசுநாதரும் மகா உருக்கத்தோடே தமது அப்போஸ்தலர்களுக்குத் தாம் கடைசியாய்ச் சொல்லவேண்டியதெல்லாஞ் சொல்லி முடித்தபின், பரலோகத்தை அண்ணாந்துபார்த்துத் தமது பிதாவை நோக்கிச் செபித்ததாவது: என் பிதாவே, காலமாயிற்று. உமது குமாரன் உம்மை மகி

மைப்படுத்தும்படி நீரும் உமது குமாரனை மகிமைப்படுத்து மென்றார் (அரு. 17). இந்தக் கடைசித் தருணத்திலே நமது ஆண்டவர் தமக்காகக் கேட்கிறதேதென்றால்: தம்மை மகிமைப்படுத்தவுஞ் சகல மனுஷரும் தம்மையறிந்து சிநேகித்து ஆராதித்துத் தமக்கு ஊழியஞ்செய்யவுங் கேட்கிறார். ஆனால் மேற்கண்டதுபோல தமது பிதாவின் மகிமையை உத்தேசித்துத்தான் தமக்கு மகிமை வரவேண்டுமென்று கேட்கிறார். அன்றியும் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுடைய பாக்கியத்தையுங் கருதி இந்த விண்ணப்பஞ் செய்கிறார். இதைப்பற்றி: தேவரீர் என்னிடத்தில் ஒப்புவித்த சகலருக்கும் நான் நித்திய சீவியத்தைக் கொடுக்கும்படி என்னை மகிமைப்படுத்துமென்றார். கடைசியாய்த் தமது பேறுபலனுக்குச் சம்பாவனையாகவும் இப்படிப் பிரார்த்தித்தார். இதினாலேதான்: என் பிதாவே பூலோகத்தில் உம்மை நான் மகிமைப்படுத்தினேன். நான் செய்யும்படி எனக்குக் கொடுத்த அலுவலைச் செய்து முடித்தேனென்றார் (அரு. 17).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நமது திவ்விய குருவானவர் தமது மாதிரிகையினாலே நமக்குப் படிப்பிக்கிறதேதென்றால்: முதலாவது, நாம் பிறர் இரட்சணிய அலுவலைத் துவக்குமுன்னே செபம்பண்ண வேண்டியதுமல்லாமல் அதை முடிக்கும்போதுஞ் செபஞ் செய்து அந்தக் காரியத்துக்குச் சர்வேசுரன் பலன் கொடுக்க மன்றாடவேணுமென்றும்; 2-வது, எல்லாத்துக்குமுன்னே நமது ஈடேற்றத்துக்காக நாம் பிரயாசப்பட்டு நமது பரிசுத்த நடத்தையால் சர்வேசுரனை மகிமைப்படுத்தி நம்மை நாம் இரட்சிக்கவும், மோக்ஷத்துக்காக வெகு பேறுபலன்களைச் சேகரிக்கவும் வேணுமென்றும்; 3-வது, நாம் செய்யுங் கிரியைகளை ஒன்றுக்குப் பாதியாகவும் அசமந்த அசட்டையாகவும் செய்யாமல், பொறுத்த மனதோடு செய்து கடைசியாய் நமக்கு அந்தியவேளை வரும்போது: என் பிதாவே, நான் செய்யும்படி தேவரீர் கட்டளையிட்டதெல்லாஞ் சரியாய்ச் செய்து முடித்தேனென்று சொல்லும்படியாய் நடக்கவேணுமென்றும் படிப்பிக்கிறார்.



மனப்பற்றுதல்.—உன் திவ்விய குருவின் புத்திமதிக்கொத்த பிரகாரம் நீ நடக்கத்தக்கதாக உன்னிடத்தில் உறுதியும் நிலைவரமுமான மனதை எழுப்பவேணுமென்று மன்றாடு.

பிரதிக்கினை.—நாளுக்கு நாள் என் கிரியைகளை அதிக நன்றாய்ச் செய்யும்படி சாயந்தரந்தோறும் அவைகளைக் கவனமாய்ச் சோதித்துப் பார்ப்பேன்.

## 2-ம் பிரிவு

### இயேசுநாதர் அப்போஸ்தலர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறார்

தியானம்.—இயேசுநாதர் தமது அப்போஸ்தலர்களுக்காகக் கேட்ட மன்றாட்டை மகா கவனமாய் யோசித்துப்பார்ப்போமாகில்: அதைக்கொண்டு நமக்காக நாம் என்ன மன்றாட்டைக் கேட்கவேணுமென்றும், திவ்விய கர்த்தருக்கு உகந்தவர்களாகும்படி நாம் என்ன காரியத்தை விசேஷமாய்ச் சம்பாதிக்கப் பிரயாசப்படவேணுமென்றும் அறிந்துகொள்வோம். முந்த முந்த அவர்கள் ஒரே மனமும் ஒரே சிந்தையும் உள்ளவர்களாயிருக்கக் கேட்கிறார். எப்படியெனில்: பரிசுத்த பிதாவே, இவர்களைக் காப்பாற்றியருளும், நாம் ஒன்றாயிருக்கிறதுபோல என்னிடத்தில் நீர் ஒப்பித்தவர்களும் ஒன்றாயிருக்கப்பண்ணியருளுமென்றார் (அரு. 18). 2-வது, கெட்டு நாறுகிற இந்த உலகத்தின் நடுவில் அவர்களை மாசில்லாமல் காப்பாற்றும்படி மன்றாடுகிறார். இதைப்பற்றித்தான்: என் பிதாவே, இந்த உலகத்தைவிட்டு இவர்களை எடுத்துக்கொள்ளும்படிக்கல்ல; ஆனால் தின்மையிலே நின்று இவர்களைக் காப்பாற்றும்படி உம்மைப் பிரார்த்திக்கிறேனென்றார். கடைசியாய் அவர்களை அர்ச்சிக்கவேணுமென்று மன்றாடி: சத்தியத்திலே இவர்களை அர்ச்சித்தருளுமென்றார். இதற்கு அர்த்தமேதென்றால்: நான் இவர்களுக்குப் படிப்பித்த சத்தியங்களை இவர்கள் நிலைமையாய் மாறாமல் அநுசரித்துக்கொண்டுவர உம்மை மன்றாடுகிறேனென்பதேயாம்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இயேசுநாதருக்குப் பிரியப்பட விரும்புகிறவன் விசேஷமாய் மூன்று காரியங்களைக் கொண்டிருக்கவேண்டியது. முதலாவது, மன ஒற்றுமை. இதைக் காக்கிறதற்காக நீ என்ன செய்கிறாய்? நீ வசிக்கிற மடத்திலே ஒற்றுமையைக் காப்பாற்றும்படி உன் பிரியத்தையும் உன் அபிப்பிராயங்களையும் தகுந்த சமயத்தில் பரித்தியாகஞ் செய்து விட்டுவிடுகிறாயோ? அல்லது அதற்கு விரோதமாய் உன் அவிவேகத்தினாலும், பிடிவாத வெடுவெடுப்பினாலும், ஒற்றுமையைக் கலைக்கிறாயோ? 2-வது, எவ்வித சோதனைகளின் மத்தியிலும் தன் ஆத்தும சுத்தத்தைக் காப்பாற்றுதல். இதற்காகப் பலமான உபாயங்களைக் கையாடிவரவேண்டும். இவைகள் எவையென்று நீ அறிந்திருந்தும், நிலைமையோடும் அநுகூலத்தோடும் இவைகளை உதவிக் கொள்ளுகிறாயோ? 3-வது, அர்ச்சியசிஷ்டதனம். இது மனத்தூய்மையாகிய பரிசுத்ததனத்தினின்று தானாய் விளைகிற கனியுமாய், ஸ்திரமான புண்ணியத்தில் பழகிப் பேரோங்குகிறவர்களுடைய சாங்கோபாங்கமுமாயிருக்கின்றது. நீயோ உறுதியான புண்ணியங்களைத் தேடாமல் வெளிக்குமாத்திரம் தோன்றுகிற புண்ணியமும் பரிசுத்ததனமும் போதுமென்றிருக்கிறதில்லையோ?

மனப்பற்றுதல்.—இயேசுநாதர் எனக்காகத் தமது பிதாவினிடத்தில் இந்த மூன்று காரியங்களையும் கேட்டதற்காக அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்து இவைகளை உந்நதவிதமாய் அடையும்படி அவருடைய ஒத்தாசையை இரந்து மன்றாடுவேன்.

பிரதிக்கினை.—இதைக் குறித்து அடிக்கடி ஆத்தும சோதனை செய்வேன்.

## 3-ம் பிரிவு

### இயேசுநாதர் இனிமேல் தமக்குச் சீஷர்களாகப் போகிறவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறார்

தியானம்.—இயேசுநாதர் தம்மைத்தாமே பலியாகக் கொடுக்கப்போகிற கடைசிநேரம் சமீபித்தபோது தமது



திருச்சபையை நினைத்து அதின் விசுவாச ஒற்றுமையைக் காப்பாற்றும்படி மன்றாடுகிறார். இதினாலே என் பிதாவே, இவர்களுக்காக மாத்திரமல்ல; இன்னமும் இவர்கள் பிர சங்கத்தைக் கேட்டு என்னை விசுவசிக்கப்போகிறவர்களும் உத்தம ஒற்றுமையுள்ளவர்களாயிருக்கும்படி வேண்டிக் கொள்ளுகிறேனென்றார். கடைசியாய்த் தமது சிஷர் களெல்லாரும் மோக்ஷபாக்கியத்துக்குத் தம்மோடு பங்காளி களாயிருக்கவேணுமென்று மன்றாடிச் சொன்னதாவது: என் பிதாவே, நான் இருக்கும் ஸ்தலத்திலே உம்மால் எனக்குக் கொடுக்கப்பட்டவர்களும் இருக்கவும், எனக்கு நீர் கொடுத்த மகிமைப் பிரதாபத்தை அவர்களும் தரிசிக்கவும் ஆசிக்கிறேனென்றார் (அரு. 17).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நான் தேவநற்கருணையைச் சந்திக்கும்போது அடிக்கடி இயேசு நாதருடைய கடைசி இராப்போசனத்தை நினைத்து அவர் தமது அப்போஸ்தலர்கள் நடுவிலிருந்து அவர்களைத் தேற்றித் திடப்படுத்தி அவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறாரென்று ரூபிகரித்துக்கொள்வேன். அந்த முக்கியமான நேரத்தில் ஆண்டவர் இனிமேல் உலகத்தில் வரப்போகிற சகலரையும் என்னையுங்கூட நினைத்து எனக்காகவும் மன்றாடுகிறாரென்று சிந்தித்துக்கொள்வேன்.

சம்பாஷணை.—என் அன்புக்குரிய இரட்சகரோடு சம்பாஷணை செய்வேன்.

---

## 2-ம் தேதி

### அர்ச். சவேரியார் திருநாளுக்கு முந்தினநாள்

#### அவர்பேரில் நாம் நம்பிக்கை வைப்பதற்கான முகாந்தரங்கள்

ஆயத்தச் சிந்தனை.—இந்த அர்ச்சியசிஷ்டவர் பரமண்டலத்திலே நமக்காகப் பிரார்த்திக்கிறதைப் பார்க்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

தியானச் செபம்.—அர்ச். சவேரியார்பேரில் நாம் நம்பிக்கை வைப்பதற்கான மூன்று பிரதான முகாந்தரங்களை நன்றாய்க் கண்டுபிடிக்க வரப்பிரசாதங்கேள்.

## முதல் பிரிவு

### சர்வேசுரனிடத்தில் அர்ச். சவேரியாருக்குண்டான சலுகை

தியானம்.—சர்வேசுரனிடத்திலே இவரடைந்திருக்கிற பெரும் சலுகை இவர்பேரில் நாம் நம்பிக்கை வைப்பதற்கு முதல் முகாந்தரமாகும். உலகமெங்கும் அவர் மன்றாட்டால் சர்வேசுரன் செய்துவரும் சகாயங்களையும் புதுமைகளையும் பார்க்கும்போது அவருடைய சலுகை எவ்வளவு பெரிதென்று தெரியவருகிறது. இவருடைய அர்ச்சியசிஷ்டதனத்தைப்பற்றிப் பிரசித்தமாய் விசாரணை நடக்கும்போது எழுதப்பட்ட சாதனத்தில்: செத்துப்போன இருபத்தினாலுபேர்களை இவர் உயிர்ப்பித்தாரென்றும் இன்னம் வேறு எண்பத்தெட்டுப் பெரிய புதுமைகளைச் செய்தாரென்றும் மெய்ப்பிக்கப்பட்டிருக்கின்றது. இவருடைய மரணத்துக்குப்பின் சிந்துதேசத்தில் மரித்த இருபத்தேழுபேர் இவருடைய வல்லமையுள்ள சிபாரிசினாலே உயிரோடெழுந்திருந்தார்களென்று நீதி முறைமைப்படி விசாரணை செய்ததில் ருசுவானது. மலாக்கா பட்டணத்து மேற்றிராசனத்துக்குள் மாத்திரம் எண்ணூறு புதுமைகள் நடந்ததாக அப்பட்டணத்து மேற்றிராணியார் மேற்படி விசாரணையிலே வாக்குமூலம் கொடுத்துக் கையொப்பம் வைத்தார். இவர் விசேஷமாய் வணங்கப்படுகிற ஐரோப்பாக்கண்டத்தின் பல ஊர்களிலும், விசேஷமாய் கலாபிரியா, பாஸ்தீரீயா நாடுகளிலும் இவர் மூலமாய் அடைந்த கணக்கில்லாத சகாயங்களின் வரலாறு பிரசுரம் பண்ணப்பட்டிருக்கிறது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இதெல்லாம் நீ யோசித்துப்பார்க்குமிடத்தில் இவர்பேரிலே நீ மட்டற்ற நம்பிக்கை வைக்கிறதற்கு இடமில்லையோ? நீ வேதம்போதிக்கிற சந்நியாசியாயிருந்தால் உன்னுடைய



உத்தியோகம் அர்ச். சவேரியாருடைய உத்தியோகத்துக்கு ஒத்ததானதால் நீ அவர்பேரில் எவ்வளவோ நம்பிக்கை வைக்கத்தகும்! ஆகையால் உன் விண்ணப்பமெல்லாம் கையேற்கப்படுமென்று நம்பிக்கையாயிரு. அன்றியும் அவர் மூலமாய் நீ கைக்கொள்ள ஆசிக்கிற நன்மையே தென்று இன்றைக்கே பார்த்துத் தீர்மானித்துக்கொள்ளு வதுமல்லாமல், அவர் உனக்காகப் பரிந்து பேசும்படி அவருக்குத் தோத்திரமாக நீ செய்ய விரும்புகிறதையெல் லாம் ஒழுங்காய்க் குறித்துக்கொண்டு இப்பொழுதே தொடங்கி பிரமாணிக்கமாய்ச் செய்யக்கடவாய்.

மனப்பற்றுதல்.—சர்வேசுரன் நமக்கு இப்பேர்ப் பட்ட வல்லமையுள்ள சிபாரிசுக்காரரைக் கொடுத்ததற்காக அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ்செய்து, இவருடைய மன்றாட்டால் நாம் பெற்றுக்கொள்ள விரும்புகிற நன்மைகளையெல்லாம் அணைகடந்த நம்பிக்கை ஆவலோடு கேட்கக் கடவோம்.

பிரதிக்கினை.—நாளையத்திருநாளை அடிக்கடி நினைத்து அதைத் தக்க பிரகாரமாய்க் கொண்டாட மனதில் ஆசை யெழுப்பிக்கொள். மேலும் இத்திருநாளில் வெகு ஞான நன்மைகளைக் கைக்கொள்வாயென்று சந்தோஷிக்கக்கடவாய்.

## 2-ம் பிரிவு

### அர்ச். சவேரியார் பிறர்மேல்வைத்த சிநேகம்

தியானம்.—பாவியானவன் துர் ஆசாபாசங்களுக்கு அடிமைப்பட்டு நடக்கிறதெப்படியோ அப்படியே அர்ச். சவேரியார் பிறசிநேகத்துக்கு அடிமைப்பட்டுச் சகலத்திலும் அதின் ஏவலின்படி நடந்துவந்தார். அவர் அர்ச். பாப்புவின் ஸ்தானாபதியாயிருந்தாலும், தரித்திரப்பட்ட இந்துக்களுக்கும் போர்த்துக்கீஸ்க்காரருக்கும் உதவிசெய்யும்படி கோவைப்பட்டணத்தில் வீடுவீடாய்ப் பிச்சைவாங்குவார். அவரிடத்தில் விளங்கின பிறசிநேகமானது உதார

மும், வீரத்துவமும் உள்ளதாயிருந்தது. அதின் வேகத்தினாலே எவ்வித ஆபத்துக்கும் சாவுக்குமுதலாய் அஞ்சிப் பின்வாங்கினவரல்ல. மேலும் அவர் ஒருவரைச் சிநேகிக்கிறது ஒருவரைச் சிநேகியாமலிருக்கிறது என்பதின்றிச் சகலரையும் ஒருகண்டசீராய்ச் சிநேகித்துவருவார். ஆனால் ஓரோர் சமயம் யாருக்காவது விசேஷ தயவு காண்பித்தால் அது தமக்கு விரோதஞ் செய்தவர்களுக்கேயன்றி மற்றவர்களுக்கல்ல.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இந்த உலகத்தில் அர்ச். சவேரியாருக்கிருந்த பிறசிநேகம் இப்போது மோக்ஷத்தில் தாழ்ந்துபோயிற்றென்றும், சர்வேசுரனுடைய சமுகத்தில் அவருடைய செல்வாக்கு குறைந்துபோயிற்றென்றும் சொல்லலாமோ? இல்லையே. அதற்கு விரோதமாய் அதுவும் இதுவும் இப்போது வளர்ந்து பெருகியிருப்பதற்குச் சந்தேகமில்லை. இப்படியிருக்க அவர் உன் மன்றாட்டைக் கேட்டருளுவாரென்று முழு நம்பிக்கையோடு அவரையண்டிப்போக நீ மனந் தத்தளிப்பதேன்? மற்றவர்கள்மேல் அவருக்குள்ள தயவு உன்மேல் இராதோ? இதுவரையில் அவரிடத்தினின்று நீ யாதொரு சகாயமும் பெற்றுக்கொள்ளாதிருந்தால் உன் நம்பிக்கைக் குறைவினாலேதான் அப்படியாயிற்றென்று மனதில் உறுதியாய் எண்ணிக்கொள். மேலும் நாம் கேட்கும் மன்றாட்டைக் கைக்கொள்வதற்கு நமது குற்றங் குறைகளினிமித்தம் நாம் பாத்திரமல்லவென்கிற அபத்தமான எண்ணத்தைத் தள்ளிவிடக்கடவோம். ஏனென்றால் செபம் பலிப்பதற்கு இயேசுநாதருடைய வாக்குத்தத்தமே ஆதாரமல்லாமல் செபிப்பவனுடைய பேறுபலன் ஆதாரமல்ல.

மனப்பற்றுதல்.—அர்ச். சவேரியாருடைய வல்லமையுள்ள பிறசிநேகத்தின்மேல் விசுவாசமும் நம்பிக்கையும் உன் மனதில் எழுப்புவாயாக.

பிரதிக்கினை.—அர்ச். சவேரியாரிடத்தில் மிகுந்த நம்பிக்கையோடு வெகு நன்மைகளைக் கேட்பேன்.



## 3-ம் பிரிவு

### ஆத்துமாக்களின் ஈடேற்றத்தின்மேல் அவருக்குள்ள தீராத ஆவல்

தியானம்.—அர்ச். சவேரியாருடைய பேருக்கு மங்காத கீர்த்தியும் மாறாத பிரபலியமும் உண்டாவதற்குக் காரணம் ஏதென்றால்: சகலரையும் ஈடேற்றிக் கரைசேர்க்கவேணுமென்று அவருள்ளத்தில் கொண்டிருந்த மகா வேகமான ஆவல்தான். இதினிமித்தம் அஞ்ஞான இராச்சியங்களெல்லாம் ஒன்றும்விடாமல் சுற்றித்திரிந்து சகலரையும் மனந்திருப்பவேணுமென்பதே அவருக்குத் தீராத ஆவலும் விசாரமுமாயிருந்தது. இதில் நேரிட்ட எவ்வித வருத்தத்துக்கும் பிரயாசைக்கும் அவர் ஒருபோதும் பின்வாங்கினவரல்ல. மோரென்னும் தீவுக்கு அவர் வேதம் போதிக்கப் போகப்படாதென்றும், போனால் கொல்லப்படுகிறது தப்பாதென்றும் அவருடைய சிநேகிதர் கண்ணீர்விட்டுச் சொல்லி அவரைத் தடுக்க எத்தனை பிரயாசப்பட்டாலும் அவர் கேளாமல் சினந்துசொன்னதாவது: அந்தத்தீவில் பொன் மிகுதியாய் விளைந்தால் வர்த்தகர் பயமில்லாமல் அங்கே போவார்களே; அதிலுள்ள ஆத்துமாக்களை இரட்சிக்க நான் அங்கே போகாதிருப்பேனோ? பொருளாசைக்கு அவ்வளவு துணிவென்றால், பிறசிநேகத்துக்கு அதிலும் தாழ்வோ என்றார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இந்த அர்ச்சியசிஷ்டவருடைய பாவனையாக நாமும் சகலத்தையும் துறந்துவிட்டு நமது சகோதரருடைய ஈடேற்றத்துக்காக நம்மை முழுதும் நேர்ந்துகொண்டோமல்லவா? ஆகையால் அவர் நமதுமேல் விசேஷ அன்புவைத்திருக்கிறாரென்றும் நாம் துவக்கின தருமகாரியம் அநுகூலமாகும்படி சர்வேசுரனை நோக்கி நாம் பிரார்த்திக்கும்போது அவரும் தமது சலுகையெல்லாங்கூட்டி நமக்காகச் சிபாரிசு செய்வாரென்றும் நாம் விசுவாசமாயிருக்கத்தகும். இந்த நினைவு நமதுள்ளத்தில் எவ்வளவோ நம்பிக்கையை எழுப்பவேண்டியது!

சம்பாஷணை.—இந்த அர்ச்சியசிஷ்டவரோடு சம்பாஷணை செய். சர்வேசுரன் பரலோகத்தில் அவருக்குக் கொடுத்திருக்கும் செல்வாக்கைப்பற்றி அவரை வாழ்த்தி, அவர் தமது வல்லபமுள்ள மன்றாட்டினால் நமது அர்ச்சிப்புக்கும் பதிதர் அஞ்ஞானிகள் விசேஷமாய் இந்துக்கள், சீனர், ஜப்போனியர் முதலிய புறமதஸ்தர் மனந்திரும்புவதற்கும் வேண்டிய தேவ உதவியைப் பெற்றுத்தரவேணுமென்று பிரார்த்தித்துக்கொள்.

---

## 3-ம் தேதி

### அர்ச். சவேரியார் திருநாள்

ஆயத்தச் சிந்தனை.—அர்ச். சவேரியார் மோக்ஷானந்த மகிமையில் வீற்றிருந்து, நமதுமேல் தமது கருணைக் கண்ணைத் திருப்பிக்கொண்டிருக்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

தியானச் சேபம்.—தேவ வரப்பிரசாதம் அர்ச். சவேரியாரிடத்தில் விளைவித்த ஆச்சரியங்களை நன்றாய்க் கண்டுணர வரங்கேள்.

### முதல் பிரிவு

#### அர்ச். சவேரியார் செய்த ஆச்சரியமான கிரியைகள்

தியானம்.—பேர்போன பிரசங்கிகளில் ஒருவராகிய பூர்தலு என்பவர் அர்ச். சவேரியாருக்கு மங்களமாகச் சொன்னதாவது: அப்போஸ்தலர்கள் செய்த அதிசயங்களையெல்லாம் இவரும் செய்தார். அவர்களைப்போல அற்புதமாய்ப் பலபாஷை பேசும் வரமும், தீர்க்கதரிசன வரமும், புதுமை வரமும் இவரிடத்திலும் விளங்கின. இவ்விதமாய் அப்போஸ்தலர்களுக்குச் சரியொத்தவராயிருந்ததுமின்றி, அவர் மனந்திருப்பினவர்களின் தொகையாலும் சுற்றித்திரிந்த இடங்களின் விஸ்தீரணத்தாலும் அவர்களில் பலரையும் மேலிட்டுப்போனார். தமது கையால்



பன்னிருலட்சத்துக்கு அதிகமான அஞ்ஞானிகளுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார். வேதம் அறியாத இருநூற்றுக்கதிகமான இராச்சியங்களில் வேதத்தைப் போதித்து தேவ ஆராதனையை ஏற்படுத்தினார். எண்ணிறந்த பேய் விக்கிரகங்களை உடைத்துத் தகர்த்தார். சமுத்திரத்திலும் பூமியிலும் அவர் செய்த பயணங்கள் உலகத்தை மும்முறை சுற்றிவருவதற்குப் போதும். போன இடமெல்லாம் திருச்சபையை ஸ்தாபித்தார். விசேஷமாய் அதுவரையில் குருக்களே கால்வைக்காத ஜப்போனியா தேசத்தில் சத்தியவேதத்தை நாட்டினார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இந்த அற்புத வரலாறுகளைக் கேட்கும்போது அர்ச். சவேரியாருக்குமுன் நான் என்னவென்று அவனவன் தானிருக்கிற கீழ்த்தரமான அந்தஸ்தை நினைத்து முறைப்படச் சோதனை வரலாம். சிலர் தாங்கள் பெரிய இடங்களிலிருந்தால் தேவ ஊழியத்தில் பேரெடுக்கிறதுமல்லாமல் பெரிய அர்ச்சியசிஷ்டவர்களாய்ப் போகலாமென்றும் நினைப்பார்கள். இவர்களே மடத்தின் சாதாரண சட்டங்களையும் தங்கள் அலுவல் கடமைகளையும் சரியாய் அநுசரியார்கள். இது எப்பேர்க்கொத்த தவறு! அர்ச். சவேரியார் காலத்தில் கொய்ம்பிரா நகரத்திலிருந்த இயேசு சபையாருக்குள் வாலரான சிலர் அவரோடுகூட வேதம்போதிக்க அங்கங்கே சுற்றித்திரியும்படி ஆவலாய்க் கேட்டதற்கு அவர் மறுமொழியாக: என் சகோதரரே, உங்களிடத்திலுள்ள தேவ தோத்திரப் பற்றுதலையும் பிறரீடேற்ற ஆவலையும் நான் மெச்சிக்கொள்ளுகிறேன். ஆனால் நீங்கள் மோசம்போக வேண்டாம். சிறிய காரியங்களில் தேர்ச்சியடையாதவன் பெரிய காரியங்களிலும் தேர்ச்சியடைய மாட்டானென்பதை நினைத்துக் கொள்ளுங்கள் என்றெழுதினார். நாமும் இந்த வாக்கியத்தை ஆராய்ந்து இதிலடங்கிய பலனைக் கைக்கொள்ளுவோமாக.

மனப்பற்றுதல்.—அற்பக் காரியத்தையும் பிரமாணிக்க நிலைமையோடு செய்து முடிக்கத் தேவ உதவியை மன்றாடு.

பிரதிக்கினை.—பெலத்த காரியங்களைச் செய்யக் காலம் வருமளவும் அற்பக் காரியங்களில் பிரமாணிக்கமாயிரு.

## 2-ம் பிரிவு

### அர்ச். சவேரியாரிடத்தில் விளங்கின ஆச்சரியமான தாழ்ச்சி

தியானம்.—இந்த அர்ச்சியசிஷ்டவர் செய்த புதுமைகளுக்குள்ளே தம்மிடத்தில் விளங்கச்செய்த தாழ்ச்சி பெலத்த புதுமை என்னத்தகும். அவருடைய கீர்த்தி உலகத்தின் நாலாபக்கத்திலும் பரவிப் பிரபலியமாயிருந்தாலும், அவர் தம்மை ஒரு காசு பெறாத அற்ப வஸ்துவென்றும், மனுஷனென்னும் பேருக்குமுதலாய் அயோக்கியனென்றும் எண்ணியிருந்தார். அவர் கைதொட்ட காரியமெல்லாம் அனுகூலமாகிறதைக் கண்டவர்கள் அவரைப் புகழ்ந்துகொண்டாடும்போது அவர் சொல்வதாவது: சர்வேசுரன் என்னைக்கொண்டு ஏதாவது நன்மைசெய்தால் ஐரோப்பாவிலிருக்கிற என் சகோதரர்களுடைய செபமும், பேறுபலன்களும் அதற்குக் காரணமென்பார். இப்பேர்க்கொத்த தாழ்ச்சியால்தான் தமக்குச் சிரேஷ்டரான அர்ச். இஞ்ஞாசியார்மட்டில் அத்தியந்த வணக்கமுள்ளவராய், அவருக்கு நிருபம் எழுதும்போதெல்லாம், முழங்காலினின்று எழுதுவார். அன்றியும் ஒவ்வொரு காகிதத்திலும், தம்மைக் கண்காணித்து நடத்தித் தம்மை எப்போதும் ஏவிக்கொண்டிருக்க ஒருவரை அனுப்பவேணுமென்று அவரைக் கெஞ்சிக்கேட்பார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—சர்வேசுரனைக்குறித்து சொற்பக் காரியமுதலாய்ச் செவ்வையாய்ச் செய்து அறியாத நாம் தாழ்ச்சியாயிருப்பது சுளுவென்று தோன்றலாம். ஆயினும் நாம் முழுதும் சுயபட்சம் நிறைந்தவர்களாய் அற்ப இழிவைமுதலாய்ச் சகிக்கமாட்டாமலிருக்கிறோம். அர்ச். சவேரியாருக்கும் நமக்குமுள்ள இந்த வித்தியாசத்துக்குக் காரணமென்ன? அவரைப்போல நாமும் நம்மை அறிந்துகொள்ளாதிருக்கிறதே காரணமென்கவே



ணும். உன்னை நீ நன்றாயறிந்துகொள்; நீ தாழ்ச்சியுள்ளவனாய் இருப்பாயென்று அர்ச். அகுஸ்தீனார் சொல்லியிருக்கிறார்.

மனப்பற்றுதல்.—உன் வீண்பெருமை சலாக்கியத்தை நினைத்து வெட்கி இனிமேல் சரியாய் நடக்கும்படி தேவ உதவியைக் கேள்.

பிரதிக்கினை.—அர்ச். சவேரியாருக்குப் பிரியப்படும்பொருட்டு விசுவாசப் பரம்புதல் சபை ஓங்கி வளரும்படி உன்னாலானமட்டும் பிரயாசப்படு.

## 3-ம் பிரிவு

### அர்ச். சவேரியாரிடத்தில் விளங்கின ஆச்சரியமான பத்தி

தியானம்.—அர்ச். சவேரியாரிடத்தில் மேற்சொன்ன இரண்டு அற்புதங்களோடு வேறொரு மூன்றும் அற்புதமும் விளங்கி வந்தது. அது என்னவென்றால் அவருடைய தியான யோகமும் பத்தியுமாம். காலைமுதல் பொழுது சாய்ந்து வெகு நேரமளவாக அவர் இடைவிடாமல் பல சோலியாயிருந்து நாட்கழிக்க வேண்டியிருந்தாலும் அற்ப நேரமாவது சர்வேசுரனை நினையாமலும், உள்ளத்தில் அவரோடு சம்பாஷியாமலும் இருந்தவரல்ல. அவர் தூங்கி இளைப்பாறும்போதுமுதலாய் அவர் ஆத்துமம் விழித்திருந்து சர்வேசுரனோடு சம்பாஷிக்கும். இதினாலே அவர் தூங்கும்போது ஓ! அர்ச். தமதிரித்துவமேயென்று பலமுறை கூவிச் சொல்லுகிறதை மற்றவர்கள் கேட்பார்கள். அவருக்கு எப்போதும் பழக்கமாயிருந்த இந்த மனவல்லயச் செபமானது: சர்வேசுரன் நம்மை உண்டாக்கி இரட்சித்துத் தமக்குச் சுவீகாரப் பிள்ளைகளாக்கிக்கொண்ட மேலான உபகாரத்தை அவருக்கு ஞாபகப்படுத்தி, அவருள்ளத்தில் தேவ சிநேக அக்கினியை மென்மேலும் பற்றுவிக்கும். அவர் அந்த உபகாரத்தை நினைத்து நினைத்துப் பத்தியினாலே கண்ணீர் சொரிந்து அழுவார். விசேஷமாய் அவர் தமது பாடுபட்ட சுரூபத்தை முத்திசெய்யும்போதெல்லாம் இவ்விதம் சம்பவிக்கும். சர்வேசுரனும்

தமது தாசனுடைய கண்ணீர்ப் பேறுபலன்களை அவரிருந்த ஸ்தலத்துக்கு ஐயாயிரம் நாழிகை வழிக்கப்பால் ஒரு பெரும் அற்புதத்தைக்கொண்டு காண்பிக்கச் சித்தமானார். அதெப்படியென்றால்: அவர் இந்துதேசத்தில் வேதம் போதித்துவந்த பத்து வருஷ காலமும், அவர் பிறந்த சவேரிக் கோட்டையிலிருந்த பாடுபட்ட சுரூபம் வெள்ளிக்கிழமைதோறும் புதுமையாக வேர்த்துவந்தது. இதுவே அனேகர் வெகு ஞானப்பிரயோசனத்தோடு அவரைக் குறித்துப் பத்து வெள்ளிக்கிழமை ஒருசந்தி முதலிய பத்தி முயற்சிகள் நடத்துவதற்குக் காரணமாயிற்று.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—ஞானக் காரியங்களில் உனக்குப் பத்திச்சுவை அற்றுப்போயிற்றென்றும், எப்போதும் இருதய வறட்சியாயிருக்கிறதென்றும், தேவநற்கருணை வாங்கும்போது முதலாய் உன் இருதயத்தில் தேவ சிநேக அக்கினி பற்றிக்கொள்ளாமல் குளிர்ந்ததாயிருக்கிறதென்றும் நீ முறைப்படுகிறாய். உனக்குள்ள பல சோலிகளும் விசாரங்களும் இதற்குக் காரணமென்கிறாய். நீ சொல்வது நியாயமல்லவென்பதற்கு அர்ச். சவேரியாரே அத்தாட்சியாயிருக்கிறார். உள்ளத்தில் சர்வேசுரனோடு அன்னியோன்னியமாய் ஒன்றித்துச் சம்பாஷிப்பதற்கு வெளிவேலைகள் மாறாத தடங்கல் அல்லவென்று அவர் தமது மாதிரிகையால் காண்பிக்கிறார். அடிக்கடி மனவல்லயச் செபம் செபிக்கப் பிரமாணிக்கமாயிரு. உன் ஞானக்கிருத்தியங்களை அதிக சுறுசுறுப்போடு செய்துகொண்டுவா. அப்போது மன உருக்கமும், பத்திச் சுவையும் உண்டாகும்; அத்தோடு சர்வேசுரனுடைய வரங்களெல்லாம் உனக்கு வரும்.

**சம்பாஷணை.**—அர்ச். சவேரியாரோடு சம்பாஷணை செய்.

---



# 4-ம் தேதி

## தேவ ஊழியத்தில் மனத்தாராளமாயிருத்தல்

**ஆயத்தச் சிந்தனை.**—இயேசுநாதர் நமதுமேல் கொண்ட சிநேக தாராளத்தினாலே சிலுவைப் பீடத்தின் மேல் தம்மைத்தாமே பலியாக ஒப்புக்கொடுத்ததைப் பார்க்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

**தியானச் செபம்**—தேவ ஊழியத்தில் நமக்கிருக்க வேண்டிய தாராளமென்கிற குணத்தைக் கேள்.

### முதல் பிரிவு

#### மனத்தாராளத்தின் இயல்பு

**தியானம்.**—பேர்போன தேவ தாசனாகிய அர்ச். சவேரியார் சர்வேசுரனுடைய திரு ஊழியத்தில் காட்டின மனத்தாராளத்தை தேற்றுத் தியானித்து ஆச்சரியப்பட்டோமே. இந்த மனத்தாராளமாவது என்னவென்றால்: தேவ ஊழியத்திலும் பிறசிநேக ஊழியத்திலும் நேரிடும் எவ்வித விக்கினங்களுக்கும் பின்வாங்காமல், வீரியமாய் அவைகளைச் செயித்துக்கொண்டு, சகலத்திலும் தன் கடமைகளை நிறைவேற்றுகிறது போதுமென்றிராமல் சாங்கோபாங்கத்தையும் அடையத் தேடுகிற சுகிர்த குணம் அல்லது சுகிர்த அப்பியாசந்தான் மனத்தாராளமென்னப்படும்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—மனத்தாராளம் இன்னதென்று அறிகிறதுஞ் சரி, அதை மதித்து ஆசிக்கிறதுஞ் சரி. ஆனால் அதை அடைந்து நம்மிடத்தில் விர்த்தியாக்குவதற்கு வழியேது? ஏதென்றால் நாம் சேவிக்கிற எசமானாகிய சர்வேசுரனுடைய மகத்துவ நன்மைத்தனத்தையும், நமதுமேல் அவர் காட்டிவரும் உதாரத்தனத்தையும், நாம் அவருக்கு நன்றியறிந்து நம்மை முழுதும் நேர்ந்துகொள்வதற்கு உண்டான கணக்கற்ற நியாயங்களையும் அடிக்கடி யோசித்து, மனதில் ஸ்திரமாய்ப் பதித்துக்கொள்வதே தவறாத வழி. இந்த நினைவுகள் அர்ச். சவேரியாரிடத்திலிருந்ததுபோல நம்மிடத்திலும் எப்போ

துமிருந்தால் நாமும் தேவ தோத்திர மகிமைக்கும் பிறரிடேற்றத்துக்கும் படவேண்டிய பிரயாசமெல்லாம் பட ஆயத்தமாயிருந்து தாராள குணத்தைக் காண்பிப்போமென்பதற்குச் சந்தேகமில்லை.

மனப்பற்றுதல்.—சர்வேசுரனுடைய பெருமைகளை நீ அறியவும், அவருடைய ஊழியத்தில் மென்மேலும் மனத்தாராளமுள்ளவனாகவும் மனதில் ஆசையெழுப்பக்கடவாய்.

பிரதிக்கினை.—சமயங் கிடைக்கும்போது பெரிய காரியத்தில் மனத்தாராளத்தைக் காண்பிக்கும்படி அற்பக்காரியத்திலும் மனத்தாராளமாயிருக்கத் துவக்கு.

## 2-ம் பிரிவு

### மனத்தாராளத்தின் அவசரம்

தியானம்.—மனத்தாராளத்தின் இயல்பைக் குறித்துச் சொல்லப்பட்டதை நீ நன்றாய் யோசித்துப் பார்ப்பாயானால், இந்தப் புண்ணியம் மகா அவசியமென்று கண்டுபிடிப்பது உனக்குப் பிரயாசையாய் இராது. இந்தப் புண்ணியமில்லாதேபோனால், நமது அந்தஸ்துக் கடமைகளையும், தொழில் கடமைகளையும் சரிவர நிறைவேற்றுவது எப்போதும் நமக்குப் பாடாயிருக்கும். இதினாலே சரீரத்துக்கு அடிமைப்பட்டவர்களாகித் தேகசௌக்கியத்தின்மேலே தீராத கவலை வைத்து, அற்ப வியாதி வந்தவுடனே அதுவே சாக்கென்று ஒன்றுஞ் செய்யாமல் படுத்துக்கொள்ளுவோம். ஏதேனுஞ் செய்தால் அரையுங் குறையுமாய்ச் செய்து வைப்போம். தாங்கக்கூடாத சுமையை நமது தலைமேலே ஏற்றிவைத்திருக்கிறதாக எண்ணி, அதை அடுத்தவர்கள் மேலே போடப் பார்ப்போம். யாதொருவேலை துவக்கினது துவக்காததற்குள்ளே இளைப்பாற்றியைத் தேடுவோம். அதற்கு வீண்போக்குகளை நியாயமாக எடுத்துச் சொல்லுவோம். இவ்விதமாய்க் காலத்துக்குமுன் விருத்தாப்பியமாகி, காரணமின்றி நோவாளிகளோடு சேர்த்தியாவோம்.

மனத்தாராளமில்லாதேபோனால் ஸ்திரமான புண்ணியப் பயிற்சியில் நாம் முன்னிடுவதற்குப்பதிலாய்ப் பின்னிட்



டுப்போவோம். ஏனென்றால் விடாத ஊக்கமும் உதாரமுமான பிரயாசமுமின்றி அந்தப் புண்ணியங்களை அநுசரிப்பது கூடாத காரியமே! மனத்தாராளம் இல்லாவிட்டால் நமது ஒறுத்தல் பூச்சியமாகும், கற்பு தடுமாறும், பிறசிநேகம் அரைகுறையாகும், கீழ்ப்படிதல் மட்டாகும், ஞானவேகம் சோர்ந்துபோகும். ஞானக்காரியங்களில் அசமந்தமும் திரளான குறைகளும் வந்துகூட, நாம் புண்ணியசுறுசுறுப்பற்று சோகைபிடித்தவர்கள்போல் ஆவோம்.

இப்படியிருக்க மனத்தாராளமில்லாதேபோனால் மடத்து ஒழுங்கு முதலிய சட்டங்கள் போகும் போக்கென்ன? அவைகளை அநுசரிக்கப்போகிறதார்? காலமே சுறுக்காய் எழுந்திராதபடி ஏதாகிலும் ஒரு சாக்குப் போக்கு அகப்படும். அதினாலே நாள்முழுதும் சோம்பிக் கிடப்போம். இவ்விதமாய் நாளாவட்டத்தில் ஒழுங்குகளை மீறுகிற வாடிக்கையுண்டாகிப் பெருக்குமாத்திரம் சந்நியாசிகளாயிருப்போம்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—தாராளக்குறைவினாலே இம்மாத்திரம் தின்மைகள் வருகிறதென்று நீயே உன் அநுபோகத்தினால் அறிந்திருந்தால் தேவ சமுகத்தில் உன்னை மிகவுந் தாழ்த்திக்கொள். மேலும் இந்தப் பொல்லாப்புக்களையெல்லாம் நீ நன்றாய்க் கண்டுணரும்படி சர்வேசுரன் உனக்குக் கொடுக்கிற ஞானத்தெளிவைக்கொண்டு திரும்பவும் மனத்தாராளத்தை அடையும்படி பிரயாசப்படு. இந்தக் குறை இனி உனக்கு வாராதபடி எந்தச் சமயத்திலே, எந்தக் காரியங்களிலே உனக்குத் தாராளங் குறைபடுகிறதென்று பார்த்துத் திருத்திக்கொள்.

மனப்பற்றுதல்.—இதுவரையில் உன்னிடத்திலிருந்த சோம்பல் அசதிக்காக ஆண்டவரிடத்தில் பொறுத்தலைக் கேட்டு, சிரவணமும் தாராளமுமுள்ள மனதைத் தந்தருளவேணுமென்று மன்றாடு.

பிரதிக்கினை.—காலையில் எழுந்திருந்தவுடனே, அன்று தேவ ஊழியத்தில் தாராளமாய் நடக்கத்தக்கதாக: என் ஆத்துமமே, திடமாயிரு, சர்வேசுரன்மட்டில் உனக்குள்ள

பத்தி பற்றுதலைக் காண்பிக்கவும், பரலோகத்தில் அழியாச் செல்வபாக்கியங்களைச் சேர்த்துவைக்கவும், இதோ இன்னும் ஒரு நாள் கொடுக்கப்பட்டிருக்கிறதென்று உனக்குள்ளே சொல்லிக்கொள்ளக்கடவாய்.

## 3-ம் பிரிவு

### தாராளதனத்தினாலே வரும் பிரயோசனம்

தியானம்.—மனத்தாராளத்தினால் வரும் நன்மைகள் எவ்வளவோ மகத்தானவைகளும் விலைமதிக்கப்படாதவைகளுமாய் இருக்கின்றன! இந்த நன்மைகளையெல்லாம் ஞான முயற்சிகள் என்னும் புஸ்தகத்தை எழுதின அர்ச். இஞ்ஞாசியார் கொஞ்ச வார்த்தையில் ஆச்சரியமானவிதமாய் வரைந்திருக்கிறார். அதாவது: தேவ ஊழியத்தில் அவனவன் காட்டும் தாராளத்துக்களவாய்த் தன்மட்டில் சர்வேசுரனும் தாராளமாயிருக்கக் கண்டுகொள்ளுகிறதுமன்றி ஞான வரங்களையும், தேவ வரப்பிரசாதங்களையும் நாளுக்குநாள் அதிகஏராளமாய்ப் பெற்றுக்கொள்ளத் தகுதியாவானென்று எழுதிவைத்தார். அர்ச்சியசிஷ்டவர்கள் மகா அருமையான புண்ணியங்களிலே தீவிரமாய்ப் பழகி ஆச்சரியமான விர்த்தியடைந்தது எப்படியென்று மேற்சொன்னதைக்கொண்டு தெரியவருகிறது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—புண்ணிய வர்த்திப்பில் அர்ச்சியசிஷ்டவர்களுடைய சாயல் உன்னிடத்திலும் விளங்கவேணுமென்று ஆசிக்கிறாயே. இது நல்லதுதான். உனக்கு அளிக்கப்பட்ட வரப்பிரசாதத்துக்களவாக இந்தச் சாயல் உன்னிடத்தில் விளங்கச் செய்யலாம். ஆனால் எல்லாருக்கும் ஒரே அளவான வரப்பிரசாதங் கொடுக்கப்படுகிறதில்லை. ஆயினும் அர்ச்சியசிஷ்டவர்களுடைய சாயல் உன்னிடத்தில் விளங்கும்படி தோமாஸ் அக்கெம்பிஸ் என்பவர் கிறீஸ்துநாதர் அநுசாரத்தில் சொல்லியிருக்கிற இரண்டு காரியங்களைச் செய்யக்கடவாய். அவையாவன: முந்தமுந்த உன்னை ஆட்டிக்கொண்டிருக்கிற கிரமந்தப்பின பற்றுதலோடு விடாமல் போராடக்கடவாய்.



2-வது, உனக்கு விசேஷமாய்க் குறைபடுகிற புண்ணியத்தைச் சம்பாதிக்க இடைவிடாத முயற்சி செய்யக்கடவாய் (கி. அ. 1: 25). துறவற நூலாசிரியருக்குள்ளே முதன்மையான இந்த மகாத்துமா சொன்ன புத்தியின்படி நடக்கக்கடவோம். நடந்தோமானால் இந்தப் புத்தி எவ்வளவு பிரயோசனமென்று அநுபோகத்தினால் கண்டுகொள்வோம்.

சம்பாஷணை.—உன் பாதுகாவலான அர்ச்சியசிஷ்டவரோடாவது, இன்றையத் திருநாளுக்குரிய அர்ச். பார்பரம்மாளோடாவது சம்பாஷணை செய். அசுப்பில் சாவு வராதிருக்க இந்த அர்ச்சியசிஷ்டவளை நோக்கி வேண்டிக்கொள்வது திருச்சபையில் வழக்கம்.

---

# 5-ம் தேதி

## தேவமாதா ஜென்மப்பாவமில்லாமல் உற்பவித்த திருநாளுக்கு ஆயத்தம்—முதல் நாள்

ஆயத்தச் சிந்தனை.—காட்டில் முட்கள் நடுவே மகா வெண்மையும் காந்தியும் பொருந்திய ஒரு லீலிப் புஷ்பம் மலர்ந்திருப்பதாக ரூபிகரித்துக்கொள்.

தியானச் செபம்.—இந்தத் திருநாளுக்குச் சுறுசுறுப்போடு ஆயத்தஞ் செய்யும்படி சர்வேசுரனையும், தேவமாதாவையும், நம்மையும்பற்றின முகாந்தரங்களை நன்றாய்க் கண்டுணரவேண்டிய வரப்பிரசாதத்தைக் கேள்.

## முதல் பிரிவு

### சர்வேசுரனைப்பற்றிய முகாந்தரம்—அதாவது, அர்ச். கன்னி மரியம்மாளை மகிமைப்படுத்துவதில் சர்வேசுரனோடு நாமும் ஒன்றித்திருக்கிறது

தியானம்.—சர்வேசுரன் அர்ச். கன்னிமரியம்மாளை ஜென்மப்பாவத்தின் மாசணுகாமல் காப்பாற்றி ஆதா

முடைய சந்ததிக்கு இடப்பட்டிருந்த சாபத்தினின்று அவளை இரக்ஷிக்கும்படி நித்தியமாய்த் தீர்மானித்தபோது அவருக்கிருந்த கருத்தென்ன? தமது திவ்விய வார்த்தையானவர் எடுக்கப்போகிற மனுஷாவதாரத்தில் அவருக்கு அவள் தாயாராயிருக்கவேணுமென்று அவளைத் தெரிந்துகொண்டதினாலே பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலுமுள்ள சகல அர்ச்சியசிஷ்டவர்களுக்கு மேலாக அவளை மகிமைப்படுத்தக் கருத்தாயிருந்தார். நாமும் தேவதாயின் அமலோற்பவத் திருநாளை மகா விசேஷமாய்க் கொண்டாடும்படி அதற்குச் சிலநாளைந்து முந்தியே ஆயத்தஞ் செய்யும்போது நமது கருத்தும் செய்கையுமென்ன? அர்ச். கன்னிமரியம்மாளை மகிமைப்படுத்தவேணுமென்று சர்வேசுரன் நித்திய காலமாய் ஆசித்தபடி நாமும் ஆசித்து, அதற்காக நாமும் அவரோடு சேர்ந்து முயற்சி செய்கிறோம்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இந்தத் திருநாளுக்கு முந்தின இந்த மூன்றுநாளும் இதற்கு யோக்கியமான விதமாய் ஆயத்தஞ் செய்வதெப்படியென்று கேட்பாயோ? முந்த முந்த இந்தத் திருநாளை அடிக்கடி நினைத்து: இதோ உலகமனைத்திலுமுள்ள சகல கிறீஸ்துவர்களும் மோக்ஷவாசிகளோடு சேர்ந்து நமது அன்புக்குரிய தாயார் அடைந்த விசேஷ சுதந்தரத்தைக் கொண்டாட ஆயத்தஞ் செய்கிறார்களென்று உனக்குள்ளே சொல்லிக்கொள். 2-வது, மனிதர்களுக்குள் நமது அன்புள்ள தாயாருக்கேயன்றி வேறொருவருக்குங் கிடையாத இந்தச் சுதந்தரத்தை நீ மற்றவர்களைவிட அதிக பத்தி சுறுசுறுப்போடு கொண்டாடும்படி உன் மனதில் வேகமான ஆசையை எழுப்பிக்கொள்.

மனப்பற்றுதல்.—சர்வேசுரனுக்கும் தேவமாதாவுக்கும் பிரியமான இந்த உத்தம ஆசையை உனக்குத் தரவேணுமென்று மன்றாடு.

பிரதிக்கினை.—இந்தத் திருநாளை மறந்துபோகாதபடி, உனக்குச் சாவகாசமான ஒரு நேரத்தைக் குறித்துக்கொண்டு அதிலே இந்தத் திருநாளையும், இதினால் உன் இருதயத்தில் பிறக்கும் நல்ல ஆசைகளையும்பற்றி யோசித்துக்கொள்.



## 2-ம் பிரிவு

### அர்ச். கன்னிமரியம்மாளைப்பற்றிய முகாந்தரம்—அதாவது இந்தத் திருநாள் கொண்டாட்டம் அர்ச். கன்னிமரியம்மாளுக்கு மகா பிரியமாயிருக்கிறது

தியானம்.—தேவமாதா அடைந்த சகல வரங்களிலும் சுதந்தரங்களிலும், அவள் எப்போதும் மாசில்லாதிருந்த சுதந்தரமானது அவளுக்கு மகா பிரியமாயிருந்ததென்பதற்குச் சந்தேகமில்லை. இந்த ஒன்றைமாத்திரம் இழக்காதபடி, மற்றெந்த வரங்களையும் சுதந்தரங்களையும் தேவ தாயென்கிற பட்டத்தையுமுதலாய் இழக்கவேண்டியிருந்தாலும் நல்ல மனதோடு இழக்கத் துணிந்திருப்பாள். ஆகையால் நாம் இந்த விசேஷ சுதந்தரத்தை அடிக்கடி நினைக்கிறதும், இதற்காக நாம் அவளோடு அகமகிழுகிறதும், நம்மாலான மட்டும் பத்தி சுறுசுறுப்போடு இந்தத் திருநாளைக் கொண்டாட முயற்சி செய்கிறதும் தேவமாதாவுக்கு மெய்யாகவே சந்தோஷமாயிருக்கும்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இன்னமும் இதற்கு நீ நன்றாய் ஆயத்தம்பண்ணும்படி செய்யக்கூடுமானதென்னவென்றால்: உன்னிடத்தில் எதெது தேவமாதாவுக்குப் பிரியமாயிராதோ, எதெது அவளுடைய பரிசுத்த கண்களுக்குமுன் உன் ஆத்தும அலங்காரத்தை மங்கடிக்கச் செய்யுமோ, அதெல்லாத்தையும் ஒன்றும் விடாமல் இந்த நாட்களில் ஜாக்கிரதையோடு விலக்கித் தவிர்க்கக்கடவாய். இதுவே அவளுக்கு மகா பிரியமாயிருக்கும்.

மனப்பற்றுதல்.—பாவத்தின்மேல் உனக்கு நாளுக்குநாள் அதிக வெறுப்பைப் பெருவிக்கவும், பாவம் நிறைந்த இந்த உலகத்தில் நீ இருக்குமட்டும் யாதொரு குற்றத்துக்கும் உள்ளாகாமல் காலத்தைக் கழிக்கவும் தேவமாதா உதவிசெய்யவேணுமென்று மன்றாடு.

பிரதிக்கினை.—நீ முன் எவ்வித சமயத்தில் திடமற்று யாதொரு குற்றத்தில் விழுந்தாயென்று பார்த்து இனிமேல் அவ்வித சமயங்களில் உனமேல் மகா ஜாக்கிரதையாயிருக்கும்படி பிரதிக்கினை செய்.

## 3-ம் பிரிவு

### நம்மைப்பற்றிய முகாந்தரம்—அதாவது இந்தத் திருநாளைக் கொண்டாடுவது நமக்கு வெகு நன்மையாயிருக்கிறது

தியானம்.—வேதசாஸ்திரிகள் சொல்வதுபோல சகல வரப்பிரசாதங்களும் தேவமாதாவின் கரங்கள் வழியாய் நமக்கு வரவேணுமென்று சர்வேசுரன் சித்தமாயிருக்கிறார். தேவமாதாவும் தமது பிள்ளைகளான சகல கிறீஸ்துவர்களுக்கும் பெலத்த நன்மை உபகாரஞ் செய்யவேணுமென்று ஆசையாயிருந்தாலும், மற்றத் தாய்மார்களைப்போலத் தமக்கு அதிக பிரியமாய் நடக்கிற பிள்ளைகள் யாரோ அவர்களுக்கு விசேஷ உபகாரஞ் செய்வாள். இப்படியிருக்க அந்த ஆண்டவளுக்கு மகா பிரியமான அமலோற்பவ சுதந்தரத்தைப்பற்றித் திருச்சபையில் கொண்டாடப்படுகிற திருநாளை நாமும் முக்கியமானவிதமாய்க் கொண்டாடப் பிரயாசப்பட்டால், நமதுபேரில் அவள் விசேஷ தயவு வைத்து தமது நன்மை உபகாரங்களை நமதுமேல் ஏராளமாய்ப் பொழிவாளென்பதற்குச் சந்தேகமில்லை. இவ்விதமாய் அந்த ஆண்டவளை நாம் மகிமைப்படுத்தும்போதே நமது சொந்த நன்மையையும் தேடிக்கொள்ளுகிறோம்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நமது பரிசுத்த தாயாருடைய இந்தத் திருநாளுக்கு ஆயத்தமாக நீ செய்யக்கூடிய மூன்றுங்காரியம் என்னவென்றால்: பிறரிடேற்ற ஆவல், பக்திமுதலிய புண்ணியங்கள் உன்னிருதயத்தில் அதிக ஆழமாய்ப் பதியும்படி இந்த நாட்களில் முன்னிலும் இரட்டிப்பான கவனத்தோடும் பிரயாசத்தோடும் வருந்தக்கடவாய். இந்தப் புண்ணியங்களின் மேல் உனக்குள்ள மதிப்பென்னவென்றும், இவைகளை அநுசரிக்கும்படி நீ படும் பிரயாசை எதென்றும் பார்.



இவைகளை அநுசரிக்கும்படி உனக்கு இன்று சமயங் கிடையாமற்போகாது. ஆனால் கிடைக்கிற சமயங்களைக் கைவிடாதே.

சம்பாஷணை.—தேவமாதாவின் அமலோற்பவத்தின் மேல் மிகுந்த பக்திவைத்து, அதினால் திரளான நன்மைகளைக் கைக்கொண்ட அர்ச். அல்போன்சு லிகோரியாரோடு சம்பாஷணை செய். அவர் உன்னையும் உன் ஆசைப் பற்றுதல்களையும் வணக்க ஸ்தோத்திரங்களையும் அவளுக்கு ஒப்புக்கொடுத்து நீ செய்துகொண்ட பிரதிக்கினைகளில் இன்று விசேஷ பிரமாணிக்கமாயிருக்கும்படி வேண்டிய வரப்பிரசாதங்களை அவளிடத்தில் பெற்றுத்தர மன்றாடு.

---

# 6-ம் தேதி

## அமலோற்பவ திருநாளுக்கு ஆயத்தம்—2-ம் நாள்

### அற்பப்பாவத்தை வெறுத்துத் தள்ளுதல்

ஆயத்தச் சிந்தனை.—தேவமாதா இயேசுநாதருடைய சிலுவை அடியில் நின்று நமது பாவங்களுக்காக அழுகிறாளென்று ரூபிகரித்துக்கொள்.

தியானச் செபம்.—அற்பப்பாவத்தையும் மென்மேலும் அருவருக்க அநுக்கிரகங்கேள்.

## முதல் பிரிவு

### அற்பப்பாவம் தேவமாதாவின் கண்ணுக்கு நம்மை அவலட்சணமாக்குகிறது

தியானம்.—நாம் அர்ச். கன்னிமரியம்மாளுக்குப் பிரியப்படவும், அவளுடைய விசேஷ உபகார சகாயங்களை அடையவும் ஆசைப்பட்டால் எல்லாத்துக்கு முந்தி ஆத்தும சுத்தமுள்ளவர்களாயிருக்கப் பிரயாசப்படவேண்டியது. அற்பப் பாவமானது தேவமாதாவுக்கு எவ்வளவோ

அருவருப்பாயிருக்கிறதென்று யோசித்து அதை எப்போதைக்கும் தவிர்த்து நடப்போமென்று இன்றைக்கே பிரதிக்கினை செய்துகொள்ளக்கடவோம். எவ்வித அற்பப் பாவமும் அதின் கனத்துக்குத்தக்கது நமது ஆத்துமத்தைக் கறைப்படுத்தி அழகிய நேசம்பொருந்திய தேவதாயாரின் பார்வைக்கு அதை அவலட்சணமாக்குகின்றது மெய். மேலும் ஆத்தும சௌந்தரியமானது அவளுடைய திருக்குமாரன் சிந்தின இரத்தத்தின் கிரயமாயிருக்கிறபடியினாலே அதை மங்கடிக்கிற பாவம் அவளுக்கு எவ்வளவோ பொருந்தாததாயிருக்கவேண்டியது! ஆத்தும சௌந்தரியம் கர்த்தருடைய இரத்தத்தின் கிரயமென்பதற்குச் சந்தேகமில்லை. ஏனென்றால் அவர் தமது உதிரத்தினாலே நமது பாவங்களைக் கழுவினாரென்று அர்ச். அருளப்பர் சொல்லியிருக்கிறபடியே, ஞானஸ்நானத்தில் இயேசுநாதருடைய இரத்தத்தைக் கொண்டுதான் நமது ஆத்துமம் பாவக் கறைகளினின்று சுத்தமாக்கப்படுகிறது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—அற்பப் பாவத்தையும், அதை எளிதாய்க் கட்டிக்கொள்ளும் அப்பியாசத்தையும் அருவருத்துத் தள்ளுவதற்கு இந்தப் பிரிவிலே எவ்வளவோ பலமான நியாயங்களைக் காண்கிறோம். அற்பப் பாவத்தின்மேல் அற்பப்பாவத்தைக் கட்டிக்கொண்டு தன்னாத்துமத்தை அசுத்தமாக்குகிறவன் கன்னிகையான தேவமாதாவின் பார்வைக்கு அந்தப்பிறையும் அவலட்சணமுமாயிருக்கும்போது அவளிடத்தில் விசேஷ உபகாரங்களைக் கைக்கொள்வேனென்று அவன் பாராட்டுவதெப்படி? நம்மை நாம் நன்றாய்ச் சோதித்துப் பார்த்தால் ஒருவேளை யாதொரு அற்பப் பாவத்தின்மேல் நமக்குள்ள பற்றுதலினாலேதான் தேவதாயாரிடத்தில் நாம் கேட்கிற மன்றாட்டைக் கைக்கொள்ளாமற் போகிறோமென்று கண்டுகொள்வோம்.

மனப்பற்றுதல்.—உன் அன்புள்ள பரம தாயின் பாதத்தில் உன்னை ஞானவிதமாய் நிறுத்தி எவ்வித கிரமந்தப்பின பற்றுதலையும் முழுமனதோடு வெறுத்துவிடுவாயாக.



பிரதிக்கினை.—இன்று ஒரு தினமாவது நீ யாதொரு பாவமில்லாமலிருக்கும்படி உன்மேல் ஓயாத விழிப்பாயிரு.

## 2-ம் பிரிவு

### அற்பப் பாவமானது தேவமாதாவின்மட்டில் நம்மை ஓர் வகையில் இரக்கமற்றவர்களாக்குகிறது

தியானம்.—இப்படிச் சொல்லுகிறது ஒன்றுக்குப் பத்தாய் ஏற்றிச் சொல்லுகிறதென்று தோன்றினாலும் காரியத்தைப் பார்க்கையில் உண்மையாகவேயிருக்கின்றது. ஒரே யோசனையால் இது எதார்த்தமென்று உன் மனதுக்கு விளங்கும். எப்படியென்றால்: பாவமென்னப்பட்டயாவும் வேற்றுமையில்லாமல் இயேசுநாதருடைய பாடுகளுக்குக் காரணமாயிருந்தது மெய். அப்படியிருக்க அற்பப் பாவத்தை வேணுமென்றாவது குற்றமுள்ள அசட்டையினாலாவது கட்டிக்கொள்ளுகிறவன், இயேசுநாதரை மனம்பொருந்தி உபாதிப்பதினாலே அவருடைய அன்புள்ள தாயாரின் இருதயத்தையும் வியாகுலமென்கிற வாளால் குத்திக் காயப்படுத்துகிறான். அவன் சாவானபாவத்தைக் கட்டிக்கொண்டு அர்ச். சின்னப்பர் சொல்லுமாப்போல இயேசுநாதரைத் திரும்பவுஞ் சிலுவையில் அறைகிறதில்லையென்பது மெய்தான். ஆனால் சாக்காயம் பட்டுச் சிலுவையில் தொங்குகிற சுவாமிக்கு அற்பப் பாவங்களால் சில்லரைக் காயங்கள் வருவிக்கப் பின்வாங்கமாட்டான். இப்பேர்ப்பட்டவனைத் தேவமாதாவின்பேரில் இரக்கமுள்ளவனென்கலாமோ?

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—ஐயோ! நான் மதிகெட்டு அத்தனைவிசை மனம்பொருந்தி அற்பப் பாவத்தைக் கட்டிக்கொண்டபோது என்ன வேலை செய்தேன்? அந்தச் சமயங்களில் என் வாய் பேசாவிட்டாலும் என் கிரியைகளினால் தேவ தாயைப் பார்த்து: ஓ! பரிசுத்த கன்னிகையே, உம்மை நான் சிநேகிக்கிறேன், உமது திருக்குமாரனாகிய இயேசுநாதரையும் சிநேகிக்கிறேன். அவரைச் சாகடிக்கும்விதமாய்க் காயப்படுத்துகிறேன்.

ஒருபோதுந் துணியமாட்டேன். ஆனால் அவருக்கு அப்பக் காயங்களை வருவியாமலிருக்கமாட்டேனென்று சொல்லியிருக்கிறேன். தேவ தாயாரிடத்தில் உபகாரம் பெற்றுக் கொள்ளும்படி நாம் நடந்துகொள்ளவேண்டியவிதம் இதுவோ? இப்படிச் செய்கிறது அவளுடைய உயிருக்கு உயிராய் இருக்கிறவரிடமாய் அவரை நாம் துக்கப்படுத்துகிறதேயன்றி வேறென்ன?

**மனப்பற்றுதல்.**—இதெல்லாம் யோசித்து வெட்கி, பாவிகளுக்கு அடைக்கலமான அத்திருத் தாயாருடைய தயாள நிறைந்த இருதயத்தைத் தஞ்சமென்று அண்டிப் போவோமாக.

**பிரதிக்கினை.**—நீ அடிக்கடி கட்டிக்கொள்ளும் அற்பப் பாவம் எதென்று விசாரித்துத் தனி ஆத்தும சோதனை மூலமாய் அத்தோடு போராடி நிர்மூலமாக்கக்கடவாய்.

## 3-ம் பிரிவு

### அற்பப் பாவமானது நம்மைத் தேவமாதாவைவிட்டு அகலச்செய்கின்றது

**தியானம்.**—தாயைவிட்டுப் பிரிந்திருக்கிற பட்சமுள்ள பிள்ளைக்குச் சகிக்கக்கூடாத வருத்தமாயிருக்கும். அப்படிப் பிரிந்திருக்கிற நேரம் அதற்கு எப்போதும் வெகு நீண்டதாய்த் தோன்றுவதினால், தன்னாலான உபாயமெல்லாம் செய்து அந்தக் காலத்தைக் குறைக்க வழிதேடும். அப்படியே அர்ச். ஸ்தனிஸ்லாஸ் முதலான அநேக அர்ச்சியசிஷ்டவர்கள் தேவமாதாவின்மட்டில் மெய்யான பிள்ளைக்குரிய பற்றுதலுள்ளவர்களாய் இருந்ததினால் மோக்ஷத்தில் அந்தத் தாயாரைத் தீவிரமாய்க் காணவும் அவளைவிட்டு ஒருபோதும் பிரியாதிருக்கவும் ஆசித்து மரணம் எப்போ வருமோவென்று தவித்துக்கொண்டிருந்தார்கள்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—நீ சற்றும் கூசாமல் அற்பப்பாவத்தின்மேல் அற்பப்பாவத்தைக் கட்டிக்கொண்டு பாவக்கடனை உன்மேல் சுமத்திக்கொள்ளும்போது நீ செய்கிறதென்னவென்று பார். அந்தத்



தாயைவிட்டுப் பிரிந்து நீ உத்தரிக்கிறஸ்தலத்திலே ஒருவேளை வெகு வெகு வருஷகாலங் கிடக்கும்படி மனமறிய வழிபண்ணிக்கொள்ளுகிறாய். இப்படியிருக்க மெய்யான பிள்ளையைப்போல நீ அவளைச் சிநேகிக்கிறாயென்று சொல்லலாமோ? அவளிடத்தில் அருமையான வரப்பிரசாதங்களைப் பெறுவாயென்று எண்ணலாமோ? இந்த நினைவு உன் மனதில் பதிந்து நன்னெறியில் உன்னை நிலைநிறுத்தாமற்போனதெப்படி?

**சம்பாஷணை.**—அர்ச். ஸ்தனிஸ்லாசோடு சம்பாஷணை செய். அவர் தேவமாதாவின் பேரில் வைத்த உருக்கமும் ஸ்திரமுமான பத்தியினாலே அந்த ஆண்டவள் மூலமாய்ச் சிறந்த பல உபகாரங்களைக் கைக்கொண்டார். உனக்கும் தமது பத்தியில் எவ்வளவாவது தந்தருளவேணுமென்று அவரை மன்றாடு.

---

# 7-ம் தேதி

## அமலோற்பவத் திருநாளுக்கு ஆயத்தம்—3-ம் நாள்

### புண்ணிய பயிற்சியின்பேரில்

**ஆயத்தச் சிந்தனை.**—நசரேத்தூரிலிருந்த ஒரு சிறு வீட்டில் பரிசுத்த கன்னிகை உலகத்தின் கண்ணுக்கு மறைந்தவளாய்ச் சீவித்து வருகிறதாக ரூபிகரித்துக்கொள்.

**தியானச் செபம்.**—நீ புண்ணியத்தில் வளரும்படி ஆண்டவர் தமது திருத்தாயாருடைய அமலோற்பவ மகிமையைக் குறித்து உனக்கு அனுக்கிரகஞ்செய்ய மன்றாடு.

## முதல் பிரிவு

### அர்ச். கன்னிமரியம்மாள் தாழ்ச்சிக்கு மாதிரிகை

**தியானம்.**—நமது அன்புள்ள தாயாருடைய திருநாளுக்கு முந்தின நாளாகிய இன்று அவளுடைய விசேஷ கிருபையை அடையும்படி அவளுடைய ஜீவியகாலத்தில்

அவளிடத்தில் முக்கியமாய் விளங்கின தாழ்ச்சி, சிரவணம், பொறுமையென்னும் புண்ணியங்களில் உறுதிப்பட வருந்துவோமாக. 1-வது, அவளுடைய தாழ்ச்சியைத் தியானிக்கக்கடவோம்: உலகத்துக்கு மறைந்திருக்க விரும்புகிறதும் ஒருவரும் தன்னை ஒருபொருட்டாயெண்ணாதபடி ஆசிக்கிறதும் மெய்யான தாழ்ச்சியுள்ளவனுக்குரிய இலக்ஷணமாம். தேவமாதாவின் சீவியத்தில் இந்த இலக்ஷணமே அவளிடத்தில் முக்கியமாய் விளங்கினதாகக் காண்கிறோம். எப்படியென்றால்: நசரேத்தூரில் அவள் இயேசுநாத சுவாமியோடு சஞ்சரித்த சுமார் முப்பது வருஷகாலமும், தன்னிடத்திலுள்ள அபூர்வமான வரங்களையெல்லாம் மறைத்துக்கொண்டிருந்ததினாலே வெளிக்கு மற்றச் சாதாரண பெண்பிள்ளைகளைப்போல் தோன்றினாள். இயேசுநாதர் மூன்று வருஷகாலமாய் எங்கும் சுற்றித்திரிந்து பிரசங்கித்து, எவ்வித அற்புதங்களையும் செய்து, சகலராலும் வாழ்த்திக் கொண்டாடப்படும்போது அவள் மற்றவர்கள் கண்ணுக்குத் தென்படாமல், அவர் நிந்தை அவமானப்பட்டபோது மாத்திரம் வெளியில் காணப்பட்டாள். அவர் எருசலேம் பட்டணத்தில் ஓட்டோலகராய்ப் பிரவேசித்தபோது அவளை ஒருவரும் கண்டதில்லை. அவர் சகல நிந்தை அவமானங்களால் பூரிக்கப்பட்டு சிலுவையில் தொங்கி மரிக்கும்போதோ அவள் சிலுவையடியில் நிற்கச் சகலரும் கண்டார்கள்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—தாழ்ச்சி நிறைந்த தேவமாதாவின் நடக்கைக்கு என் நடக்கை நேர்விரோதமாயிருக்கிறதல்லவோ? என்னிடத்தில் உண்டான அற்ப நன்மையைக் கண்டு நான் ஓயாமல் ஆங்காரிக்கிறதில்லையோ? அவமானத்துக்குப் பயந்து ஒதுங்கிக்கொள்ளுகிறதும், மனிதருடைய புகழ்ச்சியை வலியத் தேடிப்போகிறதும் எனக்கு வழக்கமல்லவோ? இவ்விதமோ நான் தேவமாதாவுக்குப் பிரியப்படவும், அவளுடைய விசேஷ சகாயங்களையடையவும் பிரயாசப்படுகிறேன்? இனிமேல் நான் நடக்கவேண்டிய வழியென்ன? இன்று நான் செய்யவேண்டியதென்ன?



**மனப்பற்றுதல்.**—தேவமாதா மகா மகிமைப்பிரதாபமுள்ளவளாய் இருந்தாலும் அவளிடத்திலுள்ள அத்தியந்த தாழ்ச்சியைக் கண்டு ஆச்சரியப்பட்டு அவளைப் புகழ்ந்து கொண்டாடக்கடவாய். மேலும் கணக்கில்லாத பாவங்களும் நிர்ப்பாக்கியங்களும் நிறைந்த உன்னுடைய மூடத்தனமான ஆங்காரத்தை நினைத்து வெட்கி நாணக்கடவாய்.

**பிரதிக்கினை.**—உனக்குச் சலாக்கியமும் ஆங்காரமுமான சோதனை வரும்போது தாழ்ச்சியுள்ள ஆயக்காரனைப் போல: நிர்ப்பாக்கிய பாவியாகிய என்பேரில் இரக்கமாயிரும் சுவாமி என்பாயாக.

## 2-ம் பிரிவு

### அர்ச். கன்னிமரியம்மாள் கீழ்ப்படிதலுக்கு மாதிரிகை

**தியானம்.**—அர்ச். கன்னிமரியம்மாள் கீழ்ப்படிதலை அநுசரித்ததைப் பார்க்கும்போது அவள் அந்தப் புண்ணியத்தை எம்மாத்திரம் மதிக்கிறாளென்றும், தமது பிள்ளைகளாகிய நாமும் அதை அநுசரிக்கவேணுமென்று எம்மாத்திரம் ஆசிக்கிறாளென்றும் தெளிவாய் அறிந்துகொள்ளலாம். அவளுடைய கீழ்ப்படிதல் சுபாவத்துக்கு மேற்பட்டதாயிருந்தது. அதினிமித்தமே அவள் சகல காரியங்களிலும், முன்பின் பாராமல், வீரியத்தோடு கீழ்ப்படிந்துவந்தாள். ஒரு அஞ்ஞான இராயனுக்குக் கீழ்ப்படிந்து பெத்லேம் ஊருக்குப் போனாள். அவளுடைய மகிமையையும் அவள் திருக்குமாரனுடைய மகிமையையும் பார்க்கும்போது நாற்பதாம் நாள் சுத்திகரக் கற்பனையை அநுசரியாதிருக்க நியாயமிருந்தாலும் தாழ்ச்சியினாலே அந்தக் கற்பனையை அநுசரிக்க உடன்பட்டாள். புண்ணியத்திலும் மகிமையிலும் அர்ச். சூசையப்பருக்கு மிகவும் மேற்பட்டவளாயிருந்தாலும் சர்வேசுரன் அவரைத் தனக்குக் கொடுத்த பத்தாவென்று எண்ணிச் சகல காரியத்திலும் அவருக்குக் கீழ்ப்படிந்துகொண்டுவந்தாள்.'

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—நீ தேவமாதாவுக்குப் பிரியப்படவேணுமானால்: சுளுவும், உன்

மனதுக்கு ஏற்கையுமான காரியங்களிலுமல்லாமல் சகல காரியங்களிலும் ஒரு குழந்தைக்குச் சமானமாய்க் கீழ்ப்படிந்து நடக்கவேணும். உன் கீழ்ப்படிதல் விசுவாசத்திலும் தேவசிநேகத்திலும் ஊன்றினதாயிருக்கவேண்டியது. உன் சிரேஷ்டர்களிடமாய்ச் சர்வேசுரனை உத்தேசித்து அவர்கள் கையிலிருந்து வருங் கட்டளை சர்வேசுரன் கையிலிருந்தே வருகிறதாக எண்ணிப் பெற்றுக்கொள்ளப் பிரயாசப்படவேணும். இப்படிச் செய்துவருகிறாயோ?

**மனப்பற்றுதல்.**—கீழ்ப்படிதலை உத்தம பிரகாரமாய் அநுசரிக்க உன் இருதயத்திலிருந்த ஆசைவேகத்தை எழுப்பித் தேவமாதாவின் கையால் இந்த ஆசையைச் சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுப்பாயாக.

**பிரதிக்கினை.**—இந்த ஆசையை நிறைவேற்றுவதற்கான சமயங்களை முந்தியே பார்த்து வைத்துக்கொள்.

## 3-ம் பிரிவு

### அர்ச். கன்னிமரியம்மாள் பொறுமைக்கு உத்தம மாதிரிகை

**தியானம்.**—பரிசுத்த கன்னியாஸ்திரியிடத்திலே உன்னதவிதமாய்ப் பிரகாசிக்கிற மூன்றும் புண்ணியம் பொறுமையாமே. அவளுடைய சீவியகாலத்திலே அவளுக்கு நேரிட்ட சகல துன்ப துரிதங்களிலும் தேவ திருவுளத்துக்கு முழுதும் உத்தம பிரகாரமாய் அமைந்திருந்தாள். அந்தத் துன்ப துரிதங்கள் கணக்கற்றவைகளும் வருத்தம் நிறைந்தவைகளுமாம். தாய்மார்களுக்குள் தங்கள் அன்பினிமித்தம் குலைபதைத்து நொந்தவர்கள் இவளைப்போல் ஒருவருமில்லை. ஆகிலும் இவள் வாயிலிருந்து ஒரு முறைப்பாடாவது ஒரு முறுமுறுப்பாவது புறப்பட்டதேயில்லை. நல்ல காலத்திலே அடக்கமுள்ளவளுமாய், துக்க காலத்திலே பொறுமையுள்ளவளுமாயிருந்ததுமன்றித் துன்ப வருத்தத்தின்மேல் அதிக பிரியங்கொண்டவள்போலும் தோன்றினாள். ஏனெனில்: துன்பத்தில்தான் இயேசுநாதசுவாமிக்கு அதிக சரிசாயலாகி அவர்பேரில் தமக்



குள்ள சிநேகத்தைக் காண்பிக்கத் தருணம் வாய்த்ததென்று அகமகிழ்ந்தாள்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—பொறுமையையுந் தேவசித்தத்துக்கு அமைவையும் அநுசரிக்கத் தக்கசமயங்கள் உனக்கு அடிக்கடி கிடைத்தனவே, அச்சமயங்களில் தைரியத்தையும் தாராளகுணத்தையுங் காண்பித்தாயோ? நல்ல காலத்திலே நீ வீம்புபாராட்டி, துன்பகாலத்திலே வழக்கமாய் மனத்திடனற்றுக் கிடக்கிறதில்லையோ? நாம் சாந்தகுணமும் மனத்தாழ்ச்சியுமுள்ளவராயிருக்கிறோமென்று நம்மிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்போது நீங்கள் ஆத்தும சமாதானத்தை அடைவீர்களென்று தேவ சுதன் திருவுளம்பற்றினாரே. இந்தக் கற்பனைக்கொத்தவண்ணம் நடக்கும்படி அர்ச். கன்னிமரியம்மாளுடைய உதவியைக்கேள்.

**சம்பாஷணை.**—பரிசுத்த கன்னியாஸ்திரியோடு சம்பாஷணை செய். அவள் திருநாளுக்கு முந்தின நாளாகிய இன்றைக்கு அவளுடைய எண்ணிறந்த பிள்ளைகள் உலகத்தின் எத்திசையினின்றும் தங்கள் கரங்களை நீட்டி, தங்களை ஆசீர்வதிக்கவேண்டுமென்று அத்திரு நாயகியைக் கெஞ்சி மன்றாடுகிறார்களே, அவர்களோடு நீயும் உன் மனதினால் ஏகோபித்து, அவர்களுடைய மன்றாட்டோடு உன் மன்றாட்டையுஞ் சேர்த்து நிரம்பக் கேள்; நிரம்ப அடைவாய்.

---

## 8-ம் தேதி

### தேவமாதா சென்மப்பாவமில்லாமல் உற்பவித்த திருநாள்

**ஆயத்தச் சிந்தனை.**—ஒன்பதாம் பத்திநாதர் என்னும் அர்ச். பாப்பானவர் அநேகங் கர்தினால்மார்களாலும் உலகத்தின் ஐந்து கண்டங்களிலுமிருந்து வந்த அநேக மேற்றிராணிமார்களாலுஞ் சூழப்பட்டு மகா பரிசுத்த

கன்னிமரியம்மாளுடைய அமலோற்பவம் விசுவாச சத்தியமென்று கூறுகிறதாக ரூபிகரித்துக்கொள்.

தியானச் செபம்.—பரிசுத்த கன்னியாஸ்திரியை எப்போதும் அதிகமதிகமாய்ச் சிநேகிக்க வரப்பிரசாதங் கேள்.

## முதல் பிரிவு

### அமலோற்பவத் திருநாளின் வருஷாந்திரநாள்

தியானம்.—பரிசுத்த கன்னிமரியம்மாளுடைய பிள்ளைகளுக்கு மகா சந்தோஷமான இன்றையத்தினம் மூன்று மகத்தான வர்த்தமானங்களை நமக்கு நினைப்பூட்டுகிறது. இவைகளை நாம் மனம் அக்களித்துக்கொண்டாடும்படி திருச்சபை நம்மைக் கூப்பிட்டு அழைக்கிறது. இந்தத் திருநாளில் நாம் முந்த முந்தக் கொண்டாடுவதென்னவென்றால்: நரக சர்ப்பத்தின் தலையை நசுக்கி, வரப்போகிற இரட்சகருக்குக் கன்னித்தாயாயிருப்பாளென்று சர்வேசுரன் நமது ஆதித் தாய்தகப்பனுக்குத் துவக்கத்திலேயே வாக்குத்தத்தஞ் செய்தாரே; அந்த ஆச்சரியத்துக்குரிய ஸ்திரியான அர்ச். மரியம்மாள் உற்பவித்த முதல் க்ஷணத்தைக் கொண்டாடுகிறோம். தேவமாதாவுடைய சீவியத்திலே இந்த முதல் க்ஷணமானது சர்வ வல்லப சர்வேசுரனுடைய நித்திய தீர்மானப்படி சென்மப்பாவத்தின் மாசில்லாதிருந்ததுந்தவிர அர்ச்சிக்கப்பட்டதும் தேவப்பிரசாதங்களால் அலங்கரிக்கப்பட்டதுமாயிருந்தது. இதைக் குறித்துத் திருநாள் கொண்டாட நியாயமிருப்பதால் இந்தத் தேதியிலே பரிசுத்த கன்னிமரியாயின் அமலோற்பவத் திருநாளென்று நாம் கொண்டாடுகிறோம்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இந்தத் திருநாளில் நாம் செய்யவேண்டிய முதன்மையான காரியம் என்ன? அது மகா இன்பமான கடமை: மோக்ஷவாசிகளோடு நமது கருத்தினால் ஏகோபித்து பரிசுத்த கன்னிகைக்குக் கிடைத்த இந்த நிகரில்லாத விசேஷ சுதந்தரத்தைப்பற்றி அவளை வாழ்த்திப் போற்றக்கடவோம். அவளோடும் அவளைப்பற்றியும் நாம் அகமகிழ்ந்து சந்தோஷிப்



பதுமல்லாமல் நம்மைப்பற்றியும் சந்தோஷிக்கக்கடவோம். ஏனென்றால்: நாமும் அந்த ஆண்டவளுடைய பிள்ளைகளாயிருப்பதினாலும் அவள் மோக்ஷத்தில் அனுபவிக்கும் பாக்கியத்துக்கு நாமும் ஒரு நாள் பங்காளிகளாகும்படி அழைக்கப்பட்டிருப்பதினாலும் நாம் அகமகிழ்வது நியாயந்தானே.

மனப்பற்றுதல்.—ஆனந்த சந்தோஷத்தோடு அவளை வாழ்த்தித் துதிப்போமாக.

பிரதிக்கினை.—ஓ மரியாயே, நீர் முற்றுஞ் சௌந்தரியமுள்ளவளாயிருக்கிறீர். அற்ப மாசும் உம்மிடத்திலில்லை. எங்கள் சந்தோஷத்துக்குக் காரணமே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளுமென்று திருச்சபை தேவமாதாவைக் குறித்துச் சொல்லும் வாக்கியங்களை இன்றும் இந்த எட்டுநாளும் அடிக்கடி சொல்லிவருவாயாக.

## 2-ம் பிரிவு

### தேவமாதாவின் அமலோற்பவம் விசுவாச சத்தியமாக ஏற்படுத்தப்பட்ட வருஷாந்திரநாள்

தியானம்.—திருச்சபையின் சுபதினங்களில் ஒன்றாகிய ஆயிரத்தெண்ணூற்று ஐம்பத்தினான்காம் வருஷம் டிசம்பர் மாதம் எட்டாந் தேதியின் வருஷாந்திரநாளை நாம் இந்தத் திருநாளில் இரண்டாவது கொண்டாடுகிறோம். ஏனென்றால்: தேவமாதா அமலோற்பவியென்று விசுவசிக்கிறது. அதுவரையில் பக்திக்குரிய சத்தியமாய் மாத்திரமிருந்திருக்க, மேற்சொன்ன தினத்தில் அது விசுவாச சத்தியமென்று தப்பில்லாத திருச்சபையின் வாக்கினால் பிரசித்தமாய்க் கூறப்பட்டது. இந்த வர்த்தமானம் தேவமாதாவுக்கு மகா மகிமையாயிருந்ததுமல்லாமல் சர்வ திருச்சபைக்கும் வெகு கெம்பீர ஆனந்தத்துக்குக் காரணமாயிற்று. நானூற்று முப்பத்தோராம் வருஷம் எபேசு பட்டணத்திலே கூடின திருச்சபையின் பொதுச் சங்கத்தில் அர்ச். மரியம்மாள் சர்வேசுரனுக்குத் தாயாரென்பது விசுவாச சத்தியமென்று கூறப்பட்டபோது, விசுவாசிகள் உள்ளம்

மகிழ்ந்து செய்த ஆடம்பரக் கொண்டாட்டம் மேற்சொன்ன தினத்திலும் குறையாமல் உலகமெங்கும் செய்யப்பட்டது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—அர்ச். கன்னிமரியம்மாள் சென்மப்பாவமில்லாமல் உற்பவித்ததை விசுவாச சத்தியமாக ஏற்படுத்தவேணுமென்று சகல கத்தோலிக்கு மேற்றிராணிமார்களுங் கிறீஸ்துவர்களும் மிகுந்த ஆவலோடு கேட்டதற்கு முகாந்தரமேதென்றால்: தேவதாயாருக்குச் செல்லவேண்டிய இந்த நியாயமான வணக்கப் பெருமையினால் சர்வ திருச்சபைக்கும் சகல கிறீஸ்துவர்களுக்கும் பெலத்த ஞான நன்மை கிடைக்குமென்கிற நம்பிக்கையாமே. ஆகையினாலே திருச்சபையானது தன் சத்துராதிகளைச் செயித்து அடக்கவும், ஒரே மேய்ப்பனும் ஒரே மந்தையுமாயிருக்குமென்று திவ்விய கர்த்தர் கொடுத்த வாக்குத்தத்தத்தின்படி சகல லோக சனங்களும் திருச்சபையின் ஞான அதிகார நிழலில் அமர்ந்து சுகமாய் வாழவும், இவ்விதமாய் அது சமாதான சந்தோஷமாயிருக்கவேணுமென்று இந்தத் திருநாளிலும் இதற்குப் பின்வரும் எழுநாட்களிலும் தேவமாதாவின் வல்லமையுள்ள அடைக்கலத்தையும் உதவியையும் இரந்து மன்றாடுவோமாக. இதுவே நாம் செய்யவேண்டிய இரண்டாங் காரியமாகும்.

மனப்பற்றுதல்.—அமலோற்பவ நாயகியைப் பார்த்து இந்தக் கருத்தோடும் நோக்கத்தோடும் தாழ்ச்சி உருக்கமாய் மன்றாடுவோமாக.

பிரதிக்கினை.—இக்கருத்து நிறைவேறும்படி நாம் எல்லோரும் தேவமாதாவின் பிள்ளைகளோடு ஒன்றித்து பத்தியோடு பூசைகண்டு நன்மைவாங்கிச் செபமாலைமுதலிய செபங்களைப் பொழிந்து, நமது கிரியைகள் வருத்தங்கள் பாடுகள் யாவற்றையும் அந்த அமலோற்பவ கன்னிகைக்கு ஒப்புக்கொடுத்து: சென்மப்பாவமில்லாமல் உற்பவித்த அர்ச். மரியாயே, உமது அடைக்கலமாக ஓடிவந்த எங்களுக்காக வேண்டிக்கொள்ளுமென்று பத்தியோடு வாக்கினாலாகிலும் மனதினாலென்கிலும் அடிக்கடி சொல்லுவோமாக.



## 3-ம் பிரிவு

### வத்திக்கான் என்னும் திருச்சபையின் சாதாரண சங்கங் கூடின வருஷாந்திரநாள்

தியானம்.—இந்தச் சங்கத்தின் ஞாபகமானது தலைமுறை தலைமுறையாக உலகமுடியுந்தனையும் நிலைபெற்றிருக்கும். மகா கீர்த்திபெற்ற ஒன்பதாம் பத்திநாதர் என்னும் அர்ச். பாப்பானவர் ஆயிரத்து எண்ணூற்று அறுபத்தொன்பதாம் வருஷம் இந்தத் தேதியிலே உலகத்தின் எத்திசையினின்றும் கர்தினால்மார், அதிசிரேஷ்ட மேற்றிராணிமார், அதிமேற்றிராணிமார்கள், மேற்றிராணிமார்கள், மடாதிபதிகள் முதலிய அறுநூறுபேருக்கு அதிகமானபேர்களை வரவழைத்துத் திருச்சபையின் பத்தொன்பதாம் பொதுச் சங்கத்தை வெகு சம்பிரமமாய்க்கூட்டி நடத்தினார். தேவமாதாவின் அமலோற்பவம் விசுவாச சத்தியமென்று பிரசித்தமாக்கின வருஷாந்திர நாளில்தான் இந்தப் பெரிய வர்த்தமானமும் நடக்கவேணுமென்று சர்வேசுரனுக்குச் சித்தமானதினாலே, சகல நன்மைக்கும் வாய்க்காலாகிய தேவதாயாருக்குச் செய்யப்பட்ட சங்கைக்கு ஈடாகவும் அவள் மூலமாகவுந்தான் இப்படி நடந்ததென்று காட்டியருளினார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—பரலோக இராக்கினி செய்த இந்தப் புது உபகாரத்தைப் பார்த்து அவள்மட்டில் நன்றியறிந்த பற்றுதலை நமதுள்ளத்தில் புதுப்பிக்கக்கடவோம். மேலும் அவள் நமக்கு ஆயிரம் வகையாய்க் காண்பிக்குஞ் சிநேகத்துக்கு நாமும் பதில் சிநேகங்காட்டும்படி அவளுடைய தர்ம மாதிரிகைகளை எவ்வளவேனும் கண்டுபாவிக்க வருந்தக்கடவோம். நமக்காக அவள் தமது திருக்குமாரனை மன்றாடவும் மேற்சொன்ன திருச்சங்கத்தினால் வந்த பிரயோசனம் திருச்சபையில் எந்நாளும் நிலைபெற்றிருக்கவும் தயவு செய்யவேணுமென்று வேண்டிக்கொள்ளக்கடவோம்.

சம்பாஷணை.—நமது அன்புக்குரிய தாயாராகிய சென்மப்பாவமில்லாமல் உற்பவித்த கன்னிமரியம்மாளோடு சம்பாஷணை செய்வோமாக.

# 9-ம் தேதி

## தேவ இலக்ஷணங்களின்பேரில் தியானக் கோர்வை

### சர்வேசுரன் உண்டென்பதின்பேரில்

**ஆயத்தச் சிந்தனை.**—நாமே இருக்கிறவரென்று சர்வேசுரன் மோயீசனுக்குச் சொன்னதைக் கேட்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

**தியானச் செபம்.**—நீ எவ்விடத்திலிருந்தாலும் அளவற்ற மகத்துவம்பொருந்திய சர்வேசுரனுடைய சந்நிதானத்தில் இருக்கிறாயென்கிற நினைவோடிருக்க அநுக்கிரகங் கேள்.

### முதல் பிரிவு

#### சர்வேசுரன் உண்டென்று என் புத்தியே சாட்சி சொல்லுகிறது

**தியானம்.**—என்னிடத்தில் மகா உள்ளாந்தரங்கமாயிருக்கின்ற புத்தி ஞானமானது சர்வேசுரனை எனக்கு ஞாபகப்படுத்தி: உன் சிருஷ்டிகரை நினைத்துக்கொள், நினைத்துக்கொள்ளென்று ஓயாமல் எனக்குச் சொல்லிவருகிறது. மெய்யாகவே என் புத்தியைச் சற்றாவது வினவிக் கேட்பேனாகில் அது சொல்வதென்னவென்றால்: இதோ நீ இருக்கிறாய், ஆகையால் உன்னைப் படைத்த சுவாமியும் இருக்கிறாரென்று சொல்லும். இது நியாயந்தான். ஏனென்றால் ஒன்றுமில்லாமையினின்று ஒன்றும் உண்டாகமாட்டாது. இதைக் கண்டுபிடிக்கும்படி ஒரு வஸ்துவுமில்லாத ஒரு காலமிருந்ததென்று வைத்துக்கொள். அப்படியே ஒரு காலத்தில் ஒன்றுமில்லாதிருந்தால் மறு காலத்தில் எப்படி ஒரு காரியமிருக்கக்கூடும்? அதற்கு வழியேது? இல்லையே. மரமின்றிக் கனியிருப்பது கூடாததுபோல, ஒன்றுமில்லாதிருக்க ஒரு வஸ்து உண்டாவது கூடாத காரியமாமே. ஆகையால் சர்வத்தையும் படைத்தவருமாய்ச் சர்வத்துக்கும் ஆதிகாரணமுமாய், நித்தியரும், சர்வ வல்லபரும், அளவற்றவருமான ஒருவர் இருப்பது அவசரமாமே. அவரின்றி நானாவது எனக்குப் புறத்திப்பட்ட எந்தப் பொருளாவது பரிச்சேதம் உண்டாயிருக்கக் கூடாது. அவரைத்தான் நாம் சர்வேசுரனென்று சொல்லுகிறோம். என் புத்தியானது எனக்குச் சாட்சியாயிருந்து சொல்லுகிறது இதுவே. பரலோகத்தையும் பூலோகத்தையும் படைத்த சர்வத்துக்கும் வல்ல பிதாவாகிய சர்வேசுரனை அதியோக்கியபத்தியாக விசுவசிக்கிறேனென்று நான் வெளியரங்கமாய்ப் பண்ணும் விசுவாசப் பிரகரணமும் இதுவே.



**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—தினந்தோறும் நான் என்னைப்பற்றி நினைக்கிறேன். எந்த நேரத்திலும் பலவிதமாய் என்னைப்பற்றி நினைத்துக்கொள்ளுகிறேன். ஆயினும் நான் இருக்கிறதற்கும் நினைக்கிறதற்கும் ஆதிகாரணமாகிய சர்வேசுரனைப்பற்றி வெகு அறிதாய் நினைக்கிறேன். நான் எப்போதுஞ் சர்வேசுரனை நினைத்து, வாழ்த்தி, சிநேகித்து, நமஸ்கரிக்கும்படி என்னிடத்திலுள்ளதெல்லாம் என்னை ஓயாமல் தூண்டவேண்டியிருக்க, இதற்குப்பதிலாய் யாதொரு வெளிக்காரியமல்லவா என் பஞ்சேந்திரியங்களின் வழியாய் அவரை எனக்கு ஞாபகப்படுத்தவேண்டியிருக்கிறது! இதற்குக் காரணமென்ன? நான் மிஞ்சின பராக்கு உள்ளவனாய், என்னையே மறந்து ஒருவிதத்தில் எனக்கே அன்னியனைப்போல் இருக்கிறதல்லவா இதற்குக் காரணம்!

**மனப்பற்றுதல்.**—என் ஆத்துமமே, ஆண்டவரை வாழ்த்தக்கடவாய். என்னிடத்திலுள்ள யாவும் அவருடைய திரு நாமத்தைத் தோத்திரம்பண்ணக்கடவது (சங். 102).

**பிரதிக்கினை.**—இடைவிடாமல் தேவசமுகத்திலே நடக்கிறதற்கு அப்பியாசம்பண்ணத் தீர்மானிக்கிறேன்.

### 2-ம் பிரிவு

#### சர்வேசுரன் உண்டென்று உலக காட்சியால் அறிகிறோம்

**தியானம்.**—நாம் சஞ்சரிக்கிற உலகத்தையும் அதில் சகலமும் தவறாத கிரமத்தை அநுசரித்து வருகிறதையும்

காண்கையில் பரலோக பூலோகத்தைப் படைத்தவரும் அதற்குச் சட்டம் ஏற்படுத்தி எல்லாத்தையும் ஒழுங்காய் நடப்பித்து ஆண்டுகொண்டு வருகிறவருமான சர்வாதி கர்த்தர் ஒருவர் இருக்கிறாரென்று நினையாமலிருப்பது கூடாத காரியமாமே. ஒரு கடியாரத்தைப் பார்க்கையில் அதைச் செய்தவன் ஒருவன் உண்டென்றும் ஒரு சிறந்த மாளிகையைப் பார்க்கையில் அதைக் கட்டின சமர்த்துள்ள ஒரு சிற்பாசாரி உண்டென்றும் எனக்கு நினைவு உண்டாகையில், இந்தப் பிரமாண்ட கிரக மண்டல வகையிலும் இந்த அலங்கிருதமான சர்வலோகத்தின் பாகங்களிலும் துலங்குகிற அதிசயத்துக்குரிய வரிசைக் கிரமத்தைப் பார்க்கும்போது சர்வேசுரனை நினைத்து அவர் உண்டென்று விசுவசித்து அவரை நோக்கி ஆராதனைசெய்து அவரை மகிமைப்படுத்தும்படி இவையெல்லாம் தூண்டாதிருப்பதெப்படி? இதோ, இராச தீர்க்கதரிசி சகல சிருஷ்டிகளையும் பார்த்துப் பிரமித்து: ஆண்டவரே, பரலோகமானது உமது மகிமையை வெளிப்படுத்துகின்றது; பூலோகமெங்கும் எண்ணிக்கையில்லாத அற்புதமான காரியங்கள் உமது திருநாமத்தைப் பிரஸ்தாபப்படுத்துகின்றனவென்று பாடியிருக்கிறார் (சங். 18, 8).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—வானலோகத்திலும் பூலோகத்திலும் அடங்கிய சகல அதிசய விநோதங்களையும் நான் பார்க்கும்போது மேற்சொல்லிய மேலான உணர்ச்சிகள் என் மனதில் எழும்பாமலும், அரூபியான சர்வேசுரனை எங்கும் என் கண்முன் கண்டதுபோ லிராமலும், அவர்மேல் என் இருதயம் அதிசய சிநேகத்தால் தாவிப் பரவசமாகாமலுமிருந்தால் இதற்குக் காரணமென்ன? என்னவென்றால் ஒருகாரியம் தன் இயல்பில் எவ்வளவுதான் ஆச்சரியத்துக்குரியதாய் இருந்தாலும் அதை ஒருவன் சிறுபந்துவக்கி வழக்கமாய்ப் பார்த்துவந்தால் அது அவன் புத்தியில் பட்டு ஆச்சரியத்தை எழுப்பாதிருப்பது அதிசயமல்ல. அது மனுஷ சுபாவத்துக்கு இயல்புதான். அதினாலேதான் சர்வேசுரனையும் அவர் செய்த ஆச்சரியமான வேலைகளையும் அடிக்கடி தியானித்துப் பார்க்



கிறது நமக்கு மகா அவசரமாயிருக்கின்றது. மேலும் அப்படித் தியானிக்கும்படி அடிக்கடி நமக்குப் புத்தியுஞ் சொல்லப்படுகிறது. இதுவே நமக்கு மகா இன்பமான அலுவலாயிருக்கவேண்டியது. அப்படியிருக்கிறதோ? இராததற்குக் காரணமென்ன?

மனப்பற்றுதல்.—எத்தனையோ அர்ச்சியசிஷ்டவர்கள் மெய்யான ஞானிகளும் தியான யோகிகளுமாகி, படைக்கப்பட்ட வஸ்துக்களுக்குள் சொற்ப வஸ்துக்களிடத்தில்முதலாய் விளங்கிய ஆச்சரியத்தை நினைத்து, சர்வேசுரனிடத்தில் ஆனந்தப்பரவசமாவார்கள். அவர்களுடைய பாக்கியத்தில் உனக்கும் எவ்வளவாவது கிடைக்கவேணுமென்று ஆசித்து மன்றாடு.

பிரதிக்கினை.—சர்வேசுரனுடைய அளவில்லாத இலட்சணங்களின்மேல் முன்னிலும் இரட்டிப்பான சுறுசுறுப்போடு யோசித்துத் தியானிக்கப் பிரயாசப்படுவேன்.

## 3-ம் பிரிவு

### சர்வேசுரன் உண்டென்று சகல சாதிசனங்களும் சாட்சி சொல்லுகிறார்கள்

தியானம்.—எக்காலத்திலும் எவ்வித சாதி சனங்களும் சர்வேசுரன் உண்டென்றும் அவருடைய பிரதான இலட்சணங்கள் இன்னவென்றும் அறிந்து, அவருக்கு ஆராதனை செலுத்திவந்தார்கள். இதைப்பற்றி உரோமாபுரியில் பூர்வீக அஞ்ஞானசாஸ்திரிகளுக்குள்ளே பேர்போனவனான சிசேரோவென்னும் பிரசங்க வித்துவான் சொல்லியிருக்கிறதாவது: சர்வேசுரன் உண்டென்று அறியாத சனம் ஓரிடத்திலும், ஒரு காட்டிலும்முதலாய்க் கிடையாது. மேலும் ஒருவன் எவ்வளவு புத்தியீனனாய் இருந்தபோதிலும், வானத்தை அண்ணார்ந்து பார்க்கையில் அதிலுள்ள ஆச்சரியங்களைக்கண்டு இவையெல்லாம் ஆண்டு நடத்திவருகிற சர்வேசுரன் உண்டென்று கண்டுபிடியாமலிருப்பானோவென்றான். இஸ்பானியா தேசத்தாரால் அமெரிக்காக் கண்டம் முந்த முந்தக் கண்டுபிடிக்கப்பட்ட

போது அவர்கள்செய்த அநியாய நெருக்கிடையை அந்தச்
சனங்கள் தாழமாட்டாமல், அவர்களுக்குத் தலைமையா
யிருந்தவன் இஸ்பானியரை நோக்கி: வெள்ளைக்காரரே,
நீங்கள் எங்களைவிட வலுத்த சனங்கள்தான். ஆனால்
அதோ! மேலேயிருக்கிற மகா புத்தியுள்ளவர் நீங்கள்
பண்ணுகிற அநியாயத்துக்கு ஒருநாள் தக்க ஆக்கினையிடு
வாரென்றான். இவ்விதமாய் நாகரீகமற்ற அந்தக் காட்டுச்
சனங்கள் முதலாய் சர்வேசுரன் உண்டென்று அறிந்திருந்
தார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—
எல்லாத்தையும் படைத்தவராகிய சர்வேசுரன் ஒருவர்
உண்டென்று நம்முடைய ஆத்துமத்தி லுள்ள சகல தத்து
வங்களும், சகல சாதி சனங்களும், சகல யுகங்களும் ஒரு
வாய் ஒருமொழியாக இசைந்து சாட்சி சொல்லுவதைப்
பார்க்கும்போது எவ்வளவோ ஆச்சரியமாயிருக்கின்றது!
சர்வ சிஷ்டிகளும் தங்கள் தங்களுக்குரிய விதமாய்: அவரே
எங்களைப் படைத்தவர்; நாங்கள் எங்களைப் படைத்துக்
கொள்ளவில்லையென்று சொல்லி: உலகத்தில் வசிக்கிற
நீங்களெல்லோரும் ஆண்டவரைப் புகழுங்களென்று சர்
வேசுரனை நாம் வாழ்த்தி ஸ்துதிக்கும்படி நம்மை அழைக்
கின்றன (சங். 119.)

சம்பாஷணை.— சர்வ வல்லபமுள்ள சர்வேசுர
னிடத்திலும், அவர் படைத்த வஸ்துக்களிடத்திலும் விளங்
குகிற தேவ இலட்சணங்களை நோக்கித் தியானித்துக்
கொண்டிருக்கிற நமது காவல் சம்மனசோடு சம்பாஷணை
செய்யக்கடவோம். அன்றியும் அடிக்கடி நமது புத்தி
யிலும் இருதயத்திலும் தேவ நினைப்பை வருவிக்கும்படி
அவரை மன்றாடுவோமாக.



# 10-ம் தேதி

## தேவ இலட்சணங்களின் தொடர்ச்சி

### சர்வேசுரனுடைய சுபாவத்தின்பேரிலும் அளவில்லாத உத்தமதனத்தின்பேரிலும்

ஆயத்தச் சிந்தனை.—சகலமும் சர்வேசுரனால்
படைக்கப்பட்டு அவரிடத்தில் நிலைபெற்றிருக்கிறதென்று
அர்ச். சின்னப்பர் சொல்லுகிறதாக ரூபிகரித்துக்கொள்.

தியானச் செபம்.—சர்வேசுரனை அதிகமதிகமாய்
அறியவும் சிநேகிக்கவும் வரங்கேள்.

## முதல் பிரிவு

### சர்வேசுரன் அளவற்ற சத்து அதாவது சர்வநன்மையாய் இருக்கிறார்

தியானம்.—சர்வேசுரன் தாமாயிருக்கிறதினாலே
ஆதியந்தமில்லாத நித்தியராகவும் எல்லை மட்டில்லாத அள
வற்றவராகவுமிருக்கிறார். இதினிமித்தமாகவே நாம்
எண்ணவும் கருதவுங் கூடுமான சகல இலக்ஷணங்களும்
அவரிடத்தில் அளவில்லாததாயிருக்கின்றன. என்
னென்ன உத்தமதனம் இருக்கக்கூடுமோ அதெல்லாம்
அவருடைய சுபாவத்தினிமித்தமே அவரிடத்தில் மேலான
விதமாயிருக்கின்றது. ஆகையால் அவர் சம்பூரண பொரு
ளும் சர்வ நன்மையுமாயிருக்கிறார். இப்போது சிருஷ்டிக்
கப்பட்டிருக்கிற பொருட்களுமல்லாமல் இன்னம் இருக்கக்
கூடிய பொருட்கள் யாவும் தங்களுக்கு உற்பவகாரணமா
கிய அவரிடத்தில் உத்தமமான மேரையாய் அடங்கியிருக்
கின்றன. அப்படியே எண்ணிக்கையிலடங்காத உலகங்
களும் கணக்கில்லாத விலாச சபை சம்மனசுகளும் கணக்
கில் அடங்காத சாதி சனங்களும் இராச்சியங்களும் இரா
சாங்கங்களும் பட்டணங்களும் அரண்மனைகளும் நந்த
வனங்களும் அளவற்ற விகாரவகைப்பட்ட சீவசெந்துக்
களும் பூண்டுகளும் பஞ்சலோகங்களும் விலையேறப்பெற்ற

இரத்தினங்களும் பரிமளங்களும் சுவைகளும் இன்னம் பெரிதும் விலைபெற்றதும் இன்பமுள்ளதுமான என்னென்ன காரியங்கள் ஒருவர் கருதக்கூடுமோ அவையெல்லாம் அவரிடத்திலே உச்சிதமான மேரையாயிருக்கின்றது. ஆகையால் சர்வேசுரனை அடைந்தவன் மேற்சொன்ன காரியங்கள் யாவையும் ஒருமிக்க அடைந்து அநுபவிப்பான். ஆனால் சர்வ நன்மைக்கு முன்பாக மேற்சொன்ன காரியங்களெல்லாம் ஒன்றுமில்லாததுபோலிருக்கிறதினாலே, சர்வேசுரனை அடைந்து சுகிக்கிறவன் அவரையின்றி இந்தக் காரியங்களையெல்லாம் அநுபவிக்கிறவனைவிட நிகரில்லாதவிதமாய் அதிக இன்பத்தை அநுபவிக்கிறானென்று சொல்லவேணும்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இந்தத் தியானம் உனக்கு ஒரு பிரகாசக்கதிர்போலில்லையோ? மோக்ஷத்தில் சதாகாலமும் சர்வேசுரனை அடையும் பாக்கியம் உனக்குத் திண்ணமாகும்படி அவருக்காக இங்கே சகலத்தையுந் துறந்து விட்டுவிட உனக்கு வந்த நினைவு எவ்வளவோ அதிஷ்டமான நினைவென்று நீ இதுமட்டும் எண்ணியிருந்ததைவிட இப்போது அதிக மேலாய் எண்ணுகிறதில்லையோ? நாமே உனக்கு வாக்குக்கெட்டாத சம்பாவனையாயிருப்போமென்று ஆண்டவர் கொடுத்த வாக்குத்தத்தத்தில் அடங்கிய அர்த்தத்தை இதுமட்டும் நீ உணர்ந்ததைவிட இப்போது அதிகமாய் உணருகிறதில்லையோ? வனவாசிகளான: அர்ச். சின்னப்பர், அந்தோனியார் முதலியவர்கள் என் சர்வேசுரா, என் சர்வமே, என்று சொல்லும்போது அநுபவித்த இன்பத்தை நீயும் இந்தத் தியானத்திலே அநுபவிக்கிறதில்லையோ?

மனப்பற்றுதல்.— சர்வேசுரனுக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்து சர்வேசுரனல்லாத யாவையும் அவரிடத்தில் உன்னைக்கூட்டிக்கொண்டு போகாத சகலத்தையும் புறக்கணித்துத் தள்ளிவிடு.

பிரதிக்கினை.—எல்லாக் காரியங்களிலுஞ் சர்வேசுரனை மாத்திரம் உத்தேசித்து அவரைமாத்திரம் தேடு.



## 2-ம் பிரிவு

### சர்வேசுரன் நமது புத்திக்கெட்டாத சுபாவமுள்ளவராய் இருக்கிறார்.

தியானம்.—மனுஷன் படைக்கப்பட்டவனாயிருக்கக்கொள்ள எவ்விதத்திலும் அவன் அவசியமாய் அளவும் மட்டுமுள்ளவனாயிருக்கிறான். சர்வேசுரனோ அளவற்ற பொருள். அளவுள்ளது அளவற்றதைக் கண்டுபிடிக்க அறியாது. ஆகையால் சர்வேசுரன் நமது புத்திக்கும் படைக்கப்பட்ட எவ்வித புத்திக்குஞ் சம்மனசுக்களுடைய புத்திக்குந்தானே எட்டாதவராயிருக்கிறார். அப்படியிருக்கச் சகல சாஸ்திரிகளுக்கும் அர்ச்சியசிஷ்டவர்களுக்கும் சர்வேசுரனை முகமுகமாய்த் தரிசிக்கிற சம்மனசுக்களுக்கும் உரிய புத்தி ஞானமெல்லாம் என்னிடத்தில் ஒருமிக்கச் சேர்ந்தாலும் அப்போஸ்தலர் சொல்லுகிறதுபோல சர்வேசுரனை அவரிருக்கிறபடி நான் அறியவுங் கண்டுபிடிக்கவுங் கூடாதவனாய்த்தான் இருப்பேன். தாவீது இராசா சொன்னதுபோல அவர் கரையும் ஆழமுங்காணாத சமுத்திரத்துக்கு ஒப்பாயிருக்கிறார். முத்திப்பேறு பெற்றவர்கள் பேரின்பக் காட்சிப் பரவசத்தில் அமிழ்ந்தி, சர்வேசுரனை நித்திய காலமும் தரிசித்துக்கொண்டிருப்பார்கள். நித்தியகாலமும் அவருடைய அளவில்லாத சுபாவத்திலே எப்போதும் நவமான அழகு சௌந்தரியத்தைக் காண்பார்கள். ஏனென்றால் அளவற்ற வஸ்துவை அளவுள்ள வஸ்துவைக்கொண்டு அளந்து அறிய முடியாது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.— நாம் உலகத்திலே உயிரோடிருக்குந்தனையுஞ் சர்வேசுரனை மென்மேலும் அறியும்படி பிரயாசப்படக்கடவோம். அவரை எவ்வளவுக்கு அதிகமாய் அறிவோமோ அவ்வளவுக்கு அதிகமாய் அவரைச் சிநேகிப்போம். பூமியிலே எவ்வளவுக்கு அதிகமாய் அவரைச் சிநேகிப்போமோ அவ்வளவுக்கு அதிகமாய்ப் பரலோக மகிமையில் உயருவோம். ஆகையால் பரலோகத்திலே நாம் நித்தியமாய் அநுபவிக்கப்போகிற பாக்கியமும் அதிக பெரிதாகும்.

**மனப்பற்றுதல்.**—என் சர்வேசுரா, உம்மை நான் அறிந்து என்னையும் அறியக்கடவேனென்று அர்ச். அகுஸ்தீனார் சொன்ன அதிசயத்துக்குரிய செபத்தை நானும் திரும்பத் திரும்பச் சொல்லுவேன்.

**பிரதிக்கினை.**— சர்வேசுரனுடைய இலட்சணங்களையும் அளவற்ற உத்தமதனத்தையும் அடிக்கடி தியானித்து வருவேன்.

## 3-ம் பிரிவு

### தேவ சுபாவம் நித்தியமானதும் மாறாததுமாய் இருக்கிறது

**தியானம்.**—சர்வேசுரன் நித்தியமாயிருக்கிறவரென்று நாம் நினைத்துக்கொள்ளாதேபோனால் அவரைக் கிரகித்துக்கொள்ள நம்மால் ஆகாது. ஏனென்றால் சர்வேசுரன் தம்மையே உண்டாக்கிக்கொள்ளவும், வேறொரு வஸ்துவால் உண்டாக்கப்படவுங் கூடாது. ஆனால் சர்வேசுரனுக்குரிய இந்த நித்தியம் எப்பேர்ப்பட்டது? அது அளவற்றது. அதைக் கிரகிக்க நமக்குச் சக்தியில்லை. இதைக் குறித்து அர்ச். அகுஸ்தீனார் சொல்லும் வாக்கியந்தான் ஒருவேளை இந்த விஷயத்தைத் தெளிவிக்கக்கூடுமாயிருக்கும். அதாவது: தெய்வப்பொருளே நித்தியமென்கிறார். அவர் கண்டிப்பு, சேர்க்கை முதலியவையின்றி அரூபியாய் ஏக பொருளாயிருக்கிறார். அவருக்கு இறந்தகாலமும் எதிர்காலமுமில்லை. ஆகையால் எப்போதும் ஒரே நிகழ்காலத்தைக்கொண்டிருக்கிறதென்பது சர்வேசுரனுக்கு அல்லது நித்தியருக்குரிய இலட்சணமாம். ஏதெனில்: அவர் மனதிலும், கிரியையிலும் முன் பின் என்பதின்றி மாறாப் பொருளாயிருக்கிறார். இப்படியிருக்க, சர்வேசுரன் துக்கித்தார், மனமிரங்கினாரென்று வேத புஸ்தகத்தில் சொல்லப்பட்ட வாக்கியங்கள் நமது அற்பப் புத்திக்கு இசைவாக வரையப்பட்டனவேயொழிய மற்றப்படியல்ல.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—சர்வேசுரன் நித்தியரென்றும் மாறாதவரென்றும் தியானித்



தபின் நான் அறியவேண்டிய சத்தியமேதென்றால்: சர்வேசுரன் என்னை நித்திய காலமாய்ச் சிநேகித்தார். நான் இன்னகாலத்தில் பிறக்கவேணுமென்றும், இன்னகாலத்தில் மரித்து நித்தியத்தில் பிரவேசிக்கவேணுமென்றும், எனக்குப் பிரியமானால் பேரின்ப பாக்கியத்தை அடைந்து சதாகாலமும் வாழவேணுமென்றும் நித்தியமாய்த் தீர்மானித்திருக்கிறார். இதை நினைக்கும்போது சர்வேசுரன் பேரில் என் இருதயத்தில் எவ்வளவோ சிநேகமும் நன்றியறிதலும் உண்டாகி வளரவேண்டியது! தேவ ஊழியத்தில் ஒருபோதும் மாறாமல் எப்போதும் ஒரே சீராய் நடக்கக்கூடாவிட்டாலும் இதை நினைத்து அதிக நிலைமையோடாவது நடக்கவேண்டியதாயிற்றே! நான் ஏன் இப்படி நடக்கிறதில்லை?

**சம்பாஷணை.**—சர்வ வல்லமையுள்ளவர் என்னிடத்தில் மகத்தான காரியங்களைச் செய்தாரென்று ஆச்சரியப்பட்டு ஆனந்த சந்தோஷத்தால் பரவசமான சென்மப் பாவமில்லாத கன்னித்தாயாரோடு சம்பாஷணை செய்.

---

# 11-ம் தேதி

## தேவ இலட்சணங்களின் தொடர்ச்சி

### சர்வேசுரன் பகாப்பொருளாயும் கரைகாணாத பிரமாண்டப் பொருளாயும் இருக்கிறார்

**ஆயத்தச் சிந்தனை.**—சூரியனானது உலகமெங்குந் தன் சுடர்க்கதிரை வீசுகிறதாக ரூபிகரித்துக்கொள்.

**தியானச் செபம்.**—சர்வேசுரன் உன் புத்தியைத் துலக்கவும் உன் இருதயம் தேவ சிநேகத்தினால் பற்றியெரியச் செய்யவும் வரப்பிரசாதங் கேள்.

## முதல் பிரிவு

### சர்வேசுரன் பகாப்பொருளாயிருக்கிறார்—அதாவது கலப்பு, சேர்க்கையில்லாதிருக்கிறார்

தியானம்.—சர்வேசுரனுடைய அளவற்ற உத்தமதனத்துக்குக் கலப்பு சேர்க்கையென்பது சற்றும் இல்லாது. சிருஷ்டிப்புகளுக்குள் சம்மனசுகள் அசரீரிகளாயிருந்தாலும் அவர்களிடத்தில் முதலாய்த் தத்துவசாஸ்திரப்படி சம்மனசென்கிற பொருளும் ரூபம் அல்லது மாத்திரையும் ஆகிய இருபாகங்களுண்டு. இதுவும் சர்வேசுரனிடத்தில் இருத்தல் கூடாது. ஆகையால் சர்வேசுரன் எங்கும் நிறைந்து மட்டுக்குள் அடங்காதவராயிருந்தாலும் சகல உத்தமதன்மையையும் தம்மில் அடக்கிக்கொண்டிருந்தாலும், அளவற்ற விதத்தில் பகாப்பொருளாய் தூய அரூபியாயிருக்கிறார். அவருடைய இலட்சணங்களை நாம் வேறு வேறாய்ப் பிரித்துக்காட்டுதல் உள்ளதுதான். ஏனெனில்: இப்படிப் பிரிக்காவிட்டால் அவைகளை நாம் புத்தியால் கிரகிக்கவும், வாயால் மொழியவுங் கூடாது. ஆனால் சர்வேசுரனிடத்தில் வல்லமை, ஞானம், நீதி, தயையெல்லாம் சேர்ந்து ஒரே குணமாயிருக்கிறது. மேலும் நித்தியம், அளவற்றதன்மை, மாறாமை, பகுக்கப்படாமை நாலு இலட்சணங்களும் மேற்சொன்ன இலட்சணங்களோடு முழுதும் ஒரே பொருள்தான். அவர் சகல சிருஷ்டிகளை தம்மில் அடக்கிக்கொண்டிருந்தாலும், காரியத்தோடு காரணத்துக்கும், சிருஷ்டிப்போடு சிருஷ்டிகருக்கும் இயல்பாய் இருக்கவேண்டிய சம்பந்தத்தைத்தவிர அந்த வஸ்துக்களோடு அவருக்கு வேறே சம்பந்தமில்லை. விசுவாசமானது இதெல்லாம் நமக்குப் படிப்பித்தாலும், மட்டுள்ள நமது புத்திக்கு இதெல்லாம் அளவில்லாதவிதமாய் மேற்பட்டிருக்கிறதினாலே இவைகளை நாம் கண்டுபிடிக்கக்கூடாதவர்களாய் இருக்கிறோம்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—நமது பிதாவாகிய சர்வேசுரனுடைய அளவற்ற உத்தம



தனத்தை நாம் ஆசித்து அடைய வருந்த வேணுமென்று இயேசுநாதர் விரும்பி: உங்கள் பரம பிதா உத்தமராயிருக்கிறதுபோல நீங்களும் உத்தமராயிருக்கவென்று சொல்லியிருக்கிறார் (மத். 5). அப்படியிருக்கச் சர்வேசுரனுடைய ஆச்சரியமான பகுக்கப்படாமையென்னும் இலக்ஷணத்தை நாம் கூடியமட்டும் கண்டுபாவிக்கிற வகை எப்படி? அதெப்படியென்றால்: கபடின்றி நேர்மையென்கிற புண்ணியத்திலே நாம் உத்தமராகப் பிரயாசப்படக்கடவோம். நமது வார்த்தையிலும், கிரியையிலும், விசேஷமாய்ச் சிரேஷ்டர்களோடு ஊடாடுவதிலும், இருமனதையும் பாசாங்கையும் இன்னும் எவ்வித பொய்க் கோலத்தையும் வெறுத்துத் தள்ளுவதில் இந்தக் கபடற்ற நேர்மை அடங்கியிருக்கிறது. நாம் நினைக்கிறதுபோல அவர்களிடத்தில் பேசுகிறோமென்றுஞ், சர்வேசுரன் சமுகத்திலே நாம் எப்படியிருக்கிறோமோ அப்படியே நமது மனதை அவர்களுக்குத் திறந்து காண்பிக்கிறோமென்றும், அவர்கள் நம்பத்தக்கதாய் நடந்துகொள்ளவேணும். மேலும் யாதொரு காரியத்தைப் பெற்றுக்கொள்ளும்படி மனதிலொன்றும் வாயிலொன்றுமாய்ப் பேசப்படாது. கடைசியாய்த் திறந்த மனதோடும் நேர்மையோடும் மனச்சுயாதீனமாய் எது காரியத்திலும் நடந்துகொள்ளவேண்டியது. நாம் இப்படி நடந்து வருகிறோமோ?

மனப்பற்றுதல்.—இதோ மெய்யான இஸ்ராயேலித்தான் இவனிடத்தில் யாதொரு சூதும் வாதும் இல்லையென்று நத்தனயேலைக் குறித்து இயேசுநாதர் சொன்ன புகழ்ச்சிக்கு நாமும் பாத்திரவான்களாயிருக்க ஆசைப்படுவோமாக.

பிரதிக்கினை.—நான், என் சிரேஷ்டர்கள் முன் எப்போதும் பளிங்குப் பாத்திரத்தில் வார்த்த தெளிந்த தண்ணீர்போல இருப்பேனென்று சொல்லிக்கொண்டு வந்த அர்ச். பெர்க்மான்சு அருளப்பரைக் கண்டுபாவிக்கக்கடவாய்.

## 2-ம் பிரிவு

### சர்வேசுரன் கரைகாணாத பிரமாண்டப்பொருளாய் எங்தும் வியாபித்திருக்கிறார்

தியானம்.—சர்வேசுரன் சுபாவத்திலே பகாப்பொருளாயிருந்தாலும், இடம் விசாலம் என்கிறமட்டில் அவர் கரைகாணாத பிரமாண்டப்பொருளாயிருக்கிறார். இதைப் பற்றி: ஆண்டவரே, நீர் வானத்திலும் வானங்களுக்கு வானங்களிலும் அடங்கினவரல்லவென்று வேதாகமம் கூறுகின்றது. ஆகையால் சர்வேசுரன் நமக்குள் எங்கும் ஐக்கியப் பிரசன்னராயிருக்கிறார். நாம் செபம்பண்ணும்போதும், நமக்குச் சோதனை வரும்போதும், நாம் கஸ்திப்படும்போதும், நாம் யாதொரு நல்ல காரியஞ் செய்யும்போதும் அவர் நமது அண்டையிலிருக்கிறார். அவருடைய தயாளம் நம்மைக் காப்பாற்றிக்கொண்டுவருகிறது. அவருடைய ஞானமானது நமக்கு அறிவைக் கொடுக்கிறது. அவருடைய வல்லமையானது நமக்கு அந்தந்த வேலை செய்யப் பெலனைத் தருகிறது. ஆகையால் நம்மைச் சிரேஷ்டர்கள் எங்கே அனுப்பினாலும் பரவாயில்லை. நாம் எந்தெந்த இடத்திற்குப் போனாலுஞ் சர்வேசுரனை ஒரு கண்டசீராய்ச் சுகிக்கலாம். அப்போஸ்தலர் சொன்னபடியே நாம் அவரிடத்திலே சீவிக்கிறோம்; அவரிடத்தில் அசைகிறோம்; அவரிடத்திலே இருக்கிறோம்; இன்னம் ஒரு உவமையால் சொல்லவேணுமானால் மச்சமானது எங்கும் தண்ணீரால் சூழப்பட்டுத் தண்ணீர்க்குள்ளே சீவித்து ஓடியாடித் திரிகிறதைப் பார்க்க நாம் அதிகமாய்ச் சர்வேசுரனுக்குள்ளிருக்கிறோமென்று சொல்லவேணும்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இப்போது சொன்ன சத்தியங்களெல்லாம் எப்போதும் நமது புத்தியில் பதிந்திருக்கப் பிரயாசப்பட்டால் வெகு நன்மையடையலாம். இதில் முந்தின நன்மையேதென்றால்: நாம் எவ்விடத்திலிருந்தாலும் நன்றாய் நடப்போம்; நான்மாத்திரம் இங்கே தனித்திருக்கிறேன் என்னைப் பார்க்கிறவரும் நான் சொல்வதைக் கேட்கிறவரும் இங்கே ஒருவரும் இல்லை



யென்கிற நினைவு நமக்கு வரவேமாட்டாது. இரண்டாவது: தேவ ஊழியத்தில் நாம் படும் பிரயாசத்துக்கும் வருத்தத்துக்கும் ஈடாக, புறத்தியாராவது சிரேஷ்டராவது நம்மைக் கனமாய் எண்ணிப் புகழவேணுமென்று நினைக்கமாட்டோம். ஏனென்றால்: சர்வேசுரனே நமக்கு சகலத்திலும் சகலமுமாயிருப்பார். 3-வது, நல்ல கருத்தோடே நிலைமையாய் அந்தந்தக் காரியத்தை நடத்தவும், மனவல்லயச் செபத்தைக்கொண்டு சர்வேசுரனோடு சம்பாஷணை செய்யவும், நமக்கு வருஞ் சோதனைகளிலே அவரைப் பார்த்துப் பிரார்த்திக்கவும் நமக்கு வெகு எளிதாயிருக்கும். நாலாவது: நமக்கு வருந் துன்ப துரிதங்களிலும் நாம் படும் வருத்தங்களிலும் நம்மை எல்லாருங் கைவிட்டாலும் நாம் துணிவுள்ளவர்களுமாய், நிலைமையுள்ளவர்களுமாய் இருப்போம். எல்லாத்தையும் பார்த்துவருகிறவருமாய் நமக்குச் சம்பாவனை கொடுக்கிறவருமாயிருக்கிற சர்வேசுரன் நமக்கு எல்லாத்திலும் உதவியாயிருப்பார். கடைசியாய் நாம் உள்ளரங்கமாய்ச் சீவித்து, சர்வேசுரனுக்குப் பிரிய தாசரும் பரிசுத்த சந்நியாசிகளுமாயிருப்போம்.

சம்பாஷணை.—பரிசுத்த கன்னியாஸ்திரீயோடு சம்பாஷணை செய். அவள் சென்மப் பாவமில்லாமல் உற்பவித்த திருநாளுக்கு அடுத்த இந்த நாட்களிலே, தேவ இலட்சணத்தைக் குறித்தும் விசேஷமாய்ச் சர்வேசுரனுடைய ஆச்சரியமான பகுக்கப்படாமையென்கிற இலக்ஷணத்தையும், நமது புத்திக்கெட்டாத அவருடைய சர்வவியாபகத்தையுங் குறித்துத் தியானித்ததினாலே, நாம் அடையவேண்டிய ஞானப் பலன்களை அவள் தமது பொரிசினால் நமக்குப் பெற்றுத் தரும்படி மன்றாடுவோமாக.

# 12-ம் தேதி

## தேவ இலட்சணங்களின் தொடர்ச்சி

### சர்வேசுரனுடைய சர்வ வல்லமை, பரிசுத்ததனம், பாக்கியம் இவைகளின்பேரில்

ஆயத்தச் சிந்தனை.—சர்வேசுரனால் சகலமுங் கூடுமென்று இயேசுநாதர் சொல்வதைக் கேட்கிறதாக ரூபிகரித்துக்கொள் (லூக். 18).

தியானச் செபம்.—சர்வேசுரனுடைய சர்வ வல்லமையுள்ள கரத்தின்கீழ் தாழ்ச்சியில் வளர வரப்பிரசாதங் கேள்.

## முதல் பிரிவு

### சர்வேசுரனுடைய சர்வ வல்லமையின்பேரில்

தியானம்.—சர்வேசுரன் உலகத்தைச் சிருஷ்டித்ததை நினைக்கும்போது அவருடைய சர்வ வல்லமையை நினையாமலிருக்கிறது கூடாதகாரியமாமே. ஏனெனில்: ஒன்றுமில்லாமையினின்று ஒரு பொருளை உண்டாக்குவதற்கு அளவற்ற வல்லமை வேண்டியதாயிருக்கிறதென்று சகலரும் ஒத்துக்கொள்ளுகிறார்கள். இப்பேர்க்கொத்த வல்லமையில்லாமல் மணலில் ஒரு மணி முதலாய்ப் படைக்க முடியாது. ஆகையால் சர்வேசுரன் உண்டென்று விசுவசிக்கிறவன் அவர் சர்வ வல்லபரென்றும் ஒருமிக்க விசுவசிக்கிறான். அப்படியே பரலோகத்தையும் பூலோகத்தையும் படைத்த சர்வத்துக்கும் வல்ல பிதாவாகிய சர்வேசுரனை அதியோக்கியப் பத்தியாக விசுவசிக்கிறேனென்று விசுவாச மந்திரத்தின் துவக்கத்தில் சொல்லியிருக்கிறது. இதினாலே தெய்வத்துவம் அளவற்றதாயிருக்கிறதுபோல, அவருடைய வல்லமையும் அளவற்றதென்கிறது திருஷ்டாந்தமான காரியமாம். அவர் ஒரே வார்த்தையினாலே, அல்லது ஆகட்டுமென்கிற சித்தத்தினாலேமாத்திரம் ஒன்று



மில்லாமையினின்று ஆச்சரியமான இந்த அகண்டலோகத்தை உண்டாக்கினார். அவர் சொல்லவே சகலமும் உண்டானது. அவர் கட்டளையிடவே எல்லாம் படைக்கப்பட்டதென்று தேவசங்கீதத்தில் சொல்லியிருக்கிறது (சங். 98). அவர் சித்தத்தினால்மாத்திரம் இந்த உலகத்தையெல்லாம் ஒன்றுமில்லாமல்போகச் செய்யலாம். நினைத்த க்ஷணமே இப்படிப்பட்ட அனந்தமாயிரம் உலகத்தையும் சிருஷ்டிக்கலாம்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—கொஞ்ச வருஷத்துக்குமுன்னே நான் ஒன்றுமில்லாதிருந்தேன். சர்வேசுரனுடைய வல்லமையும் தயவும் கூடி ஒன்றுமில்லாத என்னை ஒரு பொருளாய் உண்டுபண்ணினது. உன்னைப் படைத்து உருவாக்கினதும் அவரேயென்று வேதாகமத்தில் எழுதியிருக்கின்றது. ஆகையால் நான் அவருக்கே முழுதுந் சொந்தமாயிருக்கிறேன். அவருடைய சித்தத்துக்கு ஒத்தபடி என் சரீரத்திலுள்ள பஞ்சேந்திரியங்களையும் என் ஆத்துமத்தின் தத்துவங்களையும் நான் ஏர்படுத்தவேண்டியது. அவர் சித்தம் ஏதென்று அவர் கொடுத்த கற்பனைகளினாலும் சபையின் ஒழுங்குகளினாலும் சிரேஷ்டர்களாலும் எனக்கு வெளியாகிறது. அவைகளை நான் சுமுத்திரையாய் நிறைவேற்றினால் பரலோகத்திலே எனக்கு நித்திய சம்பாவனை கிடைக்குமென்பதற்குச் சந்தேகமில்லை. சாகுந்தனையும் பிரமாணிக்கனாயிரு. நித்திய சீவியத்தின் முடியை உனக்குக் கொடுப்போமென்று ஆண்டவர் திருவுளம்பற்றியிருக்கிறார் (காட்சி, 2).

மனப்பற்றுதல்.—இதெல்லாங்கண்டு அதிசயித்து எனது ஆதி துவக்கத்தின் மேன்மையையும், எனக்கு நியமிக்கப்பட்டிருக்கிற பெருமையையும் நினைத்துச் சந்தோஷப்பட்டு நன்றியறிந்திருப்பேனாக.

பிரதிக்கினை.—எல்லாத்துக்குமுன்னே சகல காரியங்களிலும் சர்வேசுரனுடைய சித்தமும் பிரியமும் ஏதென்று அறியவும் அதின்படி நடக்கவும் கவனிக்கக்கடவேன்.

## 2-ம் பிரிவு

### சர்வேசுரனுடைய பரிசுத்ததனத்தின்பேரில்

தியானம்.—பரிசுத்ததனம் அதாவது நன்மையைச் சிநேகிக்கிற குணமானது, சர்வேசுரனுடைய அளவில்லாத சுபாவத்தோடே ஒன்றித்திருக்கிறதினாலே அதுவும் அவசியமாய் அளவில்லாததாயிருக்கிறது. சர்வேசுரனுடைய உன்னத மகத்துவ சிம்மாசனத்துக்கு முன் கர்த்தருக்குக் கர்த்தராகிய சர்வேசுரன் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தரென்று இடைவிடாமல் தொனிக்கப்படும் சங்கீதத்துக்கு அர்த்தம் இதுவே (காட்சி. 4). இந்தத் தேவ இலக்ஷணத்தைப்பற்றித்தான் சர்வேசுரன் நாம் செய்யும் நன்மையாகிய புண்ணிய முயற்சிகளை அத்தியந்தனிசமாய்ச் சிநேகிக்கிறார். தின்மையாகிய பாவத்தையோ அவசியம் அத்தியந்த விதமாய்ப் பகைக்கிறார். ஆண்டவரே, நீர் நீதியைச் சிநேகித்து, அக்கிரமத்தைப் பகைக்கிறீரென்று தாவீது இராசா 44-ம் சங்கீதத்தில் பாடியிருக்கிறார். இன்னமும் இந்த இலக்ஷணத்தைப்பற்றியே சர்வேசுரன் உன்னத சத்திய சுரூபியாயிருக்கிறார். அவர் நமக்கு வெளிப்படுத்தினவைகளில் அற்பமும் தவறுதல் இல்லை; அவர் நமக்கு வார்த்தைப்பாடு கொடுத்தவைகளில் பிரமாணிக்கம் குறைகிறதுங் கிடையாது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நாம் அர்ச்சியசிஷ்டவராயிருக்கிறதினாலே நீங்களும் அர்ச்சியசிஷ்டவர்களாயிருங்களென்று வேதத்தில் சொல்லியிருக்கிறது. ஆகையால் நாம் அர்ச்சியசிஷ்டவர்களாகிறதற்குச் சர்வேசுரன் உத்தரவுமாத்திரங் கொடாமல் கட்டளையுமிட்டிருக்கிறார். இந்தக் கட்டளையை நாம் எவ்வளவோ சாக்கிரதையோடு நிறைவேற்றவேண்டியது. ஆனால் இதை எப்படி நிறைவேற்றக்கூடுமென்றால் முந்த முந்தப் பாவ அசுத்தமில்லாமல் நம்முடைய ஆத்துமத்தைக் காப்பாற்றி அதின்மேல் எப்போதும் விழிப்பாயிருந்து நமதுள்ளத்தில் வந்தடைகிற பெரிதும் சிறிதுமான மாசுகளை எந்நேரமும் ஓயாமல் கழுவித் துடைப்போமாக. ௨-வது, சர்வேசுர



னுக்குப் பிரியப்பட நமது ஆத்துமத்தைப் புண்ணியங்களினால் அலங்கரிக்கவும், உண்மையான புண்ணியமும் பரிசுத்தமுமான அந்தஸ்திலே உண்டாக்கப்பட்ட ஆதி மனுஷனிடத்திலிருந்த தெய்வச் சாயலை நம்மிடத்திலே பதியச் செய்யவும் வருந்தக்கடவோம்.

மனப்பற்றுதல்.—உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக. அதாவது: என்பிதாவே, உம்முடைய நாமம் என் ஆத்துமத்திலும், என்னிடத்திலுள்ள சகலத்திலும் என் சகல கிருத்தியங்களிலும் அர்ச்சிக்கப்படுவதாக.

பிரதிக்கினை.—நீதிமான் இன்னம் அதிக நீதிமானாகக் கடவானென்றும், பரிசுத்தனாயிருக்கிறவன் இன்னம் அதிக பரிசுத்தனாகக்கடவானென்றும் இஸ்பிரீத்துசாந்து திருவுளம்பற்றினபடி நடக்கக்கடவோம்.

## 3-ம் பிரிவு

### சர்வேசுரனுடைய பாக்கியத்தின்பேரில்

தியானம்.—சர்வேசுரன் அளவில்லாத வஸ்துவுமாய், அளவில்லாத பரிசுத்தருமாய், அளவில்லாத வல்லமை நீதி முதலான இலக்ஷணங்கள் உள்ளவருமாயிருக்கிறதினாலே அவசியமாய் அவர் அளவில்லாத பாக்கியமுள்ளவராயிருக்கிறார். இன்னுஞ் சரிவரச் சொல்லவேணுமானால்: அவர் தாமே தம்மிலே மேலான நன்மைச் சுரூபியாய்த், தம்மைத் தாமே அளவில்லாதபிரகாரமாய் அறிந்து சிநேகிக்கிறதினாலே அவரே தமக்கு மட்டற்ற பாக்கிய சம்பூரணமாயிருக்கிறார். கரையும் ஆழமுங் காணாத இந்தச் சுத்த சமுத்திரத்திலே, அர்ச்சியசிஷ்டவர்களும் சம்மனசுக்களும் ஒருபோதும் குறையாமல் எப்போதும் பூர்விகமும் எப்போதும் புதிதுமான பேரின்ப ஆனந்தத்தில் அமிழ்ந்திப் பாக்கியமாயிருப்பார்கள்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—அர்ச்சியசிஷ்டவர்களுஞ் சர்வேசுரனுந்தானே அனுபவிக்கும் பாக்கியத்துக்கு நாம் பங்காளிகளாயிருக்க அழைக்கப்

பட்டிருக்கிறதை நினைத்து அக்களிப்போமாக. இந்தப் பேரின்ப பாக்கியத்தை நமது புண்ணிய பலனுக்குத்தக்கதாய், அளவு மட்டின்றி நாம் பெருக்கிக்கொள்ளலாமென்கிறதினாலே அகமகிழக்கடவோம். இதைப்பற்றியல்லோ திவ்விய இரட்சகர் தமது சீஷர்களைப் பார்த்து: என் பிதாவின் வீட்டிலே அநேக வாசஸ்தலங்களுண்டு. பரலோகத்திலே உங்கள் பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கப் பிரயாசப்படுங்களென்றார்.

சம்பாஷணை.—பரிசுத்ததனத்தின் காரணகர்த்தாவும் பூரண சம்பன்னருமாகிய இயேசுநாதரோடு சம்பாஷணை செய்.

---

# 13-ம் தேதி

## தேவ இலட்சணங்களின் தொடர்ச்சி

### சர்வேசுரனுடைய ஞானம் சௌந்தரிய மதுரத்தின்பேரில்

ஆயத்தச் சிந்தனை.—அர்ச். சின்னப்பர் ஞானப் பிரமிப்போடு: ஓ! சர்வேசுரனுடைய ஞானத்திலும், அறிவிலும், ஆழ்ந்த பெருக்கமேயென்று சொல்லுகிறதைக் கேட்கிறதாக ரூபிகரித்துக்கொள் (உரோ. 11).

தியானச் சேபம்.—சர்வேசுரனை அறிகிறதிலேயுஞ் சிநேகிக்கிறதிலேயும் இடைவிடாமல் விருத்திமேல் விருத்தியடைய வரப்பிரசாதங்கேள்.

## முதல் பிரிவு

### சர்வேசுரனுடைய ஞானம் அல்லது அறிவின்பேரில்

தியானம்.—நமது புத்தியும், அதின் வழியாய் நாம் நாளுக்குநாள் கற்கிற கல்வியும் மட்டுள்ளதாயிருக்கிறதுமல்லாமல் பிசகு நிறைந்ததாகவும் இருக்கும். இதை நாமே நன்றாய் உணர்ந்து வருகிறோம். இப்போக்கொத்த யாதொன்றுஞ் சர்வேசுரனிடத்தில் இல்லை. அவர் அளவற்றவராய், நித்தியராய், பிரமாண்டராய், மாறாதவராயிருக்கக்



கொள்ள அவரிடத்திலே காலவட்டமும் சம்பாத்தியமும் ஒன்றுங் கிடையாது. ஆகையால் திட்டவட்டமாய்ப் பேசவேணுமானால் ஒரு காரியம் முந்தி நடந்ததென்றும், ஒரு காரியம் இனிமேல் நடக்கப்போகிறதென்றுஞ் சர்வேசுரன் மட்டில் சொல்லப்படாது. முக்காலத்தையும் ஒரே பார்வையாய்ப் பார்ப்பதே அவருடைய அறிவு. இந்தப் பார்வையைக்கொண்டு, மெய்யாகவே இருக்கிறதையும் இருக்கக்கூடியதையும் அறிந்திருக்கிறார். மனிதர் சொல்வதுபோல இருந்ததும் இருக்கப்போகிறதுமான சகலமும் அவருக்குத் தெரிகிறதுமல்லாமல், காரியங்கள் இன்னின்னவிதமாய் நிறைவேறும்பட்சத்தில், சம்பவிக்கக்கூடிய காரியங்களும் அவருக்கு வெளிச்சமாய்த் தெரிகிறது. ஆகையால் சர்வேசுரன் நமது நினைவுகளையும் மனச்சீரையும், நமது அந்தரங்கமான கருத்துகளையும், செபங்களையும், நமது இருதயத்தின் அடியினின்று எழும்பும் பத்திநிறைந்த பெருமூச்சுகளையும் அவர் அறிந்திருக்கிறார். அவர் கண்ணுக்கு மறைவானதொன்றுமில்லை. எல்லாம் வெட்டவெளியாயிருக்கிறது (எபி. 4).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நேர்மையான இருதயத்தோடு ஆண்டவருக்கு ஊழியஞ் செய்கிற சந்நியாசிக்கு இப்பேர்ப்பட்ட நினைவு எவ்வளவு ஆறுதலும் தைரியமும் வருவிக்கத்தக்கது. ஆண்டவரே, தேவரீர் சகலத்தையும் அறிந்திருக்கிறீர். நான் உம்மைச் சிநேகிக்கிறதையும் நீர் அறிந்திருக்கிறீரென்று அர்ச். இராயப்பர் சொன்னதுபோல அந்தச் சந்நியாசியும் சொல்லக்கூடும் (அரு. 21). இதற்கு விரோதமாய் யூத வேதபாரகரையும் பரிசேயரையுங்குறித்து இயேசுநாதர்சுவாமி சொன்னதுபோல: தேவ சமுகத்திலே பேராசையுள்ளவர்களாய்க் கள்ளஞானிகளாய் இருதய அசுத்தம் நிறைந்தவர்களாய் இருந்துகொண்டு, வெளிக்கு மாத்திரம் புண்ணிய வேஷம் போடவேணுமென்று சந்நியாசிகளுக்குள் யாராவது நினைத்தால், அவர்களுக்கு மேற்சொன்ன காரியங்களை நினைக்கும்போது எவ்வளவோ பயங்கரமுண்டாகும்! (மத். 23). இதைக்குறித்து நீ உன்னைத்தானே சோதித்துப்பார்.

**மனப்பற்றுதல்.**—சர்வேசுரனுடைய அறிவு நமது மனச்சுதந்தரத்தோடு இசைகிறதெப்படியென்று நாம் புத்தியினால் கண்டுபிடிக்கக் கூடாதிருந்தாலும் அதின்பேரில் விசுவாசமுயற்சி செய்யக்கடவோம்.

**பிரதிக்கினை.**—எப்போதும் ஒரே நேர்மையாய்ச் சர்வேசுரன் சமுகத்திலே நடக்கத்தக்கதாக மனுஷருடைய புகழ்ச்சியையும் இகழ்ச்சியையும் புறக்கணிக்கிறது.

## 2-ம் பிரிவு

### சர்வேசுரனுடைய சௌந்தரியத்தின்பேரில்

**தியானம்.**—எவ்வளவோ அலங்காரம் இந்த அகன்ற பிரபஞ்சத்தில் அடங்கியிருக்கிறது. நமது கண்களை ஏறெடுத்து வானத்தை நோக்கிப் பார்த்தால் சந்திரனும் எண்ணிக்கையில்லாத நட்சத்திரங்களும் குளிர்ந்த பிரகாசக் கதிர்விட்டுச் சொலிக்கின்றன. இவைகளைப் பார்த்துத் தியானிக்கிற ஆத்துமத்துக்கு இரவு வெகு சொற்பமாய்த் தோன்றும். மேலும் காலையிலும் மத்தியானத்திலும் சாயந்தரத்திலும் சூரியனிடத்தில் விளங்கும் விநோத அலங்காரங்களை யாரால் வருணிக்கக்கூடும்! நம்மைச் சுற்றிலும் பார்ப்போமானால் எத்தனையோ ஆறுகளும் நதிகளும் குளங்களும் குட்டைகளும் அவைகளைச்சுற்றிப் பசும்புல் நிலங்களும் வயல்களும் இருக்கக் காண்கிறோம். அன்றியும் மரங்கள் செடிகள் புஷ்பங்கள் கனிகள் நிறைந்த பல மலைகளும், கணவாய்களும், தோப்புகளும், சோலைகளும் நமது கண்களைப் பறித்துக்கொண்டு போகிறவிதமாய் இலங்குகின்றன. இன்னும் பூமியில் நடமாடித்திரியும் எத்தனையோ வகைவகையான மிருகங்களையும் ஆகாயத்தில் பாடிப் பறந்து திரியும் பட்சிகளையுங் காண்கிறோம். அவைகளுடைய அழகு அலங்கார விநோதங்களை என்னென்று சொல்வோம். இதிப்படியானால் நமது ஆத்துமங்களும் சம்மனசுக்களும் அளவின்றி அதிக வடிவு சோபனமாயிருக்க அவர்களைப் பார்க்கிறது என்னமாயிருக்கும்! ஆகிலும் இந்த அழகு சௌந்தரியமெல்லாத்தையும் ஒன்றாய்க்கூட்டித் திரட்டிப் பார்த்தாலும், சர்வேசுரனுடைய அளவற்ற அழகு சோபனத்துக்குமுன் இவைகளெல்லாம் மங்கின பார்வைக் கண்ணாடிக்கு ஒப்பந்தமாயிருக்கும். ஒரு க்ஷணப்பொழுது அவரைப் பார்க்கும் பாக்கியம் நமக்குக் கிடைக்குமானால் இந்த உலகத்தில் யாதொன்றும் நமக்கு அலங்காரமுள்ளதாய்த் தோன்றமாட்டாது. நாமும் சர்வேசுரனையன்றி வேறெதுவையும் சிநேகிக்க இயலாதவர்களாயிருப்போம்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—சிலவேளையில் யாதொரு அழகான காரியத்தைச் சடுதியில் கண்டு, உன் மனது கலங்கிப் பொல்லாத சோதனையுண்டானால் உடனே கண்களை அப்பால் திருப்பி, அளவில்லாத அழகு சௌந்தரியமுள்ள ஆண்டவரை ஏறெடுத்து நோக்கி: சுவாமி, உமது திரு முகத்தைக் காண்பியும் நான் பொல்லாப்பில்லாமல் இரட்சிக்கப்படுவேனென்று தாவீது இராஜாவோடு சொல். சோதனை விடாமல் மூர்க்கமாயிருந்தால் திரும்பவும் அவரைப்போல: சர்வேசுரா, எனக்கு உதவியாக நோக்கியருளும்; கர்த்தாவே, எனக்கு ஒத்தாசை செய்யத் தீவிரியுமென்று சொல்லக்கடவாய் (சங். 69). நீ எப்போதும் இப்படிச் செய்துவந்தால் எத்தனையோ பாவத்துக்கும் மனச் சஞ்சலத்துக்குந் தப்பித்திருப்பாய்!

**மனப்பற்றுதல்.**—எப்போதும் பூர்வீகமும் எப்போதும் புதிதுமான நித்திய அழகு சௌந்தரியமே, உம்மை நான் சிநேகிக்க இத்தனை காலஞ் சென்றதோவென்று அர்ச். அகுஸ்தீனார் சொன்னதுபோல, நீயும் இந்த வார்த்தைகளை ஞானச் சுவையோடு சொல்லிக்கொண்டு வா.

**பிரதிக்கினை.**—பிரபஞ்ச அலங்காரத்தைப் பார்க்கும்போது சர்வேசுரனை நோக்கி என்னாத்துமம் தாவும்படி முயற்சிசெய்வேன்.

## 3-ம் பிரிவு

**சர்வேசுரனுடைய மதுர இலட்சணத்தின்பேரில்**

தியானம்.—சாந்தமென்னும் மதுரகுணமானது மனுஷனுக்கு மிகவும் அழகிய குணங்களுக்குள்ளே ஒன்றாம். ஆகையால் சர்வ நன்மைக்கும் ஊற்றும் மூலமுமாகிய சர்வேசுரனிடத்தில் இந்தக் குணமிருப்பது அவசியம். ஆனால் சர்வேசுரனிடத்திலுள்ளதெல்லாம் அளவில்லாததாய் இருக்கிறதுபோல இந்தச் சாந்தகுணமும் அவரிடத்தில் அளவற்ற உத்தமமுள்ளதாயிருக்கிறது. ஆண்டவர் எவ்வளவு மதுரமுள்ளவரென்று சுகித்துப் பாருங்களென்பதாய்த் தாவீதென்பவர் பேரொலியிட்டுச் சொல்லுகிறார் (சங். 33). நமக்கு அவர் கொடுக்குங் கற்பனைகள் நமது சத்துவத்துக்குத் தக்கதாயிருக்கும்படி செய்து நாம் அவைகளை நிறைவேற்றத் தமது வரப்பிரசாத பலத்தை நமக்குத் தந்து உதவியாயிருக்கிறார். மகா உச்சிதமான சம்பாவனையின் இனிமையைக் காட்டி நமக்குத் தைரியம் வருவிக்கிறார். நாம் அவைகளுக்குள் யாதொன்றில் தவறி நடந்தால் இசையாஸ் தீர்க்கதரிசி சொல்லுவதுபோல பொறுத்தல் அளிக்க எப்போதும் தயாராயிருக்கிறார் (இசை. 55).

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.** சாந்தகுணம் உன்னிடத்தில் எவ்வளவு விளங்குகிறதென்று பார். அர்ச்சியசிஷ்டவர்கள் தங்களைக் கண்டிப்பாய் ஒறுத்துப் பிறர்மட்டில் சாந்தத் தயை தாட்சணியம் நிறைந்தவர்களாய் இருந்தார்களென்று அவர்கள் சரித்திரத்தில் அநேகாநேக முறை தென்படுகிறதே. உன்மட்டிலும் இப்படிச் சொல்லலாமோ? இதுவிஷயத்தில் உன்னிடத்தில குறைவானதேதென்று பார்த்துத் திருத்திக்கொள்.

சம்பாஷணை.—இன்றையத்தினம் கொண்டாடுகிற ஆச்சரியத்துக்குரிய கன்னியும் வேதசாட்சியுமான அர்ச். பிரகாசியம்மாளோடே சம்பாஷணை செய்வாயாக.



# 14-ம் தேதி

## தேவ இலட்சணங்களின் தொடர்ச்சி

**தேவ பாராமரிக்கை, நீதி, இரக்கம் இவைகளின்பேரில்**

ஆயத்தச் சிந்தனை.—சர்வேசுரன் என்னை நடப்பித்துக்கொண்டு வருகிறதினாலே எனக்குக் குறை ஒன்றும் வராதென்று தாவீது இராசா சொன்னதைக் கேட்கிறதாக ரூபிகரித்துக்கொள் (சங். 22).

தியானச் சேபம்.—இந்தத் தியானத்துக்குப் பலனாகச் சர்வேசுரனுடைய நீதியின்பேரில் பயமும் அவருடைய நன்மைத்தனத்தின்பேரில் அசையாத நம்பிக்கையும் ஒன்றுக்கொன்று பொருந்தின அளவோடு உனக்குத் தந்தருளவேணுமென்று மன்றாடு.

## முதல் பிரிவு

**தேவ பாராமரிக்கையின்பேரில்**

தியானம்.—பரலோகத்தையும் பூலோகத்தையும் படைத்த சர்வ வல்லப பிதாவாகிய சர்வேசுரனை அதியோக்கியப் பத்தியாக விசுவசிக்கிறேனென்று சொல்லும்போது, தேவ பாராமரிக்கையைத்தானே விசுவசிக்கிறேனென்று சொல்லலாம். ஏனென்றால்: சர்வேசுரன் மோக்ஷத்துக்காக நியமித்துத் தமது சாயலாக உண்டாக்கின மனிதனும், மற்ற வஸ்துக்களும் தங்கள் தங்களுக்கு உரிய கதியை அடையும்படி அவரவர்கள் சுபாவத்துக்கு ஏற்ற வழிவகைகளை அவர்களுக்குக் கொடுத்துக் கிரமமாய் நடத்தி வருகிறதே தேவ பாராமரிக்கையாயிருக்கக்கொள்ள, சர்வேசுரனை விசுவசிக்கிறவன் அவருடைய பாராமரிக்கையையும் விசுவசிக்கிறது அவசியமாமே. ஒரு தகப்பன் தன் பிள்ளைகளை விசாரித்து அவர்களுக்கு வேண்டிய சவரக்ஷணை செய்யாதேபோனால் அவன்மேல் குற்றஞ் சுமருமே. அப்படியிருக்கச் சர்வேசுரன் தமது சிருஷ்டிகளை விசாரியாமலிருப்பதெப்படி? இப்போது உலகத்தில் உண்டான நூற்றுக்

தொண்ணூறு கோடிக்கு மேற்பட்ட சனங்களையும், இவர்களில் தனித்தனியே ஒவ்வொருவரையும் அவர் பட்சமுள்ள தகப்பனைப்போல விசாரித்து, இவ்வுலகத்தில் ஒருவர் மாத்திரம் இருந்தால் எப்படியோ அப்படியே சகலரையும் காப்பாற்றிவருகிறார். இதினாலேதான் சர்வேசுரன் எல்லாரையும் ஒருகண்டேராய்ப் பராமரிக்கிறாரென்று ஞானியானவர் உரைத்தார். அவர் எங்கும் வியாபித்திருக்கிறதினாலே பொதுவாகச் சகலரிடத்திலும், தனித்தனியே ஒவ்வொருவரிடத்திலும் வெகு அன்னியோன்னியப் பிரசன்னமாயிருக்கிறதை நாம் நினைத்தால் இதைக் கண்டுபிடிக்கலாம். மேலும் வேதாகமத்தில் சர்வேசுரன் இசையாஸ்வாயால் இதைக் குறித்துத் தெளிவாய்ச் சொல்லியிருக்கிறதேதென்றால்: "உன்னை நமது கரங்களில் எழுதிக்கொண்டோம், பெற்றதாய் தன் பிள்ளையை மறந்தாலும் நாம் உன்னை மறக்கப்போகிறதில்லை." சர்வ சாதி சனங்களுடைய விசுவாசமும் இதற்கொத்தவண்ணமாயிருக்கிறது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—உலகத்தில் அந்தந்தக் காரியங்கள் நடந்துவருகிற மேரையையும் விசேஷமாய் உனக்கு இதுவரையில் சம்பவித்த பற்பல காரியங்களையும் அவைகள் சம்பவித்த விதத்தையும் நீ கவனமாய் யோசித்துப்பார்த்தால், ஆண்டவருடைய பராமரிக்கை ஒருப்பட ஆச்சரியத்துக்குரியதும் பட்சம் நிறைந்ததுமாயிருக்கிறதென்று அறிந்திருப்பாயே. தின்மையில் நின்று நன்மை வரும்படி அவர் செய்கிறதினாலே அவருடைய பராமரிக்கை ஆச்சரியமுள்ளதுதானே. அப்படியே பழைய வேதத்தில் சூசையென்பவரைக் காய்மகாரத்தினாலே அவருடைய சகோதரர்கள் விலைக்கு விற்றிருக்க, பஞ்சகாலம் வந்தபோது அந்தச் சூசையென்பவர் அவர்களைக் காப்பாற்றினார். மேலும் துஷ்டர்கள் திருச்சபையை நிர்மூலமாக்கவேணுமென்று செய்யும் சதியோசனையெல்லாம், திருச்சபைக்கு நன்மையாக மாறுகிறதை இந்த ஆயிரத்துத் தொள்ளாயிரம் வருஷமாய்ச் சகலரும் கண்டு வருகிறார்கள். இது ஒரு அதிசய தேவபராமரிப்



பன்றோ? உன் ஆத்தும சரீரத்துக்கு வந்த ஆபத்துகளிலெல்லாம் உன்னைக் காப்பாற்றிச் சந்நியாசத்தின் பாக்கியமான அந்தஸ்தில் உன்னைக்கொண்டுவந்து சேர்த்து இதிலும் உனக்கு நேரிட்ட கணக்கற்ற சோதனை விக்கின வருத்தங்களை நீ செயித்துக்கொள்ளச் செய்கிறது அவருடைய பட்சம் நிறைந்த பராமரிக்கைதானே.

மனப்பற்றுதல்.—இதெல்லாம் பார்த்து ஆச்சரியத்தாலும் நன்றியறிதலாலும் மனம்பூரித்து: ஆண்டவர் என்னை ஆளுகிறார். எனக்கு ஒரு குறையும் வராதென்று சங்கீத கர்த்தாவாகிய தாவீதரசனோடு சொல் (சங். 23). ஆம்; மெய்யாகவே சர்வேசுரன் என்னைக் காக்கிறார்; எனக்குக் குறை ஒன்றும் வராதென்று சகலமும் எனக்குச் சொல்லுகிறது. கடந்த காலம் வருங் காலத்துக்கு அத்தாட்சியாயிருக்கின்றது. ஆண்டவரே உம்மையே நம்பினேன். என் இடையூறுகளில் என் ஆத்துமத்துக்கு தேவரீர் உதவியாய் வந்தீர் (சங். 31).

பிரதிக்கினை.—தேவ பராமரிக்கையின்பேரில் மட்டில்லாத நம்பிக்கை வை.

## 2-ம் பிரிவு

### சர்வேசுரனுடைய நீதியின் பேரிலும் இரக்கத்தின் பேரிலும்

தியானம்.—இவ்விரு இலட்சணங்களும் சர்வேசுரனிடத்தில் உண்டென்பதற்கு எள்ளளவுஞ் சந்தேகமில்லை. இதில் முதலாவதாகிய நீதி அவருடைய பரிசுத்ததனத்தோடு சேர்ந்தது. அவர் சர்வ பரிசுத்ததனமாயிருக்கையால் தர்மமாகிய புண்ணியத்தைச் சிநேகித்து, அதர்மமாகிய பாவத்தைப் பகைத்துத் தமது நீதியைக்கொண்டு இதற்கும் அதற்கும் இம்மையிலாவது மறுமையிலாவது ஆக்கினை அல்லது சம்பாவனையளிப்பார். இதில் இரண்டாவதாகிய இரக்கம் அவருடைய நன்மைத்தனத்தோடு சேர்ந்தது. சகல சனங்களும் அவருடைய நன்மைத்தனத்தையறிந்து அவரை நல்ல தெய்வம், நல்ல சுவாமி

யென்று புகழ்ந்து கொண்டாடுகிறார்கள். அவர் தமது நன்மைத்தனத்தை நமக்கு இரு விதமாய்க் காட்டி வருகிறார். முதலாவது, பாவிகளாகிய நாம் மனந்திரும்பும் வரையில் பொறுமையோடு காத்திருக்கிறார். இரண்டாவது, மனந்திரும்பி வரும்போது இரக்கத்தோடு பொறுத்தலளிக்கிறார். இதினிமித்தந்தான் தாவீதிராசா: சர்வேசுரன் தண்டிக்கத் தாமதமும், மிஞ்சின கிருபையுமுள்ளவரென்று பாடியிருக்கிறார். சர்வேசுரன் அளவில்லாத வஸ்துவாயிருக்கிறதுபோல அவருடைய நீதியும் இரக்கமும் அளவில்லாததாயிருக்கின்றன. இதைப்பற்றி அவருடைய சிநேக ஐக்கியத்திலே மரிக்கிற நல்லவர்களுக்கு அவர் அளவில்லாத சம்பாவனை கொடுக்கிறவரென்றும், கடைசி பரியந்தம் மனந்திரும்பாமல் மரிக்கிறவர்களைத் தண்டிக்கிறவரென்றும் நாம் விசுவாசப் பிரகரணஞ் செய்துவருகிறோம். அவருடைய இரக்கமானது அவருடைய வேலைப்பாடுகளுக்கெல்லாம் மேற்பட்டதென்று 105-ம் சங்கீதத்தில் சொல்லியிருக்கிறது. ஆண்டவர் தமது வார்த்தைப்பாட்டை நிறைவேற்றத் தாமதஞ்செய்யமாட்டார்; அவர் பொறுமையுள்ளவர்; ஒருவனாகிலுங் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பித் தபசு செய்யும்படி அவர் ஆசைப்படுகிறாரென்று அர்ச். இராயப்பர் சொல்லியிருக்கிறார் (2 இராய. 3). நல்லகள்ளனும் நாம் வணங்கும் பேர்போன கணக்கில்லாத தபசிகளும் இதற்கு அத்தாட்சியாயிருக்கிறார்கள்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—சர்வேசுரனுடைய அளவில்லாத கிருபை தயாளத்துக்கு நீயும் ஓர் உயிருள்ள அத்தாட்சியல்லவோ? ஏனென்றால் ஒருவேளை யாதொரு கனமான பாவத்தைச்செய்து, தேவ நீதிக் கோபாக்கினைக்கு ஆளாய்ப்போன உனக்குச் சர்வேசுரன் மனத்தாராளமாய்ப் பொறுத்தல் அளித்தபின்னும் அவருக்கு நீ நன்றிகெட்டதனத்தைக் காண்பித்தாயல்லோ? இப்படியானால் அவர் உனக்குத் தின்மைக்குப் பதில் நன்மை செய்திருக்கிறார். அப்படியிருக்க உன் புறத்தியான் மட்டில் நீ இரக்கமில்லாமற் கல்நெஞ்சனாயிருக்கிறதெப்படி? உன் ஆசைப்படி பாவிகள் உடனே மனந்



திரும்பவில்லையென்று அவநம்பிக்கைப்படுவது சரியோ? இதற்கெல்லாம் பொறுத்தல் கேட்டு சர்வேசுரனுடைய மட்டற்ற பொறுமையை நன்றாய்க் கண்டுபாவிக்கப் பிரதிக்கினை செய்துகொள்வாயாக.

**சம்பாஷணை.**—நீ ஒன்றுமில்லாமையாயிருக்க உன்னையுண்டாக்கி மகா கவனத்தோடு உன்னைக் காப்பாற்றி மகா தயவோடு உனக்குப் பொறுத்தல் கொடுத்து உன்னைத் தமது வரங்களினால் நிரப்பி மோக்ஷத்தில் உனக்கு அளவில்லாத சம்பாவனை கொடுக்க நினைத்திருக்கிற உன் ஆண்டவரும் பிதாவுமாயிருக்கிற சர்வேசுரனோடு சம்பாஷணை செய்துகொள்.

---

# 15-ம் தேதி

## தேவ இலட்சணங்களின் தொடர்ச்சி

### சர்வேசுரனுடைய மகத்துவத்தின்பேரிலும், மாட்சிமையின்பேரிலும்

**ஆயத்தச் சிந்தனை.**—ஆண்டவர் எவ்வளவு மகத்துவமுள்ளவரென்று தாவீது இராசா கூவிச் சொல்லுகிறதாக ரூபிகரித்துக்கொள்.

**தியானச் சேபம்.**—சர்வேசுரனுடைய மகத்துவத்துக்கு யோக்கியமான நினைவுகளும் உணர்ச்சிகளும் உன்னிடத்திலிருக்கவேணுமென்று மன்றாடு.

## முதல் பிரிவு

### சர்வேசுரனுடைய வேலைப்பாடுகளில் அவருடைய மகத்துவமும், மாட்சிமையும் விளங்குகிறது

**தியானம்.**—மகத்துவத்துக்குச் சங்கை பொருந்தினதாகையால் சர்வேசுரனுக்கு நாம் செலுத்தவேண்டிய ஆராதனை வழிப்பாடுகளில் சங்கை முந்தினதாமே. சர்வேசுரனுடைய அளவற்ற மகத்துவத்தோடு மற்றத் தேவ இலக்ஷ

ணங்களெல்லாம் சேர்ந்திருக்கின்றன. ஆகையால் மகத்துவத்தை நினைத்தால் மற்றதெல்லாத்தையும் நினைத்ததுபோலாகும். இதைப்பற்றித்தான் வேத புஸ்தகத்தில் சர்வேசுரனைப்பற்றிப் பேசும்போது அவருடைய மகத்துவத்தை முக்கியமாய் எடுத்துக்காட்டியிருக்கிறது. அப்படியே சர்வேசுரன் மகத்துவமுள்ளவர், அவர் மகத்துவத்துக்கு அளவில்லையென்றும், அவர் சர்வத்துக்கும் மேலாய் உயர்ந்து எல்லையில் அடங்காதவராயிருக்கிறாரென்றும் பல இடங்களில் சொல்லியிருக்கின்றது. அவருடைய மட்டற்ற மகத்துவத்தை நாம் எவ்வளவாகிலும் கண்டுபிடிக்கவேணுமானால் அவருடைய வேலைப்பாடுகளையும் அதிசயத்துக்குரிய இந்த அகண்ட கிரக மண்டலத்தையும் நோக்கித் தியானிக்கக்கடவோம். நாம் வசிக்கிற பூமியானது கிரகமண்டலத்தில் அதிகச் சிறிதான சடங்களில் ஒன்று. ஆயினும் இது நமக்கு வெகு பாரியாய்த் தோன்றுகிறது. அப்படியே வெகு பாரியாயுமிருக்கிறது. இதின் சுற்றளவு மூவாயிரங் காதம். ஒருவன் தினந்தினம் ஒரு தடையுமில்லாமல் முக்காத வழி நடந்தாலும் இந்தப் பூமியைச் சுற்றிவர ஏறக்குறைய இரண்டரை வருஷம் பிடிக்கும். சூரியனுடைய சுற்றளவானது மூன்று இலட்சங் காதமாயிருக்கக்கொள்ள, ஒருவன் மேற்சொல்லியபடி நாளொன்றுக்கு முக்காதம் நடந்துவந்தால் இதைச் சுற்றிவர ஏறக்குறைய ஒரு இலட்சம் நாள் அல்லது இருநூற்று எழுபத்தினாலு வருஷஞ் செல்லும். இவ்வளவு பிரமாண்டமான பொருளை நாம் ரூபிகரிக்கும்போது எங்கே அது நமதுமேல் விழுந்து நசுக்குகிறதோவென்று நடுங்குகிறோமல்லவோ? ஆகிலும் அசையாத நட்சத்திரங்களுடைய பருமையைக் குறித்து வானசாஸ்திரிகள் சொல்லுகிறது என்னவென்றால்: இந்த நட்சத்திரங்கள் எண்ணத்தொலையாத தூரத்திலிருக்கிறதைப்பற்றி நமக்கு ஒரு அணுப்போல காணப்பட்டாலும் இவைகளுடைய பருமத்துக்குமுன் சூரியன் இருந்தும் இல்லாததுபோல் காணப்படுமென்கிறார்கள். இப்படியிருக்கச் சர்வேசுரனுக்கு முன்பாக இவைகள் எல்லாத்தையும் நெருக்கு



நேராய் வைத்தால் ஒரு பருவதத்துக்குமுன் ஒரு மணல் மணி எவ்வளவு சிறிதாயிருக்குமோ அதைவிட அதிக அற்பமாய்த் தோன்றும்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இங்கே சொல்லியவைகளை நாம் செபம் பண்ணும்போதும் தேவநற்கருணை சந்திக்கும்போதும் அத்திவ்விய போசனத்தை உட்கொள்ள நாம் ஆயத்தஞ் செய்யும்போதும் சர்வேசுரனுக்கு ஏற்காத சோதனை வரும்போதும் பாவத்துக்காக நமது உள்ளத்தில் மனஸ்தாபத்தை எழுப்பும்போதும் நினைத்துக்கொள்ளக்கடவோம். இந்தச் சமயங்களிலெல்லாம் நாம் இப்படிச் செய்வோமாகில் சர்வேசுரனுடைய மகத்துவ மாட்சிமையின் நினைவானது நமக்கு மகா உதவியாயிருக்கும். அதினால் அத்தியந்த தாழ்ச்சியுஞ் சங்கையும் நிறைந்த தேவ பயமும், எவ்வித தந்திரத்திலும் மாறாத பிரமாணிக்கமும், தேவ ஊழியத்தில் பற்றுதலும் நம்மிடத்தில் ஓங்கிவளரும்.

மனப்பற்றுதல்.—ஆண்டவரே, தேவரீர் எவ்வளவு மகத்துவமுள்ளவர்; நான் எவ்வளவு அற்பமான நீசன்; தேவரீர் முன்பாக நான் ஒன்றுமில்லாததுபோல் இருக்கிறேன் (சங். 38).

பிரதிக்கினை.—தேவ இலக்ஷணங்களின்பேரில் இதுவரையில் செய்த தியானங்களைச் சமயத்துக்குச் சமயம் திரும்பச் செய்கிறது.

## 2-ம் பிரிவு

### வானத்தில் தோன்றும் ஆச்சரியங்களிலே விசேஷமாய்ச் சர்வேசுரனுடைய மகத்துவமும் மகிமையும் விளங்குகிறது

தியானம்.—சர்வேசுரனுடைய அளவற்ற மகத்துவசொரூபத்தை நாம் இன்னமும் அதிக நன்றாய்க் கிரகிக்கவேணுமானால் சூரியனுக்கும் நமக்கும் உள்ள தூரத்தை விசாரித்துப் பார்க்கவேணும். அது ஏறக்குறைய நூற்றுப்பதினாலு இலட்சங் காததூரமிருக்கின்றது. அப்படியிருக்கச் சூரியனை நமது கிரகமாகிய பூமி வருஷாந்தரஞ்

சுற்றிவருகிறதைப் பார்த்தால் அறுநூற்றுப்பன்னிரண்டு இலட்சங் காதவழி சுற்றிவருகின்றது. இப்படிச் சூரியனைச் சுற்றிப் பூமி ஓடுகிற வட்ட விசாலத்தையும், அதற்கு மையத்தில் சூரியன் இருக்கிறதையும் நாம் ஞாபிகரித்தால் எவ்வளவோ பிரமாண்டமான அந்தர விசாலம் நமது புத்தியின் கண்முன் தோன்றும். இந்த விசால வெளியெல்லாம் சர்வேசுரன் நிறைந்திருக்கிறார். இன்னம் எல்லாத்திலும் அதிக தொலையிலிருக்கப்பட்ட கிரகங்களுடைய வட்ட விசாலத்தைத் தியானித்தால் என்ன சொல்லவேண்டியிருக்கும்! பூமிக்கும் சூரியனுக்குமுள்ள தூரத்தைவிட இவைகள் இருபதுமடங்கு அதிக தொலையிலிருப்பதால் இவைகள் போகிற வட்டம் ஏறக்குறைய இருபத்தொரு கோடி காதமாகிறதே. ஆனால் ஒரே நிலையிலிருந்து துலங்கும் நட்சத்திரங்கள் பதிக்கப்பட்ட அகண்ட மண்டலத்துக்குமுன் இதெல்லாம் எந்த மூலை? இவைகள் நம்மைவிட இலட்சமடங்கு சூரியனுக்கு அதிக தொலையாயிருக்கின்றன: அதாவது இலட்ச மடங்கு நூற்றிரண்டு இலட்ச காதம் வட்ட விசாலமாயிருக்கின்றன. இந்தப் பிரமாண்ட மண்டலமெல்லாம் சர்வேசுரன் நிறைந்திருக்கிறார். இவைகளெல்லாத்தையும்விட மனுஷன்தான் ஒன்றுமில்லையென்று கண்டு ஒரு புழுவைப்போல் சுருங்கித் தன்னைச் சகலருடைய காலின்கீழ்த் தாழ்த்திக்கொண்டிருக்கச் செய்கிற விஷயம் ஒன்றுண்டு. அதாவது சோதிட நூலில் தேர்ந்தவர்கள் சொல்லுகிறதுபோல நட்சத்திரங்களுடைய ஒளி ஒரு விநாடியில் அறுபதினாயிரங் காதம் பாய்ந்து வந்தபோதிலும் கணக்கில்லாத நட்சத்திரங்கள் வெகு வெகு தூரத்திலிருக்கிறபடியால் அவைகளுடைய ஒளி இன்னம் இந்தப் பூமிவரையில் வந்து தொடவில்லை. அப்படியிருந்தும் இவைகளில் ஒவ்வொன்றும் சூரியனைப்போலவே தங்கள் தங்கள் கிரக மண்டலங்களுக்கும் நாம் பார்க்கிற உலகத்தைவிட அதிக விஸ்தாரமான உலக சக்கரத்துக்கும் மையமாயிருக்கின்றது. ஆனால் நாம் கருதக்கூடிய எள் எண்ணிக்கை மெல் எண்ணிக்கையெல்லாம் தட்டுக்கெட்டுப் போகப்பண்ணுகிற அத்தனை கோடாகோடி உலோக மண்டலங்களெல்லாம் சர்வேசுரனுக்குமுன் என்ன காணும்! அதிகாலையில் மின்னிச் சூரியக் கதிர்பட்டவுடனே கரைந்து போகிற ஒரு துளி பனிபோலன்றி வேறென்ன?



**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—இவ்வளவு மகத்துவமுள்ள தெய்வந்தானே மனுஷ சுபாவமெடுத்துப் பாலனாய்ப் பெத்லேமூரில் ஒரு மாட்டுக்கொட்டிலிலே பிறக்கச் சித்தமானார். இது எவ்வளவோ தாழ்மையும் அன்பும் நிறைந்த பரம இரகசியம்! இதை நாம் எண்ணவும் கருதவும் முடியாது. இந்தப் பெரிய வர்த்தமானத்தை நமக்கு நினைப்பூட்டுகிற திருநாளாகிய பத்தி உருக்கநிறைந்த சுவாமிபிறந்த திருநாள் இதோ அடுத்து வருகிறது. அதை நாம் யோக்கியமான விதமாய்க் கொண்டாடுவதற்கு நாளைத் துவக்கப்போகிற நவநாள் பலத்த சாதனமாயிருக்கக்கடவது.

**சம்பாஷணை.**—நமது ஆண்டவராகிய சர்வேசுரனோடு சம்பாஷணை செய்வோமாக. அவருடைய சர்வ வல்லமை மகிமைப்பிரதாப தயாளத்தின் ஆச்சரியங்களைக் கண்டு தாவீது இராசா தமது உள்ளத்தில் எழும்பின உணர்ச்சிகளை வாய்விட்டுச் சொன்னதுபோல நாமும் சொல்லுவோமாக. என் ஆண்டவரே சுவாமி, சர்வ லோகத்திலேயுந் தேவரீர் எவ்வளவு மகத்துவமுள்ளவராயிருக்கிறீர்! உம்மால் படைக்கப்பட்ட வான மண்டலங்களையும் அதில் நீர் பதித்துவைத்த சந்திர சூரிய நட்சத்திரங்களையும் நான் பார்க்கும்போது மனிதன்பேரில் தேவரீர் நினைவாயிருக்கிறது என்ன அற்புதமென்று பிரமித்துச் சொல்லவேண்டியதாயிருக்கிறது. ஆ! என் ஆத்துமமே, ஆண்டவரை வாழ்த்து. அவர் செய்த உபகாரங்களை ஒருபோதும் மறவாதே. ஆண்டவருடைய கற்பனைகளை நிறைவேற்றுகிற தூதர்களே, அவரை வாழ்த்தித் துதியுங்கள்; அவருடைய சித்தியால் படைக்கப்பட்ட வஸ்துக்களே அவருடைய இராச்சியமெல்லாம் அவரைத் துதித்துக்கொண்டாடுங்கள். ஆ! என் ஆத்துமமே, நீயும் ஆண்டவரைப் போற்றித் துதிப்பாயாக (சங். 8, 103).

———

# 16-ம் தேதி

## கர்த்தர்பிறந்த திருநாளுக்கு நவநாள் ஆயத்தம் முதல் நாள்

### இந்த நவநாளைப் பத்தியோடு செய்வதற்குள்ள முகாந்தரங்கள்

ஆயத்தச் சிந்தனை.—ஆண்டவருடைய வருகைக்கு வழியைச் செவ்வையாக்குங்களென்று இசையாஸ் தீர்க்கதரிசி சொல்வதைக் கேட்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

தியானச் செபம்.—இந்த நவநாளை நன்றாய்ச் செய்வதற்குள்ள முகாந்தரங்களைக் கனமாயெண்ண வரப்பிரசாதங் கேள்.

## முதல் பிரிவு

### முதல் முகாந்தரம்—இந்தத் திருநாளுக்கடுத்த விசேஷங்கள்

தியானம்.—திவ்விய கர்த்தர் பிறந்த திருநாளானது அவரைக் குறித்துத் திருச்சபையில் கொண்டாடப்படும் சகல திருநாட்களுக்கும் துவக்கமும் முடிவுமாயிருக்கிறது. ஏனென்றால் வருஷத்தில் கொண்டாடப்படுகிற பிரதான திருநாட்களுக்குள் இதுதான் கடைசியில் வருகிறது. மேலும் கர்த்தருடைய சீவியத்துக்கும், மரணத்துக்கும், உத்தானத்துக்கும் அவர் திருப்பிறப்பு முந்தி நடக்கவேண்டியிருப்பதினால் அவர் பிறந்த திருநாள் மற்றத் திருநாட்களுக்கெல்லாம் முந்தினது என்னத்தகும். இயேசுநாதரும் தேவமாதாவும் அர்ச். சூசையப்பரும் தங்கள் சீவியகாலமெல்லாம் இந்தத் திருநாளை வருஷத்திலுள்ள மற்றெல்லா நாட்களையும்விடச் சிறந்த நாளாகச் சந்தோஷமாய்க் கொண்டாடி வந்தார்களென்று நம்பத்தக்கதாயிருக்கிறது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இந்தப் பெரிய திருநாளை மகா சிறப்பு சந்தோஷத்தோடும் அத்தியந்த பத்தியோடும் கொண்டாடுவதற்கும் நாம் துவக்கியிருக்கிற இந்த நவநாளில் யாதொன்றையும் அசட்டைபண்ணாமல் எல்லாத்தையுஞ் சரிவரச் செய்துமுடிப்பதற்கும் மேற்



சொன்னவைகள் எவ்வளவோ பலத்த முகாந்தரங்கள். இந்த வருஷத்தில் வந்த மற்றத் திருநாட்களை நீ ஒருவேளை அசட்டை செய்து நன்றாய்க் கொண்டாடாதிருந்தால், இதோ உன் அசட்டைத்தனத்தைப் பரிகரித்து உன் பத்தி கருசுருப்பை முன்னிலும் இருமடங்காக்குவதற்குத் தக்க சமயம் வாய்த்திருக்கிறது. இந்தச் சமயத்தைத் தப்பவிட்டால் பின்னுக்கு நீ மனம் நொந்தாலும் பிரயோசனமென்ன?

மனப்பற்றுதல்.—இதுவரையில் நீ அசட்டையாய் நடந்தாயென்று ஒத்துக்கொண்டு அதின்பேரில் மனஸ்தாபப்பட்டு உன் குற்றங்களைப் பரிகரிக்கத் தேவ அனுக்கிரகத்தைக் கேள்.

பிரதிக்கினை.—தேவ பாலனுக்கு நீ பிரியப்படவும் அவருடைய வரப்பிரசாத வரங்களைப் பெற்றுக்கொள்ள உன் இருதயத்தை ஆயத்தப்படுத்தவும் இந்த ஒன்பதுநாளும் நீ செய்யவேண்டியது இன்னின்னதென்று விபரமாய் இப்பொழுதே தீர்மானித்துக்கொள்.

## 2-ம் பிரிவு

### இரண்டாம் முகாந்தரம்—இது காரியத்தில் திருச்சபை காண்பிக்கும் மாதிரிகை

தியானம்.—நமது தாயாராகிய திருச்சபையானது கர்த்தர் பிறந்த திருநாளுக்கு அபூர்வமான ஆயத்தஞ் செய்யும்படி தனது பிள்ளைகளை ஏவித் தூண்டுகிறது. இதற்காக இந்தத் திருநாள் அடுத்துவரும்போது நூதனமான அநேக காரியங்களை அது செய்கிறதுமல்லாமல் நாமும் செய்ய உத்தாரங்கொடுக்கிறது. முந்த முந்த இதற்கு ஆயத்தமாக நாலு வாரம் ஆகமனகாலமென்று ஏற்படுத்தியிருக்கின்றது. 2-வது, அந்தத் திருநாளில் திவ்விய பூசையை நடுச்சாமத்தில் செய்ய உத்தாரமளித்திருக்கிறது. 3-வது, திவ்விய கர்த்தர் நித்தியகாலத்தில் தமது தேவ பிதாவினிடத்தினின்று செனமித்ததும், பிரபஞ்ச காலத்திலே பெத்லேம் ஊரில் மனுஷனாகப் பிறந்ததும், தமது

அன்பினாலே நமது இருதயத்தில் ஞானவிதமாய் வந்து பிறப்பதும் ஆகிய இம்மூன்று பிறப்பினிமித்தம் அன்று குருக்களெல்லோரும் மூன்று பூசை செய்யத் திருச்சபை உத்தாரங் கொடுத்திருக்கிறது. 4-வது, இந்தத் திருநாள் வெள்ளிக்கிழமையில் வந்தாலும் சுத்தபோசனக் கடனை நீக்கி வைக்கிறது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—திருச்சபையின் பிள்ளைகளாயிருக்கப் பாக்கியம்பெற்ற நமக்கு அது காண்பிக்கிற மாதிரிகையினாலே இந்தத் திருநாளை நாம் பத்தியோடு கொண்டாட நமக்குப் புத்திசொல்லுகிறதென்றுமாத்திரம் நினையாமல் நமதுமேல் ஓர் கடமையைச் சுமத்துகிறதாக எண்ணவேணும். ஆனால் இது பாரமான கடமையல்ல. ஏனென்றால்: திவ்விய கர்த்தர் நமக்கு இரட்சகரும் பிதாவுமாய் இருக்கிறபடியால் அவர் பிறந்த வருஷாந்தர நாளைக் கொண்டாடுவது நமக்கு மெய்யாகவே இன்பமாய்த்தானிருக்கவேண்டியது.

மனப்பற்றுதல்.—நீ இதுவரையில் இந்தத் திருநாளுக்கு ஆயத்தமாக மகா பத்தி சுறுசுறுப்போடு அந்தந்த வருஷங்களில் செய்ததெல்லாத்தையும்விட இந்த வருஷம் அதிகமாய்ச் செய்யவேணுமென்று உன் மனதில் மிகுந்த ஆசையை எழுப்பக்கடவாய்.

பிரதிக்கினை.—வருஷத்தின் பிரதான திருநாட்கள் நெருங்கி வர வர என் இருதயத்தில் பத்தி வேகமும் அதிகரித்துவந்த பாக்கியமான காலத்தை நினைத்து இப்போதும் அப்படியே ஆகும்படி பிரயாசப்படுவேன்.

## 3-ம் பிரிவு

### மூன்றம் முகாந்தரம்—இந்தத் திருநாளுக்குரிய விசேஷ வரப்பிரசாதங்கள்

தியானம்.—உலக இராஜாக்கள் மற்ற நாட்களைவிடத் தாங்கள் பிறந்த வருஷாந்தர நாட்களில் தங்கள் பிரஜைகளுக்கு உபகார வெகுமானங்கள் செய்து அவர்களுடைய விண்ணப்பமுதலியவைகளைத் தயவாய்க் கேட்டருளுவார்களன்றோ? அதுபோலவே பரலோக இராசாவாகிய இயேசுநாதரும் தமது பிரஜைகளாகிய நமது மன்றாட்டுக்கு இரங்கி நமக்கு உதவி செய்ய எந்நாளும் தயாராயிருந்தாலும், தாம் பிறந்த வருஷாந்தரத் திருநாளில் முற்றும் விசேஷமான விதமாய்த் தமது வரப்பிரசாதங்களை நமதுமேல் பொழிந்தருளுவார். ஏனென்றால்: இந்தக் கண்ணீர்க் கணவாயில் அவர் எழுந்தருளிவந்து நமது பரதேசத்தில் நமக்குத் தேற்றரவாயிருக்கும்படி அவர் தெரிந்துகொண்ட நாள் வருஷத்திலுள்ள மற்ற நாட்களைவிட அவருக்குப் பிரியமாயிருக்குமென்பதற்குச் சந்தேகமில்லை.



இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது—நீ யாராயிருந்தாலும், எப்பேர்ப்பட்டவனாயிருந்தாலுஞ் சரி; இந்த மாசம் இருபத்தைந்தாந் தேதி கர்த்தரிடத்தில் விசேஷ வரப்பிரசாதங்களைப் பெற்றுக்கொள்வாயென்று முழு நம்பிக்கையாயிருக்கலாம். இந்த விசேஷ வரப்பிரசாதங்கள் இல்லாவிடில், உன்னிடத்திலுள்ள சில குற்றங்களையும் துர் அப்பியாசங்களையும் வேர்ப்பிடுங்காய்ப் பிடுங்கி எறியவும், நீ அடையவேணுமென்று சர்வேசுரன் சித்தமாயிருக்கிற புண்ணிய சாங்கோபாங்கத்துக்கு வந்து சேரவும் நீ படும் பிரயாசமெல்லாம் ஒருவேளை வீணாய்ப் போகுமாக்கும். அந்தப் பிரசாதங்களையெல்லாம் ஆண்டவர் உனக்கு மெய்யாகவே கொடுக்கச் சித்தமாயிருந்தாலும், நீ அவைகளைப் பெற்றுக்கொள்ளும்படி தகுந்த ஆயத்தஞ் செய்யாவிடில் உனக்கு அவைகளைக் கொடுக்கமாட்டார். இந்த நவநாளைப் பத்தி சுறுசுறுப்போடு கொண்டாடுவதற்கு இது எவ்வளவோ பலத்த நியாயம்? திவ்விய குழந்தையிடத்தில் நீ பெற்றுக்கொள்ள விரும்புகிற விசேஷ சகாயம் அல்லது விசேஷ வரப்பிரசாதம் ஏதென்று முன்னதாகப் பார்த்துக்கொள். இந்த நவநாள் முழுதும் நீ அநுசரித்து வரவேண்டியது என்னென்னதென்று இந்தத் தியானத்தின் முதல் பிரிவில் தீர்மானித்துக்கொண்டாயோ அதை இன்றைக்கே அநுசரிக்கத் துவக்குவேனென்று மனதில் உறுதிபண்ணிக்கொள்.

சம்பாஷணை.—திவ்விய இரட்சகரிடத்தில் ஏராளமான வரப்பிரசாதங்களையும் ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்ளுவதற்கு எப்போதும் ஆச்சரியமான குணசீரோடிருந்த தேவமாதாவோடு சம்பாஷணை செய்.

---

# 17-ம் தேதி

## நவநாளின் இரண்டாம் நாள்

### இந்த நவநாள் அநுகூலமாவதற்கு நமது இருதயம் இருக்கவேண்டிய சீர்

ஆயத்தச் சிந்தனை.—உன் கர்த்தாவாகிய சர்வேசுரனுடைய கண்ணுக்குப் பிரியமானதைச் செய்யென்று மோயீசன் சொல்லுகிறதாக ரூபிகரித்துக்கொள்.

தியானச் சேபம்.—இந்த நவநாள் அநுகூலமாவதற்கு உன் இருதயம் இருக்கவேண்டிய குணசீர் என்னவென்று அறிந்து அதை அடைந்து காப்பாற்றும்படி வேண்டிய ஞானத் தெளிவும் மன உறுதியும் தந்தருளவேணுமென்று மன்றாடு.

## முதல் பிரிவு

### வேகமான ஆசை

தியானம்.—எவரும் தங்களுடைய சகாய கொடைகளைச் சரியாய் மதிக்க அறியாதவர்களுக்கு அவைகளைக் கொடுக்கப் பிரியப்படமாட்டார்கள். வரப்பிரசாத கொடைகளோ அளவற்ற விலையுள்ளவை. அவைகளை அடையவேணுமென்று வேகமான ஆவல்கொள்ளாதவன் அவைகளைத் தான் மதிக்கிறதில்லையென்று காட்டுகிறான். ஆகையால் அப்பேர்ப்பட்டவனுக்குக் கர்த்தர் பிறந்த திருநாளுக்குரிய வரப்பிரசாதங்களில் ஒன்றுங் கிடைக்கமாட்டாது; அல்லது வெகு சொற்பமாய்க் கிடைக்கும். ஆகையால் திவ்விய கர்த்தர் தம்மிடத்தில் ஏராளமான



வரப்பிரசாதங்களைக் கைக்கொள்ள விரும்புகிறவர்களிடத்தில் தாம் பிறந்த வருஷாந்தரத் திருநாள் எப்போவருமோவென்று எதிர்பார்த்து அந்தத் திருநாளுக்குரிய வரப்பிரசாதங்களைப் பெற்றுக்கொள்ள வேணுமென்கிற வேகமான ஆவல் முந்தின குணமாக இருக்கவேணுமென்று ஆசிக்கிறார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—உன் திவ்விய இரட்சகர் இந்தத் திருநாளில் ஏராளமாய்ப் பொழியச் சித்தமாயிருக்கிற பிரசாத பிரவாகத்தில் உனக்கும் ஓர் பெரும் பங்கு கிடைக்கவேணுமென்று வேகமான ஆசைகொள்ளக்கடவாய். இந்த ஆசை உன் இருதயத்தில் அதிகமதிகமாய்ப் பெருகும்படி உன் ஆத்தும நிர்ப்பாக்கியங்களை விசாரித்துப் புண்ணியத்தில் நீ எவ்வளவு தரித்திரனென்றும், மரணவேளையில் நீ அடைந்திருக்க விரும்புகிற புண்ணிய சாங்கோபாங்கத்துக்கு இன்னும் நீ எவ்வளவு தொலையாயிருக்கிறாயென்றும் யோசித்துப்பார். இதை நன்றாய் யோசித்துப் பார்த்தாயானால், மிகவும் நொந்து வருந்துகிற வியாதிக்காரன் வைத்தியன் எப்போ வருவானோவென்று ஆசைப்படுகிறதைவிட, நீ உன் இரட்சகர் எப்போ வருவாரோவென்று அதிக ஆசைப்படுவாய்.

மனப்பற்றுதல்.—சனங்களால் ஆசிக்கப்பட்டவரே, தாமதமில்லாமல் எங்களை மீட்டிரட்சிக்க வந்தருளுஞ் சுவாமி வந்தருளும்.

பிரதிக்கினை.— சங்கீதமாலையில் திருச்சபையானது இந்த நாட்களில் அங்கலாய்த்துப் பெருமூச்செறிந்து திரும்பத் திரும்பச் சொல்லும் இந்த மன்றாட்டை நீயும் இன்றைக்கு அடிக்கடி சொல்லுவாயாக.

## 2-ம் பிரிவு

### மகா உறுதியான நம்பிக்கை

தியானம்.—தேவ வரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு நம்மிடத்தில் அவசியமாயிருக்கவேண்டிய இரண்டாவ

குணம் மிகுந்த நம்பிக்கையாமே. இப்பேர்ப்பட்ட நம்பிக்கை சர்வேசுரனுக்கு மகா பிரியமானது. ஏனெனில் நாம் அவரை நோக்கி மிகுந்த நம்பிக்கையோடு வெகு நன்மைகளைக் கேட்கும்போது அவருடைய அளவில்லாத வல்லமை தயை தாராளத்தின்மேல் நமக்குள்ள விசுவாசம் வெளியாகிறதினாலே இது அவருக்கு மகிமை தோத்திரமாகும். மேலும் சுவிசேஷத்தில் கண்டிருக்கிறபடி இயேசுநாதர் யாதொருவனுக்கு ஒரு நன்மை உபகாரஞ் செய்யவேணுமானால் அவனிடத்தில் முக்கியமாய் நம்பிக்கை இருக்கவேணுமென்று ஆசிக்கிறார். அவ்வண்ணமே தம்மை நோக்கி மன்றாடின இரண்டு குருடர்களைப் பார்த்து: உங்களுக்குப் பார்வை கொடுக்க நம்மாலாகுமென்று விசுவசிக்கிறீர்களோவென்று கேட்டார். அவர்கள் ஆமென்றதற்கு அவர் மறுமொழியாக: உங்கள் விசுவாசத்தின்படி உங்களுக்கு ஆகட்டுமென்றார்; அதாவது: என் வல்லமை தயாளத்தின்மேல் உங்களுக்குண்டான நம்பிக்கைக்கு அளவாக உங்கள் மன்றாட்டு பலிக்குமென்றாற்போலாயிற்று. நமது நம்பிக்கையின் ஏற்றக் குறைச்சலுக்களவாய் அவருடைய வரப்பிரசாதங்களை ஏறத்தாழ அடைவோமென்று திவ்வியமான இந்த வார்த்தைகளால் நமக்கு வெளியாகிறது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நமது செபங்களில் அனந்தம் விசை குறைபடுவது நம்பிக்கையல்லவோ? நாம் கேட்கிற மன்றாட்டு ஏதோ பலிக்காமற்போகுமென்கிற ஓர் எண்ணம் வழக்கமாய் நமது உள்ளத்தில் பதிந்திருப்பது உண்மையல்லவோ? சர்வேசுரனுக்குப் பொருந்தாத இந்த நினைவு நம்மிடத்தில் உண்டாவதற்குக் காரணமென்ன? என்னவென்றால் அவருடைய அளவில்லாத தயாளத்தை நாம் நன்றாய்க் கண்டுபிடியாதிருப்பதும், நமது அயோக்கியத்தையும் ஞான வறுமையையும் நினைத்து மனங் குன்றிப்போவதும் இதற்குக் காரணமாகும். என்னைப்போலொத்த நிர்ப்பாக்கிய பாவிகளுக்கு ஆண்டவர் தயை செய்வாரோவென்று நீ சொல்வாயாக்கும். இது சரியல்ல. நீ நிர்ப்பாக்கிய பாவியாயிருக்-



கிறதைப்பற்றித்தான் ஆண்டவருடைய அதி விசேஷ தயவை நம்புகிறதற்கு மகா நியாயமுண்டு. இதைப்பற்றியன்றோ வியாதிக்காரனுக்கு வைத்தியன் அவசரமேயன்றி ஆரோக்கியனுக்கு அவசரமில்லையென்று இயேசுநாதர் திருவுளம்பற்றினர் (மத். 9).

மனப்பற்றுதல்.—ஆண்டவரே, உம்மையே நம்பினேன்; ஆகையால் ஒருபோதுங் கலங்கமாட்டேன்.

பிரதிக்கினை.—என்னிடத்தில் எவ்வளவுக்கு அவநம்பிக்கை எழும்புகிறதோ அவ்வளவுக்கு அதிக நம்பிக்கையோடு சுவாமியே தஞ்சமென்று அவரை அண்டிப் போவேன்.

## 3-ம் பிரிவு

### மிகுந்த தாராளம்

தியானம்.—இயேசுநாதர் தமது வரங்களைத் தந்து நம்மை ஞான ஆஸ்திக்காரராக்க ஆசைப்படுகிறார். ஆனால் நாமும் அதற்குத் தாராளமான மனதோடு உடன்முயற்சி செய்யவேணுமென்று கேட்கிறார். இதைப்பற்றியே: நமதுமட்டில் உதாரமாயிருப்பவனுக்கு நாமும் உதாரமாயிருப்போமென்று வேதத்தில் எழுதப்பட்டிருக்கிறது. ஆயினும் சில சமயங்களில் சர்வேசுரன் தமது பொதுவான வழக்கமுறைமையைவிட்டு, யாருக்காவது அவர்களுடைய பேறுபலனுக்கதிகமான வரங்களைக் கட்டளையிட்டிருந்தாலும், நமக்கும் அப்படியே செய்வாரென்று எண்ணிக் காத்திருக்கப்படாது. ஆகையால் நாம் இயேசுநாதர்சுவாமிமட்டில் எவ்வளவு தாராள குணத்தைக் காட்டுவோமோ, எவ்வளவு உழைத்து அவருடைய தயவையும் விசேஷ அன்பின் வரங்களையும் பெற்றுக்கொள்ளத்தேடுவோமோ அவ்வளவாக அவரும் தாம் பிறந்த திருநாளில் நமக்குப் பலன் அளிப்பாரென்று நிச்சயிக்கக்கடவோம்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நமது மனதைத் தூண்டி உற்சாகப்படுத்தவும், எவ்வித பிரயாசத்துக்கும் அஞ்சாத துணிவை நமக்கு வருவிக்கவும் மேற்

கண்ட யோசனை மிகவுந் தகுதியானது. நம்மிடத்தில் சர்வேசுரனுக்குப் பொருந்தாதது ஏதென்றும் விசேஷமாய் அவர் நம்மிடத்தில் கேட்கிறது என்னவென்றும் பார்த்து ஆகாததைத் தவிர்த்து ஆனதைத்தேட மனத்தாராளமாய்ப் பிரதிக்கினை செய்துகொள்வோமாக.

சம்பாஷணை.—இயேசுநாதரோடு சம்பாஷணை செய்து, அவர் தாம் பிறந்த திருநாளில் நாம் எவ்வித ஆயத்தமாயிருக்கவேணுமென்று ஆசிக்கிறாரோ அவ்வித ஆயத்தமாயிருக்கும்படி நமக்கு வேண்டிய அனுக்கிரகஞ் செய்தருளவேணுமென்று அவரை இரந்து மன்றாடுவோமாக.

---

## 18-ம் தேதி

### நவநாளின் மூன்றம்நாள்

#### இந்த நவநாள் அனுகூலமாகாதபடி நேரிடும் விக்கினங்கள்

ஆயத்தச் சிந்தனை.—ஆண்டவருடைய வருகைக்கு வழியைச் செப்பனிடுங்களென்று இசையாஸ் தீர்க்கதரிசி சொல்வதாக உரூபிகரித்துக்கொள் (இசை. 46).

தியானச் செபம்.—இந்த நவநாள் அனுகூலமாகாதபடி நேரிடும் மூன்று பிரதான விக்கினங்களையுஞ் செயித்துக்கொள்ள தேவ அனுக்கிரகத்தைக் கேள்.

### முதல் பிரிவு

#### முந்தின விக்கினம் : அசட்டைத்தனம்

தியானம்.—ஒரு தர்மிஷ்டனிடத்தில் உபகாரம் பெற்றவர்களாவது பெறப்போகிறவர்களாவது அவன்மட்டில் நன்றியறிந்த பற்றுதலைக்காண்பியாமல் ஒருபிரகாரமாயிருந்தால் சுபாவமாய் அவனுக்கு அவர்கள்மேல் மனம்விட்டுப் போகுமல்லவோ? இதை இன்னும் அதிகத் தெளிவாய் அறியும்படி ஒரு உவமையைக்கேள். ஒரு தகப்பனுக்கு



ஆறு பிள்ளைகளென்று வைத்துக்கொள்வோம். அவர்களில் மூத்தவர்களான ஐந்துபேரும் தகப்பன் பேர்கொண்ட திருநாள் அடுத்து வருகிறதை அறிந்திருந்தாலும் அதைக் கவனியாமல் சும்மா இருந்துவிட்டு, திருநாளன்றைக்கு தகப்பனிடத்திற்போய் மங்களமான நாலு வார்த்தை சொல்லி அவனோடு பந்தியில் உட்கார்ந்து விருந்து சாப்பிட்டு, அத்தோடு எல்லாம் முடிந்ததென்றிருக்கிறார்கள். கடைக்குட்டியாகிய சிறுவனோவென்றால் தகப்பனுடைய திருநாளை முந்தியே நினைத்து, வேலைப் பிரயாசத்துக்கு அஞ்சாமல், வேண்டியதெல்லாம் தயார் செய்து தகப்பனுடைய திருநாளை ஆடம்பர சிறப்பாய்க் கொண்டாடுகிறான். இதெல்லாம் பார்த்துக்கொண்டிருக்கிற தகப்பன் அவர்களுக்குள் யார்மேல் அதிகப் பிரியம் வைத்து அருமையாய் நடத்திவருவான். இளையவனைத் தானென்பதற்குச் சந்தேகமோ? இல்லையே. இதைப் பற்றித் தகப்பன்மேல் குறை நினைக்கப்போகிறதார்?

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—மேற்படி உவமையின் கருத்து இன்னதென்று அறியும்படி வெகு புத்திக்கூர்மை வேண்டியதில்லை. சகலருக்கும் சுலபமாய் விளங்கும். கர்த்தர் பிறந்த பெரிய திருநாளில் கிறீஸ்துவர்களுக்குள்ளே கணக்கற்ற பேரும், சந்நியாசிகளுக்குள்ளே முதலாய்த் திரளான பேர்களும், யாதொரு விசேஷ தேவப்பிரசாதத்தைக் கைக்கொள்ளாமற் போவதற்குக் காரணமேதென்று அந்த உவமையினால் வெட்டவெளியாகிறது. இதிப்படியிருக்க, நீ நடந்துகொள்ள வேண்டிய விதம் என்னவென்றும், அநுசரிக்கவேண்டிய காரியம் ஏதென்றும் யோசித்துத் தீர்மானித்துக்கொள்.

மனப்பற்றுதல்.—எண்ணிறந்த கிறீஸ்துவர்கள் இது விஷயத்தில் சகிக்கக்கூடாத அசட்டையாயிருப்பதைக் கண்டு பிரலாபித்து, அவர்களுடைய குருட்டாட்டத்தின் மேல் கர்த்தர் மனமிரங்கவும், உன் இருதய அசமந்தத்தை அடியோடு பிடுங்கியெறிய அவர் உதவிசெய்யவும் மன்றாடு.

பிரதிக்கினை.—இந்த நவநாட்களில் என்னென்ன பத்தி முயற்சிகள் செய்யவேணுமென்று நீ பிரதிக்கினை

செய்துகொண்டாயோ, அவைகளையெல்லாம் இன்று பிரமாணிக்கமாய் அனுசரிப்பதுந் தவிர, அவைகளில் யாதொன்றை விட்டுவிடுகிறதைவிட, ஏதாகிலும் கூட்டிச் செய்யக்கடவாய்.

## 2-ம் பிரிவு

### இரண்டாம் விக்கினம் : மனதைப் பராக்காய்த் திரியவிடுதல்

தியானம்.— அசட்டைத்தனத்துக்கு எற்றமாய்த் திருநாள் அனுகூலத்துக்கு இரண்டாம் விக்கினமுமாயிருக்கிறது என்னவென்றால் : மனதை அதுபோன போக்கில் திரியவிடுகிறதாம். உலக சந்தடிகள் நடுவிலும், அன்றாடம் நடக்கும் ஆயிரத்தெட்டு வர்த்தமானங்கள், வீட்டு அலுவல்கள், வியாபாரங்கள், உத்தியோகங்கள் முதலிய பல வேலைத் தொல்லைகள் நடுவிலும் மனுஷனுடைய புத்தியானது விசுவாசத்துக்கடுத்த காரியங்களை நினைக்கிறதும், ஆத்தும நன்மைகளைத் தேடுகிறதும், திருச்சபையின் பிரதான திருநாட்களையும், அவைகளில் விசேஷமாய்க் கர்த்தர் பிறந்த திருநாளையும் தக்க விதமாய்க் கொண்டாட விசாரிக்கிறதும் மகா அருமையான காரியமாகும். உலக மனுஷர்களுக்குள் பெரும்பான்மையோருக்கு வருகிற மோசம் இதுவே. ஐயோ, இவர்களில் எத்தனையோபேர் உலகக் கவலை விசாரங்களாகிய சூறைக்காற்றில் அகப்பட்டு, தப்பிவர வழிதெரியாமல், சுற்றிச் சுழன்று கடைசியாய் நித்திய நரகத்தில்போய் விழுவார்களென்று அஞ்சவேண்டியதாயிருக்கிறது !

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நீ உலக சந்தடிகளை விட்டு ஒதுக்கமான இடத்தில் இருப்பதற்காக ஆண்டவருக்குத் தோத்திரஞ்செய். ஆனால் மடங்களின் சுற்று ஆரல் சுவர்க்குள்ளும் பராக்கு நுழைந்து துறவறத்தார் வருஷத்தின் பிரதான திருநாட்களுக்குத் தக்க ஆயத்தஞ் செய்யாதபடி விக்கினம் பண்ணலாமென்று நன்றாய் நினைத்துக்கொள். அப்படியே மிதமிஞ்சி வெளியே திரிகிறவர்களுக்கும், தேவ பணிவிடைக்கான காரியமாயிருந்தாலும் அதைச் சுபாவ ஆத்திரப் படபடப்போடு செய்கிறவர்களுக்கும், மவுனம், அடக்கவொடுக்கம் இல்லாதவர்களுக்கும் இப்படிப்பட்ட பராக்கு வராமலிருக்கமாட்டாது. இப்போது சொல்லப்பட்ட குறைகள் உன்னிடத்தில் உண்டோவென்றும், எவ்வளவு உண்டென்றும் பார்த்துத் திருத்திக்கொள்வதுமல்லாமல், கர்த்தர் பிறந்த திருநாளில் உன் இருதயத்தில் அவர் ஞான விதமாய் வந்து பிறக்கும்படி, நீ செய்யவேண்டியவைகளில் இன்னும் பாக்கியாயிருக்கிறதென்னவென்று விசாரித்து, சகலத்தையுங் குறையறச் செய்து முடிப்பாயாக.



மனப்பற்றுதல்—கர்த்தர் பிறந்த திருநாளில் அவர் உனக்கு அளிக்கச் சித்தமாயிருக்கிற வரப்பிரசாதங்களை நீ கைக்கொள்ளுவதற்கு விக்கினமாயிருக்கிறதையெல்லாம் தவிர்க்கும்படி வேண்டிய ஞானப்பெலனைக் கேட்பாயாக.

பிரதிக்கினை.—இன்றைக்கும் இதின் பின்வரும் நாட்களிலும் சகல பராக்குகளையும்விட்டு மனை ஏகாந்தமாயிருக்கப் பிரயாசப்படு.

## 3-ம் பிரிவு

### மூன்றும் விக்கினம் : நிலையற்றதனம்

தியானம்.—நமது நவநாள் அனுகூலப்படாமற் போவதற்கு உள்ள மூன்றும் விக்கினம் நமது நிலைமையற்றதனமே. ஏனென்றால் : நமது மனம் ஒன்றிலும் பிடிப்பில்லாமல் காற்றாடியைப்போல ஆடி அசைந்து கொண்டிருப்பதினாலே, நன்மையான பல காரியங்களை நாம் துவக்கினாலும் ஒன்றையாவது தீர்க்கமாய் முடியாமற்போகிறோம். நாம் செய்யும் பிரதிக்கினைகளை ஒன்றில் ஓயாமல் மாற்றுகிறோம், ஒன்றில் அவைகளை முழுதும் விட்டுவிடுகிறோம். நவநாட்கள் விஷயத்தில் நமது அனுபோகத்தைப் பார்க்கும்போது ஒரு நாள் அல்லது இரண்டு நாள் பிரமாணிக்கமாய் நடக்கிறோம். அப்புறம் போகப்போக நாம் தீர்மானித்திருந்த புண்ணிய முயற்சிகளைச் சரிவர நிறைவேற்றாமலிருப்பதுந்தவிர, இடைக்கிடை அவைகளை விட்டுவிடவும், சில சமயங்களில் அவைகளை முழுதும் மறந்து போகவும் நேரிடுகிறது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—கடந்த காலத்தின் அனுபோகம் நமக்கு நல்ல படிப்பினையாயிருக்கக்கடவது. திருநாளுக்கெல்லாம் பெரிய திருநாளாகிய கர்த்தர் பிறந்த திருநாளுக்கு நாம் செய்கிற இந்த நவநாளில் மேற்படி அனுபோகமானது நமது உள்ளத்தில் ஓர் பெரும் தொனியைப்போல் ஓயாமல் சத்தித்து, நமக்குச் சுபாவமாயுள்ள நிலைமையற்றதனத்தை நமது மனதில் வரப்பண்ணி, நம்மைத் தூண்டிக் கடைசிமட்டும் நமது பத்தி வேகத்தை மூட்டிக் காப்பாற்றக்கடவது. இப்படியே நமக்கு ஆகும்படி பத்திமான்களைக் கண்டுபாவித்து, அவர்களைப்போல நவநாளின் ஒவ்வொருநாளும் போகப்போக, முதல்நாள் நாம் செய்யத் தீர்மானித்திருந்த முயற்சிகளோடு வேறு சில முயற்சிகளையுஞ் சேர்த்துச்செய்வோமாக.

சம்பாஷணை.—திவ்விய இரட்சகரின் தாயாரோடு சம்பாஷணை செய்யக்கடவோம். கர்த்தர் எப்போ பிறப்பாரோவென்று அந்த ஆண்டவள் ஆவலோடு காத்திருந்ததைக்குறித்து நாம் இன்று திருநாள் கொண்டாடுகிறதினாலே, அந்தத் திவ்விய பிறப்பு கிட்டி வர வர அவள் தம்முள்ளத்தில் உணர்ந்த ஆச்சரியமான பத்தி பற்றுதல்களில் நமக்கும் எவ்வளவாவது தந்தருளவேணுமென்று மன்றாடக்கடவோம்.

---

## 19-ம் தேதி

### நவநாளின் நாலாம் நாள்

#### கர்த்தர் பிறந்த திருநாளிலடங்கிய பரம இரகசியத்தின் பேரில்

ஆயத்தச் சிந்தனை.—வார்த்தையானது மாம்ஸமாகி நம்மோடுகூட வாசமாயிருந்ததென்று சுவிசேஷ அருளப்பர் எழுதுகிறதைப் பார்க்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

தியானச் சேபம்—சர்வேசுரனைவர் சாவுக்குரிய பலவீனமுள்ள மனுஷ சுபாவத்தையெடுத்த வாக்குக்கெட்டாத



பரம இரகசியத்தை எவ்வளவாகிலும் கண்டுபிடித்து
ஞானச் சுவையோடு தியானிக்க அனுக்கிரகங் கேள்.

### முதல் பிரிவு

#### மாம்ஸமான இந்த வார்த்தை எப்படிப்பட்டவர்?

தியானம்.—சாவுக்குரிய சரீரத்தையெடுத்து நமது கண்
களுக்குப் பிரத்தியக்ஷமான இந்த வார்த்தையானவர் யார்?
இவர்தான் நித்திய வார்த்தை; அர்ச். தமதிரித்துவத்தின்
இரண்டாம் ஆள்; பிதாவோடு ஒரு பொருளாயிருப்பவர்.
இவர் வானத்தையும் பூமியையும் படைத்த சர்வேசுரன்.
சர்வேசுரனாயிருந்துகொண்டே நம்மைப்போல் பாடுகளுக்
கும் சாவுக்குமுரிய மனிதனாகி, ஒரே ஆளில்தானே கலப்
பும் மாற்றமுமின்றித் தேவ சுபாவத்தையும் மனுஷ சுபா
வத்தையும் ஒன்றித்திருக்கிறார். இது எவ்வளவோ ஞான
மும், வல்லமையும், தயையும் நிறைந்த பரம இரகசியம்.
ஆனால் இதை முக்கியமாய்த் தாழ்ச்சியின் பரம இரகசிய
மென்றே சொல்லத்தகும். ஏனெனில்: சர்வ வல்லமையுள்
ளவர் நமக்காகச் சிறு பாலன் ஆனது எவ்வளவோ தாழ்மை
பொருந்தியது!

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது—அத்தி
யந்த தாழ்ச்சி பொருந்திய இந்தப் பரம இரகசியத்தின்
பேரில் உன் விசுவாசம் அதிக தீர்க்கமும் உயிருள்ளது
மாயிருந்தால், நீ சலாக்கியமான நினைவுகளுக்கு இடங்
கொடுத்து உனக்கு வரும் தாழ்மை நிந்தை அவமானங்
களின்பேரில் முறைப்படுவதற்குப் பதிலாய், உன்னை
அறியாமலே உன் மனதில் கிளம்பும் ஆங்காரமான நினைவு
களையெல்லாம் அருவருத்து, சகலரும் உன்னை நிந்தித்துப்
புறக்கணிக்கவேணுமென்று ஆவலோடு வலியத் தேடுவாய்.
இப்படியே அர்ச்சியசிஷ்டவர்கள் பெத்லெஹேம் மாட்டுக்
கொட்டிலையும், அப்போஸ்தலர் சொல்வதுபோல: ஒரு
தெய்வம் அடிமை ரூபமெடுத்துத் தன்னை ஒன்றுமில்லாமை
யாக்கினதையும் நினைத்துத் தாழ்ச்சியில் மூழ்கித் தங்களை
வெறுத்து வருவார்கள்.

மனப்பற்றுதல்.—உன் விசுவாசத்தைத் தூண்டியெழுப்பி, மாம்ஸமான வார்த்தையின் அத்தியந்த தாழ்ச்சியைக்கண்டு ஆச்சரியப்பட்டு உன் ஆங்கார சலாக்கியத்தை அருவருத்துத் தள்ளுவாயாக.

பிரதிக்கினை.—வார்த்தையானது மாம்ஸமானதென்று திரிகாலச் செபத்தில் நீ சொல்லும்போதும் கேட்கும்போதும் மேற்சொல்லிய பற்றுதலை உன்னிடத்தில் எழுப்பிக்கொள்.

## 2-ம் பிரிவு

### வார்த்தையானவர் மாம்ஸமெடுத்த காரணத்தின்பேரில்

தியானம்.—தேவ வார்த்தையானவர் பாடுகளுக்கும் சாவுக்கும் உரிய மனிதனான காரணமென்ன? அந்தக் காரணமென்னவென்று நாம் நன்றாய் அறிந்திருந்தாலும், அதை நாம் நிதானித்துப் பார்க்கிறதில்லை. ஆதித்தகப்பன் தேவ கற்பனையை மீறிச் செய்த துரோகத்தினாலே நம்மெல்லோருக்கும் வந்த நிர்ப்பாக்கியத்தினின்று நம்மைக் கைதூக்கி இரட்சிக்கும்படி அவர் மனுஷாவதாரமெடுத்தார். அவரைத்தவிர, சம்மனசுவானாலுஞ் சரி, மனுஷனானாலுஞ் சரி, படைக்கப்பட்ட வேறெந்த வஸ்துவானாலுஞ் சரி, நமது இரட்சணியமாகிற இந்த மேலான வேலையைச் செய்துமுடிக்க ஒருவராலுங் கூடாது. ஏனென்றால்: பரிகாரமானது குற்றத்துக்கு நிகராகவும், சர்வேசுரனுடைய அளவற்ற மகிமைப் பிரதாபத்துக்கு அளவாகவும் இருக்கவேணுமென்று தேவ நீதி கேட்கின்றது. ஆனால் படைக்கப்பட்ட வஸ்துக்களெல்லாம் வேண்டும் வேண்டாம் மட்டுள்ளவைகளாயிருப்பதால், இவைகளால் சர்வேசுரன் கேட்கிறபடி சரியான பரிகாரஞ் செய்யக் கூடாது. அவதரித்த வார்த்தையானவர் மாத்திரம் இது காரியத்தைச் சரிவரச் செய்து முடிக்கக்கூடும். எப்படியெனில்: மனுஷனைமட்டும் நமக்காகப் பாடுபட்டு, சர்வேசுரனைமட்டும் அந்தப் பாடுகளுக்கு அளவில்லாத பலனைக் கொடுத்து இவ்விதமாய்த் தேவ நீதிக்கும் பரிகாரஞ்செய்து நம்மையும் இரட்சிக்கக்கூடும்.



இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—பாவத்தினாலே நாம் இழந்துபோன சர்வேசுரனுடைய பிள்ளைகளென்கிற மகிமைப் பேரையும், மோக்ஷ சுதந்தரத்தையும் திரும்ப நாம் பெற்றிருக்கிறதும், நமக்கு மனதுண்டானால் துன்பம் நிறைந்த இந்தப் பிரபஞ்ச காலத்தைக் கடந்தபின், பேரின்ப பாக்கியம் நிறைந்த நித்திய சீவியத்தைக் கைக்கொள்ளலாமென்கிற நம்பிக்கை நமக்கு உண்டாயிருக்கிறதும் ஆகிய இந்த நன்மைக்கெல்லாம் வார்த்தையானவர் மாம்ஸமான பரம இரகசியமே காரணமல்லாமல் வேறல்ல. ஆகையால் அந்தத் தேவ வார்த்தையானவருக்கு நாம் எவ்வளவோ கடனாளிகளாயிருக்கிறோம்! மீளவும் அர்ச். சின்னப்பர் சொல்வதுபோல நாம் சர்வேசுரனுக்குச் சத்துராதிகளாயிருக்கும்போதே அவர் நம்மைத் தம்மோடு சமாதானமாக்கினதினாலே, அவருக்கு நாம் செலுத்தவேண்டிய நன்றிக்கு அளவும் மட்டும் உண்டோ? (உரோ. 5).

மனப்பற்றுதல்.—நீ உன் சுய பிரயோசனத்தைப் பற்றித் திவ்விய இரட்சகரைச் சிநேகியாமல், அவரைப் பற்றியே அவரை அதிகமாய்ச் சிநேகிக்கும்படி அநுக்கிரகங் கேள்.

பிரதிக்கினை.—என்னை இரட்சித்த சர்வேசுரா, தேவரீர் எனக்கு மோக்ஷ பாக்கியங் கொடுப்பீரென்பதைப்பற்றியுமல்ல, என்னை நரகத்தில் தள்ளுவீரென்பதைப்பற்றியுமல்ல, ஆனால் தேவரீர் என் இராஜாவும் சர்வேசுரனுமாய் இருக்கிறீரென்பதைப்பற்றி உம்மை நான் சிநேகிக்கிறேனென்று அர்ச். சவேரியார் வாடிக்கையாய்ச் செபித்துவந்த இந்தச் செபத்தை நீயும் அடிக்கடி சொல்லிவரப் பழகு.

## 3-ம் பிரிவு

### மாம்சமான வார்த்தையானவர் தம்மை இம்மாத்திரம் தாழ்த்தினது ஏன்?

தியானம்.—ஆதாம் பாவத்தைச் செய்யுமுன் அவனுடைய சரீரமானது சாவு நோவு அணுகக்கூடாததா

யிருந்ததுபோல, நம்மை இரட்சிக்க வந்த தேவசுதனும் சாவு நோவு அணுகக்கூடாத ஒரு சரீரத்தையெடுத்து, மனுஷனாகி, நமது பாவங்களுக்காக ஒரே ஒரு பெருமூச்சு விட்டால் போதுமே. அப்படிக்கில்லாமல், மற்ற மனுஷரைப்போல துன்பத்தில் பிறந்து, மனுஷ சென்மத்துக்குரிய சகல தாழ்மையையும் பலவீனத்தையும் அவர் ஏற்றுக்கொண்ட காரணமென்ன? அர்ச். சின்னப்பர் சொல்வதுபோல அவர் நமதுமேல் வைத்த மட்டற்ற சிநேகத்தை நமக்கு வெளியாக்கி, நமது இருதயங்களையெல்லாம் என்றென்றைக்கும் தமது கைவசமாக்கிக்கொள்ளும்படி இப்படிச் செய்தார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—திவ்விய இரட்சகர் தம்மைச் சிநேகிக்கும்படி சகல மனுஷரையும் அன்போடு அழைத்தாலும், எத்தனையோ கோடிப் பேர்கள் அவருடைய சத்தத்துக்குக் காதுகொடாமலும், அவரை மறந்தும், நன்றியறியாமலும் போகிறார்கள். நாமும் அந்தச் சிநேக தேவனுக்கு எத்தனையோ வகையாய்ச் சொந்தமாயிருந்தாலும் அவரை நாம் சிநேகிக்கும் விதமென்ன? அவர் நம்மிடத்தில் கண்டிப்பாய்க் கேட்கிற காரியத்தை மாத்திரம் செய்தால் போதுமென்று அவரைச் செட்டாய்ச் சிநேகித்து, நமது சிநேகம் எங்கே மிஞ்சிப் போகிறதோவென்று வெகு பத்திரமாயிருக்கிறோமல்லவோ? அல்லவென்று ஏதாகிலும் அதிகமாய்ச் செய்தால், அதை முதலாய் எவ்வளவோ அரைகுறையாய்ச் செய்கிறோம்! சென்ற காலத்தில் நாம் இப்படி நடந்ததற்குப் பரிகாரமாகவும், நமது நல்ல மனதுக்கு அத்தாட்சியாகவும், இந்த நவநாளில் நாம் செய்யத் தீர்மானித்த காரியங்களோடு ஏதாகிலும் கூட்டிச் செய்வோமாக.

சம்பாஷணை.—மகா சந்தோஷத்துக்குரிய இந்தப் பரம இரகசியத்தை இடையர்களுக்கு அறிவித்த சம்மனசானவரோடு சம்பாஷணை செய். அந்தப் பரம இரகசியத்தை வெகு பத்தி விநயத்தோடு கொண்டாடும்படி திருச்சபையானது தன் பிள்ளைகளாகிய நம்மை அழைத்து ஏவுகிறது.



# 20-ம் தேதி

## நவநாளின் ஐந்தாம் நாள்

### மாம்சமான வார்த்தையின் தாயாரைத் தெரிந்துகொண்டதும் அவளுக்கு அளிக்கப்பட்ட விசேஷ சுதந்தரங்களும் அவள் செய்த ஆயத்தமும்

ஆயத்தச் சிந்தனை.—நீர் கர்ப்பந்தரித்து ஓர் குமாரனைப் பெறுவீர், அவருக்கு இயேசுவென்னும் நாமகரணஞ் சூட்டுவீராகவென்று அதிதூதரான கபிரியேல் சம்மனசு பரிசுத்த கன்னிமரியம்மாளுக்கு மங்கள வார்த்தை சொல்வதாக ரூபிகரித்துக்கொள்.

தியானச் செபம்.—பரிசுத்த கன்னிமரியம்மாளை அதிகமதிகமாய் அறிந்து மதிக்கவும் அவள்மேல் அதிக பத்தி நேசம் வைக்கவும் அநுக்கிரகங் கேள்.

## முதல் பிரிவு

### பரிசுத்த கன்னியாஸ்திரீ தேவதாயாராகத் தெரிந்துகொள்ளப்பட்டது

தியானம்.—தனக்கே ஒரு தாயாரைத் தெரிந்துகொள்ளுதல் மனுஷனுடைய சக்தியில் அடங்கினதல்ல. இது யாருக்கும் பிரசித்தமாய்த் தெரிந்த காரியம். ஆயினும் ஒருவர் மாத்திரம் தமது தாயாரைத் தெரிந்துகொள்ளத் தக்கவராயிருந்தார். அவர்தான் நம்மை இரட்சித்த தேவனும் மனிதனுமாகிய இயேசுநாதசுவாமி. தேவசுபாவத்தில் நித்தியராயிருக்கிற அவர் மனிதனாய் அவதரிக்கச் சித்தமாயிருந்தபடியினாலே, அந்த மனுஷசுபாவத்திலே தமக்குத் தாயாராயிருக்கவேண்டியவள் இன்னாளென்று நித்தியத்திலே அவர் தெரிந்துகொள்ளக்கூடுமாயிருந்ததுந்தவிர, தெரிந்துகொள்ள வேண்டியதாயுமிருந்தது. ஆனால் இந்த உந்நத மகிமைப் பட்டத்துக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட புண்ணியவதி யார்? வேதபுஸ்தகத்தில் கண்டிருக்கிறபடி தாவீது இராஜாவின் கோத்திரத்தாரும், சம்பந்த முறையால் குருப்பிரசாதியான

ஆரோன் வம்சத்தில் சேர்ந்தவர்களுமான அர்ச். சுவக்கின் அன்னம்மாளென்பவர்களுடைய புத்திரியாகிய கன்னி மரியம்மாள்தான். இவளைச் சர்வேசுரன் சகல ஸ்திரீ ஜனங்களுக்குள்ளே விசேஷமாய்த் தெரிந்துகொண்டதினாலே, சகல சிருஷ்டிப்புகளிலும் உந்நதமானவளும் ஆசீர்வதிக்கப்பட்டவளுமாகி, தேவதாயாரென்னும் பட்டத்துக்கும் உயர்த்தப்பட்டிருக்கிறாள்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—திவ்விய வார்த்தையானவர் பரிசுத்த கன்னியாஸ்திரியைத் தமக்குத் தாயாராகத் தெரிந்துகொண்டதை நினைத்துக் களிகூறுவோமாக. மேலும் அவருடைய நன்கொடையினாலே, அத்திருக் கன்னி நமக்கும் தாயாரானதை நினைத்து இன்னும் அதிக ஆனந்தங் கொள்ளக்கடவோம். புண்ணிய சாங்கோபாங்கத்தையும் பரிசுத்தத்தனத்தையும் தேடும்படி நமது வார்த்தைப்பாடுகளினாலே நமக்குக் கடமையில்லையென்று வைத்துக்கொண்டபோதிலும், அவ்வளவு உந்நதமும் பரிசுத்தமுமான தாயாருக்கு நாம் பிள்ளைகளாயிருக்கிறதைப்பற்றி, அந்தச் சாங்கோபாங்கத்தைத் தேடக் கடமைப்பட்டிருக்கிறோமென்று நினைத்துக்கொள்ளக்கடவோம். இதை நாம் அடையத்தக்கதாக இந்த நவநாளில் இரட்டிப்பான சுறுசுறுப்போடு வருந்துவோமாக.

**மனப்பற்றுதல்.**—இயேசுக்கிறீஸ்துவின் திரு வாக்குத்தத்தங்களுக்கு நாங்கள் பாத்திரமாயிருக்கத்தக்கதாகச் சர்வேசுரனுடைய அர்ச். மாதாவே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

**பிரதிக்கினை.**—நம்மாலானமட்டும் பரிசுத்த கன்னிமரியம்மாளின் மகிமையையும் அவள்பேரில் பத்தியையும் பரம்பச் செய்வோமாக.

## 2-ம் பிரிவு

### தேவதாயாரென்கிற மகிமையைப்பற்றிப் பரிசுத்த கன்னியாஸ்திரிக்கு அளிக்கப்பட்ட விசேஷ சுதந்தரங்கள்

**தியானம்.**—சர்வேசுரன் தாம் துவக்கின காரியத்தை அரைகுறையாய் விடமாட்டார். யாரையாவது அவர் ஒரு மேலான பட்டத்துக்கு அல்லது அலுவலுக்கு நியமிக்கும்போது, அவர்கள் அதின் கடமைகளை யோக்கியமான விதமாய் நிறைவேற்றும்படி வேண்டிய வரப்பிரசாதங்களையும் அநுக்கிரகங்களையும் குறையின்றிக் கொடுப்பாரென்று, வேத சாஸ்திரியான அர்ச். தோமா சென்பவர் சொல்லியிருக்கிறார். இப்படியிருக்க, ஒரு சிருஷ்டி அடையக்கூடுமான அதி உந்நத மகிமைப்பட்டத்துக்கு அர்ச். கன்னிமரியாயியைச் சர்வேசுரன் நியமிக்கச் சித்தமானதினாலே, அதுவரையில் ஒருவருக்குங் கொடாத உச்சிதமான வரப்பிரசாதங்களையும், சுதந்தரங்களையும் அவளுக்குக் கொடுத்தருளினார். அவையாவன :—முந்த முந்த அவளைச் சென்மப் பாவத்தோஷம் அணுகாமல் காப்பாற்றினார்; 2-வது, அவளுடைய ஆத்தும அலங்காரம் ஓர் அற்பப் பாவத்தினாலாவது ஒருபோதுங் கறைபடாமல் அவளை இஷ்டப்பிரசாதத்தில் உறுதிப்படுத்தினார். 3-வது, அவளுடைய கன்னிமைக்கு யாதொரு பழுதுமின்றிக் காத்துத் தேவ தாயாரென்னும் சந்தோஷ மகிமையையும் அவளுக்குக் கட்டளையிட்டார். 4-வது, தாய் உதரத்தில் அவள் உற்பவித்த முதல் க்ஷணத்திலேயே அவளைத் தேவ இஷ்டப்பிரசாதத்தாலும், இஸ்பிரீத்துசாந்துவின் வரங்களாலும் சம்பூரணமாய் அலங்கரித்தார். 5-வது, அநேக வேத சாஸ்திரிகள் சொல்லியிருக்கிறபடி: அவளுடைய வாழ்நாட்களில் ஒரு நொடிப்பொழுதாவது அவள் சர்வேசுரனைச் சிநேகியாமலும், பேறுபலன்களில் அதிகரியாமலுமிராதபடி அவள் உற்பவித்த க்ஷணமே அவளுக்குப் புத்தி விபரமுண்டாகும்படி செய்தார்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—துறவற அந்தஸ்துக்கும், சிலவிசை குருப்பட்டத்துக்கு முதலாய்ச் சர்வேசுரன் உன்னைச் சுய தயவினால் தெரிந்துகொண்டு, மற்ற மனுஷர்களுக்கு மேலாக உன்னை மகிமையில் உயர்த்தினபோது, அவர் தமது வேலையை அரைகுறையாய் விட்டுவிடவில்லையே! உன்னுடைய அந்தஸ்துக்குத் தக்கது தமது வரப்பிரசாத உதவிகளைத் தந்து, தமது வரங்

களையும் ஏராளமாய் உனக்கு அளித்தாரன்றோ. நீ இதற்குச் சரியாய் நடந்துவந்தாயோ?

**மனப்பற்றுதல்.**—உன் முழு இருதயத்தோடு சர்வேசுரனுக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்து, இதுவரையில் அவர் உனக்கு அளித்த வரப்பிரசாதங்களுக்கு உன்னால் கூடியவரையில் உடன்முயற்சி செய்யவில்லையே யென்று தேவபயமும் மனஸ்தாபமும் உன் மனதில் எழுப்பக்கடவாய்.

**பிரதிக்கினை.**—நீதி நியாயத்துக்கும் நன்றியறிதலுக்கும் தக்கபடி, நீ தேவ ஊழியத்தில் எவ்வளவு மனத்தாராளமாய் இருக்கவேணுமென்று உன் மனச்சாட்சி சொல்லுகிறதோ, அவ்வளவு மனத்தாராளமாய் நடக்கப்பிரயாசப்படு.

## 3-ம் பிரிவு

### தேவதாயாரென்னும் பட்டத்துக்குப் பரிசுத்த கன்னியாஸ்திரீ செய்த ஆயத்தம்

**தியானம்.**—பரிசுத்த கன்னிமரியம்மாள் தாம் பிறந்த நேரமுதல் வார்த்தையானவர் மனுஷாவதாரமெடுத்த நேரம் வரையில், இந்த உச்சிதமான வர்த்தமானத்துக்கு இடைவிடாத ஆயத்தம் பண்ணிக்கொண்டு வந்தாள். கிரமந்தப்பின ஆசாபாசங்களின் வேகத்துக்கு நம்மைப்போல அவள் அஞ்சவேண்டியிராவிட்டாலும், தமது பஞ்சேந்திரியங்கள் பேரிலும், தமது இருதயப்பற்றுதல்கள்பேரிலும் வெகு சாக்கிரதையுடன் விழிப்பாயிருந்தாள். மூன்று வயதில்தானே அவள் தேவாலய மடத்தில் ஒதுங்கி: ஒடுக்கம், செபம், பிறசிநேக முயற்சி முதலிய நற்கிரியைகளில் தமது நாட்களைப் போக்கிக்கொண்டு, தீர்க்கதரிசனங்கள் நிறைவேறவும் உலக இரட்சகர் தீவிரமாய் எழுந்தருளிவரவும், சர்வேசுரனை நோக்கி மகா பத்தி உருக்க ஆவலோடு பிரார்த்தித்து வந்தாள்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—இப்பேர்க்கொத்த முயற்சிகளை நாமும் அனுசரித்து, கர்த்தர்



பிறந்த திருநாளுக்கு ஆயத்தஞ் செய்வோமாக. இந்த நவநாள் துவக்கினது முதற்கொண்டு மாத்திரமல்ல, திருச்சபையின் கருத்துப்படி ஆகமனகாலத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை தொடங்கியே நீ இப்படி நடந்துவந்தாயோ? இது விஷயமாய் நீ எதிலே தவறிப்போனாயென்று பார்த்து, இந்த நவநாளில் இன்னும் மீதியாயிருக்கிற நாட்களிலாவது பத்தி வேகத்தோடு நடப்பாயாகில், இயேசுநாதசுவாமி தமது ஏராளமான வரப்பிரசாதங்களோடு உன்னிடத்தில் எழுந்தருளிவந்து, உன் மன்றாட்டு விண்ணப்பங்களையெல்லாங் கேட்டருளுவாரென்பதற்குச் சந்தேகமில்லை.

**சம்பாஷணை.**—சர்வேசுரனுடைய தாயாரும் நம்முடைய தாயாருமாயிருக்கிற பரிசுத்த கன்னிகையோடு சம்பாஷணை செய்.

---

# 21-ம் தேதி

## நவநாளின் ஆறம் நாள்

### இரட்சகர் பிறந்த காலத்தின் விசேஷங்கள்

**ஆயத்தச் சிந்தனை.**—குறிக்கப்பட்ட காலம் சம்பூரணமாய் நிறைவேறின மாத்திரத்தில், சர்வேசுரன் தமது சுதனை அனுப்பினாரென்று அர்ச். சின்னப்பர் சொன்னதைக் கேட்பதாக ரூபிகரித்துக்கொள் (கலா. 5).

**தியானச் செபம்.**—சர்வேசுரன் உன்னைச் சந்தித்து உனக்கு ஆறுதல் வருவிக்குங்காலம் வருகிறவரையில் பொறுமையோடு காத்திருக்க வரப்பிரசாதங்கேள்.

## முதல் பிரிவு

**தியானம்.**—உலக இரட்சகர் பூலோகத்தில் எழுந்தருளிவந்த காலம் எது? சர்வேசுரன் நமது ஆதித்தாய் ஆதித்தகப்பனுக்கு வாக்குத்தத்தஞ் செய்து நாலாயிரம் வருஷத்துக்குப்பின் எழுந்தருளிவந்தார்! இந்த நாலாயிரம் வருஷமளவாக பழைய ஏற்பாட்டிலிருந்த நீதிமான்க

ளெல்லோரும் அவர் எப்போ எழுந்தருளி வருவாரோவென்று ஆசை ஆவலோடு காத்திருந்து, எந்நேரமும் பெருமூச்சுவிட்டுப் பத்தியோடு ஆண்டவரை நோக்கிப் பிரார்த்தித்துக்கொண்டிருந்தபின் அவர் எழுந்தருளிவந்தார். அவருடைய வருகைக்கு இவ்வளவுகாலம் தாமதமானதென்ன? மனிதன் பாவத்தைச் செய்தவுடனே இரட்சகர் வந்து அந்தப் பாவத்துக்குப் பரிகாரஞ் செய்து அவன் இழந்துபோன மோக்ஷ சுதந்தரத்தைத் திரும்பக் கொடுத்தால்; அவன் தன் பாவக்கொடுமையையும், அதினால் வந்த பொல்லாப்புகளையும், அந்தப் பாவத்தினின்று தானாய் எழுந்திருக்கச் சக்தியில்லாமையையும், இரட்சணிய உபகாரத்தின் பெருமையையும் ஒருபோதுஞ் சரியாய்க் கண்டுபிடித்திருக்கமாட்டான். அதினாலேதான் அவர் இவ்வளவு தாமதமாய் வந்தாரென்று வேதபாரகர் சொல்லுகிறார்கள். ஆயினும் அந்தக் காலம் வருமளவும் இருந்த மனுஷருக்கு இரட்சணியமடைய வழியில்லாமற்போகவில்லை. எப்படியென்றால்: சர்வேசுரனுடைய வார்த்தைப்பாட்டின்படியே ஓர் இரட்சகர் வருவாரென்று அவர்கள் நிச்சயமாய் அறிந்திருந்ததினாலே, வரப்போகிற அந்த இரட்சகர்மேலுள்ள விசுவாசத்தினாலும் அவருடைய பேறுபலன்களினாலும் இரட்சணியம் அடையக்கூடுமாயிருந்தார்கள். ஒரு இரட்சகர் வருவாரென்று சகல சாதி சனங்களும் பொதுவாய் விசுவசித்து எதிர்பார்த்திருந்ததாகத் தேச சரித்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—சர்வேசுரன் நம்மைச் சந்தித்துத் தமது வரங்களை நமக்கு அளிக்குமுன், நாம் நமது நிர்ப்பாக்கியத்தையும் பலவீனத்தையும் நன்றாய் உணர்ந்துகொள்ளவேணுமென்று சித்தமாயிருக்கிறார். ஏனென்றால்: இப்படி உணர்ந்துகொண்டால்தான் அவருடைய உபகார வரங்களை அதிகமாய் மதித்து, அதிக நன்றியுள்ளவர்களாய் நமது ஆத்துமத்துக்கும் அதிக ஞானப் பிரயோசனமுண்டாகும்படி வருந்துவோம்.

**மனப்பற்றுதல்.**—சர்வேசுரன் உலகத்தை இரட்சித்து தமக்குப் பிரமாணிக்கமுள்ள ஊழியர்களை அர்ச்சித்



துக்கொண்டு வருவதில் காண்பிக்கிற திவ்விய பராமரிப்பை
ஆச்சரியத்தோடு நினைத்து அவரை ஆராதிப்பாயாக.

**பிரதிக்கினை.**—சர்வேசுரன் தமது வரப்பிரசாத
ஆறுதலைத் தந்தருளும் வரையில் பொறுமையோடு செபத்
தில் நிலைத்திரு.

## 2-ம் பிரிவு

**தியானம்.**—திவ்விய இரட்சகர் உலகத்தில் எழுந்
கருளிவந்ததெப்போ? அவருடைய உருவகங்களை
யும் குண சாயல்களையும்பற்றி வேதத்தில் சொல்லப்பட்டி
ருந்த தீர்க்கதரிசனங்களெல்லாம் சம்பூரணமாய் நிறை
வேறின பின்மாத்திரம் எழுந்தருளி வந்தார். ஏனென்றால்:
அவர் பிறக்கவேண்டிய காலம் நெருங்கி வரவர அவ
ரைக் குறித்த அடையாளங்களும் தீர்க்கதரிசனங்களும்
அதிக தெளிவாய் வரையறுக்கப்படவும், யாதொரு
சந்தேகத்துக்கு இடமில்லாமல் நிறைவேறிவரவும், மனு
ஷர் இவைகளைக் கண்டு, பரம இரகசியங்களுக்கெல்லாம்
பெரிய பரம இரகசியமாகிய தேவசுதனுடைய மனுஷா
வதாரத்தையும், அவருடைய திவ்விய போதனையையும்,
திருச்சபையையும் படிப்படியாய் விசுவசித்துக் கைக்
கொள்ளவும் வேணுமென்று சர்வேசுரன் சித்தமாயிருந்
தார்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—
இக்காலத்திலுஞ் சர்வேசுரன் நமது பலவீனத்துக்குத் தக்
கது நம்மைக் கிருபாகடாட்சமாய்ப் பார்த்து நடத்திவரு
கிறார். அரிதான சத்தியங்களை விசுவசிக்க நமது மனம்
பின்வாங்குமானால், அதைத் திடப்படுத்தி விசுவாசம் வரு
விக்கத்தக்க நியாயங்களையும் முகாந்தரங்களையும் எண்பித்து
நாம் அவைகளை விசுவசிக்க உதவிசெய்கிறார். சுபா
வத்துக்கு வருத்தமான காரியங்களிலே நாம் தேவ கற்பனை
களுக்குப் பணிந்து புண்ணியத்தையனுசரிக்க, தமது
வரப்பிரசாதங்களை ஏராளமாய்த் தந்து ஒத்தாசை செய்
கிறார். இது உனக்குத் தெரிந்த காரியந்தானே. ஏனென்
றால் உனக்கு நேரிட்ட வருத்தமான பல காரியங்களிலும்,

பல சமயங்களிலும், முக்கியமாய் உனது தேவ அழைத்தலிலும் சர்வேசுரன்தாமே தமது விசேஷ வரப்பிரசாதங்களால் உன்னைத் தாங்கி நடத்தினாரென்று அறிந்திருக்கிறாயல்லவோ?

**மனப்பற்றுதல்.**—சர்வேசுரன் நம்மை இம்மாத்திரம் தயவோடு நடத்துவதைக்கண்டு ஆச்சரியத்தோடு அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்யக்கடவோம்.

**பிரதிக்கினை.**—சர்வேசுரன் தமது வரங்களை நமக்குத் தந்தருளும்படி அவரே நமது புத்தி மனதை ஆயத்தப்படுத்தவேணுமென்று மன்றாடக்கடவோம்.

## 3-ம் பிரிவு

**தியானம்.**—திவ்விய இரட்சகர் உலகத்தில் எழுந்தருளிவந்ததெப்போ? உரோமாபுரி இராயனாகிய அகுஸ்துஸ் என்பவன் பட்டத்துக்குவந்த நாற்பதாம் வருஷம், இந்தப் பூமியில் அறியப்பட்ட தேசங்களெல்லாம் ஏறக்குறைய ரோமானருடைய செங்கோலுக்குள் அமைந்து, ஒரே சட்டதிட்டங்களுக்குள்ளாகி எங்கும் சமாதானமாயிருந்த காலத்திலே எழுந்தருளிவந்தார். தனியேல் என்பவர் தீர்க்கதரிசனமாய் அறிவித்திருந்த நாலாம் அரசாகிய ரோமானருடைய இராச்சியம் அவ்வளவு பிரமாண்ட விஸ்தீரணமானதும், அவர்கள் சுமார் எழுநூறு வருஷகாலம் யுத்த கலகங்கள் நடத்தினபின் ஓய்ந்து எங்கும் ஒருப்படச் சமாதானமாயிருந்ததும், விசேஷ தேவ கிருபையால் நடந்த வர்த்தமானமென்று திருஷ்டாந்தமாய் விளங்குகின்றது. ஏனெனில்: சகல சாதி சனங்களையும் இயேசுநாதரிடத்தில் ஒரே ஞானக் குடும்பமாய்ச் சேர்ப்பதற்கு ஏதுவான அவருடைய பரிசுத்த சுவிசேஷமானது எங்கும் எளிதாய்ப் பரம்பும்படி, ரோமானர்களுடைய அரசாட்சியும் அந்தச் சமாதானமும் வழியாயிருக்கவேணுமென்று சர்வேசுரன் நிரூபித்திருந்தார்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—உலகத்தில் இதுவரையில் சென்ற அந்தந்த யுகங்களிலும்



காலங்களிலும் நடந்த வர்த்தமானங்களையெல்லாம் விசு
வாசக்கண்ணால் பார்ப்போமாகில் அவைகள் எல்லாத்தி
லும், இந்த நமது நாட்களிலுமுதலாய்த் தேவ பராமரிக்
கையின் செயலைக் கண்டுகொள்வோம். சர்வேசுரன் தமது
நித்திய சித்தத்தை நிறைவேற்றவும், தம்மால் தெரிந்து
கொள்ளப்பட்டவர்கள் இரட்சணியமடையவும், அந்தந்தக்
காரியங்களை ஆச்சரியத்துக்குரிய விதமாய் நடத்தி வருகிறா
ரென்று உணர்ந்துகொள்வோம். இப்படியிருக்க உலகத்
தில் நடக்கிற பொதுவும் பிரசித்தமுமான துக்க சந்தோஷ
வர்த்தமானங்களைப்பற்றி உலகத்தார் பேசுவதுபோல
நாமும் பேசாதபடி எச்சரிக்கையாயிருக்கக்கடவோம்.
இதெல்லாம் தாயவிளையாட்டுக்கு ஒப்பந்தமென்றும், தற்
செயலென்றும், அரசாளுகிறவர்களுடைய விவேக அவி
வேகத்தின் பலாபலனென்றும் அவர்கள் சொல்லுவார்கள்.
ஞானத்தெளிவடைந்த நாமோவென்றால் மெய்யான விசு
வாசிகளுக்கு யோக்கியமான வகையாய்ப் பேசுவோமாக.
கணக்கற்ற விசை, சர்வேசுரன் நமது புத்திக்கெட்டாத
யாதொரு காரியத்தை நினைத்து, அந்தந்தக் காரியம்
அந்தந்த விதமாய் நடக்கும்படி செய்வாரென்பதினாலே,
காரியங்கள் என்னென்னவிதமாய்ச் சம்பவித்தாலும்
அதெல்லாம் சர்வேசுரனுடைய சித்தமென்று உணர்ந்து,
சகலத்திலும் அவருக்குத் தோத்திரஞ் செய்யக்கடவோம்.
இப்படிச் செய்வோமானால் சர்வேசுரனுக்கும் உகந்தவர்
களாகி, பிறருக்கும் நற்படிப்பினையாயிருந்து, விசுவாசம்,
நம்பிக்கை, தேவசிநேகமென்னும் புண்ணியங்களிலும்
நாளுக்குநாள் விர்த்தியடைவோம்.

**சம்பாஷணை.**—இன்றையத் திருநாளுக்குரிய அப்
போஸ்தலரான அர்ச். தோமையாரோடு சம்பாஷணை
செய்வோமாக. அவர் இயேசுநாதருடைய திருவிலாக்
காயத்திலே தமது விரலை வைத்து: என் ஆண்டவரே,
என் சர்வேசுராவென்று சொன்னபோது அவரிடத்தில்
உண்டான உயிருள்ள விசுவாசமும் சிநேகப்பற்றுதலும்
நம்மிடத்திலும் உண்டாகும்படி அவரை மன்றாடக்கட
வோம்.

# 22-ம் தேதி

## நவநாளின் ஏழாம் நாள்

### மாம்ஸமான தேவ வார்த்தையால் நமக்குவந்த நன்மைகள்

**ஆயத்தச் சிந்தனை.**—பெத்லேமூர் மாட்டுக்கொட்டிலிலே திவ்விய குழந்தையாகிய இயேசுநாதர் நமக்காக அழுதுகொண்டிருப்பதாக ரூபிகரித்துக்கொள்.

**தியானச் செபம்.**—தேவ பாலன் நமதுமேல் வைத்த அளவில்லாத பட்சத்தினாலே நமக்களித்த நன்மை உபகாரங்களை நன்றாய் மதிக்க வரப்பிரசாதங் கேள்.

## முதல் பிரிவு

### நம்மைச் சிருஷ்டித்த உபகாரம்

**தியானம்.**—அர்ச். அருளப்பர் உன்னதமான வாக்கியங்களால் தமது சுவிசேஷத்தைத் துவக்கியிருக்கிறமேரையாவது: ஆதியிலே வார்த்தையானவரிருந்தார். வார்த்தையானவர் சர்வேசுரனிடத்திலுமிருந்தார். வார்த்தையானவர் சர்வேசுரனாகவுமிருந்தார். அவரால் சகலமும் உண்டாக்கப்பட்டதொழிய உண்டாக்கப்பட்டவைகளில் அவரின்றி யாதொன்றும் உண்டாகவில்லை. வார்த்தையானவர் மாம்ஸமாகி நம்மோடு வாசமாயிருந்தாரென்கிறார். ஆகையால் சர்வேசுரன் நியமித்த காலம் வந்தபோது, சாவுக்குரிய நமது சுபாவத்தையெடுத்த அந்த நித்திய வார்த்தையானவரால்தான் இந்தப் பிரபஞ்சமெல்லாம் ஒன்றுமில்லாமையினின்று சிருஷ்டிக்கப்பட்டது. இதில் அடங்கியவைகளில் யாதொன்றும் அவரின்றி உண்டாகாததினாலே நாமும் அவராலேதான் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம். ஆகையால் நாம் ஒரு வஸ்துவாயிருப்பதற்கும், நமக்குக் கிடைத்திருக்கிற பிரபஞ்ச சீவியத்துக்கும் இனி கிடைக்கப்போகிற நித்திய சீவியத்துக்கும் அவரே காரணமொழிய வேறல்ல.



**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—வார்த்தையானவர் மாம்ஸமெடுத்து மனுஷனாகப் பிறந்த திருநாளை யோக்கியமான விதமாய்க் கொண்டாடும்படி ஆயத்தஞ்செய்கிற இந்த நாட்களிலே, நாம் பிறந்த நாளையும் நினைத்து, நமக்கு உயிர்கொடுத்த அந்தத் திவ்விய கர்த்தருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செலுத்துவது நியாயமாமே. ஆனால் அந்தத் திவ்விய கர்த்தர் நமதுமேல் விசேஷ கிருபாகடாட்சம் வைத்து, தாம் மனுஷாவதாரமெடுத்தபின் கிறீஸ்துவர்களான தாய்தகப்பனிடத்தினின்று நாம் பிறக்கச் செய்து, நமது ஞான உயிர் பிழைக்க வேண்டிய நன்கொடைகளையெல்லாம் பூரணமாய்க் கொடுத்திருக்கிறதினாலே, அவரை உருக்கமாய்ச் சிநேகித்து நமது இருதய பற்றுதலெல்லாங் கூட்டி அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ்செய்ய, நமதுமேல் எம்மாத்திரங் கடன் சுமந்திருக்கிறது! இந்த மகத்தான உபகாரத்தை நீ அடிக்கடி நினைத்து, பக்திவிநயத்தோடு அவருக்குத் தோத்திரஞ் செய்து வருகிறாயோ?

**மனப்பற்றுதல்.**—கர்த்தர்மட்டில் உன் உள்ளத்தில் அத்தியந்த பத்தி நேசமும், நன்றியறிதலுமுள்ள பற்றுதலையெழுப்பி, உன்னை முழுதும் அவருக்கு ஒப்புக்கொடு.

**பிரதிக்கினை.**—திவ்விய கர்த்தர் நமக்கு உயிர்கொடுத்த உபகாரத்தை நினைத்து, இந்த நவநாட் செபத்தில் நமது உயிரை அவருக்குப் பாதகாணிக்கையாக வைக்கக்கடவோம்.

## 2-ம் பிரிவு

### நம்மை இரட்சித்த உபகாரம்

**தியானம்.**—அவதரித்த தேவ வார்த்தையானவர் வாக்குக்கெட்டாதவிதமாய் நம்மைச் சிநேகித்து, நம்மை இரட்சித்தது நமக்கு அவர் செய்த இரண்டாம் உபகாரமாகும். நம்மை அவர் அளவற்ற விதமாய்ச் சிநேகித்ததினாலே, நமதுமேல் வரவிருந்த தேவ சாபத்தைத் தமதுமேல் போட்டுக்கொண்டு, ஆதாமிடமாய் நம்மெல்லோர்பேரிலும்

சாட்டப்பட்ட பாவத்துக்கு உத்தரித்து நமது அக்கிரமங்களின் அசுத்தக் கறைகளைத் தமது திரு இரத்தத்தால் கழுவச் சித்தமானார். கிறீஸ்துநாதர் நமக்காகத் தாம்தாமே சாபத்துக்கு உட்பட்டு முறைமையின் சாபத்தினின்று நம்மை மீட்டிரட்சித்தாரென்று அர்ச். சின்னப்பர் அருளிச்செய்தார் (கலா. 3). நமது பாவங்களைத் தமது திரு இரத்தத்தினாலே கழுவிச் சுத்தமாக்கினாரென்று அர்ச். அருளப்பர் காட்சியாகமத்தில் எழுதிவைத்தார் (காட்சி. 1). நாம் இரட்சிக்கப்படாதேபோனால் நாம் பிறந்தும் ஒரு பலனுமில்லையென்கிறதினாலே, நாம் சிருஷ்டிக்கப்பட்ட உபகாரத்தைவிட இரட்சிக்கப்பட்ட உபகாரத்தை அதிகக் கனமாய் எண்ணவேணும். நமக்கு இரட்சணியப்பலன் இல்லாவிட்டால், பிறந்த பலனென்னவென்று அர்ச். அகுஸ்தீனார் கேட்டிருக்கிறார். மேலும் தேவசுதன் நம்மைச் சிருஷ்டித்ததைவிட இரட்சித்ததில்தான் அதிக சிநேகத்தின் அத்தாட்சியைக் காண்பித்திருக்கிறார். ஏனென்றால்: அவர் சொல்லவே சகலமும் உண்டானதென்று தேவசங்கீதத்தில் எழுதப்பட்டிருக்கிறபடியே நம்மைச் சிருஷ்டிக்கிறதற்கு ஒரு வார்த்தைமாத்திரம் சென்றது. நம்மை இரட்சிக்கிறதற்கோ தமது இரத்தமெல்லாஞ் சிந்தவேண்டியிருந்தது. இதினிமித்தமே இயேசுநாதருடைய விலைமதியாத திரு இரத்தத்தினாலே இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்களென்று அர்ச். இராயப்பர் எழுதிவைத்தார் (1 இரா. 1).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—அவதரித்த வார்த்தையாகிய திவ்விய குழந்தையானவர், பெத்லேகூர் மாட்டுக்கொட்டிலிலேயே நமது இரட்சணிய வேலையைத் துவக்கச் சித்தமாகி, அங்கேயே தமது முந்தின கண்ணீர்களைச் சிந்தி, தம்மை முழுதும் தேவநீதிக்குப் பரிகாரப்பலியாக ஒப்புக்கொடுத்தார். வாக்குக்கெட்டாத இந்தச் சிநேக பரம இரகசியத்தின்மேல் தியானிக்கிறவர்களெல்லோரும் இதினால் அடையவேண்டிய பலன் ஏதென்றால்: அர்ச். சின்னப்பர் சொல்வதுபோல, அவர்கள் இனித் தங்களுக்காகச் சீவியாமல், தங்களைப்பற்றி மரித்து உயிர்த்தவருக்காகச் சீவிக்கக்கடவார்கள் (2 கொரி. 5). இப்படி



யிருக்க உன் நினைவிலும் இருதயப் பற்றுதலிலும் உன் திவ்விய இரட்சகருக்கு முதலிடங்கொடாமல், அவருடைய பிரியத்தைப்பார்க்க உன்னுடைய சொகுசு பெருமை முதலியவைகளை மேலாக எண்ணித் தேடுவாயானால், உன்னை எவ்வளவோ நன்றியறியாத பாவியென்று சொல்லவேணும்? நீ இப்படி நடந்தாயோவென்றும் எத்தனை விசை இப்படி நடந்திருக்கிறாயென்றும் பார்.

மனப்பற்றுதல்.—ஆ, என் திவ்விய இயேசுவே, என்னில் நான் மரித்து, உம்மில் சீவித்திருப்பது எக்காலமோவென்று தேவ சிநேகம் நிறைந்த ஒரு மகாத்துமாவானவர் சொல்லிவந்ததுபோல நீயும் அடிக்கடி சொல்லிவரக்கடவாய்.

பிரதிக்கினை.—இடைவிடாத ஒறுத்தல் செய்து எனக்கே நான் அதிகமதிகமாய் மரித்தவனாகும்படி பிரயாசப்படுவேன்.

## 3-ம் பிரிவு

### நம்மைச் சர்வேசுரனுக்குச் சுவீகாரப் பிள்ளைகளாக்கின உபகாரம்

தியானம்.—நம்மைப் பாவத்தின் அடிமைத்தனத்தினின்று மீட்டிரட்சித்துத் தமது பரம பிதாவோடு உறவு கட்டிவைத்தது, அவதரித்த தேவ வார்த்தையானவருடைய சிநேகத்துக்குப் போதாமல், இன்னும் நம்மை அவருக்குச் சுவீகாரப் புத்திரராகவும், தம்மோடு உடன் பங்காளிகளாகவுஞ் செய்யத் திருவுளமானார். இது எவ்வளவு பெரிய உபகாரமென்று நமது சொற்பப் புத்தியால் சரியாய்க் கண்டுபிடிக்கக்கூடாது. அவர் தமது தேவசுபாவத்தோடு நமது மனுஷ சுபாவத்தையும் ஒன்றாகக் கூட்டி, நம்மைத் தேவசுபாவத்துக்குப் பங்காளிகளாக்கினாரென்று அர்ச். இராயப்பர் அருளிச் செய்தார் (2 இரா. 1). குறிக்கப்பட்ட காலம் நிறைவேறினபோது, சர்வேசுரன் நம்மைத் தமக்குச் சுவீகாரப் பிள்ளைகளாக்கும்படி தமது திருக்குமாரனை அனுப்பினாரென்று அர்ச். சின்னப்பர் சொல்லியிருக்கிறார் (கலா. 4). மேலும் நாம் சர்வேசுரனுக்குப் பிள்ளைகளா

ஞல் அவருடைய உரிமைக்காருமாகிறோம். சர்வேசுர னுடைய உரிமைக்காரராஞல் இயேசுநாதருடைய பங்காளி களுமாயிருக்கிறோமென்று அந்த அப்போஸ்தலரே சொல் லியிருக்கிறார் (உரோ. 8).

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—இந்த நினைப்பு எப்போதும் நமது புத்தியில் நன்றாய்ப் பதிந்திருந் தால், நாம் எவ்வளவோ மேலான சிந்தையுள்ளவர்களா யிருந்து எவ்வளவோ அர்ச்சியசிஷ்டதனமாய் நடந்துவரு வோம்! இப்படியே நமக்கு ஆகும்படி வேண்டிய வழி வகைகள் செய்துகொள்ளக்கடவோம்.

**சம்பாஷணை.**—நம்மை மீட்டிரட்சித்த இயேசுநாத சுவாமியோடு சம்பாஷணை செய்வோமாக.

---

## 23-ம் தேதி

### நவநாளின் எட்டாம் நாள்

#### குழந்தை இயேசுநாதரிடத்தில் நாம் கண்டுபாவிக்கவேண்டிய இலட்சணங்கள்

**ஆயத்தச் சிந்தனை.**—நீங்கள் சிறு குழந்தைகளுக் குச் சமானமாகாவிட்டால் பரலோக இராச்சியத்தில் பிர வேசிக்கமாட்டீர்களென்று திவ்விய இரட்சகர் சொல்வதாக ரூபிகரித்துக்கொள் (மத். 18).

**தியானச் சேபம்.**—பாலருக்குச் சுபாவமாயுள்ள குணங்களை, நாம் புண்ணியத்தினால் நம்மிடத்திலே பிறப் பிப்பதெப்படியென்று அறிந்துகொள்ளத் தேவ அநுக்கிர கத்தைக் கேட்கக்கடவோம்.

### முதல் பிரிவு

#### பாலருக்கு இயல்பான மனத்தூய்மை

**தியானம்.**—தேவ வார்த்தையானவர் நமது நிமித்தம் மாம்சமாகிச் சிறு பாலனைப் பிறந்த பரம இரகசியத்தை



நாம் தியானிக்கும்போது, அத்திவ்விய குழந்தையானவர் மற்றக் குழந்தைகளுக்குச் சமானமாய் அவர்களுக்குச் சுபாவமாயுள்ள நற்குணங்களையெல்லாங் கொண்டிருந்தா ரென்று நிச்சயிக்கவேணும். ஆனால் குழந்தை இயேசு நாதர் பூரண புத்தி விபரமுள்ளவராயிருந்தபடியினாலே, குழந்தைகளுக்குரிய இந்த நற்குணங்கள் அவரிடத்தில் சுபாவ நற்குணங்களாய்மாத்திரம் இராமல், சுபாவத்துக்கு மேற்பட்ட புண்ணியங்களாகவும் பேறுபலனுள்ளவைகளா கவும் இருந்தன. இவைகளை நாம் கண்டுபாவித்து அநுச ரிக்கப் பிரயாசப்படவேண்டியது. இவைகளில் முந்தின நற்குணமேதென்றால்: பாவமும் பாவத்தின் அற்ப மாசு மில்லாத பரிசுத்ததனமாம். சிறு குழந்தைகள் நன்மை அல்லது தின்மையான யாதொரு கிரியையுஞ் செய்யத் திராணியில்லாதவர்களாய் இருக்கிறபடியால், அவர்கள் எவ் வித கர்மப்பாவமுமில்லாமல் பரிசுத்தமாயிருப்பது அவர்க ளுடைய சுபாவத்துக்குப் பொருந்தினதாயிருந்தாலும் அதி ஞல் அவர்களுக்கு ஒரு புண்ணியமும் பலனுமில்லை. குழந்தை இயேசுநாதரோவென்றால்: பெரியவர்களுக்குரிய புத்தி ஞானமுதலிய தத்துவங்களோடிருந்தபடியினாலே, அவரிடத்தில் மேற்படி பரிசுத்ததனமானது மெய்யான புண்ணியமாயிருந்தது. அதினாலே அவர் தின்மையாகிய பாவத்தின்மேல் அத்தியந்த பகையும், நன்மையாகிய புண் ணியத்தின்மேல் அளவற்ற சிநேகமுங் கொண்டிருந்தார்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—இப் படியிருக்கக் குழந்தை இயேசுநாதருக்கு நீ பிரியப்படவும், அவரிடத்திலே விசேஷ சகாயமடையவும் உனக்கு மன துண்டானால், எல்லாத்துக்கும் மேலாய்ப் பாவத்துக்குப் பயந்து அதை அருவருத்து விலக்கவேணும். மேலும் இரு தயப் பரிசுத்ததனத்தில் நாளுக்குநாள் விருத்தியடையவும், நீ வாடிக்கையாய்க் கட்டிக்கொள்ளுங் குற்றங்குறைகள் மட்டில் எச்சரிக்கையாயிருந்து, இதுமுதல் அவைகளைத் தவிர்த்து நடக்கவும் பிரயாசப்படக்கடவாய்.

**மனப்பற்றுதல்.**—ஆண்டவரே, என்னிடத்தில் சுத் தமான இருதயத்தை உண்டாக்கி என் பாவ அக்கிரமங்களி

னின்று என்னை அதிகமதிகமாய்க் கழுவிச் சுத்தமாக்கியருளும் (சங். 50).

**பிரதிக்கினை.**—நீ வழக்கமாய்க் கட்டிக்கொள்ளுங் குற்றங்கள் எவையென்று விசாரித்து, திரும்ப அவைகளுக்கு இடங்கொடாதிருக்கும்படி ஆன உபாயங்களைத் தேடி அனுசரிக்கக்கடவாய்.

## 2-ம் பிரிவு

### பாலருக்கு இயல்பான தாழ்ச்சி

**தியானம்.**—தாழ்ச்சியாயிருக்கிறது, அல்லது எவ்வித வீண் பெருமை சலாக்கியத்துக்கு ஏதுவான எண்ணமில்லாமலிருக்கிறது, குழந்தைகளுக்குரிய இரண்டாம் இலக்ஷணமாம். ஆனால் குழந்தையானது தான் மனிதனாய்ப் பிறந்திருக்கிற மேன்மையை மதிக்கவும், தனக்குச் செய்யப்படும் அவமான முதலிய குறைகளை அறியவுங் கூடாதிருக்கிறதினாலே அதின் தாழ்ச்சிக்கு ஒரு பலனுமில்லை. பாலனான இயேசுநாதரிடத்தில் இப்படியல்லவே. ஏனென்றால்: அவர் தாம் தேவசுதனென்றும், தமது மகத்துவ மேன்மையினிமித்தம் தமக்குச் சங்கை வணக்கஞ் செல்லவேண்டியதென்றும் நன்றாய் அறிந்திருந்ததுமன்றி, மனிதர்கள் தம்மைப் புறக்கணித்துக் கைநெகிழ்ந்ததையும் தமக்குச் செய்த அவமானங்களையும் கூர்மையாய் உணர்ந்திருந்தார். ஆயினும் இதைப்பற்றி அவர் முறையிடவும் பழிவாங்கவும் நினையாமல், நமது பாவங்களாலும் கீழ்ப்படியாமையாலும் தமது தேவபிதாவுக்குச் செய்யப்பட்ட சகல அவமானங்களுக்கும் பரிகாரமாக, எவ்வித நிந்தை சிறுமைகளையும் மனம்பொருந்தி ஏற்றுக்கொண்டார்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—நமக்கு எவ்வித நிந்தை அவமானங்கள் வந்தாலும், அவைகளையெல்லாம் சுபாவத்துக்கு மேலான முகாந்தரங்களைப்பற்றிப் பொறுமை தாழ்ச்சியோடு சகித்துக்கொள்வோமானால், சுவிசேஷத்தில் கற்பிக்கப்பட்டபடி நாம் குழந்தைகளுக்குச்



சமானமாவதுமல்லாமல் மாம்ஸமான தேவ வார்த்தையாகிய குழந்தை இயேசுநாதருக்கும் பிரியமுள்ளவர்களாவோம். ஆகையால் நாம் உலகத்தில் பெரியவர்களென்று பேரெடுத்துச் சகலராலும் மகிமை வரிசை பண்ணப்படுவதைப் பார்க்க, நமது நிமித்தம் பிறரால் மறக்கவும் புறக்கணிக்கவும் பட்டு, தாழ்மை நிந்தைகளுக்குள்ளான இயேசுநாதரோடு நாமும் தாழ்மை நிந்தைகளுக்குள்ளாகவும், சகலராலும் புறக்கணிக்கப்பட்டு மறக்கப்படவும் ஆசிப்போமாக. இந்த உன்னதமான தாழ்ச்சியென்னும் புண்ணியத்தையடைய எவ்வித வருத்தத்துக்கும் பின்வாங்காமல் உதாரமாய்ப் பிரயாசப்படக்கடவோம்.

**மனப்பற்றுதல்.**—சிறுபாலன் ரூபமெடுத்துத் தம்மை அத்தியந்த விதமாய்த் தாழ்த்தின தேவ வார்த்தையானவரை நோக்கி, நீ தாழ்ச்சியில் வளரவும் உன் கண்ணுக்கே நிசிதமாய்த் தோன்றவும் அனுக்கிரகங் கேள்.

**பிரதிக்கினை.**—நீ தாழ்ச்சியில் நிலைகொள்ளும்பொருட்டு, உனக்கு யாதொரு நிந்தை அவமானம் வருவிக்கக்கூடிய சமயமேதென்று முன்னதாகப் பார்த்து, அந்தச் சமயத்தைத் தப்பவிடாமல் கைப்பற்றிக்கொள்.

## 3-ம் பிரிவு

### பாலருக்கு இயல்பான கீழ்ப்படிதல்

**தியானம்.**—சிறுபாலருக்கு எதிர் நியாயம் பேசத் தெரியாதபடியினாலே அவர்கள் சுபாவமாய்க் கீழ்ப்படிதலுள்ளவர்களாய் இருப்பார்கள். பிறர் மனம்போல் தங்களை நடத்தட்டுமென்று விட்டுவிடுவார்கள். அந்தந்தக் காரியம் எப்படியென்று அவர்கள் ஆராய்கிறதுமில்லை; அவைகளிலுள்ள குற்றங் குறைகள் கூறுகிறதும் முறுமுறுக்கிறதுங் கிடையாது. ஆயினும் அவர்களுடைய கீழ்ப்படிதலுக்கு யாதொரு பேறுபலனுமில்லை. பாலனாய்ப் பிறந்த தேவசுதனோவென்றால் இப்படியல்ல. அவர் பூரண புத்திவிபாமுள்ளவராயிருந்தபடியாலும், அவரே அள

வற்ற ஞானமென்கிறதினாலும், தம்மை மற்றவர்கள் அங்குமிங்கும் தூக்கித்திருப்பிவைப்பதிலும், தமதுமட்டில் சனங்கள் நடந்துகொள்ளும் விதத்திலும் உள்ள குறை குற்றங்களெல்லாம் அவர் கண்டு உணர்ந்திருந்தார். ஆயினும் அவைகளால் தமக்குண்டான வருத்தத்தை அற்பச் சாடை சயிக்கினையினால் முதலாய் அவர் வெளிவிடாமல், எப்போதும் எல்லாத்திலும் தமது மனதும் புத்தியும் உத்தமமாய் ஒத்திருக்கச்செய்து சகலருக்குங் கீழ்ப்படிந்து வந்தார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது—சிறு குழந்தைகள் சுபாவத்திலே கீழ்ப்படிதலுள்ளவர்களாய் இருக்கிறதைப்போல, யாரார் தங்கள் பிரயாசத்தினாலும் புண்ணியத்தினாலும் கீழ்ப்படிதலுள்ளவர்கள் ஆகிறார்களோ அவர்கள் மெய்யாகவே பாக்கியவான்கள். இப்பேர்ப்பட்ட பாக்கியவான்களுக்குள்ளே நாமும் ஒருவராயிருக்கப் பிரயாசப்படக்கடவோம்.

சம்பாஷணை.—நமதுமேல்வைத்த நேசத்தினால் மனுஷாவதாரமெடுத்துச் சிறுபாலனாய்வந்த, தேவ வார்த்தையானவருடைய அத்தியந்த தாழ்மையைக் கண்டு பிரமித்துத் தியானித்துக்கொண்டிருந்த பரிசுத்த கன்னிமரியம்மாளோடு சம்பாஷணை செய். நீங்கள் சிறு பிள்ளைகளைப் போல் ஆகாதிருந்தால் பரலோக இராச்சியத்தில் பிரவேசிக்கமாட்டீர்களென்று அவர் திருவுளம்பற்றின வாக்கியத்தின் அர்த்தத்தைக் கண்டுபிடித்து, அதற்குத் தக்கவண்ணம் நடந்துகொள்ளும்படி அந்த ஆண்டவனுடைய உதவியை இரந்து மன்றாடு.



# 24-ம் தேதி

## நவநாளின் ஒன்பதாம் நாள்—கர்த்தர் பிறந்த திருநாளுக்கு முந்தின நாள்

### இன்று நமது சிந்தனை உணர்ச்சிகளும் கிரியைகளும் எப்படியிருக்கவேணுமென்பதின்பேரில்

ஆயத்தச் சிந்தனை.—ஆண்டவர் வரப்போகிறதை இன்றைக்கே அறிந்துகொள்வீர்கள். நாளை அவருடைய மகிமைப்பிரதாபத்தைக் காண்பீர்களென்று சங்கீத மாலையில் சொல்லப்பட்டிருக்கும் வாக்கியங்களைக் கேட்பதாக ரூபிகரித்துக்கொள்.

தியானச் சேபம்.—நமது சிந்தனை உணர்ச்சிகளும் கிரியைகள் முதலிய யாவும், நாளைக் கொண்டாடப்போகிற பெரிய திருநாளுக்கு ஆயத்தமாயிருக்கும்படி வேண்டிய அநுக்கிரகங் கேட்போமாக.

## முதல் பிரிவு

### இன்று நமது சிந்தனைகள் எப்படியிருக்க வேணும்?

தியானம்.—மனுஷனுடைய புத்தி ஒருபோதும் சும்மா இராமல், எப்போதும் எதைப்பற்றியாவது யோசித்துக்கொண்டிருக்கும். நமது புத்திக்கு ஒருபோதும் இளைப்பாற்றி கிடையாது. ஆயினும் அனந்தம் விசை நாம் நினைக்கிறது என்னவென்று நமக்கே தெரியாது. ஏனென்றால்: நாம் நமது நினைவுகளை எப்போதும் ஒரு காரியத்தின்மேல் கவனமாய்ச் செலுத்தாதபடியினாலே அவைகள் ஒன்றிலும் நிலையில்லாமல் ஆடிக்கொண்டிருக்கும். அப்பேர்ப்பட்ட சமயங்களில் நமது நினைவுகளை நன்மையென்றும் தின்மையென்றுஞ் சொல்லப்படாது. ஆனால் இன்று நமது நினைவுகளை அப்படி விட்டுவிடாமல், அவைகளையெல்லாம் நாளை நாம் கொண்டாடப்போகிற பெரிய திருநாளாகிய சுவாமி பிறந்த திருநாளை நோக்கியிருக்கும்படி செய்வோமாக.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—மேற்கண்டபடி நமது நினைவெல்லாம் நாளைத் திருநாளை நோக்கியிருக்கும்படியாக இன்றைப்பத்தினம் விசேஷமாய்த் திவ்விய பூசை நேரத்திலே பாவசங்கீர்த்தனத்துக்கு ஆயத்தம் பண்ணி, நமது உள்ளத்தில் உத்தம மனஸ்தாபத்தை எழுப்பக்கடவோம். இதன்பின் நமது அலுவல்களைச் செய்துகொண்டே, அக்காலத்தில் இந்தத் தேதியில் நடந்த வர்த்தமானங்களையும் பிரதானமாய்த் தேவமாதாவும் அர்ச். சூசையப்பரும் நசரேத்தூரிலிருந்து பெத்லேமூருக்குப்போன பயணத்தையும் அடிக்கடி சிந்திக்கக்கடவோம். அவர்கள் செய்த மூன்று நாள் பிரயாணத்தில் நினைவினாலே அவர்களைப் பின்சென்று, அவர்கள் அனுபவித்த களைப்புத் தவிப்பு எம்மாத்திரமென்று மனமிரங்கி விசாரிக்கக்கடவோம். மேலும் சமயத்துக்குச் சமயம் பரிசுத்த கன்னிகையிடமாய் நமது கண்களைத் திருப்பி, அந்தப் பயணத்தில் அவளுக்கு நேரிட்ட சகல வருத்தங்களிலும், பெத்லேமூரில் அவளுக்கு இல்லிடங் கிடையாமல் சகலராலும் தள்ளுண்டபோது, அவளுக்கு வந்த நிந்தை அவமானங்களிலும் அவள் காண்பித்த பொறுமை அமரிக்கையைக் கண்டு அதிசயிப்போமாக. அவள் தமது திரு உதரத்தில் சுமந்திருந்த தேவ பாலன் அவளுக்கு எல்லாத்திலும் எல்லாமுமாயிருந்தார். இதினாலேதான் அவள் சகல காரியத்திலும் மனத்திர்ப்தியாயிருந்தாள். நாம் பராக்குகளைத் தவிர்த்து மன ஏகாந்தமாயிருந்து, திருச்சபை ஆசிக்கிறது போல நாளைத் திருநாளுக்கு நல்ல ஆயத்தஞ் செய்யும்படி இந்த நினைவுகள் நமக்கு மகா உதவியாயிருக்குமென்பதற்குச் சந்தேகமில்லை.

**மனப்பற்றுதல்.**—அகுஸ்துஸ் இராயன் குடித்தொகை எழுதக் கற்பித்ததும், அதினிமித்தம் பரிசுத்த கன்னிகை நசரேத்தூரைவிட்டுப் பெத்லேமூருக்குப் போக வேண்டியிருந்ததும், அங்கே அவளுக்கு இல்லிடங் கிடையாமல் சகலராலுந் தள்ளப்பட்டதுமாகிய இந்த வர்த்தமானங்களில் சர்வேசுரனுடைய பராமரிக்கையின் கருத்துகளை யோசித்து ஆச்சரியப்படுவாயாக.



**பிரதிக்கினை.**—நாளையத் திருநாளின் பரம இரகசியங்களின்பேரில் விடாத நினைப்பாயிருக்கப் பிரயாசப்படு.

## 2-ம் பிரிவு

### இன்று நமது மன உணர்ச்சிகள் எப்படி இருக்கவேணும்?

நமது இருதயத்திலே எவ்வித தோற்றங்
**தியானம்.**—நமது இருதயத்திலே எவ்வித தோற்றங் அச்சுப்போல் எளிதாய்ப் பதியும்.
களும் எண்ணங்களும் அச்சுப்போல் எளிதாய்ப் பதியும்.
நமது மனம்போல் அவைகளை மாற்றவும், கூட்டவுங்
குறைக்கவும் நம்மால் எப்போதும் கூடாது. ஆயினும்
நமக்கு மனதுண்டானால், பிரயாசப்பட்டு ஒரு உணர்ச்சி
அல்லது பற்றுதலைவிட வேறொரு உணர்ச்சி அல்லது
பற்றுதலை அதிகமாய் எழுப்பிக்கொள்ளலாம்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—
ஆகையால் நமது மனதின்மேல் நமக்குள்ள கர்த்தத்துவத்
தைக்கொண்டு தேவபாலன் பிறந்த இராத்திரியில் நம்மிடத்
திலிருக்கத்தக்க பத்தி உருக்கமான உணர்ச்சிகளை இன்று
முழுதும் நமதுள்ளத்தில் எழுப்பிக்கொண்டிருக்கக்கட
வோம். உன்னத சர்வேசுரனாயிருக்கிறவர் நமக்காக மனு
ஷசுபாவமெடுத்துச் சிறுபாலனாக வந்தாரேயென்ற ஆச்
சரியமும், நமதுள்ளத்தில் அவர் ஞானவிதமாய் வந்து
பிறக்கவேணுமென்று மகா ஆசையும், அவருக்கு நமது
இருதயத்தில் நாம் யோக்கியமான இடம் தயார்பண்ண
வில்லையேயென்ற பயமும், அவர் தமது அளவற்ற நன்
மைப் பெருக்கத்தினின்று நமக்கு ஏராளமான நன்மை
களைப் பொழிந்தருளுவாரென்று மட்டற்ற நம்பிக்கையும்,
இவை முதலிய பத்தியுள்ள முயற்சிகளை நம்மிடத்தில்
எழுப்பக்கடவோம்.

**மனப்பற்றுதல்.**—இந்தத் தியான நேரத்தில் சில
நேரமளவாக மேற்கண்ட பற்பல பத்தி முயற்சிகளைச்
செய்துகொண்டிரு.

**பிரதிக்கினை.**—நம்பிக்கைக் குறையும் கோழைத்தன
முமான நினைவெல்லாம் உன்னைவிட்டு அகற்றக்கடவாய்.

## 3-ம் பிரிவு

### இன்று நமது கிரியைகள் எப்படியிருக்கவேணும்?

**தியானம்.**—அன்றாடம் நாம் செய்யவேண்டிய வேலை அலுவல்களெல்லாம் இன்னின்னவென்று ஏறக்குறைய முன்னாடியே திட்டம்பண்ணப்பட்டிருக்கின்றன. அவைகள் முடிய, நாளும் முடியும். நாம் எப்போதும் உழைத்துத்தான் நாட்போக்கவேண்டியது. ஆகையால் ஒவ்வொரு நாளிலும் நாம் வேலைவிட்டுச் சும்மா இருக்கும் நேரம் வெகு சொற்பமேயொழிய மிகுதியல்ல. இதுகாரியத்தில் ஒரு நாளுக்கும் மற்றொரு நாளுக்கும் வித்தியாசமில்லாமல் எப்போதும் ஒரே மாதிரிகையாய்த்தானிருக்கும். ஆயினும் இன்றைக்கு ஒரு நாளாவது நமது வேலைகளை நிறுத்தி, ஏகாந்தமாயிருந்து நாளை நாம் கொண்டாடப்போகிற பெரிய திருநாளின்பேரில் தியானித்துக்கொண்டிருக்கக் கூடுமானால் நன்று! ஆனால் காரியத்தைப் பார்க்கும்போது இதற்கு முழுதும் விரோதமாயிருக்கிறது! ஏனென்றால்: பெரிய திருநாட்களுக்கு முந்தின நாளிலேதான் மிகுதியான வேலைகள் நமதுமேல் வந்து குவிகிறது வழக்கம். ஒரு விதத்தில் இல்லாவிட்டாலும் வேறுவிதத்தில் வழக்கத்துக்கு மிஞ்சின வேலைகள் நமதுமேல் சுமரும்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—இவ்வித வேலை அலுவல்கள் நமக்கு விக்கினமாய்த் தோன்றினாலும், இவைகளைத்தான் திருநாளுக்கு ஆயத்தமாக உதவிக்கொள்ளவேணும். அதெப்படியென்றால்: முந்த முந்த வழக்கத்துக்கு மேலாக நாம் செய்யவேண்டிய வேலைகளையும், நமக்கு உண்டாகும் களைப்பு வருத்தங்களையும் சர்வேசுரனுடைய சிநேகத்துக்காகக் கையேற்றுக்கொள்ளக்கடவோம். 2-வது, அவைகளை நமது பாவத்துக்குப் பரிகாரமாகவும் தபசாகவும் ஆண்டவருக்கு ஒப்புக்கொடுக்கக்கடவோம். இதுவே திருச்சபையின் கருத்து. இதற்காகத்தான் இன்று கடன் ஒருசந்தியும் கற்பித்திருக்கிறது. 3-வது, நமது வேலைகள் நடுவிலே மனவல்லயச் செபங்களை அடிக்கடி செபித்து, திவ்விய கர்த்தர் நமது இருதயத்தில்



எழுந்தருளிவரவேணுமென்று வேகமான ஆசையை நமது உள்ளத்தில் எழுப்பக்கடவோம். மேலும் அக்காலத்தில் இந்தத் தேதியிலே பரிசுத்த கன்னியாஸ்திரீயானவள் மகா கடினமான இடையூறுகளுக்குள்ளானதையும், இல்லிடம் கிடையாமல் எவ்வித காற்றுக்கும் பனிக்கும் திறக்கப்பட்ட மாட்டுக்கொட்டிலிலே, நடுச்சாமத்தில் தேவசுதனைப் பெற்றெடுக்க நேரிட்டதையும் நினைத்து, அத்திவ்விய கன்னிகையின்மேல் பிள்ளைக்குரிய பற்றுதலைக் காண்பிப்போமாக.

**சம்பாஷணை.**—தேவ தாயார் பட்ட வருத்தங்களுக்கும் சந்தோஷங்களுக்கும் பங்காளியாயிருந்த அர்ச். சூசையப்பரோடு சம்பாஷணை செய்.

---

# 25-ம் தேதி

## கர்த்தர் பிறந்த திருநாள்

### பெத்லேஹேமில் முன்னிட்டியிலே கிடத்தப்பட்டிருக்கும் தேவ குழந்தையை நோக்கித் தியானித்தல்

**ஆயத்தச் சிந்தனை.**—பெத்லேஹேமில் சுவாமி பிறந்த மாட்டுக் கொட்டிலைப் பார்க்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

**தியானச் செபம்.**—திவ்விய பாலனை இயேசுநாதரைக் கண்டபோது தேவமாதாவுக்கும், அர்ச். சூசையப்பருக்கும், இடையர்களுக்கும் உண்டான பத்தி நிறைந்த உணர்ச்சிகள் உன் இருதயத்திலும் உண்டாகும்படி அநுக்கிரகங் கேள்.

## முதல் பிரிவு

### மகா அன்புள்ளவரும் அன்புக்குரியவருமான திவ்விய குழந்தையை நோக்கித் தியானித்தல்

**தியானம்.**—கிறீஸ்துநாதர் நமக்காகப் பிறந்திருக்கிறார். வாருங்கள், நமஸ்கரிப்போமாகவென்னும் இந்த வாக்கியத்தைச் சொல்லித் திருச்சபையானது இன்று

இராத்திரியில் செபிக்கப்படும் சங்கீத மாலையைத் துவக்குகிறதுமல்லாமல், பிறந்த திவ்விய பாலனை ஆராதிக்கச் சகல கிறீஸ்துவர்களையுங் கூப்பிட்டு அழைக்கின்றது. ஆகையால் என் ஆத்துமமே, திருச்சபையின் அழைத்தலுக்குக் காதுகொடுத்து, புத்தியால் பெத்லேமூருக்குப்போய் அங்கே நமக்காகப் பிறந்திருக்கிற திவ்விய பாலனைக் கண்டு தியானிப்போமாக. ஆ! ஆச்சரியமே, என்ன அபூர்வமான சினேகக்காட்சி நமது கண் முன் தோன்றுகிறது! சர்வ லோகங்களையும் ஒரு மொழியால் படைத்த ஆண்டவர் தம்மிடத்திலே நாம் பயமில்லாமல் வரவும், நமது இருதயங்களையெல்லாம் தமது பாரிசமாக்கவும், தமது தெய்வீக சோதிப்பிரகாசமெல்லாம் மறைத்துச் சிறுகுழந்தையாய்ப் பிறந்திருக்கிறார்! இப்படி நமக்காகத் தம்மை ஒன்றுமில்லாமையாக்கின இந்தத் திவ்விய கர்த்தர் எவ்வளவோ அன்புள்ளவர்! நாம் அவரைச் சினேகிக்க நமதுமேல் எவ்வளவோ கடன் சுமந்திருக்கிறது! அவர் உன்னை நோக்கித் தமது சிறு கரங்களை நீட்டி: வருந்திச் சுமை சுமக்கிற நீங்களெல்லோரும் நம்மிடத்தில் வாருங்கள். நாம் உங்களைத் தேற்றரவுபண்ணுவோம் (மத். 11). நாம் உலகத்துக்குத் தீர்வையிடவரவில்லை; அதை இரக்ஷிக்க வந்திருக்கிறோமென்று, இனிமேல் அவர் திருவாய் மலர்ந்து சொல்லப்போகிற வாக்கியங்களை இப்போது சயிக்கினையால் தெளிவிக்கிறதைப் பார் (அரு. 12).

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—இந்தத் திவ்விய பாலன் நமதுமேல் வைத்த அன்பினால் நம்மைப் பரலோகமட்டும் உயர்த்தும்படி, பரலோகத்தினின்று மாட்டுக்கொட்டிலில் இறங்கி வந்தாரென்று ஒருவன் தியானித்த பின், அவருக்குப் பிரதியன்பு செலுத்தி அவரைச் சிநேகியாமலிருக்கக்கூடுமோ? அவன் எவ்வளவான பாவங்களைக் கட்டிக்கொண்டிருந்தபோதிலும், இவ்வளவு அன்பும் தயாளமும் நிறைந்த கர்த்தருடைய நன்மைத்தனத்தை உணர்ந்து அவருடைய இருதயத்தினின்று புறப்படும் வார்த்தைகளைக் கேட்பானாகில், அவர்மேல் மகா மதுரமும் பூரணமுமான நம்பிக்கை கொள்ளாதிருப்பானோ?



**மனப்பற்றுதல்.**—திவ்விய கர்த்தர்மேல் நமதிருதயத்தில் அன்பை எழுப்பி, நம்மை முழுதும் அவருக்கு நேர்ந்துகொண்டு, நமது நம்பிக்கையெல்லாம் அவர்மேல் வைப்போமாக. மேலும் அவர் தமது சொந்தப் பிரயோசனத்தைத் தேடாமல் நம்மைச் சிநேகித்ததுபோல நாமும் நமது சொந்தப் பிரயோசனத்தைத் தேடாமல் அவரைச் சிநேகிக்க ஆசிப்போமாக.

**பிரதிக்கினை.**—பெத்லேமூர் மாட்டுக்கொட்டிலிலே தேவ பாலன் நமக்காக அழுதுகொண்டிருந்த அரிய காட்சியை இன்று முழுதும் இடைவிடாமல் நமது புத்தியின் கண்முன்பாக நிறுத்தி, நமது இருதயம் அவர்மேல் சிநேகப் பற்றுதலால் தாவிக்கொண்டிருக்கச் செய்வோமாக.

## 2-ம் பிரிவு

### மகா தரித்திரத்திலும் வருத்தத்திலும் பிறந்த திவ்விய குழந்தையை நோக்கித் தியானித்தல்

**தியானம்.**—தனவானாயிருந்தவர் உங்களுக்காகத் தரித்திரவான் ஆனார். உலக ஆஸ்திபாஸ்திக்கெல்லாம் உடையவரான இயேசுநாதர், உங்களுக்காக ஒன்றுமில்லாத ஏழையானாரென்று அர்ச். சின்னப்பர் அருளிச்செய்தார் (2 கொரி. 8). பிழைப்பதற்கு மகா அவசியமான காரியங்கள் முதலாய் அவருக்கு வெகுவாய்க் குறைபட, அம்மாத்திரம் தரித்திரத்துக்குள்ளாகி வருந்தினார். ஆ, என் ஆத்துமமே, உன் திவ்விய கர்த்தாவானவர் பிறந்த ஸ்தலத்தையும் அங்கே உன் கண்ணுக்குத் தென்படும் சகல காரியங்களையும் கவனமாய் உற்றுப்பார். எப்பக்கத்திலும் காற்றுக்கு மறைவின்றிப் பாழாய்க் கிடந்த ஒரு கொட்டிலையும், அதில் ஒரு முன்னிட்டியையும் கொஞ்சம் வைக்கோலையும் காண்பாய். இதுவே பாலனாய்ப் பிறந்த உன் இரட்சகரும் தேவனுமாகிய இயேசுநாதரைக் கிடத்தின தொட்டில். ஆ, இதென்ன தரித்திரம்! எம்மாத்திரம் வருத்தம்! அவர் துன்பநிறைந்த மனிதனாயிருப்பாரென்று இசையாசென்பவர் சொன்ன தீர்க்கதரிசனத்தை அவர் பிறந்ததுமுதல் நிறைவேற்றியருளினார் (இசை. 53).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இயேசுநாதர் சுத்தத் தரித்திரத்தை விரும்பி அதிலே வந்த சகல இக்கட்டுகளையும் முறையிடாமல் வலிய மனதோடு ஏற்றுக்கொள்ளுகிறார். ஏனென்றால்: இரட்சணியத்துக்கு மகா பெருந் தடையாகிய உலக சுக செல்வங்களை நாம் பிறக்கணிக்கும்படி நம்மை உடன்படுத்தவும் வாக்குக்கெட்டாத பரலோக பாக்கியத்துக்கு நிச்சயமான பாதையாகிய ஒறுத்தலையும் தரித்திரத்தையும் தமது பாவனையாக நாமும் விரும்பி அநுசரிக்கும்படி நமக்குப் படிப்பிக்கவும் இப்படிச் செய்தருளுகிறார்.

மனப்பற்றுதல்.—தரித்திரத்திலும் பாடுகளிலும் மறைந்திருக்கிற ஞானப் பொக்கிஷத்தை இயேசுநாதர் உனக்கு அறிவித்ததற்காகவும், சொற்பப் பேருக்கு மாத்திரங் கிடைக்கிற பாக்கியமாகிய சந்நியாச அந்தஸ்தில் நீ தரித்திரத்தை நேசித்துக் கைக்கொள்ளும்படி அவர் விசேஷ தயை செய்ததற்காகவும் அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்.

பிரதிக்கினை.—உன்னைப்பற்றிப் பெத்லேஹேம் மாட்டுக் கொட்டிலிலே தரித்திரத்தாலும் இக்கட்டாலும் வருந்தின திவ்விய பாலனை இன்று அடிக்கடி நினைத்து, பத்தியுள்ள மனவல்லயச் செபங்களைச் செபிப்பாயாக.

## 3-ம் பிரிவு

### மகா தாழ்ச்சியும் சாந்தகுணமுமுள்ள திவ்விய குழந்தையை நோக்கித் தியானித்தல்

தியானம்.—நாம் இருதயத் தாழ்ச்சியும் சாந்தமுமுள்ளவராயிருக்கிறோமென்று நம்மிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள் (மத். 11). என்னை உலகமெல்லாம் கை நெகிழ்ந்தபோதிலும் பொறுமையின்மையின் அற்ப அடையாள முதலாய்க் காட்டாமல் சாதுவும் தாழ்ச்சியுமாயிருக்கிறதைக் கற்றுக்கொள்ளுங்களென்கிறார். ஆ! இதென்ன அற்புதமான சாந்தம்! சர்வ ஞானமும் சர்வ வல்லபமுமானவர் மனுஷருடைய கண்ணுக்கு இவ்வளவு பலவீனமும் அறியா



மையுமான குழந்தை வடிவாய்த் தோன்றுகிறார். உலகம் அவரைப் புறக்கணிக்கிறது! அவரோவென்றால் மற்றக் குழந்தைகளைப்போல் ஓர் வீட்டில் பிறக்கத் தாம் பாத்திரமல்லவென்றாற்போல, ஒரு கெபியிலே பிறந்து இரண்டு மிருகங்களுக்கு நடுவில் கொஞ்சம் வைக்கோல்மேல் கிடத்தப்பட்டிருக்கிறார்! இது எப்பேர்ப்பட்ட ஆச்சரியம்!

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—ஆ, என் ஆத்துமமே, நீ உன்னைத் தாழ்த்தி உனக்கு அங்கும் இங்கும் பிறரால் வருங் கடுஞ் சொல்லையும் இகழ்ச்சியையும் பொறுமையோடு சகித்துக்கொள்ளும்படி மனுஷரூபமெடுத்த தெய்வம் தம்மை எம்மாத்திரம் தாழ்த்தவேண்டியிருந்ததென்று பார். அவர் உனக்குக் கற்பிக்கிற புத்திமதிகளுக்கும் காண்பிக்கிற நன்மாதிரிகைகளுக்கும் நீ நன்றியறிந்திருக்கும்படி உன்மேல் எவ்வளவோ கடன் சுமந்திருக்கிறது!

சம்பாஷணை.—முன்னிட்டியில் கிடத்தப்பட்டிருக்கும் திவ்விய பாலனை நோக்கி சம்பாஷணை செய்.

---

## 26-ம் தேதி

### முதல் வேதசாட்சியான அர்ச். முடியப்பர் திருநாள்

ஆயத்தச் சிந்தனை.—அர்ச். முடியப்பர் உயிர்விடுஞ் சமயத்திலே வானத்தை அண்ணார்ந்து பார்த்துத் தமது கொலையாளிகளுக்காக வேண்டிக்கொண்டதைப் பார்க்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

தியானச் செபம்.—அவரிடத்தில் விளங்கின உயிருள்ள விசுவாசம், மனத்திடன், வீரியமான பிறசிநேக முதலிய புண்ணியங்களில் உனக்கு எவ்வளவாகிலும் பங்கு கிடைக்கவேணுமென்று மன்றாடு.

## முதல் பிரிவு

### அர்ச். முடியப்பரிடத்தில் விளங்கின உயிருள்ள விசுவாசம்

**தியானம்.**—மெசியாசாகிய திவ்விய இரட்சகர் உலக
ஆடம்பர மகிமையோடு எழுந்தருளிவந்து இஸ்ராயேல்
கோத்திரத்தின்மேல் இராஜாங்கம் செலுத்துவாரென்று
அர்ச். முடியப்பரும் தமது சாதியாரான யூதரைப்போல
எண்ணியிருந்தார். ஆனால் அவர் இரட்சகருடைய பிரசங்
கங்களைக் கேட்கவே அந்த எண்ணமுழுதும், மாறிப்போய்
அதுமுதல் அவர்மேல் தமது இருதயப்பற்றுதலெல்லாம்
வைத்து அவரைப் பிரமாணிக்கமாய்ப் பின்சென்று நடந்
தார். கர்த்தருடைய எழுபத்திரண்டு சீஷர்களுக்குள்ளே
அவரும் ஒருவராயிருந்தாரென்று சிலர் சொல்லுகிறார்கள்.
பிற்காலத்திலே அப்போஸ்தலர்கள் அவரைத் தியாக்கோன்
பட்டத்துக்கு தெரிந்து ஏற்படுத்தினார்கள். அப்பொழுது
அவர் இஸ்பிரீத்துசாந்துவையும் உந்நதமான விசுவாச
வரத்தையும் பூரணமாய் அடைந்து எங்கும் உறுதியோடு
பிரசங்கித்துப் பிரபலியமான புதுமைகளைச் செய்து திர
ளான பேர்களை மனந்திருப்பிக்கொண்டு வந்தார். இவ
ரைப்பற்றி அப்போஸ்தலர் நடபடி ஆகமத்தில் அர்ச். லூக்
காஸ் சாட்சியாகச் சொல்லியிருக்கிறதாவது: இவர் விசு
வாசத்தாலும் திவ்விய இஸ்பிரீத்துசாந்துவினாலும் நிறைந்
திருந்தார். சனங்கள் நடுவில் பெலத்த அற்புதங்களையுஞ்
செய்தார். சீஷர்கள் தொகையும் ஏறிக்கொண்டுவந்தது
என்கிறார் (நடபடி. 6).

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—
உலகத்தில் ஆஸ்திபாஸ்திகளைச் சேர்த்து, சுக சந்தோஷங்
களை அநுபவிக்கிறதே பெருமை பாக்கியமென்று உலகத்
தார் எண்ணுகிற குருட்டாட்டமான எண்ணத்துக்குள்
நாமும் அகப்படாதபடி தேவகிருபையால் தப்பியிருக்கிறோ
மல்லவோ? அந்தப் பொய் நன்மைகளை நாம் புறக்கணித்துச்
சந்நியாசத்தில் மனம்பொருந்தி தரித்திரத்தைத் தெரிந்து
கொண்டதற்கு இயேசுநாதருடைய திவ்விய போதகமும்
அவருடைய விசேஷ வரப்பிரசாதமுந்தானே காரணம்.



விசுவாசத்தினால் நமக்குக் கிடைத்த விலைமதிக்கப்படாத
வரங்களுக்குள்ளே இதுவும் ஒன்றென்பதற்குச் சந்தேக
மில்லை. ஆனால் இந்த விசுவாசம் அர்ச். முடியப்பரிடத்தில்
இருந்ததுபோல நம்மிடத்திலும் உயிருள்ளதாயிருந்து பரி
சுத்தம், பிறரீடேற்றம் முதலிய நற்கனிகளை விளைவிக்கிற
தோ?

**மனப்பற்றுதல்.**—குழந்தை இயேசுநாதர் தமது
பாவனையாக நீயும் உலக ஆரவாரத்தை இகழ்ந்து மனத்
தரித்திரத்தை ஏற்றுக்கொண்டு பரலோக நன்மைகளை மாத்
திரம் தேடும்படி உனக்குப் படிப்பித்ததினாலே அவருக்கு
நன்றியறிந்த தோத்திரஞ் செய்.

**பிரதிக்கினை.**—திவ்விய பாலன் என்மேல் வைத்த
பட்சத்தினாலே வேணுமென்று அநுசரித்த தரித்திரத்தை
நானும் மென்மேலும் அதிகமதிகமாய் மதித்து அநுசரிக்க
வருந்துவேன்.

## 2-ம் பிரிவு

### அர்ச். முடியப்பரிடத்தில் விளங்கின மனத்திடன்

**தியானம்.**—பழைய ஏற்பாட்டின்மேல் கள்ளப்பிடி
வாதமாயிருந்த சிலர் அர்ச். முடியப்பருடைய பிரசங்கத்
தால் வெகுபேர் மனந்திரும்புவதைக் கண்டு, கோபத்தால்
பொங்கி வேதபாரகர் ஜனத்தின் மூப்பர் முதலானவர்க
ளோடு சேர்ந்துகொண்டு அவர் தேவதூஷணஞ் சொல்வ
தாக யூதருடைய பெரிய நீதி சங்கத்தில் அவர்மேல் குற்
றஞ்சாட்டினார்கள். அவர்களுடைய கோப வெறியையும்,
கூக்குரலையும் அர்ச். முடியப்பர் கண்டு, ஒன்றில் தாம் விசு
வாசத்தைக் கைவிடவேண்டியது, ஒன்றில் விசுவாசத்துக்
காக உயிரைக்கொடுக்கவேண்டியதென்று அறிந்துகொண்
டார். ஆயினும் ஒரு நிமிஷமுதலாய் மனந் தத்தளியாமல்,
இயேசுநாதர் மெய்யான சர்வேசுரனென்று மிகுந்த மனோ
பலத்தோடு நடுவர்கள் முன்பாக ஒப்பித்து அவர்கள் மெசி
யாவாகிய அவரைக் கொலைப்படுத்தினதும், இஸ்பிரீத்து
சாந்துவுக்கு மூர்க்கமாய் எதிர்த்து நிற்பதும் அக்கிரம
மென்று சொல்லிக் காண்பித்தார். அக்ஷணமே அவர்

கண்ட ஓர் காட்சியால் ஏவப்பட்டு உரத்த சத்தமாய்ச் சொன்னதாவது: இதோ பரலோகம் திறக்கப்பட்டிருக்கிறது, மனுமகன் சர்வேசுரனுடைய வலதுபாரிசத்தில் நிற்கிறதைக் காண்கிறேன் என்றார் (நடபடி. 7.) என்றவுடனே சத்துராதிகள் பொங்கின ஆத்திரத்தை அடக்கமாட்டாமல் அவர்மேல் பாய்ந்து, கல்லால் எறிந்துகொல்லும்படி அவரைப் பட்டணத்துக்கு வெளியே இழுத்துக்கொண்டு போனார்கள். அர்ச்சியசிஷ்டவரோவெனில் அதற்கு அற்பமும் தடங்கல் செய்யாமல், விசுவாசத்துக்கு அத்தாட்சியாகப் பிராணனைக்கொடுக்கிறதே பாக்கியமென்று நிச்சயித்து ஆண்டவர் மரித்த வருஷத்தின் கடைசியிலே திருச்சபையில் முதல் வேதசாட்சியாகக் கொலையுண்டு வெற்றி முடியடைந்தார்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—நாம் வேதசாட்சியாகும்படி சிலவேளை நமக்கு ஒருபோதும் சமயம் கிடைக்கமாட்டாது. ஆயினும் இதைப்பற்றி நாம் துக்கிக்கவேண்டியதில்லை. ஏனென்றால் ஒருவன் தன்னை முழுதும் சந்நியாசத்தில் சர்வேசுரனுக்குப் பலியாக ஒப்புக்கொடுக்கிறது மெய்யாகவே வேதசாட்சியாகிறதுக்குச் சமானமென்று வேதபாரகர் உறுதியாய்ச் சொல்லுகிறார்கள். துன்ப வருத்தங்களைப் பார்த்தால் சந்நியாசத்தில் வேதசாட்சியாகிறது அவ்வளவு கடினமாய்த் தோன்றாவிட்டாலும் நாள் கணக்கைப்பார்த்தால் மகா கடினமானதென்று அர்ச். பெர்னர்துஸ் சொல்லுகிறார். இப்படி வேதசாட்சியாகிறதற்கு மெய்யான ஒறுத்தலும் ஒழுங்குமுள்ள சந்நியாசியாயிருக்கவேணும். இது நம்மால்கூடிய காரியந்தான். ஆயினும் இப்படி நடக்கிறோமோ?

**மனப்பற்றுதல்.**—உனக்கு வரும் கடின தந்திர சோதனைகளில் நீ அகப்பட்டுக்கொள்ளாதபடி அவசரமான பத்தி சுறுசுறுப்பு, தைரியம், மனத்திடன் முதலிய வரங்களைத் தேவ பாலன் உனக்குத் தந்தருளும்படி மன்றாடு.

**பிரதிக்கினை.**—இயேசுநாதரும் வேதசாட்சிகளும் பட்டபாடுகளை நினைத்துச் சோதனைவேளையில் என் மனதைத் திடப்படுத்திக்கொள்வேன்.



## 3-ம் பிரிவு

### அர்ச். முடியப்பரிடத்தில் விளங்கின வீரியமான பிறசினேகம்

**தியானம்.**—இந்த அர்ச்சியசிஷ்டவர் இரத்தமெல்லாம் சிந்திப் பலன் சோர்ந்து உயிர் பிரியப்போகிற சமயத்திலே தம்மை மறந்து, தமது திவ்விய குருவின் பாவனையாகத் தம்மைக் கொலைசெய்தவர்களுக்காகச் சர்வேசுரனிடத்தில் பொறுத்தலைக் கேட்டு: சுவாமீ, இந்தப் பாவத்தை இவர்கள்மேல் சுமத்தாதேயுமென்று உரத்த சத்தமாய்க் கூவிச் சொன்னார். சொன்னவுடனே ஆண்டவர்கையில் தமது உயிரை ஒப்படைத்து மரணமானார் (நடபடி. 7.)

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—உங்களை உபாதிக்கிறவர்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள். உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மைசெய்யுங்களென்று திவ்விய இரட்சகர் இட்ட கற்பனையை இந்த முதல் வேதசாட்சியானவர் இவ்விதமாய் நிறைவேற்றினார் (மத். 5.) இந்தக் கற்பனையை வேதசாட்சிகள் தங்கள் கொடிய பாடுகளின்போது நிறைவேறினதைவிட நீ உனக்குச் சாதாரணமாய்வரும் இடையூறுகளில் நிறைவேற்றுவது மகா சுளுவுதானே. ஆயினும் இதை நீ சரியாய் நிறைவேற்றி வருகிறாயோ?

**சம்பாஷணை.**—இயேசுநாதருடைய பாதத்திலே விழுந்து அவரோடு சம்பாஷணை செய். அர்ச். முடியப்பர் முதல் வேதசாட்சியாகி அடைந்த வெற்றி மகிமையினால் திவ்விய கர்த்தருக்குத் தோத்திரமுண்டாகக்கடவதாக வென்று அவரை வாழ்த்தி நமஸ்கரித்து, அவருடைய திருநாம தோத்திரத்துக்காக நீயும் அநுகூலத்தோடு உழைத்துப் பாடுபடத் தயைசெய்யவேணுமென்று மன்றாடு.

# 27-ம் தேதி

## தேவபாலன் தம்மை இடையர்களுக்கு அறிவித்ததும் சம்மனசுக்கள் அவரை வாழ்த்தி நமஸ்கரித்ததும்.

ஆயத்தச் சிந்தனை.—சம்மனசுக்கள் சொன்ன வார்த்தைகளையும் பாடின கீதங்களையும் இடையர் ஆனந்த சந்தோஷமாய்க் கேட்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

தியானச் செபம்.—இடையருடைய இருதயங்களிலே சம்மனசுக்கள் பிறப்பித்த பத்தி உருக்கமான உணர்ச்சிகள், உன் இருதயத்திலும் உண்டாகும்படி அநுக்கிரகங் கேள்.

### முதல் பிரிவு

#### இரட்சகர் தம்மை இடையர்களுக்குத் தெரிவிக்கிறார்

தியானம்.—இயேசுநாதர் உலக இரட்சணியத்துக்காகவே பெத்லேஹேரில் பிறந்தார். ஆகையால் தாம் பிறந்தவுடனே தம்மை உலகத்துக்குத் தெரியப்படுத்தவேணுமென்று தீவரித்தார். அதைவிட அவருக்கு அதிக முக்கியமாயிருந்தது வேறொன்றுமில்லை. ஆயினும் அவர் யாருக்குத் தம்மை முந்தி அறிவித்தார்? உலக பிரபுகளுக்கும், ஆங்காரிகளான ஆஸ்திக்காரருக்கும், சுக சந்தோஷங்களைத் தேடித் திரிந்தவர்களுக்குமோ? அல்லவே. உலகத்தில் அறியப்படாதவர்களும், நல்லொழுக்கமுள்ளவர்களும், தேவ கற்பனைகளைச் சுமுத்திரையாய் அநுசரிப்பவர்களுமான ஏழை இடையர்களுக்கே தம்மை முந்தி அறிவிக்கும்படி சித்தமானார். இந்த வர்த்தமானம் நடந்த விதமேதென்று அர்ச். லூக்காஸ் எழுதிவைத்திருக்கிறதைக்கேள். கர்த்தர் பிறந்த ஸ்தலத்துக்கருகே இடையர்கள் காட்டிலே தங்கள் மந்தைகளை முறைமுறையாய் இராக்காவல் காத்துக்கொண்டிருந்தார்கள். அப்போது இதோ திடீரென ஆண்டவருடைய தூதன் அவர்களண்டையில் காணப்படவே, தேவ ஒளியானது அவர்களைச் சூழ்ந்துகொண்டது. அவர்கள் அதைக் கண்டு மிகவும் பயந்திருந்தார்கள்.



ஆனால் தேவதூதன் அவர்களை நோக்கி: நீங்கள் பயப்படவேண்டாம். ஏனென்றால்: சகல ஜனங்களுக்குஞ் சந்தோஷமான ஒரு விசேஷம் உங்களுக்கு அறிவிக்க வந்தேன். அதாவது தாவீதின் நகரத்திலே கிறீஸ்துவாகிய ஓர் இரட்சகர் உங்களுக்காக இன்று பிறந்திருக்கிறாரென்றார் (லூக். 2).

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நமது சந்நியாச அந்தஸ்தைப் பார்த்தால் நமக்கும் அந்தப் பாக்கியமான இடையர்களுக்கும் நெருங்கின சாயலுண்டென்று சொல்லவேணும். ஏனென்றால் நாமும் அவர்களைப் போலவே உலக சந்தடிகளைவிட்டுக் கற்போடும் தரித்திரத்தோடும் மகா பிரயாசையோடும் பெருமையில்லாமல் காலட்சியஞ் செய்துகொண்டு வருகிறோம். ஆகையால் இயேசுநாதர் நமக்கும் தம்மை வெளியாக்கித் தமது ஞானப்பிரகாச ஒளியை வீசி நாம் மெய்யான பேரின்ப சந்தோஷத்தைக் கண்டடையச் செய்வாரென்று நம்பவேண்டியது. இந்த நன்மைகளெல்லாம் நமக்கு அதிக நிச்சயமாய்க் கிடைக்கும்படி நமது பஞ்சேந்திரியங்களின்பேரிலும் இருதய நாட்டங்களின்பேரிலும் விழிப்பாயிருக்கக்கடவோம்.

மனப்பற்றுதல்.—அந்த இடையரை வாழ்த்தி, அவர்களுடைய சாயல் நம்மிடத்திலும் விளங்குவதைப்பற்றிச் சந்தோஷப்படக்கடவோம். மேலும் திவ்விய குழந்தையானவர் தம்முடைய வரப்பிரசாதங்களை நமதுமேல் ஏராளமாய்ப் பொழிந்தருளும்படி மன்றாடுவோமாக.

பிரதிக்கினை.—நமதுமேல் முன்னிலும் இருமடங்கு அதிக விழிப்பாயிருப்போமாக.

### 2-ம் பிரிவு

#### இரட்சகரை அறிந்துகொள்வதற்குரிய அடையாளங்கள்

தியானம்.—சம்மனசானவர் இடையர்களை நோக்கி: இன்று உங்களுக்கு ஓர் இரட்சகர் பிறந்திருக்கிறார். அவரை நீங்கள் அறிந்துகொள்ளும் அடையாளமாவது: கந்தைத் துணிகளால் பொதியப்பட்டு முன்னிட்டியில்

கிடத்தப்பட்ட ஓர் பிள்ளையைக் காண்பீர்களென்றார் (லூக். 2). இயேசுநாதர் குழந்தையாய் வந்தது தாழ்மைக்கு அடையாளம். கந்தைத் துணிகள் தரித்திரத்துக்கு அடையாளம். மெதுவற்ற முன்னிட்டி ஒறுத்தலுக்கு அடையாளமாம். இந்த மூன்று அடையாளங்களைக்கொண்டுதான் உலகத்துக்கு வாக்குத்தத்தம் செய்யப்பட்ட இரட்சகர் மெய்யாகவே இயேசுநாதசுவாமியென்று அந்த இடையரும் நாமும் இன்னுமற்ற மனிதரும் அறிந்துகொள்ளவேண்டியது. ஏனென்றால் இரட்சகராயிருக்கும்படி அவர் இரண்டு காரியஞ் செய்யவேண்டியது. அதாவது: முந்தமுந்த மண்ணாசை பெண்ணாசை பொன்னாசையென்னும் மூன்று ஊற்றுகளுக்கு ஒப்பாகிய துர்க்குணங்களினாலே நம்மிடத்தில் உண்டாகும் சகல பாவங்களையும் அவர் போக்கவேணும்; 2-வது, நாம் இனிப் பாவத்தில் விழாதிருக்கும்படி செய்யவேண்டிய நல்ல உபாயமேதென்று தமது வாக்கினால் நமக்குப் போதிக்கிறதைவிட முக்கியமாய்த் தமது மாதிரிகையால் போதித்து நாம் அந்த உபாயங்களை அநுசரித்துவரும்படி நமக்குத் தைரியத்தை வருவிக்கவேணும். ஆனால் இயேசுநாதர் தாழ்மை தரித்திரம் தவமென்னும் இம்மூன்று இலக்ஷணங்களோடு வந்தபடியினாலே இந்த இரண்டு காரியத்தையும் ஆச்சரியத்துக்குரியவிதமாய்ச் செய்துமுடித்தார்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—மேலே சொல்லப்பட்ட சுவிசேஷ வாக்கியத்தை நீ பல தடவை வாசித்துங் கேட்டுமிருப்பாயே. ஆனால் அதின் உட்கருத்தை ஆழ்ந்து யோசியாமலும், சம்மனசானவர் சொன்ன அடையாளங்களுக்கும் இரட்சகருடைய குண இலட்சணங்களுக்குமுள்ள ஆச்சரியமான ஒற்றுமையைக் கவனியாமலும் போனாயாக்கும். ஆகையால் இதினின்று ஒரு புத்தி கற்றுக்கொள். அதாவது நீ தியானஞ்செய்யும்போதெல்லாம் அந்தத் தியானத்துக்குக் குறிக்கப்பட்ட பொருளின்பேரில் உன் புத்தி ஆழ்ந்துபோகும்படி பிரயாசப்படு. ஏனெனில் நீ எவ்வளவுக்கு ஒரு சத்தியத்தை ஆழ்ந்து யோசிப்பாயோ, எவ்வளவுக்கு அதினால் உன் புத்திக்கு ஞானத் தெளிவு உண்டாகுமோ, அவ்வளவுக்கு உன் இருதயத்தினின்று பற்பல சுகிர்த பற்றுதல்கள் பிறக்கும்.



**மனப்பற்றுதல்.**—உன் புத்தியைத் தெளிவித்து உன் இருதயத்தில் தேவ சிநேகாக்கினியைப் பற்றுவிக்கவேணுமென்று பாலனான இயேசுநாதரை நோக்கி மன்றாடு.

**பிரதிக்கினை.**—தாழ்ச்சி, தரித்திரம், தவமென்னும் இம்மூன்று புண்ணியப் பற்றுதல்களை என்னிடத்தில் ஸ்திரப்படுத்தித் திவ்விய குழந்தைக்குப் பிரியப்பட முயற்சி செய்வேன்.

## 3-ம் பிரிவு

### இரட்சகர் அடைந்த மகிமைப்பிரதாபம்

**தியானம்.**—குழந்தை இயேசுநாதர் பிறந்த செய்தியை இடையர்களுக்கு அறிவிக்கும்படி சர்வேசுரன் ஒரு சம்மனசானவரை மாத்திரம் ஸ்தானாபதியாக அனுப்பினார். அந்தச் சம்மனசு அதிதூதரான கபிரியேல்தானென்று சிலர் எண்ணுகிறார்கள். ஆனால் அவர் தமது திருக்குமாரனை மகிமைப்படுத்தச் சித்தமானபோது, ஒரு சம்மனசுவை மாத்திரமல்ல, சம்மனசுக்களைப் படைபடையாய் அனுப்பினார். இதைப்பற்றி அர்ச். லூக்காஸ் சொல்லுகிறதாவது: தேவதூதன் இடையர்களோடு பேசி முடிந்தவுடனே திரளான வானலோக சேனைகள் அவரோடு சேர்ந்துகொண்டு: உந்நதத்தில் சர்வேசுரனுக்குத் தோத்திரமும் பூமியில் நல்ல மனதுள்ளவர்களுக்குச் சமாதானமும் உண்டாகக்கடவதென்று ஆண்டவரைத் துதித்துப் பாடினார்கள் என்கிறார் (லூக். 2).

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—குழந்தை இயேசுநாதர் தமது அத்தியந்த தாழ்ச்சியினாலல்லவா இந்த உந்நதமான துத்திய கொண்டாட்டத்திற்குப் பாத்திரமானார். தம்முடைய தாழ்மையினாலேதான் சர்வேசுரனுக்குத் தோத்திரமும், நல்ல மனதுள்ளவர்களுக்குச் சமாதானமும் பாக்கியமும் பெறுவித்தார். ஆகையால் தாழ்ச்சியில் இம்மாத்திரம் நன்மை அடங்கியிருக்கிற

தென்று நீ ஆராய்ந்து, உனக்கு யாதொரு நிந்தை அவமானம் வந்தால் அதினாலே மனங்குன்றிப்போகாதே. சகலத்திலும் நீ சர்வேசுரனுடைய அதிமிக்க மகிமையைத் தேடும்பொருட்டு உனக்கே நீ மென்மேலும் மரித்தவனாகும்படி பிரயாசப்படு. இப்படிச் செய்வாயானால் உன் ஆத்துமம் சமாதானத்தைக் கண்டடைவதுமல்லாமல் சர்வேசுரன் குறித்த காலம் வரும்போது இயேசுநாதரோடு பரலோகத்தில் பேரின்ப மகிமைபெற்று வாழ்ந்திருப்பாய்.

**சம்பாஷணை.**—உலகத்தின் பாவங்களைத் தமதுமேல் போட்டுக்கொண்டு, தாம் பிறந்ததுமுதல் தமது கண்ணீரால் அவைகளுக்கு உத்தரித்து, பின்பு தமது இரத்தத்தாலும் சிலுவை மரணத்தாலும் அவைகளைப் பரிகரித்த தேவபாலனை சம்மனசுகளோடுகூடப் புகழ்ந்து வணங்கி நமஸ்கரிப்பாயாக. மேலும் அவருக்கு உன்னை முழுமையும் யாதொரு ஒட்டுப்பற்றுவைத்துக்கொள்ளாமல் என்றென்றைக்கும் ஒப்புக்கொடுப்பாயாக.

---

## 28-ம் தேதி

### இடையர் பெத்லேழுருக்குப் புறப்பட்டுப்போகிறர்கள்

**ஆயத்தச் சிந்தனை.**—இடையர் பெத்லேழுரை நோக்கித் தீவிரமாய் நடந்துபோகிறதைப் பார்க்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

**தியானச் செபம்.**—குழந்தை இயேசுநாதரைக் கண்டபோது இடையர் அனுபவித்த பத்தியுள்ள உணர்ச்சிகளை நீயும் அநுபவிக்கவேணுமென்று மன்றாடு.

### முதல் பிரிவு

#### பெத்லேழுருக்குப் போய்வரும்படி இடையர் ஒருவரை ஒருவர் ஏவி அழைக்கிறர்கள்

**தியானம்.**—தேவதூதர் பரலோகத்துக்குத் திரும்பிப் போனபின் இடையர் ஒருவரை ஒருவர் நோக்கிச் சொல்



லிக்கொண்டதாவது: நாம் பெத்லேழுர்மட்டும் போய், 'சம்ப
வித்ததும் ஆண்டவர் நமக்கு அறிவித்ததுமாகிய இந்தச் சங்
கதியைப் பார்த்துவருவோமென்று பேசிக்கொண்டார்கள்
(லூக். 2). சுவிசேஷத்தில் எழுதப்பட்ட இந்த வாக்கியத்
தைக்கொண்டு, இடையர்கள் கண்ட காட்சி மறைந்த
வுடனே அவர்கள் மனதில் ஓர் சந்தேகம் பிறந்ததாகத்
தோன்றுகிறது. அதெப்படியென்றால்: நமக்கு அறிவிக்
கப்பட்ட சங்கதி ஒருகாலும் கேள்விப்படாத நூதனமா
யல்லோ இருக்கிறது! யூதர்களுக்கெல்லாம் இராசாவாயிருக்
கவேண்டிய மெசியாஸ் இவ்வளவு தாழ்மையான ஸ்திதியில்
பிறப்பதென்றால் என்ன? அவருடைய மகிமை பெருமை
களைப்பற்றி நாம் கொண்டிருந்த எண்ணத்துக்கு இதெல்
லாம் எவ்வளவு விபரீதமாயிருக்கிறது! இது நம்பத்தக்
கதோ அல்லவோவென்று சந்தேகப்பட்டார்கள். சிலர்
இந்த நடுச்சாமத்தில் ஆடுகளைக் காட்டிலேவிட்டு ஒரு
நாழிகை தூரம் இருட்டில் நடந்து அந்த ஸ்தலத்துக்குப்
போவதெப்படியென்று யோசித்தார்கள். ஆயினும் பத்
திச்சுறுக்குள்ள வேறு சிலர் எல்லாரையும் தூண்டி உறுதி
யாய்ப் பேசினதினாலே சகலரும் தைரியமடைந்து ஒருவர்
ஒருவரை ஏவித் திடன் சொல்லிக்கொண்டு தாமதமில்லா
மல் ஒருமிக்கப் புறப்பட்டார்கள்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—
ஒரு சந்நியாச மடத்திலாவது கன்னியாஸ்திரிகள் மடத்தி
லாவது இருக்கிறவர்கள் எல்லோரும் ஒரே மனமாய்ப்
புண்ணிய சாங்கோபாங்கத்தை அடையும்படி முயற்சி
செய்து, நன்மைசெய்ய ஒருவரை ஒருவர் ஏவித் தூண்டிக்
கொண்டு, தாழ்ச்சியிலும் பிறசினேகத்திலும் மாத்திரம்
ஒருவரை ஒருவர் மேலிடும்படி போட்டியாய்ப் பிரயாசப்
பட்டுவருவார்களானால், அந்த மடம் மெய்யாகவே பாக்கி
யம்பெற்ற மடமாம். நீ சேர்ந்திருக்கிற மடமும் இப்
பேர்ப்பட்டதாகும்படி செய்ய உன்மேல் கடனில்லை
யென்று நீ சொல்லக்கூடுமோ?

**மனப்பற்றுதல்.**—மகா பத்தி சுறுசுறுப்பும் உத்தம
மாதிரிகையுமான இத்தனை சந்நியாசிகள் நடுவில் சர்வேசு

ரன் உன்னை வைத்ததற்காக அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்து, நீ அவர்களுக்கு ஒத்தவனாகும்படி அனுக்கிரகங் கேள்.

பிரதிக்கினை.—என் சகோதரர்களுக்கு நான் நன்மாதிரிகையாய் இருக்கிறேனோ இல்லையோவென்று என்னை நான் தருணத்துக்குத் தருணம் வினவிவருவேன். மேலும் எப்போதும் எல்லாத்திலும் நன்மாதிரியாயிருக்கும்படி பிரயாசப்படுவேன்.

## 2-ம் பிரிவு

### இடையர் பெத்லேழநக்குத் தீவிரமாய் நடந்துபோகிறார்கள்

தியானம்.—இடையர் பெத்லேஹமுக்குப் போகவேணுமென்று ஒருவிசை தீர்மானித்தபின் மறுயோசனைக்கு இடங்கொடாமலும் இராவின் இருளையும், தூக்கமில்லாத களைப்பையும் பாராமலும் எல்லோரும் ஒருமிக்கப் புறப்பட்டு விரைவாய் நடந்துபோனார்கள். அவர்கள் வெகு தீவிரமாய் நடந்துபோனார்களென்று சுவிசேஷத்தில் வெளிப்படையாய் எழுதப்பட்டிருக்கிறது. மனதிலும் கிரியையிலும் இந்த வேகமான சுறுசுறுப்பு அவர்களுக்கு எப்படி வந்ததென்றால்: முதலாவது, சம்மனசுக்களுடைய வார்த்தைகளால் அவர்களுக்கு அளிக்கப்பட்ட உயிருள்ள விசுவாசத்தினாலும். 2-வது, இரட்சகரைக் கண்டு ஆராதிக்கவேணுமென்று அவர்களுக்கு இருந்த மிகுந்த ஆசையினாலும். 3-வது, அவருடைய ஆசீர்வாதமும் நன்மை வரங்களும் ஏராளமாய்க் கிடைக்குமென்கிற நம்பிக்கையினாலும் இந்த வேகமான சுறுசுறுப்பு உண்டாயிற்று.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—தினந்தோறும் நீ காலமே கண்விழித்தவுடனே உனக்குக் காவலான சம்மனசானவர் உன்னை நோக்கி: உன் அன்புள்ள இரட்சகருடைய தொட்டிலுக்குத் தீவிரமாய்ப் போவென்று உன்னை ஏவுகிறாரல்லவோ? அதாவது அவரு



டைய சிநேக தேவதிரவிய அனுமானத்தில் அவரைச் சந்
திக்கும்படி உனக்குப் புத்தி சொல்லு
கிறாரல்லவோ? ஓ, அதிகாலையில் எல்லாத்துக்கு முந்தித்
தேவநற்கருணையைச் சந்திக்கிறதினால் எவ்வளவோ வரப்
பிரசாதங்களும் ஆறுதல்களும் தேவ ஆசீர்வாதங்களும்
கிடைக்கும்! இதின் உண்மையை அறிந்து, நீ சந்நியாசத்
தில் பிரவேசித்ததுமுதல் அதிகாலையில் தேவநற்கருணை
சந்திக்கத் தவறமாட்டேனென்று பிரதிக்கினை செய்திருக்
கிறாயல்லவா? அதின்படி சுமுத்திரையாய் நடந்துவரு
கிறாயோ? இதில் சில விசை நீ தவறிப்போகவில்லையோ?
ஒருக்கால் அடிக்கடி தவறிப்போனாயாக்கும்! இதற்குக்
காரணமென்ன? அதிகாலையில் படுக்கையைவிட்டுத் தீவிர
மாய் எழுந்திராததுதானே காரணம். நித்திரையோடு நீ
தர்க்கித்து இன்னுங் கொஞ்சநேரம் படுத்திருக்கலாமோ,
எழுந்திருக்கலாமோவென்று யோசித்துத் தீர்மானிக்கிற
துக்குள்ளாக நேரம் கடந்துபோகிறதினாலே தேவநற்
கருணை சந்திக்கிற சமயமும் தப்பிப்போகிறது.

மனப்பற்றுதல்.—இப்படி நீ அசட்டையும் சோம்
பலுமாயிருந்ததைப்பற்றி ஆண்டவரிடத்தில் பொறுத்தலைக்
கேள்.

பிரதிக்கினை.—தியானத்துக்குமுன் செய்யப்படும்
தேவநற்கருணைச் சந்திப்புக்கு நீ எப்போதும் முந்தின
வனாயிருக்கும்படி அந்த இடையர்களுடைய தீவிரத்தைக்
கண்டுபாவிக்கக்கடவாய்.

## 3-ம் பிரிவு

### இடையர் பெத்லேழில் திவ்விய இரட்சகரைக் கண்டு ஆராதிக்கிறார்கள்

தியானம்.—இடையர்கள் சம்மனசுவினால் குறிக்கப்
பட்ட ஸ்தலத்துக்குப்போய்ச் சேர்ந்து, அங்கே மரியம்
மாளையும் சூசையப்பரையும் முன்னிட்டியில் கிடத்தி
யிருந்த குழந்தையையுங்கண்டார்களென்று அர்ச். லூக்

காஸ் எழுதிவைத்திருக்கிறார் (லூக். 2). சரீரக் கண்களுக்கு அவர் சாதாரணமான மற்றக் குழந்தைகளைப்போல் தோன்றினாலும் அவர்கள் தெளிந்த விசுவாசக் கண்களால் அவரை நோக்கி: பலவீனமான குழந்தை ரூபமாய்ப் பிறந்திருக்கிற அவர் அளவில்லாத மகத்துவமும் நன்மைத்தனமும் பொருந்திய தெய்வமென்றும் இரட்சகரென்றும் அறிந்து ஆராதித்தார்கள். அந்தத் திவ்விய குழந்தையின் சமுகத்திலிருக்கும்போது அவர்கள் எம்மாத்திரம் ஞான சந்தோஷம் அனுபவித்தார்களென்றும் அவரிடத்தில் எவ்வளவு தேவவரங்களைக் கைக்கொண்டார்களென்றும் யாரால் சொல்லக்கூடும்!

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இந்தத் திவ்விய இரட்சகர்தாமே இன்னுமதிகமாய்த் தம்மைத் தாழ்த்தி மறைத்துக்கொண்டு நமது பீடங்களின் மேல் எழுந்தருளியிருக்கிறார். ஆகையால் அந்த இடையர்களிடத்தில் விளங்கின பத்தி பற்றுதல்களோடும் விசேஷமாய் உயிருள்ள விசுவாசத்தோடும் நாம் அவரை அடிக்கடி சந்திக்கக்கடவோம். ஏனென்றால் தேவநற்கருணையில் எழுந்தருளியிருக்கிற இயேசுநாதரை விசுவாசக் கண்களால் தான் காணவேணுமொழிய சரீரக் கண்களால் காணக் கூடாது. ஆகையால் நாம் தேவாலயத்துக்குப் போகும்போதெல்லாம் நமது விசுவாசத்தை ஸ்திரப்படுத்திக்கொண்டு, சில சமயங்களிலே அவர் பெத்லேஹேம் கொட்டிலிலிருந்து, பரலோக வரங்கள் நிறைந்த தமது சிறு கரங்களை நம்மை நோக்கி நீட்டுகிறதாகவும் சில சமயங்களில் நசரேத்தூரிலிருந்த சிறு வீட்டிலிருக்கிறதாகவும், சில சமயங்களில் எருசலேம் பட்டணத்துத் தேவாலயத்திலிருக்கிறதாகவும், வேறு சமயங்களில் மார்த்தாள் மரியம்மாளுடைய வீட்டிலாவது கடைசி இராப்போசனஞ் செய்த இடத்திலாவது இருக்கிறதாகவும், இன்னும் சில சமயங்களில் கல்வாரி மலையில் சிலுவையில் அறையுண்டு நமக்காக வேண்டிக்கொள்ளுகிறதாகவும், நாம் அவரைக் கண்டு ஆராதிக்கப்போகிறதாகவும் மனதில் எண்ணிக்கொள்ளக்கடவோம். பத்திக்குரிய இந்த உபாயங்களைப்



பிரயோகித்து வருவோமானால், தேவநற்கருணையை வெகு பற்றுதலோடும் சுறுசுறுப்போடும் சந்தித்துவருவதுந்தவிர அதினால் மிகுந்த ஞான நன்மைகளையுங் கைக்கொள்வோம்.

சம்பாஷணை.—அந்த இடையர்களோடாவது, இன்றையத் திருநாளுக்குரியவர்களும் இயேசுநாதசுவாமியைப் பற்றிச் கொல்லப்பட்டு வேதசாட்சிகளானவர்களுமான மாசில்லாத குழந்தைகளோடாவது நாம் மனதினால் ஏகோபித்து அந்தக் திவ்விய குழந்தையை ஆராதிப்போமாக.

---

## 29-ம் தேதி

### இடையர் பெத்லேஹேமைவிட்டுத் திரும்பினதும் அவர்களுடைய பத்தி சுறுசுறுப்பும்

ஆயத்தச் சிந்தனை.—இடையர் வழியில் எதிர்ப்பட்ட சகலருக்கும் இரட்சகர் பிறந்த செய்தியைச் சந்தோஷமாய் அறிவிக்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

தியானச் செபம்.—அவர்கள் பெத்லேஹேமைவிட்டுத் திரும்பும்போது அவர்கள் உள்ளத்தில் எவ்வித உணர்ச்சிகளுண்டாயிருந்ததோ அவ்வித உணர்ச்சிகள் உன்னிடத்திலும் தேவநற்கருணையைச் சந்தித்துத் திரும்பும்போது உண்டாயிருக்கவேணுமென்று மன்றாடு.

### முதல் பிரிவு

#### இடையர் சுவாமி பிறந்த செய்தியை எங்கும் பிரசித்தமாக்குகிறார்கள்

தியானம்.—பக்தியுள்ள அந்த இடையர் தேவபாலனைக்கண்டு ஆராதித்து, தங்கள் எளிமைக்குத்தக்கது தாங்கள் கொண்டுவந்த காணிக்கைகளைத் தேவமாதாவின் பாதத்திலே வைத்து, சம்மனசானவர் அறிவித்தபடிக்குத் தாங்கள் கண்டதும் கேட்டதுமாகிய சகலத்தையும்பற்றிச் சர்வேசுரனுக்குத் தோத்திரஞ் செய்துகொண்டு திரும்பிப்

போனார்கள் (லூக். 2). திவ்விய குழந்தையைக் கண்ட போது அவர்களடைந்த தேவசினேகமும் பத்தி சுறுசுறுப்பும் இம்மாத்திரமென்று சொல்லக்கூடாது. அதுமுதல் இயேசுநாதசுவாமியே அவர்கள் இருதயத்திலும் நாவிலும் குடிகொண்டிருந்தாற்போல அவர்கள் அவரைப்பற்றியே நினைத்துப் பேசிக்கொண்டிருப்பார்கள். சகலரும் அவரை அறியவும் சிநேகிக்கவும் வேணுமென்று ஆசைப்படுவார்கள். வழியில் எதிர்ப்பட்ட யாவருக்கும் தாங்கள் கண்டதையும் கேட்டதையும் சந்தோஷமாய் அறிவித்து, அவர்களும் போய் தேவ பாலனைக் கண்டு ஆராதிக்கும்படி அவர்களை உடன்படுத்துவார்கள். இவ்விதமாய்த் தேவசிநேகமானது அவர்களை அப்போஸ்தலர்களாக்கினது.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—இயேசுநாதர்சுவாமி உன் இருதயத்திலிருந்தால் அடிக்கடி உன் நாவிலுமிருப்பார். அதாவது நீ அடிக்கடி அவரைப்பற்றிப் பேசுவாய். ஏனென்றால்: இருதயச் சம்பூரணத்தால் வாய் பேசுமென்று அவரே திருவுளம்பற்றியிருக்கிறார் (மத். 12). அப்படியே அவர்பேரில் உன் உள்ளத்தில் மெய்யான பற்றுதலும், அவரை மகிமைப்படுத்தவேணுமென்று உண்மையான விருப்பமும் உனக்குண்டானால் உன்னால் கூடியமட்டும் சகலரும் அவரை அறிந்து சிநேகிக்கவும், அவருக்கு ஊழியஞ்செய்யவும் பிரயாசப்படுவாய். இந்த மேலான காரியம் கைகூடும்படி எப்போ சமயங் கிடைக்குமோவென்று நீ கவனமாய் எதிர்பார்த்திருப்பதுமல்லாமல், கிடைக்கிற சமயங்களைக் கைதவறவிடாதபடி என்ன உபாயஞ் செய்ய வேண்டியதென்றும் யோசித்துக்கொண்டிருப்பாய். அப்பேர்ப்பட்ட சமயங்களும் உனக்குக் கிடையாமற்போகாது. இதுவே நீ இயேசுநாதர்சுவாமியை மெய்யாகவே சிநேகிக்கிறாயென்பதற்கு அடையாளமாகும். இது விஷயத்தில் நீ எப்படி நடந்துவருகிறாயென்று யோசித்துப்பார்.

**மனப்பற்றுதல்.**—இயேசுநாதர் நமது இருதயத்தில் எழுந்தருளிவரவும், அந்த இடையர்களுடைய இருதயங்களில் தமது நேச அக்கினியைப் பற்றுவித்ததுபோல நமது



இருதயங்களிலும் அத் திவ்விய அக்கினியைப் பற்றுவிக்க வும் தயைசெய்யவேணுமென்று அவரைக் கெஞ்சி மன்றா டக்கடவோம்.

**பிரதிக்கினை.**—நாம் செய்யும் தியானங்கள் எப்போ தும் பத்தி நிறைந்ததாகவும், நமது பேச்சுவார்த்தைகள் நமது அந்தஸ்துக்கு யோக்கியமானதாகவும் இருக்கப் பிரயாசப்படுவோமாக.

## 2-ம் பிரிவு

### இடையர் சொன்ன வரலாற்றைக் கேட்டவர்கள் ஒருபிரகாரமாயிருக்கிறார்கள்

பேசக்கேட்ட

**தியானம்.**—தேவ பாலனைக்குறித்துப் பேசக்கேட்ட யாவரும் ஆச்சரியப்பட்டார்களென்று அர்ச். லூக்காஸ் எழுதிவைத்தார் (லூக். 2). மெய்யாக்வே மெசியாஸ் ஒரு மாட்டுக்கொட்டிலில் பிறந்ததும், தேவ தூதர் காட்சியான தும், அவர்கள் சொன்ன வார்த்தைகளும், பாடின தேவ துத்தியங்களும் ஆகிய இவைகளெல்லாம் வெகு ஆச்சரிய மான காரியங்களாகையால் இவைகளை இடையர் சொல்ல பெத்லேஹேமுக்குச் சுற்றுப்பக்கத்திலுள்ள யூதரெல்லாம் கேட்டு வெகுவாய்ப் பிரமித்திருக்கவேண்டியது. ஆகை யால் அவர்களெல்லோரும் தீவிரமாய் அந்தக் கொட்டிலுக் குப் போய்த் திவ்விய குழந்தையைத் தெரிசித்து வணங்கி, ஒவ்வொருவரும் அவருக்குத் தங்கள் வீட்டில் இடங் கொடுப்போமென்றும், அவர் தங்கள் வீட்டுக்கு எழுந் தருளவேணுமென்றும் போட்டியாய்க் கேட்டிருப்பார்க ளென்று யாரும் நினைப்பார்கள். இதுவே நியாயமாய்த் தோன்றுகிறது. ஆயினும் அவர்கள் இப்படி யாதொன் றும் செய்யவில்லை. இதைக் கேட்ட துவக்கத்தில் அவர் கள் மிகுந்த ஆச்சரியப்பட்டாலும், மெள்ள மெள்ள இது உண்மையாயிருக்குமோவென்று வாக்குவாதஞ் செய்யத் துவக்கி, கடைசியாய் இது தங்களைச் சாராத காரியம் போல இதின்மேல் ஒரு பிரகாரமாயிருந்து இதை மறந்து விட்டார்கள்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—நாம் இந்த நாட்களெல்லாம் ஆண்டவர் மனுஷாவதாரமெடுத்துப் பிறந்த வாக்குக்கெட்டாத பரம இரகசியங்களைத் தியானித்து மிகுந்த ஆச்சரியப்பட்டுக்கொண்டிருந்தாலும், அந்தத் திவ்விய பாலன் காண்பித்த புண்ணிய மாதிரிகைகளை அநுசரியாதேபோனால் நமக்கு வரும் பிரயோசனமென்ன?

**மனப்பற்றுதல்.**—ஆண்டவர் பிறந்த கொட்டிலில் நீ புத்தியால் பிரவேசித்து அதில் உன் திவ்விய இரட்சகரைத் துதித்து வணங்கி நமஸ்கரிக்கக்கடவாய். மேலும் மனிதர் அவர்மேல் ஒருபிரகாரமாயிருந்து அவரை மறந்துபோன குறையை உன் பத்தி பற்றுதலால் பரிகரிக்கப் பிரயாசப்படு.

**பிரதிக்கினை.**—உன் தியானங்களால் உன் பத்தி வளரவும் நடத்தை திருந்தி நீ உத்தமனாகவும் முயற்சிசெய்.

## 3-ம் பிரிவு

**அர்ச். கன்னிமரியம்மாள் இந்த வர்த்தமானங்களை மறவாமல் தமது மனதில் வைத்துச் சிந்தித்துக்கொண்டிருக்கிறாள்**

**தியானம்.**—அப்படியிருக்க அர்ச். கன்னிமரியம்மாள் இந்தக் காரியங்களையெல்லாம் தமது மனதில் வைத்துத் தியானித்துக்கொண்டிருந்தாளென்று அர்ச். லூக்காஸ் சொல்லியிருக்கிறார் (லூக். 2). திவ்விய கர்த்தர் மட்டில் அவருடைய திருத் தாயார் நடந்துகொண்ட விதத்தையும், யூதர்கள் அவரைக் கவனியாமல் மறந்த அக்கிரமத்தையும் பார்க்கும்போது ஒன்றுக்கொன்று எவ்வளவோ வித்தியாசமாயிருக்கின்றது! அந்த ஆண்டவள் இதெல்லாம் தமது மனதுக்குள் வைத்திருந்தாளென்பதற்கு அர்த்தமென்ன? என்னவென்றால் தமது திருக்குமாரனுக்கு நடந்ததும் அவரைப்பற்றித் தாம் கேட்டதுமாகிய சகலத்தையும் தமதுள்ளத்தில் ஆழமாய்ப் பதித்துவைத்துக்கொண்டு அவைகளின்மேல் எப்போதும் உருக்கமாய்த் தியானித்துவருவாள். மேலும் பிற்காலத்தில் அவைகளை அப்போஸ்தலர்களுக்கும் சீஷர்களுக்கும் அறிவிக்கும்படி ஓர் பொக்கி



ஷத்தைப்போல் தமது மனதில் காப்பாற்றிக்கொண்டிருந் தாளென்றுஞ் சொல்லவேணும். அன்றியும் ஆண்டவர் மனுஷாவதாரமெடுத்துப் பிறந்ததும், இடையர்கள் வந்து அவரை ஆராதித்ததும், தேவமாதா எலிசெபெத்தம்மாளைச் சந்தித்ததும், நாற்பதாம் நாள் தேவாலயத்தில் காணிக்கை கொடுத்துச் சுத்திகரச் சடங்கு நிறைவேற்றினதும் ஆகிய இவைகளையெல்லாம் அர்ச். லூக்காஸ் அந்த ஆண்டவளின் வாய்மொழியால் அறிந்து சுவிசேஷத்தில் எழுதிவைத்தா ரென்று நம்பத்தக்கதாயிருக்கிறது.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—நீ செய்யும் தியானங்களினாலே உனக்கு வெகு ஞான நன்மைகள் வரத்தக்கதாக அவைகளை எப்படிச் செய்யவேணுமென்று உன் தாயாராகிய அந்த ஆண்டவளிடத்தில் கற்றுக்கொள். இதற்காக நீ செய்யவேண்டியதென்னவென்றால், தியானத்தில் வந்த நல்லயோசனைகளை ஒரு நாளைக்குள் அநேகவிசை ஞாபகத்தில் வரப்பண்ணி, அந்த யோசனைகளால் உண்டாகும் ஆசை, பயம், வெறுப்பு முதலிய உணர்ச்சிகளை உன் இருதயத்தில் எழுப்பிக்கொண்டிருக்கக்கடவாய். இப்படி நீ செய்துவந்தாயோவென்றும், இனி எப்படி நடந்துகொள்ளவேண்டியதென்றும் பார்த்துக்கொள். எதில் தவறிப்போனாயென்றும்,

**சம்பாஷணை.**—இன்றையத் திருநாளுக்குரிய பேர் போன வேதசாட்சியும் காந்தர்புரி மேற்றிராணியாருமாகிய அர்ச். தோமையாரோடு சம்பாஷணை செய். அவர் திருச் சபையின்மேல் வைத்த பற்றுதலினால் அதற்காகச் சந்தோஷமாய்ப் பிராணனைக் கொடுப்பேனென்று தம்மைக் கொல்லவந்தவர்களை நோக்கிச் சொல்லிப் பிராணனைக் கொடுத்தார். அவரிடத்தில் விளங்கின அந்தப் பற்றுதலில் உனக்கும் எவ்வளவாவது தந்தருளவேணுமென்று மன்றாடு.

# 30-ம் தேதி

## ஞான வேகத்தின்பேரில்

### நம்மிடத்தில் இதைக் காப்பாற்றி வளர்ப்பதற்கான மூன்று முகாந்தரங்கள்

**ஆயத்தச்சிந்தனை.**—நீங்கள் எப்போதும் நன்றியறிந்தவர்களாய்க் கர்த்தருக்கு ஞானவேகத்தோடு ஊழியஞ் செய்யுங்களென்று அர்ச். சின்னப்பர் நம்மைநோக்கிச் சொல்வதாக ரூபிகரித்துக்கொள்ளுவோமாக (கொரி. 3; உரோ. 12).

**தியானச் சேபம்.**—தேவ ஊழியத்தில் நமக்கு ஞானவேகமுண்டாகும்படி ஆண்டவரை மன்றாடக்கடவோம்.

## முதல் பிரிவு

### நாம் ஞானவேகமாயிருப்பதற்குச் சர்வேசுரன் பாரிசமாயுள்ள முகாந்தரங்கள்

**தியானம்.**—நித்திய வார்த்தையானவர் மாம்ச ஐக்கியமெடுத்து மனுஷனாய்ப் பிறந்ததைக் குறித்து இந்த மாதம் பதினைந்தாம் தேதிமுதல் இதுவரையிலும் நாம் செய்த தியானங்களெல்லாம் சர்வேசுரன் சகல மனுஷர்பேரிலும், நம்மில் ஒவ்வொருவர் பேரிலும் வைத்திருக்கிற வாக்குக் கெட்டாத சிநேகத்தை நமக்கு ஞாபகப்படுத்துகின்றது. சர்வேசுரன் உலகத்தை எம்மாத்திரம் சிநேகித்தாரென்றால் அதை இரட்சிக்கும்படி தமது ஏக குமாரனைத்தானே கொடுத்தாரென்று அர்ச். அருளப்பர் அருளிச்செய்தார் (அரு. 3.) சிநேகம் சிநேகத்தை ஈடாகக் கேட்கிறது. ஆகையால் நாம் தேவ ஊழியத்தில் முக்கியமாய் ஞானவேகத்தைக் கொண்டுதான் நமது சிநேகத்தை வெளியாக்கவேண்டியது. இதைப்பற்றியன்றோ நீங்கள் எப்போதும் நன்றியறிந்தவர்களாய் ஞானவேகத்தோடு ஆண்டவருக்கு



ஊழியஞ் செய்யுங்களென்று அர்ச். சின்னப்பர் சொல்லியிருக்கிறார். சர்வேசுரனுக்கு நமது மட்டில் உள்ள அன்பின் பேரில் இத்தலை தியானஞ்செய்தபின் நம்மிடத்தில் ஞானவேகத்தை மூட்டி வளர்ப்பதற்கு ஏதுவான சில விஷயங்களை இங்கே தியானிக்கக்கடவோம். அவைகளில் சுபாவமாய் நமது புத்தியில் முந்தமுந்தத் தென்படுகிறதென்னவென்றால் சர்வேசுரன் நம்மைச் சிருஷ்டித்ததும் இரட்சித்ததுமாகிய உபகாரங்களைப்பார்க்கும்போது அவர் நம்மை நித்தியகாலமாய் நினைத்து நித்தியகாலமாய் நம்மைச் சிநேகித்திருக்கிறார். நாம் அவரைப் பேறுபலனோடு சிநேகிப்பதற்கு நமக்குள்ள காலமோ எவ்வளவோ சொற்பமாயிருக்கிறது! ஆகையால் இந்தச் சொற்பகாலத்தில் அவரை நாம் எவ்வளவோ வேகமாய்ச் சிநேகிக்கவேண்டியது.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—இந்த நினைவானது அர்ச்சியசிஷ்டவர்களுடைய மனதில் எப்போதும் குடிகொண்டிருந்து, அவர்களுக்கு ஆரம்பத்திலிருந்த பத்தி சுறுசுறுப்பைக் காப்பாற்றி நாளுக்குநாள் அவர்கள் அதிக உத்தமமான புண்ணிய முயற்சிகளைச் செய்துகொண்டுவரும்படி அவர்களை ஏவிக்கொண்டு வந்தது. அவர்கள் பிரமிப்போடு: ஆ, இதென்ன! சர்வேசுரன் சதாகாலமும் என்மேல் பட்சமும் கவலையும் வைத்திருக்க, அதற்கு ஈடாக நான் அவரைச் சிநேகிப்பதற்குக் கொஞ்சக்காலந்தானே இருக்கிறது! இந்தக் கொஞ்சக்காலத்தை என்னுடைய அசமந்தத்தினாலே தேவ ஊழியத்தில் வீணாய்ப்போக்குவேனோ? என் இருதயத்தை அவருக்கும் சிருஷ்டிகளுக்கும் பகிர்ந்துகொடுப்பேனோ? இல்லை, இல்லை. அப்படியாகாது. என் ஆத்துமமே, தைரியமாயிரு. நமது வாழ்நாட்கள் போகப்போக நமது ஞானவேகமும், தாராளமும் இருமடங்காய் அதிகரிக்கக்கடவதென்று தங்களை நோக்கிச் சொல்லிவருவார்கள். நீயும் சர்வேசுரன் உன்னை நித்தியமாய்ச் சிநேகித்தாரென்று நினைத்து, அன்பால் உருகி, அவர் திரு ஊழியத்தில் சுறுசுறுப்பையும் தாராளத்தையும் காண்பிப்பாயாக.

**மனப்பற்றுதல்.**—என் ஆத்துமமே, நித்தியமாய் உன்னைச் சிநேகிக்கும் சிநேகத்தைச் சிநேகிக்கக்கடவாயென்று அல்வாரெஸ் தெப்பாசென்பவரோடு நீயுஞ் சொல்.

**பிரதிக்கினை.**—இந்தப் பத்தியுள்ள மனவல்லயச் செபத்தைச் சொல்லிவரப் பழகுவேன்.

## 2-ம் பிரிவு

### நாம் ஞானவேகமாயிருப்பதற்கு நமது பாரிசமாயுள்ள முகாந்தரங்கள்

**தியானம்.**—சர்வேசுரனை நாம் யோக்கியமானவிதமாய்ச் சிநேகித்துச் சேவிப்பதற்கு ஞானவேகம் அவசரமானால் நம்மை நாம் உண்மையாய்ச் சிநேகிப்பதற்கும் ஞானவேகம் அவசரமாமே. ஏனென்றால் நாம் உலகத்தை வெறுத்துவிடுவதற்கு நேரிட்ட விக்கினமெல்லாம் செயித்து, பலியிடவேண்டியதெல்லாம் பலியிட்டுக் கடைசியாய்ச் சந்நியாசத்தில் பிரவேசித்திருக்கிறோமே! இதற்குக் காரணமென்ன? உலகத்திலிருந்துகொண்டு நாம் அநுசரிக்கக்கூடிய சாதாரண புண்ணியங்களைச் சந்நியாசத்திலும் அநுசரித்தால் போதுமென்று எண்ணியோ? அதில்லையே. நமது பாவங்களுக்குத் தபசுபண்ணி இவ்வுலகத்தையே நமக்கு உத்தரிக்கிற ஸ்தலமாக்கிக்கொள்ளவும், அர்ச்சியசிஷ்டவர்களாய்ச் சீவித்து மரிக்கவும், பரலோகத்தில் மேலான பாக்கியத்தைக் கைக்கொள்ளவுமல்லவோ நாம் சந்நியாசத்தில் பிரவேசித்திருக்கிறோம். ஆனால் தேவ ஊழியத்தில் மகா ஞானவேகமில்லாதேபோனால் இதெல்லாங் கூடாத காரியமாமே. ஆகையால் சந்நியாசத்தில் பிரவேசிக்கும்போது தாங்கள் கொண்டிருந்த மேலான கருத்தை நிறைவேற்றவேணுமென்று விரும்புகிற சந்நியாசிகளெல்லோரும், தங்களுக்குத் துவக்கத்திலிருந்த ஞான வேகம் எங்கே சன்னஞ்சன்னமாய்க் குறைந்து அசமந்தத்துக்குள்ளாகிறோமோவென்று மகா பயத்தோடு நடக்கக்கடவார்கள்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—உனக்குத் துவக்கத்திலிருந்த பத்தி சுறுசுறுப்பாகிய ஞான



வேகம் இப்போது எந்த ஸ்திதியிலிருக்கிறது? வளர்ந்துவருகிறதோ குறைந்துபோகிறதோ? வருஷம் முடியப்போகிற இந்தச் சமயத்திலே இந்த முக்கியமான கேள்வியை நீ உன்னை நோக்கிக் கேட்பது நியாயந்தானே. இதற்குப் பதில் சொல்வது வருத்தமல்ல. நவசந்நியாசியாய் இருந்தபோது நீ நடந்தவிதமும் இப்போது நடக்கிறவிதமும் எப்படியென்று ஒத்துப்பார். விசேஷமாய்க் காலமே எழுந்திருத்தல், தாழ்ச்சி, மன ஒறுத்தல், தேவ நற்கருணை சந்தித்தல், சரீரத் தபசு, தியானம், தனியாத்தும சோதனை முதலிய புண்ணிய முயற்சிகளை முந்தி நீ எப்படி அநுசரித்துவந்தாயென்றும் இப்பொழுது எப்படி அநுசரித்துவருகிறாயென்றும் விசாரித்து உனக்கு நீயே தீர்ப்புச்சொல்லிக்கொள்.

**மனப்பற்றுதல்.**— ஆண்டவரே, உமது பரிசுத்த சிநேகத்தின் சந்தோஷத்தைத் திரும்பவும் எனக்குத் தந்து, திடமான மனதை என்னிடத்தில் ஏற்படுத்தியருளும் (சங். 51.)

**பிரதிக்கினை.**—நான் சந்நியாசத்தில் ஏன் பிரவேசித்தேனென்று அடிக்கடி தன்னை வினவிக்கொள்ளுகிறது.

## 3-ம் பிரிவு

### நாம் ஞானவேகமாயிருப்பதற்கு பிறர் பாரிசமாயுள்ள முகாந்தரங்கள்

**தியானம்.**—சந்நியாசியானவன் எந்தச் சபையைச் சேர்ந்தவனானாலும் அவன் பிறருடைய மனுஷனாயிருந்து அவர்களுக்கு உதவிசெய்யவேண்டியது. பாவத்தால் நிந்திக்கப்பட்ட சர்வேசுரனுக்கும் பாவத்தைச் செய்த மனுஷனுக்கும் நடுவே அவன் மத்தியஸ்தனாயிருந்து, பாவியின் மேல் விழவிருக்கிற ஆக்கினைகளைத் தடுப்பது அவன் கடமை. ஆகையால் அவன் உருக்கமான தேவ சிநேகத்தால் சர்வேசுரனோடு ஐக்கியமாகி, அவருடைய இருதயத்துக்கு உகந்தவனாய், அவரிடத்தில் வெகு சலுகைபெற்றவனாய், பலத்த சிபாரிசு செய்யத்தக்கவனாய் இருக்கவேண்டி

யது. ஆனால் இவ்விதம் இருப்பதற்கு அவன் தேவ ஊழியத்தில் வழக்கத்துக்கு மேற்பட்ட தாராளமும் ஞான வேகமுங் கொண்டிருக்கவேண்டியதாமே.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—மனுஷருக்கு வெகு நன்மைசெய்யவும், அநேக ஆத்துமாக்களை ஈடேற்றவும் நீ மகா ஆவலாயிருக்கிறாயே. இது பலிக்க வேணுமானால் பிறருக்குப் பிரயோசனமாயிருக்கவேணுமென்கிற கருத்தோடு உன்னை நீ அர்ச்சித்துக்கொண்டு வா. இதுவே உத்தமமான உபாயமாம். இயேசுநாதரும் அப்போஸ்தலர்களைக்குறித்துத் தமது பிதாவை நோக்கிச் செய்த செபத்தில்: இவர்களுஞ் சத்தியமாகவே அர்ச்சிக்கப்படும்பொருட்டு என்னை நான் அர்ச்சித்துக்கொண்டுவருகிறேனென்று சொல்லியிருக்கிறார் (அரு. 17). ஆகையால் தேவ ஊழியத்தில் ஞானவேகமுள்ளவனாய் இரு; நீயும் அப்போஸ்தலன் ஆவாய், உன் முயற்சிகளும் ஆசீர்வதிக்கப்படும்.

சம்பாஷணை.—இந்த வருஷத்தில் நீ எந்த அர்ச்சியசிஷ்டவர்களை அடிக்கடி பிரார்த்தித்து வந்தாயோ அந்த அர்ச்சியசிஷ்டவர்களோடு சம்பாஷணை செய்.

---

## 31-ம் தேதி

### வருஷத்தின் கடைசிநாளின்பேரில்

ஆயத்தச் சிந்தனை.—ஒரு வியாபாரி வருஷக்கடைசியில் தன் கணக்குகளையெல்லாம் ஒத்துப்பார்க்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

தியானச் செபம்.—சென்ற காலத்தில் நீ எப்படி நடந்தாயென்று அறிந்துகொண்டு அதினால் இனிவருங் காலத்தில் உன்னைத்திருத்தி ஞான ஆதாயமடையும்படி வேண்டிய வரப்பிரசாதத்தைக் கேள்.



### முதல் பிரிவு

#### இந்த வருஷமானது உனக்கு எப்பேர்க்கொத்ததாய் இருந்தது

சர்வேசுரனுடைய பக்கத்தைப்பார்த்
தியானம்.—சர்வேசுரனுடைய பக்கத்தைப்பார்த்
தால் இந்த வருஷமானது உனக்குச் சுபாவ ஒழுங்கிலும்
ஞான ஒழுங்கிலும் இடைவிடாத நன்மைகளும் உபகாரங்
களும் நிறைந்த வருஷமாயிருந்தது. அனேகமாயிரம்
பேர் ஆபத்துக்குள் அகப்பட்டு இறந்திருக்க, சர்வேசுரன்
அவ்வித ஆபத்துக்கள் நடுவில் உன் சீவனையும் சௌக்கியத்
தையுங் காப்பாற்றியிருக்கிறார். ஒரு நல்ல தகப்பனைப்
போல உனக்கு வேண்டியதெல்லாம் குறையின்றிச் சவர
க்ஷணை செய்திருக்கிறார். இன்னும் அவர் எவ்வளவோ
கவலையோடு உன் ஆத்தும நன்மைகளை விசாரித்து, உன்
சத்துவத்துக்கு மிஞ்சின சோதனைகள் உனக்கு வராதபடி
தடுத்து, உனக்கு நேரிட்ட வருத்தமான சமயங்களில்
தமது விசேஷ வரப்பிரசாதங்களால் உன்னைத் தாங்கி நடத்
தியிருக்கிறார்! இந்த வருஷத்தின் ஒவ்வொரு நாளையும்
நினைத்துப்பார்; அவர் உனக்கு விசேஷ உபகாரஞ் செய்
யாத நாள் ஒன்றையாகிலுங் காணமாட்டாய்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—
உன் பக்கத்தில் இந்த வருஷமானது எப்படிப்பட்டதா
யிருந்ததென்று பார். இந்த வருஷத்தில் சர்வேசுரன்
உனக்குச் செய்த கணக்கில்லாத உபகாரங்களுக்கு நீ ஏற்ற
பிரகாரம் நடந்துவந்தாயோ? இந்த வருஷம் உனக்குத்
தேவ ஊழியத்தில் பத்திவேகமும், தேவ சிநேகத்தில்
வர்த்திப்புமுள்ள வருஷமாயிருந்ததோ? ஐயோ, இதற்
குப் பதிலாய் இந்த வருஷத்தில் உன் தகப்பனிடம் வெகு
வஞ்சகஞ் செய்யவில்லையோ? அதாவது உன்னை முழு
மையுந் தேவ ஊழியத்தில் செலவழியாமல், மிகுந்த அசட்
டையோடும் நன்றியறியாமையோடும் நடக்கவில்லையோ?

மனம்பற்றுதல்.—பெற்ற தகப்பனைவிட உன்னை
அதிகமாய்ச் சிநேகித்து மட்டற்ற உபகாரங்களை உனக்குச்
செய்த சர்வேசுரனுக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்.

மேலும் அவருடைய உபகாரங்களுக்கு ஒத்தவண்ணம் நீ நடவாமற்போனதற்காக மனநொந்து பொறுத்தலைக் கேள்.

பிரதிக்கினை.—இந்த நல்ல பற்றுதல்களோடு இன்று பூசை கண்டு, வருஷத்தின் கடைசி நாளாகிய இந்தத் தினத்தை உன்னாலான பத்தி சுறுசுறுப்போடு செலவழிப்பாயாக.

## 2-ம் பிரிவு

### இந்த வருஷத்திலே உனக்கு இன்னும் இருப்பதென்ன? ஒன்றுமில்லை. எல்லாங் கடந்துபோயிற்று

தியானம்.—இந்த வருஷம் துவக்கி ஒன்றுக்குப்பின் ஒன்றாய் நடந்துவந்த காரியங்களோடு நாட்களெல்லாங் கழிந்து, கடைசி நாளாயிற்று. இதில் உனக்கு இன்னும் இருப்பதென்ன? ஒன்றுமில்லை, எல்லாங் கடந்துபோயிற்று. நன்மை செய்ததில் பட்ட பிரயாசமும், தின்மை செய்ததில் அனுபவித்த சந்தோஷமும் எல்லாம் காற்றாய்ப் பறந்துபோயிற்று. பத்திமுயற்சிகளை நன்றாய்ச் செய்து, தன் கிரியைகளையெல்லாம் அர்ச்சித்து, துர் ஆசாபாசங்களோடு போராடி, தன் பஞ்சேந்திரியங்களைச் சந்நியாச ஒழுக்க முறைமைக்குக் கீழ்ப்படுத்தி இடைவிடாமல் தன்னை ஒடுக்கி அடக்கும்படி ஞானவேகமுள்ள சந்நியாசியானவன் பட்ட வருத்தமெல்லாம் முடிந்துபோனது. ஞானவேகமில்லாத சந்நியாசியும் தன் மனச்சாட்சிக்குப் பளுவாகவும், தன் ஆத்துமத்தின் நித்திய நன்மைக்குக் கேடாகவும் பிறருக்குத் துன்மாதிரிகையாகவும் அசமந்தமாய் நடந்து, தன் சுகத்தைத் தேடி அடைந்த திருத்தியும் ஒன்றுமில்லாமற்போய்விட்டது. இவ்விதமே எல்லாருக்கும் காலம் கடந்துபோகிறது. ஆயினும் இன்று அவர்கள் தங்கள் நடக்கையைப்பற்றி நினைத்தால், இந்த நினைவு நல்ல சந்நியாசிக்கு மகா இன்பமும் ஆறுதலுமாயிருக்க, அசமந்த சந்நியாசிக்கு எவ்வளவோ சலிப்புஞ் சஞ்சலமுமாயிருக்கும்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இப்போது தியானித்ததைக்கொண்டு நீ ஞானப்பிரயோசனம்



அடையத்தக்கதாகச் சற்றுநேரம் உன்னுள்ளத்தில் பிரவே
சித்து, உனக்கு ஞானத்தெளிவைத் தரும்படி ஆண்டவரை
மன்றாடி மேற்சொன்ன இருவகைச் சந்நியாசிகளுக்குள் நீ
யாருக்கு ஒப்பாயிருக்கிறாயென்று பார். நீ நல்ல சந்நி
யாசிக்கு ஒப்பாய் நடந்திருந்தால் சந்தோஷித்து மகிழக்
கடவாய். அசமந்த சந்நியாசிக்கு ஒப்பாய் நடந்திருந்
தால், சர்வேசுரன் உன்னிடத்தில் கேட்கப்போகிற
கண்டிப்பான கணக்கையும் நீ இழந்துபோன திரளான
பேறு பலன்களையும் நினைத்து உன் மனதில் எவ்வளவோ
துக்கமும் கிலேசமும் உண்டாகவேண்டியது.

மனப்பற்றுதல்.—இந்தச் சமயத்தில் உன் மனச்சாட்சி சொல்லுகிறதுக்குத் தக்கபடி உன்னிடத்தில் சந்தோஷத்தையாவது துக்கத்தையாவது எழுப்பிக்கொள்.

பிரதிக்கினை.—இந்த வருஷத்தில் நீ அடைந்த பேறு பலன்களை அதிகரிக்கும்படி இன்றைக்கு விசேஷ பத்தி சுறுசுறுப்போடு நட.

## 3-ம் பிரிவு

### இந்த வருஷத்தில் உனக்கு இன்னுமிருப்பதென்ன? எல்லாமிருக்கிறது, ஒன்றும் இழந்துபோகவில்லை

தியானம்.—வருஷத்தின் கடைசிநாளிலே எல்லாங்
கடந்துபோயிற்றென்று மெய்யாகவே சொல்லக்கூடுமாயி
னும், வேறொரு அர்த்தத்திலே ஒன்றுங் கடந்துபோக
வில்லையென்றும் சொல்லக்கூடும். ஏனென்றால்: நாம் செய்த
நன்மையும் தின்மையும், நாம் நினைத்த நினைவுகளும்,
சொன்ன சொற்களும், செய்த செய்கைகளும் ஒன்றும்
தவறாமல் சம்பாவனைக்காவது ஆக்கினைக்காவது உரியவை
களாய் எப்போதும் நம்மோடிருக்கும். சர்வேசுரன் அவை
களைத் தமது நீதியின் தராசைக்கொண்டு நிறுத்துவைத்
திருக்கிறார். நன்மைக்குச் சிறந்த சம்பாவனையும் தின்
மைக்குக் கடின ஆக்கினையும் கிடைப்பதல்லாமல் ஒன்றும்
சும்மா அழிந்துபோகிறதில்லை.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—இந்தச் சத்தியமானது எப்போதும் நமது கண்ணுக்குமுன் நின்றால், நன்மை செய்வதற்கான சமயத்தை எவ்வளவோ ஆத்திரத்தோடு தேடியிருப்போம். அற்பக் குற்றமாகிலும் செய்யாதபடி எவ்வளவோ ஜாக்கிரதையாயிருந்திருப்போம்; அன்றியும் இந்த வருஷம் நமக்குத் தேவ சமுகத்தில் எவ்வளவோ விலையேறப்பெற்றதாயிருந்திருக்கும். இந்த வருஷம் நமக்கு இப்படியிராவிட்டால், நாளைத் துவக்கப்போகிற புது வருஷமாவது இப்படியிருக்கும்படி வேண்டியதெல்லாம் செய்ய உறுதியான பிரதிக்கினை செய்துகொள்ளக் கடவோம். இவ்விதஞ் செய்வோமானால் புது வருஷத்தில் நமக்கு மற்றவர்கள் நன்மையாய்க் கோருவதெல்லாம் மெய்யாகவே நமக்குக் கைகூடும். அந்த வருஷம் நமக்குப் பாக்கியமான வருஷமாயிருக்கும்.

**சம்பாஷணை.**—நமது காவல் சம்மனசானவரோடும் நாம் பேர்கொண்டிருக்கிற அர்ச்சியசிஷ்டவர்களோடும் சம்பாஷணை செய்து அவர்களுக்கு நன்றியறிந்த தோத்திரம்பண்ணி, அவர்கள் இனிமேலும் எப்போதும் நமக்கு நல் உபகாரிகளாயிருக்கும்படி வேண்டிக்கொள்ளக்கடவோம். அன்றியும் இந்த வருஷம் சர்வேசுரன் நமக்குச் செய்த சகல உபகாரங்களுக்கும் நன்றியறிதலாக இன்று நாம் பாடும் தேவ தோத்திரப்பாடலை அவர்களும் நம்மோடு கூடப் பாடும்படி மன்றாடுவோமாக!

# அந்தந்த மாதத்தின் தலைவெள்ளிக்கிழமையில் செய்யத்தக்க தியானங்கள்

## ஜூலை மாதம்

## இயேசுநாதருடைய திரு இருதயப் பத்தியின்பேரில்

**ஆயத்தச் சிந்தனை.**—இயேசுநாதர் தமது இருதயத்தைத் திறந்து காண்பித்து: இதோ மனிதரை இம்மாத்திரம் சிநேகித்த இருதயமென்று சொல்வதைக் கேட்பதாக ரூபிகரித்துக்கொள்.

**தியானச் செபம்.**—இயேசுநாதருடைய திரு இருதயத்தின்பேரில் உண்மையும் உருக்கமுமான பத்தியைக் கேள்.

### முதல் பிரிவு

### திரு இருதயப் பத்தியின் விஷயம்

இந்தப் பத்திக்குக் காணக்கூடிய விஷய **தியானம்.**—மாயிருப்பது என்னவென்றால்: அவதரித்த தேவ வார்த்தையானவருடைய இருதயமாமே. இத்திரு இருதயமானது அவருடைய மனுஷீகத்தோடும் தெய்வீகத்தோடும் ஒருபோதும் பிரியாமல் ஒன்றித்திருக்கிறது. மேலும் இயேசுநாதசுவாமி சர்வ ஆராதனைக்கும் பாத்திரமாயிருக்கிறதுபோல அவரோடு ஒரு பொருளாய்ச் சேர்ந்திருக்கிற இத்திரு இருதயமும் சர்வ ஆராதனைக்கும் பாத்திரமாமே.

இந்தப் பத்திக்கு உயிர்போலிருக்கிற ஞான விஷயமேதென்றால்: இயேசுநாதருடைய சிநேகமேயன்றி வேறல்ல. திரு இருதயமானது அச்சிநேகத்தை நமக்கு எண்பிக்கும் அடையாளமாயிருக்கின்றது. ஆகையால் இந்தப் பத்தியின் விஷயத்தை எவ்விதமாய்ப் பார்த்தாலும், மெய்யாகவே இது மகா உன்னதமும் உருக்கமுள்ளதும் உயர்ந்த மாட்சிமையுள்ளதுமாய் இருக்கின்றது. ஏனென்றால்: இது நம்மைச் சிநேகிக்கிற ஒரு தெய்வத்தின் இரு

தயமாமே. இந்த இருதயம் இயேசுநாதருடைய மனுஷீகத்தின் அவயவங்களுக்குள் மேன்மையானதும், இதின் சிநேகம் அவருடைய தெய்வீகத்தின் இலட்சணங்களுக்குள் சிறந்ததுமாயிருக்கிறதினாலே, நாம் இந்த இருதயத்தைச் சிநேகிக்கும்போது இயேசுநாதசுவாமியைத்தானே சிநேகிக்கிறோம்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—மேற்சொல்லப்பட்டவைகளை நன்றாய்த் தியானித்துப் பார்ப்போமானால், ஆராதனைக்குரிய இயேசுநாதருடைய இருதயத்தின்மேல் நாம் வேகமான பத்தி வைக்கவும், அத்திரு இருதய வணக்கத்தைப் பிரபலியமாக்கும்படி ஆன வழிவகைகளெல்லாம் தேடவும் நமக்கு ஆசை வருமென்பதற்குச் சந்தேகயில்லை. இந்த வழிவகைகளுக்குள் தலைவெள்ளிக்கிழமைப் பத்தியும் ஒன்றுமே. ஏனென்றால்: முந்த முந்தத் திரு இருதயச் சபையைச் சேர்ந்தவர்களுக்குள் பத்தி சுறுசுறுப்பைக் காப்பாற்றுவதும், 2-வது, மனிதர்களுக்காக அத்தனை பாடுபட்ட திவ்விய இரட்சகர்மட்டில் அவர்களுக்குள்ள நன்றியறிதல் கடமைகளையெல்லாம் அவர்களுக்கு ஞாபகப்படுத்துவதும், 3-வது, பூசை, சற்பிரசாத ஆராதனை, ஆசீர்வாதமுதலிய ஞான கிருத்தியங்களைப் பிரசித்தமாகவும் சிறப்பு ஆடம்பரமாகவும் நடப்பித்து, கடைசியில் நிந்தைப்பரிகாரச் செபஞ்செய்து இவ்விதமாய்க் கிறீஸ்துவர்களுக்குள் இந்தப் பத்தியைக் காப்பாற்றி வளர்ப்பதும், 4-வது, திரு இருதயத்தினின்று நவமான வரப்பிரசாதங்களைப் பெற்றுக்கொள்ளும்படி அந்தந்த மாதத்தின் முந்தின பலனை ஒப்புக்கொடுத்தாற்போல தலைவெள்ளிக்கிழமையை அத்திரு இருதயத்துக்கு வசீகரம் பண்ணுகிறதும், ஆகிய இவையெல்லாம் தலைவெள்ளிக்கிழமைப் பத்தியின் கருத்தாகையால் இது திரு இருதய வணக்கம் பெருகுவதற்கு ஆன வழியென்பதற்குச் சந்தேகமில்லை.

**மனப்பற்றுதல்.**—தலைவெள்ளிக்கிழமைப் பத்தியின் கருத்துகள் சம்பூரணமாய் நிறைவேறும்படி என்னுள்ளத்தில் வேகமான ஆசை உண்டாகிறதென்று திவ்விய இரட்சகருடைய பாதத்தில் சாதித்துச் சொல்வேன்.



**பிரதிக்கினை.**—இந்தக் கருத்துகள் நிறைவேறும்படி எனக்கு உதவியாகத் திரு இருதயப்படத்தைக் கண்முன்பாக வைத்துக்கொண்டு, இயேசுநாதருடைய மதுரமான இருதயமே என்கிற பத்தியுள்ள மனவல்லயச் செபத்தை இன்று அடிக்கடி சொல்லிவருவேன்.

## 2-ம் பிரிவு

### திரு இருதயத்தின்மேல் பத்திவைப்பதற்கான முகாந்தரங்கள்

**தியானம்.**—இயேசுநாதருடைய பாரிசமாயுள்ள முகாந்தரங்கள்: நமக்காக இயேசுநாதசுவாமி செய்ததும் பட்டதுமாகிய சகலத்தையும் நாம் இடைவிடாமல் நினைவுகூறும்படி இந்தப் பத்தியானது வழியாயிருக்கிறபடியினாலே இந்தப் பத்தியைவிட அவருக்குப் பிரியமானது வேறொன்றுமில்லை. அன்றியும் அவருடைய இருதயம் நம்முடைய இருதயத்தைப்போலவே உருவாக்கப்பட்டிருக்கிறது. நாம் ஒருவருக்குச் செய்த நன்றியை அவர்கள் நினைத்துக்கொள்ளவேணுமென்று நாம் எவ்விதம் ஆசிக்கிறோமோ, அவ்விதமே திவ்விய கர்த்தரும் ஆசிக்கிறதாக அவர் திருவுளம்பற்றின வாக்கியங்களால் தெரியவருகிறது. எப்படியென்றால் அவர் மரணமடைகிறதற்கு முந்தினநாள் அப்போஸ்தலருக்குத் தேவநற்கருணை உண்டாக்க அதிகாரங் கொடுத்தபோது இதை என் ஞாபகமாகச் செய்யுங்களென்று இரு முறையாய்த் திருவுளம்பற்றினார் (லூக். 21).

நமது பாரிசமாயுள்ள முகாந்தரங்கள்: முந்தமுந்த நாம் உள்ளரங்க ஜீவியத்தைக் காப்பாற்றவும், 2-வது, திவ்விய கர்த்தர்மட்டில் நமக்குள்ள நன்றியறிதல் கடனைச் செலுத்தவும், 3-வது, அவருடைய திரு ஊழியத்தில் நமது ஞான வேகத்தைக் காத்து வளர்க்கவும், 4-வது, வற்றாத ஊற்றாகிய இத்திரு இருதயத்தினின்று நமக்கும் நமது விசாரணைக்குட்பட்ட சகலருக்கும் ஏராளமான வரப்பிரசாதங்களைப் பெற்றுக்கொள்ளவும் இந்தப் பத்தியானது தகுந்த வழியாயிருக்கிறதினாலே இது நமக்கு மகா பிரயோசனமானது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நாமெல்லோரும் திரு இருதயப் பத்தியை மகா ஆவலோடு அநுசரிக்கவும் மற்றவர்கள் உள்ளத்தில் இந்தப் பத்தியைப் பற்றுவிக்கும்படி ஆன சமயங்களைக் கவலையோடு தேடவும் மேற்சொல்லியவைகள் எவ்வளவோ பலத்த முகாந்தரங்கள்! ஆயினும் இதுகாரியத்தில் நாம் நடந்த விதமென்ன? நாம் குளிர்ந்தவர்களாய் அசட்டையாய் நடந்தோமென்று நம்மை நாமே கடிந்துகொள்வதற்கு இடமில்லையோ?

மனப்பற்றுதல்.—திரு இருதயத்தின்மேல் எனக்குப் பத்தி வர்த்திக்கவேணுமென்று மன்றாடுவேன்.

பிரதிக்கினை.—இந்தப் பத்தி எங்கும் பரவி அநுசரிக்கப்படும்படி நவமான வேகத்தோடு பிரயாசப்படுவேன்.

## 3-ம் பிரிவு

### திரு இருதய வணக்கத்துக்கு விசேஷமாய் வசீகரஞ் செய்யப்பட்ட இந்த நாளில் அநுசரிக்கவேண்டிய பத்திமுயற்சிகள்

தியானம்.—இந்த நாளில் நாம் அநுசரிக்கவேண்டிய பத்திமுயற்சிகள் என்னவென்றால்: முதலாவது, திரு இருதயத்துக்குத் தோத்திரமாகக் கிறீஸ்துவர்கள் என்ன செய்வார்களோ அதையே நாமும் செய்யவேண்டும். ஆனால் நமது அந்தஸ்துக்கு யோக்கியமானபடி அவைகளை மகா உருக்கமான பற்றுதலோடு செய்யக்கடவோம்.

2-வது, இயேசுநாதருடைய திரு இருதயத்தின் நன்மைத்தனத்தையும் தயாளத்தையும் அது அநுபவித்த துக்க வியாகுலங்களையும் எப்போதும் நினைத்துக்கொண்டு இன்று முழுதும் மன ஏகாந்தமாயிருக்கிறது.

3-வது, யாதொரு தவ முயற்சியினுலாவது சிலுவைப் பாதை முதலிய வழக்கத்துக்கு மேலிட்ட வேறெந்தச் சுகிர்த கிரியையினுலாவது இந்த நாளை அர்ச்சிக்கிறது.



4-வது, நமது அன்புக்குரிய இரட்சகருடைய திரு இருதயத்துக்குப் பிரியப்படும்படி சென்ற மாதத்தைவிட இந்தமாதம் என்ன அதிகமாய்ச் செய்யலாமென்று சோதித்துப்பார்க்கிறது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—மேற் கண்ட பத்தி முயற்சிகளைப் பிரமாணிக்கமாய் அநுசரிப்பே னென்று பிரதிக்கினை செய்து அந்தப் பிரதிக்கினையை இந்த மாதம் உனக்குப் பாதுகாவலாயிருக்கிற அர்ச்சியசிஷ் டவர் வழியாக இயேசுநாதருடைய திரு இருதயத்துக்கு ஒப்புக்கொடு.

சம்பாஷணை.—இந்த மாசம் உனக்குப் பாதுகாவலான அர்ச்சியசிஷ்டவரோடு சம்பாஷணை செய். அவர் பரலோகத்தில் இயேசுநாதருடைய மகிமைப்பிரதாப நிறைந்த மனுஷீகத்தைப்பார்த்து அவருள்ளத்தில் பற்றியெரிகிற தேவசிநேகாக்கினியில் ஒரு பொறியாவது உனக்குத் தந்தருளவேணுமென்று அவரை நோக்கி மன்றாடு.

### ஆகஸ்டு மாதம்

| | புத். | பக். |
|---|---|---|
| திவ்விய நற்கருணையிலிருக்கிற இயேசுநாதருடைய சிநேகம் ... ... | I | 599 |

### செப்டேம்பர் மாதம்

| | | |
|---|---|---|
| இயேசுநாதருடைய திரு இருதயத்தின் ஆச்சரியமான கீழ்ப்படிதல் ... ... | I | 612 |

### அக்டோபர் மாதம்

| | | |
|---|---|---|
| தேவநற்கருணையிலே நம்மோடு வாசம் பண்ணும் இயேசுநாதருடைய திரு இருதயத்தின் மட்டில் நமக்கு உண்டான கடமைகள் ... ... ... | I | 634 |

### நவம்பர் மாதம்

| | | |
|---|---|---|
| இயேசுநாதருடைய திரு இருதயத்தின் மாறுத சாந்தம் ... ... ... | I | 616 |

### டிசம்பர் மாதம்

| | | |
|---|---|---|
| இயேசுநாதருடைய திரு இருதயத்தின் உதாரத்தனம் ... ... ... | I | 621 |

விபரம்.—அந்தந்த மாதத்தின் தலைவெள்ளிக்கிழமைக்குக் குறிக்கப்பட்டிருக்கிற தியானத்தை முஸ்திப்புச் செய்தபின் ஜனவரி மாதத்தின் தலைவெள்ளிக்கிழமைக்குக் குறிக்கப்பட்டிருக்கிற தியானத்தின் மூன்றும் பிரிவையும் வாசிப்பது நலமாயிருக்கும்.

## மாதாந்தர நாளொடுக்கத்துக்குரிய தியானங்கள்

### ஜுலை மாதம்

| | புத். | பக். |
|---|---|---|
| இந்த நாளொடுக்கத்தை நன்றாய்ச் செய்வதற்கான முகாந்தரங்களும் வகை வழிகளும் ... ... ... | I | 786 |

### ஆகஸ்டு மாதம்

| | | |
|---|---|---|
| சாவின்பேரில் ... ... ... | II | 564 |

### செப்டேம்பர் மாதம்

| | | |
|---|---|---|
| ஞான வேகத்தின்பேரில் ... ... | II | 63 |

### அக்டோபர் மாதம்

| | | |
|---|---|---|
| காய்ப்பில்லாத மரத்தின்பேரில் ... ... | II | 451 |

### நவம்பர் மாதம்

| | | |
|---|---|---|
| ஞான வேகமுள்ளவனும் இல்லாதவனுமாகிய இரு சந்நியாசிகளின் மரணம் ... | II | 434 |

### டிசம்பர் மாதம்

| | | |
|---|---|---|
| வருஷத்தின் கடைசிநாளின்பேரில் ... | II | 826 |

விபரம்.—ஜனவரி மாதத்துக்குக் குறிக்கப்பட்டிருக்கிற தியானத்தின் ஆயத்தச் சிந்தனையையும் தியானச் செபத்தையும் அதன் மனப்பற்றுதல்களையுஞ் சம்பாஷணையையும் வேறே மாதங்களுக்குக் குறிக்கப்பட்டிருக்கிற தியானங்களிலும் உதவிக்கொள்ளலாம்.

# அனுபந்தத் தியானங்கள்

## ஆகஸ்டு மாதம் 6-ம் தேதி

### நமது ஆண்டவர் மறு ரூபமான திருநாள்

ஆயத்தச் சிந்தனை.—நமது ஆண்டவர் தபோரென்ற மலையிலே தமது மகிமைப் பிரதாப வடிவைக் காண்பிக்கிறதாக ரூபிகரித்துக்கொள்வேன்.

தியானச் சேபம்.—இந்தப் பெரிய பரம இரகசியத்தைப் பலனுள்ள பிரகாரமாய்த் தியானிக்க வரப்பிரசாதங் கேட்பேனாக.

### முதல் பிரிவு

#### இயேசுநாதர் மறு ரூபமான பரம இரகசியத்தின்பேரில்

தியானம்.—அர்ச். மத்தேயு சுவிசேஷத்தில் சொல்லியிருக்கிறதாவது: இயேசுநாதசுவாமி இராயப்பர் இயாகப்பர் இவர் சகோதரனான அருளப்பர் இம்மூவரையும் மலையின்மேல் தனியே கூட்டிக்கொண்டுபோய் அங்கே அவர்கள் முன்பாக மறு ரூபமானார். அதெப்படியென்றால் அவருடைய முகமானது சூரியனைப்போல பிரகாசிக்க அவருடைய வஸ்திரமானது உறைந்த பனியைப்போல வெண்மையாய்த் துலங்கினது. அந்நேரமே மோயிசனும் எலியாசுந் தோன்றி அவரோடே பேசிக்கொண்டிருக்கிறதை அப்போஸ்தலர்கள் கண்டார்கள். அப்போது இராயப்பர் இயேசுநாதரைப் பார்த்துச் சொன்னதாவது: ஆண்டவரே, நாம் இங்கேதானே இருக்கிறது நல்லது. தேவரீருக்குச் சித்தமானால் இவ்விடத்தில் உமக்கு ஒரு கூடாரமும் மோயிசனுக்கு ஒரு கூடாரமும் எலியாசுக்கு ஒரு கூடாரமும் அடிப்போமென்றார். அவர் இன்னும் பேசிக்கொண்டிருக்கும்போது பிரகாசமுள்ள ஒரு மேகம் அவர்களைச் சூழ்ந்துகொண்டது. அந்த மேகத்தினின்று ஓர் குரல் சத்தமுண்டாகி: நமக்கு மிகவும் பிரியமுள்ள குமாரன் இவரே; இவர் பேரில் நமது பட்சமெல்லாம் வைத்திருக்கிறோம்; இவர் சொல்லுக்குச் செவி கொடுங்களென்று சத்தித்தது. இதைக் கேட்ட சீஷர்கள் திகில் அடைந்து முகங் குப்புற விழுந்தார்கள். ஆனால் இயேசுநாதர் அவர்கள் கிட்டவந்து அவர்களைத் தொட்டு: எழுந்திருங்கள், பயப்படாதேயுங்களென்று திருவுளம்பற்றினார். அப்போது அவர்கள் கண்களை ஏறெடுத்துப் பார்க்க இயேசுநாதர் ஒருவரைமாத்திரங் கண்டார்கள். (மத். 17.)

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—சுவாமி மறு ரூபமான இந்தப் பெரும் வர்த்தமானத்தை ஒன்றும் விடாமல் துவக்க முதல் கடைசிமட்டுஞ் சுவிசேஷகர் இங்கே வரைந்திருக்கிறார். இதைக்கேட்கிறவன் தானும் அங்கே கூட நிற்கிறதாக எண்ணிக்கொள்வான். ஏனென்றால் இதில் சொல்லியிருக்கிறதெல்லாம் முன் நடந்ததுபோல் தோன்றாமல், இப்போதுதான் நமது கண்முன்பாக நடக்கிறதுபோல் தோன்றுகிறது. ஆகையால் இந்த வர்த்தமானத்தைச் சேர்ந்த ஆட்களையும், அவர்களுடைய வார்த்தைகளையுங் கிரியைகளையும் முறை முறையாய் யோசித்துப் பார்ப்போமாக. இந்தப் பார்வையால் எத்தனையோ நல்ல விசாரங்களும் எத்தனையோ உயர்ந்த சிந்தனைகளும் உணர்ச்சிகளும் எத்தனையோ பிரயோசனமான புத்திமதிகளும் நமது உள்ளத்தில் உண்டாகும். இதில் வெகு நேரம் போகுமென்று ஆயாசப்படாதே. தியான நேர முழுதுஞ் சென்றாலும் இதினாலே மிகுந்த பலன் வந்ததென்று எண்ணிக்கொள்ளக்கடவாய்.

மனப்பற்றுதல்.—ஆண்டவரே, உம்முடைய கூடாரங்கள் எவ்வளவோ பிரியமுள்ளவைகள்! பாவிகள் கூடாரங்களிலே ஆயிர நாளிருக்கிறதைப் பார்க்க உமது வீட்டில் ஒரு நாளிருக்கிறது எவ்வளவோ நன்மை! அவர்கள் வீட்டிலே குடியிருக்கிறதைப்பார்க்க உமது வீட்டில் எல்லாரிலுங் கடைசியாயிருக்கத் தெரிந்துகொண்டேனென்று தாவீது இராசா 84-ம் சங்கீதத்தில் பாடியிருக்கிறார்.

**பிரதிக்கினை.**—இங்கே சொல்லியபடி ஆள், வார்த்தை, கிரியைகளைத் தியானித்துப் பார்க்கிறதிலே எனக்குப் பத்தி உண்டாகுமானால் தியானஞ்செய்யும் இந்த வகையை அலட்சியம் பண்ணமாட்டேன்.

## 2-ம் பிரிவு

### இயேசுநாதர் மறுரூபமானதற்கு உண்டான முகாந்தரம்

**தியானம்.**—இயேசுநாதர்சுவாமி தாம் பாடுபட்டு மரிக்கப்போகிறதாக அப்போஸ்தலர்களுக்கு எட்டு நாளைக்கு முன் அறிவித்ததுமல்லாமல், தம்மையுஞ் சுவிசேஷத்தையும்பற்றி அவர்கள் தங்களையும் மற்றச் சகலத்தையுந் துறந்துவிடவும், உயிரைமுதலாய் இழக்கத் துணிந்திருக்கவும் வேணுமென்று கற்பித்திருந்தார். இந்த வார்த்தைகள் அவர்களுடைய மனதில் துக்கத்தையுஞ் சந்தேகத்தையும் எழுப்பினதினால் அவர்களுடைய விசுவாசந் தத்தளிப்பதற்கு இடமாயிருந்தது. ஆகையால் இயேசுநாதர்சுவாமி ஆபத்துக்கு ஏதுவான இந்த எண்ணங்களை அவர்கள் மனதினின்று உடனே நீக்கவும், ஓர் நாள் அவர்கள் வேதசாட்சிகளாய் வலியப் பிராணனைக் கொடுக்கும்படி அவர்களுக்கு வேண்டிய தைரியத்தை வருவிக்கவுஞ் சித்தமாகி இந்தப் பிரதாபமான காட்சியை அவர்களுக்குக் காண்பித்தருளினார். இதைக்கொண்டு தம்மிடத்தில் மறைந்திருந்த தெய்வீகத்தை அவர்களுக்குப் பிரசித்தமாய் ஒப்புவித்து, இனிமேல் அவர்களுக்கு மோக்ஷத்தில் வரப்போகிற பேரின்ப பாக்கியம் எப்பேர்ப்பட்டதாயிருக்குமென்று எவ்வளவாகிலும் அவர்கள் கண்டுபிடிக்கச் செய்தருளினார். ஆண்டவர் மறுரூபமானதற்கு உண்டான முக்கியமான முகாந்தரங்கள் இவைகள்தான்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—சர்வேசுரன் நம்மையும் நடப்பிக்கிறவிதம் இதுவே. முன் நடந்த காரியங்களின் துக்கமுள்ள நினைவுகளும், இனி என்ன சம்பவிக்கப்போகிறதோவென்ற பயமுள்ள விசாரங்களும் நம்மிடத்தில் சஞ்சல சலிப்பையும், சந்தேகத்தையும், அதை



ரியத்தையும் வருவிக்கும்படி சில சமயங்களில் சர்வேசுரன் உத்தரவு பண்ணுவார். பண்ணினாலும் அவர் நமது மேல் தாய்நேசம் பொருந்தியவராகையால் நமது அந்தகாரத்தை நீக்கித் துக்க விசாரத்தை ஒழித்துச் சந்தோஷமும் நம்பிக்கையுங்கூடிய சிந்தனைகளால் நமது இருதயத்தைப் பூரிப்பிக்கும்படி மோக்ஷ மகிமைப் பிரதாபத்தின் ஒரு கதிர் நமது புத்தியில் பளிச்சென்று மின்னும்படி செய்வார்.

**மனப்பற்றுதல்.**—உனக்குச் சலிப்புச் சஞ்சலம் வரும்போது அவநம்பிக்கைப்பட்டுப் பிரமாணிக்கந் தவறினதற்காகப் பொறுத்தல் கேட்பாயாக.

**பிரதிக்கினை.**—எக்காலத்திலும் மனச் சமாதானத்தைக் காப்பாற்றவும் எப்போதும் ஒருகண்டசீராய் இருக்கவும் பிரயாசப்படு.

## 3-ம் பிரிவு

### அர்ச். இராயப்பருடைய பரவசம்

**தியானம்.**—இயேசுநாதருடைய மனுஷீகமானது மகிமைப்பிரதாபம் அடைந்ததைக் கண்ட அர்ச். இராயப்பர் ஆனந்தத்தால் மெய்மறந்து ஆண்டவரை நோக்கி: சுவாமி, நாம் இவ்விடத்தில் இருக்கிறதே நலம்; இவ்விடத்தில் மூன்று கூடாரம் அடிப்போமாகவென்று கூவினார். அவர் சொன்னது இன்னதென்று அவருக்கே தெரியாதிருந்ததாக அர்ச். மாற்கு குறிப்பிட்டிருக்கிறார். இயேசுநாதர் என்ன கருத்தின்மேல் தமது மகிமை சோபனத்தைக் காட்டினாரென்று அர்ச். இராயப்பருக்கு அப்போது சுத்தமாய்த் தெரியாது. ஆனால் இந்தப் பரம இரகசியத்தைப் பின்னால் கண்டுபிடித்தார். அவருக்கு நேரிட்ட அகோரமான போராட்டங்களில் அந்தக் காட்சியின் நினைவானது தைரியத்தை வருவித்தது. மேலும் வேதத்திலுட்பட்டவர்கள் விசுவாசத்தில் நிலைத்திருக்கத்தக்கதாக இந்தச் சங்கதியை எடுத்துக்காட்டி அடிக்கடி புத்தி சொல்லுவார். அப்படியே தாம் எழுதின இரண்டாம் நிருபத்தின் முதல் அதிகாரத்

தில் தாம் கண்ட இந்தப் பரம காட்சியை ஞாபகப்படுத்திச் சொல்லுகிறதாவது: அர்ச்சிக்கப்பட்ட மலைமேல் நாங்கள் திவ்விய கர்த்தரோடு இருக்கும்போது அவருடைய மகத்து வத்தைத் தெரிசிக்கப் பேறுபெற்றோமென்கிறார்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—நமது அன்புக்குரிய இரட்சகர் இந்தப் பரம இரகசியத்தில் குறித்த பலனைப் பிரதான அப்போஸ்தலரான அர்ச். இரா யப்பர் அடைந்ததுபோல நாமும் அடையப் பிரயாசப்படக் கடவோம். இந்தப் பலன் ஏதென்றால் சுவாமி மறுரூப மான மகிமைப் பிரதாபத்தைத் தியானிப்பதினால் நமக்கு உண்டாகவேண்டிய மனத்தைரியமும், தாராளமான குணமு மாம். ஆகையால் இந்தப் பலன் நமக்குக் கைகூடும்படி நம்மை நோக்கி நாம் சொல்லிக்கொள்ளவேண்டியதாவது: இயேசுநாதருடைய மனுஷீகம் சோதிப் பிரகாசமானதை ஒரு நிமிஷமாத்திரங் கண்ட அர்ச். இராயப்பருக்கு இவ் வளவு ஆனந்த அக்களிப்பும் பாக்கியமும் வந்திருக்கையில், சதாகாலமும் மோக்ஷத்தில் அவரைத் தரிசிக்கும்போது நமக்கு எவ்வளவோ பேரின்ப சந்தோஷ பாக்கியமுண் டாகுமென்று சொல்லவேணும். மேலும் நமக்கு வாக்குத் தத்தஞ் செய்யப்பட்டிருக்கிற அந்தப் பரம பாக்கியத்தை எப்போதும் நமது கண்முன்பாக வைத்து, சோதனை வரும் போது, இவ்வுலகத்தின் துன்ப துரிதங்கள் இனி ஒருநாள் நமக்கு வரப்போகிற மகிமைக்கு இணையானவைகள் அல்ல வென்று அர்ச். சின்னப்பரோடு சொல்லுவோமாக.

**சம்பாஷணை.**—ஆண்டவர் மறு ரூபமானபோது கூட நின்ற மூன்று சீஷர்களோடு சம்பாஷணை செய்வோ மாக.



# ஆகஸ்டு மாதம் 13-ம் தேதி

## அர்ச். பேர்க்மான்ஸ் அருளப்பர் திருநாள்

**ஆயத்தச் சிந்தனை.**—அர்ச். பெர்க்மான்ஸ் அருளப் பர் பாடுபட்ட சுரூபம், செபமாலை, சபை ஒழுங்குப் புத்தகம் இவைகளைத் தமது கையில் பிடித்தபிரகாரம் மரணமடை கிறதாக ரூபிகரித்துக்கொள்ளுவேன்.

**தியானச் செபம்.**—அவர் சர்வேசுரனுடைய ஊழியத் தில் காண்பித்த பிரமாணிக்கத்தையும் தேவமாதாவின் மட்டில் வைத்த பத்தியையுங் கண்டுபாவித்து நடக்கும்படி வேண்டிய வரப்பிரசாதங் கேட்பேன்.

### முதல் பிரிவு

**தியானம்.**—அர்ச். பெர்க்மான்ஸ் அருளப்பர் சிறு வையில் அறையுண்ட இயேசுநாதசுவாமியை மகா பிர மாணிக்கத்தோடு கண்டுபாவித்து வந்தார். எப்படியென் றால் அவர் திவ்விய கர்த்தருக்குப் பிரியப்படவும் அவரு டைய சாயல் தம்மிடத்தில் விளங்கவும் இடைவிடாமல் தமது சுயமனதை வெறுத்துவருவார், தரித்திரத்தைக் கண் டிப்பாய் அனுசரிப்பார். தமது ஐம்பொறிகளின்மேல் ஓயாத விழிப்பாயிருந்து அவைகளை அடக்கவொடுக்கமாய் நடத்தி வருவார். விசேஷமாய்ப் பொதுசீவியத்தைத் தமக்கு மகா பெருந் தபசென்றுசொல்லி அதைப் பிர மாணிக்கமாய் அனுசரித்து இவ்விதமாய்த் தம்மைச் சகலத் திலும் ஒறுத்துவருவார்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—நாம் மெய்யாகவே இயேசுநாதருக்குச் சீஷர்களாக விரும்பினால், அவருடைய திருவாய் மொழிக்குக் காதுகொடுத்து அனு தினமும் நமது சிலுவையைச் சுமந்துகொண்டு அவருடைய திருவடிகளைப் பின்பற்றி நடக்கவேண்டும். இன்னும் அர்ச். சின்னப்பர் சொல்லுமாப்போல, நாம் புதுச்சீவிய மாய்ச் சீவிக்கும்படி பழைய மனிதனாகிய நமது கெட்ட சுபாவத்தைச் சிலுவையில் அறைந்துபோடவேண்டியது.

மனப்பற்றுதல்.—சிலுவையாகிய துன்பங்களின் மேல் உனக்குப் பற்றுதலைத் தரவேணுமென்று ஆண்டவரை மன்றாடு.

பிரதிக்கினை.—உன்னை ஒறுக்கும்படி ஆத்துமத்துக்குக் கேடான காரியங்களிலுமன்றி, நன்மையுந் தின்மையுமாயிராத காரியங்களிலே முதலாய் விநோதப் பிரியத்தைத் தள்ளிக் கண் பார்வையை அடக்கிவருவாயாக.

## 2-ம் பிரிவு

தியானம்.—அவர் தேவமாதாவின்பேரில் மகா பத்தியுள்ளவராயிருந்தார். எப்படியென்றால்: பிள்ளை தன் தாயை நேசிக்கிறது போல அவர் அந்த ஆண்டவளை நேசித்துக் கொண்டாடி அவளைக் குறித்துப் பற்பல பத்தி முயற்சிகளைச் செய்துவருவார். அவளுடைய பேரால் கட்டப்பட்ட கோவில்களையும், பீடங்களையும் பத்தியோடு சந்திப்பார். விசேஷமாய் அவளுடைய அமலோற்பவ மகிமையைக் கொண்டாடி வணங்குவதுமன்றி இந்தப் பத்தியானது ஞான சீவியத்துக்கு முந்தின படியென்றும் சகல புண்ணியங்களுக்கும் அஸ்திவாரமென்றும் யாவருக்குஞ் சொல்லிவருவார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.— நீயும் தேவமாதாவுக்கு மெய்யாகவே பிள்ளையாயிருக்கும்படி பிரயாசப்படு. அந்த ஆண்டவளைக்குறித்து நீ செய்யத் தீர்மானித்திருக்கும் பத்தி முயற்சிகளை மகா பற்றுதலோடும் பிரமாணிக்கத்தோடும் அநுசரித்துவா. இப்படிச் செய்வாயானால் அவள் உன்மேல் தயவாயிருந்து புண்ணிய வழி உனக்கு எவ்வளவு வருத்தமாயிருந்தாலும் அதில் நீ சோர்ந்து போகாதபடி உனக்குக் கைகொடுத்து நடத்தி, கடைசிமட்டும் அதில் நீ நிலைத்திருக்கும்படி செய்தருளுவாள்.

மனப்பற்றுதல்.— அர்ச்சியசிஷ்டவர்கள் தேவமாதாவை உருக்கமாய்ச் சிநேகித்து வணங்கிவந்ததுபோல நீயும் அவளை வணங்கிச் சிநேகிக்க வேணுமென்று



ஆசித்து அதற்காக அவளுடைய திவ்விய குமாரனை மன்றாடு.

பிரதிக்கினை.— தேவமாதாவுக்குப் பிரியமாயிருக்கும்படி விசேஷித்தவிதமாய் அவளுடைய பரிசுத்ததனத்தைக் கண்டுபாவித்துக் கெட்ட நினைவெல்லாந் தள்ளுவதுமன்றி அசுத்த பாவச்சோதனைகள் அல்லது பாவத்துக்கேதுவான சமயங்கள் வரும்போது அவளுடைய அடைக்கலத்தை அண்டிப்போவேன்.

## 3-ம் பிரிவு

அவர் சபையொழுங்குகளை வெகு நுணு
தியானம்.—அவர் சபையொழுங்குகளை வெகு நுணு ஓர் அற்ப ஒழுங்கை
நுணுக்கமாய் அநுசரித்துவருவார். சிரேஷ்டர்கள் இடுகிற சொற்பக் கட்டளையை யாவது, சிரேஷ்டர்கள் இடுகிற சொற்பக் கட்டளையை
யாவது மீறுவதைவிடத் தன் சரீர சௌக்கியத்தை முழுதும் இழந்துபோகிறதும், தான் சாகிறதும், தன் சரீரமெல்லாந் துண்டு துண்டாய் வெட்டப்படுகிறதுந், தாவிளை
யென்று வழக்கமாய்ச் சொல்லிவருவார். இதினாலே அவர் பேரில் குற்றங் குறைச்சல் ஒன்றுஞ் சொல்லப்படாதிருந்ததுமன்றி, சபைச் சட்டங்களுக்கும் விசேஷமாய் அடக்க வொடுக்க ஒழுங்குகளுக்கும் அவர் உயிருள்ள மாதிரிகையாக எண்ணப்பட்டார். அவருடைய அர்ச்சியசிஷ்டதனத்துக்கும் அதுவே பிரதான முகாந்தரமாயிருந்தது.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—என் சபை ஒழுங்குகளும் அந்தஸ்துக் கடமைகளும் தேவசித்தம் இன்னதென்று எனக்கு வெளியாக்குவதினால் அவைகளைச் சரிவர அநுசரித்து நானும் அர்ச்சியசிஷ்டவனாகக்கூடுமே. ஆகையால் அவைகளைச் சரியாய் அநுசரித்துவரவும் எவ்வளவு சொற்பமாயிருந்தாலும் மனம் பொருந்தி அவைகளை மீறாமலிருக்கவும் பிரதிக்கினை செய்து அவைகளை நன்றாய் அறிந்துகொள்ளக்கடவேன்.

சம்பாஷணை.—அர்ச். பெர்க்மான்ஸ் அருளப்பரோடு சம்பிராஷணைசெய்து நான் என் ஒழுங்குகள்மேல் பிரியம் வைத்து அவைகளைச் சரியாய் அநுசரிக்கவும், என் அந்தஸ்தைக் கனமாயெண்ணவும், இயேசுநாதருக்குந் தேவமாதா

வுக்கும் ஊழியஞ்செய்வதில் நிலைவரமாயிருக்கவும் ஆகிய இம்மூன்று வரமும் எனக்கு அடைந்து தந்தருளும்படி அவரை மன்றாடுவேன்.

2-வது, இம் மூவித வரங்களையுந் தேவமாதா தமது மன்றாட்டினால் எனக்கடைந்தருளும்படி கேட்டு அவளுடன் சம்பாஷிப்பேன்.

3-வது, இயேசுநாதர் தமது தாசரான இந்த அர்ச்சியசிஷ்டவரைக் குறித்து இம்மூன்று வரங்களையும் எனக்களித்தருளும்படி மன்றாடி அவரோடும் சம்பாஷணை செய்வேன்.

---

## செப்டெம்பர் மாதம் 9-ம் தேதி

### அர்ச். கிளாவர் இராயப்பர் திருநாள்

ஆயத்தச் சிந்தனை.—இந்த அர்ச்சியசிஷ்டவர் நிர்ப்பாக்கிய அடிமைகளாகிய காப்பிரிகளுக்குப் புத்தி பிரசங்கஞ் சொல்லி ஞானஸ்நானங் கொடுக்கிறதாகவும் அவர்களுக்குள் கடின வியாதியாயிருக்கிறவர்களிடத்தில்போய் அவர்கள் உயிர்விடும்மட்டும் அவர்கள் அண்டையில் காத்துக்கொண்டிருக்கிறதாகவும் ரூபிகரித்துக்கொள்.

தியானச் செபம்.—உன் ஈடேற்றத்தின்பேரிலும் பிறர் ஈடேற்றத்தின்பேரிலும் மெய்யான ஆவல் உனக்கு உண்டாகும்படி மன்றாடு.

### முதல் பிரிவு

#### அர்ச். கிளாவர் இராயப்பர் ஆத்துமாக்கள்மேல் வைத்த ஆவலும் சிநேகமும்

தியானம்.—இந்த அர்ச்சியசிஷ்டவர் கார்த்தாஜென்னும் நகரத்தில் அடிமைகளான காப்பிரிகளை இரட்சிக்கும்படி தம்மை முழுதும் கையளித்து ஓர் அப்போஸ்தலருக்குச் சமானமாய் அந்த நிர்ப்பாக்கியரான சனங்களை விசாரித்து அவர்களுக்குப் புத்தி பிரசங்கஞ் சொல்லுவதில் பட்ட பிரயாசமும் காண்பித்த பொறுமையும் பட்சமும் இவ்வளவென்று எவராலும் சொல்லுந்தன்மையல்ல. அவர் அவர்களுடைய ஆத்தும நன்மையைமாத்திரமல்ல, அவர்கள் சரீரத்துக்குத் தேவையானவைகளையுங் கவனித்து, அவர்கள் படும் துன்ப வருத்தங்களைக் குறைத்துப் பரிகரிக்கத் தேடுவார். ஓர் பட்சமுள்ள தகப்பனைப்போல அவர்களுடைய நிர்ப்பாக்கியத்தையும் வியாதிகளையும் கண்டிரங்கி, அவர்களுக்கு வேண்டிய அன்ன வஸ்திரம் மருந்து முதலியவைகளைப் பராமரித்துக்கொடுப்பார். தமது உயிருக்குச் சேதம் வருமென்று அஞ்சாமல் கொள்ளைநோய் பிடித்தவர்களையும் விசாரித்து, அவர்களுடைய இரணங்களைக் கழுவிச் சுத்தஞ் செய்வார். இந்த வழியாக அவர் மிகுந்த ஞானத் தெளிவையும் திரளான ஞான வரங்களையும் அடையவும், கணக்கற்ற ஆத்துமாக்களை மனந்திருப்பவும் பேறு பெற்றார்.



இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நாமும் முக்கியமாய்த் தரித்திரர்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவேணுமென்று சர்வேசுரன் சித்தமாயிருக்கிறார். நாம் அவர்களுக்குக் காண்பிக்கிற சிநேகமானது அவர்கள் ஆத்துமத்தை நமது கைவசமாக்குவதுமல்லாமல் சர்வேசுரனுடைய சனுவும் நமக்குக் கிடைக்கச்செய்யும். இப்படியிருக்க நீ சிநேக விஷயத்தில் எப்படி நடந்து வருகிறாய்? இப்போது உன்னைச் சுற்றியிருக்கிற உன் சகோதரருக்கு நீ சிநேகத்தைக் காண்பியாவிட்டால் இனிமேல் அன்னியருக்கு எப்படி சிநேகத்தைக் காண்பிக்கப்போகிறாய்?

மனப்பற்றுதல்.—ஏழைகள் நிர்ப்பாக்கியர்மட்டில் மெய்யான சிநேகத்தை உனக்கு ஆண்டவர் கட்டளையிட வேணுமென்று மன்றாடு.

பிரதிக்கினை.—இயேசுநாதருடைய வார்த்தைப்பாடுகளை நினைத்து, தரித்திரர் வியாதிக்காரர்மட்டில் சுபாவமாயுண்டாகும் அருவருப்பை மேற்கொள்வேன்.

## 2-ம் பிரிவு

### அர்ச்சியசிஷ்டதனம் அடைவதற்கு இவர் கொண்ட ஆவல்

**தியானம்.**—அர்ச். இளாவர் இராயப்பர் பிறர் ஈடேற்றத்தின்மேல் மகா கவலையாய் உழைத்துவந்தாலும் தமது ஆத்துமத்தை மறவாமல் அதைச் சகல புண்ணியங்களாலும் அலங்கரித்து அர்ச்சியசிஷ்டதனமடையும்படி பிரயாசப்பட்டு வந்தார். இதினாலே அடக்கவொடுக்கத்தினாலும், சரீர ஒறுப்பினாலும் இன்னுமற்றப் பற்பல உபாயங்களினாலும் தமது கற்பைக் காத்து மரணபரியந்தம் அந்தப் புண்ணியத்திலே நிலைகொண்டார். பிறர்மட்டில் மகா தயவும் தமதுமட்டில் வெகு கண்டிப்புமுள்ளவராயிருப்பார். இதினாலே அவர் தம்மைத் தண்டித்துக்கொண்ட விதத்தைக் கேட்டாலே பயங்கரமாயிருக்கும். மடத்திலுள்ளவர்களும் வெளியிலுள்ளவர்களும் அவரை அர்ச்சியசிஷ்டவரென்று பாராட்டிக் கொண்டாடினாலும், அவர் எப்போதும் தம்மை வெகுவாய்த் தாழ்த்திச் சகலரிலும் தாம் கடைசியானவனென்றும் அடிமைகளுக்கெல்லாம் அடிமையென்றும் எண்ணியுஞ் சொல்லியும் வருவார். பொல்லாதவர் அவரைப் பகைத்து நிந்தித்தாலும் அவர்கள்மட்டில் அவர் அற்ப வருத்தமுங் காட்டாமல் எல்லாத்தையும் பொறுமையாய்ச் சகித்துக்கொள்வார்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—ஆத்துமாக்களை இரட்சிப்பதில் நீ அநுகூலமாய் உழைக்கும்படி தாழ்ச்சி பொறுமையுள்ளவனாகவும், சர்வேசுரனோடு மகா ஐக்கியமானவனாகவும் இருக்கவேண்டியது. இல்லாவிட்டால் மற்றவர்களை இரட்சிக்க விரும்பித் தான் கெட்டுப்போவதாயிருக்கும். அல்லது பிறருக்குத் துர்மாதிரிகையாகும். சிலவிசை அவர்களுக்கு நல்லமாதிரிகை காண்பித்தாலும் அதை அவர்கள் பின்செல்லாதிருக்க இடமாகும். ஆகையால் மேற்சொன்ன புண்ணியங்கள் எம்மாத்திரம் அவசரமென்று உணர்ந்து அவைகளை அநுசரிக்கத் துவக்கு.



**சம்பாஷணை.**—அர்ச். இளாவர் இராயப்பரோடு சம்பாஷணை செய். சந்நியாசமாகிய உன் அந்தஸ்தைக் கனமாய் எண்ணவும், அஞ்ஞானிகளைத் திருப்பி, ஆத்துமாக்களை ஈடேற்றவும் மெய்யான ஆவலை உனக்கு அடைந்து தந்தருளவேணுமென்று அவரை நோக்கி மன்றாடு. இயேசுநாதருடைய திரு இருதயத்தையும் தேவமாதாவையும் நோக்கி இந்த மன்றாட்டைக் கேள்.

---

# அக்டோபர் மாதம் 10-ம் தேதி

## அர்ச். பிரான்சீஸ்கு போர்ஜியார் திருநாள்

**ஆயத்தச் சிந்தனை.**—அர்ச். பிரான்சீஸ்கு போர்ஜியார் இசாபெல்லென்னும் இராக்கினியுடைய பிரேதத்தை உற்றுப் பார்க்கவே, உலகத்தை வெறுத்துத் தம்மைமுழுதும் தேவ ஊழியத்துக்குக் கையளிக்கத் தீர்மானித்துக் கொள்ளுகிறதாக ரூபிகரித்துக்கொள்.

**தியானச் சேபம்.**—ஆண்டவரே, உமது தாசரான அர்ச். பிராஞ்சீஸ்கு போர்ஜியாரை நான் கண்டு பாவித்து நடக்க வரந்தந்தருளும்.

## முதல் பிரிவு

### அர்ச். பிரான்சீஸ்கு போர்ஜியார் இவ்வுலக மகிமை சுகசெல்வங்களைப் பிறக்கணித்தது

**தியானம்.**—உலகத்துக்குச் சந்தோஷமும் பாக்கியமுமாயிருந்தவைகளெல்லாம் தெய்வச்செயலால் அர்ச். பிரான்சீஸ்கு போர்ஜியாரை எப்பக்கத்திலும் சூழ்ந்துகொண்டிருந்தது. ஆனால் சுபாவத்துக்குமேலான ஒளி அவருடைய புத்திக்குப் பிரகாசங்கொடுத்ததினாலேயும், விசுவாசக் கண்ணால் அவர் சகலத்தையும் பார்த்து அறிந்துகொண்டதினாலேயும் உலக மகிமைகளின் நடுவே தாழ்ச்சியுள்ளவராகவும், இன்பசுகங்களின் நடுவே தம்மை அடக்கி

ஒறுக்கிறவராகவும், இருக்கக் கற்றுக்கொண்டார். உலகத்தின் கோலமெல்லாம் நீர்மேல் குமிளிபோல் நிலைப்பின்றி க்ஷணத்தில் மாறி மறைந்துபோமென்று அவர் நன்றாய் உணர்ந்திருந்ததினால், சந்நியாச தரித்திரமாகிய விலையேறப்பெற்ற பொக்கிஷத்தைக் கைகொள்வதற்குத் தமது ஆஸ்திபாஸ்திகளெல்லாம் நிகரானவைகள் அல்லவென்றும், உலகத்தில் மனிதர்களை ஆண்டு அதிகாரஞ் செலுத்துவதைவிட ஆண்டவருடைய வீட்டில் அடிமையாயிருப்பது தாவிலையென்றும் நிச்சயித்துக்கொண்டார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—நானும் இந்தப் பெரிய அர்ச்சியசிஷ்டவரைப்போல இவ்வுலக மகிமை ஆஸ்தி முதலிய நன்மைகளின்பேரில் இப்பேர்ப்பட்ட எண்ணங்கொண்டிருக்கிறேனோ? நான் ஆஸ்தியுடையவனாயிருந்தால் அர்ச். சின்னப்பர் சொல்வதுபோல, ஆஸ்தியிருந்தும் அதை அனுபவியாதவன்போலிருக்கிறேனோ? அதாவது: சர்வேசுரன் அந்த ஆஸ்திகளை என் கையில் ஒப்பித்துத் தமது திருச்சித்தப்பிரகாரம் நான் அவைகளைச் செலவழிக்கும்படி கொடுத்திருக்கிறாரென்று எண்ணிக்கொள்ளுகிறேனோ? நான் ஏழைமைப்பட்டவனானால், என் ஸ்திதி விசுவாசக் கண்ணுக்கு அதிக மேன்மையானதும் என் இரட்சணியத்துக்கு அதிக நிச்சயமானதும் என் ஆராதனைக்குரிய ஆண்டவரைக் கண்டு பாவிப்பதற்கு அதிக தகுதியானதென்றும் அதைக் கனமாய் மதித்து அதின்மட்டில் பிரியமாயிருக்கிறேனோ? ஆஸ்தி மகிமை முதலியவைகள்மட்டில் உலகத்தின் எண்ணமும் இயேசுநாதருடைய எண்ணமும் ஒன்றுக்கொன்று நேர்விரோதமாயிருக்க, என்னுடைய எண்ணம் யாருடைய எண்ணத்துக்கு ஒத்திருக்கிறது? இயேசுநாதருடைய எண்ணத்துக்கோ, உலகத்தின் எண்ணத்துக்கோ?

மனப்பற்றுதல்.—நீ உலகத்தைத் துறந்துவிட ஆண்டவர்செய்த உபகாரத்துக்கு நன்றியறிந்தோத்திரஞ் செய்து, மெய்யான சந்நியாசிக்குரிய உலக வெறுப்பிலும் புண்ணியப்பற்றுதலிலும் விர்த்தியடையத் தேவ உதவியைக்கேள்.



பிரதிக்கினை.—இன்றையத்தினம் அடிக்கடி தனக் குள்ளே அடங்கியிருந்து தாழ்ச்சிமுயற்சி செய்யக்கூடிய சமயங்கள் அகப்பட்டால் ஒன்றையும் தப்பவிடாமலிருக் கிறது.

## 2-ம் பிரிவு

### அர்ச். பிரான்சீஸ்து போர்ஜியார் அந்தரங்க சீவியத்தைக் கனமாய் எண்ணினது

தியானம்.—அர்ச். பிரான்சீஸ்கு போர்ஜியார் தம்மை இன்னம் உலகத்தில் நிறுத்தக்கூடுமான கட்டுகளையெல்லாம் தம்மால் கூடியசீக்கிரத்தில் அறுத்து எறிந்துவிட்டுத் தம்மைமுழுதும் மன உச்சாயமாய்ச் சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுத்துச் சந்நியாச அந்தஸ்துக்குரிய புண்ணியசாங் கோபாங்க வழியில் வெகு தீவிரமாய் நடக்கத் துவக்கினார். அவர் உலகத்தை வெறுக்குமுன்னமே செபத்தியானம் மன ஏகாந்தமென்கிற பரிசுத்த அப்பியாசத்தில் பழகியிருந்தார். இந்த அப்பியாசம் சந்நியாசத்தில் மாத்திரம் அதிகரிக்கக் கூடுமென்கிறதினாலே, அவர் சந்நியாசத்திலுட்பட்ட கொஞ்சகாலத்துக்குள்ளே மேலான புண்ணியசாங்கோ பாங்கத்தை அடைந்தார். அவர் எப்போதும் செபத் தியானத்தில் பழகினதினாலே அவருக்கிருந்த அத்தனை அலுவல்களில் ஒன்றாவது அவர் தேவசமுகத்திலிருந்து சர் வேசுரனோடு சம்பாஷிக்கிறதைத் தடுத்து அவருக்குப் பராக்கு வருவிக்கக்கூடியதாயிருக்கவில்லை.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—உன் இருதயத் தில் கிரமமற்ற பற்றுதல்கள் எல்லாவற்றையும் அவ்வளவு கனமாய் விட்டு அகற்றி அர்ச்சியசிஷ்டவர்கள் பிரமாணிக்கமாய் எண்ணிவந்த மன ஏகாந்தத்தை நீயும் உன்னுள்ளத்தில் மாய் அனுசரித்துவந்தால் சர்வேசுரன் உன்னோடு சம்பாஷிக்கப் பிரியப்படுவார். அன்றியும் உன்னை மயக் கும் வீண் எண்ணங்களால் உனக்கு மோசம் வராதபடி சர் வேசுரன் தமது ஒளியினால் உன் புத்தியைப் பிரகாசிப் பித்து எப்பக்கத்திலும் உன்னைச் சூழ்ந்து வரும் விக்கினங்

களைச் செபித்துத்தள்ளும்படி தமது வரப்பிரசாதத்தால் உன்னைப் பலப்படுத்தியருளுவார். துன்ப துரிதங்களில் உன் ஆத்துமத்துக்கு ஆறுதலும் இடைவிடாத தைரியமும் வருவிக்கும்படியாகத் தமது சிநேகத்தின் மதுரத்தை நீ சுகித்து அனுபவிக்கச் செய்வார். ஐயோ! இத்தனை நன்மைகளையும் நீ பிறக்கணித்து அசட்டைசெய்கிறதானால் உனக்கு நீயே சத்துருவென்று சொல்லவேணுமல்லவோ? இப்படியிருக்க உள் அடக்கமும் பத்தி விசுவாசமுமுள்ள ஆத்துமாக்களுக்கு இயேசுநாதருடைய திரு இருதயம் கொடுத்தருளுகிற மேலான நன்மைகளுக்கு நீயும் பங்காளியாகும்படி இன்னும் உனக்கு மனம் வரவில்லையோ?

சம்பாஷணை.—திவ்விய கர்த்தரோடு சம்பாஷணை செய். அர்ச். பிரான்சீஸ்கு போர்ஜியாருடைய புண்ணிய பேறுபலன்களை ஆண்டவருக்குக் காணிக்கையாக ஒப்புக்கொடுத்து, தாழ்ச்சி, ஒறுத்தல், மன ஏகாந்தம், செபம், திரு இருதயத்தோடு ஒன்றித்தல் இது முதலிய வரங்களை இந்த அர்ச்சியசிஷ்டவருடைய முகத்தைப்பார்த்துத் திவ்விய கர்த்தர் உனக்குக் கட்டளையிடவேணுமென்று மன்றாடு.

---

# அக்டோபர் மாதம் 30-ம் தேதி

## அர்ச். அல்போன்ஸ் ரோதிரிகேஸ் என்பவர் திருநாள்

ஆயத்தச் சிந்தனை.—அர்ச். அல்போன்ஸ் மகா பத்தி உருக்கமாய் வேண்டிக்கொள்ளுவதாக ரூபிகரித்துக் கொள்.

தியானச் செபம்.—ஆண்டவரே, உமது தாசரான அர்ச். அல்போன்சைப்போல நானும் தேவரீரை உத்தம விதமாய்ச் சிநேகிக்கவும் என்னை நான் பகைக்கவும் அநுக்கிரகஞ் செய்தருளும்.



### முதல் பிரிவு

#### அர்ச். அல்போன்ஸ் சர்வேசுரன்மட்டில் வைத்த சிநேகம்

தியானம்.—அந்தரங்க சீவியத்துக்கடுத்த புண்ணி
யங்களெல்லாம் முக்கியமாய்ச் சர்வேசுரனைச் சிநேகிப்ப
தும் தன்னைப் பகைப்பதுமாகிய இவ்விரண்டிலும் அடங்கி
யிருக்கின்றன. அர்ச். அல்போன்ஸ் ரோதிரிகேஸ் சர்வே
சுரனை முழு இருதயத்தோடு சிநேகித்ததினாலே அவருக்
குச் செபத்தியானத்திலன்றி வேறொன்றிலும் சந்தோஷ
பாக்கியமுண்டாகமாட்டாது. அவர் செய்த இடைவிடாத
செபத்தியானத்தினாலே தமது வெளி வேலைகளுக்குள்ளே
முதலாய்த் தேவ சமுகத்தை மறக்கக்கூடாதவராயிருப்பார்.
எப்போதும் எல்லாக் காரியங்களிலும் சர்வேசுரனுடைய
பிரசன்னத்தையும் அவருடைய திருச்சித்தத்தையுங் கவ
னித்துவருவார். இந்த நியாயத்தை முன்னிட்டே சிரேஷ்
டர்களுக்குக் கீழ்ப்படிந்து, சகோதரர்களுக்குப் பட்சம்
காண்பிப்பார். தமது கடமைகளில் அற்ப சொற்பக் கட
மைகளிலே முதலாய்த் தேவசித்தத்தை உணர்ந்து தேவ
சிநேகத்தைப்பற்றி அவைகளைப் பிரமாணிக்கமாய்ச் செய்து
முடிப்பார். அந்தத் திவ்விய சிநேகத்தைப்பற்றித்
துன்பப்படவேணுமென்று ஆசித்தாலும், தமது விருத்
தாப்பியத்தினால் பலன் குறைந்து சரீரத்தைக் கண்டிப்
பாய்த் தெண்டிக்கக்கூடவில்லையேயென்று கைப்பான கண்
ணீர்விட்டு அழுவார். தேவசிநேகந்தான் அவர் அர்ச்.
கன்னிமரியம்மாள்மட்டிலும் உருக்கமான பத்திவைக்கும்
படிசெய்தது. அவள் இயேசுநாதருக்குத் தாயாரும் ஆரா
திஷ்ட திரித்துவத்துக்கு மகா பிரியமுள்ள சிஷ்டியுமென்று
அவர் நன்றாய் உணர்ந்துகொண்டதினால்தான் அவளுக்குப்
பிரியப்படவேணுமென்ற ஆவலும் தமக்குத் தெரிந்தவித
மெல்லாம் அவளைத் துதித்து வணங்கிக்கொண்டாட
வேணுமென்ற ஆசையும் அவருக்கு உண்டாயிற்று.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—
தேவசிநேகமானது இப்பேர்ப்பட்ட காரியங்களை என்னி
டத்திலும் நடத்திவருகிறதோ? செபத்தியானத்திலும்

அடக்கவொடுக்கத்திலும் ஞான இன்பத்தைத் தருகிற உருக்கமான சிநேகமும், சிலுவையை நாடித் தேடச்செய்கிற உதாரமான சிநேகமும் என்னிடத்தில் உண்டோ? அர்ச்சியசிஷ்டவர்கள் சொல்லுகிறபடி. இயேசுநாதர்பேரிலுள்ள உத்தம பத்தியோடு இணைபிரியாததாயிருக்கிற தேவமாதாப்பத்தியும் என்னிடத்திலுண்டோ?

மனப்பற்றுதல்.—அர்ச். அல்போன்சே, நானும் உம்மைக் கண்டுபாவித்து நடக்கவும், எனக்கு எண்ணிறந்த உபகாரங்களைச் செய்த சர்வ நன்மைச் சுரூபியான சர்வேசுரனைச் சிநேகித்து, உம்மைப்போல நானும் அவரை மகிமைப்படுத்தவும் எனக்கு வேண்டிய வரம் அடைந்து தந்தருளும்.

பிரதிக்கினை.—மன ஏகாந்தத்திலும் தாழ்ச்சியிலும் நிலைநின்று சர்வேசுரனுக்குப் பிரியப்படப் பிரயாசப்படுவேன்.

## 2-ம் பிரிவு

### அர்ச். அல்போன்ஸ் தமதுமேல் வைத்த பகை

தியானம்.—மெய்யான புண்ணியப்பற்றுதலுள்ள சந்நியாசியாராகிய இந்த அர்ச்சியசிஷ்டவரிடத்தில் விளங்கின தேவசிநேகமானது இவர் பழைய மனுஷன் என்னப்பட்ட தமது கெட்ட சுபாவத்தையும் அதின் துர்நாட்டங்களையும் அத்தியந்தவிதமாய்ப் பகைக்கச்செய்தது. இதினாலே அவர் தமது சரீரத்தையும் பஞ்சேந்திரியங்களையும் அடக்கியொடுக்கச் சலியாமல் முயற்சி செய்வார். இவர் மெய்யான தாழ்ச்சியில் ஊன்றியிருந்தபடியால், உலக மனுஷர் எப்படி மகிமை பெருமைகளைத் தேடுவார்களோ அப்படியே இவரும் நிந்தை அவமானங்களை வலிய ஆசித்துத் தேடி வருவார்.

இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.—இந்த அர்ச்சியசிஷ்டவருடைய நடக்கைக்கும் என் நடக்கைக்கும் எவ்வளவோ வித்தியாசம்? நான் தாழ்மையைப் பிரியமாய்த் தேடிச் சகிக்காததுமன்றி அதை என்னைவிட்டு அப்பால்



தள்ளவும் பிரயாசப்படுகிறேன். எதிலும் இஷ்டம்போல் நடக்கவேணுமென்கிற ஆசையும் கெட்ட சுபாவமும் என்னிடத்தில் இன்னும் முழுப்பலத்தோடு குடிகொண்டிருக்கின்றன. சிலுவையைச் சுமந்துகொண்டுபோகிறது இன்னதென்று எனக்குத் தெரியாது. அந்தரங்க சீவியத்திலுள்ள இன்ப ஆறுதல்களெல்லாம் எனக்கு நூதனம்போல் தோன்றுகிறது. என்னை நான் பரித்தியாகஞ்செய்துவிட அறியாததினால் சர்வேசுரனோடு ஒன்றித்திருக்கிறதினாலே உண்டாகும் மனோகரத்தையும் நான் அறியேன். என் இருதயம் எகிப்துத்தேசத்தின் மாவையும் மாங்கிஷங்களையும் உண்டு போஷிக்கப்படுகிறபடியினாலே, அதாவது உலக இன்பங்களைத் தேடிச் சுகிக்கிறதினாலே பரலோக மன்னாவைச் சுவைபார்க்க என்னால் கூடவில்லை. சர்வ நன்மைச் சம்பூரணமாகிய சர்வேசுரா, அடியேன்மேல் கிருபைகூர்ந்து, உமது தாசரான இந்த அர்ச்சியசிஷ்டவருடைய பேறுபலன்களைப் பார்த்து நான் உமக்காகவே சீவிக்கும்பொருட்டு என்னை நான் முழுதும் செயித்து நடக்கவேண்டிய அனுக்கிரகஞ் செய்தருளும்.

சம்பாஷணை.—நமது ஆண்டவரோடு சம்பாஷணை செய்து, அவர் அர்ச். அல்போன்சுக்கு அளிக்கச் சித்தமான விசேஷ நன்மைகளுக்காக நன்றியறிந்ததோத்திரஞ் செய். மேலும் அவருடைய பேறுபலன்களை ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்து, அவைகளைப்பார்த்து அந்தரங்க சீவியத்துக்கடுத்த புண்ணியங்கள் உன்னிடத்திலும் விளங்கச் செய்யவேணுமென்று மன்றாடு.

# அக்டோபர் மாதத்தின் கடைசி ஞாயிறு

## இயேசு இராஜாவின் திருநாள்

**ஆயத்தச் சிந்தனை.**—தேசாதிபதி இயேசுநாதரைப் பார்த்து: நீ யூதருடைய இராஜாவாயிருக்கிறாயோவென்று கேட்க, இயேசுநாதர்: "நீர் உள்ளபடியே சொல்லுகிறீர்; ஆனால், என் இராச்சியம் இவ்வுலகத்துக்கு அடுத்ததல்ல" என்று பதிலுரைப்பதைக் கேட்பதாக ரூபிகரித்துக்கொள்.

**தியானச் சேபம்.**—இயேசுநாதருடைய அரசாட்சி நமது ஜெபங்களின் கதியும், நமது ஆத்தும உயிரும், நமது கிரிகைகளின் நோக்கமுமாயிருக்கும்படி மன்றாடுவோமாக.

## முதல் பிரிவு

### இலௌகீக அரசர்களது ஆட்சிக்கும் இயேசு இராஜாவின் ஆட்சிக்குமுள்ள வித்தியாசம்

**தியானம்.**—இயேசுக்கிறீஸ்துநாதர் இவ்வுலகத்தில் செலுத்தும் ஆட்சி, மகிமையும் அதிகாரமும், வெற்றி புகழ் கீர்த்தியும் பொருந்தியதாயிருக்கவேணுமென்று பூர்வத்தில் இஸ்ராயேலித்தார் நினைத்தவண்ணமே, இக்காலத்துக் கிறீஸ்துவர்களில் அநேகர் நினைக்கிறார்கள். ஆயினும், இவ்வுலக அரசர்களின் ஆட்சிக்கும் இயேசு இராஜாவின் ஆட்சிக்கும் ஒப்புவமை ஒன்றுங் கிடையாது. இதுகாரணம்பற்றியன்றோ, பிலாத்துஸ் இயேசுநாதரைப் பார்த்து நீ இராஜாவோவென்று கேட்டதற்கு அவர் மறுமொழியாக "என் இராச்சியம் இவ்வுலகத்துக்கு அடுத்ததல்ல" என்று சொன்னார். "என் இராச்சியம் இவ்வுலக இராச்சியங்களைப்போலன்று, இலௌகிக அரசர்களின் ஆட்சியைப் போலன்று; ஏனெனில், உலக அரசர்களைப்போல் அரண்மனையில் நான் பிறக்கவில்லை, அவர்களைப்போல் செல்வத்தின் மத்தியில் சீவிக்கவில்லை; அவர்களது மரணம்போல், எனது மரணம் இருக்கமாட்டாது. அவர்களுக்குப் பட்டாளங்கள் உண்டு, எனக்குப்



பட்டாளம் போர்ச்சேவகர் கிடையாது. எனது இராச்சியம், உலக அரசர்களது இராச்சியங்களைப்போல் எல்லைத்திட்டத்திலும் கால அளவிலும் அடங்கினதல்ல," என்று விவரித்துச் சொல்லுகிறார். மேலும், உலக இராஜாக்களும் இராச்சியங்களும் மறைந்து ஒழிந்துபோகின்றன. சரித்திரத்தை ஆராய்ந்து பார்த்தால், எத்தனையோ இராஜ வம்சங்கள் ஒன்றன்பின் ஒன்றாய் உலகில் தோன்றி, இப்போது அவைகளின் அடையாள ஞாபகம் சிறிதுமின்றி சிதைந்து போயிருக்கின்றன. நமது காலத்திலேயே சிம்மாசனத்தை இழந்து பரதேசிகளாய்ச் சீவிக்கிற அரசர்கள் இல்லையா? இலௌகிக அரசுரிமை வெகு சுலபமாய் முறிந்துபோகக் கூடியது; இயேசு இராஜாவின் ஆட்சிக்கும் இராச்சியத்துக்கும் முடிவு இராது. இது தேவ வாக்கு. இயேசு இராஜாவின் சிம்மாசனம் நித்தியகாலம் நீடித்திருப்பது. அவரது இராச்சியம் உலகம் அடங்கலுமாம்; அவரது பிரஜைகளோ, ஒரு தேசத்தாரல்ல; மனுக்குலத்தைச் சார்ந்த சகலரும் அவரது பிரஜைகளே.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—நமது திவ்விய இரட்சகராகிய இயேசுக்கிறீஸ்துநாதர், நித்திய சர்வேசுரன், தமது தேவ சுபாவத்தில் ஒப்புவமையற்ற அரசன் என்பதற்குச் சந்தேகமில்லை. மனுக்குல இரட்சணியத்தின் பொருட்டு, மனுஷாவதாரம் எடுத்தபிறகும், அவ்வண்ணமே சர்வாதி கர்த்தரும், சகல லோகத்துக்கும் இராஜாவாகவுமிருக்கிறார். ஏனெனில் பிதாவின் ஏக குமாரனாகிய திரித்துவத்தின் இரண்டாம் ஆளே, இயேசுக்கிறீஸ்துநாதர். ஆனால் அவர் இவ்வுலகம் பெரிதாய் எண்ணுகிற பேர் பெருமை, புகழ்கீர்த்தி, அதிகார மேட்டிமை, இன்பசுகங்கள் இவைகளை அளிப்பதற்கல்ல, அழியாத பேரின்ப பாக்கியத்தை அடைந்து கொடுப்பதற்காக வந்ததினிமித்தம், தரித்திரம், தாழ்ச்சி, துன்பதுரிதங்களைத் தாமும் அநுபவித்துத் தமது பிரஜைகளுக்கும் அவற்றைப் போதித்தார். இலௌகிக அரசன் எவனுக்கும் இல்லாத அதிகார உரிமை அவருக்குண்டு. ஏனெனில், உலகம் அடங்கலும் அவருக்குச் சொந்தம். ஆனால் அவரது அர

சரிமையை அறியாதாரும் அங்கீகரியாதாரும் அனந்தம் பேர். இதற்குக்காரணம், அறியாமையும் இலௌகீக இன்பப்பற்றுதலுமாம். இவ்வுலக செல்வங்களை ஏராளமாய் அளிப்பதாக ஆண்டவர் வாக்களித்தால், கணக்கற்ற பேர் அவரை அரசனாக அங்கீகரித்துத் தொண்டுபுரியத் தீவிரிப்பார்கள். இவ்வுலக செல்வமும் செல்வாக்கும் நொடிப்பொழுதில் சிதைந்துபோகும், இவையல்ல மனிதனுக்குரிய கதி. இந்தச் சீவியம் பரிசோதனையின் காலம், பரலோகமே நமது வீடு என்பதை இவர்கள் உணராதிருக்கிறார்கள். இந்தச் சத்தியங்களை நன்கறியப் பாக்கியம்பெற்ற நாமாகிலும் நமது திவ்விய அரசருடைய படிப்பினையைப் பின்பற்றி நடக்கவும், அவரது இராஜரீகத்தை ஏனையோரும் கண்டுணர்ந்து அவரையே ஏக அரசனாகத் தொழவும் நம்மாலியன்ற அளவு வருந்திப் பிரயாசப்படுவோமாக.

மனப்பற்றுதல்.—"உம்முடைய இராச்சியம் வருக". ஒருகோடி முனைமுதல் மறுகோடி முனைமட்டும், ஏகாதிபதியாகிய இயேசு இராஜாவுக்குத் துதியும் தோத்திரமுமுண்டாவதாக.

பிரதிக்கினை.—சர்வேசுரனுடைய இராச்சியம் எங்கும் பரம்பும்படி பரமண்டல மந்திரத்தைச் சொல்லும்பொழுதெல்லாம், 'உம்முடைய இராச்சியம் வருக' என்னும் மன்றாட்டைப் பக்தி உருக்கத்தோடு சொல்வேனாக.

## 2-ம் பிரிவு

### இயேசுநாதருடைய அரசாட்சியின் தன்மை

தியானம்.—இன்றைய பூசையில் சொல்லும்படி திருச்சபை கற்பித்திருக்கிற முகவுரையில், இந்த அரசாட்சியின் தன்மை பின்வருமாறு விவரிக்கப்பட்டிருக்கின்றது:—சத்தியத்தின் ஆட்சி, சீவியத்தின் ஆட்சி, பரிசுத்ததனத்தினதும் வரப்பிரசாதத்தினதும் ஆட்சி, நீதி அன்பு சமாதானத்தின் ஆட்சி! திருச்சபை இயேசுகிறீஸ்துநாதருடைய தெய்வீக அரசாட்சிக்குரிய இலட்சணங்களாகக் குறிப்பிட்டிருக்கிறவை ஏழு. இவற்றை நாம் சரியாய்க் கண்டுணரக்கூடுமாகில், இயேசுக்கிறீஸ்துநாதருடைய இராச்சியம் இவ்வுலக இராச்சியங்களைப்போலல்லவென்றே மீண்டும் சொல்வோம். இவ்வேழு இலட்சணங்கள் ஒவ்வொன்றையும் தனித்தனியாய்த் தியானித்துப்பார்க்க இப்போது நமக்கிருக்கிற சொற்ப நேரத்தில் சாத்தியப்படாது. ஆகையால், அவற்றில் ஒன்றிரண்டை மாத்திரம் கவனிப்போம். முதன்முதல் கிறீஸ்துநாதரின் ஆட்சி சத்தியத்தின் ஆட்சி; "நான் இராஜா என்று நீரே சொல்லுகிறீர்; நான் சத்தியத்துக்குச் சாட்சி சொல்லும்படியாகப் பிறந்தேன், அதற்காகவே உலகத்துக்கு வந்தேன்" என்று பிலாத்துவுக்கு மறுமொழி பகர்ந்தார் (அரு. 18: 37). உலக அரசாங்கத்தில் பொய்யும் புரட்டும் கலவாதிருப்பது அருமை என்று சொல்லலாம். கிறீஸ்து இராஜா தமது ஞான வரங்களினால் நமது ஆத்துமத்தைப் போஷித்து உயிரை அளிப்பதுமன்றி, தேவ பராமரிப்பால் சரீர உயிரையுங் காப்பாற்றி வருகிறார்; ஆகையால், அவரது ஆட்சி மெய்யாகவே சீவியத்தின் ஆட்சியாகும். இயேசுக்கிறீஸ்துநாதருடைய இராச்சியம் அன்பின் இராச்சியம். இதன் காரணமாகவே, பரிசுத்த பிதாவாகிய 11-ம் பத்திநாதர் இயேசுக்கிறீஸ்துநாதருடைய இராஜரீகத்தைப்பற்றிப் பேசும்போது, அவரது திவ்விய இருதயத்தின் இராஜரீகத்தை எடுத்துரைத்திருக்கிறார். நமது திவ்விய இரட்சகர் பிரஜைகளின்மட்டில் உள்ள அன்பின் இராஜா, தமது அளவுகடந்த அன்பினிமித்தம் தமது இரத்தத்தைச் சிந்தி உயிரைக்கொடுத்ததுமல்லாமல், உலகத்தின் எத்திசையிலுமுள்ள நற்கருணைப் பேழைகளில் ஓர் கைதியைப்போல உலக முடிவு பரியந்தம் அடைபட்டிருக்கச் சித்தமானார். "நான் உங்களைச் சிநேகித்ததுபோல நீங்களும் ஒருவர் ஒருவரைச் சிநேகிக்கக்கடவீர்கள்; இதினாலே நீங்கள் என் சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள்" என்று அப்போஸ்தலர்களுக்குச் சொன்ன வாக்கியத்தை, நமது திவ்விய இராஜா தேவ நற்கருணைப்பெட்டியிலிருந்து நம்மெல்லோருக்கும் அநுதினமும் சொல்லிவருகிறார்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—நமது திவ்விய இராசா மனுமக்கள் இருதயத்தில் தமது ஆட்சியை ஸ்தாபிக்க விரும்புகிறார்; அவருக்கு உலக செல்வ சாம்பிராச்சியம் அவசியமன்று. நமது இருதயங்களில் வீற்றிருந்து அரசு செலுத்துவதே, நமது மட்டில் அவருக்குள்ள அன்பின் பேராவல். நமது இருதயத்தை அவருக்குகந்த சிம்மாசனமாக்குவது நமதுபேரிற் சுமந்த கடமை. இந்தக் கடமை இன்பம் நிறைந்த கடமை. உலக அரசன் உன் வீட்டுக்கு வருவதாயிருந்தால், அவனைச் சிறப்புடன் வரவழைப்பதற்கு உன்னால் இயன்ற அளவு பிரயத்தனப்படுவது உனக்குப் பாரமாய்த் தோன்றாமல் அரசனது வருகையால் உனக்குக் கௌரதை ஏற்படும் என்கிற எண்ணத்தால் அது இன்பமாய் மாறிப்போகுமல்லவா? இராஜாதி இராஜனாகிய இயேசுக்கிறீஸ்துநாதர் உன் வீட்டுக்குள்மாத்திரமன்று, உன் இருதயத்தினுட் பிரவேசித்து, அதையே தமது இருப்பிடமாக்கிக்கொள்ள விரும்புவது உனக்கு எவ்வளவோ மகிமையும் பெருமையுமாயிருக்கவேண்டியது. விசேஷமாய்த் திவ்வியநற்கருணை வழியாய் அவர் மெய்யாகவே உன் உள்ளத்தில் எழுந்தருளி வரும்போது இதை யோசித்துப் பார்க்கிறாயா? உன் இருதயத்தில் அவரது ஆட்சிக்குரிய இலட்சணங்களாகிற: உண்மை ஞான சீவியம், பரிசுத்ததனம், தேவசிநேகம், நீதி அன்பு சமாதானம் குடிகொண்டிருக்கின்றனவா? அல்லது அதற்கு மாறாய், உன் உள்ளத்தில் பகை குரோதம், வஞ்சகம், அநியாயம், ஞானவறட்சி இச்சைப்பற்றுதல் ஆகிய துர்க்குணங்கள் நிறைந்திருக்கின்றனவா? தேவ இராஜாவின் பிரஜைக்குரிய இலட்சணங்கள் உன்னிடம் விளங்கும்படி சற்றாகிலும் பிரயாசப்படுகிறாயா? அவரது பிரஜைக்குரிய அடையாளமாக அவர்தாமே கூறியுள்ள மெய்யான பிறர்சிநேகக் குணம் உன்னிடத்தில் இருக்கிறதா? இதுவரையிலும் எவ்விதம் நடந்து வந்திருக்கிறாயென்பதை ஆராய்ந்து பார்த்து உன் இருதயத்திலுள்ள குறைகளை நீக்கி, அதைத் தெய்வீக இராஜனுக்குரிய வாசஸ்தலமாக்குவதற்கு அவசியமான புண்ணியங்களைப் பயிற்சிக்கப் பிரயாசப்படு.



**சம்பாஷணை.**—நமது திவ்விய இரட்சகரும் இராஜாவுமாகிய இயேசுநாதரோடு சம்பாஷணை செய்து, உன் இருதயத்தை முழுவதும் அவருக்கு ஒப்புக்கொடுத்து, அதை அவர் தமக்கே முற்றிலும் சொந்தமாக்கிக்கொண்டு, அதிலே எக்காலமும் இராச்சியபாரம் செய்யும்படியாக அவரைப்பார்த்து மன்றாடு.

---

# நவம்பர் மாதம் 13-ம் தேதி

## அர்ச். ஸ்தனிஸ்லாஸ் கோஸ்காவின் திருநாள்

**ஆயத்தச் சிந்தனை.**—அர்ச். ஸ்தனிஸ்லாஸ் குழந்தை இயேசுநாதரைக் கையிலேந்தியிருக்கிற பிரகாரமாக ரூபிகரித்துக்கொள்.

**தியானச் சேபம்.**—அர்ச். ஸ்தனிஸ்லாசுடைய மன்றாட்டினால் நீ தேவமாதாவின்மேல் அதிகமதிகமாய்ப் பத்தி வைத்து அந்த ஆண்டவளின் பரிசுத்ததனத்தைக் கண்டுபாவிக்க அனுக்கிரகங்கேள்.

### முதல் பிரிவு

**தியானம்.**—இந்த வாலிப அர்ச்சியசிஷ்டவர் வாடிக்கையாய்ச் சொல்லிவந்த முதல் வாக்கியமாவது: நான் நித்திய நன்மைகளுக்காகப் பிறந்திருக்கிறேனொழியப் பிரபஞ்ச நன்மைகளுக்காகப் பிறக்கவில்லையென்பதாம். இந்த வாக்கியமானது உயர்ந்த வமிசத்தாருக்குச் செல்வப் பிள்ளையாயிருந்த இவர் உள்ளத்தில் மகா ஆழமாய்ப் பதிந்து, இவர் உலக சுக செல்வ பாக்கியங்களையும் தமது கோத்திர மேன்மையினால் தமக்கு வரவிருந்த மகிமை பெருமை மேன்மைகளையும் வெறுத்துவிட்டுச் சிலுவையின் நிந்தைகளையும் சந்நியாசத்தின் தாழ்மையையுந் தெரிந்துகொள்ளச் செய்தது.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—நாமும் பரலோகத்தின் நித்திய மகிமைகளுக்காகப் படைக்கப்பட்டி

ருக்கிறோமேயன்றி இவ்வுலகில் அழிந்துபோகிற நன்மைகளுக்காகப் படைக்கப்படவில்லை. இது நமது சொந்தத்தேசமல்ல; நாம் போகவேண்டிய தேசம் வேறேயிருக்கிறதென்று அர்ச். சின்னப்பர் சொல்லியிருக்கிறார். ஆகையால் இவ்வுலக நன்மைகளின்மேல் நாம் பற்றுதல் வைக்காதபடி எச்சரிக்கையாயிருக்கக்கடவோம்.

**மனப்பற்றுதல்.**—நான் பரலோகத்தை நோக்கிப் பார்க்கும்போது பூலோகம் எவ்வளவோ இழிவாய்த் தோன்றுகிறதென்று அர்ச். இஞ்ஞாசியாரோடு சொல்.

**பிரதிக்கினை.**—உலகத்தைத் துறந்துவிடும்படி சர்வேசுரன் எனக்குச் செய்த உபகாரத்துக்காக அடிக்கடி அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்துவருவேன்.

## 2-ம் பிரிவு

**தியானம்.**—இந்த அர்ச்சியசிஷ்டவர் வழக்கமாய்ச் சொல்லிவந்த இரண்டாம் வாக்கியமாவது: சுயமனதினால் பெரிய காரியங்களைச் செய்வதிலும் கீழ்ப்படிதலினால் சிறிய காரியங்களைச் செய்வது நன்று என்பதாம். இந்தச் சத்தியத்தை அர்ச். ஸ்தனிஸ்லாஸ் நன்றாய் உணர்ந்திருந்ததினாலே தமது சிரேஷ்டர்கள் வழியாகவும், சபை ஒழுங்குகள் மூலமாகவும் தமக்குத் தெளிவிக்கப்பட்ட தேவ சித்தத்தை எப்போதும் கண்முன்பாக வைத்துக்கொண்டு, என்ன செய்தாலும், என்ன ஆரம்பித்தாலும் எல்லாத்திலும் அந்தத் தேவசித்தத்தை நிறைவேற்றவேணுமென்றே கருத்தாயிருந்தார்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—அர்ச். ஸ்தனிஸ்லாஸ் ஒவ்வொரு காரியத்திலும் ஒவ்வொரு க்ஷணத்திலும் கீழ்ப்படிதலைத் தவிர வேறொன்றையுங் கவனியாமல் இந்தச் சுளுவான குறுக்குப்பாதை வழியாக மேலான அர்ச்சியசிஷ்டதனத்துக்கு வந்து சேர்ந்தார். நாமும் இந்த வழியாய் அர்ச்சியசிஷ்டவர்கள் ஆகலாமே. ஆனால் நமது கீழ்ப்படிதல் விசுவாசத்தில் ஊன்றியிருக்கிறதோ? நமது ஒழுங்குகளையும் கடமைகளையும் தேவசித்தமென்றும், நமது சிரேஷ்டர்கள் தேவ ஸ்தானத்தில்



இருக்கிறவர்களென்றும் நாம் மனதில் தீர்க்கமாய் எண்ணி நடக்கிறோமோ?

**மனப்பற்றுதல்.**—என் சர்வேசுரா, உமது சித்தம் பரமண்டலத்தில் செய்யப்படுமாப்போல பூமியிலேயும் செய்யப்படுவதாக.

**பிரதிக்கினை.**—தேவசித்தத்தை நிறைவேற்றுகிறேனென்று நினைத்து, சுபாவத்துக்கு வருத்தமான சமயங்களிலும் அற்ப சொற்பக் காரியங்களிலுமுதலாய்க் கீழ்ப்படிதலை நுணுநுணுக்கமாய் அனுசரித்து நடப்பேன்.

## 3-ம் பிரிவு

**தியானம்.**—அர்ச். ஸ்தனிஸ்லாசென்பவர் வழக்கமாய்ச் சொல்லிவந்த மூன்றும் வாக்கியமாவது: சர்வேசுரனுடைய தாயார் என்னுடைய தாயாரென்பதாம். பெற்ற தாயின்மேல் பிள்ளைக்குள்ள நேசத்தைப்போல இவரும் தேவமாதாவின்மேல் உருக்கமான நேசங்கொண்டிருந்தார். இவருடைய பத்தி நேசத்துக்கும் நம்பிக்கைக்கும் சம்பாவனையாகப் பரிசுத்த கன்னியாஸ்திரியானவள் இவர் உலகத்தைத் துறந்து இயேசுசபையில் பிரவேசிக்கவும், பரிசுத்தமாய்ச் சீவித்து அர்ச்சியசிஷ்டவராய் மரிக்கவுஞ் செய்து, கிறீஸ்துவர்களுடைய வணக்கத்தையும் இவருக்குப் பெறுவித்தருளினாள்.

**இதிலே விசேஷமாய் யோசிக்கத்தக்கது.**—அர்ச். ஸ்தனிஸ்லாசைப்போல நாமும் பத்தி ஆசையோடு தேவமாதாவை நோக்கி: ஓ பரிசுத்த கன்னிகையே, சர்வேசுரனுக்குத் தாயாராயிருக்கிற உம்மை எங்களுக்குந் தாயாராகத் தெரிந்துகொள்ளுகிறோமென்று உறுதியாய்ச் சொல்லக்கடவோம். மேலும் நமக்குத் தேவையாயிருக்கிற சகல வரப்பிரசாதங்களையும் அவளிடத்தில் வெகு நம்பிக்கையோடு கேட்போமாக.

**சம்பாஷணை.**—அர்ச். ஸ்தனிஸ்லாசோடு சம்பாஷணை செய்.

# ஞாயிற்றுக்கிழமைக்குரிய சுவிசேஷத்தைப் பற்றிய தியான அட்டவணை

| | புத். | பக். |
|---|---|---|
| ஆகமனகாலத்தின் முதல் ஞாயிறு ... | II | 665 |
| ” 2-ம் ஞாயிறு ... | II | 114 |
| ” 3-ம் ஞாயிறு ... | I | 694 |
| ” 4-ம் ஞாயிறு ... | I | 291 |
| கர்த்தர் பிறந்த திருநாளுக்குப்பின் எட்டுநாளுக்குள் வருகிற ஞாயிறு ... ... | I | 88 |
| கர்த்தர் விருத்தசேதனம் வருஷப்பிறப்பு ... | I | 15 |
| மூன்றிராசாக்கள் திருநாளுக்குப்பின் எட்டு நாளுக்குள் வருகிற ஞாயிறு ... | I | 120 |
| கர்த்தர் திருநாமத்தின் திருநாள் ஞாயிறு ... | I | 19 |
| மூன்றிராசாக்கள் திருநாளுக்குப்பின் 2-ம் ஞாயிறு | I | 672 |
| ” 3-ம் ஞாயிறு | II | 97-101 |
| ” 4-ம் ஞாயிறு | I | 745 |
| ” 5-ம் ஞாயிறு | II | 155 |
| ” 6-ம் ஞாயிறு | II | 163 |
| தபசுகாலத்துக்குமுன் 3-ம் ஞாயிறு ... | II | 568-573 |
| ” 2-ம் ஞாயிறு ... | II | 146 |
| ” முந்தின ஞாயிறு ... | II | 600 |
| தபசுகால முதல் ஞாயிறு ... ... | I | 646 |
| ” 2-ம் ஞாயிறு ... ... | II | 838 |
| ” 3-ம் ஞாயிறு ... ... | II | 118+127 |
| ” 4-ம் ஞாயிறு ... ... | II | 197 |
| கர்த்தர் பாடுகளின் ஞாயிறு ... ... | II | 353 |
| குருத்து ஞாயிறு ... ... | II | 633 |



| | | |
|---|---|---|
| பெரிய திங்கள் ... ... | II | 628 |
| பெரிய வியாழன் ... ... | II | 687 |
| கர்த்தர் உயிர்த்த ஞாயிறு ... ... | I | 376-384 |
| பாஸ்குத் திருநாளின்பேரில் ... | I | 347 |
| பாஸ்குத் திருநாளுக்குப்பின் வருகிற திங்கள் ... | I | 401-409 |
| ” செவ்வாய் ... | I | 422 |
| ” புதன் ... | I | 455 |
| ” வியாழன் ... | I | 384 |
| ” வெள்ளி ... | I | 485 |
| ” சனி ... | I | 392 |
| ” ஞாயிறு ... | I | 430 |
| ” 2-ம் ஞாயிறு | I | 405 |
| ” 3-ம் ஞாயிறு | I | 438 |
| ” 4-ம் ஞாயிறு | I | 463 |
| ” 5-ம் ஞாயிறு | I | 494 |
| கர்த்தர் ஆரோகணமான திருநாளுக்குமுன் 3-நாள் ... | I | 498 |
| இஸ்பிரீத்துசாந்து திருநாள் ஞாயிறு ... | I | 552 |
| அர்ச். தமதிரித்துவத் திருநாள் ஞாயிறு ... | I | 485 |
| ” திருநாளின்பேரில் ... | I | 582 |
| இஸ்பிரீத்துசாந்து திருநாளுக்குப்பின் வருகிற ஞாயிறு ... ... | II | 93 |
| அர்ச். தமதிரித்துவத்திருநாளின் எட்டாம் நாள் ஞாயிறு ... ... | II | 491 |
| இஸ்பிரீத்துசாந்து திருநாளுக்குப்பின் 3-ம் ஞாயிறு | II | 461 |
| ” 4-ம் ஞாயிறு | I | 455 |
| ” 5-ம் ஞாயிறு | II | 392 |
| ” 6-ம் ஞாயிறு | II | 250 |
| ” * 455 | | |

இஸ்பிரீத்துசாந்து திருநாளுக்குப்பின்

| | | | |
|---|---|---|---|
| ” | 7-ம் ஞாயிறு | II | 93 |
| ” | 8-ம் ஞாயிறு | II | 495 |
| ” | 9-ம் ஞாயிறு | II | 638 |
| ” | 10-ம் ஞாயிறு | II | 545 |
| ” | 11-ம் ஞாயிறு | II | 245 |
| ” | 12-ம் ஞாயிறு | II | 369 |
| ” | 13-ம் ஞாயிறு | II | 325 |
| ” | 14-ம் ஞாயிறு | I | 92 |
| ” | 15-ம் ஞாயிறு | II | 110 |
| ” | 16-ம் ஞாயிறு | I | 707-715 |
| ” | 17-ம் ஞாயிறு | II | 379 |
| சதுர்கால புதன் | ... | ... II | 283 |
| சதுர்கால வெள்ளி | ... | ... II | 123 |
| சதுர்கால சனி | ... | ... II | 451 |

இஸ்பிரீத்துசாந்து திருநாளுக்குப்பின்

| | | | |
|---|---|---|---|
| ” | 18-ம் ஞாயிறு | I | 724 |
| ” | 19-ம் ஞாயிறு | II | 563 |
| ” | 20-ம் ஞாயிறு | I | 724 |
| ” | 21-ம் ஞாயிறு | II | 317 |
| ” | 22-ம் ஞாயிறு | II | 656 |
| ” | 23-ம் ஞாயிறு | I | 775 |
| ” | 24-ம் ஞாயிறு | II | 665 |


## வார்த்தைப்பாடு புதுப்பிப்பதற்குமுன் மூன்று நாள் ஒடுக்கத்தில் செய்யத்தக்க தியான முதலியன

### ஆயத்த முயற்சி

வார்த்தைப்பாடு புதுப்பிப்பதற்கு முந்தின இந்த மூன்று நாளும் தகுந்தபடி செலவழிப்பதற்கான முகாந்தரங்களும் வழிபாடுகளும். I பக்கம் 786.

#### முதல் நாள்

முதல் தியானம்: நமது ஆத்தும கிரயம். II—பக். 241.

* யோசனை: I—பக்கம் 791. I, II, III, IV, V இலக்கங்கள்.

* ஞானவாசகம்: II—பக்கம் 106; பக்கம் 469 முதல் 477 வரையில்.

2-ம் தியானம்: நரகம். II—பக்கம் 536.

---

* விபரம்.—1-வது. இந்த நாட்களில் யோசனை அரைமணி நேரமும், ஞானவாசகம் அரைமணி நேரமும் செய்யவும்.

2-வது. இந்த யோசனைகள் சந்நியாசியின் சீர்திருத்தத்துக்கும், புண்ணிய வர்த்திப்புக்கும் ஏதுவாயிருப்பதுமன்றி, தன் ஆத்தும ஸ்திதியை மிகவும் நன்றாய் அறிந்துகொள்வதற்கும் அதின்பேரில் ஆத்தும குருவுக்காவது சிரேஷ்டருக்காவது கணக்குக்கொடுக்கவும் வெகு உதவியாயிருக்கும். இந்த யோசனைகளோடுகூட, சென்ற எட்டுநாள் ஒடுக்கத்தில் தான் செய்துகொண்ட பிரதிக்கினைகளின்பேரிலும் தன்னைக் கவனமாய்ச் சோதித்துப் பார்ப்பது நலமாயிருக்கும்.

### இரண்டாம் நாள்

முதல் தியானம் : சாவு. II—பக்கம் 564.

யோசனை : I—பக்கம் 793 VI, VII, VIII இலக்கங்கள்.

ஞானவாசகம் : II—பக்கம் 330, 278, 392 முதல் 401 வரையில்.

2-ம் தியானம் : காய்ப்பில்லாத அத்திமரம். II—பக்கம் 451.

### மூன்றும் நாள்

முதல் தியானம் : ஞானவேகமுள்ளவனும் இல்லாதவனுமாகிய இரு சந்நியாசிகளின் மரணம். II—பக்கம் 434.

யோசனை : I—பக்கம் 794. இரண்டாம் வகைக் கேள்விகள்.

ஞானவாசகம் : II—பக்கம் 63; 482; 184 முதல் 193 வரையில்.

2-ம் தியானம் : பரலோகத்தின்பேரில். II—பக்கம் 554.

## எட்டுநாள் தியானத்துக்குரிய பொருள்

தியானத்துக்கு முந்தினநாள் சாயரட்சை—தியான அவசரம் ... II—619

### முதல் நாள்

முதல் தியானம் : சர்வேசுரன் சிருஷ்டிகர் என்பதும் அவர் சர்வ நன்மை என்பதும் ... ... II—728

2-ம் தியானம் : சடேற்றத்தின் முக்கிய அலுவல் ... I—92-100 ... I—27-35

யோசனை : கால மதிப்பு ... ... I—132
கருத்து ...

3-ம் தியானம் : சந்நியாச அந்தஸ்துக் கழைப்பு ... ... I—767

### இரண்டாம் நாள்

முதல் தியானம் : சாவானபாவம் அற்பப் பாவம் இவைகளின் தன்மை ... I—203

2-ம் தியானம் : தபசு செய்யவேண்டிய மாதிரியும் கடமையும் ... I—173

யோசனை : பாவங்களும் குறைகளுமே மூலம் என்பது I 698, II—430

3-ம் தியானம் : சாவான பாவத்தினாலும் அற்பப் பாவத்தினாலும் உண்டாகிற பலன் ... I—231

### மூன்றும் நாள்

முதல் தியானம் : சாவின்பேரில் பரம இரகசியமும் ஆயத்தமும் II—564, 434

2-ம் தியானம்: தனித்திர்வை தயவடையச் செய்யவேண்டுவது ... I—291
யோசனை: பாவசங்கீர்த்தனம் ... II—330
அர்ச். இராயப்பர் மனந் திரும்புதல் ... I—215
3-ம் தியானம்: நரகம் II—536 அல்லது I—321

### நான்காம் நாள்

முதல் தியானம்: ஊதாரிப்பிள்ளை திரும்பிவருதல் ... ... II—522
2-ம் தியானம்: நல்ல மேய்ப்பன் ... I—405
யோசனை: தாழ்ச்சி என்கிற புண்ணியம் I-702-715
3-ம் தியானம்: கீழ்ப்படிதல் இயேசுநாதர் மாதிரிகை ... I—136

### ஐந்தாம் நாள்

முதல் தியானம்: ஞான விர்த்திப்பு II—49+638
2-ம் தியானம்: தாழ்ச்சியின் மூன்றுபடிகள் II—278
யோசனை: மூவித மறுத்தல் ... II—465
கீழ்ப்படிதல் I—100+108
3-ம் தியானம்: ஒறுத்தல் என்கிற புண்ணியம் II—469

### ஆறாம் நாள்

முதல் தியானம்: செபம். நம்பிக்கையின் முகாந்தரம் ... ... I—494
2-ம் தியானம்: இயேசுநாதர் சாதுகுணத்துக்கும் அடக்க ஒடுக்கத்துக்கும் பத்திக்கும் மாதிரிகை I—141
யோசனை: பிறர் சிநேகம் ... II—392
3-ம் தியானம்: இயேசுநாதர் திரு இருதயத்தின் ஆவல். இயேசுநாதர் மாதிரிகை ... ... I—625



### ஏழாம் நாள்

முதல் தியானம்: கர்த்தரின் பாடுகள் கஸ்தி நிந்தை ... I—161-207
2-ம் தியானம்: கர்த்தர் அநுபவித்த வேதனை ... I—257+265
II—63+822
யோசனை: பத்தியின் வேகம் ... II—707
தாராளம் ...
3-ம் தியானம்: இயேசுநாதர் சிலுவையில் அறைபட்டதும், அவருடைய மரணமும் I—299+338

### எட்டாம் நாள்

... I—347
முதல் தியானம்: கர்த்தர் உயிர்ப்பு ... I—364
நமது உயிர்ப்பு ... II—554
2-ம் தியானம்: மோக்ஷத்தின்பேரில் ... II—447
யோசனை: மெய்யான சந்நியாசி
வேகம் விசுவாசத்தால் ... II—106
நிறைந்த சந்நியாசி
3-ம் தியானம்: அர்ச்சியசிஷ்டவர்கள் ... II—549
போராட்டம் ... II—619
நிலைமையாயிருக்க வழி

---

விபரம்:—யோசனையாக யாதொரு தியானத்தை வாசிக்கும்போது எப்பொழுதும் அதில் குறித்திருக்கிற மனப்பற்றுதல் சம்பாஷனை முதலியவைகளை விட்டுவிடவும்.

அந்தந்த நாளுக்குக் குறிக்கப்பட்ட பொருளுக்குத் தக்கபடி கிறீஸ்துநாதர் அநுசாரத்தில் ஓர் அதிகாரத்தை வாசிக்கிறது. தன்னுத்தம ஸ்திதிக்கு ஏற்றபடி ரோதிரிகேஸ் புண்ணிய சாங்கோபாங்க முயற்சியில் ஓர் அதிகாரத்தை வாசிக்கிறது.

# பொருள் அட்டவணை


| தேதி | | பக்கம் |
|---|---|---|
| | பூசை காணும் வகை ... ... ... | 5 |

## ஜூலை மாதம்

| | | |
|---|---|---|
| 1 | முப்பத்தெட்டு வருஷம் திமிர்வாதமாயிருந்தவன் அற்புதமாய்ச் சொஸ்தமானது ... ... ... | 11 |
| 2 | தேவமாதா எலிசபெத்தம்மாளை மினவின திருநாள் ... | 15 |
| 3 | அர்ச். கன்னிமரியம்மாளுக்கு அளிக்கப்பட்ட சுதந்தரங்கள் ... ... ... ... | 19 |
| 4 | பரிசேயருடைய கள்ள ஞானமும் காய்மகாரமும் ... | 23 |
| 5 | இயேசுநாதர் அப்போஸ்தலரைத் தெரிந்துகொண்டது. | 27 |
| 6 | எட்டுவகைப் பாக்கியங்கள் ... ... ... | 32 |
| 7 | சந்நியாச தரித்திரம் ... ... ... | 36 |
| 8 | 2-ம் 3-ம் 4-ம் 7-ம் பாக்கியங்கள் ... ... | 40 |
| 9 | 5-ம் 6-ம் 8-ம் பாக்கியங்கள் ... ... ... | 45 |
| 10 | வேதபோதகருடைய ஆவலுக்கு வேண்டிய வெற்றிக் குணங்கள் ... ... ... ... | 49 |
| 11 | அர்ச். நொர்பெர்த்து வெற்றித் திருநாள் ... ... | 54 |
| 12 | தேவகற்பனைகளைச் சுமுத்திரையாய் அநுசரிப்பது ... | 58 |
| 13 | தேவ ஊழியத்தில் இருக்கவேண்டிய ஞான வேகம் ... | 63 |
| 14 | உபத்திரவங்களின்பேரில் ... ... ... | 67 |
| 15 | பெருமை சலாக்கியத்தை வெறுப்பது ... ... | 71 |
| 16 | உத்தரீயமாதா திருநாளும் உத்தரீயச் சபையும் ... | 76 |
| 17 | பரமண்டலமந்திரம் ... ... ... | 80 |
| 18 | பரமண்டலமந்திரத்தின் தொடர்ச்சி ... ... | 84 |

19 பரமண்டலமந்திரத்தின் முடிவு ... ... 88
20 நானாவித கற்பனைகள் ... ... ... 93
21 ஒரு குஷ்டரோகி ஆண்டவரை மன்றாடி ஆரோக்கியமடைந்தது ... ... ... ... 97
22 கப்பர்நாவூம் ஊர்ச் சேர்வைக்காரன் தன் ஊழியனைச் சொஸ்தமாக்க இயேசுநாதரை மன்றாடினது ... 101
23 விசுவாசத்தின்பேரில் ... ... ... 106
24 நாயீம் நகரத்து விதவையின் மகனை இயேசுநாதர் உயிர்ப்பித்தது ... ... ... ... 110
25 அர்ச். ஸ்நாபக அருளப்பர் அனுப்பின தூது ... 114
26 இயேசுநாதருடைய புதுமைகளால் வந்த வெவ்வேறு பலன் ... ... ... ... 118
27 மரியமதலேனம்மாள் இயேசுநாதர் பாதங்களைக் கழுவினது ... ... ... ... 123
28 ஒருவன் திரும்பப் பாவத்தில் விழுகிறது ... ... 127
29 இயேசுநாதசுவாமியோடு நமக்கு இருக்கவேண்டிய ஞான உறவின்பேரில் அவர் படிப்பித்த போதகம்... 132
30 தாய் தகப்பன் உறவின் முறையார்மட்டில் வைக்கும் மிதமிஞ்சின பட்சம் ... ... ... 136
31 இயேசுசபையை உண்டாக்கின அர்ச். இஞ்ஞாசியார் திருநாள் ... ... ... ... 140

## ஆகஸ்டு மாதம்

1 வித்தின் உவமை ... ... ... ... 146
2 அர்ச். அல்போன்சு லிகோரியார் திருநாள் ... 150
3 நல்ல விதை, களைகள் இவைகளின் உவமை ... 155
4 அர்ச். சாமிநாதர் திருநாள் ... ... ... 158
5 கடுகுமணி, புளித்த மா, புதையல் இவைகளின் உவமை ... ... ... ... 163



6 முத்து, வலை, குடும்பத்து எசமான் இவர்களின் உவமை ... ... ... ... 167
7 இயேசுநாதருடைய சென்ம நாட்டார் முந்த அவர் மேல் ஆச்சரியப்பட்டுப் பின்னுமவரை இகழ்ந்து உபத்திரவப்படுத்தினது ... ... ... 171
8 இயேசுநாதர் அப்போஸ்தலர்களைப் போதிக்க அனுப்பினது ... ... ... ... 175
9 இயேசுநாதர் அப்போஸ்தலர்களுக்கு வரப்போகிற துன்ப துரிதங்களை முன்னறிவித்து அவர்களைத் திடப்படுத்துகிறார் ... ... ... 180
10 ஆத்துமாக்கள் ஈடேற்றத்திற்கும் பிறசினேகத்திற்கும் அடுத்த கிரியைகளில் நமக்கு இருக்கவேண்டிய புண்ணிய பற்றுதல் ... ... ... 184
11 முந்தின தியானத்தின் தொடர்ச்சி ... ... 188
12 அர்ச். கிளாரம்மாள் திருநாள் ... ... 193
13 இயேசுநாதசுவாமி அப்பத்தைப் பலுகச்செய்த புதுமை ... ... ... ... 197
14 தேவமாதா மோக்ஷத்துக்கு எழுந்தருளின திருவிழாவுக்கு முந்தினநாள் ... ... ... 201
15 தேவமாதா மோக்ஷத்துக்கு எழுந்தருளின திருநாள். 206
16 அப்பங்களைப் பலுகப்பண்ணின அன்று இராத்திரி அப்போஸ்தலர்கள் பட்டவருத்தம் ... ... 210
17 முந்தின தியானத்தின் தொடர்ச்சி ... ... 215
18 செனேசரத்து நாட்டாருடைய விசுவாசமும் அற்புதமான சொஸ்தங்களும் ... ... ... 219
19 தேவநற்கருணையைப்பற்றி பிரசங்கம் ... ... 223
20 அர்ச். பெர்நர்து திருநாள் ... ... ... 228
21 பரிசேயருடைய கள்ள ஞானமுங் காய்மகாரமும் ... 232
22 கனானேய ஸ்திரீயின் ஆச்சரியத்துக்குரிய விசுவாசமும் மன்றாட்டும் ... ... ... ... 237

23 நமது ஆத்துமத்தின் கிரயம் ... ... ... 241
24 இயேசுநாதசுவாமி கலிலேயா நாட்டிற்குத் திரும்பி வந்து அங்கே செவிடும் ஊமையுமானவனைக் குணமாக்குகிறார் ... ... ... ... 245
25 இரண்டாமுறை அப்பம் பலுகின புதுமை ... 250
26 இயேசுநாதர் மகேதான் சீமையிற் பிரவேசம்பண்ணுகிறார்; அங்கே பரிசேயரும், சதுசேயரும் அவரைச் சோதிக்கிறார்கள் ... ... ... 255
27 பெத்சாயிதாப் பட்டணத்துக் குருடன் சுகமானது. 259
28 அர்ச். அகுஸ்தினார் திருநாள் ... ... ... 264
29 அர்ச். இராயப்பர் செய்த விசுவாசப் பிரமாணமும் அடைந்த தலைமைப் பட்டமும் ... ... 268
30 இயேசுநாதர் தமது பாடுகளை முன்னறிவித்து நம்மை நாம் பரித்தியாகம் பண்ணவேணுமென்று கற்பிக்கிறார் ... ... ... ... 273
31 பரித்தியாகம் அல்லது தாழ்ச்சியின் மூன்றுபடிகள் ... 278

## செப்டெம்பர் மாதம்

1 பேய்பிடித்துப் பைத்தியங்கொண்ட பிள்ளை ... 283
2 பேய்பிடித்த பிள்ளை ஆரோக்கியம் அடைகிறான் ... 287
3 இயேசுநாதர் தபோரென்கிற மலையைவிட்டுக் கப்பர்நாகூம் ஊருக்குப் போகையில் தாம் படப்போகிற பாடுகளை மறுபடியும் அப்போஸ்தலர்களுக்கு வெளிப்படுத்துகிறார் ... ... ... 292
4 இயேசுநாதர் இரண்டு திராக்குமா வரி கொடுத்தது ... 296
5 அப்போஸ்தலர்கள் தங்களுக்குள் பெரியவன் யாரென்று சடுத்தஞ் செய்தது ... ... 301
6 இடறல் உண்டாக ஏதுவானவர்களுக்கு இடப்பட்ட சாபம் ... ... ... ... 305



7 பிறரைத் திருத்துவதற்கும் மன்னிப்பதற்கும் கொடுத்த கற்பனை ... ... ... 309
8 தேவமாதா பிறந்த திருநாள் ... .. ... 313
9 இராசாவும் அவன் கடன்காரனுமாகிய இருவர் உவமை 317
10 இயேசுநாதர் கலிலேயா நாட்டைக் கடந்தபோது சம்பவித்தது ... ... ... 321
11 இயேசுநாதர் பயணத்தில் நடந்த வேறு சம்பவங்கள்; பத்து குஷ்டரோகிகள் எதிர்ப்பட்டது ... 325
12 அடிக்கடி பாவசங்கீர்த்தனம் செய்வது ... ... 330
13 இயேசுநாதர் எருசலேம் பட்டணத்துக்குத் திரும்பிப் போகிறார் ... ... ... ... 335
14 இயேசுநாதர் மறுபடியும் தேவாலயத்தில் பிரசங்கம் செய்தது ... ... ... ... 340
15 விபசாரப் பெண்பிள்ளையின்மேல் செய்யப்பட்ட தீர்ப்பு ... ... ... ... 344
16 இயேசுநாதர் உலகத்துக்கு ஒளியாயிருக்கிறார் ... 349
17 பரிசேயருடைய எதிரிடையும் மூர்க்கத்தனமும் ... 353
18 எருசலேம் பட்டணத்தின் பிறவிக் குருடன் குணமடைகிறான் ... ... ... ... 358
19 முந்தின தியானத்தின் தொடர்ச்சி ... ... 362
20 எழுபத்திரண்டு சீஷர்கள் போதிக்க அனுப்பப்பட்டது 366
21 எழுபத்திரண்டு சீஷர்களுஞ் சந்தோஷமாய்த் திரும்பி வந்தது ... ... ... ... 370
22 இயேசுநாதர் நம்மை நோக்கித் தம்மிடத்தில் நாம் வரும்படி உருக்கமாய் அழைக்கிறார் ... ... 374
23 இயேசுநாதர் வஞ்சகனான ஓர் சாஸ்திரியை நாணச் செய்கிறார் ... ... ... ... 379
24 சமாரித்தான் உவமைக்குரிய இயல்பான கருத்து ... 383
25 சமாரித்தான் உவமையில் மறைந்திருக்கிற பொருளின் விளக்கம் ... ... ... ... 388

26 சகோதர சிநேகமும் அதற்கான முகாந்தரமும் குணங்களும் ... ... ... ... 392
27 சகோதர சிநேகத்துக்கு வேண்டிய இலட்சணங்கள் 397
28 இயேசுநாதர் மார்த்தம்மாள் மரியம்மாள் என்கிற இரு சகோதரிகள் வீட்டில் தங்கினது ... ... 401
29 உலோபியான ஒரு ஐசுவரியன் உவமை ... 406
30 சடுதி மரணம் ... ... ... ... 410

## அக்டோபர் மாதம்

1 பதினெட்டு வருஷம் வியாதியாயிருந்த ஒரு ஸ்திரீயை இயேசுநாதர் குணப்படுத்தினது ... ... 416
2 காவல் சம்மனசுக்களின் திருநாள் ... ... 420
3 அர்ச். குழந்தை தெரேசம்மாள் திருநாள்... ... 425
4 ஐந்துகாய வரம்பெற்ற அர்ச் பிரான்சீஸ்குவின் திருநாள்... ... ... ... ... 430
5 மனஞ்சோர்ந்த சந்நியாசியும் ஞானவேகமுள்ள சந்நியாசியும் மரண சமயத்திலிருக்குந் தன்மை ... 434
6 அர்ச். புருனோவென்பவர் திருநாள் ... ... 439
7 செபமாலைமாதாத் திருநாள் ... ... ... 443
8 ஒரு பரிசேயன் இயேசுநாதரை விருந்துக்கு அழைக்கிறான் ... ... ... ... 447
9 காய்க்காத அத்திமரத்தின் உவமை ... ... 451
10 பரிசேயர் இயேசுநாதரைப் பயமுறுத்த பிரயாசப்பட்டது ... ... ... ... 456
11 சிதறிப்போன ஆட்டின் உவமை ... ... 461
12 இயேசுநாதசுவாமி தமக்குச் சீஷராயிருக்க மனதுள்ளவர்களிடத்தில் கேட்குஞ் சங்கேத நிபந்தனைகள் ... 465
13 ஒறுத்தல் என்கிற புண்ணியம்... ... ... 469



14 பஞ்சேந்திரிய இச்சையினிமித்தம் நம்மை ஒறுக்கிறது கடன் ... ... ... ... 474
15 அர்ச். தெரேசம்மாள் திருநாள் ... ... 478
16 அர்ச். தெரேசம்மாளுடைய ஞானப்போதகம் ... 482
17 திரும்பக் கண்டெடுத்த திராக்குமாவென்னும் நாணய உவமை ... ... ... ... 487
18 விருந்துக்கு அழைக்கப்பட்டவர்களுடைய உவமை ... 491
19 பிரமாணிக்கமற்ற காரியஸ்தனுடைய உவமையும் இயேசுநாதர் இதைக்கொண்டு நமக்குக் கற்பிக்கும் புத்திமதியும் ... ... ... ... 495
20 சொற்பக் காரியங்களில் பிரமாணிக்கமாயிருக்கிறதைக் குறித்து இயேசுநாதர் கற்பித்த போதகம் ... 500
21 அர்ச். ஊர்சுலம்மாள் திருநாள் ... ... 505
22 படித்துக்கொடுக்கிறதும் அப்போஸ்தலத் தொழில் ... 509
23 ஊதாரிப்பிள்ளையின் உவமை ... ... ... 514
24 ஊதாரிப்பிள்ளையின் இருவித அந்தஸ்துக்குள்ள வித்தியாசம் ... ... ... ... 518
25 முந்தின தியானத்தின் தொடர்ச்சி ... ... 522
26 சர்வேசுரன் தமது தேவப்பிரசாதத்தை நமக்கு வலியத் தருவதினால் காண்பிக்கும் அளவற்ற நன்மைத்தனம் ... ... ... ... 527
27 கெட்ட ஆஸ்திக்காரனும் இலாசருமாகிய இருவர் உவமை ... ... ... ... 531
28 கெட்ட ஆஸ்திக்காரனுக்குக் கிடைத்த நரகம் ... 536
29 இயேசுநாதருடைய தயவும் உருக்கமும் பற்றுதலும் ... 540
30 பரிசேயனையும் ஆயக்காரனையும்பற்றிய உவமை ... 545
31 சகல அர்ச்சியசிஷ்டவர்களுடைய திருநாளுக்கு முந்தின நாள் ... ... ... ... 549

## நவம்பர் மாதம்


1 சகல அர்ச்சியசிஷ்டவர்களின் திருநாள் ... ... 554
2 உத்தரிக்கிற ஆத்துமாக்கள் திருநாள் ... ... 559
3 மரணத்தின்பேரில் ... ... ... ... 564
4 முந்திரிகைத் தோட்டத்துக்கு அனுப்பப்பட்ட வேலையாட்களின் உவமையின் பதப்பொருள் ... 568
5 மேற்படி உவமையின் ஞான அர்த்தம் ... ... 573
6 ஆத்தும ஈடேற்றத்தின்மேல் ஞான வைராக்கியமான ஆவல் ... ... ... ... 577
7 சுவிசேஷத்தின் உத்தமதனத்துக்கு அழைக்கப்பட்ட தனவானான வாலிபன் ... ... ... 582
8 இலாசருடைய வியாதியும் மரணமும் ... ... 587
9 கர்த்தர் தம்முடைய பாடுகளை மூன்றாந்தரம் அறிவிக்கிறார் ... ... ... ... ... 591
10 இரண்டு அப்போஸ்தலர்களுடைய யோசனையற்ற நடபடிக்கை ... ... ... ... 595
11 ஜெரிக்கோ பட்டணத்தின் குருடனைக் குணமாக்கினது 600
12 சக்கேயுஸ் என்பவன் ஆச்சரியமானவிதமாய் மனந்திரும்பினது ... ... ... ... 605
13 இயேசுநாதர் பெத்தானியாவூரில் இலாசரை உயிர்ப்பித்தது ... ... ... ... 609
14 இயேசுநாதருக்கு விரோதமாய் யூதர்கள் கூட்டின மகா சங்கம் ... ... ... ... 614
15 நமது வருஷாந்திர ஞான ஒடுக்கம் ... ... 619
16 எப்போதுஞ் செபிக்கவேண்டுமென்பதின்பேரில் ... 624
17 இயேசுநாதர் பெத்தானியாவூரில் இரண்டாம் விசை அசனம்பண்ணினபோது மரியமதலேனம்மாள் அவர்மட்டில் திரும்பவும் காண்பித்த பக்தி நேச அடையாளம் ... ... ... 623
18 இயேசுநாதர் ஒட்டோலகமாய் எருசலேமில் பிரவேசித்தது ... ... ... ... 633
19 முந்தின தியானத்தின் தொடர்ச்சி ... ... 638
20 குருத்து ஞாயிற்றுக்கிழமையில் நடந்த வர்த்தமானம் 642
21 தேவமாதா காணிக்கையாக ஒப்புக்கொடுக்கப்பட்டது 647
22 காய்ப்பில்லாத அத்திமரத்தை இயேசுநாதசுவாமி சபிக்கிறார் ... ... ... ... 651
23 விதவை கொடுத்த காணிக்கையும், வேதபாரகருக்கும் சதுசேயருக்குஞ் சொன்ன மாறுத்தரமும் ... 656
24 திராட்சப் பயிரிட்ட துஷ்டக் குடிகளின் உவமை ... 660
25 பொதுத்தீர்வையைப்பற்றி இயேசுநாதர் முன்னதாக அறிவித்த விசேஷங்கள் ... ... ... 665
26 இயேசுநாதர் பரிசேயரைக் கண்டித்தது ... ... 670
27 பாஸ்காவின் இராப்போசனம் ... ... ... 674
28 இயேசுநாதர் அப்போஸ்தலர்களுடைய கால்களைக் கழுவுகிறார் ... ... ... ... 678
29 தேவநற்கருணையாகிய போசனம் ... ... 683
30 இராப்போசனத்துக்குப்பின் இயேசுநாதர் செய்த பிரசங்கம் ... ... ... ... 687


## டிசம்பர் மாதம்


1 இயேசுநாதசுவாமி செய்த செபம் ... ... 693
2 அர்ச். சவேரியார் திருநாளுக்கு முந்தின நாள் ... 697
3 அர்ச். சவேரியார் திருநாள் ... ... ... 702
4 தேவ ஊழியத்தில் மனத்தாராளமாயிருத்தல் ... 707
5 தேவமாதா சென்மப்பாவமில்லாமல் உற்பவித்த திருநாளுக்கு ஆயத்தம் முதல் நாள் ... ... 711
6 மேற்படி திருநாளுக்கு ஆயத்தம் இரண்டாம் நாள் ... 715
7 மேற்படி திருநாளுக்கு ஆயத்தம் மூன்றாம் நாள் ... 719

8 தேவமாதா சென்மப்பாவமில்லாமல் உற்பவித்த திருநாள் ... ... ... ... 723

9 சர்வேசுரன் உண்டென்பது ... ... ... 728

10 சர்வேசுரனுடைய சுபாவமும் அளவில்லாத உத்தமதனமும் ... ... ... ... 733

11 சர்வேசுரன் பகாப்பொருளாயும் கரைகாணாத பிரமாண்டப் பொருளாயுமிருக்கிறார் ... ... ... 737

12 சர்வேசுரனுடைய சர்வ வல்லமை, பரிசுத்ததனம், பாக்கியம் ... ... ... ... 742

13 சர்வேசுரனுடைய ஞானம் சௌந்தரிய மதுரத்தின் பேரில் ... ... ... ... 746

14 தேவ பராமரிக்கை, நீதி, இரக்கம் இவைகளின்பேரில் 751

15 சர்வேசுரனுடைய மகத்துவமும் மாட்சிமையும் ... 755

16 கர்த்தர்பிறந்த திருநாளுக்கு நவநாள் ஆயத்தம் ... 760

17 இந்த நவநாள் அநுகூலமாவதற்கு நமது இருதயம் இருக்கவேண்டிய ஏர் ... ... ... 764

18 இந்த நவநாள் அநுகூலமாகாதபடி நேரிடும் விக்கினங்கள் ... ... ... ... ... 768

19 கர்த்தர்பிறந்த திருநாளிலடங்கிய பரம இரகசியம் ... 772

20 மாம்சமானவார்த்தையின் தாயாரைத் தெரிந்துகொண்டதும் அவளுக்கு அளிக்கப்பட்ட விசேஷ சுதந்தரங்களும் அவள் செய்த ஆயத்தமும் ... 777

21 இரட்சகர் பிறந்த காலத்தின் விசேஷங்கள் ... 781

22 மாம்சமான தேவ வார்த்தையால் நமக்கு வந்த நன்மைகள் ... ... ... ... 786

23 திவ்விய குழந்தையிடத்தில் நாம் கண்டுபாவிக்கவேண்டியவைகள் ... ... ... ... 790





24 கர்த்தர்பிறந்த திருநாளுக்கு முந்தினநாள் ... 795

25 கர்த்தர் பிறந்த திருநாள் ... ... ... 799

26 முதல் வேதசாட்சியான அர்ச். முடியப்பர் திருநாள் 803

27 தேவபாலன் தம்மை இடையர்களுக்கு அறிவித்ததும் சம்மனசுக்கள் அவரை வாழ்த்தி நமஸ்கரித்ததும் 808

28 இடையர் பெத்லேமூருக்குப் புறப்பட்டுப் போகிறார்கள் ... ... ... ... 812

29 இடையர் பெத்லேமூரைவிட்டுத் திரும்பினதும் அவர்களுடைய பத்தி சுறுசுறுப்பும் ... ... 817

30 ஞானவேகம் ... ... ... ... 822

31 வருஷத்தின் கடைசிநாள் ... ... ... 826


## அந்தந்த மாதத்தின் தலைவெள்ளிக்கிழமையில் செய்யத்தக்க தியானங்கள்


ஜூலை : இயேசுநாதருடைய திரு இருதயப் பத்தியின்பேரில் ... ... II—831

ஆகஸ்டு : திவ்வியநற்கருணையிலிருக்கிற இயேசுநாதருடைய சிநேகம் ... ... I—599

செப்டெம்பர் : இயேசுநாதருடைய திரு இருதயத்தின் ஆச்சரியமான கீழ்ப்படிதல் ... I—612

அக்டோபர் : தேவநற்கருணையிலே நம்மோடு வாசம் பண்ணும் இயேசுநாதருடைய திரு இருதயத்தின் மட்டில் நமக்கு உண்டான கடமைகள் ... ... ... I—634

நவம்பர் : இயேசுநாதருடைய திரு இருதயத்தின் மாறாத சாந்தம் ... ... I—616

டிசம்பர் : இயேசுநாதருடைய திரு இருதயத்தின் உதாரத்தனம் ... ... I—621

## மாதாந்தர நாவொடுக்கத்துக்குரிய தியானங்கள்


ஜுலை : இந்த நாவொடுக்கத்தை நன்றாய்ச் செய்வதற்கான முகாந்தரங்களும் வகைவழிகளும் ... ... ... I—786

ஆகஸ்டு : சாவின்பேரில் ... ... II—564

செப்டெம்பர் : ஞானவேகத்தின்பேரில் ... ... II—63

அக்டோபர் : காய்ப்பில்லாத மரத்தின்பேரில் ... II—451

நவம்பர் : ஞானவேகமுள்ளவனும் இல்லாதவனுமாகிய இரு சந்நியாசிகளின் மரணம் II—434

டிசம்பர் : வருஷத்தின் கடைசிநாளின்பேரில் II—826


## அநுபந்தத் தியானங்கள்


நமது ஆண்டவர் மறுரூபமான திருநாள் (ஆகஸ்டு-மீ 6-ம் தேதி) ... ... ... ... 838

அர்ச். பெர்க்மான்ஸ் அருளப்பர் (ஆகஸ்டு-மீ 13-ம் தேதி) 843

அர்ச். கிளாவர் இராயப்பர் (செப்டெம்பர்-மீ 9-ம் தேதி) 846

அர்ச். பிரான்சீஸ்கு போர்ஜியார் (அக்டோபர்-மீ 10-ம் தேதி) ... ... ... ... 849

அர்ச். அல்போன்ஸ் ரோதிரிகேஸ் (அக்டோபர்-மீ 30-ம் தேதி) ... ... ... ... 852

இயேசு இராஜா திருநாள் (அக்டோபர்-மீ கடைசி ஞாயிறு) 856

அர்ச். ஸ்தனிஸ்லாஸ் கோஸ்கா (நவம்பர்-மீ 13-ம் தேதி)... 861

ஞாயிற்றுக்கிழ[illegible]த்தின்பேரில் தியானங்கள் ... 864

மூன்று நா[illegible]க்க[illegible]ாருள் ... ... 867

எட்டு [illegible] தியானத்திற்குரி[illegible]ள் ... ... 869


76864 R.V.